1991

[illegible]
[illegible]
[illegible]
170216.





# தமிழரசு

1-1-1991 ரூ.1

திருப்பதைத் தொல் பொருட்கள் மெய்ப்பிக்கின்றன.

**பண்பாட்டு உறவு**

''கூடாரத்து வேந்தன் வேண்டு கோளுக்கிணங்க, சோழ மன்னன் முதலாம் இராசராசன் நாகப்பட்டினத்தில் சூளாமணி விகாரம் ஒன்றினை அமைத்து, ஆனைமங்கலம் என்ற ஊரையும் கொடையாக அளித்துள்ளான். கங்கை கொண்ட சோழபுரம் அகழாய்வில் பழங்கால சீனநாட்டுப் பீங்கான் ஓடுகள் குறிப்பிடத் தகுந்த அளவில் கிடைத்துள்ளன. சீனர்களுக்கும், சோழப் பெருவேந்தர்களுக்கும் ஏற்பட்டிருந்த வணிக உறவு இதன்மூலம் புலனாகிறது. மேலும் கிழக்காசிய நாடுகளான பர்மா, ஜாவா, சுமத்ரா, இலங்கை போன்ற நாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்ட பல அரிய பொருட்கள் தற்போது ஆங்காங்கே கிடைத்து வருகின்றன. சீனநாட்டுக் காசுகள் தமிழகத்தின் கிழக்குக் கடற்கரையோரங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. எனவே, வாணிகம், பண்பாட்டு உறவு தமிழகத்திற்கும், மேலை நாட்டிற்கும், தென்கிழக்காசிய நாடுகளுக்கும் சிறந்த முறையில் நடைபெற்றுள்ளது என்பதை நாம் தக்க ஆதாரங்களுடன் நிறுவ முடிகிறது.

''இன்னும்கூட கன்னத்தில் கைவைத்துக் கொண்டு கவலைப்படுகிறவர்களைப் பார்த்தால், 'கப்பல் கவிழ்ந்தாற்போல் கன்னத்தில் கை வைத்துக் கொண்டிருக்கிறாயே' என்று கேட்கிற பழக்கம் மக்களிடையே இருந்து வருகிறது.

''கப்பலுக்குத் தமிழில் பதினேழு பெயர்கள் உள்ளன. அவை அம்பி, ஓடம், கட்டுமரம், கப்பல், கலம், சலகை, திமில், தெப்பம், தோணி, நாவாய், படகு, பரிசில், பாசணம், புணை, மரக்கலம், மிதவை, வங்கம் என்பனவாகும்.

''தமிழ்நாட்டில் கப்பலூர், கடலாடி என்னும் ஊர்கள் இன்னும் உள்ளன. கடல் வாணிகர்களுக்கு மாநா நாவாய் தன் (நாவாயகன்) என்ற குடும்பப் பெயர் இருந்தது. மிகப் பழைய காலத்தில் பட்டு வாணிகம் நடந்த சாலைகளையும், கடல் வழிகளையும் ஆராய்வதற்காகப் பல்வேறு நாடுகளிலிருந்து வருகை புரிந்திருக்கிற தொல்லியல் அறிஞர்களாகிய உங்களை நான் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன்.

''கடல் கொண்டதாகக் கருதப்படும் சோழர் தலைநகராகிய காவிரிப் பூம்பட்டினத்தை அகழ்ந்து காணும் முயற்சியைத் தமிழக அரசின் தொல்பொருள் ஆய்வுத்துறை மேற்கொள்ளவுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியையும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

''தமிழ்நாட்டு வாணிகத்தையும், இந்திய வாணிகத்தையும் சுட்டிக் காட்டுகின்ற அரும்பொருட்களையும், தகவல்களையும் இந்த அருங்காட்சியில் அமைந்திருக்கிறார்கள்.

''இந்தக் காட்சியில் உள்ள பொருட்கள் உங்களைக் கவரும் என்பதோடு உங்கள் ஆய்வுக்குத் துணைபுரியும் என்று வாழ்த்தி அருங்காட்சியகத்தைத் தொடங்கி வைக்கிறேன்.''

# வணிக உறவு, பண்பாட்டு உறவுக் கருத்தரங்கு

**இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே சீனநாட்டுப் பட்டு வணிகர்கள், பட்டு மற்றும் வணிகப் பண்டங்களைப் பிற நாடுகளுக்கு வணிகம் செய்யும் எண்ணத்துடன் கடல் வழியாகவும், காடு, மலை, பாலைவனம், புல்வெளி முதலியவற்றைக் கடந்தும், அமைத்துக் கொண்ட நெடும்பாதை வரலாற்று அறிஞர்களால் 'பட்டுப் பெருவழி' என்று அழைக்கப்படுகிறது. அக்காலத்திய பாதையின் தன்மைகளை, சிறப்புக்களை உணரும் பொருட்டு, அப்பாதைகளின் வழியே மீண்டும் ஒரு கடல் பயணம் மேற்கொண்டு, வரலாற்று அறிஞர்களும், தொல்லியல் வல்லுநர்களும், மானிடவியற் பேராசிரியர்களும், பல்வேறு நாடுகளைச் சார்ந்த நண்பர்களும், தங்கள் பயணத்தினிடையே சென்னைக்கு 19.12.'90 அன்று வந்திருந்தனர்.**

**இப்பயணத்திற்காக ஓமன் நாட்டு அரசர் 'சுல்தான் காபூல்' ஒரு கப்பலை இக்குழுவினரின் பயணுக்காக ஒதுக்கிக் கொடுத்துள்ளார். அக்கப்பலின் பெயர், இந்தப் பயணத்தின் நோக்கத்தை விளக்கும் வகையில் 'அமைதிக் கப்பல்' என்றே அமைந்துள்ளது.**

**மார்க்கோபோலோவின் மாநகர் என்று அழைக்கப்படும் இத்தாலி நாட்டிலுள்ள வெனிசு நகரத்திலிருந்து பயணம் தொடங்கப்பட்டு, ஒசாகா, இத்தாலி, கிரீஸ், கோவா, கொழும்பு வழியாக சென்னைக்குப் பயணம் மேற்கொள்ளப்பட்டது.**

**உலக நாடுகளுக்கும் தமிழகத்துக்கும் இடையே பண்டு நிகழ்ந்த வணிக உறவு, பண்பாட்டு உறவு பற்றிய கருத்தரங்கு ஒன்றை மத்திய தொல்பொருள் ஆய்வுத்துறையும், இந்திய தேசிய கலைப் பண்பாட்டு நிறுவனமும் இணைந்து டிசம்பர் 20,21 ஆகிய நாட்களில் சென்னையில் நடத்தின. இந்தக் கருத்தரங்கில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 83 பிரதிநிதிகளும், இந்தியாவிலிருந்து 32 பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.**





# சென்னையில் சிறுதொழில் முனைவோருக்கு விருதுகள் வழங்கும் விழா

சிறந்த சிறு தொழில் அதிபர்களுக்கும், ஏற்றுமதியில் சிறந்து விளங்கும் பெரிய தொழிலகங்களுக்கும் தமிழக அரசின் விருது வழங்கும் விழா 21.12.90 அன்று சென்னையில் தலைமைச் செயலகத்தில், நாமக்கல் கவிஞர் மாளிகையில் அமைந்திருக்கும் எழிலரங்கில் நடைபெற்றது. மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்தார். மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் விழாவில் கலந்து கொண்டு, விருதுகளை வழங்கினார்.

மாநிலத்தில முதலிடம் பெற்ற தொழில் நிறுவனங்களுக்கு ரூ.10,000 ரொக்கப் பரிசும், பூமியைப் போன்ற உருண்டை வடிவம் கொண்ட கேடயங்களும் வழங்கினார். மாவட்ட அளவிலான பரிசு பெற்ற நிறுவனங்களுக்குத் தலா ரூ.3,000 வீதம் வழங்கினார்.

1987-ஆம் ஆண்டிற்கான ஏற்றுமதி விருதுகள் 8 நிறுவனங்களுக்கும், 1988-ஆம் ஆண்டிற்கான விருதுகள் 9 நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டன.

1989-ஆம் ஆண்டுக்கான மாநில விருது ஒரு நிறுவனத்திற்கும், மாவட்ட விருதுகள் 20 நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டன.

தொழில்துறைச் செயலர் திரு. பூரணலிங்கம், இ.ஆ.ப., தமிழ்நாடு சிறுதொழில் கழகத் தலைவர் திரு.டி.எஸ். தனபாலன், பொறியியல் தொழில் கூட்டமைப்பின் தலைவர் திரு. என். குமார், ஏற்றுமதி அமைப்புகள் பெடரேஷன் தலைவர் திரு. வெள்ளையன் ஆகியோரும் பேசினர். தொடக்கத்தில் தொழில் மற்றும் வர்த்தகத்துறை இயக்குநர் திரு. ஜே.எஸ். சியம், இ.ஆ.ப. வரவேற்றார்.

சிறு தொழில் முனைவோருக்கும் தமிழக அரசின் பரிசுகள் மற்றும் ஏற்றுமதியில் முதன்மை வகிக்கும் சிறிய நடுத்தர மற்றும் பெரிய தொழிலகங்களுக்கும் விருதுகளை வழங்கி முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றும்போது குறிப்பிட்டதாவது:

இன்று நடைபெறுகின்ற இந்த விருது வழங்கும் விழா இந்த ஓராண்டு காலத்தில் இரண்டாவது முறையாக நடைபெறுகின்ற நிகழ்ச்சி என்று எனக்கு முன்னால் இங்கே பேசியவர்களெல்லாம் குறிப்பிட்டு இருக்கின்றார்கள். 17.3.90 அன்று நடைபெற்ற விழாவில் சிறுதொழில்களுக்கு 1987-ஆம் ஆண்டுக்குரிய மாநில அளவிலும் மற்றும் மாவட்ட அளவிலும் தரப்படவேண்டிய பரிசுகளும், பெரிய நடுத்தர மற்றும் சிறு தொழில்களுக்கு அவற்றின் ஏற்றுமதி சிறப்புக்காக 1986-ஆம் ஆண்டுக்குரிய மாநில அளவிலான பரிசுகளும் அந்த நிகழ்ச்சியிலே தான் வழங்கப்பட்டன என்பதை நீங்கள் அறிவீர்கள்.

எனவே, கிடப்பிலே போடப்பட்ட அல்லது செயல்படாமலிருந்த பலவற்றைச் செயல்பட வைக்க வேண்டும்; அதன் காரணமாக இந்த மாநிலம் எல்லா வகையிலும் வளம்



கீழை மேலை நாடுகளுடன் இந்திய வாணிகம் மற்றும் பண்பாட்டு உறவு பற்றிய அருங்காட்சியை சென்னையில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்துப் பார்வையிட்டார் (19.12.90).



# இந்த இதழில்...


காவிரிப்பூம்பட்டினத்தில் அகழ்வாராய்ச்சி தமிழக அரசு மேற்கொள்ளும் —மாண்புமிகு முதல்வர் கலைஞர் ... 2

சென்னையில் சிறுதொழில் முனைவோருக்கும், பெரிய தொழிலகங்களுக்கும் பரிசுகள், விருதுகள் வழங்கும் விழா ... 5

கல்வித்துறையில் அரசு ஆற்றிவரும் அரும்பணிகள் —மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் ... 9

அரும்பாக்கத்தில் ஓர் அரும்பணி ... 14

பாவேந்தர் குடும்பத்தாருக்குப் பரிவுத்தொகை வழங்கு விழா ... 17

அடுக்கிக் கொண்டே போகலாம் இந்த ஆட்சியில் ஆண்டிரண்டின் சாதனையை (கருத்துப் படங்கள்) ... 24

தருமபுரி மாவட்டத்தில் பட்டு வளர்ச்சி ... 26

திருச்சி மாவட்டத்தில் ரூ.9 கோடியில் 564 குடியிருப்புகளுக்குக் குடிநீர்த் திட்டம் ... 29

சேலம் மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள் ... 31

வளரும் வேளாண்மை ... 32

ஊரக வளர்ச்சி-ஒரு கண்ணோட்டம் ... 33

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் பால்வளம் ... 38

திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டத்தில் சிறுசேமிப்பில் சாதனை ... 40

உலகத்திரைப்பட விழா ... 42

உலகச் சுற்றுலா ஆண்டு - 1991 ... 44

வேடந்தாங்கல் ... 48


## அரசு அலுவலருக்குப் போனஸ்

அரசு அலுவலருக்கு 15 நாள் போனஸ் வழங்கப்படும். 15 நாள் ஈட்டிய விடுப்பைப் பணமாக்கும் முறையும் தொடரும். மத்திய அரசு ஊழியருக்கு 27 நாள் போனஸ் இருக்கிறது. ஆனால், அவர்களுக்கு ஈட்டிய விடுப்பைப் பணமாக்கும் முறை கிடையாது. இந்த 15 நாள் போனஸ் மற்றும் 15 நாள் ஈட்டிய விடுப்பைப் பணமாக அளிப்பதால், ஒரு மாத போனஸிற்கு இது ஈடாகிறது. இந்த போனஸினால் குறைந்த பட்சம் 518 ரூபாயும், அதிக பட்சம் 800 ரூபாயும் கிடைக்கும். இந்த ரூபாய் தவிர 15 நாள் ஈட்டிய விடுப்பை ஒப்படைப்பு செய்வதால், கிடைக்கிற பணமும் சேருகிறது.

போனஸ் முறைப்படியும், விதிகளின் படியும் சில்லறைப் பணியாளர்கள், அதைப் போலவே 2,500 ரூபாய்க்கு மேல் மாத ஊதியம் பெறுகிறவர்கள்- இந்த இரு சாராரும் இந்த போனஸால் பயன் பெற இயலாததைக் கருத்தில் கொண்டு அவர்களுக்குக் கடந்த ஆண்டு பொங்கல் பரிசாக 400 ரூபாய் தரப்பட்டதை இந்த ஆண்டு 450 ரூபாயாக உயர்த்தித் தரப்படுகிறது.

மத்திய அரசில் சில்லறைப் பணியாளர்களுக்கு போனஸ் கணக்குப்படி அவர்களுக்கு 262 ரூபாய் கிடைக்கிறது. நாம் 450 ரூபாய் கொடுக்கிறோம். 2,500 ரூபாய்க்கு மேல் ஊதியம் பெறும் மத்திய அரசு ஊழியர்களுக்கு போனஸ் கிடையாது. நாம் அவர்களுக்கு 450 ரூபாய் கொடுக்கிறோம். இந்த போனஸ் அறிவிப்பினால் அரசுக்கு சுமார் 70 கோடி ரூபாய் செலவாகும்.

— முதல்வர் கலைஞர்


தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2021

மார்கழித் திங்கள் - 17

மலர்:21 1-1-1991 இதழ்:13

1989-90-இல் ஏப்ரல் முதல் நவம்பர் வரையிலான காலத்தில் பெரிய மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கு மானியத் தொகையாக 2.18 கோடி ரூபாய் ஒப்பளிப்பு செய்யப்பட்டது. இது 89-90 இறுதியில் ரூ.4.24 கோடியாக உயர்ந்திருந்தது. ஆனால் 90-91-இல் ஏப்ரல் முதல் நவம்பர் வரையிலான காலத்திலே இது 7.33 கோடி ரூபாய் அளவிற்கு வளர்ந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். 89-90-இல் விற்பனை வரி ஒத்திவைப்பு மற்றும் கடன் மற்றும் ஒத்திவைப்புத் திட்டங்களுக்கு 12.26 கோடி ரூபாய் அளவிற்கு அத்தியாவசியச் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கின்றது. இதற்கு மாறாக 90-91-இல் நவம்பர் மாதம் வரை இந்தத் திட்டங்களுக்கான அதிகார அத்தியாவசியச் சான்றிதழ்கள் 104.95 கோடி ரூபாய் அளவிற்குத் தரப்பட்டுள்ளன என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

### ஒத்துழைப்பை வழங்குவீர்

இதே போன்று சிறு தொழில் துறையிலும் முன்னேற்றம் குறிப்பிடத் தக்க வகையில் அமைந்துள்ளது. 22.5.89 முதல் 30.11.90 வரையிலான காலத்தில் மட்டும் 107 ஆக உயர்ந்துள்ள பிற்பட்ட வட்டங்களில் 5,719 சிறு தொழில்கள் பதிவுச் சான்றிதழ் பெற்றுள்ளன. இவற்றுள் 31 வட்டங்கள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இவற்றில் அமைந்துள்ள புதிய தொழில்களும் விரிவாக்கத்தை மேற்கொள்ள இருக்கின்றன. நிலை முதலீடு அளவிற்கு முதல் ஐந்தாண்டுகளுக்கு விற்பனை வரி விலக்கு பெறும். இவையெல்லாம் நல்ல துவக்கத்திற்கு ஒரு அறிகுறியாகத்தான் அரசு எடுத்துக் கொண்டுள்ளது. மேலும் தொழில்கள் நலியாமல் பார்த்துக்கொள்ளவும் புதிய தொழில்கள் புதிய யுக்திகள் இவைகள் தான் மிக முக்கியமான அடிப்படை என்பதை உணர்ந்து நம்முடைய விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடங்கள் தொழில் முறையைப் பயன்படுத்தக்கூடிய பல திட்டங்களையும் வடிவமைத்திருக்கின்றோம். புதிய துறைகளிலும் நாம் கவனம் செலுத்திக் கொண்டிருக்கின்றோம். சான்றாக, பிளாஸ்டிக் தொழில் கம்ப்யூட்டர்கள், மின் அணுவியல், உயிரியல், தொழில் நுட்பத்துறை போன்ற சிறந்த வாய்ப்புள்ள தொழில்களை மேற்கொள்ள நம்முடைய தொழில் அதிபர்கள் முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். அவர்கள் அத்தகைய முயற்சிகளை மேற்கொள்ளும்போது இருக்கின்ற குறைபாடுகளை நீக்குவதற்கும் பிரச்சினைகளைக்கலந்து பேசித் தீர்வு காண்பதற்கும் இந்த அரசு என்றென்றும் தயாராக இருக்கிறது என்பதையும் எடுத்துக் கூறி விருதுகள் பெறுகின்ற அனைவரையும் மீண்டும் ஒரு முறை வாழ்த்தி, பாராட்டி இன்று போல் என்றென்றும் தொழில் வளர்ச்சிக்கு இந்த அரசுக்கு உங்களுடைய அன்பான ஒத்துழைப்பை வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

## சிறுதொழில்களுக்கு அரசின் புதிய சலுகைகள்

**கி**ராமப் பகுதிகளிலும், பின்தங்கிய பகுதிகளிலும் தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்த, சிறு தொழில்களுக்கு வரியில்லா விற்பனை வரிக்கடன் திட்டத்தைத் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. அண்மையில் இத்திட்டம் விற்பனை வரித் தொகையை முழுவதுமாக ஒத்தி வைக்கும் அல்லது தள்ளுபடி செய்யும் திட்டமாக மாற்றப்பட்டுள்ளது. அதன்படி, மிகவும் பின்தங்கிய 31 வட்டங்களிலும், புதுக்கோட்டை, கடலூர், மானாமதுரை ஆகிய இடங்களிலுள்ள 3 தொழில் வளாகங்களிலும் உள்ள புதிய தொழிற் பிரிவுகளும், விரிவாக்கப் பணியை அல்லது பலதிறப்படுத்தும் பணியை மேற்கொண்டுவரும் தொழிற் பிரிவுகளும் ஐந்து ஆண்டுகளுக்கு விற்பனை வரி முழுவதையும் தள்ளுபடி செய்யப் படுவதற்குத் தகுதி பெறுகின்றன.

மேலும் 76 பின்தங்கிய வட்டங்களிலும், அரசு சார்பிலான அமைப்புகள் அமைத்துள்ள தொழிற்பேட்டைகளிலும் உள்ள புதிய தொழிற் பிரிவுகளும், விரிவாக்கப் பணியை அல்லது பல திறப்படுத்தும் பணியை மேற்கொண்டு வரும் தொழிற் பிரிவுகளும் ஒன்பது ஆண்டுகளுக்கு விற்பனை வரியை ஒத்தி வைக்கத் தகுதி பெறுகின்றன.

மேற்கூறிய திட்டத்தில் அடங்காத எஞ்சிய பகுதிகளில் புதிதாகத் துவக்கப்பட உள்ள தொழிற் பிரிவுகளும், விரிவாக்கப் பணியை மேற்கொண்டுவரும் தொழிற் பிரிவுகளும் ஐந்து ஆண்டுகளுக்கு விற்பனை வரியை ஒத்தி வைக்கத் தகுதி பெறுகின்றன.

மேற்படி திட்டத்தின்கீழ் கடன் பெற விண்ணப்பிக்கும் சிறுதொழில் அதிபர்கள் விண்ணப்ப மனுவுடன், கடன் மதிப்பில் 1 சதவிகித ஆய்வுக் கட்டணத்தைத் தற்போதுள்ள நடைமுறைப்படி செலுத்த வேண்டும். மேற்கூறிய ஆய்வுக் கட்டணத்தைச் செலுத்துவதில் தொழில் அதிபர்களுக்கு உள்ள சிரமத்தைச் சிறு தொழில்கள் சங்கங்கள் சுட்டிக் காட்டியுள்ளன. அவர்களுடைய வேண்டுகோளைக் கருத்திற்கொண்டு, அரசு இத்திட்டத்தின்கீழ் செலுத்தப் பட்டுவந்த 1 சதவிகித ஆய்வுக் கட்டணத்தை முழுவதுமாகத் தள்ளுபடி செய்து ஆணை வெளியிட்டுள்ளது.

பெற்றுச் செழித்திட வேண்டும் என்கின்ற நோக்கத்தோடு இந்த அரசு காரியங்களை ஆற்றிவருகிறது என்பதை இங்கே குழுமியுள்ள யாரும் மறுக்க மாட்டார்கள் என்று நான் திடமாக நம்புகின்றேன். சில வற்றை, இனிமேல் பயன்படாது என்று ஒதுக்கப்பட்டவைகளைக் கூட, பயன்படுத்திப் பார்ப்போம் என்று சோதனை செய்கின்ற ஒரு அரசாக இந்த அரசு இன்றைக்கு விளங்கிக்கொண்டிருக்கிறது.

குறிப்பாக வீராணம் திட்டம்- அந்தத் திட்டம் நேர்த்தியான திட்டம் அதை நிறைவேற்றலாமென்று 76-க்குப் பிறகு வந்த கவர்னர் ஆட்சியிலே கூட, கவர்னர் ஆட்சியிலே அமைக்கப்பட்ட அந்தக் குழு சிபாரிசு செய்து இருந்தாலும், அது கிடப்பிலே போடப்பட்டது. பிறகு தெலுங்கு கங்கைத் திட்டம் தொடங்கப்பட்டு அதற்கும் பெரும் ஓய்வு தரப்பட்டு இந்த ஆட்சி மீண்டும் வந்தபிறகு அந்தத் திட்டம் மிக வேகமாகச் செயல்படத் தொடங்கியிருக்கிறது என்பதை அறிவீர்கள். வீராணம் திட்டத்தை மீண்டும் செயல்படுத்தவேண்டிய அவசியம் இல்லை என்று இந்த அரசு உணர்ந்து, அதற்கென செய்யப்பட்ட குழாய்கள் சாலை ஓரங்களில் ஏழை எளிய மக்களுக்கு இப்பொழுது தங்குவதற்கு வசதியான இல்லங்களாக மாறிக் கொண்டிருக்கின்றன என்பதை அறிந்து, அவர்களுக்குப் புதிய வீடுகள் கட்டித் தரலாம், இந்தக் குழாய்களை நல்ல முறையிலே பயன்படுத்தலாம் என்று ஆராய்ந்து எண்ணூர் பகுதியிலே கடல் அரிப்பைத் தடுப்பதற்காக அந்தக் குழாய்களை இப்பொழுது பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். அதற்காகப் பரிட்சார்த்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஏடுகளிலே அந்தப் படங்களைக் கூடக் கண்டிருப்பீர்கள்.

### எழில்மிகு கடற்கரை

இன்னொன்றையும் சொல்ல விரும்புகின்றேன். நண்பர் வாசு போன்றவர்களுக்கெல்லாம் பிடிக்கும் என்ற காரணத்தால்; சென்னைக் கடற்கரை உலகத்திலேயே போற்றப்படுகிற-புகழப்படுகிற கடற்கரைகளில் இரண்டாவது கடற்கரையாகும். அந்தக் கடல் பெருவெளி அசுத்த



**வாழ்க்கை அவனவன் வாழ்வதற்கு என்று மட்டும் கருதக்கூடாது. மற்றவர்கள் நலனுக்கும் என்று கருத வேண்டும்.**

**நல்ல குடும்பம் என்பது வரவுக்கு மிஞ்சிச் செலவு செய்யாமல் இருப்பதாகும். தனது வாழ்க்கைச் செலவை வரவுக்கு உட்பட்டே அமைத்துக் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட குடும்பம்தான் கண்ணியமான குடும்பம்.**

**. யார் எந்தக் கருத்தைச் சொன்னாலும், அதனை அப்படியே ஏற்றுக்கொள்வது என்றால், மனிதன் வளர்ச்சி அடைய மாட்டான்.**

*-தந்தை பெரியார்*

முற்ற கடற்காற்றை வாங்கச் செல்லுகின்றவர்கள் சிரமங்களை அனுபவிக்கின்ற வகையிலே இருந்ததை- இன்றல்ல 1975-ஆம் ஆண்டே உணர்ந்து, பல்லாயிரக்கணக்கான இலட்சக்கணக்கான மக்கள் பல்லாண்டுக் காலமாக அந்த வெண் மணலில் நடமாடியும், உட்கார்ந்தும், இருந்த காரணத்தினால், அந்த மணல்களெல்லாம் பொடி மணல்களாகிப் போய், அமர்ந்தால் நம்முடைய ஆடையிலே ஒட்டிக் கொள்கின்ற அழுக்குத் துகள்களாக மாறிவிட்டதை எண்ணி, அன்றைக்கு நானும் நம்முடைய நாவலர் நெடுஞ்செழியன் அவர்களும் ஒரு யோசனையைச் செய்து கீழேயிருக்கின்ற பெரு மணலையெல்லாம் மேலே கொண்டு வர புல்டோசரைப் பயன்படுத்தலாம் என்று எண்ணினோம். ஆனால் 76-இல் டெல்லியிலிருந்து பயன்படுத்தப்பட்ட புல்டோசர், ஆட்சியையே அகற்றி விட்ட காரணத்தினால், அந்த புல்டோசரை நாங்கள் பயன்படுத்த முடியவில்லை சென்னைக் கடற்கரையில்.

இப்போது நீங்கள் பார்க்கின்றீர்கள், பத்திரிகைகளிலே இன்றைக்குப் படங்கள் - எத்தனை புல்டோசர்களைப் பயன்படுத்த முடியுமோ அத்தனைப் புல்டோசர்களையும் பயன்படுத்தி வெகு விரைவில் சென்னைக் கடற்கரையிலே இருக்கின்ற புழுதி மணல்களெல்லாம் கீழே போகவும், கீழே இருக்கின்ற பெரு மணல்களெல்லாம் மேலே வரவுமான ஒரு புரட்சியை, சென்னைக் கடற்கரை மணலிலே செய்வதற்கு ஆணையிடப்பட்டு அந்தக் காரியம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

புரட்சி என்பது இது தான். புரட்சி என்பது தலைகீழாக ஒரு மாற்றத்தைக் கொண்டுவருவதுதான் புரட்சி. அது தொழிற் துறையிலும் தேவை என்று இந்த அரசு கருதுகிற காரணத்தால் தான் நீங்கள் எல்லாம் இந்த மன்றத்திற்கு நான்காவது அல்லது ஐந்தாவது தடவையாக வந்து எங்களைச் சந்திக்கின்றீர்கள்.

இந்த மண்டபம் பழைய மண்டபமாக இருந்தபோதும் வந்தீர்கள், இந்திய ஒருமைப்பாடு மாநாட்டிற்காக இந்த மண்டபம் அழகுபடுத்தப்பட்டு டெல்லியிலே இருக்கின்ற இது போன்ற மாநாட்டு மண்டபங்களுக்கு ஈடான ஒரு மண்டபம் இந்தியாவிலே நம்முடைய மாநிலத்திலே தான் இருக்கின்றது என்று சொல்லத்தக்க அளவிற்கு மாற்றப்பட்டிருக்கின்ற இந்த மண்டபத்திலே நாம் சந்திக்கின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கின்றோம்.

### அரசு கொண்டிருக்கிற அக்கறை

இதிலிருந்தே நீங்கள் புரிந்து கொள்ளலாம், தொழில் முனைவர்களிடத்திலே அரசு கொண்டிருக்கின்ற அக்கறை ஒவ்வொரு தொழில் முனைவர்களுடைய தன்னலத்திற்காகவோ அல்லது சொந்த வாழ்க்கையினுடைய முன்னேற்றத்திற்காகவோ அல்ல. ஆனால் ஒவ்வொருவருடைய சொந்த வாழ்க்கை முன்னேற்றத்திலும் ஒவ்வொருவருடைய தன்னலத்திலும் கூட பொது நலமும் கலந்திருக்கிறது. நீங்கள் ஒரு தொழில் தொடங்குகின்றீர்கள் - உங்களுடைய வாழ்வுப் பிரச்சினைக்காக - உங்களுடைய ஆதாயத்திற்காக என்றாலும் கூட, அதிலே பணிபுரிகின்ற நூறுபேர் இருநூறு பேர் வேலை வாய்ப்பைப் பெருகின்றார்கள் என்கின்ற பொதுநலம் அதிலே இணைந்திருக்கின்ற காரணத்தினாலேதான்,

ஒரு அரசு தொழில்களை ஊக்கப்படுத்த தொழில் முனைவர்கள், அதிபர்கள் இவர்களுடைய கோரிக்கைகளையும் ஏற்க வேண்டிய உள்ளத்தைப் பெற வேண்டிய அரசாக இருக்க வேண்டியிருக்கிறது.

அந்த வகையில் ஊக்கப்படுத்துகின்ற நிலையில் இந்த ஆண்டு இந்த விழாவிலே விருதுகளை நான் வழங்க இருக்கின்றேன். விருதுகளைப் பெறுகின்றவர்களுக்கெல்லாம் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். தமிழகத்தினுடைய பொருளாதார முன்னேற்றத்தில் தொழில் வளர்ச்சியினுடைய முக்கியமான பங்கைக் கருத்தில் கொண்டு மகாராஷ்டிரம், குஜராத் போன்ற மாநிலங்களோடு ஒப்பிடக் கூடிய அளவிற்கு நம்முடைய ஊக்குவிப்புத் திட்டங்கள் அமைந்திடவில்லை என்று இருந்த குறைபாடு இப்போது நீக்கப்பட்டிருப்பதை நீங்கள் எல்லாம் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நான் நம்புகின்றேன்.

தொழில் அதிபர்கள் அவ்வப்போது எங்களைச் சந்தித்துப் பிரச்சினைகளை இதுபோன்ற கூட்டங்களில் மாத்திரமல்ல, தனியாகக் கூடச் சந்தித்துப் பிரச்சினைகளை எடுத்துச் சொல்லவும் அவைகளை உடனடியாக நீக்கவுமான முயற்சிகள் அரசின் சார்பிலும் அரசினுடைய செயலகங்களின் சார்பிலும் இன்றைக்கு மேற்கொள்ளப்படுகின்றன. அதனையும் நீங்கள் மிகத் தெளிவாக அறிவீர்கள்.

### தொழில் மையங்கள்

வளர்ச்சி மையங்களுடைய திட்டம் என்று ஏற்கெனவே மத்திய அரசு சற்று தாராளமாக அவைகளை அனுமதித்துக் கொண்டிருந்தது. அதற்குப் பிறகு மத்தியிலே இடையிலே இரண்டொரு அரசுகள் மாறியுள்ள சூழ்நிலையில் கூட மத்திய அரசின் மூலமாக மாநில அரசிற்குத் தரப்பட்ட திட்டங்கள் - தொழில் மையங்கள் இவைகள் புறக்கணிக்கப்பட்ட சூழ்நிலையில் நம்முடைய வலியுறுத்தலின் மீது, நமக்குப் பெருந்துறையிலும், மயிலாடுதுறைக்கு அருகில் பூம்புகாரிலும், நெல்லை மாவட்டத்திலே கங்கைகொண்டான் மானூர் பகுதியிலும், தொழில் மையங்களை ஏற்படுத்த நாம் அனுமதிகளைப் பெற்றிருக்கிறோம். அந்தத் திட்டங்கள் வெகு விரைவிலே தொடர இருக்கின்றன.

### வளரும் தொழில்கள்

ஓசூர் மின் அணு தொழில்களுக்குரிய மையம் 450 ஏக்கர் நிலப் பரப்பில் அமைக்கப்பட்டு வருகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். உணவுப் பொருள் பக்குவப்படுத்தும் தொழில்களுக்குரிய மையம் ஒன்றை நிலக்கோட்டையிலே அமைத்திட நான் சட்டமன்றப் பேரவையிலேயே அறிவித்திருக்கின்றேன். அந்த அறிவிப்பின் அடிப்படையில் நிலக்கோட்டையில் அந்த மையம் அமைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தோல் தொழில்களுக்கான மையம் ஒன்று சென்னைக்கு அருகே அமைக்கப்படவுள்ளது. மணலிப் பகுதி பெட்ரோலியத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில் கேந்திரமாக வடிவெடுத்து வருகிறது. உயர் முதலீடு கொண்ட ஆர்.பி.ஜி. பெட்ரோ கெமிக்கல்ஸ், ஆரோமேட்டிக் போன்ற முக்கியமான திட்டங்கள் இங்கு அமைந்திட உள்ளன. இதில் ஆரோமேட்டிக் சற்று இடைஞ்சலுக்குரிய நிலையிலே இருந்தாலும் கூட அதனை நிச்சயமாகப் பெற முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. மத்திய அரசும் பல கட்டங்களைத் தாண்டி இறுதியாக நம்முடைய கைக்குச்சேர வேண்டிய கட்டத்தில் உள்ள ஆரோமேட்டிக் திட்டத்திற்கான அனுமதியை விரைவிலே வழங்கும் என்று நான் நம்புகிறேன்.

காவேரிப்படுகையிலே பெட்ரோலிய எண்ணெயும் இயற்கை வாயுவும் கிடைப்பதை நாமெல்லாம் அறிவோம். பெட்ரோலிய எண்ணெயை மூலப் பொருளாகக் கொண்டு ஐந்து இலட்சம் டன் திறன் கொண்ட சுத்திகரிப்பு ஆலை ஒன்று 120 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படவுள்ளது. இதைத் தவிர இந்தப் பகுதியிலே வாயுவிலே இருந்து மின்சக்தி உற்பத்தி செய்யும் திட்டம் ஒன்றையும் மின் வாரியம் செயல்படுத்த இருக்கின்றது.

### செயல் திறன் மேம்பட

வளர்ச்சிப் பணிகளிலே ஈடுபட்டுள்ள அரசு நிறுவனங்களின் செயல்திறனை மேம்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன; அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டுள்ளன. சான்றாக, மாநில முதலீட்டு மானியம், சிறப்புத் தொழிலுக்குரிய மானியம் போன்றவற்றை ஒப்பளிப்பு செய்திட "சிப்காட்" நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநருக்கு இப்பொழுது அதிகாரம் தரப்பட்டுள்ளது. கொள்கை அளவில் மேற்கொள்ள வேண்டிய முடிவுகளை மட்டுமே இயக்குநர்கள் குழு ஆய்வு செய்யும். ஒப்பளிப்பு செய்யப்பட்டவற்றிற்குரிய தொகையை வழங்கிடும் அதிகாரம் பொது மேலாளருக்குத் தரப்பட்டுள்ளது. நிதி வழங்கிடும் முறையை விரைவுபடுத்துவதற்கெனத் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திலும் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டுள்ளன. அதாவது, கிளை அலுவலகங்களின் ஒப்பளிப்பு அதிகார வரம்பு ரூபாய் மூன்று இலட்சத்திலிருந்து ஐந்து இலட்சமாகவும், வட்டார அலுவலகங்களுக்கு ரூபாய் ஐந்து இலட்சத்திலிருந்து 12.50 இலட்சமாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. மைய அலுவலகத்திலே உள்ள கடன் ஒப்பளிப்புக் குழு ரூ.21.50 இலட்சத்திலிருந்து ரூ.25 இலட்சம் வரையிலும், செயற்குழு ரூ.50 இலட்சம் வரை ஒப்பளிப்பு செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ரூ.50 இலட்சத்திற்கு மேற்பட்டவற்றை மட்டுமே இயக்குநர்களுடைய குழு பரிசீலிக்கும். அரசின் அணுகு முறையிலும் வளர்ச்சித் திட்டங்கள் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன என்பதற்கு ஒரு சில புள்ளி விவரங்களை உங்கள் முன்னால் வைக்க விரும்புகின்றேன்.



**பாவேந்தர் நூற்றாண்டு**

**சொத்தெலாம் விற்றும் கற்ற கல்வியாம்**
**வித்தால் விளைவன மேன்மை இன்பம்,**
**செல்வம் கடல்போல் சேரினும் என்பயன்?**
**கல்வி இல்லான் கண்இலான் என்க!**



# கல்வித் துறையில் அரசு ஆற்றிவரும் அரும் பணிகள்


மாண்புமிகு கல்வி அமைச்சர்

**பேராசிரியர் க. அன்பழகன்**


''எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு''

— என்றார் வள்ளுவர்.

எண்ணும் எழுத்தும் கருவியாக நின்று, எண்ணங்களுக்கு வடிவம் கொடுக்கின்றன. கல்லாமை - இல்லாமையினும் கொடிது; மனிதவள ஆற்றல் பெருக, உழைப்புத் திறன் வளர, மனித முயற்சியின் பலன் சிறக்க, எழுத்தறிவு வழிப்பட்ட கல்வி நாட்டினர் எல்லோருக்கும் இன்றியமையாததாகும்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் கழக அரசு கல்வித்துறையில் பலமுனைகளிலும், பலநிலைகளிலும், ஆற்றிவரும் பணிகள் சிறப்பு வாய்ந்தவை. கல்விக்காக 1988-89-இல் செலவிடப்பட்ட தொகை ரூ.795 கோடி. இவ்வாண்டு (1990-91) கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ.1,042 கோடியாகும். இது இவ்வாண்டு இம்மாநிலத்தின் வருவாய்க் கணக்கில் ஆகும் மொத்த செலவான ரூ.4,814 கோடியில் சுமார் 22 விழுக்காடு ஆகும்.

தொடக்கக் கல்வியின் முக்கியத்துவம் கருதி ரூ.429 கோடி தொடக்கக் கல்விக்கே ஒதுக்கப்பட்டுள்ளது. பள்ளிக் கல்விக்கு ரூ.319 கோடியும், கல்லூரிக் கல்விக்கு ரூ.87 கோடியும், தொழில் நுட்பக் கல்விக்கு ரூ.32 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளன.

## தொடக்கக் கல்வி

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் கால இறுதிக்குள் (1989-90) 6-11 வயதுக் குழந்தைகளுள் 100 விழுக்காட்டினரும், 11-14 வயதுக் குழந்தைகளுள் 75 விழுக்காட்டினரும் பள்ளியில் சேர்க்கப்பட வேண்டும் என்பது இந்திய அரசு கருதிய இலக்காகும். தமிழ்நாட்டில் 6-11 வயதுத் தொகுதியினர் 100 விழுக்காட்டினரும், 11-14 வயதுத் தொகுதியினர் 88 விழுக்காட்டுக்கு மேலும் பள்ளிகளில் சேர்க்கப்பட்டு விட்டனர். இவ்விரு வயதுத் தொகுதிகளைச் சார்ந்த குழந்தைகளுள் 1989-90-இல்,

**“இவ்வாண்டு (1990-91) கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ.1,042 கோடியாகும். இது இவ்வாண்டு இம்மாநிலத்தின் வருவாய்க் கணக்கில் ஆகும் மொத்த செலவான ரூ.4,814 கோடியில் சுமார் 22 விழுக்காடு ஆகும். தொடக்கக் கல்வியின் முக்கியத்துவம் கருதி, ரூ.429 கோடி தொடக்கக் கல்விக்கே ஒதுக்கப்பட்டுள்ளது. பள்ளிக் கல்விக்கு ரூ.319 கோடியும், கல்லூரிக் கல்விக்கு ரூ.87 கோடியும், தொழில் நுட்பக் கல்விக்கு ரூ.32 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளன.”**



பாவேந்தர்
நூற்றாண்டு

எல்லா நலமும் ஈந்திடும் கல்வி
இல்லா வீட்டை இருண்டவீ டென்க!
படிப்பிலார் நிறைந்த குடித்தனம் நரம்பின்
துடிப்பிலார் நிறைந்த சுடுகா டென்க.

*கல்லூரிக் கல்வி*

1989-90-இல் பல்கலைக் கழக மற்றும் கல்லூரி ஆசிரியர்களுக்கு 'பல்கலைக்கழக நிதிக்குழு ஊதிய விகிதங்கள் வழங்கிட ஆணையிடப்பட்டது. ரூ.57.38 கோடி செலவில் கல்லூரி ஆசிரியர்கள் 16,000 பேர் பயன்பெற்றனர். மேலும், ரூ.19.45 கோடி செலவில் பொறியியல் கல்லூரி மற்றும் பல்தொழிற்பயிலக ஆசிரியர்கள் 4,000 பேர் 'தொழிற்கல்விக்கான அனைத்திந்தியக் குழு' ஊதிய விகிதங்களின் பலனைப் பெற்றனர்.

தமிழ்நாட்டில் உள்ள அரசுக் கல்லூரிகளில் 4 கல்லூரிகளுக்கும், அரசு மானியம் பெறும் தனியார் கல்லூரிகளில் 31 கல்லூரிகளுக்கும் தன்னாட்சி உரிமை Autonomous Status வழங்கப்பட்டுள்ளது. அனைத்திந்தியாவிலும் பிற மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாட்டில் தான் மிக அதிக அளவில் தன்னாட்சி உரிமை பெற்றுள்ள கல்லூரிகள் உள்ளன. சென்னைப் பல்கலைக்கழகம் சென்னையிலுள்ள ஒய்.எம்.சி.எ. உடற்பயிற்சிக் கல்லூரிக்கும் தன்னாட்சி உரிமை அளித்துள்ளது.

மிகப் பிற்படுத்தப்பட்டோர், மற்றும் சீர் மரபைச் சார்ந்த மாணவ மாணவியர்களின் கல்வி நலம் காக்கும் நோக்குடன் படிப்புக் கட்டணம், தனிக் கட்டணம், தேர்வுக் கட்டணம் ஆகியவற்றைச் செலுத்துவதிலிருந்து, வருமான வரம்பின்றி, விலக்கு அளிக்கும் இலவசக் கல்வித் திட்டம் 1989-90-ஆம் கல்வியாண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**இளங்கலைப் பட்டப்படிப்பு முடிய இலவசக் கல்வி**

ஏழை மற்றும் நடுத்தர வகுப்பைச் சார்ந்தவர்களான சமுதாயத்தின் அனைத்துப்பிரிவு மாணவிகளும் கல்லூரிகளில் சேர்ந்து பயிலுவதை ஊக்குவிக்கும் வகையில் 1989-90 முதல் 'ஈ.வெ.ரா. பெரியார் நாகம்மையார் பெண்களுக்கான இலவசக் கல்வித்திட்டம்' செயற்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி ஆண்டு வருமானம் ரூ.12,000-க்கு மேல் இல்லாத பெற்றோரின் பெண் குழந்தைகளுக்கு இளங்கலைப் பட்டப் படிப்பு முடிய இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. கடந்த ஆண்டு 5,444 மாணவிகள் பயன் பெற்றனர்.

கல்லூரிகளில் சேர விழையும் மாணவர் எண்ணிக்கை அதிகரிப்புக்கு இடமளித்திட 1989-90-ஆம் கல்வியாண்டில் அரசு உதவி பெறும் தனியார் கல்லூரிகளில் 7 இளநிலைப் பட்ட வகுப்புகளும், 12 முதுநிலைப் பட்ட வகுப்புகளும் தொடங்கப்பட்டன. அவை பெரும்பாலும் வேலை வாய்ப்பு அதிகமுள்ள பாடத்துறைகளாகும் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாண்டு கோயம்புத்தூர் அரசு கலைக் கல்லூரியிலும், கும்பகோணம் அரசு மகளிர் கல்லூரியிலும் 'கணிப் பொறியியலில்' இளங்கலைப் பட்ட வகுப்புகள் தொடங்க ஏற்பு அளிக்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் மேலும் சில கல்லூரிகளில் இத்தகைய புதிய பாடமுறைகள் தொடங்கப்படவிருக்கின்றன.

'நீராருங் கடலுடுத்த' எனத் தொடங்கும் தமிழ்த் தாய் வாழ்த்தினை இயற்றிய மாமேதையின் நினைவு போற்றும் முறையில் இவ்வாண்டு திருநெல்வேலியில் 'மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம்' நிறுவப்பட்டுள்ளது. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் கொடைக்கானல் மலைமேல் அமைந்திருப்பதால் ஏற்படும் இடர்ப்பாடுகளை நீக்கவும், அதன் பயனையும் வளர்ச்சியையும் மேம்படுத்திடவும், அப்பல்கலைக்கழகத்தைச் சென்னைக்கு அருகில் மாற்றிட நடவடிக்கை எடுக்கப்படுகிறது. எனினும், அப்பல்கலைக் கழகத்தின் ஒரு பிரிவு தொடர்ந்து கொடைக்கானலில் செயல்பட்டுவரும்.

**தொழில் நுட்பக் கல்வி**

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிப்பது தொழில் நுட்பக் கல்வியே ஆகும். பொருளாதார வளர்ச்சியை உருவாக்கிக் கொடுக்கும் பலவித தொழிற்சாலைகளையும் நிர்வகிக்கத் திறமை வாய்ந்தவர்கள் தொழிற்கல்வி பயின்றவர்களும் பொறியாளர்களுமே ஆவர். தமிழகத்தில் தற்சமயம் 28 சுயநிதிப் பொறியியற் கல்லூரிகள் உட்பட மொத்தம் 42 பொறியியற் கல்லூரிகள் உள்ளன. மற்றும் 74 சுயநிதிப் பல்துறைத் தொழில் நுட்பப் பயிலகங்கள் உட்பட 132 பல்துறை தொழில் நுட்பப் பயிலகங்கள் செயல்பட்டு வருகின்றன. 1990-91-ஆம் ஆண்டில் பட்டப்படிப்புத் துறையில் முழுநேர மாணவர்களாக 6,827 பேரும், பகுதிநேரப் படிப்பிற்காக 1,160 மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப் பட்டுள்ளார்கள். அதேபோன்று பல்துறைத் தொழில் நுட்பப் பயிலகங்களில் முழுநேரப் படிப்பில் 22,332 பேரும், பகுதிநேரப் படிப்பில் 1,675 பேர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

பட்டமேற்படிப்புத் துறைகளில் கீழ்க்கண்டவாறு மாணவர்கள் பயில வசதிகள் உள்ளன:

முதுகலைப் பட்டம் - முழுநேரம் 276,
பகுதி நேரம் 56.
பட்டய மேற்படிப்பு - முழுநேரம் - 253,
பகுதிநேரம் 90

தொழில் நுட்பக் கல்வித்துறையின்

நிருவாகத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் பல் தொழிற் பயிலகங்களைக் கவனிக்க கூடுதல் இயக்குநர் ஒருவரும், தேர்வுப் பணிகளைக் கவனிக்க கூடுதல் இயக்குநர் ஒருவரும் முழுப் பொறுப்புடன் நியமிக்கப்பட்டுள்ளனர். இதனால் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் தன் முழுக் கவனத்தையும் பொறியியற் கல்லூரிகளின் நிருவாகத்தை மேம்படுத்துவதில் செலுத்த இயல்கிறது.

கல்வியில் பின்தங்கிய குடும்பங்களைச் சார்ந்த மாணவ மாணவியர் பொறியியல், மருத்துவம், வேளாண்மை, கால்நடை மருத்துவம் ஆகிய தொழிற் கல்லூரிகளில் சேர முன்னுரிமை தர வேண்டும் என்ற நோக்கத்துடன், இவ்வாண்டு அக்கல்லூரிகளில் சேருவதற்கான நுழைவுத் தேர்வு எழுதியவர்களுள் யார்யார் குடும்பத்தில் ஒரு பட்டதாரி கூட இல்லையோ அவர்களுக்குக் கூடுதலாக 5 மதிப்பெண்கள் வழங்கிட அரசு ஆணையிட்டது. இந்தப் புதிய நடைமுறையின் காரணமாக இவ்வாண்டு பட்டதாரிகள் இல்லாத குடும்பங்களைச் சார்ந்த 422 மாணவ மாணவியர் பொறியியற் கல்லூரிகளில் சேர்ந்திட இயன்றுள்ளது. அவர்களுள் ஆதிதிராவிடர், பழங்குடியினர் 27 பேர், பிற்படுத்தப்பட்டவர்களும், மிகப் பிற்படுத்தப்பட்டவர்களும் 297 பேர் ஆவர்.

**பிற பணிகள்**

இளைஞர் தம் உடல் வலிவும் பொலிவும் பெற உரிய விளையாட்டுக்களும், உடற்பயிற்சிகளும், ஆட்டப் போட்டிகளும் பெருகிடப் பலமுனைச் செயல்திட்டங்கள் நடைபெறுகின்றன. இளைய தலைமுறை கடமை உணர்வும் கட்டுப்பாடும் கொண்டு, கண்ணியமாக நடந்திடப் பயிற்சி வழங்கும் இயக்கமாக, சாரண, சாரணீய இயக்கம் மாநிலம் எங்கும் பரவலாகச் செயல்படுகிறது.

பொது நூலக இயக்ககம் வளர்ந்திடப் பொது மக்கள் ஒத்துழைப்போடு மாவட்ட நூலக இயக்க மாநாடுகள் பல நடத்தப்பட்டு, நூலகங்கள் கட்டுவதற்கான மனைகளும், நூலகத்தின் தேவைக்கான தளவாடங்களும் பெறப்பட்டு தேவைகள் நிறைவு செய்யப்பட்டு வருகின்றன.

அறிவியல் தெளிவும் நோக்கும் மக்களிடம் பரவிட 'தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மையங்கள்' என்னும் தன்னாட்சி நிறுவனத்தின் கீழ், சென்னையில் பெரியார் அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் மையம் செயல்படுகிறது, அண்மையில் காட்சிப் பொருள் அரங்கங்கள் மூன்று புதிதாக மாண்புமிகு முதல்வரால் திறக்கப்பட்டன.

'தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மன்றம்' சமுதாயத்தின் சமுக, பொருளாதார வளர்ச்சியை உயர்த்தும் நோக்குடன், கல்வி, உடல்நலம், வேளாண்மை போன்ற துறைகளில் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் பயன்பாடுடைய தக்க திட்டங்களைத் தெரிந்தெடுத்துச் செயல்படுத்த முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

'கல்வி' எல்லையற்றது. 'கலை' வரம்பற்றது. 'பண்பாடு' ஆழமானது. அவற்றின் தேவை நாளும் வளர்வது. எனவே அவற்றை உள்ளீடாகக் கொண்ட கல்வித்துறையின் திட்டமும்-கடமையும்-பணியும் எந்நாளும் தொடர்வனவாகும்.

## இயற்பியல் துறைப் பேராசிரியருக்கு விருது

இந்தியாவின் தலைசிறந்த – மிகவும் பெருமை வாய்ந்த "சாந்தி ஸ்வரூப் பத்நகர் பரிசு" என்னும் உயர்ந்த விருதினை மத்திய அரசு ஒவ்வொரு ஆண்டும் மிகவும் சிறந்து விளங்குகின்ற விஞ்ஞானிகளுக்கு வழங்கி வருகின்றது.

1989-ஆம் ஆண்டிற்கான இந்தச் சிறந்த விருது, திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் இயற்பியல் துறையில் பணியாற்றி வரும் பேராசிரியர் மு.இலட்சுமணன் அவர்களுக்குக் கிடைத்துள்ளது.

விஞ்ஞானம், மருத்துவம், தொழில் நுட்பம் ஆகிய துறைகளில் முற்பட்ட ஐந்தாண்டுக் காலங்களில் ஆராய்ச்சியில் அரும் சாதனை நிகழ்த்திய 45 வயதுக்கு

தோறும் இந்தியாவின் தலைசிறந்த மற்றும் மிகவும் பெருமை வாய்ந்த எஸ்.எஸ். பத்நகர் பரிசு தேசிய விஞ்



ஞான, தொழில் நுட்ப ஆராய்ச்சிக் கழகத்தால் வழங்கப் பெறுகின்றது. ரூபாய்

மற்றும் சான்றிதழ் அடங்கிய இவ்விருது இந்தியப் பிரதமர் அவர்களால் வழங்கப்படுகின்றது.

பெரும்பாலும் புகழ்பெற்ற ஆராய்ச்சிக் கூடங்களில் பணிபுரியும் அறிஞர் பெருமக்கள் பெறும் பரிசு, நம் தமிழகத்தில் 1958 முதல் 1988 வரையாகிய காலகட்டத்தில் 8 விஞ்ஞானிகளுக்கு மட்டுமே வழங்கப்பெற்றுள்ளது. குறிப்பாக, இயற்பியலில் 1961-ஆம் ஆண்டு புகழ்பெற்ற விஞ்ஞானியான பேராசிரியர் ஜி.என். இராமச்சந்திரனுக்கு வழங்கப் பெற்ற பின்னர், இத்துறையில் தமிழகத்தில் வேறுயாருக்கும் வழங்கப்படவில்லை. அவருக்குப்பிறகு, இயற்பியல் துறைப் பேராசிரியர் மு.இலட்சுமணன் (44 வயது) அவர்கட்கு, சமச்சீரற்ற இயக்கங்களின் தன்மை குறித்து அவர் ஆற்றிய ஆராய்ச்சிகளுக்காக இந்த விருது வழங்கப்பெறுகிறது.

தமிழக அரசின் 1984-ஆம் ஆண்டிற்கான பல்கலைக்கழகங்களுக்கான 'நல்லாசிரியர்' விருது பெற்றுள்ள இவர், 85-க்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியுள்ளார்; மூன்று நூல்களும் வெளி




2.32 இலட்சம் பேர்களும், 1990-91-இல், 2.10 இலட்சம் பேர்களும் கூடுதலாகப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்க தாகும். இவ்விரண்டு ஆண்டுகளில் 518 தொடக்கப் பள்ளிகள் புதிதாகத் திறக்கப்பட்டுள்ளன.

அனைத்துப் பள்ளிகளிலும் 1-8 வகுப்புகளில் பயிலும் மாணவ மாணவியருள் 62 இலட்சம் பேர் தமிழக அரசு சத்துணவுத் திட்டத்தின் கீழ் நண் பகல் உணவு பெற்றுவருகின்றனர். அவர்கள் அனைவருக்கும் இலவசப் பாடப்புத்தகங்களும், இலவசச் சீருடையும் வழங்கப்பட்டு வருகின்றன. சத்துணவுத் திட்டத்தின் கீழ், இரு வாரங்களுக்கு ஒருமுறை முட்டை வழங்கப்படுவதுடன் முட்டை உட்கொள்ளாத குழந்தைகளுக்கு இரு வாரங் களுக்கு ஒரு முறை சத்து உருண்டையும் வழங்கிட அரசு அண்மையில் ஆணையிட்டுள்ளது.

தொடக்கப் பள்ளி வகுப்புகளில் பெண்களே ஆசிரியைகளாக இருக்க வேண்டும் என்னும் கொள்கை அடிப்படையில், 1-3 வகுப்புகளில் புதிதாக நியமனம் செய்யப்படுபவர்கள் பெண் களாகவே இருக்க வேண்டும் என ஆணையிடப் பட்டுள்ளது. வரும் ஆண்டுகளில் இது 4-5 வகுப்புகளிலும் செயல்படுத்தப்படும். பெற்றோர்கள் தம் பெண் குழந்தைகளைக் கல்வி பயிலச் செய்வதை ஊக்கப்படுத்தும் நோக்கத்துடன் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண உதவித் திட்டத்தின் கீழ் ஏழைக் குடும்பங்களில் 8-வது வரை (பழங்குடி மகளிர் ஆயின் 5-ஆம் வகுப்பு) படித்துள்ள பெண்களுக்கு ரூ.5,000 திருமண உதவி நிதியாக அளிக்கப்படுகிறது.

கரும்பலகைத் திட்டத்தின் கீழ் கடந்த சில ஆண்டுகளில் 1,229 தொடக்கப் பள்ளிக் கட்டடங்கள் கட்ட தேர்வு செய்யப்பட்டு, 349 பள்ளிக் கட்டடங்கள் முடிக்கப்பட்டுள்ளன. மீதி 880 பள்ளிகளில் கட்டுமான வேலை நடைபெற்று வருகிறது. மேலும், ரூ.23 கோடிக்கு பயிற்றுவிப்பு உபகரணங்களும் கரும்பலகைகள் முதலியவையும் வாங்கி அளிக்கப்பட்டுள்ளன. இதனால் 29,135 தொடக்கப் பள்ளிகள் பயன் பெறுகின்றன. இத்திட்டத்தின் கீழ் 1,829 ஓராசிரியர் பள்ளிகள் ஈராசிரியர் பள்ளிகளாக மாற்றப்பட்டன. ரூ.33 இலட்சம் செலவில் 2,813 நடுநிலைப் பள்ளி களுக்கு அறிவியல் பெட்டகங்கள் வழங்கப் பட்டுள்ளன. மொத்தம் 8,888 தொடக்க/நடுநிலைப் பள்ளிகளுக்கு "வானொலி-ஒலிப்பதிவுப் பெட்டிகள்" வழங்கத் திட்டமிடப்பட்டு, இதுவரை 3,765 பள்ளிகளுக்கு அவை வழங்கப்பட்டுள்ளன.

இதற்குமுன் எப்போதும் பெறாத அளவிற்கு ஆசிரியர்களுடைய ஊதிய விகிதங்கள் அதிகரிக்கப் பட்டுள்ளன. குறிப்பாகத் தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கான ஊதிய விகிதம் ரூ.1400-2600 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்குத் தேர்வுநிலையும் சிறப்பு நிலையும் வழங்கும்பொழுது, அவரவர் மொத்த இடைநிலை ஆசிரியர் பணிக்காலத்தையும் சேர்த்துக் கணக் கிட்டு வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. 1.6.81 முதல் அரசுப்பணியாளர்களாக ஏற்கப்பட்ட "ஊராட்சி ஒன்றியப் பள்ளி" ஆசிரியர்களுக்கான பணி விதிகள் சென்ற ஆண்டு வெளியிடப் பட்டன. 1.6.86 முதல் அரசுப் பணியாளர்களாக ஏற்கப்பட்ட நகராட்சிப் பள்ளி ஆசிரியர்களின் ஊதியம் 1.4.90 முதல் நேரடியாக அரசு நிதி யிலிருந்து அளித்திட ஆணையிடப்பட்டுள்ளது.

## பள்ளிக் கல்வி

கடந்த ஆண்டு புதிதாக 108 உயர்நிலைப் பள்ளிகளும் 74 மேல்நிலைப் பள்ளிகளும் திறக்கப் பட்டன. இவ்வாண்டு 100 உயர்நிலைப் பள்ளி களும் 70 மேல்நிலைப் பள்ளிகளும் திறக்கப் பட்டுள்ளன. இவ்வாண்டு அரசு உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளுக்குப் புதிய கட்டடங்கள் கட்ட ரூ.1.50 கோடியும், பழைய கட்டடங்களைப் பழுது பார்க்க ரூ.1.50 கோடியும் ஒதுக்கப் பட்டுள்ளன. கடந்த சில ஆண்டுகளில் மொத்தம் 1,761 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி களுக்குத் தலா ரூ.35,000/- செலவில் அறிவியல் உபகரணங்களும் நூலகப் புத்தகங்களும் வழங்கும் திட்டம் செயல்பட்டு வருகிறது.

கல்வி வல்லுநர்களைக் கொண்டு சீர்திருத்தி அமைக்கப்பட்ட புதிய பாடத்திட்டமும், அத் திட்டத்தின்படி எழுதப்பட்ட புதிய பாடப் புத்தகங் களும் பள்ளியில் அனைத்து வகுப்புகளிலும் நடை முறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

அரசுப் பள்ளிகளுக்கான ஆசிரியர்களைத் தெரிவு செய்து நியமனம் செய்வதற்கான வழி முறைகளைச் சீர்திருத்தி அமைத்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இவ்வாண்டு புதிதாக 4,000-க்கு மேற்பட்ட இடைநிலை ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும்.

மேல்நிலைப் பள்ளி நிலையில் தொழிற் பாடங்களைப் பயிற்றுவிப்பதில் தமிழ்நாடு தொடர்ந்து அனைத்திந்திய அளவில் முதன்மை வகித்து வருகிறது. 1989-90-இல் மேல்நிலைப்பள்ளி வகுப்புகளில் பயின்று வந்த 4.42 இலட்சம் மாணவர்களில் 93,141 பேர் தொழிற்பாடங் களைப் பயின்றனர். பகுதிநேரத் தொழிற்பாட ஆசிரியர் இருவருக்குரிய பணியை (ஒரே பள்ளி யிலோ இரு பள்ளிகளிலோ) ஒருவரே செய்து வரும் நேர்வுகளில் அத்தகையோருடைய பணியினை இரு கட்டங்களாக (1990-91-இல் 800 பேர் களும், 1991-92-இல் சுமார் 1,000 பேர்களும்) வரன்முறை செய்ய அரசு முடிவு செய்து, இவ் வாண்டு அதற்கென ரூ.1400-2600 சம்பள விகிதத்தில் 800 பணியிடங்கள் புதிதாக ஏற் படுத்தப்பட்டுள்ளன.

மேல்நிலை வகுப்புத் தேர்வில் தேர்ச்சி பெற்ற வர்களும், (பொறியியல், மருத்துவக் கல்லூரி நுழைவுத் தேர்வு எழுதும் நோக்கத்துடன்) மதிப்பெண்களை உயர்த்திக் கொள்வதற்காக கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், தாவரவியல், விலங்கியல் பாடங்களில் மீண்டும் தேர்வு எழுத அனுமதிக்கும் சலுகை தரப்பட்டுள்ளது.

## வயது வந்தோர் கல்வி

கல்விக்காகக் கடந்த பல ஆண்டுகளாகவே பல்வேறு முனைகளிலும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வந்தபோதிலும், அவரவர் சூழ்நிலையால், பழக்கத் தால், கல்வியின் அருமையை உணராமையால், தத் தம் பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட சமுதாயச் சூழலின் தாக்கத்தால், எழுத்தறியாதார் விழுக்காடு இன்றும் ஏறத்தாழ 46% ஆக நிலவுகிறது. அப்படிப்பட்ட மக்கள் அதிக எண்ணிக்கையில் இருக்கக்கூடிய தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்கள் வாழ்பகுதிகள், பிற்படுத்தப்பட்ட மக்கள் உறையும் ஊர்கள் ஆகியவற்றினைத் தேர்ந்தெடுத்து வயது வந்தோர் எழுத்தறிவுத் திட்டப்பணி மேற்கொள்ளப்படுகிறது. கடந்த ஆண்டு 15-35 வயதுத் தொகுதியினர் சுமார் 9 இலட்சம் பேர் எழுத்தறிவு பெற்றனர். இவ்வாண்டு இலக்கு 10 இலட்சம் ஆகும். "மக்கள் நலப் பணியாளர்கள்" தொண்டைப் பயன்படுத்தி எழுத்தறிவு புகட்டுவதற்கான சீரமைக்கப்பட்ட திட்டம் ஒன்று ஐந்து மாவட்டங் களில் செயல்படுத்தப்படவிருக்கிறது.

## ஆசிரியர் கல்வி - ஆராய்ச்சி - பயிற்சி இயக்ககம்

ஆசிரியர்களின் பயிற்றுவிக்கும் திறனை மேம் படுத்துவதற்காகத் தனி இயக்ககம் ஒன்று அமைக் கப்பட்டுள்ளது. 14 மாவட்டங்களில் "மாவட்டக் கல்வி- பயிற்சி நிறுவனங்கள்" நிறுவப்பட்டுள்ளன. மீதி 7 மாவட்டங்களிலும் அத்தகைய நிறுவனங்கள் நிறுவப்படவிருக்கின்றன.

கல்லூரிக் கல்வி நிலையிலும் ஆசிரியர் பயிற்று விப்புத் திறனையும், கல்வியாராய்ச்சியையும் மேம்படுத்துவதற்காக இப்புதிய துறையின் கீழ் சென்னையில் சைதாப்பேட்டையில் ஒன்றும், லேடி வெலிங்டன் கல்லூரியில் ஒன்றுமாக, கல்வி உயராய்வு நிறுவனங்கள் இரண்டு செயல்படுகின்றன. மேலும், ஒரத்தநாடு, வேலூர், குமாரபாளையம், புதுக்கோட்டை, கோயம்புத்தூர் ஆகிய இடங் களில் அரசு கல்வியியல் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன.





அதிமதுரம்

வில் அறிமுகப்படுத்த இருக்கிறோம். அஸ்வகந்தா லேகியம், சவனப்பிராச லேகியம் ஆகியவையே அவை. இக் கழகம், 1989-90-ஆம் நிதியாண்டில் மட்டும் 79,453 லிட்டர் கூந்தல் மூலிகைத் தைலம் உற்பத்தி செய்துள்ளது. இது கடந்த ஆண்டு உற்பத்தியைக் காட்டிலும் 16.39

பரந்து விரிந்துள்ள பச்சைப் பசேலென செடி, கொடி மரங்கள் நம்மைக் கவர்கின்றன. நோய் தீர்க்கும் அந்த மூலிகைச் செடிகளின் திருநாமங் களைப் பார்ப்போமா?

கஸ்தூரி வெண்டை, கூவை, சிவப்புக் கொடிவேலி, அருவதா,

கழகத்தை மேம்பாடடையச்செய்து வருகின்றன.

மக்கள் புத்துணர்வும், புதுவாழ் வும் பெறத்தக்க வகையில், புதிய புதிய கண்டுபிடிப்புகளை—புதிய புதிய தரமான மருந்துகளை இக்கழகம் தயாரித்து வருகிறது. அதே சமயத்தில், நியாயமான விலையிலும் இது மக்க ளுக்கு வழங்கி வருகிறது.

அருகிலேயே மூலிகைப் பண்ணை, பக்கத்திலேயே மருந்துசெய் நிலையம், கூப்பிடு தூரத்திலேயே மருத்துவ மனை-இவை எல்லாம் ஒருங்கே இணைந்த இடத்தைப் பார்ப்பது அரிதுதான். அந்த அரிய காட்சி யைப் பார்க்கின்ற - பயன்பெறு கின்ற வாய்ப்பினை நல்குவதுதான், இந்த மூலிகைக் கழகம். இந்த மூலிகைப் பண்ணையை யாவரும் சென்று காணல் மிகுந்த பயன்தரும்.

சென்னை அரும்பாக்கத்தில் அமைதியாக அரும் பணியாற்றி வரும் இக்கழகத்தை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

**— பி.வி. கிரி**



ஆடாதொடை

விழுக்காடு கூடுதலாகும். இக்கழகம் தொடர்ந்து லாபத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இக்கழகம் செம்மை யுடன் செயல்பட தமிழ்நாடு அரசு தக்க உதவிகளைச் செய்து வருகிறது''

மூலிகைப் பண்ணைக்குள் நுழை கிறோம்.



பூச்சாந்திரப்பட்டை, சின்னி, நாகதந்தி, சோமக்கொடி, கருஞ்சி வதை, திப்பிலி, ஆனைப்புளி, கல்யாண முருங்கை-இப்படி இதன் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

இந்த மூலிகைப் பண்ணை மூலமாக, மாதம் ரூ.30,000 வருமானம் கிடைக்கிறது.

இந்தக் கழகத்தில் அலுவலகப் பணியில் 28 பேரும், மூலிகைப் பண்ணை மற்றும் மருந்துசெய் நிலையத்தில் 46 பேரும் ஈடு பட்டுள்ளனர். நல்ல நிர்வாகமும், தொழிலாளர் நல்லுறவும் இக்



துளசி

# அரும்பாக்கத்தில் ஓர் அரும்பணி



தலைமுடியை வளர்க்கவும், அது உதிராமல் தடுக்கவும், பலவித எண்ணெய்களை உபயோகப்படுத்தி வருகிறோம். இதில் ஆண்களும் பெண்களும் அதிகக் கவனம் செலுத்தி வருவதையும் பார்க்கிறோம்.

பண்டைக் காலத்தில் பெண்களின் கூந்தலை வர்ணிக்கும்போது, அதை மேகத்துக்கு ஒப்பிட்டார்கள் புலவர்கள். 'கார் குழலாள்' என்று புகழ்ந்தார்கள். கூந்தல், ஒரு பெண்ணின் அழகை மேம்படுத்துகிறது.

நாகரிக உலகில் இன்று பல்வேறு கூந்தல் தைலங்கள் பவனி வந்து கொண்டிருக்கின்றன. கவர்ச்சிகரமான விளம்பரங்களும் கருத்தைக் கவர்கின்றன.

**கூந்தல் மூலிகைத் தைலம்**

இந்தச் சூழ்நிலையில் மக்களிடம் அமோக ஆதரவைப் பெற்று வருவது தான், 'டாம்ப்கால்' எனப்படும் கூந்தல் மூலிகைத் தைலம். தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகம், இதைத் தயாரித்துத் தமிழகமெங்கும் பெருமளவில் விற்பனை செய்து வருகிறது. இது ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனமாகும்.

'டாம்ப்கால்' என்றால் என்ன?

'Tamilnadu Medicinal Plant Farms and Herbal Medicine Corporation Limited'. என்பதன் சுருக்கம்தான் அது.

தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக்கழகம், 1983-ஆம் ஆண்டு தொடங்கப் பட்டது.

இக்கழகம், அரிய மூலிகைகளை வளர்த்துப் பாதுகாத்து வருகிறது. அத்துடன் அரசு மருந்தகங்களுக்கும், தனியார் நிறுவனங்களுக்கும் தேவையான மூலப் பொருள்களை வழங்கி வருகிறது. மேலும், பல்வேறு மூலிகை மருந்துப் பொருட்கள், மரபு மருந்துகள் ஆகியவற்றையும் இது உற்பத்தி செய்கிறது. இந்திய மருந்துகளையும், மூலிகைப் பொருட்களையும் மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதும், இறக்குமதி செய்வதும் இதன் பணிகளாகும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, சித்த மருத்துவ முறையில், கூந்தல் மூலிகைத் தைலம் தயாரிப்பதைத் தலையாய பணியாகக் கொண்டிருக்கிறது.

**அறிஞர் அண்ணா மூலிகைப் பண்ணை**

இக்கழகம், அரிய மூலிகைகளின் பிறப்பிடமாகவும் விளங்குகிறது. இக்கழகத்திற்குச் சொந்தமான அறிஞர் அண்ணா மூலிகைப் பண்ணை ஒன்று, அறிஞர் அண்ணா நகர் - அண்ணா பவள விழா வளைவு அருகில் இருக்கிறது. இது சுமார் 10 ஏக்கர் நிலப் பரப்பு கொண்டது. கூந்தல் மூலிகைத் தைலம் தயாரிக்கத் தேவையான பல்வேறு மூலிகைகள் இங்கு வளர்க்கப்படுகின்றன. இவையின்றி, அரசு மருந்துசெய் நிலையங்களுக்குத் தேவையான மூலிகைச் செடிகளும் இங்கே வளர்க்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

இந்திய மருத்துவ மற்றும் தாவரவியல் மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், மருத்துவர்கள் முதலானோர் நேரில் கண்டு பயன்பெறும் வகையில், சுமார் 250 வகையான அரிய மூலிகைச் செடிகள் வளர்க்கப்படுகின்றன. இந்தப் பண்ணையில் உள்ள குளம் ஒன்றில், நீர்வாழ் மூலிகைகள் வளர்க்கப்படவிருக்கின்றன.

தமிழ்நாட்டிலேயே, அதிகப்படியான மூலிகைச் செடிகளைக் கொண்ட 'மூலிகைப் பண்ணை' இதுவே ஆகும்.

தமிழ்நாட்டின் பிற மாவட்டங்களிலும் இக்கழகத்தின் மூலிகைப் பண்ணைகள் உள்ளன. காமராஜர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டத்தில், செண்பகத் தோப்பு என்னும் இடத்தில் சுமார் 33 ஏக்கர் பரப்பளவில் மூலிகைத் தோட்டம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்து அறநிலைய ஆட்சித் துறையினரிடமிருந்து குத்தகைக்குப் பெறப்பட்டு அமைக்கப் பட்ட இத்தோட்டத்தில், தேர்ந்தெடுக்கப்பட்ட சில மூலிகைகள் வளர்க்கப்படுகின்றன.

இங்கு கிடைக்கும் மூலிகைப் பொருட்கள், இந்திய மருத்துவ இயக்குநர் அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ள மருந்துசெய் நிலையங்களுக்கு வழங்கப்படுகின்றன. மூலிகைச் செடிகளைப் பெருமளவில் முறையாகச் சாகுபடி செய்யவும், இதன் மூலம் செண்பகத்






தோப்பில் உள்ள பகவதிபுரத்தில் வாழும் 'பளியர்' என்னும் பழங்குடி மக்களுக்கு வேலைவாய்ப்புகள் அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டம், கொல்லி மலையில் மூலிகைப் பண்ணை அமைப்பதற்காகச் சுமார் 105 ஏக்கர் நிலப்பரப்பை இக்கழகத்தின் வசம் ஒப்படைக்க அரசு முன்வந்துள்ளது. முதற்கட்டமாக, சுமார் 13.5 ஏக்கர் நிலம் இக்கழகத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. மீதமான 92 ஏக்கர் நிலத்தை இக்கழகத்திடம் ஒப்படைப் பதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இங்கு, மலைவாழ் மூலிகைச் செடிகள் ஆராய்ச்சி அடிப்படையில் வளர்க்கப்படுகின்றன.

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ராமய்யபட்டியில் சுமார் 147 ஏக்கரிலும், நீலகிரி மாவட்டத்தில் 37.5 ஏக்கரிலும் மூலிகைப் பண்ணைகள் அமைக்கப்படவிருக்கின்றன.

**டாம்ப்கால்:**

தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழக நிர்வாக இயக்குநர் மற்றும் இந்திய மருத்துவம் ஓமியோபதித்துறை இயக்குநர் திரு. பிருதிவிராஜ் லஷ்தாசா இ.ஆ.ப. அவர்களைச் சந்தித்தபோது அவர் கூறினார்--

''டாம்ப்கால்'' என்னும் இந்த கூந்தல் மூலிகைத் தைலத்திற்குப் பொதுமக்களிடையே பெரும் வரவேற்பு உள்ளது. 23 மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட தரமான தைலம் இது. இதை உபயோகிப்பதால், குளுமை ஏற்படுகிறது. முடியும் உதிர்வதில்லை. ஆடவர், மகளிர் எல்லோரும் இதை உபயோகிக்கலாம். தற்போது இது, கர்நாடக மாநிலத்திலும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.''

''ஒரிசா, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் இந்தக் கூந்தல் தைலத்தை விற்பனை-விநியோகம் செய்வதற்கான பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. ஆந்திரம், மகாராஷ்டிர மாநிலத்திற்கும் 'சப்ளை' செய்யத் திட்டமுள்ளது. புதுடெல்லி, பம்பாய், ஐதராபாத் ஆகிய இடங்களிலிருந்தும் மூலிகைகள் தருவிக்கப் படுகின்றன. பொதுவாக மூலிகைகளை வாங்கி, அரும்பாக்கத்திலுள்ள அறிஞர் அண்ணா அரசு இந்திய மருத்துவமனைக்கும், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், பாளையங்கோட்டையிலுள்ள சித்த மருத்துவமனைக்கும் வழங்கி வருகிறோம்.''

''இக்கழகம், சித்த மருத்துவ முறையில் 55 புதிய மருந்துகளும், ஆயுர்வேத முறையில் 7 புதிய மருந்துகளும் தயாரிப்பதற்கான உரிமம் பெற்றுள்ளது. செங்கை-அண்ணா மாவட்டத்தில், திருப்போரூருக்கு அருகிலுள்ள ஆலத்தூரில் - சிட்கோ தொழிற்பேட்டையில், மருந்துசெய் நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது.''

''புதிய மருந்துகள் சிலவற்றை முதலில் 453 அரசு ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்குத் தரப் படும். பிறகு அவை விற்பனைக்கும் வழங்கப்படும்.''

**மூலிகை அழகுக் கிரீம்**

''கூடிய சீக்கிரத்தில் அதாவது அடுத்த ஆண்டுத் தொடக்கத்தில், மூலிகை அழகுக் கிரீம்-Herbal Beauty Cream - அறிமுகப்படுத்த இருக்கிறோம். இந்தக் கிரீமை முகத்தில் பூசிக் கொள்வதால், பருக்கள் மறையும், புத்துணர்வும், மிருதுவான தன்மையும் ஏற்படும். முகம் பொலிவாகவும் விளங்கும். இதற்கு மக்களிடையே நல்ல வரவேற்பு இருக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. 'மூலிகை வலி நிவாரணி' ஒன்றும் சோதனை அளவில் தயாரிக்கப்பட்டுள்ளது.''

**புதிய டானிக்குகள்**

''உடலுக்குச் சக்தியைத் தரும் இரண்டு டானிக்குகளையும் விரை



# பாவேந்தர் குடும்பத்தாருக்குப் பரிவுத்தொகை வழங்கும் விழா

**பா**வேந்தர் பாரதிதாசன் நூல்களைத் தமிழக அரசு நாட்டுடைமை ஆக்கியதன் தொடர்பாக, அவரது குடும்பத்தாருக்குப் பரிவுத் தொகை வழங்கும் விழா, 15.12.1990 அன்று சென்னையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. தலைமைச் செயலக நாமக்கல் கவிஞர் மாளிகையில் பத்தாம் தளத்தில் உள்ள எழிலரங்கில் நடைபெற்ற அந்த விழாவில், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் கலந்து கொண்டு, பாவேந்தர் குடும்பத்தாருக்கு நிதி வழங்கிப் பாராட்டினார்கள். மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் விழாவிற்குத் தலைமை ஏற்றார்.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் டாக்டர் மு. தமிழ்க் குடிமகன் அவர்களும், மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத்தலைவர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற-சட்டமன்ற உறுப்பினர்களும், எழுத்தாளர்கள், கவிஞர்கள்-புலவர்கள்-பதிப்பாளர்கள்-அரசு உயர் அதிகாரிகளும் விழாவிற்கு வருகை தந்திருந்தார்கள்.

தமிழ்வளர்ச்சி-பண்பாட்டுத் துறைச் செயலாளர் டாக்டர் அவ்வை நடராசன் வரவேற்றுப் பேசினார். தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் திரு த.சிவஞானம் அவர்கள் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்.

டாக்டர் சிவசிதம்பரம் அவர்கள் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் இயற்றிய

'இனிமைத் தமிழ்மொழி எமது'
'தமிழ் என்னும் மணிவிளக்கு ஏற்றடா நாட்டில்'

-ஆகிய கவிதைகளை இசை நயத்தோடு பாடினார்.

மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் தம் தலைமையுரையில் குறிப்பிட்டதாவது:

'இந்த மகிழ்ச்சியான விழாவில் தலைமையேற்கின்ற பேறு பெற்றமைக்காக மிகவும் பெருமையடைகிறேன்.

இருபதாம் நூற்றாண்டை எழுச்சிமிக்க நூற்றாண்டாக மாற்றியவர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள். அவரது எழுத்துச் செல்வம், கவிதைச் செல்வம் இதுநாள்வரை, தனி உடைமையாக இருந்து வந்ததைப் பொதுவுடைமையாக, நாட்டு உடைமையாக, மக்கள் உடைமையாக மாற்ற வேண்டும் என்ற எண்ணம் பல ஆண்டுகளாகக்

**தமிழ்நாட்டிலே உள்ள விற்பனை நிலையங்கள், கடைகள், தொழிற் சாலைகள் இவைகளில் தமிழ்ப் பெயர் இடம் பெற வேண்டும் என்பது பாவேந்தருடைய தணியாத ஆசை. அதை நிறைவேற்றுகிற வகையில் அரசு செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**மாண்புமிகு முதல்வர் கலைஞர்**

**முதல் அட்டை சொல்லும் செய்தி**

கலைஞருக்கும், எனக்கும், அதுபோன்ற ஆர்வம் உள்ளவர்களுக்கும் இருந்தாலும், கலைஞருடைய ஆட்சி ஏற்பட்டதற்குப் பின்னர் பாவேந்தருடைய நூற்றாண்டைக் கொண்டாடுகின்ற அந்தப் பெரிய வாய்ப்பும் நமக்குக் கிடைத்த இந்தக் காலகட்டத்தில் அவரது நூல்களையும் நாட்டுடைமை ஆக்கு கின்ற அந்தக் கடமையை மேற்கொள்வது என்று கலைஞரே தீர்மானித்தார்.

கலைஞருடைய ஒரு தனித்திறமை, எதைச் செய்வது, எப்படிச் செய்வது, எப்போது செய்வது என்ற இந்த மூன்றையும், அவரை மிஞ்சுகிறவர் இந்த நாட்டில் இல்லையென்றால், எல்லோரும் ஏற்றுக் கொள்வீர்கள். அவர்தான் இந்தக் கடமையை நிறைவேற்ற வேண்டும் என்ற சூழ்நிலையும் வாய்ப்பும் அமைந்தது. அந்தக் கடமையை நிறைவேற்ற எண்ணிப் பார்த்து, அவர்களை எல்லாம் அழைத்துப்பேசி, ஒரு பெருந்தொகையை வழங்க கலைஞர் அவர்கள் முன்வந்திருக்கிறார்கள்.

தமிழக அரசின் பெயராக-தமிழக மக்களுக் கெல்லாம் மகிழ்ச்சியளிக்கிற ஒரு கடமையாக-



இந்தக் கடமை நிறைவேற்றப்படுகிறது. பாவேந்தர் நூலுக்கு விலை இல்லை. அவர் ஊட்டிய தமிழ் உணர்வுக்கும் அளவில்லை. இது விலையாகவோ, அளவிட்டுத் தருகிற நிதியாகவோ கருதுவது பொருத்தமும் அல்ல. தமிழக அரசுக்கு எத்தனையோ வறுமை இருக்கிறபோது இதைவிட ஒரு பெரும் செயலை எளிதில் வேறு எவரும் நிறைவேற்ற முடியாது. எனவே அப்படிப்பட்ட ஒரு கடமை இங்கு நிறைவேறுவதை எண்ணி மகிழ்ந்து பாவேந்தர் குடும்பத்தாருக்கு இந்த நேரத்தில் எனது வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.'

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் அவர்களுக்கும், தமிழ்வளர்ச்சித் துறையின் சார்பிலும், அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர் சங்கம் சார்பிலும், பாவேந்தரின் நூல்களை வெளியிட்ட பதிப்பகங்களின் சார்பிலும் பொன்னாடைகள்-சால்வைகள்-மாலைகள் அளிக்கப்பட்டன.

அதன்பின்- மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், புரட்சிக்கவிஞர் அவர்களின் மகள் திருமதி சரசுவதி கண்ணப்பன், புதல்வர் திரு. மன்னர் மன்னன், இரண்டாவது மகள் திருமதி வசந்தா தண்டபாணி ஆகியோர் ஒவ்வொருவருக்கும் ரூபாய் இரண்டு இலட்சமும், பாவேந்தரின் மூன்றாவது மகள்-மறைந்த ரமணியின் பிள்ளைகள்-மணிமேகலை, வீரமணி, முல்லைக்கொடி, சிவசுப்பிரமணியம், செல்வி சுப்புரத்தினம் ஆகியோர் ஒவ்வொருவருக்கும் ரூபாய்நாற்பதாயிரமும் நிதி வழங்கினார். அதேபோல முதன்முதலாகப் பாவேந்தரின் நூல்களை உரிமைபெற்றுப் பதிப்பத்து வந்த புதுக்கோட்டை - இராமச்சந்திரபுரம் செந்தமிழ் நிலையம் உரிமையாளர் திரு. சுப்பையாவுக்கு ஒரு இலட்சம் ரூபாயும், சென்னை பாரி நிலையம் உரிமையாளர் திரு. செல்லப்பனுக்கு ஒரு இலட்சம் ரூபாயும், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் வழங்கினார். சென்னை பூம்புகார் பதிப்பக உரிமையாளர் திரு. பிரசாத் சிங்குக்குப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்.

பாவேந்தர் அவர்களின் குடும்பத்தார் சார்பில், புரட்சிக் கவிஞர் அவர்களின் மகன் மன்னர் மன்னன் அவர்கள் நன்றி தெரிவித்து உரையாற்றினார். 'இந்த இனிய நன்னாளைத் தமிழகம் என்றென்றும் பாராட்டும். 'இது, எனது' என்பதை வெறுப்பவர் என் தந்தையார். நாங்களும் அதையொட்டிய எங்கள் எண்ணத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களிடம் தெரிவித்தோம். எங்கள் தந்தையாரின் எழுத்தோவியங்களை மக்கள் சொத்தாக்க யார் யாரோ முயன்றார்கள். அவைகளை நாட்டுடைமையாக்குவது கலைஞர் - பேராசிரியர் காலத்தில்தான் நடக்கும் என்பது இந்நிகழ்ச்சிமூலம் மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறது' என்று அப்போது அவர் நன்றியுணர்வோடும் பெருமிதத்தோடும் தெரிவித்தார்.

மாண்புமிகு முதல்வர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையில் குறிப்பிட்டதாவது:

'நம் இதயத்தைக் குளிர வைக்கும் நிகழ்ச்சி இது. இன்று இந்த நிகழ்ச்சியில் என்ன பேசுவது என்றே எனக்குத் தெரியவில்லை. காரணம் எந்தக் குடும்பத்திற்கு அரசின் சார்பாக எம்மால் இயன்ற உதவியினைச் செய்கிறோமோ, அந்தக் குடும்பத்திற்கு மாத்திரமல்ல, இந்தப் பெரும் தமிழ்க் குடும்பத்திற்குக் கவித் தலைமை ஏற்று, கவிதைகளை, வாளாக, வேலாக ஆக்கித் தந்து, எங்களோடு எல்லாம் நெருங்கிப் பழகுகின்ற வாய்ப்பை நாங்கள் பெறவும், அதனால் அந்தப் பெருமை எங்களுக்குச் சேரவும் காரணமாக இருந்த புரட்சிக்





கவிஞர் பாவேந்தர் அவர்கள் இன்று நம்மிடையே இல்லை என்கின்ற அந்த உணர்வு உள்ளத்தை ஒருபுறத்திலே உலுக்கிக் கொண்டேயிருக்கிறது.

'பாவேந்தர் மாத்திரமல்ல, இன்றைய தமிழ் நாட்டிற்கு மிக முக்கியமாகத் தேவைப்படுகிற தந்தை பெரியார் இல்லை, பேரறிஞர் அண்ணா இல்லை, தமிழ்நாட்டை வழிநடத்திச் செல்ல வேண்டிய பொறுப்பும் கடமையும் - அந்தத் தலைவர்களின் திறமையை ஆயிரம் பங்குகளாகப் பிரித்து, அதிலே ஒரு பங்கு அளவுக்குக்கூட நிகரில்லை என்றாலும், எங்கள் தோளிலே சுமத்தப் பட்டிருக்கிறது. அந்தப் பொறுப்பை உணர்ந்து புரட்சிக் கவிஞருக்கு நாங்கள் செலுத்த வேண்டிய மரியாதையை இன்றைக்குச் செலுத்துகின்றோம். தம்பி மன்னர் மன்னன் குறிப்பிட்டதைப் போல நானும், நம்முடைய கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்களும் கலந்துபேசி, அவர்களோடு-குடும்பத்தாரோடு தொடர்பு கொள்ளவும், பாவேந்தருடைய நூல்களை வெளியிட்ட பதிப்பகத்தாரோடு தொடர்பு கொள்ளவும் நம்முடைய நண்பர் ஔவை நடராசன் அவர்கள் பெருமுயற்சி எடுத்துக் கொண்டு அனைவரையும் ஒன்றுகூட்டி ஒருநாள் அவர்களோடு நானே முன்நின்று பேசி சில நொடிகளில் ஒரு நல்ல முடிவிற்கு வந்ததன் காரணமாக இத்தனை விரைவில் இந்த நிகழ்ச்சி இங்கே நடைபெற்று நிறைவுற்றிருக்கிறது.

''தம்பி மன்னர் மன்னன் குறிப்பிட்டதைப் போல, தொகையல்ல-இதன் பின்னால் இருப்பது. பாவேந்தருக்குத் தமிழ்நாட்டு மக்கள் அளிக்கின்ற காணிக்கை - அதுதான் இந்த நிகழ்ச்சியே தவிர, தொகை வழங்குகிற நிகழ்ச்சி பெரிதல்ல. பாவேந்தரோடு நெருங்கிப் பழகுகின்ற வாய்ப்பைப் பெற்றவர்கள் நாங்கள். பாவேந்தருக்குப் பேரறிஞர் அண்ணா அவர்கள் முன்னின்று பல ஆண்டுகளுக்கு முன்பு இருபத்தையாயிரம் ரூபாய் பொற்கிழியை அளித்தார்கள். அன்றைக்கு இருபத்தையாயிரம் ரூபாய் தருவது என்பது அந்தக் காலகட்டத்திலே எவ்வளவு பெரும் தொகை என்பதைப் பணத்தின் மதிப்பைக் கணக்கிடக்கூடியவர்கள் புரிந்து கொள்ள முடியும்.

'பாவேந்தர் மறைந்தவுடன் புதுவைக்குச் சென்று அவருடைய இறுதிச் சடங்கில் கலந்துகொண்டவன் என்கின்ற முறையில், அன்று புதுவை நகரம் மாத்திரமல்ல, தமிழர்கள் எங்கெங்கு வாழ்கிறார்களோ, அந்த நிலமெல்லாம் கண்ணீரால் நனைந்தது. புதுவை அரசு பாவேந்தருக்குச் சிலை எழுப்பியது. பாவேந்தர் வாழ்ந்த வீட்டை நினைவுக் கூடமாக ஆக்கியது. உலகத் தமிழ் மாநாடு நம்முடைய தலைநகரம் சென்னையில் நடைபெற்ற போது பாவேந்தருக்குச் சிலை அமைக்கப்பட்டது. இராஜாஜி மண்டபத்திலுள்ள ஆங்கிலேயப் பிரமுகர்கள் படங்களெல்லாம் அகற்றப்பட்டு, தமிழ் உணர்வும் நாட்டு உணர்வும் நிலைபெறக்கூடிய வகையில் படங்கள் அமைக்கப்பட்டபோது - கழக ஆட்சி கடந்த காலத்திலே பொறுப்பிலே இருந்த போது - இராஜாஜி மண்டபத்திலே அமைக்கப்பட்ட ஓவியங்களில் ஒன்றாக - பெரும் ஓவியமாக - பாவேந்தருடைய படம் அமைக்கப்பட்டது.

'நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சியில் பாவேந்தருக்கு அவருடைய பெயரால் பல்கலைக்கழகம் காணப்பட்டது. பாவேந்தருடைய நூல்களைப் பொதுவுடைமை ஆக்கவேண்டும், அரசுடைமையாக ஆக்கவேண்டும் என்கின்ற முயற்சி பல காலமாக எடுக்கப்பட்டாலும்கூட,

# சிறு சேமிப்புத் துறை

ஓய்வு பெற்ற பின் நிரந்தர பென்ஷன் பெறுங்கள்.



நாள் ஒன்றுக்கு ரூ. 5 வீதம் 5 ஆண்டுகளுக்கு மட்டும் சேமியுங்கள்

ரூ. 120 முதல் ரூ. 7,680 வரை வெவ்வேறு வயதுப் பிரிவுகளுக்கு பென்ஷன் எவ்வாறு வேறுபடுகிறது என்பதைப் பாருங்கள்.

இன்றே சேமிக்கத் தொடங்குங்கள்.

| வயது வரம்பு | 5 வருடங்களுக்கு தினசரி சேமிக்க வேண்டிய தொகை | 5 ஆண்டுகளில் முதிர்வுத்தொகை தினசரி ரூ. 5/- வீதம் சேமித்து ஒவ்வொரு மாதமும் மொத்தமாக R.D.-ல் செலுத்தியது) | ஐ.வி.பி.யில் முதலீடு செய்து 58-வது வயதில் முதிர்வுத் தொகை | மாதாந்திர ஒய்வூதியம் |
|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| 18-23 | 5 | 12,004.50 | 7,68,000 | 7,680 |
| 23-28 | 5 | 12,004.50 | 3,84,000 | 3,840 |
| 28-33 | 5 | 12,004.50 | 1,92,000 | 1,920 |
| 33-38 | 5 | 12,004.50 | 96,000 | 960 |
| 38-43 | 5 | 12,004.50 | 48,000 | 480 |
| 43-48 | 5 | 12,004.50 | 24,000 | 240 |
| 48-53 | 5 | 12,004.50 | 12,000 | 120 |

- ★ நாள் ஒன்றுக்கு ரூ. 5 வீதம் 5 ஆண்டுகளுக்கு மட்டும் சேமியுங்கள்.
- ★ மாதாந்திர சேமிப்பை R.D-யில் 2 கணக்குகளில் முதலீடு செய்யுங்கள் — ரூ. 50 ரூ. 100.
- ★ மறுபடியும் R.D. முதிர்வடைந்த தொகையை ஐ.வி.பி-யில் முதலீடு செய்யுங்கள்; பிறகு மீண்டும் மீண்டும் ஓய்வுபெறும் வயது வரை மறு முதலீடு செய்யுங்கள்.
- ★ 58ஆம் வயதில், ஐ.வி.பி. முதிர்வடைந்த தொகையை மாதாந்திர வருமானத் திட்டம் மற்றும் இதர பொருத்தமான திட்டங்களில் மறு முதலீடு செய்யுங்கள். இதன் மூலம் நீங்கள் ரூ. 120/- முதல் ரூ. 7.680/- வரை பென்ஷன் பெறுவீர்கள்.
- ★ ரூ. 50/- R.D. கணக்குக்கு இலவச இன்ஷூரன்ஸ் வசதி.
- ★ தமிழ்நாட்டில் 1.6.90 முதல் 31.12.90 முடிய R.D. கணக்கில் முதலீடு செய்யப்பட்ட ஒவ்வொரு ரூ. 500/- தொகைக்கும் ஒரு இலவசப் பரிசுக்கூப்பனைப் பெறுங்கள். மாருதி கார் முதல் குவார்ட்ஸ் சுவர்க்கடிகாரம் வரை 262 பரிசுகளைப் பெற வாய்ப்பு உண்டு.

- மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம், சென்னை - 5 மற்றும் அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்கள்,
- மாநகராட்சி அலுவலகம், சென்னை - 3 மற்றும் அனைத்து
- மாநகராட்சி வட்ட அலுவலகங்கள்,
- சமூகப் பாதுகாப்பு துணை இயக்குநர் அலுவலகம், குறளகம், சென்னை - 108.

- மாவட்ட ஆட்சியாளர் அலுவலகங்கள்,
- வட்டாட்சியர் அலுவலகங்கள்,
- வட்டார வளர்ச்சி அலுவலகங்கள்.

மேலும் விபரங்களுக்கு:
இயக்குநர்,
**சிறுசேமிப்புத்துறை,**
143, அண்ணா சாலை,
சென்னை-600 002.
தொலைபேசி: 840223/846209

DIPR/2844/MS/90/ARIES


# தடய அறிவியல்

**—பேராசிரியர்**
**டாக்டர் ப.சந்திரசேகரன்**
**இயக்குநர்,**
**தடய அறிவியல் துறை**

நகைகளைக் குறியீடு செய்து, அப்புகைப்படங்களைப் மிகப்பெரிது படுத்தி வைப்பதன் மூலம், நகை திருட்டு மற்றும் மோசடி வழக்கு களில் நகைகளைச் சுலபமாகக் கண்டு பிடிக்க இயலும்.

தடய அறிவியல் மூலம் புகைப் படங்களைப் மிகப்பெரிதுபடுத்துதல் என்பது, நகைகளில் உள்ள மிகச் சிறிய குறைபாடுகளைப் பெரிது படுத்திக் காட்டுவதாகும். இவை ஆபரணங்களை அல்லது அவற்றின் ஒரு பகுதியைப் புகைப்படமெடுத்து பெரிதுபடுத்துவதாகும். தடயம் கண்டுபிடிப்பதற்கு உண்மையான அளவைவிட, புகைப்படத்தில் மூன்று மடங்கு பெரிதுபடுத்தினால் போ்து மானது. இப்புகைப்படங்களை எழுபது மடங்கு வரை பெரிதாக்கிக் காட்ட இயலும்.

இவற்றில் பெரிய அளவில் உள்ள நகைகளுக்கு, புகைப்படங் களை மூன்று மடங்கு பெரிதாக் கினால் போதுமானது. காது வளையம் போன்ற சிறிய நகைகளுக்கு ஆறு மடங்கு பெரிதாக்கினால் போது மானது.

பொதுவாகக் கோவில் நகைகள், தங்கம் அல்லது உயர் ரகக் கற்கள் தங்கத்தில் பதிக்கப்பட்டவையாக இருக்கும். உலகெங்கிலும் இதைச் செய்வதற்குப் பொற்கொல்லர்கள் ஒரே மாதிரியான முறையைத்தான் பின்பற்றுகிறார்கள். அதாவது வார்ப்படம் செய்து, சிறு மணிகள் வைத்து அலங்கரித்து, உயர்தரக் கற்கள் பதித்துச் செய்கின்றனர். பட்டை தீட்டி, கற்களைப் பதித்து நகை செய்தல், தென் இந்தியா மற்றும் இலங்கையில் பொதுவாகக் காணப்படுகிறது.

எந்தவிதமான முறையில் நகை களைச் செய்தாலும், நகைகளை முழுமைப்படுத்தி அணி செய்தல், பொற்கொல்லர்களின் கைகளி லேயே இருக்கிறது.

பொதுவாக எல்லா நகைகளும் பொற்கொல்லர்களின் கைகளினா லேயே முடிக்கப்பெறுவதால், அவற் றில் கற்களைப் பதித்திருப்பதிலோ, பட்டை தீட்டப்பட்டிருப்பதிலோ மிகச் சிறிய தனித்துவ வேலைப் பாடுகள் இருக்கக்கூடும். ஒரே பொற்கொல்லர் செய்யும் ஒரே மாதிரியான நகையில் கூட வேற்றுமை இருக்கும். இரண்டு நகைகளுமே மாதிரியிலோ அல்லது அளவிலோ வேறுபடும். இதுவே இயல்பான அடையாளம் அல்லது "பொற் கொல்லர்களின் விரல் பதிவு களாகும்".

இவ்வாறு கோவில் மற்றும் புராதன நகைகளைப் புகைப்படம் எடுத்து மிகப்பெரிதுபடுத்தி வைத்துக் கொண்டால், பிற்காலத்தில் அவை களவு போ்னால் கண்டுபிடிப்பதற்கு மிகவும் ஏதுவாக இருக்கும்.



அது நடைபெறுவதற்குப் பல இடையூறுகள் அமைந்து இன்றைக்கு அது ஓரளவு முற்றுப் பெற்றிருக்கிறது. இதற்கு இணக்கம் தெரிவித்த பதிப்பகத்தாருக்குத்தான் நான் பெரிதும் நன்றி கூறவேண்டும். இங்கேகூட நீங்கள் கண்டீர்கள் எங்களால் அளிக்கப்பட்ட சிறு தொகையைப் பெற்றுக் கொண்ட பாவேந்தருடைய குடும்பத்தின் சார்பாக தம்பி மன்னர் மன்னன் நன்றி சொன்னார். நாங்கள் நன்றி சொல்லவேண்டியது செந்தமிழ் நிலையத்தார், பாரி நிலையத்தார், பூம்புகார் பதிப்பகத்தார்-அவர்களுக்கு நாங்கள் நன்றி சொல்கிறோம். ஏனென்றால் பாவேந்தர் நூல்களை வெளியிடுகின்ற உரிமையை அவர்கள் பெற்றவர்கள்.

**எங்கள் தந்தையாரின் எழுத்தோவியங்களை மக்கள் சொத்தாக்க யார்யாரோ முயன்றார்கள். அவைகளை நாட்டுடைமையாக்குவது கலைஞர்-பேராசிரியர் காலத்தில்தான் நடக்கும் என்பது இந்நிகழ்ச்சி மூலம் மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறது.**

**-பாவேந்தரின் மகன்**
**கவிஞர் மன்னர் மன்னன்**

அவர்கள் பெற்ற உரிமையை அரசுடைமையாக ஆக்குவதற்கு அவர்கள் சிறிதும் தயக்கம் காட்டாமல் உடனடியாக ஒப்புதல் அளித்தார்கள். அவர்கள் கேட்ட தொகை பெரிதென்றாலும் நான் பேரம் பேசி அவர்களை ஒப்புக்கொள்ள வைக்கப்பட்ட தொகைக்கும் அதற்கும் பார்த்தால் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடு உண்டு. அந்த பேரத்தில் நான்தான் வெற்றி பெற்றேன் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

'இந்த நாளில் தம்பி மன்னர் மன்னன் ஒன்றைக் குறிப்பிட்டார். பாவேந்தர் எழுதிய ஒரு பாடலுக்குத் தலைப்பு 'உன்னை விற்காதே' என்பதாகும். 'தென்னிலங்கை வேந்தன் ராவணனை'... என்று தொடங்குகின்ற பாடல் அது. அந்த 'உன்னை விற்காதே' என்கின்ற தலைப்பை ஒரு திரைப் படத்திற்குத் தலைப்பாக வைக்கவேண்டும் என்று எண்ணியபோது, நான் அனுமதி கேட்டு - மன்னர் மன்னனுக்கு ஒரு கடிதம் எழுதினேன். 'அனுமதி இல்லாமலே எடுத்துக் கொள்ளலாம்' என்று மன்னர் மன்னன் பதில் எழுதியிருந்தார். நான் உன்னை விற்காதே என்ற தலைப்பை வைக்காததற்குக் காரணம் அதற்குள்ளாகச் சிலர் விலை போய்விட்ட காரணத்தால்! இனி யாருக்குப் போய் சொல்வது என்பதற்காக இந்தத் தலைப்பை வைக்காமலேயே விட்டுவிட்டேன்.

'இன்று இந்த நாளில் அரசின் சார்பாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். புரட்சிக் கவிஞருடைய கவிதைகளிலேயே ஒரு செய்தியைச் சொல்கின்ற - ஒரு அறிவுரையை வழங்குகின்ற - தமிழ் மக்களுக்கு ஒரு ஆணையிடுகின்ற கவிதை நூலாக நான் கருதுவது 'தமிழியக்கம்' என்பதாகும். அவர் 'அழகின் சிரிப்பு' எழுதியிருக்கிறார். 'குடும்ப விளக்கு' எழுதியிருக்கிறார். 'இருண்ட வீடு' தந்திருக்கிறார். 'பாண்டியன் பரிசு' தந்திருக்கிறார். 'எதிர்பாராத முத்தம்' தந்திருக்கிறார். அவருடைய கவிதைகள் முதல் தொகுப்பாக, இரண்டாம் தொகுப்பாக வெளிவந்திருக்கின்றன.

'இவைகள் அனைத்திலும் அவர் நமக்கு ஆணையிடுவதுபோல் தந்துள்ள நூல் 'தமிழியக்கம்' என்பதாகும். அந்த தமிழியக்கத்தில் 'தமிழ்நாட்டுத் தெருக்களிலே தமிழ்தான் இல்லை' என்று தன்னுடைய ஏக்கத்தைத் தெரிவித்திருக்கிறார். அந்த ஏக்கத்தைப்போக்க அரசு இப்போது நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

'அண்மையில் 'பாவேந்தர் கனவு' என்ற ஒரு நூல் நம்முடைய பேரவைத் தலைவரால் எழுதப்பட்டு அணிந்துரைக்காக என்னிடத்திலே வழங்கப் பட்டபோது அதையும் படித்துப் பார்த்தேன். அதைப் படிக்கும்போது மீண்டும் தமிழியக்கத்தை• பாவேந்தருடைய நூலைப் படிக்க வேண்டும் என்கின்ற தூண்டுதல் ஏற்பட்டது.

இதைப் படித்த காரணத்தால் மீண்டும் தமிழியக்கத்தைப் படித்தேன். அந்தத் தமிழியக்கத்திலே பாவேந்தர் விடுத்திருக்கிற ஆணையை நிறைவேற்ற இந்த அரசு கடமைப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே ஆத்மா என்று ஒன்று இருந்து-(எங்களுக்கு நம்பிக்கை இல்லை) அப்படி இருந்து வானுலகிலே பாவேந்தர் உலவிக் கொண்டிருப் பாரேயானால் அவருடைய குடும்பத்தாருக்கு இந்தப் பொற்கிழி வழங்கியதைப் பற்றிக்கூட அவர் மகிழ்ச்சியடையமாட்டார். நான் இன்று தெரிவிக்கின்ற இந்த அறிவிப்பைக் கேட்டுத்தான் மகிழ்ச்சியடைவார்.

'தமிழ்நாட்டிலே உள்ள விற்பனை நிலையங்கள், கடைகள், தொழிற்சாலைகள் இவைகளில் தமிழ்ப் பெயர் இடம்பெற வேண்டும் என்பது அவருடைய/தணியாத ஆசை. அதை நிறைவேற்றுகின்ற வகையில் அரசு செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'எடுத்துக்காட்டாக இப்போது 'ஜெயம் சில்க் ஸ்டோர்ஸ்' என்று இருப்பது தமிழில் எழுதப்பட வேண்டும் என்று சொன்னால், ஜெயம் சில்க் ஸ்டோர்ஸ் என்று போடுவது தமிழ் அல்ல. அதற்காக ஜெயம் என்கின்ற பெயரை மாற்றத் தேவையில்லை. ஏனென்றால் ஒருவருடைய பெயரால் விளங்கக்கூடிய நிலையமாக அது இருக்கக்கூடும். எனவே ஜெயம் என்கின்ற அந்த வார்த்தையை அவர்கள் இஷ்டப்பட்டு, எப்படி ராமையா அன்பழகன் ஆனாரோ அதைப்போல வெற்றி என்று ஆகலாம். கருணாநிதி கருணாநிதியாகவே இருப்பதைப்போல் - அது நடைமுறைச் சொல், அது பழகிவிட்ட காரணத்தால், எல்லோராலும் சொல்லப்பட்டுவிட்ட காரணத்தால், அந்தப் பெயர் அப்படியே நிலைத்து விடலாம். எனவே பெயர்ச் சொற்களை மாற்றத் தேவையில்லை. ஜெயம் சில்க் ஸ்டோர்ஸ் என்று இருந்தால் - 'ஜெயம் பட்டு நிலையம்' அல்லது 'ஜெயம் பட்டு மாளிகை' என்று பெயரிடப்பட வேண்டும்.

'மற்ற மாநிலத்தார் - மற்ற மொழிக்காரர் புரிந்து கொள்ள ஆங்கிலத்திலே பெயர் இருக்கலாம். அல்லது அந்தக் கடையை வைத்திருப்பவர் ஒரு தாய்மொழிக்குச் சொந்தக்காரராக இருப் பாரேயானால், அதை மூன்றாவது இடத்திலோ அல்லது இரண்டாவது இடத்திலோ அந்தப் பெயரை எழுதிக் கொள்ளலாம். ஆனால் முதல் இடம் பெறவேண்டியது தமிழ்ப் பெயராக இருக்க வேண்டும் என்பதாகும். 'சுபா ஜுவல்லரி' என்றால் 'சுபா நகை மாளிகை' என்று பெயரிடப்பட வேண்டும். சிங்கப்பூரில் 'அணிமணி பொற்சாலை' என்று பெயரிடுகிறார்கள். ஆனால் இங்கு சிங்கத்தமிழர்கள் வாழ்கிறோம். இங்கே அவைகளை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லாத சூழ்நிலை இருக்கிறது. அதை ஏற்றுக்கொண்டே தீர வேண்டும் என்பதற்கான அரசு ஆணை மிக விரைவில் பிறப்பிக்கப்படும் என்பதை, இந்த இனிய விழாவில் எடுத்துச் சொல்லி, அரசின் சார்பில் தரப்பட்ட தொகை சிறிதாகவோ, பெரிதாகவோ, எதுவாக இருந்தாலும், அந்தத் தொகையைப் பெற புரட்சிக்கவிஞர் என்ற புலி வாழ்ந்த குகையைவிட்டு இங்கு வந்த இந்தக் குடும்பத்தார் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இந்த நிகழ்ச்சியை மேலும் சிறப்பாக்குவதற்காக வருகை தந்த தமிழ்ச்சான்றோர்கள், புலவர்கள், கவிஞர்கள், அமைச்சர் பெருமக்கள், அரசு அலுவலர்கள், பதிப்பகத்தார் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தையும், இதயமார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



## கரும்புக்குக் கொள்முதல் விலை அறிவிப்பு

**1990-91**-ஆம் ஆண்டிற்கான சர்க்கரைப் பருவத்திற்குக் கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ.290 கொள்முதல் விலையாக விவசாயிகளுக்குத் தரப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

விவசாயிகளுடைய கோரிக்கைகளின் அடிப்படையில் இந்த ஆண்டு மத்திய அரசு 8.5 சதவிகிதம் கரும்புச் சத்துக் கொண்ட கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ.230 விலை நிர்ணயித்துள்ளது. அந்த விலையுடன், மாநில அரசு பரிந்துரை விலையாக ரூ.50 கூடுதலாகச் சேர்த்து, டன் ஒன்றுக்கு 8.5 சதவிகிதம் கரும்புச் சத்துக் கொண்ட கரும்புக்கு ரூ.280 கொடுப்பது என்றும், விவசாயிகளுடைய உற்பத்திச் செலவைக் கருத்திற் கொண்டு மாநில அரசு கரும்பிற்கு டன் ஒன்றுக்கு ரூ.10 மானியமாக அளிப்பது என்றும், முடிவு செய்யப் பட்டுள்ளது என்று மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார்.

எனவே, இந்த ஆண்டு கரும்பு விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்குக் குறைந்த பட்சம் ரூ.290 மாநில அரசின் பரிந்துரை விலையாகக் கிடைக்கும்.

மத்திய அரசு நிர்ணயித்த விலையைவிட மாநில அரசு பரிந்துரை விலையாக ரூ.280 நிர்ணயம் செய்ததற்கு மேல், மானியமாக டன் ஒன்றுக்கு ரூ.10 கொடுப்பதன் மூலம், தமிழக அரசுக்கு ரூ.10 கோடி இந்த ஆண்டு கூடுதலாகச் செலவு ஏற்படும் என்றும் முதல்வர் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு ஆலைக்கும் சென்ற ஆண்டு (1989-90) கிடைத்த சர்க்கரைச் சத்தின் அடிப்படையில், அவர்கள் 1990-91-ஆம் ஆண்டிற்குக் கொடுக்க வேண்டிய கரும்பு விலை நிர்ணயம் செய்யப்பட்டு அறிவிக்கப்படும். இவ்வாறு அறிவிக்கப்படும் கரும்பின் விலை 1989-90-இல் கொடுக்கப்பட்ட கரும்பு விலைக்குக் குறைவாக இருந்தால், 1989-90-இல் கொடுத்த விலையையே ஆலை அதிபர்கள் 1990-91-ஆம் ஆண்டிற்குக் கரும்பு விவசாயிகளுக்கு அளிக்க வேண்டும் என்றும் அறிவித்துள்ளார்.

சர்க்கரை ஆலையிலிருந்து 40 கிலோமீட்டர் தூரம் வரை கரும்பை ஏற்றிவரும் வாகனச் செலவைத் தற்போது விவசாயிகளே ஏற்றுக் கொள்கிறார்கள். இதற்கு மேல் உள்ள தூரத்திற்கான செலவை கரும்பு ஆலையே ஏற்றுக் கொள்கிறது. டீசல் விலை உயர்வினால் வாகன வாடகை அதிகம் ஆகிவிட்டதால், இந்த தூரத்தை 40 கிலோ மீட்டரிலிருந்து குறைக்க வேண்டும் என்று விவசாயிகள் கேட்டுக் கொண்டனர். இதனைப் பரிசீலித்த அரசு, விவசாயிகள் 30 கிலோ மீட்டர் தூரத்திற்கான வாடகையை ஒப்புக் கொண்டால் போதும். அதற்கு மேல் ஆகும் வாடகைச் செலவை ஆலைகள் ஏற்றுக் கொள்ளும்' என்றும் முதல்வர் அறிவித்துள்ளார்.

# தருமபுரி மாவட்டத்தில் பட்டு வளர்ச்சி



பட்டு வளர்ப்பு, வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட அதிக வேலை வாய்ப்பு அளிக்கும் தொழிலாகும். இத்தொழில் தருமபுரி மாவட்டத்தில் 18 ஒன்றியங்களிலும் செயல்பட்டு வருகிறது, தற்சமயம், 23,000 ஏக்கர் பரப்பளவில் மல்பெரி நடவு செய்யப்பட்டு இதன் மூலம் சுமார் 35,000 விவசாயிகள் பயன்பெற்று வருகின்றனர்.

இம்மாவட்டத்தில் நிலவி வரும் சீதோஷ்ண நிலையாலும் தொன்று தொட்டு பட்டுத் தொழிலில் ஈடுபட்டு வரும் கர்நாடக மாநிலத்தை ஒட்டி இம்மாவட்டம் இருப்பதாலும், கிராமங்கள் நிறைந்த இம்மாவட்டத்தில் அதிக அளவு பணியாட்கள் கிடைப்பதாலும், பட்டு வளர்ப்புத் தொழிலில் தன்னிகரற்ற மாவட்டமாகத்தருமபுரி மாவட்டம் விளங்குகிறது. தமிழகத்தின் மொத்த மல்பெரி பரப்பளவில் சுமார் 50% இம்மாவட்டத்தில் உள்ளது.

இத்தொழிலை மேலும் ஊக்குவிப்பதற்காக, தேசிய பட்டு வளர்ப்புத் திட்டம், வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம், ஐ.எல்.ஒ.ஐஃபாட் சுவிஸ் மேம்பாட்டுத் திட்டம், போர்டு பவுண்டேசன் திட்டம் மற்றும் மத்திய சிறப்புத் திட்டம் ஆகிய திட்டங்களின் மூலம் அதிக அளவில் மல்பெரி விரிவாக்கம் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள் மேலும் 15,000 ஏக்கர் அளவில் புதிதாக மல்பெரி பயிரிடப்பட்டு, இதன் மூலம் சுமார் 40,000 கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### தேசிய பட்டு வளர்ப்புத் திட்டம்

உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் தேசிய பட்டு வளர்ப்புத் திட்டத்தின் மூலம் திட்ட காலமான ஐந்தாண்டுகளில் (1989-90 முதல் 1993-94 முடிய) மேலும் 15,000 ஏக்கர் அளவில் மல்பெரி பயிரிட உள்ளது. இத்திட்டத்திற்காக தருமபுரி மாவட்டத்திற்கு மட்டும் ரூ.1,750 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் ரூ.884- இலட்சம் உள்ளமைப்பு வசதிகளைப் பெருக்குவதற்காகப் பயன்படுத்தப்படும்.

பட்டு விவசாயிகளுக்குத் தரமான பட்டு முட்டைகள் கிடைக்க ஏற்பாடு செய்தல் மற்றும் தகுந்த தொழில் நுட்ப உதவிகள் செய்தல் ஆகியவை தேசிய பட்டு வளர்ச்சித் திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். இதன் மூலம் ஒரு ஏக்கர் நீர்ப்பாசன வசதி உள்ள நிலத்தின் உற்பத்தித் திறன் 180 கிலோவிலிருந்து 240 கிலோ வரை அதிகரிக்கக் கூடுமெனவும், மானாவாரிநிலத்தின் உற்பத்தித் திறன் 50 கிலோவிலிருந்து 60 கிலோவாக அதிகரிக்கக்கூடுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இதன்படி திட்ட கால இறுதிக்குள் இம்மாவட்டத்தில் 240 டன் கச்சாப் பட்டு அதிகமாக உற்பத்தி செய்யப்படும்.

தேசிய பட்டு வளர்ப்புத் திட்டத்தின்கீழ், கீழ்குறிப்பிட்டுள்ள அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப் படவுள்ளன:

1. ஆதார விதைப்பண்ணைகள் அமைத்தல் (ஓசூர், தேன்கனிக் கோட்டை பகுதியில்)
2. பட்டுக்கூடு அங்காடிகளை விரிவாக்குதல் (ஓசூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, பென்னாகரம்)
3. விவசாயப் பயிற்சி மையங்கள் மற்றும் பட்டுநூற்புப் பயிற்சி அமைத்தல் (தருமபுரி, பென்னாகரம்)
4. பட்டு பயிற்சிப் பள்ளி அமைத்தல் (ஓசூர்)
5. பட்டு வித்தகங்கள் அபிவிருத்தி செய்தல் (அரசு மற்றும் தனியார் பகுதி)
6. தனியார் பட்டு நூற்பகங்கள் ஏற்படுத்துதல்.
7. பட்டுத் தொழில் நுட்பச் சேவை மையங்கள் ஏற்படுத்துதல்.

### தனியார் பட்டு நூற்பகங்கள்:

தருமபுரி மாவட்டத்தில் ஆண்டொன்றுக்குச் சுமார் 154 இலட்சம் பட்டு முட்டைகள் தேவைப்படுகின்றன. இதுநாள்வரை இப்பட்டு முட்டைகள் அரசு பட்டு முட்டை வித்தகங்களில் மட்டுமே உற்பத்தி



செய்யப்பட்டு வந்தன. பட்டு விவசாயிகளின் பெருகிவரும் முட்டைத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் ஆறு தனியார்களுக்குப் பட்டு முட்டை உற்பத்தி செய்ய, தேசிய பட்டு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### தனியார் பட்டு நூற்பகங்கள் செயல்படும் விதம்

தனியார் பட்டு நூற்பகங்கள் செயல்படும் விதத்தை நேரில் கண்ட போது, தருமபுரி மாவட்டத்தில் தனியார் பட்டு முட்டை உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் மகாலக்ஷ்மி பட்டு முட்டை வித்தகமும் ஒன்றாகும். இந்நிறுவனத்தின் உரிமையாளர்கள் திரு நரேந்திரன் மற்றும் திரு.வெங்கடேஷ்பாபு ஆகியோரைச் சந்தித்தபோது அவர்கள் கூறினார்கள்:

'இவ்வித்தகம் 1990 ஏப்ரல் மாதம் முதல் செயல்பட்டு வருகிறது, இவ்வித்தகம் மாதமொன்றுக்கு ஒரு இலட்சம் பட்டு முட்டைகளை உற்பத்தி செய்யும் திறன் கொண்டுள்ளது. பட்டு முட்டைத் தயாரிப்பு குறித்து தேவையான பயிற்சியைப் பட்டு வளர்ச்சித்துறை அளித்து வருகிறது. இவ்வித்தகத்திற்குப் பாரத மாநில வங்கி ரூ.1.16 இலட்சம் நடைமுறை மூலதனத்திற்காகக் கடன் வழங்கியுள்ளது. தேசிய பட்டு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் இவ்வித்தகத்திற்கு ரூ.20,500- மானியமாக அளிக்கப்பட்டுள்ளது. வித்தகத்திற்குத் தேவையான விதைக்கூடுகள் பட்டு வளர்ச்சித் துறையின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், தங்களது வித்தகத்தின் மூலம் அயல் இன மற்றும் நாட்டு இனப் பட்டுப் பூச்சிகளின் கலப்பினத்தின் மூலம் தரமான கலப்பினப் பட்டு முட்டைகள் உற்பத்தி செய்து, தரமான பட்டு நூல் எடுக்க உதவி வருகிறோம்' என்று குறிப்பிட்டார்.

### பாலக்கோடு பகுதிகளில் தனியார் பட்டு நூற்பகங்களின் வளர்ச்சி

பாலக்கோடு வட்டம் பட்டு நூற்புத் தொழிலில் கடந்த 5 ஆண்டுகளாகத் திறம்பட முன்னேறி வருகிறது. இதுவரை 141 ஏனங்களும், 45 சர்க்கா ஏனங்களும், 43 பட்டு நூற்பாளர்களால் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த அலகுகளில் 117 ஆண்களும், 274 பெண்களும் நிரந்தர வேலை வாய்ப்பைப் பெறுகின்றனர்.

பாலக்கோடு வட்டத்தில் 1988-89-ஆம் நிதியாண்டில், 16557.600 கி.கி. பட்டுக்கூடுகள் கொள்முதல் செய்யப்பட்டு, 1670 கச்சாப்பட்டு தனியார் பட்டு நூற்பாளர்களால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 1989-90-இல் 93995.700 கிகி பட்டுக் கூடுகள் கொள்முதல் செய்யப்பட்டு 9400.100 கிகி கச்சாப்பட்டும், நடப்பு நிதியாண்டில் அக்டோபர் 1990 முடிய 78393.00 கிகி பட்டுக்கூடுகள் கொள்முதல் செய்யப்பட்டு, 6770.700 கிகி கச்சாப்பட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

பட்டு நூற்புத் திறனை அதிகரிக்க, புதிய நூற்பாளர்களைக் கண்டறிந்து உரிமம் வழங்குவதன் மூலம், பட்டு நூற்பு அலகுகள் கணிசமான அளவில் அதிகரிக்கப்பட்டுள்ளன.

தேசிய பட்டு வளர்ச்சித் திட்டத்தில் 15 நூற்பு ஏனங்களுக்கு ரூ.58,500 கடன் வழங்க வங்கிகளுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது பட்டு நூற்பாளர்களுக்கு அதிகப்பட்சமாக ஒரு பேசின் அலகிற்கு ரூ.50,000, மற்றும் ஒரு சர்க்கா அலகிற்கு ரூ:25,000 கடன் அனுமதி வங்கிகள் அளித்தால், கடன் தொகையில் 50% கடன் தொகை சம்பந்தப்பட்ட நூற்பாளர் பெயரில் வைப்புத் தொகையாக 5 ஆண்டுகளுக்கு இருப்புக் கணக்கில் வைக்கப்படுவதன் மூலம், தொழில் முதலீடு வசதிவாய்ப்பற்ற, பட்டு நூற்பாளர்கள் பயன்பெறும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. வங்கியின் வட்டி சதவீதத்தில் 2.5% மானியமாக வழங்கப்படும். இதுவரை 5 நபர்களுக்குரூ.97,000/-50% கடன் தொகை டான்சில்க்கிலிருந்து பெறப்பட உள்ளது. மேலும் ஒரு நூற்பாளருக்கு 72,000 கடன் வழங்க வங்கிக் - கடன் அனுமதிக் கடிதம் பெறப்பட்டுள்ளது.

### புகையில்லா அடுப்புகள்:

பட்டு நூற்பில் ஒரு கிலோ கச்சாப் பட்டு உற்பத்தி, செலவினம், பயன்படுத்திய பட்டுக்கூடுகள், எரி பொருள் மற்றும் தினக்கூலித் தொகையின் அடிப்படையில் கண்டறியப்படுகிறது. எரிபொருள் அதிகமாகச் செலவினம் மேற்கொள்ளும் ஒரு நிலை, கச்சாப்பட்டின் அதிக அளவு உற்பத்தி செலவினத்திற்குக் காரணமாக அமையும். எனவே, பெங்களூர் மத்திய பட்டு நூற்பு ஆராய்ச்சி மற்றும் தொழில் நுட்ப மையம் நவீன ரக அடுப்புகளை விஞ்ஞான ரீதியாக அறிமுகப் படுத்தியுள்ளது.

புதிய நவீன ரக அடுப்புகள், பட்டு நூற்பு மையத்தினைச் சுத்தமாக வைத்துக் கொள்ள உதவுவதுடன், குறைந்த அளவு எரி பொருள் ஒரு கிலோ கச்சாப்பட்டு உற்பத்திக்குப் பயன்படுத்தும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த அடுப்புகள் அலகின் உட்புறத்தில் புகை வருவதைத் தவிர்த்துப் பணியாளர்களின் உடல் நலம் பாதுகாக்கப்படுகிறது.



# அடுக்கிக் கொண்டே போகலாம்
# இந்த ஆட்சியில்
# ஆண்டிரண்டின் சாதனையை!

## -முதல்வர் கலைஞர்

'இம்' என்றவுடன் மிகவும் பிற்பட்ட மக்களுக்கு இருபது சதவிகிதம் ஒதுக்கியது கழக ஆட்சி!







இல்லையோ மணவாழ்வு என ஏங்கிய மங்கையர்க்கு இல்வாழ்வு விளக்கேற்ற ஐயாயிரம் ஈவதும் இந்த ஆட்சி!



இலவச மின்சாரம் விவசாயிகளுக்கு எனும் கோரிக்கை இனிதாக நிறைவேற்றியது எந்த ஆட்சி?

மத்திய அரசு அலுவலர் ஊதியத்திற்கீடாக மாநில அரசு ஊழியர்க்கும் ஊதியம் வகுத்தது கழக ஆட்சி!







கண்களுக்கு ஒளியூட்ட சிகிச்சை முகாம்-நமது பெண்களுக்கும் சொத்துரிமை வழங்கியது இந்த ஆட்சி!




மண்டல் கமிஷன் பரிந்துரை நிறைவேற்ற மத்திய அரசுடன் கைகோத்து நின்றது இந்த ஆட்சி!




பத்தாயிர ரூபாய் வரை கடன்பட்டிருந்தோர் கஷ்டத்தைப் பட்டென்று தீர்த்து வைத்ததும் கழக ஆட்சி!




ஆதிதிராவிடர்க்கு இலவச காங்க்ரீட் வீடுகள் அம்பேத்கர் பெயராலே ஒரு மாவட்டம் கண்டது எந்த ஆட்சி?

# அரசின் அறிவிப்புகள், ஆக்கப் பணிகள்

★ தமிழ்நாட்டில் அனல் மின்நிலையங்களில் நிலக் கரிக்குப் பதிலாக பம்பாயிலிருந்து குழாய்கள் மூலம் 20 மில்லியன் கன மீட்டர் அளவுக்கு எரிவாயுவைப் பெற்று அதைப் பயன்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள தாகத் தலைமைச் செயலர் அறிவித்தார் (8.12.90).

★ நீலகிரி மாவட்டத்தில் ரூ.18 கோடி விவசாயக் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவித்தார் (6.12.90).

★ இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள 8 ஊராட்சி ஒன்றியங்களில் ரூ.23 இலட்சத்து 20 ஆயிரம் செலவில் குடிநீர்க் கிணறுகள் தோண்டத் தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது (10.12.90).

★ திண்டுக்கல் கோட்டத்தில் ரூ.308 இலட்சம் மதிப் பீட்டில் வளர்ச்சிப் பணிகள் நடைபெற்றுள்ளன என்று தமிழக அரசு அறிவித்துள்ளது (16.12.90).

★ குடிநீர்த் திட்டப் பணிகளுக்கான விளிம்புத் தொகை கட்ட இயலாத நலிவுற்ற நகராட்சிகளுக்கு உதவ, சுழல் நிதி ஒன்றினைத் துவக்க அரசு தீர்மானித்துள்ளது என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கோ.சி.மணி அவர்கள் தஞ்சையில் தெரிவித்தார் (14.12.90).

★ தஞ்சை மாவட்டத்தில் குழாய்க் கிணறுகள் அமைத்தல், ஆயில் இன்ஜின்கள் வாங்குதல் போன்ற சிறு பாசனப் பணிகளுக்காக வங்கிக் கடன் பெறும் விவசாயிகளுக்கு வேளாண்மைத் துறையின் மூலம் மானியம் வழங்க ரூ.140 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவித்தார் (13.12.90).

★ விவசாயக் கடன் தள்ளுபடி திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் 17 இலட்சம் விவசாயிகள் பயனடைந் துள்ளனர் என்று மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்கள் அறிவித்தார் (11.12.90).

★ வட ஆர்க்காடு - அம்பேத்கர் மாவட்டத்தில் ஆதி திராவிடர் 16 ஆயிரம் பேருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன என்று மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்தார்.

★ கொடுங்கையூரில் 7 இலட்சத்து 43 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 154 மின்விளக்குகளை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.கோ.சி.மணி அவர்கள் இயக்கி வைத்தார் (15.12.90).

★ மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கிராமங் களில் ரூ.9 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள குடி நீர்த் தேக்கத் தொட்டிகளை மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. க.சுந்தரம் அவர்கள் திறந்து வைத்தார் (17.12.90).

தேசீய பட்டு வளர்ச்சித் திட்டத் தில், மத்திய பட்டு வாரியம் இப்பகுதியில் ஏனங்களுக்கான 2 அடுப்புகளையும், ரூ.3,000 பெறு மான உபகரணங்களையும், மானிய மாக வழங்கும். பட்டு நூற்பாளர்கள் ரூ.750 பெறுமான அடுப்பு கட்டும் பொருட்களுக்கான செலவினை ஏற்க வேண்டும்.

**பட்டு முறுக்கேற்றுதல்:**

பாலக்கோடு வட்டத்தில் பட்டு நூற்புடன் பட்டு முறுக்கேற்றும் அலகு ஒன்று திரு அஜுசுல்லா என்பவரால் ஜுலை 1988-இல் 120 ஸிமிண்டுல்கள் கொண்டு முறுப்பகம் நிறுவபட்டுள்ளது. இதில் 100 முனை சுற்றுப்பொறியும், 60 முனை இரட்டைப்பொறியும் 1 பாவு ஆலையும், 1 நூற்பு இயந்திர மும் நிறுவப்பட்டுள்ளது. இந்த முறுக்காலையில் நாள் 1-க்கு, 10 கிலோ ஊடைப்பாவும், 5 கிலோ பாவுகளும் உற்பத்தி செய்யப்படு கிறது. இவ்வலகு மூலம் காஞ்சிபுரம் பகுதியின் பட்டு நெசவுக்கேற்ற ஜரி மற்றும் ஜோடுபுரி வார்ப்புகள் உற் பத்தி செய்து, காஞ்சீபுரம் பட்டு நெசவாளர்களுக்கு விற்பனை செய் யப்படுகின்றது. இவ்வலகில் 10 பணியாளர்கள் பயன்பெறுகின்றனர். அவர்களில் 8 பெண்களும், 2 ஆண் களும் பணிபுரிகின்றனர். பிரதி மாதம் அனைத்துச் செலவினமும் போக ரூ.2,500 லாபம் ஈட்டப் படுகிறது.

**பயிற்சி மையம்:**

பட்டு நூற்புப் பயிற்சி பெற விரும்பும் நபர்களுக்கு மாதம் ரூ.250 உதவித் தொகையுடன் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டு, இதற் கான பயிற்சி மையம் பென்னாகரத் தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பட்டு நூற்பாளர்களால் அனுப்பப்படும் பணியாட்களுக்கு இங்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

மேலும், பாலக்கோடு பகுதி களில் தனியார் பட்டு நூற்பகங் களில் பணிபுரியும் பணியாளர் களின் குறைகளை நேரில் கேட்ட போது, இப்பகுதியில் அதிக அளவில் பெண்கள் இத்தொழிலில் ஈடுபட் டுள்ளனர். அவர்கள் பட்டு நூற்புப் பயிற்சி மையம் பாலக்கோடு பகுதி யில் இடம்பெற வேண்டும் எனக் கேட்டுக் கொண்டனர். அவர்களது குறைகளை நீக்கும் பொருட்டு, தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு கா. அலாவுதீன், இ.ஆ.ப. அவர்கள் பாலக்கோடு பகுதியில் பட்டு நூற்புப்பயிற்சி நிலையம் அமைய துரித நடவடிக்கை மேற் கொள்ளப்படும் எனவும் உறுதி யளித்துள்ளார்.

ஆகவே, தருமபுரி மாவட்டத்தின் வளர்ச்சிப் பாதையில், பட்டு வளர்ப்புத் தொழிலின் பங்கு அதிக மாக உள்ளது என்றே கூறலாம்.

- சி.க. சரவணன்,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
தருமபுரி மாவட்டம்.



**திருச்சி மாவட்டத்தில்:**



# ரூ 9 கோடியில் 564 குடியிருப்புகளுக்குக் குடிநீர்த் திட்டம்

திருச்சி மாவட்டத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார் பில், க. பரமத்தி ஊராட்சி ஒன்றி யத்தில் உள்ள 327 குடியிருப்பு களுக்கும், அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த 229 குடி யிருப்புகளுக்கும், கரூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த 8 குடியிருப்பு களுக்கும் ரூ.9 கோடி செலவில் காவிரியிலிருந்து தண்ணீர் தரும் குடிநீர்த் திட்டம் வடிவமைக்கப் பட்டது. இதற்கு மாண்புமிகு ஊரக வளர்ச்சி, உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்கள் 28.11.90 அன்று க. பரமத்தியில் அடிக்கல் நாட்டினார்.

இத்திட்டத்திற்கு ஆகும் முதல் கட்டச் செலவு ரூ.896 இலட்சம். இத்திட்டத்தைப் பராமரிக்க ஆகும் செலவு ஆண்டிற்கு ரூ.21.58 இலட்சம் ஆகும். இத்திட்டத்தின் மூலம் பயன் பெறும் மக்கட் தொகை 2,63,125 நபர்கள். இத்திட்டத் தினால் நபர் ஒன்றுக்கு ஆகும் செலவு ரூ.472 ஆகும்.

இத்திட்டத்தின்படி முதல் கட்டப் பணியாக மரவாபாளையம் அருகில் காவிரி ஆற்றில் 5.00 மீட்டர் விட்டமுள்ள சேகரிப்புக் கிணறு அமைக்கப்படும். இக்கிணற்றிலிருந்து நாளொன்றுக்கு 1,37,39,100 லிட்டர் குடிநீர் கிடைக்கும்படி வடிவமைக்கப்படவுள்ளது.

இந்தக் கிணற்றிலிருந்து கிடைக்கும் நீர் 205 குதிரைத் திறன் கொண்ட நீரேற்றி மூலம் அரவக்குறிச்சி மற்றும் தேரப்பட்டி தரைமட்டத் தண்ணீர்த் தொட்டிகளை வந்தடையும்.

இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத் திற்குக் கால்கோள் நாட்டிப் பேருரை ஆற்றிய மாண்புமிகு அமைச்சர் திரு. கோ.சி.மணி அவர்கள் தமது உரையில், "மாண்புமிகு தமிழக் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பொறுப் பேற்ற பிறகு, கடந்த 2 ஆண்டுக் காலத்தில் நிதி ஒதுக்கீட்டுக்கு மேலே ரூ.130கோடி செலவழிக்கப்பட்டு, போடப்படும் திட்டங்கள் இன்று அடையாளம் காட்டக்கூடிய சொத்து களாக, கட்டடங்களாக உருவாகி உள்ளன" என்று தெரிவித்தார்.

மாண்புமிகு செய்தி-தொழி லாளர் நலத்துறை அமைச்சர் திரு கே.என். நேரு அவர்கள் பேசுகை யில்:-

"இன்றைய தினம் பெண்களுக் குத் திருமண நிதியுதவி, அரசுப் பதவிகளில் 30 சதவிகித இட ஒதுக் கீடு, சொத்தில் சம உரிமை என்று சட்டங்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் இயற்றி உள்ளார். விவ சாயிகளைப் பொறுத்த வரையில் ஆட்சிப் பொறுப்பேற்ற உடனேயே மத்திய அரசு அறிவிப்பினைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் விவசாயி



# வளரும் வேளாண்மை

**கொண்டைக் கடலை விதை கடினப்படுத்துதல்**

வடகிழக்குப் பருவக்காற்று தீவிரமடைந்து தமிழ்நாடு முழுவதும் நல்ல மழை பெய்து கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், மானாவாரி நிலங்களில் கொண்டைக்கடலை விதைக்கலாம். விதைக்கப்படும் விதைகள் நன்றாக முளைக்கவும், வீரியமுள்ள செடிகளை உண்டாக்கவும், கொண்டைக்கடலை விதைகளைக் கடினப்படுத்த வேண்டும்.

**கடினப்படுத்தும் முறை**

நன்றாகச் சுத்தம் செய்யப்பட்ட 35 கிலோ (ஒரு எக்டருக்கு) விதைகளை 12 லிட்டர் நீரில் 120 கிராம் பொட்டாசியம் டை ஹைடிரஜன் பாஸ்பேட் உப்பைக் கரைத்த கரைசலில் (1 சதம் கரைசல்) சுமார் மூன்று முதல் நான்கு மணி நேரம் ஊற வைக்க வேண்டும். பின்பு நீரை வடித்து விட்டு, விதைகளை முதலில் நிழலில் பரவலாகப் பரப்பி உலர்த்தி, பின்பு இளம் வெய்யிலில் உலர்த்த வேண்டும்.

இவ்வாறு கடினப்படுத்தப்பட்ட விதைகள் விதைத்தவுடன் நீரை உறிஞ்சி விரைவில் முளைத்து, நல்ல வீரியச் செடிகளைத் தோற்றுவிக்கும். ஈரப்பதம் சற்று குறைவாக உள்ள இடத்தில் விழுந்த விதைகளும் விரைவாக முளைக்கும். கடினப்படுத்தப்பட்ட விதைகள் உடனடியாகவும், ஒரு வாரம் வைத்திருந்தும் விதைக்கலாம். இக்கடினப்படுத்தும் முறையில் மிகக் கவனமாக இருக்க வேண்டியவை நீரின் அளவும், ஊறவைக்கப்பட வேண்டிய நேரமும் ஆகும்.

ஒரு எக்டருக்குத் தேவையான 35 கிலோ விதைகளைக் கடினப்படுத்த சுமார் ரூ.10 செலவாகும்.

**மல்லிகையில் நூற்புழுப் பராமரிப்பு**

மல்லிகைச் செடிகளை ஐந்து வகையான நூற்புழுக்கள் தாக்குகின்றன. அவையாவன: 1) மொச்சை வடிவ நூற்புழு 2) வேர்முடிச்சு நூற்புழு 3) வேரழுகல் நூற்புழு 4) சுருள் வடிவ நூற்புழு 5) கிரீட நூற்புழு. இந்த நூற்புழுக்களின் எண்ணிக்கை புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் அதிகமாகக் காணப்படுவதாக, தமிழ்நாடு ஜி.டி. நாயுடு வேளாண்மைப் பல்கலைக் கழக ஆய்வால் தெரிய வந்துள்ளது.

இந்நூற்புழுக்களுக்கு இலக்கான செடிகள் மஞ்சள் நிறமடைந்த இலைகளுடன் வளர்ச்சி குன்றிய தோற்றத்துடன், பூ மகசூல் குறைந்தும் காணப்படும். மல்லிகைப் பூக்களின் மகசூல் 60 விழுக்காடு பாதிக்கப்படுகிறது. இப்பாதிப்பிலிருந்து செடிகளைக் காக்க புரட்டாசி மாத இறுதிக்குள் ஒரு முறை 'போரேட்' 10 சதவிகிதம் குருணையைச் செடிக்கு 5 கிராம் வீதம் மணலுடன் கலந்து செடியைச் சுற்றி மண்ணைப் பறித்து, இட்டு மூடி நீர் பாய்ச்சவும்.

மார்கழி மாத முதல் வாரத்தில் கவாத்து செய்த பின்னர் தொழு உரம் செடிக்கு 5 கூடை வீதம் 25 கிலோ இட வேண்டும். பின்னர் சித்திரை மாதத்தில் மறுபடியும் ஒரு முறை கொடிக்கு 5 கிராம் போரேட் 10 சதவிகிதம் குருணை மருந்து இட வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் 50 விழுக்காடு அதிகப் பூ மகசூல் பெறலாம்.

**ஆப்பிளில் தோன்றும் வெண் கம்பள அசுவிணி**

தமிழகத்தில் உள்ள மலைப் பிரதேசங்களான கொடைக்கானல், ஊட்டி போன்ற இடங்களில் பயிரிடப்பட்டு வரும் ஆப்பிள் மரங்களில் வெண் கம்பள அசுவிணிகள் முக்கிய சேதத்தை உண்டு பண்ணுகின்றன.

இந்த அசுவிணிகள் கிளைகளின் மீதும், இலைகளின் மீதும், இருந்து கொண்டு, சாற்றை உறிஞ்சி வாழ்கின்றன. அதனால் மரத்தின் வளர்ச்சி குன்றி காணப்படும். இளஞ்செடியாக இருப்பின் பட்டுப் போய்விட வாய்ப்புள்ளது. மற்றும் குளிர் நாட்களில் இவ்வசுவிணி வேர்ப் பாகங்களைத் தாக்கி வேர் முடிச்சுகளைத் தோற்றுவிக்கின்றது. ஆப்பிள் ஒட்டுக் கட்டிய பகுதி எளிதில் தாக்கப்படக் கூடிய இடமாகும். தாக்கப்பட்ட மரங்களில் காய்க்கும் ஆப்பிள்களின் சுவை குன்றிவிடும்.

இந்த அசுவிணி மரங்களில் இருப்பதை, அவற்றை மூடியிருக்கும் வெண்ணிறக் கம்பளங்களைக் கொண்டு அறியலாம். மேலும் இந்த அசுவிணி வெண் கம்பளத்தினுள்ளே இருந்து கொண்டு சாற்றை உறிஞ்சி சேதப்படுத்துவதால் இதனை எளிதில் மருந்து தெளித்துக் கட்டுப்படுத்துவது கடினம்.

இந்த அசுவிணிகளைக் கட்டுப்படுத்த 'எபிலினஸ்' என்னும் ஒட்டுண்ணிகள் இயற்கையிலேயே உள்ளன. இவ்வொட்டுண்ணிகளை நாம் அழிக்காமல் இருந்தாலே இந்த வெண் கம்பள அசுவிணிகளை எளிதில் கட்டுப்படுத்தலாம். இளஞ்செடிகளில் வெண் அசுவிணிகள் அதிகம் தென்பட்டால், பஞ்சு கொண்டு அசுவிணிகளை உருவியும், மெட்டாசிஸ்டாக்ஸ் 0.05 சத மருந்தைத் தெளித்தும் ஆப்பிள் மரங்களைப் பாதுகாக்கலாம்.

**-வேளாண் தகவல் பணிமையம், தமிழ்நாடு ஜி. டி. நாயுடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்**



# ஊரக வளர்ச்சி - ஒரு கண்ணோட்டம்

**ஊ**ராட்சி ஒன்றியப் பகுதிகளில் வளர்ச்சித் திட்டங்கள் அனைத்தும் செம்மையாகவும், மக்கள் பயனுறும் நோக்கத்துடனும் நிறைவேற்றப்படும் வகையில் 1989-ஆம் ஆண்டில் இந்த அரசு பல முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு செயலாற்றத் தொடங்கியது.

1960-70-ஆம் ஆண்டுகளில் ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மக்களின் நன்மைகளையே கருத்தில் கொண்டு, வலுவான மக்களாட்சி முறையில் செயல்பட்டதை, மீண்டும் தமிழகத்தில் கொண்டு வருவதற்குரிய அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. இடையில் தேர்தல் நடைபெறாமல், ஊராட்சிகளும் ஊராட்சி ஒன்றியங்களும் செயல்பட்டதன் விளைவாக வேளாண்மை, கல்வி, கால்நடை, நல்வாழ்வுத்துறை போன்ற பல துறைகள் ஊராட்சி ஒன்றிய அமைப்புகளிலிருந்து விலகிவிட்டன.

1958-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்திற்கு, பற்பல முக்கியமான திருத்தங்கள், 1989 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்டன. காலம் தாழ்த்தாது தேர்தல் நடத்துதல், பெண்களுக்கு 30 விழுக்காடு இடங்களை ஒதுக்குதல், பதவிக்காலத்தை நிர்ணயித்தல், நல்வாழ்வு, கல்வி போன்ற துறைகளில் ஒன்றியங்களுக்குரிய பொறுப்புக்களைத் திரும்ப அளித்தல் போன்றவை அவற்றுள் குறிப்பிடத்தக்கவையாகும்.தவிர,தேர்தல்களை ஒத்திவைப்பதற்கான அதிகாரத்தை நீக்கியது இவ்வரசு மேற்கொண்ட செயல்களில் மிக முக்கியமான தொன்றாகும்.

மாநில அரசு மற்றும் ஒன்றியங்களுக்கிடையே பங்கீடு செய்து கொள்வது பற்றி பரிந்துரைக்க ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை நிதி வல்லுநர் குழுவை அமைத்தலும், அனைத்துத் துறைகளின் பணிகளையும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் மேற்பார்வையிட வேண்டுமென்று சட்ட அடிப்படையில் வகை செய்ததும் குறிப்பிடத்தக்கவையாகும்.

மக்களுக்கு மிக நெருக்கமாக உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகளாக ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களே அமைகின்றன. எனவே, ஊராட்சி ஒன்றியங்கள் காலாண்டுக்கு ஒரு முறை, அனைத்துத் துறைகளின் பணிகளையும் மேலாய்வு செய்து, ஒருங்கிணைப்பது சட்டரீதியான பொறுப்பாக்கப்பட்டுள்ளது. தங்களுடைய கடமைகளையும் பொறுப்புக்களையும் தெளிவாக அறிந்து செம்மையாகச் செயல்படுத்துவதற்காக ஊராட்சித் தலைவர்களுக்குப் பயிற்சியும், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களுக்குக் கருத்தரங்குகளும் நடைபெற்றுள்ளன.

**டாக்டர் எஸ். நாராயண், இ.ஆ.ப.,**
**அரசுச் செயலாளர், ஊரக வளர்ச்சித் துறை.**

## திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில்:

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், விஜயநாராயணபுரத்தில் ரூ.122 கோடி செலவில் குறைந்த அலைவரிசை கடற்படைத் தகவல் தொடர்பு மையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தியக் கடற்படைக்கு இப்படியொரு குறைந்த அலைவரிசை தகவல் மையத்தை அமைக்க வேண்டும் என்ற எண்ணம் 1971-ஆம் ஆண்டே உருவானது. தகவல் தொடர்பு கொள்வதில் உள்ள இடர்ப்பாடுகளைத் தவிர்த்து நீருக்கு அடியில் இருக்கும் நீர்மூழ்கிக் கப்பலுடன் தொடர்பு கொள்ளவும், அதேபோல் நீருக்கு அடியில் இருந்து கொண்டே கரையில் உள்ள கடற்படைத் தளபதிகளுடன் தொடர்பு கொள்ளவும் வசதியாக இந்த மையம் அமைக்கப்பட்டுள்ளது.

உலகில் உள்ள மிகச்சிறந்த கடற்படைத் தகவல் மையங்களில் இதுவும் ஒன்று. ஆசியாவிலேயே மிக

### கடற்படைத் தகவல் தொடர்பு மையம்

நவீனதகவல் தொடர்பு மையம் இங்கு அமைக்கப்பட்டுள்ளது. உலகில் அமெரிக்கா, ரஷ்யா, இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற நாடுகளில் மட்டும்தான் இந்த கடற்படைத் தகவல் வசதி உள்ளது. உலகில் 7-வது பெரிய கடற்படைத் தகவல் மையமாக இது இருக்கிறது. இந்தியாவில் முதலாவது மையமான இதன்மூலம் இந்தியப் பெருங்கடல், அரபிக்கடல், வங்காள விரிகுடா ஆகிய கடல் பகுதி முழுவதும் தொடர்பு கொள்ள முடியும்.

உலக நாடுகளின் நவீன தொழில் நுட்பம் மூலம் இத்திட்டம் கடந்த 1984-ஆம் ஆண்டு ஜனவரி 19-ஆம் தேதி அடிக்கல் நாட்டப்பட்டது. ரூ.144 கோடிக்குத் திட்டமிடப்பட்டு ரூ.122 கோடி இதுவரை செலவிடப்பட்டுள்ளது. இதற்காக 13 உயர்ந்த தகவல் தொடர்புக் கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1,004 அடி உயரத்தில் 700 டன் எடையில் மிகப் பெரிய கோபுரம் இந்த மையத்தில் அமைக்கப்பட்டுள்ளது. 3 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்த நவீன தகவல் தொடர்பு மையத்தை மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. ஆர்.வெங்கட்ராமன் அவர்கள் 20.10.90 அன்று தொடங்கி வைத்தார். இந்தியக் கடற்படைக் கப்பல் 'கட்டபொம்மன்' என்ற பெயர்ப் பலகையை இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களின் துணைவியார் திருமதி ஜானகி வெங்கட்ராமன் அவர்கள், திறந்து வைத்தார்.

**துரை. ராஜ்குமார்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்**
**திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம்**

---

களுக்கு ரூ.10,000 கடன் நிவாரணத் திட்டத்தின் கீழ், 500 கோடி ரூபாய் கடன் தள்ளுபடி செய்யப்பட்டது'' என்று கூறினார்.

விழாவில் பேசிய சட்டமன்ற உறுப்பினர் திரு. மொஞ்சனூர் பி. ராமசாமி அவர்கள் தமது உரையில்- ''இப்போது நிறைவேற்றப்படவுள்ள இந்த 9 கோடி ரூபாய் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு முன்பாகவே அரசு இப்பகுதியில் இடைக்கால நிவாரணமாக 266 ஆழ்குழாய்க் கிணறுகளை அமைத்துள்ளது. மேலும், கரூர் அருகே ஆண்டிச் செட்டிப்பாளையத்தில் மூன்றே முக்கால் கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுவரும் 210 கிலோ வாட் துணை மின்சார நிலையம் வருகிற ஜூலை மாதத்திற்குள் கட்டி முடிக்கப்பட்டுப்பணியைத் துவக்கும்; அதன் மூலம் இப்பகுதியில் விவசாயத்திற்கு அதிக மின்சாரம் கிடைக்கும்'' என்று கூறினார்.

விழாவில் சிறப்புரையாற்றிய தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு வே. இலட்சுமிரதன், இ.ஆ.ப., அவர்கள் பேசுகையில், ''மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1989-ஆம் ஆண்டு பொறுப்பேற்றவுடன் இவ் வாரிய அதிகாரிகளை அழைத்து இன்னும் ஒரு ஆண்டுக் காலத்திற்குள் தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் குடிநீர் வசதி செய்து தரப்படவேண்டிய பணிகளை உடனடியாகச் செய்தாகவேண்டும் என்றார்.

இதன் அடிப்படையில் 1989-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஒரு ஆய்வினைத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மேற்கொண்டது. இதன் மூலம் தமிழ்நாட்டில் 10,320 கிராமங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்கவில்லை என்பது தெரியவந்தது. உடனடியாக வாரியம் போர்க்கால அடிப்படையில் ரூ.21 கோடி செலவில் 10,223 கிராமங்களுக்குக் குறைந்த பட்சம் ஒரு குடிநீர் ஆதாரம் என்ற அளவில் கைப்பம்புகளை அமைத்துத் திட்டங்களை நிறைவேற்றியது.

ஏற்கெனவே கரூர் நகருக்கு ரூ.5 கோடி செலவில் காவிரி நதியிலிருந்து தண்ணீர் கொண்டு வரும் திட்டம் செயலாக்கப்படுவதைச் சுட்டிக்காட்டிய அவர், உலக வங்கித் திட்டத்தின் கீழ் 500 கோடி ரூபாய் செலவில் சங்கரன் கோவில், ஆலங்குளம், புதுக்கோட்டை, மணப்பாறை, திருவண்ணாமலை, காஞ்சிபுரம் ஆகிய நகரங்களுக்குக் குடிநீர்த் திட்டம் தயாரிக்கப்படடுள்ளது'' என்று கூறினார்.

விழாவிற்கு வந்திருந்தவர்களைத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியப் பொறியியல் இயக்குநர் திரு, எம். சுப்பிரமணியம் வரவேற்றார். விழாவில் மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு அன்பில் தர்மலிங்கம், திருஎன்.செல்வராஜ், சட்டமன்றஉறுப்பினர் திரு கே.வி. இராமசாமி, க. பரமத்தி ஊராட்சி மன்றத்தலைவர் திரு. எஸ்.வி. பழனிச்சாமி, அரவக்குறிச்சி ஒன்றியப் பெருந்தலைவர் திரு கா. சாமியப்பன், க. பரமத்தி ஒன்றியப் பெருந்தலைவர் திரு அ.பொ. கந்தசாமி, கரூர் ஒன்றியப் பெருந்தலைவர் திரு க. நாச்சிமுத்து, மண்ணச்சநல்லூர் ஒன்றியப் பெருந்தலைவர் திரு. நடராஜன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பள்ளப்பட்டி ஹாஜியார் மற்றும் பலர் சிறப்புரையாற்றினார்கள். கரூர் கோட்ட வளர்ச்சி அலுவலர் திரு என். அமிர்த கணேசன் நன்றி கூறினார்.

**எஸ். சுதாகர்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்**
**திருச்சி மாவட்டம்.**

---



## சேலம் மாவட்டத்தில்

# வளர்ச்சிப் பணிகள்

சேலம் மாவட்டத்தில் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்குத் தொகுப்பு வீடுகள் ரூ.532.500 இலட்சம் செலவில் 3,750 கட்டிக் கொடுக்கப்படும். இவ்வாண்டு பேரூராட்சிப் பகுதிகளில் உள்ளவர்களுக்கும் இவ் வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு அனுமதித்துள்ளது. சேலம் மாவட்டத்தில் பேரூராட்சிப் பகுதிகளில் மாவட்ட ஒதுக்கீடான 3,750 வீடுகளில் 563 வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

சிற்றூர்களுக்குப் பேருந்து வசதி செய்திடும் பொருட்டு, கப்பிச் சாலைகளைத் தார்ச் சாலைகளாக மாற்றவும், மண் சாலைகளைக் கப்பிச் சாலைகளாக மாற்றவும் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், 204 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 131 கி.மீ. தார்ச் சாலைகளும், 157 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் 157 கி.மீ. கப்பிச் சாலைகளும் அமைப்பதற்கான வேலைகள் துவங்கப்பட்டுள்ளன.

பள்ளிக் கட்டடங்கள் இல்லாத அனைத்து ஆரம்பப் பள்ளிகளுக்கும் இந்த நிதியாண்டிற்காகப் பள்ளிக் கட்டடங்கள் கட்டித் தரப்படும். 42.500 இலட்சம் மதிப்பீட்டில் 34 ஆரம்பப் பள்ளிக் கட்டடங்களுக்கான கட்டட வேலைகள் துவக்கப்பட்டுள்ளன.

150 ஊராட்சி மற்றும் பேரூராட்சிக் கட்டடங்கள் பழுதுபார்ப்பதற்காக ரூ.9 இலட்ச ரூபாய் செலவிடப்படுகிறது. சமூகக் காடு வளர்ப்புப் பணிகளுக்காக 47.86 இலட்ச ரூபாயும், இதர ஊராட்சிப் பணிகளுக்காக 209.488 இலட்ச ரூபாயும் செலவிடப்படவுள்ளது.

ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், சேலம் மாவட்டத்தில் 1291.548 இலட்சம் ரூபாய் (12 கோடியே 91.5 இலட்சம் ரூபாய்) செலவில் 5,297 பணிகள் செய்திட நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு வேலைகள் துவக்கப்பட்டுள்ளன

இவ்வாண்டிற்கான புதிய பணிகளில் 1093 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 30.11.90 வரை அரசிடமிருந்து 1047.339 இலட்சம் ரூபாய் நிதிவரப்பெற்றுள்ளது. அதில் இதுவரை 810.298 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. 43.140 இலட்சம் மனித சக்தி நாட்கள் உருவாக்கத் திட்டமிடப்பட்டு, இதுவரை 32.410 இலட்சம் மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 1990-91-ஆம் ஆண்டிற்குச் சேலம் மாவட்டத்திற்கு ரூ.457.460 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 14,541 பயனாளிகளுக்கு உதவியாக அரசால் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. சென்ற ஆண்டில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கு 33 சதவிகிதம் என்பதை மாற்றி, 50 சதவிகிதம் மானியம் வழங்க அரசு உத்தர விட்டுள்ளது.

சுய வேலைவாய்ப்புப் பயிற்சி அளிப்புத் திட்டத்தின் கீழ் 1,225 ஊரக இளைஞர்களுக்குப் பல்வேறு தொழில்களில் பயிற்சி அளிக்க அரசால் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, பல்வேறு தொழிற்பயிற்சி நிலையங்களில் 1,225 இளைஞர்களுக்கும் தொழிற் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. 31 தொழில்களில் இவ்வாறான பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதுவரை 186 கிராமப் பகுதி இளைஞர்கள் தொழிற் பயிற்சி முடித்துள்ளனர். பயிற்சி முடித்த இளைஞர்களுக்குச் சுய தொழில் துவங்க வங்கிக் கடனும், அரசு மானியமும் அளிக்க தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன

சேலம் மாவட்டத்திற்கு மானிய உதவியுடன் 1,200 சாண எரி வாயுக் கலன்கள் அமைக்க அரசால் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சேலம் மாவட்டம், கால்நடைகள் அதிகம் உள்ள மாவட்டமாதலால் 3,500 கலன்கள் அமைக்க மாவட்ட நிர்வாகத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நவம்பர் மாதம் முடிய 3,808 மனுக்கள் வங்கிகளுக்கு அனுப்பப்பட்டதில் 2,904 மனுக்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. நவம்பர் முடிய 1,194 கலன்கள் அமைக்கப்பட்டு வருகிறது.

சேலம் மாவட்டத்திற்கு நடப்பு ஆண்டில் கிராமக் குடிநீர்த் திட்டத்திற்காக 6 கோடியே 90 இலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

வறட்சிநிவாரணப் பணிகளின் கீழ், முதல் பகுதிகளாக 172 ஆழ் குழாய் கிணறுகள் திட்டமிடப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. இரண்டாவது பகுதிகளிலும் 90 ஆழ் குழாய் கிணறுகள் திட்டமிடப்பட்டு, 50 ஆழ் குழாய்க் கிணறுகள் முடிவுற்றுள்ளன.

**நா. தில்லை கோவிந்தன்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**சேலம் மாவட்டம்**

கிராமபபகுதிகளில் அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்து நாடப்படவேண்டுமென்பதற்காக நடப்பாண்டில் பெருந்திட்டமொன்று தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் முக்கியப் பணிகளாவன:

1. 1990-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ள பேருந்து செல்லும் சாலைகள் அனைத்தும் 1993-ஆம் ஆண்டு மார்ச் திங்களுக்குள் தார்ச் சாலைகளாக மாற்றப்படும்.

2. 500 முதல் 1000 வரை மக்கள் தொகை கொண்ட அனைத்துப் பகுதிகளிலும் 1990-95-ஆம் ஆண்டிற்குள் கப்பிச் சாலைகள் அமைக்கப்படும்.

3. இவ்வாண்டிலேயே, பள்ளிக் கட்டடம் இல்லாத அனைத்து ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகளுக்கும் கட்டடம் கட்டி முடிக்கப்படும். தவிர ஒவ்வோராண்டும் தொடங்கப்படவிருக்கும் புதிய பள்ளிகளுக்கு ஆண்டுதோறும் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

4. பழுதடைந்துள்ள தொடக்கப் பள்ளிகள் அனைத்தும் உடனே செப்பனிடப்பட்டுச் சீராக்கப்படும்.

5. 3,500-க்கும் மேற்பட்ட சுகாதாரத் துணை நிலையங்களுக்குக் கட்டடங்கள் தேவைப்படுவதால், இப்பணி உடனே மேற்கொள்ளப்பட்டு 8-ஆம் திட்ட காலத்திற்குள் முடிக்கப்படும்.

6. ஓரளவு குடிநீர்த் தேவை நிறைவேற்றப்பட்டுள்ள பகுதிகளில் 8- ஆம் திட்ட காலத்திற்குள் போதுமான குடிநீர் வழங்கப்படும்.

7. 100 ஏக்கர்கள் பாசன வசதியுள்ள 6,000 சிறிய பாசனக் குளங்கள் மூன்றாண்டுகளில் நவீனமாக்கப்பட்டு மேம்படுத்தப்படும்.

8. அனைத்துக் கிராமங்களிலும் மூன்றாண்டுகளில் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் அமைக்கப்படும்.



மேற்கண்ட பெருந்திட்டத்தை நிறைவேற்றி முடிக்க ரூ.250 கோடி செலவாகுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டம் ஐந்தாண்டுகளில் முடிவுறும். இத்திட்டத்திற்காகும் செலவில் 50 விழுக்காட்டை மாநில அரசு ஏற்றுக் கொண்டு, எஞ்சிய பகுதியை உபரி நிதியுள்ள ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும் ஏற்றுக் கொள்ளும்.

ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் உள்ளிட்ட அனைத்துத் திட்டங்களையும் உருவாக்கி, நிதி வசதிகளை ஒதுக்கி, நிறைவேற்றும் பொறுப்பு அனைத்தும் ஊராட்சி ஒன்றியங்களிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளன. சிறப்பாகக் குறிப்பிட வேண்டுமென்றால், 1990-91-ஆம் ஆண்டில் ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் சுமார் ரூ.325 கோடி மதிப்புள்ள திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தும் என்பது ஒரு மகிழ்ச்சியான செய்தியாகும்.

சமுதாய வளர்ச்சிப் பணிகள் அனைத்தும், ஊராட்சி ஒன்றியங்கள் வாயிலாகவே செயல்படுத்தப்பட வேண்டுமென்று முன்பிருந்த நிலை இப்போது மீண்டும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மனிதவள மேம்பாட்டின் மீதும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. ஊர்நல அலுவலர்கள், விரிவாக்க அலுவலர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உள்ளிட்ட எல்லா நிலையிலும் உள்ள அலுவலர்களுக்கும் ஊக்கத்தையும் ஆக்கத்தையும் அளிக்கவும் தக்க வழிமுறைகள் காணப்பட்டுள்ளன.

பழைய முறையில் உள்ள பயிற்சித் திட்டங்களை மாற்றியமைத்து அவற்றிற்குப் புதிய வடிவம் தரப்பட்டுள்ளது.

ஊர் நல அலுவலர்களுக்காக ஒரு புதிய பயிற்சி நூலைத் தயாரித்து அதன் அடிப்படையில் இவ்வாண்டு செப்டம்பரில் தொடங்கி மூன்று மாதப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அடுத்த ஈராண்டுகளில், இத்துறையிலுள்ள 7,000-க்கும் மேற்பட்ட எல்லா அமைச்சு மற்றும் விரிவாக்கப் பணியாளர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டு, புதிய பொறுப்புகளுக்கு அவர்கள் தயார் செய்யப்படுவார்கள்.

ஊராட்சிகளை நிர்வகித்து ஒருங்கிணைக்கும் பணியை ஊராட்சி விரிவாக்க அலுவலர் செய்கிறார்.. இவருடைய பொறுப்புக்கள் பிற அலுவலர்களிடமிருந்து மாறுபட்டிருப்பதால், இவருக்கென்றே தனியாக ஒரு பயிற்சி நூல் தொகுக்கப்பட்டுள்ளது. 700 ஊராட்சி விரிவாக்க அலுவலர்களுக்குத் தேவையான பயிற்சி அளிக்கப்பட்டு விட்டது. இதர வகை அலுவலர்களுக்கும் பயிற்சி நூல்கள் தயாரிக்கப்படுகின்றன.

மறைமலை நகரில் உருவாகி வரும் புதிய இடத்தில் மாநில ஊரகப் பயிற்சி நிறுவனம் விரைவில் மாற்றப்படவிருக்கிறது. தமிழ்நாட்டிலேயே ஒரு சிறந்த பயிற்சி நிலையமாக இதனை உருவாக்கத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதே போன்று பழைய ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையங்களும் நவீனப்படுத்தப்படுகின்றன. இன்னும் ஓராண்டில் இப்பணி முடிவடையும்.

ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள் பொறுப்பிலுள்ள சொத்துக்களைப் பேணிக் காப்பதில் தனிக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. பள்ளிக் கட்டடங்கள், நீர் ஆதாரங்கள், ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் போன்ற எல்லா சொத்துக்களையும் கணக்கிட்டுப் பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இவற்றினைப் பேணிப் பாதுகாக்க சிறப்பு நிதியொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஊராட்சிகள் பெருமையடையும் வண்ணம் செயல்படவேண்டிய அவசியத்தை உணர்ந்து, அவற்றிற்காக அலுவலகக் கட்டடங்கள் கட்டத் தொடங்கப்பட்டுள்ளது. தமிழ் நாட்டில், நாடு விடுதலை பெற்ற இந்த 40 ஆண்டுக் காலத்தில் 6,000 ஊராட்சிகளுக்கு மட்டுமே கட்டடங்கள் கட்டித் தரப்பட்டுள்ளன. அடுத்த மூன்றாண்டிற்குள்ளாக 6,000 கட்டடங்கள் கட்டி முடிக்கப்படும். அதன் பின்னர், அனைத்து ஊராட்சிகளும் சொந்தக் கட்டடங்களிலேயே செயல்படும்.

மேற்கண்ட பணிகள் எல்லாம் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்திற்கு இணையாகவே செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஆதி திராவிடர்களுக்காக ஆண்டுதோறும் 45,000 வீடுகள், சுமார் 1,000 பள்ளிக் கட்டடங்கள் தவிர, சாலைகள், கட்டடங்கள், சிறிய நீர்ப்பாசன ஏரிகள் போன்ற பொதுப்பணிகளும் எடுத்துக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலமாகப் பயன்பெறுவோர்களை உன்னிப்பாகக் கவனித்து வருவதுடன், அவர்களுடைய சொத்துக்கள் 100 விழுக்காடு அளவிற்கு அவ்வப்போது கண்காணிக்கப்பட்டு வருகின்றன. கிராமப்புற மகளிர் குழந்தைகள் நல மேம்பாட்டுத் திட்டத்தில் தயாரிக்கப்படும் பொருள்களை மாவட்டத்திலுள்ள அங்காடிகளுடன் இணைத்து விற்பனை செய்ய வசதி செய்யப்பட்டுள்ளது. மதிய உணவுத் திட்டத்திற்குத் தேவையானவற்றை இப்பிரிவுகள் நிறைவு செய்கின்றன. இவை பெருமளவில் பொருள்களை உற்பத்தி செய்யத் தொடங்கிவிட்டதால், நகர்ப்புறங்களில் விற்பனை செய்வதற்காகப் புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேற்சொன்னவாறு, கடந்த ஈராண்டுகளில் ஊரக வளர்ச்சிக்காக, பெருமளவில் சிறப்புத் திட்டங்கள் பலவற்றைத் தீட்டிச் செம்மையாக அவை செயல்படுத்தப்பட்டு வருவதை உணரமுடியும்.

1992-93 ஆம் ஆண்டு முதல் வட்டார அளவில் திட்டங்களைத் தொடங்க இயலுமென்று நம்பப்படுகிறது. அதன் மூலம் மாநில அளவிலான திட்டங்களும் வட்டாரங்கள் வாயிலாகச் சிறப்பாக நிறைவேற்றப்படும்.

## செங்கை-அண்ணா மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள்

செங்கை-அண்ணா மாவட்டத்தில், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்கீழ், 1,580 ஏழைப் பெண்களுக்குத் தலா ரூ.5,000 வீதம் மொத்தம் ரூ.79 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித்திட்டத்தின் கீழ் 16 ஆயிரம் தாய்மார்களுக்குத் தலா ரூ.200 வீதம் வழங்கப்பட்டுள்ளது. ஏழை ஆதரவற்ற விதவை மகளிர்களின் மகள் திருமண உதவித் திட்டத்தின்கீழ் 50 நபர்களுக்குத் தலா ரூ.2 ஆயிரம் வீதம் இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், ரூ.3 கோடியே 52 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் ரூ.2 கோடியே 16 இலட்சம் இதுவரை செலவு செய்யப்பட்டுள்ளது. இதனால் 8,060 நபர்கள் பயன்பெற்றுள்ளனர். ரூ.10 ஆயிரம் வரையிலான கடன் தள்ளுபடித்திட்டத்தின்கீழ், இம்மாவட்டத்தில் ரூ.32 கோடி அளவுக்குத்கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில், ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், 5,100 தொகுப்பு வீடுகள், 39 பள்ளிக் கட்டடங்கள், 200 ஊராட்சி மன்றக் கட்டடங்கள் கட்டவும், சாலைகள் மற்றும் இதரப் பணிகளுக்காகவும் ரூ.2 கோடியே 16 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.
மாவட்டத்தில், 35 ஆயிரம் பேர்களுக்குப் பட்டா வழங்க ஒதுக்கீடு செய்யப்பட்டதில், 40,030 நபர்களுக்குப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

வேளாண்மைத் துறை மூலம் சிறப்பு உணவுத் தானிய உற்பத்தித் திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு இலவசக் கருவிகள் மானியத்துடன் கூடிய இடுபொருட்கள் ரூ.21 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு, ஒரு பவர் டில்லர் வீதம் மாவட்டத்தில் 27 பவர் டில்லர்கள் மானிய உதவியுடன் ரூ.2 இலட்சத்து 27 ஆயிரம் செலவில் வழங்கப்பட்டுள்ளது. மானிய உதவியுடன் 54 கதிர் அடிக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. சமீபத்திய மழையால் 557 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு உடனடி உதவியாக ரூ.83 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.
இம்மாவட்டத்தில் 20 ஆயிரத்து 422 போலி குடும்ப அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டுப் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. 60 புதிய நியாய விலைக்கடைகள் திறக்கப்பட்டுள்ளன.

**-ஜே. சந்திரன்,**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்**
**செங்கை-அண்ணா மாவட்டம்**

### தென்னார்க்காடு மாவட்டத்தில்

# பால் வனம்

டாக்டர்
கு. அம்பலவாணன்
நிர்வாக இயக்குநர்
தென் ஆர்க்காடு மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், விழுப்புரம்.

**தெ**ன்னார்க்காடு மாவட்டத்தில் பால்வள மேம்பாட்டுத் திட்டம், தீவிர பால் பெருக்குத் திட்டம் 1-இன் கீழ் 1.8.1975-இல் 'அமுல்' மாதிரி கிராமப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் செயல்பட ஆரம்பித்தது.

சின்ன சேலம் மற்றும் விழுப்புரம் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட 50 சங்கங்கள் அன்றைய காலத்தில் நாளொன்றுக்கு 2,500 லிட்டர் பாலை மட்டுமே உற்பத்தி செய்தது. தீவிர பால் பெருக்குத் திட்டம் 2-இன் கீழ் 1.8.83-இல் மாவட்டப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் செயல்பட ஆரம்பித்தது. 200 கிராமச் சங்கங்கள் மூலம் 22,000 லிட்டர் பாலைக் கொள்முதல் செய்து, 25,000 ஏழை எளிய மக்களுக்கு இந்தத் தொழில் மூலமாக, நிரந்தர வருமானத்தை ஏற்படுத்தித் தந்தது. 1983-84-ஆம் ஆண்டில், சராசரி பால் உற்பத்தி நாளொன்றுக்கு 38,000 லிட்டர் ஆகும். அதில் 7,000 லிட்டர் உள்ளூர் நகரங்களில் விற்பனை செய்தது போக, மிகுதி மாநில - பால்வள இணையத்திற்கு அனுப்பப்பட்டது.

10,985 கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட இந்தப் பெரிய மாவட்டத்தில் உள்ள 2,149 கிராமங்களில், தற்போது 530-க்கும் மேற்பட்ட கிராமங்களில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. தற்போதைய சராசரி பால் உற்பத்தி 90,000 லிட்டருக்கு மேல், அதிலும் கடந்த 16.6.90-இல் ஒரு இலட்சம் லிட்டர் பாலுக்கு மேல் உற்பத்தி செய்து மிகப் பெரிய சாதனையைச் செய்துள்ளது.

மொத்த மக்கள் தொகையான 47.39 இலட்சத்தில் 39.57 இலட்சம் மக்கள் கிராமங்களில் தான் உள்ளார்கள். அவர்களில் தற்போது 1,57,177 பேர் இந்த பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்கள். இவற்றில் 37,987 பெண் உறுப்பினர்களும், 46,948 ஆதிதிராவிடர்களும் மற்றும் 419 ஆதிதிராவிடப் பழங்குடியினரும் ஆவார்கள். கால்நடைச் செல்வங்களில் முக்கியமான ஆவினங்களின் எண்ணிக்கை இம்மாவட்டத்தில் 4.91 இலட்சங்களாகும். அவற்றில் 82 விழுக்காடு 3.94 இலட்சம் பசுவினங்கள், மிகுதி எருமையினங்கள். 94,432 ஆ இனங்கள் 55,000, பசுவினம் மற்றும் 40,000 எருமையினங்கள் தற்போது கூட்டுறவு அமைப்பில் உள்ளன.

> **“10,895 கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள 2,149 கிராமங்களில், தற்போது 530-க்கும் மேற்பட்ட கிராமங்களில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. தற்போதைய சராசரி பால் உற்பத்தி 90,000 லிட்டருக்கு மேல். அதிலும் கடந்த 16.6.90-இல், ஒரு இலட்சம் லிட்டருக்கு மேல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.”**

1983-இல் பதிவு செய்யப்பட்ட இந்த மாவட்டப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், உறுப்பினர்களிடமிருந்து பாலை மட்டும் பெற்று, அதற்கான தொகையை வாராவாரம் வழங்குவதோடல்லாமல், பால் உற்பத்திக்குத் தேவையான, கால்நடைச் சிகிச்சைப் பணிக்கென விழுப்புரம், திண்டிவனம், செஞ்சி, சேத்தியாதோப்பு, சின்னசேலம் பகுதிகளில் சிறப்பு நடமாடும் கால்நடை மருந்தகங்களையும் இயக்கி வருகிறது.

செயற்கை முறை இனவிருத்திப் பணிக்கென 214 சங்கங்களில் உறைவிந்துத் திட்டம் நல்ல முறையில் செயல்படுத்தப்படுகிறது. ஆண்டொன்றிற்கு 75,000 செயற்கை முறைக் கருவூட்டல் செய்யப்பட்டு, நல்ல கலப்பினக் க்ன்றுகளைப் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

உற்பத்தியாகும் பாலைப் பதப்படுத்துவதற்கு 3 குளிரூட்டும் நிலையங்கள் விழுப்புரம், சேத்தியாதோப்பு, சின்னசேலம் பகுதியில் இயங்கி வருகின்றன. விழுப்புரம் பகுதியில் உள்ள 260 சங்கங்கள் மூலமாகத் தற்போது நாளொன்றுக்கு 50,000 லிட்டர் பால், 13 பால் வழித்தடங்கள் மூலம் பெறப்பட்டுப்பதப்படுத்தப்படுகிறது. கடலூர், விழுப்புரம், திண்டிவனம் நகர நுகர்வோர்களின் தேவை போக, மிகுதிப் பால் சென்னைக்கு அனுப்பப்படுகிறது.

சின்னசேலம் பகுதியில் உள்ள 83 சங்கங்கள் 20,000 லிட்டர் பாலை 6 பால்வழித் தடங்கள் மூலம் பெறுகின்றனசேத்தியாதோப்புப் பகுதி தன்னகத்தே உள்ள 147 சங்கங்களிலிருந்து 22,000 லிட்டர் பாலை, 7 பால்வழித் தடங்கள் மூலம் பெற்று, நெய்வேலி, சிதம்பரம், விருத்தாசலம் நகர நுகர்வோர்கள் தேவையைப் பூர்த்தி செய்கிறது.

உற்பத்தியாளர்களின் கால்நடைகளுக்கு இணையத்தால் உற்பத்தி செய்யப்படும் 'ஆவின்' கால்நடைத் தீவனம் லாப நோக்கின்றி விநியோகம் செய்யப்படுகிறது. பசும்புல் வளர்ப்புத் திட்டங்கள் மூலமாக உற்பத்தியாளர்கள் பசும்புல் வளர்க்க மானியங்கள் அளிக்கப்படுகின்றன. கால்நடைகளில் காணப்படும் தொத்து நோயான வாய்கோமாரி மற்றும் கால்கோமாரி ஆகியவற்றைத் தடுக்கத் தடுப்பூசிப் பணி செய்யப்படுகிறது. சிறப்புக் கலப்பினக் கிடாரிக் கன்று வளர்ப்புத் திட்டத்தின் கீழ் இது வரை, 8,000-க்கு மேற்பட்ட கலப்பினக் கிடாரிகள் நல்ல முறையில் வளர்க்கப்பட்டு பால்தரும் பசுக்களாக வளர்ந்துள்ளன.

உறுப்பினர்களின் வசதிக்காகவும், சங்கச் செயலாளர்களுக்குப் பயிற்சியளிக்கவும் இந்த ஒன்றியம், ஒரு பயிற்சிப் பள்ளியை நடத்தி வருகிறது. இந்தப் பள்ளியில் செயற்கை முறை இனவிருத்திப் பணிப்பயிற்சி, கால்நடை மருத்துவ முதலுதவிப் பயிற்சி, சங்க நடைமுறைகள் மற்றும் அவற்றின் கணக்குகளைப் பராமரிக்கப்பயிற்சி மற்றும் கன்று வளர்ப்போருக்குச் சிறப்புப் பயிற்சி ஆண்டு முழுமைக்கும் அளிக்கப்படுகின்றன.

### ஒன்றியத்தின் எதிர்காலத் திட்டங்கள்

தீவிர பால் பெருக்குத் திட்டம் 3-இன் கீழ், இம்மாவட்டத்தில் ரூ.353 இலட்சம் முதலீட்டில் பெருமளவில் பால் கொள்முதல் செய்யவும், அதன் மூலம் நிறைய கிராமப்புற உற்பத்தியாளர், இந்தப் பால் பண்ணைத் திட்டத்தின் மூலம் நிரந்தர வருமானம் பெறவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. வரும் ஐந்தாண்டுகளில் 1989-90 ஆண்டு முதல் 1993-94 ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்படும் திட்டங்கள் வருமாறு:

* 630 சங்கங்களைத் தோற்றுவித்து 851 கிராமங்களில் பால் உற்பத்தியைப் பெருக்குதல்.

* 2,22,220 உறுப்பினர்களை இந்தக் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வருதல்.

* சராசரி பால் உற்பத்தியை 1.24 இலட்சம் லிட்டர் அளவுக்கு உயர்த்துதல்.

உள்ளூர் நகர விற்பனைக்கென நாளொன்றுக்கு 50,000 லிட்டர் பால் ஒதுக்கப்படும்.

* விழுப்புரத்தில் ரூ. 353.00 இலட்சங்கள் மதிப்பீட்டில் 1 இலட்சம் லிட்டர் பால் பதனிடும் தொழிற்சாலை நிறுவுதல்.

* திண்டிவனம் செஞ்சிப் பகுதியில் ரூ.|68.00 இலட்சங்கள் மதிப்பீட்டில் 30,000 லிட்டர் பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தல்.

* 7 நடமாடும் கால்நடை மருந்தகங்களையும், 7 அவசரக்காலச் சிதிச்சை வசதியையும் தோற்றுவித்தல்-(மதிப்பீடு ரூ7 9 இலட்சங்கள்).

* 350 சங்கங்களில் செயற்கை முறை இனவிருத்திப் பணிக்கென ரூ| 8.00 இலட்சங்கள் முதலீட்டில் உறைவிந்துத் திட்டத்தைச் செயல்படுத்துதல்.

* விரிவாக்கப் பணிக்கெனவும், பயிற்சி நிலையச் செலவுக்காகவும் ரூ 8.81 இலட்சங்கள் செலவிடப்படுதல்.

விவசாயத் தொழிலையே முதன்மையாக நம்பியுள்ள இம்மாவட்டக் கிராமப்புற மக்களுக்கு, இந்தப் பால் பண்ணைத் தொழில் மேற்சொன்ன பால் பெருக்கத் திட்டங்களால் நிச்சயம் நல்ல நிரந்தர வருமானத்தைக் கொடுத்து கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் என்பதில் சிறிதும் ஐயமில்லை!



## கைத்திறமைக்கு - ஒரு கண்காட்சி

**வி**ளக்குகள் இல்லாத வீடும் இல்லை, கோயிலும் இல்லை. மங்களகரமான நாட்களில் விளக்குகளுக்குப் பெரும் பங்குண்டு. தீபாவளி, கார்த்திகைப் பண்டிகைகளின்போது தீபத்துக்கு முக்கியத்துவம் தருகிறோம்.

விளக்குகளில்தான் எத்தனை வகை! குத்துவிளக்கு, காமாட்சியம்மன் விளக்கு, மகர விளக்கு, தோரண விளக்கு, தூங்கா மணி விளக்கு - இப்படி எத்தனையோ விதமான விளக்குகளைச் சிறிய, பெரிய அளவிலே பார்க்கின்ற வாய்ப்பு அண்மையில் கிட்டியது.

36-வது அகில இந்தியக் கைத்திறன் வாரவிழாவை ஒட்டி, 8.12.90 அன்று சென்னை மெமோரியல் மண்டபத்தில் கண்காட்சி ஒன்று நடந்தது. தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் கிளை நிறுவனமான 'பூம்புகார்' விற்பனை நிலையத்தின் சார்பில் நடைபெற்ற இக்காட்சியில், 25 காட்சி அரங்குகள் இடம் பெற்றிருந்தன. புதுடெல்லி, உத்திரப்பிரதேசம், மேற்கு வங்காளம், ராஜஸ்தான், ஆந்திரம் ஆகிய மாநிலங்கள் காட்சியில் பங்கேற்றன.

பூம்புகார் விற்பனை நிலைய மேலாளர் திரு. பி.ஏ.சண்முக சுந்தரம் அவர்கள், விளக்குகளைப் பற்றிக் கூறுகையில்,

“விளக்குகள் நாச்சியார்கோவில், வாகைக்குளம், மதுரை ஆகிய இடங்களில் உருவாக்கப்படுகின்றன. சுமார் 8 அடி வரை விளக்குகள் தயாரிக்கலாம். பொதுவாக, 4½ அடி உயரமுள்ள விளக்குகள் விற்பனைக்குக் கிடைக்கும். இதன் விலை ரூ.4,350.”

“சித்திர வேலைப்பாடுகள் உள்ள விளக்குகளும் உண்டு. பொதுவாக விளக்குகளுக்கு நல்ல வரவேற்பு உள்ளது. நம் நாட்டில் மட்டுமின்றி, அமெரிக்கா, ஆஸ்திரேலியா முதலான நாடுகளுக்கும் விளக்குகளை ஏற்றுமதி செய்கிறோம்” என்றார்.

மரப்பேழையில் வைக்கப்பட்டுள்ள வெள்ளியிலான வள்ளுவர் கோட்டம், மற்றும் வள்ளுவர் கோட்டம் பொறிக்கப்பட்ட தஞ்சாவூர்த் தட்டு அனைவரையும் கவர்ந்தன.

### வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில்

# மானாவாரிச் சாகுபடியில் ஒரு மறுமலர்ச்சித் திட்டம்!

வடஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டத்தின், நிகரச் சாகுபடிப் பரப்பளவான 2.1 இலட்சம் எக்டரில் மானாவாரிச் சாகுபடி 1,267 இலட்சம் எக்டர் ஆகும். இது நிகரச் சாகுபடிப் பரப்பளவில் 60 சதவிகிதம் ஆகும்.

மானாவாரியில் பருவ மழையை நம்பியே சாகுபடி செய்யப்பட்டு வருவதால், நிச்சயமற்ற மகசூலும், குறைந்த வருமானமும் கிடைத்து வருகின்றன. இதற்கு முக்கிய காரணம், நிலத்தில் போதுமான ஈரமின்மையும், தேவையான அளவு மழையின்மையும் ஆகும்.

மானாவாரி நிலங்களில் மழை பெய்தாலும் ஈரம் காக்கப்படுவதில்லை; பயிர் வளர்ச்சிக் காலங்களிலும் மழை பெய்வதில்லை. மேலும், நிச்சயமற்ற வருமானம் இருப்பதால் சிபாரிசு செய்யப்படும் நல்ல தொழில் நுட்பங்கள் முழுமையாகக் கடைப்பிடிக்கப்படுவதில்லை. இவற்றைக் கருத்தில் கொண்டுதான், ஒருங்கிணைந்த மனாவாரி வளர்ச்சித் திட்டம் (100 எக்டர் செயல் விளக்கத் தளைகள்) இம்மாவட்டத்தில் 11 இடங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கென அரசு ஒவ்வொரு செயல்விளக்கத் தளைக்கும் ரூ.50,000 வீதம், மொத்தம் ரூ.5.5 இலட்சம் மானியமாக ஒதுக்கீடு செய்துள்ளது. உற்பத்தியில் முக்கியப் பங்கு வகிக்கும் இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன.

**திட்ட நோக்கங்களாவன:**

1. நவீன தொழில் நுட்பங்களைக் கடைப்பிடித்து மானாவாரி உற்பத்தியை அதிகரித்து அதன் மூலம் நிகர வருவாயை அதிகரித்தல்
2. மானாவாரி நிலங்களில் ஒரு போகச் சாகுபடி செய்யும் வழக்கத்திலிருந்து, வடகிழக்குப் பருவ மழையைப் பயன்படுத்திக் கூடுதலாக இரண்டாம் போகம் சாகுபடிக்கு வகை செய்தல்.
3. பயிரிடப்படும் முக்கியப் பயிர் மற்றும் ஊடு பயிரில், தற்போது கிடைக்கும் உற்பத்தித் திறனை இரசாயன உரம் இட்டு அதிகமாக்குதல்.

**திட்டம் செயல்படுத்தப்படும் கிராமங்கள்:**

1. கணியம்பாடி 2. ஒக்கனாபுரம் 3. சேனூர் 4. பிரம்மபுரம் 5. கூட நகரம் 6. டி.டி.மோட்டூர் 7. அக்ரகாரம் 8. மேல்நேத்தம்பாக்கம் 9. காட்ரம்பாக்கம் 10. கோடம்பாக்கம் 11. ஆலப்பாக்கம்




**பங்கு கொள்ளும் விவசாயிகள் எண்ணிக்கை:**

சிறு விவசாயிகள்-586; குறு விவசாயிகள்-907; இதர விவசாயிகள்-168; ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்-221. ஆக மொத்தம் 1,882 நபர்கள் பங்கு கொண்டுள்ளனர்.

**ஒரு மறுமலர்ச்சித் திட்டம்**

பருவ மழைக்கு முன்பாகவே ஒவ்வொரு தளையிலும் 100 விவசாயிகள் வீதம் மொத்தம் 1,100 விவசாயிகளுக்கு மானாவாரித் தொழில் நுட்பங்கள் குறித்து பயிற்சியளிக்கப்பட்டது. 100 எக்டர் திட்டப் பகுதிகளில் முதல் போகத்தில் டிராக்டர் மூலம் கோடை உழவு, ஊட்டமேற்றிய தொழு உரம், ஆழச்சால் அகலப்பாத்தி, விதை நேர்த்தி, நுண்ணூட்டச்சத்து ஆகிய தொழில் நுட்பங்களைப் பரிந்துரை செய்து மணிலா விதைக்கப்பட்டது. ஊடு பயிராகப் பயறு வகைகளையும், வரப்பு ஓரங்களில் தீவனப் பயிர்களையும் பயிரிடப் பரிந்துரை செய்யப்பட்டு விதைப்பு மேற்கொள்ளப்பட்டது. பருவ மழையும் காலத்தே பெய்து இத்திட்டம் சிறப்பாகச் செயல்பட உதவி புரிந்தது. மேலும், ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு போன்ற நவீன தொழில் நுட்பங்கள் பரிந்துரைக்கப்பட்டதால், மானாவாரி மணிலா மகசூல் ஏக்கருக்கு 5 முதல் 7 மூட்டை அதிகரித்தது.

புன்செய் நிலங்களில் மரங்கள் நடுதலும் இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது. இது மட்டுமல்லாது, தீவனப்பயிர் மற்றும் ஊடு பயிர் சாகுபடி செய்ததால் கூடுதல் வருவாயும் கிடைத்துள்ளது. ஊட்ட மேற்றிய தொழு உரம் இடுவதால் செடியில் காய்ப்பிடிப்பு அதிகமாகி உள்ளது.

இறையங்காடு பகுதியில் ஊட்ட மேற்றிய தொழு உரம் இட்டதால், ஒரு செடியின் சராசரி காய் மகசூல் 20 காய்கள் இருந்ததாகவும், இடாத செடியில் சராசரியாக 14 காய்கள் இருந்தாக்வும் தெரிவிக்கப்பட்டது. காட்ராம்பாக்கம் பகுதியில் ஊட்ட மேற்றிய தொழு உரம் இட்ட ஒரு செடியில் சராசரி காய் மகசூல் 24-25 இருந்ததாகவும், இடாத செடியில் சராசரியாக 16-18 காய்கள் இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. தற்போது இரண்டாம் போக சாகுபடி பரிந்துரை செய்யப்பட்டு இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டமானது நடப்பு ஆண்டில் செயல்படுத்தப்படுவதோடு, மேலும் இரு ஆண்டுகளுக்கும் செயல்படுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் மானாவாரிச் சாகுபடியில் ஓர் மறுமலர்ச்சித் திட்டமாகும்.

**அ.தியாகராஜன்**
**வேளாண்மை இணை இயக்குநர்**
**வேலூர்**

---

### நீலகிரி மாவட்டத்தில்

## கூட்டுறவுச் சாதனைகள்

நீலகிரி மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி மூலம் 1.4.90 முதல் 31.10.90 வரை குறுகிய காலப் பயிர்க் கடனாக 2,827 விவசாயிகளுக்கு ரூ.104.71 இலட்சமும், மத்தியக் காலக் கடன்களாக 918 சிறு விவசாயிகளுக்கு ரூ.61.97 இலட்சமும் கடன் வழங்கப்பட்டுள்ளது.

நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் மற்றும் நீலகிரி காய்கறி உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் இரண்டும் சேர்ந்து ரூ.442.25 இலட்சம் மதிப்புள்ள விவசாய விளைபொருள் 1.4.90 முதல் 31.10.90 வரை விற்பனை செய்துள்ளன.

**உர விறபனை**

1.4.90 முதல் 31.10.90 வரை ரூ.189.86 இலட்சம் மதிப்பிற்கு நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம், இரசாயன உரம் விற்பனை செய்துள்ளது.

1990-91-ஆம் ஆண்டில் இம்மாவட்டத்தில், புதிதாக 250 ஏக்கரில் தேயிலைத் தோட்டம் அமைக்க ரூ.30 இலட்சம் கடன் வழங்க நீலகிரி மத்தியக் கூட்டுறவு வங்கி திட்டமிட்டுள்ளது.

**நகைக்கடன்**

நீலகிரி மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி தொடக்கக் கூட்டுறவு வங்கிகள், மத்திய வங்கிக் கிளைகள், நகர வங்கிகள் மற்றும் நிலவள வங்கிகள் மூலம் ரூ.979.99 இலட்சம் 1.4.90 முதல் 31.10.90 வரை நகைக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு விவசாயம் மற்றும் ஊரகக்கடன் நிவாரணத் திட்டத்தின்கீழ் இம்மாவட்டத்தில் சுமார் 32,000 விவசாயிகள் ரூ.11 கோடி வரை கடன் பெற உள்ளனர்.

இம்மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையின் கீழ், தற்போது 205 நியாய விலைக்கடைகள் சுமார் 1.27 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை விநியோகம் செய்கின்றன. கூட்டுறவு நியாய விலைக் கடைகள் மூலமாக 1.4.90 முதல் 31.10.90 முடிய கட்டுப்பாட்டுப் பொருட்கள் ரூ.663 இலட்சமும், கட்டுப்பாடற்ற பொருட்கள் ரூ.720 இலட்சமும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

**மூ.நா.கிருஷ்ணசாமி,**
**உதவிமக்கள் தொடர்பு அலுவலர்**
**நீலகிரி மாவட்டம்.**

திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டத்தில்:

# சிறுசேமிப்பில் சாதனை!

**❝ கடந்த 1989-90-ஆம் நிதியாண்டில், திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டத்தில் ரூ.15.01 கோடி மொத்தமாகவும், ரூ.7.61 கோடி நிகரமாகவும் வசூல் செய்யப்பட்டது. மாநில அளவில் சிறுசேமிப்பு வசூலில் அரசு நிர்ணயித்த குறியீட்டைத் தாண்டிச் சாதனை புரிந்துள்ளது. ❞**

திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டம், சிறுசேமிப்பில் சாதனை புரிந்ததற்காக தமிழக அரசு ரூ.60 இலட்சம் வழங்கியுள்ளது.

கடந்த 1989-90-ஆம் நிதியாண்டில் திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டத்தில் ரூ.15.01 கோடி மொத்தமாகவும் ரூ.7.61 கோடி நிகரமாகவும் வசூல் செய்யப்பட்டது. மாநில அளவில் சிறுசேமிப்பு வசூலில் அரசு நிர்ணயித்த குறியீட்டைத் தாண்டிச் சாதனை புரிந்ததற்கு, மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மாநாட்டில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் இம் மாவட்டத்திற்குக் கேடயமும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டன. நமது மாவட்டத்தில் உள்ள 41 மாவட்ட அலுவலர்கள் மூலம் சிறுசேமிப்பு வசூல் செய்யப்பட்டது.

இம்மாவட்டத்தில் 78 நிலை முகவர்கள் மூலம் ரூ.322 இலட்சமும் 172 மகளிர் முகவர்கள் மூலம் ரூ.41 இலட்சமும் வசூல் செய்யப்பட்டது.

256 நிறுவனங்கள் மூலம் சம்பளப் பட்டியல் திட்டம் செயல்படுத்தப்பட்டு ரூ.78 இலட்சம் வசூல் செய்யப்பட்டது.

அருள்மிகு பழனியாண்டவர் திருகோயிலுள்ள உபரி நிதியிலிருந்து ரூ.125 இலட்சம் சிறுசேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்யப்பட்டது. மாவட்டத்திலுள்ள அனைத்து நிறுவனங்களும் சிறுசேமிப்புத் திட்டத்தில் பங்கு கொண்டன.

திண்டுக்கல்லில் உள்ள எம்.எஸ்.பி. சோலைநாடார் நினைவு மேல் நிலைப்பள்ளி மாணவர்கள் அனைவரும் (2913 மாணவர்கள்) சஞ்சயிகா திட்டத்தில் சேர்ந்து 1989-90-ஆம் ஆண்டு ரூ.2.40 இலட்சம் சேமித்து, மாவட்டத்திலேயே முதல் இடத்தைப் பெறுகின்றனர். இதைப் பாராட்டி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சக்தி காந்த தாஸ் இ.ஆ.ப. அவர்கள் அப்பள்ளிக்குக்கேடயம், பாராட்டுப் பத்திரம், அரசு வழங்கிய ஊக்கத் தொகை ரூ.500 ஆகியவற்றை வழங்கினார்.

> ★ தேசமோ மக்களோ முன்னேற வேண்டுமானால் அறிவும் விஞ்ஞான தத்துவமும் ஒழுக்கமும் முன்னேற்ற மடைந்தாக வேண்டும்.
>
> —தந்தை பெரியார்

**மாணவர் சேமிப்பு வங்கி சஞ்சாயிகா திட்டம்**

மாணவர்களிடையே சேமிப்புப் பழக்கத்தைத் தூண்டுவதற்காக மாணவர் சேமிப்பு வங்கி சஞ்சாயிகா திட்டம் தேசிய சேமிப்பு நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இம்மாவட்டத்தில் 23.11.90 முடிய 123 பள்ளிகள் சஞ்சாயிகா திட்டத்தில் பங்கேற்றுள்ளன. 99,721 மாணவர்கள் இச்சேமிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 31.10.1990 முடிய சஞ்சாயிகா வங்கியின் மூலம் ரூ.9,63,297 அஞ்சலகச் சேமிப்பு வங்கிக் கணக்கிலும், காலவைப்புத் திட்டத்திலும் வசூல் செய்யப்பட்டுள்ளது.

திண்டுக்கல் தூய மரியன்னை பள்ளி, அண்ணாமலையார் மேல் நிலைப் பள்ளி, பட்டி வீரன்பட்டி என்.எஸ்.வி.வி. ஆண்கள் மற்றும் மகளிர் மேல்நிலைப் பள்ளி இத் திட்டத்தில் பங்கேற்று 75 சதவிகிதம் மாணவ, மாணவிகளைச் சேர்த்து ரூ.2,77,131 முதலீடு செய்துள்ளனர். எம்.எஸ்.பி. சோலைநாடார் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் அனைவரும் சஞ்சாயிகா திட்டத்தில் சேர்ந்துள்ளனர்.

சஞ்சாயிகா திட்டம் செயல் படுத்தப்படாத அனைத்துப் பள்ளிகளிலும், இவ்வாண்டில் திட்டம் துவக்கப்பட மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரியின் மூலம் முனைப்பு இயக்கம் மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது.

**—மு. அண்ணாமலை**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம்**






மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தந்தை பெரியார் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் உடன் உள்ளனர் (24.12.90).

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், முன்னாள் முதல் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவிடத்தில் மலர்வளை வைத்து அஞ்சலி செலுத்தினார். மாண்புமிகு அமைச்சர் பெ மக்களும் உடன் உள்ளனர் (24.12.90).



# உலகத் திரைப்பட விழா!

**மாண்புமிகு பிரதமர் திரு. சந்திரசேகர் அவர்கள்**

**தமிழ்த் திரைப்பட வரலாற்று மலரை வெளியிடுகிறார்.**

ஜனவரித் திங்கள் 10-ஆம் நாள், உலகத் திரைப்பட விழா சென்னையில் துவங்கவிருக்கிறது. மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. சந்திரசேகர் அவர்கள், தமிழ்த் திரைப்பட வரலாற்று மலரை வெளியிடுகிறார். இந்தத் தமிழ்த் திரைப்பட வரலாற்று மலரைத் தயாரிக்கும் குழுவிற்குத் திரு. ஏ.வி.எம். சரவணன் தலைவராக இருப்பார். பல நாடுகளைச் சேர்ந்த உலகப் புகழ்பெற்ற இயக்குநர்களும், நடிக-நடிகையரும், கலையுலகப் பிரமுகர்களும் இந்த விழாவில் கலந்து கொள்ளவிருக்கிறார்கள்.

மிகச் சிறந்த பல மொழிப் படங்களும் இவ்விழாவின்போது திரையிடப்படும்.

'இவ்விழாவின் போது, தமிழ்த் திரைப்பட வரலாற்று மலரை வெளியிட வருகை தரவேண்டும்' என்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் விடுத்த அழைப்பை, மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. சந்திரசேகர் அவர்கள் ஏற்றுக் கொண்டார்.

இந்த விழா ஏற்பாடுகள் குறித்து ஆலோசிப்பதற்காக உலகத் திரைப்பட விழா அமைப்புக்குழுவின் இரண்டாவது கூட்டம் 17.12.90 அன்று சென்னையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாண்புமிகு மத்திய உள்துறை இணை அமைச்சர் திரு. சுபோத்காந்த் சகாய் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்

22-வது உலகத் திரைப்பட விழாவின் தலைமை விருந்தினராக, மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் இருந்து பெருமைப்படுத்த வேண்டுமென அக்கூட்டத்தில் மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்கள் வேண்டுகோள் விடுத்தார். இதனை, மாண்புமிகு கலைஞர் அவர்கள் ஏற்றுக் கொண்டார்.

'தமிழ்த் திரையுலகிற்குக் கலைஞர் அவர்கள் ஆற்றியுள்ள இணையற்ற சேவையைக் கருதியும், திரையுலகிற்குப் பெருந்தொண்டாற்றியவர்களின் வரிசையில் புகழ்பெற்ற வசன கர்த்தாவாக அவர் திகழுவதாலும் - கலைஞர் அவர்களைத் தலைமை விருந்தினராக இருக்கும்படி கேட்டுக் கொள்ளுவது என்று இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது' என்று மத்திய செய்தி ஒலிபரப்புத் துறையின் இணைச் செயலாளர் திரு. இலட்சுமி நாராயணன் அவர்கள் செய்தியாளர்களிடையே பேசுகையில் தெரிவித்தார்.

**மாண்புமிகு முதல்வர் கலைஞர் சிறப்பு விருந்தினர்**

1986-இல், ஐதராபாத்தில் நடைபெற்ற உலகத் திரைப்பட விழாவில் பிரபல இந்தி நடிகர் ராஜ்கபூரும் - 1988-இல் திருவனந்தபுரத்தில் நடைபெற்ற உலகத் திரைப்பட விழாவில் பிரபல இயக்குநர் திரு. மிருணாள் சென்னும் - 1990-இல், கல்கத்தாவில் நடைபெற்ற உலகத் திரைப்பட விழாவில் பிரபல இயக்குநர் திரு. சத்யஜித்ரேயும் தலைமை விருந்தினராகச் சிறப்பிக்கப்பட்டார்கள்; அந்த வகையிலேயே, 1991-ஆம் ஆண்டின் துவக்கத்தில், சென்னையில் நடைபெறும் உலகத் திரைப்பட விழாவில் மாண்புமிகு கலைஞர் அவர்கள் தலைமை விருந்தினராகச் சிறப்பிக்கப்படவிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

17.12.90 அன்று, தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற இந்த 22-வது உலகத் திரைப்பட விழா அமைப்புக் குழுவின் இரண்டாவது கூட்டத்தில், மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்களும் கலந்து கொண்டார்.

மேலும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டோர் விவரம் வருமாறு:

திரு. எம்.எம். இராஜேந்திரன், இ.ஆ.ப., அரசு தலைமைச் செயலர், திரு. சுரேஷ் மாத்தூர், மத்திய செய்தி ஒலிபரப்புத் துறைச் செயலர், திருமதி ஜெயந்தி, இ.ஆ.ப., செயலர், செய்தி மற்றும் சுற்றுலாத் துறை, திரு. க. முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை. திருமதி தீபக் சந்து, இயக்குநர், திரைப்படங்கள்-ஆகியோரும், திரு. டி. ராமானுஜம், திரு. அப்பச்சன், திரு. ஜி. வெங்கடேசன், திரு. ஏ.வி.எம். சரவணன், திரு. கே. பாலசந்தர், திரு. கோவைச் செழியன், திரு. கமல்ஹாசன், திரு. சாவி விஸ்வநாதன், திரு. வலம்புரி சோமநாதன், திரு. பாலு மகேந்திரா, திரு. தியாகராஜன் (ஆர்ட் டைரக்டர்), திரு. ஏ. கோதண்டராம ரெட்டி, திருமதி பி. பானுமதி, திரு. ஏ.எஸ். பிரகாசம், திரு. பி. துரை, தலைவர், காவல் துறை, திரு. கே.கே. ராஜசேகரன் நாயர், சென்னை மாநகரக் காவல் துறை ஆணையர் ஆகியவர்களும் மற்றும் பல உயர் அலுவலர்களும் கலந்து கொண்டார்கள்.













# உலகச் சுற்றுலா ஆண்டு-1991

உலகச் சுற்றுலா ஆண்டாக 1991-ஆம் ஆண்டு கொண்டாடப்பட விருக்கிறது. விசிட் இந்தியா 91 என்ற பெயரில, சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் அந்த ஆண்டைக் கொண்டாடச் சுற்றுலாத் துறை திட்டமிட்டு உள்ளது.

இதற்காகத் தமிழக அரசின் சுற்றுலாத்துறை, சிறப்பான பல ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. இதையொட்டி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு.கே.பி.கந்தசாமி அவர்கள் தொழில் அதிபர்கள், வர்த்தகச் சுற்றுலா ஏஜென்சிப் பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் ஆகியோருடன் 20-12-90 அன்று தலைமைச் செயலகத்தில் ஆலோசனை நடத்தினார்.

சுற்றுலா வாரியத் தலைவர் திரு. வி. ரெங்கசாமி, இ.கா.ப. செய்தி-சுற்றுலாத்துறைச் செயலாளர் திருமதி ஜெயந்தி, இ.ஆ.ப., சுற்றுலாத்துறை இயக்குநர் திருமதி. சிவகாமி, இ.ஆ.ப., நிர்வாக இயக்குநர் திரு. செல்வம், இ.ஆ.ப., சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. சூசன் மாத்யூ, இ.ஆ.ப., பொதுத்துறைச் செயலாளர் திரு. நரேஷ் குப்தா இ.ஆ.ப., ஆகியோரும் அக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

செய்தி சுற்றுலாத்துறைச் செயலாளர் திருமதி. ஜெயந்தி இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றுப் பேசிய போது, 'விசிட் இந்தியா' திட்டம் குறித்து விளக்கினார். அவர் பேசுகையில், ''ரூ.700 கோடி செலவில் 65 சுற்றுலாத் திட்டங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன. சுற்றுலா காம்ப்ளக்ஸ், யாத்திரா நிவாஸ் போன்றவை இவற்றில் அடங்கும். தமிழ்நாட்டில் இந்த வசதிகள் ''விசிட் இந்தியா'' ஆண்டில் 2,400 ஆக இருக்கும். மேலும் மத்திய அரசு அனுமதித்து உள்ள 4 சுற்றுலா மாளிகைகளில் வசதிகள் அதிகரிக்கப்பட்டு உள்ளன'' என்றார்.

பொங்கல் விழா:-

1991-ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் சுற்றுலாப் பயணிகளைப் பெரிதும் கவரும் விழாக்களில் பொங்கல் விழாவும், சித்திரைத் திரு விழாவும் குறிப்பிடத்தக்கவை. மதுரை அருகே அலங்காநல்லூரில் நடக்கும் ஜல்லிக்கட்டு, மகாபலிபுரத்தில் நடக்கும் கட்டுமரம், படகுப் போட்டி ஆகியவை சிறப்பு வாய்ந்தவையாக இருக்கும். மதுரையில் சித்திரைத் திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்படும்.

பிப்ரவரி மாதம் 9-ஆம் தேதி முதல் 19-ஆம் தேதி வரை மாமல்லபுரத்தில் நடன விழாவும், மற்றும் அதையொட்டி நடக்கும் உணவு விழா, கைவினைப் பொருட்கள் விழாக்களும் கவர்ச்சிகரமாக நடைபெறும்.

திருச்சி மலைக்கோட்டையில் ஏறகெனவே மின்விளக்கு அலங்காரம் செய்யப்பட்டுள்ளது. அதுபோன்று, கன்னியாகுமரியில் விவேகானந்தர் பாறையும் ஒளிவிளக்குகளால் எழிலுற அலங்கரிக்கப்படும்.

கன்னியாகுமரியில் 'பழைய தாமிரபரணிப் படகு' மாற்றப்பட்டு



புதிய பட..தப் போக்குவரத்து விடப்படும்.

### வண்ண விளக்கு அலங்காரம்

சென்னையில் கீழ்க்கண்ட கட்டடங்களில் வண்ண விளக்கு அலங்காரம் செய்ய, அக்கூட்டத்தில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் ஒப்புதல் தெரிவித்தனர். அவை வருமாறு:-

1. புனித ஜார்ஜ் கோட்டை 2. போர் நினைவுச் சின்னம் 3. வள்ளுவர் கோட்டம் 4. சென்னைப் பல்கலைக்கழக வளாகம் 5. புனித தாமஸ் கதீட்ரல் பசிலிகா 6. தென்னக ரெயில்வே வளாகம் 7. மியூசியம் - ஆர்ட் காலரி 8. போக்குவரத்துக் குடைகள் 9. உயர் நீதி மன்றம் 10. ரிப்பன் கட்டடம் 11. லைட் ஹவுஸ் 12. ஐஸ் ஹவுஸ் 13. மாநிலக் கல்லூரி 14. தேர்வு மண்டபம் 15. ஐ.ஜி. ஆபிஸ் 16. புனித ஆன்ட்ரூஸ் சர்ச் 17. எழும்பூர் ரெயில்வே வளாகம் 18. சென்ட்ரல் ரெயில்வே வளாகம் 19. முக்கியக் கோவில் கோபுரங்கள் 20. நினைவுச் சின்னங்கள் 21. அண்ணா சாலையில் உள்ள முக்கிய கட்டடங்கள்.

அண்ணாசாலையில் உள்ள பூம்புகார் கட்டடத்தில் விளக்கு அலங்காரம் செய்ய அந்த நிர்வாகம் சம்மதித்து உள்ளது.

சாந்தோம் சர்ச் மற்றும் விக்டரி ஹவுஸ் கட்டடங்களை ஒளிவிளக்குகளால் அலங்கரிக்க வி.ஜி.பி குரூப் தலைவர் வி.ஜி. சந்தோசம் சம்மதித்துள்ளார்.

அண்ணாசாலையில் உள்ள 'ஹிக்கின் பாதம்ஸ்' மற்றும் தங்கள் நிறுவனக் கட்டடங்களில் விளக்கு அலங்காரம் செய்ய அமல்கமேஷன் குரூப் நிறுவனம் சம்மதித்திருக்கிறது.

டிசம்பர் 31-ஆம் தேதி ஜனவரி முதல் தேதி ஆகிய நாட்களிலும் மற்றும் உலகப் பட விழாவைத் தொடர்ந்து ஜனவரி 10-ஆம் தேதி முதல் 20-ஆம் தேதி வரையும் விளக்கு அலங்காரம் செய்ய முடிவு செய்யப்பட்டது.

இவை தவிர சாலை வசதி, போக்குவரத்து வசதி மற்றும் சுற்றுலாத்துறையில் வர்த்தக நிறுவனங்களை ஈடுபடுத்தி ஹாங்காங் நாட்டைப் போலச் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்வது, பொங்கலுக்குச் சிறப்பு ரெயில் விடுவது போன்றவை குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

பூங்கா அமைத்தல், சாலைகளைத் தூய்மைப்படுத்துதல், டாக்சி சர்வீசை அபிவிருத்தி செய்தல் போன்றவை குறித்தும் ஆலோசிக்கப் பட்டது.

'விசிட் இந்தியா 1991' சுற்றுலா ஆண்டை வெற்றிகரமாக்கிடவும், சென்னை நகரை அழகுபடுத்தவும் எல்லா நிறுவனங்களும் ஒத்துழைப்பு தர மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. கே.பி. கந்தசாமி அவர்கள் கேட்டுக் கொண்டார்.

## நூல் நயம்

### மருத்துவக் கல்வி உலகில் தமிழர்கள்

ஆசிரியர்: பேராசிரியர் டாக்டர் ஜே.ஜி.கண்ணப்பன்

கிடைக்குமிடம்:

செண்பகம் இல்லம்,
டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை,
சென்னை-600 004.

விலை:ரூ.100 பக்கம்:135

''தமிழர்கள் பல சிறப்பான படைப்புகளைச் சாதித்துள்ளார்கள். எனினும், அவர்களுடைய படைப்புகள் வரலாற்று வாயிலாகக் காப்பாற்றப்படவில்லை. ஆங்காங்கே கிடைக்கும்-கிடைக்கின்ற பொருள்களிலிருந்து தொன்மையினை உணர்கின்றோம். ஆகையினால், வரலாறு அழியா வண்ணம் சிறப்பாக எதிர்காலத்திலும் வரலாறு நிலைத்து நிற்பதற்கு நூல்கள் தேவைப்படுகின்றன'' என்று கூறும் இந்நூலாசிரியர், அதை நிறைவேற்றுகிற வகையிலே இந்நூலைப் படைத்துள்ளார்.

தமிழ் பிறந்த காலத்திலேயே மருத்துவம் பற்றித் தமிழ் இலக்கியங்களில் கண்ட கருத்துக்களை நூலின் தொடக்கத்திலே விளக்கிக் கூறுகிறார் ஆசிரியர்.

கடந்த ஒரு நூற்றாண்டின் புதிய மருத்துவப் பணியில் தொண்டாற்றிய ஏழு மருத்துவ அறிஞர் பெருமக்களின் வாழ்க்கை வரலாறுகள் நூலில் இடம் பெற்றுள்ளன.

டாக்டர் எம். ஆர். குருசாமி முதலியார், டாக்டர் எம்.ரங்காச்சாரி, டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார், டாக்டர் டி.வி. சிவானந்தம், டாக்டர் கே.எஸ். சஞ்சீவி, டாக்டர் இரத்தின வேலு சுப்பிரமணியம், டாக்டர் லலிதா காமேஸ்வரன் ஆகியோரின் அரிய மருத்துவத் தொண்டுகள், சிறப்பியல்புகள் எல்லாம் நூலில் மிகத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. எளிய இனிய நடை நூலுக்கு அணி சேர்க்கிறது.

எல்லாத் திறத்தாரும் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய பயனுள்ள நூல்.

—பி.வி.கிரி

### என் பக்கம்

ஆசிரியர்: ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன்,

வெளியிட்டோர்:

சுதா பதிப்பகம்,
4, முத்து முதலித் தெரு,
சென்னை-600 007.

விலை:ரூ.10 பக்கம்:104

'கவிதை உறவு' என்னும் திங்களிதழில் தொடர்ந்து எழுதி வந்த கடைசிப் பக்கக் கட்டுரைகளே இத்தொகுப்பு.

இன்றைய சமுதாயப் பிரச்சினைகளைப் பல கட்டுரைகளிலே அலசுகிறார். மனித வாழ்க்கையில் பின்னிப் பிணைந்துள்ள ஏற்றத் தாழ்வுகளைச் சாடி, அவற்றைப் போக்க வழி வகையும் கூறுகிறார். சமுதாய வீதியில் நாம் சந்திக்கும் பல மனிதர்களைப் படம் பிடித்துக் காட்டியிருப்பது, நூலாசிரியரின் எழுத்தாற்றலுக்குச் சான்றாகும். என்றோ, எப்போதோ எழுதிய கட்டுரைகள் என்றாலும், என்றைக்கும் பொருந்தும்படியான கருத்துக்கள் பொதிந்துள்ள கட்டுரைகளாக அவை விளங்குகின்றன. பலரும் படித்துப் பயன் பெறத்தக்க சொல் மாலைகள்.

— பி.வி.ஜி.

### புதிய உதயம்

ஆசிரியர்:பேராசிரியர் பழநி.

வெளியிட்டோர்:

புதுமை இல்லம்,
2/90 N3,
பாரதிதாசன் வீதி, பாகாயம்,
வேலூர்-632 002.

பக்கம்:80 விலை:ரூ.12

சின்னச் சின்னப் புதுக் கவிதைகள் பல, சிங்காரமாகக் கோக்கப்பட்டுள்ள கதம்பமே இந்தப் புதிய உதயம்.

சில அருமையான செய்திகள் இந்நூலில் மிக அழகாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. மாம்பழத்தைச் சுவைக்கிறபோது அதனுள்ளே பூச்சி இருப்பது தெரிந்தால் எப்படியிருக்கும்? அப்படிப்பட்ட உணர்வை நமக்கு உண்டாக்கி விடுகின்றன சில கவிதைகள். உதாரணம்: 'தெரிவது ஒன்று புரிவது ஒன்று'; 'எனது மத்தியப் பிரதேசம்';

'இந்திரன்'

# தமிழ்நாடு மின்சார வாரியம்

## மேட்டூர் அனல் மின் திட்டம்/ மேட்டூர் அணை

1-0) கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

| வரிசை எண். 1. | வேலையின் பெயர் 2. | ஒபபந்த எண். 3. | ஒப்பந்தப் பிரதியின் விலை 4. | வைப்புத்தொகை 5 | ஒப்பந்தப் புள்ளிகள் பெறுவதற்கு கடைசி தேதியும் நேரமும் 6. | ஒப்பந்தங்கள் திறக்கப்படும் தேதியும், நேரமும் 7. | ஒப்பந்தத்தின் உத்தேச மதிப்புத் தொகை 8. | குறிப்பு 9. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | மேட்டூர் தொட்டில்பட்டி அனல் மின் நிலைய குடியிருப்பு வளாகத்தில் 3 தொகுதிகள் 'Q' டைப் குடியிருப்புகள் (மின் இணைப்பு உட்பட கட்டுதல்) | SE/CII/MIPP/ 2274/90-91 | தமிழ்நாட்டிற்குள் ரூபாய் 300/-. தமிழ்நாட்டிற்கு வெளியே ரூபாய் 330/ | ரூபாய் 18,600/- | 11.1.91 (வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணி) | 11.1.91 (வெள்ளிக்கிழமை) மாலை 3.30 மணி அளவில்) | ரூ.18,54,400/- | ஒரு பகுதி ஒப்பந்தப் புள்ளி |
| 2. | மேட்டூர், தொட்டில்பட்டி அனல்மின் நிலைய குடியிருப்பு வளாகத்தில் 6 தொகுதிகள் 'R' டைப் குடியிருப்புகள் (மின் இணைப்பு உட்பட) கட்டுதல் | SE/CII/MIPP/ 2275/90-91 | தமிழ்நாட்டிற்குள் ரூ.300/- தமிழ்நாட்டிற்கு வெளியே ரூ.330/- | ரூ.39,000/- | 23.1.91 நண்பகல் புதன்கிழமை 12.00 மணி | 23.1.91 புதன்கிழமை மாலை 3.30 மணி அளவில் | ரூ.38,88,210/- | இரண்டு பகுதிகளடங்கிய ஒப்பந்தப் புள்ளிமுறை |
| 3. | மேட்டூர், தொட்டில்பட்டி அனல்மின் நிலைய குடியிருப்பு வளாகத்தில் 7 பகுதிகள் 'R' டைப் குடியிருப்புகள் (மின் இணைப்பு உட்பட) கட்டுதல் | SE/CII/MIPP 2276/90-91 | தமிழ்நாட்டிற்குள் ரூ.300/- தமிழ்நாட்டிற்கு வெளியே ரூ.330/- | ரூ.45,400/- | 23.1.91 நண்பகல் புதன்கிழமை 12.00 மணி | 23.1.91 புதன்கிழமை மாலை 3.30 மணி அளவில் | ரூ.45,36,245/- | இரண்டு பகுதிகளடங்கிய ஒப்பந்தப் புள்ளிமுறை |
| 4. | மேட்டூர் அனல் மின்திட்ட வளாகத்தில் இரண்டு இயந்திரவியல் பராமரிப்பு அலுவலகங்கள் கட்டுதல் | SE/CII/MIPP 2277/90-91 | தமிழ்நாட்டிற்குள் ரூ.300/- தமிழ்நாட்டிற்கு வெளியே ரூ.330/- | ரூ15,500/- | 25.1.91 நண்பகல் வெள்ளிக்கிழமை 12.00 மணி | 25.1.91 வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணி அளவில் | ரூ.15,50,000 | ஒரு பகுதி ஒப்பந்தப் புள்ளி |
| 5. | மேட்டூர் நகரியத்தில் பிளாக் நெ.இல் 3 தொகுதிகள் 'எஸ்' டைப் குடியிருப்புகள், மேட்டூர் அனல்மின் திட்டத்திற்காகக்கட்டுதல் (மின் இணைப்பு வேலை உட்பட) | SE/CII/MIPP/ 2278/90-91 | தமிழ்நாட்டிற்குள் ரூ.300/- தமிழ்நாட்டிற்கு வெளியே ரூ.330/- | ரூ.27,000/- | 30.1.91 நண்பகல் புதன்கிழமை 12.00 மணி | 30.1.91 புதன்கிழமை மாலை 3.30 மணி அளவில் | ரூ.27,00,000/- | இரண்டு பகுதிகளடங்கிய ஒப்பந்தப் புள்ளிமுறை |
| 6. | மேட்டூர் நகரியத்தில் பிளாக் நெ.இல் 7 தொகுதிகள் 'Q' டைப் குடியிருப்புகள், மேட்டூர் அனல் மின் திட்டத்திற்காகக் கட்டுதல் (மின் இணைப்பு வேலை உட்பட) | SE/CII/MIPP/ 2279/90-91 | தமிழ்நாட்டிற்குள் ரூ.300/- தமிழ்நாட்டிற்கு வெளியே ரூ.330/- | ரூ.40,000/- | 1.2.91 வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணி | 1.2.91 வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணி அளவில் | ரூ.39,76,000/- | இரண்டு பகுதிகளடங்கிய ஒப்பந்தப் புள்ளிமுறை |

**(2.0) ஒப்பந்தப் பிரதிகள் வேண்டுவோர் மேலே குறிப்பிட்ட தொகையினை பதிவு அஞ்சல் மூலமாகவோ அல்லது பணமாகவோ ஒப்பந்த எண்ணைக்குறிப்பிட்டு கணக்கு அதிகாரி (Accounts Officer) மேட்டூர் அனல் மின் திட்டம், மேட்டூர் மின் அமைப்பு வளாகம், மேட்டூர் அணை-1 அவர்களுக்குச் செலுத்தி பெறப்பட்ட வாரிய இரசீதை இணைத்து கீழே குறிப்பிட்டுள்ளவர்களின் அலுவலகத்திற்கு விண்ணப்பித்துக்கொள்வதன்மூலம் பெற்றுக் கொள்ளலாம். தாமதமாகப்பெறப்படும் ஒப்பந்தங்களும், வைப்புத்தொகை இன்றிப்பெறப்படும் ஒப்பந்தங்களும் நிராகரிக்கப்படும். ஒப்பந்தங்கள் நுண்கலை உதவியாளர் (Exe.Assistant to SE/Civil II/MIPP) அவர்களால் பெறப் படும். ஒப்பந்தங்கள் Russian Erectors Quarters-ல் திறக்கப்படும்.**

**(3.0) மேலே குறிப்பிட்ட ஒப்பந்தப்புள்ளி வரிசை எண் 2,3,5 மற்றும் 6 ஆகியவை இரண்டு பகுதிகளடங்கிய ஒப்பந்த முறையில் சமர்ப்பிக்க வேண்டும். இதைப்பற்றியமேலும் விபரங்கள்ஒப்பந்தப்படிவத்தில் கொடுக்கப்பட்டு உள்ளது.**

**(4.0) அஞ்சல் மூலம் அனுப்பும் ஒப்பந்தப்பிரதிகள் காணாமல் போனாலோ அல்லது காலதாமதமானாலோ அதற்கு மின்சார வாரியம் பொறுப்பேற்காது.**

**(5.0) ஒப்பந்தப் பிரதிகள் மாற்றத்தக்கதல்ல.**

(6.0) ஒப்பந்தப் பிரதிகளை அஞ்சல் மூலம் பெற விரும்புவோர் ஒவ்வோர் பிரதிக்கும் ரூபாய் ஐம்பது சேர்த்து அனுப்ப வேண்டும்.

(7.0) குறைந்த மதிப்பீடு கொண்ட அல்லது மற்ற எந்த ஒரு ஒப்பந்தத்தையோ ஏற்றுக் கொள்வதற்கு மின் வாரியம் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளாது. எக்காரணமும் தெரிவிக்காமல் எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது எந்த ஒரு ஒப்பந்தத்தையும் நிராகரிக்க இவ்வலுவலகத்திற்கு முழு உரிமை உண்டு. விற்பனைக்குள்ளாகும் ஒப்பந்த வரையறையில் கண்டுள்ள எந்த ஒரு நிபந்தனையும் தேவை என கருதுகின்றபோது தளர்த்தவும் கைவிடவும் உள்ள உரிமை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கே உரியது.

(8.0) ஒப்பந்தப் புள்ளிகள் விற்பனை, ஒப்பந்தம் பெற்றுக் கொள்ளப்படும் நாளின் முதல் நாள் மாலை 5.00 மணிக்கு நிறுத்தப்படும்.

முதன்மைப்பொறியாளர்
மேட்டூர் அனல் மின் திட்டம்/மேட்டூர் அணை

DIPR/354/SLM/90.



# வேடந்தாங்கல்

'பறவைகள் பலவிதம்... ஒவ்வொன்றும் ஒருவிதம்!' என்று சொல்லக் கேட்டிருக்கிறோம். எல்லாவற்றையும் பார்த்திருக்கிறோமா? அப்படிப் பார்க்க விரும்புகிறவர்கள்-வேடந்தாங்கலுக்கு வரலாம்!

சென்னை மாநகருக்குத் தெற்கே 85-வது கிலோ மீட்டர் தொலைவில்-செங்கை அண்ணா மாவட்டத்தில், இயற்கை கொலுவிருக்கும் ஏரிப் பகுதிக் கிராமம்தான் வேடந்தாங்கல்.

மீனும், இறாலும், நண்டும்,நத்தையும் மட்டுமல்ல; வேடந்தாங்கல் நீர்ப் பரப்பில் கடப்பை மரங்கள், கருவேல மரங்கள், ஓங்கி நிற்கும் மூங்கில் புதர், வேலிகாத்தான்-நாணலெல்லாம்கூட இஷ்டத்துக்கு அங்கிங்கெனாதபடி எங்கும் வளர்ந்துள்ளன. வேடந்தாங்கல் ஏரியின் பரப்பளவு-73.06 ஏக்கர் ஆகும். இவற்றால் மட்டும் வேடந்தாங்கலுக்குப் பெருமையா என்றால் அதுதான் இல்லை.

ஒவ்வோராண்டும் அக்டோபர் முதல் இங்கு ஒரு புதிய சீசன் தொடங்குகிறது எனலாம்; ஆம்; அப்போதுதான் ரஷ்யா, சைபீரியா போன்ற பல தொலைதூர நாடுகளிலிருந்தெல்லாம்கூட இங்கே பலவிதப் பறவைகள் பயணம் வருகின்றன. இங்கு வரும் பறவைகளில் பெரும்பாலானவை ஐரோப்பியக் கண்டத்தைச் சேர்ந்தவை என்கிறார்கள் பறவையியல் நிபுணர்கள்.

நத்தைக் கொத்தி, நீர்க்காகம், துடுப்பு நாரை, அரிவாள் மூக்கன், மூக்குளிப்பான், குள்ளத்தாரா, சிறு சிறகி, கூழைக்கடா, ஜம்புக்கோழி, உப்புக்குருவி, கானாங்கோழி, கொக்கு-வாத்து வகையறாக்கள் போன்ற நம் நாட்டுப் பறவைகளும்-அந்த அயல்நாட்டுப் பறவைகளோடுகூடி, எழுப்பும் மகிழ்ச்சி ஆரவாரம் கண்கொள்ளாக் காட்சியாகும்!

ஆண்டுதோறும் நடக்கும் இந்தப் பறவைகள் கண்காட்சியைக் காண, மக்கள் சாரிசாரியாக வந்து போய்க் கொண்டிருக்கிறார்கள்.

வருகிற மக்கள் ஏரிக்கரையிலேயே சுற்றிக் கொண்டிருந்துவிட முடியுமா? சிறிது நேரமாவது தங்கி இளைப்பாறிச் செல்லுவதற்காக வேடந்தாங்கலில் ஒரு ஓய்வில்லமும் வனத்துறை மூலம் அமைக்கப்பட்டுள்ளது. மிகக் குறைந்த வாடகைதான்!

ஏரிக்கரையோரத்தில், நெடுங்கோபுரம் ஒன்றும் நிமிர்ந்து நிற்கிறது. அங்கு வரும் பார்வையாளர்கள், அதன் மீதேறி 'பைனாகுலர்' மூலம் முழு ஏரிப் பரப்பையும், மாநாடுபோல் கூடும் பலவிதப் பறவைகளின் கூட்டத்தையும் கண்டுகளிக்க முடியும்.

இசை விழா நடக்கும் இந்நாளில்-அங்கே பல நாட்டுப் பறவையினங்களும் ஒன்றுகூடி நடத்தும் ஒருமைப்பாட்டு இசையரங்கம் காண்போர்தம் உள்ளம் கவர்வதாகும்!

**நான்காவது அட்டை: புகைப்படம் உதவி:**

**சுற்றுலாத்துறை**

யரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்ட
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

அதி நவீன பாலியெஸ்டர் வகைகள்



எங்கள் மனதைக் கவர்ந்தவை மலர்கள்.
அவைகளின் அற்புத வண்ண ஜாலங்களை
உங்களுக்கு கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது,
மிக நவீனமாக அழகு மிளிரும்
பாலியெஸ்டர் புடவை வகைகளில்!

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் —
உங்கள் இனிய நேரங்களில்!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி
இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங்
• பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.

DIPR/1766/MS88/HTA



# தமிழரசு

16-1-1991 ரூ.1



# Give your hair roots the same strength.



With Tampcol Herbal Hair Tonic your hair roots get a lot of additional energy.

Due to the special blend of pure Olive and Coconut Oils and the proven qualities of natural herbs. Like Henna, Hibiscus, Phylis, Aloe etc., Tampcol also stimulates hair growth and stops hair loss.

And your eyes get a cooling sensation you will appreciate.

Tampcol Herbal Hair Tonic. For that strength and vitality your hair needs.

**Tampcol**
HERBAL HAIR TONIC
(Government of Tamil Nadu Undertaking)

Has nature's gifts for great looking hair

Canco/945 DIPR




# பொங்கல் தரும் பூரிப்பு

## முதல்வர் கலைஞர்

வாழைமரம் கட்டி, வானுயர் கரும்பை நட்டு, இஞ்சியும் மஞ்சளும் மங்கல நாண் எனக் கொஞ்சிடும் புதுப்பானையின் கழுத்தில் குங்குமம் பூசி, எழிற் கோலங்கள் எங்கணுமிட்டு, மனை புதுக்கி, மாடு ஆடு போற்றி, மனித குலம் வாழ்விக்கும் மாணிக்க ஞாயிறை வாழ்த்திக் கொண்டாடப் போகிறோம் பொங்கல் விழா.

உழைப்பின் வெற்றி கண்டு உவகை கொள்ளும் விழா! விளைவின் செழிப்பு நோக்கி விழிகளில் ஒளி நிறையும் விழா! தத்தித் தவழும் மழலைச் செல்வம்-தங்கப் பதுமையென இல்லக் கிழத்தி - தாய் தந்தையர் - உடன் பிறப்பு - உற்றார் உறவினர் - வற்றாத அன்பு கொள் நண்பர் - இவருடன் குலவி மகிழ்ந்து குடும்பம் குடும்பமாகக் கொண்டாடும் இந்த விழாவில் குளிர் அருவி பாயும் நெஞ்சுடன் கூர்ந்து பார்க்கிறோம், விழாவுக்கெனத் தயாரித்த பானையில் வெண்சோறு பொங்கும் காட்சியினை! பச்சைக் குழந்தைகளின் கடை வாயில் ஒழுகும் பால்போல் அந்தப் பானையின் வாயில் பொங்கி வழியும் பால் கண்டு பூரிப்புக் கொள்கிறோம்!

## பொங்கல் வாழ்த்து

அன்பு நெஞ்சங்களே! ...

வணக்கம்.

பொங்கல் புதுநாளில் 'தமிழரசு'
வாசகர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும்,
விளம்பரதாரர்களுக்கும்,
தமிழ்ப் பெருமக்களுக்கும்
பொங்கல் வாழ்த்தினைத்
தெரிவித்துக் கொள்கிறோம்.

-ஆசிரியர்.

## இந்த இதழில்...

170216.


இந்திய நாட்டு உலகத் திரைப்பட விழா ... 4

தமிழ் வளர்ச்சியில் ஒரு புதுமலர்ச்சி —மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் திரு. க.அன்பழகன் ... 9

சித்த மருத்துவத்தில் நாடி ... 12

வள்ளுவர் வழியில் பாவேந்தர் ... 14

திருவள்ளுவர் சொல்லாட்சி மாட்சி —புலவர் கா.கோவிந்தன் ... 17

இந்தியக் கைவினைப் பொருட்கள் கலைவிழா ... 22

வேளாண்மை வளர்ச்சிப் பணிகள் ... 26

பெரியார் மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள் ... 29

தென்னார்க்காடு மாவட்ட வளர்ச்சிப் பணிகள் ... 33

சென்னைக் குடிநீர் வாரியத்தின் சீரிய பணிகள் ... 35

போற்றி வளர்க்கப்பட வேண்டிய கால்நடை மருத்துவ அறிவியல் -மாண்புமிகு முதல்வர் கலைஞர் ... 41

அரசியலுக்கும் கட்சிகளுக்கும் அப்பாற்பட்டு நாம் சிந்திக்க வேண்டும் ... 46



**தமிழரசு**

திருவள்ளுவர் ஆண்டு 2022

தைத் திங்கள் - 3

மலர்: 21 இதழ்: 14

16-1-1991

பொங்கல் சிறப்பிதழ்



# இந்திய நாட்டு உலகத் திரைப்பட விழா

சென்னையில்- 40 நாடுகள் பங்குகொள்ளும் 22-வது இந்திய நாட்டு உலகத் திரைப்பட விழா, சென்னையில் 10.1.91 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டு துவக்கி வைத்தார்.

சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவிற்கு, மேதகு தமிழக ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள் தலைமை தாங்கினார்.

மாண்புமிகு மத்திய செய்தி ஒலிபரப்புத்துறை இணைஅமைச்சர் திரு.சுபோத்காந்த் சகாய் அவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு 'தமிழ்த் திரைப் பட வரலாறு' என்ற சிறப்பு மலரை வெளி யிட்டார். மேதகு தமிழக ஆளுநர் அவர்களும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் அதைப் பெற்றுக் கொண்டார்கள்.

மத்திய செய்தி ஒலிபரப்புக் கூடுதல் செயலாளர் வரதன்- திரைப்பட விழா இயக்குநர் தீபக் சந்த் ஆகியோர் வரவேற்புரையாற்றினர்.

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்கள்- விழாவில் பங்கேற்ற பிரமுகர்களுக்கு நினைவுப் பரிசுகள் வழங்கினார். மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. சுபோத்காந்த் சகாய் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் பொன்னாடை அணிவித்தார்.

விழா நிகழ்ச்சிகளை நடிகை சுகாசினி தொகுத்து வழங்கினார். விழா முடிவில் செய்தி-சுற்றுலாத் துறைச் செயலாளர் திருமதி ஜெயந்தி இ.ஆ.ப., அவர்கள் நன்றி கூறினார்.

மாண்புமிகு செய்தி தொழிலாளர் நல அமைச்சர் திரு. கே.என்.நேரு, இந்தியத் திரைப்படக் கூட்ட மைப்பின் தலைவர் திரு. ஜி.பி.சிப்பி, தமிழக அரசு தலைமைச் செயலாளர் திரு. எம்.எம். இராஜேந்திரன் இ.ஆ.ப., மேதகு தமிழக ஆளுநர், திரு.சுர்ஜித்சிங் பர்னாலா, மாண்புமிகு மத்திய செய்தி ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. சுபோத் காந்த் சகாய் ஆகியோர் உரையாற்றினர்.

நடிகை ஹேமமாலினி தீபம் எடுத்து வழங்க- அதைக் கொண்டு, விழா துவக்கத்திற்கு அடையாளமாக மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் குத்து விளக் கேற்றி வைத்தார்.





அதன்பின், மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஆங்கிலத்தில் ஆற்றிய சிறப்புரை விவரம் வருமாறு:

இந்தியாவின் இருபத்து இரண்டாவது உலகத் திரைப்பட விழாவைத் தமிழ்நாட்டின் தலைநகரில் இன்றைய தினம் துவக்கி வைப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். என்னை இந்த விழாவின் தலைமை விருந்தினராக அழைத்துக் கவுரவித்த மைக்கு நன்றியுடையவனாக இருக்கிறேன்.

திரைப்படத் துறையினரோடு எனக்கு நீண்ட நெருக்கமான தொடர்புகள் உண்டு. எனவே இந்த விழாவைத் துவக்கி வைப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. மத்திய செய்தி மற்றும் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் சுபோத்காந்த் சகாய் அவர்களையும், வெளிநாடுகளில் இருந்தும் இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் இங்கு வந்து கூடியுள்ள இத்துறையின் முன்னணியில் உள்ள தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள், கலைஞர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள், திரைப் பட விமர்சகர்கள் அனைவரையும் மகிழ்வோடு வரவேற்கிறேன்.

இந்த உலகப்படவிழா என்னைப் போலவே பதின்மூன்று வருடங்களுக்குப் பிறகு நம்முடைய நகரத்திற்கு திரும்ப வந்திருக்கிறது.

திரைப்படத் தொழில் உலகின் உலகத் தலை நகரங்களில் ஒன்றான சென்னை நகரத்திற்கு இது போன்ற வாய்ப்புக்கள் அடிக்கடி கிட்டும் என்றும், இவ்வளவு அதிகமான கால இடைவெளி எதிர் காலத்தில் ஏற்படாது என்றும் என்னுடைய நம்பிக் கையைத் தெரிவித்துக் கொள்கிறேன். பல்வேறு பட்ட வகையில் பல வெளிநாடுகளிலும், பல இந்திய மொழிகளிலும் தயாரிக்கப்பட்ட பல திரைப்படங்கள் இந்த விழாவில் நீங்களெல்லாம் கண்டுகளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த விழா நிகழ்ச்சிகளுடன்- குறிப்பாகத் தென்னிந் தியத் திரைப்பட வர்த்தகக் கழகம்முந்தையதமிழ்ப் படங்களைத் திரையிடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது என்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது.

இவற்றுக்கெல்லாம் மேலாக, திரைப்படக் காட்சிகள் மட்டுமின்றிப் பல கருத்தரங்குகளும், விவாத அரங்குகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இது திரைத்துறை விமர்சகர்கள் உலகத் திரைப் படங்கள் பற்றித் தங்களுடைய விரிவான விமர் சனங்களையும், பாராட்டுக்களையும் வழங்க வாய்ப்பினை நல்கும். இந்த விழாவிற்கு ஏற்பாடு செய்தவர்கள், அண்மையில் மறைந்த ஐந்துமுன்னணிப் படத் தயாரிப்பாளர்களின் படங்களையும் இவ் விழாவில் இடம்பெறச் செய்திருப்பது பாராட்டுக் குரியது. திரு.வி.சாந்தாராம், திரு.சங்கரநாத், திரு.மன்மோகன் கிருஷ்ணா, திருமதி அருந்ததி தேவி, திரு.எஸ்.முகர்ஜி ஆகியோரின் நினைவுக்கு எனது அஞ்சலியைச் செலுத்த விரும்புகிறேன்.

இங்கு வருகை தந்திருக்கும் பார்வையாளர் களிடையே திரைப்படங்களைப் பற்றியோ அல்லது திரைப்படத் தொழில் பற்றியோ நான் எதுவும் அதிகம் சொல்லப் போவதில்லை.

புறக்கணிக்க முடியாத பல்வேறு கருத்துக்களை ஒருங்கிணைத்து சமுதாயத்திற்கு வழங்கக் கூடியது திரைப்படத்துறை. இவ்வகையில் இத்துறை போன்ற வேறு ஒரு துறையோ, தொழிலோ உண்டா என்பது நினைத்துக்கூடப் பார்க்க முடி யாதது. காண்போர் உள்ளத்தை நெகிழச் செய்யும் கலையில் திரைப்படங்கள் இணையற்றவை. கலை



# செங்கதிர் வாழ்க!

## பாவேந்தர் பாரதிதாசன்

பொங்கற் புதுநாள் முகமலர்த்திப் பொன்னான
செங்கதிர்ச் செல்வன் திரைகடலின் மேலெழுந்தான்
எங்கட்குப் புத்துயிரும் நல்கிப் பெருவாழ்வு
தங்கப் புரிந்த தகைமையினை வாழ்த்துவமே!

மூடு பனிவிலக்கி மொய்த்த குளிர்விலக்கி
நாடு நினைத்தஎலாம் நன்கு தொழிற்படுத்தித்
தோடவிழ்த்துச் செம்பரிதி பொன்வெய்யில் தூவுகின்றான்
விடுமலி பொங்கல் விழாப்பாடி வாழ்த்துவமே!

சேற்றிற்செந் தாமரைபோல் செங்கதிர்க்க.ருங்கடலில்
தோற்றஞ்செய் தான்எங்கள் தோகையர்கள் நீராடி
மாற்றுப்பொன் னாடை மடிப்பு விரிந்துடுத்தே
ஊற்றியபாற் பொங்கல் உவந்துவந்து வாழ்த்துவமே!

அரும்பும் இளநகையார் அங்கங்கே செந்நெல்
கரும்பு கனிவாழை, தேன்நெய் தயிர்பால்
தரும்பயன்மேற் பொங்கும் தைப்பொங்கல் உண்ண
வரும்பரிதி நாம்பாடி வாயார வாழ்த்துவமே!

காடெல்லாம் நாடுநகர் வீடெல்லாம் வீட்டுமேல்
ஓடெல்லாம் பொன்னாக்கி ஆர்கலிமேல் உற்றகதிர்
ஆடலினால் பாடலினால் ஆர்த்தபெரும் பொங்கல்
கோடல் மகிழ்ச்சியினால் கூடிநாம் வாழ்த்துவமே!

(பொங்கல் வாழ்த்துக் குவியல் என்னும் நூலிலிருந்து)



# வள்ளுவரின் குறள்

—தந்தை பெரியார்

"அறிவினால் உய்த்துணர்ந்து, ஒப்புக் கொள்ளக் கூடியனவும், இயற்கையோடு விஞ்ஞானத்துக்கு ஒப்ப இணைந்திருக்கக் கூடியனவும் ஆன கருத்துக்களைக் கொண்டு இயங்குகிறது வள்ளுவரின் குறள்.



*"மனித சமுதாயத்திற்கே நல்வழி காட்டி, நன்னெறி ஊட்டி, நற்பண்புகளையும் ஒழுக்கங் களையும் கற்பிக்கும் வகையில் எழுதப்பட்ட நூல்தான் திருக்குறள். எனவே தான் எல்லா மக்களும், எல்லா மதத்தவரும், ''எங்கள் குறள்'' ''எங்கள் மதக் கருத்தை ஒப்புக்கொள்ளும் குறள்'' என்றெல்லாம் அதைப் போற்றி வரு கிறார்கள்.*

*"மூடநம்பிக்கை யொழிந்து, அறிவு செம்மைப் பட திருக்குறள் செம்மையான வழிவகுத்துக் கொடுக்கும். குறள் கருத்துக்கள் நன்கு நாடெங் கும் பரப்பப்படுதல் வேண்டும். கல்வி என்றாலே 'திருக்குறள் கல்வி', அறிவு என்றாலே 'திருக்குறள் அறிவு' என்றுதான் கருதப்பட வேண்டியுள்ளது."*

# புதியதோர் ஒளி எங்கணும் பரவட்டும்!

-பேரறிஞர் அண்ணா

தமிழ்நாட்டு மக்கள் எத்தனையோ பல பண்டிகை களைக் கொண்டாடலாம்; ஆனால், பொங்கல் மட்டுமே குடும்பத்தில் உள்ள அனைவராலும் கொண்டாடப் படுகிற பண்டிகை. முதியோராயினும், இளைஞராயினும் ஏழை உழவராயினும் வசதி படைத்தோராயினும்



அனைவரும் கொண்டாடும் திருநாள் இது. இத்திருநாள் உழைப்புக்கு மதிப்புத் தரும் நாள். ஒருவருக்கொருவர் அளித்துக் கொள்ளும் ஒத்துழைப்பை வலியுறுத்தும் விழா பொங்கல் விழா!

நாம் எல்லோரும் உரிமையோடு பங்கேற்கும் ஒரு பெரும் திருநாளாகப் பொங்கல் நாள் திகழ்கிறது.

புதிய ஒளியோடு நாம் எல்லாம் ஒருங்கிணைந்திடும் ஒரு வாய்ப்பினைப் பொங்கல் விழா நல்குகிறது.

எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்பதான ஒரு நிறை வான வாழ்வை நோக்கி நடைபோடுவதே நமது குறிக் கோள் ஆகும்!

உற்பத்தியைப் பெருக்கி விநியோக முறையைச் செம்மைப்படுத்தி அதன் மூலம் பொருளாதார நீதி யெனும் குறிக்கோள் முழுமைபெறச் செய்யவேண்டும். சுரண்டலும், அடிமைத்தனமும் நீங்கி, வஞ்சகமும் ஏற்றத் தாழ்வுகளும் அகன்று, எல்லோரும் இன்புற்றிருக்கும் வண்ணம் புதியதோர் ஒளி எங்கணும் பரவட்டும்!



யையும், தொழில் நுட்பத்தையும் ஒரு கவர்ச்சிகரமான வகையில் அவை ஒருங்கிணைக்கின்றன. பொழுதுபோக்கு மற்றும் கல்வி ஆகிய இரண்டிலும் அதிகச் செலவில்லாமல் மிகப்பெரும் வாய்ப்புக்களை ஏராளமான மக்கள் திரைப்படங்களின் வாயிலாகப் பெறுகிறார்கள். எனவே சமூக விழிப்புணர்ச்சியை மேம்படுத்தத் திரைப்படங்கள் ஒரு சக்திவாய்ந்த சாதனமாக உள்ளன.

திரைப்படத்துறை வேலை வாய்ப்புகள் அதிகம் உடையவை. இந்தத் துறை பல மட்டங்களிலும் ஸ்கில்டு அண்டு செமிகில்டு என்று கூறப்படும் திறமைமிக்க தொழிலாளர்களுக்கும், ஓரளவே திறமைபெற்ற தொழிலாளர்களுக்கும் மிகப் பெரும்அளவில் வேலை வாய்ப்பை வழங்குகிறது. மத்திய அரசுக்கும், மாநில அரசுகளுக்கும் மிக முக்கியமான நிதி வருவாய்க்கான ஆதாரமாகவும் இத்துறை உள்ளது.

இந்த முக்கியமான பின்னணிகளைக் கருத்தில் கொண்டு திரைப்படத்துறைக்கு நமது அரசு தொடர்ந்து எல்லாவகையான ஆதரவையும் ஊக்கத்தையும் அளித்து வருகிறது. குறிப்பாக- அதனால்தான் இத்துறையில் திரைப்படத் தயாரிப்பு மற்றும் திரைப்படங்கள் திரையிடுதல் ஆகியவைகளில் தமிழ்நாடு ஒரு முன்னணி மையமாகத் திகழ்கிறது. 1946-ஆம் ஆண்டு நமது பாலிடெக்னிக்குகளில் சினிமாட்டோகிராபி மற்றும் சவுண்ட் எஞ்சினியரிங் ஆகியவைகள் பாடத்திட்டங்களில் அறிமுகப் படுத்தப்பட்டன.

1960-ஆம் ஆண்டு திரைப்படக் கல்லூரி நிறுவப்பட்டது. 1970-இல் நாம் ஒரு ஸ்டுடியோவை நிறுவி அதன் மூலம் மாணவர்களுக்கும் வெளியில் இருந்து வருகிற தயாரிப்பாளர்களுக்கும் வசதிகள் கிடைக்க வகை செய்தோம்.

கடந்த பல ஆண்டுகளாகத் தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனம் தொழில் நுட்ப வல்லுநர்களாக, நடிகர்களாக, பயிற்சிகள் வழங்கி ஏராளமானவர்களுக்கு தனது பங்கைச் செலுத்தியுள்ளது. சினிமாட்டோகிராபி, திரைப்பட இயக்கம், சவுண்ட் எஞ்சினியரிங், எடிட்டிங், பிலிம் புராசசிங் மற்றும் பல்வேறு துறைகளில் ஆண்களும் பெண்களுமாகப் பயின்று ஆயிரத்து நூறு பேர் பயிற்சி பெற்றுப் பட்டம் பெற்றுள்ளார்கள்.

இவ்வாறு இந்த நிறுவனத்தில் பயிற்சி பெற்ற பட்டதாரிகளில் பலர் அகில இந்திய அளவில் புகழ் ஈட்டி, புதுமையான தயாரிப்பாளர்கள், நடிகர்கள் என்று மலர்ந்து மணம் பரப்பியிருக்கிறார்கள் என்பதிலே நாங்கள் பெருமையடைகிறோம்.

கடந்த ஆண்டு எங்களுடைய அரசு அமைந்தவுடனேயே திரைப்படத் துறையில் ஏற்பட்ட பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முயற்சியில் நானே நேரடியாக ஈடுபட்டு அதிக நேரம் செலவழித்துள்ளேன். அந்த விவாதங்கள் வரிவிதிப்பு அமைப்பைச் சீரமைப்பதாக அமைந்து பலனளித்தன. திருட்டு வீடியோக்களைத் தடை செய்ய நாங்கள் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டோம். சிறந்த தமிழ்ப் படங்கள், சிறந்த நடிகர்கள் மற்றும் தொழில் நுட்ப வல்லுநர்களுக்கு மாநில விருதுகள் வழங்கும் திட்டத்தை நாங்கள் துவக்கினோம். அந்த விருதுகள் ரூபாய் 25 ஆயிரத்திலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் வரை அந்த விருதுகள் வழங்கப்பட்டன. மேலும் தொழில் நுட்ப வல்லுநர்கள் அனைவரும் பதின்மூன்று வகையினராகப் பிரிக்கப்பட்டு அவர்களும் விருதுகள் வழங்கும் பட்டியலில் சேர்க்கப்பட்டனர்.

மற்றொரு புதுமையான திட்டம் குறைந்த செலவில் எடுக்கும் தரமான தமிழ்ப் படங்களுக்கு மானியம் வழங்குவதாகும்.

திரைப்படத் தொழிலின் நலனுக்கும், வளர்ச்சிக்கும் எங்களுடைய அரசு தொடர்ந்து எல்லா வகையான உதவிகளையும் செய்யும் என்ற உறுதிமொழியைத் திரைப்படத் துறையினருக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் வழங்க நான் விரும்புகிறேன்.

இந்த நேரத்தில் எங்களுடைய மாநிலத்திற்கும், அதன் தலைநகரமாகிய இந்த நகரத்திற்கும், திரைப்படங்களுக்கும் இடையே உள்ள நெருங்கிய வரலாற்றை நான் நினைவு கூர்வது இந்த நேரத்தில் மிகவும் பொருத்தமாக இருக்கும்.

பாரீஸ் நகரத்தில் முதன்முதலாக லுமெயர் சகோதரர்கள் திரைப்படங்களைத் திரையிட்டனர். அவ்வாறு திரையிடப்பட்ட அடுத்த இரண்டு ஆண்டுகளில் அதாவது 1897-இல் சென்னையில் முதல் திரைப்படம் திரையிடப்பட்டது.

ஆர்.நடராச முதலியார் தயாரித்த 'கீசக வதம்' என்னும் முதல் படம் ஒரு பேசாத படம். 1916-ஆம் ஆண்டில் திரையிடப்பட்டது.

தமிழ்நாட்டில் மட்டுமல்ல அண்டையிலே உள்ள ஆந்திரம், கர்நாடகம், கேரளம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த பல முன்னணித்தயாரிப்பாளர்கள், நடிகர்கள் ஆகியோரின் நிலைக்களமாகத் தமிழகம் விளங்கியது என்பதில் நாம் பெருமை கொள்கிறோம். ராஜா சாண்டோ, நமது மாநிலத்தில் பல ஆண்டுகள் வாழ்ந்த அமெரிக்கரான எல்லிஸ் ஆர்.டங்கன், பல சமூகக் கருத்துக்களைத் திரைப்படங்கள் மூலம் பரப்புவதற்குக் காரணமாக இருந்த திரு. கே.சுப்பிரமணியம், திரு.எஸ்.எஸ்.வாசன், ஜூபிட்டர் சோமு, ஸ்ரீராமுலு நாயுடு, திரு.மெய்யப்பச் செட்டியார், திரு. டி.ஆர்.சுந்தரம் போன்றோர் உட்பட்ட முன்னணி இயக்குநர்களையும் திரு. எம்.கே.தியாகராஜ பாகவதர், கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், பி.யூ.சின்னப்பா, திரு. எம்.ஜி.ஆர். திரு. எம்.ஆர். ராதா போன்ற பல சிறந்த நடிகர்களையும் நாம் பெற்றிருந்தோம். பாபநாசம் சிவன், உடுமலை நாராயணகவி, கண்ணதாசன், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் ஆகியோர் திரை இசைத்துறையில் குறிப்பிடத்தக்க பங்கு பணி ஆற்றியுள்ளார்கள்.

நம்முடைய பல முன்னணி நடிகைகளில் திருமதி டி.பி.ராஜலட்சுமி, முதன்மையானவர்.

அண்மைக்காலங்களில் தொலைக்காட்சி ஒரு பெரும் சாதனமாக வளர்ந்துள்ளது. இதனால் திரைப்படத்துறை பாதிக்கப்படுமோ என்று பலர் கவலை தெரிவித்தார்கள். ஆனால் தொலைக்காட்சியும், திரைப்படத்துறையும் ஒன்றுக்கொன்று ஆதரவானவை. மேலும் தொலைக்காட்சி திரைப்படங்களுக்கு நிதி உதவியும், கலை ரீதியாகவும் ஆதரவு அளிக்கும் என்றே கருதுகிறேன். மேலும் திரைப்படத்துறைக்குக் கூடுதலான ஒரு வருவாய்த் துறையாகத் தொலைக்காட்சி திகழும். உதாரணமாக இந்த விழாவிலே காட்டப்படுகிற வெளிநாட்டுத் திரைப்படங்கள், இந்தியத் திரைப்படங்களை ஒரு சில ஆயிரம் மக்கள்தான் இந்த விழாவிலே பார்க்க முடியும். அந்த நல்ல படங்களையெல்லாம் தொலைக்காட்சியில் காட்டினால் அது நலம் பயக்கும். ஏராளமானோர் காணலாம்.

★விடா முயற்சியிருந்தால் வெற்றி கிடைத்தே தீரும்; தூற்றினோரே துதிபாடி நிற்பர்; ஏளனம் பேசினோர் ஏத்தி ஏத்தித் தொழுவர்!

—அறிஞர் அண்ணா

இது தொடர்பாக நான் மத்திய செய்தி மற்றும் ஒலிபரப்புத்துறை அமைச்சருக்கு ஒரு வேண்டுகோளை முன்வைக்கிறேன். தென்னாட்டில் உள்ள நாங்களெல்லாம் நேரத்தோடு உறங்கச் சென்று வைகறையில் துயில் எழுவது என்பதிலே மிகுந்த நம்பிக்கை உடையவர்கள். எனவே இந்தத் திரைப்படங்களை தொலைக்காட்சியில் இரவு பத்து மணிக்கு முன்னதாகவே ஒளிபரப்புவது விரும்பத்தக்கதாக இருக்கும் என்ற வேண்டுகோளை மத்திய அமைச்சர் முன் வைக்கிறேன்.

இந்த விழாவை ஏற்பாடு செய்ய, பல துறையினர் மிகுந்த சிரமங்களை மேற்கொண்டிருக்கிறார்கள். இவ்விழாவிற்கான செலவினங்களைப் பெருந்தன்மையோடு மத்திய-மாநில அரசுகள் பகிர்ந்து கொண்டிருக்கின்றன. அழகிய-அமைதி நிறைந்த நகரமான இச்சென்னை நகரத்தில் விழாவிற்கு வருகை தந்துள்ள நீங்களெல்லாம் தங்கியிருக்கிற காலத்தை உற்சாகமாகவும், உபயோகமாகவும் செலவிட எல்லா வகையான முயற்சிகளையும் நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம். உங்களுக்கு ஏதாவது சிறிய அசௌகரியங்கள் ஏற்படுமானால் நீங்கள் அவைகளையெல்லாம் பொறுத்தருள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த விழாக் காலத்தில் சென்னை நகரத்தில் நீங்கள் தங்கியிருந்த நாட்கள் உங்கள் நினைவுகளில் என்றும் பசுமையாக நிலை பெற வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். அந்த வகையில் அனைத்து வசதிகளும் செய்யப்படும் என்று நான் உங்களுக்கு உறுதி கூறுகிறேன். இந்த வார்த்தைகளுடன் இருபத்தி இரண்டாவது இந்திய நாட்டு உலகத் திரைப்பட விழாவைத் துவக்கி வைக்கிறேன்.

—இவ்வாறு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்கள்.



யில் சுமார் ரூ.5 இலட்சம் செலவிட திட்டமிடப் பட்டுள்ளது.

**பாவேந்தர் நூற்றாண்டு விழா**

பாவேந்தர் பாரதிதாசனாருக்கு நூற்றாண்டு விழா நிகழ்த்தும் இந்த ஆண்டில் பாவேந்தர் பரம்பரை எனத்தகும் 21 கவிஞர்களையும், 2 பதிப்பாளர்களையும் தேர்வு செய்து, அவர்களுக்கு ரூ.2,30,000/- பரிசாக வழங்கியது. கவிதைப் போட்டி ஒன்று நிகழ்த்தி 100 கவிஞர்களைத் தெரிவு செய்து ஒவ்வொருவருக்கும் ரூ.1,000/- என்ற அளவில் மொத்தம் ரூ.1,00,000/- பாவேந்தர் நூற்றாண்டு நிறைவு விழாவில் வழங்க அரசு திட்டமிட்டுள்ளது.

**தமிழக வரலாறு**

தமிழக வரலாறு முழுமையாக எழுதப் பெற வேண்டும் என்ற வரலாற்று வரைவுத் திட்டம் இடையில் நிறுத்தப்பட்டிருந்தது. மீண்டும் அத் திட்டத்தைப் புதுப்பித்து முன்னர் வெளியிடப் பட்ட வரலாற்று நூல்களுடன் பல்லவர்-பாண்டியர் காலத்தின் வரலாற்றின் முதல் பகுதி இந்த ஆண்டில் வெளியிடப் பெறவிருக்கிறது. இதற்கென சுமார் ரூ.1,50,000/- செலவிடத் திட்டமிட்டுள்ளது.

**வித்தகர்களுக்கு விருதுகள்**

1985-ஆம் ஆண்டிற்குப் பின்னர் திரு.வி.க. விருது வழங்கும் திட்டமும், 1986-ஆம் ஆண்டிற்குப் பின்னர் பாவேந்தர் பாரதிதாசனார் விருது வழங்கும் திட்டமும் நிறுத்தப் பெற்றிருந்தன. இவ்வரசு பொறுப்பேற்றவுடன் 1986, 1987, 1988, 1989, 1990 ஆகிய ஆண்டுகளுக்குரிய இவ்விருதுகள் வழங்கப் பெற்றுள்ளன. இதனால் அரசுக்குச் சுமார் ரூ.1 இலட்சம் செலவாகியுள்ளது. திருவள்ளுவர் விருது வழங்கும் திட்டமும், 1988-ஆம் ஆண்டிற்குப் பின்னர் நிறுத்தப்பட்டிருந்தது. இவ்வரசு 1989-இல் பொறுப் பேற்றவுடன் 1989, 1990 ஆகிய ஆண்டுகளுக்குரிய திருவள்ளுவர் விருதுகள் வழங்கப் பெற்றன. ரூ.10,000/- என்றிருந்த இவ்விருதுத் தொகையை இனி ரூ.20,000/- ஆக உயர்த்தி வழங்கிட முதல்வர் அறிவித்துள்ளார்.

**அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி**

அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின்படி 1989-90-ஆம் ஆண்டிற்கு 17 அறிஞர்கள் தெரிவு செய்யப் பெற்றனர். அவர்களுக்கு வழங்கப் பெற்ற நிதியுதவியைத் திங்கள் ஒன்றுக்கு ரூ.250/-லிருந்து ரூ.350/- ஆக அரசு உயர்த்தியுள்ளது. இந்த் ஆண்டு திருவள்ளுவர் திருநாள் விழாவில் 20 தமிழறிஞர்கள் நிதியுதவி பெற இருக்கின்றனர். இத்திட்டத்தின்படி முன்னர் நிதியுதவி பெறுவோருக்கும் சேர்த்து 1990-91-ஆம் ஆண்டில் ரூ.9,11,400/- அரசு செலவிடுகின்றது.

**தமிழ் வளர்ச்சிப்பணிக்கு நிதியுதவி**

தமிழகத்திலும், பிற மாநிலங்களிலும் தமிழ் வளர்ச்சிப் பணியில் ஈடுபட்டுள்ள தனியார் நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள், சங்கங்கள் முதலியவற்றுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின்படி, சென்னை ஆசியவியல் நிறுவனம், திருவனந்தபுரம் பன்னாட்டுத் திராவிட மொழியியற் பள்ளி, திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக் கழகம், மதுரை தமிழ்ச் சங்கம், அலகாபாத் பாஷா சங்கம், பஞ்சாப் பல்கலைக்கழகம், பெங்களூர் தமிழ்ச் சங்கம் ஆகியவை நிதியுதவி பெற்றிருக்கின்றன. இவ்வகையில் 1989-90, 1990-91 ஆகிய ஆண்டுகளில் சுமார் ரூ.17,32,640/- நல்கைகளாக வழங்கப் பெற்றுள்ளன.



**நினைவுத் தூண்**

சங்கப் பெரும் புலவர்களுக்கு அவர்கள் வாழ்ந்த இடங்களில் நினைவுத் தூண் எழுப்பி, அவர்தம் நிலைத்த புகழைப் போற்ற அரசு முடிவு செய்துள்ளது. 1990-91-ஆம் ஆண்டில் இடைகழிநாட்டு நல்லூரில் நத்தத்தனாருக்கும், ஒக்கூரில் மாசாத்தனார், மாசாத்தியார் ஆகிய இருவர்க்கும், திருநெல்வேலி மாவட்டம் மாங்குடியில் மாங்குடி மருதனாருக்கும், கருவூரில், அவ்வூரில் வாழ்ந்த பல புலவர்களுக்கும் நினைவுத் தூண்கள் எழுப்ப அரசு சுமார் ரூ.5.5 இலட்சம் செலவிடுகின்றது.

**ஆட்சிச் சொல்லகராதி**

தமிழில் சிறந்த வரைவுகளும், குறிப்புகளும் எழுதும் அரசுப் பணியாளர்களுக்கு ஆர்வம் ஊட்டுவதற்காகப் பரிசுகள் வழங்கும் திட்டம் இடையில் நிறுத்தப்பட்டிருந்தது. அத்திட்டத்தை மீளப் புதுப்பித்து இந்த ஆண்டு பரிசுகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வரசுப் பணியாளர்களுக்குத் தமிழில் எழுத உறுதுணை செய்ததற்கு ஆட்சிச் சொல்லகராதியின் கையடக்கப் பதிப்பு ஒன்று இந்த ஆண்டு வெளியிடப் பெறும். இவற்றிற்காக அரசு சுமார் ரூ.4.64 இலட்சம் செலவிடத் திட்டமிட்டுள்ளது.

ஊர்ப் பெயர்களையும், தெருப் பெயர்களையும் பிழையின்றி எழுதித் தமிழ்மணம் கமழச் செய்ய முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம், பேராசிரியர் டாக்டர் மா. நன்னன், அருங்கவிஞர் அப்துல் ரகுமான் ஆகியோரைக் கொண்ட குழுவினை அரசு அமைத்துள்ளது.

**வள்ளுவர் கோட்டத்தில் தெள்ளு தமிழ்க்குறள்**

வள்ளுவர் கோட்டத்தில் தெள்ளு தமிழ்க் குறள் காலையும், மாலையும் ஒலிபரப்பப்படுகின்றது. வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் திருக்குறள் வகுப்புகள் அங்கு நடத்தப் பெறுகின்றன.

மயிலாடுதுறை முனிசீப் வேதநாயகனார், பெருநாவலர் மதுரைக் கார்மேகனார் ஆகிய தமிழறிஞர்களுக்கு நூற்றாண்டு விழாக்கள் நிகழ்த்தி அரசு சிறப்பித்தது.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்ட இயக்ககம், இவ்வரசு பொறுப்பேற்றவுடன் மீண்டும் தனித்து இயங்கிட வகை செய்யப்பட்டு ஊக்கப்படுத்தப்பட்டுள்ளது. 'அ' முதல் 'ஔ' ஈறாக உள்ள சொற்களின் அகர முதலித் தொகுப்பின் இரு பகுதிகள் இவ்வாண்டில் வெளியிடப் பெறவிருக்கின்றன.

தமிழொடு ஐரோப்பிய மொழிகளிலும் தேர்ந்த அறிஞர் ஞானகிரி நாடார் அவர்களின், ஒப்பியன் மொழிப் புலமையால் - பயன்பெறும் நோக்குடன், 'மேலைநாட்டு மொழிகளில் தமிழின் வேர்கள்' குறித்து - அவர்கள் நிகழ்த்தியுள்ள ஆய்வு அடிப்படையில் - ஒரு களஞ்சியத்தை உருவாக்கிட அவர்தம் பணிக்கு ஆதரவு வழங்கியுள்ளது. விரைவில் அந்த ஆய்வு ஏடு அச்சேறும் என எதிர் பார்க்கலாம்.

**அருங்காட்சியகங்கள்**

இந்த நாட்டில் உள்ள அருங்காட்சியகங்களில் தொன்மை சார் சென்னை அருங்காட்சியகத்தைப் போல், மாவட்டங்களிலும் அருங்காட்சியகங்கள் அமைத்து மக்களுக்கு மகிழ்வும் தொன்மைப் பெருமித உணர்வும் ஊட்ட அரசு திட்டமிட்டுள்ளது. ரெனோசெரஸ் என்னும் அற்றுப் போன உயிரின வகையைச் சார்ந்த மாபெரும் விலங்கின் பளிங்காடி உருச்சமைத்து காட்சிக்கு வைக்கவும், காட்சிக் கூடங்களில் உள்ள பொருட்களின் பெயர்களைத் தூய தமிழில் எழுதி வைக்கவும், ஆங்கிலேயர் ஆண்ட காலத்தில் தீட்டப்பட்ட நெய் வண்ண நெட்டோவியங்களைப் பழமைச் சிறப்பு மாறாமல் புதுப்பிக்கவும், தொல்பொருள் விளக்கமாக அமையும் தொன்மை வெளியீடுகளை மீண்டும் புதுப்பித்து வெளியிடவும் அரசு திட்டமிட்டுள்ளது. சென்னையில் சிறுவர் அருங்காட்சியகம் நிறுவியிருப்பது ஒரு சிறப்புச் சாதனையாகும்.

**பூம்புகார் கடல் அகழ்வாராய்ச்சித் திட்டம்**

பூம்புகார் கடல் அகழ்வாராய்ச்சித் திட்டம் தமிழக அரசின் தொல்லியல் ஆய்வுத் துறையால் நிகழ்த்தப் பெறவிருக்கிறது.

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம், தமிழ்நாடு இசைப் பயிற்சி மையம், ஓவிய நுண்கலைக் குழு ஆகியவை மரபார்ந்த கலை வளர்ச்சிக்குப் புத்துயிர் ஊட்டி வருகின்றன. நலிந்த கலைஞர்களுக்கு உதவித்தொகை வழங்குதல், கலைமாமணிப் பட்டம் வழங்கிப் பாராட்டுதல், பிற நாட்டுக் கலைஞர்களையும், பிற மாநிலக் கலைஞர்களையும் நமது மாநிலத்திற்கு வரவழைத்துப் பாராட்டுதல், தமிழகக் கலைஞர்களைப் பிற இடங்களுக்கு அனுப்பி கலைச் சிறப்புகளை அறிந்து வரச் செய்தல் முதலியன பேரார்வத்தோடு மேற்கொள்ளப்படுகின்றன.

**பண்பாட்டுப் பலகணி**

ஒவ்வொரு திங்களும் நம் பண்பாட்டுக் கூறுகளை விளக்குகின்ற பண்பாட்டுப் பலகணி என்ற நிகழ்ச்சி அரசு அருங்காட்சியகக் கலையரங்கில் பட்டறிவு வாய்ந்த பழம் பெரும் கலைஞர்களைக் கொண்டு நிகழ்த்தப் பெறுகின்றன. திங்கள் ஒன்றிற்கு ரூ.1,500/- இதற்கென அரசு செலவிடுகின்றது.

1989-90-ஆம் ஆண்டின் இறுதி வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.1,23,49,000/- ஒதுக்கீடு செய்து, தமிழ் வளர்ச்சி இயக்ககத்தின் பணிகளை மேம்படுத்தியது. 1990-91-ஆம் ஆண்டில் ரூ.1,99,29,000/- திட்டத்தில் தமிழை வளர்க்கும் பல்வேறு பணிகளை நிறைவேற்றுவதற்கு அரசு உறுதுணை செய்துள்ளது. மேலும் ஆட்சிமொழி ஆக்கப் பணிகள் -சட்ட வரைவுகளின் மொழி பெயர்ப்புகள் முதலானவை ஆட்சிமொழிக் குழுவினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சிறுசேமிப்புத் துறை
முதலீடு செய்த அன்றே
ஈடு இணையற்ற பலன்கள்
வங்கிகள் மற்றும்
பரஸ்பர நிதி
வழங்க இயலாத
சலுகைகள்
1.1.91 முதல்
31.3.91 வரை
ரூ.1000/- முதலீடு
செய்யும்
முதலீடுதாரர்களுக்கு
''விபத்துக் கால
இன்சூரன்ஸ்''
வசதி.




மூலதன சந்தையில் சிறுசேமிப்பு பிரத்யேக உரிமை வகிக்கிறது.

சிறுசேமிப்பில் முதலீடு செய்த கோடிக்கணக்கான முதலீட்டாளர்கள் மற்றும் நிறுவனங்கள் அடையும் ஒப்பற்ற கூடுதல் சலுகைகளை பெறுங்கள்.

முதலீட்டிற்கு அதிகபட்ச வட்டி

| திட்டம் | ஆண்டு | வட்டி விகிதம் |
|---|---|---|
| தேசிய சேமிப்புப் பத்திரம் 8 ஆம் வெளியீடு | 5 | 15.82% |
| ,, | 6 | 16.91% |
| கிசான் விகாஸ் பத்திரம் | 5 | 17.6% |
| ,, | 5½ | 18.18% |
| இந்திரா விகாஸ் பத்திரம் | 5 | 20% |

சிறப்பு அம்சங்கள்:

- பாதுகாப்பான முதலீடு மற்றும் நம்பகமான வட்டி
- வங்கிகள், நிறுவனங்கள் அளித்திடாத உயர்ந்த வட்டி
- வருமானவரி மற்றும் சொத்து வரிவிலக்கு (பிரிவு 88ன்படி - NSC மற்றும் பிரிவு 5(i)ன்படி சொத்து வரிச்சலுகை)
- பிரிவு 88ன்படி வட்டிக்கு வருமான வரிவிலக்கு
- குழந்தைகளின் பெயரில் செய்யும் முதலீட்டிற்கு பிரிவு 88ன்படி வருமான வரிவிலக்கு
- வங்கிகளில் கடன்வசதி
- வாரிசுதாரர் நியமனவசதி
- ஒரு நபரிடமிருந்து மற்றொருவருக்கு எளிதில் மாற்றக் கூடிய வசதி
- எல்லா அஞ்சலகங்களிலும் காசோலை வசதி (சேமிப்பு கணக்கிற்கு)
- உங்கள் வீடு தேடி வரும் ஏஜெண்டுகளின் வசதி.

கூடுதல் சலுகைகள்:

1.1.91 முதல் 31.3.91. வரை ஒவ்வொரு ரூ.500/- முதலீட்டிற்கும் ஒரு பரிசுக் கூப்பன் மூலம் 262 பரிசுகள்

★ ரூ.1000/-ம் அதற்கு மேலும் K.V.P., N.S.C. VIII Issue போன்ற சில குறிப்பிட்ட திட்டங்களில் செய்யும் முதலீட்டிற்கு 1% ஊக்கத்தொகை.

★ பங்கு மார்க்கட் தரகர்களுக்கு (Stock Brokers) 2% கமிஷன்

★ நிறுவனங்கள் இந்திரா விகாஸ் பத்திரத்தில் செய்யும் முதலீட்டிற்கு 10 ஆண்டுக்குப்பின் அதிகபட்ச வட்டியாக 54.66% பெறலாம்.

சேமிப்பு பத்திரம் அனைத்து அஞ்சலகங்களிலும் கிடைக்கும்

சிறுசேமிப்பின் அவசியம் பற்றிய இலவச விவரம் அறிய, தொடர்பு கொள்ளுங்கள்.

மாவட்டங்களில், மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்
சிறுசேமிப்புத்துறை
143, அண்ணாசாலை,
சென்னை-600 002.
தொலைபேசி: 846209/840223

DIPR/3052/MS/90/ARIES






# தமிழ் வளர்ச்சியில் ஒரு புது மலர்ச்சி


மாண்புமிகு கல்வியமைச்சர்
**பேராசிரியர் க. அன்பழகன்**


''பண்டை நலம், புதுப்புலமை, பழம்பெருமை அனைத்தையும் நீ படைப்பாய், இந்நாள் தொண்டு செய்வாய் தமிழுக்குத் துறைதோறும் துறைதோறும் துடித்தெழுந்தே'' என்ற பாவேந்தர் முழக்கத்தைக் குறிக்கோளாக ஏற்று, அயராது பாடுபடுவது கழக ஆட்சி.

### மொழிக் காவலர்களுக்கு நிதிஉதவி

தமிழைக் காப்பதற்காகவும், தமிழக எல்லையைக் காப்பதற்காகவும் உடல், உடைமை, உயிர் ஆகியவற்றை இழக்கத் துணிந்த அரும்பெரும் வீரர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின்படி இவ்வரசு பொறுப்பேற்ற பின்னர் 1187 மொழிக் காவலர்களுக்கு நிதியுதவி வழங்கியுள்ளது. திங்கள் ஒன்றுக்கு ரூ.250/- அளவு உதவித்தொகையை ரூ.350/- அளவு உயர்த்தியதுடன், இவர்கள் தமிழகம் முழுமையும் அரசு சார்புடைய போக்குவரத்துக் கழகங்களில் கட்டணமின்றிப் பயணம் செய்யும் சலுகையையும் வழங்கியுள்ளது. இவ்வகையில் சுமார் ரூ.75 இலட்சம் ஆண்டொன்றுக்குத் தமிழக அரசு செலவிடுகின்றது.

தமிழில் எழுதப் பெறும் சிறந்த நூல்களை நிதியுதவி வழங்கி வெளியிடுவதற்குத்தமிழக அரசு துணை நிற்கிறது. இவ்வகையில் 1989-90-ஆம் ஆண்டில் 28 நூலாசிரியர்களுக்கும்1990-91-ஆம் ஆண்டில் 21 நூலாசிரியர்களுக்கும் சுமார் ரூ.1,40,000/- நிதியுதவி வழங்கியுள்ளது. இந்த ஆண்டிலேயே மேலும் 50 நூலாசிரியர்களுக்குச் சுமார் ரூ.2 இலட்சம் வழங்கத் திட்டமிட்டுள்ளது.

### திருவள்ளுவர் திருநாளில் சிறந்த நூல்களுக்குப் பரிசு

தமிழில் வெளியிடப்பெறும் சிறந்த நூல்களுக்குத் திருவள்ளுவர் திருநாள் விழாவில் பரிசு வழங்கும் திட்டம் இந்த ஆண்டு புதுப்பொலிவோடு நிகழ்த்தப் பெறவிருக்கிறது. முதல் பரிசு ரூ.2,000/-, இரண்டாம் பரிசு ரூ. 1,000/- என்று இருந்ததை மாற்றி, முதற்பரிசு ரூ.5,000/-, இரண்டாம் பரிசு ரூ.3,000/- என உயர்த்தியும், மூன்றாம் பரிசு ரூ.1,000/- எனப் புதுவதாக உருவாக்கியும், இந்த ஆண்டு பரிசுகள் வழங்கப் பெற இருக்கின்றன. 21 துறைகளில் நூல் எழுதிய 63 நூலாசிரியர்கள் சுமார் ரூ.1,89,000/- அளவுக்குப் பரிசாகப் பெறவிருக்கின்றனர். சென்ற ஆண்டில் இவ்வகையில் ரூ.53,000/- பரிசுத்தொகை வழங்கப்பட்டது.

தமிழ்க் கருவூலங்களாகிய பண்டை இலக்கியங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தும், பிற மொழி இலக்கியங்களைத் தமிழில் மொழி பெயர்த்தும் வெளியிட்டு, மொழி வளம் சேர்க்கும்

**1990-91-ஆம் ஆண்டில் ரூ.1,99,29,000 திட்டத்தில் தமிழை வளர்க்கும் பணிகள் நிறைவேற்றப் படுகின்றன.**

திட்டத்தின்படி இந்த ஆண்டு கம்பராமாயணத்தின் அயோத்தியா காண்டம் - ஆரணிய காண்டம் ஆகியவை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிடப்படுகின்றன. ஆங்கிலத்தில் அறிஞர் வில் டூரண்ட் அவர்களால் எழுதப் பெற்றுள்ள 'நாகரிக வரலாறு' என்ற நூலின் 3 பகுதிகள் தமிழில் மொழி பெயர்க்கப் பெற்று வெளியிடப் பெறவிருக்கின்றன. பாவேந்தர் பாரதிதாசனாரின் 100 பாடல்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப் பெற்று வெளியிடப் பெறவிருக்கின்றன. இவ்வகை

# சித்த மருத்துவத்தில் நாடி



- டாக்டர் மோகனமாலா

**இ**ன்றைய நாகரிக உலக வளர்ச்சியில் விஞ்ஞானம் எத்தனையோ வகையில் முன்னேற்றம் கண்டு அரிய பல சாதனை நிகழ்த்தி வருவது கண்கூடு. குறிப்பாக, மருத்துவத்துறை மாற்றம் கண்டுள்ள விந்தைகளோ அளவிடற்கரியன.

இந்த நிலையிலும், மருத்துவ விஞ்ஞானத்திற்கு அடிப்படையான மருத்துவச் சோதனையில் நோயினைத் தெளிவாக உணர்த்துகின்ற ஆற்றல் ஒவ்வொருவர் உடலின் நாடித் துடிப்பே ஆகும்.

''நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்''

-என்பது திருவள்ளுவர் வாக்கு. அதன்படி நோய் இன்னதென்று நாடித் துடிப்பைக் கொண்டு ஆய்ந்து, நோய் தீர்க்கும் முயற்சியில், மருத்துவர் சாதனை பல நிகழ்த்தியுள்ளனர். பண்டைய நாளில் வாழ்ந்த சித்தர்களின் பாடலின் வாயிலாகப் பல விவரங்களைத் தெளிவுபடுத்தியுள்ளார்கள். அதிலும் 'நாடி' முறைகளை மிகத் துல்லியமாகக் கணக்கிட்டுக் காட்டியுள்ளதாலும், அனுபவ வாயிலாக உணர்த்தியுள்ளதாலும், இன்று நாம் அவற்றின் பயனை அடைய முடிகிறது.

**நாடிக் கணிப்பு முறை:**

உலகிலுள்ள ஏந்த மருத்துவ முறையும் நோய்க் கணிப்புக்கும், நோயாளியின் அப்போதைய நிலையை அறியவும், நாடியை ஒரு முறையாகக் கொண்டுள்ளது; சித்த மருத்துவ நாடிக் கணிப்பு முறை மிக நுணுக்கமும், உயர்ந்ததுமாகும். சித்த மருத்துவக் கணிப்பு முறைகளாகிய எண்வகைத் தேர்வுகளில் நாடிக் கணிப்பு முறை இறுதியானதும் உறுதியானதும்கூட.

நாடியை மட்டுமே கொண்டு ஒருவர் இன்ன நோய் வாய்ப் பட்டிருக்கிறார் என்றும், இத்தனை மணி நேரத்தில் இறந்துவிடுவார் என்றும் அறுதியிட்டுக் கூறக்கூடிய அளவுக்கு நாடி விஞ்ஞானத்தில் மேம்பட்ட சித்த மருத்துவர்கள் இருக்கின்றார்கள். ஆனால் குறிப்பிட்ட சில ஆண்டுகளுக்குள் அந்த நாடி விஞ்ஞானத்தில் தேர்வு பெறுவது என்பது இயலாததொன்றாகும். பல்லாண்டுகள், பல்லாயிரக்கணக்கான பிணியாளரின் நாடிகளை மிக நுணுக்கமாக ஆராய்ந்து, சித்தர்கள் கூறிய நாடி நிலைகளோடு ஒப்பிட்டுப் பார்த்து, அனுபவம் பெற்றாலொழிய, நாடி விஞ்ஞானத்தில் முழுத்தேர்ச்சி அடைவது இயலாது; இதற்கு நாடியில் தேர்ச்சி பெற்ற ஆசிரியரின் துணையும் வேண்டும்.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த நாடி விஞ்ஞானம் பற்றி சித்தர்கள் என்னசொல்கிறார்கள் என்றால்-ஒரு சித்தர் சொல்கிறார்:

''நாடியென்றால் நாடியல்ல நரம்பில் தானே
நலமாகத் துடிக்கின்ற துடிதானுமல்ல
நாடியென்றால் எழுபத்தீரா யிரமுமல்ல
நாடியென்றால் வாதபித்த சிலேற்பன முமல்ல
நாடியென்றால் அண்ட பகிரண்ட மெல்லாம்
நாடியுறும் பொருள் தெரிந்து நாடுவாரே''

-என்று கூறுகிறார்.

நாடி என்பது உடம்பிலுள்ள ரத்தக் குழல்களில் உண்டாகும் துடிப்புமட்டுமல்ல. அது எழுபத்தீராயிரம் என்று கூறுவார்கள் - அது மட்டுமல்ல. நாடி என்பது வளி, அழல், ஐயம், என்று மூன்று மட்டுமல்ல. பின் எது?

இப்பேரண்டம் முழுவதும் பரந்து கிடக்கின்ற அணுவுக்குள் அணுவாக - மறைந்துறையும் பேரறிவுப் பொருளாம் பதிக்கு இருப்பிடமாய் அமைந்த உயிராகிய ஆன்மாவின் இயக்கமாகும்.

எனவே, நாடி என்பது ரத்தக் குழாய்களில் உண்டாகும் துடிப்புக்களின் எண்ணிக்கையோ (Rate), துடிப்புக்களின் 'தாள அமைதியோ (Rhythm), எழுப்பும் பரிமாணமோ (Volume), அழுத்தமோ (Tension) மட்டுமல்ல.

ஒவ்வொரு உடம்பிலும் செயல்படும் உயிரின் முழு இயக்கமாகும். இந்த உயிரின் இயக்கம் உடம்பின் ஒவ்வொரு அணுவிலும் செயல்படுகிறது. பத்து இடங்களில் ரத்தக் குழாய்களின் ரத்த அழுத்தத்தில் வெளிப்படையாகப் பிரதிபலிக்கிறது. நாடியை உடம்பில் பத்து இடங்களில் பார்க்கலாம். இந்த பத்து இடங்களிலும், எளிதாக யாருக்கும் எந்த நேரத்திலும் பார்க்கின்ற

**''நாடி வகைகள், நாடியை அறியும் முறைகள் ஆகியவற்றை இக்கட்டுரை விளக்குகிறது''**

இடங்களாக வாய்த்தவை கைகள், ஆணுக்கு வலது கையிலும், பெண்ணுக்கு இடது கையிலும் பார்க்க வேண்டியது விதி.

நாடி பார்க்குமுன், பிணியாளரின் கைவிரல்களை நெட்டை வாங்கி, உள்ளங்கையில் சூடு பறக்கத் தேய்த்த பின், மூன்று விரல்களால் அழுத்தியும், விட்டும், மாறி, மாறிப் பார்க்கும்போது, வளி, அழல், ஐயம் ஆகியவற்றில் நிலை வேறுபாடுகளுக்குத் தகுந்தாற்போல் மருத்துவம் செய்யவேண்டியது மருத்துவரின் கடமையாகும்.

**வாத நாடி:**

வாத நாடியின் முன்பாய்ச்சல் வெட்டைச் சூட்டையும், அதனால் உண்டாகும் நோய்களையும், பின் பாய்ச்சல் பித்தத்தின் துணையை நாடி இருப்பதால் வாத பித்தத்தையும், அதனால் உண்டாகும் நோய்களையும், வலப் பாய்ச்சல் வாத சூலையையும், இடப் பாய்ச்சல் வாதக் குன்மத்தையும் குறிக்குமென்பதாம்.

**பித்த நாடி:**

பித்த நாடியின் முன்னியக்கம், பித்த வாய்வையும், அதனாலுண்டாகும் நோய்களையும், மேக வாய்வு முதலியவைகளையும், பின்னியக்கம் கபத்தின் துணையை நாடுவதாக இருப்பதால், பித்த கபத்தால் உண்டாகும் நோய்களையும், சுவாசகாசம் போன்றவைகளையும், வல இயக்கம் பித்த சூலையையும், இட இயக்கம் பித்த குன்மத்தையும் குறிக்கும்.

**கப நாடி:**

கப நாடியின் முன்னியக்கம் கப பித்தத்திலுண்டாகும் பிணிகளையும் க்ஷயம் முதலியவைகளையும், பின்னியக்கம் கபத்தைக் குறிப்பிடுவதால் கப சம்பந்தமான பல பிணிகளையும், வல இயக்கமும், இட இயக்கமும் அசாத்திய நிலைகளையும் முக்கியமாக இட இயக்கம் மரணத்தையும் குறிக்கும் என்பர்.

இடகலையென்ற வாத நாடியானது வலது பாதப் பெருவிரலிலிருந்து கிளம்பி, மூலாதாரத்தின் மார்க்கமாய், இருதயஸ்தானத்திற்கு இடது புறமாய், கண்டம் வரையில் ஓடி, கத்திரிக்கோல் மாறலென மாறி, சிரசிலுள்ள சந்திர மண்டலத்தை அடைந்து, இடது நாசியின் வழியாகச் சென்று, இடக் கரத்தில் பாயுமென்றும், பிங்கலை என்ற பித்த நாடியானது இடது பாதப் பெருவிரலிலிருந்து கிளம்பி, மூலாதாரத்தின் மார்க்கமாய், இருதய ஸ்தானத்திற்கு வலப்புறமாகக் கண்டம் வரையில் ஓடி, கத்திரிக்கோல் மாறலென மாறி, சிரசிற்கேறி, அங்குள்ள சந்திர மண்டலத்தை அடைந்து, வலது நாசியின் வழியாகச் சென்று வலக்கரத்தில் பாயுமென்றும், சுழுமுனையென்ற கப நாடியானது இவை இரண்டிற்குகிடையே மூலாதாரத்தினின்று கிளம்பி, உச்சி வரை ஓடி சூரிய மண்டலத்தை அடைந்து, வலது இடது நாசித்துவாரங்களுக்கு இடையே இயங்கி நிற்குமென்றும், வாதத்திற்கு ஆதாரம் அபான வாயு என்றும், பித்தத்திற்கு ஆதாரம் பிராணவாயு என்றும், கபத்திற்கு ஆதாரம் சமான வாயு என்றும் அறியக் கிடக்கிறது.

நாடிகள் என்றால் நரம்புகள், இவற்றில் 72,000 உண்டு. அதில் விசை நரம்பென ஒன்றுண்டு. அதைத் தான் 'திரி நாடி' எனக் கூறுவர். நமது வலக் கரத்தின் மணிக்கட்டில் ஓர் அங்குலம் விட்டு மேலே தள்ளி விசை

**மருத்துவ விஞ்ஞானத்திற்கு அடிப்படையாக மருத்துவச் சோதனையில் நோயினைத் தெளிவாக உணர்த்துகின்ற ஆற்றல் ஒவ்வொருவர் உடலில் நாடித் துடிப்பே ஆகும். அதன்படி, நோய் இன்னதென்று நாடித்துடிப்பைக் கொண்டு ஆய்ந்து, நோய் தீர்க்கும் முயற்சியில், மருத்துவர் சாதனை பல நிகழ்த்தியுள்ளனர்''**

நரம்பை நமது மூன்று விரல்களாலும் அழுத்திப் பார்க்க வீணையின் விகுவாக நமது விரல்கள் தூக்கிக் குறிப்பு காட்டும். அவ்வாறு காட்டும் குறிப்பினால் இன்ன நாடியென அறிதல் வேண்டும். மேற்கூறிய இடத்தில் மூன்று விரல்களால் அழுத்திப் பார்க்க ஆட்காட்டி விரல் வாதம், நடுவிரல் பித்தம், மோதிர விரல் சிலேத்துமத்தையும் குறிக்கும்.

**நாடி தெரியாக் காலம்:**

எண்ணெய் தேய்த்துக் குளித்த போதும், உடல் நனைந்துள்ளபோதும், உணவு உட்கொண்ட உடனேயும், இன்ப உணர்ச்சியிலாழ்ந்துள்ள போதும், நடந்து வந்த உடனேயும், போதைப்பொருள் உட்கொண்ட போதும், விடம் அருந்திய போதும், பயமுற்றபோதும், விரதமிருந்தவர், விக்கல், வாந்திபேதி, வன்மையாக உள்ளவர்கட்கும், அடிபட்டவர், அதிர்ச்சி அடைந்தவர், மிக்க இரத்தப்போக்கு அடைந்தவர், இரத்தம் மிகவும் குறைந்து காண்பவர்கள், சுவாசத்தை அடக்குபவர் முதலியோருக்கும் நாடி எளிதில் காணவியலாது.

## அரசின் அறிவிப்புகள்
## ஆக்கப் பணிகள்

★ 1989-90-ஆம் ஆண்டிற்கு மட்டும் கல்விக்காக மாநில அரசு 949 கோடி ரூபாய் ஒதுக்கி, அந்த முழுத் தொகையையும் கல்விக்காக மாநில அரசே செலவிட்டது என்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தெரிவித்தார் (22.12.90).

★ தருமபுரி மாவட்டத்தில் ரூ.20 கோடிக்கு வேளாண்மைக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்று மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு வீரபாண்டி எஸ். ஆறுமுகம் அவர்கள் தருமபுரியில் தெரிவித்தார் (15.12.90)

★ தமிழகத்தில் முந்தைய ஆட்சிக் காலத்தில் மூடப்பட்ட 31 ஆலைகளில் 19 ஆலைகள் இந்த ஆட்சியில் திறக்கப்பட்டன. தற்போது 7 ஆலைகள் விரைவில் திறக்கப்படவுள்ளன என்று மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்கள் மதுரையில் தெரிவித்தார் (22.12.90).



# வள்ளுவர் வழியில் பாவேந்தர்

- டாக்டர் எஸ். பத்மநாபன்

உலகப் பொதுமறையாம் திருக்குறளை நமக்குத் தந்த திருவள்ளுவர் வகுத்த வழியில் நம்மை வழி நடத்திச் சென்ற புலவர்களில் இந்த நூற்றாண்டில் தலைசிறந்து விளங்குபவர் நமது புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்.

வாழ்க்கை வாழ்வதற்கே என்ற அடிப்படையில் திருக்குறளை இயற்றிய வள்ளுவர், பிச்சை யெடுத்து வாழும் வழக்கத்தை அறவே வெறுக் கிறார். தலைவிதி, தலையெழுத்து என்ற பாது காவல்களால், பிச்சையெடுக்கும் வழக்கம் வளர்ந்து வருவதைக் கடிந்துரைக்கிறார்.

''இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின்
பரந்து கெடுக இவ்வுலகியற்றியான்''

என்பது அவர் வாக்கு,

''தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜகத் தினை அழித்திடுவோம்'' என்ற பாரதியார் பாடலும் ''கூழுக்கு ஒருவன் அழும்படி ஆண்டிடும் கோலை முறித்திடுவோம்'' என்ற பாரதிதாசனின் பாடலும் இக்குறளின் எதிரொலிகள்தான். வள்ளுவரின் கருத்தைப் பாரதியாரும், பாரதி தாசனாரும் தங்கள் உள்ளத்திலே வாங்கி தங்களது சொற்களால் இங்கே வெளிப்படுத்துகின்றனர்.

''அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது''

என்பது குறள்.

அக்குறளின் பிரதிபலிப்பு தான் ''நல்லதோர் குடும்பம் ஒரு பல்கலைக்கழகம்'' என்ற பாரதிதாசன் பாடல்.

''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை''

என்பது குறள். அதிகார வர்க்கங்களின் அழிவுக்கு அடிகோலும் குறள் இது.

இக்குறளின் விரிவுரைதான் கார்ல்மார்க்ஸ் எழுதிய ''கேப்பிட்டல்'' என்ற நூல். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் பொதுவுடைமைத் தத்துவத்திற்கு வித்திட்டவர் நமது திருவள்ளுவர். அந்தப் பொதுவுடைமைத் தத்துவத்தைத் தனது உயிரெனக் கூறுகிறார் பாரதிதாசன். ''பொது உடைமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப் போம், புனிதமோடதை எங்கள் உயிரென்று காப்போம்'' என்பது பாரதிதாசன் கூற்று.

''பெண்ணிற் பெருந்தக்க யாவுள?'' என்று வினவிய வள்ளுவரின் நாட்டில் பெண்கள் அடிமைகளாக இருப்பதைக் கண்ட பாரதிதாசன் கொதித்து எழுந்தார். ''பெண்கள் அழகிய தமிழ் நாட்டின் கண்கள்'' என்றார். ''மாதர் தம் உரிமை மறுப்பது மாண்பா? மாதர் முன்னேற்றத்தால் மகிழ்வது மாண்பா?'' என்ற வினாவை எழுப்பினார்.

கணவனை இழந்த ஒரு கைம்பெண்ணின் உள்ளத் துடிப்பைப் பாரதிதாசன் நமக்குப் படம் படித்துக் காட்டுகிறார்.

'எனை மணந்தார், இறந்தார்; என் குற்றமல்ல
இறந்தஉடன் மங்கலநாண், நல்லாடைகள்
புனைமலர், குங்குமம், அணிகள் போனதுண்டு
பொன்னுடலும் இன்னுயிரும் போனதுண்டோ?'

என்று விதவைப் பெண்ணின் உள்ளத்திலே நின்று பேசுகின்றார். அதனைத் தொடர்ந்து ''மணவாளன் இறந்தால் பின் மணத்தல்தீதோ? பாடாததேனீக்கள், உலவாத்தென்றல், பசியாத வயிறு பார்த்ததுண்டோ?'' என்றார் பாவேந்தர்.

யாரதிதாசன் கவிதைகள் தமிழனின் காதலை யும், வீரத்தையும் படம் பிடித்துக் காட்டுகின்றன. பாண்டியன் பரிசில் ஒரு காட்சி. கதாநாயகன் வேலன், படைவீரர்களிடம் சிக்கிய இளவரசி அன்னத்தை மீட்டுத் தன் தாயிடம் சேர்த்து, திரும்பவும்களம் நோக்கிச் செல்கிறான். இதைக் கண்ணுற்ற அன்னம் வேலனின் தாய் ஆத்தாளிடம் ''இனியும் அவர் போர்க்களம் செல்கின்றாரே. உன் மகனது நிலை என்ன ஆகும்?'' என்று கேட்க, அந்தத் தாய் ''**ஊர் மீட்க என் மகன் சாகட்டும்**'' என்று கூறுகின்றாள். இதைப் படித்ததும் சங்க காலத்திலே வாழ்ந்த வீரப்பெண்கள் நம் கண் முன்னால் நிற்கின்றார்கள். ''தன் தந்தை யானைப் படையைக் கொன்று இறந்தார். நேற்றோ இவள் கணவன் களத்திலே இறந்தான். அதன் பின்னரும் தன் ஒரே மகனைப் போருக்கு அனுப்புகின்றாள் ஒரு தாய். என்னே இவள் கருதியது?'' என்று கேட்கிறார் சங்கப் புலவர் ஒக்கூர்மாசாத்தியார். அவ்வித வீர உணர்ச்சிமிக்க பெண்கள் வாழையடி வாழையாகத் தமிழ்நாட்டிலே தோன்றியுள்ளனர் என்று பாரதிதாசன் நமக்குச் சுட்டிக் காட்டு



## பார்த்தோம் படித்தோம்!



**1.12.90** இதழில் வெளிவந்த மு.விவேகானந்தனின் 'காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான்' என்னும் கட்டுரை சிறப்பாக இருந்தது.

—ஏ.கந்தசுவாமி
திருப்பூர்

'பல்லக்கும் காட்டு நாயக்கன்களும்' கட்டுரை வெளியிட்டதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—தங்கராஜ் காட்டுநாயக்கன்
காஞ்சிபுரம்

வேளாண்மைப் பகுதிக்குப் பக்கங் களைக் கூட்ட வேண்டுகிறேன்.

—எம். சேகர்
கத்திரிசேரி

'மாணவர் பக்கம்' ஒவ்வொரு இதழிலும் தொடர்ந்து வெளியிடுங்கள்.

—சு.புஷ்பராஜன்,
மன்னார்குடி

**16.12.90** இதழில் கவிஞர் சுரதா அவர்களின் மலரும் நினைவுகள் மனத்தைத் தொட்டது.

—மு.வேதபுரி
கோட்டுப்பாக்கம்

'ஒன்றா இரண்டா எடுத்துச் சொல்ல' என்னும் கருத்தோவியம், அரிய செய்தி களை எளிதில் புரிய வைக்கிறது.

—ப.முருகேசபாண்டியன்
கரப்பாடி

அறிவியல் மேதை தாமஸ் ஆல்வா எடிசன் கட்டுரை (மாணவர் பக்கம்) அருமை.

—மு. கண்ணன்
குமுக்கோட்டை

கின்றார். இவ்வீரம் தமிழ்ப் பெண்களின் தனிக் குணம் என்னும் கருத்துப்பட ''கண்ணெடுத்தும் பார்த்தோமா? கைவாளோடு கடும்போரில் தனி யாகக் கிடந்த சேயை'' என்று ஆத்தாளின் வாயால் நமக்குக் கூறுகிறார்.

''கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்.

என்ற குறளின் எதிரொலியை நாம் இங்கே கேட்க முடிகிறது. ''கையில் ஏந்திய வேலை ஒரு யானையின் மேல் எறிந்து துரத்திவிட்டு, எதிரி யோடு போரிட வேறு வேல் எங்கே என்று தேட, தனது மார்பிலே எறியப்பட்டிருந்த வேலைக்கண்டு அதனை விடுத்து மகிழும் வீரனை'' வள்ளுவர் நமக்குக் காட்டுகின்றார். அதே வீரனின் சாயலைப் பாரதிதாசனின் பாத்திரப் படைப்பான வேலனிடம் நாம் காண முடிகிறது.

அழகை ஆராதிப்பவன் கவிஞன். இயற்கை யின் அழகை ஆதாரமாகக் கொண்டு எழுந்த இலக்கியங்கள் எண்ணற்றவை. ஒரு பெண்ணின் அழகைத் திருவள்ளுவர் மிகவும் அருமையாக

''அணங்குகொல்! ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலும் என் நெஞ்சு''

என்று பாடுகிறார். ஒருநாள் அழகுத் தெய்வம் பெண்ணின் உருவாக பாரதியார் முன்பு காட்சி அளித்ததாக அவரது பாடல் ஒன்று தெரிவிக் கின்றது.

''மங்கியதோர் நிலவினிலே
கனவினிது கண்டேன்
வயது பதினாறிருக்கும்
இளவயது மங்கை
பொங்கி எழும் பெரு நிலவு
போன்ற வொளி முகமும்
புன்னகையின் புது நிலவும்
போற்ற வரும் தோற்றம்
துங்க மணி மின்போலும்
வடிவத்தாள் வந்து
தூங்காதே யெழுந்தென்னைப்
பாரென்று சொன்னாள்
அங்கதனில் கண் விழித்தேன்
அடடாவோ; அடடா
அழகென்னும் தெய்வந்தான்
அதுவென்றே அறிந்தேன்

அழகுத் தெய்வம் பாரதியின் நெஞ்சிலே கற்பனை உருவாகத் தோன்றி எழிலூட்டுகிறார்.

பாரதிதாசனும் அழகைப் பெண்ணாகவே பார்க்கின்றார். அவரது ''அழகின் சிரிப்பு'' இயற்கையன்னைக்கோர் எழிலோவியம். அந் நூலின் தலைப்பே அவரது கற்பனையின் சிகர மாகத் திகழ்கின்றது. அழகு சிரிக்குமா? என்ற கேள்வி இங்கே எழுகின்றது. அழகு நம்மைப் பார்த்துச் சிரிக்காது. கவிஞனைக் கண்டால் சிரிக்கும். அவன் கவிதையைப் படிப்பவர், கற்பனை மனம் பெற்றால் அழகு அவர்களையும் பார்த்துச் சிரிக்கும். இயற்கையழகு அனைத்துமே சிரிக்கக் காண்கிறார் பாரதிதாசன்.

''காலையிளம் பருதியிலே அவளைக்கண்டேன்!
கடற்பரப்பில் ஒளிப்புனலில் கண்டேனந்தச்
சோலையிலே மலர்களிலே தளிர்கள் தம்மில்
தொட்ட இடமெலாம் கண்ணில் தட்டுப்பட்டாள்
மாலையிலே மேற்றிசையிலிளகுகின்ற
மாணிக்கச் சுடரில் அவள் இருந்தாள் ஆலஞ்
சோலையிலே கிளைதோறும் கிளிகள் கூட்டம்
தனில் அந்த ''அழகென்பாள்'' கவிதை
தந்தாள்''

அழகுக்கு அழகு சேர்த்து அதைச் சிரிக்கவும் வைத்தார், வள்ளுவர் வழி வந்த பாரதிதாசன்.

# பொங்கலோ பொங்கல்!

—கவிஞர் பல்லவன்

வழிந்திடும் வியர்வைத் துளிகளை வயலில்
விதைத்திடும் உழவர் உயரட்டும்!
வையகம் வாழ வறுமையை விரட்டி
வாழ்விக்க வந்தோர் வாழட்டும்!

தொழில்வளம் மிகுந்து தோழமை வளர்ந்து
தொழிற் சாலைகள் பெருகட்டும்!
தோள் வலிவாலே வாழ்வளிப் போரின்
துயரங்கள் தூர விலகட்டும்!

வழிவழி வந்த அறநெறி நின்று
வையகம் அன்பில் செழிக்கட்டும்!
வளர்தொழிற் கல்வி அறிவியல் சார்ந்து
வாழ்க்கைக்(கு) என்றும் உதவட்டும்!

மொழிகளில் சிறந்த மூவாத் தமிழ்மொழி
முத்தமிழ் மண்ணை ஆளட்டும்!
முப்பால் அமுதப் பொங்கலோ பொங்கல்
முயற்சி திருவினை ஆகட்டும்!





# பொங்குக பொங்கல் பொங்குகவே!

ஏற்றத் தாழ்வை அகற்றிடவே
இன்னல் இனியிலை என்றிடவே
ஆற்றல் கொண்டே உழைத்திடவே
அன்பைப் பெருக்கி வாழ்ந்திடவே
ஏற்றம் எதிலும் பெற்றிடவே
எண்ணும் எழுத்தும் கற்றிடவே
போற்றும் கலைகள் வளர்த்திடவே
பொங்குக பொங்கல்! பொங்குகவே!

பாரதி தாசன், அம்பேத்கர்
பாரினில் இவர்க்கெலாம் நூற்றாண்டு!
ஆரம் சூட்டி மகிழ்ந்திடவே
அண்ணா பெரியார் ராஜாஜி!
சாரதி யாகி உயர்ந்ததுபோல்
சாதி சமயச் சழக்குகளைப்
போராடி வீழ்த்திட இணைவதற்குப்
பொங்குக பொங்கல்! பொங்குகவே!

—கவிஞர் பூங்கோவன்



# திருவள்ளுவர் சொல்லாட்சி மாட்சி

- புலவர் கா. கோவிந்தன்

**உ**லகில் நனிமிகச் சிறிய பொருள் அறிவியல் வளராத வரை கடுகு, அறிவியல் வளர்ந்து விட்டநிலையில் அணு. அளக்கலாகா ஆழமும் பரப்பும் உடையது கடல். ஒரு கடலின் வரப்பும் ஆழமுமே அத்தகையது என்றால் ஏழுகடல்கள் ஒன்று கலந்து விட்ட நிலையில் அவற்றின் ஆழமும், பரப்பும் அம்மம்மா! எண்ணிப் பார்க்கவும் இயலாதனவாம். அவ்வேழு கடல்களையும் கடுகு ஒன்றைத் துளைத்து, அதன் அகத்தே அடக்குவது அதனினும் அணுவைத் துளைத்து, அதனகத்தே அடக்குவது அரிதினும் அரிது என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

திருவள்ளுவர் இயற்றிய குறட்பா ஒவ்வொன்றின் அளவுச் சிறுமையும், அதுகூறும் பொருட் பெருமையும் அக்குறட்பாக்களை அறிந்த புலவர் பெருமக்களைக் ''கடுகைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்'' என்றும், ''அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்'' என்றும் பாராட்ட வைத்துவிட்டன.

அவ்வாறு பரந்த பொருளைச் சுருங்கிய வாய்பாட்டால் கூறுவதால் பெருமை கொண்ட வள்ளுவப் பெருந்தகையார், சொல் இலக்கணத்திற்கு மட்டும் ,

1) அவை அஞ்சாமை 2) அவை அறிதல் 3) இனியவை கூறல் 4) கேள்வி 5) சொல்வன்மை 6) பயனில சொல்லாமை 7) புறங்கூறாமை 8) வாய்மை என்ற அதிகாரங்களை-அதாவது, எண்பது குறட்பாக்களை ஒதுக்கியிருப்பதோடு, சொல் குறித்து, பல்வேறு இடங்களில், பல்வேறு நிலைகளில் 33 குறட்பாக்கள் யாத்துள்ளார்.

இவ்வாறு . சொல்லிலக்கணத்திற்காக 113 குறட்பாக்களை- அதாவது, தம் முழுநூலின், சற்றுக் குறைய பன்னிரண்டில் ஒரு கூற்றினை ஒதுக்கியிருப்பதன் மூலம் சொற்களைத் தேர்ந்து ஆள்வதில் எத்துணை விழிப்பாய் இருக்க வேண்டும் என்பதை வற்புறுத்தியுள்ளார். இவ்வாறு வற்புறுத்தும் அவர், அவ்வழியில் சொற்களை ஆளாதிருப்பாரோ? “ஓதி உணர்ந்தும், பிறர்க்கு உரைத்தும் தான் அடங்காப் பேதையர்'' அல்லரே அவர்! ஆகவே உரைத்த வழியே சொற்களைத் தேர்ந்து ஆண்டிருப்பார்; ஆண்டுள்ளார்.

திருவள்ளுவர் தாம் இயற்றிய ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்களையும் இன்ன சொல்லை எடுத்து விட்டு, அதன் இடத்தில் இன்னசொல்லைப் போட்டால் பொருத்தமாக இருக்கும் என எவரும் எண்ணவும் இயலாநிலையில், அப்படியே மாற்றிப் போட்டால், அக்குறட்பாவின் பொருட் செறிவே சீர்குலைந்து போகும் வகையில், வடித்துத் தந்துள்ளார். எடுத்துக் காட்டுக்கு ஒரு பாட்டு:

'ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்'.

- குறள்: 69.

இக்குறட்பாவில், 'ஈன்ற, பொழுது, இன், பெரிது , உவக்கும் , தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்' எனப் பதினோரு சொற்கள் உள்ளன; இனி அவை ஒவ்வொன்றின் இயல்பினையும் ஆராய்வோம்.

**ஈன்ற:**

''நன்கலம் நன் மக்கட் பேறு'' (குறள்:60) ''அறிவறிந்த மக்கட் பேறு'' (குறள்:61) என்ற குறட்பாக்களையும் ''பேறுகாலம்'', ''பெற்றவட்கே தெரியும் பிள்ளையின் அருமை'',''பெற்றால் தான் பிள்ளையா'' என்ற உலக வழக்கையும் கருத்தில் கொண்டு நோக்கிய வழி ''ஈன்ற'' என்ற சொல்லிற்குப் பதிலாகப் ''பெற்ற'' என்ற சொல்லைப் போட்டிருக்கலாம் என எண்ணத் தோன்றும், ஆனால் அதைப் போடவில்லை, காரணம்; இரு சொற்களுக்கும் உள்ள பொருள் நிலையே! ''நல்லாறு எனினும் கொளல் தீது; மேல் உலகம் இல் எனினும் ஈதலே நன்று'' என்பது (குறள்:222) ''கொள்வது தீது கொடுப்பது நன்று'' (கம்பராமாயணம்) வாணன் வைத்த விழுநிதி பெறினும் பழி நமக்கு எழுக என்னாய்; விழுநிதி ஈதல் உள்ளமொடு இசை வேட்டு வையே'' (மதுரைக் காஞ்சி 203-205) ''புகழ் எனின் உயிரும் கொடுக்குவர்; பழிஎனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்''. (புறம் 182)

இச்சான்றோர் வாக்குகள், கொள்வார் சிறியர்; கொடுப்பார் பெரியர் என்பதை உறுதி செய்கின்றன. ஆகவே, பெற்ற என்ற சொல்லைப் போட்டால், தாய் சிறுமையுடையவளாகி விடுகிறாள். வள்ளுவர். அச்சிறுமையைத் தாய்க்குச் செய்ய விரும்பவில்லை. சிறுமை செய்ய விரும்பாமை மட்டுமன்று; ஈன்ற என்ற சொல்லை அமைத்ததன் மூலம் தாயின் பெருமையை மேலும் காட்டியுள்ளார். ''ஈ என் கிளவி இழிந்தோன் கூற்றே'' (தொல். சொல். 439) என்பது தொல்காப்பியம்: அதாவது கொடுப்போர் - உயர்ந்து, கொள்வோர் தாழ்ந்த வழி; தாழ்ந்தோர் உயர்ந்தோரைப் பார்த்து ஏதேனும் கேட்குங்கால் ''ஈ'' எனக்கூறல் மரபு. ஆக ஈன்ற என்பதால், தாய் - உயர்ந்து, உலகெலாம் தாழ்ந்த நிலை உண்டாகி தாய்க்குப் பெருமை சேர்ப்பதாயிற்று. ''தம்மின் தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க் கெல்லாம் இனிது'' என்கிறார் வள்ளுவர் (68). ஆக, அவள் ஈன்ற மக்கள் அறிவால் மாபெரும் பயன் அடைந்த இம்மாநிலத்து மக்கள் எல்லாம் தாழ, அவள் உயர்ந்து விட்டாள், ''ஈன்ற'' என்ற சொல்லை ஆண்ட வள்ளுவர் துணையால்!

**பொழுது:**

''அமிழ்தினும் ஆற்ற இனிதே, தம் மக்கள் சிறுகை அளாவிய கூழ்'', ''மக்கள்

# காலக் கூறுக்கு ஏற்ற இலக்கியம் திருக்குறள்

**மா**னுட பண்பியல்புகளுக்கு ஓர் உறைவிட மாய் - வாழ்க்கை வழி, நெறி முறைகளுக்கான வழிகாட்டியாய் அமைந்துள்ளது நமது திருக் குறள். "காலக் கூறுக்கு ஏற்ற இலக்கியம் திருக்குறள் அன்றி உலகினில் வேறு ஏது?" என்றும் நாம் கேட்டிடலாம், எவரைப் பார்த்தும். உலகெங்கணும் பறை சாற்றிடலாம், அஞ்சிடத் தேவையில்லை.

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு'- நமது நாடு. எதனால் இப்படிக் கூறினார் பாரதியார்? அந்த வள்ளுவர், திருக்குறள் என்ற பொய்யாமொழி யினை - வாழ்க்கை நெறிக் கோட்பாட்டு மறை தனைத் தீட்டியதால்தான்!

—பேரறிஞர் அண்ணா

மெய்தீண்டல் உடற்கின்பம்; மற்றவர் சொற் கேட்டல் இன்பம் செவிக்கு" "குழல் இனிது, யாழ்இனிதுஎன்ப தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர்" (குறள்: 64, 65, 66) இக்குறட்பாக்கள் - வழி மக்கள், தம்மைப் பெற்றவர்களுக்கு எப்பொழுதெல்லாம் இன்பம் ஊட்டுவர் என்பதை விளக்கியுள்ளார் திருவள்ளுவர்.

"குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்கள்"

என்ற புறப்பாட்டின் (188) மூலம் அம்மக்கள் மகிழ்ச்சிதரும் நிலைகளை விளக்கியுள்ளார், பாண்டியன் அறிவுடை நம்பி என்ற பாவலகாவலன்.

"பெற்ற அன்றினும், பிஞ்ஞகன் பிடித்த அப்பெருவில் இற்ற அன்றினும் எறிமழுவாளவன் இழுக்கம் உள்ள அன்றினும் பெரியதோர் உவகையன் ஆனான்" (கம்ப. அயாத்தி: மந்திரம்: 42) என்பதன் மூலம் மக்கள் எந்நிலையி லெல்லாம் பெற்றவர்களுக்கு மகிழ்ச்சி தருவர் என்பதை விளக்கியுள்ளார் கம்பர்.

இவ்வாறு மகன் பிறந்து பெரிய வனாகும் வரையிலான அவன் வாழ்க்கை யில் நிகழும் ஒவ்வொரு சிறப்புக் கண்டும் மகிழ்பவள் தாய். அவ்வாறாகவும் ஈன்ற பொழுதைய இன்பத்தை மட்டும் தனித்துப் பிரித்துக் கூறியிருப்பானேன்? மகளைப் பெறும் வரை, அவள், அவள் பெற் றோர்க்கு மகள். அவள் கணவனுக்கு மனைவி; வாழ்க்கைத் துணை. ஆனால் மகனைப் பெற்றதும் இவை யெல்லா வற்றிலும் சிறந்த தாயாம் நிலையினை அவள் அடைகிறாள். தம்மின் தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து மண்ணுயிர்க் கெல்லாம் இனிது என்ற வகையில் உலகம் போற்றும் ஒருவனை உலகிற்கு அளித்த பெருமைக்கு உரியவளாகி விடு கிறாள். 'மலடி மலடி என்று மாநிலத் தார் ஏசாமல், தாய் என்னும் பெருமை தனைத் தரணியில் பெற்றவளாகிறாள்.' ஆகவே ஈன்ற பொழுதைய இன்பத்தைச் சிறப்பித்துக் கூறியுள்ளார் குறளாசிரியர்.

**இன்:**

இன் எனும் இடைநிலைச் சொல் காட்டிலும் எனும் பொருள் உடையது. அதை விடுத்து, "ஈன்ற பொழுது - பெரிது உவக்கும்" எனக் கூறியிருந்தால், மேலே கூறிய மகனின் வாழ்க்கை நிலை யில் காணலாகும் உயர்வு கண்டெல்லாம் மகிழ மாட்டாள், ஈன்ற பொழுது மட்டுமே மகிழ்வாள் எனப் பொருள் தந்து, தாய்க்குப் பெரியதொரு இழுக்கைத் தந்து விடும். அதைத் தவிர்க்க "இன்" இன்றியமையாது இட வேண்டியதாயிற்று.

**பெரிது:**

பெரிது என்ற இச்சொல்லை விடுத்து "ஈன்ற பொழுதின் உவக்கும்" என்று கூறியிருந்தால், மகன் வாழ்க்கையில் காணலாகும். பல்வேறு வளர்ச்சி நிலை யிலும் தாய் அடையும் இன்பம் அனைத்தும் ஒரு நிலையினவாம் எனப் பொருள் தந்து, ஈன்ற பொழுதைய இன்ப அளவைக் குறைத்துவிடும். அக் குறைபாட்டினைத் தவிர்த்து; அப்பொழு தொல்லாம் மகிழ்வாள். ஆனால், ஈன்ற பொழுதில் பெரிதும் உவப்பாள் என ஈன்ற பொழுதைய இன்பப் பெருக்கைத் தனியே பிரித்துக் காட்ட, "பெரிது" என்பது வேண்டப்பட்டதாயிற்று.

**உவக்கும்:**

மகிழும், களிக்கும் என்பன போலும் சொற்களில் யாதேனும் ஒன்றினை ஆண்டிருந்தாலும் குற்றம் இல்லை. ஆனால் உவக்கும் என்ற சொல்லைத் தேடித் தெரிந்து ஆண்டுள்ளார்.

உவகையாவது; அளவிறந்த மகிழ்ச்சி, அளவிறந்த களிப்பு, அளவிறந்த இன்பம்; நெஞ்சு நிறைந்து வழியும் மகிழ்ச்சி; களிப்பு "மெய்ம்மலி" உவகை (நற்: 43, குறுந்: 398, புறம்: 45) அகம்மலி உவகை (மலைபடுகடாம். 84) "நெஞ்சமலி உவகை" (பதிற்று: 40,26) என்ற ஆன் றோர் வாக்குகளை அறிக! ஈன்று புறம் தந்த தன்கடன்; சான்றோன் ஆக்கிய தந்தை கடன் ஆகியவற்றிற்கு ஈடாக மகன்பால் தான் எதிர்பார்த்த பெருமை யைக் காட்டிலும் மிகப் பெரும் பெருமை யைக் கண்டதனால், தாய் அடைந்த அளவிறந்த மகிழ்ச்சியை உணர்த்த வேண்டி யிருத்தலின், உவகை என்ற சொல்லை ஆங்கு இடவேண்டியதாயிற்று. "சிறுவன் களிறு எறிந்து பட்டனன் என்னும் உவகை, ஈன்ற ஞான்றினும் பெரிதே" (புறம்: 277) "சிதைந்து வேறாகிய படு மகன் கிடக்கை காணூஉ, ஈன்ற ஞான்றினும் பெரிதும் உவந்தனளே" (புறம்: 278) என ஆண்டெல்லாம் கூட "உவகை" என்ற சொல்லையே ஆண்டி ருத்தல் காண்க.

**தன்:**

மகன்களெல்லாம் ஒரே பண்புடைய ராகி விடுவதில்லை. நாட்டவர் போற்றும் நல்லவனாகப் புகழ் பெறுவான் ஒருவன். ஊரெல்லாம் பழிக்க நன்று உள்ளக்கால் விற்றற்குரிய கயவனாகிக் கழிவன் ஒருவன்; பிறர் முன்னவனைக் காட்டி, "இவன் யார்" என்றவழித் "தன் மகன்" எனப் பெருமிதம் தோன்ற பதில் அளிப்பாள் தாய்: பின்னவனைக் காட்டிக் கேட்ட வழி "அவன் யாவனோ? யான் அறியேன்" என்பாள் தாய். நல்ல மகனை நாடு போற்றும்; அல்லாதவனை அவனி தூற்றும்.

"இம்மை உலகத்து இசையொடும் விளங்கி
மறுமை உலகமும் மறுவின்று எய்துப
செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச்
சிறுவர்ப் பயந்த செம்மல் (அகம்: 66)

என நல்ல மகனைப் பெற்றவளைப் பாராட்டியதன் மூலம் அந்நல்ல மகனைப் பாராட்டியுள்ளார் புலவர் செல்லூர்க் கோசி கண்ணனார்.

தகாக் காதல் கொண்டு, தவறு செய்து கொலையுண்டு போனான் மகன் எனக் கேட்ட சோழ மன்னன் ஒருவன்.

"மகனை முறை செய்த மன்னவன் வழி ஓர்
துயர் வினையாளன் தோன்றினன் என்பது
வேந்தர் தம் செவி உறுவதன் முன்னர்
ஈங்கு இவன் தன்னையும் ஈமத்து ஏற்றுக"
- மணிமேகலை: 22-210-213.

என ஆணையிட்டான் எனவும், அம்மகன் கொலையுண்டது கேட்ட அவன் தாய் அரசமாதேவி ஆற்றாது அழுவது கண்ட ஒரு மூதாட்டி.

"தன் மகன் காத்தன்று, பிறர் மகன்
கொண்டன்று,
என் எனப்படுமோ நின் மகன் மடிந்தது?"
- மணிமேகலை (23: 17-18)

எனக் கேட்டுத் துயர் ஆற்றினாள் எனவும் கூறி, நல்லவன் அல்லாத மகனைப் பழித்துள்ளார் சீத்தலைச் சாத்தனார்.

பழியொடு படராமை மட்டுமன்று; புகழொடு பொலிந்தவன் மகன் ஆதல் கண்டு தன மகன் எனப் பெருமை கொள்வாள் தாய் என்பதை உணர்த்த "தன்" என்பது இன்றியமையாது இடப் பட வேண்டியதாயிற்று.

மேலும், பெற்ற தாயைப் பேணி வளர்க்கும் மகனும் உலகில் உள்ளான். பெற்ற தாய் மடிப்பிச்சை எடுக்க, பிறி தோரிடத்தில் பெருக வாழும் மகனும் உள்ளான். இந்த மகன், பின்னவன் போன்றவன் அல்லன். மாறாக முன்னவன் போன்றவன் என்பதை உணர்த்தவும் "தன்" என்பது தேவைப்பட்டது.

**மகன்:**

மேலே கூறிய அனைத்துப் பண்பு களும் - மகளுக்கும் பொருந்தாவோ? ஏன் மகளைக் கூறாது மகனைக் கூறினார்? மகனுக்கு நிகராக வளர்க்கப்பட்டாலும் பருவம் வந்துற்றதும் தக்கான் ஒருவனைத் தேடி அவனுக்கு மணம் செய்து கொடுத்து அவனோடு அவன் மனைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டியவள் மகள்; பெற்றோர் அனுப்பி வைக்கவில்லை என் றால், தக்கான் ஒருவனைத் தானே தேர்ந்து கொண்டு அவன் மனை சென்று வாழவேண்டியவள். மகள், பிறந்த மண்ணில் நெடிது நாள் இருக்கத் தக்கவள் அல்லள். புகுந்த வீட்டில் அவள் நடத்தும் வாழ்க்கை முறையால் பிறந்த வீட்டிற்கும், புகுந்த வீட்டிற்கும் பெருமை சேர்க்க வேண்டியவள்.

பல்லாற்றாலும் மணந்தரும் சந்தன மரம். அதை அரைத்துச் சந்தனக் குழம் பாக்கித் தம் மெய்யில் பூசிப் பயன் படுத்திக் கொள்வார்க்கல்லாது, அது மலையிடத்தே முளையிட்டு வளர்ந்தாலும் அது அம்மலைக்கு எவ்விதப் பயனையும் தராது.

# சிலப்பதிகாரம் தரும் செய்தி



| | |
|---|---|
| கரியல் | இறஞ்சி |
| பேடகம் | வெண்பொத்தி |
| பரியட்டக்காசு | செம்பொத்தி |
| வேதங்கம் | பணிப்பொத்தி |
| புங்கர்காழகம் | கோகிலம் |
| சில்லிகை | பீதகம் |
| தூரியம் | பச்சிலை |
| பங்கம் | அரத்தம் |
| தத்தியம் | துண்டுகில் |
| வண்ணடை | சுண்ணம் |
| கவற்றுமடி | வடகம் |
| நூல்யாப்பு | பஞ்சு |
| தருக்கு | இரட்டு |
| தேவாங்கு | பாடகம் |
| பொன்னெழுத்து | கோங்கலர் |
| குச்சரி | கோபம் |
| தேவகிரி | சித்திரக்கம்மி |
| காத தூலம் | குருதி |

"என்ன சொற்கள் இவை? பழக்கத்தில் உள்ள வையாய்க் காணோமே! பொருளும் விளங்க வில்லையே" என்று யோசிக்கிறீர்கள் அல்லவா? - அர்த்தமற்ற சொற்களல்ல அவை.

| | |
|---|---|
| சாடின் | பேடா |
| பாப்ளின் | ப்யூசி சில்க் |

இவை புரிகின்றன அல்லவா? இவை போன்று தான் அவைகளும்! துணி வகைகளின் பெயர்கள்! நாகரிக உலகிலே நடமாடுபவர்களின் நாவில் நர்த்தனமாடும் சொற்கள்! வெளிநாட்டுத் துணி வகைகளின் சொற்கள்!

அவை போன்றவைதான், முன்னாலே நாம் பொறித்திருப்பவை - ஆடைகளின் பெயர்கள்!

நம் நாட்டு ஆடைகள் பட்டாலானவை - பாண்டியனின் கொலு மண்டபத்தை அலங் கரித்தன - ரோம் நாடு வரை சென்றன.

இவ்வளவு வகையான பட்டாடைகளை இங்கு, தமிழர்கள் முன்பு தயாரித்தனர். கட்டுக்கதையல்ல- இட்டுக் கட்டியதல்ல - இலக்கிய ஆதாரம் - சிலப்பதிகாரத்திலே காணலாம் - இந்தத் தொழி லின் சிறப்பையும், தமிழரின் நாகரிகத்தையும், வாணிபத்தையும் விளக்கும் இச்செய்தியை!

—பேரறிஞர் அண்ணா



# கண்கள் இரண்டையும் கதிரவனாக்கு

— கவியரசர் இளந்தேவன்

தெற்கு நோக்கிக் கதிரவன் வந்தான்
தென்னவர் நெஞ்சம் மகிழ்ச்சியில் ஆழ்ந்தது!
புறக்கள் கூடத் தமிழ்மணம் வீசின!
பொங்கலின் நெய்மணம் புவியெலாம் கமழ்ந்தது!

கரும்பிலே இயற்கை ஊற்றிய சாற்றைக்
கடைவாய்ப் பற்கள் பிழிந்து தருகையில்
இரும்பிலே செய்த சிலைகளின் வாயிலும்
எச்சிலின் ஊற்றுக் கண்கள் திறந்தன!

தைமகள் மஞ்சளும் இஞ்சியும் ஏந்தித்
தமிழ்மகள் வாசலில் காத்திருக் கின்றாள்!
மைவிழிக் கன்னியர் மலரிதழ் குவித்து
மங்கலப் பொங்கலை வாழ்த்துகின் றார்கள்!

விண்ணிலே கதிர்வலம் வருவது இயற்கை
வீட்டிலும் கூட்டிலும் கதிர்வர வேண்டும்!
கண்கள் இரண்டையும் கதிரவ னாக்கு!
காற்று வெளியெலாம் ஒளிமய மாக்கு!



# பசுமை சேர்க்கும் பொங்கல்

புலவர் தமிழ்ப்பித்தன்

மார்கழிப் பனியை நீக்கி
மாண்பினைக் கொடுக்கும் தையாள்
ஊர்வலம் வந்தாள்; மக்கள்
உலவிட வனப்பம் தந்தாள்!
பேர், புகழ் அனைத்தும் இங்கே
பெருகியே நிறையச் செய்தாள்
ஏர்தரும் உழைப்பைக் கொண்டு
இன்பமே விளைத்தாள் மெய்யாய்

உலகினை வாழச் செய்யும்
உழவனே உயர்ந்தோன் ஆவான்
நிலவிடும் பசியின் துன்பம்
நீக்குவோன் அவனே யன்றோ?
குலவிடும் பசுமை எல்லாம்
குலுங்கியே பொலியச் செய்யும்
உழவினை வாழ்த்திப் போற்ற
உதித்ததே பொங்கல் நாளாம்

கதிர்மணி இலையில் வைத்து
கன்னலை அருகே வைத்து
புதியதோர் பானை ஏற்றி
புத்தரிசி வெல்லம் இட்டு
சதிர்புரி வளையல் கொஞ்சும்
தளிர்க்கர மடவார் எல்லாம்
நதியெனப் பொங்கல் செய்வர்
நன்றியை உழவர்க் கீவர்

பொங்கலின் இனிமை எல்லாம்
பொங்கிடும் சிறுவர் நாவில்
பொங்கலின் பெருமை எல்லாம்
புரிந்திடும் நமது பண்பில்
திங்களில் ஒளியைச் சேர்க்கும்
செங்கதிர் போலத் தோன்றி
பொங்கலில் பசுமை சேர்க்கும்
உழவரைப் போற்றல் வேண்டுப்



## பட்டை தீட்டிய வைரம்

**வைரத்தைப் பட்டை தீட்டத் தீட்ட அதனுள் பல வண்ணங்கள் தெரிவது போல், திருக்குறளை ஆராய, ஆராய, அதில் பல புத்தம் புதிய அருமையான கருத்துக்கள் புலப்படும்.**

## பேச்சினால் அல்ல

**திருவள்ளுவர் பிறந்த நாட்டுக்கு உரியவர்கள் நாம்; அவர் வாழ்ந்த மண்ணில் வாழத் தக்க வர்கள் நாம் என்பதைப் பேச்சினால் அல்ல - செயலினால் மெய்ப்பித்துக் காட்ட வேண்டும்.**

தலையாய சிறப்பு வாய்ந்த வெண் முத்துக்கள், அவற்றை அணியாக்கி அணிந்து கொள்வார்க்குப் பயன்படுவ தல்லது, அவை கடலிடையே பிறப்பினும், அக்கடலுக்கு எவ்விதப் பயனையும் தருவது இல்லை.

ஏழு நரம்புகளையும் கூட்டிய வழி எழும் இனிய இசை, பாடுவோர்க்கும், அவ்விசையினைக் கேட்பார்க்கும் பயன் படுவதல்லது, அவ்விசை யாழினிடையே பிறக்கினும், அந்த யாழுக்கு யாதொரு பயனையும் அளிப்பதில்லை.

சந்தனமும், முத்தும், இசையும் போன்ற வள்தான் மகள்: புகுந்த வீட்டார்க்குப் பயன்படுவதல்லது பிறந்த வீட்டாருக்குப் பயன்படப் பண்ணுவது முறையாகாது என்கிறார், பாலை பாடிய பெருங் கடுங்கோ.

ஆகவே தான் மகளைக் கூறாது மகனைக் கூறினார் வள்ளுவர்.

***சான்றோன்:***

முடியாட்சிக் காலமாயின் வேந்தருள் வேந்தன். குடியாட்சிக் காலமாயின், குடியரசுத் தலைவர்; பெருநாட்டின் பிரதம அமைச்சர்; மாநிலமாயின் முதல் அமைச்சர்; பல்கலைக்கழகத் துணை வேந்தர்; தலைமைப் பேராசிரியர், சிறந்த மருத்துவர், சிறந்த பொருளாளர், சிறந்த வணிகர், சிறந்த தொழிலதிபர், பெரு நிலக்கிழார், சிறந்த நடிகர், சிறந்த ஆட்டக்காரர், எனப் பலநிலைப் பெரியார்கள் எல்லாம் இருக்கவும், அவர்களை விடுத்துத் தன்மகனைச் சான்றோனாம் நிலையில் வைத்தமைக்கு யாது காரணம்?

ஒரு நாட்டிற்கு இவர்கள் எல்லாம் தேவை என்றாலும், இவர்களைப் பெற்று விட்டதால் மட்டுமே ஒருநாடு நாடாகி விடாது. எவ்வழி நல்லவர் ஆடவர்; அவ்வழி நல்லை; வாழிய நிலனே'' (புறம்: 187) என்றார் ஔவையார். ஒரு நாட்டிற்குப் படை வேண்டும். பசியார உண்ண உணவு வேண்டும். பல்வேறு அணிகலன் அளிக்கும் பொருள் வளம் வேண்டும். ஆனால் இவை மட்டும் போதா, அந்நாட்டில் சான்றோர்களும் இருத்தல் வேண்டுவது இன்றியமையாதது.

அரசர் முதல், ஆட்டக்காரன் வரை யான பல்நிலைப் பெரியார்களாக அவர்கள் இருக்கலாம். ஆனால் அவர்களை எல்லாம் மக்கட்டன்மை யுடையவர் எனக் கொண்டு விடமுடியாது: ''மக்களே போல்வர் கயவர்'' (குறள். 1071) என் றார் வள்ளுவர். அதனால் உருவ ஒற்று மையை மட்டும் கொண்டு ஒருவரை மக்கள் தன்மை வாய்ந்தவர் எனக் கொண்டு விடமுடியாது; மக்கட்டன் மையாலும் அவர்கள் நிரம்பியவராதல் வேண்டும். அப்போதுதான் அவர்கள் மக்களாகக் கருதப்படுவர் ''உறுப்பு ஒத்தல் மக்கள் ஒப்பு அன்று; வெறுத்தக்க பண்பு ஒத்தல் ஒப்பதாம் ஒப்பு'' என்பது வள்ளுவர் வாக்கு.

இவ்வாறெல்லாம் பெருமைப்படுத்தப் படும் அச்சான்றோர்களின் பண்புதான் என்ன? சான்றாண்மைக்குரிய பண்புகள் தாம் யாவை? சுற்றத்தார் போலும் மக்கள் மட்டுமில்லாமல், உலகில் உள்ள எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டல், பழிபாவங்களுக்கு அஞ்சல், எல்லோர்க் கும், எந்நேரத்திலும் அவர் விரும்புவன கொடுத்து, உறுதுணையாய் நிற்றல், நண்பர், உறவினர் போல்வாரிடத்தில் சிறிதே கண்ணோட்டம் உடையராதல், எந்நிலையிலும், தீமையிலா வாய்மையே பேசுதல், இவையே சான்றாண்மை என்ற மாளிகையைத் தாங்கி நிற்கும் தூண்கள் என்கிறார் வள்ளுவர்.

''அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம்
வாய்மையொடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண்''
(குறள்: 983)

தன் மகன் சான்றோன் என்றதும், அவன்பால் இத்தனைப் பண்புகளுமே பொருந்தி, நிறைந்து வழிகின்றன என எண்ணி எந்தத் தாய்தான். மகிழ்ந்து இறும்பூது எய்தாதிருப்பாள்?

மகன் சான்றோன் என்றதும், அத்தாய்க்கு மன நிறைவு, மன மகிழ்ச்சி தருவது பிறிதொன்றும் உளது.

மகன் தானே சான்றோனாக ஆகி விடல் இயலாது. அவனை ஒருவர் சான் றோனாக ஆக்கி இருக்க வேண்டும்; அந்த ஒருவர் யார்? அக்கடனை யார்பால் ஒப் படைத்திருக்கிறது இவ்வுலகம்? மகனை ஈன்று, அவன் உடலைப் பேணி வளர்த்துத் தன் கடமையைக் குறைவற முடித்த மன நிறைவில், பொன்முடியார் கூறுகிறார். ''சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடன்'' (புறம்.312) என்று மகனைச் சான்றோன் ஆக்க, தந்தை படாத பாடு பட வேண்டும். பள்ளியில் விடுத்து படிப்பறிவு கொடுத்தல் முதல், பண்பு களைப் புகட்டும் வகையான பல்வேறு கடமைகளைத் தந்தை குறைவற நிறை வேற்றினால்தான், மகன் சான்றோன் ஆதல் இயலும். அதில் அவன் சிறிது தவறினாலும் ''துள்ளித் திரிகிற காலத்து என் துடுக்கு அடக்கிப் பள்ளிக்கு வைத்திலனே என் தந்தையான பாதகனே'' என அவன் மகனே அவனைப் பழிப் பான். ஆக, மகன் சான்றோன் என்றதும், 'ஈன்று புறந்தந்தது மட்டுமே நான் செய்தது! அவனைச் சான்றோன் ஆக்கிய வர் என் கணவர்' என மனநிறைவு எழ, கடமை ஆற்றிய கணவனை நினைவூட்டும் விதம் அச் சான்றோன் என்ற சொல் தான்!

***என:***

என்று சொல்ல, என்று புகழ, என்றெல்லாம் கொள்ளலாம்; இதற்கு வினைமுதல் இல்லை. சான்றோன் என்று சொன்னவர் யார்? விடை இல்லை. சொன்ன காலம் எது? விடை இல்லை; ஆக, சான்றோன் எனச் சொன்னவர் உலகத்தார் அனைவரும்; எனச் சொன்னார் என்றும் கொள்ளலாம்; எனச் சொல் கிறார் என்றும் கொள்ளலாம். எனச் சொல்வார் என்றும் கொள்ளலாம். ஆக, வினைமுதலும், காலமும் குறியாச் சிறப்பால், உலகத்தார் அனைவரும் முக்காலத்தும் புகழ்வர் எனும் பொருள் தரும் சிறப்புடையதாகிவிட்டது ''என'' என்ற இச்சொல்.

***கேட்ட:***

''பெண் இயல்பால் தானாக அறியா மையின் கேட்டதாய்'' எனக் கூறினார் என்பது பரிமேலழகர் கூறும் காரணம். இது கற்கும் உரிமை மகளிர்க்கு மறுக்கப் பட்ட காலத்துக் கொள்கை விளக்கம். அது இப்போது எடுபடாது. தன் மகன் சான்றோன் என்பதைத் தாய் அறிவாள். ஆயினும், ''என் மகன் சான்றோன்'' எனக் கூறிப் பெருமைப்பட்டுக் கொள்ள எந்தத் தாயும் விரும்ப மாட்டாள். இது பண்புடைமையும் ஆகாது. தன் மகன் சான்றோன் என்பதைப் பிறர் எல்லாம் ஏன், தன் பகைவர்களும் கூட - கூறக் கேட்ட வழி மகிழ்வதே பண்புடைமை யாகும். ''மறைவாக நமக்குள்ளே பழங் கதைகள் பேசுவதிலோர் மகிமை இல்லை. திறமான புலமை எனில், பிற நாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்'' என்றார் பாரதியார். பாரதியார் புகட்டிய அவ்வறிவுரையை ஏற்றவள் அத்தாய். ஆகவே தான், பிறர் புகழக் கேட்டு மகிழ்ந்தாள்.

''கேட்டதாய்'' என்பதற்குப் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை அளித்த விளக்கம். போற்றுதற்கு உரியது; அவர் விளக்கம் வருமாறு: ஒரு தாய்; ஆண்டு முதுமையின் எல்லைக்கே சென்றுவிட்ட வள். நடமாட இயலாது. மகன் தன் சான்றாண்மையைக் காட்டும் மேடைக்குச் செல்ல இயலாது. கண், பார்வை இழந்து விட்டது. அக்காட்சியைக் காண முடியாது. காதும் சரியாகக் கேட்கவில்லை. ஆக, வீட்டோடு, படுத்த படுக்கையாக வீழ்ந்து கிடக்கிறாள். இந்நிலையில் சிலர் வந்து அவள் மகனின் சான்றாண்மையின் பெருமையை அவள் காது கேட்க உரத்த குரலில் கூறினார்கள்; அது கேட்ட அந்நிலையில் அவள் உடலில் புதுத்தெம்பு பிறந்துவிட்டது. மகனைப் பெற்ற இளமைத் துடிப்பு உண்டாகி விட்டது. மகிழ்ச்சியின் எல்லைக்கே போய்விட்டாள் அத்தாய். - இது அண்ணா அவர்கள் அளித்த விளக்கம்.

***தாய்:***

மகனைச் சான்றோன் எனப் பிறர் புகழக் கேட்ட தந்தைக்கு மகிழ்ச்சி வராதா? தாய்க்கு மட்டும் தான் மகிழ்ச்சி வருமா? தந்தைக்கும் வரும், ஆனால் அவன் மகிழ்வதில், அத்தந்தைக்குப் பெருமை இல்லை. காரணம் மகனைச் சான்றோன் ஆக்கியதே அவன் தான். ஆக, தன் கடமை கண்டு தானே மகிழ்வது பண்பாகாது. ஆகவே தான் தந்தை மகிழவிடவில்லை வள்ளுவர்; அம்மகிழ்ச் சியைத் தாய்க்கே உரிமையாக்கி உயர்ந்து விட்டார் வள்ளுவர். ●






'பொங்கலோ பொங்கலென்று
பூரிக்கும் நாமெல்லாம்
தங்குக அமைதியெனத்
தரணியில் வாழ்ந்திடுவோம்!

வன்முறை என்பதெல்லாம்
வாழ்வில் கறைசேர்க்கும்!
நன்முறை என்பதுவோ
நம்மையே கரைசேர்க்கும்!

ஏடுகளில் எழுதுவது
இதயத்தைத் தொடவேண்டும்!
மேடைகளில் முழங்குவது
மேன்மையைத் தரவேண்டும்!

பெண்கல்வி வளரவேண்டும்!
பெற்றோர் எல்லாம்
முன்மாதிரி இருத்தல்வேண்டும்
முன்னேறும் சமுதாயம்!

எண்ணங்கள் இமயம்போல்
எடுப்பாய் வளரவேண்டும்!
வண்ணங்கள் வாழ்வில்சேர
வாழ்த்துக்கள் கூறவேண்டும்!

புத்தரிசி, புதுப்பானை
புத்தாடை என்பதோடு
புத்துலகம் படைத்திட்வே
புதுஉறுதியும் எடுப்போமே!



# இந்தியக் கைவினைப் பொருட்கள் கலை விழா!

'இந்தியாவிற்கு வருகை தாருங்கள்' ஆண்டை முன்னிட்டு, இந்தியக் கைவினைப் பொருட்கள் கலை விழாவின் தொடக்க விழா 5.1.'91 அன்று நடந்தது.

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் கண்காட்சியினைத் தொடங்கி வைத்தார்.

12 நாட்கள் நடந்த இக்காட்சியை, தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் (பூம்புகார்) நடத்தியது.

இந்தக் கண்காட்சியில் தமிழகம் உட்பட, புதுடெல்லி, உத்திரப்பிரதேசம், பீகார், அசாம், மகாராஷ்டிரா, குஜராத், கர்நாடகம், ஆந்திரா ஆகிய மாநிலங்களின் கண்கவர் கலைப் பொருட்கள் இடம் பெற்றிருந்தன.

இக்கண்காட்சியில் உலோகத்தினால் ஆன கலைப்பொருட்கள், பிரம்பு, மூங்கிலாலான கைவினைப் பொருட்கள், கையினால் பின்னப்பட்ட கம்பளங்கள், கடைசல் பொருட்கள், காகிதக்கூழ் பொருட்கள், கைவேலைப்பாடு கொண்ட துணி வகைகள், ஆபரணங்கள், மெழுகு வளையல்கள், பித்தளை, வெண்கலத்தினாலான பொருட்கள், கல்லினால் ஆன கைவினைப் பொருட்கள், மரம், செம்பு மற்றும் தக்கையினாலான பொம்மைகள், தோல் பொருட்கள் மற்றும் பல கைவினைப் பொருட்கள் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தன.

எல்லா மாநிலக் கலைப் பொருட்களும் ஒரே இடத்தில் குவிக்கப்பட்டிருந்த காட்சி, கண்கொள்ளாக் காட்சி மட்டுமல்ல, தேசிய ஒருமைப்பாட்டையும் உணர்த்தியது.

'பூம்புகார்' என்னும் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், தமிழக அரசினால் 1973-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. கைவினைத் தொழில்களை எல்லா வகையிலும் வளர்த்தல், ஊக்குவித்தல், கைவினைஞர்களுக்கு எல்லா வகையான உதவிகள் அளித்தல், கைவினைஞர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களைச் சந்தையில் விற்பனை செய்தல் முதலியன இந்நிறுவனத்தின் முக்கிய குறிக்கோள்களாகும்.

இந்நிறுவனத்தின் சார்பில் 21 விற்பனை நிலையங்கள் உள்ளன. தமிழகம் உட்பட வெளி மாநிலங்களான பெங்களூர், கல்கத்தா, புதுடெல்லி ஆகிய இடங்களிலும் இந்நிலையங்கள் உள்ளன. மேலும், இந்நிறுவனம் தமிழகமெங்கும் உலோகம், சந்தன மரம், காகிதக்கூழ், பிரம்பு ஆகிய பொருட்களின் மூலம் உற்பத்தி செய்யும் 10 உற்பத்தி நிலையங்களையும் நடத்தி வருகிறது.

கடந்த ஆண்டில் (1989-90) இந்நிறுவனம், ரூ.466.48 இலட்சத்திற்குக் கைவினைப் பொருட்களை விற்பனை செய்து சாதனை புரிந்துள்ளது. இந்த விற்பனையில் ரூ.15.84 இலட்சத்திற்கான கைவினைப் பொருட்களை அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளது. மேலும் இந்நிறுவனம், கடந்த ஆண்டு ரூ.112.97 இலட்சம் அளவிற்கு உற்பத்தி நிலையங்கள் மூலம் கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்துள்ளது.

இந்நிறுவனம் கடந்த ஆண்டில் 75 கண்காட்சிகளை நடத்தி, அவற்றின் மூலம் ரூ.124.43 இலட்சங்கள் கைவினைப் பொருட்களை விற்பனை செய்துள்ளது. கடந்த நிதி ஆண்டில் இந்நிறுவனம், ரூ.13.50 இலட்சம் நிகர இலாபம் ஈட்டிச் சாதனை புரிந்துள்ளது.

இந்த நிதி ஆண்டில், நவம்பர் மாதம் வரை ரூ.17.79 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது. இந்த ஆண்டு முடிவில் இந்நிறுவனம் ரூ.525 இலட்சங்களுக்கு விற்பனையையும், ரூ.125 இலட்சத்திற்குக் கைவினைப் பொருட்கள் உற்பத்தியையும் எய்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிதியாண்டில் இந்நிறுவனம், திருப்பதி கோவிலிலுள்ள கருட மண்டபத்திற்குத் தங்கத் தகடு வேயும் வேலையும், பாண்டிச்சேரியில் உள்ள மணக்குள விநாயகர் கோவிலுக்கு வெள்ளி இரதமும், கர்நாடக மாநில பெல்லாரி பொதுப்பணித் துறைக்கு வெண்கலத்திலான அண்ணல் காந்தியடிகள் திருவுருவச் சிலையும், திருச்சி திருவெள்ளாறையிலுள்ள புண்டரீகாட்சப் பெருமாள் கோவிலுக்கு மரத்தேர் வேலையும், பல கோவில்களுக்குக் கொடி மரங்கள் செய்யும் வேலைகளும், பித்தளை உண்டியல்களும், மரக் கதவுகளும், இராமேஸ்வரம் கோவிலுக்கு 2-ஆம் பிராகாரக்கட்டுமானப் பணியும், ஆந்திராவிலுள்ள அன்னாவரக் கோவிலுக்குப் பித்தளை வளைவுக் கம்பிகள் வேலையும், ஸ்ரீகாளாஸ்திரி கோவிலுக்குப் பித்தளைக் கம்பி வேலைகளும் ஆக மொத்தம் ரூ.55.30 இலட்ச மதிப்பீட்டில் வேலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு ,அவை நடைபெற்று வருகின்றன.

இந்நிறுவனம், மூன்று தங்க இரதமும், இரண்டு வெள்ளி இரதமும் உருவாக்கி வருகிறது. உத்திரப்பிரதேச மாநிலம் லக்னோவிலுள்ள ஒரு கோவிலுக்கு, கல் சம்பந்தப்பட்ட வேலைகளும், இராமேஸ்வரத்தில் அம்பாள் மண்டபக் கட்டுமானப் பணியும் நடைபெற்று வருகிறது. இவற்றின் மதிப்பு ரூ.137.00 இலட்சம்.

இந்நிறுவனம், தமிழ்நாட்டின் கைவினைப் பொருட்களையும், பிற மாநிலத்தின் கைவினைப் பொருட்களையும் மக்களிடையே பிரபலப்படுத்தும் நோக்குடன் அவ்வப்போது கண்காட்சிகளை நடத்துகிறது.

—நமது செய்தியாளர்

செங்கை-அண்ணா மாவட்டத்தில்:

# மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம்

செங்கை-அண்ணா மாவட்டம் வாலாசாபாத்தில் வசிக்கும் திருமதி நூருன்னிசா என்பவரின் கணவர் திரு அப்துல் மூவாப் ஒரு மன நோயாளி. இரண்டு குழந்தைகளும், மூன்று பெண் குழந்தைகளும் ஆக மொத்தம் ஏழு நபர்களைக் கொண்ட குடும்பத்தைப் பராமரிக்க வேண்டிய நிலைமை பெற்ற தாயுள்ளம் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தது.

ஒரு காலத்தில் வசதியாக வாழ்ந்த குடும்பம் - எப்போது கணவன் மன நோயால் பாதிக்கப்பட்டாரோ, அப்போதிருந்தே வறுமையின் பிடியில் சிக்கியது குடும்பம். குடியிருக்க வீடு இல்லாமல் போய்விட்டது. இவர்கள் நிலைமை கண்டு பரிதாபப்பட்டவர்கள், தர்காவிற்குச் சொந்தமான வீட்டில் தினம் ரூ.2 வாடகையில் குடியமர்த்தினார்கள்.

இவரது மூத்த மகன் ஒரு மெக்கானிக். இவரது வருமானத்தில் குடும்பம் நடந்து கொண்டிருந்த போது, லாரி விபத்து ஒன்றில் அவர் இறந்து போகவே வேதனைக் கடலில் மூழ்கினாள் தாய்.

திருமதி நூருன்னிசாவின் இளைய மகள் பர்ஹானா பேகம் (வயது-25) பத்தாவது வகுப்பில் தேர்ச்சி பெற்றவர். தம்பி, தங்கை ஆகியோர் சோடாக் கடையில் வேலை செய்து, அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில் ஜீவனம் நடந்து வந்தது. மகளுக்குத் திருமண வயது கடந்தும் பணவசதி இல்லாததால், பெற்றோரால் திருமணம் செய்து வைக்க முடியவில்லை.

செங்கை-அண்ணா மாவட்டம் வாலாசாபாத்தில் உள்ள திருமதி நூருன்னிசா அவர்கள் குடும்பத்தைச் சந்தித்தபோது அவர் கூறியதாவது:

''என்னுடைய கணவர், தொழுகைக்கு மசூதி போனபோது, ஏழைப் பெண்களுக்குத் திருமண உதவி செய்வதாகப் பத்திரிகையில் வந்த செய்தியை ஒருவர் படித்துக் காண்பித்தாராம். அந்தப் பேப்பரை அப்படியே வாங்கி வந்து, என்னிடம் கொடுத்தார். நான் மகள் பர்ஹானா பேகத்திடம் கொடுத்து மீண்டும் படிக்கச் சொன்னோம். பின்பு, நானும் என் கணவரும் ஊராட்சி ஒன்றிய ஆபீசுக்குப் போய், முழு விவரம் கேட்டோம். என் மகள் வாழ்விற்கு, ஓர் நம்பிக்கை ஏற்பட்டு, மோட்டார் மெக்கானிக் வகியுல்லா என்பவரை மாப்பிள்ளை பார்த்து, தந்தை பெரியார் பிறந்த தினமான 17.9.89-இல் வாலாசாபாத் மசூதியில் திருமணம் நடத்தினோம்''

குடும்பப் பாரத்தை ஏற்ற தாய் திருமதி நூருன்னிசா மேலும் கூறுகையில், ''அரசு கொடுத்த ஐயாயிரம் ரூபாயில், பித்தளைச் சாமான்கள் ரூ.2,000-க்கு வாங்கினோம். மீதிப் பணத்தைத் திருமணச் செலவிற்கு வைத்துக் கொண்டோம். அரசாங்கம் உதவி செய்யலேன்னா, என் மகள் கல்யாணமே நடந்திருக்காது. அரசாங்கத்திற்கும், தமிழக முதல்வர் கலைஞருக்கும் என்றென்றும் நாங்கள் நன்றிக் கடன் பட்டுள்ளோம்'' என்று உணர்ச்சி வசப்பட்டுக் கூறினார்.

தகவல்:

—ப.நாராயணமூர்த்தி
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
செங்கை-அண்ணா மாவட்டம்

## வளரும் வேளாண்மை

தமிழ்நாட்டின் பல மாவட்டங்களிலும் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிரில் புகையானின் பெருக்கம் தோன்ற வாய்ப்புள்ளது. புகையானைக் கட்டுப்படுத்த உழவியல் முறைகளையும், பூச்சி எதிர்ப்பு இரகங்களையும், பூச்சிகொல்லிகளையும் உபயோகித்து வருகிறோம். ஆனாலும், புகையானின் தாக்குதல் குறைந்தபாடில்லை. எனவே, புகையான்களை உண்டு, பயிருக்கு நன்மை செய்யும் பூச்சிகளை அடிக்காமல் வயலில் வளர விடுவது மேலும் நன்மை பயக்கும்.

நெற்பயிரைத் தாக்கும் சாறு உறிஞ்சும் பூச்சிகளான, பச்சைத் தத்துப் பூச்சிகள், வெண்முதுகுத் தத்துப் பூச்சிகள், மற்றும் புகையான்களை உண்ணும் எதிரிகளுள் சிர்டோரைஸ் லிவிடிபென்னிஸ் என்னும் பச்சைநிற மிரிட் நாவாய்ப் பூச்சிகள் முதன்மையானவை. இப்பூச்சிகள் ஊன் உண்ணி வகையைச் சேர்ந்தவை. இவைகள் பெரும்பாலும் புகையான்களின் முட்டைகளையே உண்ணுகின்றன. இம்மிரிட் நாவாய்ப் பூச்சிகள் இளம் பச்சை நிறத்தில் கரிய தலையுடன் காணப்படும். இறக்கையின் பாதிப் பாகம் கண்ணாடி போன்று நிறமற்றதாக இருக்கும். முழுநிலைப் பருவமானது முழுவதும் பச்சையாகக் காணப்படும். இதன் முட்டைப்பருவம், இளநிலைப்பருவம் முறையே 8,12 நாட்கள் ஆகும். இதன் வளர்ச்சிப் பருவத்தில் ஐந்து நிலைகள் காணப்படுகின்றன. வளர்ந்த தாய்ப் பூச்சியானது 10 நாட்கள் ஆண் பூச்சிகள் 7 நாட்கள் உயிர்வாழும். ஒரு நாவாய்ப் பூச்சியானது தனது வாழ்நாளில் சுமார் 27 முட்டைகளை இடும். சராசரியாக மிரிட் நாவாய்ப் பூச்சிகள் நாள் ஒன்றுக்குப் புகையான்களின் ஒன்பது முட்டைகளையோ அல்லது 6 முதல் நிலை இளம் குஞ்சுகளையோ அல்லது ஒரு புகையானையோ உண்ணும் திறன் வாய்ந்துவை. பொதுவாக, புகையானின் பெருக்கம் அதிகமாக இருக்கும்பொழுது நாவாய்ப் பூச்சிகளின் எண்ணிக்கையும் அதிக அளவில் காணப்படும். இந்த இயற்கை எதிரியைப் பாதுகாக்க விவசாயிகள் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளை அனுசரித்தும், பொருளாதாரச் சேதநிலை எட்டிய பின்னர் மருந்தடித்தும், நன்மை செய்யும் பூச்சியினங்களைப் பாதிக்காத மருந்துகளைத் தெரிந்தெடுத்து அவற்றை மாற்று வரிசையில் (Strip Spraying) பயிரில் உபயோகித்து இயற்கை எதிரிகளைப் பாதுகாக்கலாம்.

**வேளாண் தகவல் பணிமையம்,**
**தமிழ்நாடு ஐ.டி.நாயுடு**
**வேளாண்மைப் பல்கலைக் கழகம்,**
**கோவை.**

மேலும் 1987-88 மற்றும் 1989-90-ஆம் ஆண்டு இத்திட்டத்தில் விநியோகம் செய்து நடவு செய்யுப்பட்டு, நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு பாதுகாத்து வளர்த்து வந்துள்ள மரக்கன்று ஒன்றுக்கு ரூ.2.50 என்ற அளவுப்படி ஊக்கத்தொகையும் வழங்கப்படவுள்ளது. இத்திட்டத்தில் நடப்பு ஆண்டில் சுமார் ஒரு இலட்சம் ரூபாய் ஊக்கத் தொகையாக வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

**வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம்**

இம்மாவட்டத்தில் காளையார் கோவில், இளையான்குடி, தேவகோட்டை, கண்ணங்குடி, கல்லல் மற்றும் சிங்கம்புணரி ஆகிய ஆறு வட்டாரங்கள் வறட்சிக்கு இலக்காகும் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் மானாவாரி நில மேம்பாட்டிற்காக, வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டப்பணிகள் மாவட்ட ஆட்சியர் தலைமையில் செயல்படும் ஊரக வளர்ச்சி முகமையின் சார்பாக வேளாண்மைத்துறை மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

நடப்பு ஆண்டில் வேளாண்மைத் துறையின் மூலம் -

ஆழ உழவு செய்தல் - (900 எக்டேர்)
மானாவாரி தொழில்நுட்ப நிரூபணங்கள் அமைத்தல் - (900 எக்டேர்)
வெட்டிவேர் தாவரத்தடுப்பு அமைத்தல் (125 எக்டேர்)

ஆகிய மூன்று பணிகள் நடைபெற்று வருகின்றன. இதற்கான இடங்களில் வெட்டிவேர் நாற்றங்கால் தயார் செய்யப்பட்டு, கன்றுகள் விநியோகிக்கத் தயார் நிலையில் உள்ளன.

இத்திட்டத்திற்கென அரசு 9.25 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

***கரும்புச் சாகுபடியில் சாதனை:***

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் கரும்புச் சாகுபடியில் தனிக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இம்மாவட்டத்தில் சராசரி 4,000 எக்டேர் நிலப்பரப்பில் தற்போது கரும்புச் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. மானாமதுரை வட்டம் திருப்புவனம் ஒன்றியப் பகுதிகளில் அதிக அளவில் கரும்புச் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. திருப்புவனம் ஒன்றியம் கிளாதரி கிராமத்தைச் சேர்ந்த திரு. பெரிய கருப்பன் என்ற விவசாயி, 1989-90-ஆம் ஆண்டில் கோ.க.671 கரும்பு பயிரிட்டு ஏக்கருக்கு 57 டன் கரும்புச் சாகுபடி செய்து, இந்திய அளவிலேயே சாதனை படைத்துள்ளார். மாநில அளவில் கரும்பு உற்பத்தி ஒரு ஏக்கருக்கு 40 டன்னும், இந்திய அளவில் ஒரு ஏக்கருக்கு 20 டன்னும் உற்பத்தி இலக்கு என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் இந்த இலக்கினை முறியடிக்கும் வகையில் விவசாயி திரு. பெரியகருப்பன் என்பவர் சாதனை புரிந்துள்ளார். அவர், 'வேளாண்மைத்துறை அலுவலர்கள் குறிப்பிட்ட காலத்தில் வழங்கிய தொழில்நுட்பப் பரிந்துரைகள், கம்போஸ்ட் உரங்களை இரசாயன உரங்கள் இடும்பொழுது சேர்த்து இட்டது, சரியானமுறையில் நீர்நிர்வாகம் செய்தது, பரிந்துரையின்படி உரஉபயோகம் செய்தது, கரும்பில் அசோஸ்பைரில்லம் பயன்படுத்தியது போன்ற வழிமுறைகளைச் சரியான முறையில் பின்பற்றியதே இந்தச் சிறந்த சாகுபடிக்குக் காரணமாகும்' எனத் தெரிவித்தார்.

– ந. பாலையா,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
பசும்பொன் தேவர்
திருமகன் மாவட்டம்.

# பெரியார் மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள்

## தொழில் வளர்ச்சி

பெரியார் மாவட்டம் ஒருங்கிணைந்த கோவை மாவட்டத்திலிருந்து 17.9.1979 முதலாகத் தனியாகப் பிரிக்கப்பட்டு தனித்து இயங்கி வருகிறது. தனியாகப் பிரிக்கப்பட்டபொழுது, இம்மாவட்டத்தில் 8 பெருந் தொழிலகங்களும், 650 பதிவு செய்யப்பட்ட சிறு தொழில்களும் இயங்கி வந்தன.

தனித்து இயங்கத் தொடங்கியதன் காரணமாக, பெரியார் மாவட்டத்தில் 1989-90-ஆம் ஆண்டு முடிய 19 பெரிய தொழிலகங்களும், 6,017 பதிவு செய்யப்பட்ட நிரந்தரச் சிறு தொழிலகங்களும் இயங்கி வருகின்றன.

சிறு தொழில்கள் ஆரம்பிப்பதற்கு முன்னதாக, தற்காலிகச் சிறு தொழில் பதிவுச் சான்றிதழ் தொழிலகம் ஆரம்பித்த பின்பு, நிரந்தரச் சிறுதொழில் பதிவுச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. 1989-90-ஆம் ஆண்டில் குறியீடான 2300-க்கு எதிராக, 2757 தற்காலிகச் சிறு தொழில் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

**சுயவேலைவாய்ப்புத் திட்டம்:**

1983-84-ஆம் ஆண்டு முதல், படித்த வேலையற்ற இளைஞர்களுக்குச் சுய வேலைவாய்ப்பு வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், பள்ளியிறுதித் தேர்வில் தேறிய 18 வயது முதல் 35 வயதுக்கு உட்பட்டவர்கள் கடன் பெறத் தகுதி பெற்றவர்கள். இத்திட்டத்தின் கீழ், 1989-90-ஆம் ஆண்டில் 289 நபர்களுக்கு 45.97 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.

**கைவினைத் தொழில்கள் மற்றும் குடிசைத் தொழில்கள்:**

இம்மாவட்டத்திலுள்ள கைவினைத் தொழில்கள் மற்றும் குடிசைத் தொழிலகங்களுக்கு அரசு வழங்கும் சலுகைகளைப் பெறுவதற்கும், வங்கிக் கடன் பெறுவதற்கும் ஏதுவாகக் கைவினைத் தொழில் பதிவுச் சான்றிதழ்களும், குடிசைத் தொழில் பதிவுச் சான்றிதழ்களும் மாவட்டத் தொழில் மையத்தின் மூலம் வழங்கப்படுகின்றன.

கைவினைத் தொழில் பதிவில் குறியீடு 300 நபர்கள்; 326 நபர்கள் கைவினைத் தொழிலில் பதிவு பெற்றனர். குடிசைத் தொழில் பதிவில் குறியீடு 250 நபர்கள்; 269 நபர்கள் தொழிலில் பதிவு பெற்றனர்.

**சிறப்புப் பல்நோக்குத் திட்டம்:**

தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்கள் பயன் அடைய வேண்டும் என்னும் சிறப்புப் பல்நோக்குத் திட்டத்தின் கீழ், 15 நபர்களுக்கு ரூ.60,000 கடன் தொகை வழங்க 1989-90-ஆம் ஆண்டில் குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. 16 ஆதி திராவிட இன மக்களுக்கு ரூ.2.71 இலட்சம் இவ்வலுவகத்தின் மூலம் கடன் வழங்கி சாதனை புரியப்பட்டுள்ளது.

**கிராமப்புறத் தொழில் கடன் திட்டம்:**

கிராமப்புறங்களில் தொழில் ஆரம்பிப்பவர்களில் விளிம்புத் தொகை செலுத்த இயலாதவர்களுக்குக் கடனுதவி புரிய வேண்டுமென இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடான ரூ.41.5 இலட்சமும், 17 நபர்கள் கடன் பெறும் பொருட்டு விளிம்புத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

**இதர கடனுதவிகள்:**

1989-90-ஆம் ஆண்டு வங்கிக் கடன் திட்டத்தின் கீழ், 16 நபர்களுக்கு ரூ.39.70 இலட்சம் கடன் உதவி வழங்கக் கோரி வங்கிகளுக்குச் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது

**கிராமப்புறக் கைவினைஞர்களுக்குப் பயிற்சி வழங்கும் திட்டம்:**

கிராமப்புறங்களிலுள்ள கைவினைஞர்கள் சுய வேலைவாய்ப்புப் பெறுவதற்கும், தங்களுடைய வேலைத் திறனை மேம்படுத்துவதற்கெனவும், கிராமப்புறக் கைவினைஞர்கள் பயிற்சித் திட்டத்தின் கீழ், பயிற்சி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 1989-90-ஆம் ஆண்டில் ரூ.8,000 வழங்கப்பட்டுள்ளது.

**நலிவடைந்த சிறுதொழில் நிறுவனங்களுக்குப் புத்துயிரூட்டும் திட்டம்:**

நலிவடைந்த சிறுதொழில் நிறுவனங்களுக்குப் புத்துயிரூட்டும் திட்டத்தின் கீழ், 1989-90-ஆம் ஆண்டிற்கு ரூ.35,000 விளிம்புத் தொகை வழங்க, குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. அத்தொகை 3 நிறுவனங்களுக்கு விளிம்புத் தொகை உதவியாக வழங்கப்பட்டது.

**விற்பனை வரிக் கடன்:**

விற்பனை வரியை அதிகமாகச் செலுத்தும் தொழிலகங்களுக்கு ஒரு சலுகை வழங்கும் திட்டமாக, வட்டியில்லா விற்பனை வரிக்கடன் என்னும் ஒரு புதிய திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. அத்திட்டத்தின் கீழ் 1989-90-ஆம் ஆண்டிற்கு ரூ.8.16 இலட்சம் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டது. மேற்படி திட்டம் 9.5.88-க்குப் பின்பாக ஆரம்பிக்கப்படும் தொழிலகங்கள் அதிகச் சலுகை பெறுவதற்கென விற்பனை வரியைப் பின்பு செலுத்தும் திட்டமாக மாறுபடுத்தப்பட்டு அறிவிக்கப்பட்டது. அத்திட்டத்தின் கீழ் 8 நிறுவனங்களுக்கு விற்பனை வரியைப் பின்பு செலுத்தலாம் எனத் தகுதிச் சான்றிதழ் ரூ.5,01,499-க்கு வழங்கப்பட்டுள்ளது.



## பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம்

# வேளாண்மை வளர்ச்சிப் பணிகள்

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து தனியாகப்பிரிக்கப் பட்டு, 1985-ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. இம்மாவட்டத்தின் மொத்த சாகுபடிப் பரப்பளவு சுமார் நான்கு இலட்சம் எக்டேர் ஆகும். ஆண்டு தோறும் சராசரியாக 1,30,000 எக்டேர் பரப்பு மட்டும் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இம்மாவட்டத்தில் நிரந்தரமான நீர்ப்பாசன வசதியில்லாததே இக்குறைவான சாகுபடி பரப்புக்குக் காரணமாகும். இம்மாவட்டத்தின் சராசரி ஆண்டு மழையளவு 880 மி.மீ. ஆகும். கடந்த மூன்று ஆண்டுகளாக மழையளவு குறைவாகவே கிடைத்துள்ளது. இம்மாவட்டத்தில் வடகிழக்குப் பருவமழையின் மூலமே அதிகமான மழை கிடைக்கிறது. நடப்பு ஆண்டில் அரிசி உற்பத்திக் குறியீடாக 2.70 இலட்சம் மெட்ரிக் டன் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

### தீவிர சாகுபடித் திட்டம்

உணவுதானியப் பயிர்களின் சாகுபடிப் பரப்பினை அதிகப்படுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். உணவு உற்பத்தியினை அதிகப்படுத்த கூடுதலான பரப்பினைச் சாகுபடிக்குத் திட்டமிடுதல், உற்பத்தியினை அதிகரிக்க நவீன விவசாயத் தொழில் நுட்பங்களை விவசாயிகளிடையே பிரபலமாக்குதல் ஆகியவை இத்திட்டத்தில் முக்கியமாகச் செய்யப்படும் பணிகளாகும்.

### உயர் விளைச்சல் ரகத் திட்டம்

இது உணவு உற்பத்தியினைப் பெருக்க உயர் விளைச்சல் ரகங்களைச் சாகுபடி செய்யும் திட்டமாகும். உயர் விளைச்சல் நகங்களை அதிக அளவில் சாகுபடி செய்ய விதைகள் எல்லோருக்கும் கிடைக்கச் செய்வது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

### விதைப்பெருக்குத் திட்டத்திற்குப் பெரும் நிதி

உயர் விளைச்சல் ரகப் பொறுக்கு விதைகளை விவசாயிகளுக்காக உற்பத்தி செய்து இத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் விநியோகம் செய்யப்படுகிறது. நடப்பு ஆண்டில் 750 மெட்ரிக் டன் அளவு பயறுவகை விதைகளும், 20 குவிண்டால் அளவு பருத்திவிதைகளும் விநியோகம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் அடுத்த ஆண்டு விநியோகத்திற்குத் தேவையான விதைகளை உற்பத்தி செய்ய விவசாயிகளின் வயல்களிலேயே விதைப் பண்ணைகள் அமைத்து தரமான விதைகளைக் கொள்முதல் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கென நடப்பு ஆண்டில் 22.16 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

### பயிர்ப்பாதுகாப்பு மருந்துகள்:

இத்திட்டத்தில் பயிர்களின் உற்பத்தி, மகசூலைக் குறைக்கும் பூச்சிகள் மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்தத் தேவையான பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் விவசாயிகளுக்கு முழு விலையிலும், மானிய விலையிலும் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன இத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களின் மூலம் தரமான பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன. இந்த ஆண்டு ரூ.20 இலட்சம் மதிப்புள்ள மருந்துகள் விநியோகம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளன.

### உர உபயோகத்தை அதிகரித்தல்

பயிர் உற்பத்தியைப் பெருக்க இரசாயன உரங்கள் பெரும் உதவியாக உள்ளன. தற்போது வெளியிடப்படும் உயர் விளைச்சல் ரகங்கள் அதிக உரங்களை எடுத்து உபயோகித்து, அதிக விளைச்சல் தரும் குணங்கள் கொண்டவை. நமது விவசாயிகளிடையே இரசாயன உரங்கள் உபயோகிப்பது பழக்கமாகிவிட்டதொரு தொழில் நுட்பமாகும். இருந்தபோதிலும் விவசாயிகள் பயிருக்குத் தேவையான உரங்களைத் தேவையான அளவில் தேவையான பயிர் வளர்ச்சிக் கட்டத்தில் இடுவது முக்கியமானதாகும். விவசாயிகளுக்குத் தேவையான தரமான உரங்கள், அரசு நிர்ணயிக்கும் விலையில் கிடைக்கவும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.இந்த ஆண்டில் 6,000 மெட்ரிக் டன் அளவு தழைச்சத்து, 1650 மெட்ரிக் டன் அளவு மணிச்சத்து மற்றும் 915 மெட்ரிக் டன் அளவு சாம்பல்சத்து கொடுக்கக்கூடிய இரசாயன உரங்களை விவசாயிகளுக்கு விநியோகம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

தழைச்சத்தை பூமியில் நிலை நிறுத்தி, விவசாயிகளின் உரச் செலவைக் குறைக்கும் உயிர் உரங்களான 'அசோஸ்பைரில்லம்' மற்றும் 'ரைசோபியம்' பாக்டீரியா நுண்ணுயிர்ப் பொட்டலங்கள் வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் விநியோகம் செய்யப்படுகின்றன. இந்த ஆண்டு 30,000 எண்கள் அசோஸ்பைரில்லம் நுண்ணுயிர்ப் பொட்டலங்களும், 14,400 எண்கள் ரைசோபியம் நுண்ணுயிர்ப் பொட்டலங்களும் விநியோகம் செய்யப்படும்.

விவசாயிகள் தங்களது வயல்களின் மண்ணைப் பரிசோதனை செய்து மண்ணில் இருக்கும் உரச் சத்துக்களின் அளவையறிந்து பயிருக்குத் தேவையான உரங்களை இட மண்பரிசோதனை செய்யப்படுகிறது. இம்மாவட்டத்தில் இந்த ஆண்டு 8,900 மண்மாதிரிகள் ஆய்வு செய்து ஆய்வு முடிவுப்படி விவசாயிகளுக்கு உரப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

கம்போஸ்ட் உரக்குழிகள் அமைத்து இயற்கை உரங்களை உபயோகிக்கவும் முனைப்பு இயக்கம் நடத்தப்படுகிறது. விவசாயிகளுக்கு 'ஊட்டமேற்றிய தொழு உரம்' தயாரிப்பு சம்பந்தமான முன் பருவக் கூட்டங்கள் நடத்திச் செயல் விளக்கங்கள் செய்து காண்பிக்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் சுமார் 6,000 எக்டேர் பகுதியில் 'ஊட்டமேற்றிய தொழுஉரம்' தயார் செய்து விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர்.

### ஒருங்கிணைந்த மானாவாரி நில மேம்பாடு

இம்மாவட்டத்தில் மானாவாரி நிலப்பயிர்களின் மகசூலைப் பெருக்கவும், மானாவாரி நிலங்களில் நவீன தொழில்நுட்பங்களைப் புகுத்தவும், மானாவாரி விவசாயம் செய்யும் விவசாயிகளின் பொருளாதார நிலையை உயர்த்தவும் உருவாக்கப்பட்ட திட்டமே ஒருங்கிணைந்த மானாவாரி நில மேம்பாட்டுத் திட்டம்.

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் ஐந்து மானாவாரி சாகுபடி மையங்களைத் தேர்ந்தெடுத்து ஒவ்வொரு மையத்திலும்



100 எக்டேர் வீதம் மொத்தம் 500 எக்டேர் பரப்பில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மானாவாரியில் மகசூலைப் பெருக்குவதற்குத் தேவையான அனைத்துத் தொழில்நுட்பங்களும் இந்த மையங்களில் செயல்விளக்கம் மற்றும் நிரூபணங்களாகச் செய்து காண்பிக்கப்படும். தொழில்நுட்பங்களை எல்லா விவசாயிகளும் கடைப்பிடித்துப் பயன்பெறுவதற்கு ஊக்கத் தொகையாக மானியமும் வழங்கப்படுகிறது.

1. கோடை உழவு செய்தல்
2. ஊட்டமேற்றிய தொழுஉரம் தயாரித்துப் பயன்படுத்துதல்
3. இருபோகப் பயிர்ச் சாகுபடி செய்தல்
4. தீவனப் பயிர்ச் சாகுபடி செய்தல்
5. ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புச் செய்தல்
6. தழைச்சத்து மேலுரமிடல்

ஆகிய தொழில்நுட்பங்களில் இத்திட்டத்தில் பங்குபெறும் விவசாயிகளுக்கும் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை அருகிலுள்ள பிற விவசாயிகளுக்கு விளம்பரப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. ஒரு எக்டேர் பரப்புக்கு ரூ.500 என்ற அளவில் மொத்தம் 2,5 இலட்சம் ரூபாய் இத்திட்டத்திற்கு அரசு நிதிஉதவி ஒதுக்கீடு செய்துள்ளது.

### வேளாண் காடுகள் திட்டம்

இம்மாவட்டத்திலுள்ள தரிசு நிலங்களிலிருந்து வருமானம் கிடைக்க மரம் வளர்ப்புத் திட்டம் பெரிய அளவில் செயல்படுத்தப்படுகிறது. வேளாண்மைத்துறையின் மூலம் நடப்பு ஆண்டில் உழவர் நாற்றங்கால்களில் உற்பத்தி செய்யப்பட்ட 4 இலட்சம் மரக் கன்றுகளும், 10,000 பழக்கன்றுகளும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கென இம்மாவட்டத்திலுள்ள 6 வேளாண் கோட்டங்களிலும் மொத்தம் 56 கிசான் மரக்கன்று நாற்றங்கால் அமைக்கப்பட்டு, கன்றுகள் தயார் செய்யப்பட்டு, விநியோகிக்கத் தயாராக உள்ளன. இதற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகட்கு ஒரு நாள் பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென நடப்பு ஆண்டில் 3.34 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.




# தென் ஆர்க்காடு மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள்

**மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண உதவித்திட்டம்**

இத்திட்டத்தின்படி, 8-ஆம் வகுப்பு வரை படித்த, ஆண்டு வருமானம் ரூ.5,000-க்குக் குறைவாக உள்ள ஏழைப் பெண்களுக்குத் திருமண உதவித் தொகை ரூ.5,000 வழங்கப்படுகிறது. இவ்வாண்டு நிதி ஒதுக்கீடு 1,320 நபர்களுக்கு ரூ.66,00,000; இதில் இதுவரை 1,265 நபர்களுக்கு ரூ.63,25,000 உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

**டாக்டா முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டம்:**

இத்திட்டத்தின் கீழ், 8 மாதம் உள்ள ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்குக் குடும்ப அடையாள அட்டையில் குறிப்பிட்டுள்ள வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு, ஆண்டு வருமானம் ரூ.5,400-க்குக் கீழ் உள்ளவர்களுக்கு ரூ.200 வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது. இவ்வாண்டில் நிதி ஒதுக்கீடு ரூ.25,00,000; இதில் இதுவரை 12,312 நபர்களுக்கு உதவித் தொகையாக ரூ.24,62,400 வழங்கப்பட்டுள்ளது.

**டாக்டர் தர்மாம்பாள் நினைவு விதவை மறுமண ஊக்க உதவித் திட்டம்:**

இத்திட்டத்தின் கீழ், விதவையை மறுமணம் செய்து கொள்பவர்களுக்கு, தம்பதியர் பெயரில் உதவித் தொகை ரூ.5,000 ஆறாண்டுத் தேசிய சேமிப்பு பத்திரமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.25,000 முழுவதுமாகச் செலவிடப்பட்டு 5 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

**விதவை மகள் திருமண உதவித் திட்டம்:**

இத்திட்டத்தின் கீழ், ஆண்டு வருமானம் ரூ.6,400-க்குள் உள்ள ஆதரவற்ற விதவைகளின் மகள் திருமணத்திற்கு ரூ.2,000 உதவித் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் இவ்வாண்டு ஒதுக்கீடு ரூ.1,30,000; இதுவரை 56 நபர்களுக்கு உதவித் தொகையாக ரூ.1,12,000 வழங்கப்பட்டுள்ளது.

**ஊனமுற்றோருக்கான வங்கிக்கடன் மான்யம் வழங்கும் திட்டம்:**

இத்திட்டத்தின் கீழ், உடல் ஊனமுற்ற-ஆண்டு வருமானம் ரூ,6,400- க்குக் குறைவாக உள்ள நபர்களுக்கு வங்கி மூலம் கடன் பெற்றுத் தந்து கடன் தொகையில் 3-இல் 1 பங்கு மானியமாக வழங்கப்படுகிறது. இவ்வாண்டு நிதி ஒதுக்கீடு ரூ.65,100; இதுவரையில் 48 நபர்களுக்கு மானியத் தொகையாக ரூ.44,820 வழங்கப்பட்டுள்ளது.

ஊனமுற்றோர் பெட்டிக்கடை மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டது ரூ.10,000; இதுவரை 18 நபர்களுக்கு ரூ.9,000 மானியமாக அனுமதிக்கப்பட்டுள்ளது.

கடுமையாக உடல் ஊனமுற்றோர்களுக்குப் பராமரிப்பு உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ.24,000; இதுவரை 20 நபர்களுக்கு ரூ.10,000 வழங்கப்பட்டுள்ளது.

ஆபரேஷன் போலியோ திட்டத்தின் கீழ், இவ்வாண்டு, அண்ணா கிராமம், கோலியனூர் மற்றும் செஞ்சி ஊராட்சி ஒன்றியங்களில் இளம்பிள்ளைவாதத்தால் பாதிக்கப்பட்டவர்கள் 954 பேர் கண்டறியப்பட்டுள்ளனர். இதில் இதுவரை 26 நபர்களுக்கு அறுவைச் சிகிச்சையும், 20 நபர்களுக்கு உடற்பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளன. 30 நபர்களுக்கு மூன்று சக்கர வண்டியும், இருவருக்குச் சக்கர நாற்காலியும் வழங்கப்பட்டுள்ளன.



உடல் ஊனமுற்றோருக்கு மூன்று சக்கர வண்டி வழங்கும் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட 87 வண்டிகளில் இதுவரை 65 நபர்களுக்கு வண்டி வழங்கப்பட்டுள்ளது. இதர மீதி பயனாளிகள் தேர்வு செய்யப்பட உள்ளனர்.

அரசு ஆதரவற்றோர் பராமரிப்புப் பள்ளியில் 248 சிறுவர் சிறுமியர்களும் (ஒதுக்கீடு 250 எண்ணிக்கை), அரசு பார்வையற்றோர் பள்ளியில் 44 சிறுவர் சிறுமியர்களும் (ஒதுக்கீடு எண்ணிக்கை 50), அரசு காது கேளாதோர் பள்ளியில் 70 குழந்தைகளும் (ஒதுக்கீடு எண்ணிக்கை 70) தங்கிப் படித்து வருகிறார்கள்.

கடலூர் சேவை இல்லத்தில் பல்வேறுபட்ட பிரிவுகளில் - 18 முதல் 40 வயதுப் பிரிவில் - 185 பெண்கள் (விதவைகள், கணவரால் கைவிடப்பட்டோர் மற்றும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்கள்) தங்கிப் பயின்று வருகின்றனர். அரசுப் பணியில் அமர்த்தப்பட்டு வருகின்றனர். இவ்வாண்டு செயலகப் பிரிவில் சேருவதற்கான விண்ணப்பம் தற்சமயம் வரவேற்கப்படுகிறது. இலவச உணவு, உறைவிடம், தேர்ச்சி பெற்றோருக்குப் பணி வாய்ப்பு அனைத்தினையும் தமிழக அரசு வழங்குகிறது.

**தென்னார்க்காடு மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள குடிநீர்த் திட்டப் பணிகள்:**

**ஊரகக் குடிநீர்த் திட்டப் பணிகள்:**

(1,4,90-இன் மறு ஆய்வின் படி), இம்மாவட்டத்தில் மொத்தம் 5,184 குடியிருப்புகள் உள்ளன. இவற்றில் 1,890 குடியிருப்புகள் முழுமையாகக் குடிநீர் வசதி பெற்று உள்ளன. மீதமுள்ள 3,294 முழுமையாகக் குடிநீர் வசதி பெறாத குடி

*மாநில முதலீட்டு மானியம்:*

*19.8.89-ஆம் தேதி முதல் பெரியார் மாவட்டத்திலுள்ள காங்கேயம், தாராபுரம், பெருந்துறை, சத்தியமங்கலம், கோபி செட்டிபாளையம் முதலான வட்டங்கள் தொழிலில் பின்தங்கிய வட்டங்களாகத் தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளன.*

*இவ்வட்டங்களில் ஆரம்பிக்கப்படும் சிறு தொழிலகங்களின் நிலையான முதலீட்டில் (நிலம், கட்டடம், இயந்திரங்கள்) 15 சதவிகிதம் மானியமாகப் பெறலாம். மேற்காணும் திட்டத்தின் கீழ் 4 தொழிலகங்களுக்கு முதலீட்டு மானியமாக ரூ.2 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 4 தொழிலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.*

*இம்மாவட்டத்திலுள்ள அனைத்துச் சிறு தொழில் நிறுவனங்களுக்கு உற்பத்தி ஆரம்பித்து, 3 மாதங்களுக்குள் மின்சார மானியம் பெறுவதற்கென மாவட்டத் தொழில் மையத்தின் மூலமாக மானியமாக முதல் ஆண்டு 30 சதவிகிதம், இரண்டாம் ஆண்டு 20 சதவிகிதம், மூன்றாம் ஆண்டு 10 சதவிகிதம் வழங்கப்படுகிறது. சிறு தொழிலகங்கள் மின் வாரியத்திற்கு மின் கட்டணத்தைச் செலுத்தி விட்டு, ஆண்டுக்கு இரண்டுமுறை மின்சார மானியம் பெறுவதற்கென விண்ணப்பிக்க வேண்டும். இத்திட்டத்தின் கீழ் 1989-90-ஆம் ஆண்டு ரூ.1.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்தொகை 45 தொழிலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.*

***சிறந்த தொழிலகங்களுக்கான பரிசுகள்:***

*மாநில அரசு 1986-ஆம் ஆண்டு முதல், சிறந்த சிறுதொழிலகங்களுக்கு மாநில, மாவட்ட அளவிலான பரிசுகளை வழங்கி வருகிறது.*

## நிவாரண உதவித் திட்டங்கள்

*வறுமைக்கோட்டிற்கும் கீழ் உள்ள, குறைந்த வருமானம் பெறும் ஏழை மக்களின் துயர் துடைக்கப் பல்வேறு நிவாரண உதவித் திட்டங்கள் பெரியார் மாவட்டத்தில் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.*


தமிழரசு
சந்தா விவரம்
தமிழ்
ஓராண்டு - ரூ.24
அரையாண்டு - ரூ.12
ஆங்கிலம்
ஓராண்டு - ரூ. 12
(அரையாண்டு சந்தா கிடையாது)
விவரங்களுக்கு
உதவி இயக்குநர்
(விற்பனை மற்றும் விநியோகம்)
தமிழரசு, அரசினர் தோட்டம், சென்னை-600 002.


*நலிந்தோர் குடும்பநலத் திட்டம்:*

*இத்திட்டத்தின் கீழ் ஒரு குடும்பத்தில் சம்பாதிக்கும் நபர் இறந்துவிட்டால், அவருடைய ஆண்டு வருமானம் ரூ.5,000/-க்குள் இருப்பின் அக்குடும்பத்திற்கு ரூ.3,000/- நிவாரண நிதியாக அளிக்கப்படுகிறது. இத்திட்டம் கடந்த 1989-90-ஆம் ஆண்டிலிருந்து நடைமுறையில் இருந்து வருகிறது. நலிவுற்ற குடும்பங்களுக்கு உடனடியாக நிவாரணம் கிடைக்க அரசால் மிகவும் எளிய முறையில் விதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒரு குடும்பத்தில் சம்பாதிக்கும் குடும்பத் தலைவர் இறந்துவிட்டால்,' அந்தச் செய்தியைக் கிராம நிர்வாக அலுவலரிடம் தெரிவித்துக் கிராமத்தில் அவரிடமே நிவாரணத் தொகை கோரி விண்ணப்பத்தைக் கொடுத்து விடலாம்.*

*அதை அவர் நில வருவாய் ஆய்வாளரின் பரிந்துரையுடன் அந்த வட்டத்தில் பணிபுரியும் துயர் நிவாரணத் திட்ட வட்டாட்சியரிடம் சேர்ப்பித்த பின், மனுவை ஆய்வு செய்து, அக்குடும்பத்திற்கு ரூ. 3,000/- நிவாரணத் தொகையாக வழங்குவார். இந்தத் திட்டம் மக்களிடையே நன்கு. பிரபலமடைந்து வருகிறது. கடந்த 6 மாதங்களில் மட்டும் பெரியார் மாவட்டத்தில் 491 குடும்பங்களுக்கு இது வரை ரூ.14,73,000/- நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.*

*விபத்து நிவாரணத் திட்டம்.*

*விபத்தினால், வாழ்க்கையில் பாதிப்பு ஏற்பட்டவர்களுக்கும், இறந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கும் கடந்த 1977-ஆம் ஆண்டிலிருந்து அரசின் பல துறைகளின் மூலமாகப் பல்வேறு வழிகளில் விபத்து நிவாரண உதவிகள் அளிக்கப்பட்டு வந்தன. நிவாரண உதவிகள் குறிப்பிட்ட காலவரையறைக்குள் உரியவர்களுக்குக் கிடைக்காமல் காலதாமதமானதாகத் தெரிந்தபின், நிவாரண உதவிகள் எளிதில் கிடைக்கும் வண்ணம் விதிகளைத் தளர்த்தி, 23.5.89ஆம் தேதியிலிருந்து மக்களிடம் அனைத்து வகைகளிலும் நேரடியாகத் தொடர்பு கொண்டுள்ள வருவாய்த் துறையின் மூலம், விபத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு நிவாரண உதவி கிடைக்க வழிசெய்து, விபத்து நிவாரணத் திட்டம் பற்றிய அரசு ஆணை வெளியிடப்பட்டது.*

*இதன் மூலம், விபத்தால் மரணம் ஏற்படுமாயின் அல்லது இரு அங்கங்களை இழந்தால் ரூ.10 ஆயிரமும், ஒரு அங்கத்தை இழந்தால் ரூ.7 ஆயிரமும், இதர ஊனத்தின் தன்மை சதவீதத்திற்கு ஏற்ப ரூ.5,000/-மும், வன விலங்குகளால் தாக்கப்படுவதற்கு ரூபாய் ஆயிரமும் நிவாரண உதவித் தொகைகளாக அரசால் வழங்கப்பட்டு வருகின்றன. சாக்கடைகள் சுத்தம் செய்தல், வயல்களில் பூச்சி மருந்து, இரசாயணப் பொருட்கள் தெளித்தல், குடிநீர் விவசாயக் கிணறுகள் ஆழப்படுத்துதல் மற்றும் வெட்டுதல், மண் சரிந்து விழுதல், பனை, தென்னை மரங்களில் ஏறுதல், வயல்கள் தோட்டங்களில் பணிபுரியும் போது விஷப்பாம்பு மற்றும் விஷப்பூச்சிகள் கடித்தல், கட்டிட விபத்து, வன விலங்குகளினால் தாக்கப்படுதல் ஆகிய பல்வேறு விபத்துகள் ஏற்பட்டால் நிவாரண உதவிகள் கிடைக்கும்.*

*இத்தகைய விபத்துகளில் சாக்கடை சுத்தம் செய்யும் உள்ளாட்சி நிறுவன ஊழியர்கள், வயல்களில் பூச்சி மருந்துகள், இரசாயனப் பொருட்கள் தெளிப்போர், கிணறு வெட்டும் தொழிலாளர், பனை, தென்னை மரம் ஏறுவோர், விவசாயத் தொழிலாளர்கள், சிறு மற்றும் சொற்ப நிலமுள்ள விவசாயிகள், கிராமக் கொல்லர், சம்மட்டி அடிப்பவர், பொன், வெள்ளி நகை கொல்லர், உலோக வடிவமைப்பாளர், மிருகங்களை நடத்துபவர் மற்றும் மிருகங்களினால் இழுக்கும் வண்டி ஓட்டுநர், கூடை முடைபவர், கல் வெட்டி எடுப்பவர், வடிவமைப்பாளர், செங்கல் சூளைத்தொழிலாளி, டிரக் ஓட்டுபவர், ஆட்டோ ரிக்ஷா ஓட்டுபவர், தனியார் வாகனம், வாடகைச் சீருந்து, பேருந்து ஓட்டுநர், மீனவர் (கூட்டுறவு சங்கத்தில் அங்கத்தினராக இல்லாதவர்) மரத்திலிருந்து பதனீர் இறக்குபவர், நாவிதர்,*

*வண்டி இழுப்பவர், சைக்கிள் ரிக்ஷா ஓட்டுபவர், தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் கைத்தறி நெசவாளர்கள், மண்பாண்டம் செய்யும் தொழிலாளி, வீடுகளில் பணிபுரிவோர், பாம்பு பிடிக்கும் தொழிலை நம்பியிருப்போர் மற்றும் திரைப்படம் தயாரிக்கப்படும் சமயத்தில் விபத்தின் காரணமாக மரணமடையும் திரைப்படத் தொழிலாளி ஆகியோர் விபத்து நிவாரணம் பெறத் தகுதியுள்ளவர்கள் ஆவார்கள்.*

*பெரியார் மாவட்டத்தில் காங்கேயம் வட்டம், பச்சாபாளையத்தில் பனைமரம் ஏறும்போது தவறி விழுந்து மரணமடைந்த மரமேறும் ஏழைத் தொழிலாளி திரு. சேமலை நாடார், குன்னத்தூருக்குச் சென்று கொண்டிருந்த போது லாரி கவிழ்ந்து விபத்தினால் மரணமடைந்த கோபி வட்டம், வீரபாண்டி கிராமம், நாய்க்கன் காட்டைச் சேர்ந்த லாரி டிரைவர், பெருந்துறை வட்டத்தில் பசுவ பட்டி கிராமத்தில் தென்னை மரம் ஏறி பதனீர் இறக்கச் சென்றபோது தவறி விழுந்து மரணமடைந்த ஏழை மரம் ஏறும் தொழிலாளி திரு. பழனிசாமி, பவானி வட்டத்தில் விவசாயக் கூலி வேலை செய்தபொழுது விஷ நாகத்தால் தீண்டப்பட்டு மரணமடைந்த சுலோசனா ஆகியவர்களின் குடும்பங்களுக்குத் தலா ரூ.10 ஆயிரம் வீதம் நிவாரணத் திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் பெரியார் மாவட்டத்தில் 18 நபர்கள் பயனடைந்துள்ளனர். இவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரண நிதித் தொகை ரூ.1,65,000/- ஆகும்.*

*பெரியார் மாவட்டத்தின் தலைநகராகிய ஈரோட்டில் சாஸ்திரி நகரில் முடிதிருத்தும் தொழிலாளி திரு. கணேசன், தனது மகள் கனிமொழி புஷ்பவதியானதால் சீர் செய்யத்தெரிந்தவர்களிடம் கடன் பெற்று வரும் ஒரே நோக்கத்துடன் சைக்கிளில் வேகமாக 'கேட்' இல்லாத ஈரோடு-சேலம்-ரெயில் பாதையைக் கடக்கும் சமயத்தில் 'கொச்சின் எக்ஸ்பிரஸ்' மோதியதால் அவ்விடத்திலேயே விபத்தினால் மரணமடைந்தார். ஆதரவற்ற மனைவி தென்னாட்டரசி குடும்பத்திற்கு ரூ.10 ஆயிரம் நிவாரண நிதியுதவி அளிக்கப்பட்டது.*

*சத்தியமங்கலம் வட்டம் நல்லூர் கிராமத்தில் வசிக்கும் ஏழை அரிசன விவசாயக் கூலி வேலை செய்து வாழ்ந்து வந்த திரு. ராமன், தனது அன்பு மகனிடம் வேலைக்குப் போய் வருகிறேன் என்று கூறி விட்டுச் சென்றவர் கதிர் மிஷினில் கதிர் அடித்துக் கொண்டிருக்கும் போது மின்சாரம் தாக்கி இறந்து விட்டார். அவர் குடும்பத்திற்கு நிவாரணத் திட்டத்தின் மூலம் ரூ.10 ஆயிரம் வழங்கப்பட்டது.*

*மேலும் பெரியார் மாவட்டத்தில் முதியோர் உதவித் தொகை 7,350 நபர்களுக்கும், ஊனமுற்றோர் உதவித் தொகை 1,018 நபர்களுக்கும், ஆதரவற்ற விவசாயக் கூலி உதவித் தொகை 1,708 நபர்களுக்கும், ஆதரவற்ற விதவைகள் உதவித்தொகை 4,413 பேர்களுக்கும், கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு உதவித் தொகை 790 நபர்களுக்கும் வழங்கப்பட்டது. இத்திட்டத்திற்கு இதுவரை ரூ.7,63,950/- செலவினம் மேற்கொள்ளப்பட்டு உள்ளது.*


—இரா.பா.கார்மேகம்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
பெரியார் மாவட்டம்


### அரசின் அறிவிப்புகள் - ஆக்கப் பணிகள்

★ தருமபுரி மாவட்டத்தில், கூட்டுறவு வங்கிகளில கடன் பெற்ற 28 ஆயிரத்து 572 பேர்கள் வாங்கிய 10 கோடியே 54 இலட்சம் ரூபாயும் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளில் 10 கோடி ரூபாயும் ஆக மொத்தம் 20 கோடியே 54 இலட்சம் ரூபாய் வேளாண்மைக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்று மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் அவர்கள் அறிவித்தார் (15.12.90).

★ தமிழக அரசுக்குச் சொந்தமான 16 போக்குவரத்துக் கழக 1,05,000 ஊழியர்களுக்கும் போனஸ் மற்றும் கருணைத் தொகை மொத்தமாக ரூ.20 கோடியே 18 இலட்சம் வழங்கப்படும். கடந்த ஆண்டைவிட ரூ.4 கோடி கூடுதல் செலவில் குறைந்தபட்ச கருணைத்தொகை ரூ.600 லிருந்து ரூ.675 ஆக உயர்த்தி வழங்கப்படும். இதனால் 1 இலட்சத்து 5 ஆயிரம் தொழிலாளர்கள் பயன் பெறுவர் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. (5.10.90)



தெலுங்கு-கங்கைக் குடிநீர்த் திட்டப் பணிகளை, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 14.4.90 அன்று தொடங்கி வைத்தார்.

அதனுடன் ஊர்திகள் வாடகைக்கு அமர்த்தப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வந்தது. ஆனால் 88,89-ஆம் ஆண்டுகளிலும் பருவமழை போதுமான அளவுக்குப் பெய்யாததால், தமிழக அரசுக்கு வறட்சிநிலையைச் சமாளிக்க வேண்டிய நெருக்கடியான நிலை ஏற்பட்டது. அரசால் ஒரு கணிசமான தொகை மானியமாகக் குடிநீர் வாரியத்திற்கு வழங்கப்பட்டது. **குடிநீர்த் தட்டுப்பாடு உள்ள பகுதிகளில் டாங்கர் ஊர்திகளை 87-88, 88-89-ஆம் ஆண்டுகளைவிட, குறைந்த வாடகைக்கு அமர்த்தி (87-88 ஒரு நடைக்கு ரூ.195-, 88-89 ரூ.167-, 89-90 ரூ.130-) குடிநீர் விநியோகம் செய்ததன் மூலம் மாதமொன்றுக்கு ரூ.16.69 இலட்சம் வீதம் 9 மாதங்களில் ரூபாய் 1.50 கோடி மிச்சப்படுத்தப்பட்டது.** கூடுதல் தண்ணீர்த் தேவைகளைக் கருதி 710 ஆழ்துளைக் கிணறுகள் (இந்தியா மார்க்- 2 பம்புகள்) போடப்பட்டு 1990-91-ஆம் ஆண்டில் 350 டாங்கர் ஊர்திகளையும், 50 டிராக்டர்களையும் வாடகைக்கு அமர்த்தி குடிநீர் வழங்கல் கூடுதலாக்கப்பட்டது. வடகிழக்குப் பருவமழை துவங்கி, பெய்த மழையினால் 19.10.90 அன்று 550 மில்லியன் கன அடியாக இருந்த நீர்த் தேக்கங்களின் கொள்ளளவு 7.12.90 அன்று 4022 மில்லியன் கன அடியாக அதிகரித்துள்ளது. ஆரணியாற்றின் வெள்ளப் பெருக்கினைக் கொடுதலையாற்றிற்குத் திருப்பியதும் இந்தக் கொள்ளளவின் அதிகரிப்பிற்கு ஒரு காரணமாகும்.

வறட்சி காரணமாகக் கடந்த மூன்றாண்டுகளாக ஒரு நாள் விட்டு ஒரு நாள் சென்னை மாநகர மக்களுக்குக் குடிநீர் வழங்கப்பட்டு வந்தது.

இந்த ஆண்டு ஓரளவு போதுமான மழை பெய்ததனால், புழல், சோழவரம் ஆகிய ஏரிகளின் நீர்க் கொள்ளளவு அதிகரித்ததால், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆய்வு செய்து, 9.11.90 முதல் தினந்தோறும் குடிநீர் வழங்க உத்தரவிட்டார்கள். தினந்தோறும் குடிநீர் தொடர்ந்து வழங்கும் முறை, பொங்கல் திருநாள் வரை வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. குடிநீர்த் தேக்கங்களின் கொள்ளளவு மற்றும் குடிநீர் வழங்கும் நிலை பற்றி மறு பரிசீலனை செய்து, சென்னை நகருக்குத் தினந்தோறும் குடிநீர் தொடர்ந்து வழங்குவது குறித்து, பின்னர் ஒரு முடிவு எடுக்கப்படும். **நாள்தோறும் குடிநீர் வழங்க ஆரம்பித்ததிலிருந்து தண்ணீர்த் தட்டுப்பாடு இருக்கும் பகுதிகள் 1210-லிருந்து 268-ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.** இந்தப் பகுதிகளில் குடிநீர் வழங்க 150 வாடகை டாங்கர் ஊர்திகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தற்சமயம் உத்தேசிக்கப்பட்டுள்ள அபிவிருத்திப் பணிகள் செயல்படுத்தப்பட்ட பிறகு வாடகை ஊர்திகளின் எண்ணிக்கை மேலும் குறையும்.

**சட்டமன்ற உறுப்பினர்களுடன் மாதாந்திரக் கூட்டம்**

சென்னைப் பெருநகர மக்களின் அன்றாட வாழ்வில் இன்றியமையாத ஒரு சேவை நிறுவனமாகச் சென்னைக் குடிநீர் வாரியம் அமைந்துள்ளதால், குடிநீர் வாரியத்தின் பணிகளைக் குறிப்பிட்ட இலக்கில் கொஞ்சமும் தொய்வின்றி நிறைவேற்றிட, மக்கள் தொடர்புப் பணியில் கவனம் செலுத்துவது தலையாய கடமையாகிறது.

மக்களின் தேர்ந்தெடுக்கப்பெற்ற பிரதிநிதிகளாகிய-சென்னை நகரின் - அனைத்துச் சட்டப் பேரவை உறுப்பினர்களையும் மாதந்தோறும் மூன்றாவது வேலை நாளில் சென்னைக் குடிநீர் வாரியத்தலைவரும் பிற அலுவலர்களும் சந்திக்கின்றனர். இதன் முதற் கூட்டத்தை 19.4.90-இல் முன்னின்று தொடங்கி வைத்தது, வாரியத்தின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் வழிவகுப்பதாய் அமைந்துள்ளது. **மாதமொருமுறை மக்கள் பிரதிநிதிகளைக் கூட்டி, அவர்களின் கருத்தறிந்து, உடனுக்குடன் குறைகளை நிவர்த்திக்கும் முறை, சென்னைக் குடிநீர் வாரிய வரலாறு இதுவரை காணாத ஒன்றாகும்.**

இக்கூட்டத்தில் சென்னைக் குடிநீர் வாரியம், தங்கள் தொகுதியின் குடிநீர் வழங்கல்-கழிவு நீரகற்றல் மேம்பாட்டிற்கு ஆற்ற வேண்டிய பல வேறு பணிகளைச் சட்டப்பேரவை உறுப்பினர்களும், அவர்களது பிரதிநிதிகளும் சுட்டிக்காட்டுகின்றனர். கூட்டத்தில் எழுப்பப்பெறும் பிரச்னைகள் மீது எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளைப் பற்றிய அறிக்கை, உடனுக்குடன், சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டு, மக்களின் குறைகள் களையப்பட்டு வருகின்றன.

சென்னை மாநகரைப் பகுதி வாரியாகத் தூய்மைப்படுத்தும் தீவிரத் திட்டம் 16.6.90-இல் தொடங்கப்பெற்று, தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இப்பணியில், சென்னைக் குடிநீர் வாரியமும் சென்னை மாநகராட்சியும் இணைந்து கோட்டங்கள் தோறும், மழைநீர் வடிகால்களைத் துப்புரவு செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.



**மக்களின் பிரதிநிதிகளாகிய சென்னை நகரின் 12 தொகுதிகளின் சட்டப் பேரவை உறுப்பினர்களை, மாதந்தோறும் 3-வது வேலை நாளில், சென்னைக் குடிநீர் வாரியத் தலைவரும் பிற அலுவலர்களும் சந்திக்கின்றனர். சட்டமன்ற உறுப்பினர்களுடனான முதல் கூட்டத்தை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார் (19.4.90).**





பாவேந்தர் நூற்றாண்டு

சாதி என்னும் தாழ்ந்தபடி
நமக்கெல்லாம் தள்ளுபடி;
சேதி அப்படி தெரிந்து படி
தீமை வந்திடுமே மறுபடி - நூலைப்படி!

யிருப்புகளில் 296 குடியிருப்பு களுக்கு இந்த ஆண்டு குடிநீர் வசதி செய்து தரத் திட்டமிடப்பட்டுள்ளது. ஏற்கெனவே 390 நீர் ஆதாரமற்ற குடியிருப்புகளுக்குக் குறைந்தது ஓர் நீர் ஆதாரம் என்ற அடிப்படையில் நீர் ஆதாரம் வழங்கப்பட்டுள்ளது. இவற்றுள், இவ்வாண்டில் 31.10.90 முடிய 158 குடியிருப்புகளுக்கு ரூ.424.94 இலட்சம் செலவில் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள் ளது. இதன்மூலம் இந்த நிதி ஆண்டில் 1,37,600 மக்கள் பயன் அடைந்து உள்ளனர்.

இவற்றில் 70 ஆதிதிராவிடர் குடியிப்புகளுக்கு இவ்வாண்டில் 31.10.90 வரை குடிநீர் வழங்கப் பட்டுள்ளது. இது தவிர கடந்த ஆண்டில் (89-90) 200 மக்கள் தொகை அல்லது 40 குடும்பங் களுக்கு மேல் உள்ள ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு ஒரு கையிறைப் பான் போடும் திட்டத்தின் கீழ் 76 குடியிருப்புகளுக்கும், இந்த ஆண்டில் 8 குடியிருப்புகளுக்கும் ரூ.10 இலட்சம் செலவில் குடிநீர் வழங்கப் பட்டுள்ளது. மேலும், காமராசர் ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்குச் சென்ற ஆண்டில் (1989-90) 50 குடியிருப்புகளுக்கும், இந்த ஆண்டில் 7 குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் உள்ள நீரை நல்ல நீராக மாற்றும் திட்டத்தின் கீழ் 7 இடங்களில் இயந்திரங்கள் பொருத்தத் திட்டமிடப்பட்டு, 7 திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன. இரண்டு திட்டங்களின் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதற் கான திட்ட மதிப்பு ரூ.105.26 இலட்சங்கள்.

1. குமராட்சி ஒன்றியத்தில் திட்டம் முடிந்து பயனில் உள்ள இடங்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| நாஞ்சனூர் | ரூ.13.89 இலட்சம் |
| உசப்பூர் | ரூ.14.19 இலட்சம் |
| பரிவிளாகம் | ரூ.12.19 இலட்சம் |
| வெல்லூர் மெயின் | ரூ.12.07 இலட்சம் |
| கூத்தன் கோயில் | ரூ.7.62 இலட்சம் |

**பணிகள் நடைபெறும் இடம்:**

| | |
|---|---|
| நடுத்திட்டு | ரூ.9.33 இலட்சம் |

2. பரங்கிப்பேட்டை ஒன்றியத் தில் திட்டம் முடிந்து பயனில் உள்ள இடங்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| ராதாவிளாகம் | ரூ.10.85 இலட்சம் |
| பள்ளிப்படை | ரூ.13.39 இலட்சம் |

**பணிகள் நடைபெறும் இடம்:**

| | |
|---|---|
| ராமநாதன்குப்பம் | ரூ.11.73 இலட்சம் |

மேலும் உப்புநீரை நல்ல நீராக மாற்றும் நடமாடும் இயந்திரத்தின் மூலம் ரூ.10 இலட்சம் செலவில் குடிநீர் வழங்கப்பட உள்ளது.

நடப்பு நிதியாண்டில் வறட்சி நிவாரணப் பணியின் கீழ் முதல் கட்டமாக 150 ஆழ்துளைக் கிணறு களும், இரண்டாம் கட்டமாக 91 ஆழ்துளைக் கிணறுகளும் ரூ.60.25 இலட்சம் செலவில் அமைக்க ஒப் புதல் அளிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் 31.10.90 முடிய 226 ஆழ்துளைக் கிணறுகள் அமைத்துப் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள் ளன. மீதமுள்ள அனைத்துப் பணி களும் நவம்பர் 1990-க்குள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

3,000 மக்கள் தொகை உள்ள குடியிருப்புகளுக்கு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டும் திட்டங் களின் கீழ் மொத்தம் 47 குடியிருப்பு களுக்கு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டும் பணியின் கீழ் இந்த ஆண்டு 41 குடியிருப்புகளுக்கு ரூ.252.65 இலட்சம் செலவில் கட்டித்தர ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

மேலும் டேனிடா உதவியுடன் பரங்கிப்பேட்டை மற்றும் மரக் காணம் ஒன்றியங்களில் உள்ள அனைத்துக் குடியிருப்புகளுக்கும் நிரந்தர நீர் ஆதாரம் பெற்று குடிநீர் திட்டம்/கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைக்கும் பணிகளுக்கு ஆய்வு மேற்கொண்டு பணிகள் துவங் கப்பட உள்ளன. இதற்கான டேனிஷ் அரசின் உதவி ரூ.240 இலட்சம் பெறப்பட்டு இத்திட்டத்தினை 3 ஆண்டுகளில் முடிக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

மேலும் வறட்சி மிகுந்த ஊராட்சி ஒன்றியங்களில் 6 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**நகரக் குடிநீர்த் திட்டங்கள்:**

இம்மாவட்டத்தில் நெய்வேலி நகரியம் நீங்கலாக 7 நகராட்சிகளும் 7 நகரப் பேரூராட்சிகளும், 24 ஊரகப் பேரூராட்சிகளும், ஒரு நகரப் பேரூராட்சி நகரியமும் ஆக 39 நகரங்கள் அடங்கி உள்ளன.

இவற்றில் ஏற்கனவே 7 நக ராட்சிகள், 5 பேரூராட்சிகள், 7 ஊரகப் பேரூராட்சிகள் (ஆக 19 நகரங்களுக்கு) ரூ.512.22 இலட்சம் செலவில் 5,17,000 மக்கள் பயன் பெறும் வகையில் குடிநீர்த் திட் டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மேலும் ரூ.772.88 இலட்சம் மதிப்பீட்டில் 10 நகரங்களுக்கு குடிநீர்த் திட்டமும், ரூ.287.811 இலட்சம் மதிப்பீட்டில் 3 நகரங் களுக்கு மேம்பாட்டுத் திட்டமும் செயலாக்கப்பட்டு வருகின்றன. இத் துடன் 5 ஊரகப் பேரூராட்சிகளுக்கு உலக வங்கியின் உதவியுடன் குடி நீர்த் திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது.

மேலும் ஒரு நகரப் பேரூராட்சி, மூன்று ஊரகப் பேரூராட்சிகள், ஒரு நகரியம் ஆகியவற்றில் குடிநீர்த்திட்ட ஆய்வுப் பணிகளும், ஒரு நகராட்சி, ஒரு நகரப் பேரூராட்சி, இரண்டு ஊரகப் பேரூராட்சி ஆகியவற்றில் குடிநீர்த் திட்ட மேம்பாட்டுப் பணிக் கான ஆய்வுகளும் நடைபெற்று வரு கின்றன.

இது தவிர, விழுப்புரம் நகராட்சி களுக்குப் பாதாளச்சாக்கடை அமைக்கும் திட்டத்திற்கான ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**வை. புண்ணியமூர்த்தி**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**தென்னார்க்காடு மாவட்டம்**





# சென்னைக் குடிநீர் வாரியத்தின் சீரிய பணிகள்

**மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர்**

## டாக்டர் பொன்முடி

இந்தியாவின் முதன்மை வாய்ந்த நகரங்களுள் நான்காவது இடம் வகிப்பது சென்னை மாநகரம். இந்நகரின் வளர்ந்து வரும் மக்கட் தொகைக்கேற்ப, குடிநீர் வழங்கல், கழிவுநீரகற்றல் ஆகிய இரு பணிகளையும் செம்மையுடன் செய்திடும் வகையில், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் கழிவு நீரகற்று வாரியம் என்ற தனியமைப்பு, சட்டப்படி நிறுவப் பெற்று, கடந்த பன்னிரண்டு ஆண்டு களாக வளர்ச்சி அடைந்துள்ளது.

'சென்னைக் குடிநீர் வாரியம்' என்று சுருக்க மாக அழைக்கப்படும் இவ்வாரியம் தன் பத் தாண்டுக் காலப் பணியை முடித்த நிலையில் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் ஆட்சி மீண்டும் மலர்ந்தது.

மாமழை காணாது வாடிய பயிராக, மாநகரம் இருந்த போது, வறட்சித் தடுப்புப் பணியில் சென்னைக் குடிநீர் வாரியம் ஈடுபட்டிருந்த நேரம் அது. இருப்பினும், இயற்கையால் விளைந்த அவலத்தை மக்கள் அறியாவண்ணம் அவர் களுக்குச் சிக்கனமாகக் குடிநீரைப் பயன்படுத்தும் பக்குவத்தைச் சென்னைக் குடிநீர் வாரியம் செய லாற்றுவதற்குரிய எல்லாப் பொறுப்புகளையும் சுமக்கும் நிலை தமிழக அரசின் புதிய அமைச்சர வையைச் சார்ந்தது. இதற்காக, நிர்வாக இயந்திரத்தை முடுக்கிவிட்டு, போர்க்கால அடிப்படையில், சென்னைக் குடிநீர் வாரியத்தினால் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பெற்றன.

வறட்சித் தடுப்புப் பணிகளில் முறைகேடுகள் நிகழாவண்ணம், லாரிகளில் குடிநீர் பகிர்ந்தளிப்பு முறைக்குரிய வழித்தடங்களுக்குரிய வாடகைச் செலவினை சீரமைக்கப்பட்டதை முதலில் குறிப் பிட வேண்டும்.

**வறட்சி நிலை:**

குடிநீர் அமைப்பினில் தொடர்ந்து அபிவிருத் திகள் செய்த போதிலும், 1987-ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் மூன்று நீர்த் தேக்கங்களும் முழுமையாக வறண்டு விட்டன. நிலத்தடிநீர்ப் படுகைகளிலுள்ள நிலத்தடி நீர் கொண்டு 1987-ஆம் ஆண்டு ஜுலை மாதம் முதல் தேதியிலிருந்து அரசு ஆணைக்கேற்ப, சென்னை நகருக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் குடிநீர் வழங்கப்பட்டு வந்தது.

**"மக்களின் தேர்ந்தெடுக்கப்பெற்ற பிரதிநிதிகளாகிய சென்னை நகரின், அனைத்துச் சட்டப்பேரவை உறுப் பினர்களையும் மாதந்தோறும் மூன்றாவது வேலைநாளில் சென்னைக் குடிநீர் வாரியத் தலைவரும், பிற அலுவலர்களும் சந்திக்கின்றனர். இதன் முதற்கூட்டத்தை 19.4.1990-ல் முன்னின்று தொடங்கி வைத்தது, வாரியத்தின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் வழிவகுப்பதாய் அமைந் துள்ளது. மாதமொருமுறை மக்கள் பிரதிநிதிகளைக் கூட்டி, அவர்களின் கருத்தறிந்து, உடனுக்குடன் குறை களை நிவர்த்திக்கும் முறை சென்னைக் குடிநீர் வாரிய வரலாறு இதுவரை காணாத ஒன்றாகும்."**

**1989-ஆம் ஆண்டு வறட்சிப் பணிகளுக்காக அரசு ரூ.736.11 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்ததில், கீழ்க்கண்ட பணிகள் நிறைவேற்றப்பட்டன.**

| | பணியின் பெயர் | செலவு (ரூ. இலட்சங்கள்) |
|---|---|---|
| 1. | புதிய இந்தியா மார்க் பம்புகள் 835 அமைத்தல் ... | 148.93 |
| 2. | புதிய குடிநீர்த் தொட்டிகள் 200 அமைத்தல் ... | 16.90 |
| 3. | குடிநீர் வழங்க 250 டாங்கர்கள், 50 டிராக்டர்கள் செப்டம்பர் வரையிலும், அக்டோபர் முதல் 350 டாங்கர்கள், 50 டிராக்டர்கள் வாடகைக்கு அமர்த்துதல் ... | 490.64 |
| 4. | செங்குன்றம் மற்றும் சோழவரம் ஏரிகளிலிருந்து பம்புகள் மூலம் நீர் இறைத்தல் ... | 7.25 |
| 5. | செங்குன்றம் ஏரியில் நீர் ஆவியாதலைத் தடுத்தல் ... | 16.73 |
| 6. | தனியார் கிணறுகளை வாடகைக்கு அமர்த்துதல் ... | 1.65 |
| 7. | இந்தியா மார்க்-2 பம்புகள் பழுது பார்த்தல் ... | 10.33 |
| 8. | இரும்புத் தொட்டிகளைப் பழுது பார்த்தல் ... | 10.38 |

மக்களின் வசதிக்காக வீதிகளில் நிறுவப்பட்டிருக்கும் பொதுக்குழாய்கள், இந்தியா மார்க்-2 பம்புகள், கைப்பம்புகள் முதலியவற்றிற்குரிய வடிகால்களை அமைத்து அவற்றைச் சரிவர இயங்கச் செய்வதன் வாயிலாக, வீதிகளில் நீர் தேங்காமலும், அதனால் கொசு உற்பத்திக்கு இடமின்றி மலேரியா காய்ச்சல் தடுப்புப் பணியை ஆற்றி மக்கள் நல்வாழ்வைக் காத்தலும் சாத்தியமாகிறது. மழைநீர் கால்வாய்களில் தூர்ந்துள்ள வண்டல், சேறு, சகதி முதலியவற்றைச் சென்னைக் குடிநீர் வாரியமும் சென்னை மாநகராட்சி ஊழியர்களும் இணைந்து அகற்றி அப்புறப்படுத்தியதன் வாயிலாகக் கடந்த மழைக் காலத்தில், வெள்ளம் போல் வீதிகளில் நீர் தேங்குவது பெருமளவு தவிர்க்கப்பட்டது.

**உலக வங்கித் திட்டம்**

இருக்கும் நீர் நிலை ஆதாரங்களை மேம்படுத்துவதுடன், நீண்டகாலத் திட்டங்களையும் உலக வங்கியின் நிதியுதவியுடன், சென்னைக் குடிநீர் வாரியம் நிறைவேற்றி வருகின்றது.



சென்னை நகருக்குக் குடிநீர் வழங்கும் ஆதாரங்களை மேம்படுத்துதலை நோக்கமாகக் கொண்டு ரூ.150.80 கோடி மதிப்பில் இத்திட்டம் நடைபெற்று வருகிறது. நிலத்தடி நீர்ப்புலங்கள் ஏற்கெனவே அமைக்கபட்டு இயங்கி வருகின்றன. ஆரணி ஆற்றில் ஒரு அணைக்கட்டு கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், வெள்ளத் தடுப்பணைகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் முடிந்தபின் மேலும் 47 மி.லிட்டர் நீர் நாள்தோறும் கிடைக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதனால் குடிநீரின் விநியோக அளவு நாளொன்றுக்கு 395 மி. லிட்டருக்கு உயரும்.

***கிருஷ்ணா குடிநீர்த் திட்டம்***

சென்னை நகரில் வளர்ந்து வரும் மக்கட்தொகை, அருகில் உள்ள எல்லாவித நீர் ஆதாரங்களையும் ஏற்கெனவே பயனுக்குக் கொண்டு வந்தது, ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, தமிழக அரசு கிருஷ்ணா குடிநீர்த் திட்டத்தின் மூலம் சென்னை நகருக்குப் போதுமான அளவு குடிநீர் வழங்க ஒரு முடிவு எடுத்தது. இதனைத் தொடர்ந்து தெலுங்கு கங்கை திட்டத்தினைப் பற்றித் தமிழக முதலமைச்சரும், ஆந்திர முதலமைச்சரும் 18.6.1989 அன்றும், 4.2.1990 அன்றும் சந்தித்து ஆலோசனைகள் நடத்தினார்கள். இந்த ஆலோசனையின் முடிவாக 31.3.1993-க்குள் சென்னை நகருக்குக் கிருஷ்ணா நீரினைக் கொண்டு வரவேண்டும் என முடிவு மேற்கொள்ளப்பட்டது. இதற்காகச் சென்னைக் குடிநீர் வாரியம், கிருஷ்ணா நீரினைச் சுத்திகரித்து விநியோகித்தல் மற்றும் கழிவு நீர் அகற்று வசதி ஆகிய பணிகளைச் செய்ய வேண்டும். அதற்காக இந்தப் பணிகளுக்கு முதற்கட்டமாகத் தமிழக அரசு கொள்கையளவில் ரூ.505.46 கோடிகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இந்தப் பணிகளை நிறைவேற்றுவதன் மூலம் சென்னை நகருக்கு நாளொன்றுக்கு 400 மி. லிட்டர் கூடுதலாகக் குடிநீர் வழங்குவதன் மூலம் மொத்த விநியோக அளவு 795 மி.லிட்டருக்கு உயர்த்தப்படும். இதனால் நபரொன்றுக்கு, நாளொன்றுக்கு வழங்கப்படும் குடிநீர் 100 லிட்டராக உயர்த்தப்படும். இந்தத் திட்டத்தினால் சென்னை நகருக்கு மட்டுமல்லாமல் அதற்கு அருகாமையில் இருக்கும் ஆவடி, அம்பத்தூர், போரூர், வளசரவாக்கம், இராமாபுரம், மதுரவாயில், நெற்குன்றம், ஆலந்தூர், பரங்கிமலை, கொட்டிவாக்கம், பள்ளிக்கரணை, புழுதிவாக்கம், நந்தம்பாக்கம், திருவொற்றியூர், மாதவரம், மணலி, கத்திவாக்கம் ஆகிய புறநகர்ப்பகுதிகளுக்கும் குடிநீர் வசதி செய்து கொடுக்க இயலும்.

இந்தத் திட்டப் பணிகளின் செலவுக்காக, நடைமுறையில் இருக்கும் உலக வங்கித் திட்டம், ''ஹட்கோ'' நிறுவனம் (HUDCO), ஆயுள் காப்பீட்டுக் கழகம் (LIC) ஆகியவற்றின் உதவிகளை அணுகியுள்ளது. தவிர, உலக வங்கித் திட்டத்தின் இரண்டாவது கட்டமாக ஒரு பெருந்தொகையைப் பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்தத் திட்ட முன்னேற்றம் அனைத்து உயர்மட்ட அதிகாரிகளுடன் அவ்வப்பொழுது பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றது. இந்தத் திட்டத்ததினைச் சார்ந்த முக்கியப் பணிகளான, நாளொன்றுக்கு 300 மில்லியன் லிட்டர் திறனுள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் செங்குன்றத்தில் அமைத்தல் (ரூ.30.632 கோடி) செங்குன்றத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்ட நீரினைப் போரூருக்கு எடுத்துச் செல்ல முதன்மைக் குழாய்கள் பதித்தல் (ரூ.41.877 கோடி) சுத்திகரிக்கப்படாத நீரினைச் செங்குன்றத்திற்கு எடுத்துக் கொண்டு வருதல் (ரூ.10.946 கோடி) ஆகியவற்றிற்குத் தமிழக அரசு ஆணை வழங்கியுள்ளது.

தெலுங்கு கங்கைக் குடிநீர்த் திட்டம் என்றழைக்கப்படும் இத்திட்டப் பணிகளை, சென்ற ஆண்டு தமிழ்ப்புத்தாண்டு நன்னாளில் (14.4.1990) மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் புதுப்பொலிவுடன் தொடங்கி வைத்தார்கள். அப்போதைய மாண்புமிகு மத்திய அரசின் நகர்ப்புற மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. முரசொலி மாறன் அவர்கள் விழாவிற்குத் தலைமையேற்க, ஊரக உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்களும், கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி அமைச்சர் திரு. எஸ்.தங்கவேலு அவர்களும், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் அவர்களும் விழாவினில் பங்கேற்றனர்.

தெலுங்கு கங்கைக் குடிநீர்த் திட்டப்பணிகள் விழாவின் போதே, சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்குவதன் 75 ஆண்டுக்கால நிறைவு பவள விழாவும் (1914-90) சேர்த்துக் கொண்டாடப்பெற்றது.

கீழ்ப்பாக்கம் நீரேற்று நிலையத்தில், நாளொன்றுக்கு 90 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பெற்றதன் தொடக்க விழாவாகவும் -முப்பெரு விழாவாக, இந்த நல்விழா அமைந்தது.

**சமீபத்தில் முடிவுற்ற திட்டப்பணிகள்**

ஈக்காட்டுத்தாங்கல், மேற்குமாம்பலம், அசோக் நகருக்கான குடிநீர் விநியோகம் அபிவிருத்தி செய்யப்பட்டது. வில்லிவாக்கம். குளத்தூர், திருமங்கலம் அண்ணாநகர் மேற்கு விரிவாக்கப் பகுதிகள், எருக்கஞ்சேரி, கொடுங்கையூர், பள்ளிப்பட்டு, திருவான்மியூர் பகுதிகளில் குடிநீர் மேம்பாடு செய்யப்பட்டது. உலக வங்கித் திட்டத்தின் கீழ் பழைய விநியோகக் குழாய்கள் மாற்றியமைக்கப்பட்டன. கடந்த இரண்டாண்டுகளில் 65 கி.மீ. நீளத்திற்கு மாற்றியமைக்கப்பட்ட விநியோகக் குழாய்களைச் சேர்த்து மொத்தம் 190 கி.மீ. நீளத்திற்குக் குழாய்கள் பதிக்கப்பட்டன.

**சென்னைக்கு நீர் வழங்கும் தேக்கங்களில் நீர் ஆவியாகிப் போவதனால் ஏற்படும் நீரிழப்பினைத் தடுத்தல்**

குடிநீர்த் தேக்கங்களில் மொத்தத்தில் ஓராண்டில் 41 விழுக்காடு அளவு நீர் ஆவியாகி வீணாகிப் போவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இதனைத் தடுப்பதற்குப் புழலேரியில் இரசாயனக் கலவைகளினால் தண்ணீர் ஆவியாவது தடுக்கப்பட்டு, சென்னை நகருக்கு வழங்கப்படும் குடிநீரின் அளவு அதிகரிக்கப்பட்டது.

**1990-ஆம் ஆண்டில் வறட்சிப் பணிகளுக்காக அரசு ரூ.800.00 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்து கீழ்க்கண்ட பணிகள் 30.11.90 வரை நிறைவேற்றப்பட்டன.**

| | பணியின் பெயர் | செலவு (ரூ. இலட்சங்கள்) |
|---|---|---|
| 1. | புதிய இந்தியா மார்க்-2 பம்புகள் 200 அமைத்தல் ... | 38.37 |
| 2. | புதிய குடிநீர்த் தொட்டிகள் 300 அமைத்தல் ... | 24.10 |
| 3. | குடிநீர் வழங்க 350 டாங்கர்கள், 50 டிராக்டர்கள் வாடகைக்கு அமர்த்துதல் ... | 651.87 |
| 4. | செங்குன்றம் மற்றும் சோழவரம் ஏரிகளிலிருந்து பம்புகள் மூலம் நீர் இறைத்தல் ... | 1.59 |
| 5. | செங்குன்றம் ஏரியில் நீர் ஆவியாதலைத் தடுத்தல் ... | 14.10 |
| 6. | நீர் நிரப்பும் இடங்களுக்கு அருகிலுள்ள சாலைகளைப் புதுப்பித்தல் ... | 30.00 |

**1989 மற்றும் 1990-ஆம் ஆண்டுகளில் நகரில் நிறுவப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட குடிநீர் வழங்கும் சாதனங்களின் விவரம்:**

| | விவரம் | 1989-ஆம் ஆண்டில் | 1990-ஆம் ஆண்டில் |
|---|---|---|---|
| 1. | நிறுவப்பட்ட இந்தியா மார்க் ஆழ்துளை கிணறுகள் | 835 | 200 |
| 2. | நிறுவப்பட்ட குடிநீர்த் தொட்டிகள் | 200 | 300 |
| 3. | குடிநீர் வழங்க வாடகைக்கு அமர்த்தப்பட்ட | | |
| | டாங்கர்கள் | 350 | 350 |
| | டிராக்டர்கள் | 50 | 50 |

## கொடுங்கையூர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து வெளியேற்றும் நீரைத் திரும்பப் பயன்படுத்துதல்

கொடுங்கையூரில் உள்ள இரண்டு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து இரண்டாவது கட்ட வடிகட்டி வாயிலாக வெளியேற்றப்படும் நீரினை வட சென்னையிலுள்ள தொழிற்சாலைகளுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் தற்பொழுது தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் நிலத்தடி நீரினை நகரின் குடிநீர் வழங்கலுக்குப் பயன்படுத்த ஏதுவாகும்.

### கழிவு நீரகற்று வசதி:

சென்னை நகரத்தில் கழிவு நீரைச் சேகரித்து அப்புறப்படுத்துவதற்குச் சென்னை மாநகரம் 5 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு அந்தந்த மண்டலங்களில் சேரும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அனுப்பப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு புல் வளர்ப்பிற்காகப் பயன்படுத்தப்படுகிறது. சென்ற ஆண்டில் கொடுங்கையூரில் மண்டலம் 1,2-க்கான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கும் பணி முடிக்கப்பட்டு உபயோகத்தில் கொண்டு வரப்பட்டது. திருவான்மியூர், மேல்பட்டடை, பள்ளிப்பட்டு, பெரியார் நகர், அரும்பாக்கம் மேற்குப் பகுதிகளில் கழிவுநீரகற்று வசதிப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. வில்லிவாக்கம், கோட்டூர், எம்.ஜி.ஆர். நகர்ப் பகுதிகளில் கழிவுநீரகற்று வசதிப் பணிகள் முடியும் தறுவாயில் உள்ளன.

கிருஷ்ணா குடிநீர்த் திட்டத்தின் மூலம் சென்னை நகருக்கு மேம்படுத்தப்படும் குடிநீரின் மூலம் அதிகப்படியாக வரும் கழிவுநீரினை அப்புறப்படுத்துவதற்காகச் சமீபத்தில் அரசு ஆணை பிறப்பித்துள்ள ரூ.505.46 கோடியில் ஒரு பகுதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதனைக் கொண்டு கழிவு நீரகற்று வசதித்திட்டத்தை மேம்படுத்துதல், கழிவு நீரேற்று நிலையங்களைப் புதுப்பித்து மாற்றி அமைத்தல், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் திறனை அதிகப்படுத்துதல் ஆகிய பணிகள் செயல்படுத்தப்படும். இதுவரை கழிவு நீரகற்று வசதி செய்யப்படாத 9 பஞ்சாயத்துகளுக்கு அந்த வசதிகள் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### ஆதி ஆந்திர மக்களின் குடியிருப்புகளுக்குக் கழிவு நீரகற்று வசதி

சென்னை மாநகரில் ஆதி ஆந்திர மக்களும், வாழ்நிலையில் கீழே இருப்பவர்களும் வாழும் குடியிருப்புகளுக்கு, அடிப்படை வசதிகளில் ஒன்றான கழிவுநீரகற்றும் வசதி இதுவரை செய்யப்படாமலிருந்தது. இதனால், அவர்கள் மிகவும் கஷ்டத்திற்கு உள்ளாகினர். இக்குடியிருப்புகளுக்குக் கழிவுநீரகற்றும் வசதி செய்து தருவதற்கென அரசு ரூபாய் ஒரு கோடி ஒதுக்கீடு செய்தது. கழிவுநீர்க்குழாய் அமைப்பதற்காக வெட்டிய சாலையைச் சீரமைக்க சென்னை மாநகராட்சிக்குச் செலுத்த வேண்டிய பணிக்கட்டணமும், சென்னைக் குடிநீர் வாரியத்தால் இம்மாதிரிப் பணிகளுக்கென வசூலிக்கப்படும் பணிமேற்பார்வைக் கட்டணமும், குழாய் முதலிய பொருட்களுக்கான கட்டணமும் இல்லாமல், மொத்தம் 33 குடியிருப்புகளுக்கு, 15.62 கி.மீ. நீளத்திற்கு கழிவுநீர்க் குழாய்கள் அமைக்கப்படுகின்றன. மொத்தம் 33 குடியிருப்புகளில். 12 குடியிருப்புகளுக்கான கழிவு நீரகற்றும் பணிகள் முதற்கட்டமாக முடிவு பெற்றுவிட்டன. 1991 மார்ச் மாத இறுதிக்குள், மீதியுள்ள குடியிருப்புக்களுக்குமான பணி முடிவு பெற்றுவிடும்.

இப்போது சற்றொப்ப 43 இலட்சம் மக்கள் தொகை கொண்ட சென்னை மாநகர் இந்நூற்றாண்டு முடிவில் சுமார் 50 இலட்சமாகலாம். அரைக்கோடி மக்களுக்கு நாள்தோறும், ஒவ்வொருவருக்கும் நூறு லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்குதல் நம் இலக்காகும். அதற்கு இப்போதிருந்தே நாளும் உழைத்துவரும் சென்னைக் குடிநீர் வாரியம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையின் கீழ் அரும் பணிகள் ஆற்றிச் சாதித்து வருகிறது எனப் பெருமையுடன் குறிப்பிடலாம்.

## அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்

★ தமிழகத்தில் தொழில் தொடங்குபவர்களுக்கு இந்தியாவிலேயே அதிகச் சலுகைகள் வழங்கப்படுகின்றன என்று தொழில் துறைச் செயலர் தெரிவித்தார் (21.12.90).

★ கோவை மாவட்டத்தில் மூன்று மாத காலத்தில் 40 குடும்ப நல அறுவைச் சிகிச்சை சிறப்பு முகாம்கள் நடத்தப்படும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் கூறினார் (15.12.90)

★ திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டத்தில் ரூ.308 இலட்சம் மதிப்பீட்டில் பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல், தார்ச் சாலைகள் அமைத்தல், தொகுப்பு வீடுகள் (கான்கிரீட் வீடுகள்) கட்டுதல், குளங்களைச் சீரமைத்தல், கசிவுநீர்க் குட்டைகள் அமைத்தல், வங்கி மூலம் கடன் வழங்குதல் போன்ற வளர்ச்சிப் பணிகள் நடைபெற்றுள்ளன என்று அரசு அறிவித்துள்ளது (16.12.90)

★ பொருளாதாரத்தில் நலிந்த நிலையில் உள்ள மக்களுக்கு உதவும் விதத்தில் தன்னிறைவு வீட்டு மனைத் திட்டத்தின் கீழ் அடுத்த 5 ஆண்டுகளில் சுமார் 250 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் 70 ஆயிரம் வீட்டுமனைகள் மேம்படுத்தப்படும். இதேபோல குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், சுமார் 47 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 94,000 வீடுகள் மேம்படுத்தப்படும். நகர்ப்புறங்களில் சுமார் ஒரு இலட்சம் குடும்பங்கள் பயன் பெறும் வகையில் வீட்டுவசதி மேம்பாட்டுத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு கண்ணப்பன் அவர்கள் தெரிவித்தார் (22.12.90).



# போற்றி வளர்க்கப்பட வேண்டிய கால்நடை மருத்துவ அறிவியல்

## கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் மாண்புமிகு முதல்வர் வழங்கிய பட்டமளிப்பு விழா உரை.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் முதலாவது பட்டமளிப்பு விழா, பல்கலைக்கழக வேந்தர் மேதகு தமிழக ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பல்கலைக் கழகத்தின் இணைவேந்தர் மாண்புமிகு தமிழக அரசு கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை அமைச்சர் டாக்டர் க.சந்திரசேகரன் அவர்கள் கலந்து கொண்ட இந்த விழாவில், பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. பொ.ரிச்சர்ட் மாசிலாமணி அவர்கள் வரவேற்புரையுடன் தொடங்கிய இவ் விழாவில்- மாணவ மாணவியருக்கு மேதகு ஆளுநர் அவர்கள் பட்டங்கள் வழங்கினார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய பட்டமளிப்பு விழாப் பேருரை விவரம் வருமாறு:

தமிழக ஆளுநர் - இப்பல்கலைக் கழக வேந்தர்
மேதகு சுர்ஜித்சிங் பர்னாலா அவர்களே!
மாண்புமிகு கால்நடைத்துறை அமைச்சர்-
இப்பல்கலைக் கழகத்தின் இணை வேந்தர்
டாக்டர் சந்திரசேகரன் அவர்களே!
பல்கலைக் கழகத் துணை வேந்தர் அவர்களே!
ஆட்சி மன்றக் குழு உறுப்பினர்களே!
பேராசிரியப் பெருமக்களே!
மாணவச் செல்வங்களாம் அன்பு உடன்பிறப்புகளே!

நாட்டிலேயே முதலர்வதாக அமையப் பெற்றிருக்கும் இக் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் முதலாவது பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்வதில் மெத்தவும் மகிழ்ச்சி அடைகின்றேன். எனக்கு இந்த நல்வாய்ப்பினை நல்கிய மேதகு வேந்தர் அவர்களுக்கு என் உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அறிவியல் வளர்ச்சி மனிதர்களுக்கு மட்டும் பயன்படவில்லை. நம்மைச் சுற்றியுள்ள ஒவ்வொரு பொருளுக்கும் பயன்படுகிறது. அந்த வகையில் கால்நடை மருத்துவ அறிவியல் மனித சமுதாயத்திற்கு உறுதுணையாக விளங்கும் கால்நடைகளின் வளர்ச்சிக்குப் பேருதவியாக அமைந்துள்ளது. எனவே, கால்நடை மருத்துவ அறிவியல் போற்றி வளர்க்க வேண்டியதாக உள்ளது.

நம் நாட்டின் மொத்த மக்கள் தொகையில் ஏறத்தாழ எழுபது விழுக்காட்டினர் கிராமப்பகுதியில் வசிக்கின்றனர். அவர்களில் பெரும்பாலோர் வேளாண்மை, கால்நடை மற்றும் கோழி வளர்ப்பு ஆகியவைகளை நம்பி வாழ்கின்றனர். பசுமைப் புரட்சியினால் நம்

> ''மனிதர்களைவிட, கால்நடைகள் ஒரு விதத்திலே மேல்! மனிதன் தனது ஆறாவது அறிவைப் பயன்படுத்திச் சில நேரங்களில் பொய் சொல்லிக் கோள் மூட்டுகிறான். ஆனால், கால்நடைகளுக்கு அந்த அறிவு இல்லாத காரணத்தாலும், பேச முடியாத காரணத்தாலும் அவை பொய் சொல்லிக் கோள் மூட்டுவதில்லை! அதனால் எனக்குக் கால்நடைகளை மிகவும் பிடிக்கும். கால்நடை மருத்துவ அறிவியலுக்கு ஒரு பல்கலைக் கழகம் அமைக்க வேண்டுமென்று கருதி அதனை நான் நிறைவேற்றியதற்கு இதுவும் ஒரு காரணம்!''
>
> —மாண்புமிகு முதல்வர் கலைஞர்



நாடு வேளாண்மை உற்பத்தியில் கணிசமான முன்னேற்றம் கண்டுள்ளது எனினும், உணவுத் தேவை முழுமையாகத் தீர்க்கப்பட வில்லை. நல்ல உடல் வளத்திற்கும், வளர்ச்சிக்கும் பால், முட்டை, இறைச்சி, மீன் போன்றவை தேவைப்படுகின்றன. இதனை மனதிற் கொண்டுதான் தமிழக அரசு பள்ளிக் குழந்தைகளின் சத்துணவில் கோழி முட்டையினை வழங்குகின்றது. மக்கள் தொகைப் பெருக்கத் தால் உணவுப் பற்றாக்குறை ஒரு பெரும் சிக்கலாக உருவெடுத் துள்ளது. இதனைச் சமாளிக்க வேளாண் உற்பத்திப் பெருக்கம் மட்டுமல்லாது கால்நடை, கோழி, மீன் போன்ற பல்வேறு துறை களிலும் உற்பத்திப் பெருக்கம் ஏற்பட ஆவன செய்ய வேண்டும் என்பதில் ஐயமில்லை. உலக சுகாதார நிறுவனம் இதனை வெகுவாகச் சுட்டிக் காட்டுகிறது.

ஊரகப் பகுதியினைப் பொறுத்தவரையில் தொடர்ந்து வருவாய் மற்றும் வேலை வாய்ப்பு அளிப்பதில் கால்நடை வளர்ப்பும், கோழி வளர்ப்பும் பெரும்பங்கு கொள்கின்றன. பயிர்களுக்குத் தேவையான தொழு உரம், மண் வள மேம்பாடு, போக்குவரத்து போன்ற பல்வேறு பணிகளுக்கும் கால்நடைகள் பயன்படுகின்றன. மேலும் வேளாண் துணைப் பொருள்களைச் சத்துள்ள புரத உணவுப் பொருள்களாக மாற்றுவதோடு அதன் ஏற்றுமதி வாயிலாக அந்நியச் செலாவணி ஈட்டவும் வழிவகை செய்கின்றது. எனவே வெண்மை மற்றும் நீலப் புரட்சித் திட்டங்கள் மக்களுக்குச் சத்துள்ள உணவளிப்பதோடு நல்ல வருமானம் கிடைக்கவும் வழி செய்கின்றன.

தமிழ்நாடு ஒரு கோடியே 36 இலட்சம் மாடுகளையும், ஒரு கோடியே 8 இலட்சம் ஆடுகளையும், ஒரு கோடியே 83 இலட்சம் கோழிகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. அதன் மூலம் ஆண்டுதோறும் 34 இலட்சம் டன் பால், 37 ஆயிரம் டன் இறைச்சி, இருநூற்றி நாற்பத்தாறு கோடியே பத்து இலட்சம் முட்டைகள் ஆகியவை உற்பத்தியாகின்றன. பரிந்துரையின்படி ஒருவரின் அன்றாட நுகர்வு அளவு 280 கிராம் பால், 40 கிராம் இறைச்சி, ஆண்டுக்கு 180 முட்டைகளாக இருக்க வேண்டும். ஆனால், நமது மாநிலத்தின் தனிநபர் நுகர்வுக்கு 169 கிராம் பால், 26 கிராம் இறைச்சி மற்றும் 44 முட்டைகள் என்ற அளவிலேயே இன்று கிடைக்கின்றன

இந்த நிலையில் பாலில் 40 விழுக்காடும், இறைச்சியில் 35 விழுக்காடும், முட்டையில் 75 விழுக்காடும் பற்றாக்குறையாக உள்ளது. வரும் ஆண்டுகளில் மக்கள் பெருக்கம் மற்றும் வாங்கும் சக்தி தொடர்பாக இந்தப் பற்றாக்குறை மிகக்கூடும்.

உணவு உற்பத்தியில் மீன் வளர்ப்பும் ஒரு முதன்மையான பங்கு பெறுகின்றது. தமிழகம் சுமார் 1,000 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரையைத் தன்னகத்தே கொண்டுள்ளதால், மீன்வளம் பெருக நல்லதொரு வாய்ப்புண்டு. மொத்தத்தில் 16 இலட்சம் எக்டேர் நன்னீர் மற்றும் உவர்நீர் கொண்டிருந்தும் தற்போதைய உற்பத்தி 3 இலட்சம் டன் மட்டுமே. ஆனால் தேவையோ ஆண்டொன்றுக்கு 6 இலட்சம் டன் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. அதாவது தேவையில் சுமார் 50 விழுக்காடு மட்டுமே கிடைக்கப் பெறுகிறது.

மேற்கண்ட புள்ளி விவரங்களைக் கருத்தில் கொள்ளும்போது, கால்நடை வளர்ப்பு, மீன்வளம் ஆகியவற்றைப் பெருக்க வழி வகுக்கும் திட்ட முறைகளில் மேலும் கவனம் செலுத்த வேண்டும் என்பது தெளிவாகின்றது. உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடையவும், வேலை வாய்ப்பினை அதிகரிக்கவும் தனிநபர் வருமானத்தை உயர்த்தவும் குறிப்பாக ஊரகப் பகுதி மக்களுக்குப் பயன்படும் முறையில், 1990-91-ஆம் ஆண்டில் 57 கோடி ரூபாய் செலவில் பல திட்டங்கள் இவ்வரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கால்நடைகளின் உற்பத்தித் திறனைப் பெருக்கும் முகமாக, கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டம், கேந்திர கிராமத் திட்டம், அயலினக் காளைகளின் உறைவிந்து நிலையம் அமைத்தல் போன்ற பல திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. மேலும் தீவன வளர்ச்சித் திட்டங்கள் வாயிலாகப் புல் நாற்றுகள் மற்றும் விதைகள் அளிக்கப்பட்டுக் கால்நடை வளர்ப்பதற்கு ஊக்கம் அளிக்கப்படுகிறது. இந்தியப் பால்வள நிறுவனத்தின் உதவியுடன், 68 கோடி ரூபாய் செலவில், பால் பெருக்குத் திட்டம் செயல்பட்டு வருகிறது.

இறைச்சி உற்பத்தியையும், அதன் தரத்தையும் உயர்த்த அயலின செம்மறி ஆடுகள் மூலமாக நம் ஆட்டினங்களின் தரம் மேம்படுத்தப்படுகிறது.

கோழி வளர்ப்பினைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு கோழியின மேம்பாட்டுக் கழகம் மற்றும் அரசு நிறுவனங்கள் வாயிலாக உயர் ரகக் கோழிக்குஞ்சுகள், சமச்சீர் தீவனங்கள், மற்றும் விற்பனை வசதிகள் ஆகியவற்றை அளித்து நல்லதொரு சாதனையைப் படைத்துள்ளோம்.

நிலமற்ற ஏழைகள், சிறு மற்றும் குறு வேளாண் குடியினர், மலைவாழ் மக்கள், பழங்குடியினர் மற்றும் மகளிர் ஆகியோர் களுக்கு உதவும் வகையில் ஊரக வளர்ச்சித் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம், கன்று வளர்ப்புத் திட்டம் முதலியன செயலாக்கப்பட்டு வருகின்றன. இவ்வளர்ச்சிப் பணிகள் வாயிலாக மானியம் வழங்குதல், செயல்முறை உத்திகள் மற்றும் கால்நடை நலம் பேணுதல் ஆகிய வசதிகள் வழங்கப்படுகின்றன. இத்தகைய திட்டங்கள் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழ்கின்ற உழவர் குடி மக்களைப் பொருளாதார முன்னேற்றம் பெறச் செய்யும் என்பது திண்ணம்.

ஐரோப்பியப் பொருளாதார சமூக உதவியுடன் 13.67 கோடி ரூபாய் செலவில் ஆடுகளின் இறைச்சி உற்பத்தித் திறனை உயர்த்தும் திட்டமானது செங்கல்பட்டு, வடார்க்காடு-அம்பேத்கர், தென் ஆர்க்காடு, சேலம், தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் செயல் பட்டு வருகிறது.

மீன் வளத்தைப் பொறுத்தமட்டில் உற்பத்தியைப் பெருக்கு வதற்கும் அதன் வாயிலாக அந்நியச் செலாவணியை அதிகம் ஈட்டவும் நல்ல வாய்ப்புள்ளது. எனவேதான் தமிழக அரசு மீன் குஞ்சு உற்பத்தித் திட்டம், நீர்த் தேக்கங்களில் மீன் வளர்ப்பு, நன்னீர் மற்றும் கடல்நீர் மீன் பெருக்குத் திட்டம், மீன் பதனிடுதல் மற்றும் விற்பனை வசதிகள் போன்ற பல்வேறு பகுதிகளுக்குத் திட்டங்கள் செயல்பட ஆவன செய்யப்பட்டுள்ளது. நிலமற்ற தொழிலாளர்கள், சிறு விவசாயிகள், ஏழை மீனவர்கள், தொழில் முனைவோர், தொழில் நுட்ப வல்லுநர் போன்ற பல்வேறு

*''உவமைகளுக்குக் கூட கால்நடைகளைத் தான் நாம் விரும்பி அழைக்கிறோம். சோதனை யான நேரத்திலும் அவன் சிங்கம்போல் சிலிர்த்து நின்றான் என்கிறோம். புலிபோல் உறுமினான் என்கிறோம். ஏறுபோல் நடந் தான் என்கிறோம். ஆனால், மனிதனை உவமையாக்கி எந்த மிருகத்தையும் போற்றிப் பாராட்டுவதில்லை; புகழ்வதுமில்லை!''*

*—மாண்புமிகு முதல்வர் கலைஞர்*



# அரசியலுக்கும் கட்சிகளுக்கும் அப்பாற்பட்டு நாம் சிந்திக்க வேண்டும்!

## –மாண்புமிகு முதல்வர் கலைஞர் உரை

''நான் இங்கே தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் பெயரைக் குறிப்பிடும்போது அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் என்று குறிப்பிடாமல், இந்திய நாட்டுத் தமிழ் எழுத்தாளர் சங்கம் என்று குறிப்பிட்டேன். 'அனைத்து இந்திய' என்று சொன்னால் உலகத்திலே ஐந்தாறு இந்தியாக்கள் போலவும், அவைகளையெல்லாம் இணைத்து அனைத்திந்தியா என்று சொல்வதைப் போலவும் இருக்கும்.

''அந்தக் காரணத்தினாலேதான் அகில இந்தியா என்று சொல்லுவதோ - அனைத்திந்தியா என்று சொல்லுவதோ பொருத்தமுடையதல்ல என்ற கருத்துக்கு அழுத்தம் தர, 'இந்திய நாட்டுத் தமிழ் எழுத்தாளர் சங்கம்' என்ற பெயர் இருக்க வேண்டும் என்பதை, எழுத்தாளர் சங்கம் ஏற்றுக் கொள்ளும் என்ற நம்பிக்கையோடு இங்கே நான் அறிவித்திருக்கின்றேன்.

''ஒரு நிகழ்ச்சி! ஒரு தாய்; அவளுக்கு ஆறு ஏழு பிள்ளைகள்; ஒரு பிள்ளை வெளியூர் போயிருந்தான். வெளியூர் போயிருந்த பிள்ளை வீட்டிற்குத் திரும்பி வந்தான். சகோதரர்களெல்லாம் அவனை ஆவலோடு பார்த்தார்கள். அவன் வெளியூரிலேயிருந்து ஒரு காஞ்சிபுரம் பட்டுப் புடவை எடுத்து வந்திருந்தான். அதைத் தாயிடம் கொடுத்து ''அம்மா! நான் உனக்காக மிகுந்த கஷ்டப்பட்டுக் காசு பணம் சேர்த்து, இந்தக் காஞ்சிபுரம் சேலையை வாங்கி வந்திருக்கிறேன்'' என்று சொன்னான்.

''உடனே அவனது சகோதரர்களெல்லாம் அவனைப் பாராட்டி, அவனுக்கு ஒரு விழா எடுத்து ''தாயாருக்குக் காஞ்சிபுரம் சேலை வாங்கிக் கொண்டு வந்த மகனே வாழ்க!'' என்று வாழ்த்தினார்கள். அதைப் போலத்தான் இங்கே இந்த நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.



புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் எழுத்தோவியங்களை நாட்டுடைமை ஆக்கியதற்கும், தெருவெல்லாம் தமிழ்முழக்கம் செழிக்கச் செய்யத் திட்டம் பல தீட்டிச் செயல்படுத்தி வருவதற்கும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கு அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் ஒரு பாராட்டு விழா நடத்தியது.

31.12.1990 அன்று, சென்னையில் உள்ள ராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவுக்கு எழுத்தாளர் சங்கத் தலைவர் திரு. வாசவன் தலைமை தாங்கினார்; பொதுச் செயலாளர் திரு. ஏர்வாடி இராதாகிருஷ்ணன் வரவேற்புரையாற்றினார். விழா முடிவில், சங்கத்தின் துணைத் தலைவர் திரு. பூவேந்தர் முத்து நன்றி கூறினார்.

மாண்புமிகு மலேசிய அமைச்சர் திரு. டத்தோ சாமிவேலு அவர்கள், இவ்விழாவில் கலந்து கொண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பொன்னாடை அணிவித்து வாழ்த்துரை வழங்கினார்.

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. மு. தமிழ்க்குடிமகன், முத்தமிழ்க் காவலர் திரு. கி.ஆ.பெ. விசுவநாதம், டாக்டர் வி.ஜி. சந்தோஷம், கவிஞர் மு. மேத்தா, கவிஞர் வைரமுத்து, திரு. ஜி. உமாபதி, திருமதி எஸ்தர் பாண்டியன், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் சி. பாலசுப்பிரமணியம், 'கயல்' தினகரன், 'கவிக்கொண்டல்' மா. செங்குட்டுவன் ஆகியோர் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களைப் பாராட்டிப் பேசினார்கள்.

மாண்புமிகு அமைச்சர்கள் திரு. கோ.சி. மணி, திரு. எஸ். துரைமுருகன் மற்றும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், எழுத்தாளப் பெருமக்களும் பங்கேற்ற இவ்விழாவில் - எழுத்தாளர் சங்கத்தின் சார்பில் வழங்கப்பட்ட நினைவுப் பரிசை ஏற்றுக் கொண்டு - மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் வாழ்த்துகளுக்கு நன்றி தெரிவித்து உரையாற்றினார்.

''தாய்க்குக் காஞ்சிப் பட்டுச்சேலை வாங்கி வந்ததைப்போல - தமிழுக்கு உரிய பெருமையை அளிக்க வேண்டும் என்பதற்காக,நான் இருக்கின்ற பொறுப்பைப் பயன்படுத்திய ஒரு காரணத்துக்காக, அந்த வீட்டுப் பிள்ளைகளெல்லாம் விழா எடுத்ததைப் போல - நீங்கள் உங்களிலே ஒருவனான எனக்கு - உங்கள் உடன்பிறப்பாகிய எனக்கு விழா எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்!

''ஆனாலும் நம்முடைய தமிழர்கள் நிலை - தமிழகத்தின் நிலை, தமிழ் ஒரு அங்குலம் வளர்கிறது என்றாலே, தமிழுக்கு ஒரு அங்குல ஏற்றம் ஏற்படுகிறது என்றாலே நாம் அனைவரும் மெய் சிலிர்த்துப் போகிறோம். கண்களைக் குளமாக்கிக் கொண்டு ஆனந்தப்படுகிறோம். மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதக்கிறோம். என்ன காரணமென்றால், இத்தனை ஆண்டுக்காலமாகத் தமிழுக்கு விளைவிக்கப்பட்ட தீங்குகளெல்லாம் மெல்ல மெல்ல அகன்று, முகிலைக் கிழித்து வெளிக்கிளம்பும் முழுமதி போல் தமிழ் வெளிப்பட வேண்டும் என்று எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சிகளுக்கு வெற்றி கிடைக்கின்ற ஒவ்வொரு கட்டத்திலும் நாம் மகிழ்ச்சியடைகிறோம். அந்தப் போன்ற மகிழ்ச்சியைத்தான் நாம் இன்றைக்குப் பெறுகிறோம்.

''அரசியல் - கட்சி இவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டு நாம் சிந்திக்க வேண்டும். இந்தத் தமிழ்ச் சாதியை-தமிழ் இனத்தை எதிர்காலத்திலே அகராதிகளில்தான் பார்க்க முடியும் என்ற நிலை உருவாகி விடக்கூடாது!

''எப்படி சில அதிசயப் பிராணிகள் ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்து, அவைகளெல்லாம் மறைந்து, அறவே அற்றுப் போன சூழ்நிலையில், அவற்றின் படங்களை- அந்தப் பிராணிகள் அப்படி இருக்குமா? இப்படி இருக்குமா? என்று சித்திரம் வரைந்து காட்டி, அவற்றைப் பற்றி எழுதப்படுவதைப் போல்- இன்னும் ஓர் ஆயிரம் ஆண்டுக் காலம் கழித்துத் தமிழர் என்னும் ஓர் இனம் இருந்தது என்றும், அதன் குணங்களைப் பற்றி அகராதியில்தான் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டும், அதற்கு அடையாளம் காட்ட முடியாது என்ற நிலை ஏற்படுமேயானால், ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகுதானே - அப்போது நாம் இருக்கவா போகிறோம்; நம்மை யார் தூற்றப் போகிறார்கள் என்று கருதாமல், நாம் இல்லாவிட்டாலும் நம்முடைய கல்லறை இருக்கும் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு, எதிர்காலச் சந்ததி யாராவது மிச்சமிருந்து அந்தக் கல்லறை மீது காறித் துப்பாமல் இருக்க வேண்டுமேயானால், இன்றைக்கே நாம் அந்த உணர்வுகளைப் பெற்றாக வேண்டும்.

**அடுத்த இதழில்...**

**மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள்- செங்கை அண்ணா, வடஆர்க்காடு- அம்பேத்கர், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டங்களில் உள்ள ஆதிதிராவிட மக்களுக்கு இலவச காங்கிரீட் வீடுகள் வழங்க மேற்கொண்ட நற்பணிப் பயணக் கட்டுரை- 'தமிழரசு' அடுத்த இதழில் (1.2.1991) இடம் பெறுகிறது!**

பிரிவினர் ஏற்றுமதியை அபிவிருத்தி செய்யும் பொருட்டு இறால் வளர்ப்பை மேற்கொள்ள இவ்வரசு கடற்கரைப் பகுதியில் உள்ள 2,000 ஏக்கர் உவர்நீர்ப் பகுதியை ஒதுக்கியுள்ளது குறிப்பிடத் தக்கது. இம்மாநிலம் முழுவதிலும் உள்ள இறால் மீன் பண்ணையாளருக்குக் குறித்த காலத்தில் பயிற்சி அளிப்பதன் வழியாக இப்பல்கலைக்கழகம் இவ்வரசின் செயலுக்குத் துணை புரிந்து வருகிறது.

இவ்வகைத் திட்டங்களைச் செம்மையாகச் செயல்படுத்துவதற்குத் தேவையான தொழில்நுட்ப வல்லுநர்கள் தேவை! ஆராய்ச்சிப் புதுமைகள் தேவை! தரமான இடுபொருள்கள் தேவை! அந்த வகையில் புதியதாக அமைந்த இப்பல்கலைக்கழகம், தொழில் அறிவும், ஆற்றலும் மிகுந்த பட்டதாரிகளைத் தோற்றுவிக்கும் என்பதில் ஐயமில்லை. மேலும் இப்பல்கலைக்கழகம் புதிய ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப அணுகுமுறைகளைக் கண்டறிந்து அவற்றினைப் பண்ணையளவில் பயன்படுத்த ஆவன செய்து மக்களின் பொருளாதாரத் தரத்தினை உயர்த்தப் பாடுபட வேண்டும். எனவே, இப்பல்கலைக்கழகத்தின் பட்டதாரிகளாகிய நீங்கள் அரசு மற்றும் மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஈடுகொடுத்து எந்த ஒரு சூழ்நிலையிலும் உங்கள் கடமையினைச் செவ்வனே செயலாற்று வீர்கள் என நான் திடமாக நம்புகிறேன். இக்கல்வி நிலையத்தில் உங்களுக்கு முன் பயின்றவர்கள் நமது நாட்டிலும், வெளிநாடு களிலும் மிக உயர்ந்த பதவிகளில் அமர்ந்துள்ளார்கள் என அறிந்து பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இக்கல்லூரியின் ஆராய்ச்சிப் பணிகள் மாநிலத்தின் கால்நடை மேம்பாட்டிற்கு உதவியிருக்கின்றன. கலப்பினம் பற்றிய பரிந்துரைகள் கால்நடைகளின் பால் பெருக்கத்திற்குப் பெரிதும் துணை புரிந்து, ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன அதுபோலவே, அயலின ஆடுகளின் சேர்க்கையினால் மேச்சேரி போன்ற நம் ஆடுகளின் இறைச்சி உற்பத்தி பெருகியிருக்கின்றது. "சாண்டினோ" எனப்படும் புதியரக ஆடு கம்பளி உற்பத்தியைப் பெருக்கத் தோற்று விக்கப்பட்டுள்ளது. புதியரகக் கோழியினம் நந்தனம் கோழி-1, நந்தனம் காடை-1 மற்றும் கறிக்கான முயல் வகைகள் தொடர்பான ஆராய்ச்சிகள் பாராட்டத்தக்க அம்சங்கள். மீன்வளத்துறையில் இப்பல்கலைக்கழகமானது இறால் வளர்ப்பு, இறால் குஞ்சு பொரிப்பகம், இறால் மீன் வளர்ப்பு, சிங்கி இறால் மீன் வளர்ப்பு, மெல்லுடலிகள் வளர்ப்பு, மேலும், பல்வேறு பயிற்சித் திட்டங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல் போன்றவற்றையும் மேற்கொள்ளுகிறது. இவ்வகைத் திட்டங்கள் தமிழகத்தில் மீன் வளத்தினையும் வேலை வாய்ப்பினையும் பெருக்க உதவிடும். ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பு மற்றும் மீன் பதனப் படுத்துதல் ஆகிய தொழில் நுட்பத் துறைகளில் தேவையறிந்து ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கத்தில் அதிக கவனம் செலுத்தி வருகின்றது. இதில ஏற்படும் முன்னேற்றம் வரவேற்புக்குரியது. இத்தகு முயற்சிகளால் மேலும் பல புதிய இனங்களை உருவாக்க வேண்டும் என விழைகின்றேன்.

இப்பல்கலைக்கழகம் அண்மையில் பல நோய்களைக் கண்டறிந்துள்ளது என்பது பெருமைப்படுவதற்குரியதாகும். குறிப்பாகக் கோழிகளில் கம்போரோ நோய், ஆடுகளில் வெக்கை நோய் சார்ந்த புதிய வகைத் தொற்று நோய் மற்றும் நீலநாவு நோய், என்பனவாகும். அத்துடன் அவைகளுக்கான தடுப்பு முறைகளும் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. அதிநவீன தொழில் நுட்பங்கள், உறைவிந்து, கருமாற்றல், காளைகளைச் சோதிப்பதற்கான செல் நுண்ணியல், தீவன உபபொருளின் உணவுச் சத்தை அதிகரிக்கும் நுட்பங்கள் போன்றவை முறைப்படுத்தப் பட்டுள்ளதை அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன்.

எனினும், வெள்ளாடு மற்றும் அயலினப் பன்றி வளர்ப்புத் திட்டங்கள் அதிக முனைப்புடன் செயல்படுத்தப்பட வேண்டும். மேய்ச்சல் நிலங்கள் குறைந்து வரும் நிலையில் வெள்ளாட்டினைக் கொட்டிலில் கட்டித் தீவனமளிக்கும் முறை முக்கியத்துவம் பெறுகின்றது. சதுப்பு நிலப்பகுதியில் வாத்து வளர்ப்பு ஊக்குவிக்கப்பட வேண்டும். தீவனத்திற்கான செலவு சுமார் 70 விழுக்காட்டிற்கு மேல் ஆவதால் தீவனங்கள் மற்றும் தீவனத் தொழில் நுட்பங்கள் பற்றிய ஆராய்ச்சிகள் செம்மைப்படுத்தப்பட வேண்டியது மிகவும் இன்றியமையாதது. தேவைக்கேற்ப தீவன ஆலைகள் பெருகினாலும், தீவனத் தரக்கட்டுப்பாட்டு முறைகள் அமலில் இல்லாததால் அதற்குரிய தீவனத் தரக்கட்டுப்பாடு சட்டப்பூர்வமாகச் செயல்படுத்தப் பட வேண்டும்.

அண்மையில் அமைக்கப்பட்ட உயிரியல் தொழில்நுட்பத் துறையானது பல்வேறு புதிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வேண்டும். அதன் மூலம், புதிதாய்த் தோன்றும் நோய்களுக்குத் தடுப்பு மருந்துகள், வளர்ச்சி ஊக்கிகள் போன்றவைகள் உருவாக்கப் பட்டுக் கால்நடை மற்றும் மீன் வளம் பெருக்கிட ஆவன செய்ய வேண்டும். கால்நடைகளின் பெருவயிற்றில் உள்ள நுண்ணுயிர்களைப் பல்வேறு முறைகளில் நெறிப்படுத்தி உற்பத்தி நோய்களைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளை மேற்கொள்ளுதல் இன்றியமையாததாகும்.

ஆராய்ச்சிக் கூடங்களில் பகுத்தறியப்படும் அறிவியல் கருத்துக்கள் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் பண்ணை அளவில் பயன்படுமாறு செயல்முறை விளக்கமளிக்க வேண்டும். இதனைச் செயல்படுத்துவதற்கு இன்னும் பல கால்நடைப் பயிற்சி நிலையங்களையும், செயல்விளக்க அமைப்புகளையும் உருவாக்க வேண்டும். பொதுமக்கள் தொடர்பு வாயில்களான பண்ணை வானொலி, தொலைக்காட்சி, பண்ணைப் புத்தக வெளியீடுகள் ஆகியவற்றைச் செம்மைப்படுத்த வேண்டும். பல்கலைக்கழக அறிவியல் வல்லுநர்கள், வேளாண் குடியினருடன் நெருங்கிய தொடர்பு கொண்டு அவர்களின் தேவையைப் பொறுத்து ஆராய்ச்சி மேற்கொண்டு செயல் முறைகளைச் சீர் செய்தல் வேண்டும். கால்நடை அறிவியல் தொடர்புள்ள கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகள் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கின்ற நலிவுற்றோர், கிராம இளைஞர்கள், பெண்கள் முதலானோரின் வாழ்க்கையை மேம்படுத்தும் முகமாகப் பல்கலைக்கழகப் பணிகள் மேலும் தீவிரப் படுத்தப்பட வேண்டும்.

மேற்கூறிய விளக்கங்களை மனதில் கொண்டு தமிழகத்தின் கால்நடை மருத்துவத் துறைக்கென்று தனியாக ஒரு பல்கலைக் கழகத்தினை நாட்டிலேயே முதன் முறையாக அமைத்திட இந்த அரசு கடந்த ஆண்டு முன்வந்ததை அறிவீர்கள். குறிப்பாக இப்பல்கலைக்கழகத்தின் அனைத்து முயற்சிகளிலும் தாராள மனப்பான்மையுடன் மனமுவந்து ஒத்துழைப்பை நல்கி வரும் கால்நடை பராமரிப்புத்துறை, மீன் வளத்துறை மற்றும் இவை சார்ந்த பல்வேறு வாரியங்களையும் நினைத்து உவகை கொள்கிறேன். இத்தகைய செயல்களாலும் ஒத்துழைப்புகளாலும் கால்நடை மற்றும் மீன் உற்பத்தியைப் பெருக்கிக் கிராம மக்களின் வறுமையை அகற்றி உடல்வளம் பெறச் செய்ய இயலும். கால்நடை மருத்துவ இளம்பட்டதாரிகளாகிய நீங்கள் உங்கள் கல்வியறிவு மற்றும் தொழில் நுட்பத்திறன் ஆகியவற்றைச் செவ்வனே பயன்படுத்தி, பேருழைப்பு நல்கி, உங்கள் பணியில் முன்னேற்றம் கண்டு, உங்களை ஆளாக்கிய பல்கலைக் கழகத்திற்கும் இவ்வரசுக்கும் நல்ல பெயர் தேடித் தருவீர்கள் என்று கூறி, உங்கள் அனைவருக்கும் முன்கூட்டியே எனது பொங்கல் நல்வாழ்த்துக்களைக் கூறி அமைகின்றேன். நன்றி!

வணக்கம்.




VISIT INDIA

''இன்று விழா நடைபெறுகின்ற இந்த வாய்ப்பும், பாராட்டும் புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களுடைய நூல்களை அரசுடைமையாக்கி அவற்றைப் பொதுவாக ஆக்கி, இனி யார் வேண்டுமானாலும் பாவேந்தரின் கவிதைகளை வெளியிடலாம் என்பதற்கு வழி வகுத்து, அவற்றை வெளியிடுவதற்குப் பதிப்புரிமை பெற்றிருந்த பதிப்பகத்தாரிடமெல்லாம் நானும், கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்களும், எங்களுக்குத் துணையாக நண்பர் அவ்வை நடராசனும் இருந்து எங்களுக்குப் பக்கத்துணையாக மன்னர் மன்னனும், அவருடைய குடும்பத்தாரும் பேசி, பதிப்பகத்தாருக்கு ஆகக்கூடிய செலவை, இழப்பீடு அரசு ஈடு செய்யும் என்று அந்தத் தொகையையும் தந்தோம். பாவேந்தருடைய புத்தகங்களைப் பதிப்பிக்கும் உரிமையை மன்னர் மன்னன் பேரம் பேசி விற்றாரா? என்றெல்லாம் சில பேர் கேட்கிறார்கள் - எழுதுகிறார்கள். நான் அதற்காக மிகவும் வருத்தப்படுகிறேன்.

''ஒரு நல்ல காரியம் நடைபெற்றிருக்கிற நேரத்தில் அதற்கும்கூட அப்படிச் சொல்கின்றவர்கள் தமிழகத்திலே இருக்கின்றார்களே என்று எண்ணும்போது, நான் கவலைப்படுகிறேன். நாங்கள் மன்னர் மன்னனிடத்திலே பேரம் பேசி அவருடைய தந்தையினுடைய கவிதைகளைப் பெறவில்லை. அந்தக் கவிதைகளுக்குச் சொந்தக்காரர்கள், அதனை வெளியிடுகின்ற உரிமையைப் பெற்ற பதிப்பகத்தார். அவர்களிடத்திலேதான் நாங்கள் பேசி அந்தப் பணியை முடித்துக் கொண்டோம். ஆனால், மன்னர் மன்னன் மற்றும் அவருடைய குடும்பத்தாருக்கும் எட்டு இலட்சம் ரூபாயை அரசின் சார்பில் வழங்கினோம் என்றால், அது பேரம் பேசி, கவிதைகளுக்காகத் தரப்பட்ட விலை அல்ல. பாரதிதாசனுடைய கவிதைகளுக்கு விலை தருவது என்றால் தமிழகத்தை மாத்திரம் அல்ல, இந்தத் தரணியையே எழுதி வைத்தாலும் கூட அதற்கு ஈடாகாது.

''ஒரு தமிழ்க் குடும்பத்திற்கு - தமிழ்த்துறைக்கு தன்மானப் புயலை - புரட்சியை விளைவித்த தந்தை பெரியாருக்கு, பேரறிஞர் அண்ணாவுக்கு உறுதுணையாக கவிதைப் படைக்கலன்களை உருவாக்கித் தந்த பாவேந்தருக்கு, அவருடைய குடும்பத்தாருக்குக் காட்ட வேண்டிய மரியாதையைத்தான் நாங்கள் காட்டினோமேயல்லாமல் - இந்த மரியாதையை நாங்கள் பரிவோடு காட்டிய காரணத்தினால் பரிவுத்தொகை என்ற அந்தத் தொகையை வழங்கினோமேயல்லாமல் வேறல்ல. அதற்காக நீங்கள் என்னைப் பாராட்டியிருக்கின்றீர்கள்.

''ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் தமிழ் மக்களுடைய இதய சிம்மாசனத்திலே என்றைக்கும் நான் இருப்பேன். அதைவிடப் பெரிய சிம்மாசனம் கோட்டையிலே இருக்கின்ற சிம்மாசனம் என்று நான் கருதவில்லை. அங்கே நாங்கள் இருக்கின்ற காரணத்தால் சில கொள்கைகளை- கோட்பாடுகளை நிறைவேற்ற முடிகிற அந்த வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம். அவ்வளவுதான்!

''மலேசிய மண்ணிலிருந்து வந்து பாராட்டுகிறார் டத்தோ சாமிவேலு என்றால், நான் பெரும் பாரம்பரியத்திற்குச் சொந்தக்காரன் அல்ல. பெரும் சீமான், கோமான் வீட்டிலே பிறந்தவன் அல்ல, ஒரு சாதாரண சாமான்யக் குடும்பத்திலே பிறந்தவன். எனக்குள்ள செல்வமெல்லாம், எனக்குள்ள பெருமையெல்லாம் உங்களைப் போன்ற ஏராளமான உடன் பிறப்புகளைப் பெற்றிருக்கின்றேன் என்பதைத் தவிர வேறெதுவும் இல்லை.

''எனவே, அந்தப் பெருமை கிடைத்தால் போதும். ஆட்சி என்பது உங்களுக்காக-மக்களுக்காக ஆற்ற வேண்டிய கடமைகளுக்காகக் கிடைக்கின்ற வாய்ப்பு; அந்த அளவிலேதான் அதைக் கருதுகின்றேன்.

''கடைத் தெருக்களில் விளம்பரப் பலகைகளில் தமிழ்தான் இருந்திட வேண்டும் என்று நாம் சொல்லுகின்ற அளவிற்குத் தமிழ்நாடு இருக்கின்றது. மலேசியாவிலே அந்நிலை இல்லை; வேறு எந்த நாட்டிலும் அந்த நிலை இல்லை; ஆனால் நம்முடைய நாட்டில் இருக்கிறது. நான் கீழக்கரையில் நடைபெற்ற இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஐந்தாம் மாநாட்டிலே பேசும்போது கூட அதைக் குறிப்பிட்டேன். நாம் பாடுகின்ற தமிழ்த் தாய் வாழ்த்துப் பாட்டில் —

'நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்...'

என்று தொடங்குகின்ற அந்தப் பாடலில், தமிழைப் பார்த்து-உன் சீர் இளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே என்ற அதனுடைய இறுதி அடிகளைப் பாடுகிறோம். மனோன்மணீயம் சுந்தரனார் எழுதியது - தமிழே உன் இளமையை வியந்து, உன் சீர் இளமையின் திறத்தை வியந்து, செயல்மறந்து, மெய்மறந்து வாழ்த்துகிறோம் என்று சொன்னால் - அது எப்படிப் பொருள் தருகிறது என்றால், உன்னுடைய இளமையை நாங்கள் நேசிக்கின்றோம்; தமிழ்த்தாயே! ஆனால் உன்னை வளர்க்க வேண்டிய செயலை நாங்கள் மறந்துவிட்டோம் தமிழ்த்தாயே! அந்தச் செயலை மறந்துவிட்டு உன்னை வாழ்த்திக் கொண்டு இருக்கின்றோம். அந்தச் செயலை மறந்த தன்மை நீங்கி, இனி செயல்படுவோம் என்கிற சூளுரையை மேற்கொள்ள இந்த விழா பயன்படட்டும்.''



★ கிராமத்தைச் சீர்திருத்துவதென்றால், அஞ்சா நெஞ்சமும் ஒழுக்கமும் வேண்டும். கெட்டபெயர் ஏற்படுமே என்பதில் கவலை கொள்ளா மனப்பான்மை வேண்டும்!

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

/ அதி / நவீன / பருத்தி / வகைகள் /



ங்கள் ஆடை அணிகள் பொலிவுடன் விளங்குவதில் உங்களுக்கு அதிக விருப்பம். ஆகவேதான் உயிரோட்டமான வண்ணங்களின் உன்னதத்தை உங்களுக்குக் கோ-ஆப்டெக்ஸ் பருத்தி வகைகளில் அளிக்கிறது.

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் —
உங்கள் இனிய நேரங்களில்!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி
இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

● புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு ● ஷர்ட்டிங் ● சூட்டிங் ● ஃபர்னிஷிங்
● பெட்ஷீட்கள் ● டவல்கள் ● வேட்டிகள் ● லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.

DPR/1706/MS88/HTA



[illegible]புமிகு [illegible] கலைஞர் அவர்கள், [illegible] புலவர் சுந்தரசண்முகனார் அவர்களுக்குத் [illegible] சென்னை வள்ளுவர் [illegible]தில் நடந்த திருவள்ளுவர் திருநாள் விழாவின் போது [illegible], கல்வியமைச்சர் பேரா[illegible] க. அன்பழகன், மற்றும் தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் [illegible] ஒளவை நடராசன், த[illegible]த்துறை இயக்குநர் திரு கு. சிவஞானம் ஆகியோர் [illegible] (16.1.91)

# இந்த இதழில்...


மாண்புமிகு முதல்வர் அவர்களின் நற்பணிப் பயணம் ... 2

அனைத்துத்துறை அலுவலர்கள் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரை ... 4

தொழில் வளத்திற்கு முன்னுரிமை தரும் அரசு
—மேதகு ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா ... 9

அண்ணா வரலாறானார்
—புலவர் தமிழ்ப்பித்தன் ... 17

திருவள்ளுவர் திருநாள் ... 18

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம் ... 24

சிறுசேமிப்பு - முத்தான மூன்று திட்டங்கள் ... 26

வடஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில்-மாநில அறிவியல் கண்காட்சி ... 28

பெரியார் மாவட்டம்—வளர்ச்சிப் பணிகள் ... 30

பட்டு உற்பத்தியில் டான்சில்க் ... 39

சென்னைக்கு விரைந்து வரும் தெலுங்கு-கங்கை ... 46

சின்கோனா ... 48


**இந்த இதழுடன்**
**இலவச இணைப்பு**

**அக்கினிப் பிரவேசம்**

**மேதகு ஆளுநர் அவர்கள் சட்டப் பேரவையில் 18.1.91 அன்று ஆற்றிய உரையின் மீது நடைபெற்ற விவாதங்களுக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அளித்த பதிலுரை.**


**தமிழரசு**

**திருவள்ளுவர் ஆண்டு 2022**

**தைத் திங்கள் - 19**

**மலர்:21** **இதழ்:15**

**1-2-1991**



# மாண்புமிகு முதல்வர் நற்பணிப் பயணம்

4 — ஆம் அட்டை செய்தி :

ஏழை எளிய மக்களுக்கு உணவு, உடை, உறையுள் என்ற வகையில் எந்தக் குறைபாடும் நேரக்கூடாது என்பதிலே தமிழக அரசு கண்ணுங் கருத்துமாக நல்ல பல திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது.

அதன் ஒரு கட்டமாகச் செங்கை-அண்ணா மாவட்டத்திலும், வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டத்திலும், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திலும் உள்ள ஆதிதிராவிட மக்களுக்கு 4,635 இலவச காங்கிரீட் வீடுகள் மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் அண்மையில் வழங்கப்பட்டன.

7.1.91, 8.1.91 ஆகிய இரண்டு நாட்களிலும், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், அதற்காக மேற்கொண்ட நற்பணிப் பயணம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இந்த நற்பணிப் பயணத்தில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்களும், மாண்புமிகு பொதுப்பணித்துறை மற்றும் மின்துறை அமைச்சர் திரு. எஸ். துரைமுருகன் அவர்களும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் க.பொன்முடி அவர்களும், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. க.சுந்தரம் அவர்களும் மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்து கொண்டார்கள்.

**விழா விவரங்கள்**

7.1.91 அன்று மட்டும் பூவிருந்தவல்லி ஒன்றியத்தைச் சேர்ந்த செம்பரம்பாக்கம், திருப்பெரும்புதூர் ஒன்றியத்தைச் சேர்ந்த வல்லக்கோட்டை, வாலாஜாபாத் ஒன்றியத்தைச் சேர்ந்த ஏனாதூர், காஞ்சிபுரம் ஒன்றியத்தைச் சேர்ந்த கூரம்கேட், நெமிலி ஒன்றியத்தைச் சேர்ந்த மேலப்புலம், வாலாஜாபேட்டை ஒன்றியத்தைச் சேர்ந்த சென்னசமுத்திரம் ஆகிய ஊர்களில் இந்த நற்பணிப் பயண விழா இனிதே நடைபெற்றது.

தொடர் நிகழ்ச்சியின் இரண்டாவது நாளான 8.1.91 அன்று - ஆர்க்காடு ஒன்றியத்தைச் சேர்ந்த மேல்விசாரம், கீ.வை. குப்பம் ஒன்றியத்தைச் சேர்ந்த சேனூர், வேலூர் ஒன்றியத்தைச் சேர்ந்த அப்துல்லாபுரம், போளூர் ஒன்றியத்தைச் சேர்ந்த சந்தவாசல், சேத்துப்பட்டு, வந்தவாசி ஆகிய ஊர்களில் இவ்விழா சிறப்புற நடைபெற்றது.

முதல் நாள் காலை 10 மணியளவில் செம்பரம்பாக்கத்தில் தொடங்கிய இவ்விழா, மறுநாள் நள்ளிரவில் வந்தவாசியில் முடிவுற்றது.

**மகிழ்ச்சி வெள்ளத்தில் மக்கள்**

செங்கை-அண்ணா மாவட்டத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நற்பணிப் பயணம் மேற்கொண்டபோது - மக்கள் தங்கள் இல்லங்களின் முன் வண்ணக் கோலமிட்டும் மலர் தூவியும் மேளதாள இசைமுழக்கத்தோடு மகிழ்ந்து வரவேற்றார்கள். சில இடங்களில் குலவையிட்டும் ஆரத்தி எடுத்தும் தாய்மார்கள் வாழ்த்தி வரவேற்றனர்.

இராணிப்பேட்டையில் தொடங்கிய இரண்டாம் நாள் பயணத்தின் போதும் - வழி நெடுகிலும் பொதுமக்களும், சிறுவர் சிறுமியரும், தாய்மார்களும், தொழிலாளர்களும், விவசாயிகளும், மாணவ-மாணவியரும் வெயிலென்றும் பாராமல் வீதியின் இருமருங்கும் கூடி நின்று வாழ்த்தொலி முழக்கி வரவேற்றார்கள். பல இடங்களில் மேள தாளங்களோடு - தாரை தப்பட்டை மகிழ்ச்சி முழக்கம், கரகாட்டம் - ஒயிலாட்டம் ஆகியவைகளோடு வாணவேடிக்கையுமாக வரவேற்பு நிகழ்ச்சிகள் நெஞ்சைத்தொடும் வண்ணம் நேர்த்தியாக அமைந்திருந்தன!

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தின் வரவேற்பும் எல்லா வகையிலும் மேம்பட்டிருந்தது. புதிதாகத் திறக்கப்பட்ட வீடுகளிலெல்லாம் வாழை மரங்கள் கட்டப்பட்டிருந்தன. வழிநெடுகிலும் வண்ண விளக்குச் சரங்களோடு கூடிய பிரம்மாண்டமான - ஈபிள் டவர், பூம்புகார் கலைக்கூடம் போன்ற வரவேற்பு வளைவுகள் வனப்புக் காட்டின!

எல்லா இடங்களிலும் மக்களின் இதய பூர்வமான வரவேற்பை - எழுச்சிமயமான வாழ்த்து முழக்கங்களை - வரவேற்புப் பதாகைகளை- வகைவகையான வாழ்த்துச் சுவரொட்டிகளை - தென்னங்குருத்து மற்றும் மாவிலைத் தோரணங்களைக் காணமுடிந்தது.

நற்பணிப்பயணத்தின் இறுதி நிகழ்ச்சியாக வந்தவாசிக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் வருகை தந்தபோது இரவு 11 மணி. கொட்டும் பனியையும் பொருட்படுத்தாமல் லட்சோபலட்சம் பேர் பொதுக்கூட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாபெரும் பள்ளித்திடலில் கூடியிருந்தது திகைக்க வைப்பதாக இருந்தது. ஊரே விழாக்கோலம் பூண்டிருந்தது!

**பங்கேற்றுச் சிறப்பித்தோர்**

இந்த இரண்டு நாள் நற்பணிப்பயணத்தின் போதும் நடைபெற்ற அத்தனை நிகழ்ச்சிகளிலும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்கள் தலைமை தாங்கினார்.

செங்கை-அண்ணா மாவட்டச் சுற்றுப் பயணங்களின்போது, மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சமீர்வியாஸ் இ.ஆ.ப., அவர்களும் -

வட ஆர்க்காடு மாவட்டத்தில் நடைபெற்ற நற்பணிப் பயணங்களின்போது மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மா. சத்தியமூர்த்தி இ.ஆ.ப., அவர்களும் -

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்ட நற்பணிப் பயணங்களிலெல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பெ. கோலப்பன் இ.ஆ.ப., அவர்களும் கலந்து கொண்டார்கள்.

ஊரக வளர்ச்சித்துறைச் செயலாளர் டாக்டர் எஸ். நாராயண் இ.ஆ.ப., ஊரக வளர்ச்சித் துறை ஆணையர் திரு. ஆறுமுகம் இ.ஆ.ப., முதலான அரசு உயர் அலுவலர்கள் பலரும் இந்நிகழ்ச்சிகளுக்கெல்லாம் வருகை தந்தார்கள்.

நற்பணிப் பயணத்தின் அத்தனை நிகழ்ச்சிகளிலும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் திரு. எஸ். துரைமுருகன், திரு. க. பொன்முடி,

41— ஆம் பக்கம் பார்க்க



ஏதாவது வெற்றி பெற்றிருப்பேன் என்றால், அந்த வெற்றியின் ரகசியம் இதுதான். இந்த ரகசியத்தை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன்.

நாம் இருப்பது ஒரு ஜனநாயக நாட்டில்; இப்போது இங்கே எமர்ஜென்சி இல்லை. அடிப்படை உரிமைகள் எதுவும் பறிக்கப்படவில்லை. எனவே நாம் நமது கடமையை ஆற்றுவதில் அச்சப்படுவதற்கு எதுவும் இல்லை.

அதிகாரிகளுக்கு ஒரு Commitment (பொறுப்புணர்வு) இருக்க வேண்டும் என்பதில் நான் நம்பிக்கை உடையவன். ஆனால் யாரிடம்? ஒரு தனி நபரிடம் அல்ல. ஒரு கட்சியிடம் அல்ல. நாம் பின்பற்றும் அரசியல் சட்டத்திடம்! நம்மை நம்பியிருக்கும் மக்கள் சமுதாயத்திடம்!

உண்மையிலேயே நான் உங்களுக்குச் சொல்வேன்- ராமன் ஆண்டால் என்ன - ராவணன் ஆண்டால் என்ன - என்பது உங்களுக்குத்தான் பொருந்தும். மக்களைப் பொறுத்தவரையில் அதுவேறு விஷயம். ஆனால் அதிகாரிகளைப் பொறுத்தவரையில் ராமன் ஆண்டால் என்ன, ராவணன் ஆண்டால் என்ன என்பது முற்றிலும் பொருந்தக்கூடிய மொழியாகும்.

**நல்லதொரு பாரம்பரியத்தைக் காப்பாற்றுவது உங்கள் கடமை!**

மீண்டும் கூறுகிறேன், தமிழகத்தில் தலைசிறந்த நிர்வாகிகளைப் பெற்றிருக்கின்ற ஒப்பற்ற பாரம்பரியத்துக்கு நீங்கள் சொந்தக்காரர்கள். (அந்தப் பாரம்பரியத்திற்கு இடையில் சிலரால் சிறிது மாசு ஏற்பட்டது- நான் எமர்ஜென்சி காலத்தைத்தான் சொல்கிறேன்) - அந்த நல்ல பாரம்பரியத்தைக் கட்டிக் காப்பாற்ற வேண்டியது உங்கள் கடமை என்பதை நினைவுபடுத்த வேண்டியது எனது பொறுப்பு.

நான் Delegation-இல் (பகிர்ந்தளிப்பதில்) நம்பிக்கை வைத்திருப்பவன். ஒருவரே எல்லாச் சுமையையும் சுமக்க முடியாது. பகிர்ந்து கொள்ள வேண்டும், உங்கள் சகாக்களோடு.




திட்டங்களைத் தொடங்கிவிடுகிறோம். அது செயல்படுகிறதா - யாருக்காகத் திட்டம் போடப்பட்டதோ அவர்களை அது போய் அடைகிறதா என்பதிலே போதிய கவனம் செலுத்தத் தவறி விடுகிறோம்.

எனவே அடிக்கடி "Review of the Progress and Monitoring" (வளர்ச்சி ஆய்வும் கண்காணிப்பும்) செய்யப்பட வேண்டும்.

**வேலைத் திறனைக் கெடுக்கும் வெட்டிப் பேச்சு!**

சாதக் போரினால் ஏற்பட்டிருக்கும் இந்தச் சூழ்நிலையில் - பொருளாதார நெருக்கடி மிரட்டிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் -சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். வீண் செலவுகளைத் தவிர்க்க வேண்டும். காலதாமதத்தைத் தவிர்க்க வேண்டும். அத்தியாவசியப் பண்டங்களைப் பதுக்கி வைப்பவர் மீதும், விலைவாசி உயர்வை ஏற்படுத்த முனைபவர்கள் மீதும் சமூக விரோதிகள் மீதும் சட்டம் ஒழுங்குப் பிரச்சினையைக் கெடுப்போர் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**Time Escalation (கால விரயம்)**
**Cost Escalation (பண விரயம்)**

இவைகள்தான் நமது திட்டங்களின் எதிரிகள். இந்த எதிரிகளை வீழ்த்த உங்கள் துணையை எதிர்பார்க்கிறேன்.

அதிகாரிகளுக்கும், ஆட்சி பீடத்தில் இருப்போருக்கும் உள்ள உறவு

- "Master - Slave" (எஜமான் - அடிமை) என்ற உறவு அல்ல, தன்னம்பிக்கை அற்றவர்கள்தான் அடுத்த எஜமானனைப் பற்றிக் கவலைப்படுவார்கள். இதை நீங்கள் மறந்து விடக்கூடாது.

இந்தியாவில் வேலைத் திறனைப் பாதிக்கும் ஒரு மாபெரும் காரியம் எது என்றால் இந்தியர்களுக்கே உரிய "Gossip" (வெட்டிப்பேச்சு) என்கின்ற வியாதிதான், வேலைத்திறனையே பாதிக்கிறது. அந்தப் பயனற்ற வெட்டிப் பேச்சுத்தான் தனியார் தொழிற்சாலைகளில் - தனியார் அலுவலகங்களில் - ஏன் அரசு அலுவலகங்களில், உணவு விடுதிகளில் - ஏன் நமது இல்லங்களில்கூட வேலைத்திறனைக் குறைத்து விடுகின்றது.

சக்திக் களஞ்சியம் அல்லது Power House ஆக இருக்கின்றவர்கள் இந்த "Gossip"-இல்தான் தங்கள் சிந்தனையையும், செயலையும், பொன்னான நேரத்தையும் விரயமாக்கி விடுகிறோம். இந்தத் தொய்வு தொடராமல் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டால் நமது வேலைத் திறன் அதிகமாகும் என்பதில் ஐயமில்லை.

**பேச்சுரிமைக்கு எதிரியல்ல!**

ஏதோ நான் பேச்சுரிமைக்கு எதிரானவன் என்கின்ற தவறான எண்ணம் உங்களுக்கு ஏற்படத் தேவையில்லை. அந்தப் பேச்சு பயனுள்ள




பேச்சாக - கருத்துள்ள விவாதமாக - கருத்துப் பரிமாற்றமாக இருக்கட்டும் என்றுதான் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நிலையற்ற தன்மை பற்றிக் குறிப்பிடும்போது நாமே - நிலையற்றவர்கள், இன்றிருப்பவர்கள் நாளை இருப்பதில்லை என்பதை மனித இயல் ரீதியாக உணர்ந்தவர்கள்; அதற்காக நிலையற்ற தன்மையைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தால் யாரும் வாழமுடியாது.

**அச்சம் தேவையில்லை ! இந்த அரசு தொடரும்!**

ஒரு அரசு நீடிக்குமோ என்ற அச்சமே யாருக்கும் ஏற்படத் தேவையில்லை. இந்த அரசே தொடரும். ஜனநாயகத்தில் மாறுதலே ஏற்படாது என்பதில்லை. மீண்டும் முதலிலே இருந்தவர்களே திரும்ப வரமாட்டார்கள் என்பதும் இல்லை. பதின்மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு - தி.மு.கழக ஆட்சி மீண்டும் வராது என்று சிலர் கனவு கண்டு கொண்டிருந்தபோது நாங்கள் வரவில்லையா?

**நம் பணியில் நல்ல வேகமும் நேர்மையும் ஆர்வமும் வேண்டும்!**

நம்முடைய பணியில் நல்ல வேகமும் அதே நேரத்தில் நேர்மையும் ஆர்வமும் இருக்க வேண்டுமென்று மீண்டும் ஒருமுறை என்னை உங்களோடு இணைத்துக் கொண்டு கேட்டுக் கொள்கிறேன்.

**காரணங்கள் பற்றிக் கவலையில்லை!**
**பயன்கள்தான் முக்கியம்!**

பல்வேறு துறைகளின் சார்பாக கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட பல்வேறு திட்டங்கள் குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் - சில துறைகளில் ஏற்பட்டுள்ள கால தாமதமும் அதற்கான காரணங்களும் இங்கே ஆராயப்பட்டிருக்கின்றன. என்றாலும் காரணங்களைச் சொல்வதன் மூலமாகப் பொதுமக்களுடைய மன நிறைவை நாம் பெற முடியாது. காரணங்கள், ஏற்கத் தக்க காரணங்களாகக் கூட இருக்கலாம். குறிப்பாக எனக்குத் தொடர்புடைய கலைத்துறை



# காலம் பொன் போன்றது! கடமை கண் போன்றது!

**— முதல்வர் கலைஞர் —**

இன்று இந்தக் கூட்டம் நடத்தப்படுவதின் முக்கியமான நோக்கம், அண்மையில் இரண்டு நாட்களுக்கு முன்பு நம்முடைய பிரதமர் அவர்கள் எல்லா மாநில முதலமைச்சர்களையும் அழைத்து வளைகுடா போரினால் இந்தியத் திருநாடு எந்த அளவிற்குப் பாதிப்புக்கு உள்ளாகும் என்பது குறித்தும், மாநில அரசுகள் இந்த நேரத்தில் பல்வேறு பிரச்சினைகளைச் சந்திக்கக்கூடிய சூழ்நிலையில் அவைகளின் அணுகுமுறைகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பது குறித்தும் விவாதித்திருக்கிறார்.

தமிழக அரசின் சார்பாக நம்முடைய பொதுப்பணித்துறை அமைச்சரை அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு நான் கேட்டுக் கொண்டு - இந்தப் போரின் காரணமாக ஏற்படுகின்ற பாதிப்புகளிலிருந்து மக்களுக்குச் செய்ய வேண்டிய அவசர அத்தியாவசிய உதவிகளை நிறைவேற்றுவது குறித்தும்-குறிப்பாக அரசின் சார்பில் சிக்கனத்தை எல்லா வகையிலும் கடைப்பிடிக்க வேண்டும், அதற்கு மாநில அரசுகள் இந்திய அரசின் வழிகாட்டுதலுக்கு ஒப்புதல் அளிக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டியும் தமிழக அரசின் சார்பில் நம்முடைய கருத்துக்களைப் பொதுப்பணித் துறை அமைச்சர் அந்த மாநாட்டில் தெரிவித்திருக்கிறார்.

இந்த வளைகுடா பிரச்சினை ஏற்படுவதற்கு முன்பேகூட இந்தக் கூட்டத்தைக் கூட்டுவதற்கு வேறொரு காரணமாக அமைந்தது பிப்ரவரி மாதத்தில் நாம் சமர்ப்பிக்க இருக்கின்ற நிதிநிலை அறிக்கையையொட்டி ஒவ்வொரு துறையின் சார்பாகவும் கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட அறிவிப்புகள் எந்த அளவிற்கு இப்போது நிறைவேறியிருக்கின்றன என்பதைப் பற்றிய கணிப்பு, இன்னும் நிறைவேற வேண்டியவை எந்த அளவிற்கு எஞ்சியுள்ளன என்பது பற்றியும் தெரிந்து கொள்ளவும், அவைகளை நிறைவேற்ற நாம் எத்தகைய விரைவான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை ஆராய்வதற்காகவும் இந்தக் கூட்டம் பயன்படும் என்பதற்காக அந்த நோக்கத்தோடும் இந்தக் கூட்டம் கூட்டப்பட்டிருக்கிறது.

### காலம் பொன் போன்றது! கடமை கண் போன்றது!

நிர்வாகத்தை - நிர்வாக இயந்திரத்தை Fine-Tune (நேர்த்தியாக இயங்க) செய்ய வேண்டும் என்பது என்னுடைய ஆசை. அந்த நோக்கத்திற்காகவும் உங்களை எல்லாம் இன்றைக்குச் சந்திக்கிறேன் என்பதை நீங்கள் மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும்.

என்னைப் பொறுத்தவரையில் "காலம் பொன் போன்றது, கடமை கண் போன்றது" என்று நினைத்துக் கடமை ஆற்றுபவன் நான்.

மக்களுக்குத் தொண்டாற்றுவதில் விவேகத்தைப் போலவே வேகமும் தேவை என்பதை வலியுறுத்துகிறவன் நான். கிடைக்க வேண்டியது, காலம் கடந்து கிடைத்தால் அதைப் பெறுகிற மக்களுக்கு இழப்புதான் ஏற்படும் என்பதைப் பல நேரங்களிலே அரசு அதிகாரிகளிடம் தனித்துப் பேசுகின்ற நேரத்திலும், இதுபோன்ற நிகழ்ச்சிகளிலும் நான் எடுத்துக் காட்டியிருக்கிறேன். நான் முன்பு ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோதும் எடுத்துக்கூறியிருக்கிறேன். ஒரு பந்தயக்குதிரை வேகத்தில் பணியாற்று வதை எனது லட்சியமாகக் கொண்டிருப்பவன் நான் என்பதையும் நான் தெரிவித்திருக்கிறேன். அந்த வேகத்தில் தொய்வு ஏற்பட்டால் பாதிக்கப் படப் போகிறவர்கள் இந்த மாநிலத்து மக்கள்தான்; அதை எண்ணிப் பார்த்து நாம் நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் சுட்டிக் காட்டியிருக்கிறேன்.

### நிலையற்ற அரசியலைப் பற்றிக் கவலைப்படாது கடமைகளைச் செய்திடுக!

அரசியல் வாதிகள் வந்து போகிறவர்கள். அது இங்கானாலும், இங்கிலாந்து ஆனாலும், அமெரிக்காவானாலும் - ஏன், உலகெங்கிலும் உள்ள எல்லா ஜனநாயக நாடானாலும் இதே நிலைதான். அதுதான் ஜனநாயகம். ஜனநாயகத்திற்கு உரிய இலக்கணம் அதுதான்.

நிலையான இடத்தில் இருக்கின்ற நீங்கள் நிலையற்ற அரசியலைப் பற்றிக் கவலைப்படாமல் மக்களுக்கான கடமைகளைச்செய்ய வேண்டும்.

ஜனநாயகத்தில் ஆட்சி மாறுவது சகஜம். அதற்காக அன்றாடம் பரபரப்பை ஊட்டும் செய்தித்தாள்களைப் படித்து விட்டு அதற்கேற்ப நிர்வாக இயந்திரம் உருட்டப்படுமானால், அது அந்த இயந்திரத்தையே பழுதாக்கிவிடும் என்பதை மறந்து விடக்கூடாது.

தமிழ்நாடு செம்மையான நிர்வாகத்திற்குப் பெயர் பெற்றது. தமிழ் நாட்டு அதிகாரிகள் இந்தியாவிலே மாத்திரமல்ல, சர்வதேச அமைப்புகளாலும் பாராட்டப்படுகிறவர்கள். அந்தப் பெயருக்கும், புகழுக்கும் நாம் ஒரு துளி களங்கமும் ஏற்படுத்தக் கூடாது. இதை உங்களுக்கு நினைவுபடுத்த வேண்டியிருப்பதற்காக நான் உண்மையிலேயே வருந்துகிறேன்.

நான் ஒரு கட்சிக்குத் தலைவன். இந்த மாநிலத்தின் முதலமைச்சரும் கூட. நீங்கள், ஒவ்வொரு துறைக்கும் தலைவராக இருப்பவர்கள் - நீங்களும் தலைவர்கள்தான். Leaders of Administration. A Leader should beloved; Not feared (நீங்கள் நிர்வாகத் துறைத் தலைவர்கள். ஒரு தலைவனைக் கண்டால் அன்பு ஏற்பட வேண்டும், அச்சம் ஏற்படக் கூடாது) என்பது என் கொள்கை. நான் இதுவரை என் வாழ்வில்



உதாரணம் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமேயானால், மிகுந்த கஷ்டப்பட்டு, அதிகச் செலவிட்டு ஒரு படத்தைத் தயாரித்து அதை வெளியிட்ட பிறகு அந்தப் படம் மக்களிடம் உரிய திருப்தியைப் பெற வில்லை என்கிறபோது, அது குறித்த விமர்சனம் வருகின்றபோது - தயாரிப்பாளர் 'நான் என்ன செய்வது? கதாநாயகன் மற்றும் கதாநாயகி ஒத்துழைப்பு தரவில்லை; வெளிப்புறப் படக் காட்சியின் போது சரியான வெயில் இல்லை' என்றெல்லாம் காரணங்கள் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. ரசிகர்கள் விரும்புவது நல்ல படம். அதைப் போல,பொது மக்கள் விரும்புவது ஒரு நல்ல ஆட்சியை. அதைத் தர முடியாததற்குக் காரணங்கள் இருக்கலாம்; சரியான காரணங்களாகக் கூட இருக்கலாம். காரணங்களைப் பற்றி யாரும் கவலைப்படமாட்டார்கள். தங்களுக்குத் தேவையான பயன்களைப் பற்றித்தான் கவலைப்படுவார்கள். சிந்திப் பார்கள். அதை மனதில் நிறுத்திக் கொண்டு உங்களுடைய பணிகளை ஆற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(அத்தியாவசியப் பண்டங்களைப் பதுக்கி வைப்போர், சமூக விரோதிகள், சட்டம் ஒழுங்கு அமைதியைக் கெடுப்போர் ஆகியோர் மீது கடும் நடவடிக்கை எடுப்பது குறித்து அரசு உயர் அதிகாரிகளுடன் 19.1.91 அன்று நடத்தப்பட்ட அவசர ஆலோசனைக் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை)







# தொழில் வளத்திற்கு முன்னுரிமை தரும் அரசு

## மேதகு ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள்

(தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 18.1.91 அன்று ஆற்றிய உரை)

மதிப்பிற்குரிய சட்டப் பேரவை உறுப்பினர்களே

இப்புத்தாண்டில், தமிழ்நாடு சட்டப் பேரவையின் முதலாம் கூட்டத் தொடரில் உரையாற்றுவதில் மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கிறேன். உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களையும் பொங்கல் திருநாளாம் தமிழர்

> சென்ற ஆண்டில் நம் நாட்டில் பல கொந்தளிப்பான சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. நாட்டின் பல பகுதிகளில் வகுப்புவாதக் கலவரங்கள் கோரத் தாண்டவமாடி, பல உயிர்களைப் பலிகொண்டுள்ளன. இத்தகைய சூழ்நிலையிலும், தமிழ் நாட்டில் நாம் மிகுந்த மனநிறைவு கொள்ளத்தக்க வகையில், அமைதியும் சாந்தமும் நிலவுகிறது என்பதில் நாம் அனைவரும் பெருமை அடைகிறோம்.

குழு (Inter-State Council) ஒன்றை ஏற்படுத்துவது குறித்த நமது நீண்ட நாளைய வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அக்குழுவின் வரலாற்றுச் சிறப்பு மிக்க முதல் கூட்டம் 1990 அக்டோபரில் டெல்லியில் நடைபெற்றது குறித்து நாம் மகிழ்ச்சியடைகிறோம். மத்திய – மாநிலங்களுக்கு இடையேயான பிரச்சினைகள் அனைத்தையும் விவாதித்து முடிவெடுக்க உச்ச அமைப்பாக இந்தக் குழு விளங்கும். மத்திய–மாநில அரசுகளின் உறவுகள் குறித்த பல்வேறு அம்சங்கள் மற்றும் மாநிலத்தின் உரிமைகள் தொடர்பாக தமிழக அரசின் கருத்துக்கள் இக்குழுவின் கூட்டத்தில் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

**9.** தஞ்சை விவசாயிகள் சார்பாக உச்சநீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கின் காரணமாகவும், அந்த வழக்கில் தன்னையும் இணைத்துக் கொண்டு நமது அரசு வாதாடியதன் காரணமாகவும், சட்டப் பேரவைத் தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசைக் கேட்டுக் கொண்டதன் காரணமாகவும், 1990 ஜூன் திங்களில் மத்திய அரசு காவிரி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையை நடுவர் மன்றத்திற்கு அனுப்பியது. கருநாடகம் தண்ணீரைத் தேக்கிவிட்டதால், ஏறத்தாழ 12 இலட்சம் ஏக்கரில் உள்ள ஒருபோக நெற்பயிர் கூட நீரின்றி வாடுகிறது என்பதிலிருந்தே இப்பிரச்சினை எந்த அளவிற்கு மிகவும் கவலை அளிக்கத்தக்கதாக உள்ளது என்பது தெளிவாகிறது. இப்பயிரைக் காப்பாற்றத் தண்ணீரை விடுவிக்கக் கருநாடக அரசுக்குக் கட்டளையிடுமாறு கோரி இந்த அரசு நடுவர் மன்றத்திடம் முறையிட்டது. நடுவர் மன்றமோ சட்டவிதி நுட்பக் காரணங்களைக் காட்டி இந்த அரசின் முறையீட்டை நிராகரித்து விட்டது. வாடிக் கொண்டிருக்கும் பயிர்களைக் காப்பாற்ற நமது பிரதமர் எடுத்துள்ள முயற்சிகளுக்கு நன்றி தெரிவிப்பதுடன், தேவையான தண்ணீரை கருநாடக அரசு வழங்கும் என்று நம்புகிறோம்.

**10.** மத்தியில் முன்னர் இருந்த அரசு அறிவித்த வேளாண்மை கிராமப்புறக் கடன் நிவாரணத் திட்டத்தை முழுமையாகச் செயல் படுத்திய முதல் மாநிலம் தமிழ் நாடாகும். விவசாயிகள், கிராமப்புறக் கைவினைஞர்கள் வாங்கிய கடன்களில் ரூ. 10,000 வரை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இந்த வகையில் கூட்டுறவு வங்கிகளும் வணிக வங்கிகளும் தள்ளுபடி செய்த மொத்தத் தொகை ரூ. 508.15 கோடியாகும். இதனால் 18.88 இலட்சம் பேர் பயனடைந் துள்ளனர்.



வேளாண்மையை ஒரு பெருந் தொழிலாகக் கொண்ட விவசாயிகள் நிறைந்த இந்தியத் திருநாட்டிலேயே முதன் முதலாக விவசாயிகள் அனைவருக்கும் பாசன விசையேற்றத்துக்கான மின்சாரத்தை இலவசமாக வழங்கியுள்ளது, நமது தமிழ் மாநில அரசுதான் என்பதை மகிழ்ச்சி பொங்க தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் பயனடைந்துள்ள விவசாயப் பெருங்குடிமக்கள் 12 இலட்சம் பேர்.

**11.** நடப்பாண்டில் பெய்த மழை மொத்தத்தில் மனநிறைவளிப்பதாக இல்லை. வடகிழக்குப் பருவமழை ஏழு மாவட்டங்களில் 20 சதவிதத்திற்கு மேற்பட்டு குறைவாகப் பெய்துள்ளது. அரசு மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகள் பயிர் விளைச்சல் குறையாதிருக்க உதவியுள்ளன. கருநாடக அரசு காவிரியில் தண்ணீர் திறந்து விட்டால், அரிசி உற்பத்தி முன்பு எப்பொழுதும் எய்தப்படாமல், சென்ற ஆண்டில் மட்டும் எய்தப்பெற்ற 62 இலட்சம் டன் என்ற அளவில் இருக்கும் என நம்புகிறோம். சிறு தானியங்கள் உற்பத்தி 15 இலட்சம் டன்னாகவும், பயறுவகை உற்பத்தி 4 இலட்சம் டன்னாகவும் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 24.25 இலட்சம் டன் அளவுக்கான கரும்பு உற்பத்தி ஒரு சாதனையாக விளங்கும். பருத்தி உற்பத்தி 5.3 இலட்சம் பொதிகளாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**12.** தலைமைச் செயலாளர் தலைமையில் நிதித்துறை செயலாளர், வேளாண்மை உற்பத்தி ஆணையர் ஆகியோர் உள்ளிட்ட குழு 1990 டிசம்பரில் வாஷிங்டன் சென்று உலக வங்கி அதிகாரிகளுடன் வெற்றிகரமாகப் பேச்சு வார்த்தைகளை நடத்தி, தமிழ்நாட்டில் ரூ. 310 கோடி செலவிலான வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தைச் செயல் படுத்த வகை செய்துள்ளது. இத்திட்டம் தமிழ் நாட்டில் விதை உற்பத்தி வசதிகளை வலுப் படுத்தும். பாலாறு, வெள்ளாறு வடிநிலத்தில் 1,35,000 ஏக்கர் நிலத்தில் நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டுப் பணியும் (Water shed development) மேற்கொள்ளப்படும். மேற்குமலைத்தொடர் நெடுக 90,000 ஏக்கர் பரப்பளவில் புதிதாகக் காடு வளர்ப்புத் திட்டம் ஒன்று மேற் கொள்ளப்படும். மாநிலம் முழுவதிலும் கால்நடைகளுக்கான மேம்பட்ட மருத்துவப் பணிகளுக்கும் உறைவிந்து அளிக்கும் பணிகளுக்கும் இத்திட்டம் உதவும். கிராமப்புற குடிநீர் வழங்கும் திட்டங்கள் வடஆற்காடு–அம்பேத்கர், தென் ஆற்காடு, சேலம், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும். செங்கை - அண்ணா, வடஆற்காடு - அம்பேத்கர், தென்ஆற்காடு, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்

> "இந்த அரசு, சமயச் சார்பின்மைக் கொள்கைகளை முற்றிலும் செயல் படுத்துவதில் உறுதியாகவுள்ளது. மேலும், இம்மாநிலத்தில், வகுப்புக் கலவரத் தூண்டுதல்களுக்கு இந்த அரசு இம்மியளவுகூட இடமளிக்காமல், வருமுன் காக்கும் திட்டங்களையும், வந்தபின் உடனடியாகத் தடுத்து நிறுத்தும் செயல்பாடுகளை யும் கடைப்பிடித்து வருகிறது."

# மேதகு ஆளுநர் அவர்கள் தமிழில் பேசினார்!

தமிழகச் சட்டமன்றப் பேரவையில், மேதகு ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள் 18.1.1991 அன்று உரையாற்றினார்.

அச்சடிக்கப்பட்ட அந்த உரையின் முதல் இரண்டு பத்திகளை மேதகு ஆளுநர் அவர்கள் தமிழிலேயே படித்தது குறிப்பிடத்தக்கது!

"மதிப்பிற்குரிய சட்டப்பேரவை உறுப்பினர்களே! இப்புத்தாண்டில் தமிழ்நாடு சட்டப் பேரவையின் முதலாம் கூட்டத் தொடரில் உரையாற்றுவதில் மகிழ்ச்சியும், பெருமையும் கொள்கிறேன். உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களையும், பொங்கல் திருநாளாம், தமிழர் திருநாள் வாழ்த்துக் களையும் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று மேதகு ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டபோது, மாண்புமிகு முதல்வர், அமைச்சர் பெருமக்கள், சட்டப் பேரவை உறுப்பினர்கள் மகிழ்ச்சி தெரிவித்தார்கள்.

திருநாள் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**2.** இந்த ஆண்டுக்குப் பெருஞ் சிறப்பாக சமூக நீதிக்காவலர் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் நூற்றாண்டு நிறைவும், புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் நூற்றாண்டு நிறைவும் அமைகின்றன.

அவர்களின் பெருமையைப் போற்றுவதும், அவர்களின் ஆற்றலைப் பாராட்டுவதும் மட்டுமின்றி, அவர்களின் சமுதாயத்தொண்டு முழு வெற்றி பெற சபதம் ஏற்கவும் இந்த வாய்ப்பை நாம் பயன்படுத்திக் கொண்டு பணியாற்றக் கடமைப்பட்டுள்ளோம்.

**3.** தொடர்ந்து அச்சுறுத்திக் கொண்டிருந்த வளைகுடா போர், உலகின் பல்வேறு நாட்டுத் தலைவர்கள் எடுத்த முயற்சிகளையும் மீறி தொடங்கிவிட்ட நிலையில், இதன் பாதிப்புகளை உலகம் முழுவதும் உள்ள மக்கள் சந்திக்க நேரும் அபாயம் இருப்பதோடு, நமது இந்திய நாட்டிலும் பொருளாதாரத்தில் மேலும் பின்னடைவு ஏற்படக்கூடும் என்ற அச்சம் தோன்றியுள்ளது. இந்தக் கட்டத்தில் இந்திய அரசு எடுக்கும் எல்லா வகையான முயற்சிகளுக்கும், தேசிய நலனில் அக்கறை கொண்ட நமது தமிழக அரசு உறுதுணையாக இருந்து முழு ஒத்துழைப்பு வழங்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**4.** சென்ற ஆண்டில் நம் நாட்டில் பல கொந்தளிப்பான சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. நாட்டின் பல பகுதிகளில் வகுப்புவாதக் கலவரங்கள் கோரத் தாண்டவமாடி பல உயிர்களைப் பலி கொண்டுள்ளன. இத்தகைய சூழ்நிலையிலும், தமிழ்நாட்டில் நாம் மிகுந்த மனநிறைவு கொள்ளத்தக்க வகையில், அமைதியும் சாந்தமும் நிலவுகிறது என்பதில் நாம் அனைவரும் பெருமை அடைகிறோம். திருத்தியமைக்கப்பட்ட தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவின் முதல்கூட்டத்தை, இந்த அரசு, சென்னையில் 1990 செப்டம்பரில் வெற்றிகரமாக நடத்தியது. இந்த அரசு, சமயச் சார்பின்மைக் கொள்கைகளை முற்றிலும் செயல்படுத்துவதில் உறுதியாகவுள்ளது. மேலும், இம்மாநிலத்தில், வகுப்புக்கலவர தூண்டுதல்களுக்கு இந்த அரசு இம்மியளவுகூட இடமளிக்காமல், வருமுன் காக்கும் திட்டங்களையும், வந்தபின் உடனடியாகத் தடுத்து நிறுத்தும் செயல்பாடுகளையும் கடைப்பிடித்து வருகிறது.

**5.** தமிழ் மாநில அரசு நடைமுறைப்படுத்தி வரும் இடஒதுக்கீடு முறையைத் தொடர்ந்து மத்திய அரசு அலுவலகங்கள், மற்றும் மத்திய பொதுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இடஒதுக்கீடுகள் அளிப்பதற்கு வகைசெய்யும் மண்டல் கமிஷன் பரிந்துரைகளைச் செயற்படுத்துமாறு 1989 மே திங்களில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைத் தொடர்ந்து, மத்திய அரசு, 1990 ஆகஸ்ட் மாதத்தில் எடுத்த உறுதியான நடவடிக்கைகள் குறித்து நாம் மகிழ்ச்சி அடைகிறோம். பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் முன்னேற்றத்திற்காகப் பாடுபட உறுதிபூண்டுள்ள இந்த அரசு, அவர்களுடைய இந்த உரிமைப் பிரச்சினை குறித்து உச்சநீதிமன்றத்தில் முறையிட்டுள்ளது. மண்டல் கமிஷன் பரிந்துரைகளைச் செயல்படுத்த உச்சநீதிமன்றம் பிறப்பித்த தடையாணையை அகற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்குமாறு இந்த அரசு மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

**6.** இலங்கை அரசின் இராணுவம் குண்டு வீச்சு நடத்தி, தமிழ் ஈழ மக்களைக் கொன்று குவிப்பதால் அங்கிருந்து வந்துள்ள 1,22,000 தமிழ் அகதிகளுக்கு இருக்க இடமும், உணவும், உடையும், மருத்துவச் சிகிச்சை வசதிகளையும் அளிக்க நாம் உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். அகதிகளின் நிவாரணப் பணிகளுக்காக இதுவரையில் மத்திய அரசு வழங்கியுள்ள ரூ. 13 கோடியுடன், ரூ. 21 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. உன்னிப்பாகக் கண்காணித்தல், அடிக்கடி பார்வையிடுதல், தீவிரமாகக் காவல் புரிதல் ஆகியவை இந்த நிவாரணப் பணிகள் மிகவும் திறம்படச் செயல்படுவதற்குக் காரணங்களாகும்.

**7.** பேச்சு வார்த்தைகள் மூலமாக, பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு, தமிழ் ஈழ மக்களுக்கு நிலையான அமைதியும் உரிமையும் கிடைத்திட வேண்டும் என்பதையே இவ்வரசு தனது கருத்தாகத் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது. எனினும், இலங்கையிலிருந்து வந்துள்ள தமிழ்ப் போராளிகளாலும் அவர்களது நெருங்கிய ஆதரவாளர்களாலும் இம்மாநிலம் சட்டம்—ஒழுங்கு பாதிக்கப்படுவதற்குரிய வன்முறைக் களமாக மாறி விடாமல் தடுக்க அவர்கள் மிகுந்த கண்காணிப்பின் கீழும் கட்டுப்பாட்டிலும் வைக்கப்பட்டு, தனியான சிறப்பு முகாம்களில் பராமரிக்கப்படுகின்றனர். இந்த நடவடிக்கையின் பயனாகவும் நமது மாநிலத்தில் அமைதியான சூழ்நிலை நிலவி வருகிறது.

**8.** இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 263ஆம் பிரிவின்கீழ் மாநிலங்களுக்கு இடையேயான

[illegible]

## சிறுசேமிப்புத் துறை

முதலீடு செய்த அன்றே

## ஈடு இணையற்ற பலன்கள்

வங்கிகள் மற்றும்
பரஸ்பர நிதி
வழங்க இயலாத
சலுகைகள்



1.1.91 முதல்
31.3.91 வரை
ரூ.1000/- முதலீடு
செய்யும்
முதலீடுதாரர்களுக்கு
"விபத்துக் கால
இன்சூரன்ஸ்"
வசதி.



மூலதன சந்தையில் சிறுசேமிப்பு பிரத்யேக உரிமை வகிக்கிறது.

**சிறுசேமிப்பில் முதலீடு செய்த கோடிக்கணக்கான முதலீட்டாளர்கள் மற்றும் நிறுவனங்கள் அடையும் ஒப்பற்ற கூடுதல் சலுகைகளை பெறுங்கள்.**

முதலீட்டிற்கு அதிகபட்ச வட்டி

| திட்டம் | ஆண்டு | வட்டி விகிதம் |
|---|---|---|
| தேசிய சேமிப்புப் பத்திரம் 8ஆம் வெளியீடு | 5 | 15.82% |
| ,, | 6 | 16.91% |
| கிசான் விகாஸ் பத்திரம் | 5 | 17.6% |
| ,, | 5½ | 18.18% |
| இந்திரா விகாஸ் பத்திரம் | 5 | 20% |

**சிறப்பு அம்சங்கள்:**

- பாதுகாப்பான முதலீடு மற்றும் நம்பகமான வட்டி
- வங்கிகள், நிறுவனங்கள் அளித்திடாத உயர்ந்த வட்டி
- வருமானவரி மற்றும் சொத்து வரிவிலக்கு (பிரிவு 88ன்படி - NSC மற்றும் பிரிவு 5(1)ன்படி சொத்து வரிச்சலுகை)
- பிரிவு 88ன்படி வட்டிக்கு வருமான வரிவிலக்கு
- குழந்தைகளின் பெயரில் செய்யும் முதலீட்டிற்கு பிரிவு 88ன்படி வருமான வரிவிலக்கு
- வங்கிகளில் கடன்வசதி
- வாரிசுதாரர் நியமனவசதி
- ஒரு நபரிடமிருந்து மற்றொருவருக்கு எளிதில் மாற்றக் கூடிய வசதி
- எல்லா அஞ்சலகங்களிலும் காசோலை வசதி (சேமிப்பு கணக்கிற்கு)
- உங்கள் வீடு தேடி வரும் ஏஜென்டுகளின் வசதி.

**கூடுதல் சலுகைகள்:**

1.1.91 முதல் 31.3.91. வரை ஒவ்வொரு ரூ.500/- முதலீட்டிற்கும் ஒரு பரிசுக் கூப்பன் மூலம் 262 பரிசுகள்

★ ரூ.1000/-ம் அதற்கு மேலும் K.V.P., N.S.C. VIII Issue போன்ற சில குறிப்பிட்ட திட்டங்களில் செய்யும் முதலீட்டிற்கு 1% ஊக்கத்தொகை.

★ பங்கு மார்க்கட் தரகர்களுக்கு (Stock Brokers) 2% கமிஷன்

★ நிறுவனங்கள் இந்திரா விகாஸ் பத்திரத்தில் செய்யும் முதலீட்டிற்கு 10 ஆண்டுக்குப்பின் அதிகபட்ச வட்டியாக் 54.66% பெறலாம்.

**சேமிப்பு பத்திரம் அனைத்து அஞ்சலகங்களிலும் கிடைக்கும்**

சிறுசேமிப்பின் அவசியம் பற்றிய இலவச விவரம் அறிய, தொடர்பு கொள்ளுங்கள்.

மாவட்டங்களில், மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்

இயக்குநர்
சிறுசேமிப்புத்துறை
143, அண்ணாசாலை,
சென்னை-600 002.
தொலைபேசி: 846209/840223

DIPR/3052/MS/90/ARIES


பேரறிஞர் அண்ணா நினைவு நாள் ஃப்ரவரி-3



# அண்ணா வரலாறானார்!



## புலவர் தமிழ்ப்பித்தன்

காஞ்சியில் பிறந்த அண்ணா
கருணையின் வடிவம் ஆகி
சாஞ்சியின் போதம் எல்லாம்
சாற்றினார் தமது சொல்லால்'
தீஞ்சுவைப் பனுவல் போலும்
தேன்பிழி சாற்றைப் போலும்
வாஞ்சையாய் அண்ணா தந்த
வாசகம் மறக்கப் போமோ!

"கனிவுடன் பணிவும் சேர
கடமையாய்த் துணிவும் ஓங்கி
பணியிலே சிறக்க வேண்டும்
பண்பினைக் காக்க வேண்டும்"
அணியென அண்ணா சொன்ன
அவ்வுரை பொன்னே ஆகும்;
பிணியினை நீக்கி மேன்மை
பெருக்கிடும் மருந்தும் ஆகும்!

ஏழையர் நலங்கள் பெற்றே
ஏற்றமாய் வாழ்வ தற்கும்
கோழையர் உரமே பெற்று,
குன்றென நிமிர்வ தற்கும்
ஊழையே மாற்று கின்ற
உயர்ந்ததோர் உள்ளம் கொண்டார்,
பேழையின் செல்வம் போன்ற
பெருமனம் படைத்த அண்ணா!

அண்ணலாம் காந்தி யைப்போல்
அன்பினைச் சொரிந்தார்; ஞானக்
கன்னலாம் வள்ள லார்போல்
அருள்நெறி பரப்பிச் சென்றார்;
கண்ணெலாம் சோதி மின்னும்
காவியத் தலைவர் அண்ணா
மண்ணெலாம் வணங்கி வாழ்த்த
மாபெரும் வரலா றானார்!



" [illegible] 12 [illegible]"

களில் 800 கிலோ மீட்டர் தொலைவுக்கு கிராமப்புற அங்காடிச்சாலைகள் அமைப்பதற்கான திட்டம் செயல்படுத்தப்படும்.

**13.** இம்மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு குடிமகனுக்கும் விரிவான பாதுகாப்பு ஏற்பாடு அளிக்க வேண்டும் என்பதே அரசின் உறுதியான கொள்கையாகும். இந்தப் பாதுகாப்பு ஏற்பாட்டில் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் ஆகியவற்றை அளிப்பதும், கருவுற்ற மகளிர், குழந்தைகள், உடலூனமுற்றவர்கள், ஆதரவற்றவர்கள் ஆகிய பலவீனப் பிரிவினருக்குப் பாதுகாப்பு அளிப்பதும் அடங்கும். நமது கொள்கைகளும் திட்டங்களும் இந்த நோக்கத்தை அடையும் வகையில் அமைந்தவையாகும்.

**14.** இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது அரிசிப் பற்றாக்குறை மிகக் கடுமையாக இருந்தது. திறமையாக நிருவகிக்கப் பட்டதால், இன்று, நிலைமை மிகவும் சீராக உள்ளது. நமது கிடங்குகளில் 3.6 இலட்சம் டன் என்ற பெருமளவிற்கு அரிசியை நாம் தற்போது இருப்பில் வைத்துள்ளோம். இதனால் ஒரு குடும்பம் சாதாரணமாக மாதமொன்றுக்கு பெறக்கூடிய 12 கிலோ அரிசி அளவிற்கு மேல் 8 கிலோ பச்சரிசியைக் கூடுதலாக வழங்க முடிந்துள்ளது. ஒரு கிலோ ரூ. 3.25 என்ற மிகச் சன்னரக அரிசியின் விலையையும், ஒரு கிலோ ரூ. 2.75 என்ற சன்னரக அரிசியின் விலையையும் 1990-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1-ம் நாள் முதல், ஒரு கிலோ ரூ. 2.50 என்ற ஒரே விலையாக இவ்வரசு குறைத்துள்ளது. இதனால் உணவுப் பொருள்களுக்காக வழங்கப்படும் மானியத் தொகையின் அளவு ரூ. 195 கோடியிலிருந்து ரூ. 256.62 கோடியாக உயர்ந்துள்ளது.

**15.** பொது விநியோக முறையின் செயல்பாட்டை மேம்படுத்த சில முக்கியமான நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டுள்ளோம். நியாயவிலைக் கடைகளில் உள்ள விற்பனையாளர்களுக்கு தொகுப்பு ஊதியம் ரூ. 250 ஆக இருந்தது. அவர்களின் நீண்டகால கோரிக்கையை ஏற்று 1990 ஜூன் முதல் இதனை ரூ. 350 ஆக உயர்த்தி இந்த அரசு அளித்து வருகின்றது. **அந்த விற்பனையாளர்களின் முறையீட்டை மேலும் பரிசீலித்து நியாய விலைக் கடைகளில் அவர்களது பணி, கடமை உணர்வுடனும் கண்ணியமாகவும் நடைபெற வேண்டும் என்ற நோக்கத்துடன் 1—2—1991 முதல் அவர்களது தொகுப்பு ஊதியம் ரூ. 500 ஆக உயர்த்தப்படுகின்றது.**

மேலும், முதற்கட்டமாக, 1,200 குடும்ப அட்டைகளுக்கு மேல். பதிவு செய்யப்பட்டுள்ள கடைகள் இரண்டாகப் பிரிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கை மேலும் தொடரப்பட்டு எந்த ஒரு கடையிலும் குடும்ப அட்டைதாரர்களின். எண்ணிக்கை 800-க்கும் அதிகமாகாமல் இருக்கும்படி வகை செய்யப்படும்.



**16.** ஏற்கனவே செய்யப்பட்ட ஆய்வின்படி 10,323 குடியிருப்புகளில், ஏதேனும் ஒருவகையில் குடிநீர் வழங்கும் பணி நிறைவேற்றப்பட வேண்டியிருந்தது. 1990 ஜூன் திங்களுக்குள் இந்தக் குடியிருப்புப் பகுதிகளில் குடிநீர் வசதி ஏற்படுத்தப் பட்டது. இஃதன்னியில் வேறு சில குடியிருப்புப் பகுதிகளில், எந்தவொரு முறையிலும் குடிநீர் வழங்கப்பெறவில்லை என்று முறையீடுகள் வந்ததன் பேரில், இந்த அரசு விரிவான மறு ஆய்வு ஒன்றை நடப்பாண்டில் மேற்கொண்டது. 5,885 குடியிருப்புப் பகுதிகள் இன்னும் எவ்வித குடிநீர் வசதியையும் பெறாத நிலையிலுள்ளன என்று இந்த ஆய்விலிருந்து தெரியவந்துள்ளது. இந்த குடியிருப்புப் பகுதிகள் அனைத்துக்கும் 1991-க்குள், குடிநீர் வசதிகளைச் செய்து கொடுத்து விடுவோம்.

**17.** கைத்தறித் துணிகளுக்கு அளிக்கப்படும் தள்ளுபடி ஓர் ஆண்டில் 100 நாட்கள் என்று அதிகரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தள்ளுபடி அளிப்பது ஒவ்வொரு மாதமும் 6-ம் தேதியிலிருந்து 10-ம் தேதி முடிய கிடைக்குமாறு செய்யப்பட்டுள்ளது. இதனால் ஏழை எளிய மக்களுக்கு மலிவு விலையில் துணிகள் கிடைப்பதுடன் கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வாழ்க்கை ஆதாரத்திற்கும் வழிவகுக்கும்.

**18.** அனைத்துத் தரப்பு மக்களுக்கும் வீட்டு வசதி செய்து கொடுக்க இந்த அரசு பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாடு நகர்ப் பகுதி வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சென்னை மாநகரிலும் மேலும் 9 நகர்க்கூட்டுப் பகுதிகளிலும் வசதி வாய்ப்புகள் கொண்ட 70,000 வீட்டு மனைகளுக்கு வகை செய்ய திட்டமிடப்பட்டு இவற்றில், கடந்த இரண்டாண்டுகளில், 24,500 வீட்டு மனைகள் வழங்கப்பட்டுள்ளன. 500 நகரங்களில் வீடுகள் கட்டுவதற்குரிய புதிய திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 77 நகரங்களில் நிலங்கள் கண்டறியப் பட்டுள்ளன. குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் சார்பில் குடிசைவாழ் மக்களுக்கு வீடுகளைச் சொந்தமாக ஆக்கிடும் புதிய திட்டமொன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், சுமார் 36,000 அடுக்குமாடி வீடுகள் எளிய தவணைத் தொகை செலுத்துவதன் பேரில் குடிசை வாழ் மக்களுக்கு உரிமையாகும். மூன்றாண்டுகளில் ரூ. 48 கோடி செலவில் குடிசை வாழ் மக்களுக்கு 12,000 அடுக்குமாடி வீடுகளைக் கட்டி முடிக்கும் நோக்கத்துடன் புதிய விரைவுத் திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

33 — ஆம் பக்கம் பார்க்க

"நியாய விலைக் கடைகளில் விற் [illegible] பணி, கடமை [illegible] கண்ணியமாகவும் [illegible] நோக்கத் [illegible] அவர்களது [illegible] ரூ.500 ஆக உயர்த்தப்படுகின்றது." (இது 1990 ஜூன் முதல் ரூ.350 ஆக இருந்தது)



# திருவள்ளுவர் திருநாள்

**இரண்டாம் அட்டை சொல்லும் செய்தி :**

திருவள்ளுவர் திருநாள் 15.1.91 அன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறைச் செயலர் டாக்டர் ஔவை நடராசன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில்—

''எந்த ஒரு சமயத்துக்கும் ஆட்படுத்திக் கொள்ளாமல், மக்களுக்காக மொழியைப் பயன்படுத்தியவர் திருவள்ளுவர்.

''கம்பராமாயணத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பது இராமாயணத்தைப் பரப்புவதற்காக அல்ல. இலக்கியத்தைப் பரப்புவதற்காகவே'' என்றார்.

திருச்சி, பாரதிதாசன் பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் க.செல்லப்பன் அவர்கள் பேசுகையில், 'திருக்குறளை தேசிய நூலாக ஆக்க வேண்டும்' என்று குறிப்பிட்டார்.

முறைசாரா-வயது வந்தோர் கல்வித் துறைத் தலைவர் பேராசிரியர் டாக்டர் மா.நன்னன் அவர்கள், குறள்வழி வாழ வேண்டும் என்றும், குறளை வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

பெரும்புலவர் புதுவை சுந்தர சண்முகனார் அவர்கள் பேசுகையில், 'திருக்குறளை உலகப் பொதுமறையாக ஆக்க வேண்டும்' என்றார்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், திருவள்ளுவர் விருதும், சிறந்த நூல்களுக்குப் பரிசுகளும், அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவியும் வழங்கினார். தமிழக அரசு பதிப்பித்த பல்லவர், பாண்டியர் வரலாறு, கம்பராமாயண ஆங்கில மொழியாக்க நூல்களையும் வெளியிட்டார்.

இந்த நூல்களின் முதல் பிரதிகளை மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

சிறந்த நூல்கள் எழுதிய 28 நூலாசிரியர்களுக்குப் பரிசுகளும், அவற்றை வெளியிட்ட பதிப்பாளர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் 21 பேருக்கு நிதியுதவியும், பெரும்புலவர் புதுவை சுந்தர சண்முகனார் அவர்களுக்குத் திருவள்ளுவர் விருதும் வழங்கப்பட்டது.

விழாவில், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்:

''தமிழர் திருநாளைத் தொடர்ந்து, வள்ளுவர் கோட்டத்தில் நடைபெறுகின்ற இந்த இனிய திருவள்ளுவர் திருநாள் விழாவில், பெரும் புலவர் புதுவை சுந்தர சண்முகனார் அவர்களுக்குத் திருவள்ளுவர் விருது வழங்கியும், பல்வேறு துறைகளில் சிறந்த நூல்களை எழுதிய பெருமக்களுக்கு முதல் பரிசு, இரண்டாவது பரிசு, மூன்றாவது பரிசு எனப் பரிசுகளை வழங்கியும், அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்குத் திங்கள் தோறும் உதவிப்பணம் பெறுவதற்கான தொடக்க நிகழ்ச்சியாக இருபதுக்கு மேற்பட்டவர்களுக்கு அடையாளமாக அந்த நிதியினை வழங்கியும் பல்லவர், பாண்டியர் வரலாறு அடங்கிய நூலை வெளியிட்டும் கம்பராமாயண ஆங்கில மொழியாக்க நூல்களை உலகுக்கு அறிமுகப்படுத்தியும் அந்த நிகழ்ச்சிகளையெல்லாம் ஆற்றுகின்ற பெரும் வாய்ப்புப் பெற்றமைக்காக நான் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

''வள்ளுவர் கோட்டம் பல விழாக்களைக் கண்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக நான்கு, ஐந்து நாட்களாகப் பல்வேறு வகையான விழாக்களைக் கண்டிருக்கிறது. உலகத் திரைப்படத் திருவிழா நிகழ்ச்சிகளின் ஒரு பகுதியாக இந்தக் கோட்டத்து மண்டபத்தில் விருந்து நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஆசிரியப் பெருமக்களுடைய மாநாடு ஒன்று நடைபெற்றது. இன்றைக்குத் திருவள்ளுவர் விழா நடைபெறுகிறது. நான் உள்ளபடியே எண்ணினேன். ஏன், ஐயுற்றேன்! நாள் தோறும் பல்லாயிரக்கணக்கான மக்கள் இந்த மண்டபத்தில் குழுமி, மண்டபம் நிரம்பி வழிகின்ற அளவிற்கு விழாக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்பொழுது திருவள்ளுவர் திருநாளுக்கு கூட்டம் வருமா என்று சந்தேகத்தோடுதான் இந்த விழாவிற்கு வந்தேன். ஆனால், ''இன்னும் தமிழன் உயிரோடு இருக்கிறான்; அவன் வள்ளுவன் கற்பித்த மானத்தோடு வாழ விரும்புகிறான்'' என்பதற்கு அடையாளமாக இந்த மாமன்றத்தில் நீங்கள்- பெருந்திரளாகக் குழுமியிருக்கின்றீர்கள்.

''இன்று காலையில் நானும் நம்முடைய பேராசிரியர் அவர்களும், சட்டப்பேரவைத் தலைவர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும், மற்றும் தமிழ்ச் சான்றோர்களும் வள்ளுவர் கோட்டத்திலே காலை எட்டு மணி அளவில் திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்து வணங்கிச் சென்றோம்.

''இன்றைக்குக்கூட பல பேருக்கு வள்ளுவர் கோட்டம் என்றால் இந்த மேடையும், எதிரே பார்வையாளர்கள் அமர்ந்திருக்கின்ற இந்த இடமும் மாத்திரம்தான் தெரியும். இங்கே உள்ள படிக்கட்டிலே ஏறிச் சென்றால், மேல் தளத்திலிருந்து அழகுற அமைக்கப்பட்டிருக்கின்ற தேரின் கம்பீரமான காட்சியைக் காணலாம் என்று கூடத் தோன்றாது. அதையும் கூடக் காண நேரலாம். ஆனால், இந்தக் கோட்டத்தினுடைய தாழ்வாரத்தை ஒட்டியுள்ள மேல்பகுதியில் திருக்குறள் பல இடங்களிலே எழுதப்பட்டு அதற்கான ஓவியங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. அந்தக் காட்சிகள் பல பேருக்குத் தெரியாது.

''இங்கே முன் வரிசையில் அமர்ந்திருக்கின்றவர்கள், இந்த மேடையில் நடைபெறுகின்ற ஒரு நிகழ்ச்சியைக் காண முயன்றால் மேடையில் இருப்பவர்களுடைய இடுப்புக்கு மேலேதான் உருவம் தெரியும். நடன நிகழ்ச்சியென்றால் இதிலே மிக முக்கியமாக நடனமாடுகின்றவர்களுடைய முகம், அவர்கள் தாளத்திற்கு ஏற்ப ஆடுகின்ற பாத லயம் இவைகள்தான் முக்கியம். இந்த மேடையிலிருந்து நடனம் ஆடும் போது, முன்வரிசையிலே அமர்ந்திருப்பவர்களுக்கு ஆடுகின்றவர்களுடைய கால் தெரியாது. அனுபவத்தால் அங்கே உட்கார்ந்து பார்த்த காரணத்தால் சொல்லுகிறேன். எனவேதான், இந்தக் குறையையெல்லாம் போக்க வேண்டும் என்பதற்காக ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியை உங்களுக்குச் சொல்கிறேன்.

**திருவள்ளுவர் திருநாளை முன்னிட்டு, வள்ளுவர் கோட்டத்தில் உள்ள திருவள்ளுவர் சிலைக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர், மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்தார்கள் (15.1.91).**





**நூலாசிரியர்கள் பரிசு பெறுகிறார்கள்.**

''இந்தக் குறைகளைப் போக்கி மீண்டும் இந்த வள்ளுவர் கோட்டம் அழகுற விளங்குவதற்கு அரசின் சார்பாக, ஏறத்தாழ 25 இலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த வள்ளுவர் நாளில் நான் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் பணிகள் இன்னும் சில நாட்களில் தொடங்கும். அந்தப் பணிகள் தொடங்கி முடியும் வரை நிகழ்ச்சிகள் இங்கே நடத்துவதற்கு வாய்ப்பளிக்கப்பட மாட்டாது என்பதையும் நான் தெரிவிக்க வேண்டியவனாக இருக்கின்றேன். இந்த முயற்சிக்கு அனைவரும் ஒத்துழைப்புத்தர வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

''இன்று நடைபெறுகிற இந்த நிகழ்ச்சியில் திருவள்ளுவர் விருது ஒரு பெரும்புலவருக்கு வழங்கப்பட்டு 20 ஆயிரம் வெண் பொற்காசுகளும் அவருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இங்கே அவ்வை நடராசன் குறிப்பிட்டதைப்போல் ஏற்கெனவே பத்தாயிரம் ரூபாயாக இருந்ததை, இருபதாயிரம் ரூபாயாக உயர்த்தி இப்போது வழங்கப்பட்டிருக்கிறது.

''அதைப்போலவே பல்வேறு துறைகளிலே நூல்களை இயற்றிய இருபதுக்கு மேற்பட்டவர்கள் இன்றைக்குப் பரிசுகள் பெறுகிறார்கள், பாராட்டுகள் பெறுகிறார்கள். இந்தத் திட்டத்தைத் தொடங்கியவர்களை நாம் மறந்து விடக் கூடாது. இது 1947-ஆம் ஆண்டிலேயே தொடங்கப்பட்ட திட்டமாகும். அன்றைக்கு இரண்டே பரிசுகள். 1971-இல் நாங்கள் முன்பு ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது அந்த முதல் பரிசு ஆயிரம் ரூபாயை, இரண்டாயிரம் ரூபாய் என்றும், இரண்டாவது பரிசு ஆயிரம் ரூபாய் என்றும் மாற்றி அமைத்து வழங்கினோம். 1971-க்குப் பிறகு 1989 வரையில் எந்த மாறுதலும் இல்லை. ஆனால், வேறு எத்தனையோ மாறுதல்கள் செய்யப்பட்டன. பெயர்கள் எல்லாம் கூட மாற்றப்பட்டன. ஆனால், இவர்களுக்கு இந்தத் தொகையை உயர்த்தித் தரவேண்டும் என்கிற மாறுதல் யாருடைய மனதிலும் பிறந்ததில்லை.

''கடந்த ஆண்டு நானும் பேராசிரியரும் எண்ணிப்பார்த்து, மூன்று பரிசுகள் என்று ஆக்கி, முதல் பரிசாக ஐந்தாயிரம் ரூபாயும், இரண்டாவது பரிசாக மூவாயிரம் ரூபாயும், மூன்றாவது பரிசாக ஆயிரம் ரூபாயும் இன்று அளிக்கப்பட்டுள்ளது. ஏறத்தாழ ஒரு இலட்சம் ரூபாய் அளவிற்கு- இன்றைக்கு இந்த விருதுகளின் காரணமாக, பரிசுகளின் காரணமாக வழங்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொகை தொடர்ந்து மேலும் மேலும் உயரும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். இன்றே உயருமா என்று யாரும் கேட்க மாட்டார்கள். தொடர்ந்து உயரும். தொடர்ந்து நாங்களும் இருந்து உயர்த்துவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

> ''வள்ளுவர் கோட்டம் அழகுற விளங்குவதற்கு அரசின் சார்பாக, ஏறத்தாழ 25 இலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த வள்ளுவர் நாளில் நான் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்!
>
> - முதல்வர் கலைஞர்

''தமிழகத்தின் வரலாறு ஒன்று எழுதப்பட வேண்டும் என்கின்ற எண்ணம் எங்களுக்கு ஏற்பட்டதற்குக் காரணம், இங்கே நன்னன் குறிப்பிட்டதைப்போல் ஆலமரத்தின் விழுதுகளாக நாங்கள் இருக்கின்ற காரணத்தால், இந்த இனத்தின் ஆலமரமாக விளங்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத்தின் தலைநகரமான சென்னையில் உலகத் தமிழ் இரண்டாவது மாநாடு நடைபெற்றபோது • ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். தமிழர்களின் வரலாறு பழங்காலத்திலிருந்து எழுதப்பட வேண்டும். அந்த வரலாறு எளிய நடையில் எழுதப்படவேண்டும், எல்லோரும் படித்து உணரத்தக்க வகையில் வரலாறு, எழுதப்பட வேண்டும், தமிழகத்திற்கென்று வரலாறு இல்லை, தமிழர்களுடைய வரலாறு மறைக்கப்பட்டு விட்டது. எனவே, அந்த வரலாற்றை எழுதிட வேண்டும் என்ற கருத்தைக் குறிப்பாக அறிவித்தார்கள்.

''அறிவித்த அண்ணா அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து விட்டார்கள் என்றாலும்கூட, அந்த எண்ணம் நிறைவேற்றப்பட வேண்டும் என்கின்ற அவாவுடன், 1970-ஆம் ஆண்டில் சரியாக 18.8.1970 அன்று மறைந்த டாக்டர் மு.வ. அவர்களுடைய தலைமையில் பேரறிஞர்கள் தமிழ்ப் புலவர்களுடைய குழு ஒன்று தமிழக அரசின் சார்பாக அமைக்கப்பட்டு, தமிழர்களுடைய வரலாற்றை எழுதுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார்கள்.

''அந்தக் குழுவின் முதல் கூட்டத்தில் நான் சொன்னேன். சொன்னதை இங்கே திரும்பச் சொல்வது தவறாக இருக்காது என்பதால் தமிழ்ப் புலவர்களுக்கு மத்தியிலே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அன்றைக்குச் சொன்னேன், எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து ஒரு வரலாற்றைச் சொல்லுங்கள். இதிலே ஆளுக்கு ஆள் - ஒவ்வொருவரும் ஒரு ஆராய்ச்சி செய்து - தமிழ்நாட்டு மக்களைக் குழப்பாமல் எல்லோரும் சேர்ந்து ஒரு கருத்தைச் சொல்லுங்கள் என்று குறிப்பிட்டேன். இன்னும்கூடச் சொல்கிறேன். பொய்யைக் கூறுவதாக இருந்தாலும் எல்லோரும் சேர்ந்து சொல்லுங்கள் அதுவே வரலாறாக இருக்கட்டும் என்றுகூடச் சொன்னேன். ஏனென்றால், அவரவரும் ஒரு ஆராய்ச்சி செய்கின்ற காரணத்தால் எது சரியான வரலாறு, எது சரியான கருத்து என்று தெரியாமலேயே தமிழர்களுடைய வரலாறு சிதைந்து போய்விட்டது - வரலாறு சிதைந்தாலும் பரவாயில்லை. அந்த இனமே சிதைந்து விடக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. எனவே, அந்த இனம் சிதறாமல் இருக்க - அதனு



# அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு – விடுதலைப் போர்த் தியாகிகளுக்கு - மொழிக் காவலர்களுக்கு வழங்கப்படும் மாத உதவித்தொகை ரூ.400 ஆக உயர்ந்தது!

திருவள்ளுவர் பெயரால் நடைபெறுகின்ற இந்தத் திருவள்ளுவர் விழாவில், இன்னொரு மகிழ்ச்சிகரமான செய்தியையும் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்று அகவை முதிர்ந்த தமிழ் அறிஞர்களுக்கு மாதந்தோறும் 350 ரூபாய் வீதம் நிதி உதவி வழங்க மேலும் 21 பேர் இன்றைக்கு இணைக்கப்பட்டிருக்கின்ற செய்தி இங்கே அறிவிக்கப்பட்டது.

ஏற்கெனவே மொழிக் காவலர்கள் ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் இதுபோன்ற உதவிகளைப் பெறுகிறார்கள். அதற்கு முன்பிருந்தே விடுதலைப் போராட்டத் தியாகிகள் சுமார் ஐயாயிரம் பேருக்கு மேற்பட்டவர்கள் இந்த உதவியைப் பெறுகிறார்கள். அவர்களுக்கெல்லாம் 350 ரூபாய் உதவி வழங்கப்பட்டு வருகின்றது.

இன்று தமிழறிஞர்களுக்குச் சிறப்புச் செய்கின்ற வகையிலே தமிழறிஞர்கள் கலந்துகொண்டுள்ள விழாவாக இது இருப்பதால் - தமிழறிஞர்களுக்கு மிகவும் பிடித்தமான தமிழ் இலக்கியம் - அகநானூறு, புறநானூறு! எனவே, அந்த 350 ரூபாய் இன்று முதல், 400 ரூபாயாக மாறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழறிஞர்களுக்கு மாத்திரம்தான் அகநானூறு, புறநானூறு என்றால் விடுதலைப் போராட்ட வீரர்களும் புறநானூறு படித்த காரணத்தால் அவர்கள் விடுதலைப் போராட்ட வீரர்களாக மாறினார்கள். அதைப்போல மொழிக் காவலர்களும் அகநானூறு படித்து அகம் காப்பாற்றப்பட வேண்டுமேயானால், புறம் காண வேண்டுமென்று புறநானூறு படித்து, அவர்களும் வீரர்களாக, மொழிக் காவலர்களாக இருக்கின்ற காரணத்தால், இந்த 400 ரூபாய் அவர்களுக்கும் பொருந்தும். இதன் காரணமாகப் பல இலட்ச ரூபாய் அரசுக்குக் கூடுதலாகச் செலவாகும் என்றாலுங்கூட, 350 ரூபாய் என்பது அகநானூறு, புறநானூறு என்பதன் அடையாளமாக, இன்று முதல் 400 ரூபாயாக உயர்த்தப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

- திருவள்ளுவர் திருநாள் விழாவில் (15.1.91)
முதல்வர் கலைஞர்.

டைய மொழிப்பற்று சீர்குலையாமல் இருக்க - அதனுடைய ஒற்றுமை தழைக்க - ஒரே கருத்தைச் சொல்ல வேண்டும் என்று நான் அன்றைக்குச் சொன்னேன்.

''பொய்யாவது சொல்லுங்கள் என்று நான் அன்றைக்குச் சொன்னதற்குக் காரணம், எல்லோரும் ஒன்றாக ஒரே கருத்தைச் சொல்ல வேண்டும் என்பதற்காக - மிகைப்படுத்திச் சொன்ன கருத்தே தவிர - நாளைய தினம் பத்திரிகையாளர்கள், பொய் வரலாறு எழுதுங்கள் என்று கருணாநிதி புலவர்களைக் கேட்டுக் கொண்டான்' என்று போட்டுவிடக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். ஒன்றுபட்டு ஒரே கருத்தைச் சொல்ல வேண்டும். அவரவர்கள் பல முனையிலே ஆராய்ச்சி செய்தாலுங்கூட, சரியானது தாங்கள் சொன்னதுதான் என்று பிடிவாதம் பிடிக்காமல், எது சரியென்று படுகிறதோ அதை ஒப்புக்கொள்கின்ற அளவிற்கு விட்டுக்கொடுத்து, தமிழர்களுடைய வரலாற்றை – தமிழ்நாட்டின் வரலாற்றை உருவாக்க வேண்டுமென்று அன்றைக்கு அமைச்சரவைக் கூட்டம் நடைபெறுகின்ற இடத்தில் நடைபெற்ற அந்தக் குழுக் கூட்டத்தில் நாவலரையும், பேராசிரியரையும் அருகே வைத்துக்கொண்டு அந்தப் புலவர் பெருமக்களை நான் கேட்டுக்கொண்டேன்.

''தொல் பழங்கால வரலாறு 1975-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. 1970-இல் எடுக்கப்பட்ட அந்த முயற்சி என்ற காரணத்தால் எப்போதும் - தொடங்குவதற்குச் சற்றுத் தாமதமாகும் என்ற வகையில், 75-ஆம் ஆண்டு வரையிலே அந்தப் பணி நீண்டு நடைபெற்று, தொல் பழங்கால வரலாறு 75-ஆம் ஆண்டு வெளியிட்டது. அதற்குப் பிறகு 1983-ஆம் ஆண்டு சங்க காலத்துத் தமிழர்களுடைய வரலாறு எழுதப்பட்டது - இரண்டு பகுதிகளாக; அதற்குப் பிறகு 91-இல் எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு பல்லவர், பாண்டியர் வரலாறு இன்றைக்கு வெளியிடப் பட்டிருக்கின்றது. தொடர்ந்து தமிழர்களுடைய வரலாறு- தமிழ் மன்னர்களுடைய வரலாறு

இவை அனைத்தும் வெளியிடப்பட வேண்டும் - எனக்குள்ள ஆசையை நான் கூற விரும்புகிறேன். இப்படித் தனித்தனியாகப் பல்லவர் வரலாறு, பாண்டியர் வரலாறு, சோழர் வரலாறு என்று எழுதப்பட்டாலுங்கூட, அவைகளும் பயன்படும் - வரலாற்றை உணர வேண்டுமென்று எண்ணுபவர்களுக்குப் பயன்படும் என்றாலுங்கூட, மொத்தத்தில் தமிழகத்தின் வரலாறு ஒரே புத்தகத்திலே வடித்துத் தரக்கூடிய ஒரு முயற்சியும் ஏற்பட வேண்டும் என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

''அதிலே சோழர் வரலாம், பாண்டியர் வரலாம், சேரர் வரலாம், பல்லவர் வரலாம், அனைவரும் வரலாம். அப்படி மொத்தத்தில் அன்று முதல் இன்று வரை ஒரே புத்தகமாகத் தனித்தனிப் புத்தகங்களும் தேவை என்றாலுங்கூட, மொத்தமாக ஒரே வரலாறாக ஒரே நூலில் அடங்கத்தக்க வரலாறாக எழுதப்பட வேண்டுமென்ற என் ஆசையினைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்குப் புலவர் பெருமக்கள் முன்வரவேண்டும். அப்படி முன் வருகின்ற நேரத்திலே தங்களுடைய கருத்துக்களை இந்த அரசுக்குத் தெரிவிக்கவேண்டும்.

# அக்கினிப் பிரவேசம்

முதல்வர் கலைஞர்

# திருவள்ளுவர் விருது பெற்ற புதுவை சுந்தர சண்முகனார்



தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் திருக்குறள் நெறி பரப்பும் பெருந்தகையாளர் ஒருவரைத் தெரிவு செய்து, அரசு சார்பில் நடத்தப்பெறும் திருவள்ளுவர் திருநாள் விழாவில், அவருக்குத் திருவள்ளுவர் விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.

இதுவரை திருவள்ளுவர் விருது பெற்றவர்கள்:

*1. தவத்திரு குன்றக்குடி அடிகளார் (1986), 2. முத்தமிழ்க் காவலர் திரு. கி.ஆ.பெ. விசுவநாதம் (1987), 3. திரு. ச. தண்டபாணி தேசிகர் (1988), 4. திரு. வ. சுப. மாணிக்கம் (1989), 5. திரு. கு.ச. ஆனந்தன் (1990).*

**1991 ஆம் ஆண்டிற்கு திருவள்ளுவர் விருது:**

பேராசிரியர் புதுவை சுந்தர சண்முகனார் அவர்கள், 1991- ஆம் ஆண்டிற்குத் திருவள்ளுவர் விருது வழங்கிப் பாராட்டப் பெறுதற்குரிய பெருமகனாராகத் தமிழக அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டு, 15.1.91 திருவள்ளுவர் திருநாள் விழாவில் அவருக்கு விருது வழங்கப்பெற்றது .

திரு. சுந்தர சண்முகனார், தென்னார்க்காடு மாவட்டம், புதுவண்டிப் பாளையத்தில் 13-7-1922-இல் பிறந்தார். பெற்றோர்: திரு. சுந்தரம், திருமதி அன்னபூரணி அம்மையார்.

திரு. சுந்தர சண்முகனார், திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் மடத்தில் தொடக்கக் கல்வியும், திருவையாறு அரசர் கல்லூரியில் செந்தமிழ்க் கல்வியும் பயின்றவர். தாமே வீட்டிலிருந்து கற்றே பி.ஏ., பட்டம் பெற்றவர்.

திருமயிலம் தமிழ்க் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகப் பணியைத் தொடங்கித் தொண்டுச் சிறப்பால் துணை முதல்வராக உயர்வு பெற்றவர். புதுவை அரசினர் ஆசிரியர் பயிற்சி மையத்தில் தமிழ்த் துறைத் தலைவராகவும், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் தொகுப்பியல் துறைத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

இவர் எழுதிய நூல்கள் அறுபதுக்கு மேற்பட்டவை. திருக்குறள் நெறியில் ஈடுபாடு கொண்டு எழுதிய 'வள்ளுவர் கண்ட மனையறம்', 'வள்ளுவர் இல்லம்', 'திருக்குறள் தெளிவுரை', 'தெவிட்டாத திருக்குறள்' ஆகிய நூற்கள் இவரின் பெரும் புலமையின் விளைவுகள் ஆகும். திருக்குறள் நெறிபரப்புத் 'திருக்குறள் தெளிவு' என்னும் திங்களிருமுறை இதழ் ஒன்றையும் வெளியிட்டுள்ளார். உலகப் பல்கலைக் கழகம் இவருக்கு 'டாக்டர்' பட்டம் வழங்கியுள்ளது.

'பணக்காரர் ஆகும் வழி' என்னும் நூலை எழுதி நடுவணரசின் பரிசையும், 'தமிழ் அகராதிக் கலை' என்ற நூலை இயற்றித் தமிழக அரசின் பரிசையும், 'கவுதம புத்தர் காப்பியம்' யாத்து புதுவை அரசின் பரிசையும் இவர் பெற்றுள்ளார்.



அகவை முதிர்ந்த தமிழறிஞர் உதவித்தொகை பெறுகிறார்.

நானும் பேராசிரியரும் அதைப் பற்றிச் சிந்தித்து அதற்கு ஒரு குழுவை அமைத்தாவது, மொத்தத்தில் முழுமையான வரலாற்றைக் கொண்ட ஒரே நூல் வடிவத்தில் வரச் செய்வதற்கான வழிவகைகளை இந்த அரசின் சார்பில் செய்வதற்குச் சித்தமாக இருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

"ஏற்கெனவே ஒருமுறை அண்ணா அவர்களுடைய கரத்தாலும் அடுத்து என்னுடைய கரங்களாலும் விருதுகளைப் பெற்ற நம்முடைய புதுவைப் பெரும்புலவர் சுந்தர சண்முகனார் அவர்கள் இன்றைக்குத் திருவள்ளுவர் விருதினைப் பெற்றிருக்கிறார்கள்.

"இங்கே உரையாற்றும்போது பேராசிரியர் அவர்களும், மற்றவர்களும் சொன்னார்கள். திருவள்ளுவர் யாத்த திருக்குறள்தான் இந்தியாவின் தேசிய நூலாக ஆக வேண்டும் என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். பெரும்புலவர் சுந்தர சண்முகனார் அவர்கள் அது உலக நூலாகவே ஆக வேண்டுமென்று சொன்னார். என்னைப் பொறுத்தவரையில் திருக்குறளைத் தேசிய நூலாக ஆக்குவதென்பது, ஒரு பெரிய வட்டத்திற்குள்ளே இருக்கின்ற திருக்குறளை ஒரு சிறிய வட்டத்திற்குள்ளே கொண்டு வந்து அடைப்பது போலாகுமென்று நான் கருதுகிறேன். அது உலகப் பொதுமறையாக இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கிறது. அதனைத் தேசிய நூலாக ஆக்குவதன் மூலம் நாம் அதற்குப் பெரும் புகழை அளித்து விட்டோம் என்று கருத இயலாது."

விழா முடிவில் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் திரு கு. சிவஞானம் அவர்கள் நன்றி நவின்றார்.

அன்று இரவு, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் 'தென்பாண்டிச் சிங்கம்' வரலாற்று நாடகம், கலைமாமணி ஹெரான் இராமசாமி நாடகக் குழுவினரால் நடத்தப்பட்டது.

— நமது செய்தியாளர்.



## மாநில கணக்காயர் அலுவலகம்
## (கணக்கு மற்றும் பணி வரவு)
## சென்னை-18

### "தமிழக அரசு ஊழியர்கள் கவனத்திற்கு"

தமிழக அரசின் ஊழியர்களின் பொது வருங்கால வைப்பு நிதியின் 1989-90-ஆம் ஆண்டிற்கான கணக்கு அறிக்கைகள் (GPF அக்கவுண்ட் ஸ்லிப்) அனுப்பப்பட்டு வருகின்றன என்பதையும், அவை 1991-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15-ஆம் தேதிக்குள் உங்களுக்கு அனுப்பப்பட்டுவிடும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். இந்தக் கணக்கு அறிக்கைகள் 1990-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் நீங்கள் பணி புரிந்த அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

கணக்கு அறிக்கைகள் மிக்க கவனத்துடன் எந்தவிதக் குறைபாடும் இல்லாமல் தயாரிக்கத் தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும், தவிர்க்க இயலாத காரணங்களால் குறைகள் காணப்பட்டால், சம்பளப் பட்டியல் விவரங்களுடன் தங்கள் அலுவலக அதிகாரிகள் மூலமாகக் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும்:

திரு. சி.வி. இராமன்,<br>
கணக்கு அலுவலர்,<br>
எப்.எம்.ஐ. பிரிவு, (F.M.I. Section)<br>
மாநில கணக்காயர் அலுவலகம்,<br>
261, அண்ணா சாலை, சென்னை-600 018.

என்றும் தங்களுக்காகப் பணிபுரியக் காத்திருக்கிறோம். தங்கள் பொது வருங்கால வைப்பு நிதியின் நியமனப் பத்திரம் (நாமினேஷன்) தாக்கல் செய்து விட்டீர்களா?

கணக்கு அலுவலர்

# மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம்

மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தின் மூலம், திருமண உத்வி பெற்றவர் திருமதி க.பஞ்சவர்ணம்.

அவர் இந்தத் திட்டம் பற்றிக் கூறும்போது, 'தக்க சமயத்தில் கிடைத்த இந்த உதவி எனக்கு வாழ்க்கையை அமைத்துக் கொடுத்தது' என்று மகிழ்ச்சியுடன் கூறினார்.



திருமதி க. பஞ்சவர்ணம்

தனக்குக் கிடைத்த இந்த உதவி பற்றி அவர் மேலும் கூறுகையில்-

"எனது சொந்த ஊர் தனிச்சியம். எனக்கு 24 வயதாகிறது. நான் பி.ஏ. வரை படித்துள்ளேன். எனது தந்தை பெயர் கூழாச்சி. எங்களுக்கென்று குடியிருக்கும் சிறிய வீட்டைத் தவிர வேறு சொத்துக்கள் கிடையாது. எனக்கு ஒரு அண்ணனும் இருக்கிறார். என் அப்பாவும், அண்ணனும் கூலிவேலை செய்து என்னைப் படிக்க வைத்ததுடன், குடும்பத்தையும் காப்பாற்றி வந்தார்கள். எனக்கு வயது 24 ஆகியும் திருமணம் செய்துவைக்க நம்மிடம் வசதி வாய்ப்புகளில்லையே என எனது தந்தையும் அண்ணனும் கவலைப்பட்டுக் கொண்டிருந்தபோது, முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ள மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தைப் பற்றி செய்தித் தாள்களில் அறிந்தேன். பிறகு இதுபற்றி அலங்காநல்லூர் வட்டார சமூகநல விரிவாக்க அலுவலர் திருமதி பாத்திமா பீவி அவர்கள் மூலம் விண்ணப்பித்தேன். எனக்கும் எனது உறவினர் திரு கண்ணனுக்கும் 12.2.1990-இல் திருமணம் எளிமையாக நடைபெற்றது. இந்தப் பண உதவி எங்களுக்குக் கிடைக்காவிட்டால், என் திருமணம் இன்னும் தள்ளிக்கொண்டேதான் போகும். இந்த உதவியை எங்களுக்கு வழங்கிய முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்.

வடுகப்பட்டியைச் சேர்ந்த திருமதி சூரியகலா கூறுகிறார்-

"நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்குத் தற்போது 23 வயது ஆகிறது. சிறு வயதிலேயே எனது தந்தையார் இறந்து விட்டார். எனக்கு உடன் பிறந்தவர்கள் இரண்டு தங்கைகள். எங்கள் அம்மா கூலிவேலை செய்து எங்களைக் காப்பாற்றி என்னையும் படிக்க வைத்தார். எனக்குத் திருமணம் செய்து



திருமதி சூரியகலா



திருமதி மகாலட்சுமி

வைக்க வசதி இல்லையே என்று என் அம்மா கவலையுற்றிருந்தபோது, முதல்வர் அவர்களின் இந்தத் திட்டம் பற்றி வட்டாரச் சமூகநல விரிவாக்க அலுவலர் மூலம் அறிந்து விண்ணப்பித்தேன்.

"எனக்கும், அலங்காநல்லூரைச் சேர்ந்த திரு கோவிந்தராஜ் அவர்களுக்கும் 3.6.1990 அன்று திருமணம் நடைபெற்றது. தமிழக அரசின் நிதியுதவி எங்கள் திருமணத்திற்குப் பேருதவியாக இருந்தது. ஏற்கெனவே கஷ்டத்தில் இருந்த எங்கள் குடும்பம், மேலும் கடன் சுமையில் மூழ்காமல் காப்பாற்றி என் திருமணத்திற்கு உதவி செய்த முதல்வர் அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்."

அ. புதுப்பட்டியைச் சேர்ந்த திருமதி மகாலட்சுமி கூறுகிறார்-

"என் தந்தையும், தாயும் விவசாயக் கூலி வேலை செய்து என்னைப் படிக்க வைத்தார்கள். நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு இப்போது 24 வயதாகிறது. சாப்பாட்டுக்கே கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தோம். எனக்குத் திருமணம் செய்து வைக்க இயலாமல், பெற்றோர்கள் கவலைப்பட்டனர். அத்தருணத்தில் எங்கள் கிராமத்தில் மதுரை மாவட்டச் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் தமிழக அரசின் சாதனைகளையும், நலத்திட்ட உதவிகளையும் விளக்கி செய்திப் படங்கள் காண்பித்தார்கள். அதன்மூலம்





# பதிப்புரை

தமிழ்நாடு சட்டப் பேரவையில் நடைபெற்ற ஆளுநர் உரைமீதான விவாதத்துக்குப் பதிலளித்து 25.1.91 அன்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையைத் தொகுத்து 'அக்கினிப் பிரவேசம்' என்ற தலைப்பில் நூல் வடிவில் தமிழரசு 1.2.91 இதழின் இலவச இணைப்பாக வழங்குகிறோம்.

இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்புத் துறை,
தமிழ்நாடு அரசு.

28.1.91

எதிர்க்கட்சியினர் அப்படிச் செய்வார்கள். கலந்துகொள்ளலாம் என்று எண்ணுகிற எதிர்க்கட்சியினர் கலந்து கொள்வார்கள். இதுதான் இந்த அவையில் இதற்கு முன்பு நடைபெற்ற நடைமுறைகள்.

ஆனால் 18-ஆம் தேதி அன்று ஆளுநர், உரை நிகழ்த்த வந்தபோது, அவ்வாறு தங்களுடைய கருத்துக்களை நீண்டநேரம் படிப்பதற்கு அவர்களுக்கு அவகாசம் அளிக்கப்பட்டு நீண்டநேரம் அந்தக் கருத்துக்களை எல்லாம் அவர்கள் படித்து, அவர்களுடைய மனத் திருப்திக்கு ஏற்றவாறு என்னையும் இந்த அரசையும் முறையே, 'தேசத் துரோகி' என்றும் 'தேசத் துரோக அரசு' என்றும் குறிப்பிட்டதோடு நிறைவடையாமல், உரையைப் படிக்க முனைந்த ஆளுநரைப் பார்த்து, 'படிக்காதே படிக்காதே' என்று முழக்கமும் இட்டார்கள்.

முழக்கமிடுவதை ஆரம்பிப்பதற்கு என்றே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஒருவர் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறார், அவர் அந்த முழக்கங்களை ஒரு தாளிலே-ஏற்கனவே திட்டமிட்டு எழுதி வைக்கப்பட்ட முழக்கங்களை இங்கே படித்து, மற்றவர்கள் எல்லாம் அதைத் திருப்பிச் சொன்னார்கள். சொல்லும்போது, பொதுவாக தமிழில் மரியாதைக்குரிய சொற்கள் எவ்வளவோ இருக்கின்றன. அப்படிப்பட்ட சொற்கள் பயன்படுத்தப்படாமல் அன்றைக்கு மிக மரியாதைக்குறைவான வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டன. ஒரு அரசைப் பார்த்து, 'அரசே அவர்களை எல்லாம் விடுதலை செய்' என்று சொல்லும் போது பயன்படுத்துகிற சொல்லுக்கும், அந்த அரசினுடைய முதலமைச்சரைப் பார்த்துப் பயன்படுத்துகிற சொல்லுக்கும் சற்று வேறுபாடு உண்டு. 'விடுதலை செய்யுங்கள்' என்று சொல்வது தான் தமிழில் மரபு.

'அரசே' என்று சொல்லும்போது 'விடுதலை செய்' என்று சொல்வது மரபு. ஆனால் அன்றைய தினம் ஆளுநரைப் பார்த்து அ.தி.மு.க உறுப்பினர்கள் கொஞ்சம் மரியாதையைச் சேர்த்துக் கொண்டு 'படிக்காதீர்கள்' என்று சொல்லியிருக்கலாம். 'படிக்காதீர்கள்' என்றுகூடச் சொல்லாமல், 'படிக்காதே, படிக்காதே' என்று சொன்னார்கள். இதை ஆங்கிலத்திலே சொன்னால் அப்படிப்பட்ட சொற்கள் பாகுபடுத்திப் பார்க்க முடியாதவைகளாக அமைந்து விட்ட கார்ரணத்தால்,

'do not read' அல்லது 'don't read'

என்று தான் சொல்லமுடியும். அவர்கள் கூட, ஆங்கிலேயர்கள் கூட, 'Please don't read' என்றுதான் சொல்வார்கள் . அப்படி ஒரு மரபைப் பின்பற்றக் கூடியவர்கள். இங்கே அவ்வளவு மரியாதை தராவிட்டாலும் கூட, மரியாதைக் குறைவாக 'படிக்காதே, படிக்காதே' என்று அவர் முன்னால், அவர் ஆற்ற வந்த உரைப் புத்தகத்தை நீட்டி, நீட்டி முழங்கி விட்டுச் சென்றார்கள். ஆளுநர் அவர்கள் அந்தச் செயலை உன்னிப்பாகக் கவனிக்காதவர், தன்னுடைய கடமையை இங்கே ஆற்றிவிட்டுச் சென்றார்கள்.

அதற்குப் பிறகு இந்த அவையில் தொடர்ந்து நடைபெற்ற சம்பவங்களும், ஜனநாயகத்தினுடைய அடையாளச் சின்னமாக இந்த அவையினுடைய உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் பாதுகாப்பு அளிக்கக் கூடியவராக அமர்ந்திருக்கின்ற பேரவைத் தலைவராகிய நீங்களே தாக்கப்பட்ட நிகழ்ச்சி இங்கே பொறுப்பிலே இருக்கிற எல்லாக் கட்சித் தலைவர்களுடைய உள்ளத்தையும் உலுக்கி, தோழமைக் கட்சிகளாக இருக்கின்ற மார்க்சிஸ்டு கட்சி, இந்திய கம்யூனிஸ்டு கட்சி, ஜனதா தளக் கட்சி, முஸ்லீம் லீக் கட்சி மற்றும் நம்முடைய நண்பர் பாண்டியன் போன்றவர்கள், பார்வர்டு பிளாக் கட்சியைச் சார்ந்தவர்கள், இவர்கள் எல்லாம் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொன்னது மாத்திரமல்ல, நண்பர் திருநாவுக்கரசு அவர்கள் தன்னுடைய கருத்தை எடுத்துச் சொன்னது மாத்திரமல்ல, அன்றைக்கு மிகுந்த உணர்ச்சியோடு எதிர்க் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் - திரு. குமரி அனந்தன் அவர்கள், தன்னுடைய வேதனையை வெளிப்படுத்தி 'இது கண்டிக்கத் தக்கது' என்றே அன்றைக்குக் குறிப்பிட்டார்.

இந்த அவையிலே உள்ள தலைவர்களும் சரி, மிகக் கடுமையான தண்டனை தான் இத்தகைய செயலிலே அன்றைக்கு ஈடுபட்டவர்களுக்கு வழங்கப்படும் என்று எதிர்பார்த்தார்கள் வழங்கப்படவேண்டுமென்று எண்ணினார்கள். அப்பொழுதிருந்த அந்தச் சூழலில் அப்படித்தான் எண்ணமுடியும். பிறகு நிதானமாகச்

மாண்புமிகு முதல்வர் கலைஞர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரையின் மீது பல்வேறு கட்சிகளின் தலைவர்களும், உறுப்பினர்களும் இந்த அவையில் ஆற்றியுள்ள கருத்துக்களின் தொடர்பாக என்னுடைய கருத்துக் களையும் எடுத்து வைக்கின்ற வாய்ப்பினை இப்போது நான் பெற்றிருக்கிறேன்.

முதலில் என்னுடைய ஆழ்ந்த வருத்தத்தை நான் தெரிவித்துக் கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன். இந்த அவையில் கடந்த 2,3 நாட்களாக நடைபெற்ற நிகழ்ச்சிகள், ஜனநாயகத்திற்கே ஒரு தலைகுனிவை ஏற்படுத்துகின்ற அளவிற்கு அமைந்துள்ளன என்பதை நாட்டிலே உள்ள நல்லவர்களும், நல்லறிவாளர்களும் மிகத் தெளிவாகவே உணர்வார்கள்.

நம்முடைய நண்பர் திரு பூவராகன் அவர்கள் இங்கே பேசும் போது குறிப்பிட்டதைப் போல, உரையாற்றிய கவர்னர் பெருமான் அவர்கள் இந்த அவையில் சந்தித்த நிலை எவ்வாறு இருந்தது என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்களிடத் திலே சென்று முறையீடுகளை, இந்த அவையைப் பற்றி அல்லது அவையை நடத்திச் செல்கிற பொறுப்புமிக்க தங்களுடைய தீர்ப்புகளைப் பற்றி, நடவடிக்கைகளைப் பற்றி, புகார்களைத் தருகின்றவர்கள் இந்த அவையிலே அவர்கள் யாருக்காக வக்காலத்து வாங்குகிறார்களோ, அவர்கள் அதே கவர்னர் அவர்கள், இங்கே வந்தபோது எப்படி நடந்து கொண்டார்கள் என்பதை ஏனோ எண்ணிப் பார்க்கத் தவறிவிட்டார்கள்.

பொதுவாக ஆளுநர் உரை நிகழும்போது, எதிர்க் கட்சியிலே உள்ளவர்கள், ஆளும் கட்சியின் மீது சில குறைகளைச் சொல்லி, இதன் காரணமாக இந்த ஆளும் கட்சியின் சார்பாக ஆற்றப் படுகின்ற கவர்னர் உரையை நாங்கள் புறக்கணிக்கிறோம் என்று ஒரு 4,5 வாக்கியங்களில், தங்களுடைய கருத்துக்களை எழுதிப் படித்தோ, அல்லது சொல்லிவிட்டோ வெளிநடப்பு செய்வது இந்த அவையிலே வாடிக்கையாக இருந்திருக்கிறது. விரும்புகின்ற

சிந்தித்துப் பார்க்கிற நேரத்தில், நமக்கே ஒரு பரிவு ஏற்பட்டு, கொஞ்சம் தளர்த்தலாமா என்றெல்லாம் எண்ணுவது உண்டு. ஆனால் அன்றையதினம் அத்தனை பேரும் இதைவிடக் கடுமையான தண்டனை வேண்டுமென்று எண்ணினார்கள். ஆனால் தாங்கள் மிகுந்த பெருந்தன்மையோடு அவர்கள் சட்டமன்றக் கூட்டத் தொடருக்கு, இந்தத் தொடருக்கும், அடுத்த வரவு-செலவுத் திட்டம் விவாதம் நடைபெறுகின்ற அந்தக் கூட்டத் தொடருக்கும் வரக் கூடாது என்று தீர்ப்பே வழங்கினீர்கள்.

இந்த இரண்டு தொடர் என்று சொல்கிற நேரத்தில், இரண்டு பெரிய தொடர் என்று எண்ணத் தோன்றும் மற்றவர்களுக்கு. ஆனால் தாங்கள் தீர்ப்பு வழங்கிய பிறகு எஞ்சியிருக்கிற நாட்கள் இரண்டே இரண்டு நாட்கள் தான். இந்த கவர்னர் உரை விவாதத் தொடரில் எஞ்சியிருப்பது இரண்டே இரண்டு நாட்கள் தான். நேற்றைய தினமும், இன்றையதினமும்தான். அதற்குப் பிறகு இடையிலே 7,8 நாட்களுக்கு விடுமுறை வந்து, அதன் பின்னர் தான் நேற்று நீங்கள் அறிவித்ததற்கொப்ப பிப்ரவரி 2-ஆம் தேதியன்று வரவு- செலவுத்திட்டம் இங்கே வைக்கப்பட்ட பிறகு தான் தொடர்ச்சியாக விவாதங்கள் நடைபெற இருக்கின்றன. இதுபோன்ற அமளிகள் மூலமாக நாட்டு மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணியை நாம் ஆற்றத் தவறிவிடுகிறோம் என்பதனை அ.தி.மு.கவினர் உணரவில்லை, காங்கிரஸ் கட்சியினர் உணர வில்லை என்பது வேதனைக்குரிய ஒன்றாகும்.

நேற்றையதினம் மாலையிலும் சரி, இன்று காலையிலும் சரி, உரையாற்றிய கட்சித் தலைவர்களுடைய கருத்துக்கள், அவர்கள் எடுத்து வைத்த வாதங்கள், இந்த அரசின் மீது சொல்லப்பட்ட குறைபாடுகள், அவைகள் எப்படி எல்லாம் திருத்தப்பட வேண்டு மென்று அவர்கள் வகுத்தளித்த ஆலோசனைகள், அவைகளைக் கேட்டு நான் மகிழ்ந்திருந்தேன். ஒரு அரசு,

‘இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்’

என்ற குறளை உணர்ந்த அரசாக இருக்கவேண்டுமென்று நான் மிகத் தெளிவாக உணர்ந்தவன். இருக்கின்ற குற்றங்களை எடுத்துச்சொல்லி, குறைகளைச் சுட்டிக்காட்டி, இவைகள்



திருத்தப்பட வேண்டும் என்று சொல்லுகின்ற எதிர்க்கட்சிகளைப் பெற்றிருந்தால் தான் ஆளும் கட்சி திறமையோடு செயல்பட முடியும். இல்லாவிட்டால் ஆளும் கட்சிக்கு ஒரு ஆணவம் ஏற்பட்டு விடும். நாம் எதைச் செய்தாலும் கேட்பதற்கு யார் இருக்கிறார்கள் என்கிற ஒரு துணிவு ஏற்பட்டு விடும். ஆனால் பிரதான எதிர்க்கட்சியும் அதற்கு அடுத்துள்ள கட்சியும் ஆற்ற வேண்டிய பணிகளை ஆற்றிடத் தவறியது மாத்திரம் அல்ல மற்றவர்களையும் இந்த அவையிலே அத்தகைய பணிகளை ஆற்ற விடாமல் தடுக்கிற வகையில் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் அமளி நிலையை ஏற்படுத்திக் கொண்டிருந்தார்கள். அதற்கு என்ன நம்பிக்கை அவர்களுக்கு ஏற்பட்டது என்றால், அதையும் நான் சொல்ல வேண்டும்.

என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர் அவர்கள் மறைந்து அதற்குப் பிறகு அவர்களுடைய கட்சிக்குள்ளே ஏற்பட்ட உட் பூசலின் காரணமாகப் பிளவு தோன்றி, யார் அன்றைக்கு முதலமைச்சராகப் பொறுப்பு ஏற்பது என்று அவர்களுடைய கட்சிக்குள்ளேயே கேள்வி வெடித்து, அதன் காரணமாக இந்த அவையிலே ஒரு பெரிய அமளி தோன்றி, அந்த அமளியை அடிப்படையாக வைத்து, அன்றையதினம் ஆட்சி கலைக்கப் பட்டது அல்லவா, அந்த நம்பிக்கைதான் அவர்களுக்கு. அதை ஒரு முன் உதாரணமாகக் கொண்டு சட்டசபைக்குள்ளே இப்படிப் பட்ட கலவரங்களைச் செய்தால் எப்படி திருமதி ஜானகி அம்மையாருடைய ஆட்சி, அதைக் காரணமாக வைத்துக் கலைக்கப் பட்டதோ, அதைப் போல இந்த ஆட்சியும் கலைக்கப்படும் என்று நம்பினார்கள். அதை எனது நண்பர் திருநாவுக்கரசு அவர்கள் அன்றைக்குப் பேசும்போது கூடக் குறிப்பிட்டார்கள்.

நாங்கள் பொறுப்பு ஏற்ற பிறகு 1989-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 25-ஆம் நாள் இந்த அவையில் நடைபெற்ற சம்பவங் களை விளக்கினார்கள். நான் மீண்டும் அவைகளை விளக்கிக் கொண்டிருக்க விரும்பவில்லை. நீங்கள் தயவுசெய்து அந்த நாளைச் சற்று எண்ணிப் பார்க்க வேண்டும். அதற்கு இரண்டு நாளைக்கு முன்பு நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியை ஒட்டி அன்றைக்கு அந்த அமளி இங்கே தோற்றுவிக்கப்பட்டது. அந்த நிகழ்ச்சி என்ன? ஒரு அரசாங்க அலுவலர் அவர்கள் சில பேரிடத்திலே

பணத்தை வாங்கி ஏமாற்றி விட்டார் என்று புகார் கொடுக்கப் பட்டு, அந்த அலுவலருடைய வீடு போலீசாரால் சோதனை இடப்பட்டபோது, அங்கு சிக்கிய பொருட்களிலே ஒன்று, அன்றைய எதிர்க்கட்சித் தலைவராக இருந்த திருமதி ஜெயலலிதா அவர்களுடைய பதவி விலகல் கடிதம். அது கிடைத்தது. அந்தக் கடிதத்தை போலீசார் கைப்பற்றினார்கள்.

அந்தக் கடிதம் ஒரிஜினல் மாத்திரம் அல்ல, அதிலிருந்து காப்பிகள் பல எடுக்கப்பட்டிருந்தன. எனவே அவர்கள் அதைக் கைப்பற்றி அந்தப் பிரதிகள் போலீசாருடைய கையிலே இருக்கும் போது அதன் ஒரிஜினல் யார் வாங்கினார்களோ எனக்குத் தெரியாது, அதற்குப் பின்னணி என்னவோ அதுவும் எனக்குத் தெரியாது. அது அவைத் தலைவராகிய தங்களுக்குத் தரப் பட்டது. அதை உடனடியாகப் பயன்படுத்திக் கொண்டு, தாங்களோ அல்லது ஆளும் கட்சியாக இருக்கிற நாங்களோ அதைப் பயன்படுத்திக்கொண்டு, 'எதிர்க்கட்சித் தலைவர் ராஜினாமா செய்து விட்டார். ஆகவே அவர் பதவி விலகத்தான் வேண்டும்' என்று யாரும் அன்றைக்கு அவசரப்படவில்லை.

எனக்கு நன்றாக நினைவிருக்கிறது, மறுநாள் தங்களைச் சந்திப்பதற்காக நண்பர் திருநாவுக்கரசு அவர்களும் கே.கே.எஸ். எஸ்.ஆர் அவர்களும் தங்களுடைய அறைக்கு வந்திருக்கிறார்கள் என்று நான் கேள்விப்பட்டேன். மேலே நான் முதலமைச்சரு டைய அறையிலே அப்போது இருந்தேன். நண்பர் வீராசாமி அவர்கள் இந்தத் தகவலை என்னிடத்திலே சொன்னார். நான் வீராசாமி அவ்ர்களிடத்தில் சொல்லி அவர்களிடத்திலே சொல்லச் சொன்னேன், இதிலே அவைத் தலைவரோ அல்லது இந்த ஆட்சியினரோ எத்தகைய அவசரமும் காட்டப்போவ தில்லை. தீர விசாரித்த பிறகு ராஜினாமா செய்யப்படுவதாக சொல்லப்படுகிற ஜெயலலிதா அவர்கள் ஒப்புக் கொண்டால் ஒழிய அந்தக் கடிதம் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்று சொல்லப்பட்டது.

தாங்களும் இதே கருத்தைத் தான் அவர்களுக்குச் சொல்லி அனுப்பி, தாங்கள் கடிதம் எழுதி, ஜெயலலிதா அவர்களுக்குக் கடிதம் எழுதி, அவர் 'நான் இப்போது ராஜினாமா செய்யவில்லை, அந்தக் கடிதம் தங்களுக்குத் தரப்பட்டிருந்தாலும்



கூட அதைத் தாங்கள் ஏற்க வேண்டாம்' என்று சொன்ன பிறகு அதை ஏற்கவில்லை. அந்தக் கடிதத்தைப் பயன்படுத்திக் கொண்டு அவர்களைப் பழி வாங்க வேண்டும் என்று அன்றைக்கு யாரும் கருதவில்லை. இப்படிப்பட்ட ஒரு கடிதத்தைப் பயன்படுத்திக் கொண்டு அவர்களைப் பதவியிலிருந்து விலக்கி இருக்கக் கூடிய ஒரு வாய்ப்பிருந்தும் அந்த வாய்ப்பைப் பயன்படுத்தாததற்காக ஒரு அமளி. ஏன் பயன்படுத்தவில்லை என்பதைப் போல் இந்த அவையிலே ஒரு அமளி நடத்தப்பட்டது.

இது போன்ற பிரச்சினைகளை அவையிலே எழுப்ப வேண்டும் என்றால் அதற்கு ஒரு நியதி இருக்கிறது. அந்த நியதியோ, முறையோ எதுவும் கடைப்பிடிக்கப்படவில்லை. வரவு செலவுத் திட்டம் படிக்கின்ற நாளில் குறுக்கிட்டு, கேள்விகளைக் கேட்பதோ, வேறு பிரச்சனைகளைச் சொல்வதோ இயலாது. கவர்னர் அவர்கள் இந்த அவைக்கு என்ன நிகழ்வுகள் நடைபெற வேண்டும் என்று நிகழ்ச்சி நிரலை அனுப்பி வைக்கிறார்களோ அதன்படி தான் இங்கே நிகழ்ச்சி நடைபெற வேண்டும். அப்படி நிகழ்ச்சி நடைபெறத் தொடங்கியிருந்தபொழுது அதற்கு மாறாக - முற்றிலும் விதிகளுக்கு முரணாக - அன்றைக்கு ஒரு பெரிய அமளியை ஏற்படுத்தினார்கள். அதற்கு, தெரிந்தோ தெரியா மலோ, வேறு வழி இல்லாமலோ அன்றைக்கு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் துணை போக நேரிட்டது.

அதற்குப் பிறகு காங்கிரஸ் கட்சி நண்பர்கள் -ஏன் நம்முடைய திருநாவுக்கரசு கூட அன்றைக்கு எதிர்க் கட்சியிலே துணைத் தலைவராக அமர்ந்து பல முறை வலியுறுத்தினார்கள். இங்கே நடைபெற்ற நிகழ்ச்சிகள் படம் எடுக்கப்பட்டிருக்கின்றன. டி.வி. எடுக்கப்பட்டிருக்கின்றன. அதைப் போட்டுக்காட்ட வேண்டும், போட்டுக் காட்ட வேண்டுமென்று தாங்களோ இந்த அவையின் மரபின்படி அது போன்ற கலவரச் சூழ்நிலைகளை டி. வி. எடுத்து இருந்தாலும் கூட அதைப் போட்டுக் காட்டுவது சரியல்ல என்று அந்தக் கருத்தை வலியுறுத்திக் கொண்டிருந்தீர்கள். ஆனால் அவர்கள் ஏதோ ஒரு பெரிய - நடந்த ஒரு கொடுமையை மறைப்பது போல எண்ணிக்கொண்டு அதைக் காட்டித்தான் தீர வேண்டும் என்று சொன்னார்கள். பிறகு நான் இதே அவையில் தங்களை மெத்த மரியாதையோடு கேட்டுக்கொண்டு அதற்குப்

ரீதியாகச் சில வார்த்தைகள் உண்டு. அக்கினிப்பிரவேசம் என்றால் இங்கு ஒரு பெரிய ஓமகுண்டம் வளர்த்து, அதிலே அக்கினியை வளர்த்து, அதிலே நான் குதிப்பது என்று காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் கருதிக் கொண்டிருக்கிறார்கள்.

இலக்கிய வாடை இல்லாத காரணத்தால் அந்தச் சொல்லுக்கு உண்மையான பொருள் என்ன என்பதைப் புரிந்து கொள்ளாமல் பேசுகின்றார்கள். அவைகளைப் பற்றி எல்லாம் நான் பிறகு சொல்கிறேன்.

முக்கியமாக இந்தக் கூட்டத் தொடரில் நம்மை வெகுவாகப் பாதித்துக் கொண்டிருக்கிற பிரச்சனை, நம்மை மாத்திரமல்ல; நம்முடைய மாநிலத்தை மாத்திரமல்ல; நம்முடைய நாட்டை மாத்திரமல்ல; உலகத்திலே பல பகுதிகளைப் பாதித்துக் கொண்டிருக்கிற பிரச்சினை, வளைகுடா போர். இந்த வளைகுடா போரின் காரணமாக ஏற்படக்கூடிய விளைவுகள், அவைகளை நாம் எப்படிச் சந்திக்க வேண்டும் என்பதைப் பற்றி நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. ரமணி அவர்கள் இங்கே பேசியிருக்கிறார்கள். மற்றும் கட்சித் தலைவர்கள், உறுப்பினர்கள் எல்லாம் இங்கே பேசியிருக்கிறார்கள். அதைப் பற்றிச் சில குறிப்புகளை உங்கள் முன்னால் வைக்க நான் விரும்புகிறேன். இந்த அரசு எத்தகைய நடவடிக்கைகளை - இந்தப் போரின் காரணமாக நம்முடைய நாடும், அதன் தொடர்பாக நம்முடைய மாநில மக்களும் பாதிக்கப்படும் போது - என்னென்ன நடவடிக்கைகளை எடுக்கலாம் என்கின்ற குறிப்புகளை - உங்கள் முன்னால் வைப்பது நலமாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

வளைகுடா போர் வருவதற்கு 3 அல்லது 4 மாதங்களுக்கு முன்பே பெட்ரோலியப் பொருள்களுக்குச் சில கட்டுப்பாடுகளை விதிக்கவேண்டுமென்ற முயற்சியிலே தமிழ்நாடு அரசு ஈடுபட்டது. அந்தப் பொருள்கள் பதுக்கப்படுவதைத் தடுக்கவும் கள்ளச் சந்தையிலே விற்க முயற்சிப்பதைத் தடுக்கவும் 1955-இல் நிறைவேற்றப்பட்ட Essential Commodities Act - Central Act 10/1955 அதன் கீழ் 'Motor Spirit and Highspeed diesel - Prevention of malpractices in supply and Distribution order'- என்ற விதிகள் 30.10.1990-இல் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டன. பேருந்துகளுக்கு டீசல்



விநியோகத்தில் 10 சதவீதம் குறைக்க, பேருந்துகளின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டிய நிலைமை முதலிலே ஏற்பட்டது. மத்திய அரசு பேருந்துகளுக்கு 10 சதவீதம் டீசல் உபயோகத்தைக் குறைக்க வேண்டுமென்று சொன்னதன் காரணமாக, பேருந்துகளின் எண்ணிக்கை பரவலாகக் குறைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இருந்தாலும் அதன் காரணமாக மக்களிடையே பிரச்சனைகள் எழுந்த காரணத்தாலும் நம்முடைய பல்வேறு கட்சித் தலைவர்கள், நண்பர்கள், ஆளும் கட்சி உறுப்பினர்கள் - இவர்கள் எல்லாம் எடுத்துச் சொன்ன குறைபாடுகளை மனதார அறிவதாலும், ஞாயிற்றுக்கிழமை மாத்திரம் பேருந்துகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது. அதற்கு முன்னால் நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அதிகாரிகளுடனும் பல்வேறு மக்கள் பிரதிநிதிகளுடனும் பேருந்துகளைப் பயன்படுத்துபவர்களுடைய பிரதிநிதிகளுடனும் கலந்து பேசி, ஞாயிற்றுக் கிழமை மாத்திரம் பேருந்துகளின் எண்ணிக்கையைக் குறைப்பது என்று முடிவு எடுக்கப்பட்டது.

இருந்தாலும் விவசாயத்திற்கான டீசல் பம்புசெட்டுகள், டிராக்டர்கள், மீன்பிடி தொழிலுக்குத் தேவையான விசைப் படகுகள் ஆகியவற்றிற்கு டீசல் குறையாமல் கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. வளைகுடா போர் ஆரம்பமானவுடன் பிரதமர் அவர்கள் 17-ஆம் தேதி டெல்லியிலே முதலமைச்சர்களுடைய கூட்டத்தைக் கூட்டினார்கள். 18-ஆம் தேதி இங்கே ஆளுநர் உரை இருந்த காரணத்தால் நான் செல்ல இயலவில்லை. டெல்லியிலே நீர்ப்பாசனத்துறை மாநாட்டிற்குச் சென்றிருந்த பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் அந்தக் கூட்டத்திலே கலந்து கொண்டார்கள்.

அதைத் தொடர்ந்து, டெல்லியிலே நடைபெற்ற கூட்டத்தில் தலைமைச் செயலாளரும் உணவுத் துறைச் செயலாளரும் மாநில அரசின் சார்பில் கலந்து கொண்டார்கள். அந்தக் கூட்டத்திலும் நிலைமைகள் விரிவாக டெல்லியிலே ஆராயப்பட்டிருக்கின்றன. அது குறித்த விவரத்தை மத்திய அரசு மாநில அரசுக்கு உடனடியாகத் தெரிவிப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இது வரையில் அதுகுறித்த விவரங்கள் எதுவும் மாநில அரசுக்கு அனுப்பி வைக்கப்பட வில்லை; விரைவிலே வந்து சேரும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

பிறகு தாங்கள் அதற்குச் சம்மதித்து டி.வி. நிலையத்தார்கள் எடுத்து இருக்கின்ற படத்தைப் போட்டுக் காட்டலாம் என்று அனுமதி கொடுத்தீர்கள்.

ஆனால் அதைப் போட்டுப் பார்க்க யாரும் முன்வரவில்லை. காரணம் அதைக் காட்ட முடியாது என்று சொன்ன வரையிலே தான் அவர்களுடைய கற்பனைகள் உயிரோடு வாழ்ந்தன. அதைக் காட்டலாம் என்கின்ற அனுமதியை நான் தங்களிடம் பெற்று, தாங்கள் அனுமதி அளித்த பிறகு, அந்தக் கற்பனைகள் அகால மரணம் அடைந்தன. அதுதான் நடந்த உண்மை. நான் அதைப்பற்றி மேலும் விளக்கங்களுக்குச் செல்ல விரும்பவில்லை. இப்படி இந்த ஆட்சி பொறுப்பு ஏற்றவுடன் இன்னும் 5 ஆண்டுக் காலம் பொறுத்திருக்க வேண்டும், மக்களுடைய தீர்ப்பைப் பெற்று ஆட்சிக்கு வர என்ற அங்கலாய்ப்பின் காரணமாக - ஆதங்கத்தின் காரணமாக உடனடியாக இந்த ஆட்சியைக் கவிழ்த்துவிட வேண்டும், ஜானகி அம்மையாருடைய ஆட்சியைக் கலைத்தது போல என்று எண்ணிச் செயல்பட்டார்கள்.

நேற்றைக்கு என்னுடைய நண்பர் லத்தீப் அவர்கள் பேசும் போது சொன்னார்கள். அடுத்த தலைமுறையைப் பற்றிச் சிந்தியுங்கள்; அடுத்த தேர்தலைப் பற்றிச் சிந்திக்காதீர்கள் என்று காங்கிரஸ்காரர்களுக்கும், அ.இ.அ.தி.மு.க.விற்கும் அறிவுரை வழங்கினார். அந்த அறிவுரையை அவர்கள் நிச்சயம் ஏற்றுக் கொள்வார்கள். அடுத்த தேர்தலைப் பற்றிச் சிந்திக்காதீர்கள் என்று அவர் சொன்னார். அவர்கள் சிந்திப்பதில்லை, அடுத்த தேர்தலைப் பற்றிச் சிந்திக்கவில்லை அவர்கள். உடனடியாகக் கலைக்க வேண்டும்; தாங்கள் வந்து இங்கே நியமிக்கப்பட்ட முதலமைச்சர்களாக ஆக வேண்டும் என்று எண்ணும்போது அடுத்த தேர்தலைப் பற்றி அவர்கள் ஏன் சிந்திக்கப் போகிறார்கள்? அடுத்த தேர்தலைப் பற்றிச் சிந்திப்பதாக இருந்தால் பாண்டியன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல இன்னும் 1994-ஆம் ஆண்டு வரையில் அல்லவா காத்திருக்க வேண்டும்? எனவே தான் நிச்சயமாக லத்தீப் அவர்களே நீங்கள் சொன்ன அந்த அறிவுரையை அவர்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் அடுத்த தேர்தலைப்



பற்றிச் சிந்திக்காதவர்கள். ஆனால் அடுத்த தலைமுறையைப் பற்றிச் சிந்திக்கிறார்களா என்றால், இல்லை. அடுத்த முதலமைச்சராகத் தாங்கள் வரவேண்டும் என்று சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஏதோ முதலமைச்சராக வருவது என்பது அந்த இடத்திலே இருந்து மாறி இந்த இடத்திலே உட்கார்ந்து விடுவது என்பதல்ல. ஜனநாயகத்திலே அதற்கெனச் சில கடமைகள் இருக்கின்றன. முறைகள் இருக்கின்றன. அதற்கெனப் பல வழி வகைகளும் இருக்கின்றன. மக்கள் பார்த்து, அளிக்க வேண்டிய தீர்ப்புக்குப் பிறகு தான் ஒரு ஆட்சிப் பொறுப்பை ஏற்க முடியும். ஆனால் இவைகளை எல்லாம் துச்சமென மதித்துவிட்டு - இந்த அரசைக் கலைப்பது பற்றியே அதற்கான இல்லாத காரணங்களை எல்லாம் அவர்கள் கற்பித்துக்கொண்டு செயல்படுகிறார்கள். அவைகளைப் பற்றியெல்லாம் என்னுடைய உரையின் இறுதியில் நான் மேலும் சில விளக்கங்களைத் தரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அன்றைக்கே காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் ஒரு குற்றத்தை என் மீது சுமத்தி அக்னிப்பிரவேசம் செய்ய கருணாநிதி - முதலமைச்சர் தயாரா என்று கேட்டார். அன்றைக்கே சொல்லியிருக்கிறேன். 25-ஆம் தேதி அன்றைக்கு அக்கினிப்பிரவேசம் செய்கிறேன் என நான் சொன்னேன். அதைப்போல காங்கிரஸ் கட்சியினுடைய வ தலைர் - இரண்டு தலைவர்களில் யார் அவர்கள் தலைவர் என்று எனக்குத் தெரியாது; தமிழ்நாட்டிலே உள்ள தலைவர்கள்; சட்ட சபையில் உள்ள தலைவரா அல்லது வெளியிலே உள்ள தலைவரா அவர்களுக்குத் தலைவர் என்று எனக்குத் தெரியாது - அவர் கூடச் சொல்லியிருக்கிறார், அப்படியானால் கருணாநிதி இன்றைக்கு அக்கினிப்பிரவேசம் வந்தால் தீ மிதித்தல் விழா நடத்தப் போகிறாரா? சட்டசபையில் தீயைப் போட்டு அதிலே நடக்கப் போகிறாரா அல்லது சபாநாயகருடைய மேடையிலே கற்பூரத்தை வைத்து அணைக்கப் போகிறாரா என்றெல்லாம் அவர் கேட்டிருக்கிறார்.

இதெல்லாம் பழைய கிராமத்து முறைகள். அக்கினிப் பிரவேசம் என்பது குமரி அனந்தன் இங்கேயிருந்தால் சொல்லி யிருப்பேன். அவர் இலக்கியச் செல்வர். ஏனென்றால் இலக்கிய

அதைத் தொடர்ந்து 22.1.1991 அன்று நம்முடைய மாநில அரசின் உள்துறையின் சார்பில் உயர்மட்டக் குழுக் கூட்டம் நடைபெற்றது. அதில் வளைகுடா போரை ஒட்டி ஏற்பட்டிருக்கிற சூழ்நிலைகள் பரிசீலிக்கப்பட்டிருக்கின்றன. இன்றியமையாத பொருள்களான பால், உணவுப்பொருள்கள், காய்கறிகள், பழங்கள், முட்டைகள், எல்.பி.ஜி; சமையல் எண்ணெய், சர்க்கரை, பருப்பு வகைகள் ஆகியவைகளை ஏற்றிச் செல்லக் கூடிய வாகனங்களுக்குத் தேவையான டீசல் தருவது என்றும், விவசாயத்திற்குப் பயன்படக்கூடிய பம்புசெட்டுகள், டிராக்டர்கள் ஆகியவைகளுக்குத் தேவையான டீசல் தருவது என்றும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் ஒப்புதலோடு அவையின் அலுவல்நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு முதல்வர் கலைஞர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத்திற்குத் தேவையான பம்பு செட்டுகள், டிராக்டர்கள் ஆகியவைகளுக்குத் தேவையான டீசல் தருவது என்றும், மீன் பிடிக்கும் விசைப் படகுகளுக்குத் தேவையான டீசல் தருவது என்றும், இந்த டீசல் அவைகளுக்குத் தட்டுப்பாடு இல்லாமல் முறைப்படி கிடைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தொழிலுக்கு Industrial use இவைகளுக்கு மற்றும் பேருந்துகள், பயணிகளுக்குத் தேவையான பேருந்துகளுக்கும் சரி, பயணிகளுக் கான சிறு மோட்டார் வாகனங்களுக்குத் தேவையான டீசல் உபயோகத்தில் சிக்கனத்தைக் கடைப் பிடிக்க முடிவு செய்யப் பட்டுள்ளது. அதற்கு உச்ச வரம்பு வைக்காமல் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கவேண்டும் அந்த வாகனங்களுக்கு என்று ஒரு முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் மொத்த லாரி களுடைய எண்ணிக்கை 87 ஆயிரம். இதில் அத்தியாவசியப் பொருட்களை ஏற்றிச் செல்லக்கூடிய லாரிகள் சுமார் 20 ஆயிரம். இந்த 20 ஆயிரம் லாரிகளுக்கு, தட்டுப்பாடு இல்லாமல் டீசல் கிடைக்க வழிவகை செய்யப்படும். விவசாயத்திற்குப் பயன்படக்கூடிய டிராக்டர்கள் சுமார் 36 ஆயிரம். பொருட் களை ஏற்றிச் செல்லும் வேன்கள் போன்றவை சுமார் 8 ஆயிரம். பயணம் செய்யப் பயன்படும் பேருந்துகள் சுமார் 20 ஆயிரம் தமிழ்நாட்டில் இருக்கின்றன. இவைகளுக்கும் ஒரு சீரான



வினியோக முறையை ஏற்படுத்த அரசு உத்தேசித்துள்ளது. டூரிஸ்டு கார்கள் 14 ஆயிரம் இருக்கின்றன. பயணம் செய்யப் பயன்படும் வேன்கள் 7 ஆயிரம் இருக்கின்றன. இவைகளுக்கு டீசல் உபயோகத்திற்கு உச்ச வரம்பு கொண்டு வரப்படும்.

நான் முதலில் சொன்ன லாரிகள், டிராக்டர்கள், பேருந்துகள் இவைகளுக்கெல்லாம் டீசல் சீரான வினியோகம். இன்றைக்கு டூரிஸ்டு கார்களுக்கும், பயணம் செய்யப்படும் வேன்களுக்கும் உச்ச வரம்பு, டீசலைப் பயன்படுத்த உச்ச வரம்பு. தனியார் பயன்படுத்தும் கார்கள், ஆட்டோ ரிக்ஷா போன்ற வாகனங் களுக்கு, போர் தொடருமானால் என எதிர்பார்க்கப்பட்டு வரை யறுக்கப்பட்ட அளவுக்கு மட்டுமே டீசல், பெட்ரோல் பயன் படுத்த வழிவகைகள் செய்யப்படும். அதேநேரத்தில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கச் சில யோசனைகளும் அந்தக் கூட்டத்தில் செய்யப் பட்டு முடிவு எடுக்கப்பட்டுள்ளன.

1. அரசு விடுமுறை நாட்களில் அரசாங்க வாகனங்கள் உபயோகப்படுவதைத் தடை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. தனியார் மற்றும் பொது நிறுவனங்கள் வாரத்தில் 2 நாட்கள் சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் முடிந்த வரை வாகனங் களைப் பயன்படுத்துவதை நிறுத்துமாறு கேட்டுக்கொள்ளப் படுவார்கள்.

3. தனியார் மற்றும் பொது நிறுவனங்கள் உபயோகிக்கும் வாகனங்களுக்கு மாதத்திற்கு ஒரு அளவு வரையறுக்கப்பட்டு பெட்ரோல் மற்றும் டீசல் வழங்கப்படும்.

4. புதிய வாகனங்களைப் பதிவு செய்கின்ற செயலைச் சிறிது காலத்திற்கு ஒத்திவைக்கலாமென்ற யோசனையும் அரசுக்கு இருக்கிறது.

5. குறிப்பிட்ட பகுதியிலிருந்து அரசு அலுவலகங்களுக்குச் செல்ல என்று தனித்தனியாகக் கார்கள் பயன்படுத்துகின்ற வர்களுக்கு பொதுப் பேருந்துகளைக் குறிப்பிட்ட நேரத்தில் அரசு அலுவலகங்களுக்குச் செல்ல வசதியாக ஏற்பாடு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக இப்போது அசோக் நகர் என்று எடுத்துக் கொண்டால் அங்குள்ள அலுவலர்கள் எல்லாம் அந்தப் பகுதியிலிருந்து

மத்தியிலேயிருந்து ஒதுக்கப்படவேயில்லை என்பதையும் நான் சுட்டிக்காட்ட வேண்டியவனாக இருக்கிறேன். விரைவில் பாமாயில் இறக்குமதி செய்யப்பட்டு ஓரளவிற்குக் கிடைக்கும் என்ற உறுதியை அண்மையில் டெல்லியிலே நம்முடைய உணவு அமைச்சரும், உணவுத் துறைச் செயலாளரும் கலந்துகொண்டு அந்தப் பேச்சு வார்த்தையின்பொழுது, மத்திய அரசிலேயுள்ள அமைச்சர்கள் ஒரு உறுதியாகத் தந்திருக்கிறார்கள். அந்த வகையிலே நமக்கு விரைவிலே பாமாயில், அவர்கள் இறக்குமதி செய்வதையொட்டிக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பருப்பு வகைகளினுடைய விலைகளும் உயர்ந்திருக்கின்றன. அதற்குக் காரணம் குறைந்த விளைச்சல். அதிகப் போக்குவரத்துச் செலவு ஆகியவைகள்தான். இந்த விலை உயர்வுக்கும் காரணம், குறைவுக்கும் காரணம். பிப்ரவரி மாதத்தில் சிலவகைப் பருப்புகள் அறுவடை முடிந்து சந்தைக்கு வரலாம் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இதற்கிடையில் விலையேற்றத்தை ஓரளவிற்குக் கட்டுப் படுத்துவதற்கு தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு ஒன்றியத்தின் மூலம் பிற மாநிலங்களிலிருந்து துவரம் பருப்பு வாங்கி மாவட்டக் கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கங்களின் மூலம் வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசு எடுக்க முற்பட்டிருக்கிறது.

அதைப்போலவே காய்கறிகளினுடைய விலைகளும் - இங்கே நம்முடைய பாண்டியன் அவர்கள் எடுத்துக்காட்டியதைப் போல, சில்லறைக் கடைகளில் மிகவும் உயர்ந்துள்ளது. பெருநகர்ப் பகுதிகளில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகக் காய்கறிகள் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. முதல்கட்டமாக, சென்னை மாநகரத்தில் சுமார் 50 இடங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் இவை தொடங்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வளவுக்குப் பிறகும் போரை, அதன் விளைவுகளைப் பயன்படுத்தி இன்றியமையாப் பொருள்கள் பதுக்கப்பட்டாலோ, கடத்தப்பட்டாலோ, கலப்படம் செய்யப்பட்டாலோ, கொள்ளை லாபத்திற்கு விற்கலாம் என்கின்ற எண்ணத்தோடு சமூக விரோதச் செயல்களிலே யார் ஈடுபட்டாலும் அவர்கள்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்



கொள்கின்றேன். நம்முடைய ரமணி அவர்கள்கூட இங்கே சொன்னார்கள், மிரட்டிக் கொண்டே இருந்தால் அதுவே ஒரு வாடிக்கையான விஷயமாக ஆகிவிடும், பிறகு யாரும் பயப்பட மாட்டார்கள் என்று.

இன்றைக்குக்கூட மத்தியிலே உள்ள உணவு அமைச்சரவர்கள் நேற்றையதினம் எனக்குத் தந்துள்ள டெலக்ஸில்,

"GOVERNMENT HAVE RECEIVED REPORTS THAT SOME UNSCRUPULOUS TRADERS ARE TAKING ADVANTAGE OF THE GULF WAR AND INCREASING PRICES OF ESSENTIAL COMMODITIES WITHOUT ANY JUSTIFICATION. ARTIFICIAL SHORTAGES ARE BEING CREATED BY THE TRADERS IN SPITE OF ADEQUATE STOCKS OF COMMODITIES RESULTING IN ABNORMAL RISE IN PRICES. IN THE CIRCUMSTANCES, IT IS NECESSARY TO INTENSIFY DEHOARDING OPERATIONS. PLEASE ACTIVATE YOUR ENFORCEMENT MACHINERY AND MONITOR PRICE SITUATION ON DAY-TO-DAY BASIS. SELECTIVE ARRESTS, DETENTIONS OF NOTORIOUS BLACK-MARKERTEERS. HOARDERS WILL HAVE A SALUTARY EFFECT ON THE PRICE SITUATION. SHALL BE GREATFUL IF KEPT INFORMED OF THE ACTION TAKEN IN YOUR STATE IN THE REGARD."

என்று, நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்பதைப் பற்றியும், எடுத்த நடவடிக்கைகளைப் பற்றிய விவரத்தையும் மத்திய உணவு அமைச்சரவர்கள் கேட்டிருக்கிறார்கள். ஆகவே, மத்திக்கும் மாநிலத்திற்கும் தொடர்பு இருந்து கொண்டிருக்கிறது என்பதை இந்தக் கலைப்பு வேலையிலே ஈடுபட்டிருப்பவர்கள் உணர வேண்டும் என்பதற்காக இதைச் சொல்கிறேன்.

இவைகளை அன்னியில் போலீசாரை வைத்து, காவல் துறையினரை வைத்து, இத்தகைய சமூக விரோதிகளைக் கண்டு பிடிப்பது என்பதைவிட, அப்படிக் கண்டுபிடிக்கின்ற நேரத்திலே கூட, சில தவறுகள் ஏற்படுவதை உறுப்பினர்கள் அறிவார்கள். கண்டு பிடிக்கச் செல்கின்றவர்கள், நடவடிக்கை எடுக்கச் செல்கின்றவர்கள், சில நேரங்களில் வேண்டுமென்றே சிலரைக் கொடுமைக்கு ஆளாக்குகின்றார்கள் என்ற புகார்களும் வியாபாரி களிடமிருந்து வரும். அதற்காக வணிகர்களுடைய கூட்டத்திலே அவர்களுடைய யோசனைப்படி ஒரு முடிவை அரசு எடுத் திருக்கிறது.

பெருமபாலும் வருகிறார்கள். அவர்கள் தனித்தனியாகக் காரிலே அலுவலகத்திற்கு வராமல் பேருந்துகளின் மூலமாக - அனைவரும் ஒரு இடத்திலே வந்து பேருந்துகளின் மூலமாக அலுவலகத்திற்கு வரக்கூடிய அந்த வசதியைச் செய்யலாம் என்று அரசு முடிவு செய்திருக்கிறது.

இதைப்போலவே இந்த பெட்ரோல், டீசல் இவைகளை எப்படிச் சிக்கனமாகப் பயன்படுத்துவது என்பதற்கு நாம் நிர்ணயித்துள்ள இந்த முடிவுகளைப் போலவே - இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் குறிப்பிட்டதைப் போல இந்த வளைகுடா போருக்குப் பிறகு ஏற்பட்டுள்ள விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்த வேண்டிய நடவடிக்கைகளையும் அரசு எடுக்க முன்வந்துள்ளது. அதற்கு மத்திய அரசே பெரும் பொறுப்பு ஏற்று நடவடிக்கைகள் எடுக்க முன்வரவேண்டும் என்றாலும் கூட மாநில அரசு தன்னுடைய அதிகாரத்திற்கு உட்பட்டு, தன்னால் இயன்ற அளவுக்கு நடவடிக்கைகளை எடுக்க இப்போது முன் வந்திருக்கிறது.

நம்முடைய உணவுத்துறை அமைச்சர் அவர்கள் மாநிலத்திலுள்ள பல்வேறு வணிக சங்கங்களோடு கலந்து பேசி அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை என்னிடமும், மற்றும் அதிகாரிகளிடமும் நேற்றைய தினம் கலந்து பேசியதின் காரணமாக மக்கள் அன்றாட வாழ்வுக்குத் தேவையான - இன்றியமையாத உணவுப் பொருட்களின் விலையைக் கட்டுப்பாட்டின் கீழ் வைப்பதற்குச் சில நடவடிக்கைகளை அரசு மேற்கொள்கிறது. அரிசியைப் பொறுத்தவரையில் பொது வினியோகத்திலே வழங்குவதற்கான அரிசி நம் கையிருப்பில் உள்ளது;

வெளிமாநிலங்களிலேயிருந்து வணிகர்கள் அரிசி கொண்டு வரவும் தடை இல்லை. மேலும், பொதுவாக இந்த ஆண்டு சாதபடி வழக்கமாக இருப்பதுபோலவே இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே அரிசி விலை உயராமல் கட்டுப்பாட்டில் இருக்கும் என்று எதிர்பார்க்கிறோம். கோதுமையைப் பொறுத்தவரையில் மத்திய அரசு தமிழ்நாட்டிலுள்ள மாவு மில்களுக்கு மாதம் 60 ஆயிரம் டன் கோதுமையை நவம்பர், டிசம்பர் மாதம் வரையிலே அளித்து வந்தது. ஆனால் இப்போது அதை 50 ஆயிரம் டன்னாகக் குறைத்தது மாத்திரம் அல்லாமல்,



நடைமுறையையும் மாற்றி மில்களுக்குத் தரப்பட்ட அந்த கோதுமையைக் குறைத்து, தனிப்பட்ட வியாபாரிகளுக்கும் மத்திய அரசின் சார்பில், ஃபுட் கார்ப்பரேஷன் சார்பில் கொடுக்கின்ற காரணத்தால் மைதாவினுடைய விலை இப்போது உயர்ந்துள்ளது. அதைச் சுட்டிக்காட்டி, தேவையான கோதுமையை நமக்கு வழங்க மத்திய அரசுக்கு இந்த அரசு முறையீடு செய்திருக்கிறது. எனவே, அந்த முறையீடு ஏற்றுக்கொள்ளப்பட்டு.. மாவு மில்களுக்குத் தேவையான கோதுமையை அளிப்பதில் உள்ள இடர்பாடுகள் நீங்கும் என்று நம்முடைய அரசு எதிர்பார்க்கிறது.

மண்ணெண்ணெய் - பொது வினியோக முறை மூலம் முறையாக இப்போது மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது. இதில் இப்போது பிரச்சினைகள் எதுவும் இல்லை. மத்திய அரசு வழங்குகின்ற ஒதுக்கீட்டைப் பொறுத்து நாம் அதனை வழங்கிக் கொண்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். மாநிலத்திற்குத் தேவையான மண்ணெண்ணெய் தொடர்ந்து கிடைப்பதற்கு மத்திய அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

பாமாயில். இப்போது அதனுடைய விலை உயர்வுக்கும் அது கிடைக்காத நிலைக்கும் நாமெல்லாம் மிகுந்த சங்கடத்திற்கு ஆளாகி இருக்கின்றோம். அதற்கு வியாபாரிகள் சொல்கின்ற காரணம், குஜராத் மாநிலத்தில் எண்ணெய் வித்துக்களின் குறைந்த விளைச்சல் மற்றும் மத்திய அரசு வெளிநாடுகளிலேயிருந்து சமையல் எண்ணெய் இறக்குமதி செய்வதைக் குறைத்து விட்டது இரண்டாவது காரணம். மூன்றாவதாக, போக்குவரத்துச் செலவு அதிகரித்துள்ளது. அங்கே விளைச்சல் குறைவாக இருப்பதும், தேவையான சமையல் எண்ணெய்யை இறக்குமதி செய்வதை மத்திய அரசு வெகுவாகக் குறைத்திருப்பதும், போக்குவரத்துச் செலவு அதிகமானதும் சமையல் எண்ணெய்க்கு ஏற்பட்டுள்ள கிராக்கிக்கும், கிடைத்தாலும் அது அதிக விலைக்கு விற்கிற நிலைக்குக் காரணங்களாக அமைந்து விடலாம்.

நவம்பர், டிசம்பர் மாதங்களில் மத்திய அரசிடமிருந்து பாமாயில் மாநிலத்திற்குத் தரப்படவே இல்லையென்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஜனவரி மாதத்திற்கான பாமாயிலும் இதுவரையில் மாநில அரசுக்கு,

அன்னியில், தற்போது வெள்ள நிவாரணப் பணிகளுக்கு மேலும் பின்வரும் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டன் என்பதைத் மகிழ்ச்சி யோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அம்பத்தூரில் சாலைகள் செப்பனிட ரூ. 30 இலட்சம்; இராதாபுரம் வட்டத்தில் ஏரிகள், சாலைகள் செப்பனிடும் பணிக்கு ரூ.46 இலட்சம்;

சென்னை மாநகராட்சிச் சாலைகளைச் செப்பனிடுவதற்காக கூடுதல் தொகையாக ரூ.5 கோடி. தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளிலுள்ள சிறுபாசன ஏரிகளைச் செப்பனிட ரூ.1.25 கோடி; தமிழ்நாட்டின் இதரப் பகுதிகளிலுள்ள சாலைகளைச் செப்பனிட ரூ.3 கோடி; நீலகிரி மாவட்டம் மின்சார வாரியத் திற்கு கூடுதலாக தொகை ரூ.45 இலட்சம்; எனவே, மேலும் ரூ.10,46 கோடி செலவிடப்படுகிறது.

கடந்த ஆண்டு மழை குறைபாட்டினால் ஏற்பட்ட வறட்சி நிவாரணப் பணிகளுக்காக ரூ.22.72 கோடி செலவிட்ட தொகையையும், நடப்பு ஆண்டில் ஏற்பட்டுள்ள வெள்ள நிவாரணப் பணிகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ள ரூ.13.26 கோடியையும் சேர்த்து மொத்தமாக ரூ.35.98 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது. எனவே, தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகையான ரூ.39 கோடியில், ரூ.3 கோடி மாத்திரம்தான் மிச்சம் இருக்கிறது இப்போது. இதனைப் பயன்படுத்தியும், மேலும் ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்து மொத்தமாக ரூ. 8 கோடி செலவில், சேலம், தர்மபுரி, வடார்க்காடு - அம்பேத்கர், திருவண்ணாமலை- சம்புவராயர் போன்ற மாவட்டங்களில் வட கிழக்குப் பருவ மழை பொய்த்ததால் ஏற்பட்ட பாதிப்பை யொட்டி, வறட்சி நிவாரணப் பணிகள் நிறைவேற்றப்படும் என்பதையும் இந்த நேரத்திலே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

கூடுதலாக 1,500 ஆழ்துளைக் கிணறுகள் போடப்படும், ஏற்கெனவே திட்டத்தில் - வளர்ச்சித் திட்டத்தில் 10 ஆயிரம் ஆழ்துளைக் கிணறுகளும் அவை போதாமல் மேலும் ஐயாயிரம் சொச்சம் ஆழ்துளைக் கிணறுகளும் கவர்னர் உரையில் படிக்கப் பட்டிருக்கின்றன. அஃதன்னியில், கூடுதலாக இந்த வறட்சிப்



பணிகளுக்காக 1,500 ஆழ்துளைக் கிணறுகள் போடப்படும். மேலும் கிணறுகளை ஆழப்படுத்தவும், ஏற்கெனவே போடப்பட்ட ஆழ்துளைக் கிணறுகளைச் செப்பனிடுவதற்கும், அத்தியாவசியம் எனத் தேவைப்பட்டால், லாரி மூலம் குடிநீர் வழங்குவதற்கும், குடிநீர்க் குழாய்களை நீட்டித்தல் போன்ற இதர பல்வேறு நிவாரணப் பணிகளுக்கும் இத்தொகை பயன்படுத்தப்படும். சாதாரணமாக, வறட்சி நிவாரணப் பணிகள் மார்ச் மாதத்தில்தான் துவக்கப்படும். ஆனால் வறட்சி முந்திக் கொண்டு, முன்னரே துவங்கிவிட்ட காரணத்தால், இப்போதே அந்தப் பணிகள் துவங்கப்படுகின்றன என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இஃதன்னியில், இந்த அரசின் சமூக நலத் திட்டங்கள் - அதை விரிவாகப் பேச விரும்பவில்லை என்றாலும், ஒன்றிரண்டை மட்டும் உதாரணத்திற்காகச் சொல்ல விரும்புகிறேன். 1989-ஆம் ஆண்டு மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்கீழ், இதுவரை ரூ.17.30 கோடி செலவில், 34,595 பெண்களுக்கு தலா ஐயாயிரம் ரூபாய் வீதம் திருமண உதவித் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. நடப்பு ஆண்டில், அதற்கு நிதிநிலையில ரூ.8 கோடி ஒதுக்கப்பட்டு இருந்தது. ஆனால் உறுப்பினர்கள் இங்கே பேசியபோது, இது போதாமல் சில மாவட்டங்களில் சிரமம் இருக்கிறது என்பதை எடுத்துச் சொன்னார்கள். பற்றாக்குறை இருப்பதாகச் சொன்னார்கள். எனவே, இந்த உதவித் திட்டத்தின்கீழ் அதிகமான கோரிக்கைகள் வந்ததன் காரணமாக, இத்திட்டத்திற்கான ஒதுக்கீட்டை ரூ.8கோடி என்பதை ரூ.10.5 கோடியாக உயர்த்தியுள்ளோம். அப்படி உயர்த்தியும்கூட தற்போது மேலும் கோரிக்கைகள் வந்துள்ள தால், மேலும் கூடுதலாக ரூ.1.5 கோடி ஒதுக்கப்படுகிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே, மொத்தமாக நடப்பாண்டில் ரூ.12 கோடி இத் திட்டத்திற்கு ஒதுக்கப்படுகிறது. அதேபோல, முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டத்தின்கீழ், ரூ.200 வீதம் இந்த இரண்டாண்டில் 3,71,805 பேருக்கு - கருவுற்ற ஏழைப் பெண்களுக்கு ரூ.7.44 கோடி அளவுக்கு உதவி அளிக்கப் பட்டுள்ளது.

நடப்பாண்டில் இந்தத் திட்டத்திற்காக 4 கோடி ரூபாய் நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டுள்ளது. அதுவும் போதாது என்று தெரிகிற காரணத்தால் மேலும் 50 இலட்சம் ரூபாய் இதற்காக ஒதுக்கவேண்டும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடும்பத் தலைவரை இழந்து வாடும் வறிய குடும்பங்களுக்கு 3,000 ரூபாய் வழங்கும் திட்டம் கடந்த ஆண்டு அறிவிக்கப் பட்டது. அதற்காக 3 கோடி ரூபாய் நிதி நிலை அறிக்கையிலே ஒதுக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் நவம்பர் 90 வரை 22,467 குடும்பங்களுக்கு உதவி அளிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்திற்காக மேலும் கோரிக்கைகள் வந்த வண்ணம் இருப்பதால் இந்த ஆண்டு கூடுதலாக 2 கோடி ரூபாய் ஒதுக்கப்படும். நடப்பாண்டில் 5 கோடி ரூபாயிலே இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்று மாலையில் இங்கு உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் இன்சூரன்ஸ் திட்டம் பற்றிச் சொன்னார்கள். அதை ஏன் நிறுத்திவிட்டீர்கள் என்று கொஞ்சம் கோபமாகக்கூட நேற்றைக்குக் கேட்டார்கள். நண்பர் திரு. எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்தபோது கொண்டு வரப்பட்ட திட்டம் நிறுத்தப்பட்டுவிட்டதே என்று சொன்னார்கள். அந்தத் திட்டம் நல்ல நோக்கத்தோடு தான் ஆரம்பிக்கப்பட்டது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. ஆனால் அது ஒழுங்காகச் செயல்படவில்லை. அதை எம்.ஜி.ஆர். ஆரம்பித்தார் என்பதற் காக நான் சொல்வதாகக் கருதிக் கொள்ளக்கூடாது.

அதைப்போலவே கழக ஆட்சி இருந்தபோது ஒரு திட்டம், உங்களுக்கு ஞாபகம் இருக்கும், தென்னை மரப் படம் எல்லாம் போட்டு, கீழே தண்ணீர் ஊற்றினால் மேலே தேங்காய் விழும்; அதைப்போல் நீங்கள் 10 ரூபாய் கட்டினால் உங்களுக்கு இவ்வளவு ரூபாய் கிடைக்கும் என்றெல்லாம் திட்டம் போட்டோம். அதிலே யாரும் சரியாகச் சேரவும் இல்லை; சேர்ந்தவர்கள் ஒழுங்காக, மாதாமாதமோ அல்லது 6 மாதத்திற்கு ஒரு தடவையோ பணம் கட்டவும் இல்லை. அது தோல்வியடைந்துவிட்டது. அப்போது திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள்தான் அந்தத்



திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்கள் கலைவாணர் அரங்கத்தில். அந்தத் திட்டம் தோல்வியடைந்துவிட்டது. அந்தத் திட்டத் தினுடைய தோல்வியை முன்பிருந்த கழக அரசு ஒத்துக்கொள்ளத் தான் வேண்டி இருந்தது.

அதைப்போலத்தான் இந்தத் திட்டம் 1984-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் நபர் ஒருவர் மாதம் ஒன்றுக்கு 10 ரூபாய் கட்ட வேண்டும். அப்படிக் கட்டுகிற தொகை ஒரு வருஷத்திற்கு 120 ரூபாய் ஆனால் அந்த 120 ரூபாயில் 45 ரூபாய் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்குப் போய்ச் சேர்ந்து விடும். மீதம் உள்ள 75 ரூபாய் தனியாக வைப்பு நிதியில் வைக்கப்படும். அப்படி வைக்கப்பட்ட தொகைதான் உறுப்பினர்களுக்குத் திருப்பியளிக்கப்படும். இடையில் அவர்கள் இறந்துவிட்டால் ஒரு 5,000 ரூபாய் அளவுக்கு அந்தப் பணம் அவர்களுக்குக் கிடைக்கும். இதிலே பல சிக்கல்கள் ஏற்பட்டது மாத்திரமல்ல; 31.3.89 வரையில் 14 இலட்சம் பேர் சேர்ந்து இருந்தார்கள். 14 இலட்சம் பேர் சேர்ந்திருந்தார்களே தவிர அதிலே முறையாக மாதந்தோறும் சந்தா செலுத்தியவர்கள் சுமார் 4 இலட்சம் பேர்தான். 10 இலட்சம் பேர், பணம் செலுத்த வில்லை. 4 இலட்சம் பேர்தான் செலுத்தினார்கள். இந்தத் திட்டத்திலே சேர்ந்தவர்கள் இதிலே ஆர்வம் காட்டாத ஒரு சூழ்நிலையில் இத்திட்டத்தைத் தொடர வேண்டாம் என்று ந்த அரசு கருதி இதற்கு மாற்றாக ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தது. அந்தத் திட்டத்தை நீங்கள் எல்லாம் மிக நன்றாக அறிவீர்கள். அந்தத் திட்டத்தின்படி இந்த 10 ரூபாய் பணம் கட்டாமலே, விபத்திலே ஒருவர் இறந்துவிட்டால் ஒரு தொழிலாளி இறந்துவிட்டால் - இதுவும் தொழிலாளர்களுக்காகக் கொண்டு வரப்பட்ட திட்டம்தான். எம்.ஜி.ஆர். அவர்களால் கொண்டு வரப்பட்டது. அது பலன் அளிக்காத காரணத்தால் அதை மாற்றி அதே தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு நிதி வழங்க, விபத்தில் அவர்கள் மாண்டுவிடுவார்களேயானால் அவர்களுடைய குடும் பத்திற்கு நிதி வழங்க, ஒரு 10,000 ரூபாய்த் திட்டத்தைத் இந்த அரசு கொண்டு வந்தது. அவர்கள் எந்த 10 ரூபாயும் கட்ட வேண்டிய அவசியம் இல்லை.

600 008.

இன்றியமையாத பொருள்கள் வாணிபத்திலே ஈடுபட்டுள்ள பல்வேறு மாநில சங்கங்களின் பிரதிநிதிகள் தங்கள் சம்பந்தப் பட்ட அதிகாரிகள் கொண்ட குழுவை அரசு ஏற்படுத்த முடிவெடுத்துள்ளது. இந்தக் குழு, நான் குறிப்பிட்ட இந்த முடிவு குறித்து அரசுக்குத் தக்க ஆலோசனைகளை வழங்கும்; எடுக்கப் படுகிற நடவடிக்கைகளில் எத்தகைய சாதக, பாதகங்கள் இருக்கின்றன என்பதையும் இந்தக் குழு அரசுக்குத் தெரிவிக்கும். அந்தக் குழுவிலே யார் யார் உறுப்பினர்கள் என்பது இன்னும் இரண்டொரு நாட்களில் மாநில அரசின் சார்பாக வெளியிடப் படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுநர் உரையிலே பேசிய பல உறுப்பினர்கள் தங்களுடைய பகுதிகளிலே உள்ள வறட்சிக் கொடுமைகளைப் பற்றியெல்லாம் எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். இந்த உரையிலே வெறும் அரசியல் கருத்துக்களாக மாத்திரம் கூறிவிட்டுப் போய் விடுவதால், நாட்டு மக்களுடைய பிரச்சினைகளைப் பற்றி இந்த அவையிலே உள்ள உறுப்பினர்களும், அரசும் எப்படி விவாதித்து முடிவுகளை மேற்கொண்டிருக்கின்றன என்ற அந்தத் தேவை மக்களுக்குப் போய்ச் சேராமலே போய்விடும். எனவே தான் நான் இவைகளையெல்லாம் குறிப்பிட விரும்புகின்றேன்.

நடப்பு ஆண்டிலேயிருந்து ஒன்பதாவது நிதிக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் இயற்கைச் சீற்றங்கள் ஏற்படுமேயானால் நம்முடைய மாநிலத்திற்கு ஆண்டுக்கு 39 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது உறுப்பினர்களுக்கெல்லாம் தெரியும். ஏற்கெனவே இந்த அவையிலே நான் அதைப்பற்றி அறிவித்திருக்கின்றேன். 39 கோடி ரூபாய் இயற்கைச் சீற்றங்களுக்காக ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அதை அவ்வப்பொழுது, இந்தச் சீற்றங்கள் ஏற்படுகின்ற நேரத்தில், நாம் பயன்படுத்திக்கொண்டு வந்திருக்கின்றோம். அதிலே மத்திய அரசினுடைய பங்கு 75 சதவீதம் அந்த 39 கோடியில்; அதாவது 29.25 கோடி; மாநில அரசின் பங்கு 9.75 கோடி. தமிழ்நாட்டுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இந்த 39 கோடி ரூபாய் போதுமானதாக இல்லை என்று நாம் மத்திய அரசினிடத்தில் முறையிட்டுக் கொண்டு வந்திருக்கிறோம். ஆனாலும், 'இது ஒன்பதாவது நிதிக் குழுவினுடைய பரிந்துரைகள், எனவே இதை மாற்றுவதற்கு இல்லை' என்று பதில் வந்திருக்கிறது.



ஒன்பதாவது நிதிக் குழுவைப் பற்றி நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். குறிப்பாக, தென்னக மாநிலங்கள் வெகுவாக ஒன்பதாவது நிதிக் குழுவினால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஒன்பதாவது நிதிக் குழுவினுடைய சிபாரிசில் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் உ.பி.க்கு ஒதுக்கப்பட்டது. இது இராஜிவ் காந்தி காலத்திலே, அந்த அரசு இருந்தபொழுது ஒன்பதாவது நிதிக் குழு தன்னுடைய அறிக்கையைச் சமர்ப்பித்தது. அப்பொழுது கர்நாடகத்திற்குத் தரப்பட்டது 40 கோடி ரூபாய். அப்பொழுது பொம்மை முதலமைச்சராக இருந்தார். உத்தரப் பிரதேசத்திற்குக் கிட்டத்தட்ட 1,900 கோடி என்று - என்னுடைய நினைவு சரியாக இருக்குமானால் ஆயிரம் கோடியைத் தாண்டி ஒன்பதாவது நிதிக் குழுவிலே அங்கே ஒதுக்கப்பட்டது. தமிழ்நாட்டிற்கு 40 கோடி. கர்நாடகத்திலே பொம்மை முதலமைச்சராக இருந்தார், அங்கே எதுவுமே ஒதுக்கப்படவில்லை.

இப்படி ஒரு நிலை ஒன்பதாவது நிதிக் குழுவின் விளைவாக ஏற்பட்டதை மறந்திருக்க முடியாது. நமக்கு இந்த இயற்கைச் சீற்றங்களால் ஒதுக்கப்பட்ட ரூ.39 கோடி போதாது என்று நாம் வாதிட்டும்கூட, அவர்கள் ஒன்பதாவது நிதிக் குழுவின் சிபாரிசுகளைச் சுட்டிக்காட்டி, இதற்குமேல் இல்லையென்று கூறியிருக்கிறார்கள். இருந்தபோதிலும், நாம் இந்த 39 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் பின்வரும் பணத்தைப் பல்வேறு துயர்துடைப்புப் பணிகளுக்காகச் செலவிட்டிருக்கிறோம்.

1989-90-இல் சில மாவட்டங்களில் வடகிழக்குப் பருவ மழை குறைவாகப் பெய்ததால், நடப்பு ஆண்டில் குடிநீர் வழங்கும் பணிகளை எடுத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. 3 ஆயிரம் ஆழ்துளைக் கிணறுகள் போடுவதற்கும், சென்னையில் குடிநீர்த் தட்டுப்பாட்டைச் சந்திக்கும் பொருட்டும், நகராட்சிகள் மற்றும் ஊராட்சிகள் குடிநீர்த் திட்டத்தை மேற்கொள்ளவும், மொத்தமாக ரூ.22.7 கோடி செலவிடப்பட்டுள்ளது. வெள்ள நிவாரணப் பணிகளுக்கெனப் பின்வரும் தொகை ஏற்கெனவே ஒதுக்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் பெருமழையால் ஏற்பட்ட சேதங்களைச் சீர்படுத்த ரூ.80 இலட்சம்; சென்னையில் மழையால் பாதிக்கப்பட்ட குடிசைவாழ் மக்களுக்கு வழங்கப்பட்ட உதவித் தொகை ரூ.2 கோடி. 2 கோடியே 80 இலட்சம்

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வந்த அவமானமாக நான் நினைக்கவில்லை. இந்த நாட்டிலே உள்ள நாலரைக் கோடித் தமிழருக்கு விடப்பட்ட சவாலாகத் தான் நினைக்கிறேன். ஒரு நாட்டிலே முதலமைச்சர் என்ற முறையில், பிரதமர் அவர்கள் சில ரகஸியங்களைச் சொல்கிறார். அந்த ரகஸியங்களை வெளியே சொல்லிவிட்டதாக பிரதமரே பாராளுமன்றத்திலே குற்றம் சாட்டுகிறார்''.

இதுதான் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இங்கே ஆற்றிய உரை. இதற்குத்தான் ''அக்கினி பிரவேசம் செய்வதற்குத் தயாரா?'' என்று அவர்கள் கேட்டார்கள்.

பிரதமருடைய பேச்சு பாராளுமன்றத்திலே அமைந்த நாள் **10.1.1991.** அன்றைக்கு இவர்கள் பேசும்போது இரண்டு மூன்று கருத்துக்களைச் சொன்னார்கள். அதிலே முதல் கருத்துக்கு வருகிறேன்.

"If I say something to a Chief Minister of a State, is it proper that the Chief Minister should make a public statement that he was coerced or forced to take such an action because of the insistance of the Prime Minister of this country"

இது ஒரு பகுதி; அவருடைய பேச்சிலே; இது ஒரு பகுதி. அதாவது இங்கே எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு, நான் பிரதமரால் நிர்ப்பந்திக்கப்பட்டேன் என்று நான் சொன்னதைப் போல பிரதமர் அவர்கள் பாராளுமன்றத்திலே சொல்லி இருக்கிறார்கள். இது பாராளுமன்ற நடவடிக்கைக் குறிப்பிலே இருந்து எடுக்கப்பட்ட, எழுத்துக்கு எழுத்து தவறாத அந்தப் பிரதியாகும்.

"If I say something to a Chief Minister of a State, is it proper that the Chief Minister should make a public statement that he was coerced or forced to take such an action because of the insistance of the Prime Minister of this Country."

நான் எந்த இடத்திலும், இலங்கைப் போராளிகளின் மீது மாநில அரசின் சார்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு பிரதமரால் நிர்ப்பந்திக்கப்பட்டேன் என்றோ, வற்புறுத்தப் பட்டேன் என்றோ என்றைக்கும் பேசியதும் இல்லை. எந்த நிருபர்கள் பேட்டியிலும் அப்படி நான் சொன்னதும் இல்லை.



நான் சொன்னதெல்லாம் **15-12-1990**-இல் கூட நிருபர்கள் என்னைச் சந்தித்துப் பேசியபோது அவர்களிடத்திலே சொன்ன வாசகம். முரசொலியில் வந்ததை அப்படியே சொல்கிறேன். சந்திப்பு 15-ஆம் தேதி. முரசொலியில் வந்தது 16-ஆம் தேதி. சமீபத்தில் இலங்கைப் போராளிகளைப் பொறுத்தவரையில் மத்திய, மாநில அரசுகள் கலந்துபேசித்தான் - அந்த அடிப் படையில்தான் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்படித் தான் சொல்லியிருக்கிறேன். மத்திய- மாநில அரசுகள் கலந்துபேசி, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று சொன்னேனே தவிர, நான் நிர்ப்பந்திக்கப்பட்டேன் என்று பிரதமரிடம் என்றைக்கும் நான் சொன்னது இல்லை. இது 16-ஆம் தேதி 'இந்து' பேப்பரில் கூட வந்தது.

"Mr. M. Karunanidhi pointed out that the Prime Minister had not cited any instance where the State had failed to carry out the directives of the Chandra Shekhar Government. Even the current crackdown on Srilankan Tamil militants in the State had been the outcome of the discussions the State had with the Union Government."

என்று 'இந்து'விலும் வந்திருக்கிறது. பிரதமர் நிர்ப்பந்தப் படுத்தி இந்தக் காரியத்தைச் செய்தேன் என்று நான் எங்கேயும் சொல்லவில்லை. ஆனால் சில கட்சிக்காரர்கள் அப்படிச் சொல்லியிருக்கிறார்கள். நேற்று திரு. திருநாவுக்கரசு சொன்னார் அல்லவா மத்திய அரசு நிர்ப்பந்தத்திற்காக மாநில அரசு இப்படி எல்லாம் செய்தது என்று, அதுமாதிரி வேறுசில கட்சிக்காரர்கள் பத்திரிகையில் அப்படி அறிவித்திருக்கிறார்கள். இலங்கைப் போராளிகளை நான் முகாம்களில் வைத்தது தவறு, அவர்களைக் கைது செய்தது தவறு, அவர்கள்மீது நடவடிக்கை எடுத்தது தவறு. இவை எல்லாம் நான் மத்திய அரசின் நிர்ப்பந்தத்திற்காக...

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரதப் பிரதமர் அவர்கள், ஏதாவது ஒரு இரகசியத் தைச் சொல்லி, அதை முதலமைச்சர் அவர்கள் வெளியே சொன்னால்தான் தவறே தவிர, முதலமைச்சர் அவர்கள் ஒரு செயலில் ஈடுபடுகிறபோது, அதற்கான விளக்கம் மக்களுக்குத் தான் சொல்லியாக வேண்டும். அப்போது முதலமைச்சர் சொன்னால்கூட அதில் தவறு இல்லை. 'டைகர்ஸ் அரஸ்ட்'

எந்தெந்தத் தொழிலாளர்கள் என்றால் சலவைத் தொழிலாளர்கள், காலணி தயாரிக்கும் தொழிலாளர்கள், தச்சுத் தொழிலாளர்கள், வண்டி கட்டுவோர், விலங்குகள் இழுக்கும் வண்டி ஓட்டுவோர், இரும்பு உலைக்கள வேலை செய்வோர், பொன், வெள்ளி வேலை செய்வோர், கூடை முடைவோர், கல் வெட்டுவோர், கல் செதுக்குவோர், பூச்சு வேலை செய்வோர், ஓட்டு வேலை செய்வோர், செங்கல் தொழிலாளி, கிணறு கட்டுவோர், கிணறு தோண்டுவோர், விவசாயத் தொழிலாளர்கள், சிறு, குறு விவசாயிகள், 2.5 ஏக்கருக்குக் குறைவான நிலம் உள்ளவர்கள், பதனீர் இறக்குவோர், வடிகால் தொழிலாளர்கள், பூச்சிமருந்து தெளிப்பவர்கள், பனை, தென்னை மரம் ஏறுபவர்கள், மீனவர்கள் - கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தினர் அல்லாத மீனவர்கள் - கட்டட, கட்டுமானத் தொழிலாளர்கள், டிரக் ஓட்டுநர்கள், ஆட்டோ, ரிக்ஷா ஓட்டுநர்கள், தனியார் கார், டாக்சி, பேருந்து ஓட்டுநர்கள், முடி திருத்துபவர், கைவண்டி இழுப்போர், மிதிவண்டி ஓட்டுநர், தனியார் துறையிலுள்ள கைத்தறி நெசவாளர்கள், மட்பாண்டம் மற்றும் மண் பொம்மை செய்யும் குயவர், குலாளர், மற்றும் வேளார், வீடுகளில் பணிபுரிவோர், பாம்பு பிடிக்கும் தொழிலில் ஈடுபடுவோர், ஆகிய இவர்களுக்கெல்லாம் இத்திட்டத்தின்படி, அவாகள் விபத்தில் இறந்துவிட்டால் அவர்களுக்கு 10,000 ரூபாய் அளிக்கும் திட்டத்தின்படி இந்த இரண்டாண்டுக் காலத்தில் ஏறத்தாழ ஆயிரத்திற்கு மேற்பட்டவர்களுக்கு இந்தத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது.

இவைகளை அன்னியில் நான் முதலிலே குறிப்பிட்டதுபோல, குடும்பத் தலைவரை இழந்துவிட்டால் அந்தக் குடும்பங்களுக்கு 3 ஆயிரம் ரூபாய் என்ற வகையில், நான் உங்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன், இந்த 2 ஆண்டுக் காலத்தில் 22,467 குடும்பங்களுக்கு இந்த 3 ஆயிரம் வீதம் தரப்பட்டிருக்கிறது. எனவே தான் திருநாவுக்கரசு அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியது போல அந்தத் திட்டத்தை நாம் நிறுத்தினாலும் கூட, இந்தத் திட்டத்தை நாம் வைத்திருக்கிறோம். இதிலே அவர்களுக்குப் பணம் திருப்பித் தரப்பட்டதா என்று கேட்டார்கள். அவர்கள் அதிலே கட்டிய பணம், சுமார் 14 இலட்சம் பேர் என்று குறிப்பட்டேன். அந்த 14 இலட்சம் பேர், இறுதியாக வந்த விவரத்தின்படி மொத்த



கணக்குகள் 13,66,663. சுமாராக 13.6 இலட்சம் கணக்குகள். அதிலே முடிக்கப்பட்ட கணக்குகள் 9,57,663. பணம் வழங்கப்பட்டது. அதாவது, 9.58 இலட்சம் பேர். இந்த கணக்குகளுக்குப் பணம் திரும்ப வழங்கப்பட்டுவிட்டது. திருப்பி வழங்கப்பட்ட தொகை 8.58 கோடி ரூபாய் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படி ஒரு ஆக்கபூர்வமான கேள்வியை எழுப்பி இந்தப் பதிலைப் பெறுவதற்கு எனக்கு உதவி செய்ததற்காக நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கெல்லாம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து மேலும் நம்முடைய வரவு-செலவுத் திட்ட உரை இங்கே வைக்கப்பட்ட பிறகு அதிலே சொல்லப்படுகின்ற - நம்முடைய மக்களுக்குத் தேவையான பல திட்டங்கள், உறுப்பினர்கள் எடுத்து வைக்கின்ற கருத்துக்களின் அடிப்படையிலே என்னுடைய எண்ணங்களைச் சொல்ல வேண்டிய வாய்ப்பு விரைவிலே பிப்ரவரி 2-ஆம் தேதிக்கு என்று இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற ஒரு காரணத்தால் இந்தப் பிரச்சனைகளை இந்த அளவோடு நான் நிறுத்திக் கொண்டு, 'அக்கினி பிரவேச' பிரச்சினைக்கு வருகிறேன்.

**திரு. கோ. வீரையன்:** பிப்ரவரி என்பதால் முன்னதாகச் சொல்கிறேன். அந்த வறட்சி பற்றிச் சொல்லும்போது புதுக்கோட்டை மாவட்டம் அதிலே விடுபட்டிருக்கிறது என்று நினைக்கிறேன், புதுக்கோட்டை மாவட்டம் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதைச் சேர்த்துச் சீர் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முதல்வர் கலைஞர்:** விடுபட்டிருந்தால், அது இணைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நண்பர் காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் இங்கே பேசும்போது சொன்னார்கள். அவர் பேசிய அதே வாக்கியங்களை அவைக் குறிப்பிலிருந்து நான் எடுத்து முதலில் படிக்கிறேன்.

''முதலமைச்சரைப் பார்த்து இந்த தேசத்திலே பாராளுமன்றத்திலே இருக்கின்ற பிரதமர் அவர்கள் இந்த நாட்டினுடைய ரகஸியங்கள் வெளியே போய்விட்டது என்று சொன்னால், அது

பண்ணப்பட்டபோது அது மறைக்கக்கூடிய செயல் அல்ல. அது வெளியே மக்களுக்குத் தெரிகிறது. முதலமைச்சர் சொன்னது ஒன்று...

**மாண்புமிகு முதல்வர் கலைஞர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரகசியத்தைப் பற்றிப் பின்னால் வருகிறேன். பிரதமரே நிர்ப்பந்தித்தார். ஆகவேதான் நான் செய்தேன் என்று சொன்னதாக பிரதமர் பாராளுமன்றத்தில் பேசியிருக்கிறாரே அது அவருக்குத் தரப்பட்ட தவறான தகவல். அவர் பத்திரிகையில் பார்த்திருக்கலாம். அல்லது பத்திரிகைகளைக் கொண்டு போய்க் காட்டியிருக்கலாம். இங்கே பாட்டாளிக் கட்சியின், தலைவர் டாக்டர் ராமதாஸ் அவர்கள் கூட அதையே தான் சொன்னார். மத்திய அரசின் நிர்ப்பந்தத்திற்குப் பணிந்து இலங்கைப் போராளிகள் மீது நடவடிக்கை எடுக்கிறார் என்று சொன்னார். திரு. திருநாவுக்கரசு கூட அப்படி ஒரு அறிக்கை வெளியே விட்டதாக ஞாபகம், அதை யாரோ எடுத்துப்போய் பிரதமரிடத்தில் காட்டி, நான் சொன்னதாக அவரிடத்தில் சொல்லியிருக்கிறார்கள். உள்ளபடியே அவர் என்னை நிர்ப் பந்தப்படுத்தவில்லை. நான் பிரதமரைச் சந்திக்கப் போனேன். என்னோடு முன்னாள் மத்திய அமைச்சராக இருந்த திரு. மாறன் வந்தார். தலைமைச் செயலாளர் வந்திருந்தார். அதிகாரிகளுடன் உட்கார்ந்து பேசினோம். என்ன பேசினோம் என்பதை அடுத்த பகுதியைப் பற்றிப் பேசும்போது சொல்கிறேன்.

இந்தப் பகுதியைப் பொறுத்தவரையில் பிரதமரும், நானும் பேசியபோது எத்தகைய நடவடிக்கைகள் இலங்கைப் போராளிகள் இங்கே வன்முறைகளில் ஈடுபடாமல் இருக்க, தேவையில்லாத பிரச்சாரங்களைத் தவிர்க்க, அங்கே பார்த்தோம், இங்கே பார்த்தோம் என்றெல்லாம் சொல்லப்படுகிற பிரச்சாரங்களைத் தவிர்க்க எந்தப் போராளிகளாக இருந்தாலும் எல்.டி.டி.ஈ.யா, இ.பி.ஆர்.எல்.எப்.ஆ, பொதுவாக கிராமங்களில் சென்று கொஞ்சம் இலங்கைத் தமிழில் பேசினாலும் எல்.டி.டி.ஈ. என்று சொல்லிவிடுகிறார்கள். அவர்கள் இ.பி.ஆர்.எல்.எப். ஆகக் கூட இருக்கலாம். அவர்கள் டெலோ ஆகக் கூட இருக்கலாம். அவர்கள் பிளாட் இயக்கத்தைச் சார்ந்தவர்களாகக் கூட இருக்கலாம். ஈராஸ் ஆகக் கூட இருக்கலாம். யாராக இருந் தாலும் அவர்களுக்குப் பெயர் விடுதலைப் புலிகள்தான்.



நீங்கள் தினத்தந்தி பத்திரிகையைப் பார்த்தால் யாராக இருந்தாலும் ஒட்டுமொத்தமாக விடுதலைப் புலிகள் என்றுதான் வரும். அப்படித்தான் அவர்கள் போடுவார்கள். வேண்டு மென்றே போடுவது அல்ல. அப்படிச் சொன்னால்தான் மற்ற வர்களுக்குப் புரியும், என்று விடுதலைப் புலிகள் என்றுதான் போடுவார்கள். எந்தப் போராளி இயக்கமாக இருந்தாலும் விடுதலைப் புலிகள் என்றுதான் போடுவார்கள். அதுபோல கிராமங்களில் லுங்கி கட்டிக் கொண்டு ஒரு இலங்கைத் தமிழைப் பேசிவிட்டால் அவர்கள் விடுதலைப் புலிகள் ஆகி விடுவார்கள். இந்தப் பிரச்சாரத்தைத் தவிர்க்கத்தான் அவர்களை எல்லாம் ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைக்க வேண்டுமென்று விரும்பினோம். இதைச் சொல்கிற காரணத்தினால் வன்முறையே இல்லை யென்று நான் சொல்ல மாட்டேன். சில வன்முறைகளில் அவர்கள் ஈடுபட்டதும் உண்டு. இன்னும் சொல்லப்போனால் நம்முடைய காவல் துறையைக் கூட, விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சார்ந்தவர்கள் சவாலுக்கு இழுத்தது உண்டு. சில இடங்களில் அவர்களைப் பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டிக் கைது செய்ய வேண்டிய நிலை ஏற்பட்ட போது, இங்கே சொன்னார் திரு. திருநாவுக்கரசு, கைது செய்வ தாக இருந்தால் ஸ்பெசிபிக் குற்றத்திற்காகக் கைது செய்தால் போதாதா என்று. அப்படிக் கைது செய்யப்போனபோது, அவர்கள் சைனட் குப்பிகளை வைத்துக்கொண்டு, உள்ளே வந்தால் அதைத் தின்று இங்கேயே மாண்டுவிடுவோம் என்று சொன்னார்கள். அதனால் காவல் துறையினர் எப்படியும் அவர்களை நெருங்க முடியாமல் தவித்தார்கள். அந்த நிலைமைகள் எல்லாம் ஏற்பட்டதுண்டு. எனவேதான் எந்தப் போராளிகள் என்பதல்ல. எந்தப் போராளிகளாக இருந்தாலும் அவர்கள் வெளியிலே நடமாடுகிற காரணத்தால் இப்படிப் பிரச்சாரம் ஏற்படுகிறது. அவர்கள் இலங்கையில் நடத்துகின்ற அந்தப் போராட்டத்தை நாம் ஆதரிப்பது என்பது வேறு. ஒரு நல்ல தீர்வு காணப்பட வேண்டும், அங்கேயுள்ள இலங்கைத் தமிழர்களுக் கெல்லாம், தமிழ் ஈழத்து மக்களுக்கெல்லாம் நல்ல நிம்மதியான வாழ்வு, நிலையான வாழ்வு ஏற்பட வேண்டும்; அதற்கு நம்மால் என்ன உதவி செய்ய முடியுமோ; மத்திய அரசு மூலமாக என்ன

சூழலும் ஏற்பட்டிருக்கிறது. இவைகளை எல்லாம் குறிப்பிடுவதற்குக் காரணம், இதே வன்முறைக் களமாகத் தமிழகம் ஆகக்கூடாது என்பதுதானே தவிர வேறு ஒன்றுமல்ல.

அவர்களுடைய உரிமைப் போராட்டத்திற்குத் தலைமை வகிக்கிறவர்கள்தான் இவைகளை எல்லாம் செய்யச் சொன்னார்கள் என்று சொல்லமாட்டேன். எந்த ஒரு இயக்கத்திலும் இருக்கிற தொண்டர்கள், கடைசி நிலையிலே உள்ளவர்கள், தலைவர்களைச் சந்திப்பதற்குக்கூட வாய்ப்பு அற்றுப்போனவர்கள், அவர்களாகவே சில காரியங்களைச் செய்துவிடுவார்கள். அதற்காக அவர்களுடைய உரிமைப் போராட்டத்தைக் களங்கப்படுத்த விரும்வில்லை. அதைப் பற்றி இந்திய அரசு மேலும் அக்கறை எடுத்துக் கொண்டு, பேச்சு வார்த்தைகள் மூலமாக ஒரு சுமுகமான நிலைமையை அங்கே ஏற்படுத்த வேண்டுமென்பது தான், இங்கே வீற்றிருக்கக்கூடிய அனைவருடைய கோரிக்கை என்பதை நாம் மறந்துவிடவில்லை. இன்னமும்கூட இந்த அரசு அதைத்தான் இந்திய அரசுக்கு வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறது என்பதை நான் மறந்துவிடவில்லை. எனவே பிரதமர் என்னை வற்புறுத்தினார், இப்படி வற்புறுத்தப்பட்டேன் என்று எங்கும் சொல்லவில்லை. பிரதமரோடு அமர்ந்து பேசி, மத்திய, மாநில அரசுகள் சேர்ந்து, இணைந்து. எடுத்த முடிவுதான் இப்போது நடைமுறைப்படுத்தப்படுகிறது என்றுதான் சொன்னேன்.

அடுத்து நம்முடைய நண்பர் பீட்டர் அல்போன்ஸ் சொன்ன அந்தக் குற்றச்சாட்டுக்கு வர வேண்டுமேயானால், பிரதமர் என்ன பேசி இருக்கிறார் என்றால், அதே நாளில் அதே பேச்சின் தொடர்பாக

"I have information that certain information that were just given to the Chief Minister have gone to the LTTE Headquarters not only in Tamil Nadu but even in Jaffna."

இது பிரதமருடைய பேச்சு. அப்படியே அந்தப் பிரதியைப் படித்திருக்கிறேன். இங்கே 'இரகசியம்' என்று எங்கே குறிப்பிடுகிறார்? இன்பர்மேஷனுக்கும் சீக்ரெட்டுக்கும் உள்ள வித்தியாசம் எவ்வளவு தொலைவானது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அவர் குறிப்பிட்டது, I have information ''எனக்குத் தகவல் வந்தது; I have information that certain information that were just



given to the Chief Minister have gone to the LTTE Headquarters not only in Tamil Nadu but even in Jaffna. இதையும் சொல்லிவிட்டு, அவர் சொல்கிறார், In spite of this, I have repeatedly stated that nothing will be done against the Government.

அதையும் பிரதமர் அங்கே சொல்லி இருக்கிறார். அப்படி ஒரு இன்ஃபர்மேஷன் ஜாஃப்னாவுக்குச் சென்றது தேச விரோதம் என்று பிரதமர் எண்ணி இருப்பாரேயானால், 'இந்த சர்க்காரைக் கலைக்க மாட்டேன்'' என்று சொல்லி இருப்பாரா? 'தேசத் துரோகம்' என்று அவரே கருதவில்லை. முதலமைச்சருக்குச் சொல்லப்பட்ட ஒரு 'தகவல்' 'இன்ஃபர்மேஷன்'. . 'தகவல்' என்பது தான் சரியான தமிழ் என்று நான் கருதுகிறேன்; சரியான பொருள் என்று நான் கருதுகிறேன். 'இன்ஃபர்மேஷன்', 'இரகசியம்' என்று இருக்க முடியாது. அது 'சீக்ரெட்' என்று இருந்தால் தான் 'இரகசியம்' என்ற அந்தப் பொருள் வர முடியும். எனவே 'இன்ஃபர்மேஷன்' தான். அவருக்குக் கிடைத்ததும் 'இன்ஃபர்மேஷன்'; அவர் எனக்குச் சொன்னதும் 'இன்ஃபர்மேஷன்'. அந்த 'இன்ஃபர்மேஷன்' யாழ்ப்பாணத்தில் உள்ள அவர்களுடைய தலைமையகத்துக்குச் சென்றுவிட்டது என்று குறிப்பிடுகிறார். அப்படிப்பட்ட ஒரு 'இன்ஃபர்மேஷனை' நான் யாருக்கும் சொல்லவில்லை; யாருக்கும் தெரிவிக்கவில்லை. ஆனால் நானும் அவரும் பேசிக்கொண்டு, சில காரியங்களை எப்படி நடைமுறைப்படுத்த வேண்டும் என்று முடிவு எடுத்தோமோ, அவைகளை நடைமுறைப்படுத்தத் தொடங்கிய நேரத்தில், அந்தத் தகவல்கள் வெளிப்பட்டுத்தான் தீரவேண்டும். இவைகளைச் செய்ய வேண்டும் என்று பிரதமரோ அல்லது மத்திய அரசோ எங்களைக் கட்டாயப்படுத்தவில்லை என்று நான் மீண்டும் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

மத்திய, மாநில அரசுகள் இணைந்து செயல்பட வேண்டும் என்பதிலே நான் மிகுந்த நம்பிக்கை வைத்திருப்பவன். 'எமெர்ஜென்ஸி' நேரத்திலே கூட கட்சியின் சார்பாக எமெர்ஜென்ஸியை நாங்கள் தீவிரமாக எதிர்த்துத் அன்றைக்கு, தீர்மானம் நிறைவேற்றி, மாநாடுகள் நடத்தி, போராட்டங்கள் நடத்தி, கிளர்ச்சிகள் நடத்தி, எமெர்ஜென்ஸியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எல்லாம் 'சுவாசிக்கின்ற இடம்' இது தான் என்று ஈ.எம்.எஸ்.

உதவிகளைப் பெற்றுச் செய்ய முடியுமோ அவற்றைச் செய்ய இன்றைக்கும் தயாராக இருக்கிறோம். ஆனால் தமிழகத்தை வன்முறைக்களமாக ஆக்கக் கூடாது.

இன்னும் ஒன்று, இலங்கையிலே புதிதாக ஒரு அரசைத் தமிழர்களுக்காக ஏற்படுத்துவதற்காக முனையும்போது, இங்கே இருக்கிற அரசை இழந்துவிட்டால் நான் முதலமைச்சராக இருப்பதோ, பேராசிரியர் அமைச்சராக இருப்பதோ, சாதிக்கோ, நாஞ்சிலாரோ, மற்றவர்களோ அமைச்சர்களாக இருப்பது என்பதோ அல்ல, அது எங்கே போய்ச் சேரும் என்பதை எண்ணிப் பார்த்தால், 5 கோடி மக்களை அப்படிப்பட்ட தலைவர்களிடத்திலே ஒப்படைக்க எங்களுக்கு மனமில்லை என்பதையும் நீங்கள் மறந்துவிடக்கூடாது. அதையும் மறந்து விடக்கூடாது. யாரிடத்தில் போய் ஒப்படைக்கப் போகிறோம் என்பதையும் மறந்துவிடக்கூடாது.

ஒப்படைத்தால் என்னவாகும்? பெரியார் செத்துவிடுவார். அண்ணா ஆயிரம் அடி குழி தோண்டிப் புதைக்கப்பட்டு விடுவார். அம்பேத்கர் இருக்கும் இடம் தெரியாமல் போய் விடுவார். சுயமரியாதைக் கொள்கைகள், தன்மானக் கொள்கைகள், சமூக நீதிக் கொள்கைகள் இவைகள் எல்லாம் ஒரு காலத்திலே தமிழ்நாட்டிலே உலவின என்று அகராதியில், வருங்காலத்தில் சரித்திரத்தில் படித்துப் பார்க்கக்கூடிய இடத்தைத்தான் பெறுமே யல்லாமல், அவைகளுக்கெல்லாம் இந்தக் காலத்திலே நிச்சயமாக வாழ்வு இல்லாமல் போய்விடும். அவைகளை எல்லாம் எண்ணிப் பார்த்துத்தான், எல்.டி.டி.ஈ.யினர் இந்த அரசையோ அவர்களை ஆதரிக்கும் எதிர்க் கட்சியினரையோ தர்மசங்கடத்தில் ஆழ்த்தக் கூடாது என்று நேற்றுகூடச் சொன்னேன். அதை மறந்துவிடக் கூடாது. அந்தப் போராளிகளுக்குள்ளேயே நடக்கிறது.

திருச்சியிலே கொட்டாம்பட்டி என்ற ஒரு இடத்திலே அந்தப் போராளிகளுக்குள்ளே நடக்கிறது. எல்.டி.டி.ஈ. இல்லை அங்கே. அங்கே இருக்கிற போராளிகள் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அல்ல. டெலோ. அவர்களுக்குள்ளே ஒருவருக்கொருவர் மோதிக் கொண்டு, வெட்டிக் கொண்டு, குத்திக்கொண்டு செத்துப் போனார்கள். பிறகு அவர்களைப் பிரித்து வேறு இடத்திற்கு அனுப்பினோம். இன்றுகூட, பத்திரிகையிலே ஒரு செய்தியைப்



பார்த்தேன். இராமேஸ்வரத்திலே ஒரு கத்திக் குத்து சம்பவம் நடைபெற்றுள்ளது. அவர்களுக்குள்ளே, டெலோ இயக்கத்திற்குள்ளே. இப்படி ஒரு சகோதர யுத்தத்தை அவர்களே நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அகதிகள் முகாமிலே இருக்கிறவர்களால் கூட சுமுகமாக இருக்க முடியவில்லை. இவைகள் எல்லாம் தமிழ்நாட்டிலே வன்முறையை ஏற்படுத்தக் காரணமாக இருக்கிறது.

வேலூரிலே கொண்டு போய் நல்ல பராமரிப்போடு - கேரம் போர்டு வேண்டுமென்று கேட்டால் கேரம்போர்டு; டி.வி. பார்க்க வேண்டுமென்று கேட்டால் டி.வி; ரேடியோ கேட்க வேண்டுமென்று கேட்டால் ரேடியோ; இன்னும் சொல்கிறேன், இந்த அவையிலே, சீட்டு ஆட வேண்டுமென்று கேட்டால் சீட்டுக்கட்டு; அவர்களுக்கு நல்ல உணவு - இவ்வளவும் தரப் பட்டது.

எல்.டி.டி.ஈ.யினருக்கு மாத்திரமல்ல. புழலிலே இருக்கிற ஈ.பி.ஆர்.எல்.எஃப்.-ஆக இருந்தாலும் சரி, புதுக்கோட்டையிலே இருக்கிற டெலோ இயக்கமாக இருந்தாலும் சரி, அத்தனை இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்கும் நல்ல பராமரிப்போடு, அவர்களைச் சிறைக் காவலர்க்ள கண்காணிக்காமல், போலீசார், காவல் துறை நண்பர்கள் கவனிக்கவும், சிறை அதிகாரிகள் சென்று அவர்கள் பராமரிப்புகளைக் கவனிக்காமல், தாசில்தார் அளவிலே ஒரு அட்மினிஸ்டிரேட்டர் என்கின்ற ஒரு புதிய பதவி உருவாக்கப்பட்டு அவர்கள் கவனிக்கின்ற அளவிலே ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தும்கூட, வேலூரில் இரண்டு பகுதிகளைப் பிரிக்க இடையிலே அமைக்கப்பட்ட சுவர் இடிக்கப்பட்டு, அந்தச் சுவரிலுள்ள கற்கள் எல்லாம் எடுத்து வீசப்பட்டு, காவல் துறையினர் காயப்படுத்தப்பட்டு, உள்ளே பரிமாறுவதற்குச் சென்ற ஒரு அதிகாரி, ஒரு போலீஸ் அதிகாரி பிடிக்கப்பட்டு, அவரை மீட்க உள்ளே சென்றபோது அவர்மீது மண்ணெண்ணெய் ஊற்றிக் கொளுத்துகின்ற முயற்சி நடைபெற்று, அங்கே பெண் களும் இருக்க வேண்டுமென்று விரும்பி, குடும்பத்தோடு சென்ற அந்தப் பெண்களுக்குப் பாதுகாப்பிற்காக இருந்த பெண் போலீசாரை பர பர என்று உள்ளே பிடித்து இழுத்துச் சென்று, அவர்களை மீட்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு, துப்பாக்கிப் பிரயோகத்திலே போய் முடிந்து, ஒருவர் கொல்லப்படக்கூடிய

''தேசத் துரோகி கையால் அந்தப் பணத்தை வாங்கக்கூடாது என்று அந்த அம்மையார் இறந்துவிட்டார்'' என்று சொன்னார்கள். அண்ணாவுக்கே அந்தக் கதி என்றால் எங்களைப் பற்றிச் சொன்னால் என்ன? கவலையில்லை. தேசத் துரோகிகளுடைய இயக்கமாக திராவிட முன்னேற்றக் கழகம் இருக்குமேயானால், திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட நாடு பிரிவினையை விட்டிருக்காது. 1962-ஆம் ஆண்டு பிரிவினைக் கொள்கையை விட்டவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தார், தேசத்திற்காக, சிறைச்சாலையில் நாங்கள் - அண்ணா அவர்கள் வேலூர் சிறைச்சாலையிலும், நானும் பேராசிரியர் போன்றவர்களும் திருச்சிச் சிறைச்சாலையில் இருந்த நேரத்திலேதான் சீனா ஆக்கிரமிப்பு நடைபெற்றது. அந்த நேரத்திலே வேலூர் சிறையில் இருந்த அண்ணா அவர்கள் போராட்டத்தை நிறுத்திவிட்டு, ''நாங்கள் நேருவினுடைய கரத்தைப் பலப்படுத்தத் தயார்'' என்று அறிவித்தார்கள். இந்த இயக்கத்திற்கும் அப்படிப்பட்ட அறிவுரையைச் செய்தவர் அறிஞர் அண்ணா ஆவார்கள்.

நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அன்றைக்குக் குமரி அனந்தன் அந்தக் கடிதத்தைப் படிக்கும்போது, கவர்னருக்கு நேராகப் படிக்கும்போது பல பேர்களையெல்லாம் சொன்னார்கள். தேசத் தலைவர்கள், இவர்கள் எல்லாம் வாழ்ந்த நாடு என்றெல்லாம் சொன்னார்கள். கட்டபொம்மனைச் சொன்னார், மருதுபாண்டியரைச் சொன்னார், வ.உ.சி.யைச் சொன்னார். அவர்களையெல்லாம் ஞாபகப்படுத்தியதே நான்தான். அதை மறந்துவிடக் கூடாது. விடுதலைக்குப் போரிட்ட கட்டபொம்மனுக்கு 20 ஆண்டுக் காலம் ஆட்சி செய்தவர்கள் இடிந்து போன கோட்டையை நிமிர்ந்து பார்த்தார்களா? பாஞ்சாலங்குறிச்சியில் கோட்டையைக் கட்டியது நான் அல்லவா? மருதுபாண்டியருக்கு திருப்பத்தூரிலே இன்றைக்கு நினைவகம் எழுப்புவதற்குத் திட்டமிட்டு அந்தப் பணியை ஆரம்பித்து வைத்திருப்பவன் நான் அல்லவா? விடுதலை வீரர்களுக்கு மாத ஊதியம் ரூ.250 என்று இருந்ததை ரூ.350 ஆக உயர்த்தி, நானும், பேராசிரியர் அவர்களும் வள்ளுவர் கோட்டத்திலே கலந்து கொண்ட நிகழ்ச்சியில் இரண்டு வாரத்திற்கு முன்பு ரூ.400 ஆக உயர்த்தியிருப்பது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான். இதன் மூலமாகப் பயன்பெறும் தியாகிகள் 6,681 பேர். விடுதலைப் போராட்டம்,



எல்லைப் போராட்டங்களில் கலந்து கொண்ட தியாகிகள் இறந்துவிடுவார்களேயானால் ஈமக்கடன் செய்வதற்காக அவர்களுடைய குடும்பத்தினருக்கு உடனடியாக ரூ.ஆயிரம் தர வேண்டும்; தாசில்தார் பதவிக்குக் குறையாத ஒருவர் சென்று மலர் வளையம் வைக்க வேண்டும் என்று உத்தரவிட்டிருப்பது இந்தியாவிலேயே இந்த ஆட்சியில்தான்!

காமராஜருடைய தொண்டர் வைரவன் என்று ஒருவர் இருந்தார். அவரை மறந்து போய் இருப்பார் குமரி அனந்தன். காமராஜர் மறைந்த பிறகு இந்த 13 ஆண்டுக் கால ஆட்சியில் அவர் என்ன ஆனார்? திருமலைப் பிள்ளைத் தெருவில் காமராஜர் வீட்டுக்குப் பின்னால் ஒரு சிறிய வீட்டில் அவர் குடியிருந்து வந்தார். தன்னுடைய குழந்தைகள், மனைவியோடு குடியிருந்தார். அந்த வீட்டிலிருந்து வைரவன் துரத்தப்பட்டார். வீட்டு வசதி இல்லாமல் அவர் தவித்தார். திராவிட முன்னேற்றக் கழகம் மீண்டும் ஆட்சிக்கு வந்த பிறகு, நண்பர் நாத்திகம் இராமசாமி அந்த வைரவனை அழைத்து வந்து, அவருடைய பரிதாபமான நிலையைச் சொன்னார். அவருக்கு வீட்டு வசதி வாரியத்தின் சார்பாக ஒரு வீடு கொடுக்கப்பட்டது. அது மாத்திரமல்ல, காமராஜர் நினைவகத்திலே மாதம் ஆயிரம் ரூபாய் சம்பளத்தில் வைரவனுக்கு ஒரு வேலையும் கொடுக்கப்பட்டது. காமராஜருடைய அத்தியந்த தொண்டர், சீடர், உயிருக்கு உயிராக இருந்தவர். அவரையும் மறந்துவிட்டார்கள்.

விடுதலைப் போராட்ட வீரர் பரலி நெல்லையப்பர், 1970-இல் தி.மு.க. ஆட்சியில் அப்போது இருந்த பண மதிப்பில் மாதம் ஒன்றுக்கு மாத ஊதியமாக ரூ.100 அவருக்குத் தரப்பட்டது. தற்போது அவருடைய மகள் பூங்கோதைக்கு, அவருடைய கோரிக்கையை ஏற்று 16.10.89 முதல் ரூ.500 ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. நான் தேசத்துரோகியாம்?

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. அவர்களுடைய பேத்தி சேதுலட்சுமிக்கு இந்த அரசு 9.3.89 முதல் 31.7.89 வரையில் மாதம் 250 ரூபாயும், 1.8.89 முதல் 350 ரூபாயும் ஓய்வூதியமாக வழங்கிக் கொண்டிருக்கிறது. சுதந்திரப் போராட்ட வீரர்கள் அனைவரும், அரசின் அனைத்துப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலும் இலவசமாகப் பயணம் செய்ய அவர்களுக்கு இலவச பஸ்பாஸ் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த ஆட்சியில்தான்.

போன்றவர்கள் எல்லாம் பாராட்டுகின்ற அளவிற்கு, திராவிட முன்னேற்றக் கழகம் நடந்துகொண்ட அந்தக் காலக்கட்டத்திலே கூட (Administrative side) நிர்வாக நிலையில் மத்திய அரசோடு மாநில அரசு அன்றைக்கே கூட ஒத்துழைத்திருக்கிறது. அந்தச் சூழ்நிலையில் நானும் பிரதமரும் பேசிய பிறகு முதலாவது நடைபெற்றது ஒரு ஆலோசனைக் கூட்டம் என்றால், அடுத்தது அந்த ஆலோசனையை நடைமுறைப்படுத்த வேண்டிய கட்டம். அதற்கடுத்து அதை எப்படி நடைமுறைப்படுத்துவது என்பது.

உதாரணமாக ஒரு தீவிரவாதி, 'மிலிடன்ட்', இலங்கைப் போராளியை ஒரு தனி முகாமிற்கு அழைத்துச் சென்று வைக்க வேண்டுமென்றால், அவரை அழைக்கச் செல்லும்போது அவர் வர மறுத்தால் - ரமணி இங்கே சுட்டிக்காட்டியதைப் போல அவர் வர மறுத்தால் - 'வந்து தீர வேண்டும்; இல்லாவிட்டால் நீங்கள் உங்கள் நாட்டுக்கு அனுப்பப்படுவீர்கள்' என்று சொல்ல வேண்டும் என்று நான் காவல் துறைக்குச் சொல்லி இருக்கிறேன். காவல் துறை அதைச் சொன்னால் தான் அவர்கள் அந்த முகாமிற்கு வருவார்கள் என்றால், காவல் துறை சொல்லித்தான் தீரவேண்டும். அப்படிச் சொன்னது - ஏற்கெனவே அவர்கள் பல வயர்லெஸ்களை வைத்து 1983-ஆம் ஆண்டிலே இருந்து பல வயர்லெஸ்களை வைத்து அவர்களுடைய தலைமைக்குப் பேசிக் கொள்கிறார்கள் தமிழ்நாட்டிலே இருந்து! இப்போது இந்த ஆட்சியிலே கூட கடந்த இரண்டு மாதத்துக்கு முன்பு 2 அல்லது 3 வயர்லெஸ் கருவிகள் இந்த அரசால் பிடிக்கப்பட்டு இருக்கின்றன - அந்த வயர்லெஸ் மூலம் அவர்கள் கேட்டிருக் கலாம், 'எப்படி நீ சிக்கினாய்? சிக்கலாமா?' என்று. 'சிக்கா விட்டால் எங்களை இலங்கைக்கே அனுப்பிவிடுவதாகச் சொன்னார்கள்' என்று சொல்லி இருக்கலாம். இது தான் 'தகவலே' தவிர, இதைத் தவிர வேறு இந்தியாவின் இரகசியம் எதுவும் எனக்குச் சொல்லப்படவும் இல்லை; நான் வேறு எந்த இரகசியத்தையும் வெளியிடவில்லை என்பதைத் தான் என்னு டைய 'அக்கினிப் பிரவேசம்' ஆக இங்கே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதை வைத்துக்கொண்டு இந்த ஆட்சி கலைக்கப்பட வேண்டும், தேசத் துரோக ஆட்சி என்று எல்லாம் இங்கே பேசப்பட்டது.



ஜனநாயக நாட்டில், அவர்கள் எல்லாம் எடுத்துக்காட்டியதைப் போல, அப்படிப்பட்ட இரகசியங்கள் எதற்கும் இடம் இருப்ப தாக எனக்குத் தெரியவில்லை.

மத்திய அரசினுடைய இரகசியங்களே கூட, ஆட்சி கலைக்கப்படப் போகிறது என்ற இரகசியம் கூட. 1976-ஆம் ஆண்டு அன்று காலையிலேயே தெரிந்துவிட்டது: மாலையில் விழாவிற்குப் போனபோது, விழா முடிந்து என்னுடைய காரிலேயே ஏறி வந்துவிட்டேன். அப்போது அங்கிருந்தவர்கள் கேட்டபோது, ஐந்து நிமிடத்தில் என்னுடைய கார் போகும், அது இப்போதே போகட்டும் என்று சொன்னேன். அதற்காக மத்திய அரசின் இரகசியத்தைச் சொல்லிவிட்டேன் என்று சொல்ல முடியாது. இரகசியங்கள் அல்ல, தகவல்கள். நான் வேண்டுமென்றே பிரதமர் சொன்ன ஒரு இரகசியத்தை இந்தியாவிற்கு விரோத மாக அனுப்ப வேண்டும் என்று எண்ணுகிற தேசத் துரோகி யல்ல. நான் தேசத் துரோகி என்று இழிக்கப்பட்டாலும் தேசத்திற் காகப் பாடுபட்ட பெரியாருடைய பரம்பரையில் வந்தவன். தேசத் துரோகி என்று அண்ணாவே அழைக்கப்பட்டார். ஆனால் அதே அண்ணாதான் இந்தியாவினுடைய விடுதலையை விழா வாகக் கொண்டாட வேண்டும் என்று பெரியாரை எதிர்த்துக் கொண்டு அன்றைக்குப் போராடி, பத்திரிகைகளில் எழுதி, அதைக் கடைப்பிடித்த அந்த அண்ணா அவர்களுடைய தம்பியாக இருப்பவர்கள் நாங்கள். நாங்கள் ஒருக்காலும் தேசத் துரோகத் திற்கு உடன்படமாட்டோம்.

குமரி அனந்தன் அவர்களே சொன்னார்கள். எங்களைச் சொல்லுவது இருக்கட்டும். பேராசிரியரையோ, என்னையோ மற்றவர்களையோ தேசத் துரோகி என்று சொல்லுவது இருக் கட்டும். அண்ணா முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் வீரவாஞ்சி வாஞ்சிநாதனுக்கு ஒரு நினைவாக, அவருடைய தியாகத்தின் நினைவாக அவருடைய மனைவிக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று கருதி, மாதா மாதம் 200 ரூபாய் அந்த அம்மையாருக்கு அனுப்பி வைத்தார். அந்தப் பணம் போய்ச் சேருவதற்குள் அந்த அம்மையார் இறந்துவிட்டார். அப்போது குமரி அனந்தன் அவர்களே பல கூட்டங்களில் பேசினார்கள்.

வ.ரா. - உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா வ.ரா. பற்றி? காங்கிரஸ்காரர்களே. ஞாபகம் இருக்கிறதா? அக்ரஹாரத்து அதிசய மனிதர் என்று அண்ணா அவர்களால் போற்றப்பட்ட வ.ரா., காங்கிரஸ் பேரியக்கத்தின் முதுபெரும் தொண்டர் ஆவார். விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு, சிறைச்சாலையிலே வாடியவர், அவரை மறந்துவிட்டார்கள். அவருடைய மனைவியாரை அழைத்து, மாதம் ரூ.1000 ஓய்வூதியம் தருகிற அரசு இந்த் அரசு கடந்த ஆண்டிலிருந்து தரப்படுகிறது.

சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி ஸ்ரீபாதசங்கர். அவருக்கு, புற்றுநோய்ச் சிகிச்சைக்காக பொது நிவாரண நிதியிலிருந்து அண்மையில் தான் ரூ.5,000 வழங்கப்பட்டது.

காமராஜருடைய தமக்கை நாகம்மாள் அவர்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ.10,000 உதவித் தொகை வழங்கப்பட்டது. அவருடைய பேத்திக்கு நானே முன்னின்று தலைமை வகித்து, திருமணத்தை நடத்தி வைத்து, அந்தத் திருமணச் செலவுகளையும் ஏற்றுக்கொண்ட அரசுதான் இந்த அரசு. பல காங்கிரஸ்காரர்கள் அந்தத் திருமணத்திற்கு வரவேயில்லை.

அண்மையில், திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடத்திற்கு சுதந்திரப் போரட்ட வீரர் 'சுப்பிரமணிய சிவா மாளிகை' என்று பெயர் வைத்தோம். அதுவும், திருமதி பொன்னம்மாள் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று! அவரும் சேர்ந்து அவையிலிருந்து போய்விட்டார். அதைப்போல, அங்கே அந்த வளாகத்திற்கு 'வேலுநாச்சியார் வளாகம்' என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.

காமராஜர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு குமாரசாமிராஜா அவர்களின் பெயர் சூட்டப்பட்டது. அப்படி ஒரு பெயரே காங்கிரஸ்காரர்களுக்குத் தெரியாது. குமாரசாமி ராஜா என்று ஒரு முதலமைச்சர் இருந்தார் என்று. காமராஜர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்திற்கு 'குமாரசாமி ராஜா நகர்' என்று பெயர் சூட்டப்பட்டது. அதேபோல, சிதம்பரனார் மாவட்ட ஆட்சித் தலைவர் வளாகத்திற்கு,



அன்னை சிவகாமி அம்மையார் வளாகம் என்று பெயர் சூட்டியவன் நான். என்னைச் சொல்கிறார்கள் தேசத்துரோகி என்று.

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்ட ஆட்சித்தலைவர் வளாகத்திற்கு தியாகி சுந்தரலிங்கம் வளாகம் என்றும், ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டிடத்திற்கு புலித்தேவன் மாளிகை என்றும் பெயர் சூட்டப்பட்டது.

இங்கே இருக்கிற, தி.மு.க. ஆட்சியில் கட்டப்பட்ட பத்தடுக்கு மாளிகைக்கு, கட்டிமுடித்த இந்த 13 ஆண்டுக்காலத்தில் எந்தப் பெயரும் வைக்கப்படவில்லை. மீண்டும் இந்த ஆட்சி வந்த பிறகு, கட்டியவன்தான் பெயர் வைக்கவேண்டுமென்ற விதியின்படி, 'நாமக்கல் கவிஞர் மாளிகை' என்ற பெயர் சூட்டப்பட்டது. எங்களைப் பார்த்து தேசத்துரோகிகள் என்று சுலபமாகச் சொல்லி விட்டார்கள். ஒரு கருத்தை உங்களுக்குப் படித்துக் காட்ட விரும்புகிறேன். இந்தப் புத்தகத்தில் அச்சியற்றப்பட்ட கருத்து, இது ஒருவருடைய உரை.

''பேரறிஞர் அண்ணா அவர்கள் கலைஞரைப் பற்றி என்ன சொல்கிறார் என்று காலையில் தாள்களைப் புரட்டிப் பார்த்த நேரத்தில், அவர் சொல்லியிருக்கிறார்: கழகத்தில் இருக்கிறவர்கள் எல்லாம் என்னை முழுக்கத் தெரிந்தவர்கள்தான், ஆனால் என்னை முற்றிலும் முழுக்கத் தெரிந்தவர் கலைஞர்தான் என்று எழுதியிருக்கிறார். பேராசிரியர் போன்றவர்கள் எல்லாம், தங்களுடைய வயதுக்கு இளையோர்களை வாழ்த்துகிறார்கள் என்று சொன்னால் வாழ்த்துவதற்குரிய அற்புதமான ஆற்றலை அவர் பெற்றிருக்கிறார் என்பதுதான் காரணம்.

''அவருக்கு வந்த துன்பங்களையெல்லாம் நான் பார்த்திருக்கிறேன். இன்னும் ஒரு படி மேலே போய்ச் சொன்னால், அவரைத் துன்புறுத்த வேண்டுமென்று பலர் நினைத்ததையெல்லாம் நான் பார்த்திருக்கிறேன். இன்னும் ஒருபடி மேலே போய்ச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அவருடைய ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்று, பெருந்தலைவர் காமராஜரால் போற்றப்படுகின்ற தலைவர்கள் சொன்ன நேரத்தில் கூட, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை நடத்திக் கொண்டிருக்கின்ற கலைஞர் ஆட்சியைக் கலைக்கக்கூடாது என்று

அவர்களிடம் கேட்க விரும்புகிறேன். முதலமைச்சர் அவர்கள் இன்றைக்குச் சொல்லி இருக்கிறார்கள்; விவசாயத்திற்கு பம்ப்செட்டு களை உபயோகப்படுத்துகிறவர்களுக்கு டீசலானது சீரான முறையில் வினியோகம் செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நேரத்தில், நீங்கள் ஏற்கனவே மின்சாரத்தை உப யோகிப்பவர்களுக்கு இலவசமாக அதை வழங்கியிருக்கிறீர்கள். எனவே இவர்களுக்கும் ஏதாவது நிவாரணத்தை அறிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை)

திரு. எஸ்.டி. உகம்சந்த் அவர்களின் திருத்தம் அவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

''1991-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 18-ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப் பெற்றது.

தமிழரசு அச்சகம்.

பெருந்தலைவர் காமராஜரே சொன்னாரே, அதைப் பக்கத்தில் இருந்து கேட்டவன் மட்டுமல்ல, எல்லாப் பக்கங்களிலும் எடுத்துச் சொல்கின்ற பணியை மேற்கொண்டிருக்கின்ற தொண்டன் என்ற காரணத்தால் சொல்கிறேன்.'' அவருடைய ஆட்சி கலைக்கப்படுவதை காமராஜர் விரும்பவே இல்லை.

''ஏற்கெனவே எத்தனையோ பேர் எங்கெங்கேயோ, எதை யெதையோ சொன்னாலும் சரி, பெருந்தலைவர் காமராஜர் தி.மு.க. ஆட்சி கலைக்கப்படவேண்டுமென்று விரும்பவும் இல்லை, அவர் உயிரோடு இருந்தவரை கலைக்கப்படவும் இல்லை என்பதை உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.'' இதைச் சொன்னவர், குமரி அனந்தன். 1983-ஆம் ண்டு ஜுன் மாதம் 3-ஆம் தேதி நடைபெற்ற 60-வது பிறந்தநாள் விழாவில் ஆற்றிய உரை இது. இவர்கள் சொல்கிறார்கள் தேசத்துரோகி என்று. அவர்கள் சொல்கிற காரணத்தால் நான் தேசத்துரோகி ஆகிவிட மாட்டேன்.

இன்னும் ஒன்றிரண்டைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அரசு நாங்கள் பொறுப்பேற்ற பிறகு கூட எந்தவிதமான கட்சிக் கண்ணோட்டத்தோடும் எதையும் அணுகவில்லை என்பதற்குச் சொல்கிறன். நம்முடைய காங்கிரஸ் கட்சி கொறடா திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் ஒரு கடிதத்தை எழுதினார்கள். 'நீங்கள் சுதந்திரப் போராட்ட தியாகிகளுடைய மகன்களுக்கு மாத்திரம் தான் இப்போது மருத்துவக் கல்லூரி, என்ஜினியரிங் கல்லூரி ஆகியவற்றில் இடம் தருகிறீர்கள். சுதந்திரப் போராட்ட தியாகிகள் எல்லாம் வாழ்ந்து ரொம்ப காலம் ஆகிவிட்டது. இப்போது அவர்களுடைய மகன்கள் என்றால், அவர்கள் எல்லாம் 40,50 வயதாகி படித்தவர்களாக இருக்கிறார்கள். எனவே, அவர்களுடைய பேரன், பேத்திகளுக்கு வழங்க வேண்டும்; அந்த விதியைத் திருத்த வேண்டு'மென்று கேட்டார்கள். உடனடி யாக அதை ஏற்றுக் கொண்டேன்.

சென்ற ஆண்டில் திரு. செங்கல்வராயன் அவர்களுடைய பேத்திக்கு - செங்கல்வராயன் என்பவரையே பல காங்கிரஸ் காரர்களுக்குத் தெரியாது - திரு. கே. விநாயகம் அவர்களுடைய பேரனுக்கு மருத்துவக் கல்லூரியில் இடம். இந்த ஆண்டு திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடுவின் பேரன் ரவிக்கு, திரு.டி.கே.சண்முகம்



அவர்களின் பேத்தி அலமேலு மீனாவுக்கு, திரு. தெ.பொ. மீனாட்சி சுந்தரம் அவர்களின் பேத்திக்கு, மணலி கந்தசாமி அவர்களுடைய பேரனுக்கு மருத்துவக்கல்லூரியில் இடம் தந்த ஆட்சி, தேச துரோகிகளாக இருக்கிற எங்களுடைய ஆட்சி என்பதைத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனவே, தேச பக்தி என்றால் விலை என்ன என்று கேட்ப வர்கள் எங்களைப் பார்த்து தேச துரோகிகள் என்று கூறுகிற ஒரு காலம் இன்றைக்கு வந்திருக்கிறது. அதற்குக் காரணம் தேச துரோகி என்று சொல்லியாவது இந்த ஆட்சியைக் கலைத்து விட முடியாதா என்பது தான். நேற்றைக்கு தம்பி மோகன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். யார் யாரையெல்லாம் தேச துரோகிகளாக்கி இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார். அதற்காக இன்றைக்கு அவர்கள் சட்டம், ஒழுங்கு, அமைதி சீர்குலைவதற்கு எடுத்திருக்கிற முயற்சிகளைப் பற்றியும் இங்கே பேசியிருக்கிற எல்லா உறுப்பினர்களும் பேசியிருக்கிறார்கள். அன்றைக்குப் பேசிய நண்பர் வரதராசன் அவர்கள் பேசியிருக்கிறார்கள். அம்மையார் பாப்பா உமாநாத் அவர்கள் நேற்று முன்தினம் பேசியிருக்கிறார். இப்படி, பலபேர் இங்கே பேசியிருக்கிறார்கள். எல்லோரும் பேசியிருக்கிறீர்கள். ஆனால் திரு. ரமணி அவர்கள் குறிப்பிட்டதைப் போல இந்தச் சாலை மறியல் போராட்டம் எதற்காக நடைபெறுகிறது என்பதை எல்லோரும் மிக நன்றாக அறிவோம்.

சாலை மறியல் போராட்டத்திற்கு முதல் நாளோ மறு நாளோ, இந்த ஆட்சி கலைந்துவிடும் என்று எதிர்பார்த்து இந்தக் காரியம் இப்போது நடைபெறுகிறது. இதிலே தொண்டர்களைத் தூண்டி விடுவதற்குச் சென்றிருக்கிற முன்னணித் தலைவர்கள் என்னென்ன பேசினார்கள் என்ற தகவலும் அரசுக்குக் கிடைத் திருக்கிறது. ஏற்கெனவே கருணாநிதியின் தலையை வெட்ட வேண்டுமென்று சொல்கிற தலைவெட்டித் தம்பிகள் எல்லாம் என்ன பேசியிருப்பார்கள் என்று நான் சொல்லத் தேவை யில்லை. 'கருணாநிதி ரயிலடியிலிருந்து வெளியே போகக் கூடாது. அங்கேயே பிணமாகி விட வேண்டும்' என்றெல்லாம் பேசியிருக்கிறார்கள். நான் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. பிறந்தவர்கள் ஒருநாள் பிணமாகத்தான் ஆகவேண்டும். அதுவும்

# தமிழரசு

**1-2-1991**

இதழின்

# இலவச இணைப்பு

8-ஆம் வகுப்பு படித்த ஏழைப்பெண்களுக்குத் திருமணம் செய்து கொள்ள ரூ.5,000 நிதியுதவி செய்கிறார்கள் என அறிந்து வட்டாரச் சமூகநல விரிவாக்க அலுவலர் திருமதி பாத்திமா பீவி அவர்கள் மூலம் விண்ணப்பித்தேன்.

''எனக்கும் எங்கள் ஊரைச் சேர்ந்த சுப்பிரமணியம் அவர்களுக்கும் 8.11.1990 அன்று திருமணம் நடைபெற்றது. இந்தப் பண உதவி கிடைக்காவிட்டால் எனக்குத் திருமணம் செய்துவைக்க என் பெற்றோர்கள் மிகவும் கஷ்டப்பட்டிருப்பார்கள்''. ●

## அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்

★ காட்பாடி அருகே தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் 85 கோடி ரூபாய் செலவில் மோட்டார் பாகங்கள் மற்றும் இரும்புப் பவுண்டரி தொழிற்சாலை தொடங்கப்படுகிறதென்று மாவட்ட ஆட்சித் தலைவர் கூறினார் (21.12.90)

★ காவிரிப் படுகையிலே கிடைக்கும் பெட்ரோலிய எண்ணெய்யை மூலப்பொருளாகக் கொண்டு 5 இலட்சம் டன் திறன் கொண்ட சுத்திகரிப்பு ஆலை ஒன்று 120 கோடி ரூபாய் செலவில் நிறுவப்பட வுள்ளது என்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தெரிவித்தார் (21.12.90).

# டாக்டர் முத்துலட்சுமிரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டம்

**ம**துரை மாவட்டம், அலங்கா நல்லூரைச் சேர்ந்த கீழ்க்காணும் மூவர், டாக்டர் முத்துலட்சுமிரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத் தின்கீழ் பயனடைந்தவர்கள். அவர்களைச் சந்தித்து இத்திட்டம் பற்றிக் கேட்டபோது அவர்கள் கூறி னார்கள்:-



திருமதி சீதா

**திருமதி சீதா:**

''நான் 6-வது வார்டில் குடியிருக் கிறேன். என் கணவர் கூலி வேலை செய்கிறார். நான் கருவுற்றிருக்கும் போது, தமிழக அரசின் கர்ப்பிணிப் பெண்களுக்கு ரூ.200 நிதியுதவி செய்கிறது என கிராம நல செவிலி யர் மூலம் அறிந்து விண்ணப்பம் செய்து நிதியுதவி பெற்றேன். அப் பணத்தின் மூலம் சத்தான வைட்ட மின் மாத்திரைகளும், என் குழந் தைக்குத் தேவையான சொட்டு மருந்து களும் வாங்கினேன். இப்பண உதவி, பேறுகாலத்தில் மிகவும் உதவியாக இருந்தது. இவ்வுதவி செய்த தமிழக அரசுக்கும், தமிழக முதல்வர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி பிச்சைக்கனி:**

''என் கணவர் கூலி வேலை செய்கிறார். அன்றாடச் சாப் பாட்டுக்கே மிகவும் கஷ்டமாக இருந்த நிலையில், எனக்குத் தேவை யான சத்துணவு, வைட்டமின் மாத்திரை வகைகளை வாங்கிச் சாப்பிட இயலாத நிலை இருந்தது. அது சமயம், வட்டார சமூகநல விரிவாக்க அலுவலர் மூலம் நிதி யுதவி பெற்றேன். எனது பேறு காலத்தில் இந்த உதவியைச் செய்த தமிழக அரசுக்கு நன்றி''.

திருமதி பிச்சைக்கனி



திருமதி மாரி



**திருமதி மாரி:**

''என் கணவர் கூலி வேலை செய்து வருகிறார். எனக்கு இரண் டாவது பெண் குழந்தை பிறந் துள்ளது. அரசாங்கத்தில் கர்ப் பிணிப் பெண்களுக்கு ரூ.200 உதவியாகக் கொடுக்கிறார்கள் என்பதை நர்ஸ் அம்மா மூலம் அறிந்து அவர் மூலம் விண்ணப்பித் தேன். இந்தத் தொகை கிடைத்ததால் பசி தெரியாமல் காய்கறி, மருந்து, மாத்திரை வாங்கிச் சாப்பிட்டுப் பயன் பெற்றேன். தமிழக அரசின் இந்த உதவி பேறுகாலத்தில் மிகவும் உதவியாக இருந்தது.''

**- ச. பாண்டியன்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்**
**மதுரை மாவட்டம்**

இந்த நாட்டினுடைய சட்டம் ஒழுங்கு, அமைதியைக் காப்பாற்ற, தமிழ் மக்களுக்காகப் பாடுபட்டதற்கு, பணியாற்றியதற்கு ஒரு பரிசாக அது கிடைக்குமேயானால் நான் அந்தப் பரிசையும் பெறத் தயாராக இருக்கிறேன். அதற்காக நான் அஞ்சவில்லை.

ஆனால் இன்றைக்கு, தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றி 28-ஆம் தேதி சாலை மறியல் - 28-ஆம் நாள் உங்களுக்கெல்லாம் தெரியும். ஒவ்வொரு ஊரிலும் 4 கல்யாணங்கள், 10 கல்யாணங்கள் இருக்கும். அப்படிப்பட்ட முக்கியமான திருமண நாள். அந்தத் திருமண நாளில் ஒரு சாலை மறியல் போராட்டத்தை அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அந்த மறியல் போராட்டத்திற்கு பிரச்சார நாள் எது தெரியுமா? எம்.ஜி.ஆர். பிறந்த 17-ஆம் தேதி. அன்றைக்குப் பிரச்சாரம், ஆட்சியைக் கலைப்பதற்கு. எம்.ஜி.ஆர். பற்றிப் பேச வேண்டிய அவசியம் இல்லை. அதெல்லாம் ஒரு கேடயம் தானே எம்.ஜி.ஆர்.! அந்தப் பெயரை வைத்துக் கொண்டு இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்று பேசுங்கள் என்று வெளிப்படையாக அறிக்கை விட்டார்கள்.

அதைப்போல, 25-ஆம் தேதி இன்றைக்கு. இன்று, மொழிப் போர்த் தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்துகிற நாள். இந்த நாளில் கூட நீங்கள் சாலை மறியலைப் பற்றித் தான் பேச வேண்டும் என்று அவர்களுடைய சொற்பொழிவாளர்களுக்குத் தாக்கீது, வெளிப்படையாக அறிக்கை விடப்படுகிறது. நாம் இவ்வளவையும் சந்திக்கத்தான் போகிறோம். நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எவ்வளவு பலாத்காரத்தைத் தூண்டினாலும், எவ்வளவு வன்முறையைத் தூண்டினாலும், தமிழக மக்கள் அமைதியாக இருக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதைப் போல, ஆளும்கட்சியைச் சேர்ந்த தொண்டர்கள், முன்னணியினர், தோழமைக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள், இந்த நாட்டில் அமைதியை நிலைநாட்ட வேண்டுமென்று விரும்புகிறவர்கள் அமைதியாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு கையும் இன்னொரு கையும் மோதிக்கொண்டால் தான் சத்தம் கிடைக்கும். இங்கே பார்த்தோம். கடந்த 4,5 தினங்களாக நடைபெறுகிற சம்பவங்களில் ஆளும் கட்சியினர் மிக அமைதியாக



இருந்த காரணத்தால், தோழமைக் கட்சியினர் அமைதியாக இருந்த காரணத்தால், பெரிய அமளிகள் உருவாகாமல் போனதை நாம் பார்த்திருக்கிறோம். அது ஒரு சான்றாக அமைந்திருக்கிறது. அதைப்போல சாலை மறியலில் ஈடுபடுகிறவர்கள் எவ்வளவு பலாத்காரத்தைத் தூண்டி விட்டாலும், திருநாவுக்கரசு அவர்கள் சொன்னதைப் போல, 10 பஸ், 12 பஸ் ஒரு மாவட்டத்திற்கு எரிக்க வேண்டுமென்று திட்டங்கள் இருந்தாலும் கூட, சட்டம் ஒழுங்கு, அமைதியைக் காப்பாற்றுவது எப்படி என்பதை இந்த அரசு சிந்தித்துச் செயல்படும் என்ற நம்பிக்கையை உங்களுக்கு எல்லாம் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆட்சியைக் கலைக்கலாம். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியைக் கலைக்கலாம் என்று எண்ணினால், அது மக்களுக்கு விடப்படுகின்ற அறைகூவல் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். மக்களுடைய சுயமரியாதைக்கு விடப்படுகின்ற சவால் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏன் என்றால், மக்கள் பார்த்து ஒரு ஆட்சியை உருவாக்கி இருக்கிறார்கள். அந்த ஆட்சியைக் கலைப்போம் என்று சொல்வது அந்த மக்களுக்கு எதிராக விடப்படுகின்ற சவால், அந்தச் சவாலை மக்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருப்பார்கள். இப்படிச் சொல்வதால் அந்தக் கிளர்ச்சிகளைப் பொது மக்கள் பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற அந்தப் பொருளில் நான் பேசவில்லை. ஒரு துளி வன்முறைக்கும் இடம் இல்லாத வகையில், அவர்களுடைய சாலை மறியல் நடைபெறுவதற்குத் தகுந்த ஏற்பாடுகளை எல்லாம் இந்த அரசு செய்யும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து, அதற்கான ஒத்துழைப்பை அனைவரும் வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இன்னும் பல விஷயங்களைப் பேச வேண்டும் என்றிருந்தாலும் கூட, அவைகளை எல்லாம் வரவு-செலவுத் திட்ட பொது விவாதத்திலே வைத்துக் கொள்கிறேன் என்று கூறி, நேரம் அதிகமாகிவிட்ட காரணத்தால், இந்த அளவில் உங்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்து, இந்த அளவில் அமைகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது.

**திரு. எஸ்.டி. உகம்சந்த்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிறு விளக்கத்தை மாண்புமிகு முதலமைச்சர்

வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில்:

# மாநில அறிவியல் கண்காட்சி

வட ஆர்க்காடு - அம்பேத்கர் மாவட்டம் வேலூரில், 1991 ஜனவரித் திங்கள் 3-ஆம் நாள் மாநில 17-வது அறிவியல் கண் காட்சி சிறப்புற நடந்தது. மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் திரு துரை முருகன் அவர்கள் கண்காட்சியைத் துவக்கிவைத்தார். தேசிய கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனமும், தமிழ்நாடு அரசும் இணைந்து இக் கண்காட்சியை நடத்தின.

16 மாவட்டங்களிலிருந்து 58 அரசு உயர் நிலைப்பள்ளிகள், 70 தனியார் பள்ளிகளைச் சேர்ந்த மாணவ மாணவிகள் 250 பேர் இந்தக் கண்காட்சியில் கலந்து கொண்டு, 525 அறிவியல் படைப்புகளைக் காட்சிக்கு வைத்திருந்தனர். ''கிராமமும் அறிவியலும்'' என்னும் கருத்தில் காட்சிப் பொருட்கள் தயாரித்து வைக்கப்பட்டிருந்தன.

கிராமமக்களின் அறிவை வளரச் செய்யும் வகையிலும், அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையிலும் பல புதிய கருவிகளை மாணவர்கள் கண்டுபிடித்து, கண்காட்சியில் இடம் பெறச் செய்திருந்தனர்.

### தண்ணீர் மற்றும் மின்சாரம்

தண்ணீர் மற்றும் மின்சாரப் பிரச்சினைகளைச் சமாளித்து, அவற்றைச் சிக்கனமாகப் பயன் படுத்தும் முறையும், நீர் நிறைந்த சப்பாத்தி, எலுமிச்சம்பழம் ஆகிய பொருட்களிலிருந்து மின்சாரம் தயாரித்துப் பயன்படுத்த முடியும் என்பதையும் விளக்கும் மாணவர்களின் கண்டுபிடிப்புகள் அனைவரையும் கவர்ந்தன.

### விவசாயம்

புதிய நீர்ப்பாசன முறை, டிராக்டரைக் கொண்டு நிலம் உழுதல் , சமப்படுத்துதல், பளுதூக்குதல் (கிரேன்), ஆழக்குழி தோண்டுதல், வரப்பு அமைத்தல், பொருட்களை எடுத்துச் செல்லுதல், பாத்தி கட்டுதல், பொருட்களை வரிசையாக அடுக்குதல், மண் உடைத்தல் , தானே வைக்கோல் எடுத்து வைத்தல் போன்ற வேலைகளைச் செய்யும் ஒரு நவீன வாகனம் - ஒரு பள்ளி மாணவனின் சிறந்த படைப்பு ஆகும்.

ஆகாயத் தாமரையின் தண்டை வைத்து காகித அட்டை, சோப்பு, பை, மை, முகப்பவுடர் ஆகிய தயாரிப்புக் காட்சிகள் கண்காட்சியில் இடம் பெற்றிருந்தன. மாதிரிக் கிராமம் ஒன்று காட்சியில் இடம் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் அவர்கள் பேசும்போது, ''நான் படிக்கும் காலத்தில் போதிய உபகரணங்கள் இல்லாமல், செய்முறைப் பயிற்சி பெறுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. ஆனால், இன்று அவ்வாறில்லை, மாணவர்களின் புதிய புதிய கண்டு பிடிப்புகளைப் பார்வையிட்டேன். மாணவர்களிடையே ஆற்றல்கள் மண்டிக் கிடக்கின்றன. அவை அனைத்தையும் வெளிக் கொணர்வது இக்கண்காட்சியின் முயற்சியாகும். மாணவர்களின் படைப்பாற்றல்கள், கண்டுபிடிப்புகள் நமக்கு வியப்பூட்டுபவை மட்டுமல்ல, நம்மை மகிழ வைப்பவை. சிந்திக்க வைப்பவை ஆகும். வருங்கால அறிவியல் அறிஞர்களை உருவாக்குவதே இக்கண்காட்சியின் நோக்கமாகும்'' என்றார்.





மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மா. சத்தியமூர்த்தி இ.ஆ.ப. அவர்கள் தமது தலைமை உரையில் ''பங்கு பெறும் மாணவ மாணவியர்களில் சிலரேனும் புவியீர்ப்புச் சக்தியைக் கண்டுபிடித்த - ஐசக் நியூட்டனாகவோ, வானொலியைக் கண்டு பிடித்த - மார்க்கோனியாகவோ, ஆகாய விமானத்தைக் கண்டுபிடித்த ரைட் சகோதரர்களாகவோ, மின் விளக்கைக் கண்டுபிடித்த - தாமஸ் ஆல்வா எடிசனாகவோ, ரயில் எஞ்சினைக் கண்டுபிடித்த - ஜார்ஜ் ஸ்டீபனாகவோ, டெலஸ்கோப்பைக் கண்டுபிடித்த - கலீலியோவாகவோ, நம் நாட்டில் அணுசக்தியை உருவாக்கிய ஹோமி ஜகாங்கிர் பாபாவாகவோ உருவானால், நம் நாடு பெருமை பெறும்'' என்றார்.

தமிழகப் பள்ளிக் கல்வி இயக்குநர் திரு. தி. நாச்சிமுத்து அவர்கள் பேசும்போது, ''நம் நாட்டின் முன்னேற்றம் அறிவியல் வளர்ச்சியின் சிறப்பைப் பொறுத்தே அமையும் என்பதைக் கருத்தில் கொண்டே, கல்வித்துறை இக்கண்காட்சியை அமைத்து மாணவர்களின் அறிவுத்திறத்தையும், ஆற்றலையும் வெளிப்படுத்த உதவியது. சிற்றூர்ப் புறங்களில் அறிவியல் எழுச்சி தோன்றிட, பரவிட இக்கண்காட்சி தூண்டுகோலாக அமையும் . நாளும் புதுமையைத் தேடும் நாட்டத்தையும், மேலும் முன்னேறும் வேட்கையினையும் நாம் பெற, இவ்வறிவியல் கண்காட்சி நமக்கு வழி காட்டும், வழி நடத்தும், வாழ்வில் ஒளிபரப்பும்'' என்றார்.

எஸ்.டி. ராஜேந்திரன்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டம்.


தமிழரசு
சந்தா விவரம்
தமிழ் ......... ஓராண்டு - ரூ.24
அரையாண்டு - ரூ.12
ஆங்கிலம் ... ஓராண்டு - ரூ. 12
(அரையாண்டு சந்தா கிடையாது)
விவரங்களுக்கு
உதவி இயக்குநர் தமிழரசு,
(விற்பனை மற்றும் விநியோகம்)
அரசினர் தோட்டம், சென்னை-600 002.

சிறு சேமிப்பு:

# முத்தான மூன்று திட்டங்கள்

இந்தியாவிலேயே முதன் முதலாகச் சிறு சேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்பவர்களுக்கு ''இன்ஸூரன்ஸ் திட்டம்'' ஒன்றைத் தமிழக அரசு அறிமுகப்படுத்தி உள்ளது.

இந்தச் சிறப்புத் திட்டத்தைத் தமிழக அரசு மத்திய அரசுக்குச் சொந்தமான ''யுனைடெட் இந்தியா இன்ஸூரன்ஸ் நிறுவனத்துடன்'' இணைந்து செயல்படுத்துகிறது. இத்திட்டத்தின் நோக்கம், தேசிய சேமிப்புத் திட்டங்களின் மூலம் மக்களிடையே சேமிக்கும் பழக்கத்தை வளர்ப்பதும். முதலீடுதாரர்களுக்கு ''விபத்துக்கான இன்ஸூரன்ஸ்'' சலுகைகளை அளிப்பதுமாகும்.

**திட்டத்தின் காலம்**

1.1.1991 முதல் 31.3.1991 வரை சிறு சேமிப்பில் தமிழ்நாட்டில் முதலீடு செய்தவர்களுக்கு, முதலீடு செய்த நாளிலிருந்து ஓராண்டுக் காலத்திற்கு இந்த ''இன்ஸூரன்ஸ் வசதி'' விபத்திற்குக் கிடைக்கும்.

**இன்ஸூரன்ஸ் கட்டணம் (Premium) செலுத்துதல்**

**யுனைடெட் இந்தியா இன்ஸூரன்ஸ் நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டிய இன்ஸூரன்ஸ் கட்டணத்தைச் சிறுசேமிப்பு முதலீடுதாரர்களின் சார்பாகத் தமிழ்நாடு அரசே செலுத்தி விடுகிறது.**

**தகுதி பெறும் திட்டங்கள்**

கீழ்க்கண்ட சிறுசேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்பவர்களுக்கு, ஒரு சதவிகிதம் ஊக்கத் தொகையுடன் ''விபத்திற்கான இன்ஸூரன்ஸ் வசதியும்'' தமிழக அரசு அளிக்கிறது.

1. கிஸான் விகாஸ் பத்திரம், 2. தேசிய சேமிப்புப் பத்திரம் 8- வது வெளியீடு, 3. தேசிய சேமிப்புத் திட்டம் 1987, 4. 15 ஆண்டு பொது சேம நலநிதித் திட்டம், 5. அஞ்சலக மாதாந்திர வருவாய்த் திட்டம், 6. அஞ்சலக கால வைப்புத் திட்டம், 7. ஓய்வு பெறும் அரசு ஊழியர்களுக்கான சேமிப்புத் திட்டம் 1989.

**திட்டத்தின் பயன்கள்**

சிறுசேமிப்பு முதலீடுதாரர்களுக்கு ''விபத்திற்கான இன்ஸூரன்ஸ் திட்டம்'' மூலம் கீழ்க்கண்ட சலுகைகள் கிடைக்கும்:

முதலீடு தொகை ரூ.1,000 முதல் ரூ.10,000 வரை தனிநபர் விபத்திற்கான இன்ஸூரன்ஸ் தொகை ரூ.20,000, தமிழக அரசால் இன்ஸூரன்ஸ் நிறுவனத்திற்குச் செலுத்தப்படும் தொகை (ஆண்டிற்கு) ரூ.6.

முதலீடு தொகை ரூ.10,001 முதல் ரூ.20,000 வரை தனிநபர் இன்ஸூரன்ஸ்ரூ.30,000, தமிழக அரசால் இன்ஸூரன்ஸ் நிறுவனத்திற்குச் செலுத்தப்படும் தொகை (ஆண்டிற்கு) ரூ.9.

**அ·ரகுமான்கான்** எம்.எல்.ஏ.,
துணைத் தலைவர்
மாநில தேசிய சிறுசேமிப்பு
ஆலோசனைக் குழு.

முதலீடு தொகை ரூ.20,001ம் அதற்கு மேலும் தனிநபர் விபத்திற்கான இன்ஸூரன்ஸ் தொகை ரூ.50,000, தமிழக அரசால் இன்ஸூரன்ஸ் நிறுவனத்திற்குச் செலுத்தப்படும் தொகை (ஆண்டிற்கு) ரூ.15.

**விபத்துச் சலுகைகள்**

அ. மரணம் மட்டும் - 100 சதவிகிதம்.
ஆ. இரண்டு கால்களையோ/கைகளையோ, இரண்டு கண்களையோ (அ) ஒரு கை/கால் மற்றும் ஒரு கண்ணை இழத்தல் - 100 சதவிகிதம்
இ. ஒரு கால்/கையோ (அ) ஒரு கண்ணோ இழத்தல் - 50 சதவிகிதம்
ஈ. மேற்குறிப்பிட்ட வகைகளில் இல்லாமல் நிரந்தர முழுமையான தகுதியற்றவராக ஆக்கப்படும் காயங்களுக்கு - 100 சதவிகிதம்.
உ. நிரந்தர, பகுதி தகுதியற்றவராக ஆக்கப்படுவதற்கு, தகுதியற்ற நிலையைப் பொறுத்து.

**பாலிஸி சான்றிதழ்களை வழங்குதல்**

யுனைடெட் இந்தியா இன்ஸூரன்ஸ் நிறுவனம் அளிக்கும் பாலிஸி சான்றிதழ்களை முதலீடுகளுக்கான ஒரு சதவிதிகித ஊக்கத் தொகையுடன் சிறு சேமிப்பு இயக்குநர் அலுவலகத்திலும், மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (சிறுசேமிப்பு) அலுவலகத்திலும் முதலீடுதாரகளுக்கும்/முகவர்களுக்கும் வழங்கத் திட்டமிடப்பட்டு வருகிறது.



1.1.1991 முதல் 31.3.1991 முடிய சிறு சேமிப்புத் திட்டங்கள் மூலம் ரூ.400 கோடி திரட்டப்படலாமென்றும், ஏறக்குறைய 3 இலட்சம் முதலீடுதாரர்கள் ஜனவரி மாதம் மட்டும் இன்ஸூரன்ஸ் திட்டத்தால் பயன் பெறலாமென்றும், சிறுசேமிப்புத் துறையால் எதிர்பார்க்கப்படுகிறது.

**மார்ச் 31, 1990 வரை சிறுசேமிப்பு இலவசப் பரிசுக் கூப்பன் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது**

**1.6.90 முதல் 31.12.90 முடிய சிறுசேமிப்பு முதலீடுகளுக்குச் செயல்படுத்தப்பட்டு வந்த ''இலவசப் பரிசுக் கூப்பன் திட்டம்'' 1.1.91 முதல் 31.3.91 வரையிலும் விரிவுபடுத்தப் பட்டுள்ளது.**

**சென்னை நகரில் இலவசப் பரிசுக் கூப்பன் வழங்குதல்**

சென்னை நகரில் இதுவரை வெளியிடப்பட்ட 4 வரிசைகளில் ((A)) மற்றும் ((B)) வரிசைகளுக்கு ஏற்கெனவே குலுக்கல் நடத்தப்பட்டுவிட்டது, ((C)) மற்றும் ((D)) வரிசைக்கான குலுக்கல் சென்னையில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மார்ச் 91 முடிய ஒவ்வொரு ரூ.5 கோடி முதலீட்டிற்கும், ஒரு இலட்சம் கூப்பன்கள் கொண்ட ஒரு வரிசை வெளியிடவும், ஏற்கெனவே ரூ.500 முதலீட்டிற்கு ஒரு கூப்பன் வழங்கி வந்தது போல், தொடர்ந்து முதலீடுதாரர்களுக்கு வழங்கிடவும் நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

**மாவட்டங்களில் இலவசப் பரிசுக் கூப்பன் வழங்குதல்**

கீழ்க்கண்ட மாவட்டங்களில் (A) வரிசைக்கான குலுக்கல் ஏற்கெனவே நடத்தப்பட்டுவிட்டது.

பெரியார் மாவட்டம், சேலம் மாவட்டம், கோவை மாவட்டம், திருச்சி மாவட்டம்..

கீழ்க்கண்ட மாவட்டங்களில் (A) வரிசைக்கான குலுக்கல் விரைவில் நடத்தப்பட இருக்கிறது.

செங்கை – அண்ணா மாவட்டம், தென் ஆர்க்காடு மாவட்டம், நெல்லை-கட்டபொம்மன் மாவட்டம், திருவண்ணாமலை- சம்புவராயர் மாவட்டம்.

இதர அனைத்து மாவட்டங்களிலும், உடனடியாக (A) வரிசைக்கான குலுக்கல் நடத்த மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**மார்ச் 91 முடிய ஊக்கத்தொகை முதலீடுதாரர்களுக்கு வழங்கும் திட்டம் நீடிக்கப்பட்டுள்ளது.**

1.6.90 முதல் 31.12.90 வரை சிறுசேமிப்பு முதலீடுதாரர்களுக்குத் தமிழக அரசால் வழங்கப் பட்டு வந்த ஒரு சதவிகித ஊக்கத்தொகை வழங்கும் திட்டம், 1.1.91 முதல் 31.3.91 முடிய நீட்டிக்கப் பட்டுள்ளது.




தேசிய சேமிப்புப் பத்திரம் 8-வது வெளியீட்டிலும் 15 ஆண்டு பொது சேம நல நிதி கணக்கிலும் செய்யும் முதலீடுகளுக்கும், தேசிய சேமிப்புத் திட்டம் 1987-இல் செய்யும் முதலீடுகளுக்கும் வருமான வரிச் சட்டம் பிரிவு முறையே 88 மற்றும் 80 - சிசிஏ பிரிவின்படி வருமான வரிச் சலுகை அளிக்கிறது.

**சிறுசேமிப்பு வசூல்**

கடந்த நவம்பர் 90 முடிய தமிழ்நாட்டில் சிறுசேமிப்புத் திட்டங்கள் மூலம் ரூ.372.54 கோடி திரட்டப்பட்டுள்ளது.

**சமூக நலத் திட்டங்கள்**

அந்தந்த மாநிலத்தில் சிறுசேமிப்புத் திட்டங்கள் மூலம் வசூலாகும் தொகையில் 4-இல் 3 பங்கை அந்தந்த மாநில அரசுகளுக்கு நீண்ட காலக் கடனாக அளிக்கிறது. மாநில அரசு வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றுவதற்கும், சமூக நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கும் பயன் படுத்துகிறது.

**முத்தான மூன்று திட்டங்களின் மூலம் 3 தவணைகள்**

தமிழ்நாட்டில் 1.1.91 முதல் 31.3.91 முடிய சிறுசேமிப்பில் முதலீடு செய்யும் முதலீடுதாரர்களுக்கு, 1. இலவசப் பரிசுக் கூப்பன் திட்டம், 2. ஒரு சதவிகிதம் ஊக்கத்தொகை வழங்கும் திட்டம், 3. விபத்திற்கான தனிநபர் இன்ஸூரன்ஸ் திட்டம் ஆகிய மூன்று திட்டங்களின் மூலம் மகத்தான சலுகைகளைத் தமிழக அரசு முதலீடுதாரர்களுக்கு அளிக்கிறது.

பொதுமக்களும்/முகவர்களும்/முதலீடுதாரர்களும், 31.3.91 முடிய சிறுசேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்து மேற்குறிப்பிடப்பட்ட அனைத்துச் சலுகைகளையும் பெற்றுப் பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

# பெரியார் மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

- வி. கே. சுப்புராஜ், இ.ஆ.ப.,
ஆட்சித் தலைவர்,
பெரியார் மாவட்டம்.

பெரியார் மாவட்டம், பல் வேறு துறைகளில் பாங்காய் வளர்ந்து வருகின்றது. நலிந்தோர் நலம், குடும்பநலம், கல்வி, வேளாண்மை, சிறுசேமிப்பு, கூட்டுறவு இப்படிப் பல வகைகளில் அதன் வளர்ச்சிப் பணிகள் செவ்வனே நடைபெற்று வருகின்றன.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின் கீழ், 840 மகளிருக்குத் திருமண நிதியுதவியாகத் தலா ரூ.5 ஆயிரம் வீதம், ரூ.42 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை முழுமையாகச் செலவிடப்பட்டுள்ளது.

விதவை மகள் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ், 50 மகளிர்களுக்குத் தலா ரூ.2 ஆயிரம் வீதம் ரூ.1 இலட்சம் நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது. கூடுதல் நிதி ஒதுக்கீடு ரூ.44 ஆயிரம் அரசிடம் கோரப்பட்டுள்ளது.

உடல் ஊனமுற்ற நபர்களுக்குக் கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், 509 நபர்களுக்கு ரூ.24,274 வழங்கப்பட்டுள்ளது. மேலும் 42 நபர்களுக்கு வழங்கப்படும்.

**கல்வி உதவித்தொகை**

பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு போஸ்ட்மெட்ரிக் கல்வி உதவித் தொகையாக வழங்குவதற்கு ரூ.13.68 இலட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டதில், இதுவரை 1174 மாணவ மாணவியர்களுக்கு ரூ.11.87 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இலவசக் கல்வித் திட்டத்தின் கீழ்-அனைத்துக் கட்டணங்களும் ஈடு செய்யும் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடான ரூ.7.85 இலட்சம் பெறப்பட்டதில், இதுவரை 724 மாணவ மாணவியர்களுக்கு ரூ.5.30 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

இலவச தொழிற்கருவிகள் வழங்குதல் திட்டத்தின் கீழ், இதுவரை 188 நபர்களுக்குச் சலவைப் பெட்டிகளும், 37 நபர்களுக்குச் சவரக் கருவிகளும், 36 கல்லுடைக்கும் தொழிலாளர்களுக்குத் தொழிற் கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

இம்மாவட்டத்தில் ரூ.12.54 இலட்சம் மதிப்புள்ள 14.485 எக்டர் பரப்பில் 729 நபர்களுக்குப் பட்டாக்கள் வழங்க அரசிடம் கோரப்பட்டுள்ளது.



ஆதிதிராவிடர்களுக்கு 1,900 இலவசத் தொகுப்பு வீடுகள் ரூ.193.80 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன. இதில் இதுவரை 1,500 தொகுப்பு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

சொந்தக் கட்டடம் இல்லாத ஊராட்சி மற்றும் பேரூராட்சி மன்றங்களுக்கு ரூ.54.80 இலட்சம் மதிப்பீட்டில் 80 சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இதில் இதுவரை 68 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

பள்ளிக் கட்டடமே இல்லாத 21 இடங்களில் புதிய பள்ளிக் கட்டடங்கள் ரூ.26.25 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன. இதில் இதுவரை 16 பள்ளிக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ஊராட்சி மற்றும் பேரூராட்சிகளில் ரூ.94.115 இலட்சம் மதிப்பீட்டில் 552 பணிகள் எடுக்கப்பட்டதில் இதுவரை 379 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதுவரை இத்திட்டத்தின் கீழ் ரூ.573.176 இலட்சம் செலவிடப்பட்டுள்ளதோடு, 23.650 இலட்ச மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

சாண எரிவாயுத் திட்டத்தின் கீழ், நியமனக் குறியீடான 1,075 கலன்களுக்கெதிராக, இதுவரை 401 கலன்கள் நிறுவப்பட்டுள்ளதோடு 332 கலன்கள் நிறுவும் பணி நடைபெற்று வருகிறது.

டாக்டர் முத்துலட்சுமிரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தின் கீழ், கர்ப்பிணிப் பெண்களுக்குத் தலா ரூ.200 வீதம் 8,500 நபர்களுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டதில், இதுவரை 7,922 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

சிறுசேமிப்புத் திட்டத்தின் கீழ், குறியீடான ரூ.20 கோடிக்கு இதுவரை ரூ.8.75 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.

**குடும்ப நலம்**

கடந்த ஆண்டு நவம்பர் திங்களில் 1,395 தகுதி வாய்ந்த தம்பதியர்களுக்குக் குடும்ப நல அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. இம்மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்ட இலக்கு 15.000. இதில் இதுவரை 9,399 குடும்ப நல அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டு, 62.6 சதவீத சாதனை எய்தப்பட்டுள்ளது.

நவம்பர் திங்கள் வரை குடும்ப நல அறுவைச் சிகிச்சைச் சாதனையில் இம்மாவட்டம் 5-வது இடத்தை வகிக்கிறது. இதுவரை 58 லேப்ராஸ் கோபிக் முகாம்கள் நடைபெற்றுள்ளன.

> **தனி உடைமைக்கும் பொது உடைமைக்கும் இடையே அமைக்கப்பட்ட பாலம்தான் கூட்டுறவு.**
>
> **— அறிஞர் அண்ணா**

**வேளாண்மை**

பெரியார் மாவட்டம், பவானி சாகரில் உள்ள அரசு விதைப் பண்ணையில் நெற்பயிருக்கு உயிர் உரமாகப் பயன்படும் நீலப்பச்சைப் பாசிக்கு உற்பத்தி மையம் அமைக்கப்படுகிறது. தமிழகத்தில் இதுவரை ஒரே ஒரு மையம் செங்கை அண்ணா மாவட்டத்தில் திருவூரில் இயங்கி வந்தது. இந்த மையம் இப்போது பவானிசாகருக்கு மாற்றப்பட்டுள்ளது. இதில் நீலப்பச்சைப் பாசி தவிர அசோலா எனப்படும் மற்றொரு உயிர் உரத்தின் வித்துக்களும் செய்யப்பட உள்ளன.

**ஆதிதிராவிட நலச் சிறப்புத் திட்டம்**

பெரியார் மாவட்ட ஆதிதிராவிட விவசாயிகளின் நலனுக்கென 50 சத மானிய விலையில் பயறு வகை விதைகள், பசுந்தாளுர விதைகள், நுண்ணுயிர் மற்றும் நுண்ணூட்டகங்கள் மற்றும் தெளிப்பான்கள் ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன. ஆதிதிராவிட விவசாயி ஒருவருக்கு அதிகபட்சம் ரூ.750 வரை இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது. இதுவரை 807 விவசாயிகள் மொத்தம் சுமார் ரூ.48,000 மானியமாகப் பெற்றுப் பயனடைந்துள்ளார்கள். இப்பணிக்கென இன்னும் சுமார் ரூ.2.39 இலட்சம் மானிய உதவியாக வழங்கப்படவுள்ளது.

தமிழகத்தில் மொத்தம் 100 புதிய வேளாண் விரிவாக்கத் துணை மையங்கள் துவக்கப்படவுள்ளன. இதில் பெரியார் மாவட்டத்தில் மட்டும் 5 இடங்களில் இத்துணை மையங்கள் அமைகின்றன. கொடுமுடி வட்டாரம் கரும்மாண்டாம் பாளையத்திலும், மொடக்குறிச்சி வட்டாரம் பூந்துறையிலும், ஈரோடு வட்டாரத்திலும் நசியனூரிலும், ஆக 3 துணை மையங்கள் இதுவரை துவங்கப்பட்டுள்ளன. தாராபுரம் வட்டாரத்தில் சத்திரம் பகுதியில் ஒன்றும், ஈரோடு வட்டாரம் பி.பி. அக்ரகாரத்திலுமாக இரு மையங்கள் விரைவில் துவங்கப்படவுள்ளன.

துணை மையங்கள் துவங்கப்பட்ட நாள் முதல் தினசரி ரூபாய் ஆயிரத்திற்கும் குறைவில்லாமல் விற்பனையாகி வருவதிலிருந்து, இந்தத் துணை மையங்களின் அவசியத்தை உணரலாம். நீண்ட தொலைவு சென்று பெரும் பொருட் செலவில் இடுபொருட்களை விவசாயிகள் சிரமத்துடன் வாங்கி வரும் குறைபாடு இத்தகைய துணைக் கிடங்குகளால் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது.

பெரியார் மாவட்டம் தாராபுரம் கோட்டம் நாராயணபுரம் கிராமத்தில் ஒருமித்த பரப்பாக 25 ஏக்கரில் மரப்பண்ணை அமைக்கப்படுகிறது.

''சிடா'' எனப்படும் ஸ்வீடன் நாட்டினரின் அகில உலக மேம்பாட்டுக் கழகம் இந்த மரப்பண்ணையை அமைப்பதற்கென ரூ.86,750 நிதியை வழங்கியுள்ளது. மரப் பண்ணை அமைக்கும் பணி ஏற்கெனவே துவங்கப்பட்டு, நிலச்சீர் திருத்தம் மற்றும் மண் வள மேம்பாட்டுப் பணிகள் முடிவடைந்து, மரக்கன்றுகள் நடும் பணியும் ஆழ் துழாய்க் கிணறு அமைக்கும் பணியும் துவங்கியுள்ளது.

''நவப்ரா'' திட்டத்தின் கீழ் ''மித்ர கிசான்''கள் எனப்படும் முன்னோடி விவசாயிகள் கிராமத்திற்கு மூவர் வீதம் தேர்ந்தெடுக்கப்பட்டு, பயிர் சாகுபடி மற்றும் கலப்புப் பண்ணை பற்றிய பயிற்சி அனைத்துத் துறைகளின் உதவியுடன் வழங்கப்பட்டுள்ளது.



கடந்த ஆண்டு நவம்பர் திங்கள் முடிய குறுகிய காலக் கடன் ரூ.109.10 இலட்சமும், மத்திய காலக் கடன் ரூ.70.56 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளன. 12 கூட்டுறவு நில வள வங்கிகள் மூலம் நவம்பர் திங்கள் முடிய ரூ.82.30 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. நவம்பர் திங்கள் முடிய 266 கூட்டுறவு வங்கியின் மூலம் ரூ.2444.56 இலட்சம் நகைக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

சத்தியமங்கலம் வனக்கோட்டத்தில் பருவ மழையைப் பயன்படுத்தி சுமார் 2,000 எக்டர் நிலப்பரப்பில் விமானம் மூலம் விதை தூவும் பணி செய்யப்பட்டது. இப்பணிக்காக இதுவரை ரூ.3.50 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலம், 15 தொழில் நிறுவனங்களுக்குச் சிறுதொழில் துவங்க ரூ.22.61 இலட்சமும், 3 மருத்துவர்களுக்கு ரூ.6.45 இலட்சமும் ஒரு நபருக்கு மகிளா உதய நிதித் திட்டத்தின் கீழ் ரூ.1.75 இலட்சமும் மற்றும் சுலபக் கடன் திட்டத்தின் கீழ் ரூ.0.25 இலட்சமும் கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டில் 188 நிறுவனங்களுக்குப் பல்வேறு திட்டங்களின் கீழ் ரூ.215.46 இலட்சம் கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கீழ்பவானித் திட்ட பிரதான வாய்க்காலின் 1990-91-ஆம் ஆண்டு முதல் முறைப் பாசனத்திற்குச் சுமார் 1.00 இலட்சம் ஏக்கர் நிலங்களுக்கு 31.8.90 முதல் தண்ணீர் திறந்து விடப்பட்டு ஆயக் கட்டுப் பகுதிகளில் விவசாயப் பணிகள் நடந்தேறி வருகின்றன.

**(31.12.90 அன்று செய்தியாளர்கள் கூட்டத்தில் தெரிவித்த தகவல்களிலிருந்து)**

களில் உறுப்பினர் பதவிகளில் 30 சதவீதம் பெண்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. பள்ளிக்கூடங்களில் 1-ம் வகுப்பு முதல் 3-ம் வகுப்பு வரையிலான பணிக் காலியிடங்கள் பெண் ஆசிரியர்களைக் கொண்டே நிரப்பப்படுகின்றன. ஏழை, நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கு, பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. 1989-ல் அறிமுகப்படுத்தப்பட்ட மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்கீழ் இதுவரை ரூ. 17.30 கோடி செலவில் 34,595 பெண்களுக்கு உதவியளிக்கப்பட்டுள்ளது. அதே போல் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தின் கீழ், ஒருவருக்கு ரூ. 200 என்ற விதத்தில் இதுவரை 3,71,805 கர்ப்பவதிகளுக்கு ரூ. 7.44 கோடி உதவியளிக்கப்பட்டுள்ளது,

பெண்ணின் பெருமை - உரிமை - இவை பற்றி சொல்லளவில் இருந்த நிலை மாற்றி செயல்வடிவம் தர, இந்த அரசு ஆற்றியுள்ள சாதனைகளில் அருஞ்சாதனையாக — இந்து வாரிசுரிமைச் சட்டத்தை திருத்தியதன் மூலம் ஆண் வாரிசுகளுக்குச் சமமாக பெண் வாரிசுகளுக்கும் சொத்துரிமை வழங்கியுள்ளது.

**22.** சத்துணவுத் திட்டத்தை தொடர்ந்து நடத்துவதுடன், மேலும் உலக வங்கி உதவியுடன் ரூ. 350 கோடி செலவிலான புதிய ஊட்டச் சத்து திட்டமொன்று இந்த மாதத்தில் தொடங்கப்படும். இத் திட்டம் படிப்படியாகச் செயல்படுத்தப்படும். இத் திட்டம், 500-க்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு குடியிருப்புப் பகுதியிலும் தாய்-சேய் நலம் பாதுகாக்கவும், ஊட்டச் சத்து வழங்கும் புதிய நிலையங்களை ஏற்படுத்தவும் வகை செய்யும். கருவுற்ற மகளிருக்கும், ஆறு மாதத்திலிருந்து மூன்றாண்டுகள் வரையுள்ள சிறு குழந்தைகளுக்கும் முழு மருத்துவப் பாதுகாப்பும், ஊட்டச் சத்தும் அளிக்க இத் திட்டம் வகை செய்யும். நமது சமுதாயத்தில், நோயால் எளிதில் பாதிக்கப்படக்கூடிய கருவுற்ற மகளிருக்கும் சிறு குழந்தைகளுக்கும் இப்புதிய நிலையங்கள் மிகச் சிறந்த உடல் நலப் பாதுகாப்பை அளிக்கும்.

**23.** இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஊரக அடிப்படை வசதிகள் பணித் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு தொடக்கப் பள்ளிக்கும் ஒரு நிலையான கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 2,000 ஊராட்சிக் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்படும். 500 முதல் 1,000 பேர் வரை மக்கள் தொகை கொண்ட கிராமப்புறப் பகுதிகளுக்கு மொத்தம் ரூ. 44.25 கோடி செலவில் நிலையான சாலைகளை நடப்பாண்டில் அமைக்கும் பெருந்திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

> **"பெண்ணின் பெருமை - உரிமை - இவை பற்றிச் சொல்லளவில் இருந்த நிலை மாற்றி, செயல் வடிவம் தர, இந்த அரசு ஆற்றியுள்ள இந்து வாரிசுரிமைச் சட்டத்தைத் திருத்தியதன் மூலம், ஆண் வாரிசுகளுக்குச் சமமாகப் பெண் வாரிசுகளுக்கும் சொத்துரிமை வழங்கியுள்ளது."**

> [illegible] ரூ.2,000 [illegible] கட்டி [illegible] 1,000 [illegible] பெருந்திட்டமொன்று [illegible] மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**24.** ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு முதல் முறையாக 1990 ஜூலைத் திங்கள் முதற்கொண்டு மின்வெட்டு முழுமையாக நீக்கப்பட்டுள்ளது. வடமாநிலங்களிலுள்ள நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து வரப்பெறும் நிலக்கரி முழுமையாகத் தட்டுப்பாடின்றி கிடைத்திருக்குமேயாயின், இந்த மகிழ்ச்சிகரமான நிலையை நாம் தொடர்ந்து நீட்டிக்க இயன்றிருக்கும். நிலக்கரி கிடைப்பதில் ஏற்பட்டுள்ள சிறிதளவு முன்னேற்றத்தின் பயனாக, 1990 அக்டோபர் திங்கள் முதல் உயரழுத்த மின் சக்தியைப் பயன்படுத்தும் சில தொழில்களுக்கு விதிக்கப்பட்டு வந்த 30 சதவீத மின்வெட்டு, 1990 டிசம்பர் திங்கள் முதற்கொண்டு 10 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. இம்மாநிலத்திற்கு, வடக்கு, கிழக்கு மாநிலங்களிலுள்ள நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து நிலக்கரியைப் பெறுவதில் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதால், நெய்வேலியில் புதிதாக ஏற்படுத்தப்பட உள்ள அனல் மின் நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் மின்சக்தி முழுவதையும் தமிழ்நாட்டிற்கே ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்ற செயற்குறிப்பு ஒன்றை இவ்வரசு மத்திய அரசிடம் அளித்துள்ளது.

இம்மாநிலத்திலுள்ள எரிவாயு ஆதாரங்களை மின்சக்தி உற்பத்தி செய்வதற்காக விரைந்து பயன்படுத்திக் கொள்ளும் வகையில் திட்டங்கள் இறுதி செய்யப்பட்டு வருகின்றன. ஜெயங்கொண்டான் பகுதியில் உள்ள பழுப்பு நிலக்கரிச் சுரங்கங்களைக் கண்டறிய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன பழுப்பு நிலக்கரி ஆதாரங்களைப் பயன்படுத்திக் கூட்டுத் துறையில் அல்லது தனியார் துறையில் 1,500 மெகாவாட் அளவிற்கு மின்சக்தி உற்பத்தி செய்யும் நிலையத்தை ஏற்படுத்தும் பணியை இவ்வரசு மேற்கொள்ளும்.

**25.** தமிழ்நாட்டில் தொழில்கள் தொடங்குவதற்கான சூழ்நிலையை மேம்படுத்துவதற்கு இவ்வரசு முன்னுரிமை அளித்துள்ளது. மணலியில், ரூ. 1,380 கோடி செலவில் 'எம்.ஆர்.எல்.' மற்றும் 'ஸ்பிக்' நிறுவனங்களின் கூட்டு முயற்சியுடன் 'தேசிய அரோமேட்டிக்' தொழிற்சாலையை அமைக்கும் திட்டத்திற்காக மத்திய அரசிடமிருந்து அனுமதியைப் பெற நமது அரசு மேற்கொண்ட தீவிர முயற்சிகள் குறித்து உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவர். இத்திட்டத்திற்கு, மத்தியில் முன்பிருந்த அரசு ஒப்புதலளித்துள்ளது. ஏற்கனவே அளிக்கப்பட்டுள்ள அனுமதியை உறுதி செய்ய வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் பிரதமரை வலியுறுத்திக் கேட்டுள்ளார். தாய்த்தொழிலாக அமையும் இத்திட்டம், பெருவாரியான கிளைத் தொழிற்பிரிவுகள் ஏற்படுவதற்கும், அதன்

தந்தி:"அண்ணா சில்க்" போன்:2148

கண்கவர் வண்ணங்கள்! நெஞ்சை அள்ளும் ரகங்கள்!!

தரமான காஞ்சிபுரம் பட்டாடைகள் வாங்கச்சிறந்த கூட்டுறவு நிறுவனம்

**அறிஞர் அண்ணா பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிட். நெ. கே.எச்.1**

498-499, காந்தி ரோடு, காஞ்சிபுரம்-631 501.

(விற்பனைக்கூடம் குளிர்பதனம் செய்யப்பட்டது)

கிளைகள்

1. 26/118, ராச வீதி, கோயம்புத்தூர்
2. 207, இரண்டாவது அக்ரஹாரம், சேலம்
3. 141, கீழவெளி வீதி, மதுரை
4. 15-3-421, மெயின் பஜார், இந்துப்பூர்
5. 16, போலீஸ் வெல்பேர் காம்ப்ளக்ஸ், நியூடவுன், அனந்தப்பூர்
6. 8, கிருட்டினா அங்காடி மையம், சிக்பெட், பெங்களூர்
7. 12, சர்வீஸ்லேன், கே.ஆர்.சர்க்கிள், மைசூர்
8. 13, அசோகா ரோடு, தும்கூர்
9. காஞ்சி கோவாப்பரேடிவ் சில்க்ஸ், உம்மிடியார்ஸ் ஷாப்பிங் சென்டர், அண்ணாசாலை, சென்னை-2

தி.பொ.இலட்சுமணன், பி.காம்.
துணை இயக்குநர்/தனி அலுவலர்

**காஞ்சிபுரம் பட்டுச் சேலைகளுக்குச் சிறந்த இடம்**

**காஞ்சிபுரம் காமாட்சியம்மன் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட் நெ.ஜி.1612**

(குளிர்பதனம் செய்யப்பட்டது)

168-எ, காந்திரோடு, காஞ்சிபுரம்-631 501 போன்:3002

கிளை விற்பனை நிலையங்கள்

1. 28-12-10/5 & 6 மதுதி வீதி, அருண்டேல்பேட், விஜயவாடா-520 002 போன்:77375
2. 231/13, கிருஷ்ணா மார்க்கெட், சிக்பெட், பெங்களூர்-560 053
3. 139 கீழவெளி வீதி, மதுரை-625 001, போன்:36988
4. 27. இரண்டாவது அக்ரஹாரம், சேலம்-636 001, போன்:68740
5. 15-3-423, பிரகாசம் பந்துலு ரோடு, இந்துப்பூர்-515 201, போன்:21061
6. 19, திருவேங்கடசாமி தெரு, ஈரோடு-638 001, போன்:78905
7. காஞ்சி கோஆப்ரேடிவ், சென்னை-600 002

இரா.விஜேந்திரன்,பி.ஏ.,
துணை இயக்குநர்/தனி அலுவலர்

★★ எங்கள் சங்கம் மாநிலத்திலேயே சிறந்த கூட்டுறவுச் சங்கமாகத்தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.



15 — ஆம் பக்கத் தொடர்ச்சி



**19.** கிராமப்புற வீட்டு வசதித் திட்டம் முற்றிலும் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இத் திட்டப் பயனீட்டாளர்கள் பெற்ற கடன் தொகையில் 25 சதவீதத்தை 1991ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாளுக்கு முன்னர் செலுத்தி விட்டால், நிலுவையாகவுள்ள கடன் மற்றும் வட்டித் தொகையான ரூ. 102 கோடியை தள்ளுபடி செய்யக் கருதப்பட்டுள்ளது. மேலும் அரசு வழங்கும் உதவித் தொகையின் அளவு ரூ. 1,500-லிருந்து ரூ. 5,000-மாக உயர்த்தப் பட்டுள்ளது. பயனீட்டாளர்கள் பணமாகவோ, உழைப்பாகவோ ரூ. 1,500 செலுத்த வேண்டும். கடனாக ரூ. 3,500 வழங்கப்படும். இந்தக் கடனுக்குச் செலுத்த வேண்டிய மாதத் தவணைத் தொகை ரூ. 60-லிருந்து ரூ. 30 ஆகக் குறைக்கப் பட்டுள்ளது. இத்திட்டம் நடப்பாண்டில் 30,000 கிராமப்புற ஏழை மக்களுக்குப் பயனளிக்கும்.

1991ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் நாள் முதல் ஊராட்சி உதவியாளர்களாகப் பணியில் மீண்டும் சேர்த்துக் கொள்ளப்பட்ட முன்னாள் கிராம அதிகாரிகளும் கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தைத் திறம்படச் செயல் படுத்த உதவுவர்.

**20.** 1974ஆம் ஆண்டு மாநில அரசால் தொடங்கப்பட்ட ஆதிதிராவிடர்களுக்கு கான்கிரீட் கூரையுடன் கூடிய வீடுகளை இலவசமாக அளிக்கும் திட்டம் கடந்த ஆண்டு மீண்டும் தொடரப்பட்டு மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. ஒரு வீட்டிற்கு ஆகும் செலவு ரூ. 14,200 இதில் ரூ. 8,160 மத்திய அரசின் பங்காகவும், ரூ. 6,040 மாநில அரசின் பங்காகவும் அமையும். 1989–90-ல் 42,000 வீடுகள் கட்டவும், 1990–91-ல் 47,000 வீடுகள் கட்டவும் ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டிருந்தது. மேலும், 11,000 வீடுகள் கட்ட அண்மையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் ஓர் இலட்சம் வீடுகள் 1991 ஏப்ரலுக்குள் கட்டி முடிக்கப்படும்.

மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் ஆகியோருக்கும் வீடுகள் கட்டித்தரும் இது போன்றதொரு திட்டம் தீவிர பரிசீலனையில் உள்ளது.

**21.** சமுதாயத்தில் மகளிர் நிலையை உயர்த்த நாம் உறுதி பூண்டுள்ளோம். அரசுத் துறைகள், உள்ளாட்சி மன்றங்கள், பொதுத்துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் உள்ள பணி இடங்களில் 30 சதவீத இடங்கள் பெண்களுக்காக ஒதுக்கப்பட் டுள்ளன. ஊராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சி

# பெரியார் மாவட்டத்தில் பட்டு வளர்ச்சி

பெரியார் மாவட்டத்தில், தாளவாடி வட்டாரம் நீங்கலாகப் பிறபகுதிகளில் பட்டு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நடப் பாண்டில் இருந்து உலக வங்கி நிதியுதவியுடன் கூடிய தேசிய பட்டு வளர்ப்பு அபிவிருத்தித் திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. குண்டடம், காங்கேயம், தாராபுரம், மூலனூர், பவானி, அந்தியூர், நம்பியூர், கோபி ஆகிய வட்டார வளர்ச்சிப் பகுதிகளில் மல்பரி அதிக அளவில் பயிரிடப்பட்டு, பட்டு வளர்ப்புத் தொழில் மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

1989-90-ஆம் ஆண்டிற்கு 250 ஏக்கர்கள் குறியீடாக நிர்ணயம் செய்யப்பட்டதில், 387.30 ஏக்கர்களில் மல்பரி நடவு மேற்கொள்ளப்பட்டது.

1989-90-ஆம் ஆண்டிற்கு 50 பட்டு விவசாயி களுக்குப் பயிற்சியளிக்க நிர்ணயிக்கப்பட்டதில், 50 பட்டு விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப் பட்டு விட்டது. பயிற்சி அளித்தலுக்கு ரூ.15,000 நிதிக் குறியீடாக நிர்ணயிக்கப்பட்டதில், ரூ.14,983 பயிற்சிக்காகச் செலவிடப்பட்டது. ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் ரூ.150 பயிற்சி உதவித் தொகையும் ரூ.150 பெறுமான பட்டுப்புழுத் தளவாடங்களும் வழங்கப்பட்டன.

1989-90-ஆம் ஆண்டிற்கு மல்பரி பயிர்க் கடனாக 45 நபர்களுக்கும், புழு வளர்ப்பு மனை அமைக்க 50 நபர்களுக்கும், புழு வளர்ப்புத் தளவாடங்கள் வாங்க 90 நபர்களுக்கும் குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. இவற்றில் சாதனையாக மல்பரி பயிர்க் கடனுக்கு 84 நபர்களுக்கும், புழு வளர்ப்புத் தளவாடங்கள் வாங்க 90 நபர்களுக் கும், புழு வளர்ப்பு மனை அமைக்க 96 நபர் களுக்கும் கடன் வசதிகள் மற்றும் மானியத் தொகை வசதிகள் கிடைக்க வழிவகை செய்யப் பட்டது.

இம்மாவட்டத்தில் 2,110 பட்டு விவசாயிகள் மல்பரி பயிரிட்டு பட்டு வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். நடப்பு ஆண்டில் 1989 ஏப்ரல் முதல் மார்ச் '90 முடிய 2.56 இலட்சம் கிலோ கிராம் பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யப் பட்டுள்ளது. இதன் மதிப்பு ரூ.1.80 கோடியாகும். பட்டுத் தொழிலில் 2,110 விவசாயிகள் நேரிடை யாகப் பயன் பெறுவதோடு 10,550 நிலமற்ற விவசாயப் பணியாளர்களும் வேலைவாய்ப்புப் பெற்று வருகின்றனர்.

—எஸ். நாகராசன்,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
பெரியார் மாவட்டம்

**இணையத்தின் சாதனை:**

காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கியில் காசுக்கடன் வசதி பெற்று, இவ்விணையம் ஒரு ஆண்டுக்குச் சுமார் 22 கோடி ரூபாய் மதிப் புள்ள பட்டு கொள்முதல் செய்து விற்பனை செய்து வருகிறது. தமிழ் நாட்டில் செயல்படும் விற்பனைச் சேவை அங்காடிகளிலேயே, 'டான் சில்க்' விற்பனை அங்காடிதான் அதன் ஆண்டுச் சாதனைக் குறி யீட்டை மிஞ்சிய அளவில் செயல் படும் நிறுவனமாக மிளிர்கிறது.

1989-90-ஆம் ஆண்டுக்கு நிர்ணயிக்கப்பட்ட சாதனைக் குறி யீடு 1 இலட்சத்து 65 ஆயிரம் கிலோ பட்டு நூலாகும். இவ்விணையம், 31.3.1990 முடிய 2 இலட்சத்து 58 ஆயிரம் கிலோ பட்டு நூல் செலாவணி செய்து, சாதனை படைத்தது.

1990-91-ஆம் ஆண்டுக்கு 2.50 இலட்சம் கிலோ பட்டு கொள்முதல் செய்து விற்பனை செய்ய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. இந்த இலக்கினை இணையம் எட்டே மாதங்களில் நிறைவு செய்துள்ளது. மேலும், 31.12.90 வரை கொள் முதலில் 116.69 சதவீதமும், விற் பனையில் 118.74 சதவீதமும் இதுகாறும் இல்லாத அளவில் கொள் முதல் மற்றும் விற்பனையில் சாதனை புரிந்துள்ளது.

தமிழக அரசின் முழு ஒத்துழைப் பினால் மட்டுமே அவ்விணையம் குறிப்பிடத்தக்க அளவில் தனது விற்பனையில் சாதனை படைத் துள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

பட்டு வளர்ச்சித் துறையின் கீழ் செயல்பட்டு வரும் அரசு பட்டு நூற்பு நிலையங்களில் 5 பட்டு நூற்பு நிலையங்களை இந்த எட்டா வது ஐந்தாண்டுத் திட்டத்தில் இவ்விணையமே ஏற்று நடத்துவது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

9.1.91 அன்று காஞ்சிபுரத்தில் அண்ணா பட்டு பரிமாற்றகம் துவங்கிய பின் இணையத்தின் பங்கு மிக அதிக அளவில் இருக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரி வித்துக் கொள்கிறோம். அன்றாடம் பட்டு பரிமாற்றகத்தில் வரப் பெறும் மொத்த கச்சாப்பட்டில் 10-இல் ஒரு பங்கினை இணையம் கொள்முதல் செய்யத் தீர்மானித்துள்ளது.

மேலும், தமிழ்நாடு அரசு இணை யத்திற்குத் தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து ரூ.100 இலட்சம் நிதி உதவி பெற்று வழங்கத் தக்க பரிந்துரைகள் செய்துள்ளது. அத் தொகையை விரைவில் பெறுவதற்கான முயற்சிகளையும் இணையம் மேற் கொண்டுள்ளது. எனவே, தமிழ் நாட்டில் பட்டு வளர்ச்சி முன்னேற, இணையம் தன்னலமற்ற சேவை செய்து வருகிறது என்று சொன்னால் அது மிகையல்ல.

இந்த இணையத்தின் அபரிமித மான சாதனைக்குப் பட்டுக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், பட்டு நூற்புச் சேவை தொழில் கூட்டுறவுச் சங்கம், சர்வோதய சங்கம் ஆகியவைகளின் முழு ஒத் துழைப்பும், இயக்குநர் கைத்தறி மற்றும் துணிநூல், இயக்குநர், பட்டு வளர்ச்சித்துறை, தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு காதி மற்றும் கிராமத் தொழில் வாரியம், அரசுச் செயலர் கைத்தறி, கைவினை, துணி நூல் மற்றும் காதித் துறை ஆகி யோருடைய ஆதரவும் இருந்ததால் தான் இந்த வளர்ச்சியினை அடைய முடிந்தது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.



3 — ஆம் பக்கத் தொடர்ச்சி



திரு. க. சுந்தரம் ஆகியவர்களும் - அந்தந்த வட்டாரத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் - ஊராட்சி ஒன்றியத் தலைவர் களும், பேரூராட்சி, ஊராட்சித் தலைவர்களும் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.

மாவட்ட வாரியாக...

செங்கை-அண்ணா மாவட்டத்தில், 7.1.91 அன்று மேற்கொண்ட நற்பணிப் பயணத்தின் போது 96 கிராமங்களில் கட்டப்பட்டிருந்த 1,630 இலவசக் காங்கிரீட் வீடுகள், 75 ஊராட்சிமன்ற அலுவலகக் கட்டடங்கள், 22 பள்ளிக்கூடக் கட்டடங்கள் மற்றும் மேனிலைக் குடிநீர்த் தொட்டி களை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்.

வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில், 8.1.91 அன்று மேற்கொண்ட நற்பணிப் பயணத் தின்போது - 115 கிராமங்களில் கட்டப்பட்டுள்ள 1,910 இலவசக் காங்கிரீட் வீடுகளும், 82 ஊராட்சி அலுவலகக் கட்டடங்களும் 24 பள்ளிக் கூடக் கட்டடங்களும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டன.

அதே நாளில், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட நற்பணிப் பயணத்தின்போது - 61 கிராமங்களில் கட்டி முடிக்கப்பட்டிருந்த 1,095 இலவசக் காங்கிரீட் வீடுகளும், 65 ஊராட்சி அலுவலகக் கட்டடங் களும், 20 பாடசாலைக் கட்டடங்களும் மாண்புமிகு முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டன.

ஏழை எளிய ஆதிதிராவிட மக்களுக்கான இலவசக் காங்கிரீட் வீடுகளை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், அந்தந்த வீடுகளில் 'ரிப்பன்' வெட்டித் திறந்து வைத்ததோடு நின்று விடாமல் - வீடுகளுக்குள்ளே சென்று குத்துவிளக்கேற்றி வைத்தார். கட்டுமானப் பணிகளைப் பார்வை யிட்டார்.



**வாயைத் திறக்கவும் சக்தி - இன்றி**
**வயிற்றைப் பிசைந்திடும் ஏழைகட்கே நீ**
**தாயென்ற பாவனை யோடும் - உன்**
**சதையையும் ஈந்திட ஒப்புதல் வேண்டும்!**

**— புரட்சிக் கவிஞர்**

இந்த இரண்டு நாட்களிலும் ஏழை எளிய மக்களுக்குத் தமிழக அரசால் வழங்கப்பட்ட அரசு நல்வாழ்வுத் திட்ட உதவிகளின் மதிப்பு மட்டும் 18 கோடி ரூபாய் ஆகும்.

குறிப்பாக அந்த இரண்டு நாட்களிலும் அந்த மூன்று மாவட்டத்து ஏழை எளிய மக்களும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தார்கள்; அந்த வெள்ளத்தில், இலவசக் காங்கிரீட் வீடுபோன்ற அமைப்பில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பயணம் செய்த 'வேன்' அன்னம்போல உலாவந்த அழகே அழகு!

- நிகழ்ச்சித் தொகுப்பு:
பி.எல். ராஜேந்திரன்.

பயனாக குறிப்பிடத்தக்க அளவிற்குக் கூடுதல் வேலை வாய்ப்புகள் ஏற்படுவதற்கும், இம்மாநிலத்திற்குக் கூடுதல் வருவாய் கிடைப்பதற்கும் உதவும்.

**26.** பல்வேறு பெட்ரோலிய-இரசாயனத் தொழில்களை தமிழகத்தில் ஏற்படுத்துவதற்கு வகை செய்யும் பொருட்டு, பாம்பே ஹையிலிருந்து தென்னகத்திற்கு எரிவாயு கொண்டுவரும் குழாய்கள் நிறுவ இவ்வரசு மத்திய அரசை மீண்டும் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டுள்ளது. இந்த திட்டத்தின் சாத்தியக் கூறுகளை ஆராய மத்திய பெட்ரோலிய அமைச்சகம் ஏற்படுத்தியுள்ள அமைச்சரகக் குழு தனது அறிக்கையை காலதாமதமின்றி சமர்ப்பிக்க வேண்டும் என்று இந்த அரசு கேட்டுக்கொள்கிறது.

**27.** தொழில்களுக்குச் செயலாக்கமும் சலுகைகளும் அளிப்பதற்கான முறைகள் முழுவதும் சீரமைக்கப்பட்டு, எளிமையாக்கப்பட்டுள்ளன. தமிழக அரசின் இத்திட்டம், ஏனைய பல மாநிலங்களுக்கு ஒரு முன் மாதிரியாகத் திகழ்கிறது. இம்மாநிலத்தின் தொழில் நடவடிக்கையில், குறிப்பிடத்தக்க அளவிற்கு உத்வேகம் ஏற்பட்டுள்ளது.

**28.** பின்தங்கிய 107 வட்டங்களில் தொழிற்சாலைகளை ஏற்படுத்த நாம் எடுத்துக்கொண்ட முயற்சி நல்ல பயனை அளித்துள்ளது. முந்தைய ஆண்டில் மேற்சொன்ன வட்டங்களில் ஏற்படுத்தப் பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 423. மேலும், இந்த ஆண்டு இதுவரை 464 தொழிற்சாலைகள் இந்த வட்டங்களில் தொடங்கப்பட்டு உதவியளிக்கப்பட்டுள்ளன. ஒரே அனுமதி வழங்க (Single Window) உடனடியாக அனுமதி வழங்க மேற்கொள்ளப்பட்ட உறுதியான முயற்சிகளால் நல்ல பயன் கிட்டியுள்ளது.

**29.** கிரானைட் கருங்கல் உட்பட மாநிலத்தின் கனிமவள வாயில்களைப் பயன்படுத்தும் வகையில் 1988ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் ஆட்சியில் திருத்தி அமைக்கப்பட்ட கொள்கையை இந்த அரசு தொடர்ந்து நடைமுறைப்படுத்தியதன் பயனாக இம் மாநிலத்தில் வருவாய் பெருகியுள்ளதோடு தொழில் வளர்ச்சியும் விரைந்து நடைபெற்று வருகிறது. கருங்கல் வளம் அடங்கியுள்ள நிலப்பகுதியை ஏலத்தில் விட்டதன் மூலம் இதுவரையில் ரூ. 20 கோடி அரசுக்கு வருவாய் கிட்டியுள்ளது.

**30.** இந்த அரசு பதவியேற்றபோது இருந்த நெருக்கடியான நிதிநிலையை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். அதன் காரணமாக 1988–89ஆம் ஆண்டிற்கான ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடு ரூ. 1,457 கோடியாக இருந்தபோதிலும், இது ரூ. 1,202 கோடியாக குறைத்து நிர்ணயிக்கப்பட்டது. அதிலிருந்து

> **"பல்வேறு பெட்ரோலிய-இரசாயனத் தொழில்களைத் தமிழகத்தில் ஏற்படுத்துவதற்கு வகை செய்யும் பொருட்டு, பாம்பே ஹையிலிருந்து தென்னகத்திற்கு எரிவாயு கொண்டு வரும் குழாய்கள் நிறுவ இவ்வரசு மத்திய அரசை மீண்டும் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளது."**

> **"தொழில்களுக்குச் செயலாக்கமும் சலுகைகளும் அளிப்பதற்கான முறைகள் முழுவதும் சீரமைக்கப் பட்டு, எளிமையாக்கப்பட்டுள்ளன. தமிழக அரசின் இத்திட்டம், ஏனைய பல மாநிலங்களுக்கு ஒரு முன் மாதிரியாகத் திகழ்கிறது. இம்மாநிலத்தின் தொழில் நடவடிக்கையில், குறிப்பிடத்தக்க அளவிற்கு உத்வேகம் ஏற்பட்டுள்ளது."**

மாநிலத்தின் நிதிவாயில்களைப் பெருக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஆயத்தீர்வை வருவாயைப் பெறுவதில் காணப்பட்ட குறைபாடுகள் களையப்பட்டு, வருவாய் அதிகரிக்கப்பட்டுள்ளது. பலமுனை வரிவிதிப்புக்குட்பட்ட பொருட்கள் அனைத்தும் ஒருமுனை விற்பனைவரி விதிப்பு முறையின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. பரந்த செயல் விளைவுடைய இந்தச் சீர்திருத்தத்தை வணிகர்கள் பெரிதும் வரவேற்றனர். நெய்வேலியில் 1956 முதல் வெட்டியெடுக்கப்பட்ட பழுப்பு நிலக்கரிக்கு நாம் ரூ. 30 கோடி உரிமைத் தொகையை நடப்பாண்டில் பெற்றுள்ளோம். ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டைவிட திட்டச்சாதனை அதிகமாக இருப்பதற்கு இந்த நடவடிக்கைகள் உறுதி செய்துள்ளன.

1989-90-ல் ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடு ரூ. 1,360 கோடியாக இருக்க, திட்டச்சாதனை ரூ. 1,466 கோடியாக அமைந்தது. 1990-91ஆம் ஆண்டிலும் திட்டச்சாதனை ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடான ரூ. 1,450 கோடியைக் கடந்து நிற்கும்.

**31.** ஒன்பதாவது நிதிக்குழுவின் பரிந்துரைகள் இம்மாநிலத்திற்குத் திருப்தி அளிப்பதாக இல்லை. அனைத்து மாநிலங்களுக்கிடையேயும் பகிர்ந்து கொள்ளத்தக்க அடிப்படை ஆயத்தீர்வைத் தொகையை இக்குழு 40 சதவீதத்திலிருந்து 37.575 சதவீதமாகக் குறைத்து விட்டது. இது குறித்து இந்த அரசு பலமுறை செய்த முறையீடு களுக்கும் பலனேதுமில்லை. மைய–மாநில வரிவிதிப்பு முறையில், மாநிலங்களுக்குப் பிரித்துக் கொடுக்கத்தக்க இத்தொகையில் குறைப்பு ஏதுமிருக்கக்கூடாது என்பது அவசியமாகும். மத்திய அரசு இந்நிலையை ஆராய்ந்து, மாநிலங்கள் அனைத்திற்கும் பிரித்தளிக்கத்தக்க ஆயத்தீர்வைத் தொகையை அதிகரிக்கும் என்று நம்புகிறோம்.

**32.** 1990 அக்டோபரில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக்குழுக் கூட்டத்தில், மாநிலங்களுக்கு மத்திய அரசின் நிதியுதவியை நிர்ணயிக்கும் 'காட்கில்' கோட்பாட்டில் திருத்தங்கள் செய்தது பற்றிய தனது கவலையை நமது முதலமைச்சர் தெரிவித்தார். அப்பொழுது 'காட்கில்' கோட்பாட்டில் மாற்றங்கள் செய்ததால் தமிழ்நாட்டிற்கு இழப்பேதும் ஏற்படாமல் பார்த்துக் கொள்வோம் என்று உறுதிமொழி அளிக்கப்பட்டது. இக்கோட்பாட்டில் மாற்றங்கள் செய்யப்பட்டதால், தமிழ்நாட்டிற்கு அளிக்கப்படும் மத்திய நிதி உதவியில் இழப்பேதும் ஏற்படாது என்று தற்போதுள்ள மத்திய திட்டக் குழுவின் துணைத் தலைவர் நமது முதலமைச்சருடன் டெல்லியில் அண்மையில் நடத்திய பேச்சு வார்த்தைகளின் போது மீண்டும் உறுதியளித்துள்ளார். ஒன்பதாவது நிதிக்குழுவின் பரிந்துரைகளால் ஏற்கனவே இம்மாநிலம் பாதிக்கப்பட்டுள்ள காரணத்தினால் அளிக்கப் பட்ட இந்த உறுதிமொழியைக் கருத்தில் கொண்டு,

தமிழ்நாட்டின் நலனைப் பாதிக்கும் வகையில் 'காட்கில்' கோட்பாட்டில் எவ்வித மாற்றமும் மேற்கொள்ளப்படமாட்டாது என்று நாம் நம்புகிறோம்.

33. ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள் ஆகியவற்றின் நிதிநிலை குறித்து ஆராய திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்களின் தலைமையில் திரு. பி. மாணிக்கம், திரு. என். வரதராஜன், திரு. வி. சுவாமிநாதன், திரு. எஸ். அக்னிராஜ் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்டு சட்டப்படி அமைக்கப்பட்ட நிபுணர் குழு தன்னுடைய அறிக்கையை அண்மையில் அரசுக்கு அளித்துள்ளது. அந்த அறிக்கை பரிசீலிக்கப்பட்டு அரசின் முடிவுகள், வரும் வரவு-செலவுத் திட்டக் கூட்டத் தொடரில் அறிவிக்கப்படும்.

34. நிர்வாகத்தில், அதிகாரத்தை மக்களாட்சி அமைப்பு முறைக்கேற்ப பரவலாக்குவதில் இவ்வரசு ஆர்வம் கொண்டுள்ளது. கடந்த ஆண்டு அளித்த உறுதிமொழியைத் தொடர்ந்து, 17,753 தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல்கள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. இத்தேர்தல்கள் 15 ஆண்டு இடைவெளிக்குப் பின்னர் நடத்தப்பட்டுள்ளன.

35. 1990ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30ஆம் நாளுக்கு முன்னதாக, சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய மாநகராட்சிகளுக்குத் தேர்தல்களை நடத்த நாம் கருதினோம். உயர்நீதிமன்றம் தடை ஆணை பிறப்பித்ததால் மேற்சொன்ன தேர்தல்களைத் தள்ளிப்போட வேண்டிய நிலை ஏற்பட்டது. 5 ஆண்டுகள் முடிவடைந்தவுடன், உரிய முறையில் தேர்தல்களை நடத்த உறுதிசெய்ய, தமிழ்நாடு 1958 ஆம் 'ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தில் தேவையான திருத்தங்களை இவ்வரசு கடந்த ஆண்டு செய்துள்ளது. எனினும், மக்கள் தொகை கணக்கெடுப்பின் காரணமாக ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள் ஆகிய அனைத்திற்கும் ஒரு மாதம் தள்ளி தேர்தல்கள் நடத்தப்பெற்று, புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள், 1991 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 3ஆம் நாள் பதவியேற்பர் என்பதற்குப் பதிலாக ஏப்ரல் திங்கள் 10ஆம் நாள் பதவியேற்பர். இதற்கு வகை செய்யும் சட்ட முன்வடிவுகள் சட்டமன்றப் பேரவையின் இக்கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும்.

36. இந்தக் கூட்டத் தொடரில் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அனைவரின் விவாதங்களும் ஆக்கபூர்வமானவையாகவும் மக்களாட்சி தத்துவத்தின் மாட்சிமைக்கு மாசு நேராவண்ணம் உயர்ந்த மரபுகளைக் கட்டிக் காத்திடக்கூடியவைகளாகவும் அமைந்து, வழிகாட்டத்தக்க ஜனநாயகக் கலங்கரை விளக்கமாகத் திகழும் என்ற நம்பிக்கையுடன் என் உரையை நிறைவு செய்கிறேன்.

வணக்கம்.

**பின்தங்கிய 107 வட்டங்களில் தொழிற்சாலைகளை ஏற்படுத்த நாம் எடுத்துக்கொண்ட முயற்சி நல்ல பயனை அளித்துள்ளது. முந்தைய ஆண்டில் மேற்சொன்ன வட்டங்களில் ஏற்படுத்தப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 423. மேலும், இந்த ஆண்டு இதுவரை 464 தொழிற்சாலைகள் இந்த வட்டங்களில் தொடங்கப்பட்டு உதவியளிக்கப்பட்டுள்ளன.**





# பட்டு உற்பத்தியில் டான்சில்க்

தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் பட்டு நூலை நியாயமான விலையில் கொள்முதல் செய்யவும், பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவைப்படும் பட்டு நூலைக் கட்டுப்பாடான விலையில் விற்பனை செய்யவும், ஒரு பொது நிறுவனம் தேவையெனக் கருதப்பட்டது. அதன் விளைவாக, தமிழ்நாடு கூட்டுறவுப் பட்டு உற்பத்தியாளர் இணையம் (டான்சில்க்) 9.9.1978 அன்று காஞ்சிபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு தொடங்கப்பட்டுச் செவ்வனே செயல்பட்டு வருகிறது.

**கிளைகளும், பார்வை நிலையங்களும்:**

பட்டு வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் இவ்விணையம், பட்டுத் தொழிலில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தரப்பினரையும் தன்னகத்தே உறுப்பினராகக் கொண்டுள்ளது.

தமிழகம் முழுவதையும் தனது விவகார எல்லையாகக் கொண்டுள்ள இவ்விணையத்தில் இப்போது மொத்த உறுப்பினர்கள் 566. அவர்களில் 'எ' வகுப்பு உறுப்பினர்கள் 203, அசோசியேட் உறுப்பினர்கள் 363 ஆவர். அவ்விணையத்தின் உறுப்பினர்களுக்குச் சிறந்த சேவை செய்யும் பொருட்டு இணையம் 6 கிளைகளையும், 5 பார்வை நிலையங்களையும் தமிழகம் முழுவதும் அமைத்துச் செயல்படுத்தி வருகிறது.

பட்டு நூற்பாளர்கள் மற்றும் பட்டு நூற்பு செய்யும் கூட்டுறவுச் சங்கங்கள் நூற்பு செய்த பட்டு நூலை, அதன் தரத்திற்கு ஏற்ற விலையில் இவ்விணையம் கொள்முதல் செய்து, அதற்கான தொகையை அன்றே பட்டுவாடா செய்கிறது.

இவ்வகைப் பட்டுநூலை, இணையத்தில் பட்டு முறுக்கேற்றும் அசோசியேட் உறுப்பினர்கள் கொள்முதல் செய்து, அதனை நெசவுக்கேற்ற வகையில் முறுக்கேற்றி, மீண்டும் இணையத்தில் விற்பனை செய்கின்றனர்.

பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பட்டுத் தேவையினை முன் கூட்டியே கணக்கிட்டு, இணையம் சங்கங்களுக்கு விற்பனை செய்து வருகிறது .

பட்டு நூற்பு செய்யும் பிரிவினரிடமிருந்து அதனை நெசவுக்கேற்ற வகையில் சங்கங்கள் பெற்றுச் செல்லும் வரை, இடைத் தரகர் தலையீடு ஏதுமில்லாத வகையில் ஒரு உறவுப் பாலமாக இவ்விணையம் திகழ்கிறது.

**பழ. சண்முகம்**
மாவட்ட வருவாய்
அலுவலர்/ நிர்வாகப் பொறுப்பு
'டான்சில்க்' தலைமையகம்
காஞ்சிபுரம்.

# "இரண்டே ஆண்டுகள்- ஒரு லட்சம் வீடுகள்!"



"நான் இந்தப் பயணத்தை, தொடர்ந்து 15 அல்லது 20 நாட்கள் நடத்தத்தான் எண்ணியிருந்தேன். ஆனால் இடையிலே தமிழகச் சட்டமன்றம் கூட்டப்படவேண்டிய சூழ்நிலை இருப்பதாலும், அதன் தொடர்பாக அலுவல்கள் பல இருப்பதாலும் இடையிடையே இந்தப் பயணத்தை ஆங்காங்கு, மேற்கொண்டு, மக்களுக்குத் தேவையான நல்வாழ்வுத் திட்டங்களை வழங்கலாமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இன்றைக்கு இந்தப் பகுதியிலே இந்த செம்பரம்பாக்கம் பூந்தமல்லி, குன்றத்தூர் ஆகிய ஒன்றியங்கள் பங்குபெறும் நிகழ்ச்சியிலே மாத்திரம், ஆதி திராவிடர் பழங்குடியினர்க்கான இலவசத் தொகுப்பு வீடுகள் 445, பள்ளிக் கட்டடம் ஒன்று, ஊராட்சி மன்றக் கட்டடங்கள் 13, சாலை வசதிகள் 20, பஞ்சாயத்து வேலைகள் 169, குடிநீர்த் திட்டம் 136, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் 721, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித்திட்டத்தின் கீழ் - எட்டாவது வரை படித்த ஏழைப் பெண்கட்குத் திருமண உதவியாக ரூ.5,000 வழங்குவது என்று கடந்த ஆண்டிலே இந்த அரசு அறிவித்து, இதுவரையிலே 30,000- க்கும் மேற்பட்ட பெண்கட்கு அந்த நிதி உதவி வழங்கப்பட்டிருக்கிறது.

அதைப் போல முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித்திட்டம், கர்ப்பிணிகட்குப் பிரசவத்திற்கு முன்பு இரண்டு மாதங்கள் - பிரசவம் முடிந்து இரண்டு மாதங்கள் — அவர்களுடைய சத்துணவுச் செலவுகட்காக மாதம் ரூ.50 வீதம் நான்கு மாதத்திற்கு மொத்தம் ரூ.200 வழங்கப்படுகிற திட்டம், ஏறத்தாழ இரண்டாண்டுக் காலத்திலே இரண்டு இலட்சம் கர்ப்பிணிகட்குத் தரப்பட்டிருக்கிறது என்கிற எண்ணிக்கையினைத் தொடக்கூடிய அளவிற்கு அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது, அதனையொட்டி இன்றைக்கு மாத்திரம் 1,250 பேருக்கு அந்த உதவி வழங்கப்பட்டிருக்கிறது.

தாட்கோ திட்டம் 3, தொலைக்காட்சிப் பெட்டி 1, சமூக நல உதவித் திட்டம் 1, முதியோர் உதவித் திட்டத்தின் சார்பில் 275 பேர் ஆக, 3,146 திட்டங்களுக்கு ரூ.258 இலட்சம் - ஏறத்தாழ இரண்டரைக் கோடிக்கு மேல் இந்த ஒரு நிகழ்ச்சியிலே மாத்திரம் வழங்கப்படுகிறது.

ஆதிதிராவிடர்களுக்கான வீடுகளைத் திறப்பதற்காக மாத்திரம் அல்ல, நான் இங்கே குறிப்பிட்ட பொதுத் தலைப்பிட்ட பல்வேறு நல்வாழ்வுத் திட்டங்களுக்காகவும் இந்தப் பயணம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

1974-ஆம் ஆண்டு இறுதியிலேதான் இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை - ஆதிதிராவிட மக்களுக்கு இலவசமாகக் காங்கிரீட் வீடுகள் கட்டித் தரும் ஒரு திட்டத்தை இந்தியாவிலேயே முதன் முதலாக நான் முன்பு முதலமைச்சராக இருந்தபோது அறிவித்தேன்.

அப்படி அறிவித்தது மட்டுமல்ல; அந்த வீடுகளை இந்த செங்கை- அண்ணா மாவட்டத்தில், நம்முடைய பூந்தமல்லித் தொகுதியில் நண்பர் டி. ராஜரத்தினம் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது, பாபு ஜெகஜீவன்ராம் அவர்களை அழைத்து வந்து காட்டுப்பாக்கத்தில் இந்த வீடுகளுடைய தொடக்க விழா - இதனைத் திறந்த வைக்கின்ற விழா 1974-ஆம் ஆண்டில் நடைபெற்றதை இந்தப் பகுதி மக்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

எனவே, நாம்தான் இந்தியாவிலேயே முதன் முதலாக, ஆதிதிராவிடர்கட்கு இலவசமாக, அதுவும் காங்கிரீட் வீடுகளைக் கட்டித் தர வேண்டும் என்று அறிவித்து அதைச் செயல்படுத்தியவர்கள்.

74-ன் இறுதியிலே தொடங்கி, 75-இன் இறுதிக்குள்ளாக நாம் ஏறத்தாழ 30,000 வீடுகளை ஆதி திராவிடர் மக்களுக்காகக் கட்டி முடித்திருக்கின்றோம்.

மீண்டும் ஆட்சிப் பொறுப்பினை ஏற்ற பிறகு கடந்த ஓராண்டில் 42,000 வீடுகளை ஆதி திராவிடர் மக்களுக்காக நாம் இலவசமாகக் கட்டித் தந்திருக்கின்றோம். இதிலே மத்திய அரசும் பங்கு கொள்கிறது.

நாம் முதலிலே தொடங்கிய பிறகு மத்திய அரசு அதிலே பங்கு கொள்ள முன்வந்தது. அவர்கள் மைய அரசின் பங்காக ரூ.8,160 தருகிறார்கள். மாநில அரசின் பங்காக ரூ.2,400 போடப்பட்டு ஏறத்தாழ ரூ.10,000 விலையில் வீடுகள் ஒட்டுவில்லை வீடுகளாகக் கட்டப்பட்டன.



நாங்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தவுடன் அந்த மாநில அரசின் மானியமாகத் தரும் ரூ.2,400-ஐ ரூ.6,000 ஆக உயர்த்தி ரூ.14,200 செலவிலே இந்த வீடுகள் - காங்கிரீட் வீடுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

மிக நேர்த்தியாகவும், அழுத்தந் திருத்தமாகவும், விரைவிலே பழுதடையாது என்கிற உத்திரவாதத்தோடும் இந்த இல்லங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. உள்ளே இருக்கிற அடுக்களையிலேகூட அங்கே இருந்து கிளம்புகின்ற புகை அந்த வீட்டிற்குள்ளே பரவாமல் தனியாகக் குழாய்கள் அமைக்கப்பட்டு, அந்தப் புகை வெளியே செல்வதற்கான வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

ஆதிதிராவிடர் மக்களுக்கு இதுபோன்ற வீடுகள் கட்டுகின்ற பணியிலே ஊராட்சி மன்றங்கள், ஒன்றியங்கள் ஒத்துழைக்கின்றன.

இங்கே உரையாற்றிய ஊராட்சி மன்றத் தலைவர், ஆளுங்கட்சியைச் சார்ந்தவர் அல்ல; என்றாலும்கூட இதை வரவேற்கிறார். இப்படிப்பட்ட நாகரிகம் தான் அரசியலிலே வரவேண்டும் என்று நான் எதிர்பார்க்கின்றேன்.

அவர், "இன்னும் கூட எங்களுக்கு, அதிகம் செலவாகிறது" என்று சொன்னார். நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்; மத்திய அரசு ஒரு பங்கு தருகிறது. மாநில அரசு ஒரு பங்கு தருகிறது; இதில் அதிகம் செலவானால் அது பஞ்சாயத்துப் பங்காக இருக்க வேண்டும். உங்களுக்கும் அதிலே பங்கிருக்க வேண்டும். அந்தப் பங்கினை நீங்கள் செலுத்திட வேண்டும்.

பல்வேறு மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களை வழங்கிட நான் மேற்கொண்டிருக்கின்ற இந்தப் பயணம் இன்றைக்குச் செம்பரம்பாக்கத்திலே தொடங்குகிறது.

இன்றும் நாளையும் மாத்திரம் ஏறத்தாழ 4,000-க்கும் மேற்பட்ட ஆதிதிராவிட இல்லங்கள் திறக்கப்படுகின்றன. இவைகளன்னியில் மொத்தத்திலே ரூ.18 கோடி, இன்றைக்கும் நாளைக்கும் இந்தத் திட்டங்களின் மூலமாக வழங்கப்பட இருக்கிறது.

நான் முதலிலே குறிப்பிட்டதுபோலக் கடந்த ஆண்டு இந்த ஆட்சியிலே 42,000 வீடுகள், இந்த ஆண்டு 47,000 வீடுகள் மொத்தம் 89,000 வீடுகள்; நான் உங்களுக்கு உறுதி அளிக்கின்றேன் - ஏப்ரல் மாதத்திற்குள்ளாக மேலும் 10,000 வீடுகள் கட்டப்பட்டு, இந்த ஆண்டினுடைய - இந்த இரண்டு ஆண்டினுடைய இலக்காக ஒரு இலட்சம் வீடுகள் ஆதிதிராவிடர் மக்களுக்காகக் கட்டி முடிக்கப்பட்டன என்ற நல்ல செய்தி உங்களுக்கு வழங்கப்படும்!"

- மாண்புமிகு முதல்வர் கலைஞர்

**(7.1.91 அன்று, ஆதிதிராவிட மக்களுக்கான இலவச வீடுகளைத் திறந்துவைத்து, செங்கை-அண்ணா மாவட்டம் செம்பரம்பாக்கத்தில் ஆற்றிய உரையிலிருந்து.)**



சோம சீலா அணைக்கட்டிலிருந்து பூண்டி நீர்த்தேக்கம் வரை அமைக்கப்பட்டு வரும் கால்வாயின் தோற்றம்.

# சென்னைக்கு விரைந்து வரும் தெலுங்கு கங்கை

சென்னை மாநகர மக்களின் குடிநீர்த் தேவையை நிறைவுசெய்யும் பொருட்டு, கிருஷ்ணா ஆற்றிலிருந்து கால்வாய் மூலம் சென்னைக்குக் குடிநீர் கொண்டுவரும் திட்டம் தான் ''தெலுங்கு கங்கைத் திட்டம்''. இத்திட்டத்தின் மூலம் மகாராஷ்டிரம், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய மூன்று மாநிலங்களும் கிருஷ்ணா ஆற்றிலிருந்து தமது பங்காகத் தலா 5 டி.எம்.சி. தண்ணீர் வீதம் மொத்தம் 15 டி.எம்.சி. தண்ணீரைச் சென்னைக்கு வழங்குகின்றன.

**சென்னை மாநகர மக்களின் தாகம் தீர்ப்பதற்காகக் கிருஷ்ணா ஆற்றிலிருந்து குடிதண்ணீர் கொண்டு வருவதற்காகத் தெலுங்கு கங்கைத் திட்டம் தொடங்கப்பட்டது. மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் காட்டிவரும் முனைப்பின் காரணமாகத் திட்டப் பணிகள் முடுக்கிவிடப் பட்டுள்ளன. 1993-ல் பணி நிறைவேற உள்ளது.**

**இத்திட்டப் பணிகளை நேரிற் கண்டறிய மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு துரைமுருகன் அவர்களும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு பொன்முடி அவர்களும், ஜனவரி-10, 11, 12 ஆகிய தேதிகளில் ஆந்திர மாநிலம் நெல்லூர் மாவட்டத்திலுள்ள சோமசீலா அணைக்கட்டுப் பகுதி வரை சென்று பணிகளின் முன்னேற்றத்தைப் பார்வையிட்டனர். சென்னையிலிருந்து செய்தியாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். அந்த விவரங்களை நமது செய்தியாளர் இங்கே தருகிறார்.**

கிருஷ்ணா ஆற்று நீர் ஸ்ரீசைலம் நீர்த்தேக்கத்திலிருந்து அணுகுக் கால்வாய் மூலம் பொத்திரெட்டி பாடு தலை மதகுக்குக் கொண்டு வரப்படுகிறது. அங்கிருந்து 16.3 கி.மீ. நீளமுள்ள கால்வாய் மூலம் பனகசர்லா மதகுகளில் கொண்டு விடப்படுகிறது. இப்பணிகள் யாவும் முடிக்கப்பெற்று விட்டன. பனகசர்லாவிலிருந்து மற்றொரு கால்வாய் மூலம் வேலுகோடு நீர்த் தேக்கத்திற்கத் தண்ணீர் வந்தடைகிறது. இங்கிருந்து கிருஷ்ணா ஆற்று நீர் 154 கி.மீ. நீளமுள்ள கால்வாய் மூலம் பெண்ணாற்றில் விடப் படுகிறது. பெண்ணாற்றில் விடப்படும் கிருஷ்ணா ஆற்று நீர் சோமசீலா என்னுமிடத்தில் கட்டப்பட்டுள்ள அணையிலிருந்து மிகப்பெரிய கான்கிரீட் கால்வாய் வழியாகக் கண்டலேறு நீர்த் தேக்கத்திற்குக் கொண்டு வரப்படுகிறது. இந்தக் கால்வாய் 45 கி.மீ. நீளத்திற்கு மலைகளைக் குடைந்தும் பாறைகளை வெட்டியும் பாலங்கள் அமைத்தும் உருவாக்கப்பட்டுள்ளது.





**ஆந்திர மாநிலம் சோமசீலா அணைக்கட்டிலிருந்து சென்னைக்குத் தண்ணீர் திறந்து விடுவதற்காக அமைக்கப்பட்டுள்ள தலை மதகை, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு துரைமுருகன் அவர்களும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு பொன்முடி அவர்களும் பார்வையிடுகின்றனர்.**

கண்டலேறு நீர்த் தேக்கம் மிகப் பெரிய அளவில் புதிதாக அமைக்கப் பட்டு வருகிறது. கண்டலேறு நீர்த் தேக்கத்திலிருந்து 152 கி.மீ. நீளமுள்ள கால்வாய் மூலம் தமிழ்நாட்டு எல்லைக்குத் தண்ணீர் கொண்டு வந்து விடப்படுகிறது. தமிழ்நாட்டு எல்லையிலிருந்து பூண்டி நீர்த் தேக்கத்திற்குக் கிருஷ்ணா ஆற்றுத் தண்ணீர் வந்து சேருகிறது. பூண்டியிலிருந்து இணைப்புக் கால்வாய்கள் மூலம் புழல் மற்றும் செம்பரம் பாக்கம் ஏரிகளுக்குத் தண்ணீர் கொண்டு செல்லப்பட்டு அங்கே சுத்திகரிக்கப்பட்டு பின்பு சென்னை மாநகருக்குக் கொண்டு வரப்பட்டு, குழாய்களின் மூலம் வழங்கப் படுகிறது.



தெலுங்கு கங்கைத் திட்டத்தில் ஆந்திர மாநிலப் பணிகளின் மொத்த மதிப்பீடு 984.40 கோடி ரூபாயாகும். இதில் தமிழ்நாட்டின் பங்கு 252 கோடி ரூபாய். இது வரை தமிழ்நாடு அரசு தன் பங்காக 107 கோடி ரூபாய் ஆந்திர மாநில அரசுக்குக் கொடுத்துள்ளது. இத் திட்டத்திற்காகத் தமிழ்நாடு அரசு இந்த ஆண்டு (1990-91) ஒதுக்கியுள்ள 45 கோடி ரூபாயில் ஏற்கெனவே 15 கோடி ரூபாய் ஆந்திர மாநில அரசுக்கு வழங்கப்பட்டு விட்டது. மீதமுள்ள 30 கோடி ரூபாயையும் தேவைப்பட்டால், உடனடியாக வழங்குவது பற்றி தமிழ்நாடு- ஆந்திர மாநிலங்களின் உயர் அதிகாரிகள் ஒருங்கிணைப்பு ஆலோசனைக் கூட்டம் முடிவு செய்யும்.

சென்னைக்குக் கொண்டு வரப் படும் கிருஷ்ணா ஆற்று நீரைச் சேமிதது வைக்கும் பொருட்டு பூண்டி, செங்குன்றம் மற்றும் செம்பரம்பாக்கம் ஆகிய ஏரிகளின் கரைகளை உயர்த்தவும் குடிநீரைச் சுத்தப்படுத்தும் நிலையங்கள் அமைக்கவும், குழாய்கள் பதிக்கவும் உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு அரசு 500 கோடி ரூபாய்த் திட்டம் ஒன்றையும் செயல்படுத்தி வருகிறது.

- தொகுப்பு: தே. மணி.





# நற்பணிப் பயண நிகழ்ச்சியில் அமைச்சர்கள்

**மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 7.1.91 - 8.1.91 ஆகிய இருநாட்களும் மேற்கொண்ட நற்பணிப் பயணத்தில் கலந்து கொண்ட அமைச்சர்கள் ஆற்றிய உரைச் சுருக்கம் வருமாறு-**

"நற்பணிப் பயணம் மேற்கொண்டு, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் இந்தத் தொகுப்பு வீடுகளைத் திறந்து வைக்கிறார். இங்கே இன்று இந்தப் பணி துவக்கி வைக்கப்படுகிறது என்றால், தமிழகமெங்கும் பரவலாக இந்தப் பணி நிறைவேற்றப்படவிருக்கிறது என்றே பொருள்.

ஏழை எளிய மக்களின் அடிப்படைத் தேவைகளை உணர்ந்த இந்த அரசு, ஆட்சிப்பொறுப்பேற்ற இந்த இரண்டாண்டுக் காலத்தில் பல நற்பணிகளை அவர்களுக்காக ஆற்றியிருக்கிறது. அதன் தொடர்பாகவே மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் தொகுப்பு வீடுகள் வழங்கும் இந்த நற்பணிப் பயணம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்த வகையில் தாழ்த்தப்பட்ட மக்களின் - பிற்படுத்தப்பட்ட மக்களின் ஒரே நம்பிக்கை நட்சத்திரமாக விளங்குகிறார் நம்முடைய முதல்வர் அவர்கள். தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு - பிற்படுத்தப்பட்ட - மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞரை விட்டால் வேறு நாதியில்லை என்பதற்கு இன்று திறந்து வைக்கப்படும் இந்த வீடுகளே சாட்சி!"

**- கோ.சி. மணி**
**(மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்)**

### கோயில்கள்-யாத்திரைத் தலங்கள்

**ரதத்திலே நான் வரவில்லை; அலங்காரமான ரதத்திலோ- குதிரை பூட்டிய ரதத்திலோ-யானை பூட்டிய ரதத்திலோ வரவில்லை; கையிலே வில், அம்பை வைத்துக் கொண்டு வரவில்லை.**

**இந்த ரதம் அயோத்திக்குப் போகிற ரதமல்ல; அநாதையாக வாழுகிற மக்கட்கு, ஆதரவற்ற மக்கட்கு, ஒரு காலத்திலே ஆதிக்கச் சக்தியால் அடிமைகளாக்கப்பட்ட மக்கட்காக வருகிற 'வேன்'; சாதாரண வேன்தான். அந்த 'வேன்' உங்களுக்காகக் கட்டித் தரப்படும் வீட்டின் அடையாளச் சின்னமாக இருக்கிறது.**

**நான் இங்கே இருபுறமும் ஆதிதிராவிடர்களுக்காகக் கட்டப்பட்டிருக்கிற இந்த அழகான வீடுகளைப் பார்க்கிறேன்.**

**இவைகள்தான் நான் சென்று வணங்குகின்ற ஆலயங்கள். எனக்கு இவைகள்தான் கோயில்கள். எனக்கு இப்படிப்பட்ட பகுதிகள்தான் யாத்திரைத் தலங்கள்!**

*—மாண்புமிகு முதல்வர் கலைஞர்*
*(7.1.91-இல், செங்கை அண்ணா மாவட்டம் ஏனாத்தூரில் பேசியதிலிருந்து)*



"தமிழகத்தின் வராற்றில் இந்தநாள் ஒரு முக்கியமான நாள். கிராமங்களிலெல்லாம் விழா களை கட்டியிருக்கக் காண்கிறோம்.

இந்தியாவின் எந்தப் பகுதியிலும் ஆதிதிராவிடர்களுக்கு இப்படிப்பட்ட இலவசக் காங்கிரீட் வீடுகள் கட்டித் தரப்படவில்லை; இங்கேதான் கட்டித் தரப்படுகின்றன. இது தேர்தல் நோக்கமல்ல; தாழ்த்தப்பட்ட மக்களைக் கைதூக்கி விடவேண்டும் என்கிற அரசின் உன்னத நோக்கத்தில் இதுவும் ஒன்று. இந்தியாவிலே அரிசனப் பெண்ணை மருமகளாக ஏற்ற ஒரே முதல்வர் நம்முடைய கலைஞர் அவர்கள்தான்.

கருவினுள்ளிருக்கும் குழந்தைக்கும் கருணை காட்டி வருபவர் கடவுள் என்பார்கள் பக்தர்கள்; கருவுற்றிருக்கும் மகளிர்க்கும் நிதியுதவி செய்து வருபவர் டாக்டர் கலைஞர். எட்டாம் வகுப்பு வரை படித்தால்கூட போதும்; நிதியுதவி, ஏழைப்பெண் திருமணத்திற்கு நிதியுதவி; சொத்தில் பெண்களுக்கும் பங்கு என்பது போன்ற நல்லபல திட்டங்களையெல்லாம் நிறைவேற்றி - தாயினும் சாலப் பரிந்து ஏழை எளிய மக்களைக் காக்கும் கருணையுள்ளம் கொண்டவர் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள்.

நாடு இந்த நல்லரசைப் புரிந்து கொண்டுவிட்டது என்பதற்கு உதாரணம்தான் - இன்று காணும் மக்கள் வெள்ளம்!"

**- எஸ். துரைமுருகன்**
**(மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்)**

"இன்றைக்குத்தான் என்பதல்ல; என்றைக்கு நம்முடைய தலைவர் அவர்கள் இந்த நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றாரோ, அன்றைக்கே இந்த நற்பணிப் பயணம் தொடங்கி விட்டது.

கோட்டையிலே இருந்து சட்ட திட்டங்களை நிறைவேற்றுவது மட்டுமல்ல; அவற்றால் மக்கள் எந்த அளவுக்கு மனநிறைவு பெற்றார்கள் என்பதை நேரிலேயே போய்ப் பார்க்க வேண்டும் என்று நினைப்பவர்தான் நம்து மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள். அதுதான் இந்த நற்பணிப் பயணம்.

- தாழ்த்தப்பட்ட மக்கள் மீது மிகுந்த அக்கறையுள்ள ஒரே தலைவர் நம் கலைஞர் அவர்களேயாவர்.

சுயவிளம்பரத்திற்காகவே சில திட்டங்களை அறிவித்துவிட்டு, வெறுமனே அடிக்கல் நாட்டிய முதல்வர்கள்-தலைவர்களையெல்லாம் இந்த நாடு கண்டிருக்கிறது. கழகத் தலைவர் கலைஞர் அவர்கள்தான், சொன்னதைச் செய்வோம்; செய்வதைச் சொல்வோம் என்ற வகையில் செயல்பட்டு வருகிறார். இந்த அரசில்தான் விளம்பரத்திற்காக அல்லாமல் ஏழை எளிய மக்களுக்காகவே திட்டங்கள் தீட்டப்படுகின்றன; முறைப்படி அதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, தேவையான நிதியும் ஒதுக்கப்படுகிறது.

இன்றைக்கு வழங்கப்படும் இலவசக் காங்கிரீட் வீடுகளே அதற்கு உதாரணம்."

**- க. பொன்முடி**
**(மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்)**

"தாழ்த்தப்பட்ட மக்கள் நலனுக்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிற ஒரே முதலமைச்சர், இந்தியாவிலேயே நம்முடைய தலைவர் கலைஞராகத்தான் இருக்க முடியும். 1974-இல் தாட்கோ என்றொரு அமைப்பை உருவாக்கி, சமுதாயத்தில் கேட்பாரற்றுக் கிடந்த ஆதிதிராவிட மக்களுக்கு அதன்மூலம் இலவசக் காங்கிரீட் வீடுகளைக் கட்டிக் கொடுத்த பெருமை அவருடையதாகும்.

இடையில் ஒரு பதின்மூன்று ஆண்டுக்காலம் தலைவர் அவர்கள் ஆட்சியில் இல்லை; அதனாலேயே அந்தப் பணி நின்றுபோயிருந்தது. இப்போது அவர்கள் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்ற 24 மணி நேரத்திற்குள்ளாகவே, இந்த வீடுகட்டும் பணியை - அதுவும் ஓட்டு வீடுகளையெல்லாம் ஒட்டு வீடுகளாக மாற்றும் பணியைத் தொடருவதாக அறிவித்து, அதற்கான பெரும் நிதியையும் அதற்கு அடுத்த வாரமே ஒதுக்கீடு செய்தார்கள். அதுமட்டுமல்ல; இந்தப் பணி எப்படியெல்லாம் விரைவாக நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் தெரிவித்து, கண்காணித்து வந்தார்கள். இந்தத் திட்டம் இன்னும் தொடர விருக்கிறது.

இலவச வீடுகள் வழங்கப்படும் இது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சி. தாழ்த்தப்பட்ட மக்களின், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின், அடக்கப்பட்ட மக்களின், ஒடுக்கப்பட்ட மக்களின் பாதுகாவலராக விளங்கி வருபவர் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள்."

**- க. சுந்தரம்**
**(மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர்)**

### ஏழைகட்கெல்லாம் வீட்டுவசதி

**"தாழ்த்தப்பட்டவர்களுக்கு, ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டப்படுகின்ற இந்தப் பணி ஓரளவு முன்னேறிய பிறகு- இன்னும் சில இலட்சம் வீடுகள் கட்டப்பட்ட பிறகு, தொடர்ந்து என்னுடைய ஆசை ஏழை எளியவர்களாக இருக்கின்ற- மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், அவர்கள் முக்குலத்தவர்களாக, வன்னியர்களாக இப்படிப் பல்வேறு பிரிவு மக்களாக இருக்கின்றார்கள்; அந்த மக்களுக்கெல்லாம்- அவர்கள் ஏழைகளாக இருந்தால், வருமான அடிப்படையில் கணக்கைப் பார்த்து, அவர்களுக்கும் இது போன்ற இலவச வீட்டுத் திட்டத்தை இந்த அரசு விரைவிலேயே அறிமுகப்படுத்தும்."**

*—மாண்புமிகு முதல்வர் கலைஞர்*
*(செங்கை அண்ணா மாவட்டம் கூரத்தில், 7.1.91-இல் நடைபெற்ற கூட்டத்தில் பேசியதிலிருந்து)*

### அட்டைப்பட விளக்கம்:

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 18.1.91 அன்று மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள் உரை ஆற்றிய காட்சி.**



மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள்
7.1.91 - 8.1.91 ஆகிய நாட்களில்
செங்கை- அண்ணா, வட ஆர்க்காடு
அம்பேத்கார், திருவண்ணாமலைச் சம்புவராயர்
மாவட்டங்களில் மேற்கொண்ட
சுற்றுப்பயணக் காட்சி






தமிழ்நாடு அரசு சின்கோனாத் துறை, 1-4-90 முதல் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இத்துறையின் பரந்த நிலப்பரப்பையும், உடைமைகளையும் பயனுள்ள வகையில் பயன்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

தேயிலை போன்ற மாற்றுப் பொருட்களின் விற்பனையில் கிடைக்கும் வருவாயைப் போல் இல்லாமல், கொய்னாப் பொருட்களின் விற்பனை, உலக அரங்கில் ஒரு குறிப்பிட்ட வரம்பிற்குள்ளேயே உள்ளது. தேயிலை பயிரிடத் தகுதியற்ற நிலங்கள் காடு வளர்க்க வனத்துறைக்கு ஒப்படைக்கப்படுகின்றன. மருந்துச் செடிகளில் கிடைக்கும் உற்பத்திப் பொருட்கள் குறைந்துள்ளதாலும், மாற்று மருந்துகளின் உபயோகம் அறியப்பட்டதாலும் இத்துறைக்குப் போதிய வருவாய் கிட்டவில்லை. இச்சூழ்நிலையின் காரணமாக, இத்துறையைத் தேயிலைத் தோட்டக் கழகத்துடன் இணைத்து, இத்துறை நிலங்களில் தேயிலை பயிரிட முடிவு செய்யப்பட்டது.

சின்கோனாத் துறை நிலங்களை — தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்திற்கு உகந்த நிலங்களை-ஆராய்ந்து அறிய அரசு தனிக்குழு ஒன்று அமைத்துள்ளது. இக்குழு வனத்துறைக்கும் தேயிலைக் கழகத்திற்கும் பொருத்தமான நிலங்களை ஆராய்ந்து அரசுக்குக் கருத்துரு வழங்கியது.

சின்கோனாத் துறையைச் சார்ந்த 256 அரசு அலுவலர்களும் பணியாளர்களும், 1,650 தொழிலாளர்களும் தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகப் பொறுப்பில் உள்ளனர். மேற்கண்ட அரசுப் பணியாளர்களுக்கு வனத்துறை தாய்த்துறையாகவும் தேயிலைத் தோட்டக்கழக்கத்திற்கு 'அயற்பணி' என்ற நிபந்தனையுடனும் பணிக்காலம் நிர்ணயிக்கப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் 1990-91-ஆம் ஆண்டு முதல், ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட பரப்பில் தேயிலை பயிரிடுவதென்றும் 1998-99-ஆம் ஆண்டிற்குள் மொத்தம் 3000 எக்டேர் பரப்பில் தேயிலை பயிரிடப்படவேண்டும் என்றும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டில் இதுவரை 12.50 எக்டேர் தேயிலை பயிரிடப்பட்டுள்ளது. 1991-92-ஆம் ஆண்டிற்கு 255 எக்டேர் தேயிலை பயிரிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு தேயிலைத்தோட்டக் கழகத்திடமிருந்து தேயிலை நாற்றுக்கள் பெற்று இப்பிரிவில் தேயிலை நாற்றங்கால்கள் அமைக்கப்பட்டுள்ளன

தேயிலை முழு அளவில் பயிரிட்டு முடிந்தவுடன் சுமார் 7,000 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வாய்ப்புள்ளது. இத்திட்டத்திற்கு மொத்தம் 9 ஆண்டுகளுக்கு ரூபாய் 8,800 இலட்சங்கள் தேவைப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

நீலகிரியில் படிப்படியாக மொத்தம் 600 எக்டேர் நிலப்பரப்பில் தேயிலை பயிரிட இக்கழகம் முடிவு செய்துள்ளது. இதனால், சின்கோனாத் துறை நிரந்தரத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளிப்பதுடன் அவர்களின் வாரிசுதாரர்களுக்கும் தற்காலிகப் பணி வழங்கவும் வாய்ப்புள்ளது. இத்தொழிலாளர்களுக்கு ரூ.14 இலட்சம் மதிப்பீட்டில் 35 தரமான புதிய வீடுகள் கட்டித்தரவும் இக்கழகம் முடிவு செய்துள்ளது. தொழிலாளர் குடியிருப்புக்கு மின் இணைப்பு வழங்க இவ்வாண்டில் ரூ.3.5 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

சின்கோனாத் துறையைத் தேயிலைத் தோட்டக் கழகத்துடன் இணைத்த பிறகு தொழிற்சங்கங்களுடன் ஆலோசனை நடத்தி, தீர்மானம் செய்து, இத்தொழிலாளர்களுக்குத் தின ஊதியத்தை ரூ15.95-லிருந்து ரூ.20 ஆக உயர்த்தி 1.10.90 முதல் வழங்கி வருகிறது. இத்தொழிலாளர்களுக்கு ரூ.400 வீதம் சென்ற தீபாவளிப் பண்டிகைக்கு (1990) வழங்கப்பட்டுள்ளது.

மூ.நா. கிருஷ்ணசாமி,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
உதகமண்டலம்,
நீலகிரி மாவட்டம்.

**அம்பேத்கர் நூற்றாண்டு**



★ ஆயிரமாயிரம் ஆண்டு அடிமைகளாகத் தன்மானத்தை இழந்து இருப்பதைக் காட்டிலும், அரை நிமிடம் வாழ்வாங்கு வாழ்ந்து அமரராவது சாலச் சிறந்ததாகும்!

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்ட
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

அதி நவீன பட்டு வகைகள்



100% உன்னதமான பட்டு
உத்தரவாதமான சரிகை

இங்கள் உலகில் முக்கிய பங்கு பெறுவது வண்ணங்கள்... அவைகளின் அழகு ஜாலங்களை பொலிவும் நேர்த்தியும் மிக்க பட்டு வகைகளில் உங்களுக்குக் கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது.

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் — உங்கள் இனிய நேரங்களில்!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி
இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

● புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு ● ஷர்ட்டிங் ● சூட்டிங் ● ஃபர்னிஷிங்
● பெட்ஷீட்கள் ● டவல்கள் ● வேட்டிகள் ● லுங்கிகள், இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.

DIPR/1768/MS68/HTA

# தமிழகத்திற்குப் பெருமை சேர்த்த தேசிய மாணவர் படையினர்!



திரு கெவின் கோமாஸ்



செல்வி அஸ்வினி நாராயணன்



# இந்த இதழில்...




| | | |
|---|---|---|
| தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி அரசு அறிவிப்பு | ... | 2 |
| மேதகு ஆளுநரின் ஆலோசகர்கள் வாழ்க்கைக் குறிப்பு | ... | 4 |
| காவிரி நீர்: மேதகு ஆளுநர் கடிதங்கள் | ... | 6 |
| தமிழகத்திற்குப் பெருமை சேர்த்த தேசிய மாணவர் படை | ... | 9 |
| தருமபுரி மாவட்டத்தில் தோட்டக்கலை வளர்ச்சி | ... | 10 |
| தமிழ் வளர்த்த பெரியார்: கவிவேந்தர் செகவீர பாண்டியனார் | ... | 11 |
| நேதாஜி ஒரு பார்வை | ... | 12 |
| எண்ணெய்வித்துச் சாகுபடியில் சாதனை | ... | 14 |
| தமிழக செஸ் வீரர் ஆனந்த் | ... | 16 |
| பெண் சிசுக்கள் கொலைக்கு முற்றுப்புள்ளி | ... | 17 |
| குழாய்க் கிணற்றில் மின்னியல் ஆய்வின் அவசியம் | ... | 19 |
| பெரியார் மாவட்டத்தில் பட்டுத்தொழில் வளர்ச்சி | ... | 21 |
| மாணவர் பக்கம் | ... | 23 |
| மாமல்லபுரத்தில் வசந்த விழா | ... | 25 |
| சென்னை மாநகராட்சிச் செய்திகள் | ... | 27 |
| படமும் செய்தியும் | ... | 30 |





தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2022

மாசித் திங்கள் - 4

மலர்: 21 இதழ்: 16

16-2-1991

# தமிழ்நாட்டில்
# குடியரசுத் தலைவர் ஆட்சி
## அரசு அறிவிப்பு

**ஆணை:**

புது டில்லி, நாள் *30.1.1991*

G.S.R. 55(E) — குடியரசுத் தலைவர் பிறப்பித்துள்ள பின்வரும் ஆணை, பொதுமக்களின் தகவலுக்காக இதன்கீழ் வெளியிடப்படுகிறது:-

"இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 356-ஆம் பிரிவின் கீழ், 30.1.1991 அன்று அதிகார முறையில் என்னால் வெளியிடப்பட்ட அறிவிப்பின் (சி) பகுதியைச் சேர்ந்த (1) உட்பகுதிக்கிணங்க, தமிழக அரசின் அனைத்து அலுவல்களையும், அரசமைப்புச் சட்டத்தின் மூலம் அல்லது அந்த மாநிலத்தில் தற்போது செயலிலிருக்கும் எந்தவொரு சட்டத்தின் மூலம், அம்மாநில ஆளுநரிடம் நிலைபெற்றுள்ள அல்லது அவர் செலுத்தத்தக்க அனைத்து அதிகாரங்களையும், அதிகார முறையில் அறிவிக்கப்பட்ட மேற்சொன்ன அறிவிப்பின் பகுதியின் மூலம், குடியரசுத் தலைவர் ஏற்றுக் கொண்டுள்ளதாகக் கருதி, அவருடைய (குடியரசுத் தலைவருடைய) மேற்பார்வை, உத்தரவு, கட்டுப்பாடு ஆகியவற்றிற்கு உட்பட்டு, மேற்சொன்ன மாநிலத்தின் ஆளுநர் செலுத்தத்தக்கவையாகும் என்று நான் இதனால் கட்டளையிடுகிறேன்.

| | |
|---|---|
| புது டில்லி,<br>*30.1.1991* | **ஆர். வெங்கட்ராமன்**<br>குடியரசுத் தலைவர் |
| புது டில்லி,<br>*30.1.1991* | **ஆர். கே. பார்கவா**<br>மத்திய உள்துறைச் செயலாளர் |
| சென்னை-9<br>*30.1.1991* | **டி.வி. அந்தோணி**<br>தலைமைச் செயலாளர் |

பாகம் II - பிரிவு I

**தலைமைச் செயலகத் துறைகள் வெளியிட்ட சிறப்புத் தன்மை வாய்ந்த அல்லது பொது மக்களின் குறிப்பிட்ட நலனின் பேரிலான அறிவிக்கைகள் அல்லது ஆணைகள்**

**அரசின் அறிவிக்கைகள்.**

**பொதுத்துறை**
**(மிகு மறைபொருள்)**

**தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சியை அதிகார முறையில் அறிவித்தல்.**

(கடித எண். SS-I/145-1/91 பொது (மிமபொ), *30.1.1991*



புகைப்படம் உதவி: 'தி இந்து'

எண். II (1)PUSC/22(a)/91

புது டில்லி, இந்திய அரசின் உள் விவகாரங்கள் அமைச்சகத்தின், 30.1.1991-ஆம் நாளிட்ட கீழ்க்காணும் அறிவிக்கையும் ஆணையும் மீண்டும் வெளியிடப்படுகின்றன.

**அறிவிக்கை**

**G.S.R. 54(E) – குடியரசுத் தலைவரின் கீழ்க்காணும் பொது அறிவிப்பு, பொதுமக்களின் தகவலுக்காக வெளியிடப்படுகிறது:**

**இந்திய அரசமைப்புச் சட்டத்தின் (இதன் பிறகு "அரசமைப்புச் சட்டம்" எனக் குறிப்பிடப்படும்) விதித்துறைகளுக்கு இணங்க, தமிழ்நாடு அரசு செயல்பட இயலாத நிலை தோன்றியுள்ளது என்று இந்தியக் குடியரசுத் தலைவராகிய, ஆர்.வெங்கட்ராமன் என்கிற நான் ஐயமறத் தெளிவதால்,**

**அரசமைப்புச் சட்டத்தின் 356-ஆம் பிரிவில் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டும், அதன் சார்பில் எனக்கு அளிக்கப்பட்டுள்ள பிற அதிகாரங்களைக் கொண்டும், நான் இதனால் பின்வருவனவற்றைச் செய்கிறேன்:-**

(a) இந்த மாநில அரசின் அலுவல்கள் அனைத்தையும், மாநில ஆளுநரிடம் நிலைபெற்றுள்ள, அல்லது அவர் செயல்படுத்தக்கூடிய அதிகாரங்கள் அனைத்தையும் இந்தியக் குடியரசுத் தலைவர் என்ற முறையில் நான் ஏற்கிறேன்;

(b) இந்த மாநிலச் சட்டமன்றத்தின் அதிகாரங்கள், நாடாளுமன்றத்தால் அல்லது அதன் அதிகாரத்தின்கீழ் செயல்படுத்தப்படத் தக்கதாகும் என்று அறிவிக்கிறேன்;

(c) இந்த அறிவிப்பின் நோக்கங்களுக்குச் செயல்வடிவம் அளிப்பதற்குத் தேவையானதாக, அல்லது, விரும்பத்தக்கதாக எனக்குத் தோன்றுகிற பின்வரும் இடைநிகழ்வான செயல்விளைவான விதித்துறைகளை ஏற்படுத்துகிறேன்; அவையாவன:-

(I) மேற்சொன்னபடி, இந்த அறிவிப்பின் (a) பகுதி காரணமாக நான் ஏற்றுக் கொண்டுள்ள அலுவல்களையும், அதிகாரங்களையும் செலுத்துகின்ற வகையில், இம்மாநில ஆளுநரின் மூலம் நான் பொருத்தமெனக் கருதுகிற அளவிற்கு இந்தியக் குடியரசுத் தலைவர் என்ற முறையில் செயல்படுவது சட்டபூர்வமானதாகும்;

(II) இந்த மாநிலம் தொடர்பான அரசமைப்புச் சட்டத்தின் பின்வரும் விதித்துறைகளின் செயல்பாடுகள் இதனால் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுகின்றன; அவையாவன:-

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 3-ஆம் பிரிவைச் சேர்ந்த வரம்பு நிபந்தனை மாநிலச் சட்டமன்றத்திற்குக் குடியரசுத் தலைவர் குறிப்பிட்டனுப்புவது தொடர்புடைய அளவிற்குச் செயல்பாடு;

இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவர் ஆளுநரிடம் சமர்ப்பிக்கும் அறிக்கைகளை மாநிலச் சட்டமன்றத்தில் வைப்பது தொடர்புடைய அளவிற்கு 151-ஆம் பிரிவின் (2) ஆம் பகுதி;

163, 164 ஆகிய பிரிவுகள்:-

மாநில அரசின் அலுவல்களை, அமைச்சர்களிடையே ஒதுக்கீடு செய்வது தொடர்புள்ள அளவிற்கு 166-ஆம் பிரிவைச் சேர்ந்த (3) ஆம் பகுதி.

167-ஆம் பிரிவும் ஒரு மாநிலச் சட்டப் பேரவை நிறைவேற்றும் தீர்மானம் தொடர்புள்ள அளவிற்கு, 169-ஆம் பிரிவின் (1) பத்தியும்

174-ஆம் பிரிவின் (1) பகுதி (2) பகுதியின் (a) துணைப்பகுதி, 175- ஆம் பிரிவிலிருந்து 178-ஆம் பிரிவுவரை (இருபிரிவுகளும் உட்பட) 179-ஆம் பிரிவின் (b) (c) பகுதிகள் 179-ஆம் பிரிவின் முதல் வரம்பு நிபந்தனை 180, 181 ஆகிய பிரிவுகள்.

சட்டப் பேரவைத் துணைத் தலைவரின் சம்பளங்கள், படிகள் தொடர்புள்ள அளவிற்கு 186-ஆம் பிரிவு; 188, 189, 193, 194, 195, 196 ஆகிய பிரிவுகள். 199-ஆம் பிரிவின் (3) (4) பகுதிகள்.

சட்டப்பேரவைத் துணைத் தலைவரின் சம்பளங்கள், படிகள் தொடர்புள்ள அளவிற்கு 202-ஆம் பிரிவின் (3) பகுதி; 208 முதல் 211 வரையிலான பிரிவுகள் (இரு பிரிவுகளும் உட்பட) 213-ஆம் பிரிவின் (1) பகுதியின் வரம்பு நிபந்தனையும் (3) பகுதியின் வரம்பு நிபந்தனையும்.

மாநிலச் சட்டமன்றத்தில் குறிப்புகளுடன் அறிக்கை வைப்பது தொடர்புள்ள 323-ஆம் பிரிவின் (2) பகுதி.

**(III) மேற்சொன்ன மாநிலச் சட்டப் பேரவை இதனால் கலைக்கப்படுகிறது;**

**(IV) மேற்சொன்ன மாநிலம் தொடர்பாக ஆளுநர் என்று அரசமைப்புச் சட்டத்தில் குறிப்பிடும் இடங்களிலெல்லாம், குடியரசுத் தலைவர் என்று பொருள் கொள்ள வேண்டும்; மாநிலச் சட்டமன்றத்தின் பணிகள் அதிகாரங்கள் தொடர்பாக, மாநிலச் சட்டமன்றம் என்று குறிப்பிடும் இடங்களிலெல்லாம், சந்தர்ப்பம் வேறு பொருள் குறித்தாலன்றி மற்றபடி குறிப்பாக மாநிலச் சட்டமன்றம், ஆளுநர் என்று 213- ஆம் பிரிவில் வருமிடங்களிளெல்லாம் நாடாளுமன்றம், குடியரசுத் தலைவர் என்று பொருள் கொள்ள வேண்டும்.**

அதனால், இங்குக் குறிப்பிட்டவை 153, 155, முதல் 159 வரையிலான பிரிவுகள் (இரு பிரிவுகளும் உட்பட) 299-ஆம் பிரிவு, 361-ஆம் பிரிவு ஆகியவற்றின் விதித்துறையையும் இரண்டாம் விவர அட்டவணையின் 1 முதல் 4 வரையிலான பத்திகளையும் (இரு பத்திகளும் உட்பட) பாதிக்காது அல்லது இப்பகுதியின் (I) துணைப் பகுதியின் கீழ் மேற்சொன்ன மாநிலத்தின் ஆளுநர் மூலமாகத்தான் பொருத்தமெனக் கருதும் அளவுக்கு இந்தியக் குடியரசுத் தலைவர் செயல்படுவதிலிருந்து அவரைப் பாதிக்காது;

(V) மேற்சொன்ன மாநிலத்தின் சட்டமன்றம் இயற்றிய சட்டங்களும் அல்லது சட்டவிதிகளும், அல்லது, அச்சட்டமன்றத்தின் சட்டங்களும் சட்டவிதிகளும் என்று அரசமைப்புச் சட்டத்தில் வருமிடங்களிலெல்லாம், அதிகாரபூர்வமான இந்த அறிவிப்பு மூலம், நாடாளுமன்றம் அல்லது அரசமைப்புச் சட்டத்தின் 357-ஆம் பிரிவின் (1) பகுதியின் (a) துணைப் பகுதியில் குறிப்பிட்ட குடியரசுத் தலைவர், அல்லது, வேறு ஓர் அதிகாரி மேற்சொன்ன மாநிலச் சட்டமன்றத்தின் அதிகாரங்களைச் செலுத்தி இயற்றிய சட்டங்கள் அல்லது சட்டவிதிகளெனப் பொருள் கொள்ளப்பட வேண்டும். தமிழ்நாடு மாநிலத்தின் செயலிலுள்ள தமிழ்நாடு 1891-ஆம் ஆண்டு பொதுப் பகுதிகள் சட்டமும் (த.நா.சட்டம் 1/189) மாநிலச் சட்டங்களுக்குப் பொருந்துகிறவாறு, 1897-ஆம் ஆண்டு பொதுப்பகுதிகள் சட்டம் (10/1897) மேற்சொன்ன மாநிலச் சட்டமன்றத்தின் சட்டத்தைப்போன்று, யாதொரு சட்டம் அல்லது சட்டவிதிகள் தொடர்பாகச் செயலிலிருக்கும்.

(எண்.V/11013/2/91. சிஎஸ்ஆர்)

| | |
|---|---|
| புதுடில்லி,<br>*30.1.1991* | **ஆர். வெங்கட்ராமன்**<br>குடியரசுத் தலைவர் |
| புதுடில்லி,<br>*30.1.1991* | **ஆர். கே. பார்கவா**<br>உள்துறைச் செயலாளர் |
| சென்னை-9<br>*30.1.1991* | **டி.வி. அந்தோணி**<br>தலைமைச் செயலாளர் |

# காவிரிநீர்: ஆளுநர் கடிதம்



**மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ்:எஸ். பர்னாலா அவர்கள், தமிழகத்திற்குக் காவிரி நீர் விட ஆவன செய்யுமாறு மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு 1.2.91 அன்று கடிதம் எழுதினார். அதன் விவரம் வருமாறு:**

தமிழ்நாடு, உணவு உற்பத்தியில் காவிரி ஆற்றுப் பகுதியைத்தான் அதிகமாக நம்பி இருக்கிறது என்று உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

1974-ஆம் ஆண்டில் இருந்து இந்தப் பகுதியில் நீர்ப்பாசனம் அபாயகரமான நிலையில் இருக்கிறது. இதுபற்றி மாநிலங்களுக்கு இடையே உள்ள பிரச்னை சமீபத்தில் அமைக்கப்பட்ட நடுவர் மன்றத்தில் இருக்கிறது.

இந்த ஆண்டு கர்நாடக மாநில அரசு 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து நடைமுறைப் படுத்தாததால் மேட்டூர் அணைக்குத் தண்ணீர் வரத்து மிகவும் குறைவாக இருந்தது. சாகுபடிக்காக மேட்டூர் அணையில் இருந்து 9 வாரங்களுக்குப் பின்பு, அதாவது கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் 22- ஆம் தேதிதான் திறக்க முடிந்தது. இதனால் ஒரு போகச் சாகுபடிதான் செய்ய முடிந்தது.

51 இலட்சம் ஏக்கர் நிலத்தில் குறுவைச் சாகுபடி செய்ய முடியவில்லை.

கடந்த ஆண்டு அக்டோபர் மாதத்தில் இருந்தே, தமிழ்நாடு கர்நாடக அரசைத் தண்ணீர் திறந்து விடும்படி கேட்டுக்கொண்டு இருக்கிறது.

கடந்த ஜனவரி மாதம் 6-ஆம் தேதி முன்னாள் முதல்-அமைச்சர் உங்களுக்கு ஒரு டெலக்ஸ் செய்தி அனுப்பினார். அதில் பயிர்களைக் காப்பாற்றத் தண்ணீர்த் தேவையைக் கூறி உங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி, கர்நாடக அரசு 20 டி.எம்.சி (ஒரு டி.எம்.சி என்பது 100 கோடி கன அடி) தண்ணீர் திறந்துவிட ஏற்பாடு செய்யும்படி கேட்டிருந்தார்.

இதுகுறித்து, டெல்லியில் நடந்த நீர்ப்பாசனத் துறை அமைச்சர்கள் மாநாட்டிலும் நீங்கள் இது குறித்து கர்நாடக முதல்- அமைச்சரிடம் விவாதித்ததாக அறிகிறேன்.

தொடர்ந்து, கடந்த ஜனவரி மாதம் 19-ஆம் தேதி, முன்னாள் முதல்-அமைச்சர் கர்நாடக முதல்-அமைச்சருக்குக் கடிதம் எழுதி இருந்தார். ஆனால் எந்தப் பதிலும் இன்னும் வரவில்லை.

இப்போது மேட்டூர் அணையில் 5.7 டி.எம்.சி தண்ணீர்தான் இருக்கிறது. இதில் 7 டி.எம்.சி. தண்ணீரைத்தான் பயன்படுத்த முடியும். இப்போது பயிர்களைக் காப்பாற்ற, குறைந்தது 10 டி.எம்.சி தண்ணீராவது வேண்டும்.

எனவே, தாங்கள் உங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி உடனடியாக 10 டி.எம்.சி தண்ணீரைக் காவிரியில்விட ஏற்பாடு செய்யும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த விஷயத்தில் உடனடித் தலையீடும், உதவியும் பயிர்களைக் காப்பாற்ற மிகவும் அவசியம். இல்லையென்றால் விவசாயிகளுக்குப் பெரிய இழப்பு ஏற்படுவதோடு, அரிசி உற்பத்தியில் கணிசமான பற்றாக்குறையும் ஏற்படும்.

மேற்கண்டவாறு பிரதமருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேதகு ஆளுநர் அவர்கள் எழுதியுள்ளார்.

**இதுபோல மாண்புமிகு கர்நாடக முதல்-அமைச்சர் பங்காரப்பாவுக்கும் அதே நாளில் மேதகு தமிழக ஆளுநர் அவர்கள், ஒரு கடிதம் எழுதி இருக்கிறார். அந்தக் கடிதத்தில் அவர் கூறி இருப்பதாவது:**

'புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் உள்ள காரைக்கால் பகுதி உள்படத் தமிழ்நாட்டில் உள்ள பயிர்களைக் காப்பாற்ற உடனடியாகக் கர்நாடக அணைகளில் இருந்து குறைந்தபட்சம் 15 டி.எம்.சி தண்ணீர் விட வேண்டும் என்று கோரி, முன்னாள் முதல்- அமைச்சர் கடந்த மாதம் 19-ஆம் தேதி எழுதிய கடிதத்தைப் பார்க்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன். இதுகுறித்து எங்களுக்குப் பதில் இன்னும் வரவில்லை.

காவிரிப் படுகைப் பகுதியில் ஒரு கணிசமான அளவு பயிர்களுக்கு இன்னும் ஒன்று அல்லது இரண்டு முறை தண்ணீர் விடாவிட்டால் இந்த மாநிலத்தில் உணவு உற்பத்தியில் பெரும் இழப்பு ஏற்படும்.

மேட்டூர் அணையில் உள்ள தண்ணீரை பெரும் பகுதி பயன்படுத்தி விட்டோம். நீர்ப்பாசனத்துக்குத் தண்ணீர் எடுக்க மிகக் குறைவான அளவு தண்ணீரே இருக்கிறது. மேலும் நீர்ப்பாசனமின்றி வாடிக்கொண்டு இருக்கும் பயிர்களைக் காப்பாற்ற மேட்டூரில் 15 டி.எம்.சி. தண்ணீர் இல்லாவிட்டாலும், உடனடியாக - 10 டி.எம்.சி. தண்ணீர் எங்களுக்குத் தேவைப்படுகிறது.

எனவே, நிலைமையைச் சமாளிக்க உடனடியாகக் குறைந்தபட்சம் 10 டி.எம்.சி தண்ணீர் கர்நாடக அணைகளில் இருந்து விடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நேரத்தில் உங்கள் உதவி மிகவும் பாராட்டப்படும்.

மேற்கண்டவாறு அந்தக் கடிதத்தில் குறிப்பிடப் பட்டிருந்தது.

**இவ்விரு கடிதங்களுக்கும் தகுந்த பலன் காணாத நிலையில், மேதகு தமிழக ஆளுநர் அவர்கள், மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு 11.2.1991 அன்று மீண்டும் ஒரு கடிதம் எழுதினார். அதில் குறிப்பிடப்பட்டிருந்ததாவது:**

அன்புள்ள பிரதமர் அவர்களுக்கு,

எனது 1.2.1991 நாளிட்ட முந்தைய கடிதத்தை அன்புகூர்ந்து பார்க்கவும்; அக்கடிதத்தில், காவிரிப் படுகையில், வளர்ந்த நிலையிலுள்ள பயிர்களைக் காப்பாற்றுவதற்காகக் கர்நாடக நீர்த்தேக்கங்களிலிருந்து உடனடியாகத் தண்ணீர் விடுவதற்கான அவசியம் குறித்து விளக்கி, குறைந்தது 10 டி.எம்.சி. தண்ணீராவது விடுமாறு கர்நாடக அரசைத் தாங்கள் வலியுறுத்த வேண்டியிருந்தேன். அன்றே, இதுகுறித்து மாண்புமிகு கர்நாடக முதல்வர் அவர்களுக்கும் ஒரு கடிதம் எழுதினேன். அவரிடமிருந்து பெறப்பட்ட பதில் கடிதத்தின் நகலை இத்துடன் இணைத்துள்ளேன்.

மாண்புமிகு கர்நாடக முதல்வர் அவர்கள் தனது கடிதத்தில், ''5 டி.எம்.சி. அளவுக்கு மிகாமல்'' தண்ணீர் விடுவது குறித்துப் பரிசீலிக்கப் பின்வரும் நிபந்தனைகளை மீண்டும் வலியுறுத்தியுள்ளார்:

அ) நடுவர் மன்றத்திலும், உச்ச நீதிமன்றத்திலும் இடைக்கால ஆணை வேண்டி அளித்துள்ள மனுக்களைத் தமிழ்நாடு அரசு திரும்பப் பெற வேண்டும்;

ஆ) மின்பற்றாக்குறை மிக அதிகமாக உள்ளதால், தண்ணீருக்குப் பதிலாகத் தமிழ்நாடு மின்சாரம் அளிக்க வேண்டும்;

இ) எந்த நிலையில் தண்ணீர் அளித்தாலும், அதனை வழங்கப்பட்ட உரிமையாகவோ, முன்மொழியாகவோ எடுத்துக் கொள்ளக் கூடாது.

புதுடெல்லியில் 16.1.1991 அன்று நடைபெற்ற நீர்ப்பாசன அமைச்சர்கள் மாநாட்டில் தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறை முன்னாள் அமைச்சரின் வேண்டுகோளுக்குப் பதிலாக, மாண்புமிகு கர்நாடக முதல்வர் அவர்கள் மேற்கூறிய நிபந்தனைகளை விதித்தபோது, தண்ணீர் விடுவதை எந்தவித நிபந்தனைகளுடனும் இணைக்காமல், விளைந்துள்ள பயிர்களைக் காப்பாற்ற உடனடியாகத் தண்ணீர் விடுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமெனத் தாங்கள் அவரைக் கேட்டுக்கொண்டதாக அறிகிறேன். இம்மாதிரியான வேண்டுகோளைப் பரிவுடனும் காரணங்களை உணர்ந்தும் கவனிப்பதை விடுத்து, மாண்புமிகு கர்நாடக முதல்வர் அவர்கள் காரணமில்லாத, ஏற்றுக்கொள்ளவியலாத நிபந்தனைகளை வலியுறுத்த முனைவது துரதிருஷ்டவசமானது.

கடந்த இருபது ஆண்டுகளாகப் பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்வுகாண அனைத்து வழிகளிலும் முயன்றது வீணாகிய பின்னரே, இறுதி வழியாக, மாநிலங்களுக்கிடையேயான தண்ணீர் தகராறு குறித்து 1956- சட்டத்தின்படி இப்பிரச்

## முதலாவது அட்டை சொல்லும் செய்தி:

## யானைக்குப் புரிந்த மொழி!

யானைக்கு அறிவும், நினைவாற்றலும் உண்டு. பாகனின் சொற்களையும் செய்கைகளையும் மிக எளிதில் புரிந்து கொள்ளும் சக்தி அதற்கு இருக்கிறது.

யானைகளைப் பழக்கவும், நடத்தி வரவும் இந்திய மாவுத்தர்கள் பயன்படுத்தும் மொழிதான் மிகவும் தொன்மையானது என்று கருதப்படுகிறது. இவர்கள் இந்தியையோ, பாரசீகத்தையோ, அராபியையோ அதற்குப் பயன்படுத்தவில்லை; ஆதிகாலத்தில், சுமார் ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் குகைகளிலே வாழ்ந்துவந்த கற்கால மனிதர்கள் பயன்படுத்தி வந்த மொழியையே அவர்கள் அதற்குப் பயன்படுத்துகிறார்கள்!

ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய அம்மொழியே யானைக்குப் புரிகிறது என்றால், யானையின் நினைவாற்றலுக்கு இது ஓர் சான்றாகும். அதைத் தவிர வேறெந்த மொழியையும் புதிதாகப் புரிந்து கொள்ள மறுக்கிறதாம் யானை!

**நான்காவது பக்க அட்டைப் படம்:**

மஞ்சள் வெயில் மாலையில் தஞ்சைப் பெரிய கோவில்.

# ஆலோசகர்கள் பொறுப்பு வகிக்கும் அரசுத் துறைகள்

மேதகு தமிழக ஆளுநரின் ஆலோசகர்களான திரு.வி.கார்த்திகேயன் — திரு. வி.இராமச்சந்திரன் இருவருக்கும் உரிய துறைகள் ஒதுக்கீடு பற்றி 6.2.91 அன்று அரசு அறிவித்தது. அதன் விவரம் வருமாறு:

### திரு.வி.கார்த்திகேயன் இ.ஆ.ப. (ஓய்வு)

பொதுத்துறை
ஆதிதிராவிடர் நலம்
வேளாண்மை
பிற்படுத்தப்பட்டோர் நலம்
கல்வி
உள்துறை-மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை
வீட்டுவசதி மற்றும் புறநகர் வளர்ச்சி
செய்தி-சுற்றுலாத்துறை
சட்டம்
சட்டமன்றம்
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை
நடைமுறை நிர்வாகச் சீர்திருத்தம்
வருவாய்த்துறை
சமூக நலத்துறை - சத்துணவு
தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறை

### திரு.வி.இராமச்சந்திரன் இ.ஆ.ப. (ஓய்வு)

கால்நடை மற்றும் மீன்வளம்
வணிகவரி-இந்துசமய அறநிலையத்துறை
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் நலம்
சுற்றுப்புறச் சுகாதாரம் மற்றும் வனவளம்
நிதி
மக்கள் நல்வாழ்வு
தொழில்
தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்பு
திட்டவளர்ச்சி
பொதுப்பணித்துறை
ஊரக வளர்ச்சி
போக்குவரத்து

சினைக்குத் தீர்வு காணுவதற்காகத் தமிழ்நாடு அரசு நடுவர் மன்றம் அமைக்க வேண்டுமெனக் கோர நேர்ந்தது. இம்மாநிலத்தில் உரிமைகள் நடுவர் மன்றத்தின் விசாரணைகளின்போது ஏற்பட்ட ஒப்பந்தங்களைத் தொடர்ந்து மீறுவதனால் பாதிக்கப்படக்கூடாது என்பதை நிலைநிறுத்தவே, நடுவர் மன்றத்திலும் அதன்பின் உச்ச நீதிமன்றத்திலும் இடைக்கால ஆணைக்காகத் தமிழ்நாடு மனுச் செய்ய நேர்ந்தது. தற்போதுள்ள மிக அவசரத் தேவையைச் சரிசெய்யத் தண்ணீர் கோரும் இந்தச் சூழ்நிலையில் மனுக்களைத் திரும்பப் பெறவேண்டும் என்று நிபந்தனை விதிப்பது நீதியும் இல்லை, நியாயமுமில்லை. தற்போதுள்ள 'மாநிலங்களுக்கிடையேயான தண்ணீர் அளிப்பது' குறித்த ஒப்பந்தங்களை மீறி, நதியின் நீரோட்டத்தை வழிமறித்து நீரைத் தக்க வைத்துக் கொண்டு, மாண்புமிகு கர்நாடக முதல்வர் அவர்கள் இப்போது மனிதாபிமான அடிப்படையிலாவது வளர்ந்து நிற்கும் பயிர்களைக் காப்பாற்றக் கோரப்பட்ட குறைந்த அளவு நீரைக்கூட அளிக்க மறுத்து, நதி நீர்ப்படுகையிலுள்ள மாநிலத்தின் அனைத்து உரிமைகளையும் விட்டுக் கொடுக்கக் கோருகிறேன்.

சரியான நேரத்தில் தண்ணீர் அளிக்கக் கர்நாடக அரசு மறுத்ததனால் பயிர்களுக்கு அழிவு நேர்ந்துள்ளது. மேட்டூர் அணையில் நீர் இருப்பின்றி 19.1.1991 முதல் நீர்ப்பாசனத்திற்குத் தண்ணீர் விடுவதை நிறுத்த நேர்ந்தது.

மாண்புமிகு கர்நாடக முதல்வர் அவர்கள் தனது கடிதத்தில், தமிழ்நாடு 30 டி.எம்.சி. தண்ணீர்விடக் கோரியிருந்தது என்றும், அதன்பின்னர் ஓரளவு மழை பெய்து நீர்ப்பாசனத்திற்கு உதவியுள்ளது என்றும் குறிப்பிட்டிருந்தார். ஜனவரி 1991 முதல் வாரத்தில் நானே காவிரி நீர்ப் படுகைப் பகுதியைச் சென்று பார்த்தேன்; மேட்டூர் அணையின் நீர்மட்டம் வேகமாகக் குறைந்து வருவதாலும், ஜனவரி மாத இறுதிக்குள் கர்நாடக நீர்த்தேக்கங்களிலிருந்து தண்ணீர் விடாவிட்டால், டெல்டாப் பகுதியில் குறிப்பாகக் கடைமடைப் பகுதியில் வளர்ந்துள்ள பெருமளவுப் பயிர்கள் வாடி அழிந்துவிடும். ஜனவரி 17, 18 தேதிகளில் டெல்டாப் பகுதியில் பெய்த மழையின் மூலம் சூழ்நிலை சிறிதளவு முன்னேற்றம் கண்டது; பொதுவாக, வடகிழக்குப் பருவமழை டிசம்பர் இறுதியில் படிப்படியாகக் குறைந்து விடும். இந்த மழை சற்றும் எதிர்பாராதது ஆயினும் வரவேற்கத்தக்கது. ஆனால், இந்த மழை பெய்தும் இறுதிப் பாசனத்திற்கு நீரின்றி டெல்டாவின் ஒரு சில 'பகுதிகளில் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

காவிரி டெல்டாவில் இன்னும் ஏறத்தாழ 4 இலட்சம் ஏக்கர் நிலத்தில் நெற்பயிர் அறுவடை செய்ய வேண்டியுள்ளது. இதில், இறுதியில் இரண்டு, மூன்று முறை பயிர்களுக்கு நீர் பாய்ச்சினால் ஏறத்தாழ 1 இலட்சம் ஏக்கரில் உள்ள நெற்பயிர் விளைச்சல் குறிப்பிடத்தக்க அளவு அதிகமாகும். இனி மழை வருவதற்கான வாய்ப்பே இல்லை. ஆகவே, இந்த இக்கட்டான சூழ்நிலையில் நிபந்தனைகளை வலியுறுத்தாது அவர்களுடைய நீர்த்தேக்கங்களிலிருந்து குறைந்தது 10 டி.எம்.சி.யாவது தண்ணீர் விடுமாறு கர்நாடக முதல்வர் அவர்களுக்கு அறிவுரை கூறவேண்டுமாய்த் தங்களை வேண்டிக்கொள்கிறேன்.

மாண்புமிகு இந்திய உள்துறை இணை அமைச்சர் திரு சுபோத் காந்த் சகாய் அவர்களுடன் இன்று நாங்கள் நடத்திய ஆலோசனையின்போதும் இந்தப் பிரச்சினை குறித்து அவரது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

- இவ்வாறு அக்கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.





## தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகராகப் பொறுப்பேற்றுள்ள திரு. வே.கார்த்திகேயன், இ.ஆ.ப. (ஓய்வு)

### அவர்கள் வாழ்க்கைக் குறிப்பு

**பிறந்த நாள்:** 7.10.1924. **கல்வி:** பி.ஏ., (ஆனர்ஸ்). **இதரத் தகுதிகள்:** (1) 1966 ஏப்ரல் மாதம் மலேசியா நாட்டில் கோலாலம்பூரில் நடைபெற்ற உலகத் தமிழ் - கல்வி மாநாட்டின் கருத்தரங்கு; (2) 1966 - ஜூலை-ஆகஸ்ட் திங்களில் ஜெர்மனியிலுள்ள வளரும் நாடுகளுக்கு உதவும் அமைப்பினால் மேற்கு பெர்லினில் ஏற்பாடு செய்யப்பட்ட வேளாண்மை வளர்ச்சித் திட்டங்கள் குறித்த உலக அளவிலான கருத்தரங்கு. (3) 1968 - செப்டம்பர்-அக்டோபர் திங்களில் சிங்கப்பூரில் நடைபெற்ற கடல் துறைகள் மற்றும் துறைமுகங்கள் பற்றிய மண்டலக் கருத்தரங்கு ஆகியவற்றில் கலந்துகொண்டு இருவாரப் பயிற்சியும் பெற்றார்.

**பயின்ற இடம்:** சென்னை கிறித்தவக் கல்லூரி. **பணி:** 1947-ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் இ.ஆ.ப. தேர்வில் தேர்ச்சி பெற்று 1948-ஆம் ஆண்டு பணியில் சேர்ந்தார்.

**வகித்த பதவிகள்:** 1958 ஏப்ரல் 22 முதல் 1960 நவம்பர் 15 வரை வருவாய் வாரியம் (நில வருவாய்) மற்றும் உணவு உற்பத்தித் துறையின் செயலர்; 1960 நவம்பர் 16 முதல் 1963 நவம்பர் வரை வேளாண்மை இயக்குநர்; 1963 டிசம்பர் முதல் 1964 பிப்ரவரி 28 வரை வருவாய்த் துறையின் கூடுதல் செயலர்; 1964 மார்ச் 1 முதல் 1965 மார்ச் 10 வரை வருவாய்த் துறைச் செயலர்; 1965 மார்ச் 22 முதல் 1965 ஜூலை 20 வரை மத்திய அரசின் பெட்ரோலியம் மற்றும் இரசாயனப் பொருட்கள் அமைச்சகத்தில் சிறப்புப் பணி அலுவலர்; 1965 ஆகஸ்ட் 2 முதல் 1965 நவம்பர் 10 வரை தமிழ்நாடு அரசு பொதுத் துறையில் கூடுதல் செயலர் மற்றும் தமிழ் வளர்ச்சி இயக்குநர்; 1965 நவம்பர் 10 முதல் 1965 டிசம்பர் 27 வரை உணவு மற்றும் வேளாண்மைத் துறையின் கூடுதல் செயலர்; 1965 டிசம்பர் 28 முதல் 1967 மார்ச் 13 வரை வேளாண்மைத் துறைச் செயலர்; 1967 மார்ச் 14 முதல் 1967 மே 12 வரை உணவுத்துறைச் செயலர்; 1967 ஜூன் 29 முதல் 1970 மார்ச் 2 வரை மத்திய அரசு கப்பல் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அமைச்சகத்தின் கீழ் சென்னைத் துறைமுகத்தின் தலைவர்; 1970 மார்ச் 2 முதல் 1972 செப்டம்பர் 2 வரை தமிழ்நாடு அரசு தொழில் துறை சிறப்புச் செயலர்; 1972 நவம்பர் 20 முதல் 1975 மே 18 வரை, சென்னை-5 வருவாய் வாரியத்தின் ஐந்தாவது உறுப்பினர்; 1975 மே 19 முதல் 1975 செப்டம்பர் 3 வரை வருவாய் வாரியத்தின் நான்காவது உறுப்பினர்; 1975 செப்டம்பர் 4 முதல் 1976 ஜனவரி 31 வரை வருவாய் வாரியத்தின் மூன்றாவது உறுப்பினர்; 1976 பிப்ரவரி 1 முதல் 1976 மார்ச் 11 வரை தமிழ்நாடு அரசு இரண்டாவது செயலர்; 1976 மார்ச் 12 முதல் 1977 பிப்ரவரி 15 வரை தமிழ்நாடு அரசு தலைமைச் செயலர். மற்றும் ஆணையர்; 1977 பிப்ரவரி 16 முதல் 1977 ஜூன் 29 வரை தமிழக ஆளுநரின் ஆலோசகர்; 1977 ஜூன் 30 முதல் 1981 ஆகஸ்ட் 21 வரை தமிழ்நாடு அரசு தலைமைச் செயலர்; 1981 ஆகஸ்ட் 21 முதல் 1984 மே 31 வரை தமிழ்நாடு மாநிலத் திட்டக்குழுவின் தலைவர்; 1979-லிருந்து இந்தியப் பொது நிர்வாகக் கல்லூரியின் தமிழ்நாடு மண்டலக் கிளையின் தலைவர்; 1985 ஜனவரி முதல் சென்னை தொழில் நுட்பப் பொருளாதாரக் கல்லூரியின் தலைமை ஆலோசகர்; அண்ணாமலை மற்றும் பாரதிதாசன் பல்கலைக் கழகச் சிண்டிகேட் குழுக்களில் உறுப்பினர்; சென்னை சின்மயா மிஷன் தலைவர்.

**இதரச் சாதனைகள் மற்றும் செயல்கள்:**

இங்கிலாந்து உட்பட ஐரோப்பா, அமெரிக்கா, ஹாங்காங், பாங்காக், ஜப்பான், மலேசியா, சிங்கப்பூர் மற்றும் ஸ்ரீலங்கா போன்ற அயல் நாடுகளில் 7 முறை சுற்றுப்பயணம் செய்துள்ளார்.

மர்ரே டிவிங்களின் "வைஸ் பிரசிடென்ட் இன்சார்ஜ் ஆஃப் ரெவலூஷன்" என்னும் நூலை 1965-இல் "விவசாயப் புரட்சி" எனும் நூலாகத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார்.

## தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு வி. இராமச்சந்திரன், இ.ஆ.ப. (ஓய்வு)

### அவர்கள் வாழ்க்கைக் குறிப்பு



**பிறந்த தேதி:** 21.3.1931. கல்வித் தகுதி: எம்.ஏ., எம்.எஸ்சி. (சென்னைப் பல்கலைக் கழகம், எம்.ப்பி.ஏ (ஹார்வர்ட் பல்கலைக்கழகம்) **பணி விவரம்:** இந்திய ஆட்சிப் பணியில் சேர்ந்த ஆண்டு 1954. ஓய்வு பெற்ற ஆண்டு 1989.

தற்போதைய பதவிகள் (கௌரவம்): 1) தலைவர், கேரள மாநிலத் தொழில் வளர்ச்சிக் கழகம். 2) தலைவர், நிர்வாக வளர்ச்சி மையம். 3) தலைவர், கேரள கனிமம் மற்றும் உலோக நிறுவனம். 4) தலைவர், கார்பன் மற்றும் இரசாயனப் பொருட்கள் இந்தியா லிமிடெட். 5) கௌரவ உறுப்பினர், வளர்ச்சிக் கல்வி மையம். **சிறப்புப் பயிற்சி:** வளர்ச்சிப் பிரச்சினைகள் மற்றும் நிர்வாகம்..

**வகித்த பதவிகள்:** 1954 மே மாதம் முதல் 1956 ஜுன் வரை இரண்டு ஆண்டுப் பயிற்சி (இ.ஆ.ப); 1956 ஜுலை முதல் 1963 மார்ச் வரை உதவி கோட்ட அலுவலராகவும், சார்புச் செயலர், துணைச் செயலாளராகவும், மாவட்ட ஆட்சித் தலைவராகவும், அரசுத் துறைத் தலைவராகவும் பணி; 1963 மார்ச் முதல் 1969 மார்ச் வரை கூடுதல் செயலர்; பின்னர் திட்டம் மற்றும் நிதித் துறைச் செயலர்; 1966-67-இல் அமெரிக்காவிலுள்ள ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் எம்.ப்பி.ஏ (பொது நிர்வாகம்) படிப்பு; 1969 மார்ச் முதல் 1972 ஆகஸ்ட் வரை கேரள மாநில மின்வாரியத் தலைவர்; 1972 செப்டம்பர் முதல் 1978 செப்டம்பர் வரை இந்தியப் பிரதமரின் இணைச் செயலர்; 1979 அக்டோபர் முதல் 1980 ஆகஸ்ட் வரை நிர்வாக இயக்குநர் மற்றும் தலைவர், கேரள மாநிலத் தொழில் வளர்ச்சிக் கழகம் மற்றும் பொது நிறுவனங்களின் ஆணையர்; 1980 ஆகஸ்ட் முதல் 1984 செப்டம்பர் வரை, ஆணையர், பொருளாதார வளர்ச்சி மற்றும் பொது நிறுவனங்களின் உறுப்பினர்; மாநிலத் திட்ட வாரியம், கேரளம்; 1981 ஜுன் முதல் 1984 செப்டம்பர் வரை ஜெனிவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் அவையின் வளர்ச்சி உரிமைகள் குறித்த அரசு நிபுணர்கள் அடங்கிய செயற் குழுவில் இந்திய அரசால் நியமனம் செய்யப் பட்டுப் பணி; 1984 செப்டம்பர் முதல் 1987 அக்டோபர் வரை, கேரள மாநிலத் தலைமைச் செயலர்; கூடுதல் பொறுப்புகளாகப் பொருளாதார வளர்ச்சி மற்றும் பொது நிறுவனங்கள் ஆணையர்; மாநிலத் திட்ட வாரிய உறுப்பினர்; பொது நிறுவனங்களின் தேர்வு வாரிய உறுப்பினர்; 1987 அக்டோபர் முதல் 1989 மார்ச் வரை, கேரள அரசின் சிறப்பு ஆலோசகர் மற்றும் பொது நிறுவனங்கள் வாரியத்திற்கும், கேரள மாநிலத் தொழில் வளர்ச்சிக் கழகத்திற்கும் தலைவர்.

**வெளியீடுகள்:** அரசுத் திட்ட அறிக்கைகள் மட்டுமன்றி, இ.ஆ.ப. பயிற்சிக்கும் விவர அறிக்கைகள், கட்டுரைகள் தயாரித்து அளித்துள்ளார்.

**1. கேரள அரசுக்கு அளித்த அறிக்கைகள்:** (அ) ஜனநாயக அடிப்படையில் மாவட்டம் மற்றும் அதற்கும் கீழ் அதிகாரம் பரவலாக்கப்படுவதற்கான வழிமுறைகள் - இரண்டு பாகங்கள் (1988). (ஆ) கேரளாவில் தொழில் முதலீடுகளை அதிகப்படுத்த வழிமுறைகள் (1988),

**2. மத்திய அரசுக்கு அளித்த அறிக்கைகள்:** (அ) இ.ஆ.ப அலுவலர்களுக்குப் பணிக்காலப் பயிற்சிக்கான அறிக்கை (1990) (ஆ) இந்திய எஃகு நிறுவனத்திற்கும் மத்திய அரசுக்கும் இடையிலான தொடர்பு (1990).

## ஓய்வு பெற்ற 28 அலுவலர்களுக்கு ரூ.14 இலட்சம்

கோவை மாவட்டத்தில், மாவட்ட வளர்ச்சி மன்றக்கட்டடத்தில், 1.2.91 அன்று நடைபெற்ற ஓய்வு பெற்றோர் கூட்டத்தில், ஓய்வுபெற்ற 28 அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மா.இராமன் இ.ஆ.ப. அவர்கள் ஓய்வூதியப் பலனாக ரூ.14 இலட்சத்துக்கான காசோலைகளை வழங்கினார்.



இரண்டாம் அட்டை சொல்லும் செய்தி

# தமிழகத்திற்குப் பெருமை சேர்த்த தேசிய மாணவர் படை!

'இளைஞர் இலக்கியம்' பாடிப் பெருமை கொண்டவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். அன்னாருக்கு நூற்றாண்டு விழாக் கொண்டாடும் காலம் இது.

'இன்று குழந்தைகள் நீங்கள்
இனிஇந்த நாட்டினை ஆளப்
பிறந்தீர்!'...

—என்று புரட்சிக் கவிஞர் அவர்கள் பாடியதை உணர்ந்து நடந்துகொள்ள வேண்டும் என்பது, இன்றைய இளைஞர்களுக்குக் கற்றறிவாளர்கள் கூறும் சிறந்த ஆலோசனையாகும்.

இன்றையப் பசுந்தளிர்கள் அதற்கேற்பவே நடந்து கொள்ளுகிறார்கள் என்பதை மெய்ப் பிக்கத் தகுந்த சம்பவமொன்று அண்மையில் நடைபெற்றிருக்கிறது.

தமிழ்நாடு, புதுவை, அந்தமான் நிகோபார் தீவுகளைச் சேர்ந்த தேசிய மாணவர் படையைச் சேர்ந்த மாணவ மாணவியர்- ஜனவரி 26-ஆம் நாள் குடியரசு நாளையொட்டி, மறுநாள் போட்டிகளில் கலந்துகொண்டு பெரும் வெற்றி பெற்றிருக்கிறார்கள். ஆம்; இந்தக் குழுவைச் சேர்ந்த அந்த இளைஞர்கள், 'பிரதமரின் இயக்கங்களுக்கு இடையேயான சாம்பியன்ஷிப் பேனர் போட்டி'யில் கலந்து கொண்டு மூன்றாவது இடத்தில் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். விரைவிலேயே முதலாவது இடத்தைப் பெறமுடியும் என்று உறுதி கூறுகிறார்கள்.

அதிலும் குறிப்பாக- அன்றைய தினம் தமிழகம் தனிப்பெருமை பெற்றிருக்கிறது. எப்படித் தெரியுமா?

சென்னையில் உள்ள ஸ்டெல்லா மேரி கல்லூரி மாணவியரான குமாரி அஸ்வினி நாராயணன்- அகில இந்திய தேசிய மாணவர் படை (சீனியர் பிரிவு)யின் சிறந்த மாணவியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்; சென்னையில் உள்ள இலயோலா கல்லூரி மாணவரான கெவின் கோமேஸ், தேசிய மாணவர் படையின் கடற்படைப் பிரிவின் சிறந்த மாணவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இருவருக்கும் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. சந்திரசேகர் அவர்கள் தங்கப் பதக்கங்கள் அளித்துப் பாராட்டினார்.

இது மட்டுமல்ல; அப்போட்டியில் இக்குழுவைச் சேர்ந்த வேறுபல மாணவ மாணவியரும் பலவேறு வகையில் தங்கள் திறம் காட்டிச் சிறப்படைந்திருக்கிறார்கள். புதுவையில் உள்ள தாகூர் கலைக்கல்லூரி விமானக் கட்டுப்பாடு தொடர்பான பிரிவின் சிறந்த மாணவராகவும்- ஓ.செல்வம், கே.சங்கர் ஆகியோர் சிறந்த மாதிரிக் கப்பல் அமைப்பாளர்களாகவும் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்.

இந்த வெற்றிப் பெருமிதத்தோடு சென்னை திரும்பிய அந்த மாணவ-மாணவிகளைத் தமிழ்நாடு, புதுவை, அந்தமான் நிக்கோபார் தீவுகளுக்கான தேசிய மாணவர் படையின் துணை இயக்குநர் ஜெனரல் திரு.சுசீந்திரநாத் முதலான உயர் அதிகாரிகள் வாழ்த்தி வரவேற்றார்கள்.



சாதிக் கொடுமைகள் வேண்டாம்-அன்பு
தன்னில் செழித்திடும் வையம்
ஆதர வுற்றிங்கு வாழ்வோம்-தொழில்
ஆயிரம் மாண்புறச் செய்வோம்!

உடன்பிறந் தார்களைப் போலே-இவ்
வுலகில் மனிதரெல் லாரும்;
இடம்பெரி துண்டுவை யத்தில்-இதில்
ஏதுக்குச் சண்டைகள் செய்வீர்!

# தருமபுரி மாவட்டத்தில் தோட்டக்கலை வளர்ச்சி

தமிழ்நாட்டில், தருமபுரி மாவட்டத்தில் தோட்டக்கலைப் பயிர் சாகுபடி செய்யத் தகுந்த சீதோஷ்ண நிலை உள்ளது. இம்மாவட்டம் பின்தங்கிய மாவட்டமாக இருந்தும் மற்ற மாவட்டங்களை விட, அதிகமான தோட்டக்கலைப் பயிர்கள் இங்குச் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

1965-ஆம் ஆண்டுக்கு முன்னர், விவசாயிகள் பெருமளவில் சிறு தானியப் பயிர்களையும், பயறு வகைகளையும் மட்டுமே பயிரிட்டு குறைந்த வருவாய் பெற்று வந்தனர். பின்னர் இப்பகுதியில் மா, திராட்சை போன்ற பழப் பயிர்களும், ஓசூர், தேன்கனிக்கோட்டைப் பகுதிகளில் முட்டைகோசு, உருளைக் கிழங்கு போன்ற குளிர் பிரதேசக் காய்கறிகளும் சாகுபடி செய்ய ஆரம்பித்து நல்ல வருவாய் பெற ஆரம்பித்தனர். இங்குள்ள வளங்களைக் கருத்தில் கொண்டு, அரசு 1979-ஆம் ஆண்டு தோட்டக்கலை இயக்ககத்தின் தலைமையிடத்தைத் தருமபுரியில் அமைத்தது.

### மா உற்பத்தி

இம்மாவட்டத்தில் மா சாகுபடி செய்வதற்குத் தகுந்த சீதோஷ்ணம் மற்றும் மண்வளம் இருப்பதனைக் கண்டறிந்த, பழ அபிவிருத்தித் திட்டம், ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம், மா பெருக்குத் திட்டம், வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம், மானாவாரியில் வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களைச் செயல்படுத்தி, 1965-ஆம் ஆண்டில் 6250 எக்டேராக இருந்த பரப்பு, தற்சமயம் 17.339 எக்டேராக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்னர் மாம்பழம் உற்பத்தி 14,000 மெ.டன்னாக இருந்தது. தற்சமயம் 52,000 மெ.டன்னாக உயர்ந்துள்ளது.

### சேலத்து மாம்பழம்

தமிழ்நாட்டில் மா உற்பத்தியில் தருமபுரி மாவட்டம்தான் முதலிடத்தை வகிக்கிறது. 1965-ஆம் ஆண்டுக்கு முன் தருமபுரி மாவட்டம் சேலம் மாவட்டத்துடன் ஒன்றாக இருக்கும்பொழுது இம்மாவட்டத்தில் விளையும் மாம்பழத்தை, சேலத்து மாம்பழம் என்றுதான் அழைத்து வந்தனர். ஆனால், சேலத்தில் உற்பத்தி செய்யும் மாவின் அளவு மிகவும் குறைவே, மிகுதியான மா உற்பத்தி தருமபுரி மாவட்டத்தில்தான் உள்ளது. எனவே, சேலத்து மாம்பழம் என்றழைப்பதைத் தவிர்த்து, தருமபுரி மாம்பழம் (தகடூர் மாம்பழம்) என்று கூறுவதே பொருத்தமாகும்.

### புளி சாகுபடி:

மா சாகுபடிக்கு அடுத்தப்படியாக அதிக அளவில் சாகுபடி செய்வது புளியாகும். புளி சாகுபடியை ஊக்குவிக்கும் பொருட்டு தற்பொழுது உயர்ரக விளைச்சல் தரும் 'உரிகம் புளியன் செடிகள்' விவசாயத்திற்கு மானிய விலையில் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. 1965-ஆம் ஆண்டு 700 எக்டர் பரப்பாக இருந்தது. தற்போது 1,555 எக்டருக்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

### இதரப் பழச் சாகுபடி

இம்மாவட்டத்தில் மா மற்றும் புளி சாகுபடியைத் தவிர திராட்சை, கொய்யா, சப்போட்டா, சீதா போன்ற பழவகைகள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. சாகுபடியை ஊக்குவிக்கும் பொருட்டு, விவசாயிகளுக்குப் பழச்செடிகள் மானிய விலையில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

### காய்கறிச் சாகுபடி

இம்மாவட்டம், காய்கறி பயிரிடுவதற்கு ஏற்றதாகும், காய்கறிச் சாகுபடியில் அதிக இலாபம் பெற வாய்ப்பு உள்ளதால் காய்கறிச் சாகுபடியில் பரப்பினைப் பல திட்டங்களின் பயனாகக் கணிசமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 1965-ஆம் ஆண்டு 2,000 எக்டேராக இருந்த காய்கறிச் சாகுபடி தற்சமயம் 5,979 எக்டராக அதிகரிக்கப்பட்டுள்ளது. காய்கறி உற்பத்தி 7,000 டன்னிலிருந்து 80,789 டன்னாக உயர்த்தப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் தக்காளி, கத்தரி, முட்டைக்கோஸ் போன்ற பயிர்களின் வீரிய ஒட்டு இரகங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதால், ஒரு எக்டரின் உற்பத்தித்திறன் சுமார் 15 டன்னிலிருந்து 40 டன்னாக உயர்ந்துள்ளது.

இத்துறையின் மூலம் பழங்கள், காய்கறிகள், மலர்கள் போன்றவற்றில் பரப்பு மற்றும் உற்பத்தியைப் பெருக்கத் தேவையான மானிய விலையில் தரமான வீரிய ஒட்டு மா, சப்போட்டா, கொய்யா பதியன்கள் மற்றும் காய்கறி விதைகள் வினியோகம் செய்யப்பட்டு, புதிய உத்திகளும் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறப்படுகிறது.

### பழப்பதனிடும் தொழிற்சாலை

பல தோட்டக்கலைத் திட்டங்களைச் செயல்படுத்தியதன் விளைவாக, பழங்கள் மற்றும் காய்கறிகளின் உற்பத்தி 1965-இல் 49,315 மெ.டன்னாக இருந்தது, தற்சமயம் 2,18,228 மெ.டன்னாக உயர்ந்துள்ளது.



தருமபுரி மாவட்டத்தின் வளங்களைக் கருத்தில் கொண்டு அமைக்கப்பட்ட தோட்டக்கலை இயக்கத்தின் இயக்குநர் திரு என.சதாசிவம் அவர்களின் தலைமையில், மேற்கண்ட திட்டங்கள் செம்மையாகச் செயலபட்டு வருகிறது.



தமிழ் வளர்த்த பெரியார்:

# கவி வேந்தர் செகவீரபாண்டியனார்



மா.லோ. தாமோதரம்

அப்பொழுது அந்தச் சிறுவனுக்கு வயது பன்னிரண்டு. ஐந்தாம் வகுப்போடு பள்ளிப் படிப்பு முடிந்தது. அதற்குள் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, திவாகரம் முதலானவற்றில் நல்ல தேர்ச்சி பெற்றிருந்த அவன், தன் மூன்றாம் வயதிலேயே அருமைத் தந்தையை இழந்தவன்.

''தந்தையோடு கல்விபோம்'' என்பது முதுமொழி அல்லவா? பள்ளிப் படிப்புக்குப் புள்ளி வைத்து 'கம்பும் சிலம்பும், மல்லும் வில்லும்' என வீர விளையாட்டுகளில் பொழுதெல்லாம் கழிந்தன. அது தந்தை வழி வந்த சொத்து. உரம் மிக்க உடல் வலிமை பெற்றான்.

ஆர்வ மிகுதியால், 'எதைப் படிப்பது, எப்படிப் படிப்பது' என்று ஏங்கி வந்த அந்தச் சிறுவனுக்கு முதன் முதலில் ''தாயுமான சுவாமிகள் பாடல்கள்'' என்னும் நூலும், 'அரிமளம்' துறவியாரும், இலக்கண முத்துக் கவிராயரும் வழிகாட்டினர். கருவி நூல்களோடு அறிவு நூல்களையும் கற்றுத் தேர்ந்து ஞான பானுவாக உயர்ந்தான்.

*யார் அந்தச் சிறுவன்?*

பிற்காலத்தில், தமிழ் வளர்ச்சிக் கழகம், மதுரைத் தமிழ்ச் சங்கம், கரந்தைத் தமிழ்ச் சங்கம், கம்பர் செந்தமிழ்ச் சங்கம் போன்ற அமைப்புகளும், 'செந்தமிழ்ச் செல்வி', 'கலைமகள்', 'கல்கி' போன்ற ஏடுகளும், 'இந்து', 'தினமணி', 'தமிழ்நாடு' போன்ற நாள் இதழ்களும், புலவர் பெருமக்களும்

'உயர் தமிழ்ப் புலமையோடு
உணர்ச்சி ததும்பச்
சொன்மழை பொழியும்
தூய மாமுகில்
தேசு மிகுந்தொளிர் செக
வீர பாண்டியர்'

என்று போற்றிப் பாராட்டியவரே தான், அந்தச் சிறுவன்!

முதல் சுதந்திர முழக்கம் செய்த வீரபாண்டிய கட்டபொம்மன் மரபில் உதித்த கவி வேந்தர் செக வீர பாண்டியனார், 'சின்னப் பாஞ்சாலங் குறிச்சி' என்று கூறும் ஒட்டநத்தம் என்ற சிற்றூரில் 10.3.1886-இல் பெருமாள்சாமி- ஆவுடையம்மை எனும் பெற்றோருக்கு ஒரே மகனாகப் பிறந்தவர்.

பத்தொன்பதாம் வயதிலேயே தம் ஊரில் 'ஆசிரியர்' என்று பலரும் போற்றும் நிலையினை அடைந்தார். இவர்பால் பலரும் பாடங் கேட்கலாயினர். ஆண்டுக் கணக்கில் கம்பராமாயணம், பெரிய புராணம் போன்ற புராணச் சொற்பொழிவுகளைக் கேட்டார் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் விரும்புந் தன்மையனவாய், இன்னிசையுடன் ஆற்றுவார். இதனால் இவர் புகழ் எங்கும் பரவியது. பல திசைகளிலிருந்து பாராட்டுரைகளும் வாழ்த்துரைகளும் நாடி வந்த வண்ணமிருந்தன.

அரிய பெரிய விரிவுரைகளை காற்றோடு காற்றாய்க் கலந்து வறிதே போகும் நிலைகண்டு உளங்கவன்றார். என்றும் நிலைத்து நிற்குமாறு நூல் வடிவில் தருதலே தக்கதெனக் கருதினார்.

அவ்வமயம், தாயாரை இழந்திருந்த அவர் தம் அன்பு வாழ்க்கைத் துணைவியார் வெள்ளைத்தாயுடன் தூத்துக் குடிக்குச் சென்றார். அங்கே, தம் இல்லத்தில் அச்சுக் கோத்து மெல்ல மெல்ல நூல் ஆக்கி வெளியிடலானார். புத்தகம் வெளியிடுவதையும் விற்பதையும் மிகப் பரபரப்பானதொரு இயந்திர இயக்கம் ஆக்கி விடாமல், காந்திய நெறியில் நின்று குடிசைத் தொழில் போல் நடத்தி வந்தார்.

பாண்டியனார் பதிப்பித்த நூல்களுள் அளவால் மிகப் பெரிய நூல் 'திருக்குறட் குமரேச வெண்பா' வாகும். இந்நூல் 5,990 பக்கங்கள் கொண்டது. பதினான்கு ஆண்டுகள் இடைவிடாது செய்த முயற்சியால் முடிக்கப்பெற்றது.

ஒவ்வொரு திருக்குறளின் கருத்துக்களுக்குப் பொருத்தமான கதைகளை இராமாயணம், பாரதம் முதலிய பெரு நூல்களிலிருந்தும், கந்தம், பாகவதம் முதலிய புராணங்களிலிருந்தும், சிலப்பதிகாரம், சிந்தாமணி முதலிய காப்பியங்களிலிருந்தும், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை முதலிய சங்க நூல்களிலிருந்தும், இன்னோரன்ன பிறவற்றிலிருந்தும்

தெரிந்தெடுத்துத் தம் வழிபடு கடவுளாகிய குமரேசனது திரு முன்னர் விண்ணப்பித்து, அவற்றிற்கு விடை கூறு முறைமையில் திருக்குறட்பாக்களை அமைத்துப் பாடியுள்ளார் பாண்டியனார்! கதைகளைக் குறட்பாவில் அமைத்துத் திருக்குறள்களோடு இணைத்துத் தனிச் சீரும் சேர்ந்திருத்தலினால் இந்நூல் முழுவதும் நேரிசை வெண்பாவால் நிறைந்துள்ளது. கடவுள் வணக்கமும் அவையடக்கமும் உட்பட இந்நூலில், 1,332 வெண்பாக்கள் அடங்கியுள்ளன. திருக்குறளைத் தழுவிக் குமரேசனை முன்னிலையாகக் கொண்டு வெண்பாவால் இயற்றப் பெற்றதாதலின் இந்நூல் 'திருக்குறட் குமரேச வெண்பா' எனும் திருப் பெயரைப் பெறுவதாயிற்று.

இந்நூலில் அருணாசல புராணம் முதல் வச்சத் தொள்ளாயிரம் முடிய சுமார் 173 நூல்களிலிருந்து மேற்கோள்களை எடுத்தாண்டுள்ளார். பா ஒன்றுக்குக் கதை ஒன்று வீதம் 1,330 குறட்பாக்களுக்கு 1,330 அருங்கதைகளை அமைத்துப் பாடியுள்ளார். சில பாக்களுக்கு ஒன்றிற்கு மேற்பட்ட கதைகளும் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு குறள் விளக்க முடிவிலும் அதன் முடிப்புரையாகக் குறள் வெண்பா ஒன்றையும் பாடியுள்ளார். ஆனால் இடையிடையே சிலவற்றிற்கு இம் முடிப்புரைக் குறள் வெண்பாக்கள் காணப்படவில்லை.

ஒவ்வொரு தலைப்பு முடிந்ததும் அதன் தொகைப் பொருளாகக் கருத்துக்களைத் தொகுத்துத் தருகின்றார்; அவ்வாறே ஒவ்வொரு பாலின் இறுதியிலும் 'திரட்டுப் பால்' தருகின்றார்! இவையெல்லாம், படிக்கும் கருத்தை நினைவிலிருத்தற்கென அமைந்த பொருத்தமான புது முறைகள் எனலாம்.

கவி வேந்தர் செகவீர பாண்டியனார் தூத்துக்குடியினின்றும் மதுரை அடைந்தார். அங்கு மேல மாசி வீதியின்கண் 'திருவள்ளுவர் நிலையம்' ஒன்றை அமைத்தார்; 'வாசுகி' அச்சகத்தை உருவாக்கினார். தாம் எழுதும் நூல்கள் அனைத்தையும் அச்சுக் கோத்து, பிரசுரித்து வெளியிடலானார். இவ்வாறு அவர் எழுதி வெளியிட்ட நூல்தான் 'திருக்குறட் குமரேச வெண்பா - மூலமும் உரையும்', மேலும் அகத்திய முனிவர், தருமதீபிகை, வீர பாண்டியம் (இந்நூலைப் படித்துவிட்டுத் தான், சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் வீரபாண்டிய கட்ட பொம்மன் வாழ்க்கை வரலாற்றில் ஈடுபாடு கொண்டு நூல் எழுதி வெளியிட்டார்.) பாஞ்சாலங்குறிச்சி வீர சரித்திரம் (2 பகுதிகள்), கல்வி நிலை, இந்தியத் தாய், கவிகளின் காட்சி, உலக உள்ளங்கள் முதலியனவாகும். நியுமென் என்ற ஆங்கில அறிஞர் பாண்டியனார் எழுதிய 'தரும தீபிகை' என்னும் அறநூலில் இருந்து நூற்றெட்டு வெண்பாக்களைத் தேர்ந்தெடுத்து அவற்றை ஆங்கிலத்தில் செய்யுள் வடிவில் மொழி பெயர்த்துள்ளார்.

அம்மொழி பெயர்ப்பைப் படித்த ரால்வ் சினி என்னும் அமெரிக்கக் கவிஞர், "மூலமொழியை நேரே படிக்க முடியாத நாங்கள் இந்த மொழி பெயர்ப்பு நூல் வழியாகத் தமிழ் நாட்டில் உள்ள ஒரு மகானுடைய ஞான மணிகளைக் கண்டு மகிழ்ந்தோம்." என்று போற்றினார்.

'தரமான புலமையெனில்
வெளி நாட்டார் அதை வணக்கம்
செய்தல் 'வேண்டும்!'

என்று சொல்லிய பாரதியின் வாக்கிற்கு உதாரணமாக விளங்கியவர் பாண்டியனார் என்பதை ஈண்டு நினைவு கொளல் வேண்டும்.

கல்வி நலம் சிறந்து, நல்லியல்பு மிகுந்து கொடை, வீரம், நீதி முதலான பண்பு நலங்களில் உயர்ந்து உலகிற்கே அன்பு, அறிவு, உழவு, நெசவு, நாகரிகம் வழங்கியதில் நம் தமிழ்நாடே உயர்ந்தது என்பதில் எவருக்கும் ஐயம் எழ இடமில்லை, அல்லவா? இந்நாடு ஒரு காலம் மிகவும் பீடு பெற்றிருந்தமைக்கு முக்கியக் காரணம் திருவள்ளுவரும் கம்பருமே என்பது பாண்டியனாரின் அழுத்தமான கருத்தாகும்.

'சொன்னலங் கனிந்து பொருள் நலம் பொலிந்து' திகழும், கம்பராமாயணத்தைப் பற்றி ஒரு நூல் இயற்ற முடிவு கொண்டார் கவி வேந்தர்.

ஐயாயிரத்து எண்ணூற்றெண்பது பக்கங்களுக்கு மேல் விரிந்து பரந்த புலவர் உலகம்- கம்பன் கலை நிலை என்னும் நூலை 1940-ஆம் ஆண்டு வெளியிட்டார்.

**பா**ண்டியனார் தெலுங்கு மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர். பள்ளியில் சேர்ந்து தெலுங்கு மொழியைப் பாடமாகப் படித்தவர் அல்லர் எனினும், கால வளர்ச்சியில் வடமொழி, ஆங்கிலம் இவற்றைக் கற்றது போலவே தெலுங்கு மொழியையும் விரும்பிக் கற்றார்.

தெலுங்கு மொழியில் இருந்த தியாகராசர், கிருஷ்ண தேவராயர், வேமனர் போன்றவர்களின் இலக்கிய நூல்களையும் தெலுங்கு பழமொழிகளையும் ஈடுபாடு கொண்டு படித்துள்ளார்.

ஏ,பி,சி,டி இருபத்தாறு எழுத்துக்கள் அறிந்தாலே "ஆங்கிலம்" கற்று முடித்து விடுவதாக எண்ணிவிடும் இளைய சமுதாயத்தினர், ஒரு மொழியை அறிதல் என்பது அம் மொழியின் மூல முதற் தரமான இலக்கிய நூல்களோடு மக்களின் வாய்மொழி இலக்கியங்களிலும் பயிற்சி கொள்ள வேண்டும் என்பதை அறிவார்களாக!

தன்னுடைய ஐம்பதாவது வயதில் மனைவியை இழந்தார். எவ்வழியும் ஆதாரமாய் இருந்து வந்த மனைவி மறைந்தார். ஆயினும் அவ்வம்மையாருடன் நிகழ்த்தி வந்த இருபத்தி நான்கு ஆண்டுகளின் இல்லற வாழ்க்கை நினைவுகளை அவர் மறையும் வரையில் நினைவு கொண்டு நெஞ்சில் உயர்ந்து வாழ்ந்தார். மறுமணம் செய்து கொள்ள மறுத்து விட்டார்.

நூல் வெளியீட்டால் இருந்த பொருள் எல்லாம் இழந்து நின்றார். புலமையாளர்க்குத் தலைமையான உரிமையாய் இருந்து வந்த வறுமை பாண்டியனாரையும் பற்றியது. எவரிடத்தும் சென்று ஏதும் இரந்தறியாதவர். ஆதலால் உண்ணவும் வழியின்றி வருந்தி வீட்டினுள்ளே சோர்ந்திருந்தார். அப்போது, முன்பு அவர் கண்டறியாத ஒருவர் வீட்டிற்கு வந்து வலியப்பேசி உதவி செய்து சென்றார். இது பாண்டியனாருக்கு ஒரு வியப்பாய்ப் பட்டது. அவர் பெயர் சிவசுப்பிரமணிய பிள்ளை என்று அறிந்தபோது நெஞ்சம் கரைந்து நெகிழ்ந்தார்.

பல்வகை நயங்களும் அரும் பெறல் பொருள் மணிகளும் இயற்றி தமிழ்த்தாய்க்கு அணிசெய்த மாமணி கவிவேந்தர் செகவீர பாண்டியனார் 1967-ல் தம் எண்பத்தியோராவது வயதில் இயற்கை எய்தினார்.

தமிழரின் தலைமாமணியாய்த் திகழ்ந்த இப்புலவர் பெருமானின் நூற்றாண்டு விழா 1986-ல் ஆரவாரமின்றிக்கழிந்தது.

தமிழ்த் தாயின் தண்ணருளால் கவி வேந்தர் செகவீர பாண்டியனார் தம் வாழ்நாளில் சுமார் 19,000 பக்கங்கள் கொண்ட நூல்களை வெளியிட்டிருந்த போதிலும் அப் புலவர் பெருமானைத் தமிழர்கள் போற்றத் தவறி விட்டனர் என்றே கூறலாம்!

அன்னாரின் நூல்களைப் படித்து அவருக்கும், தமக்கும், மொழிக்கும், நாட்டிற்கும் பெருமை சேர்க்க வேண்டியது இளைய சமுதாயத்தின் இன்றியமையாக் கடமையாகும்.

## நேதாஜி—ஒரு பார்வை



**வங்கச் சிங்கம் என்று புகழப்பட்ட நேதாஜி சுபாஸ் சந்திர போஸ் இந்திய சுதந்திரத்தின் ஓர் விடிவெள்ளி. இந்தியத் துணைக் கண்டத்தில் மட்டுமல்ல அவரது சங்கநாதம் உலகெங்கும் ஒலித்தது. அவர் தம் வாழ்வில் செய்துள்ள சாதனைகள் எத்துணையோ!**

★ ஒருமுறை வங்காளத்தில் பஞ்சம் ஏற்பட்டு ஆயிரக்கணக்கானோர் மடிந்தனர். அவ்வமயம் நேதாஜி ஒரு லட்சம் டன் அரிசியை சியாம் மற்றும் பர்மாவிலிருந்து வாங்கி கல்கத்தாவிற்கு அனுப்ப முயற்சி மேற்கொண்டார். இது குறித்து பிரிட்டிஷ் அரசுக்குக் கடிதம் எழுதி அரிசியைப்பெற்றுக் கொள்ளுமாறும் அவ்வாறு அரிசி எடுத்துச் செல்லும் படகுகளைத் திருப்பி அனுப்புமாறும் கேட்டுக்கொண்டார். இதனை பிரிட்டிஷ் அரசு ஏற்கவில்லை. கேளாக் காதினராய் இருந்து விட்டனர். இதனால் அரிசி அனுப்புவது மட்டுமல்ல, கொடிய பஞ்சத்திலிருந்து வங்க மக்களைக் காக்கவும் முடியாமல் போய்விட்டது.

★ ஹபீப் என்ற ஒரு பணக்கார வியாபாரி தனது சொத்து முழுவதையும் சுமார் ஒரு கோடி ரூபாய்க்கு ஈடானவற்றைநேதாஜிக்குப் போடப்பட்ட ஒரு மாலைக்கு ஈடாக வழங்கினார். இத்தொகை இந்திய தேசிய இராணுவத்துக்கே சேர்ந்தது.

★ நேதாஜி அவர்கள் தமக்கு அளிக்கப்படும் உணவைப் போலவே தமது சிப்பாய்களுக்கும் அளிக்கப்படவேண்டும் என்று கட்டளையிட்டிருந்தார். எவ்வகையிலும் தாம் மற்ற சிப்பாயைவிட மேலானவர்என்பதைக் காட்டிக் கொள்ளவில்லை.

★ ஜப்பான் இராணுவத்தினர் தாங்களே மூத்த இராணுவத்தினர் என்று கருதி தங்களை ஐ.என்.ஏ. இராணுவத்தில் அதே நிலையில் உள்ள அதிகாரிகள் கண்டால் முதலில் வணக்கம் சொல்லவேண்டும் என்று இராணுவ நிபந்தனை இட்டிருந்தார்கள். இதைக் கேட்ட நேதாஜி வெகுண்டார். நேரில் ஜப்பான் அரசிடம் பேசி இரு அதிகாரிகளும் தாங்கள் சந்திக்கும்போது ஒரே நேரத்தில் வணக்கம் சொல்லிக்கொள்ள வேண்டும் என்று தீர்மானித்து இந்திய தேசிய இராணுவத்தினரின் கௌரவத்தை நிலை நாட்டினார்.

★ ஆஸாத் ஹிந்த் என்ற தற்காலிக அரசை நிறுவினார் நேதாஜி.

ம.செ. பாண்டியன்,
கண்காணிப்பாளர்,
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்.



**விளையாட்டுப் பொம்மைகள் ஆவதற்காகப் பெற்றோர் உங்களைப் பள்ளிக் கூடங்களுக்கு அனுப்பவில்லை; அதற்கு மாறாக கருணை மிகுந்த - சகோதரிகளாக நீங்கள் ஆகவேண்டும் என்று எதிர்பார்த்தே, அவர்கள் இங்கு உங்களைக் கல்வி கற்க அனுப்பி வைத்திருக்கிறார்கள். ஒருவித உடை அணிந்து கொள்ளுபவர்களே கருணை உடைய சகோதரிகள் ஆவர் என்று தவறுதலாக எண்ணி விடாதீர்கள். தன்னைப் பற்றிய சிந்தனை அதிகமின்றி, தன்னைவிட ஏழ்மை நிலையிலும் துரதிர்ஷ்டம் பிடித்த நிலையிலும் இருப்பவர்களைப்பற்றி எவள் அதிகமாக நினைக்கிறாளோ, அவளே கருணையுடைய சகோதரி ஆவாள்.**

# நூல் நயம்

## தமிழ் இதழியல் களஞ்சியம்

**ஆசிரியர்: மா.சு. சம்பந்தன்**

**வெளியீடு:**

தமிழர் பதிப்பகம்
243, இலிங்கச்செட்டித் தெரு,
சென்னை-600 001.

விலை: ரூ.30.00 பக்கம்: 264

ஏறக்குறைய 81 இதழ்களின் தலையங்கங்களையும் - அவற்றில் காணப்படும் அரிய தகவல்களையும் ஏந்தியபடி உலா வந்திருக்கும் 'தமிழ் இதழியல் களஞ்சியம்' ஒரு களஞ்சியமாகவே விளங்குகிறது.

ஒவ்வோர் இதழும், தலையங்கத்தை எந்த உணர்வுடன் தீட்டியிருக்கிறது என்பதை இந்நூலின் வாயிலாக உணர முடிகிறது. இதழ்களின் கொள்கை நெறியையும், இதழாசிரியர்களின் தமிழ் நடையையும், தலையங்கங்கள் வெளிவந்த கால கட்டத்தையும் - பின்புலத்தையும் அறிந்து இன்புற முடிகிறது.

'தமிழ் இதழியல் களஞ்சியம்' என்பது நூலின் தலைப்பென்பதால் ஈழம், சிங்கப்பூர் போன்ற வெளிநாட்டு இதழ்களின் தலையங்கங்களும் இடம் பெற்றுள்ளன.

தலையங்கங்களுக்கு முன்னர்-தலையங்கம் இடம் பெற்ற இதழின் வரலாறு மிகச் சுருக்கமான அளவில் குறிப்பிடப் பட்டிருப்பது பாராட்டுதற்குரியது. தகவல் களஞ்சியம் என்னும் பகுதியில் காணப் படும் செய்திகள் இன்றுள்ள சூழ்நிலையில் அகழ்வாய்வில் கிடைத்த அரும் பொருள்களாகவே விளங்குகின்றன.

1925-ஆம் ஆண்டிலேயே தமிழர் பல்கலைக் கழகம் உருவாக்கத் திட்டமிட்ட செய்தியை அறிய முடிகிறது. செய்திப் பத்திரிகைகளின் இலக்கணத்தைப் புரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது.

நூலாசிரியரின் கடுமையான உழைப்புக்கு இந்நூல் கட்டியங் கூறுகிறது. தமிழ் நூல் வரிசையில் குறிப்பிடத்தக்க சிறப்பிடம் இந்நூலுக்கு உண்டு.

- தமிழ்ப்பித்தன்

## சோழர்கள் (புத்தகம் - 1 & 2)

ஆசிரியர்: கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி

வெளியிட்டோர்:
இந்தியன் கவுன்சில் ஆப் ஹிஸ்டாரிகல் ரிசர்ச், புதுடில்லி
மற்றும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை-98

புத்தகம்1-பக்கம் 608 2 பாகங்களும்
புத்தகம்2-பக்கம் 1219 விலை ரூ.160.00

பழம் பெருமை மிக்க நம்முடைய தமிழகத்தின் வரலாற்றில், மூவேந்தர்களின் ஆட்சிக்காலம் மிகுந்த சிறப்புடையதாகும். சேர, சோழ, பாண்டியர் எனக் குறிப்பிடப்படும் அவர்களில் - இரண்டாவது இடத்தில் வைத்துக் குறிப்பிடப்பட்ட போதிலும் சோழ மன்னர்களின் ஆட்சிக் காலம்தான் பொற்காலம் என்கிற பெருமை பெற்றதாக விளங்கியது.

கடல்கடந்த வாணிபம் மேற்கொண்டதிலும், யவனத்தோடும் கீழை நாடுகளோடும் தமிழ்நாடு கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே தொடர்பு கொண்டிருந்ததிலும் சோழர்களே முக்கியத்துவம் பெற்றிருந்தார்கள் என்கிறது வரலாறு.

அத்தகைய புகழ்மிக்க வரலாற்றை - சோழ மன்னர்களின் வரலாற்றை விவரிப்பதோடு மட்டும் நிறுத்திக் கொள்ளாமல் - ஆட்சிமுறை, வரி விதிப்பு, நிதி, நீதி பரிபாலனம், மக்களின் வாழ்க்கை முறை, வாணிபம், தொழில், விவசாயம், நிலஉரிமை , கல்வி, சமயம், கலை, இலக்கியம், பண்பாடு, கல்வெட்டுச் செய்திகள் என்றெல்லாம் பகுத்து அரும்பாடு பட்டு ஆய்வு செய்து சான்றுகளோடு விளக்கி நமக்கு அற்புதமான நூலாக்கித் தந்திருக்கிறார் திரு. கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியார். அவரது ஆங்கில எழுத்தோவியம், திரு . கே.வி. இராமனால் பழுதின்றிச் சுவை மாறாமல், பக்குவம் கெடாமல், தமிழாக்கித் தரப்பட்டிருக்கிறது.

'சோழர்கள்' முதல் புத்தகமானது, முதலாம் குலோத்துங்கன் பட்டத்திற்கு வந்தது வரையிலான வரலாற்றைத் தெரிவிக்கிறது. இரண்டாவது புத்தகமானது சோழர்களின் அரசியல் வரலாற்றை இறுதிவரை சொல்லுவதோடு சோழப் பேரரசினுடைய நிர்வாகம், சமூக வாழ்வு ஆகியவற்றை விவரிப்பதாகத் தொகுக்கப்பட்டிருக்கிறது.

வரலாற்றுத் துறையினர் மட்டுமல்ல; பழம்பெருமை மிக்க சோழர்கள் வரலாற்றை அறிந்து கொள்ளும் ஆவலுடையோரும் அவசியம் படித்துப் பயன்பெறவேண்டிய நூற்கள் இவை.

- பி.எல்.ஆர்

## வர்ம காவியம்

**ஆசிரியர்:**
டாக்டர்.எஸ்.சிதம்பரதாணுப்பிள்ளை

**வெளியீடு:**
இன்டர்நேஷனல் இன்ஸ்டிடூட் ஆப் தாணுவாலஜி
இ.32, அண்ணாநகர் (கிழக்கு)
சென்னை-600 102.

விலை:ரூ.50 பக்கம்:52

வர்மக் கலையின் வரலாறு, அக்கலையின் விளக்கம், அக்கலை சார்ந்த நூல்கள் பற்றிய விளக்கங்கள் ஆகியவை இந்நூலில் சொல்லப்பட்டுள்ளன.

விபத்துக்குள்ளானோர்க்கும், சுளுக்கு போன்றவற்றிற்கு ஆட்பட்டோருக்கும் வர்மக்கலை மருத்துவம் தரும் அற்புதச் சிகிச்சை வியப்பைத் தருகிறது.

இக்கலை, இந்த மருத்துவ முறை தமிழகம் முழுவதும் பரவிப் பயன்பட வேண்டுமென்ற ஆசிரியரின் நல்லெண்ணம் நியாயமானதே.

## நன்றி

**ஆசிரியர்: நீலவன்**

**வெளியீடு:**
இளவழகி பதிப்பகம்
295 ஈ, மாரியம்மன் கோவில்தெரு,
நியூடவுன்,
வாணியம்பாடி, வ.ஆ.அ.மாவட்டம்

விலை:ரூ.10 பக்கம்:79

சிறுவர்களுக்கு என்று எழுதப்படும் கதைகள், கவிதைகள், கட்டுரைகள் ஆகியவற்றில் ஏதாவது ஒரு நீதி சொல்லப் பட வேண்டும் என்பது நியதி.

அந்த வகையிலும் இந்நூல் சிறப்புப் பெறுகிறது. பளிச்சென்று வேகமாகச் செல்லும் கதையின் போக்கும், நடையும், கதை சொல்லி இருக்கும் பாணியும் பாராட்டும்படியாக உள்ளது.

## இனிமையாகப் பேசுவது எப்படி?

**ஆசிரியர்: தங்கவயல் லோகிதாசன்**

**வெளியீடு:**
ஓரி நிலையம்
3/37, சத்தியமூர்த்தி நகர்
நந்தனம், சென்னை-35.

விலை:ரூ.10 பக்கம்:100

பேசுவதில்தான் எத்தனை வகை! அவற்றை அழகாக, விளக்கமாகக் கூறுகிறார் நூலாசிரியர். சொற்பொழிவின் தொடக்கம், தொடர்ச்சி, முடிவுரை என்றெல்லாம் சிறப்பாகக் கூறி, இளம் பேச்சாளர்களை உருவாக்கத் துணை செய்கிறது இந்நூல்.

- குமாரசாமி



# குழாய்க் கிணற்றில் மின்னியல் ஆய்வின் அவசியம்

ஒரு நாட்டின் முதுகெலும்பாய் விளங்குவது வேளாண்மை ஆகும். வேளாண்மை வளம்பெற வேண்டுமானால், தண்ணீர் மிகவும் அவசியம். ''நீரின்றி அமையாது உலகு'' என்ற முதுமொழியின்படி இன்றைய வேளாண்மை வளர்ச்சிக்கும், மனித வளர்ச்சிக்கும் நீர் இன்றியமையாத ஒன்றாகும். நீர் நமக்குப் பல வகைகளில் கிடைக்கின்றது.

1. மழை நீர், 2. ஆறு, ஏரி, குளம் போன்ற நீர்த் தேக்கங்களின் மூலம் கிடைக்கும் மேல்நிலை நீர், 3. நிலத்தின் அடியில் சேமித்து வைக்கப்படும் நிலத்தடி நீர்.

மேலே குறிப்பிட்டுள்ள அனைத்து நீர் வகைகளுக்கும் மழைநீர்தான் முக்கியக் காரணமாகும். பருவ மழை பற்றாக்குறை ஏற்பட்டுள்ள இன்றைய நாட்களில் மிஞ்சி இருக்கும் நிலத்தடி நீரை மிகுந்த கவனத்துடன் சிக்கனமாகப் பயன்படுத்தியாக வேண்டும்.

நிலத்தடி நீரை விவசாயிகள் நம்பி இருப்பதனால், தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் துறையின் ஒரு பிரிவான சிறு பாசனத் திட்டத்தின்கீழ், பல்வேறு பணிகளை நவீன விஞ்ஞான ரீதியில் நிலத்தடி நீரை நிலபௌதீக ஆய்வு முறையிலும், மின்னியல் ஆய்வு முறையிலும் ஆய்வு செய்து குழாய்க் கிணறுகளை அமைத்துக் கொடுப்பதிலும் முக்கியப் பங்கு வகிக்கிறது.

### நில பௌதிக ஆய்வு மற்றும் ஆலோசனைப் பணிகள்:

நிலபௌதீக ஆய்வைப் பலவிதக் கருவிகளைக் கொண்டு நிலத்தின் உள் அமைப்புகளையும், தண்ணீரின் மட்டங்களையும் அறியலாம். வேளாண்மைப் பொறியியல் துறையில் மின் தடை (Resistivity Meter) எனும் கருவியைக் கொண்டு துள்ளியமாக, நிலபௌதிக ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. இக்கருவியைக் கொண்டு குறைந்த பட்சம் 200 மீட்டர் ஆழத்திலும் அதிக பட்சம் 600 மீட்டர் வரை நிலத்தின் ஆழத்தில் உள்ள தண்ணீரும் மற்றும் நிலத்தின் உள் படிவங்களையும் அறியமுடியும்.

விவசாயிகளின் நிலங்களில் இத்திட்டத்தின் மூலம் எந்த இடங்களில் திறந்த கிணறுகள் அமைக்கலாம் மற்றும் துளைக் கிணறுகள் அமைத்தால் போதுமான அளவு நீர் கிடைக்க, எந்த ஆழத்திற்குக் கிணறுகள் மற்றும் துளைக் கிணறுகள் அமைக்க வேண்டும் என்பதை நீர்ப் புவியியல் ஆய்வு செய்வதன் மூலம் தெளிவு பெறலாம்.

நல்ல நீர் மற்றும் உப்புத்தன்மை கொண்ட நீர் கிடைக்கும் பகுதிகளையும் நன்கு அறியலாம். இது போன்ற ஆலோசனைகளைக் குறைந்த கட்டணத்தில் விவசாயப் பெருங்குடி மக்களின் நலம் கருதி இத்துறை செய்து வருகின்றது. குழாய்க்கிணறு அமைக்க விரும்பும் ஒவ்வொரு விவசாயக் குடிமகனும் இத்துறையை அணுகிப் பயன்பெற வேண்டும்.

### மின்னியல் ஆய்வின் முன் ஆய்வு விதிமுறைகள்:

மண்படிவப் பாறை அமைப்புள்ள இடங்களில் துளைக் கிணறுகள் அமைப்பதற்கு முன்பு தகுதியான இடங்களைத் தேர்ந்தெடுக்கவேண்டி நிலபௌதிக ஆய்வு மேற்கொண்ட பிறகு, ஆய்வின் முடிவுப்படி முன்மாதிரி துளைக்கிணறு (Pilot Bore Hole) குறைந்த விட்டத்தில் சுழல் விசைத்துளைக் (Rotary Drill) கருவிகளைக் கொண்டு குறிப்பிட்டுள்ள ஆழத்திற்குத் துளைக் கிணறு அமைத்தவுடன் மின்னியல் ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். முக்கியமாக மணல் பாங்கு, படிவப் பாறைகள் மற்றும் கடலோரப் பகுதிகளில் இந்த மின்னியல் (Electrical Logging) ஆய்வு மேற்கொள்ளுவது மிகமிக அவசியமானதாகும்.

### தென்னார்க்காடு மாவட்டத்தில் மின்னியல் ஆய்வு மேற்கொள்ளப்படவேண்டிய ஊராட்சி ஒன்றியங்கள்:

முக்கியமாகத் தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள விருத்தாசலம், நல்லூர், திட்டக்குடி, சும்மாபுரம், ஸ்ரீமுஷ்ணம், காட்டுமன்னார்கோயில், புவனகிரி, கீரப்பாளையம், பண்ருட்டி, அண்ணாகிராமம், நெல்லிக்குப்பம், கடலூர், வானூர், மரக்காணம், ஆகிய ஊராட்சிகளில் களி மண் (Clay), மணல் (Sand), களி கலந்த மணல் (Claymixed sand) களி மிகுந்த மணல் (Clacy sand), கல் மண் (Sandstone) அல்லது மணற் பார், சுண்ணாம்பு பார் (Limestone), மற்றும் களிசூழ்ந்த மணல் (Clay bound sand) போன்ற மண்படிவங்கள் பல்வேறு நிலவியல் படிவ அமைப்பில் காணப்படும். இத்தகைய ஆற்றுப்படிவ மண்வடிவப் பகுதிகளில் மின்னியல் ஆய்வு மேற்கொள்ளுவதன் மூலம் மேற்கண்ட மண் படிவங்களை வேறுபடுத்தி இனம் காண முடியும். எனவே, மின்னியல் ஆய்வு முக்கியமானதாகும்.

### மின்னியல் ஆய்வின் முக்கியச் சிறப்புகள் மற்றும் பயன்கள்:

ஒரு மனிதனுக்கு உயிர்வாழ முக்கியமான உருப்பாக விளங்கும் இருதயத்தின் ரத்த அழுத்தத்தை இ.சி.ஜி. என்னும் கருவியைக் கொண்டு ரத்தத்தினுள் அழுத்தங்களையும், இருதயத்தின் உள் துடிப்புகளையும் மருத்துவர்களின் உதவியால் கண்டுகொள்கிறோம். இதே முறையில் பலவிதமான மின்னியல் ஆய்வு (Ele-Logger) கருவிகளைக் கொண்டு மின்கதிர் அரைவரிசைகளைக் கையாண்டு துளைக் கிணற்றின் உள் படிவங்களையும், நல்ல நீர், உப்புநீர், நீரின் அழுத்தம், நீரின் அளவு மற்றும் எந்த இடத்தில் சல்லடைக்குழாய் பொறுத்த வேண்டும்

கு. அருமைசிங்
தலைமைப் பொறியாளர்
வேளாண்மைப் பொறியியல் துறை.

# எண்ணெய் வித்துச் சாகுபடியில் சாதனை

**லால் ரானா சைலோ, இ.ஆ.ப.,**
**இயக்குநர்- எண்ணெய் வித்துக்கள் துறை**

நிலக்கடலை, எள், சூரியகாந்தி, ஆமணக்கு ஆகிய எண்ணெய் வித்துக்கள் சுமார் 12 இலட்சம் எக்டேர் பரப்பில் ஆண்டுதோறும் பயிரிடப் படுகின்றன. இவற்றில் நிலக்கடலை மட்டுமே நமது மாநிலத்தில் 80 சதவிகிதத்திற்குக் கூடுதலான பரப்பில் சாகுபடியாகும் முக்கிய எண்ணெய் வித்துப் பயிராக விளங்குகிறது.

தமிழகத்தில் எண்ணெய் வித்துக்கள் பெருவாரியான அளவில் மானாவாரியாகப் பருவ மழையை நம்பிச் சாகுபடி செய்யப்படுகின்றன. எனவே, நவீன சாகுபடி உத்திகளை விவசாயிகளிடையே பிரபலப்படுத்தி நன்முறைப்படுத்துவதன் மூலம், உற்பத்தித் திறனை உயர்த்தி, விவசாயிகள் அதிக மகசூலைப் பெற்றிட எண்ணெய்வித்துக்கள் துறை, திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

தரமான விதைகளை விவசாயிகளுக்கு விநியோகித்து, விதைப்பண்ணைகள் அமைத்து இவ்வாறு அமைக்கப்படும் விதைப்பண்ணைகளிலிருந்து தரம் வாய்ந்த விதைகளைக் கொள்முதல் செய்து, மீண்டும் அடுத்த பருவத்தில் விவசாயிகளுக்கு விநியோகித்தும் உற்பத்தித் திறனை உயர்த்திட, இத்துறை செயலாற்றி வருகிறது. விவசாயிகளிடையே எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் ஆர்வத்தினைத் தூண்டுவதன்மூலம், மாநிலத்தின் எண்ணெய்வித்துக்கள் உற்பத்தியை அதிகரித்திடச் செயலாற்றும் பல திட்டங்களில், மைய அரசின் நிதியுதவியுடன் இரண்டு பெரும் திட்டங்கள் இத்துறையினால் செயல்படுத்தப் படுகின்றன.

தேசிய எண்ணெய்வித்துக்கள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், 1990-91-ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ரூ.308.65 இலட்சம் மைய அரசும், மாநில அரசும் 50:50 என்ற விகிதத்தில் செலவினைப் பங்கேற்கும் இத்திட்டத்தின் கீழ், குறிப்பிட்டுள்ள திட்டப்பணிகள் செயல்படுத்தப் படுகின்றன.

**விதை:**

ஒவ்வொரு பருவத்திலும் (காரீப் மற்றும் ராபி) தேர்வு செய்யப்பட்ட கிராமத்தில், விதைப் பண்ணை விவசாயிகளைத் தேர்வு செய்து, தரமான விதைகளை அவர்களுக்கு விநியோகித்து, விதைப்பண்ணைகள் அவர்களின் வயலில் அமைக்கப்படுகின்றன. தரமான விதைகள், இந்த விதைக் கிராம விதைப் பண்ணைகளிலிருந்து கொள்முதல் செய்யப்படுகின்றன. விதை உற்பத்தி செய்யும் விவசாயிக்கு (அங்காடி நிலவரப் படியான விலை மற்றும் விதைப்பண்ணை பிரிமியம் தவிர) தரமான விதை உற்பத்திக்காக குவிண்டாலுக்கு ரூ.50 முதல் 100 வரை இத் திட்டத்தின்கீழ் மானியம் வழங்கப்படுகிறது. இச்சலுகை நிலக்கடலை, எள், சூரியகாந்தி சான்று மற்றும் உண்மைச் சான்று விதை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

ரைசோபியம் நுண்ணுயிர் பரிந்துரைகளின்படி உபயோகிப்பதன் மூலம், நிலக்கடலைப் பயிரில் வேர் முடிச்சுகள் அதிகரித்து- கூடுதல் மகசூல் கிடைக்கிறது. எனவே, விவசாயிகளுக்கு எக்டேருக்கு ரூ.15 மானியத்துடன் ரைசோபியம் நுண்ணுயிர்ப் பொட்டலங்களை இத்துறை, வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைத்து விநியோகம் செய்கிறது. இவ்வாறே எள் சாகுபடிக்கு அசோஸ் பைரில்லம் உபயோகித்து கூடுதல் மகசூல் பெற எக்டேருக்கு ரூ.15 மானியத்துடன் அசோஸ் பைரில்லம் நுண்ணுயிர்ப் பொட்டலங்களையும் இத்துறை விநியோகம் செய்கிறது.

நிலக்கடலைக்குப் பரிந்துரைகளின்படி நுண்ணூட்டச்சத்து பயன்படுத்தி உற்பத்தித் திறனைப் பெருக்கிட, எக்டேருக்கு ரூ.40 மானியத்தில் நுண்ணூட்டச்சத்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

நிலக்கடலை மற்றும் எள் பயிரின் உற்பத்தித் திறனை அதிகரிக்க ஒட்டுமொத்தமாக எல்லா நவீன சாகுபடி முறைகளையும் கையாண்டு பெருமளவில் செயல்விளக்கங்கள் செய்து காட்டப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ், விவசாயிகளுக்கு மேற்படி பரிந்துரைகளின்படி இடுபொருள் உபயோகத்திற்காகக் கீழ்க்குறிக்கப் பட்டுள்ளவாறு சலுகை வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| நிலக்கடலை 50 எக்டேர் பெருவிளக்கப் பண்ணை: | காரீப் பருவம் எக்டேருக்கு ரூ.1,000 வரை மானியம். ராபி பருவம் எக்டேருக்கு ரூ.1,200 வரை மானியம். |
| எள் 20 எக்டேர் பெருவிளக்கப் பண்ணை: | காரீப் மற்றும் ராபி பருவங்களுக்கு எக்டேருக்கு ரூ.300 மானியம். |





## உயர்ந்த செயல்!



உயர்ந்த வகுப்பார், தாழ்ந்த வகுப்பார், தீண்டத் தகுந்தவர், தீண்டத்தகாதவர் என்ற பாகுபாட்டை நீங்கள் காட்டாமல் இருப்பது மிகவும் உயர்ந்த செயல்-உங்கள் இதயமானது இதே துறையில் செல்வத்தோடுகூட, மற்ற பெண்களைவிட உயர்ந்தவர்கள் என்ற மனப்பாங்கையும் நீங்கள் அகற்றி விடுவீர்களாயின், உண்மையிலே அதுவும் மிக உயர்ந்ததே.

-அண்ணல் காந்தியடிகள்

**இடுபொருள் விநியோகத் திட்டம்:**

நிலக்கடலை, எள், சூரியகாந்தி, ஆமணக்கு, கடுகு, சோயா மொச்சை போன்ற பயிர்களில் தரமான புதிய இரக விதைகளின் உபயோகத்தை விவசாயிகளிடையே அறிமுகப்படுத்தும் வகையில் 0.1 எக்டேர் முதல் 0.2 எக்டேர் வரையில் சாகுபடிக்குத் தேவைப்படும் விதை, விதை நேர்த்தி மருந்து, சாகுபடிக் குறிப்புகள் ஆகியவை விவசாயிகளுக்கு இடுபொருள் தளைகளாக விநியோகம் செய்யப்படுகின்றன. இதற்கான மொத்த விலையில் 10 சதம் மட்டுமே, பயன்பெறும் விவசாயிகளிடமிருந்து வசூல் செய்யப்படுகின்றது.

பிற்படுத்தப்பட்ட வகுப்பு-மலை சாதி விவசாயிகளுக்கு ரூ.500- க்குக் குறைவான விலையுள்ள பண்ணைக் கருவிகள் 10 சத விலையில் இத் திட்டத்தின்கீழ் விநியோகிக்கப்படுகின்றன.

தண்ணீரைச் சிக்கனமாகச் செலவு செய்து அதிகப் பலனடைந்திடும் வகையில், தெளிப்பு நீர்ப்பாசனக் கருவிகள் உபயோகத்திற்கு விவசாயிக்கு மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் சிறு-குறு விவசாயிகளுக்கு 50 சத மானியமும், பிற விவசாயிகளுக்கு 25 சத மானியமும், ரூ.5000 உச்ச வரம்பு என்ற அளவில் வழங்கப்படுகின்றன.

மண் பரிசோதனை செய்து பரிந்துரைகளின்படி உரமிட, விவசாயிகளுக்கு மண் பரிசோதனை மாதிரி ஒன்றின் பரிசோதனைக்கான இரண்டு ரூபாய்க் கட்டணத்தில் ஒரு ரூபாய் சலுகை வழங்கப்படுகிறது.

ரூ.289.400 இலட்சம் செலவில் மைய அரசின் முழு நிதியுதவியுடன் இவ்வாண்டில் செயல்படுத்தும் இத்திட்டத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படும் சலுகைகளாவன:

ஆதார விதை உற்பத்தியாளர்கள் அரசுக்கு உற்பத்தி செய்து தரும் விதைகளுக்கு குவிண்டாலுக்கு ரூ.300 என்ற அளவில் மானியம் வழங்கப் படுகிறது.

**பெருவிளக்கப்பண்ணை அமைத்தல்:**

நிலக்கடலை 50 எக்டேர் பண்ணை: காரீப் பருவம் எக்டேருக்கு ரூ.1000 வரை மானியம். ராபி பருவம் எக்டேருக்கு ரூ.1,200 வரை மானியம். சூரியகாந்தி 20 எக்டேர் பண்ணை: காரீப் மற்றும் ராபி பருவங்களுக்கு ரூ.400 வரை மானியம்.

பெருவிளக்கப்பண்ணையில் பரிந்துரைகளின்படி இடுபொருள் உபயோகத்திற்காகப் பங்கு பெறும் விவசாயிகளுக்கு மேற்குறிப்பிட்டுள்ளவாறு மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் பயிர்ச் சாகுபடிக்கான பரிந்துரைகள் அனைத்தையும் கையாண்டு உற்பத்தித் திறனை அதிகரிக்கும் வழிகள், பெருமளவு பரப்பில் பாத்திகள் அமைத்து, விவசாயிகளுக்கு விளக்கப்படுகின்றன.

நிலக்கடலை மற்றும் சூரியகாந்தி பயிரில் தோன்றும் நோய் மற்றும் பூச்சி தாக்குதலைக் கட்டுப்படுத்த, ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு மேற்கொள்ள 50 சத மருந்து மற்றும் மானியமாக எக்டேருக்கு ரூ.100 வரை விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள் வாங்குவதற்குக் கருவியின் விலையில் 50 சத மானியம், ரூ.300 உச்ச வரம்பு என்ற அளவில் மானியம் வழங்கப்படுகிறது.

நிலக்கடலை மற்றும் சூரியகாந்தி சாகுபடித் திட்டத்தின்கீழ் பண்ணைக் கருவிகள் வாங்கிட விவசாயிகளுக்குக் கருவியின் விலையில் 50 சத மானியம், ரூ.500 உச்ச வரம்பு என்ற அளவில் வழங்கப்படுகிறது.

நிலக்கடலைக்குப் பரிந்துரைகளின்படி ஜிப்சம் உபயோகித்திட, விவசாயிகளுக்கு எக்டேருக்கு 50 சதம் மானியம், அதிகபட்சமாக ரூ.200 மானியம் வழங்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்டுள்ள திட்டங்களின் மூலம் கடந்த ஆண்டுகளில் எண்ணெய்வித்துச் சாகுபடி செய்யும் விவசாயிகள் பெருமளவில் பயனடைந்து இருக்கின்றனர். நடப்பு ஆண்டிலும் இத்திட்டங்களின் கீழ் அளிக்கப்படும் சலுகைகளை விவசாயிகள் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்வார்கள் என்பது திண்ணம்.

**உலக 'செஸ்' விளையாட்டுப் போட்டி:**



# தமிழக வீரர் ஆனந்த் வெற்றி!

உலகச் சாம்பியன் பட்டத்துக்கான 'செஸ் போட்டி கேண்டிடேட்' பிரிவுப் போட்டியில், இந்திய வீரர் விஸ்வநாதன் ஆனந்த் வென்று, கால் இறுதிக்குள் நுழைந்திருக்கிறார். சென்னை மீனம்பாக்கத்தில் 8 சுற்றுக் கொண்ட 'உலகச் செஸ் கேண்டிடேட்' பிரிவுப் போட்டி நடைபெற்றது. இது 1993-இல் நடைபெறவிருக்கும் உலகச் செஸ் கால் இறுதியில் ஆடத் தகுதி பெறுவதற்கான பூர்வாங்கப் போட்டியாகும்.

இந்தப் போட்டியில் இந்தியா சார்பில், தமிழக வீரர் விஸ்வநாதன் ஆனந்தும், ரஷியா சார்பில் அலெக்சி டிரீவும் மோதினார்கள். எட்டு ஆட்டங்கள் கொண்ட தொடரில் 6-வது ஆட்டத்தில் ஆனந்த் சோவியத் வீரர் டிரீவை வென்றார்.

'கேண்டிடேட் செஸ் போட்டி'யின் முதல் ஆட்டத்தில் ஆனந்த் சோவியத் வீரர் அலெக்சி டிரீவை எளிதில் வென்றார். இரண்டாவது ஆட்டம் இருவருக்கும் வெற்றிதோல்வியின்றி முடிவுற்றது. மூன்றாவது ஆட்டத்தில் சோவியத் வீரர், ஆனந்தை வென்று ஆனந்துக்கு இணையாக 1.5 புள்ளிகள் பெற்றார். நான்காவது ஆட்டத்திலிருந்து இந்திய வீரர் ஆனந்தின் கை ஓங்க ஆரம்பித்துவிட்டது. ஆனந்த் நுணுக்கமாக, முழு வேகத்துடன் ஆடி நான்காவது, ஐந்தாவது ஆட்டத்தை வென்று, அதன் மூலம் 3.5 புள்ளிகள் பெற்று, தனது நிலையை வலுப்படுத்திக் கொண்டார். கால் இறுதிச் சுற்றை எட்ட இன்னும் ஒரு புள்ளி எடுத்தால் போதும் என்ற நிலையில் ஆனந்த் 6-வது சுற்று ஆட்டத்தை 30.1.91 அன்று துவக்கினார்.

வெள்ளை நிறக்காய்களுடன் விளையாடிய ஆனந்த், புதுமையான முறையில் காய்களை நகர்த்தி ரஷிய வீரரை வியக்க வைத்தார். 35-வது முறையாக ஆனந்த் காயை நகர்த்தியதும், தனது தோல்வி தவிர்க்க முடியாதது என்பதை உணர்ந்து சோவியத் வீரர் டிரீவ் எழுந்து, ஆனந்துடன் கைகுலுக்கித் தனது தோல்வியை ஒப்புக் கொண்டார். இத்துடன் 4.5 புள்ளிகள் பெற்று, ஆனந்த் கால் இறுதி செஸ் போட்டிக்குத் தகுதி அடைந்தார்.

**முதல் ஆசிய வீரர்**

உலகச் சாம்பியன் பட்டத்துக்கான செஸ் போட்டியில் - கால் இறுதிச் சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ள முதல் ஆசிய வீரர் விஸ்வநாதன் ஆனந்த். 21 வயது நிரம்பியவர். பிலிப்பைன்ஸில் நடைபெற்ற உலகச் செஸ் போட்டியில் 'ஜுனியர் சாம்பியன்ஷிப்' பட்டத்தை வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

'பட்டர்பிளை குரூப்' நிறுவனத்தின் ஆதரவுடன் நடந்துவரும் இந்த 'உலகச் செஸ் கேண்டிடேட்' போட்டியில் முதலிடம் பெற்ற ஆனந்துக்கு ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபாயும், சோவியத் வீரர் அலெக்சி டிரீவுக்கு ரூ.75 ஆயிரமும் பரிசுத் தொகையாக வழங்கப்படும்.

கே. விசுவநாதன்-சுசீலா தம்பதியரின் மகனான திரு. ஆனந்த், 7 வயது முதல் 'செஸ்' விளையாடித் தேர்ச்சி பெற்றவர். தாயாரே குருவாக இருந்து அவருக்குச் 'செஸ்' ஆட்டம் கற்பித்தார்.

1982-இல் ஜுனியர் செஸ் சாம்பியனாகவும், 1986-இல் உலக ஜுனியர் செஸ் சாம்பியனாகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட பெருமை திரு. ஆனந்துக்கு உண்டு.

கடந்த ஆண்டு இறுதியில் 'பத்மஸ்ரீ' விருதும் இவருக்கு அளிக்கப்பட்டது.



# பெண் சிசுக்கள் கொலைக்கு முற்றுப் புள்ளி



'கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்தகுடி' என்று பெருமைப்படக்கூடிய இனம் தமிழினம்.

இந்தத் தமிழ் இனத்தில்தான் பெண்ணின் பெருமை பேசப்படுகிறது. பூமியைப் பூமாதேவி என்றும், வீரத்தை சக்தியாகவும், பொருளிற்கு லட்சுமியாகவும், அறிவிற்குச் சரஸ்வதியாகவும், நாம் வழிபடுவதிலிருந்து தமிழ் இனம் பெண்ணின் பெருமைக்குப் புகழ் சேர்த்த இனம் என்பது நன்கு வெளிப்படுகிறது.

ஒரு சமுதாயம் நல்ல சமுதாயமாக ஆவதற்குப் பெண்கள்தான் முழுக்காரணம். பெண்கள் படித்த நல்ல அறிவுள்ளவர்களாக இருந்தால், அச்சமுதாயம் விழிப்புற்ற சிறந்த சமுதாயமாக அமையும். இல்லையென்றால் அச்சமுதாயம் சீரழிந்து விடும். இதை விளக்கும் வகையில்தான் 'ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே' என்ற பழந்தமிழ் மொழி கூறுகிறது. இதனால்தான் நம் மூதாதையர் பெண்களைப் போற்றிப் பாதுகாத்து வந்தார்கள்.

இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலேயும் இல்லாத அளவிற்குப் பெண்களுக்குப் பல சமூகநலத் திட்டங்களை அரசு அறிவித்துள்ளது. இதையெல்லாம் எண்ணிப்பார்க்காமல் சில பெற்றோர்கள் தாம் பெற்ற பெண் குழந்தைகளை அழிக்கின்ற நெஞ்சைப் பிழிந்திடும் நிகழ்ச்சிகள் மதுரை மாவட்டம் உசிலம்பட்டி தாலூகாவில் நடைபெற்றுள்ளது. இதை அறிந்த நம் தமிழக அரசானது, இதைத் தடுத்திட தீவிர ஏற்பாடுகள் செய்தது. சட்டத்தால் மட்டுமே இதை நிறுத்திவிட முடியாது என்றுணர்ந்த அரசு, அப்பகுதிகளில் வாழும் மக்களிடம் மனமாற்றத்தை ஏற்படுத்த முயன்றது.

முடிவில், இந்தியக் குழந்தைகள் நலச் சங்கத்தின் மூலமாகப் பெண் குழந்தைகளின் நல்வாழ்வு மையம் ஒன்று உசிலம்பட்டியில் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டது. அச்சங்கத்திற்குத் தமிழக அரசு ரூ.1.50 இலட்சம் நிதியுதவி அளித்தது. பெண் குழந்தைகள் பிறந்தால் அதைக் கொல்ல வேண்டாம், பெண் குழந்தைகள் காப்பகத்திற்குக் கொண்டு வாருங்கள் என்று அறிவிப்பும் அப்பகுதியில் செய்யப்பட்டது. அதன்படி கொண்டு வந்து சேர்க்கப்பட்ட அபிநயா என்ற 4 மாதக் குழந்தை, அர்ச்சனா என்ற 3 மாதக் குழந்தை, அபர்ணா என்ற 2 மாதக் குழந்தை, அபிதா என்ற ஒருமாதக் குழந்தை ஆகிய 4 பெண் குழந்தைகள் இந்த மையத்தில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

இந்த நல்வாழ்வு மையத்தில் பராமரிக்கப்பட்டு வரும் பெண் குழந்தைகளைப் படிக்க வைத்து அவர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கிக் கொடுத்து, திருமணமும் செய்து வைக்கின்ற வரை ஆகும் எல்லாச் செலவினங்களையும் அரசே ஏற்றுக் கொள்ளும்.

பெண் சிசுக் கொலைக் கொடுமைக்கு வறுமை மட்டுமே காரணமல்ல; வரதட்சணைக் கொடுமையும் இதற்கு ஒரு வகையில் மூலகாரணமாகிறது. இப்படிப்பட்ட நிலைமை நீங்கவேண்டுமானால், அரசு சட்டம் இயற்றுவது மட்டுமே போதாது; சமுதாய விழிப்புணர்வும் மிக முக்கியமாகும். ஆணுக்குப் பெண் சமம் என்று சொல்லுவது மட்டுமே போதாது; ஒவ்வொரு ஆணும் பெண்ணுக்குச் சம உரிமை கொடுத்துச் செயல்படுவதுமே அவசியமாகும்.

## பெருவிழா எடுப்போம்

**—தி.பட்சிராஜன்**

ஆணா? பெண்ணா? உயர்ந்தவர் எவரென்று
பட்டி மன்றம் நடத்துதல் மடமை!
'ஆணுக்குப் பெண்ணிங்கு நிகரெனக் கொள்வதால்
அறிவில் ஓங்கி இவ்வையம் தழைக்குமாம்;'
'பேணிப் புவியை வளர்த்திடும் ஈசன்
பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான்' என்று
பூணும் அன்பால் பெண்குலம் போற்றிய
பெருங்கவி பாரதி சொல்லை மறப்பதோ!

கல்விக்குக் கலைமகள், அன்புக்கு அலைமகள்,
கரையில்லாச் சக்திக்கு மலைமகள், பொறுமைக்கு
நிலமகள் என்றெலாம் பெண்தெய்வம்
வணங்குவோம்;
நிலத்தில் வாழும் பெண்களை மட்டும்
விலைபேசும் ஆடு மாடு கோழிபோல்
விற்றிங்கே ஆண்வர்க்கம் வீரம் பேசும்
நிலையிங்கு மாற நம் மனம்மாற வேண்டியே
நிகழ்வது பெண் குழந்தைகள் ஆண்டென
முழங்குவோம்!

பெண்கள் எல்லாம் கல்வியில், கலையில்
பல்வகைத் தொழிலில், நாடுகாக்கும் படையில்
நுண்மைமிகு பொறியியல்- மருத்துவத் துறையில்
நாட்டை வழிநடத்தும் நற்பணியில், இன்னும்
விண்வெளி ஆய்வில் என்றின்று துறைதோறும்
வியத்தகு சாதனைகள் விளைக்கக் கண்டோம்.
பெண்மகவு பிறந்தாலினி பெருந்துயராய்க் கருதாமல்
பெருமகிழ்வில் வரவேற்றுப் பெருவிழா
எடுப்போம்!

JL
V2||33 N7614 N91

# மிதக்கும் கப்பல் பழுது பார்க்கும் தளங்கள்

**சென்னைத் துறைமுகத்தில்** — நவீன கப்பல் பழுது பார்க்கும் தளம் ஒன்று இல்லாமல் இருந்தது ஒரு பெருங் குறையாகவே இருந்து வந்தது.

இத்துறைமுகத்தின் கப்பல்களான காவேரி, கொள்ளிடம் போன்ற மண்வாரிக் கப்பல்களைப் பழுது பார்ப்பதற்குக்கூட, இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை அவற்றை கல்கத்தா, விசாகப்பட்டிணம் துறைமுகங்களுக்கு அனுப்பி, பழுது பார்த்துக் கொண்டு வரும் நிலை இருந்தது. இதன்காரணமாகப் போய் வருவதற்கான காலமும், செலவும் ஏற்பட்டு வந்தன.

இதைத் தவிர்ப்பதற்காக — சென்னைத் துறைமுகத்திலேயே ஒரு மிதக்கும் கப்பல் பழுது பார்க்கும் தளம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இத்தகைய கப்பல் பழுது பார்க்கும் தளத்தை சென்னைத் துறைமுகத்தில் அமைக்க உலகம் முழுவதிலிருந்தும் பல்வேறு நிறுவனங்கள் முன் வந்தன. அவற்றுள் 'சொக்கானி இன்டர்நேஷனல்' நிறுவனம் தேர்வு செய்யப் பட்டது.

இதன்படி இந்த நிறுவனம்—மார்ச் 16ஆம் தேதி 'பாரத்' எனும் மிகப் பெரும் மிதக்கும் கப்பல் பழுது பார்க்கும் தளத்தை சென்னைத் துறைமுகத்தில் அமைத்தது; ஏப்ரல் 10ஆம் தேதி 'மதுசூதன்' எனும் மற்றொரு சிறிய மிதக்கும் கப்பல் பழுது பார்க்கும் தளத்தையும் சென்னைத் துறைமுகத்தில் அமைத்தது.

**"பாரத்" தளம் பற்றிய குறிப்புகள்:**

இதன் நீளம் : 190 மீட்டர்
அகலம் : 40 மீட்டர்
உயரம் : 14.6 மீட்டர்
தூக்கும்திறன் : 14,000 டன்கள் (அதாவது 40 ஆயிரம் டன் கொள்ளவு உள்ள கப்பல்கள்)

**'மதுசூதன்' தளம் பற்றிய குறிப்புகள்:**

இதன் நீளம் : 108 மீட்டர்
அகலம் : 25.2 மீட்டர்
உயரம் : 9.6 மீட்டர்
தூக்கும் திறன் : 2,400 டன்கள் (அதாவது 10 ஆயிரம் டன் கொள்ளவ உள்ள கப்பல்கள்)

இதில் 500க்கும் மேலானோருக்கு நேரிடை வேலை வாய்ப்பும், மற்ற வகையில் மேலும் 500 பேருக்குமான வேலை வாய்ப்பும் கிடைக்கும். இது கப்பல் கட்டும் துறையிலான தொழில் நுட்பத்தை வளர்க்கவும் உதவியாக இருக்கும்.

இந்த வசதியின் காரணமாக சென்னைத் துறைமுகத்திற்கு கப்பல்கள் வருவதும் போவதுமான போக்குவரத்து அதிகரிக்கும் சூழ்நிலை உருவாகி உள்ளது. இதனால் சென்னையிலும், சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளிலும், கப்பல் பழுது பார்ப்பதற்குத் தொடர்பான தொழில்கள் உருவாகவும், அவற்றில் வேலை வாய்ப்புகள் பெருகவும் இது வழிகோலுகிறது.

தற்போது இந்தியாவில் உள்ள 800 கப்பல்களில் ஆண்டுக்கு 80 கப்பல்களைப் பழுது பார்க்கும் வசதி மட்டுமே நம்மிடம் உள்ளது. தற்போது சென்னைத் துறைமுகத்தில் அமைந்துள்ள இந்த வசதியின் காரணமாக, மேலும் அதிகமான கப்பல்களைக் கையாளும் வசதி ஏற்பட்டுள்ளது.

**நன்றி: சென்னைத் துறைமுகம்**

போன்ற பலவிதமான தேவையான விவரங்களைக் கண்டு அறிய உதவும் கருவிதான், மின்னியல் ஆய்வுக் கருவி.

விசைத்துளைக் கருவியினைக் கொண்டு மண் படிவங்கள் உள்ள பகுதிகளில் குழாய்க் கிணறு அமைக்கும்போது, முன்னோடித் துளைக் கிணறு போடும்போது பெண்டோனைட் களிமண்ணுடன் மண் படிவங்கள் கலந்து வருவதால் மண் படிவ அமைப்பினையும் மண்படிவங்களின் கடினத்தன்மை பிளவுகள் மற்றும் கூழாங்கற்கள் போன்ற பரல்கள் கிடைக்கும்போதும், சுண்ணாம்பு பார், கட்டுமணல் களி சூழ்ந்த மணல் போன்ற படிவங்கள் காணப்படும் போதும் திட்டவட்டமாகவும் அப்படிவங்களில் காணப்படும் ஊற்றுத் திறன் பற்றியும் தெளிவுற முடியாமல் போகும் வாய்ப்புகள் மிகுதியானவை. இப்படிவங்களின் இடையில் உப்புநீர் ஊடுருவி வருவதற்கும் வாய்ப்புகள் அதிகமாக உள்ளது. அதற்குக் கீழே கிடைக்கும் நல்ல நீர் எந்தப் படிவங்களில் கிடைக்கும் என்பதைத் துள்ளியமாக அறிந்து, நீரை வெளிக்கொண்டு வந்தால், சிறப்பான முறையில் விவசாயிகள் விவசாயத்தைச் செய்து உற்பத்தியைப் பெருக்கும் வாய்ப்பும் அதிகரிக்கும்.

மேலும், துளைக் கிணறுகளில் ஒரு சில பகுதிகளில் காணப்படும் உப்பு நீரையும், தேவையற்ற பகுதிகளையும், களிமண் அல்லது சிமெண்ட் கலவை முறையிலும் அடைத்து நல்ல நீர் கிடைக்கும் பகுதிகளில் மணலின் தன்மையையும், நீரூற்றுத் தன்மைகளையும் கண்டுபிடித்து அதற்குத் தகுந்தாற் போல் சல்லடைக் குழாய்கள் பொருத்தி நல்ல நீரை - அதிக அளவில் கிடைக்கும் நீரை விவசாய உபயோகத்திற்கு வெளிக் கொண்டு வந்து பயன்படுத்தலாம்.

நிலபௌதிக ஆய்வு மற்றும் மின்னியல் ஆய்வின் கருவிகளைப் பயன்படுத்தி விவசாயிகள் மற்றும் விவசாயம் அல்லாத நிலங்களில் சுழல் விசைத்துளைக் கருவிகளைக் கொண்டு குழாய்க் கிணறு அமைப்பதன் மூலம் விவசாயிகள் அவர்களது மூலதனத்தை வீணாக்காமல் நல்ல திறன் மிகுந்த குழாய்க் கிணறுகளை அமைக்க முடியும். இதற்காக வேளாண்மைப் பொறியியல் துறையினர் மிகவும் குறைந்த வாடகையில் எல்லா சிறு பாசனக் கருவிகளையும் விவசாயிகளுக்கு வழங்கி வருகின்றனர்.

1. நில பௌதிக ஆய்விற்கு (ஒரு இடம் தேர்வு செய்ய) விவசாயப் பணிக்கு ரூ.200.00 இதர பணிக்கு ரூ.400.00.

இதேபோல, மின்னியல் ஆய்வுக்கு (ஒரு குழாய்க் கிணறுக்கு) போக்குவரத்து உட்பட விவசாயப் பணிக்கு ரூ.300.00 இதரப் பணிக்கு ரூ.500.00 ஆகும்.



பெரியார் மாவட்டத்தில்

# பட்டுத் தொழில் வளர்ச்சி



பட்டுப்புழுக்களின் உணவுக்கான மல்பெரித் தோட்டம்

பெரியார் மாவட்டத்தில் தாளவாடி ஒன்றியம் நீங்கலாக 19 ஒன்றியங்களிலும், சமவெளிப் பகுதியில் பட்டு வளர்ப்புத் தொழில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

உலக வங்கி நிதியுதவியுடன் கூடிய தேசியப் பட்டு வளர்ச்சித் திட்டம் 1989-90 முதல் பெரியார் மாவட்டம் உட்பட 10 மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது. தேசியப் பட்டு வளர்ச்சித் திட்டத்திற்காக உலக வங்கி ரூ.41.77 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. நடப்பாண்டு 1990-91-ஆம் ஆண்டு இரண்டாம் ஆண்டாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பெரியார் மாவட்டத்தில் சமவெளிப் பகுதியில் 1900.00 ஏக்கரில் இறைவைச் சாகுபடியின் கீழ் மல்பரி பயிர் செய்து, 2226 பட்டு விவசாயிகள் பட்டு வளர்ப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

**பட்டுக் கூடு உற்பத்தி:**

இதுவரை 2.05 இலட்சம் கிலோ பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யப் பட்டுள்ளது. இதன் மதிப்பு சுமார் 1.8 கோடி ரூபாய் ஆகும். பெரியார் மாவட்டப் பட்டு விவசாயப் பெருமக்கள் உற்பத்தி செய்த பட்டுக் கூடுகளைப் பிற மாவட்டங்களிலும், கர்நாடக மாநிலங்களிலும் தான் விற்பனை செய்ய வேண்டிய நிலையைக் கருதி, ஈரோட்டில் அரசு பட்டுக் கூடு அங்காடி நிறுவப்பட உள்ளது. இதன் மூலம் எளிதில் உற்பத்தி செய்த பட்டுக் கூடுகளை விற்பனை செய்ய வழி வகை செய்யப்படும்.

**மல்பெரி விரிவாக்கம்:**

நடப்பாண்டிற்கு 217 ஏக்கர்கள் மல்பரி பயிர் இறைவைச் சாகுபடியின் கீழ்க் கொண்டுவர இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இது வரை 414:80 ஏக்கர்களில் மல்பரி சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

1990-91-ஆம் ஆண்டிற்கு 2.5 இலட்சம் நாற்றுகள் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு. அதற்கான நிதி குறியீடாக ரூ.12,500 ஒதுக்கப்பட்டுள்ளது. நவம்பர் 1990 திங்கள் வரை 10 இலட்சம் மல்பரி நாற்றுக்கள் உற்பத்தி செய்யப் பட்டுள்ளது. நிதிக் குறியீட்டில் ரூ.12,500 செலவு செய்யப் பட்டுள்ளது.

**கடன் வசதிகள்:**

பட்டு வளர்ப்புத் தொழில் மேற்கொள்ள கடன் வசதிகள் பட்டு விவசாயிகளுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தில் பட்டுப்புழு வளர்ப்பிற்கு மல்பரி பயிரிடவும், பட்டுப்புழு

வளர்ப்புத் தளவாடங்கள் வாங்கவும், பட்டுப்புழு வளர்ப்பு மனை கட்டவும், கிணறுகள் ஆழப்படுத்தவும், மற்றும் புதிய கிணறுகள் தோண்டவும் விண்ணப்பங்கள் பெறப்பட்டு வங்கிகளுக்கு அனுப்பப்பட்டு, கடன் வசதிகள் கிடைக்க ஏற்பாடுகள் விரிவாக்கத்திற்கு மானிய வசதி ஏதும் இல்லாததால், பட்டு விவசாயிகளுக்கு மானியமில்லா வங்கிக் கடன் வசதி கிடைக்க வேண்டி விண்ணப்பங்கள் பெறப்பட்டு நேரடியாக வங்கிகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றது. மேலும், சிறு மற்றும் குறு விவசாயிகள் ஆகியோர்களிடம் இருந்து மானிய வசதிக்காக விண்ணப்பங்கள் பெறப்பட்டு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு, மாவட்ட அரசு வளர்ச்சி முகமை உதவியுடனும், மாவட்ட ஆட்சித் தலைவர் உதவியுடனும், மானிய வசதிகள் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

நபார்டு கடன் அளவுகோல்படி, ஒரு ஏக்கருக்கு மல்பரி பயிரிட ரூ.1,400 பட்டுப்புழு வளர்ப்புத் தளவாடங்கள் வாங்க ரூ.3,200 பட்டுப்புழு வளர்ப்பு மனை கட்ட ரூ.5,000 ஆக மொத்தம் ரூ.9,600 கடன் சிபாரிசு செய்யப்படுகிறது.

நவம்பர் 1990 வரை 270 கடன் விண்ணப்பங்கள் மல்பரி பயிரிடக் கடனுக்காகவும், பட்டுப்புழு வளர்ப்புத் தளவாடங்கள் வாங்கவும், பட்டுப்புழு வளர்ப்பு மனை அமைக்கவும், 17 கடன் விண்ணப்பங்கள் கிணறு ஆழப்படுத்தக் கடன் வசதி கோரியும் வங்கிகளுக்குப் பரிந்துரை செய்து அனுப்பப்பட்டுள்ளது. 51 விவசாயிகளுக்கு மல்பரி பயிரிடவும், பட்டுப்புழு வளர்ப்புத் தளவாடங்கள் வாங்கவும் மற்றும் பட்டுப்புழு வளர்ப்பு மனை கட்டவும் கடன் ரூ.5 இலட்சம் அனுமதி கிடைத்துள்ளது.

**பட்டு விவசாயப் பயிற்சி:**

பட்டு வளர்ச்சி பயிற்சிக்கென நடப்பாண்டிற்கு 72 பட்டு விவசாயிகளுக்குப் பயிற்சியளிக்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நிதிக் குறியீடு ரூ.21,600 ஒதுக்கப்பட்டுள்ளது. நவம்பர் 1990 வரை 72 விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு உள்ளது. பயிற்சிக்கால உதவித் தொகையாக ரூ.10,800 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. பயிற்சி பெற்ற ஒவ்வொரு விவசாயிகளுக்கும், ரூ.150 மதிப்புள்ள பட்டுபபுழு வளர்ப்பு உபகரணங்கள் இலவசமாக வழங்கப்படும். இதற்காக ரூ.10,800 நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

**பட்டு நூற்பகங்கள் அமைத்தல்:**

நடப்பாண்டிற்கு 20 பட்டு நூற்பு இயந்திரங்கள் அமைக்க குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நவம்பர் 1990 வரை 35 பட்டு நூற்பு இயந்திரங்கள் அமைக்கப்பட்டு விட்டன. பட்டு நூற்பு இயந்திரங்களுக்குப் பட்டு நூற்பு மூலதனக் கடன் வேண்டி 3 நபர்களுக்குக் கடன் வசதி செய்து கொடுக்க வங்கிக் கடன் விண்ணப்பங்கள் வங்கிகளுக்குப் பரிந்துரை செய்து அனுப்பப்பட்டுள்ளன.



பட்டு முட்டைத் தயாரிப்புக்கான விதைப் பட்டுக் கூடுகள்.

பெரியார் மாவட்டத்தில் நூற்பு நிலையங்களைத் தனியார் துறையில் ஊக்குவித்து இம்மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் பட்டுக் கூடுகளைப் பட்டு நூலாக நூற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் படித்த மற்றும் படிக்காத இளைஞர்களுக்குச் சுயவேலை வாய்ப்பு கிடைக்கும். பட்டு நூற்பு ஆலைகளுக்குத் தேவைப்படும் பணியாளர்களுக்கு, மாதம் ரூ.250 உதவித் தொகையுடன், இலவசமாக ஆறு மாதக் காலம் பயிற்சி அளிக்கும் அரசு பட்டு நூற்புப் பயிற்சி நிலையமும் ஈரோட்டில் துவக்கப்பட்டுள்ளது. நடைமுறை மூலதனமாக ரூ.9,000 வங்கி மூலம் கிடைக்கவும் சிபாரிசு செய்யப்படுகிறது.

பட்டு வளர்ச்சித்துறை, அனைத்துத் தொழில் நுட்ப உதவிகளையும் வழங்கும். உற்பத்தி செய்த பட்டு நூலை, தமிழ்நாடு பட்டுக் கூட்டுறவு இணையம் கொள்முதல் செய்யும். ஆகையால், தனியார் துறையில் பட்டு நூற்பாலைகள் நிறுவ முன் வரலாம்.

**தனியார் பட்டு முட்டைத் தயாரிப்பு நிலையம்:**

உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் தேசீய பட்டு வளர்ச்சித் திட்டத்தின் கீழ், ஈரோட்டில் இரண்டு தனியார் பட்டு முட்டைத் தயாரிப்பு நிலையங்கள் ஆரம்பிக்க உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

ஒன்று, ராஜா பட்டு முட்டைத் தயாரிப்பு நிலையம் ஆகும். மற்றொன்று ஸ்ரீவெங்கடேசுவரா பட்டு முட்டைத் தயாரிப்பு நிலையம் ஆகும். இவ்விரு தனியார் பட்டு முட்டைத் தயாரிப்பு நிலையங்களும் துவக்கப்படுவதற்கு முன்னர், பட்டு விவசாயிகள் தங்களுக்குத் தேவையான பட்டு முட்டைகளைத் தர்மபுரி, கோயம்புத்தூர், ஓசூர் மற்றும் கர்நாடக மாநிலங்களிலிருந்து பெற வேண்டிய நிலை இருந்தது. தற்பொழுது இரண்டு தனியார் பட்டு முட்டை உற்பத்தி செய்யும் நிலையங்கள் ஈரோட்டில் செயல்பட்டதிலிருந்து பெரியார் மாவட்ட விவசாயிகளுக்கு எளிதில் பட்டு முட்டை கிடைப்பதோடு, காலத்தே கிடைக்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டு பட்டு விவசாயிகளின் சிரமங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன.

## மாணவர் பக்கம்

### அறிவுச் சுடர்

1. ''ஒன்றே குலம்'' ''ஒருவனே தேவன்'' என்ற தொடர் எந்த நூலில் உள்ளது? இதை இயற்றியவர் யார்?
2. ஜோடி எழுத்துக்களில் நெடில் முன்னும், குறில் பின்னும் வரக் கூடிய ஒரு தமிழ்ச்சொல் எது?
3. தமிழில் தோன்றி அழிந்துபோன முதல் தமிழ் இலக்கண நூல் எது?
4. தமிழில் முதன் முதலில் அச்சுக் கூடத்தை ஏற்படுத்தியவர் யார்?
5. இந்தியாவில் மிகப்பழமையான மலைத்தொடர் எது?
6. இந்தியாவின் ''மினி சுவிட்சர் லாந்து'' என அழைக்கப்படும் நகரம் எது?
7. இந்தியாவின் முதலாவது வானொலி நிலையம் எங்கே? எப்போது தொடங்கப்பட்டது?
8. மாணவர்களுக்கு இரண்டு கைகளாலும் எழுதக் கற்றுத்தரும் நாடு எது?
9. வெள்ளை நிறத்தைத் துக்கத்தின் சின்னமாக ஏற்றுக் கொண்ட நாடு எது?
10. மனித உடலில் எவ்வளவு சத விகிதம் இரத்தம் உள்ளது?
11. மனித உடலில் இரத்த ஓட்டமில்லாத பகுதி எது?
12. புகைப்படத் தொழிலில் பயன் படும் பொருள்(உப்பு) எது?
13. ஒலிப்பதிவு நாடாவின் மீது பூசப்படும் பொருள் எது?
14. தீயை அணைக்க உதவும் வாயு எது?
15. அழுகை மதில் (Wailing Wall) எங்குள்ளது?
16. இதுவரை நிலவில் காலடி வைத்தவர்கள் எத்தனைப் பேர்?
17. உலகிலேயே அதிக அளவு கோதுமை உற்பத்தி செய்யும் நாடு எது?

**விடைகள்**

1. நூல் - திருமந்திரம்
   எழுதியவர் - திருமூலர்
2. தூது
3. குமரவேல் இயற்றிய 'குமரம்'
4. சீகன் பால்கு ஐயர்
5. ஆரவல்லி மலைத்தொடர்
6. லூதியானா
7. சென்னையில், 1923-ஆம் ஆண்டு
8. ஜப்பான்
9. சீனா
10. 4 சதவிகிதம்
11. விழிவெண்படலம்
12. வெள்ளி புரோமைடு
13. இரும்பு ஆக்சைடு
14. கார்பன்-டை-ஆக்சைடு
15. இஸ்ரேல்
16. 12 பேர்
17. சோவியத் யூனியன்

—வீ. குமணன்
திரிபுரசுந்தரி அம்மன்
தொழில் நுட்பப்பயிலகம்
(முதல் ஆண்டு) சகை கிராமம்
திருக்கழுக்குன்றம்.



## குறள் விளக்கு

### தஞ்சைப்பாண்டியன்



குறளைப் படிக்க வருவாயே-தம்பி
குவலயம் போற்ற உயர்வாயே!
அறமும் பொருளும் இன்பமுமே-தம்பி
அள்ளி வழங்கும் திருக்குறளே!

அற்புதக் கவியே வள்ளுவனே-உலகில்
அனைத்தும் அறிந்த வல்லவனே!
பற்பல நூல்கள் இருந்தாலும்-இன்று
பலரைக் கவரும் திருக்குறளே!

முப்பால் திகட்டாக் கனிச்சாறு-நூல்
முழுதும் தத்துவ வரலாறு!
இப்புவி அரங்கில் ஒளிவீசும்-பெரும்
இருளை அகற்றும் திருக்குறளே!

உலகப் பொதுமறை இந்நூலே-அதுதான்
உள்ளம் கவரும் நன்னூலே!
விலையே இல்லா மாமணியே-தம்பி
விரும்பிப் படிப்பாய் திருக்குறளே!

## பழமொழிகள்

எள் என்பதற்கு முன்னே, எண்ணெயாக நிற்பான்.
ஒரே கல்லில் இரண்டு மாங்காய்.
ஒன்று செய்தாலும் உருப்படியாகச் செய்ய வேண்டும்.
ஓடுகிற பாம்பை மிதிக்கிற பருவம்.
கடுகு சிறுத்தாலும் காரம் போகாது.
கண்டால் ஒரு பேச்சு காணாவிட்டால் ஒரு பேச்சு.
கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு.
காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.
கிணறு இறைக்க இறைக்கச் சுரக்கும்.
குரு வாய்மொழியே திருவாய்மொழி.
கூடி வாழ்ந்தால் கோடி நன்மை.
கெடுவான் கேடு நினைப்பான்.
கைப்புண்ணுக்குக் கண்ணாடியா வேண்டும்?.
கோபம் உள்ள இடத்தில் குணம் உண்டு.
சிறு துரும்பும் பல் குத்த உதவும்.
சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை.
தவளை தன் வாயால் கெடும்.
தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை.
திரை கடல் ஓடியும் திரவியம் தேடு.
தீராக் கோபம் போராய் முடியும்.
தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்.
நம்பினவரை நட்டாற்றில் விடலாமா?.
நெற்றி வேர்வை நிலத்தில் விழ உழை.

'வாசன் உயர்தரத் தமிழ்க் கையகராதி' என்னும் நூலிலிருந்து.

தரமான காஞ்சிபுரம் பட்டுச் சேலைகள், பாவாடைகள், சோளி ரகங்கள்
• நியாயமான விலையில் வாங்க சிறந்த இடம்
தொலைபேசி: 2101 தந்தி: ''முருகோசில்க்''

காஞ்சிபுரம் முருகன் பட்டு நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி
மற்றும் விற்பனைச் சங்கம் லிமிடெட். நெ.ஜி. 1653
79-காந்தி ரோடு, காஞ்சிபுரம்-631 501.
(குளிர்பதனம் செய்யப்பட்டது)

*விற்பனை நிலையங்கள்:*

1. 'காஞ்சி கூட்டுறவு பட்டு'
உம்மிடியார் ஷாப்பிங் சென்டர்,
811, அண்ணா சலை,
சென்னை-600 002.
2. நெ.39, ஆற்காடு ரோடு,
கோடம்பாக்கம், சென்னை-600 024.
(நேரடி விற்பனை நிலையம்)
3. நெ.9, கீழ் ஆவணி மூலவீதி,
மதுரை-625 001.
4. ''சுவேதா சில்க்ஸ்''
நெ.10-சி, இரண்டாவது அக்ரஹாரம்,
சேலம்-636 001.
5. ஸ்ரீவெங்கடேஸ்வரா சில்க் அவுஸ்,
நெ.206, ருக்மணி பில்டிங்ஸ்,
சிக்பெட், பெங்களூர்-560 053.
6. மகாலட்சுமி சில்க்ஸ்,
7-3-276, மெயின் பஜார்,
இந்துப்பூர்-515 201

இரா. விஜேந்திரன், பி.ஏ.,
துணை இயக்குநர்/தனி அலுவலர்

தந்தி: ''பல்கோ சில்க்'' போன்: '2634'

*பார்புகழும் சிறப்பு - காஞ்சிபுரம் பட்டுச் சேலைகளுக்குப்*
*பார்த்து வாங்கிட வாருங்கள் - பல்லவர் பட்டுக் கூட்டுறவுச் சங்கத்துக்கு*

காஞ்சிபுரம் பல்லவர் பட்டுக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி
மற்றும் விற்பனைச் சங்கம் லிட்., நெ.கே.பி. (ஸ்பெஷல்) 83.
429-பி, 430, காந்தி ரோடு, காஞ்சிபுரம்-631 501

கிளை விற்பனை நிலையங்கள்

1. ஸ்ரீ சில்க்ஸ்
2 நியூ காம்ப்ளெக்ஸ்,
ஆர்.சி. பில்டிங்ஸ்,
பி.வி.கே. அய்யங்கார் ரோடு, பெங்களூர்.
2. காவேரி சில்க்ஸ்,
15-3-415 மெயின் ரோடு,
ஹிந்துபூர் (ஆந்திரா).
3. காஞ்சி கோ-ஆப்-சில்க்ஸ்,
உம்மிடியார் ஷாப்பிங் சென்டர்,
அண்ணா சாலை, சென்னை-600 002.
4. ராமரத்னா சில்க்ஸ்,
241-2வது அக்ரஹாரம்,
சேலம்-636 001.
5. ஸ்ரீ மாருதி சில்க்ஸ்,
13/528 சிவாலயம் தெரு,
புரொடட்டூர்-கடப்பா ஜில்லா, (ஆந்திரா)
6. வி.எஸ். சந்திரசேகரன் அண்ட் கோ,
139, கீழவெளி வீதி,
மதுரை-1
7. ஸ்ரீ வாஸவி சில்க்ஸ்,
15-204-ஏ வைஸ்யா ஹாஸ்டல் ரோடு,
அனந்தபூர் (ஆந்திரா).
8. தேவி சில்க்ஸ்,
19 திருவேங்கடசாமி தெரு,
ஈரோடு-638 001.
9. மன்ரோஸ் டெக்ஸ்,
39, ஆற்காடு ரோடு,
கோடம்பாக்கம், சென்னை-24.
10. பெருமாள் சில்க்ஸ்,
282, சி. ராஜ வீதி,
கோயம்புத்தூர்.

நிர்வாகஸ்தர்கள்:

டி. ஏகாம்பரம்
டி. கலா
கே. மீனாட்சி

ஜி. நடராஜன்
வி.எம். சந்திரபானு
என். கோவிந்தராஜ்
பி. ஜெயவேல்

ஏ. நாகராசன்
தலைவர்
எஸ். லோகநாதன்
உப தலைவர்

ஜி. நாகலிங்கம்
துணை இயக்குநர்/செயலர்



# மாமல்லபுரத்தில் வசந்த விழா

''இந்தியாவுக்கு வாருங்கள்'' சுற்றுலா ஆண்டாக 1991-ஆம் ஆண்டு கொண்டாடப்படுவதையொட்டி, செங்கை-அண்ணா மாவட்டம் மாமல்லபுரத்தில், பிப்ரவரி 9-ஆம் நாள் முதல் 19-ஆம் நாள் முடிய 11 நாட்கள் வசந்த விழா நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

தமிழ்நாடு சுற்றுலாத்துறை, இந்திய பரத நாட்டியக் கலைஞர்கள் சங்கம் மற்றும் சென்னை கைவினைஞர்கள் அறக்கட்டளை ஆகியன இணைந்து இந்தக் கலை விழாவிற்கு ஏற்பாடு செய்துள்ளன.

இந்த விழாவினை, மேதகு தமிழக ஆளுநர் அவர்களின் ஆலோசகர் திரு. வி. கார்த்திகேயன் அவர்கள் 9-2- 1991 அன்று மாமல்லபுரத்தில் துவக்கி வைத்தார்.

இந்த 11 நாள் வசந்த் விழாவில் நாட்டிய நிகழ்ச்சிகள், கைவினைப் பொருள் கண்காட்சி மற்றும் உணவுப் பொருள் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் 1991- ஆம் ஆண்டினை ''இந்தியாவுக்கு வாருங்கள்'' என்றழைக்கும் சுற்றுலா ஆண்டாக மத்திய அரசு கடைப்பிடிக்கிறது. இதையொட்டி சுற்றுலாப் பயணிகளைக் கவரும் விதத்தில் இந்தியாவின் பல்வேறு இடங்களில் வண்ணமிகு விழாக்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் மாமல்லபுரத்தில் இத்தகைய ஒரு விழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட

விழாவில், தமிழக அரசு செய்தி-சுற்றுலாத் துறைச் செயலாளர் திருமதி ஜெயந்தி சுற்றுலாத்துறை இயக்குநர் திருமதி சிவகாமி தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திரு. பி. செல்வம் செங்கை அண்ணா மாவட்ட ஆட்சித் தலைவர் (பொறுப்பு) திரு. கிருஷ்ணசாமி ராஜீவன் செங்கல்பட்டு நாடாளுமன்ற உறுப்பினர் திரு. காஞ்சி பன்னீர் செல்வம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள்.

விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் செய்தி-சுற்றுலாத் துறைச் செயலாளர் திருமதி ஜெயந்தி அவர்கள் வரவேற்றுப் பேசுகையில், ''இந்தியாவுக்கு வாருங்கள்'' சுற்றுலா ஆண்டையொட்டி வெளிநாட்டுச் சுற்றலாப் பயணிகளை ஈர்க்கும் பொருட்டு ஒவ்வொரு மாநிலமும் இரண்டு விழாக்கள் நடத்த மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. தமிழ்நாட்டில் பல்லவர்காலச் சிற்பங்கள் நிறைந்த மாமல்லபுரத்தில் இத்தகைய ஒரு விழாவுக்கு அரசு ஏற்பாடு செய்துள்ளது. சென்ற ஆண்டைக் காட்டிலும் இவ்வாண்டு 25 சதவிகிதம் கூடுதலாகச் சுற்றுலாப் பயணிகள் மாமல்லபுரம் வருகை புரிவார்களென எதிர்பார்க்கப்படுகிறது. சரித்திரப் புகழ்பெற்ற மாமல்லபுரத்தைத் தமிழகத்தின் கலாச்சாரத் தலைமையிடமாக ஆக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது என்று தெரிவித்தார்.

பதைக் கவனித்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு சரியான தகவல்கள் கொடுக்கவில்லையெனில், சொத்துக்கள் பங்கீட்டின் போதும், கருணை அடிப்படையில் வேலைக்கு விண்ணப்பிக்கும்போதும் குடும்ப ஓய்வூதியம் வாங்கும்போதும் இறந்தவரின் உறவினர்கள் மிகுந்த தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள்.

ஆகவே, பொதுமக்கள் சரியான பிறப்பு, இறப்பு விவரங்கள் கொடுத்தால்தான் பிறப்புச் சான்றிதழோ அல்லது இறப்புச் சான்றிதழோ தவறில்லாமல் கிடைக்க ஏதுவாகும் என்பதனைப் பொதுமக்களுக்கு, இவ்வறிக்கையின் மூலம் தெரிவிக்கப்படுகிறது. பெயர் மற்றும் இதர விவரங்கள் பிறப்பு, இறப்புப் பதிவேட்டில் பதிவு செய்தபின் மாற்றுவதற்கு இயலாது என்பதனையும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு சென்னை மாநகராட்சி பத்திரிகைக் குறிப்பு தெரிவிக்கிறது.

## டெலிவிஷன் மூலம் "ஷாப்பிங்" செய்யலாம்

டெலிவிஷன் ஸ்விட்சைப் போட்டு விட்டு, அதில் தெரியும் நிகழ்ச்சிகளை வெறுமனே பார்த்து ரசித்துக் கொண்டிருந்த காலமெல்லாம் மாலையேறிவிட்டது. பார்த்துக் கொண்டிருக்கும் நிகழ்ச்சிகளில் பார்வையாளர்கள் தங்களுக்குத் தேவையான மாற்றங்களைச் செய்து கொள்ளும் அளவுக்குப் பல புதுமைகள் வந்து விட்டன. வீடியோ கேசட்டுகளும், லேசர் கதிர் வீடியோ டிஸ்க்குகளும் இதற்குப் பயன்படுகின்றன.

"தி டான்ஸ் கனெக்ஷன்" என்னும் புதுமையான கேசட் நடனக்கலை பற்றியதாகும். வீடியோவில் இந்தக் கேசட்டைப் போட்டுவிட்டு, தொலைவிருந்தபடியே இயக்கும் 'ரிமோட் கண்ட்ரோல்' சாதனத்தைக் கையில் வைத்துக் கொண்டால் போதும். டெலிவிஷனில் தெரியும் அந்த நாட்டிய நட்சத்திரங்களை உங்கள் விருப்பம் போல் ஆட்டுவிக்க முடியும். காமெரா கோணத்தை மாற்றவேண்டுமா? குறிப்பிட்ட நடனக்கலைஞரின் முகத்தை 'குளோஸ்-அப்'பில் பார்க்க வேண்டுமா? ரிமோட் கண்ட்ரோல் சாதனத்தின் பொத்தானை அழுத்தினால் போதும். விருப்பம் போலக் காட்சிகள் மாறும்!

டெலிவிஷன் மூலம் 'ஷாப்பிங்' செய்வதற்கு வசதியாகவும் பல புதிய சேவைகள் அமெரிக்காவில் துவக்கப் பட்டுள்ளன.

ஒரு குறிப்பிட்ட பகுதியில் உள்ளவர்கள், தங்கள் டெலிவிஷனில் ஒரு குறிப்பிட்ட அலைவரிசையைத் திருப்பினால், பல்வேறு விதமான பொருட்கள் பற்றிய விவரங்களும், அவற்றின் விலைகளும் பற்றிய தகவல் குறிப்புகள் ஒளி பரப்பாகும். பொதுமக்கள் தங்களுக்கு வேண்டிய பொருட்களைத் தேர்ந்தெடுத்து, தொலைபேசி மூலமாக 'ஆர்டர்' கொடுக்கலாம். அவற்றையெல்லாம் வீட்டிலேயே கொண்டுவந்து டெலிவரி செய்து விடுகிறார்கள்!

பள்ளி மாணவர்களுக்குப் பயன்படக் கூடிய பாடபோதனை தொடர்பான கேசட்டுகளும், குடிப்பழக்கம், போதைப் பழக்கம், புகைப்பழக்கம் ஆகியவற்றின் கேடுகளைச் சித்திரிக்கும் கேசட்டுகளும் கூடப் புதுமையான முறையிலும் எளிதில் மனதில் பதியும் வகையிலும் தயாரிக்கப் பட்டுள்ளன.

இவையெல்லாம் இங்கல்ல, அமெரிக்காவில்!

## நீரிழிவு நோயாளிகளுக்குப் புதுமையான சிகிச்சை

நீரிழிவு நோயாளிகளுக்கு ஒரு இனிப்பான செய்தி! தங்கள் நோயைக் கட்டுப்படுத்துவதற்கு நாள்தோறும் 'இன்சுலின்' ஊசி போட்டுக் கொள்ளும் தொல்லையிலிருந்து அவர்கள் விரைவில் விடுபட்டுவிட முடியும் என்னும் நம்பிக்கை தோன்றியுள்ளது.

'சர்க்கரை வியாதி' என்று அழைக்கப்படும் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவருக்கு இன்சுலினை இயற்கையாகவே அவரது உடலில் ஊறச் செய்வதற்கு, அமெரிக்க மருத்துவர் ஒரு புதிய முறையைக் கையாண்டுள்ளார்.

ஆரோக்கியமான நபர் ஒருவர் தானமாகக் கொடுத்த கணையத்திலிருந்து 'ஐலட் செல்ஸ்' (Islet Cells) எனப்படும் செல்களை ஓர் அறுவைச் சிகிச்சை மூலம் அவர் தனியே பிரித்தெடுத்தார். இவை இன்சுலினை உற்பத்தி செய்யும் செல்களாகும். இந்த செல்களைத் தூய்மை செய்து, அவற்றை நீரிழிவு நோயாளிகள் சிலருக்கு ஊசி மூலம் அவர் செலுத்தினார். இந்த செல்கள் செலுத்தப்பட்ட நீரிழிவு நோயாளிகள் ஒன்பது பேரில், ஐவருக்கு நல்ல குணம் ஏற்பட்டது. இவர்கள் நாள் தோறும் 'இன்சுலின்' ஊசி போட்டுக் கொள்ள வேண்டிய அவசியம் குறைந்துவிட்டது.

இந்த நோயாளிகளின் உடலில் செலுத்தப்பட்ட செல்கள் அவர்களது கல்லீரலை அடைந்து அங்கே இன்சுலினை உற்பத்தி செய்யத் துவங்கும். பரிசோதனை முறையில் நடத்தப்பட்ட இந்த மாற்று அறுவைச் சிகிச்சை வெற்றி பெற்றுள்ளது.

—அமெரிக்கத் தகவல் நிலையம்



# சிறுசேமிப்புத் துறை




எதிர்பாரா இன்னல்கள் ஏற்படுமுன் சேமியுங்கள். வரி செலுத்துவதைத் திட்டமிட்டு, இன்ஷுரன்ஸ் பாதுகாப்பும் பெறுங்கள். இன்றே கீழ்க்கண்ட சிறுசேமிப்புத் திட்டத்தில் ரூ.1,000/-ம் அதற்குமேலும் முதலீடு செய்து தனிநபர் விபத்து இன்ஷுரன்ஸ் பாலிசியைப் பெறுங்கள்.

**கீழ்க்கண்ட திட்டங்களின்கீழ் தனிநபர் விபத்து இன்ஷுரன்ஸ் பாதுகாப்பு கிடைக்கும்:**

- கிசான் விகாஸ் பத்திரம்
- தேசிய சேமிப்புத் திட்டம்
- அஞ்சலக மாதாந்திர வருமானத்திட்டம்
- அரசுப்பணியாளர்களுக்கான டெபாசிட் திட்டம் 1989
- தேசிய சேமிப்புப்பத்திரம் 8வது வெளியீடு
- 15 வருட பொது சேமநலநிதி
- அஞ்சலக குறித்தகால டெபாசிட்

**வருமான வரி விலக்குப் பெற தேசிய சேமிப்பில் முதலீடு செய்வீர்**

| வசதிகள் | தேசிய சேமிப்பு பத்திரம் 8-வது வெளியீடு | பொதுசேம நலநிதி | தேசிய சேமிப்பு திட்டம் |
|---|---|---|---|
| வட்டி | 12% | 12% | 11% |
| முதலீட்டுக்கு வருமான வரிவிலக்கு | ரூ.50,000 பிரிவு 88-ன்கீழ் | ரூ.50,000 பிரிவு 88-ன்கீழ் | ரூ.40,000 பிரிவு 80CCA-ன் கீழ் |
| வட்டிக்கு வருமான வரிவிலக்கு | வருமான வரிச் சட்டம் பிரிவு 88-ன்கீழ் | வருமான வரியில் இருந்து வட்டிக்கு முழுவிலக்கு | வட்டி தொகை சேரும்போது வருமான வரி விலக்கு |
| செல்வ வரி | ரூ.5,00,000 வரை விலக்கு | முழுவிலக்கு | முழுவிலக்கு |
| டெபாசிட்டுகளுக்கான வரம்பு | வரம்பு கிடையாது | ரூ.60,000 | ரூ.40,000 |

**தமிழக அரசின் சிறப்பு சலுகைகள்:**

- ஒவ்வொரு ரூ.500/- முதலீட்டிற்கும் ஒரு இலவச பரிசு கூப்பன் மூலம் 262 பரிசுகளில் ஒன்றைப் பெறும் வாய்ப்பு.
- தமிழ்நாட்டில் குறிப்பிட்ட சில திட்டத்தில் முதலீடு செய்யும் ஒவ்வொரு ரூ.1,000/- முதலீட்டிற்கும் 1% வரை ஊக்கத்தொகை.
- 1.1.91 முதல் 31.3.91 வரை தமிழ்நாட்டில் குறிப்பிட்ட திட்டங்களில் முதலீடு செய்யும் ஒவ்வொரு ரூ. 1000/- முதலீட்டிற்கும் தனிநபர் விபத்து இன்ஷுரன்ஸ் வசதி. பிரீமியத்தை தமிழக அரசே செலுத்துகிறது.

DIPR/1.89/MS/91/ARIES

**இலவச தனிநபர் விபத்து காப்புறுதி திட்டம் — அதிகபட்ச நஷ்ட ஈடு ரூ. 50,000/-**

**கூடுதல் சலுகைகள்:**

- இந்திய அரசின் முழுப்பாதுகாப்பு
- சொத்து வரிவிலக்கு
- உங்கள் குழந்தைகள் பெயரில் முதலீடு செய்து வருமான வரிவிலக்கு பெறுங்கள்.

யுனைடெட் இந்தியா இன்ஷுரன்ஸ் நிறுவனம், சென்னை.
தனிநபர் விபத்து இன்ஷுரன்ஸ் பாலிசி கிடைக்குமிடம்:
அனைத்து மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் மற்றும்

இயக்குநர்
**சிறுசேமிப்புத்துறை**
143, அண்ணாசாலை, சென்னை-600 002.
தொலைபேசி: 840223/846209.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. பி. செல்வம் அவர்கள் பேசுகையில், ''தமிழ்நாட்டில் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் விழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு நாட்டியச் சிறப்பு உண்டு. அந்த நாட்டியச் சிறப்புகளை ஒரே இடத்தில் கண்டு களிக்கும் வகையில் மாமல்லபுரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது'' என்று கூறினார்.

செங்கல்பட்டு நாடாளுமன்ற உறுப்பினர் திரு. காஞ்சி பன்னீர் செல்வம் அவர்கள் பேசுகையில், ''மாமல்லபுரத்திற்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளுக்கு வசதிகள் செய்துதரப்பட வேண்டும், சென்னையிலிருந்து மாமல்லபுரத்திற்குத் துரித ரயில் விட ஏற்பாடு செய்யப்பட வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

மேதகு ஆளுநரின் ஆலோசகர் திரு. வி. கார்த்திகேயன் இ.ஆ.ப. (ஓய்வு) அவர்கள் விழாவினைத் தொடங்கி வைத்துப் பேசுகையில், இந்த விழா ''இந்தியாவுக்கு வாருங்கள்'', சுற்றுலா ஆண்டையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இத்தகைய விழாக்களினால், அந்நியச் செலாவணி அதிகரிப்பதுடன், நமது நாட்டின் கலைச் செல்வங்களை அயல் நாட்டினர் காணும் வாய்ப்பினையும் உண்டாக்கும்.

> ● நல்ல எண்ணங்களைத் தூவினால் தான் அவை நல்ல பலனைத் தரும். பகுத்தறிவால் பண்படாத எந்த உள்ளத்தில் நல்லெண்ணத்தை விதைத்தாலும் அது நல்ல விளைவைத் தராது.
>
> —அறிஞர் அண்ணா

''உலகத்திலேயே வேறெங்கும் இல்லாத அற்புதமான கலைப்படைப்புகள் நமது நாட்டில் உள்ளன. மாமல்லபுரத்தில் ஒரே பாறையைக் குடைந்து பலவிதமான சிற்பங்கள் நுண்ணிய முறையில் செதுக்கப்பட்டுள்ளன. பல்லவர் காலத்தில் இந்தப்பகுதி பெரிய துறைமுகமாக இருந்தது. பின்னர் சரியாகப் பராமரிக்கப்படாததால் அது அழிந்தது. இப்பொழுது இருக்கும் கடற்கரைக் கோயிலையாவது நாம் காப்பாற்ற வேண்டும்.

''நான் இந்தியன் என்று சொல்லும் எண்ணம் இன்னும் வரவில்லை. எல்லோரும் இந்தியர் என்ற எண்ணத்தை உருவாக்குவதில் எல்லோரும் பாடுபட வேண்டும். இதற்கு இத்தகைய கலை நிகழ்ச்சிகள் பெரிதும் உதவுகின்றன'' என்று கூறினார்.

விழா முடிவில், சுற்றுலாத்துறை இயக்குநர் திருமதி. சிவகாமி நன்றி கூறினார். அப்போது அவர் பேசுகையில், ''இந்த விழாவின் மூலம் தமிழகத்திற்கும், மாமல்லபுரத்திற்கும் அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் வருகை புரிவார்கள்'' என்றார்.

சென்னை கைவினைஞர்கள் அறக்கட்டளையின் தலைவர் திருமதி டெபோரா தியாகராசன், இந்திய பரத நாட்டியக் கலைஞர்கள் சங்கத்தின் துணைத் தலைவர் திருமதி லட்சுமி விஸ்வநாதன் ஆகியோரும் விழாவில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.

விழாவின் முடிவில் திருமதி லட்சுமி விஸ்வநாதன் மற்றும் தனஞ்செயன் குழுவினரின் பரத நாட்டியம் நடைபெற்றது. விழாவினையொட்டி 'மைசூர் லாம்ப்ஸ்' நிறுவனத்தார் உதவியுடன் அர்ச்சுணன் தபசு சிற்பம், பல வண்ண மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

**நிகழ்ச்சித் தொகுப்பு: ஜே. சந்திரன்.**







# சென்னை மாநகராட்சிச் செய்திகள்

## துப்புரவுப் பணி தீவிரம்

சென்னை மாநகராட்சியின் குப்பை கொட்டும் தளங்கள் வட சென்னையில் கொடுங்கையூரிலும், தென் சென்னையில் பெருங்குடியிலும் உள்ளன. தென்சென்னையில் துணை ஆணையாளர் டாக்டர் கே. அருள்மொழி, உதவி ஆணையாளர்கள் திரு டி. நாகசுந்தரம், திரு பி. இளங்கோ, ஆகியோரும், வடசென்னையில் நகரப் பொறியாளர் திரு எ.ஜே. லோனப்பன் உதவி ஆணையாளர் திரு பி. சோணை, மக்கள் தொடர்பு அலுவலர் திரு நி.வே. பாலு, ஆகியோரும் திடீர் சோதனையிட்டு குப்பை கொட்டும் தளத்திற்கு வரும் லாரிகள் குப்பையை முழு அளவு கொண்டு வருகின்றனவா, அவற்றின் மீது குப்பை பறந்து சிதறாமல் இருக்க தார்ப்பாலின் போர்வை போர்த்தப்பட்டுள்ளனவா எனப் பரிசோதித்தனர்.

மொத்தம் 95 லாரிகள் சோதனையிடப்பட்டன. 70 லாரிகள் முழு அளவு குப்பையை அள்ளி வந்தன. 15 லாரிகள் 3/4 அளவும் 10 லாரிகள் 1/2 அளவும் குப்பை அள்ளி வந்தன. 14 லாரிகள் தார்ப்பாலினால் மூடப்படாமல் இருந்தன. கடமை தவறிய 39 ஓட்டுநர் மீது மாநகராட்சி ஒழுங்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

## பிறப்பு இறப்புப் பதிவேடு

மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளின் பிறப்புப் பதிவு மருத்துவமனை அதிகாரிகளால் பிறப்புப் பதிவேட்டில் பதிவு செய்யப்படுகிறது. மகப்பேற்றுக்காகத் தாயை மருத்துவமனையில் சேர்க்கும் நேரத்தில், தவறான தகவல்களைக் கொடுத்தால் பிறப்புப் பதிவு செய்யப்படும் போதும் தவறுதலான தகவல் பதிய ஏதுவாகிறது. இத்தகைய தவறுதலான பதிவினால் பிறப்புச் சான்றிதழிலும் தவறு நேர்ந்து, பெற்றோர்களுக்கு மிகுந்த சிரமங்களைக் கொடுக்கிறது. ஆகவே, பொது மக்கள் தாயை மகப்பேற்றுக்காக அரசு மருத்துவமனையிலோ, மாநகராட்சி நலவாழ்வு மையத்திலோ, தனியார் மருத்துவ மனையிலோ சேர்க்கும்போது, தகப்பனார் பெயர், தாயின் பெயர், சரியான முகவரி போன்ற விவரங்களைத் தவறு இல்லாமல் தெரிவிக்க வேண்டும்.

உடல் நலன் குன்றியவர்களை மருத்துவமனையில் மருத்துவப் பரிசோதனைக்கு அனுமதிக்கும்போதும், பொதுமக்கள் சரியான பெயர், மற்றும் மேற்கூறப்பட்ட இதரத் தகவல்களையும் தவறு இல்லாமல் கொடுப்பதில் மிகுந்த கவனம் செலுத்தக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

சாலை விபத்தில் உயிரிழந்தவரின் உறவினர்கள், காவல்துறை அதிகாரிகளுக்கு, இறந்தவரின் பெயரினைத் தவறில்லாமல் தெரிவித்தால்தான், காவல்துறையின் இறப்பு அறிக்கையிலும் சரியான தகவல்கள் தருவதற்கு ஏதுவாக இருக்கும்.

வீட்டில் நேரிடும் இறப்பிற்கான, இறப்பு அறிவிப்பினை மருத்துவச் சான்றிதழுடன் பெறுவதற்கு, தனியார் மற்றும் மாநகராட்சி இடுகாடுகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இறப்பினை அறிவிக்கும்போது இறந்தவரின் உறவினர்கள் மற்றும் வாரிசுதாரர்கள் இறந்தவரின் சரியான பெயர், முறையான முகவரி, தந்தை, கணவர் பெயர்கள் சரிவர உள்ளனவா என்

வளமான வாழ்வுக்கு
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ்
அளிக்கும்
விஜய்
உரங்கள்




MTA 7343


பொறுப்பாசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927


எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.



மேதகு ஆளுநர் அவர்களின் தலைமையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை உயர் அதிகாரிகள் மாநாடு, சென்னை தலைமைச் செயலகத்திலுள்ள நாமக்கல் கவிஞர் மாளிகை மாநாட்டு அரங்கத்தில் நடை பெற்றது (16.2.91).

# இந்த இதழில்...


தமிழக ஆளுநர் பதவியேற்பு ... 2

அமைதி நிலவிட அனைவரும்
ஒன்றுபட்டு உழைத்திடுவீர்!
—மேதகு ஆளுநர் உரை ... 4

குடிநீர் வழங்கலும்
கழிவுநீர் அகற்றலும் ... 6

பட்டுப் பரிமாற்றகம் ... 9

மரம் வளர்ப்போம்
வளம் பெறுவோம் (கவிதை) ... 11

அரிக்கமேட்டில் மீண்டும் அகழ்வாய்வு ... 12

ஆடற்கலை விளம்பும் ஆலயங்கள் ... 16

விடுவிக்கப்பட்ட தொழிலாளர்க்கு
விடிவு காலம் ... 20

ஆதிதிராவிடர் நலம் பெற
அரிய திட்டங்கள் ... 21

வளரும் வேளாண்மை ... 22

பாவாணரும் பாவேந்தரும் ... 25

நிறம் மாறாமல் பற்களைப்
பாதுகாக்கும் வழிமுறைகள் ... 28





தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2022

மாசித் திங்கள் - 17

மலர்:21 இதழ்:17

1-3-1991



பதிவு எண் . M. 8676
Licence No. TN/MS(C)/PP-23



# படமும் செய்தியும்



மேதகு ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்களை, பெல்ஜியம் நாட்டுத் தூதர் திரு. ஏ. கேமியெல் கிரையல் அவர்கள் ஆளுநர் மாளிகையில் சந்தித்தார் (9.2.'91).



மேதகு ஆளுநர் அவர்களின் ஆலோசகர் திரு. வி.கார்த்திகேயன் அவர்கள் தமிழ்நாடு அரசு மருத்துவ அறிவியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் (தாமரை) முதலாம் ஆண்டு நிறைவு விழா மற்றும் மருத்துவக் கல்லூரி பரிசளிப்பு விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பரிசுகள் வழங்கிச் சிறப்புரையாற்றினார் (4.2.'91).



சென்னையில் நடைபெறும் இந்தியச் சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியில், நடைபெற்ற நாய்கள் கண்காட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த நாய்களை வளர்த்தவர்களுக்கு, செய்தி மற்றும் சுற்றுலாத்துறைச் செயலாளர் திருமதி ஜெயந்தி, அவர்கள் பரிசுகள் வழங்கினார் (3.2.'91).



மேதகு ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள் தலைமைச் செயலகம் சென்று அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். ஆளுநரின் ஆலோசகர் திரு. வி.கார்த்திகேயன் மற்றும் தலைமைச் செயலாளர் திரு. டி.வி.அந்தோணி ஆகியோர் உடனிருந்தனர் (1.2.'91).

மாண்புமிகு மத்திய உள்துறை ராஜாங்க அமைச்சர் திரு. சுபோத்காந்த் சகாய், மேதகு ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா ஆகியோர் தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு நிலை குறித்து ஆளுநரின் ஆலோசகர்கள் திரு. வி.கார்த்திகேயன், திரு. வி.ராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் திரு. டி.வி.அந்தோணி, மாநில காவல்துறைத் தலைவர் திரு. பி.பி.ரங்கசாமி மற்றும் காவல்துறை உயர் அதிகாரிகளுடன் ஆளுநரின் மாளிகையில் ஆலோசனை நடத்தினார்கள் (11.2.'91).





# தமிழக ஆளுநர் பதவியேற்பு



தமிழக ஆளுநராக திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் பதவி ஏற்றார். அவருக்கு சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி திரு. ஆனந்த் அவர்கள் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். (15.2.1991)

1957-72: ராஞ்சி பல்கலைக் கழக செனட் உறுப்பினர்.

1967: பீகார் மாநிலக் கூட்டுறவு விற்பனைச் சங்க இயக்குநர்.

1974-75: பீகார் மாநிலக் கூட்டுறவு வீடுகட்ட நிதி வழங்கும் சங்கத்தின் தலைவர்.

1974: பீகார் மாநிலக் கடன் மற்றும் முதலீட்டு நிறுவனத் தலைவர்.

1969: பீகார் சட்டமன்றக் குடகு அணை நிர்மன் சமிதித் தலைவர்.
பீகார் சட்டமன்ற மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்.

1967-69, 1969-72, 1972-76: பீகார் சட்டமன்ற உறுப்பினர்.

மார்ச்-ஜூன் 1971: பீகார் மாநிலக் கல்வி இணை அமைச்சர்.

1972 மார்ச்-1973: பீகார் மாநிலப் புவியியல் சுரங்கத் துறை இணையமைச்சர்.

நவம்பர் 1973 - ஏப்ரல் 1974: பீகார் மாநில உணவு மற்றும் வாணிபத் துறையின் அமைச்சர்.

1967 பிப்ரவரி - 1984: அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர்.

## மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங்

### (வாழ்க்கைக் குறிப்பு)

தந்தை பெயர்: திரு ராதா பிரசாத். பிறந்த நாள்: 13.7.1933 ஊர்: பலாமு (பீகார்)

கல்வி: பி.ஏ., (பனாரஸ் பல்கலைக் கழகம்)

1953-54 பனாரஸ் இந்து பல்கலைக் கழகத்தில் இளைஞர் காங்கிரஸ் அமைப்பாளர், செயலர், பாரத சேவக் சமாஜ் (பனாரஸ் இந்து பல்கலைக் கழகக் கிளை), பஞ்சாயத்து ராஜ் அமைப்புகள் பலாமு மாவட்டத்தில் ஏற்படப் பெரிதும் பாடு பட்டார்.

1958-59: பலாமு மாவட்டக் காங்கிரஸ் பொதுச்செயலர், மற்றும் பிரதேஷ் (மாநில) காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர்.

தமிழக ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் அணி வகுப்பு மரியாதையைப் பார்வையிடுகிறார். (15.2.1991)





1978 பிப்ரவரி - 1984: காங்கிரஸ் செயற் குழு, மற்றும் பாராளுமன்றக் கமிட்டியின் சிறப்பு அழைப்பினர்.

1976-1984: ராஜ்ய சபை உறுப்பினர்.

1977: ராஜ்ய சபைக் காங்கிரஸ் பாராளு மன்றக் கட்சியின் துணைக் கொறடா, கொறடா.

1980-82: பாராளுமன்ற விவகார அமைச்சர்.

1980: தொலைத் தொடர்புத்துறை அமைச்ச ராகக்கூடுதல் பொறுப்பு.

அக்டோபர் 1980: தொழிலாளர் நல அமைச்சர்.

20 அக்டோபர் 1980 முதல்: வீட்டுவசதித் துறை அமைச்சர். 9-வது ஆசிய விளையாட்டுக் காகக் கட்டடங்கள் கட்டி சாதனை புரிந்தார்.

ஜனவரி, பிப்ரவரி 1983: உணவு மற்றும் பொது விநியோகத்துறை அமைச்சர்.

1984: அசாம் மற்றும் மேகாலயா மாநில ஆளுநர் - அசாமில் நடைபெற்ற போராட்டக் காலத்தில் அசாம் ஒப்பந்தம் ஏற்பட்டதில் முக்கியப் பங்கு வகித்தார்.

31.5.1985 - 17.7.86: இருமுறை சிக்கிம் மாநில ஆளுநராக இருந்தார்.

1987: அருணாச்சலப் பிரதேச மாநில ஆளுநர்.

பயணம் செய்த வெளிநாடுகள்: நேபாளம் ஹாங்காங், பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா, சிங்கப்பூர், ஜப்பான், ஆஸ்திரேலியா, குவைத், கிரீஸ், பிரான்ஸ், பெல்ஜியம், ஹாலந்து, இங்கிலாந்து, ஸ்காட்லேண்ட், அமெரிக்கா.

பொழுதுபோக்கு: குதிரைச் சவாரி, இசை, நாட்டியம் மற்றும் நாடகம் குறிப்பாக மலைவாழ் மக்களின் கிராமிய நடனங்கள்.

## சென்னை மாநகரில் குடிநீர் இணைப்பு விரிவாக்கும் திட்டம்

சென்னைக் குடிநீர் வாரியம் உலக வங்கி உதவியுடன் ரூபாய் 150.80 கோடி மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டுப் பணிகளையும், கழிவு நீர கற்றுப் பணிகளையும் நிறைவேற்றி வருகின்றது. இத்திட்டம் 1993-94-ஆம் ஆண்டில் நிறைவு பெறும். இத்திட்டத்தின் கீழ் இதுவரை சுமார் ரூபாய் 50 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது.

சென்னைக் குடிநீர் வாரியம் எடுத்துள்ள கணக்கின்படி குடிநீர்க் குழாய் இணைப்புகள்



இல்லாத 350 தெருக்களுக்கு, சென்னை நகரில் குழாய்கள் மூலமாகக் குடிநீர் அளிக்கப்பட வேண்டும் எனத் தெரிய வந்துள்ளது. இப்பகுதி களைச் சேர்ந்த பொதுமக்களிடமிருந்தும் குடிநீர் வசதி கேட்டுக் கோரிக்கைகள் வந்த வண்ணம் உள்ளன.

அரசு இதனைக் கருத்தில் கொண்டு, குடிநீர் இணைப்பு வசதி இல்லாத பகுதிகளுக்குக் குடிநீர் இணைப்பு வசதி அளிப்பதற்காக உலக வங்கித் திட்டத்தின் கீழ் ரூபாய் 4 கோடி மதிப்பீட்டிலான திட்டத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டம், சென்னைக் குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தினால் நடப்பு ஆண்டிலேயே எடுத்துக் கொள்ளப்படும்.



## ஆரணியாறு ஆற்றின் குறுக்கே நிரந்தர அணைக்கட்டு

கிருஷ்ணா நதி நீர்க் கால்வாய் குறுக்கிடும் ஆரணியாற்றின் மேல் பகுதியில் ஒரு நிரந்தர அணைக்கட்டு கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கி யுள்ளது.

ஆண்டுதோறும் வடகிழக்குப் பருவ மழை காலத்தில் ஏற்படும் வெள்ளப்பெருக்கு, ஊத்துக் கோட்டையில் அமைக்கப்பட்டுள்ள கிருஷ்ணா நதிநீர்க் கால்வாயின் தலைமதகிலிருந்து சென்னை நகருக்குக் குடிநீர் வழங்கும் நீர்த் தேக்கங்களுக்கு இந்த அணைக்கட்டு வழியாகத் திருப்பி விடப் படும்.

கிருஷ்ணா நதியிலிருந்து நீரைக் கொண்டு வரப்பயன்படுத்தாமல் இருக்கும் அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மூன்று மாதங்களில் இந்த அணைக்கட்டிலிருந்து உபரி வெள்ளப் பெருக்கு நீர், கிருஷ்ணா நதி நீர்க் கால்வாய் வழியாகக் கொண்டு வரப்படும். சுமார் 400 மில்லியன் கன அடி வெள்ளப்பெருக்கு நீர் கடலில் கலந்து வீணாவதை இந்த அணைக்கட்டு தடுத்து நிறுத்தப் பயன்படும்.

150 மீட்டர் நீளமும், ஆற்றுப்படுகையிலிருந்து 1.5 மீட்டர் உயரமும் கொண்டதாக இந்த அணைக்கட்டு அமையும். இதன் மொத்த மதிப்பீடு ரூ.1 கோடி ஆகும்.

# குடிநீர் வழங்குதலும் கழிவுநீர் அகற்றுதலும்

தமிழ்நாட்டில் குடிநீர் வழங்கல் நிலவரம் 1.4.1990-ன் படி கீழ்க் கண்டவாறு இருந்தது:

முழுதும் குடிநீர் வழங்கப்படும் குடியிருப்புகள் 26,847. ஓரளவுக்குக் குடிநீர் வழங்கப்படும் குடியிருப்புகள் 44,431. குடிநீர் வழங்கப்படாத குடியிருப்புகள் 5,885. மொத்தக் குடியிருப்புகள் 77,163.

1990-91-ஆம் ஆண்டுக்கான இலக்கு ரூ.52.26 கோடி பட்ஜெட் ஒதுக்கீடு பெற்றவை 5,200 குடியிருப்புகளாகும். 1990-டிசம்பர் இறுதிவரை இதில் 3,110 குடியிருப்புகள் குடிநீர் வசதி பெற்றுள்ளன. எஞ்சியவை 1991-மார்ச் மாதத்திற்குள் குடிநீர் வசதி பெறும். 20 அம்சத் திட்டத்தின் கீழ், ஆண்டு இலக்கான 2,500 மக்கள் தொகைக் கணக்கெடுப்புக் குடியிருப்புகளில் 2,125 குடியிருப்புகள் குடிநீர் வசதி அளிக்கப்பட்டுள்ளன.

**ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி:**

1990-91-ஆம் ஆண்டில் 3,000 தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினக் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதியளிக்கத் திட்டமிடப்பட்டது. இதில் 1990-ஆம் ஆண்டு டிசம்பர் வரை அடைந்துள்ள முன்னேற்றம் யாதெனில், 934 ஆதிதிராவிடர் குடியிருப்புகள் ஓரளவுக்குக் குடிநீர் வசதியளிக்கப்பட்டுள்ளன; எஞ்சிய 2,066 இன்னும் அளிக்கப்படவில்லை.

எந்த வகையிலும் குடிநீர் வசதி பெற்றிராத 5,885 குடியிருப்புகளுக்கு 1991-92-ஆம் ஆண்டில், ஏதாவது ஒரு வகையில் குடிநீர் வசதி ஏற்படுத்தித்தர திட்டமிடப்பட்டுள்ளது. கூடுதலாக, ரூ.5 கோடி செலவில் ஒரு சிறப்பு முயற்சியாக 1,500 தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்கள் குடியிருப்புகள் பணிக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**வறட்சி நிவாரணத் திட்டம்:**

1990-91-ஆம் ஆண்டில், ரூ.7.5 கோடி செலவில் 3,000 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டன. நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் ரூ.3 கோடி செலவில் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் 10 நகராட்சிகளும், 13 பேரூராட்சிகளும் பயன் பெற்றுள்ளன. சேலம் மற்றும் தர்மபுரி மாவட்டங்களிலும் தற்போதுள்ள வறட்சி நிலையைக் கருத்திற்கொண்டு, 180 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கவும், ஏனைய நிவாரணப் பணிகளுக்காகவும் அரசு ஒரு கோடி ரூபாய் அனுமதித்துள்ளது.



**நகர்ப்புறக் குடிநீர் விநியோகம்:**

4 நகராட்சிகள், 3 நகரியங்கள் மற்றும் 171 பேரூராட்சிகள் ஆக 178 நகரங்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டங்கள் தற்போது செயல்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு, 18 புதிய குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது ரூ.13.52 கோடி மொத்தச் செலவில் 15 நகர்ப்புறக் குடிநீர் வழங்கும் திட்டங்



# திருவண்ணாமலை நகராட்சியில் சலவைத்துறை

உள்ளாட்சிகளுக்குச் சலவைத்துறை கட்ட நிதியுதவி அளிக்கும் திட்டத்தின்கீழ், நடப்பாண்டு 1990-91-இல் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திலுள்ள திருவண்ணாமலை நகராட்சியில் ஒரு சலவைத் துறையை ரூ.1,35,000 மதிப்பீட்டில் கட்டுவதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

இதில் ரூ.1,01,250 அரசு மானியமாக வழங்க அரசு ஆணைப் பிறப்பித்துள்ளது. இதனால் 250 சலவையாளர் குடும்பங்கள் பயன்பெறுகின்றன.

களுக்கு அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது.

**உலக வங்கித் திட்டம்**

இந்தத் திட்டம் ரூ.321.86 கோடி செலவில் மீண்டும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதுவரை 29 சிறு நகரங்களில் குடிநீர் வழங்கு திட்டமும் 14 நகராட்சிகளில் குறைந்த செலவிலான சுகாதாரத் திட்டமும் நிறைவு பெற்றுள்ளன.

**சென்னைப் பெருநகர்க் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்:**

9.11.90-லிருந்து சென்னை மாநகரில் நாள் ஒன்றுக்கு 50 மில்லியன் காலன் வீதம் மீண்டும் நாள்தோறும் குடிநீர் வழங்கப்படுகிறது. கிருஷ்ணா நதியிலிருந்து, தண்ணீர் கொண்டுவரும் சென்னைக் குடிநீர் வழங்கும் திட்டத்தின் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன; 1991-92-ஆம் ஆண்டில் இப்பணிகள் போதுமான அளவை எட்டும். இத்திட்டம் நிறைவுபெற்ற பின், தற்போதுள்ள ஓர் ஆளுக்கு 70 லிட்டர் என்பது 100 லிட்டராக உயர்த்தப்படும். சென்னை மாநகர் முழுவதும் கழிவுநீர்க் கால்வாய் வசதிபெறும். 1991-92-ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு ரூ.47.83 கோடி ஆகும்.

நாள்தோறும் குடிநீர் வழங்கும் நிலை ஏற்பட்ட பின்னரும், ஒரு சில மேம்பாட்டுத் திட்டங்களை நிறைவேற்றிய பின்னரும், ஏற்கெனவே குடிநீர் வசதி ஒழுங்காகப்பெறாது குழாய்கள் பழுதடைந்த நிலையிருந்த 1,210 வீதிகள் தற்போது 88 ஆகக் குறைந்துள்ளன. இப்போது இவ்வாறு பழுதடைந்த நிலைபெற்ற பகுதிகளில் குடிநீர் வாரியம் 1,775 தண்ணீர் லாரிகளின் மூலம் குடிநீர் வழங்குகிறது.

**தனியார் வீதிகளில் கழிவுநீர்க் கால்வாய்கள் அமைத்தல்:**

658 தனியார் வீதிகளுக்கு ரூ.6.58 கோடி செலவில் கழிவுநீர் கால்வாய்கள் அமைக்கும் பணிகளுக்கு அரசு அண்மையில் நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம் 1991-ஆம்,92-ஆம் ஆண்டில் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது 3.5 இலட்சம் மக்களுக்குப் பயன் அளிக்கும்.

**ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்குக் கழிவுநீர்க் கால்வாய் வசதி:**

33 ஆதி-ஆந்திரர்கள் குடியிருப்புகளுக்குக் கழிவுநீர்க் கால்வாய் வசதியளிப்பதாக அரசு 1990-91-இல் ரூ.1 கோடி அனுமதித்துள்ளது. 1991 மார்ச் மாதத்தில் இப்பணிகள் முடிக்கப்படும்.

ரூ.234 இலட்சம் செலவில் எம்.ஜி.ஆர். நகரில் கழிவுநீர்க் கால்வாய் அமைக்கும் பணி துவங்கப்பட்டுள்ளது. இது 1991 ஜூலை மாதத்தில் முடிக்கப்படும். இத்திட்டம் 98 வீதிகளில் நிறைவேற்றப்பட்டு, 35,000 மக்கள் பயன் பெறுவர். ரூ.521 இலட்சம் செலவில் சாலிகிராமத்தில் கழிவுநீர்க் கால்வாய் அமைக்கும் பணி துவங்கப்பட்டுள்ளது. இது 1991 ஆகஸ்ட் மாதம் முடிக்கப்படும். இத்திட்டம் 231 வீதிகளில் நிறைவேற்றப்பட்டு, 83,000 மக்கள் பயனடைவர்.

**கழிவுநீர்க் கால்வாய் மேம்படுத்துதல்:**

ரூ.5.7 கோடி செலவில் கழிவுநீர்க் கால்வாய்களை மேம்படுத்தும் சிறப்புத் திட்டங்களுக்கு அரசு ஒப்புதலளித்துள்ளது. இந்தத் தொகை பழுதடைந்த கால்வாய்களைச் சீரமைக்கவும், கழிவுநீர் அகற்று நிலையங்களுக்கும், கழிவுநீர்க் கால்வாய்களைத் தூய்மைப்படுத்தும் நிலையங்களுக்கும் செலவிடப்படும். 6 நவீன கழிவுநீர்க் கால்வாய்களைத் தூய்மைப்படுத்தும் இயந்திரங்கள் மிகவும் தூய்மைப்படுத்தும் இயந்திரங்கள், கால்வாய் முடிவின் கீழ் தூய்மைப்படுத்தும் இயந்திரங்கள் போன்றவற்றில் 10 செட்டுகள் வாங்கப்படும்.

**சேற்றை அகற்றும் முறை மேம்பாடு:**

14 முக்கியக் கழிவுநீரகற்று நிலையங்களும், 72 நிலையங்களில் தண்ணீரைச் செலுத்தும் இயந்திரங்களும் 30 நிலையங்களில் சேற்றினை அகற்றும் இயந்திரங்களும் சீரமைக்கும் பணி மேற்கொள்ளப்படும். கழிவுநீர்க் கால்வாய்கள் நிரம்பி வழிவதையும், கால்வாய்களில் அடைப்புகள் ஏற்படுவதையும் இது கட்டுப்படுத்தும்.

மீஞ்சூர் கிணற்றுப் பகுதியில், 8 கி.மீ. தூரத்திற்குக் கடல்நீர் உட்புகுந்து கிணற்றுகளை அசுத்தப்படுத்தியுள்ள. கிணறுகளுக்குள் நல்ல நீரைச் செலுத்துவதன் மூலம் மீண்டும் நல்ல நிலைக்குக் கொண்டு வரும் பணியைக் குடிநீர் வாரியம் மேற்கொண்டுள்ளது. இதன் மூலம் கடல் நீர் மேலும் உட்புகாமல் தடுப்பு ஒன்று உருவாக்கப்படுகிறது. இத்திட்டம் ரூ.2.8 கோடி செலவில் இன்னும் 10 மாதக் காலத்தில் முடிவு பெறும்.

# அமைதி நிலவிட அனைவரும் ஒன்றுபட்டு உழைத்திடுவீர்!

மேதகு ஆளுநர்
**திரு பீஷ்ம நாராயண் சிங்**



சட்டம் ஒழுங்கு பிரச்னை பெரிய அளவில் உருவாகாத வண்ணம் மாநிலத்தைத் திறமையாக நிர்வகிப்பதில் பெயர் பெற்றது தமிழ்நாடு.

தமிழ்த் தீவிரவாதிகள் குறிப்பாக விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் கவலை அளிப்பதாக உள்ளன. இலங்கையிலிருந்து வந்துள்ள ஒரு இலட்சம் அகதிகளுக்கு உணவு, தங்குமிடம் மற்றும் மருத்துவ வசதிகள் நாம் தொடர்ந்து வழங்க இருக்கிறோம். அதே நேரத்தில் அவர்களது தீவிர வாதத்தை முளையிலேயே கிள்ளியெறிய வேண்டும். இது நம் மாநிலத்தில் சட்டம், ஒழுங்கு மற்றும் உயிர்களுக்கும், சொத்துக்களுக்கும் பாதுகாப்பு அளிக்கும் பிரச்னை ஆகும்.

தீவிரவாதிகளின் நடவடிக்கைகளை ஒடுக்க சமீபகாலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. இந்தத் தீவிரவாத நடவடிக்கைகள் நம் மாநிலச் சட்டம் மற்றும் ஒழுங்கிற்குப் பங்கம் விளைவிப்பதாக இருக்காமல் கவனித்துக்கொள்ள வேண்டியது மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் காவல் துறைக் கண்காணிப்பாளர்களின் கடமையாகும்.

இந்தத் தீவிரவாதிகள் கடத்தல் ஆயுதங்களை விற்பனை செய்தல், சட்டவிரோதமான ஒயர்லஸ் மற்றும் தகவல் தொடர்புச் சாதனங்களைப் பயன்படுத்தித் தமிழ்நாட்டு மக்களின் பாதுகாப்புக்குக் குந்தகம் விளைவிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

மதங்களின் மற்றும் இனங்களின் பெயரால் சட்டம் ஒழுங்கு பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மதச்சார்பற்ற மாநிலங்களின் முன்னோடியாகத் திகழும் தமிழ்நாட்டின் பெருமை காப்பாற்றப்பட வேண்டும்.

அடுத்து முக்கியமான பணி, தமிழ்நாடு சட்ட மன்றத் தேர்தலுக்குத் தயாராவது ஆகும். குறுகிய காலத்தில், தேர்தல் அறிவிக்கப்படலாம். இதற்கான தேவையான நடவடிக்கைகளை எடுப்பது நிர்வாகத்தின் கடமையாகும்.

வாக்காளர் பட்டியலைத் தயார் செய்வதிலிருந்து தேர்தல் நடைபெறத் தேவையான அலுவலர்கள் மற்றும் பொருட்களை ஏற்பாடு செய்தல், தேர்தலை அமைதியாக நடத்துதல் முடிய பல நடவடிக்கைகளை நிர்வாகம் எடுக்க வேண்டும்.

வளைகுடா போரினால் நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட பாதிப்பு கவலை அளிப்பதாக உள்ளது. எரிபொருள் பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் தரப்பட வேண்டும். தேசிய நலன் கருதி மதிப்புமிக்க அந்நியச் செலாவணியைப் பாதுகாக்க, பெட்ரோல் பொருட்களை சிக்கனமாகப் பயன்படுத்த அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

கடந்த சில நாட்களாக, பொது விநியோக முறை நிர்வாகத்தைச் சீர்திருத்தி, அத்தியாவசியப் பொருட்களைத் தேவையான அளவு இருப்பில் வைத்துக்கொள்ள எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் நல்ல பலனைத் தந்துள்ளன. பதுக்கலைத் தடுக்க தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இப்பொழுது நடைபெறும் அறுவடைகளைக் கொண்டு ஆண்டு முழுவதும் நியாயவிலைக் கடைகள் மூலம் திறமையாக விநியோகிக்க போதுமான அரிசி கொள்முதல் செய்யப்படும். பொது விநியோக முறையைத் திறமையாக நிர்வகிப்பதை அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் ஒரு சவாலாக ஏற்றுக்கொள்ள வேண்டும். பதுக்கலை ஒழிக்கவும், விலைவாசி ஏற்றத்தைத் தடுக்கவும் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

வடகிழக்குப் பருவமழை தவறியதன் காரணமாகச் சில மாவட்டங்களில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. குடிநீர்ப் பற்றாக்குறையைச் சமாளிக்கத் தேவையான நிதி உடனடியாக ஒதுக்கப்படும். குடிநீர்க் குழாய்களைச் சரிசெய்யும் பணியையும் உடனடியாக நிறைவேற்ற வேண்டும். ரூ.1,450 கோடி கொண்ட இவ்வாண்டு தமிழ்நாடு திட்டங்களை விரைவாக அமல்படுத்த வேண்டும்.

வேளாண்மைக் கிராம வளர்ச்சி மற்றும் சமூகச்சேவைப் பணிகளில் தனிக்கவனம் செலுத்த வேண்டும். தீவிர அரிசி உற்பத்தித் திட்டம் மற்றும் தேசிய நீர் மேலாண்மைத் திட்டம் போன்ற தேசியத் திட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

மாதந்தோறும் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் நடத்தப்பட வேண்டும். கிராமப்புற வேலைவாய்ப்புக்கென ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம் ரூ.172.33 கோடியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ரூ.6.64 கோடி செலவில் 455 குளங்கள் வெட்டும் திட்டமும் உள்ளது. பழங்குடியினர் மற்றும் மலைவாழ் மக்களுக்காக 2,000 விவசாயக் கிணறுகள் உடனடியாக வெட்டப்பட வேண்டும். இந்தத் திட்டங்களுக்கு ஒவ்வொரு ரூபாயும் ஏழைகளுக்குச் சென்றடைவதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

68,000 மையங்களில் 84.8 இலட்சம் குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கும் திட்டத்தில் அதிகக் கவனம் செலுத்தப்பட வேண்டும். புதிய சமையல் பாத்திரங்களை வாங்க நிதி ஒதுக்கப்படும். இங்கு வழங்கப்படும் உணவு சுத்தமானதாகவும், சுவையானதாகவும் இருக்க வேண்டும்.

குடிநீர்த் திட்டங்களிலும் தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்களின் வாழ்க்கைத்தரம் உயர தீட்டப்பட்ட பல்வேறு திட்டங்களை அமல் படுத்துவதிலும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தீவிரம் காட்ட வேண்டும்.

தமிழகப் பொருளாதார முன்னேற்றத்தின் விரைவான முன்னேற்றத்திற்குத் தீட்டப்பட்டுள்ள பல்வேறு திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். மாநிலத்தில் அமைதி நிலவினால்தான், பொருளாதார முன்னேற்றம் காண முடியும். எனவே, நல்ல அமைதியான சூழ்நிலை மாநிலமெங்கும் நிலவிட, நாம் அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். இந்தச் சில சிந்தனைகளுடன், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டைத் தொடங்கி வைப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

(16.2.'91 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து)

## இரண்டாம் அட்டை சொல்லும் செய்தி

## குடிநீர்த் திட்டங்களுக்கு நிர்வாக ஒப்புதல்

**1990-91-ஆம் ஆண்டிற்கு ரூ.13.52 கோடி திட்ட மதிப்பீட்டில் 13 நகர்ப்புறப் பேரூராட்சிகள் மற்றும் 2 நகராட்சிகளுக்குக் குடிநீர்த் திட்டங்களைச் செயல்படுத்தவும், அவற்றின் ஆண்டு பராமரிப்புச் செலவுக்காக ரூ.5.3 கோடிக்கும் அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது.**

குன்னத்தூர், கோட்டையூர், விக்கிரமசிங்கபுரம், திருக்காட்டுப்பள்ளி, கங்கைகொண்டான், திருக்கழுக்குன்றம், பேரையூர், சிங்கம்புணரி, வலங்கைமான், ஏரல், பாளையம், வீரப்பன் சத்திரம், ஜலகண்டபுரம் ஆகிய 13 பேரூராட்சிகளுக்கும், குழித்துறை, சத்தியமங்கலம் ஆகிய இரண்டு நகராட்சிகளுக்கும் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டங்களை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் முன்னுரிமை அடிப்படையில் நிறைவேற்றும்.



## இராணுவ வீரர்களுக்கு வழங்கும் ரொக்கத் தொகை உயர்வு

**பிரதேச இராணுவப்படை வீரர்களில் தமிழ்நாட்டைச் சார்ந்த, பாராட்டுச் சிறப்பிதழ் பெற்ற வீரர்களுக்கு ரூ.2,500 ரொக்கத் தொகையாகவும், பாராட்டுப் பதக்கம் பெற்ற வீரர்களுக்கு ரூ.1,500 ரொக்கத் தொகையாகவும் தமிழ்நாடு அரசால் தற்போது வழங்கப்பட்டு வருகிறது.**

மேற்குறிப்பிட்டுள்ள ரொக்கத் தொகையை அதிகரித்து வழங்குவதெனத் தமிழக அரசு தற்போது முடிவு செய்துள்ளது. இந்த முடிவின்படி, பாராட்டுச் சிறப்பிதழ் பெற்றவர்களுக்கு ரொக்கத் தொகை ரூ.3,000 ஆகவும், பாராட்டுப் பதக்கம் பெற்றவர்களுக்கு ரொக்கத் தொகை ரூ.2,000 ஆகவும் உயர்த்தி இனி வழங்கப்படும்.

வளமான வாழ்வுக்கு
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ்
அளிக்கும்
விஜய்
உரங்கள்




HTA 7343


செங்கை-அண்ணா மாவட்டத்தில்:

# பட்டுப் பரிமாற்றகம்

பட்டுத் தொழில் கிராமப் புறங்களில் வேலை வாய்ப்பளிக்கும் ஒரு குடும்பத் தொழில். வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களின் பொருளாதார நிலையை உயர்த்த இத்தொழில் மிக உகந்ததாக உள்ளது. ஓர் ஏக்கரில் மல்பரி நடவு செய்வதால் 8 நபர்களுக்குப்பல முனைகளில் வேலை வாய்ப்பளிக்க வாய்ப்புள்ளது.

பட்டுத் தொழிலில் பல்வேறு பிரிவுகள் அடங்கியுள்ளன. மல்பரி செடி நடவு செய்தல்; அதன்பின் பட்டுப்புழு வளர்த்து, பட்டுக்கூடு உற்பத்தி செய்தல், பட்டு நூற்பு செய்து பட்டுநூல் உற்பத்தி செய்தல். இறுதியாக, பட்டுநூலை நெசவு செய்து பட்டுத் துணி உற்பத்தி செய்தல் இத்தனை உட்பிரிவுகள் இத்தொழிலில் அடங்கியுள்ளதால், பல தரப்பட்ட பிரிவினர், அதாவது விவசாயி முதல் நெசவாளி வரை வேலை வாய்ப்புப்பெறுகின்றனர்.

எனெனில், பட்டாடை கிடைக்க, மல்பரிச் செடி பயிர் செய்தலில் ஆரம்பித்து, பட்டுத்துணி நெசவுசெய்தல் வரை பல பிரிவுகள் உள்ளன.

கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பளித்து மறுமலர்ச்சி அளித்து வருவதால் பட்டுத்தொழில் வளர்ச்சிக்குத் தமிழ்நாடு அரசு பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

தற்போது இத்தொழில் 4,700 கிராமங்களில் செய்யப்பட்டு சுமார் 2 இலட்சம் நபர்கள் வேலை வாய்ப்புப்பெற்று வருகின்றனர். உலக வங்கியின் உதவியுடன் தேசிய பட்டு வளர்ச்சித் திட்டம் ரூ.41.77 கோடி செலவில் செயல்படுத்தப்படுவதால், மேலும் ஒரு இலட்சம் நபர்கள் வேலை வாய்ப்புப்பெறுவர்.

தேசிய பட்டு வளர்ச்சித் திட்டத்தைத் தவிர மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம், ஆதிதிராவிடர் சிறப்பு நலத்திட்டம், வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் ஆகிய பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்திட இவ்வாண்டுக்கு ரூ.255 இலட்சம் ஒதுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் வெளிநாட்டு உதவி நிறுவனங்களாகிய சுவிஸ் மேம்பாட்டுத் திட்டம், போர்டு நிறுவனம், வேளாண்மை வளர்ச்சிப் பன்னாட்டு நிறுவனம் பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு ஆகியவற்றின் மூலம் பல திட்டங்கள் ரூ.100 இலட்ச மதிப்பில்செயல்படுத்தப்படுகின்ற மேற்குறிப்பிட்ட விவரங்கள் மூலம், பட்டுத் தொழிலின் நிலையான வளர்ச்சிக்கு இத்துறை எடுத்து வரும் முயற்சிகளைக் கண்கூடாய்க்காணலாம்.

பட்டுத் தொழில் செவ்வனே



வளர்ச்சி அடைந்திட, சிறந்த விற்பனை முறை பல முனைகளிலும் இருத்தல் அத்தியாவசியமானது. பட்டுப்புழு வளர்ப்பாளர், பட்டு நூற்பாளர்கள், முறுக்காளர்கள், நெசவாளர்கள் ஆகிய எல்லோருக்கும் பயனளிக்கும் பொருட்டு நியாயமான விலை கிடைக்கச் செய்யும் வகையில் பட்டுநூல் விற்பனை முறையை அமைப்பதன் மூலம் தான், இத்தொழிலைச்சிறப்புறவும் நிரந்தரமாகவும் செய்ய முடியும்.

இந்த நோக்கத்தினைச் செயல்படுத்திட **காஞ்சிபுரத்தில் தமிழ்நாடு அரசு அண்ணா பட்டுப் பரிமாற்றகம் துவக்கப்பட்டுள்ளது.** இது மாநிலத்தில் மாவட்டங்கள்தோறும் செயல்பட்டு வருகிறது. அரசு பட்டுக்கூடு அங்காடிகளின் மூலம், பட்டுக்கூடு விற்பனைக்கு வழிவகை செய்யப்பட்டு உள்ளது. குறிப்பாக சேலம், கோயம்புத்தூர், தர்மபுரி, ஓசூர், திண்டுக்கல் ஆகிய பெரிய அளவிலான பட்டுக்கூடு அங்காடிகளில் ஏல முறையில் விற்பனை செய்யப்படுவதால், பட்டுக்கூடுகளுக்கு நியாயமான விலையும் அதே நேரத்தில் போட்டி விலையும் விவசாயிகளுக்குக் கிடைக்கிறது.

மேற்குறிப்பிட்ட ஏல அங்காடிகளில் போட்டியின் மூலம் ஏலம் நடத்தப்படுவதால் கர்நாடக மாநிலத்தில் பட்டுக்கூடுகளுக்கு அளிக்கப்படும் விலைக்குச் சமமாகத் தமிழ்நாட்டில் உள்ள அங்காடிகளிலும் விற்பனை விலை கிடைக்க வழி வகுக்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் மனத்திருப்தியுடன் பட்டுக்கூடுகளை விற்பனை செய்கின்றனர். இதே போன்று பட்டுநூலைப் போட்டி விலையில் விற்பனை செய்திட காஞ்சிபுரத்தில் தமிழ்நாடு அண்ணா பட்டுப் பரிமாற்றகம் அமைக்கப்பட்டுள்ளது. பெங்களூரில் செயலாற்றி வரும் பட்டுப்பரிமாற்றகம் போன்று, தமிழ்நாட்டில் பட்டு நெசவு நெய்தலில் பாரம்பரியமும் உலகப் புகழும் பெற்ற காஞ்சி நகரில், பட்டுப்பரிமாற்றகம் நிறுவப்பட்டுகிறது.



சுமார் 60,000 கைத்தறிகள் தனியார் துறை மூலமும் கூட்டுறவு நிறுவனங்கள் மூலமும் தமிழ்நாட்டில் இயங்கி வருகின்றன. காஞ்சிபுரத்திலுள்ள பட்டு பரிமாற்றகத்தை ஆரணி, கும்பகோணம், தர்மபுரி, சேலம் ஆகிய இடங்களில் உள்ள முறுக்காளர்களும், நெசவாளர்களும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

பட்டு நூற்பாளர்கள், முறுக்காளர்கள், நெசவாளர்கள் ஆகிய விற்பவரும் வாங்குபவரும் பரிமாற்றகத்தில் ரூ.50 செலுத்தி உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவர். தனியாரும் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களும் ஆகிய இருதரப்பினரும் அங்கத்தினர்களாகச் சேரலாம். டான்சில்க், காதி மற்றும் கிராமத் தொழில் வாரியம், சர்வோதய சங்கம் ஆகிய நிறுவனங்களும் அங்கத்தினர்களாக இருப்பர்.

ஒவ்வொரு உறுப்பினருக்கும் பரிமாற்றகத்தில் விற்பனை' செய்யப்படும் விவரம் குறிப்பதற்கு ஒரு பாஸ் புத்தகம் வழங்கப்படும். பட்டுப் பரிமாற்றகத்தில் உறுப்பினர்களாகப் பதிவு செய்த அனைவரும் இங்கு நடைபெறும் ஏல விற்பனையில் பங்கேற்கலாம். எல்லா வகையான பட்டு நூலும் ஏல முறையில் தான் விற்பனை செய்யப்படும். ஏலத்தில் நிர்ணயிக்கப்பட்ட விலை, விற்பனை செய்பவர் சம்மதித்த பின்னர் தான் ஏலம் உறுதிப்படுத்தப்படும். இல்லையேல், மறு ஏலத்திற்கு விடப்படும். அப்படியும் ஒரே நாளில் விற்பனையாகாத பட்சத்தில் பட்டுப்பரிமாற்றகத்தில் ஓரிரு நாட்களுக்குப் பாதுகாப்பாக இருப்பில் வைத்து அதன்பின் ஏலம் விடுவதற்குச்சந்தர்ப்பம் அளிக்கப்படும். இவ்வாறு செயல்படுவதால் பட்டு நூற்பாளர்களின் பட்டு நூலுக்குப் போட்டி விலை கிடைப்பது உறுதி செய்யப்படுகிறது.

பட்டு முறுக்காளர்களும், நெசவாளர்களும், தங்கள் தேவைக்கேற்ப தரமான பட்டுநூலை, தேவையான அளவில் தங்கள் விருப்பப்படி வாங்குவதற்குத் தாராளமான சந்தர்ப்பங்கள் கிடைக்கும். பரிமாற்றகத்தில் கோரா பட்டு, முறுக்கேற்றப்பட்ட பாவு மற்றும் ஊடை ஆகிய நூல் வகைகளை ஏலத்தில் விற்பனை செய்யலாம். இதைத்த தவிர, டுபியான் பட்டு நூலையும் விற்பனை செய்யலாம். **பட்டுப் பரிமாற்றகம் அமைக்கப்படுவதால் பட்டுத்தொழில் வளர்ச்சிக்கு முதுகெலும்பான பட்டு நூற்புத் தொழில் புத்துயிர் பெற்று நிலையான வளர்ச்சி பெற வழிவகை செய்யும்,** 'பட்டு வர்த்தகம் பல இலட்சம் கிலோ அளவில் பெருகி பல கோடி ரூபாய் மதிப்பில் வியாபாரம் நடைபெறும். எனவே, பட்டு வளர்ச்சிப் பாதையில் பட்டுப் பரிமாற்றகம் அமைப்பது ஒரு மைல் கல் போன்ற முன்னேற்றமாகும்.

பட்டுப் பரிமாற்றகம் அமைப்பதால், பட்டுத் தொழில் வளர்ச்சிக்கு இன்றியமையாததாக அமைந்துள்ள மல்பரி விரிவாக்கத்திற்குப்புத்துயிர் அளிக்கப்பட்டு வேகமான வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக அமையும். இதனால் தமிழ்நாட்டில் பட்டுத் தொழில் வெற்றி கரமாக, சீரான, திடமான நிலையில் பரவி வளர்ச்சியடையும். காஞ்சிபுரத்தில் பட்டுப்பரிமாற்றகம் செயல்படுவதால், பெங்களூரிலேயே கிடைத்து வந்த பட்டுநூல், காஞ்சிபுரத்திலேயே கிடைக்கச் செய்யும் ஒரு அரிய சந்தர்ப்பம் உருவாகும். பட்டு விற்பனை முறை நிலைப்படுத்தப்பட்டு அதனால் தமிழ்நாட்டிற்குத் தேவையான பட்டுநூலைத் தமிழ்நாட்டிலேயே உற்பத்தி செய்து சுய தேவையைப் பூர்த்தி செய்யும் குறிக்கோளை அடைய வழிவகை செய்யும்.



## மரம் வளர்ப்போம்! வளம் பெறுவோம்!

செடிகொடிகள் மரங்களைநாம்
நட்டு வைக்க ணும்-தேச
சேவைக்கென நமது பங்காய்
எடுத்துக் கொள்ள ணும்!
கொடுமையிலும் கொடுமையிது
மரத்தை அழிப்பது-நம்
குழந்தைகளை வாட்டிவதைக்கும்
செயலை நிகர்ப்பது!

நாடுவாழ வேண்டுமென்றால்
மரத்தைக் காக்க ணும்-அதில்
நன்மையுண்டு என்னவென்றால்
மழையை ஆக்குமே!
வீடுசுற்றி மரம்வைத்தால்
அழகா யிருக்குமே-பறவை
வந்துதங்கி ஆடிப்பாடும்
அழகு கிடைக்குமே!

பூத்துக் கிடக்கும் மலர்களினால்
வாசம் சேருமே-அதன்
புன்னகையில் மகிழ்ந்து தேனீ
பாடல் கேட்குமே!
பாட்டி சொல்வாள்! 'ஒரு மரத்தால்
பலருக்கு நன்மை'-அவள்
பார்வைகூட நமக்கில்லை
உண்மை, உண்மையே!

காற்றில்எழும் தூசுவீட்டில்
வராது தடுக்க-மரம்
காக்கின்றது இதையறிந்து
கொள்வாயே தம்பி!
காய்கறிகள் பழங்களெல்லாம்
தருவது மரமே-அதனால்
காசுமிச்சம் பொருள்சுத்தம்
வாழ்வோம் நலமே!

—புலவர் முத்து. எத்திராசன்

ஆகியவற்றோடு பலவண்ணக்கற்கள், சுடுமண், சங்கு, கண்ணாடி போன்ற வற்றைக் கொண்டு செய்யப்பட்ட பல்வேறு அமைப்புகளைக் கொண்ட மணிகள், வளையல் துண்டுகள் ஆகியனவும் இந்த ஆய்வில் கண்டு பிடிக்கப்பட்டன. பெண்கள் கண்களுக்கு மைதீட்டுதற்குப் பயன்பட்டதைப் போன்று தந்தத்தால் செய்யப் பட்ட ஒப்பனைக் கருவி இந்த ஆய்வின் குறிப்பிடத்தக்க கண்டு பிடிப்பாகும். ஒரு சிறிய சிவப்பு மட்பாண்டத் துண்டில் ஒரே ஒரு பிராமி எழுத்து (தி) பொறிக்கப் பட்டுள்ளதும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. முந்தைய ஆய்வுகளில் கிடைத்த பிராமி எழுத்துக்கள் யாவும் சாம்பல் நிற ஓடுகளில் பொறிக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நன்கு சுடப்பட்ட செங்கற்களைக் கொண்டு தொட்டி போன்ற அமைப்பில் கட்டப்பட்ட கட்டடங்கள் பல முந்தைய அகழ்வாய்வுகளில் கண்டு பிடிக்கப்பட்டன. இந்த ஆய்விலும் அருகருகே கட்டப்பட்ட இரண்டு தொட்டிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இப்படியான இரட்டைத் தொட்டி இந்த ஆய்வில் மட்டும் கிடைத்திருப்பது ஒரு சிறப்பம்சமாகும்.

இந்தத் தொட்டிகள் சுட்ட செங்கற்களைக் கொண்டு நீள்சதுர வடிவில் அருகருகே கட்டப்பட்டுள்ளன. அரியாங்குப்பம் ஆற்றின் கீழ்க்கரை ஓரமாக அகழ்வாய்வு செய்யும்போது இந்தத் தொட்டிகள் வெளிப்பட்டன. இரண்டு தொட்டிகளும் நீள்சதுர வடிவில் அமைந்திருந்தாலும் அவை ஒரே மாதிரியான அளவுகளில் இல்லை. ஒன்று பெரியதாகவும் மற்றொன்று சிறியதாகவும் உள்ளது. பெரிய தொட்டியின் நீளப்பகுதி கிழக்கு-மேற்காக 2.33 மீட்டரும் அகலப்பகுதி தெற்கு-வடக்காக 1.62 மீட்டரும் உள்ளது. இன்றைய மக்களால் அவ்வப்போது செங்கற்கள் அகற்றப்படுவதனால், இந்தத் தொட்டியிலுள்ள செங்கற்களில் பல அடுக்குகளைக் காண வில்லை. அதனால் இந்தப் பெரிய தொட்டியின் தெற்குச் சுவரில் 16 அடுக்குகளும், வடக்குச் சுவரில் 14 அடுக்குகளும் கிழக்குச் சுவரில் 15 அடுக்குகளும், மேற்குச் சுவரில் 10 அடுக்குகளும் செங்கற்கள் உள்ளன.

சிறிய அமைப்பிலுள்ள தொட்டி பெரிய தொட்டியை ஒட்டினாற்



அறிஞர்தம் இதய ஓடை
ஆழநீர் தன்னை மொண்டு
செறிதரும் மக்கள் வெள்ளம்
செழித்திட ஊற்றி ஊற்றிக்
குறுகிய செயல்கள் தீர்த்துக்
குவலயம் ஓங்கச் செய்வாய்!

போல் தெற்குப் புறத்தில் அமைந்துள்ளது. இச்சிறிய தொட்டியின் நீளம் தெற்கு-வடக்கில் 2.01 மீட்டரும், அகலம் கிழக்கு மேற்கில் 1.33 மீட்டரும் உள்ளது. பெரிய தொட்டியின் நீளப்பகுதி கிழக்கு-மேற்காகவும், சிறிய தொட்டியின் நீளப்பகுதி தெற்கு-வடக்காகவும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்க தாகும். பெரிய தொட்டியைப் போலவே நான்கு சுவர்களிலும் செங்கல்லடுக்குகளின் எண்ணிக்கை வேறுபட்டுள்ளது. இச்சிறிய தொட்டியின் வடக்குப்புறச் சுவரில் 15 அடுக்குகளும், தெற்குப்புறச் சுவரில் 9 அடுக்குகளும் கிழக்கிலும் மேற்கிலும் உள்ள சுவர்களில் தலா 14 அடுக்குகளும் செங்கற்கள் உள்ளன.

இந்தத் தொட்டிகளில் உள்ள செங்கற்கள் நன்றாகச் சுடப்பட்டும், இரண்டு வகையான அளவுகளிலும் உள்ளன. பெரிய தொட்டியிலுள்ள செங்கற்களின் அதிகபட்ச அளவு 44×28×6 செ.மீட்டரும் சிறிய தொட்டியிலுள்ள செங்கற்களின் அதிகபட்க அளவு 35 x 24 x 5 செ. மீட்டருமாகவுள்ளது. இரண்டு கட்டுமானங்களுமே அடித்தளம் எதுவுமில்லாமல் மணற்பரப்பின்மீது கட்டப் பட்டுள்ளன. இரண்டு தொட்டிகளின் சுற்றுப்புறமும் எந்தவிதமான மண்ணடுக்குமில்லாமல் ஒரே மணற் பரப்பாக இருந்தது. அதே நேரத்தில் தொட்டிகளின் உட்புறத்தில், மேற் பரப்பிலிருந்தே, மக்கள் பயன் படுத்திய பல்வேறு மட்பாண்டத் துண்டுகள் கிடைத்துள்ளன. சிறிய தொட்டியின் நடுப்பகுதியில் கருப்பு-சிவப்பு மற்றும் சிவப்பு மட்பாண்ட வகைகளைச் சேர்ந்த சிறிய அழகான சின்னங்களும் சிறுசிறு எலும்புத் துண்டுகளும் கிடைத்துள்ளது வியப்பாகவுள்ளது.

செங்கற்களை ஒன்றோடொன்று இணைத்துத் தொட்டிகளைக் கட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்ட சாந்தானது வெறும் களிமண்ணாகவே யிருந்தது. அதில் ஏதாவது கலவை கலந்துள்ளதா என்பதை இரசாயனப் பரிசோதனைக்குப் பிறகுதான் தெரிந்து கொள்ளவியலும். தொட்டிகளின் உட்புறச் சுவர்களில் நன்றாகப் பூச்சுவேலை செய்யப்பட்டதற்கான சுவடுகள் தெரிகின்றன. தண்ணீர் அல்லது வேறு வகையான திரவப்பொருள் தேங்கியிருந்தால் தொட்டிகளின் உட்புறச் சுவர்களில் பச்சைநிறப் பாசி படிந்திருந்த சுவடுகள் தெரிகின்றன. இந்தப் பூச்சுக்குப் பயன்படுத்தப்பட்ட கலவையும், செங்கற்களை இணைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட சாந்துக் கலவையும் மாதிரிகள் சேகரிக்கப் பட்டு இரசாயனப் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

தொட்டிகளின் தளப்பகுதியானது செங்கல் துண்டுகளும் மட்பாண்ட ஓடுகளும் கலந்த கெட்டியான களிமண்ணைக் கொண்டு ஆக்கப்பட்டுள்ளது. பெரிய தொட்டியின் மேற்குச் சுவர்ப்பகுதியின் அடித்தளத்தை ஒட்டினாற்போல் ஆற்றுப் பகுதியை நோக்கி 10x6 செ.மீட்டர் அளவில் ஒரு சிறிய மதகு (Let-out) உள்ளது. தொட்டியிலிருந்து நீரை வெளியேற்றுவதற்கு இந்தச் சிறிய மதகு பயன்பட்டிருக்கலாம் எனத் தெரிகின்றது. மதகின் அளவிற்கேற்ற சிறிய செங்கல்லைக் கொண்டு மதகு அடைத்து வைக்கப் பட்டிருந்ததும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

இந்த இரண்டு தொட்டிகளுமே கி.பி. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த போதிலும் பெரிய தொட்டியானது சிறிய தொட்டி கட்டுவதற்குச் சற்று முன்னதாகக் கட்டப்பட்டதற்கான தடயங்கள் தெரிகின்றன. ஏனென் றால், இரண்டு தொட்டிகளின் அடித்தளமும் சமமான அளவில் இல்லை. சிறிய தொட்டியின் அடிக்கல் (செங்கல்) மட்டம் பெரிய தொட்டியின் அடிக்கல் மட்டத்தை விட 6 செ.மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. சிறிய தொட்டியின் வடக்குப்புறச் சுவரும் பெரிய தொட்டியின் தெற்குப்புறச் சுவரும் ஒரே சுவராகத் தெரிந்த போதிலும் அவையிரண்டும் தனித்தனியாக இருவேறு குறுகிய காலங்களில் கட்டப் பட்டிருக்க வேண்டும். ஏனென் றால், இந்தச் சுவர் மட்டும் அகலத்தில் இரண்டு செங்கல் அளவிலும் மற்ற எல்லாச் சுவர்களும் ஒரே செங்கல் அளவிலும் கட்டப்பட்டிருக் கின்றன. எனவே, பெரிய தொட்டி கட்டப்பட்டு சிறிது காலம் கழித்து அதனருகே தனியாகவே இந்தச் சிறிய தொட்டியும் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பது தெளிவாகின் றது. சிறிய தொட்டியிலுள்ள செங்கற்கள், பெரிய தொட்டியிலுள்ள செங்கற்களைவிட அளவில் சிறியதாக இருப்பதும் குறிப்பிடத் தக்கது. ஆகவே, இந்த இரண்டு தொட்டிகளும் கி.பி, முதல் நூற்றாண்டைச் சேர்ந்தனவென்று கூறினாலும், அவையிரண்டும் அதே நூற்றாண்டின் இருவேறு குறுகிய காலகட்டங்களில் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்ற முடிவிற்கு வர வேண்டியுள்ளது.

சிறிய தொட்டி கட்டும்பொழுது பெரிய தொட்டியின் உயரத்தையும் சற்று அதிகப்படுத்தியுள்ளதும் தெரி கின்றது. ஏனென்றால், பெரிய தொட்டியின் மேல்மட்ட அடுக்கிலுள்ள செங்கற்கள் சிறிய தொட்டியிலுள்ள செங்கற்களின் அளவை ஒத்தி நக்கின்றன.

இதைப் போன்ற சுட்ட செங்கற்களால் கட்டப்பட்ட தொட்டி பல முன்பு நடைபெற்ற அகழ்வாய்வுகளிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன, என்றாலும் அருகருகே கட்டப்பட்ட இரட்டைத் தொட்டிகள் இந்த ஆய்வில் மட்டுமே கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

சங்ககாலச் சோழர்களின் தலைநகராக விளங்கிய உறையூரில் (திருச்சி) சென்னைப் பல்கலைக் கழகத் தொல்லியல் துறையினர் அகழ்வாய்வு நடத்தியபோது (1965) சுட்ட செங்கற்களைக் கொண்டு இருவேறு அளவுகளில் கட்டப்பட்ட இரண்டு (இரட்டை) தொட்டிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவைகள் துணிகளுக்குச் சாயம் தோய்ப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட சாயத் தொட்டிகளாக இருக்கலாம் என்று கண்டறியப்பட்டுள்ளது. இந்தத் தொட்டிகள் கட்டப்பட்ட அதே காலத்தைச் சேர்ந்த படிவுகளில் நூல் நூற்பதற்குப் பயன்படுத்தப்பட்ட சுடுமண் தக்களிகள், நூற்ற நூலைக் கொண்டு துணி நெய்வதற்குப் பயன் படுத்தப்பட்ட எலும்பினாலான கட்டைகள் (Shuttles) போன்றனவும் கிடைத்துள்ளன. இதேபோன்ற வரும் பொருட்கள் அரிக்கமேட்டில் இப்பொழுது நடத்தப்பட்ட அகழ்வாய்விலும் கிடைத்துள்ளன.

அரிக்கமேட்டில் முந்தைய ஆய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்ட தொட்டிகளும் துணிகளுக்குச் சாயம் தோய்ப்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருக் கலாம் என்று திரு. மார்ட்டிமர் வீலர் தெரிவித்துள்ளார்.

ஆகவே, இப்பொழுது அரிக்கமேட்டில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த இரட்டைத் தொட்டிகளும் துணிகளுக்குச் சாயம் தோய்க்கப் பயன் படுத்தப்பட்ட சாயத்தொட்டி தான் என்ற முடிவிற்கு வரவேண்டியுள்ளது. அத்துடன் இந்தத் தொட்டிகளின் உட்புறச் சுவர்களில் பச்சை நிறத்தில் சாயப்படிவுகள் (பாசி) படிந்திருப் பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தப் ப்டிவுகளின் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு இரசாயனப் பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

ஆகவே, அரிக்கமேட்டில் ஒரு காலத்தில் நெசவுத் தொழில் சிறப்பாக நடைபெற்றிருக்க வேண்டும் என்பதை மேற்கண்ட ஆதாரங்கள் தெளிவாக்குகின்றன. பல்வேறு வாணிபப் பொருட்களைச் சேமித்து வைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட பண்டகசாலையின் இடிபாடும் முந்தைய ஆய்வுகளில் கண்டு பிடிக் கப்பட்டுள்ளது. வெளிநாடுகளிலிருந்து வந்த பொருட்களான அரிட்டைன் மட்பாண்ட வகைகள், ஆம்பொரா மதுச்சாடிகள், கண்ணாடிப் பாத்திரங்கள் போன்றனவும் உள்நாட்டில் தயாரான பொருட்கள் பலவும் பேரெண்ணிக்கையில் கிடைத்துள்ளன. தமிழ்நாட்டிற்கும் மேலைநாடுகளுக்குமிடையில் பண்டைநாளில் சிறப்பான முறையில் வாணிபம் நடைபெற்றதாகவும், தமிழ்நாட்டிலிருந்து மேலைநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களில் துணிவகைகளும் இருந்ததாகவும் பழந்தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன.

இந்த ஆதாரங்களைக் கொண்டு, அரிக்கமேட்டுப் பகுதியான கிறிஸ்து சகாப்தத்தின் ஆரம்ப நூற்றாண்டுகளில் தொழில் மையமாகவும், வாணிப மையமாகவும் திகழ்ந்ததோடு, வெளிநாட்டு வணிகர்கள் வந்து தங்கியிருந்ததையும் உறுதி செய்கின்றன.

தமிழரசு
சந்தா விவரம்
தமிழ்
ஓராண்டு = ரூ.24
அரையாண்டு = ரூ.12
ஆங்கிலம்
ஓராண்டு = ரூ. 12
(அரையாண்டு சந்தா கிடையாது)
விவரங்களுக்கு
உதவி இயக்குநர்
(விற்பனை மற்றும் விநியோகம்)
தமிழரசு, அரசினர் தோட்டம், சென்னை-600 002.

இன்று யூனியன் பிரதேசமாகத் திகழ்கின்ற புதுச்சேரியின் ஒரு பகுதியாக அமைந்திருப்பது அரிக்க மேடு என்னும் சிற்றூராகும். பாண்டிச்சேரி நகருக்குத் தெற்கில் 5 கி.மீட்டர் தொலைவில் அரியாங் குப்பம் ஆற்றின் கரையில், வங்கக் கடற்கரை ஓரமாக அரிக்கமேடு அமைந்துள்ளது. இன்று மக்கள்



# அரிக்கமேட்டில் மீண்டும் அகழ்வாய்வு

நடமாட்டம் அதிகமில்லாத மண் மேடாகக் காட்சியளிக்கும் அரிக்க மேடு, ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் பன்னாட்டுத் தொடர்பு களைக் கொண்ட வணிகக் கேந்திர மையமாகத் திகழ்ந்ததற்கான ஆதா ரங்கள் பலவற்றைக் கடந்த ஐம்பது ஆண்டுகளாக அறிஞர்கள் பலர் கண்டுபிடித்துள்ளனர்.

இந்தியாவின் கிழக்குக் கடற்கரை யில் 'பொதுகே' என்ற வணிக முக்கியத்துவம் வாய்ந்த நகரம் இருந் ததாக, கி.பி. இரண்டாம் நூற் றாண்டைச் சேர்ந்த கிரேக்க நாட்டுப் பயணியான தாலமி என்பவருடைய குறிப்புகளில் உள்ளது. இந்தப் 'பொதுகே' இன்றைய புதுச்சேரி யின் பகுதியாக இருக்கலாம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிவாக்கில் (1779-81) லிசென்டில் என்ற பிரான்சு நாட்டு அறிஞர் அரிக்கமேட்டில் வரலாற்று ஆதா ரங்கள் பல இருப்பதாகக் குறித் துள்ளார். அதற்குப் பிறகு 1937-ஆம் ஆண்டில் துப்ரயேல் என்ற பிரான்சு நாட்டு அறிஞர் அரிக்கமேட்டில் களஆய்வு செய்து பல்வேறு அரும் பொருட்களைக் கண்டுபிடித்தார். அவற்றில் மிக முக்கியமானதாகக் கருதப்படுவது ரோமானியப் பெரு மன்னன் அகஸ்டசின் உருவம் செதுக்கப்பட்ட மதிப்புமிக்க மணிக் கல்லாகும். இந்த அரும்பொருட் களில் சில சென்னை அருங்காட்சி யகத்தில் வைக்கப்பட்டுள்ளன. மீத முள்ள அரும்பொருட்கள் யாவும் பிரான்சு நாட்டுக்கு அனுப்பப்பட்டு விட்டன. 1941-42-ஆம் ஆண்டு களில் பாசெக்ஸ் என்ற பிரஞ்சுப் பாதிரியாரின் வழிகாட்டுதலின் பேரில் முதன்முதலாக அரிக்க மேட்டில் அகழ்வாய்வு மேற்கொள்ளப் பட்டது. இந்த ஆய்வில் அரிய அரும்பொருட்கள் பல கண்டு பிடிக்கப்பட்டன. ஆனால், இந்த அகழ்வாய்வு சரியான நெறிமுறை களில் செய்யப்படாததால், அந்த அரும்பொருட்களைப் பற்றிய தக வல்களைச் சரியாகத் தெரிந்து கொள்ள இயலவில்லை.


**டாக்டர் அரங்க. பொன்னுசாமி**
அகழ்வாய்வுப் பொறுப்பாளர்,
தொல்லியல்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்.


பண்டைய ரோமானியப் பேரர சின் தொடர்புகள் உலகின் எந் தெந்தப் பகுதிகளில் இருந்தது என் பதைக் காண வேண்டும் என்ற அடங்காத ஆர்வம் கொண்ட ஆங்கில நாட்டு அறிஞரான மார்ட்டி மர் வீலர் அவர்கள் இந்தியத் தொல்லியல் துறையின் இயக்குநராகப் பொறுப்பேற்றுக் கொண்டதும், அரிக்கமேட்டில் அகழ்வாய்வு செய்வதற்கு ஆர்வம் காட்டினார். அதற்காக முதன் முதலாக அரிக்கமேட்டைப் பார்வை யிட்டதோடு இதற்கு முன்னால் அங்கே கண்டுபிடிக்கப்பட்ட அரும் பொருட்களையும் பார்வையிட்டார். அதன்பிறகு 1945-ஆம் ஆண்டில் முறையான அகழ்வாய்வை மேற் கொண்டார். ஒழுங்கான நெறி முறைகளின்படி முதன்முதலாக இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வு இதுதான் என்று சொல்லலாம். இந்த ஆய்வின் முழுமையான தொகுப்பு 1946-ஆம் ஆண்டே வெளியிடப்பட்டது வீலரின் திறமைக்கும் அறிவுக்கூர்மைக்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்தது. இப்பொழுது தமிழ் நாட்டில் செய்யப்படுகின்ற அகழ் வாய்வுகள் யாவும் வீலர் அரிக்க மேட்டில் செய்த ஆய்வை அடிப் படையாகக் கொண்டுதான் செய்யப் படுகின்றன.

இதற்குப்பிறகு 1947-50-ஆம் ஆண்டுகளில் பிரான்சு நாட்டு அறிஞர் கசால் அவர்களாலும் அரிக்கமேட்டில் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு பல அரிய கண்டுபிடிப்புகள் நிகழ்த்தப்பட்டன. கசால் அவர்களுடைய ஆய்வும் தொகுப்பாக வெளியிடப்பட்டாலும் அது பிரஞ்சு மொழியில் இருப்பத னால் பெரும்பாலோர் படித்துப் புரிந்து கொள்ள முடியாமல் உள்ளது.

மார்ட்டிமர் வீலருடைய ஆய்வில், வாணிபத்திற்கான பொருட்களைச் சேமித்து வைக்கப் பயன்படுத்தப் பட்ட பண்டகசாலை, நன்கு சுட்ட செங்கற்களைக் கொண்டு கட்டப் பட்ட பல்வேறு அமைப்புகளைக் கொண்ட தொட்டிகள் போன்ற கட்டடங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இதையல்லாமல் கி.பி.20 முதல் கி.பி.50 வரை இத்தாலி நாட்டின் சில இடங்களில் மட்டும் தயாரிக்கப் பட்டதாகக் கூறப்படுகின்ற அரிட் டைன் மட்பாண்டங்கள், மேலை நாடுகளிலிருந்து எண்ணெய், மது போன்ற திரவப் பொருட்களைக் கொண்டு வருவதற்குப் பயன்படுத் தப்பட்ட அம்போரா என்றழைக்கப் படும் சாடிகள் ரௌலட்டட் மட் பாண்டங்கள், கருப்பு-சிவப்பு மட் பாண்டங்கள், சிவப்பு மட்பாண் டங்கள் போன்ற மட்பாண்ட வகை களும் கண்டுபிடிக்கப்பட்டன.

இதன்னியில் பலவண்ணக் கற்கள், சுடுமண், கண்ணாடி, கடற் சங்கு போன்றவற்றைக் கொண்டு செய்யப்பட்ட மணிகள் பேரெண் ணிக்கையில் கிடைத்துள்ளன. சுடு மண் பொம்மைகள், சங்கு வளை யல்கள், எலும்பால் செய்யப்பட்ட பொருட்கள் போன்ற பல்வேறுவித மான அரும்பொருட்களும் கண்டு பிடிக்கப்பட்டன.

இதுபோன்ற பொருட்கள் கசால் அவர்களுடைய ஆய்விலும் கிடைத் தன. அதோடு செங்கற்களால் பெரி தாகக் கட்டப்பட்ட நீர்த்தேக்கம், புத்தமதச் சின்னம் பொறிக்கப்பட்ட மணி ஆகியன கசால் ஆய்வின் குறிப்பிடத்தக்க கண்டுபிடிப்பு களாகும்.

ரோம் நாட்டிற்கும், தமிழகத் திற்கும் இடையில் பண்டைநாளில் சிறப்பான முறையில் பல்வேறுவித மான வாணிபத் தொடர்புகள் இருந்ததாகச் சங்க இலக்கியங்கள் கூறுவதை உறுதிப்படுத்தும் வகை யில், ரோம்நாட்டில் தயாரான பல் வேறு பொருட்கள் அரிக்கமேட்டில் நிகழ்த்தப்பட்ட அகழ்வாய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்டதைக் கொண்டு, பண்டைநாளில் அரிக்கமேடு மேலை நாடுகளுடன் வாணிபம் செய்வ தற்குத் துணையாக இருந்த வாணிபக் கேந்திர மையமாகத் திகழ்ந்திருக்க வேண்டும் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள்.



★ கலை என்பது- நெறிமுறை, வீரம், ஒழுக்கம், கற்பு, காதல் என்னும் பண்புகளைத் தரக்கூடிய தாக இருத்தல் வேண்டும்.

—அறிஞர் அண்ணா

இந்த ஆய்வுகளை ஆதாரமாகக் கொண்டு, அரிக்கமேட்டில் கி.மு. 250-லிருந்து கி.பி.200 வரை தொடர்ச்சியாக மக்கள் வாழ்ந்ததாக வும், பிறகு நீண்ட இடைவெளிக்குப் பிறகு கி.பி. 9-ஆம் நூற்றாண்டி லிருந்து மக்கள் வாழ்ந்துள்ளதாகவும் ஆய்வாளர்கள் முடிவு செய்துள்ளனர்.

மேற்கூறப்பட்ட மூன்று ஆய்வு களிலும், அதற்குப் பிறகு நடை பெற்ற கள ஆய்வுகளிலும் கிடைத்த 23-க்கும் மேற்பட்ட பானை ஓடு களில் பிராமி எழுத்துக்கள் பொறிக் கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டுள் ளன. இந்த எழுத்துக்கள் யாவும் வெளிப்படுத்தும் மொழி தமிழ் மொழியாகவுள்ளது. பண்டைத் தமிழ்நாட்டின் மிக முக்கியமான நகரங்களாகக் கருதப்பட்ட உறையூர், காஞ்சிபுரம் போன்ற இடங்களில் நடைபெற்ற அகழ்வாய்வுகளிலும் பிராமி எழுத்துக்கள் பொறிக்கப் பட்ட பானை ஓடுகள் கண்டுபிடிக் கப்பட்டுள்ளன.

இந்நிலையில் 1990-ஆம் ஆண்டு சனவரி-பிப்ரவரி மாதங்களில் சென்னைப் பல்கலைக்கழகத் தொல் லியல் துறையினர் அமெரிக்க நாட்டுப் பல்கலைக்கழகப் (பென்சல் வேனியா பல்கலைக்கழகம்) பேரா சிரியர் சிலருடன் இணைந்து அரிக்க மேட்டில் ஆய்வு மேற்கொண்டனர்.

இந்த ஆய்வின் நோக்கம் முன்பு கண்டுபிடிக்கப்பட்டதைப் போல் மேலும் பல ஆதாரங்களைக் கண்டு பிடிக்க வேண்டும் என்பதாகும். அதிலும் கிறிஸ்து சகாப்தத்தின் ஆரம்ப நூற்றாண்டுகளைச் சேர்ந்த ஆதாரங்களில்தான் அதிகக் கவனம் செலுத்தப்பட்டது.

முந்தைய ஆய்வுகளில் கிடைத் ததைப்போல் அரிடைன் ஓடுகள், அம்பரோ மதுச்சாடித் துண்டுகள், ரௌலட்டட் மட்பாண்டத் துண்டுகள்

# ஆடற்கலை விளம்பும் ஆலயங்கள்

ஆய கலைகள் அறுபத்து நான்கினும் மிகவும் போற்றிப் புகழப்படுவது நடனக் கலையாகும். நடனக் கலையானது அனைத்துக் கலைகளையும் விடக் காலத்தால் முந்தையது என்று கூடக் கூறலாம். பேச்சுக் கலை, எழுத்துக் கலை போன்ற மற்ற கலைகள் தோன்றும் முன்பே நடனக் கலை தோன்றிவிட்டது. மனிதன் என்று தோன்றினானோ அன்றே நடனக் கலையும் தோன்றி விட்டது என்று கூறலாம்.

முதன் முதலில் மனிதன் தாம் பிறருக்கு உணர்த்த நினைத்தவைகளை தம்முடைய அங்க அசைவுகளின் மூலம் வெளிப்படுத்தினான். அவ்வசைவுகளே நடனக் கலையின் தோற்றமாகும். அதற்குப் பிறகு என்று தம்முடைய உணர்ச்சிகளை ஒலிகள் மூலம் பிறருக்கு உணர்த்தத் தலைப் பட்டானோ அன்று முதலே இசைக்கலை தோன்றி விட்டது. ஆனாலும், இந்தப் பொருளை உணர்த்து வதற்கு இப்படித்தான் அசைத்தல் வேண்டுமென்ற ஒரு கோட்பாட்டை மனதில் கொண்டு அதற்கேற்ப தம் அசைவுகளை என்று ஏற்படுத்திக் கொண் டானோ அன்று முதல் முறையான ஆடல் தோன்றியது.

நடனக் கலையின் முதற் கட்டம் கூத்தே ஆகும். கூத்து என்பது குழுவாகச் சேர்ந்து, ஒரு கதையை அபிநயித்துக் காட்டுவதாகும். இத்தகைய கூத்துக்களை இந்தியாவில் இடைப் பழங்கற்காலக் காலத்தில் ஓவியமாகத் தீட்டப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

பழங்கற்கால மனிதன், வட்டமாக நின்று மகிழ்ச்சியோடு கைகோத்து ஆடுகின்ற வகையில் மத்தியப் பிரதேசம் பிம்பட்கோ மலைத் தொடர்ச்சி யில் லகஜோர் என்னுமிடத்தில் வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவ்வோவியங்கள் சுமார் இருபது ஆயிரம் ஆண்டு களுக்கு முற்பட்டவையாகும், அதற்கு அடுத்து, இந்தியாவில் சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட நடன மாதின் செப்புத் திருமேனி ஒன்று அரப்பா நாகரீகத்தைச் சேர்ந்ததாகக் கிடைத் துள்ளது.

வரலாற்றுக் காலத்திற்கு வருவோமானால் கி.மு.500 அளவில் சிலாலின் என்பவரால் எழுதப்பெற்ற 'நடசூத்ரம்' என்னும் ஒரு நூல் இருந்ததாகக் கூறப்படுகிறது. அதற்குப் பிறகு நந்திகேஸ்வரர் எழுதிய 'பத்ரபரதார்ணவம்' என்னும் நூலும் வழக்கில் இருந்ததாக அறிய முடிகிறது. ஆனால் இவ்விரு நூல்களும் இது வரையில் கிடைக்கவில்லை. கி.மு.3-ஆம் நூற் றாண்டினது என்று சிலராலும், கி.பி. 2-ஆம் நூற்றாண்டினது என்று சிலராலும் கூறப்படும் பரத நாட்டிய சாஸ்திரம் தற்போது வழக்கில் இருக்கின்ற அனைத்து நூல்களிலும் மிகவும் பழமையானது என்றும் இது பரத முனிவரால் எழுதப்பட்டது என்றும் கூறப்படுகிறது. அதற்கு அடுத்து நந்திகேஸ்வரர் எழுதிய 'அபிநயதர்ப்பணம்' சாரங்கதேவர் எழுதிய 'சங்கீதரத்னாகரம்' நாரதர் எழுதிய 'தசரூபம்' ஆகிய வேறு நூல்களும் கிடைத் துள்ளன. ஆதலால், கிறித்து பிறப்பதற்கு முன்பு இருந்தே பரத நாட்டியம் மிகச் சிறப்பாக மக்களால் போற்றப்பட்டு வந்தது என்பது தெரிய வருகிறது.



ஆடும் அணங்கு: சிற்பம் - சோழர் காலம்.
சிதம்பரம் நடராசர் கோயில்

பரத நாட்டியத்துக்கென்று பல நூல்கள் வெளி வந்திருப்பபதைக் காணுகின்றபொழுது மக்கள் மனதில் நாட்டியம் மிக ஆழ்ந்த ஆர்வத்தை ஏற் படுத்தியிருக்கிறது என்பது உணர முடிகிறது.

சங்க காலத்தில் ஆடவரும் பெண்டிரும் நாட்டியக் கலையைக் கற்றுக் கொள்வதிலும் அதனைப் பொது இடங்களில் ஆடி, பொதுமக்களுக்கு உற்சாகம் ஊட்டுவதிலும் ஆர்வம்உடையவர்களாக இருந்திருக்கிறார்கள் என்பது இலக்கியங்கள் மூலம் தெரிய வருகின்றன. நாட்டியம் ஆடுகின்ற இடம் 'ஆடு களம்' என்றும் 'அரங்கு' என்றும் பெயர் பெற்றிருந்தது. நாட்டியம் முன் இரவில் நிகழ்த்தப் பெற்றதாகவும் அறிய முடிகிறது. நாட்டியத் திற்கு முன்னோடியாக விளங்கிய கூத்தில் பல் வகை இருந்திருக்கிறது என்பது இலக்கியங்களால் புலனாகிறது. வள்ளிக் கூத்து, பேடிக் கூத்து, குரவைக் கூத்து, கழைக் கூத்து, குடக் கூத்து போன்ற பல்வகைக் கூத்துக்கள் ஆடப்பெற்றன என்பது அகநானூறு, நற்றிணை பரிபாடல் போன்ற சங்க இலக்கியங்களால் புலனாகிறது.



ஆடும் அணங்கு: சிற்பம் - சிதம்பரம்
நடராசர் கோயில். சோழர் கலை.



ஆடு மகள் சித்தன்னவாசல்
ஓவியம் - பாண்டியர் காலம்.

குரவைக் கூத்தை மலை வாழ் குறவர்களும் மீனவர்களும் ஆடினார்கள் என்று முறையே சிலம்பும் மதுரைக் காஞ்சியும், உழவர் வயலில் ஆடினர் என்று பதிற்றுப்பத்தும் கூறுகின்றன. சங்க காலத்தை மருவிய சிலப்பதிகாரக் காலத்தில் கணிகையர் நடனத்திலே சிறந்து விளங்கினார்கள்

**நடன. காசிநாதன்**
க்குநர்
ல்பொருள் ஆய்வுத் துறை

# விடுவிக்கப்பட்ட தொழிலாளர்க்கு விடிவு காலம்

திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்தில் உள்ள, எல்லப்பட்டி என்ற கிராமம் மல்லீஸ்வரன் மலைத் தொடரில் உள்ள மலை அடிவாரத்தில், ஒட்டன்சத்திரத்தில் இருந்து வடகிழக்கில் 21 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள கிராமம் ஆகும்.

விடுவிக்கப்பட்ட தொழிலாளருக்கு ஒதுக்கப்பட்ட இடம் இது. மலை அடிவாரத்தில் சிறிய மலைக்குன்றுகளுக்கு இடையில் இது அமைந்துள்ளது. விடுவிக்கப்பட்ட தொழிலாளருக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தின் மேல் பரப்பு கெட்டியாகவும், சில இடங்களில் மண் மேடுகளாகவும் உள்ளன. இந்த நிலம் இவ்வாறு ஏற்பட்டதற்குக் காரணம் பல ஆண்டுகளாகக் காற்றினால் ஏற்பட்ட மண் அரிப்பு ஆகும். மேலும், மழை குறைவாகப் பெய்வதன் காரணமாக இதன் மேல்பரப்பு கெட்டியாக உள்ளது. மேற்கண்ட நிலங்களை வளப்படுத்துவதற்காகவும், நிலத்தின் வருவாயை அதிகப்படுத்துவதற்காகவும் கீழ்க்கண்ட வளப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வேளாண்மைப் பொறியியல் துறையின் மண்தள்ளும் இயந்திரங்கள் நிலத்தைச் சமப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன, நிலம் கெட்டியாக உள்ள இடங்களில் வெடி மருந்துகள் பயன்படுத்தப்பட்டு, கெட்டியான நிலம் உடைக்கப்பட்டு விளைச்சலுக்கு ஏற்றதாக மாற்றப்படுகின்றன. மேற்கண்ட கிராமத்தில் உள்ள விடுவிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடம் 3 விழுக்காடு முதல் 15 விழுக்காடு வரை நிலம் சரிவாக உள்ளது.

இத்துறையில் உள்ள உழுவை இயந்திரங்கள் மூலம், நிலத்தைச் சமப்படுத்திய பிறகு நிலம் உழுதல் செய்யப்படுகின்றது. உழுவை இயந்திரங்களில் சட்டிக் கலப்பைகளும், கொக்கிக் கலப்பைகளும் நிலத்தின் தன்மைக்கு ஏற்பப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

நிலம் சமம் செய்த பின்பும் மற்றும் உழுதல் பணி செய்த பிறகும் வண்டல் மண் இடப்படும். வண்டல் மண் இடுவதற்கு முன், இந்த நிலத்திற்கு வண்டல் மண் தேவை பற்றி, நிலத்தில் உள்ள சத்துக்கள் அளவைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும். ஆகவே, மண் பரிசோதனைக்காக, நிலத்தில் உள்ள மண்ணை, மதுரை திருநகரில் உள்ள அரசு மண் பரிசோதனை ஆய்வகத்திற்கு அனுப்பப்படும். மண் பரிசோதனை அறிக்கைகளைப் பார்த்த பிறகு, வண்டல் மண் நிலத்திற்கு இடப்படும்.

மேற்கண்ட நிலங்களில் உள்ள ஓடைகளில் மண் அரிப்பைத் தடுப்பதற்காக ரூ.7,000 முதல் ரூ.10,000 வரையில் மதிப்பீடு தயார் செய்து தடுப்பணைகள் கட்டப்படும்.

எல்லப்பட்டி கிராமத்தில் விடுவிக்கப்பட்ட தொழிலாளர்களுக்காகத் திறந்த கிணறுகள் 11 எண்கள், ஒன்றின் மதிப்பு சுமார் ரூ.50,000 மதிப்பீட்டில் மற்றும் ஒரு கிணறு ரூ.62,000 மதிப்பீட்டில் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

6.15 எக்டேர் நிலப்பரப்பில் சுமார் ரூ.0.40 இலட்சம் மதிப்பில் சம உயரக் கற்கோட்டை பணி செய்யப்படும். இந்தச் சம உயரக் கற்கோட்டைப் பணிகள் படிமட்டப் பணிகள் முடிவுற்ற பிறகு செய்யப்படும். இந்தப் பணிகள் இத்துறையின் விதிகளின்படி செய்யப்படும்.

49.51.5 எக்டேர் நிலத்தில் ரூ.0.175 இலட்சம் மதிப்பில் குண்டுப்பட்டி கிராமத்தில் மரம் நடும் பணி செய்யப்படவுள்ளது. விடுவிக்கப்பட்ட தொழிலாளர்களின் விருப்பத்தின்படி பிளம்ஸ், பீச்சஸ், கீரான்டில் போன்ற மரக்கன்றுகள் நடப்படும்.

சுமார் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் நிலத்தைச் சமப்படுத்துதல், ஆழ உழுதல், திறந்த கிணறு மற்றும் குழாய்க் கிணறு அமைத்தல், தடுப்பு அணைகள் கட்டும் பணி ஆகியவை மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

விடுவிக்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தைச் செப்பனிடும் பணியை, திண்டுக்கல்-காயிதேமில்லத் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு சக்திகாந்த தாஸ் அவர்கள் பார்வையிடுகிறார்.



தென் ஆர்க்காடு மாவட்டம்

# ஆதிதிராவிடர் நலம் பெற அரிய திட்டங்கள்

**வ**றுமைக்கோட்டின் கீழ் நலிவுற்று வாழ்கின்ற ஆதிதிராவிட மக்களின் ஏழ்மையைப்போக்கி வளம் பெறச் சிறு தொழில்களை நடத்தி வாழ்க்கையில் முன்னேற சுயவேலைவாய்ப்புக் கடன் வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன.

880 பேர்களுக்கு ரூ.52.80 இலட்சம் கடனாக, அதில் ரூ.26.40 இலட்சம் வழங்குவதற்கு இலக்கு நிர்ணயிக்கப் பட்டு, இதுவரை இத்திட்டத்தின் கீழ் பெட்டிக்கடை, மளிகைக் கடை, சைக்கிள் கடை, ஒலிபெருக்கி, மாவு அறைக்கும் இயந்திரம், பாய் முடைதல், செங்கல் காளவாய், சுண்ணாம்புக் காளவாய், காலணிகள் தயாரித்தல், காய்கறிகள் விற்பனை, கயிறு உற்பத்தி போன்ற இனங்களில் 563 பேர்களுக்கு ரூ.16,80,000 மானியம் வழங்கி செலவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், தாட்கோ மூலம் வேளாண்மை மற்றும் சுயவேலை வாய்ப்புப் பயிற்சி ஆகிய திட்டங்களும் செயல்படுத்தப்படு கின்றன. அதன் விவரம் வருமாறு:

## தொழில் நுட்பப் பயிற்சித் திட்டம்

இதில் ஏழை ஆதிதிராவிடர்களுக்கு தொழிற் பயிற்சி இலவசமாக வழங்கப் பட்டுள்ளது. 60 நபர்களுக்கு ரூ.1.56 இலட்சம் மதிப்பில் பயிற்சி அளிப்பதற்கு இலக்கு நிர்ணயம் செய்து, இதுவரை 60 நபர்களுக்கும், ரூ.1.56 இலட்சம் மதிப் பில் இலவசத்தொழிற் பயிற்சி வழங்கப் பட்டுள்ளது.

## ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்

இத்திட்டத்தில் ஏழை ஆதிதிராவிடர் களுக்கு ஆழ்குழாய்க் கிணறு அமைக்க மானியத்துடன் கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 10 நபர்களுக்கு ரூ.1 இலட்சம் வழங்குவதற்கு இலக்கு நிர் ணயம் செய்யப்பட்டு, இதுவரையில் 10 நபர்களுக்கும் ரூ.1 இலட்சம் வழங்கப் பட்டு விட்டது.

## மின்சார மோட்டார் மற்றும் பம்ப் செட் வழங்குதல்

இத்திட்டத்தில் ஆதிதிராவிடர்களுக்கு மின்சார மோட்டார் மற்றும் பம்பு செட் கடனாக மானியத்துடன் வழங்கப்படு கிறது. 1990-91 இல் 35 நபர்களுக்கு ரூ.1.4875 இலட்சம் வழங்குவதற்கு இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு, இது வரை 35 நபர்களுக்கும் ரூ.1.4875 இலட்சம் மதிப்புள்ள மோட்டார் பம்ப் செட்டுகள் வழங்கப்பட்டுள்ளன.

## மோட்டார் அறை கட்டுதல்

இதில் ஆதிதிராவிடர்களுக்கு மோட்டார் அறை கட்டிக் கொடுக்கப்படுகிறது. 1990-91-ஆம் ஆண்டில் 20 பேர் களுக்கு ரூ.30 ஆயிரம் மதிப்பில் கட்டிக் கொடுக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை 3 நபர்களுக்கு ரூ.4,500 வழங்கப்பட்டுள்ளது.

## மாட்டு வண்டியும், இரு மாடுகளும்

இத்திட்டத்தில் ஆதிதிராவிடர்களுக்கு [illegible] வண்டியும், மாடும் வழங்கப்படுகிறது. 1990-91 ஆம் ஆண்டில் 100 பேருக்கு ரூ.3 இலட்சம் கொடுக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை 100 பேருக்கு ரூ. 3 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

## டயர் வண்டி மற்றும் இருமாடுகள் வாங்க

இதில் ஏழை ஆதிதிராவிடர்களுக்கு டயர் பொருந்திய இரட்டை மாட்டு வண்டியும், இரண்டு மாடுகளும் வாங்க கடன் வழங்கப்படுகிறது. 1990-91-ஆம் ஆண்டிற்கு 100 நபர்களுக்கு ரூ.6 இலட்சம் கடன் வழங்க இலக்கு நிர்ண யிக்கப்பட்டு இதுவரை 100 பேர்களுக்கும் ரூ.6 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

## உழவு மாடுகள் வாங்க

இத்திட்டத்தின் கீழ், ஏழை ஆதி திராவிடர்களுக்கு உழவு மாடு வாங்கக் கடன் வழங்கப்படுகிறது. 1990-91-ஆம் ஆண்டிற்கு 200 நபர்கள் உழவு மாடு வாங்க ரூ.3.270 இலட்சம் இலக்கு நிர்ண யிக்கப்பட்டு, இதுவரை 175 நபர்களுக்கு ரூ.2,86,125 மதிப்பில் உழவு மாடு வாங்கக் கடன் வழங்கப்பட்டிருக்கிறது.

## பவர் ஸ்பிரேயர் மற்றும் ஒரு சைக்கிள்

ஏழை ஆதிதிராவிடர்களுக்கு இத் திட்டத்தில், பவர் ஸ்பிரேயர் மற்றும் ஒரு சைக்கிள் வாங்கக் கடன் வழங்கப்படு கிறது. 1990-91 ஆம் ஆண்டிற்கு 30 நபர்களுக்கு ரூ.0.48 ஆயிரம் இலக்கு நிர்ண யிக்கப்பட்டு, இதுவரை 10 நபர்களுக்கு ரூ.0.16 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் தனி நபர் களுக்கு வங்கிக் கடன் வழங்கப்படுகிறது. 1990-91 இல் 500 ஆதிதிராவிடர் களுக்கு ரூ.15 இலட்சம் வழங்கப்பட்டு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை 285 ஆதிதிராவிடர்களுக்கு ரூ.8,55,000 வழங்கப்பட்டுள்ளது.

## தனி நபர் தொழில் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், 1990-91 ஆம் ஆண்டிற்கு 115 ஆதிதிராவிடர் களுக்குத் தனி நபர் தொழில் திட்டத்தின் கீழ் கடன் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 50 ஆதிதிராவிடர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் ரூ.7,50,000 வழங்கப்பட்டுள்ளது.





இசைக் கலைஞர்களுடன் தோன்றும் நாட்டிய மகளிர்: நடராசர் கோயில் சிற்பங்கள் - சிதம்பரம்.

என்பதும், மாதவி தலைசிறந்த நாட்டிய மங்கையாகத் திகழ்ந்தார் என்பதும், அவளுடைய நடனத் திறமையைக் கண்டுவியந்த மன்னன் அவளுக்குத் ''தலைக் கோலி'' என்ற விருதை அளித்துப் பாராட்டினான் என்பதும் சிலம்பு செப்பும் செய்திகளாகும். ஆதலால் கி.பி.4 அல்லது கி.பி.5 ஆம் நூற்றாண்டு அளவில் ஆடற்கலை மிகச் சிறந்த இடத்தைப் பெற்றுவிட்டது என்பது தெரிய வருகிறது. ஆடல்களை இறைவனே ஆடியதாகவும், பதினோரு வகையான ஆடல் இறைவனால் ஆடப்பெற்றது என்றும் கூறப்படுகிறது.

அவை: 1. அல்லிக் கூத்து, 2. கொடுகொட்டியாட்ல், 3. குடையாடல், 4. குடக் கூத்து, 5. பாண்டரங்கம், 6. மல்லாடல் 7. துடிக்கூத்து, 8. கடையக் கூத்து, 9. பேடாடல், 10. மரக்காலாடல், 11. பாவைக் கூத்து என்பவையாகும்.

இவற்றில் முதல் ஆறு ஆடல்களும் நின்று ஆடுவது என்பதையும்; பின்வரும் ஐந்தும் வீழ்ந்து ஆடுவது என்பதையும் கீழ்வரும் பாடல் புலப்படுத்துகிறது.

''அல்லியும் கொடி குடை குடம் பாண்டரங்கம்
மல்லுடன் நின்று ஆடல் ஆறு''

''துடி கடையம் பேடு மரக்காலே பாவை
மடிவுடன் விழுந்தாடல் ஐந்து''

- மேற்காணும் ஒவ்வொரு கூத்தும் எக்காலத்து இறைவனால் ஆடல் பெற்றது என்பதை அடியார்க்கு நல்லார் தம் உரையில் விரிவாக விளக்குகிறார். மேலும், தன் காலத்திலிருந்த இரு நாட்டிய நூல்களான 'கூத்தநூல்' 'பரதசேனாபதியம்' ஆகிய இரு நூல்களையும் மேற்கோள் காட்டியுள்ளார்.

இந்தியாவில் குப்தர்கள் ஆட்சி செய்த காலத்தைப் பொற்காலம் என்று வரலாற்று ஆசிரியர்கள் வருணிப்பர். அவர்கள் காலத்தில் அனைத்துக் கலைகளும் நன்கு வளர்ச்சியுற்றன. குப்தர்கள் காலத்தைச் சார்ந்ததாகக் கருதப்படும் ஓவியங்கள் சில விந்திய மலைச் சாரலில் உள்ள பாக் என்னும் ஊருக்கு அருகில் காணப்படும் மலைக்குகையில் தீட்டப்பட்டுள்ளன. அங்கு காணப்பெறும் பல்விதக் காட்சிகளில் நாட்டியச் சிறப்பை எடுத்து இயம்பும் காட்சியும் உள்ளது. நடன மகளிர் சிலர் வட்டமாக நின்று கொண்டு கோலாட்டம் அடிப்பது போன்று ஒரு காட்சி மிக எழிலுடன் தீட்டப்பட்டிருக்கிறது. குப்தர் கால நடனக் கலை வளர்ச்சிக்கு இவ்வோவியம் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

தமிழ்நாட்டில் புதுக்கோட்டைக்கு அருகிலுள்ள சித்தன்னவாசலில் காணப்பெறும் குகைக் கோயிலில் நடன மங்கையர் இருவர் ஓவியங்கள் ஒப்பிலா அழகுடன் மிளிர்கின்றன. இவ்வோவியம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் தீட்டப்பட்டிருக்கும் என்று வரலாற்று ஆசிரியர்கள் கணித்துள்ளனர். இந்நாட்டிய அரம்பையர்கள் இருவரின் ஓவியங்களும் நாட்டியக் கலைக்கு இலக்கணமாகத் திகழ்கின்றன. இடப்புறத் தூணில் தீட்டப்பட்டிருக்கிற ஓவியம் இடக் கரத்தைக் கஜ ஹஸ்தமாக வீசி, வலக் கரத்தில் அபயம் காட்டி, மலர் முகத்தை இலேசாக இடப்பக்கம் திருப்பி, உடலை வலப்பக்கம் சாய்த்து ஆடும் பாங்கு பார்ப்போர் மனதைப் பரவச மூட்டும் நிலையில் உள்ளது.

மாமன்னன் இராசராசனால் எழுப்பப்பட்ட தஞ்சைப் பெருவுடையார் கோயில் உண்ணாழியின் பின்புறச் சுவரில் தீட்டப்பட்டிருக்கும் பல ஓவியங்களில் ஒரு நடன மாதின் உருவம் உலகப் புகழ் பெற்ற ஓவியமாகும். இவ்வோவியத்தில் காணப்படுவது போன்ற நாட்டிய மகளிர்கள் 400 பேர் தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் ஒவ்வொரு நாளும் இறைவன் திருவடி முன்பு தம் ஆடற் கலையை அர்ப்பணித்து வழிபட்டிருக்கின்றனர் என்பது தஞ்சைப் பெருவுடையார் கோவிலில் எழுதப்பெற்றிருக்கும் கல்வெட்டுகள் மூலம் புலனாகிறது. இதே கோவிலில் இறைவன் ஆடிய தாண்டவக் கரணங்கள் 108-இல் 81 கரணங்கள் கல்லிலே வடிக்கப்பட்டு அழகுறக் காணப்படுகின்றன. ஆதலால், தஞ்சையில் நடனக் கலையைக் கற்றுத் தரும் நாட்டியக் கல்விச் சாலையே இருந்திருக்குமோ என்ற ஐயம் எழுகிறது. மேற்காணும் சிற்பங்கள் மற்றும் ஓவியங்களின் காலம் சுமார் 1000 ஆண்டுகளுக்கு முற்பட்டவையாகும்.

இறைவனை ஆடல் வல்லவனாகச் சித்திரித்துக் காட்டும் அற்புதத் திருமேனி தமிழகத்தில் தனிச் சிறப்புப் பெற்ற திருமேனியாகும். இத்திருமேனியைக் கண்டு வியக்காத மாந்தர் இனம் உலகத்தில் எந்தப் பகுதியிலும் இல்லை என்று கூறலாம். இந்தியாவிற்குப் பெருமை சேர்க்கும் பல்விதக் கலைப் பொருட்களில் தமிழகத்தைச் சார்ந்த 'ஆடல் வல்லான்' திருமேனி உன்னதக் கலைக் கருவூலமாகும். இறைவன் ஆடியதாகப் பல்வித நடனங்கள் குறிப்பிடப்படுகின்றன. ஒவ்வொரு சமயத்திலும் ஒவ்வொரு நடனம் இறைவனால் ஆடப்பட்டது என்று தெரிய வருகிறது. சிவபெருமான் ஆண்களுக்குரிய 'தாண்டவ' நடனத்தையும்; உமையவள் பெண்களுக்குரிய 'லாஸ்ய' நடனத்தையும் உருவாக்கினார்கள் என்றும் திருமால், நாட்டியத்தின் நான்கு வகை பாணிகளையும் உருவாக்கினார் என்றும், பரதர் நாட்டியக் கலையினை உலகுக்கு அறிமுகப்படுத்தினார் என்றும் ஒரு கருத்து நிலவுகிறது. சிவன் ஆடியதாகக் கூறப்படும் பல்வகை ஆடல்களில் 'கொடிகொட்டி' 'பாண்டரங்கம்', கபாலம் ஆகிய மூன்றும் வியந்து போற்றப் படுகின்றன. ஊர் எரிகின்ற காலத்து இறைவன் கை கொட்டி ஆர்த்து ஆடியதால் இதற்கு 'கொடி கொட்டி' 'கொட்டி தேசம்' எனவும் பெயர்கள் வழங்கப்பட்டன, என்று குறிக்கப்படுகிறது. இறைவன் கொடுகொட்டி என்னும் திருக் கூத்தை ஆடும் போது இறைவி அருகில் நின்று தமது கைகளில் சீர் எனும் தாளத்தைக் கொட்டினாள் என்று கலித் தொகை கூறுகிறது.

இறைவன் மூன்று புரங்களையும் அழித்து அவுணர்கள் வெந்து வீழ்ந்த சாம்பலைப் பூசி ஆடுவது 'பாண்டரங்கம்' என்று கூறப்படுகிறது. பாண்டரங்கக் கூத்தை இறைவன் ஆடியபோது உமையவள் அருகில் நின்று தூக்கு என்னும் தாளத்தைக் கொட்டியதாகக் கலித்தொகை கூறுகிறது. கொடுகொட்டி, பாண்டரங்கம் ஆகிய இரண்டு கூத்தும் சிவன் திரிபுரம் எரித்த நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு ஆடப்பட்டவை. கபாலத்தைக் கையில் ஏந்தி சிவபெருமான் ஆடும் கூத்து 'கபாலக் கூத்து' என்று வழங்கப்பட்டது.

கூத்துக்களின் நாயகனாக விளங்கும் சிவ பெருமான் காளிதாண்டவம், கௌரிதாண்டவம், ஆனந்த தாண்டவம் என்று எழுவகைத் தாண்டவத்தையும் ஆடியுள்ளான் என்றும்; ஆனந்த தாண்டவம் அனைத்து தாண்டவங்களுக்கும் சிகரமாக அமைந்துள்ளது என்றும் கருதப்படுகிறது.

ஆக்கல், அழித்தல், காத்தல், அருளல், மறைத்தல் எனும் ஐந்தொழிலையும் ஒரு சேரச் செய்யும் தாண்டவம் ஆனந்த தாண்டவம் என்று போற்றப் படுகிறது. அது மட்டுமல்லாமல், நிலம், நீர், தீ, காற்று விசும்பு என்ற ஐம்பூதங்களையும் ஒரு சேர இணைத்து அனைத்துக்கும் தாமே ஆதாரம் என்பதையும் காட்டுவதாகக் கொள்ளலாம் என்று தோன்றுகிறது.

இறைவனின் ஊன்றிய திருப்பதம் நிலத்தையும், முடியில் அணிந்துள்ள கங்கை நீரையும், இடக்கையில் ஏந்தியுள்ள அனல் தீயையும், இருபுறமும் பறந்து செல்கின்ற விரிசடையும் ஆடையும் காற்றையும், பிரபை விசும்பையும் சுட்டுவதாகக் கருதலாம்.

எனவே, பஞ்ச பூதத்துக்கும் நாயகனாக இருந்து, பஞ்ச தொழில்களையும் செய்கின்ற செயலை வெளிப்படுத்துவதே ஆனந்த தாண்டவத்தின் உட்கருத்து என்று உணர்த்துகிறது.



நடன மங்கை ஓவியம்: சித்தன்னவாசல்,
கி.பி. 9-ஆம் நூற்றாண்டு.

திருநெல்வேலி மாவட்டம் கடையநல்லூருக்கு அருகில் உள்ள திருமலைப்புரம் கோயிலில் பாண்டியர் கால ஓவியம் காணப்படுகிறது. இவ்வோவியத்தின் ஓரிடத்தில் நடமாடும் மங்கையும் மத்தளம் கொட்டும் மற்றொரு உருவமும் தீட்டப் பட்டுள்ளன. இதனை அடுத்து சைவர்களால் கோயில் என்று போற்றிப்பாராட்டப்படும் தில்லை நடராசப்பெருமான் ஆலயத்தில் மேற்குக் கிழக்குக் கோபுரங்களில் நடன மங்கையர்களின் சிற்பங்களும் அச்சிற்பங்களின் கீழே அவை என்னென்ன கரணங்களைத் தெரிவிக்கின்றன என்றும் எழுதப் பெற்றுக் காணப்படுகின்றன. அதே போன்று குடந்தைச் சாரங்கபாணி கோயில் கோபுரத்திலும், திருமுதுகுன்றம் திருவண்ணாமலை அண்ணாமலை ஆலயங்களின் கோபுரங்களிலும் நடனச் சிற்பங்கள் செதுக்கப்பெற்று நடனக் கலையின் மேன்மையைப் பறை சாற்றுகின்றன.

ஆதலால், இந்தியத் திருநாட்டில் ஆடற்கலையானது கற்காலம் தொடங்கி தற்காலம் வரை நிலைத்த புகழோடும் பெருமையோடும் தொடர்ந்து விளங்கி வருகிறது என்பதை நாம் அறிந்து இன்புறலாம்.

## வளரும் வேளாண்மை

# கால்நடைகளுக்குச் சிறந்த தீவனம்

நமது விவசாயிகளது வாழ்விலும் கிராமப் பொருளாதாரத்திலும் கால்நடைகளின் பங்கு முக்கியமானதாகும். உலகிலேயே நமது நாட்டில் தான் அதிக எண்ணிக்கையில் மாடுகளும், எருமைகளும் உள்ளன. 26 கோடி மாடுகளும், எருமைகளும், 14 கோடி செம்மறியாடுகளும் வெள்ளாடுகளும் உள்ளன.

தற்சமயம் நமது நாட்டில் ஓர் ஆண்டில் 50 மில்லியன் டன் பால் உற்பத்தியாவதாகவும் அதன் மதிப்பு, ரூ.20,000 கோடி எனவும் கணக்கிடப்பட்டுள்ளது. பலனும் வருவாயும் அளிக்கும் நமது கால்நடைகளுக்குப் போதுமான அளவிலும் தரத்திலும் தீவனம் வழங்கப்பட வேண்டும். கிடைக்கும் குறைந்த அளவு மழை மற்றும் நீர்ப்பாசன வசதி கொண்டு சாகுபடி செய்யக் கூடிய தீவன மரங்களை அதிகம் சாகுபடி செய்து பயன் பெறுவதே இன்றைய நிலையில் தீவனப் பற்றாக் குறையைப் போக்கச் சிறந்த வழியாகும்.

பல ஆண்டுகளுக்கு முன்பே நமது கிராமங்களில் பசுந்தாள் உரத்திற்காகக் கிளிரிசிடியா என்ற மரம் அறிமுகப்படுத்தப்பட்டது. சுலபமாகச் சாகுபடி செய்யக்கூடியதும், கடுமையான வறட்சியையும் தாக்குப் பிடித்து, நீண்டகாலம் பலனளிக்கக் கூடியதுமான கிளிரிசிடியா மரத்தின் இலைகளைக் கால்நடைகளின் தீவனமாகப் பயன்படுத்தலாம். இந்தக் கிளிரிசிடியா மரம் புதியது அல்ல. பழைய மரம்தான். இந்த மரத்தின் இலைகளைக் கால்நடைகளுக்குத் தீவனமாகப் பயன்படுத்தலாம். என்பது புதிய செய்தியாகும்.

கிளிரிசிடியா மரம் பல ஆண்டுகளுக்கு முன்பே வேளாண்மைத் துறை, மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்களால் அறிமுகப் படுத்தப்பட்டது. நிலத்தின் வளத்திற்காக, பசுந்தாள் உரத்திற்காகத்தான் அறிமுகம் செய்யப்பட்டுப் பயன் படுத்தப்பட்டது. பல ஆண்டுகளுக்கு முன் நட்டு வளர்க்கப்பட்ட, கிளிரிசிடியா மரங்கள் பல ஆண்டுகளின் கடுமையான வறட்சியினையும் தாக்குப் பிடித்து இன்றும்கூட செழித்தோங்கி வளர்ந்துள்ளதைப் பார்க்கலாம்.

சமீப காலங்களில் பல வெளி நாடுகளிலும் நமது நாட்டிலும் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் முடிவுகளின்படி கிளிரிசிடியாவின் இலைகளைச் சிறந்த கால்நடைத் தீவனமாகப் பயன்படுத்தலாம் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதன் தொடர் விளைவே இந்தப் புதிய யோசனையாகும்.

**டாக்டர் எஸ். சுப்பையா,**
**துணை இயக்குநர்,**
**கால்நடைப் பண்ணை,**
**கொருக்கை**

### கிளிரிசிடியாவில் உள்ள சத்துக்கள்

| | அளவு |
|---|---|
| மொத்தசக்தி(Gross Energy) | 4600-5000K.cal/Kg |
| செரிமானத் தன்மை(Digestibility) | 48-77% |
| நைட்ரஜன்(Nitrogen) | 3-4.5% |
| புரதச்சத்து(Protein) | 18-30% |
| சாம்பல் சத்து(Ash) | 6-10% |
| சுண்ணாம்புச் சத்து(Calcium) | 1-2% |
| பாஸ்பரஸ்(Phospherus) | 0.2-0.3% |
| பொட்டாசியம்(Potassium) | 1.6-3.5% |
| மெக்னீசியம்(Magnesium) | 0.4-0.6% |

### கிளிரிசிடியா கால்நடைகளுக்குச் சிறந்த தீவனம்

கிளிரிசிடியா இலைகளில் உள்ள புரதச் சத்தில் சுபாபுல் மற்றும் குதிரை மசால் இலைகளில் உள்ள புரதச் சத்தில் உள்ள அத்தியாவசிய அமினோ அமிலங்களைக் காட்டிலும் (Essential Amino Acids) கூடுதலாக உள்ளது. ஆகவே கிளிரிசிடியா மற்ற தீவனப் பயிர்களைக் காட்டிலும் சிறப்பான தீவனமாய் விளங்குகிறது. பருத்திக் கொட்டை, புண்ணாக்கு, தவிடு மற்றும் கம்பெனி கலப்புத் தீவனங்களில் உள்ள ஊட்டச் சத்துக் களுக்குச் சமமான ஊட்டச் சத்து கிளிரிசிடியா இலைகளில் உள்ளது; 2 கிலோ, உலர்ந்த கிளிரிசிடியா இலைகளில் ஒரு கிலோ கடலைப் புண்ணாக்கிற்குச் சமமான சத்துள்ளது. வைட்டமின் 'ஏ' உயிர்ச் சத்தும், கால்சியம், பாஸ்பரஸ், பொட்டாஷ் போன்ற உலோகச் சத்துக்களும் இதில் மிகுந்துள்ளன.

நாள் ஒன்றுக்கு 5 முதல் 15 கிலோ வரை கிளிரிசிடியா இலைகளைக் கறவைப் பசு மாடுகளுக்கும், எருமைகளுக்கும் தீவனமாகக் கொடுத்தால் பருத்திக்கொட்டை, புண்ணாக்கு, தவிடு மற்றும் விலை மிகுந்த கம்பெனி கலப்புத் தீவனம் போடுவதைக் குறைக்கலாம்; தவிர்க்கலாம். கிளிரிசிடியாவைத் தீவனமாக உட்கொள்ளும் கறவைப் பசுக்களும், எருமைகளும் அதிகமாகப் பால் வழங்கும். கிளிரிசிடியா தீவனமாக உட்கொள்ளும் கறவை மாடுகளிலிருந்து கிடைக்கும் பாலில் வெண்ணெய்ச் சத்தும் கூடுதலாக இருக்கும். இதனால் அந்தப் பாலின் விலையும் கூடும்.

வளரும் இளம் கன்றுகளுக்குக் கிளிரிசிடியாவைத் தீவனமாகக் கொடுத்தால் அவற்றின் உடல் வளர்ச்சி விரைவாகவும், சிறப்பாகவும் இருக்கும் ஒரே ஆண்டில் நன்கு வளர்ந்து சினைப் பருவம் அடையும். நாள் ஒன்றுக்கு கன்றுக்கு ஒன்று முதல் 3 கிலோ வரை கிளிரிசிடியாவைத் தீவனமாகக் கொடுக்கலாம். வெள்ளாடுகளுக்கும், செம்மறியாடுகளுக்கும் கிளிரிசிடியாவைத் தீவனமாக கொடுக்கலாம். அதனால் அவற்றின் உடல் எடை விரைவாகக் கூடி இறைச்சி உற்பத்தி அதிகமாகி இலாபம் அதிகம் கிட்டும். ஒரு நாளைக்கு ஒரு ஆட்டிற்கு 1 முதல் 3 கிலோ வரை கொடுக்கலாம்.

கோழிகளுக்கும், கிளிரிசிடியாவின் இலைகளைத் தீவனமாக வழங்கலாம். ஆனால் கோழிகளின் தினசரி தீவனத்தில் 2 சதவிகிதம் முதல் 4 சதவிகிதம் மட்டுமே கிளிரிசிடியாவைத் தீவனமாகக் கோழிகளுக்கு வழங்கலாம். அதற்குமேல் கொடுக்கக்கூடாது. கோழிப்பண்ணைகளைச் சுற்றிலும் கிளிரிசிடியா மரங்களை நட்டு மரங்களை உண்டாக்கினால் வெய்யில் காலங்களில் வெய்யிலினால் ஏற்படும் பாதிப்பைத் தவிர்க்கலாம். குளிர்ச்சியான விரும்பத்தக்க சுற்றுப்புறச் சூழ்நிலை உருவாக்கவும் ஏதுவாகும். அதே சமயம் கோழிகளுக்கும் மற்ற கால்நடைகளுக்கும் தேவைப்படும் தீவனத்தையும் பெறலாம்.

★ நல்ல நண்பர்களைத் தேடிக் கொள்; அடுத்தபடியாக நல்ல நூல்களைத் தேடிக்கொள்; இப்படிப்பட்ட செயல்களால்தான் நீ உயர முடியும்.

—கோல்டன்

கால்நடைகளைப் பாதிக்கும் பேன் போன்ற ஒட்டுண்ணியை ஒழிக்க:- கால்நடைகள், கோழிகள் மற்றும் நாய்களைப் பாதிக்கும் பேன், தெள்ளுப் பூச்சிகள் மற்றும் சில வெளிப்புற ஒட்டுண்ணிகளை ஒழிக்க கிளிரிசிடியா இலைகளைக் கொதிக்கும் நீரில் போட்டு அந்த நீரைத் தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

முதன் முதலாகக் கால்நடைகளுக்குக் கிளிரிசிடியாவைத் தீவனமாகப் போடும்பொழுது சில கால்நடைகள் ஆரம்பத்திலேயே நன்கு விரும்பித் தின்னும். ஆனால் பல கால்நடைகள் முதலில் கிளிரிசிடியாவைத் தீவனமாகப் போடும்பொழுது தின்பதற்குத் தயங்கும். இது ஒரு பிரச்சனையே. ஆனால் இந்த ஆரம்பத் தயக்கம் தீர்ந்து கிளிரிசிடியாவைத் தின்ன ஆரம்பித்தபின் மற்ற தீவனப் பயிர்களைக் காட்டிலும் கிளிரிசிடியாவையே அதிகம் விரும்பிச் சாப்பிடும்.



கிளிரிசிடியாவை முதலில் தீவனமாகத் தின்னத் தயங்கும் கால்நடைகளைக் கிளிரிசிடியாவை விரும்பித் தின்ன வைப்பதற்குச் சில வழிமுறைகளை மேற்கொள்ளலாம். கால்நடைகள் நன்கு விரும்பித் தின்னும் பசும்புல், வைக்கோல் மற்றும் சோளத் தட்டை போன்ற தீவனங்களுடன் கிளிரிசிடியாவைக் கலந்து போடலாம். உப்பு மற்றும் மொலாஸஸ் (MOLASSES) எனப்படும் சர்க்கரை ஆலையின் கழிவைக் கிளிரிசிடியாவின் இலைகளில் தெளிப்பது. கிளிரிசிடியாவை அறுவடை செய்தபின் ஒரு நாள் வாட விட்டுப் போட்டால் சில கால்நடைகள் அதனை விரும்பிச் சாப்பிடும். கிளிரிசிடியாவைப் பசும் சோளப் பயிர் மற்றும் பசும்புல்களுடன் சேர்த்து (SILAGE) முறையில் பக்குவப்படுத்திப் போடுவதன் மூலம் கால்நடைகள் நன்கு விரும்பிச் சாப்பிடும். இளம் கன்றுகள் புல் போன்ற தீவனத்தை முதலில் தின்ன ஆரம்பிக்கும் நிலையில் கிளிரிசிடியாவைக் கொடுத்துப் பழக்கலாம். கறவை மாடுகளைத் தவிர மற்ற கால்நடைகளின் முன்னால் கிளிரிசிடியாவைத் தீவனமாகப் போட்டு வேறு தீவனம் எதையும் போடாமல் விட்டுவிட்டால் கிளிரிசிடியாவைத் தின்னும் கட்டாய நிலை ஏற்படும். கிளிரிசிடியாவைச் சில கால்நடைகள் விரும்பித் தின்னும். கிளிரிசிடியாவை விரும்பித் தின்னாத கால்நடைகளை அதை நன்கு விரும்பித் தின்னும் கால்நடைகளுக்கு அருகில் கொண்டுவிட்டால் அதனைப் பார்த்துப் பழகும். கிளிரிசிடியாவின் இலைகளை உலர்த்தித் தூளாக்கிப் புண்ணாக்குத் தவிட்டுடன் கலந்து போடலாம்.

### தமிழகக் கால்நடைப் பராமரிப்புத் துறையின் சாதகமான பரிந்துரை

தமிழகக் கால்நடைப் பராமரிப்புத் துறை இயக்குநர், சென்னை அவர்களின் நக.எண்.124024/பி-1 90, நாள். 1.8.90 உத்தரவின்படி கிளிரிசிடியாவைத் தீவனப் பயிராக அங்கீகரித்து கால்நடைகளுக்குத் தீவனமாகப் பயன்படுத்தத் தக்க நடவடிக்கை எடுக்கும்படி அனைத்து அலுவலர்களுக்கும் அறிவுரை வழங்கப் பட்டுள்ளது பாராட்டுக்கும் மகிழ்ச்சிக்கும் உரியது.

# நிறம் மாறாமல் பற்களைப் பாதுகாக்கும் வழிமுறைகள்

முத்துப் போன்ற பற்கள் என்றால், பற்களின் அமைப்பும் நிறமும் முத்துப்போல் அழகாக இருக்கிறது என்பது தெளிவான கருத்து. எனினும் முத்தின் நிறம் தூய்மையான வெள்ளை அல்ல. இருந்தாலும் பற்கள் அந்த நிறம் அடைவதற்குப் பற்களின் பல பாகங்களான பற்சிப்பி, தந்தினி மற்றும் பற்கூழ் ஆகியவை உதவி புரிகின்றன.

வாயினுள் தெரியும் பற்களின் பாகம் பல்சிகரம் (CROWN) எனப்படும். பற்சிப்பி (ENAMEL) என்பது பற்களின் வெளிப்புறத்தில் அமையும் பாகம். இந்தப் பற்சிப்பி உள்ளே உள்ள தந்தினிகளை (DENTINE) முழுமையாக மூடுகின்றது. பற்களின் நடுபாகத்தில் அமைந்துள்ளது பற்கூழ்க்குழி (PULP). இவை தவிர, ஒவ்வொரு பல்லுக்கும் வேர்கள் உண்டு. இந்த வேர்கள் பற்களைத் தாடையுடன் இறுக்கமாக இருக்க உதவி செய்கின்றன. பற்களின் வெளிப்பாகமான பற்சிப்பி ஒளி ஊடுருவ வகையளிப்பதாக (TRANSLUCENT) அமைந்துள்ளது. அதனால் அதன் கீழே உள்ளே தந்தினியினுடைய நிறம் பற்சிப்பியின் வழியாக ஊடுருவித் தெரிந்து பல்நிறத்திற்குக் காரணமாகத் திகழ்கின்றது.

**கறைகளும் நிறம் மாறிய பற்களும்**

பற்கள் நிறம் மாறுவது என்பது இரண்டு காரணங்களால் உண்டாகும்:

1. பற்களின் மேல் படிந்துள்ள கறைகள் - வெளிக் காரணங்களால் (EXTRINSIC) உண்டாகும் கறைகள் மற்றும் நிற மாற்றங்கள்.

2. பற்களின் உள்ளே உள்ள திசுக்களிலிருந்து (INTERNAL TISSUES) உண்டாகும் நிற மாற்றங்கள் (INTRINSIC).

**வெளிக்காரணங்களால் (EXTRINSIC) உண்டாகும் நிற மாற்றங்கள்:**

பற்களின் மேலே படிந்துள்ள கறைகள் தற்காலிக நிற மாற்றங்களை ஏற்படுத்தலாம். இவை சாதாரணமாக உண்ணும் உணவிலிருந்தும், பானங்களிலிருந்தும் ஏற்படும். புகை பிடிப்பதனாலும் பற்கள் மேல் கறைகள் உண்டாகலாம். பற்களின் நிறமாற்றத்திற்கு இவையே பொதுவான காரணங்கள். இதனால் பற்கள் கருப்பு நிறமாகவோ, பழுப்பு நிறமாகவோ காட்சியளிக்கும். இவை தவிர, பற்சிப்பியின் மேற்புறச் சொரசொரப்பு, பற்கள் சீராக அமையாதிருத்தல், மற்றும் தினம் பற்களைத் தேய்க்காமல் இருப்பது போன்ற காரணங்களாலும், பற்கள் மீது கறை மற்றும் காரை படிந்து


**அ. பரமேசுவரன்**
பேராசிரியர் -
பல் பாதுகாப்புத்துறை
பல் மருத்துவக் கல்லூரி,
சென்னை.


பற்களின் நிறத்தில் மாற்றத்தை விளைவிக்கலாம். உமிழ் நீர் கெட்டியாக இருப்பதும், பற்களின் மேல் காரைபடிவதற்குக் காரணமாக விளங்கும். இந்த வகையான நிற மாற்றங்கள் பற்களில் பச்சை நிறமாகவோ (GREEN STAIN) கருப்புக் கறையாகவோ, பழுப்பு நிறமாகவோ காட்சியளிக்கக் கூடும்.

பற்களின் மேல் நிற மாற்றங்கள் உலோகப் பொருட்களாலும் ஏற்படலாம். இந்த நிற மாற்றங்கள் வேலை செய்யும் சூழ்நிலையிலிருந்து ஏற்படும் புழுதி மற்றும் புகையுடன் (FUMES) கலந்து உருவாகலாம், அல்லது இந்த உலோகங்கள் உள்ள மருந்துகளை உட்கொள்வதனாலும் வரலாம். இந்த உலோகங்கள் உள்ள மருந்துகளை உட்கொள்வதனாலும் வரலாம். இந்த உலோகக் கறைகள் வெள்ளி, தங்கம், செம்பு, இரும்பு நிக்கல், பாதரசம் (MERCURY) மாங்கனிஸ், காட்மியம், தகரம் போன்ற உலோகங்களால் உண்டாகலாம். இந்தக் கறைகள் உலோகங்களுக்கு ஏற்ப பச்சை நிறமாகவோ, கருப்பு நிறமாகவோ, ஊதா நிறமாகவோ மஞ்சள் நிறமாகவோ காட்சியளிக்கக் கூடும்.

**உள் காரணங்களால் (INTRINSIC) அதாவது திசுக்களிலிருந்து உண்டாகும் காரணங்களால் ஏற்படும் நிற மாற்றங்கள்:**

திசுக்களிலிருந்து உண்டாகும் நிற மாற்றங்கள் பல காரணங்களால் ஏற்படுகின்றன. அவை முக்கியமானவை:-

★ பரம்பரையாகத் தோன்றும் நிற மாற்றம் (HEREDITARY) இது குடும்பத்தில் உள்ள அனைவரிடமும் தென்படும்.

★ பற்கள் முளைக்கும் போது (ERUPTION) அல்லது பற்கள் உருவாகும் பருவத்தில் (DEVELOPMENT) கடுமையான நோய் வருவது மற்றும் அந்நோய்க்கு மருந்துவத்திற்காக உட்கொள்ளும் சில மருந்துகள், டெட்ராசைக்ளின் (TETRACYCLINE) ஆகியவையும் பற்கள் நிறம் மாறுவதற்குக் காரணமாகின்றன.

★ விபத்துகளிலிருந்தும் மற்றும் பற்களின் மீது ஏற்படும் அதிர்ச்சியினாலும் பல்லின் உள்புறமுள்ள பற்கூழ் சேதமடைந்து, பற்கள் உயிரின்மையுடன் (DEAD OR NON-VITAL) விளங்கலாம். இவையும் பற்கள் நிறம் மாறுவதற்குக் காரணமாக உள்ளன.

★ ஃபுளோரைட் (FLUORIDE) குடிக்கும் தண்ணீரில் இருக்கும் ஃபுளோரைட் அளவு அதிகமாக இருந்தால் (3-5 PPM) அவையும் பல் நிறம் மாறுவதற்குக் காரணமாகத் திகழும். இவ்வாறு பல்வேறு காரணங்களால் பற்கள் நிறம் மாற வாய்ப்புண்டு.

**பற்களின் நிறமாற்றங்களைச் சரி செய்யும் முறைகள்:**

1. பற்களின் மேலே படிந்துள்ள கறைகள், காரைகள் இவைகளைச் சுலபமாக எடுக்க முடியும். இவற்றை மருத்துவரிடம் சென்று சுத்தம் (SCALING) செய்து எடுத்து விடலாம். உணவுப் பொருட்களால் உண்டாகும் பழுப்பு மற்றும் கருப்புக் கறைகளைப் 'பாலிஷ்' செய்து எடுத்து விடலாம்.

2. உலோகக் கலப்புள்ள மருந்தினால் ஆன நிறமாற்றங்களையும் திசுக்களின் சேதத்தின் விளைவாக ஆன நிற மாற்றங்களையும் மற்ற காரணங்களினால் ஏற்படும் மாற்றங்களுக்கும், கறைகள் பற்களை எவ்வளவு தூரம் பாதித்திருக்கிறதே!- பற்சிப்பியை மட்டும் பாதித்திருக்கிறதா அல்லது உள்ளிருக்கும் தந்தினியையும் பாதித்திருக்கிறதா என்பதைப் பொருத்து மருத்துவ முறை மாறுபடும். இந்த நிற மாறுபாட்டால், அதிகப் பாதிப்பு இல்லாவிட்டால் ஒன்றும் செய்யாமலும் இருந்து விடலாம். இல்லையென்றால், கீழ்க்கண்ட வழி முறைகளால் அவற்றைச் சரி செய்யலாம்.

அ) புதுவிதமான பல் நிறத்திலுள்ள பல்லடைக்கும் பொருட்களால் நிற மாற்றத்தை மூடி மறைத்து விடலாம்.

ஆ) 'தொப்பி' போல் பல் அளவில் அதே நிறத்தில் செய்து நிறம் மாற்றம் தெரியாமல் மறைக்கலாம்.

இ) 'வெண்மைப் படுத்தும்' முறையைக் (BLEACHING) கடைப்பிடிக்கலாம்.

★ பற்களில் கரைபடிந்துள்ள பகுதியை லேசாகத் தேய்த்து ஓரளவுக்குக் கறையை அப்புறப்படுத்தி விடலாம். அதற்குப் பிறகு மீதம் இருக்கும் நிறக்குறைபாடுகளைப் பல் நிறத்தில் இருக்கும் பல் அடைக்கும் பொருட்களை வைத்துச் சமன் செய்து சீர் செய்து விடலாம் (COMPOSITE MATERIALS).

★ பற்தொப்பி (CROWNS) நிற மாற்றம் அதிகப்படியாக இருந்தால், பற்களை எல்லாப் புறங்களிலும் சிறிதளவு தேய்த்து எடுத்து விட வேண்டும். இதன் பிறகு, ஏற்கெனவே பல் இருந்த அளவிற்குப் பல்லின் மேல் செருகக்கூடிய 'தொப்பி' போல் செய்து அணிவித்து விடலாம். இவை பல்லின் நிறத்திலோ அல்லது தேவையான நிறத்திலோ செய்யலாம். அக்ரிலிக் (ACRYLIC) மற்றும் பீங்கான் பொருட்களால் செய்யப்படும். இந்தத் தொப்பிகள் பல்லின் நிறத்தில் அமையும், மேலும், இவை பல் நிற மாற்றத்தை முழுமையாக மறைத்து விடும். பல காலங்கள் உபயோகப் படுத்தும் வாய்ப்பு இவற்றிற்கு உண்டு. கடிக்க உபயோகப் படுத்தும் கடைவாய்ப் பற்களை இந்த முறையில் 'தொப்பி' போல் செய்து மூட வேண்டுமென்றால் அவற்றிற்கு அதிகமான அழுத்தும் திறன் (COMPRESSIVE STRENGTH) தேவைப் படுகிறது. ஏனென்றால் கடிக்கும் போது இவை உடையாமல் இருக்க வேண்டும். மேலும், கடிக்கும் பொருளையும் நன்றாக நசுக்க வேண்டும். அதனால் இவற்றிற்கு உடலுக்குக் கேடு விளைவிக்காத தங்கம் மற்றும் தங்கம் சேர்ந்துள்ள உலோகங்களினால் செய்வது அவசியமாகிறது.

**வெண்மைப் படுத்துதல் (BLEACHING)**

இது பல காலங்களாகச் செய்யும் முறை. இதனால் நிறம் மாறிய பற்களின் அடர்த்தியான மாற்றத்தையும் நன்றாகக் குறைக்க முடியும். ஓரளவுக்குக் குறைத்து சாதாரணப் பற்களின் நிறத்திற்குக் கொண்டு வர முடியும்.

**உயிரிழந்த பற்கள் (NON-VITAL TEETH)**

பற்கூழ்க் குழிக்கு ஏற்படும் அதிர்ச்சியினால் பல் சிகரம் சில மாறுபாடுகளை அடைந்து நிறம் மாறிவிட்டால் கடுமையான பழுப்பு நிறமாக மாறுகின்றது. இந்தப் பற்களை வெண்மை செய்வதால் (BLEACHING) நிறம் மாறுவது சிறிதளவேயாகும். பற்கூழ்க் குழியில் மாறுதல் ஏற்பட்டதால் வெண்மை செய்வதற்கு முன்பு பல்வேர் (ROOT CANAL TREATMENT) மருத்துவம் செய்ய வேண்டும். பிறகு, வெண்மை செய்து ஓரளவிற்கு நிறம் மாற்றலாம். அல்லது 'தொப்பி' போல் செய்து நிறம் மாற்றத்தை மறைத்து விடலாம்.

நிறம் மாறிய பற்களால் மனோநிலை மாறுதல்கள் ஏற்படலாம். சிறு வயதிலிருந்தே பற்களின் அழகைப் பராமரிக்கவே பலர் விரும்புவர். எந்த விதமான நிறமாற்றத்தையும் கூடிய சீக்கிரம் சரியான நிலைக்கு மாற்றினால் தாழ்வு மனப்பான்மை வராமல் தவிர்க்கலாம். பல் உடைந்திருந்தாலோ, நிறம் மாறியிருந்தாலோ சிலர் பேசுவதற்குக்கூட கூச்சப்படுவார்கள். எல்லா விதத்திலும் பின் தங்கும் மனப்பான்மை வரவும் வாய்ப்புண்டு. ஆகவே உடனடியாக, நிறம் மாறிய பற்களை (COSMETIC DENTISTRY) அழகுப் படுத்தும் பல் மருத்துவ முறைகளைக் கொண்டு இவ்வாறு சீர் செய்யலாம். அப்படிச் செய்வதன் மூலம் - 'பல் போனால் சொல் போச்சு' என்ற பழமொழிக்கு ஆளாகாமல் அவரவரும் தப்ப முடியும்.



**4-வது அட்டையில்:**

மாமல்லபுரத்தில் நடந்த வசந்த விழாவில், முக்கிய நிகழ்ச்சியாக இடம் பெற்ற பரத நாட்டியம், கிராமிய நடனம், குச்சிபுடி ஆகிய நடனக் காட்சிகள் 4-ஆம் அட்டையை அலங்கரிக்கின்றன.

## சிறுசேமிப்புத் துறை




எதாபாரா இன்னல்கள் ஏற்படுமுன் சேமியுங்கள். வரி செலுத்துவதைத் திட்டமிட்டு, இன்ஷுரன்ஸ் பாதுகாப்பும் பெறுங்கள். இன்றே கீழ்க்கண்ட சிறுசேமிப்புத் திட்டத்தில் ரூ.1,000/-ம் அதற்குமேலும் முதலீடு செய்து தனிநபர் விபத்து இன்ஷுரன்ஸ் பாலிசியைப் பெறுங்கள்.

**கீழ்க்கண்ட திட்டங்களின்கீழ் தனிநபர் விபத்து இன்ஷுரன்ஸ் பாதுகாப்பு கிடைக்கும்:**

- கிசான் விகாஸ் பத்திரம்
- தேசிய சேமிப்புத் திட்டம்
- அஞ்சலக மாதாந்திர வருமானத்திட்டம்
- அரசுப்பணியாளர்களுக்கான டெபாசிட் திட்டம் 1989
- தேசிய சேமிப்புப்பத்திரம் 8வது வெளியீடு
- 15 வருட பொது சேமநலநிதி
- அஞ்சலக குறித்தகால டெபாசிட்

### வருமான வரி விலக்குப் பெற தேசிய சேமிப்பில் முதலீடு செய்வீர்

| வசதிகள் | தேசிய சேமிப்பு பத்திரம் 8-வது வெளியீடு | பொதுசேம நலநிதி | தேசிய சேமிப்பு திட்டம் |
|---|---|---|---|
| வட்டி | 12% | 12% | 11% |
| முதலீட்டுக்கு வருமான வரிவிலக்கு | ரூ.50,000 பிரிவு 88-ன்கீழ் | ரூ.50,000 பிரிவு 88-ன்கீழ் | ரூ.40,000 பிரிவு 80CCA-ன் கீழ் |
| வட்டிக்கு வருமான வரிவிலக்கு | வருமான வரிச் சட்டம் பிரிவு 88-ன்கீழ் | வருமான வரியில் இருந்து வட்டிக்கு முழுவிலக்கு | வட்டி தொகை சேரும்போது வருமான வரி விலக்கு |
| செல்வ வரி | ரூ.5,00,000 வரை விலக்கு | முழுவிலக்கு | முழுவிலக்கு |
| டெபாசிட்டுகளுக்கான வரம்பு | வரம்பு கிடையாது | ரூ.60,000 | ரூ.40,000 |

### தமிழக அரசின் சிறப்பு சலுகைகள்:

- ஒவ்வொரு ரூ.500/- முதலீட்டிற்கும் ஒரு இலவச பரிசு கூப்பன் மூலம் 262 பரிசுகளில் ஒன்றைப் பெறும் வாய்ப்பு.
- தமிழ்நாட்டில் குறிப்பிட்ட சில திட்டத்தில் முதலீடு செய்யும் ஒவ்வொரு ரூ.1,000/- முதலீட்டிற்கும் 1% வரை ஊக்கத்தொகை.
- 1.1.91 முதல் 31.3.91 வரை தமிழ்நாட்டில் குறிப்பிட்ட திட்டங்களில் முதலீடு செய்யும் ஒவ்வொரு ரூ. 1000/- முதலீட்டிற்கும் தனிநபர் விபத்து இன்ஷுரன்ஸ் வசதி. பிரீமியத்தை தமிழக அரசே செலுத்துகிறது.

DIPR/189/MS91/ARIES

### இலவச தனிநபர் விபத்து காப்புறுதி திட்டம் — அதிகபட்ச நஷ்ட ஈடு ரூ. 50,000/-

ரூ.50,000/- வரை தனிநபர் விபத்து இன்ஷுரன்ஸ் வசதி பெறுங்கள்.

கூடுதல் சலுகைகள்:
- இந்திய அரசின் முழுப்பாதுகாப்பு
- சொத்து வரிவிலக்கு
- உங்கள் குழந்தைகள் பெயரில் முதலீடு செய்து வருமான வரிவிலக்கு பெறுங்கள்.

யுனைடெட் இந்தியா இன்ஷுரன்ஸ் நிறுவனம், சென்னை.
தனிநபர் விபத்து இன்ஷுரன்ஸ் பாலிசி கிடைக்குமிடம்:
அனைத்து மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் மற்றும்

இயக்குநர்
சிறுசேமிப்புத்துறை
143, அண்ணாசாலை, சென்னை-600 002.
தொலைபேசி: 840223/846209.




# பாவாணரும் பாவேந்தரும்



- இரா. இளங்குமரன்

**பா**வேந்தருக்கு நூற்றாண்டு; பாவாணருக்குத் தொண்ணூறாம் ஆண்டுப் பிறப்பு.

பாவேந்தர் காலம் 9.4.1891 - 21.4.1964; 73 ஆண்டுகள்.

பாவாணர் காலம் 7.2.1902 - 15.1.1981; 79 ஆண்டுகள்.

பதினோர் ஆண்டுகள் மூத்தவர் பாவேந்தர்; பாவேந்தருக்குப் பின்னரும் பதினேழு ஆண்டுகள் வாழ்ந்தவர் பாவாணர்.

இருவரும் தமிழ் - தமிழர் - தமிழ்நாடு என்னும் மும்மையில் ஒப்பாரும் மிக்காரும் இல்லா வகையில் பற்றுமை கொண்டு, உடல் பொருள் உயிர் ஆகிய மும்மையையும் அதற்கே ஆக்கியவர். 'இவரை அவரும்', 'அவரை இவரும்' மதித்த மதிப்பீட்டுக்கும், பற்றுமைக்கும் போற்றுதலுக்கும் ஈடுஇணை இல்லை.

புலமிக்கவரைப் புலமை தெரிதல் புலமிக்கவர்க்கே புலனாம் என்னும் பழநெறிக்குப், புதுச் சான்றாகத் திகழ்ந்த பெருமக்கள் இவர்கள்.

இளைய பாவணர் முதிய பாவேந்தரை இடந் தேடிச் சென்று இனிது உரையாடியமை இயற்கை; ஆனால், முதிய பாவேந்தர் இளையபாவாணரை இருக்கும் இடம் தேடிச் சென்று இனிய வைப்பகமெனப் பாராட்டி மகிழ்ந்தமை இயற்கை இறந்த சிறப்பினது. அப்படிப் பல்கால் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் உண்டு.

ஒருவரை ஒருவர் உள்ளபடி உணர்தல் அரிது; உணர்ந்தாலும் உள்ளாரப் போற்றி உரைத்தல் அரிது; உரைப்பினும் நிலைபெறும் எழுத்தில் காட்டுதல் அரிது; காட்டினும், ஊரறியப் பரப்புதல் அரிது. இவ்வருமையை இருவரும் எளிமையாய்ச் செய்த சான்றுகள் உண்டு. ஏன்? தந்நலம் தேய்ந்து தமிழ்நலம் வாய்ந்த அருமையின் விளைவே அது.

பாவாணர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் திராவிட மொழித்துறையில் பணியமர்த்தம் பெற்றார். அதனால், பாவேந்தர்க்கென்ன? துணைவேந்தர்க்குப் பாவேந்தர் விண்ணப்பம் விடுக்கிறார். தமக்குப் பணியமர்த்தம் வேண்டியா?

''தமிழ் மொழி ஆயும் தமிழ்ப்புல வர்தம்
தமிழகம் காக்கும் தகுதி வாய்ந்தவர்
என்பது தமிழ்ச்சான் றோரின் எண்ணம்!
அண்ணா மலைப்பல் கலைக்கழ கந்தான்
பண்ணிய தவத்தின் பயனே யாகத்
தேவ நேயப் பாவண னாரும்
வி.மு.சோ மசுந்தரனாரும் அமைந்தனர்''

என்கிறார். அமைந்தது சரி! விண்ணப்பம் என்ன?

''மனம்வைக்க வேண்டும் ஐயா!
இனம்தன் மேன்மை எய்தும் பொருட்டே''

என்பது விண்ணப்பம். 'இனநலம்' காக்கும் விண்ணப்பம் எவர்க்குத் தோன்றும்? 'மன நலம்' மல்கியவர்க்குத் தானே தோன்றும்!

(குயில் 3:6;26.7.60)

நான் கண்ட அண்ணாமலைப் பல்கலைக் கழகம் என வரிசை செய்கின்றார் பாவேந்தர். அவ்வரிசையில் ஒன்று தேவநேயப் பாவாணர். ஒருபெரும் பதிகம் பாடினார் பாவேந்தர், பாவாணர் மேல். ஆம்! பன்னிரு வெண்பா.

வேந்தருள் வேந்தர் பாவேந்தர், பாவேந்தர்க்கு வேந்தர் எவராம்? பாவாணராம்! அவர்க்கு மட்டுமா, வேந்தர் பாவாணர்; தமிழர் அனைவர்க்குமே வேந்தராம் பாவாணர் - ஏன்?

அருமைத் தமிழே உலகத்தின் ஆதிமொழி - முதன்மொழி - என்பதை நிலைநாட்டினாராம் பாவாணர்! அதுவும் எப்படி நிலை நாட்டினாராம்?

வடமொழி இந்தி முதலிய பலமொழிகளையும் வேரும் தூரும் கொத்தும் குலையும் தடவித் தடவிப் பார்த்துத் தமிழே உலக முதன் மொழி எனக் கண்டாராம்!

With

Best

Compliments

From



## M/s. Sreenivas Silk House,
## Silk Cloth Merchants

17-A, T.K. Nambi Street,
Kancheepuram - 631 503.

Phone:3064








மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள், மண்டபம் இலங்கை அகதிகள் முகாமிற்கு, வருகை புரிந்து அகதிகளுக்கு இலவச வேட்டி, சேலைகள், வழங்கினார். (20.2.1991)

## படமும் செய்தியும்

மத்திய அரசின் செய்தி மற்றும் ஒலிபரப்புத் துறையின் விளம்பரப்பிரிவின் சார்பில், சென்னை இராஜாஜி மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்த டாக்டர் அம்பேத்கர் புகைப்படக் கண்காட்சியினை, மேதகு ஆளுநரின் ஆலோசகர் திரு. வி. கார்த்திகேயன் அவர்கள் துவக்கி வைத்தார். (20.2.91)



# நிறம் மாறாமல் பற்களைப் பாதுகாக்கும் வழிமுறைகள்

முத்துப் போன்ற பற்கள் என்றால், பற்களின் அமைப்பும் நிறமும் முத்துப்போல் அழகாக இருக்கிறது என்பது தெளிவான கருத்து. எனினும் முத்தின் நிறம் தூய்மையான வெள்ளை அல்ல. இருந்தாலும் பற்கள் அந்த நிறம் அடைவதற்குப் பற்களின் பல பாகங்களான பற்சிப்பி, தந்தினி மற்றும் பற்கூழ் ஆகியவை உதவி புரிகின்றன.

வாயினுள் தெரியும் பற்களின் பாகம் பல்சிகரம் (CROWN) எனப்படும். பற்சிப்பி (ENAMEL) என்பது பற்களின் வெளிப்புறத்தில் அமையும் பாகம். இந்தப் பற்சிப்பி உள்ளே உள்ள தந்தினிகளை (DENTINE) முழுமையாக மூடுகின்றது. பற்களின் நடுபாகத்தில் அமைந்துள்ளது பற்கூழ்க்குழி (PULP). இவை தவிர, ஒவ்வொரு பல்லுக்கும் வேர்கள் உண்டு. இந்த வேர்கள் பற்களைத் தாடையுடன் இறுக்கமாக இருக்க உதவி செய்கின்றன. பற்களின் வெளிப்பாகமான பற்சிப்பி ஒளி ஊடுருவ வகையளிப்பதாக (TRANSLUCENT) அமைந்துள்ளது. அதனால் அதன் கீழே உள்ளே தந்தினியினுடைய நிறம் பற்சிப்பியின் வழியாக ஊடுருவித் தெரிந்து பல்நிறத்திற்குக் காரணமாகத் திகழ்கின்றது.

**கறைகளும் நிறம் மாறிய பற்களும்**

பற்கள் நிறம் மாறுவது என்பது இரண்டு காரணங்களால் உண்டாகும்:

1. பற்களின் மேல் படிந்துள்ள கறைகள் - வெளிக் காரணங்களால் (EXTRINSIC) உண்டாகும் கறைகள் மற்றும் நிற மாற்றங்கள்.

2. பற்களின் உள்ளே உள்ள திசுக்களிலிருந்து (INTERNAL TISSUES) உண்டாகும் நிற மாற்றங்கள் (INTRINSIC).

**வெளிக்காரணங்களால் (EXTRINSIC) உண்டாகும் நிற மாற்றங்கள்:**

பற்களின் மேலே படிந்துள்ள கறைகள் தற்காலிக நிற மாற்றங்களை ஏற்படுத்தலாம். இவை சாதாரணமாக உண்ணும் உணவிலிருந்தும், பானங்களிலிருந்தும் ஏற்படும். புகை பிடிப்பதனாலும் பற்கள் மேல் கறைகள் உண்டாகலாம். பற்களின் நிறமாற்றத்திற்கு இவையே பொதுவான காரணங்கள். இதனால் பற்கள் கருப்பு நிறமாகவோ, பழுப்பு நிறமாகவோ காட்சியளிக்கும். இவை தவிர, பற்சிப்பியின் மேற்புறச் சொரசொரப்பு, பற்கள் சீராக அமையாதிருத்தல், மற்றும் தினம் பற்களைத் தேய்க்காமல் இருப்பது போன்ற காரணங்களாலும், பற்கள் மீது கறை மற்றும் காரை படிந்து


**அ. பரமேசுவரன்**
**பேராசிரியர் -**
**பல் பாதுகாப்புத்துறை**
**பல் மருத்துவக் கல்லூரி,**
**சென்னை.**


பற்களின் நிறத்தில் மாற்றத்தை விளைவிக்கலாம். உமிழ் நீர் கெட்டியாக இருப்பதும், பற்களின் மேல் காரைபடிவதற்குக் காரணமாக விளங்கும். இந்த வகையான நிற மாற்றங்கள் பற்களில் பச்சை நிறமாகவோ (GREEN STAIN) கருப்புக் கறையாகவோ, பழுப்பு நிறமாகவோ காட்சியளிக்கக் கூடும்.

பற்களின் மேல் நிற மாற்றங்கள் உலோகப் பொருட்களாலும் ஏற்படலாம். இந்த நிற மாற்றங்கள் வேலை செய்யும் சூழ்நிலையிலிருந்து ஏற்படும் புழுதி மற்றும் புகையுடன் (FUMES) கலந்து உருவாகலாம், அல்லது இந்த உலோகங்கள் உள்ள மருந்துகளை உட்கொள்வதனாலும் வரலாம். இந்த உலோகங்கள் உள்ள மருந்துகளை உட்கொள்வதனாலும் வரலாம். இந்த உலோகக் கறைகள் வெள்ளி, தங்கம், செம்பு, இரும்பு நிக்கல், பாதரசம் (MERCURY) மாங்கனிஸ், காட்மியம், தகரம் போன்ற உலோகங்களால் உண்டாகலாம். இந்தக் கறைகள் உலோகங்களுக்கு ஏற்ப பச்சை நிறமாகவோ, கருப்பு நிறமாகவோ, ஊதா நிறமாகவோ மஞ்சள் நிறமாகவோ காட்சியளிக்கக் கூடும்.

**உள் காரணங்களால் (INTRINSIC) அதாவது திசுக்களிலிருந்து உண்டாகும் காரணங்களால் ஏற்படும் நிற மாற்றங்கள்:**

திசுக்களிலிருந்து உண்டாகும் நிற மாற்றங்கள் பல காரணங்களால் ஏற்படுகின்றன. அவை முக்கியமானவை:-

★ பரம்பரையாகத் தோன்றும் நிற மாற்றம் (HEREDITARY) இது குடும்பத்தில் உள்ள அனைவரிடமும் தென்படும்.

★ பற்கள் முளைக்கும் போது (ERUPTION) அல்லது பற்கள் உருவாகும் பருவத்தில் (DEVELOPMENT) கடுமையான நோய் வருவது மற்றும் அந்நோய்க்கு மருத்துவத்திற்காக உட்கொள்ளும் சில மருந்துகள், டெட்ராசைக்ளின் (TETRACYCLINE) ஆகியவையும் பற்கள் நிறம் மாறுவதற்குக் காரணமாகின்றன.

★ விபத்துகளிலிருந்தும் மற்றும் பற்களின் மீது ஏற்படும் அதிர்ச்சியினாலும் பல்லின் உள்புறமுள்ள பற்கூழ் சேதமடைந்து, பற்கள் உயிரின்மையுடன் (DEAD OR NON-VITAL) விளங்கலாம். இவையும் பற்கள் நிறம் மாறுவதற்குக் காரணமாக உள்ளன.

★ ஃபுளோரைட் (FLUORIDE) குடிக்கும் தண்ணீரில் இருக்கும் ஃபுளோரைட் அளவு அதிகமாக இருந்தால் (3-5 PPM) அவையும் பல் நிறம் மாறுவதற்குக் காரணமாகத் திகழும். இவ்வாறு பல்வேறு காரணங்களால் பற்கள் நிறம் மாற வாய்ப்புண்டு.

**பற்களின் நிறமாற்றங்களைச் சரி செய்யும் முறைகள்:**

1. பற்களின் மேலே படிந்துள்ள கறைகள், காரைகள் இவைகளைச் சுலபமாக எடுக்க முடியும். இவற்றை மருத்துவரிடம் சென்று சுத்தம் (SCALING) செய்து எடுத்து விடலாம். உணவுப் பொருட்களால் உண்டாகும் பழுப்பு மற்றும் கருப்புக் கறைகளைப் 'பாலிஷ்' செய்து எடுத்து விடலாம்.

2. உலோகக் கலப்புள்ள மருந்தினால் ஆன நிறமாற்றங்களையும் திசுக்களின் சேதத்தின் விளைவாக ஆன நிற மாற்றங்களையும் மற்ற காரணங்களினால் ஏற்படும் மாற்றங்களுக்கும், கறைகள் பற்களை எவ்வளவு தூரம் பாதித்திருக்கிறதோ - பற்சிப்பியை மட்டும் பாதித்திருக்கிறதா அல்லது உள்ளிருக்கும் தந்தினியையும் பாதித்திருக்கிறதா என்பதைப் பொருத்து மருத்துவ முறை மாறுபடும். இந்த நிற மாறுபாட்டால், அதிகப் பாதிப்பு இல்லாவிட்டால் ஒன்றும் செய்யாமலும் இருந்து விடலாம். இல்லையென்றால், கீழ்க்கண்ட வழி முறைகளால் அவற்றைச் சரி செய்யலாம்.

அ) புதுவிதமான பல் நிறத்திலுள்ள பல்லடைக்கும் பொருட்களால் நிற மாற்றத்தை மூடி மறைத்து விடலாம்.

ஆ) 'தொப்பி' போல் பல் அளவில் அதே நிறத்தில் செய்து நிறம் மாற்றம் தெரியாமல் மறைக்கலாம்.

இ) 'வெண்மைப் படுத்தும்' முறையைக் (BLEACHING) கடைப்பிடிக்கலாம்.

★ பற்களில் கரைபடிந்துள்ள பகுதியை லேசாகத் தேய்த்து ஓரளவுக்குக் கறையை அப்புறப்படுத்தி விடலாம். அதற்குப் பிறகு மீதம் இருக்கும் நிறக்குறைபாடுகளைப் பல் நிறத்தில் இருக்கும் பல் அடைக்கும் பொருட்களை வைத்துச் சமன் செய்து சீர் செய்து விடலாம் (COMPOSITE MATERIALS).

★ பற்தொப்பி (CROWNS) நிற மாற்றம் அதிகப்படியாக இருந்தால், பற்களை எல்லாப் புறங்களிலும் சிறிதளவு தேய்த்து எடுத்து விட வேண்டும். இதன் பிறகு, ஏற்கெனவே பல் இருந்த அளவிற்குப் பல்லின் மேல் செருகக்கூடிய 'தொப்பி' போல் செய்து அணிவித்து விடலாம். இவை பல்லின் நிறத்திலோ அல்லது தேவையான நிறத்திலோ செய்யலாம். அக்ரீலிக் (ACRYLIC) மற்றும் பீங்கான் பொருட்களால் செய்யப்படும். இந்தத் தொப்பிகள் பல்லின் நிறத்தில் அமையும், மேலும், இவை பல் நிற மாற்றத்தை முழுமையாக மறைத்து விடும். பல காலங்கள் உபயோகப் படுத்தும் வாய்ப்பு இவற்றிற்கு உண்டு. கடிக்க உபயோகப் படுத்தும் கடைவாய்ப் பற்களை இந்த முறையில் 'தொப்பி' போல் செய்து மூட வேண்டுமென்றால் அவற்றிற்கு அதிகமான அழுத்தும் திறன் (COMPRESSIVE STRENGTH) தேவைப் படுகிறது. ஏனென்றால் கடிக்கும் போது இவை உடையாமல் இருக்க வேண்டும். மேலும், கடிக்கும் பொருளையும் நன்றாக நசுக்க வேண்டும். அதனால் இவற்றிற்கு உடலுக்குக் கேடு விளைவிக்காத தங்கம் மற்றும் தங்கம் சேர்ந்துள்ள உலோகங்களினால் செய்வது அவசியமாகிறது.

**வெண்மைப் படுத்துதல் (BLEACHING)**

இது பல காலங்களாகச் செய்யும் முறை. இதனால் நிறம் மாறிய பற்களின் அடர்த்தியான மாற்றத்தையும் நன்றாகக் குறைக்க முடியும். ஓரளவுக்குக் குறைத்து சாதாரணப் பற்களின் நிறத்திற்குக் கொண்டு வர முடியும்.

**உயிரிழந்த பற்கள் (NON-VITAL TEETH)**

பற்கூழ்க் குழிக்கு ஏற்படும் அதிர்ச்சியினால் பல் சிகரம் சில மாறுபாடுகளை அடைந்து நிறம் மாறிவிட்டால் கடுமையான பழுப்பு நிறமாக மாறுகின்றது. இந்தப் பற்களை வெண்மை செய்வதால் (BLEACHING) நிறம் மாறுவது சிறிதளவேயாகும். பற்கூழ்க் குழியில் மாறுதல் ஏற்பட்டதால் வெண்மை செய்வதற்கு முன்பு பல்வேர் (ROOT CANAL TREATMENT) மருத்துவம் செய்ய வேண்டும். பிறகு, வெண்மை செய்து ஓரளவிற்கு நிறம் மாற்றலாம். அல்லது 'தொப்பி' போல் செய்து நிறம் மாற்றத்தை மறைத்து விடலாம்.

நிறம் மாறிய பற்களால் மனோநிலை மாறுதல்கள் ஏற்படலாம். சிறு வயதிலிருந்தே பற்களின் அழகைப் பராமரிக்கவே பலர் விரும்புவர். எந்த விதமான நிறமாற்றத்தையும் கூடிய சீக்கிரம் சரியான நிலைக்கு மாற்றினால் தாழ்வு மனப்பான்மை வராமல் தவிர்க்கலாம். பல் உடைந்திருந்தாலோ, நிறம் மாறியிருந்தாலோ சிலர் பேசுவதற்குக்கூட கூச்சப்படுவார்கள். எல்லா விதத்திலும் பின் தங்கும் மனப்பான்மை வரவும் வாய்ப்புண்டு. ஆகவே உடனடியாக, நிறம் மாறிய பற்களை (COSMETIC DENTISTRY) அழகுப் படுத்தும் பல் மருத்துவ முறைகளைக் கொண்டு இவ்வாறு சீர் செய்யலாம். அப்படிச் செய்வதன் மூலம் - 'பல் போனால் சொல் போச்சு' என்ற பழமொழிக்கு ஆளாகாமல் அவரவரும் தப்ப முடியும்.



**4-வது அட்டையில்:**

மாமல்லபுரத்தில் நடந்த வசந்த விழாவில், முக்கிய நிகழ்ச்சியாக இடம் பெற்ற பரத நாட்டியம், கிராமிய நடனம், குச்சிபுடி ஆகிய நடனக் காட்சிகள் 4-ஆம் அட்டையை அலங்கரிக்கின்றன.

''வடமொழியும் இந்தியும் மற்றும் வடக்கிற்
படுமொழிகள் என்ற பலவும் - தடவியே
அந்தமிழே ஆதிஎன்னும் தேவநே யர்தாம்
எந்தமிழர் எல்லோர்க்கும் வேந்து''

எத்தகைய மனந்திறந்த பாராட்டு! வரவேற்பு! நெஞ்சில் துளியளவு தம்முனைப்பு இருப்பினும் இப்படிப் பாடல் கிளருமா?

'தேவநேயர்க்குத் தீமை செய்வார் உளர்' என அறிகிறார் பாவேந்தர். அவரைத் தமக்குத் தீமை செய்பவராகவே நினைந்து குமைகிறார்; குமுறுகின்றார்; வெம்புகின்றார்; வெதும்புகின்றார்; இல்லை! இல்லை! எமக்கு மட்டும் தீமை செய்வார் அல்லர்! எம்தமிழர் அனைவர்க்கும் வேந்தாம் அவர்க்குச் செய்யும் தீமை, எப்படி எமக்கு மட்டும் செய்ததாகும்? செந்தமிழர் அனைவருக்குமே ஒரு மொத்தமாகச் செய்த தீமையேயாம் என முடிவு செய்கிறார்; முழங்குகிறார்!

''நாவலந் தீவுக்கு நந்தமிழே தாயென்று
கூவும் அதுவுமோர் குற்றமா? - பாவிகள்!
தேவநே யர்க்குச் செயுந்தீமை செந்தமிழர்
யாவர்க்கும் செய்வதே யாம்''

குயில் கூவுகிறது! பாவாணக் குயில் கூவுவதாகப் பாவேந்தர்க்குயில் கூவுகிறது! 'நாவலந் தீவுக்கு நம் தமிழே தாய்' என்று கூவுகிறது. இதில் என்ன குற்றம்? குற்றமற்றதைக் குற்றமெனக் கொள்வார் பாவியர் தாமே! உள்ளம் வெள்ளமெனப் பாய்ந்தால் துள்ளிவீழாதோ சொல்!

''பாவாணன் செந்தமிழன்; ஏனெனில் அவன் உண்மை உரைப்போன்! அவன் பாலைவன மழையல்லன்; பாழ்நில மழையல்லன்; புன்செய் மழையல்லன்; நன்செய் மழை; ஆம்; அவன் செந்நெற் பயன்மழை!''

''பெய்யும் மழைக் கொடையைக் கெடுப்போன் - கீழறுப்போன் - கீழோன்!'' பன்னிரண்டாம் பாட்டு இது:

''எந்தமிழ் மேலென்ற உண்மை எடுத்துரைப்போன்
செந்தமிழன்! செந்நெற் பயன்மழை! - நந்தமிழின்
கீழறுப்போன் கீழோனே! தேவநே யர்வாழ்க!
வாழிய செந்தமிழ் மாண்பு!''

பாடிப் பொழிந்த பாவேந்தக் குயிலைப் பாவாணர் எப்படிப் பாராட்டினார்? உரையில் பாராட்டினார்; பாவில் பாராட்டினார்; 'பண்பாட்டுப் பதிக'மெனப்பாடியும் பாராட்டினார். பத்தன்று பாட்டு; பதினொன்று! பாவேந்தர் பாடியது போன்றே வெண்பா, பாட்டுக்குப் பாட்டா? அவர்பாட்டுக்கு அவர் பாடினார்; இவர் பாட்டுக்கு இவர் பாடினார் பாட்டு பைந்தமிழ் வளமாயிற்று!

பாவேந்தர் உருவெளிக் காட்சி தோன்றுகின்றது. அது, உள்ளொளிக் காட்சியாய் - உண்மைக் காட்சியாய் உருவாகின்றது. பாவேந்தர் நடையழகும், பெருமித அழகும், உரையழகும், அஞ்சாமை அழகும், உடையழகும் ஒவ்வொன்றும் முன்னே முன்னே வந்து என்னைப்பாடு என்னைப் பாடு என்கின்றன; பாடுகின்றார் பாவாணர்.

''ஆனை நடையும் அரிமாப் பெருமிதமும்
கோனையும் சாடிக் குமுறுரையும் - தானையே
தாக்கினும் அஞ்சாத் தறுகண்ணும் மேலாடைச்
சேக்கையும் பாரதிதா சன்''

ஆனை நடையாம்; அரிமாப் பெருமிதமாம்; ஆண்டவன் என்ன, ஆள்பவன் என்ன எதிரிட்டு முழக்காம்;எப்படை வரினும் அப்படைக்கு அஞ்சாமையாம்; மேலாடைப் பொலிவாம்; இவை பாரதிதாசனாம்! படக் கருவிதானும், இப்பாக்கருவிப் படப்பிடிப்பைப் பிடித்துக் காட்டுமா?

பாவேந்தர் பிறந்தது ஏன்? அவர்தம், 'பிறவிப் பயன் என்ன? 'வெந்ததைத் தின்று விதிவந்தால் போகவா' வந்தார்? தன் குடும்பம் - தன் சுற்றம் - தானுண்டு - சொத்துண்டு - சுவையுண்டு என்பதற்கு வந்த 'கடுகுப்பிறவியா? கடுகுக்கு மூத்த 'துவரைப் பிறவியா? ஊரை அலைக்கழிக்க - உலகை அலைக்கழிக்க - வந்த தொன்னைப் பிறவியா? தமிழுலகு வாழ வந்த தண்ணளிப் பிறப்பு அது ! என்கிறது பாவாணர் ஆழ்ந்தகன்ற ஆய்வுள்ளம்!

''தன்னலமும் தன்குடும்பத் தின்னலமும் பேணாது
மன்னலமே என்றும் மதித்தொழுகித் -
தன்னினமாம்
செந்தமிழ் மக்கள் சிறந்தோங்கி வாழ்வதற்கே
வந்தனன் பாரதிதா சன்.''

பக்கமெலாம் பார்க்கிறார் பாவாணர். போலித் தமிழர்; புன்றமிழர்; ஒருவரா இருவரா? பலப்பலர்; பன்னூற்றுவர் பன்னூற்றுவர்; எத்தகு போலித் தமிழர் - புன்றமிழர் - அவர்? செய்யும் தொழிலில் - செய்யும் வணிகத்தில் - இம்மியளவு கூடிய வருவாய் வருமாயினும், தம் இன்னுயிர்க்கின்னுயிராம் தமிழையும் கூவிக் கூவி விற்று விடும் பாழ்பட்ட பகைத் தமிழர்! போலிமானத் தமிழர்! நிலைத்த நெஞ்சோ, நிலைத்த சொல்லோ, நிலைத்த செயலோ இல்லா, நிலைக் கேட்டுத் தமிழர்! இப் பாலைக்கு இடையேதான் ஒருசோலை; பைஞ்சோலை; பன்மரப் பைஞ்சோலை; பழம்படு பன்மரப் பைஞ்சோலை - பாரதிதாசன்!

''இம்மியே கூடிடினும் இன்றமிழை விற்றுவிடும்
தெம்மானப் போலித் திரிதமிழர் - கும்மிடையே
பாலை நிலத்திற் பழம்படு பன்மரப்பைஞ்
சோலையே பாரதிதா சன்''

ஒருவருள் ஒருவராகிய உள்ளன்பாளர்களைத் 'தமிழரசு' வழியே நினைத்துப் பார்க்க வாய்ப்பது உவகைப் பெருக்காம்.



எங்கள்
இனிய
நல்வாழ்த்துக்கள்



காஞ்சிபுரம்
பட்டுச் சேலைகள்
உற்பத்தியாளர்

B.M. சில்க்ஸ்



249, காந்தி ரோடு,
காஞ்சிபுரம் - 631 501

தொலைபேசி எண்: 2970

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

தமிழரசு

கடல் மல்லையில்
கண் கவர்
கலை விழா







# நூல் நயம்

### அழகிய வெண்பா அறுநூறு

**தொகுப்பு: உதகை பொன்னழகன்**
**வெளியீடு:**
மங்கை நூலகம்,
நல்லப்பன் தெரு,
அருவங்காடு-643 202.

விலை:ரூ.20/- பக்கம்:182

**தெ**ன்றல், தமிழரசு, கவிக்கொண்டல் போன்ற பல்வேறு இதழ்கள் நடத்திய வெண்பாப் போட்டிகளில் தேர்வுபெற்ற வெண்பாக்களிலிருந்து 600 பாக்களைத் தேர்ந்தெடுத்து அவற்றைத் தொகுத்து நூலாக்கியுள்ளார் தொகுப்பாளர்.

பொதுவாக நானூறு செய்யுட்களைத் தொகுத்துத் தொகை நூலாக வழங்குவது மரபு. சான்று, அகநானூறு, புறநானூறு. அண்மைக் காலத்தில் நிலாவைப் பற்றிய நானூறு செய்யுள்களைத் தொகுத்து 'நிலா நானூறு' என வெளியிட்டார் ஒரு கவிஞர்.

இந்நூலின் தொகுப்பாளர் பழைய மரபை மாற்றி புது மரபை மேற்கொண்டிருப்பது வரவேற்புக்குரியது.

இந்நூலில் காணப்படும் வெண்பாக்கள் அனைத்தும் அருமை; ஏற்கெனவே வாசகர்களுக்குப் பல்வேறு காலகட்டங்களில் அறிமுகமானவை என்றாலும், அவற்றை ஒரே தொகுப்பில் காணும்போது ஏற்படும் இன்பமே தனி! இந்த அரிய விருந்தை எல்லாம் 'தேடித் தொகுத்த திறம்' பாராட்டுக்குரியது; போற்றுதலுக்குரியது.

—தமிழ்ப்பித்தன்

### மகாத்மா காந்தியின் சுயசரிதை (சத்திய சோதனை)

தமிழாக்கம்: ரா. வேங்கடராஜுலு
**வெளியீடு:**
காந்திய இலக்கியச் சங்கம்,
தமிழ்நாடு காந்தி நினைவு நிதி,
மதுரை-625 020.

விலை: ரூ.30 பக்கம்: 511

அண்ணல் காந்தியடிகளால் எழுதப்பெற்ற 'சத்திய சோதனை' என்னும் சுயசரிதம், முதலில் குஜராத்தியில் எழுதப்பட்டது. பிறகு ஆங்கிலத்திலும் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டது. தமிழில் இது வரை 10 பதிப்புகள் வெளிவந்துள்ளன. 1,30,000 பிரதிகள் தமிழில் விற்பனையாகியுள்ளன.

அண்ணல் காந்தியடிகள் தம் குழந்தைப் பருவத்திலிருந்து, இந்நூலைத் தொடங்குகிறார். தம் வாழ்க்கையில் ஏற்பட்ட சோதனைகள் சாதனைகள் எல்லாம் இந்நூலில் விளக்கியுள்ளார். இந்நூலில், மொத்தம் ஐந்து பாகங்கள் உள்ளன.

அண்ணல் காந்தியடிகள் வாழ்க்கையில் நிகழ்ந்த பல்வேறு சுவையான நிகழ்ச்சிகளையும் நாம் தெரிந்து கொள்கிறோம். உள்ளது உள்ளபடி உரைத்துள்ள இந்த உண்மைக் கதையை, அனைவரும் படிக்க வேண்டியது அவசியமாகும்.

—பி.வி. கிரி

### சின்னஞ்சிறிய பூக்கள்

**ஆசிரியர்:கே.சுப்பிரமணியன்**
**வெளியீடு:**
சிறுவர் வெளியீடு
79, மேட்டுத்தாங்கல்
கல்லாவி
தர்மபுரிமாவட்டம் 635 304

விலை:ரூ.10/- பக்கம்:80

**கு**ழந்தை இலக்கிய மாலையில் மேலும் ஒரு மணமலராகச் சேர்கிறது இந்நூல். வழக்கமான தலைப்புகள் இருந்தாலும், வித்தியாசமான தலைப்புகளும் அவை பற்றிய நல்ல கவிதைகளும் (சுண்டெலி, மூட்டைப்பூச்சி, முருங்கைக்காய், எருமை) இந்நூலில் உண்டு.

—சாமி

### காற்றிலே மிதந்த கருத்துக்கள்

**ஆசிரியர்: துரை. இராமு**
**வெளியீடு:**
டி.ராமு
6, பிள்ளையார் கோயில் தெரு
பழைய தாம்பரம்
சென்னை-600 045.

விலை:ரூ.12/- பக்கம்:96

**இ**ந்நூலில் பதினோரு தலைப்புகளில் வெளியாகியுள்ள எழுத்தோவியங்கள் அனைத்துமே வானொலியில் ஒலிபரப்பப்பட்டவை.

செஞ்சிலுவைச் சங்கம், பேரை, இரத்தம், சத்துணவு, எழுத்தறிவு, உணவு ஒழுக்கம், கற்றல்சிறக்க, கிராம ஆட்சியில் பெண்கள் பங்கு என்பன போன்ற மாணவர்களுக்கு மிகவும் பயன்படக் கூடிய இக்கட்டுரைகள் இடம்பெற்றுள்ளது பாராட்டுக்குரியது.

—என். குமாரசாமி

### மது, புகையிலை பழக்கங்களால் வரும் நோய்கள்

**ஆசிரியர்: டாக்டர் ஹாஜி எம்.ஏ. அலிம்**
**வெளியீடு:**
நியூ செஞ்சுரி புக்ஹவுஸ்
பிரைவேட் லிமிடெட்
41 பி, சிட்கோ இண்டஸ்டிரியல்
எஸ்டேட், சென்னை-600 098.

விலை:ரூ.5/- பக்கம்:30

**இ**ன்று உலகை பயமுறுத்திக் கொண்டிருக்கும் கொடிய பழக்கங்களில் ஒன்று போதைப் பழக்கம்.

மது அருந்துவதால், புகைப்பதால், புகையிலை போன்றவற்றைப் பயன்படுத்துவதால் உண்டாகும் தீமை எத்தகையது என்பதனைச் சுருக்கமாக, விளக்கமாக விவரிக்கிறது இந்நூல்.

இப்பழக்கங்களால் எத்தகைய நோய்கள் எப்படி உண்டாகின்றன என்பது பற்றியெல்லாம் விளக்கமாகத் தெரிந்து கொள்கிறோம்.

மேற்கண்ட பழக்கவழக்கங்கள் உள்ளவர்கள் இந்நூலைப் படித்தால், அத்தகைய பழக்கங்களிலிருந்து விடுபட வாய்ப்பு நிச்சயம் உண்டு.

—என்.குமார்




ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

★ பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
★ பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
★ பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
★ லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
★ படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

# தமிழ்நாடு அரசின்

## 1991-92-ஆம் ஆண்டிற்கான

# வரவு - செலவுத் திட்டம்



அரசியலமைப்புச் சட்டத்தின் 356-ஆம் பிரிவின் கீழ் 30.1.1991 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் காரணமாக, தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றத்தின் அதிகாரங்கள், நாடாளுமன்றத்தால் அல்லது நாடாளுமன்றத்தின் ஆணை உரிமையின் பேரில் செலுத்தத்தக்கவையாகும். எனவே, 1991-92-ஆம் நிதி ஆண்டிற்கான தமிழ்நாடு மாநிலத்தின் வரவினங்கள், செலவினங்கள் குறித்த விவரங்கள் அவைமுன் வைக்கப்படுகின்றன.

### 1990-91-ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடு

நடப்பாண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில் ரூ.3,418,20 கோடி மாநில வரியும், வரியில்லாத ஏனைய வருவாயும் இடம்பெறுகிறது. இவை வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை விட ரூ.360.96 கோடி உயர்வைக் காட்டுகின்றன. வணிகவரிகள், மாநில ஆயத்தீர்வை வருவாய்கள் ஆகியவற்றின் கீழ் கூடுதலாகக் கணிசமான அளவிற்கு நிதி ஆதாரங்களைத் திரட்டியதே இதற்குக் காரணங்களாகும்.

வரவு - செலவுத் திட்ட மதிப்பீட்டிலுள்ள ரூ.1340.22 கோடியுடன் ஒப்பிடுகையில் திருத்த மதிப்பீட்டில் மத்திய வரிகள் தீர்வைகள் ஆகியவற்றில் மாநில அரசின் பங்கு மத்திய அரசிடமிருந்து பெறும் உதவி மானியங்கள் ரூ.1,557.46 கோடியாகும். வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டிலுள்ள ரூ.4,814.09 கோடியுடன் ஒப்பிடுகையில், திருத்த மதிப்பீட்டில்வருவாய்க்கணக்கின் கீழ் செலவு ரூ.5,266.32 கோடியாகும்.



**பிறரிடம் அன்பு செலுத்தினாலன்றி அவர்களை அறிய இயலாது என்பதையும் – உங்களிடம் நல்லெண்ணம் இல்லாவிடில் இது சிரம சாத்தியம் என்பதையும் உணருங்கள்.**

**—மூதறிஞர் ராஜாஜி.**



அரசுப் பணியாளர்களுக்கு ஊதியக் கொடை வழங்கியது, மாநில அரசு எடுத்துக் கொண்ட நகராட்சிப் பள்ளிகளிலுள்ள ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுத்தது, சம்பள வீதங்களைச் செயல்படுத்தியது, ஓய்வூதியங்களைத் திருத்தியமைத்தது ஆகியவையே ரூ.452.23 கோடி உயர்விற்குக் காரணமாகும் எனினும், கூடுதல் வருவாய் திரட்டியது, வருவாய்க்கணக்கில் மதிப்பிடப்பட்ட செலவு உயர்வைவிட் ரூ.125.96 கோடி அதிகமாக இருப்பதால், வரவு-செலவுத் திட்டத்தில் ஏற்பட்ட ரூ.416.63 கோடி பற்றாக்குறை ரூ.290.67 கோடி பற்றாக்குறையாக ஆகிவிடும்.

மூலதனக் கணக்கில் வரவினங்கள், வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.1,773.59 கோடியாகக் கணக்கிட்டிருப்பதை ஒப்பிடுகையில், அவை தற்பொழுது ரூ.2,119.95 கோடியாகக் கணக்கிடப்பட்டுள்ளன. பொதுக் கணக்கிலுள்ள பற்று வரவுகளையும் ஆரம்பப் பற்றாக்குறைகளையும் கணக்கில் கொண்டு பார்த்தால், வரவு-செலவுத் திட்டத்தில் மதிப்பிடப்பட்ட ரூ.510.10 கோடி பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில், நடப்பாண்டு ரூ.179.10 கோடி பற்றாக்குறையுடன் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### 1991-92-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு

வருவாய் வரவுகள் ரூ.5,585.03 கோடியாக இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளன. 1990-91-ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் இவை ரூ.609.38 கோடி அதிகமாக உள்ளதைக் காட்டுகின்றன. மாநில வரி-வரியல்லாத ஏனைய வருவாய் ரூ.3,897.99 கோடியாகக் கணக்கிடப்பட்டுள்ளது. 1990-91-ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டைக் காட்டிலும் இவை ரூ.479.79 கோடி அதிகமாகும். மத்திய வரிகள்/தீர்வைகளில் மாநில அரசின் பங்கு, மத்திய அரசிடமிருந்து கிடைக்கும் உதவி மானியங்கள் ரூ.1,687.04 கோடியாகும். 1990-91-ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டைவிட இது ரூ.129.58 கோடி அதிகமாகும். வருவாய்க்கணக்கில் செலவு ரூ.5,955.03 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

மூலதனக் கணக்கில் வரவினங்கள் ரூ.1,795.04 கோடியாகக் காட்டப்பட்டுள்ளன. கடன்கள் முன் பணங்கள் உள்படச் செலவு ரூ.1,632.35 கோடியாகக் காட்டப்பட்டுள்ளது. வருவாய்/ கணக்கு, மூலதனக் கணக்கு, பொதுக்கணக்கு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பார்க்கையில், பற்று வரவுகள் தொடர்பான 1991-92-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.128.21 கோடி பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. ரூ.179.10 கோடி ஆரம்பப் பற்றாக்குறையைக் கணக்கில் கொண்டு பார்க்கையில், 1991-92-ஆம் ஆண்டு ரூ.307.31 கோடி இறுதிப் பற்றாக்குறையுடன் முடிவடைகிறது.

### உடனடி செலவிற்கான மானிய அனுமதி

1991-92-ஆம் ஆண்டிற்கான, ஆண்டு நிதி நிலை அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளதாலும், தொடர்புடைய மானியக் கோரிக்கைகள் ஏனைய வரவு செலவுத் திட்ட ஆவணங்களுடன் மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டு வருவதாலும் 1991-92-ஆம் நிதியாண்டிற்கு முதல் ஆறு மாதங்களுக்குத் தேவைப்படும் உடனடிச் செலவிற்கான மானிய அனுமதியை வழங்குமாறு இந்நிலையில் கேட்டுக் கொள்கிறேன்.

**(—நாடாளுமன்றத்தில் 1991-ஆம் ஆண்டு மார்ச்ச 5-ஆம் நாள் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கை)**

## வரவு-செலவுத் திட்டம் முக்கிய விவரங்கள்:

**1990-91**-ஆம் ஆண்டிற்கான ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடு ரூ.1,450 கோடியாகும். மின்சக்திக்காக, மின்சக்தி நிதியுதவி நிறுவனத்திடமிருந்து பெற்ற ரூ.100 கோடி நிதியுதவியும் இதில் அடங்கும்.

1990-91-ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு, ரூ.1,488 கோடி திட்ட ஒதுக்கீட்டிற்கு வகை செய்கிறது. 1991-92-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ரூ.1,600.42 கோடிக்




கான ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டைச் செயல்படுத்த வகை செய்கிறது.

1991-92-ஆம் ஆண்டிற்கான இந்த ரூ.1,600.42 கோடி திட்ட ஒதுக்கீட்டுடன், மின்சக்தி நிதியுதவி நிறுவனத்தின் உதவியுடன் கூடுதலாக ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடும் இருக்கும். எனவே, 1990-91-ஆம் ஆண்டு ரூ.1,350 கோடியாக இருந்த திட்ட ஒதுக்கீடு 1991-92-இல் ரூ.1,600.42 கோடியாக உயர்ந்துள்ளது அல்லது 1990-91-இல் ரூ.1,450 கோடி என்பதிலிருந்து 1991-92-இல் ரூ.1,700.42 கோடியாக அதிகரித்துள்ளது.

நாடாளுமன்ற மக்களவையில் 5.3.1991 அன்று வைக்கப்பட்ட 1991-92- ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வரவு-செலவுத் திட்டம் குறித்த முக்கிய விவரங்கள்:

★ 1990-91-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.510.10 கோடியாக இருந்த இறுதிப் பற்றாக்குறை (-) 1990-91-ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் ரூ.179.10 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது (-).

★ 1991-92-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டிலுள்ள இறுதிப் பற்றாக்குறை ரூ.307.31 கோடியாக (-) இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

★ 1991-92-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ரூ.1,600.42 கோடி திட்ட ஒதுக்கீட்டிற்கு வகை செய்கிறது.

★ 1990-91-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் திட்ட ஒதுக்கீடு ரூ.1,450 கோடியை விட் அதிகரிக்கும். 1990-91-ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடு ரூ.1,488 கோடி திட்ட ஒதுக்கீட்டிற்கு வகை செய்கிறது.

★ மின்சக்தி நிதியுதவி நிறுவனம் அளிக்கும் நிதியுதவியின் அடிப்படையிலான ரூ.100 கோடி ஒதுக்கீடு உட்பட 1990-91-ஆம் ஆண்டு மின்சக்தித் துறையின் மொத்தத் திட்ட ஒதுக்கீடு ரூ.457 கோடியாகும். 1991-92-இல், திட்ட



மேதகு ஜெர்மன் நாட்டின் குடியரசுத் தலைவர் டாக்டர் ரிச்சர்டு வான் வைஸாக்கர் அவர்களும், அவருடைய துணைவியாரும் இரண்டு நாள் சுற்றுப்பயணமாகத் தமிழ்நாட்டிற்கு 3.3.91 அன்று வருகை தந்தனர்.







# இந்த இதழில்...


| | |
|---|---|
| தமிழ்நாடு அரசின் 1991-92-ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டம் ... | 2 |
| தொழிலாளர் மலிவு வீட்டுவசதித் திட்டம் ... | 8 |
| கால்நடைச் செல்வம் ... | 9 |
| உயிர்க்கொல்லி நோயை ஒழிப்போம் ... | 13 |
| தமிழகத்துக்கு வாங்க! (கவிதை) ... | 16 |
| தெலுங்கு-கங்கைத் திட்டப் பணிகள் ... | 19 |
| தொழுநோய் ஒழிப்பில் ஒரு தொண்டு நிறுவனம் ... | 20 |
| மூடநம்பிக்கை (சிறுகதை)-வ.ரா. ... | 23 |
| உதகை தாவரவியல் பூங்கா வளர்ச்சிப் பணிகள் ... | 29 |
| விவசாயிகளுக்கு விற்பனை உதவி ... | 31 |
| வால்நட்சத்திரம் ... | 33 |
| நல்ல தங்காள் கதை ... | 39 |
| காணும்பொருளெல்லாம் கலைவண்ணம் ... | 42 |
| படமும் செய்தியும் | 46 |



தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2022

பங்குனித் திங்கள் - 2

மலர்:21 இதழ்:18

16-3-1991

தின் கீழ் ரூ.32 கோடி செலவில் 15,000 மேம்படுத்தப்பட்ட மனைகள் வரும் ஆண்டில் ஒதுக்கப்படும்.

★ தமிழ்நாடு நகர்ப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வரும் ஆண்டில் ரூ.8 கோடி செலவில் 25,000 குடும்பங்கள் பயனடையும் வகையில் குடிசைப் பகுதி மேம்பாட்டுப் பணி மேற்கொள்ளப் படும்.

★ சென்னை மாநகரில் நடைபாதைகளில் வசிக்கும் 4096 குடும்பங்கள் வேறு இடத்தில் குடியமர்த்தப் படும்.

★ 1,00,000 வீட்டு உரிமையாளர்களுக்குப் பயன் அளிக்கும் வகையில் குடியிருப்புகளை மேம்படுத்தும் திட்டம் மேற்கொள்ளப்படும்.

★ தமிழ்நாடு சத்துணவுத் திட்டத்தின் கீழ் பழைய பாத்திரங்களுக்குப் பதிலாகப் புதிய பாத்திரங்களை வழங்குவதற்காக ரூ.1 கோடி வகை செய்யப் படும்.

★ சத்துணவுத் திட்டத்தை வலுப்படுத்த இரும்புச் சத்து நிறைந்த உப்பு வழங்குவது அறிமுகப் படுத்தப்படும்.

★ சத்துணவுத் திட்ட மையங்களில் உள்ள சமயலறைகளைப் புதுப்பிக்கும் பணி அடுத்த கல்வி ஆண்டு தொடங்குவதற்கு முன் முடிக்கப்படும்.

★ வரும் ஆண்டில், ஆதி திராவிடர், பழங்குடியினருக்காக 40 புதிய மாணவர் இல்லங்கள் தொடங்கப்படும்.

★ ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், ஆதி திராவிட உழவர்களுக்கு 2,000 கிணறுகள் இலவசமாகத் தோண்டப்படும்.

★ நிலங்களைக் கையகப்படுத்துவதன் மூலம் ஆதி திராவிடர்களுக்கு 75,000 இலவச வீட்டு மனைகளுக்கு வகை செய்யப்படும்.

★ பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப் பட்டோர், சீர் மரபினர் ஆகியோருக்கு 50 புதிய மாணவர் இல்லங்கள் தொடங்கப்படும்.

★ வரும் ஆண்டில் ரூ.6.4 கோடி செலவில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியோருக்காக 63 மாணவர் இல்லங்கள்/கட்டடங்கள் கட்டி முடிக்கப்படும்.

★ தருமபுரி மாவட்டத்துடன் தென்னார்க்காடு, சேலம் மாவட்டங்களில் வேளாண்மை மேம்பாட்டுக்கான அனைத்து நாடுகள் நிதியுதவியுடனான (மகளிர்) திட்டம் செயல் படுத்தப்படும். வரும் ஆண்டில் 7,500 மகளிர் இதன் மூலம் பயன் அடைவர்.

★ ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் சராசரி 100 நாட்களுக்கு 7 இலட்சம் பேர் வேலை வாய்ப்புப் பெறுவர். இத்திட்டத்திற்கான மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.172 கோடியாகும்.


**தஞ்சாவூர் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை லிட்.டி.878, தஞ்சாவூர்**

**பதிவு செய்யப்பட்ட தேதி: 20.4.1940** **வேலை துவக்கப்பட்ட தேதி:1.5.1940**

**பொன் விழா ஆண்டு**

தஞ்சாவூரைத் தலைமை இடமாகக் கொண்டு இப்பண்டகசாலை ஏழு தாலுக்காக்களைச் செயல் எல்லையாகக் கொண்டு இயங்கி வருகிறது. பொதுமக்களின் அன்றாடத் தேவைகளை ஒரே இடத்தில் பெற ஏதுவாக 25 பிரிவுகளைத் தன்னகத்தே கொண்டு தஞ்சாவூரில் "காவேரி கூட்டுறவுச் சிறப்பங்காடி" இயங்கி வருகின்றது.

**31.10.90-இல்**

| | | | |
|---|---|---|---|
| 1. | உறுப்பினர் | ... | 43,887 |
| 2. | பங்கு மூலதனம் | ... | ரூ.33.56 இலட்சம் |
| 3. | விற்பனை | | |
| | 1987-88 | ... | ரூ.16.23 கோடி |
| | 1988-89 | ... | ரூ.17.04 ,, |
| | 1989-90 | ... | ரூ.17.23 ,, |
| | 1990-91 (Upto 31.12.90) | ... | ரூ.12.46 ,, |
| 4. | லாபம் | ... | ரூ.2.80 இலட்சம் |
| 5. | செயல்படும் சிறப்பு அங்காடி | ... | 3 |
| 6. | செயல்படும் சிற்றங்காடி | ... | 5 |
| 7. | செயல்படும் கிளைகளும், நியாய விலைக்கடைகளும் | ... | 60 |

நுகர்வோர்கள் வாங்க விரும்பும் பொருளைத் தாங்களே தேர்ந்தெடுக்க வசதியாக, தஞ்சாவூர் காவேரி சிறப்பங்காடியில் சுயசேவைப் பகுதி 1,200 பொருட்களைக் கொண்டு இயங்குகிறது. கொள்முதல் செய்யப்பட்ட பொருட்களின் தரத்தைப் பரிசோதனை செய்ய தரப் பரிசோதனைக் கூடமும், தரமான கடலை எண்ணெய் வழங்க எண்ணெய் பிழியும் ஆலையும் இப்பண்டக சாலையில் செயல்படுகிறது.

நுகர்வோரின் திருப்தியே எங்கள் குறிக்கோள்.

எம்.ஆனந்தராவ்,பி.காம்.,
இணைப்பதிவாளர்/தனி அலுவலர்




இரண்டாவது அட்டை சொல்லும் செய்தி

# தமிழ்நாட்டில் ஜெர்மனி அதிபர்

இணைந்த ஜெர்மனி நாட்டின் மேதகு அதிபர் ரிச்சர்டு வான் வைஸாக்கர் தனது இந்தியச் சுற்றுப் பயணத்தின் ஒரு பகுதியாகத், தமிழ் நாட்டுக்கு மார்ச்-3 மற்றும் 4 தேதிகளில் வருகை தந்தார்.

மார்ச்-3 ஆம் தேதி சென்னை விமான நிலையத்தில் இந்திய விமானப்படை விமானம் மூலம் வந்தடைந்த மேதகு ஜெர்மனி அதிபரை மேதகு தமிழக ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் மாலையணிவித்து அன்புடன் வரவேற்றார். மற்றும் ஆளுநரின் ஆலோசகர்கள் திரு வி.கார்த்திகேயன், திரு வி. இராமச்சந்திரன், தலைமைச் செயலர் திரு டி.வி. அந்தோணி, காவல்துறைத் தலைவர் திரு பி.பி. ரெங்கசாமி மற்றும் அரசு உயர் அலுவலர்களும் மேதகு ஜெர்மனி நாட்டின் அதிபரை அன்புடன் வரவேற்றார்கள்.

மேதகு அதிபர் திரு. வைஸாக்கருடன் அவரது துணைவியார் திருமதி மரியான், ஜெர்மனி நாட்டின் பொருளாதாரக் கூட்டுறவு அமைச்சர் திரு வேய்க் மற்றும் மத்திய சுற்றுச்சூழல்- வனத்துறை இணை அமைச்சர் திருமதி மேனகா காந்தி ஆகியோரும் வருகை புரிந்தனர்; மேலும் ஜெர்மனி நாட்டின் புகழ்மிக்க பத்திரிகையாளர்களும், அலுவலர்களும் வருகை தந்தனர்.

மார்ச்-3 ஆம் தேதியன்று மாலை ஜெர்மனி அதிபரும் அவரது துணைவியாரும் மாமல்லபுரம் சென்று அங்குள்ள 'அர்ச்சுனன் தவம்', ஐந்து ரதங்கள் மற்றும் கடற்கரைக் கோயில் ஆகிய பல்லவர்காலச் சிற்பங்களைக் கண்டு வியந்து மகிழ்ந்தார்கள்.

பின்னர், மேதகு ஜெர்மனி அதிபர் அவர்கள் சென்னை பாலவாக்கத்திலுள்ள உடல் ஊனமுற்றோர் வாழ்க்கை உதவி மையத்திற்குச் சென்று பார்வையிட்டு, அங்கு வசிக்கும் 280 உடல் ஊனமுற்றோருடனும் அளவளாவினார். இம் மையத்தில் நடைபெற்றுவரும் தூய தொண்டுப் பணிகளைக் கண்டு மகிழ்வுற்றார். மையத்திற்கு ரூ.65,000/- நன்கொடையாக வழங்கினார்.

இந்த மையத்தின் பணிகளுக்காக ஜெர்மனி அரசு இதுவரை ரூ.2.5 கோடி நிதியுதவி அளித்துள்ளது.

மார்ச் 4-ந்தேதி அன்று சென்னையில் உள்ள இந்தியத் தொழில்நுட்பக் கல்லூரி (ஐ.ஐ.டி.), மேதகு ஜெர்மனி அதிபருக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கி கௌரவித்தது. ஐ.ஐ.டி. ஆளுநர்கள் குழுத் தலைவர் டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் சிறப்புப் பட்டமளிப்பு விழாவைத் துவக்கி வைத்தார். ஐ.ஐ.டி. நிறுவன இயக்குநர் திரு என்.வி.சி. சுவாமி, ஜெர்மனி அதிபருக்கு டாக்டர் பட்டத்தினை வழங்கினார்.

அடுத்து, ஐ.ஐ.டி. வளாகத்திலுள்ள சீமன்ஸ் கம்ப்யூட்டர் மையத்தைப் பார்வையிட்டு, பின்னர் பெருங்கடல் பொறியியல் மையத்தையும் பார்வையிட்டு அங்கு அலைகளிலிருந்து மின்சக்தி தயாரிக்கும் இயந்திரம் ஒன்றை மேதகு அதிபர் துவக்கி வைத்தார். ஐ.ஐ.டி. நிறுவனத்திற்கு ஜெர்மனி அதிபர் தனது - நல் எண்ணத்தைத் தெரிவிக்கும் வகையில் புத்தகங்கள் வாங்குவதற்கென ரூ.1.3 இலட்சம் நன்கொடையாக வழங்கினார்.

ஜெர்மானிய அதிபரின் இரண்டு நாள் சுற்றுப் பயணம் முடிந்தபின் அவரை 4.3.1991 அன்று மாலை சென்னை விமான நிலையத்தில் மேதகு தமிழக ஆளுநர் அவர்கள், ஆளுநரின் ஆலோசகர்கள், அரசு தலைமைச் செயலர், காவல்துறைத் தலைவர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் அன்புடன் வழியனுப்பி வைத்தார்கள்.

- க. குமாரவேலு.


**தமிழரசு**
**சந்தா விவரம்**

தமிழ் .......... ஓராண்டு - ரூ.24
அரையாண்டு - ரூ.12

ஆங்கிலம் ... ஓராண்டு - ரூ. 12
(அரையாண்டு சந்தா கிடையாது)

**விவரங்களுக்கு :**
உதவி இயக்குநர் தமிழரசு,
(விற்பனை மற்றும் விநியோகம்)
அரசினர் தோட்டம், சென்னை-600 002.



ஒதுக்கீடு ரூ.525 கோடியாக அதிகரிக்கப்படும். இதில் மின்சக்தி நிதியுதவி நிறுவனத்திடமிருந்து பெறும் கூடுதல் நிதி ஒதுக்கீடு ரூ.100 கோடியும், திட்ட ஒதுக்கீடு, ரூ.425 கோடியும் அடங்கும்.

★ குடிநீர் வழங்கலுக்கான திட்ட ஒதுக்கீடு 1990-91-இல் ரூ.166 கோடியாக இருந்தது. இது 1991-92-இல் ரூ.199 கோடியாக அதிகரிக்கப் பட்டுள்ளது.

★ வேளாண்மை, அது தொடர்பான பணிகள் ஆகியவற்றுக்கான திட்ட ஒதுக்கீடு 1990-91-இல் ரூ.160 கோடியாக இருந்தது; இது 1991 - 92-இல் ரூ.184 கோடியாக உயர்ந்துள்ளது.

★ பாசனம், வெள்ளக்கட்டுப்பாடு குறித்த திட்ட ஒதுக்கீடு 1990-91- இல் ரூ.74 கோடியாக இருந்தது; இது 1991-92-ல் ரூ.94 கோடியாக உயர்ந்துள்ளது.

★ தொழில்கள், கனிமங்கள் குறித்த திட்ட ஒதுக் கீடு 1990-91-இல் ரூ.92 கோடியாக இருந்தது; இது 1991-92-இல் ரூ.114 கோடியாக உயர்ந் துள்ளது.

★ கல்வி குறித்த திட்ட ஒதுக்கீடு 1990-91-இல் ரூ.37 கோடியாக இருந்தது; இது 1991-92-இல் ரூ.76 கோடியாக உயர்ந்துள்ளது.

★ வீட்டு வசதி, நகர்ப்பகுதி மேம்பாடு குறித்த திட்ட ஒதுக்கீடு 1990-91-ஆம் ஆண்டில் ரூ.96 கோடியாக இருந்தது. இது 1991-92-இல் ரூ.111 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

★ ஆதி திராவிடர்/பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலனுக்கான திட்ட ஒதுக்கீடு 1990-91-இல், ரூ.41 கோடியாக இருந்தது. இது 1991-92-இல் ரூ.59 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

★ சமூக நலன், சத்துணவு, குறித்த திட்ட ஒதுக் கீடு 1990-91-இல் ரூ.79 கோடியாக இருந்தது. இது 1991-92-இல் ரூ.91 கோடியாக உயர்த்தப் பட்டுள்ளது.

★ சாலைகள், பாலங்கள் குறித்த திட்ட ஒதுக்கீடு 1990-91-இல் ரூ.62 கோடியாக இருந்தது. இது 1991-92-இல் ரூ.76 கோடியாக அதிகரிக்கப் பட்டுள்ளது.

★ குடிநீர்ப்பற்றாக்குறையைக் கருத்தில் கொண்டு குடிநீர் ஆதாரங்களைப் பெருக்கி, அவற்றைப் பாதுகாக்கத் தனி முக்கியத்துவம் அளிக்கப் பட்டுள்ளது. நகர்ப் பகுதி குடிநீர் வழங்கு திட்டங் களுக்கு வரவு-செலவுத் திட்டத்தில் மொத்தம் ரூ.89.03 கோடியும், ஊரகக் குடிநீர் வழங்குத் திட்டங்களுக்கு ரூ.61.51 கோடியும் வகை செய்யப் பட்டுள்ளது.

★ தெலுங்கு கங்கைத்திட்டத்திற்கு ரூ.75 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ஆந்திரப் பிரதேசத் திற்குக் கொடுப்பதற்கான ரூ.50 கோடியும், தமிழ்நாட்டு எல்லைக்குள் நிறைவேற்றப்படும் பணிக்கான ரூ.25 கோடியும் அடங்கும். இத் திட்டப்பணி விரைவுபடுத்தப்படும். சென்னை மாநகர் குடிநீர் வழங்கல் பணிக்கான நிறுவன நிதி உதவியும் பெறப்படும்.

★ இம்மாநிலத்தில் ஏதாவதொரு வகையில் கூட குடிநீர் வசதி இல்லாத 5,885 குடியிருப்புப் பகுதிகளுக்கு, வரும் ஆண்டில் ரூ.12 கோடி செலவில் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்படும்.

★ விரைவுபடுத்தப்பட்ட கிராமக் குடிநீர்த் திட்டத் திற்கு ரூ.33.70 கோடி ஒதுக்கப்படுகிறது.

★ தற்போதுள்ள பாசன வாயில்களைப் புதுப் பித்து, சீரமைப்பதற்குச் சிறப்புக் கவனம் செலுத்தப்படுகிறது, நீரைச் சிக்கனமாகக் கையாளு வதற்காக மேம்பட்ட தொழில் நுட்ப உத்திகள் கொண்ட புதிய திட்டமொன்று ரூ.5 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

★ சொட்டு நீர்ப் பாசனம், தெளிப்புப் பாசனம் ஆகிய பாசன முறைகளை விவசாயிகளிடையே பிரபலப்படுத்த சிறப்பாக முக்கியத்துவம் அளிக்கப் பட்டுள்ளது.

★ ஐரோப்பியப் பொருளாதாரக் குழுவின் உதவி பெறும் ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிக்கு ரூ.10 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

★ நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் தொழில் நுட்ப உத்தியுடன் கூடிய சிறு பாசன ஆதாரங் களைப் புதுப்பிக்கும் புதிய திட்டம் ஒன்று ரூ.5 கோடி நிதி ஒதுக்கத்தில் தொடங்கப்படும்.

★ ரூ.310 கோடி செலவிலான ஏழாண்டுக்கால அளவில் நிறைவேற்றப்படக் கூடிய உலக வங்கி நிதி உதவியுடன் கூடிய தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம் வரும் ஆண்டில் தொடங்கப் படும். இதற்காக 1991-92- வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.10 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

★ மானாவாரி சாகுபடிக்கான புதிய நீர் வரத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் வரும் ஆண்டில் 34 வளர்ச்சி வட்டாரங்களில் செயல்படுத்தப்படும்.



★ தீவிர அரிசி உற்பத்தித் திட்டம் பத்து மாவட்டங் களில் செயல்படுத்தப்படும்.

★ உலக வங்கி நிதி உதவியுடன் கூடிய பட்டுப் புழு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் வரும் ஆண்டில் ரூ.4.5 கோடி நிதி ஒதுக்கீட்டில் 32,500 பேர் களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும்.

★ சுவீடன் அனைத்து நாட்டு மேம்பாட்டு அமைப் பின் நிதி உதவியுடன் கூடிய சமூகக் காடு வளர்ப்புத் திட்டம் 1991-92-ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற் காக நிதி ஒதுக்கீடு ரூ.19.55 கோடியாக இருக்கும்.

★ எஞ்சியுள்ள 1,184 கால்நடை வளர்ப்பு மையங்களில் உறை விந்து மூலம் கருத்தரிக்கச் செய்வதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

★ ஐந்து மாவட்டங்களில், செம்மறியாடு வளர்ப் புத் திட்டம் 1991-92-இல் ரூ.2 கோடி நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயற்படுத்தப்படும்.

★ ஐந்து மாவட்டங்களில் மீனவர்களுக்குக் கட்டு மரங்கள், வல்லம் ஏனைய சாதனங்கள் ஆகிய வற்றை வழங்குவதற்கான தேசியக் கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்தின் நிதி உதவியுடன் கூடிய ஒருங்கிணைந்த கடல் மீன் பிடித்திட்டம் தொடங் கப்படும்.

★ வரும் ஆண்டில் மீனவர்களுக்காகப் புதிதாக 3,000 வீடுகள் கட்டப்படும்.

★ கிராமப் பகுதி குறைந்த அளவு தேவைகள் திட்டத்தின் கீழ், தொடக்கப் பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல், 1000-க்குக் குறைவாக மக்கள் தொகை உள்ள குடியிருப்புகளில் கிராமியச் சாலைகள் அமைத்தல், பாசன ஏரிகளைப் பழுது பார்த்துப் புதுப்பித்தல், கிராமப் பகுதித் தகவல் தொடர்புத் திட்டங்கள், கிராமப் பகுதி குடிநீர் வழங்கல் பணிகள், சுகாதாரத் துணை நிலையங்கள் ஏற்






படுத்துதல், நண்பகல் உணவு மையங்கள் கட்டுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும். வரும் ஆண்டில் கிராமப் பகுதி குறைந்த அளவு தேவைகள் திட்டத்திற்காகத் திட்ட ஒதுக்கீடு ரூ.30 கோடியாக இருக்கும்.

★ வரும் ஆண்டில், புதிதாக, 222 மெகாவாட் அளவிற்கு மின்சக்தி உற்பத்தி செய்யப்படும்.

★ காவிரி வடிநிலப் பகுதியிலிருந்து கிடைக்கும் எரிவாயுவைப் பயன்படுத்துவதன் மூலம் முதற் கட்டப் பணியாக 300 மெகாவாட் அளவிற்கு மின்சக்தி உற்பத்தி செய்வதற்காக உடனடி நட வடிக்கை மேற்கொள்ளப்படும்.

★ பெரியார், தஞ்சாவூர், திருநெல்வேலி-கட்ட பொம்மன் ஆகிய மாவட்டங்களில் மூன்று புதிய தொழில் வளர்ச்சி மையங்கள் ஏற்படுத்தப்படும். ஒவ்வோர் வளர்ச்சி மையமும் சுமார் 1000 ஏக்கர் பரப்பளவில் ரூ.30 கோடி செலவில் ஏற்படுத்தப் படும். இத்திட்டப் பணிக்காக வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.4 கோடி நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.

★ சென்னைக்கு அருகே சோளிங்கநல்லூரில் மின்னணுவியல் நகரம் ஏற்படுத்தப்படும். இத் திட்டத்திற்காக மொத்தம் ரூ.40.6 கோடி செல வாகும்.

★ தொழில் தகவல் மையம் ஒன்றும், தொழில் முனைவோர் பயிற்சி மையம் ஒன்றும் புதிதாக ஏற்படுத்தப்படும்.

★ நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தள்ளு படித் தொகையைத் திருப்பிக் கொடுப்பதற்காக வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.37 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், தள்ளுபடி வழங்கப்பட்ட தொகையை உரிய காலத்தில் திருப்பிக் கொடுக்க முடியும்.

★ புதிதாக 1500 இடைநிலை ஆசிரியர்கள் பதவி ஏற்படுத்தப்படும்.

★ உலக வங்கியின் நிதி உதவியுடன் பல்திறத் தொழில் பயிற்சிப் பள்ளிகளை மேம்படுத்து வதற்கான திட்டம் ஒன்று தொடங்கப்படும்.

★ தமிழ்நாடு நகர்ப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்

# மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை
# தென்னார்க்காடு மாவட்டம் (இ) கடலூர்.

**நலிந்தோர் மேம்பாட்டிற்கு நல்லதோர் திட்டம்:**

வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழ்வோரின் வளமான வாழ்விற்கும், கிராம முன்னேற்றத் திற்கும் அரசின் வளர்ச்சிப் பணிகளின் நலனை எய்திட, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை யினால் செயல்படுத்தப்படும் கீழ்க்கண்ட திட்டங்களுக்கு ஆதரவு தர வேண்டுகிறோம்.

**அ. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்:**

மானியத்துடன் கடன் வசதி அளித்து சுயவேலை செய்வதை ஊக்குவித்தல்.

| | | |
|---|---|---|
| பயன்பெறும் குடும்பங்கள் | - | 14,125 |
| ஒதுக்கீடு ரூ.லட்சத்தில் | - | 444.389 |

குறிப்பாக ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு மானியத் தொகை 50 சதவிகிதம் உதவி அதிகப்பட்சமாக ரூ.5,000 வரை இவ்வாண்டில் வழங்கப்படும்.

**ஆ. ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம்:**

| | | |
|---|---|---|
| 1990-91-ஆம் ஆண்டிற்கு வேலைகள் | - | 10,544 |
| ஒதுக்கீடு ரூ.லட்சத்தில் | - | 1,733.23 |

ஒவ்வொரு வீட்டிற்கும் மாநில அரசு வழங்கும் ரூ.4,000-க்கான தொகையுடன் இந்த ஆண்டில் 5,100 கான்கிரீட் வீடுகள் ஆதிதிராவிடர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்படுகின்றன.

**இ. மகளிர் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டுத் திட்டம்:**

1987-88-ஆம் ஆண்டு முதல் இம்மாவட்டத்தில் டோக்ரா திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சென்ற ஆண்டு முடிய 16 வட்டாரங்களில் 363 மகளிர் குழுக்கள் ஆரம்பிக்கப் பட்டு அங்கத்தினர்களுக்கு 50 சதவிகிதம் மானியத்துடன் கூடிய கடன் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு மத்திய அரசினால் 100 குழுக்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. குழுக்கள் மூலம் பொம்மைகள் தயாரித்தல், நெசவு செய்தல், பாய் முடைதல், மெழுகுவர்த்தி தயாரித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேற்காணும் திட்டங்கள்பற்றி அறிய வேண்டிய இடம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம்.

**இரா.தனபதி, பி.காம்.,**
**திட்ட அலுவலர்**
**மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை**
**தென்னார்க்காடு மாவட்டம்**
**கடலூர்**

**திரு.அ.இளங்கோவன், இ.ஆ.ப.**
**மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும்**
**பெருந்தலைவர்**
**மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை**
**தென்னார்க்காடு மாவட்டம் (இ) கடலூர்**



# கால்நடைச் செல்வம்

காால்நடைப் பராமரிப்புத் துறை. தமிழ்நாட்டில் பல்லாண்டுக்காலமாகத் தமிழ்நாட்டிலுள்ள பசுக்கள், எருமைகள், ஆடுகள் மற்றும் கோழிகளின் உற்பத்தித் திறனை அதிகப்படுத்துவதற்காகப் பல் வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வந் துள்ளது.

தமிழ்நாட்டில் கால்நடை வளர்ப்பு, கிராமப்புற விவசாயிகளால் நீண்ட காலமாகச் செயல்படுத்தப்பட்டு வந்த போதிலும், கால்நடைகளின் பால், இறைச்சி, முட்டை உற்பத்திகுறைவாக இருந்த காரணத்தால் அவர்கள் கால்நடை வளர்ப்பில் அதிக அக்கறை காட்ட வில்லை. ஆனாலும் சமீப காலங்களில் கால்நடை வளர்ப்பு, கால்நடை இன விருத்தி, கால்நடைத் தீவனம் மற்றும் கால்நடைகளில் நோய்த் தடுப்பு முறை களில் ஏற்பட்டுள்ள விஞ்ஞான முன் னேற்றத்தின் காரணமாகத் தமிழ் நாட்டில் உள்ள பசுக்கள், எருமைகள், ஆடுகள் மற்றும் கோழிகள் உற்பத்தித்திறன் வெகு வாக உயர்ந்துள்ளது. இதன் காரணமாகத் தமிழ்நாட்டில் ஏராளமான விவசாயக் குடும்பங்கள் கால்நடை வளர்ப்பை நல்ல வருமானம் கொடுக்கக்கூடிய முழுநேரத் தொழில் ஆகவும் உபரி வருமானம் கொடுக்கக்கூடிய பகுதி நேரத் தொழிலாக வும் ஏற்றுச் செயல்படுத்தி வருகின்றனர்.

தமிழகத்தில் 1982-ஆம் ஆண்டு கால்நடைக் கணக்கின்படி ஒரு கோடியே 4 இலட்சம் மாடுகளும் 32 இலட்சம் எருமைகளும் 55 இலட்சம் ஆடுகளும் (செம்மறி ஆடு) 52 இலட்சம் வெள்ளாடு களும் ஒரு கோடியே 83 இலட்சம் கோழிகளும் இருந்தன. தமிழ் நாட்டில் உள்ள கால்நடைகளின் உற்பத்தித்திறன் அதிகரிக்கப்பட்டதன் காரணத்தால் கிராமப்புற விவசாயிகள் நல்ல தரமான கால்நடைகளை உற்பத்தி செய்து அதன் மூலம் உற்பத்தியை அதிகரித்ததால், உற் பத்திக் குறைவான மாடுகளை அகற்றி விற்று விட்டனர். இதன் காரணமாக 1989-ஆம் ஆண்டு எடுத்த கால்நடைக் கணக்கின்படி, தமிழ் நாட்டில் 93 இலட்சம் மாடுகளும், 31 இலட்சம் எருமைகளும், 59 இலட்சம் செம்மறி ஆடுகளும், 59 இலட்சம் வெள்ளாடு களும், இரண்டு கோடியே 14 இலட்சம் கோழிகளும் உள்ளதாகக் கணக்கெடுக்கப் பட்டுள்ளது.

**பால் உற்பத்தி**

தமிழ்நாட்டில் தற்பொழுது 31 இலட்சம் இனவிருத்திக்குத் தகுதியான பசுக்களும் 16 இலட்சம் இனவிருத்திக்குத் தகுதியான எருமைகளும் உள்ளன. தமிழ் நாட்டில் உள்ள பசுக்கள் மற்றும் எருமை களின் பால் உற்பத்தித்திறனை அதிகப் படுத்துவதற்குத் தமிழக அரசு, அதிகம் பால் தரக்கூடிய உயர்தர, அயலின, ஜெர்ஸி, பிரிசியன் பொலி காளை களைக் கொண்டு, தமிழ் நாட்டிலுள்ள பசுக்களின் இனவிருத்திக்கு உபயோகப் படுத்தி வந்துள்ளது. இதேபோல் தமிழ் நாட்டில் உள்ள குறைந்த அளவு பால் கொடுக்கக்கூடிய நாட்டின எருமைகளின் இனப் பெருக்கத்திற்காக வட இந்தியா விலிருந்து கொண்டுவரப்பட்ட அதிக அளவு பால் கொடுக்கக்கூடிய இனத்தைச் சேர்ந்த முர்ரா பொலி காளைகளைக் கொண்டு இனவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

இந்த முயற்சிகளின் காரணமாகத் தமிழ் நாட்டில் தற்பொழுது ஒரு நாளைக்கு 10 லிட்டரிலிருந்து 15 லிட்டர் பால் கொடுக்கக்கூடிய கலப்பினப் பசுக்கள் ஏராளமாக உள்ளன. ஒரு நாளைக்கு 15 லிட்டரிலிருந்து 20 லிட்டர் பால் கொடுக் கக்கூடிய பசுக்களும் அதிக அளவில் உள்ளன. எருமைகளின் பால் உற்பத்தி கணிசமாக அதிகரித்து, ஒரு நாளைக்கு 7 லிட்டரிலிருந்து 8 லிட்டர் வரை பால் கொடுக்கக் கூடிய எருமைகளும் நிறைய உள்ளன.

இந்த முயற்சிகளின் காரணமாகத் தமிழ்நாட்டில் உற்பத்தியான மொத்த பாலின் அளவு 1978-79-ஆம் ஆண்டு 17 இலட்சம் டன்னாக இருந்தது, 1989-90 -ஆம் ஆண்டு 34 இலட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. இதன் பயனாகத் தமிழ் நாட்டில் ஒரு நாளைக்கு ஒரு நபருக்குக் கிடைக்கக்கூடிய பாலின் அளவு 1978-79-இல் 99 கிராம் ஆக இருந்தது, 1989-90-இல் 169 கிராம் ஆக உயர்ந் துள்ளது.

தமிழ் நாட்டில் கிராமப்புங்களில் உள்ள பசுக்கள் மற்றும் எருமைகளின் இனவிருத்திக்காக்க் கால்நடைப் பரா மரிப்புத்துறை 2,770 நிலையங்களின் செயற்கைமுறை இனவிருத்திவருகிறது. இந்த மொத்த நிலையங்களில், 1,859 நிலையங்களில் உறைவிந்து மூலம் செயற்கை முறையில் கருவூட்டல் பணி செயல்படுத்தப்பட்டு வருகிறது. மீதமுள்ள 911 நிலையங்களில் பதப்படுத்தப்பட்ட திரவ விந்து மூலம் செயற்கை முறை கருவூட்டல் பணி செய்யப்பட்டு வருகிறது. இவ்விதம் உறைவிந்து மூலம் இனவிருத்தி செய்யப்படும் பசுக்கள் எருமைகளின் இனவிருத்திக்குத் தேவையான உறை விந்து தயாரிக்கக் கால்நடைப் பராமரிப்புத்

**டாக்டர்.தி.க.கோவிந்தராசன்**
**இயக்குநர்**
**கால்நடைப் பராமரிப்புத் துறை**

**நான்காம் அட்டை சொல்லும் செய்தி**





துறை ஈச்சங்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்), அபிசேகப்பட்டி (திருநெல்வேலி மாவட்டம்), ஊட்டி (நீலகிரி மாவட்டம்). ஓசூர் (தர்மபுரி மாவட்டம்) ஆகிய இந்த 4 இடங்களில் உறைவிந்து உற்பத்தி நிலையங்களைச் செயல்படுத்தி வருகிறது. இந்த நிலையங்களில் ஜெர்ஸி, பிரிசியன் போன்ற அயல் இனப் பொலி காளைகளும், முர்ரா பொலி காளைகளும், காங்கேயம், அலிகார் போன்ற இந்திய இனப் பொலி காளைகளும் பராமரிக்கப் பட்டு உறைவிந்து தயாரிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில், பசுக்களின் இனப் பெருக்கம செய்யத் தொடங்கிய காலத்தில் ஜெர்ஸி மற்றும் பிரிசியன் பொலி காளைகள் அயல்நாட்டிலிருந்து வெகு மதியாகப் பெறப்பட்டன. இந்தப் பொலி காளைகள் நாட்டினப் பசுக்களின் இனவிருத்திக்கு உபயோகப்படுத்தப்பட்டாலும், இவைகளின் உற்பத்தித் திறன் வெகு அதிகமாகக் காணப்படவில்லை. இதனால், கால்நடை பராமரிப்புத் துறை நாட்டினப் பசுக்களின் பால் உற்பத்தித் திறனை அதிகரிக்க எடுத்துக்கொண்ட முயற்சிகள் மிக வேகமாகச் செயல்படுத்தப்பட முடியவில்லை. இதனைக் கருத்திற்கொண்டு, கால்நடைப் பராமரிப்புத்துறை தமிழக அரசு வழங்கிய ரூபாய் 50 இலட்சம் பணத்தில் டென்மார்க் மற்றும் ஜெர்மனி நாடுகளிலிருந்து வெகு உன்னதமான வம்சாவழியைச் சேர்ந்த மிக அதிகமாகப் பால் கொடுத்த பசுக்களின் சந்ததியான 140 ஜெர்ஸி மற்றும் பிரிசியன் பொலி காளைகளை இறக்குமதி செய்துள்ளது.

இந்தப் பொலி காளைகள் தற்பொழுது ஈச்சங்கோட்டை, ஓசூர், ஊட்டி உறைவிந்து நிலையங்களில் வைக்கப்பட்டு உறைவிந்து தயாரிக்கப்பட்டு வருகிறது, இந்த உறைவிந்து தமிழ்நாட்டிலுள்ள பசுக்களின் இனப பெருக்கத்துக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இவ்விதம் மிக அதிக அளவில் பால் கொடுக்கக் கூடிய வம்சாவழியைச் சேர்ந்த இந்தப் பொலிகாளைகளின் விந்தை உபயோகப் படுத்தி இனவிருத்தி செய்வதன் மூலம் பிறக்கும் கலப்பினக் கன்றுகள் மிகவும் தரமானவையாக இருக்கும். இவை மிக வேகமாக வளர்ந்து குறுகிய காலத்தில் பருவத்திற்கு வந்து வெகு அதிகமான பால் கொடுக்கக்கூடிய நல்ல பசுக்களாக இருக்கும்.

இந்த முயற்சியின் மூலம் தமிழ் நாட்டில் அதிக அளவில் பால் கொடுக்கக் கூடிய கலப்பினக் கன்றுகள் அதிகம் பிறந்து அதன் மூலம் பால் உற்பத்தி வெகு கணிசமான அளவில் அதிகரித்து, அதனால் கறவைப் பசுக்கள் வளர்க்கும் ஏழை விவசாயிகளுக்குப் பெரிய அளவில் பயன் கொடுக்கும் என்பது நிச்சயம். அகில இந்திய அளவில் இந்த விதமான உயரகப் பொலிகாளைகள் வேறு மாநிலத்தில் இல்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

தமிழ் நாட்டில் கால்நடைப் பராமரிப்புத் துறை தீவிரமாகச் செயல்படுத்தி வரும் திட்டங்களினால் ஏற்பட்ட நன்மைகளைத் தக்கவைத்துக் கொள்வதற்காகவும், மேலும் பசுக்களின் பால் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும் கால்நடைப் பராமரிப்புத் துறை மாநில அளவிலான கால்நடைத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தியுள்ளது. இந்தத் திட்டத்தை ஆராய்ந்த உலக வங்கி, முழுமையாக அங்கீகரித்து 1991-92-ஆம் ஆண்டிலிருந்து 7 ஆண்டுக் காலத்தில் தமிழ் நாட்டில் கால்நடை வளர்ப்பை அபிவிருத்தி செய்து, பசுக்கள் மற்றும் எருமைகளின் தரத்தை உயர்த்த, உற்பத்தித் திறனை மேலும் அதிகரிக்க ரூ.37.22 கோடி ரூபாய் செலவில் திட்டத்தை அங்கீகரித்துள்ளது. இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கங்கள்:

> **சாமானிய மக்களின் நலமே மிகவும் முக்கியமானது; ஒரு சிலருக்காக நாம் மிகப் பலரைப் பலி கொடுக்க முடியாது.**
>
> **—ஜவகர்லால் நேரு**

★ கால்நடைப் பராமரிப்புத் துறையின் கீழ் இயங்கி வரும் உறைவிந்து நிலையங்களைப் பலப்படுத்தி, அதிக அளவில் உறைவிந்து உற்பத்தி செய்வது. இதன் மூலம் தமிழ் நாட்டிற்குத் தேவைப்படும் உறைவிந்தால் தன்னிறைவு பெறுதல்.

★ கால்நடைப் பராமரிப்புத் துறையில் உள்ள கால்நடைப் பண்ணைகளைப் பலப்படுத்தி, அதிக அளவில் தரமான பொலிகாளைகளை உற்பத்தி செய்தல்.

★ தமிழ் நாட்டில் தேர்ந்தெடுத்த 10 இடங்களில் உறைவிந்து மையங்களை ஏற்படுத்தி, எல்லாச் செயற்கைமுறை கருவூட்டல் நிலையங்களுக்கும் உறைவிந்து மற்றும் திரவ நைட்ரஜன் வழங்க ஏற்பாடு செய்தல்.

★ தமிழ் நாட்டிலுள்ள எல்லா செயற்கை முறைக் கருவூட்டல் நிலையங்களுக்கும் உறைவிந்து முறையை விரிவாக்குதல்.

★ பசுந்தீவன உற்பத்தியை அதிகரித்தல்.

★ விரிவாக்கப்பணிகளைத் தீவிரப் படுத்துதல்.

- இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம், தமிழ் நாட்டில் கறவைப் பசுக்கள் வளர்ப்பு மிக இலாபகரமாக மாறி, விவசாயிகளுக்கு அதிக அளவில் பலனைக் கொடுத்து உதவும் என்பது நிச்சயம்.

**ஆடு வளர்ப்பு**

செம்மறி ஆடு வளர்ப்பு மற்றும் வெள்ளாடு வளர்ப்பு தமிழ் நாட்டில் கிராமப்புற விவசாயிகளிடம் பிரபலம் அடைந்து வருகிறது. ஆடு வளர்ப்பு ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு நல்ல முறையில் வருவாய் கொடுத்து வந்துள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள செம்மறி ஆடுகளின் உற்பத்தித் திறனை அதிகப்படுத்துவதற்காகக் கால்நடைப் பராமரிப்புத் துறை, சாத்தூர் (காமராஜர் மாவட்ட), சின்னசேலம் (தென்னார்க்காடு மாவட்ட), ஆகிய இரண்டு இடங்களில் செம்மறி ஆட்டுப் பண்ணைகளையும், புதுக்கோட்டை, செட்டிநாடு, ஓசூர் மற்றும் அபிசேகப்பட்டி போன்ற 4 கால்நடைப் பண்ணைகளில் செம்மறி ஆடு வளர்ப்புப் பிரிவுகளையும் செயல்படுத்தி வருகிறது. இந்தப் பண்ணைகளில் இராமநாதபுரம் வெள்ளை, கீழக்கரிசல், வேம்பூர், மாண்டியா போன்ற ஆட்டினங்கள் அறிவியல் முறையில் மேம்பாடு செய்யப்பட்டு நல்ல தரமான தேர்ந்தெடுத்த ஆட்டுக் கிடாய்கள், கிராமப் புறத்திலுள்ள ஆடுகளின் இனப் பெருக்கத்திற்காக விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

இதே போல் சின்னசேலம் மற்றும் கொருக்கை பண்ணையில் ஜமுனாபாரி இன வெள்ளாடுகள், புதுக்கோட்டை மாவட்டப் பண்ணையில் தலைச்சேரி இன வெள்ளாடுகள் வளர்க்கப்படுகின்றன. அதிக அளவில் பால் கொடுக்கக் கூடிய இந்த ஆடுகளின் குட்டிகள் கிராமப்புறத்திலுள்ள வெள்ளாடுகளின் தரத்தை உயர்த்துவதற்காக விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

இவ்விதப் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைத் தவிர, கால்நடைப் பராமரிப்புத் துறை ஏழை விவசாயிகளின் நலனைக் கருதி, பல்வேறு கால்நடை வளர்ப்புத் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

இந்தத் திட்டங்களில் தேர்ந்தெடுக்கப் பட்ட விவசாயிகளுக்கு அரசு மானியமும், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் கடன் உதவியும் கிடைக்கக் கால்நடைப் பராமரிப்புத் துறை வழி செய்கிறது. தீவிரத் திட்டத்தில் சேர்க்கப் பட்டுள்ள கால்நடைகளுக்குக் கால்நடைப் பராமரிப்புத் துறை, உடல் நலம் பேணும் பணிகளையும், இனப் பெருக்கப் பணிகளையும் செய்து ஏழை விவசாயிகளுக்கு உதவி வருகிறது.

கால்நடைப் பராமரிப்புத் துறை செயல்படுத்தி வரும் முக்கியப் பணிகளாவன:

**சிறப்புக் கால்நடைப் பராமரிப்புத் திட்டம்**

இந்தத் திட்டத்தின் கீழ் ஆடு வளர்ப்பு, பன்றி வளர்ப்பு, கன்று வளர்ப்பு மற்றும் கோழி வளர்ப்புத் திட்டங்கள் செயல் படுத்தப்பட்டு வருகின்றன. ஆடு வளர்ப்புத் திட்டத்தையும், கன்று வளர்ப்புத் திட்டத்தையும் கால்நடைப் பராமரிப்புத் துறை செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்திற்கு 20 பெட்டை ஆடுகளும், ஒரு செம்மறி ஆட்டுக் கிடாவும் வாங்க மொத்தத் தொகையான ரூ.8,000 வழங்கவும், பயன்பெறும் விவசாயிகளுக்குத் திட்டச் செலவில் 25 சதவிகிதம் மானியம் ஆகச் சிறு/குறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இந்தத் திட்டம் தற்பொழுது வடஆர்க்காடு, சேலம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

1976-77 முதல் இதுவரை 23,199 விவசாயக் குடும்பங்கள் இந்தத் திட்டத்தினால் பயன் பெற்றுள்ளன. இந்த ஆண்டு 1,746 விவசாயக் குடும்பங்கள் இந்தத் திட்டத்தினால் பயன் பெறுவர். இந்தத் திட்டத்திற்காகத் தமிழக அரசு ரூபாய் 55.04 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளது.



**பன்றி வளர்ப்புத் திட்டம்**

பன்றி வளர்ப்புத் திட்டம் மதுரை மாவட்டத்தில் செயல்படுகிறது. இந்தத் திட்டத்தில் ரூபாய் 6,000 செலவில் பன்றிப் பண்ணை அமைக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இதுவரை 300 பன்றிப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு 25 பன்றிப் பண்ணைகள் மதுரை மாவட்டத்தில் அமைக்கப் படும்.

**கன்று வளர்ப்புத் திட்டம்**

கன்று வளர்ப்புத் திட்டம் தமிழ்நாடு பால்வள வளர்ச்சிக் கழகத்தால் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ், சிறு/குறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற விவசாயிகளுக்குக் கலப்பினக் கிடாரிக் கன்றுகள் வளர்க்க மானிய விலையில் தீவனம் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ், இதுவரை 52,527 கன்றுகள் பயன் பெற்றுள்ளன. மொத்தம் ரூ.683.665 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, சேலம், கோயம்புத்தூர், மதுரை மாவட்ட ங்களில் செயல்படுத்தப்படும் திட்டத்தின் கீழ், 2,500 கலப்பினக் கன்றுகள் பயன் பெறும். இதற்காக ரூ.67.57 இலட்சம் மானியமாக வழங்கப்படும்.

**கோழி வளர்ப்புத் திட்டம்**

கோழி வளர்ப்புத் திட்டம், கோழி வளர்ப்பு வளர்ச்சிக் கழகத்தால் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 3,098 முட்டைக் கோழிப் பண்ணைகளும், 855 இறைச்சிக் கோழிப் பண்ணைகளும் அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு 650 கோழிப் பண்ணைகள் அமைக்கப்பட உள்ளன. இதற்காக ரூ.25.90 இலட்சம் மானியமாக வழங்கப் படும்.

**சிறப்பு மத்திய உதவித் திட்டம்**

தமிழ் நாட்டில் உள்ள இந்து ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்த ஏழை விவசாயிகளின் பொருளாதாரத்தை

# மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை
# தஞ்சாவூர்

## 1990-91-ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும் திட்டங்களின் விவரங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்: | | |
| | 1. பயன் பெறுபவர்கள் எண்ணிக்கை | ... | 26,000 |
| | 2. அளிக்கப்படும் மானியம் | ... | ரூ.444.389 இலட்சம் |
| 2. | கிராமப்புற இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டத்தில் பயிற்சி பெறுபவர்களின் எண்ணிக்கை | ... | 1,190 |
| 3. | ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம்: | | |
| | மொத்த நிதி ஒதுக்கீடு | ... | ரூ.2,013.770 இலட்சம் |
| | அ) ஆதிதிராவிடர்களுக்கான தொகுப்பு வீடுகள் | ... | 5,900 |
| | ஆ) ஜீவன்தாரா பாசனக்கிணறுகள் | ... | 100 |
| | இ) பள்ளிக் கட்டடங்கள் | ... | 58 |
| | ஈ) ஊராட்சி மன்றக் கட்டடங்கள் | ... | 210 |
| | உ) தார்ச் சாலைகள் போடுதல் | ... | 70-(136 கி.மீ.) |
| | ஊ) கருங்கல் ஜல்லி சாலைகள் போடுதல் | ... | 159-(212 கி.மீ.) |
| | எ) 25% ஊராட்சி பங்கு வேலைகள் | ... | 2,732 |
| | ஏ) 20% மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூடுதல் ஒதுக்கீடு வேலைகள் | ... | 43 |
| | கூடுதல் | ... | 9,272 (348 கி.மீ.) |
| 4. | சமூகக் காடு வளர்ப்புத் திட்டம் | ... | 1,431 எக்டேர் |
| 5. | மீனவர்களுக்கான இலவசக் குடியிருப்பு வீடுகள் | ... | 1,251 |
| 6. | கிராமப்புற பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான வளர்ச்சித் திட்டம்: | | |
| | 1) அமைக்கப்பட்ட குழுக்கள் | ... | 100 |
| | 2) தெரிந்தெடுக்கப்பட்ட பயனாளிகள் | ... | 2,000 |

ஆர்.வேலு, இ.ஆ.ப.
திட்ட அலுவலர்
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,
தஞ்சாவூர்.

விவேக் ஹரிநாராயண்,இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி
முகமை, தஞ்சாவூர்.





# தமிழகத்துக்கு வாங்க!

### கவியரசர் இளந்தேவன்

தமிழகத்துக்கு வாங்க! - எங்கள்
தாயகத்துக்கு வாங்க!
அமைதிப்பூங்கா அழகு! - இதன்
அன்பில் மகிழும் உலகு!

ஆடற்கலையின் சிறப்பை - கலை
அதிசயங்களின் பிறப்பை
பாடற்கலையின் பரப்பை - இங்கு
பார்க்கலாங்க வாங்க!

தஞ்சை, வேளாங் கண்ணி, - தமிழ்
மதுரை, நாகூர், பழநி
கொஞ்சும் தெற்குக் குமரி - இங்கு
கோயில் பார்க்க வாங்க!

பிச்சாவரம் காடு - அதைப்
பிளக்கும் நீரின் ஊடு
உற்சாகமாய்ப் படகு - அதில்
ஓட்டலாங்க வாங்க!

சிதம்பரமெனும் தில்லை - கலைச்
சிறப்புடையது மல்லை!
விதவித வகைப் பறவை - வரும்
வேடந்தாங்கல் வாங்க!

நீலக்கம்பளம் போர்த்தாள் - உடல்
நிறைய வாசம் சேர்த்தாள்!
வாலைக்குமரி உதகை - அவள்
வனப்பைப் பார்க்க வாங்க!

வெள்ளைநிலவை உருக்கி - நீர்
வீழ்ச்சி யழகைப் பெருக்கி
கொள்ளையினமை கொழிக்கும் - திருக்
குற்றாலத்துக்கு வாங்க!

முதுமலைப்பெரு வனமே - அதில்
முழங்கும்யானை தினமே!
புதுமைக்கோடைக் கானல் - அந்தப்
பொழிலைப்பார்க்க வாங்க!

சீரகச்சம்பாச் சோறு - உடன்
சிறந்த மிளகின் சாறு
ஊருக்குஊரு 'மோட்டல்' - நல்ல
உபசரிப்புக்கு வாங்க!

முறுகமுறுகத் தோசை - அதில்
முழுஉலகுக்கும் ஆசை!
வருக வருக பயணி - உங்க
வாய்க்கு உண்டு இனிநீர்!

மேம்படுத்த மத்திய அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தினால் பயன் பெறும் விவசாயிகளுக்குத் திட்டச் செலவில் 50 சதவிகிதம் மானியமாக வழங்கப்படுகிறது. முக்கியமாக ஆதி திராவிடப் பெண்களுக்காக வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கக்கூடிய திட்டம் இது. இந்த ஆண்டு 6,250 விவசாயக் குடும்பங்கள் இந்தத் திட்டத்தினால் பயன் பெறுவர். இந்தத் திட்டத்திற்காக 2.7 கோடி ரூபாய் மானியமாக வழங்கப்படும்.



**பழங்குடியினர் நல மேம்பாட்டுத் திட்டம்**

தமிழ் நாட்டில் வட ஆர்க்காடு, தர்மபுரி, தென் ஆர்க்காடு, சேலம், திருச்சி மாவட்டங்களில் உள்ள 9 மலைப் பகுதிகளில் வாழும் ஏழை விவசாயிகளின் நலனைக் கருதி, கால்நடைப் பராமரிப்புத் துறை கால்நடை வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

## தமிழகத்தில் காற்றாலை மூலம் 200 மெகாவாட் மின்சாரம்

**எட்டாவது திட்ட காலத்தில், தமிழகத்தில் காற்றாலை மூலம் 200 மெகாவாட் விசை உற்பத்தி செய்ய தமிழ்நாடு விசை மேம்பாட்டு நிறுவனம் திட்டங்கள் வகுத்துள்ளது. இந்த 200 மெகாவாட் திட்டத்தில், 100 மெ.வா. விசை தனியார் துறையில் உற்பத்தி செய்யப்படும்.**

**50 கிலோவாட் உற்பத்தித் திறன் கொண்ட காற்றாலை அமைப்புகளைத் தமிழகத்தில் நிறுவ, பல்வேறு இடங்களிலிருந்து தமிழ்நாடு விசை மேம்பாட்டு நிறுவனத்துக்கு விண்ணப்பங்கள் வந்துள்ளன. காற்றாலை மின்சாரத்துக்கு, உற்பத்தி வரியிலிருந்து விலக்களிக்கப் படுகிறது.**

**தமிழ்நாடு மின்சார வாரியம் திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் கயத்தாறு பகுதியில் காற்றாலை மூலம் 500 கிலோவாட் விசை உற்பத்தி செய்யும் அமைப்புகளை நிறுவத் திட்டமிட்டுள்ளது. மத்திய அரசின் அனுமதி கிடைத்ததும் இந்த அமைப்புகள் நிறுவப் படும். இந்தப் பகுதியில் 100 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் மட்டும் 600 மெ.வாட் விசை உற்பத்திக்கு வாய்ப்பு உள்ளதாகக் கண்டறியப் பட்டுள்ளது.**

கறவைப் பசுக்கள் பராமரிப்பு, ஆடு வளர்ப்பு, கலப்பினக் கன்றுகள் வளர்ப்பு, உழவு மாடுகள் வளர்த்தல் போன்ற திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம், இந்தப் பகுதிகளில் உள்ள ஏழை விவசாயிகளுக்கு உபரி வருமானம் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தினால் பயன்பெறும் விவசாயிகளுக்குத் திட்டச் செலவில் 50 சதவிகிதம் மானியமாக வழங்கப்படுகிறது. ஆனால், இந்தத் திட்டம் செயல்படும் தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள கல்ராயன் மலையில் பயன் பெறும் விவசாயிகளுக்கு 75 சதவிதிதம் மானியமாக வழங்கப்படுகிறது. இந்த ஆண்டு இந்தத் திட்டத்தின் மூலம் 435 விவசாயக் குடும்பத்தினர் பயன்பெறுவர்.

இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுவதற்கு 27.21 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படும்.

இதைத் தவிர, கால்நடைப் பராமரிப்புத் துறை மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தை நீலகிரி மாவட்டத்தில் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தில் ஊட்டி மாவட்ட கால்நடைப் பண்ணையில் உறைவிந்து நிலையம் ஏற்படுத்தி, நீலகிரி மாவட்டத்திலுள்ள பசுக்களின் இனவிருத்திக்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. நீலகிரி மாவட்டத்தில் எல்லாக் கால்நடை மருத்துவமனைகள் மற்றும் கிளை நிலையங்களுக்கு உறைவிந்து மூலம் செயற்கை முறை கருவூட்டல் பணியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேலும், கால்நடைப் பராமரிப்புத் துறை வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம், மேற்குத் தொடர்ச்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களின் மூலம் பசுந்தீவன உற்பத்திக்காகப் புல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

இவ்விதம் தரம் உயர்த்தப்பட்ட பசுக்கள், எருமைகள், ஆடுகள் மற்றும் கோழிகளை வளர்ப்பதால் அதிக அளவில் பால், இறைச்சி, முட்டை ஆகியவற்றை உற்பத்தி செய்து, தமிழ் நாட்டிலுள்ள விவசாயிகள் நல்ல முறையில் பயன் பெற்று அதன் மூலம் அதிக வருமானம் பெற்று, அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளுவதால் கிராமப்புறப் பொருளாதாரமும் வெகுவாக முன்னேற்றம் அடைந்துள்ளது. இவ்விதம் கிராமப்புறச் சமுதாயத்தை மேலும் முன்னேற்றம் அடையச் செய்யக் கால்நடைப் பராமரிப்புத் துறை செயல்படக் காத்திருக்கிறது.



# உயிர்க்கொல்லி நோயை ஒழிப்போம்

**பேராசிரியர் டாக்டர் எம்.ஏ. முத்து சேதுபதி**
சிறுநீரக நோயியல் துறைத் தலைவர்
சென்னை மருத்துவக் கல்லூரி

தமிழக மக்கள் ஆவலுடன் எதிர் நோக்கும் பருவமழைக்காலம் மருத்துவ உலகில் ஒரு சிறு பரபரப்பை ஏற்படுத்துவதை அனைவரும் அறிந்திருக்க நியாயமில்லை. தண்ணீர்த் தட்டுப்பாட்டிலிருந்து விடுதலை பெற இந்தப் பருவமழையை மட்டுமே நம்பியிருக்கும்போது அதே நேரத்தில் தூய்மைக் கேட்டால் விளையக்கூடிய பேராபத்தையும் சந்திக்க வேண்டியுள்ளது!

சாதாரணமாகப் பருவநிலை மாறும் போது பாக்டீரியா, வைரஸ் போன்ற நுண்ணுயிர்களால் ஏற்படும் நோய்கள் போலன்றி, ஆண்டுதோறும் அக்டோபர் துவங்கி சனவரி முடிய தென்னகத்தில், 'லெப்டோஸ்பைரோஸிஸ்' எனும் உயிர்க்கொல்லி நோய் ஒருவிதமான நுண்கிருமிகளால், விலங்கினங்கள் மூலம் பரவுகின்றது. இந்நோய்ப் பற்றிய பல தகவல்களை, குறிப்பாக உயிரிழப்புக்குக் காரணமான சிறுநீரகச் செயலிழப்பினைப் பற்றி கடந்த ஆறு ஆண்டுகளாக, நானும், டாக்டர் சிவகுமார் போன்றோரும், மருத்துவர்களிடையே அவ்வப் போது அறிவித்து ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளோம்.

இந்நோய் பற்றிய முழு விவரமும் அனைவரும் அறிய வேண்டியதும் அவசியமாகும்.

'லெப்டோஸ்பைரோஸிஸ்' (Leptospirosis) எனும் இந்நோய் இதனை விளைவிக்கும் நுண்கிருமியின் பெயராலேயே அழைக்கப்படுகின்றது (Leprospira).

சிறிய நூல்போன்ற இருமுனைகளில் சிறிய கொக்கி போன்று வளைந்துள்ள இக்கிருமி 'ஸ்பைரோக்ட்' எனும் வகையைச் சார்ந்தவை சுமார் 6-20 மி.மீ நீளமும், 0.1 மி.மீ பருமனும் கொண்டவை. இவற்றில் சுமார் 19 இனங்கள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றின்கீழ் கிட்டத்தட்ட 180 வகைகள் உலவுகின்றன. மானிடரைப்போல பிறப்பால் மட்டுமே ஆயிரம் சாதிகளாகப் பிரிந்திருப்பது போலன்றி, இவை அவற்றின் குண இயல்புகளில் மாறுபட்டுத் தோன்றுவதாலேயே இனம் பிரிக்கப்பட்டுள்ளன! இவற்றில் மனிதனுக்குக் கேடு விளைவிப்பவை லெப்டோஸ்பைரா இன்டராகன்ஸ்' (Leptospira Interrogans) எனும் இனமாகும். (பமோனா, கானிகோலா போன்ற மற்ற இனங்கள் விலங்கினங்களுக்குத் தீமை பயப்பவையாம்).



இக்கிருமிகள் விலங்கினங்கள் மூலமாகத்தான் மனிதரிடையே பரவக் காரணமாய் உள்ளன. வீட்டுவாழ் பிராணிகள், கால்நடை மற்றும் எலி, பெருச்சாளி அல்லது காட்டு விலங்குகள் இந்நோயால் பீடிக்கப்பட்டு அவை வெளியேற்றும் சிறுநீர் மூலமாகச் சுற்றுப்புறத்தை அடைகின்றது. அவ்வாறு வெளியேற்றப்படும் இக்கிருமிகள் நிலத்தின் தட்பவெட்பத்திற்கு ஏற்பவும் ஈரப்பதம் மற்றும் நீரோட்டத்தைப் பொறுத்தும் நீடித்து வாழும் வல்லமை பெற்றவை. ஈரமற்ற மணற்பரப்பில் சுமார் 6 மணிநேரம் வரையிலும் தேங்கி நிற்கும் நீர்ப்பரப்பில் 6 மாதங்கள் வரையிலுங்கூட உயிர் வாழும் தன்மையுடையவை. இம்மாதிரியான இடங்களில் மனிதன் நடந்து செல்லும் போது, கால்களிலுள்ள சிறு வெடிப்புகள் மூலமாகவோ அல்லது சிறிய காயங்கள் மூலமாகவோ இவை அவனது உடலுக்குட் புகுந்து விடுகின்றன. தேங்கி நிற்கும் நீர்ப்பரப்பு மற்றும் சுகாதாரக் குறைவான மழைக்காலத்தில் சுயரூபம் காட்டுவதால் வடிகால் அமைப்புகள் பருவமழையின் போதுதான் இக்கிருமிகளும் தம் பசி தீர்த்துக் கொள்கின்றன.

சாதாரணமாக நகர்ப்புறங்களில்தான் இந்நிலை அதிகமென்றாலும், கிராமப் பகுதிகளில் வயல்வெளிகள் மற்றும் புல்தரைகள் இவ்விலங்கின நடமாட்டத்தால் இக்கிருமிகள் வாழ வழி செய்கின்றன. ஆக, இந்நோய் வழிப்போக்கர் மட்டுமின்றி, விவசாயிகள், விலங்கினங்கள் காப்பிடங்களில் பணிபுரிவோர், கழிவு நீர்த் துப்புரவுப் பணியாட்கள், சுரங்க வேலை செய்வோர், ஏன் இராணுவத்தினரைக் கூட அதிக அளவில் தாக்கக் கூடிய அபாயம் படைத்தது. அமிலத் தன்மை இவற்றை அழிக்கும் சக்தி கொண்டது. இருப்பினும் சரிவர குளோரின் இடப்படாத குடிநீர்த் தேக்கங்களில் கூட இவை நீடித்து வளரும் வாய்ப்புண்டு. அப்படிப்பட்ட நீரை அருந்தும்போது இவை குடல் உறுப்புகள் மூலமாக இரத்த ஓட்டத்தில் கலந்து நோயை உண்டு பண்ணும் தன்மை பெற்றவை.

இக்கிருமிகள் இரத்த ஓட்டத்தில கலந்து சுழலும்போது கடுமையான காய்ச்சல் மற்றும் தசைவலியை உண்டுபண்ணும். கண்களைச் சிவக்க வைத்து ஒருவித உறுத்தலையும் உண்டாக்கும். இரத்த ஓட்டத்தினால் கல்லீரலை அடைந்து அங்கு பன்மடங்காகப் பெருகி கல்லீரல் திசுக்களைச் சேதப்படுத்துகின்றன. அதனால் தான் இந்நோயின் அடுத்த கட்டமாகக் காய்ச்சலுக்குப் பின்னர் ஓரிரு தினங்களில் மஞ்சள் காமாலை (Jaundice) தென்படுகின்றது. இறுதியில் அனைத்துப் பாரத்தையும் சுமந்து வெளியேற்றும் சிறுநீரகமும் கூட இதற்கு மேல் என்னால் இயலாதெனச் செயலிழந்து விடுகின்றது.

ஆக, 6 அல்லது 7 தினங்களில் சிறுநீரகச் செயலிழப்பு ஏற்பட்டு தக்க தருணத்தில் சிகிச்சை பெறத் தவறும்போது, மனிதன் உயிரிழக்கக் காரணமாயுள்ளது. இதுதவிர மூளைத் திசுக்களையும் ஒருசில சமயங்களில் தாக்கிவிடக் கூடும். ஆக இந்நோய் ஆரம்ப நிலையில் சாதாரண 'ப்ளு' காய்ச்சல் போல தோன்றி பின்னர் கல்லீரல் பாதிப்பால் மஞ்சள் காமாலையுடன் கூடி, முற்றிய நிலையில் மூளையுறைத் திசுக்களையும் (Meninges) சிறுநீரகங்களையும் பாதித்து உயிர்குடிக்கும் தன்மையது.

இவ்வாறு பலவித உறுப்புகளைப் பாதிப்பதால் இவ்விதமான அறிகுறிகள் தென்பட்டதுமே மருத்துவர்கள் சந்தேகத்தின்பேரில் இந்நோய்க்குரிய சிகிச்சையளித்து வருகின்றனர். எனினும் இக்கிருமிகள்தான் இந்நோயை உண்டு பண்ணியவை என்று ஆதாரப் பூர்வமாக அறிவிக்கப் பலவிதப் பரிசோதனைகளை மேற்கொள்ளவேண்டியுள்ளது. நிரூபணம் இல்லாத எதையும் மருத்துவ உலகு ஏற்பதற்கில்லை ஆகவே, பாதிக்கப்பட்ட நோயாளியின் இரத்தம், சிறுநீர் போன்றவை பரிசோதனைக்குட்படுத்தப்படுகின்றன. நோய் தாக்கிய ஆரம்ப கட்டத்தில் இரத்தத்திலும் ஓரிரு வாரங்கள் கழிந்த பின்னர் சிறுநீரிலும் இக்கிருமிகள் வளர்ந்து வாழ்வதைப் பரிசோதனைகள் மூலம் கண்டறியலாம். இரத்தத் துடவல்களை நுண்நோக்கி மூலம் ஒரு இருண்ட வெளிப்பரப்பில் வைத்துக் காணும்போது இவை சிறிய நாலிழைகள் போல முனைகளில் வளைந்து சிறு புழுக்கள் போல நெளிந்து செல்லும். இச்சோதனை மட்டுமே போதுமானதல்ல. சில சமயங்களில் இதில் தவறு நேர்ந்துவிட வாய்ப்புண்டு.

ஆகவே, இவை பரிசோதனைச் சாலையில் இக்கிருமிகளுக்குத் தேவையான ஊட்டச்சத்துள்ள கலங்களில் இடப்பட்டு கண்காணிக்கப்படுகின்றன. நோயாளியின் இரத்தம் இக்கிருமிகளைச் சுமந்திருப்பின் அவை இக்கலங்களில் நன்றாக வளர்ந்து பெருகிவிடும். பின்னர் அவற்றைக் குறிப்பிட்ட நாட்கள் கழித்து நுண்ணோக்கி மூலம் பார்வையிட இவை உறுதிப்படுத்தப்படுகின்றன. இதுதவிர, ஒரு சில மறைமுகப் பரிசோதனைகளும் இடைப்பட்ட காலத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. இக்கிருமிகள் வெளியிடும் 'தொடுப்பான்'கள் (Antigens) நோயாளியின் இரத்தத்தில் ஏற்ற 'எதிர்ப்பான்'களை (Antibodies) உண்டாக்கும்.

மனித உடலின் நோய் எதிர்ப்புத் திறனே இவ்விதமான எதிர்ப்பான்களை உருவாக்குவதில்தான் அடங்கியுள்ளது. இவ்விதம் உருவாகும் எதிர்ப்பான் வகைகளை வைத்தும் அவை எவ்விதமான



கிருமிகளை எதிர்க்க வல்லவை என அறியலாம். இவ்வாறெல்லாம் பரிசோதித்து ஆதாரம் நிரூபிக்கப்பட்ட பின்னர்தான் இக்கிருமிகள் இந்நோய்க்குக் காரணமென ஒத்துக் கொள்ளப்படுகின்றன.

ஆரம்ப அறிகுறிகள் தோன்ற ஆரம்பித்ததும் மருத்துவரை நாடிவிட்டால் இந்நோயை முற்றிலுமாகக் குணப்படுத்திவிடலாம். 'பெனிசிலின்' வகை மருந்துகள் இக்கிருமிகளையழிக்கும் வல்லமை பெற்றவை. இம்மருந்து 6 மணி நேரத்திற்கொருமுறை குறிப்பிட்ட அளவில் ஊசிமூலம் செலுத்தப்படுகின்றது. பாதிக்கப்பட்டவருக்கு வாந்தி முதலிய தொந்தரவுகள் இருந்து அதனால் உடலின் நீர்ச்சத்து குறைந்து போயிருந்தால் தேவையான உப்பு, சர்க்கரை கலந்த திரவப் பொருள் இரத்த நாளங்கள் மூலம் உட்செலுத்தப்படுகின்றன. கல்லீரல் பாதிப்பின் கடுமையினை இவ்வகையான சிகிச்சை முறையே சீர்செய்து விடுகின்றது.

நோயாளி ஒருசில சமயங்களில் சிறுநீரகச் செயலிழப்புடன் மருத்துவமனையை நாடும்போது, உயிர்காக்கும் சிகிச்சையாக 'டயாலிஸிஸ்' மேற்கொள்ளப்படுகின்றது. சரியான நேரத்தில் இந்த 'டயாலிஸிஸ்' முறை மூலம் உயிர் பிழைத்த நோயாளிகள் பலர். ஆக இவையனைத்தையும் மீறி காலம் கடந்து சிகிச்சையை நாடும் போதுதான் உயிரிழக்க வேண்டிய நிலைமை ஏற்படும்.

இந்நோய் பற்றிய ஒரு தனியம்சமே - இது விலங்கினங்களைப் பொதுவாகத் தாக்கும் நோய்; அப்படிப் பாதிக்கப்பட்டவைதான், சுகாதாரக் குறை காரணமாக மனிதனைத் தாக்கக் காரணமாயுள்ளது. ஆக, இந்நோய் மிக எளிதில் தடுக்கக் கூடியது என்பதேயாகும். நல்வாழ்வை விரும்பும் எந்த ஒரு நாகரிகமடைந்த சமுதாயமும் இந்நோயை எளிதில் தடுத்துவிடலாம். இதில் பொதுமக்கள், மருத்துவர்கள், (மனித மற்றும் கால்நடை) நுண்ணுயிர்த் துறையினர், சுகாதாரத் துறை மற்றும் நகர் மன்ற அதிகாரிகள் ஆகிய அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட்டால் இந்நோயால் மனிதனுக்கும் கால்நடைகளுக்கும் ஏற்படக் கூடிய பேரிழப்பைத் தவிர்த்துக் கொள்ளலாம். அது எவ்வாறென இனி பார்ப்போம்.

முதல் கட்டமாக, வீட்டுவாழ் பிராணிகளான, நாய், பூனை, மாடு, ஆடு போன்ற கால்நடைகள், பண்ணை வளர்ப்புப் பன்றிகள், எலி, பெருச்சாளி போன்றவையும், காட்டு விலங்குகளான ஓநாய், நரி, முள்ளம்பன்றி, கீரி போன்றவையும் இந்நோயால் பாதிக்கப்பட்டு இக்கிருமிகளைச் சுமந்து திரிகின்றன. அவற்றின் சிறுநீர் மூலம் வெளியேறும் கிருமிகள்தான் பின்னர் மனிதனைத் தொற்றிக் கொள்கின்றன. எனவே, இவற்றோடு தொடர்புடைய மருத்துவர்கள் நோய் கண்டதை அறிந்ததும் உறுதிப்படுத்தத் தேவையான இரத்தம் மற்றும் சிறுநீர் இவற்றை மையப் பரிசோதனைச் சாலைக்கு அனுப்பிவைத்து, ஆய்வுக்கூட முடிவுகளின்படி தக்க சிகிச்சை தரவேண்டும். அதே சமயம் இந்தத் தகவல்களை அருகிலுள்ள சுகாதாரத்துறை மையங்களுக்குச் சொல்லியனுப்புவதால் சம்பந்தப்பட்ட துறையினர் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று தேவையான சுகாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலும். இவ்வாறாக அறிவிக்கப்பட்ட பகுதிகளை நகராட்சி மன்ற அதிகாரிகளின் உடனடிப் மேற்பார்வையில் சீர்திருத்தி அமைக்கப்பட வேண்டும். இம்மாதிரியான கூட்டமைப்பில் சமுதாயத்தின் நல்வாழ்வு மேம்பாடு அடையும்.

**தடுப்பு முறைகள்**

1. தகுந்த காலணியின்றி, மழைக் காலங்களில் தேங்கி நிற்கும் தண்ணீரில் நடந்து செல்வதைக் கைவிட வேண்டும்.

2. தகுந்த வடிகால் வசதியின்றிக் குடியிருப்புப் பகுதிகள் அமைக்கப்படுவதைத் தடுக்க வேண்டும்.

3. மழைக்காலத்தில் நீர்த்தேக்கங்கள் மற்றும் குடிநீர்த் தொட்டிகளில் ஏற்ற முறையில் குளோரின் அமிலம் இடப்பட வேண்டும்.

4. குடிநீர்க் குழாய்கள் நல்ல முறையில பராமரிக்கப்பட வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் கழிவு நீர்க் குழாய்களுடன் கசிவு மூலம் குடிநீர் கலப்பது தடுக்கப்பட வேண்டும்.

5. விலங்கினக் காப்பகங்கள் நல்ல முறையில் பராமரிக்கப்பட வேண்டும். இறைச்சி விற்பனைக் கூடங்களின் சுகாதாரப் பின்னணிக் கண்காணிக்கப்பட வேண்டும்.

6. வீட்டின் சுற்றுப்புறம் எலிகள், பெருச்சாளி மற்றும் நோய்வாய்ப்பட்ட நாய்கள், பூனைகளால் சூழப்படுவதை ஒழிக்க வேண்டும்.

7. தாம் செய்யும் தொழிலின் தன்மையால் இந்நோய் தாக்கப்படும் அபாயத்திலிருப்பவர்களுக்குத் தகுந்த சுகாதார முறைகள் மூலம் காப்பளிக்கப்பட வேண்டும்.

8. நோய்க்கிருமிகள் வாசம் நிரூபிக்கப்பட்ட பகுதிகள் பொதுமக்கள் உபயோகத்திலிருந்து நீக்கப்பட வேண்டும்.



# சென்னையில் சாலைகளைச் சீரமைக்க அரசு துரித நடவடிக்கை

கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் சென்னையில் பெய்த கடும் மழையின் காரணமாக, சென்னை மாநகரிலுள்ள பெருவாரியான சாலைகள் சேதமடைந்தன. இவற்றில் சில சீரமைக்கப் பட்டுள்ளன. செப்பனிடப்படாத சாலைகளை உடனடியாகச் சீரமைக்க வேண்டுமென மேதகு ஆளுநர் திரு.பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

மேதகு ஆளுநர் அவர்க்ள், சென்னை மாநகராட்சி அலுவலகத்திற்கு வருகை தந்து, உயர் அலுவலர்களுடன் மாநகராட்சிப் பணி குறித்து ஆலோசனை நடத்தினார்.

இந்தக் கூட்டத்தின்போது, சென்னையில் பழுதடைந்த சாலைகள் மற்றும் குழந்தைகள் சத்துணவுக் கூடங்களை உடனடியாகச் சீரமைக்க வேண்டுமென ஆளுநர் அவர்கள் கேட்டுக் கொண்டார். அதன்படி சென்னையிலுள்ள சாலைகளைச் சீரமைக்க ரூ.13.5 கோடி செலவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அமல்படுத்தப்படவுள்ளது. இதில் முதல் தவணையாக ரூ.5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 240 பெரிய சாலைகளும், 1,184 குறுகலான தெருக்களும், 821 சிறிய தெருக்களும் செப்பனிடப்படும். இதுவரை சாலைகளைச் சீரமைக்க ரூ.3.5 கோடி செலவிடப் பட்டுள்ளது.

சென்னையிலுள்ள 365 மாநகராட்சிப் பள்ளிகளிலுள்ள குழந்தைகள் சத்துணவுக் கூடங்கள் அனைத்தையும் புதுப்பிக்க ரூ.15 இலட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது. இந்தச் சத்துணவு கூடங்கள் அனைத்தும் வரும் தமிழ்ப்புத்தாண்டு நாளுக்குள் புதுப்பிக்கப் பட்டு விடும். இந்தச் சத்துணவுக் கூடங்களுக்கு வெள்ளை அடிப்பது, தூய்மைப்படுத்துவது போன்ற பணிகளுக்குச் சாரண மாணவர், மாணவியர்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் ஆளுநர் அவர்கள் ஆலோசனை கூறினார்.

சென்னையிலுள்ள அனைத்துச் சாலைகள், தெருக்களைச் சுத்தமாக வைத்துக் கொள்ளவும், பொதுக் கழிப்பிடங்களை நல்ல முறையில் பராமரிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொதுமக்களின் குறைகளை இயன்றவரை நிறைவேற்ற, சென்னை மாநகராட்சி, தனிமுயற்சி எடுத்துள்ளது. சென்ற ஆண்டு பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மொத்தம் 1,607 மனுக்களில், 1,487 கோரிக்கைகள் நிறைவேற்றி வைக்கப் பட்டுள்ளன.



# தொழுநோய் ஒழிப்பில் ஒரு தொண்டு நிறுவனம்



**அ**ண்ணல் காந்தியடிகளின் ஆரம்பகாலப் பணிகளில் ஒன்று, பிச்சைக்காரர் ஒருவரைத் தனது இல்லத்திற்கு அழைத்துக் கொண்டு சென்றதாகும். அவர் ஒரு தொழு நோயாளி. தொழுநோய் பற்றிய காந்தியடிகளின் மனப்போக்கு அவரது வாழ்க்கையில் பல கட்டங் களிலும் பிரதிபலித்தது. அவர் சென்ற இடமெல்லாம் தொழு நோயாளிகளையும் சாதாரண மக்களைப் போலவே சேர்த்துக் கொண்டார்.

தொழுநோயால் தாக்கப்பட்ட வர்களைச் சமூகம் தீண்டாதவர் களாகக் கருதுவதை அவர் தவறு என உறுதிபட எண்ணினார். தொழுநோய்ப் பணிக்குத் தம்மை முழுவதும் அர்ப்பணித்துக் கொண்ட தாலேயே, காந்தியடிகளின் நினைவு நாளான ஜனவரி 30-ஆம் நாளை, தொழுநோய் எதிர்ப்பு நாளாக நாடு முழுவதும் கொண்டாடுகிறோம். இந்தியத் தொழுநோய்ச்சங்கம், அண்மையில் ஒருவார காலத்திற்குத் தொழுநோய் ஒழிப்பு வாரமாக அனுசரித்தது நினைவிருக்கலாம்.

## தொழுநோயும் இந்தியாவும்

உலகிலேயே, இந்தியாவில்தான் அதிகமான எண்ணிக்கையில் தொழு நோயாளிகள் உள்ளனர். சமீபத்திய புள்ளிவிவரப்படி உலகில் 1 கோடியே இருபதுஇலட்சம்தொழுநோயாளிகள் இருப்பதாகவும், அதில் நமது இந்திய நாட்டில் மட்டும் மூன்றில் ஒரு பங்கு (சுமார் 40 இலட்சம்) தொழு நோயாளிகள் இருப்பதாகவும் கணக் கிடப்பட்டுள்ளது. இதில் தமிழ் நாட்டில் மட்டும் 7.6 இலட்சம் தொழுநோயாளிகள் உள்ளனர்.

தொழுநோய் முற்றினால் உண் டாகும் உடல் ஊனமும், சமூகத் தினரிடையே அனுதாபத்திற்குப் பதி லாக வெறுப்பையும், நிராகரிப்பை யும் தோற்றுவிப்பதால் - தொழு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் பல விதமான அவதிக்குள்ளாகிறார்கள்.

## தொழுநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம்

தொழுநோய் ஒழிப்பில் அரசு மருத்துவமனைகளும், சில தொண்டு நிறுவனங்களும் ஈடுபட்டுள்ளன. மத்திய அரசு 1955-56-ஆம் ஆண்டி லிருந்தே தொழுநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தை அமல் படுத்தி வருகிறது.



● **வாழ்க்கை-அவனவன் வாழ்வ தற்கு என்று மட்டும் கருதக் கூடாது; மற்றவர்கள் நலனுக்கும் என்று கருத வேண்டும்.**

**—தந்தை பெரியார்**

சென்னை செனாய் நகரில், ஒரு தொண்டு நிறுவனம் தொழுநோய் ஒழிப்பில் மிகத் தீவிரமாக ஈடுபட்டி ருக்கிறது. 'கிரிமால்ட்டஸ்' என்ற ழைக்கப்படும் இந்தத் தொழுநோய் ஆலோசனை மருத்துவமனையை நேரில் சென்று பார்வையிடுகிறோம். அதன் உதவி இயக்குநர் டாக்டர் தேவஅன்பு அவர்களைச் சந்திக் கிறோம். அவர் கூறினார்-

கிரிமால்ட்டஸ்' (GREMALTES) என்பது, "Greater Madras Leprosy Treatment and Education Scheme" என்பதன் சுருக்கம் ஆகும்.

கிரிமால்ட்டஸ் தொழுநோய் மையம் 1971-ஆம் ஆண்டு ஆரம் பிக்கப்பட்டது. இதன் முழு பரா மரிப்புச் செலவுகளுக்காக நிதி உதவி, ஜெர்மனி தொழுநோய் நிவாரணச் சங்கத்திடமிருந்து பெறப் படுகிறது. இதன் காரணமாக இந்தத் தொழுநோய் மையம் 'ஜெர்மன் மருத்துவமனை' என்று பெரும் பாலான மக்களால் அழைக்கப் படுகிறது.

இந்தத் தொண்டு நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து இன்றுவரை சுமார் இருபதாயிரம் தொழுநோயாளிகளுக்குச் சிகிச்சை அளித்துக் குணப்படுத்தியிருக்கிறது. "கிரிமால்ட்டஸ் தொழுநோய் மருத் துவமனை" இந்தியத் தொழுநோய் அறக்கட்டளையின் ஓர் அங்கமாக இருந்து செயல்படுகிறது. சென்னை, அதன் சுற்றுவட்டாரங்களில் தொழு நோயால் பாதிக்கப்பட்டவர்களைக் கண்டறிந்து, அவர்களுக்குச் சிகிச்சை அளித்து, மறுவாழ்வு கொடுப்பதே இந்த மையத்தின் முக்கிய நோக்க மாகும்.

75 படுக்கைகள் வசதி கொண்ட இந்தத் தொழுநோய் மருத்துவமனை யில் 8 மருத்துவர்களும், 120 இதர பணியாளர்களும் பணியாற்று கிறார்கள். மருத்துவம், சுகாதாரக் கல்வி, அறுவைச் சிகிச்சை, கண் மருத்துவம், ஆய்வுக் கூடம் போன்ற பலதரப்பட்ட துறைகள் தனித்தனி யாக இங்கு இயங்குகின்றன. இவை தவிர, காலணிகள் தயாரிக்கும் ஒரு தொழிற்கூடமும் இங்குச் செயல்படு கிறது. தொழுநோயாளி களுக்குத் தேவையான காலணிகள் இங்குத் தயாரிக்கப்பட்டு இலவசமாக வழங் கப்படுகின்றன.

இங்கு அனுமதிக்கப்பட்ட அனைத்து நோயாளிகளுக்கும் நல்ல சுகாதார முறையில் உணவு தயாரிக்கப்பட்டு பரிமாறப்படுகிறது. தொழுநோயாளி களுக்கு வழங்கப்படும் உணவு, அளிக்கப்படும் சிகிச்சை, மருந்துகள் யாவும் இலவசமாகவே கொடுக்கப் படுகின்றன. தேவைப்படும் நோயாளி களுக்கு இலவசமாக அறுவைச் சிகிச் சையும் செய்யப்படுகிறது. மேலும் செயற்கை உறுப்புகளும், மூக்குக் கண்ணாடிகளும் இலவசமாக வழங் கப்படுகின்றன.



## தொழுநோயாளிகளுக்கு மறுவாழ்வு

சிரிமால்ட்டஸ் மருத்துவமனை யில் சிகிச்சை பெற்று முழுவதுமாகக் குணமடைந்த தொழுநோயாளிகளின் மறுவாழ்வுக்கும் இந்த மையம் ஏற்பாடு செய்கிறது. 'மறுவாழ்வு நிதி' ஒன்றை ஏற்படுத்தி, அதன் மூலம் தகுதிவாய்ந்த நபர்களுக்குத் தொழில் தொடங்க ரூபாய் மூவா யிரம் வரை நிதி உதவி செய்து அவர்களின் மறுவாழ்வுக்கு உதவு கிறது. ரூ.3,000-க்கு மேல் தேவைப் படும் நபர்களுக்கு வங்கிகள் மூலம் கடன் வழங்க இந்த மையம் ஏற்பாடு செய்கிறது.

## சருமநோய்ப் பிரிவு



தொழுநோய் மட்டுமன்றி இதர சரும நோய்களுக்கும் வாரத்தில் மூன்று நாட்கள் இங்குச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இந்தச் சரும நோய்ப் பிரிவு 1981-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அன்று முதல், நாள்தோறும் சுமார் நூறு புற நோயாளிகள் இந்த மருத்துவ மனைக்குச் சிகிச்சை பெற வரு கிறார்கள். தொழுநோய் அல்லாத இதர நோயாளிகளும் இங்கு அனு மதிக்கப்பட்டு, சிகிச்சை பெறு கிறார்கள். தொழுநோயாளிகளை மட்டும் தனியே பிரித்து வைக்கக் கூடாது என்பதற்காக, அனைத்து விதமான நோயாளிகளும் இங்கு அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை அளிக்கப்

## சிறுசேமிப்புத் துறை




எதிர்பாரா இன்னல்கள் ஏற்படுமுன் சேமியுங்கள். வரி செலுத்துவதைத் திட்டமிட்டு, இன்ஷூரன்ஸ் பாதுகாப்பும் பெறுங்கள். இன்றே கீழ்க்கண்ட சிறுசேமிப்புத் திட்டத்தில் ரூ.1,000/-ம் அதற்குமேலும் முதலீடு செய்து தனிநபர் விபத்து இன்ஷூரன்ஸ் பாலிசியைப் பெறுங்கள்.

**கீழ்க்கண்ட திட்டங்களின்கீழ் தனிநபர் விபத்து இன்ஷூரன்ஸ் பாதுகாப்பு கிடைக்கும்:**

- கிசான் விகாஸ் பத்திரம்
- தேசிய சேமிப்புத் திட்டம்
- அஞ்சலக மாதாந்திர வருமானத்திட்டம்
- அரசுப்பணியாளர்களுக்கான டெபாசிட் திட்டம் 1989
- தேசிய சேமிப்புப்பத்திரம் 8வது வெளியீடு
- 15 வருட பொது சேமநலநிதி
- அஞ்சலக குறித்தகால டெபாசிட்

**வருமான வரி விலக்குப் பெற தேசிய சேமிப்பில் முதலீடு செய்வீர்**

| வசதிகள் | தேசிய சேமிப்பு பத்திரம் 8-வது வெளியீடு | பொதுசேம நலநிதி | தேசிய சேமிப்பு திட்டம் |
|---|---|---|---|
| வட்டி | 12% | 12% | 11% |
| முதலீட்டுக்கு வருமான வரிவிலக்கு | ரூ.50,000 பிரிவு 88-ன்கீழ் | ரூ.50,000 பிரிவு 88-ன்கீழ் | ரூ.40,000 பிரிவு 80CCA-ன் கீழ் |
| வட்டிக்கு வருமான வரிவிலக்கு | வருமான வரிச் சட்டம் பிரிவு 88-ன்கீழ் | வருமான வரியில் இருந்து வட்டிக்கு முழுவிலக்கு | வட்டி தொகை சேரும்போது வருமான வரி விலக்கு |
| செல்வ வரி | ரூ.5,00,000 வரை விலக்கு | முழுவிலக்கு | முழுவிலக்கு |
| டெபாசிட்டுகளுக்கான வரம்பு | வரம்பு கிடையாது | ரூ.60,000 | ரூ.40,000 |

**தமிழக அரசின் சிறப்பு சலுகைகள்:**

- ஒவ்வொரு ரூ.500/- முதலீட்டிற்கும் ஒரு இலவச பரிசு கூப்பன் மூலம் 262 பரிசுகளில் ஒன்றைப் பெறும் வாய்ப்பு.
- தமிழ்நாட்டில் குறிப்பிட்ட சில திட்டத்தில் முதலீடு செய்யும் ஒவ்வொரு ரூ.1,000/- முதலீட்டிற்கும் 1% வரை ஊக்கத்தொகை.
- 1.1.91 முதல் 31.3.91 வரை தமிழ்நாட்டில் குறிப்பிட்ட திட்டங்களில் முதலீடு செய்யும் ஒவ்வொரு ரூ. 1000/- முதலீட்டிற்கும் தனிநபர் விபத்து இன்ஷூரன்ஸ் வசதி. பிரீமியத்தை தமிழக அரசே செலுத்துகிறது.

DIPR/189/MS/91/ARIES

**இலவச தனிநபர் விபத்து காப்புறுதி திட்டம் — அதிகபட்ச நஷ்ட ஈடு ரூ. 50,000/-**




கூடுதல் சலுகைகள்:

- இந்திய அரசின் முழுப்பாதுகாப்பு
- சொத்து வரிவிலக்கு
- உங்கள் குழந்தைகள் பெயரில் முதலீடு செய்து வருமான வரிவிலக்கு பெறுங்கள்.

யுனைடெட் இந்தியா இன்ஷூரன்ஸ் நிறுவனம், சென்னை.
தனிநபர் விபத்து இன்ஷூரன்ஸ் பாலிசி கிடைக்குமிடம்:
அனைத்து மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் மற்றும்

இயக்குநர்
**சிறுசேமிப்புத்துறை**
143, அண்ணாசாலை, சென்னை-600 002.
தொலைபேசி: 840223/846209.


# தெலுங்கு கங்கைத் திட்டப் பணிகள்



சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்க கிருஷ்ணா நதியிலிருந்து 15 டி.எம்.சி. நீர் கொண்டுவரும் பொருட்டு தெலுங்கு-கங்கைத் திட்டம் நிறைவேற்றுவதற்காக தமிழ்நாடு, ஆந்திர மாநிலங்களிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் தொடர்ச்சியாக இத்திட்டத்தைச் செயல்படுத்துவ தற்காகும் தமிழ்நாட்டின் பங்கிற்கெனத் தமிழக அரசு இதுவரை 107 கோடி ரூபாய் அளித்துள்ளது.

இத்திட்டம் மீண்டும் புத்துயிர் அளிக்கப்பட்டு நல்ல முன்னேற்றத்தில் உள்ளது. தமிழ்நாடு, ஆந்திர மாநில அலுவலர்களிடையே 2.2.1991 அன்று சென்னையில் நடைபெற்ற 26-வது தொடர்புக் குழு கூட்டத்தில் இத்திட்ட முன் னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

1993-ஆம் ஆண்டிற்குள் ஓரளவுக்குச் சென்னைக் குக் குடிநீர் வழங்கிப் பயன் அடையும் பொருட்டும் இத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாகப் பணி களை விரைவில் செயலாக்கும் பொருட்டும் இரு மாநிலங்களும் நட்புறவு நோக்கத்தோடு ஒரு விரிவான பணித் திட்டம் தயாரிக்க வேண்டுமென அக்கூட்டத்தில் ஒத்துக்கொள்ளப்பட்டது.

தெலுங்கு-கங்கைத் திட்டத்திற்காக ஆந்திர மாநிலம் மேற்கொள்ளப்படவிருக்கும் செலவினத் தில் தமிழ்நாட்டின் பங்காக ஆந்திரப்பிரதேச அரசிற்கு ரூ.30 கோடி இரு தவணைகளில் செலுத்துவதெனத் தமிழ்நாடு அரசு ஒத்துக்கொண் டுள்ளது. 28.2.91-க்கு முன்னர் ரூ.15 கோடியை முதல் தவணையாகவும், வேலைகளில் ஏற்படும் முன்னேற்றத்தின் அடிப்படையில் எஞ்சிய ரூ.15 கோடியை இரண்டாம் தவணையாக 1991-ஆம் ஆண்டு மார்ச் திங்களில் அளிப்பதெனவும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி 1993-ஆம் ஆண்டில் சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கு வதில் ஓரளவு பயன் அளிக்கும் வகையில் இத் திட்டப் பணிகளை விரைவுபடுத்தி முடிக்க ஏது வாக இருக்கும் பொருட்டு ரூபாய் 15 கோடி ஆந்திர மாநிலத்திற்குத் தமிழ்நாடு அரசு தற் பொழுது அளித்துள்ளது.

1988-89-ஆம் ஆண்டு விலைப்பட்டியலின் அடிப்படையில், தமிழ்நாடு அரசின் பங்காகிய ரூபாய் 252.05 கோடியில் தற்சமயம் தமிழ்நாடு அரசு அளித்துள்ள ரூபாய் 15 கோடி உள்ளிட்டு ஆந்திர மாநில அரசுக்குக் கொடுக்கப்பட்ட ஒட்டு மொத்தத் தொகை ரூபாய் 122 கோடியாகும்.



படுகிறது. இதுவும் இந்த மையத்தின் முக்கிய நோக்கமாகும்.

கிரிமால்ட்டஸ் மருத்துவமனை







யில், மருத்துவச் சிகிச்சை தவிர, கீழ்க்கண்ட குறுகியகாலப் பயிற்சி வகுப்புகளும் நடத்தப்படுகின்றன.

1. அரசு மற்றும் மாநகராட்சி மருத்துவமனைகளில் பணிபுரியும் மருத்துவர்களுக்குத் தொழுநோய்ப் பற்றி பயிற்சி அளித்தல்.

2. 4-மாத காலத் தொழுநோய் ஆய்வாளர்கள் பயிற்சி.

3. 6-மாத காலச் சுகாதாரக் கல்விப் பயிற்சி.

4. காலணி தயாரிக்கும் 6-மாத பயிற்சி.

5. முட நீக்குப் பயிற்சி (Physiotheraphy)

இவை தவிர தொழுநோய் பற்றிய ஆய்வும் (Research) இங்கு நடைபெறுகிறது.

**தொழுநோய் மாதம்**

கிரிமால்ட்டஸ் தொழுநோய் மருத்துவமனை, இவ்வாண்டு ஜனவரி 30-ஆம் தேதி முதல் பிப்ரவரி மாதம் 28-ஆம் தேதி முடிய ஒருமாக் காலத்தைத் தொழுநோய் மாதமாக அனுசரித்தது.

தொழுநோய் பற்றி மக்களிடம் விழிப்புணர்ச்சி ஏற்படுத்த இந்த ஒரு மாத காலத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சென்னையில் உள்ள பள்ளிகளுக்கிடையே சுகாதாரம் பற்றிய வினாடி வினா போட்டி, சென்னைக் கல்லூரிகளுக்கிடையே பேச்சுப் போட்டி, சென்னையிலுள்ள மருத்துவக் கல்லூரிகளுக்கிடையே தொழுநோய்வினாடி வினா போட்டி, தொலைக்காட்சி, வானொலி மூலம் பிரச்சாரம் செய்தல், சென்னையிலுள்ள முக்கிய இடங்களில் தொழுநோய் பற்றிய சுவரொட்டிகள் ஒட்டி விளம்பரம் செய்தல் போன்றவை இந்த ஒருமாத காலத்தில் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகளாகும்.





இவ்வாறு பல அரிய பணிகளில் ஈடுபட்டிருக்கும் கிரிமால்ட்டஸ் தொழுநோய் மையத்தின் பணிகள் பாராட்டத்தக்கவை.

- ஜே. சந்திரன்.

# மூடநம்பிக்கை

## வ.ரா



கண்ணுக்குத் தெரியாமல் நீங்கள் எல்லோரும் உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள். அடியேனும் அப்படி. சௌக்கியந்தானே என்று கேட்டால், பதில் சொல்லப் போகிறீர்களா? பதில் சொன்னாலும், எனக்குக் கேட்கப்போகிறதா? நான் நமஸ்காரம் என்று வணங்கினால், உங்கள் ஆசீர்வாதம் எனக்கு எப்படித் தெரியும்? பழைய காலத்து அசரீரி வாக்கு இப்படித்தான் இருந்திருக்குமோ!

ஆகாசத்திலிருந்து பேசவாவது! அது ஆயிரம் பதினாயிரம் மைலுக்கு அப்பாலே கேட்கவாவது! கலியுகமோ, திரேதாயுகமோ - அது இன்னது என்று தெரியவில்லை.

ராத்திரி எட்டேகால் மணிக்கு உங்களுக்கெல்லாம் என்னென்ன வேலை இருக்குமோ! நான் உங்கள் கதவைத் தட்டி, உங்கள் காலத்தையும் காதுகளையும் யாசகம் கேட்பது ரொம்பவும் மரியாதைக் குறைவான காரியந்தான். இந்த மரியாதைக் குறைவுக்கு நான் காரணம் இல்லை. நம்மையெல்லாம் மீறியே, சில காரியம் நடக்கிறது இயற்கைதானே?

''என்னடா! பொழுது விடிகிறது; பொழுது அஸ்தமித்து ராத்திரி வருகிறது. அதோடு தூக்கமும் கொட்டாவியும் கிறுகிறுப்பும் கலந்து வருகிறது. இந்த மாதிரியே காலம் போய்க் கொண்டிருந்தால்-''

இப்படி நினைத்துக் கொண்டு, உட்கார்ந்திருந்தேன். திடீரென்று, ''நமஸ்காரம்'' என்ற சத்தம் காதிலே பொத்தென்று குதித்தது. திரும்பிப் பார்த்தால், நண்பர்-

''வரணும்'' என்றேன். ''வந்த பிறகு, 'வரணும்' என்று சொல்லுகிறதிலே என்ன வாஞ்சை இருக்கிறது?'' என்று நண்பர் சொன்னார். ''போகணும் என்று ஒரு நாளும் சொல்ல மாட்டேன்'' என்றேன்.

''உங்கள் வீட்டுக்கு வந்தவனை, வரணும் என்று சம்பிரதாய மரியாதை நீங்கள் செய்வது உசத்தி இல்லை. உங்க வீட்டுக்கு நான் வந்து, உங்களை 'வரணும்' என்று அழைப்பது தான் உசத்தி'' என்று நண்பர் அழகாகப் பங்கடைத்துப் பேசி விட்டார்.

''எங்கே வரணும்?''

''ஆகாசத்திலிருந்து பேசறத்துக்கு வரணும்'' என்று அவர் கிண்டலாகப் பேசினார்.

''அடே அப்பா! சாதாரணமாகத் தரையிலிருந்து உரக்கப் பேசினாலே. ஆகாயத்திலே பறக்கிறான் என்று லோகத்திலே மட்டுமரியாதை இல்லாமல் பேசறா. ஆகாசத்திலிருந்தே பேசிட்டா, அப்புறம் கேட்க வேண்டியதேயில்லை! சுவாமி! நான் ஒரு தாய்க்கு ஒரு பிள்ளை... எல்லாத்தையும் யோசிக்க வேணுமோன்னோ!'' என்று சொன்னேன்.

''நீங்கள் சொல்லுகிற மாதிரி தான், எல்லோரும் ஒரு தாய்க்கு ஒரு பிள்ளை. இரண்டு தாய்க்கு ஒரு பிள்ளை யாருமே இல்லை!'' என்று சிரித்தார் நண்பர்.

நான் தொண்டையிலே எச்சிலை விழுங்கினேன். கனைத்துக் கொண்டேன். வேறே என்ன செய்கிறது?

''பேசறது என்கிறது ஒரு பெரிய வித்தை. அந்த வித்தை எல்லோருக்கும் லேசா வராது. மேலும் பேசறதற்கு விஷயம் இருக்க வேண்டாமா? சாமான் சட்டியிலே இருந்தால் தானே அகப்பையிலே வரும்?'' என்று சொன்னேன்.



**• சீதனம் என்பது பெண்களை விலைபேசி விற்பதைத் தவிர வேறொன்றுமில்லை. வரதட்சணை கொடுத்தால்தான் திருமணம் செய்து கொள்ள முடியும் என்று நிபந்தனை விதிக்கும் எந்த இளைஞனும், தான் படித்த படிப்புக்கும், தன்னுடைய தேசத்திற்கும் அவமதிப்பைத் தேடிக் கொடுத்தவனாகிறான்!**

—காந்தியடிகள்

பட இருந்தேன். "மாமா! சினிமாவுக்குப் போறீங்களா?" என்று எதிர் வீட்டுப் பையன் கேட்டான். சகுனத் தடை ஒண்ணாச்சு, இரண்டாச்சு - என்ன ஆகப் போகிறதோ என்று எனக்குப் பயம். எப்படியோ தைரியத்தைக் கைவிடாமல், அடி எடுத்து வைத்தேன். வீதியிலே போகும் ஒருவர் பொசுக்கெனத் தும்மினார். இது என்ன விபரீதம்! இந்தத் தும்மலை அவர் கொஞ்சம் முந்தித் தும்மியிருக்கக் கூடாதா? அல்லது கொஞ்சம் பிந்தித்தான் தும்மியிருக்கக் கூடாதா?

என்ன பண்ணுவது என்று தெரியவில்லை. நான் வீதியிலே நின்று கொண்டிருந்தேன். எனக்குத் தெரிந்த பாட்டியம்மா வந்தாள்.

"அப்பா! போகிற காரியம் அட்சயப் பாத்திரம் மாதிரி வளர்ந்துண்டே இருக்கும்; வெளுத்ததெல்லாம் பாலில்லே; வெள்ளைப் புடவைக்காரிகளெல்லாம் விதவை இல்லே! என் சகுனம் நல்ல சகுனம், பயப்படாதே, போ" என்று பாட்டி தாதுபுஷ்டி லேகியம் கொடுத்தாள். தும்மலாச்சு; போகிறபோது கூப்பிடுகிறதாச்சு. போதாக்குறைக்கு, அமங்கலி அம்மா வேறே வந்து தோன்றியிருக்கிறாள்!

'ரேடியோ ஆச்சு; அதுவும் ஆச்சு! வீட்டுக்குத் திரும்பிப் போய் விடலாமா?' என்று யோசித்தேன். திரும்பி எங்கே போவது? வீட்டுக்குத் தானே போக வேண்டும்? சம்சாரம் சிரிக்கமாட்டாளா? ஆண்பிள்ளைகளுக்கெல்லாம் தைரியம் வருகிற கடைசி வழி சம்சாரம்தானே!

பத்தடி எடுத்து வைத்தேன். "ரொம்ப சந்தோஷம்! போய்விட்டு வாருங்கள். இன்றைய பிரசங்கம் அபூர்வமாக இருக்கணும்" என்று பக்கத்து வீட்டுச் சிநேகிதர் வாழ்த்தினார். ஆனால் அவர் வீட்டிலே வளர்ந்து வந்த பூனைக்கு இங்கிதமே தெரியவில்லை! அது ஒரே பாய்ச்சலாய்க் குறுக்கே பாய்ந்து ஓடிற்று.

பூனை குறுக்கே போகிற காரியம் ஒரு நாளும் பலிக்காது என்று எங்கள் பாட்டி சொன்னது, தகதக என்று சூரிய ஒளி போலே என் ஞாபகத்துக்கு வந்தது. இருந்தாலும், சிநேகிதர் கிண்டல் செய்வார் என்று



**தூய உள்ளமே கோயில்; நலிந்தோரைத் தேற்றுவதே தோத்திரம்; மக்கட் பணியே மகேசனுக்கு உகந்த வழிபாடு; ஏழை இதயத்தின் மகிழ்ச்சியே இறைவனுக்குத் தேர்த்திருவிழா!**

**—அறிஞர் அண்ணா**

பயந்து, வேகமாக நடந்து, பஸ்ஸிலே ஏறினேன்.

உடம்பெல்லாம் வியர்வை. மார்பு படபட என்று அடித்துக் கொள்கிறது. பேந்தப் பேந்த விழிக்கிறேன். பக்கத்தில் இருந்தவர் பயந்து போய்விட்டார்; மெல்ல விசாரித்தார். என்னை அறியாமலே, ரேடியோ என்று உளறிவிட்டேன். சட்டென்று நினைவு வந்துவிட்டது. தொண்டையை நன்றாகக் கனைத்துக் கொண்டேன். இதற்குள்ளே, பஸ்ஸும், மவுண்ட் ரோடில் வந்து நின்றுவிட்டது.

சட்டென்று இறங்கினேன். இறங்கின அவசரத்திலே, பஸ் கதவிலே இடித்துக் கொண்டேன். இந்த அபசகுனமும் நேரவேண்டுமா என்று நினைத்துக் கொண்டேன்.

எல்லாம் சரி, ரேடியோவிலே என்ன பேசறது! கல்யாணச் சந்தடியிலே தாலிகட்ட மறந்துபோன கதை மாதிரி ஆகிவிட்டது....?

இனிமேல் என்னமா யோசிக்க முடியும்? இந்தச் சமயத்திலே சமய சஞ்சீவி மாதிரி ஒரு பையன் பேப்பர் விற்றான். "மூட நம்பிக்கைகள்' காலணா" என்று விற்றான். பழம் நழுவிப் பாலிலே விழுந்து, அதிலிருந்து நழுவி வாயிலே விழுந்த மாதிரி ஆச்சு; மூட நம்பிக்கைகள் டஜன் கணக்கிலே, காலணாவுக்கு மலிவாகக் கிடைத்ததிலே எனக்குச் சந்தோஷம்.

அதிலிருந்து, கொஞ்சம் உங்களுக்குப் படிக்கப் போகிறேன். படிக்கட்டுமா? கொஞ்சமே கொஞ்சந்தான்:

**பந்தயப்பட்டி சித்திரவதை**

"நம் நாட்டிலே இருக்கிற மூட நம்பிக்கைகளைக் கணக்கெடுக்க முடியாது. பந்தயப்பட்டி சித்திரவதையைக் கேட்டால், கேட்பார் மனம், கல்லாயிருந்தாலும் கரைந்து போகும். உண்மையாக நடந்த சம்பவம். கற்பனை கொஞ்சங்கூட கலக்கவில்லை.". இந்த மாதிரி அந்தத் தாளில் எழுதியிருந்தது. அதுதான் சுவாரஸ்யமாக இருக்கலாம் என்று நினைத்து அதை உங்களுக்குப் படிக்கப் போகிறேன். இந்தத் தாளிலே, மேலே என்ன எழுதியிருந்தது என்கிறீர்களோ?

**படிக்கிறேன் கேளுங்கள்:**

பந்தயப்பட்டி என்று ஒரு கிராமம். அந்த ஊரிலே, பரம்பரையாக ஒரு பெரிய குடும்பம். அந்த குடும்பத்திலே கிருகலட்சுமி என்று ஒரு பெண் பிறந்தாள், அவள் ரொம்ப சமர்த்து. ஆனால் நிறம் கொஞ்சம் கறுப்பு. இந்தத் தேசத்துக்குக் கறுப்பு நிறம் இயற்கைதானே?

கிருகலட்சுமிக்குப் புருஷன் பார்த்துக் கடைசியாகக் காலாடியூரில் ஒரு பையனுக்குக் கல்யாணம் செய்து கொடுத்தார்கள். பெண்ணாய்ப் பிறந்த - பாபத்துக்காகவும் சேர்த்துப் பையனுக்கு ரூபாய் 5,000 கொடுத்தார் கிருகலட்சுமியின் தகப்பனார். பையன் இங்கிலீஷ் படித்து, உத்தியோகம் பெற்றான். மாதம் ரூபாய் 50 சம்பளம். ஆனால் மேல்வரும்படி, கீழ்வரும்படி முதலிய இனங்களைச் சேர்த்து, அவனுக்குச் சுமார் 150 ரூபாய் வரும். ஆகவே, அவனுக்குக் குஷி உண்டாயிற்று.

ஒரு நாளைக்குத் திடீரென்று நினைத்துக் கொண்டான். தன் சம்சாரம் கிருகலட்சுமியை அவள் பிறந்த வீட்டுக்கு அனுப்பிவிட்டு, அனுப்பின கையோடு மறு தாரம் கல்யாணம் செய்துகொண்டான். காலாடியூர்ப் பேர்வழியின் யோக்கியதையைப் பாருங்கள்! கிருகலட்சுமிக்கோ பிறந்த வீட்டுக்கு வந்து, அழுது அழுது, தொண்டை புண்ணாகிவிட்டது. உரிய வேளைக்குச் சாப்பாடு கிடையாது; அநேகமாகப் படுத்த படுக்கைதான். யாரோடேயும் அதிகமாகப் பேச்சுக் கிடையாது.



காலாடியூர்ப் பேர்வழியோ, தன் புதிய மனைவியோடு உல்லாசமாகக் காலங்கழித்து வருகிறான். எத்தனைப் பேர்களோ அவனிடம் சொல்லிப் பார்த்தார்கள். சொல்லச் சொல்ல அவனுக்குத் திமிர் அதிகமாகப் போய்விட்டது. வாய்த்துடுக்கினால், அவன் ஒரு சமயம், கறுப்பு நிறமும் கழுதையும் சமானம் என்று எடை போட்டு நிறுத்தி விட்டதைப் போல, உளறித் தீர்த்துவிட்டான். இந்தத் தேசத்திலே, அவதார புருஷர்களாக விளங்கியவர்கள் எல்லோரும் அட்டைக் கருநிறம் என்பது அவனுக்குத் தெரியுமா? அவனுக்கு நிறத் திமிர். என்ன செய்யலாம்?

கிருகலட்சுமியோ, துரும்பாக ஆகிக்கொண்டு வந்தாள். பெற்றோர் படுகிற பாட்டைச் சொல்லி முடியாது. பந்தயப்பட்டியிலே ஒரு ஜோசியர், ஒரு பூசாரி - இரண்டு பேருக்கும் போட்டி. பூசாரியாருக்குப் பனமரத்துப் பூசாரி என்று பெயர். 'வெள்ளைக் குதிரைச்' சவாரியில் அவருக்குப் பிரம்மானந்தம். அவர் இருக்கிற நூறு கஜ தூரத்துக் குக்கூட கள் நாற்றம் அடிக்கும். அவர் போதை வெறியில் பம்பையை அடிப்பார். அடித்தால் பேய்கள் எல்லாம் ஒரே ஓட்டம் எடுக்குமாம்! பேயாட்டி பனமரத்துப் பூசாரி, பந்தயப்பட்டியிலும் அதன் சுற்று வட்டாரத்திலும் பெயர் போன பேர்வழி.

ஜோசியருக்குப் பாலத்து ஜோசியர் என்று பிரபல பட்டப் பெயர். ஊர்க்கோடியில் ஒரு பாழடைந்த பாலத்தின்கீழ், அவர் சுமார் ஒரு மணிநேரம் வரையில் உட்கார்ந்து கொண்டு, தம் முதுகின் அடிப்புறத்தை மத்தளம் தட்டினாலொழிய, அவருக்கு ஜீரணம் ஆகாதாம். பந்தயப்பட்டியில் எது நடந்தாலும், இவர்கள் இரண்டு பேருக்குத்தான் அதிருஷ்டம். ஜோசியரிடம் யாராவது ஆருடம் பார்க்கப் போனால், வேடிக்கையாக இருக்கும்.

'எட்டிலே ஒன்பது போனால்?' என்று அவர் கேட்பார். போகாது என்றால் அவருக்குக் கோபம் வந்து விடும். "உங்கள் புதுக்கணக்கு எனக்கு வேண்டாம். கர்நாடகக் கணக்கு எனக்குப் போதும். அரைப் படி பாலிலே முக்கால் படி தண்ணீர் போகாதோ?" என்று கர்ஜனை செய்வார். இப்பேர்ப்பட்ட அபூர்வமான கர்நாடகக் கணக்குப் போடுகிறவர் ஜோசியர்.

நாளுக்கு நாள் அன்ன ஆகாரம் இல்லாமல் மெலிந்து போய்க் கொண்டிருந்த கிருகலட்சுமிக்குப் பேய் பிடித்திருக்குமோ என்று அவள் தகப்பனார் சந்தேகப்பட்டார். சந்தேகப்பட்டதுதான் தாமதம்; பூசாரியார் தோளில் பம்பை, ஒரு கையில் பிரம்பு, மற்றொரு கையில் விபூதிப்பை சகிதமாகக் கிருகலட்சுமியின் பிறந்த வீட்டில் தோன்றினார்.

பூசாரியார் வக்கணையாகப் பம்பை அடித்தார். வர்ணனையாகப் பாடினார். வலுக்கொண்ட மட்டும் பிரம்பைத் தரையில் தட்டி, பேயை வெருட்டிப் பார்த்தார். எந்தப் பேயும் ஜவாப் சொல்லவில்லை; ஆஜராகவில்லை.

"இது சாதாரணக் காற்றுத் தோஷமில்லீங்க" எனப் பூசாரியார் சொல்லி வாய்மூடுமுன், கிருகலட்சுமி துக்கம் பொறுக்க முடியாமல், "பூசாரியாரே! வெறும் காற்றுத் தோஷமில்லை, எனக்குள்ளே அடித்துக்கொண்டிருக்கும் புயல் காற்றுத் தோஷம். நீர் போய்விட்டு வாரும்" என்று படபடவென்று சொல்லிவிட்டாள். கலிகாலம் என்று முணுமுணுத்துக் கொண்டே பூசாரியார் வெளியேறிவிட்டார்.

பூசாரிக்குப் பின் ஜோசியர் வந்தார். தரையிலே கிழக்கும் மேற்கும் தெற்கும் வடக்குமாகக் கோடுகளைக் கிழித்துக் கட்டம் கட்டினார். வாய்க்குள்ளே எதையோ முணுமுணுத்தார். கை விரல்களை ஒன்று ஒன்றாகவும் இரண்டாகவும் விட்டு எண்ணினார்.

"ஆமாம் கிருக தோஷம்தான்" என்றார். கடைசியில், பக்கத்தில் கிருகலட்சுமியின் தம்பி இருந்தான். அவனுக்கு இந்த மூட மந்திரங்கள் ஒன்றும் பிடிக்கவில்லை. "எந்தக் கிருகதோஷம்! பிறந்த கிரகமா? புகுந்த கிரகமா? அல்லது ஜோசியம் பார்க்கிற கிரகசார தோஷமா? என்று அடுக்கினான். "துள்ளுகிற மாடுதான் பொதி சுமக்கும்; ஒண்ணிலே ஒண்ணு போனால்?" என்று ஜோசியர் கேட்டார்.

படீர் என்று 'மண்' என்றான் தம்பி. "ஆமாம்! மண் என்றால் செவ்வாய். செவ்வாய் நீசமாகி விட்டான். பிறந்த வீடு பெருமை அழிந்து போனால், புகுந்த வீட்டில் ஒருவரும் லட்சியம் செய்யமாட்டார்கள்" என்று ஜோசியர் அளப்பு அளந்தார்.

"இந்தக் கதையெல்லாம் எதற்கு? கிருகலட்சுமிக்கு விமோசனம் ஏதாவது உண்டா?" என்று கிருகலட்சுமியின் தகப்பனார் கேட்டார்.

தம்பிக்குக் கோபம் வந்துவிட்டது. "என்ன கேள்வி அப்பா - கேட்கிறீர்கள்? கிருகலட்சுமியைத் தள்ளி வைத்தவன் திமிர் பிடித்தவன். லோகத்திலே திமிருக்கு மருந்து கிடையாது. பூசாரியும் மாந்திரிகனும் ஜோசியனும் என்ன செய்ய முடியும்? காலாடியூர்ப் பேர்வழியைப் போல இந்தத் தேசத்திலே லட்சக்கணக்கில் இருக்கிறார்கள். அவர்கள் - கிருகலட்சுமியைப் போன்ற உத்தமிகளைச் சித்திரவதை செய்து வருகிறார்கள். மூடநம்பிக்கைகளும் திமிரும் ஒழிந்தாலொழிய, நம்மவர்களுக்கு விமோசனம் கிடையாது" என்று தம்பி சரமாரியாகப் பொழிந்து விட்டான். தம்பியின் கட்சியை நாம் மனப்பூர்வமாக ஆதரிக்கிறோம்.

படித்து முடிந்துவிட்டது. என் ரேடியோப் பேச்சுப் பேசித் தீர்த்து விட்டேன். உத்தரவு கொடுங்கள். இன்னொரு சமயம் பார்த்துக் கொள்ளுவோம்!



சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூக அமைப்பே எனது இலட்சியம். அத்தகையதொரு சமூக அமைப்பு ஏன் ஏற்படாது? சகோதர பாவனை ஏன் ஏற்படாது? அதற்கு எத்தகைய முட்டுக்கட்டையும் ஏற்படுமென்று எனக்குத் தோன்றவில்லை.

—டாக்டர் அம்பேத்கர்




# உதகை தாவரவியல் பூங்கா வளர்ச்சிப் பணிகள்



உதகை அரசினர் தாவரவியல் பூங்கா 1948-இல் தொடங்கியதிலிருந்து பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பூங்கா எழிலுடன் விளங்கி வருகிறது.

இப்பூந்தோட்டம் 22 எக்டேர் பரப்பில் கடல் மட்டத்திலிருந்து 2,400 முதல் 2,500 மீட்டர் வரை உயரத்தில் பொலிவுடன் விளங்குகிறது. ஆனாலும், அண்மைக் காலமாகப் பெருகி வரும் பார்வையாளர்களைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது, வளர்ச்சிப் பணிகள் தேவையான அளவு மேற்கொள்ளப்படவில்லை.

1986-ஆம் ஆண்டு 9.049 இலட்சம் மக்கள் இப்பூங்காவிற்கு வருகை தந்துள்ளனர். ஆனால், 1990-ஆம் ஆண்டு 11.711 இலட்சமாக மக்கள் வருகை உயர்ந்துள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு, கடந்த ஆண்டு பல்வேறு வளர்ச்சிப் பணிகள் திட்டமிடப்பட்டு இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

**வளர்ச்சிப் பணிகள்**

இப்பூங்காவை நவீனப்படுத்தவும், விரிவுபடுத்தவும் ரூ.75.25 இலட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. பூங்காவினைச் சுற்றி வேலி அமைக்க ரூ.8 இலட்சம் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. பூஞ்செடிகளின் நாற்றுக்கள் வளர்க்க, கண்ணாடி மாளிகைகள் அமைக்கப்பட்டுள்ளன. இக்கண்ணாடி மாளிகைகளைப் பழுது பார்க்கும் பணிகள் ரூ.6 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. மேலும் ரூ.15 இலட்சம் செலவில் புதிய கண்ணாடி மாளிகைகள் கட்டும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

5 கி.மீ. தூரத்திற்குச் சாலை பழுதுப் பார்க்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிக்காக ரூ.0.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. புதுப் பாதைகள் அமைக்கும் பணிகள் துரித்மாக நடைபெற்று வருகின்றன. இத்றகாக ரூ.3.50 இலட்சம் செலவிடப்பட உள்ளது. மக்கள் பூங்காவை முழுமையாகச் சுற்றிப்பார்க்க வசதியாக உயரமான இடத்திற்குச் செல்லப் படிக்கட்டுகள் கட்டும் பணியும் மேற்கொள்ளப்பட்டு, இதற்காக ரூ.0.50 இலட்சம் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

மழைக் காலத்தில் தண்ணீர் செல்ல வசதியாக வடிகால்வாய் சாலையின் இருபுறங்களிலும் ரூ.1.75 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு வருகிறது.

பூங்காவில் தண்ணீர்க்கிணறு வெட்டப்பட உள்ளது. தற்போது சின்கோனாவிலிருந்து 5 கி.மீ. தூரத்திற்கு பூமிக்கடியில் குழாய்கள் பதித்துத்தண்ணீர் வசதி செய்யப்பட்டுள்ளது. இதனை மேலும் மேம்பாடு செய்ய ரூ.1.5 இலட்சம் செலவிடப்பட உள்ளது.

''நீங்கள் சபைக் கோழைப் பேர்வழி என்று எனக்குத் தெரியாது'' என்று நண்பர் சொல்கிற பொழுதே, என் சம்சாரம் படக்கென்று சிரித்துவிட்டாள். சம்சாரம் சிரித்த பிறகு, என்ன நேர்ந்தாலும், ஆகாசத்திலிருந்து பேசிவிடுகிறது என்று கண்டிப்பாகத் தீர்மானம் செய்துகொண்டு, சம்சாரம் இருக்கிற பக்கம் திரும்பிப் பார்த்தேன்.

''ஏன் ஸார்! நான் பேசறபோது ஒத்தரும் கலாட்டா பண்ண மாட்டார்களே?'' என்றேன்.

''ரேடியோ உங்களுக்குத் தெரியாதா!'' என்றார். இது என் சம்சாரத்தின் காதிலே விழுந்தால், என் கீர்த்தியிலே இடி விழுந்தது போல ஆகாதா? ஏதோ, அவள் சிரித்தது மாதிரி இருந்தது. ஆனால், திரும்பிப் பார்க்க எனக்குத் துணிச்சல் கிடையாது.

''சரி, பேசுகிறேன்'' என்று நண்பரிடம் ஒப்புக் கொண்டேன். ஆனால் ஒன்று மாத்திரம் அவரைக் கேட்டுக் கொண்டேன்.

''சுவாமி! நான் கூட்டத்திலே கோழை; ஆனால் தனியாக இருந்தாலும் அதைவிடக் கோழை. பக்கத்திலே நீங்கள் இருக்கணும்; சங்கீதக் கச்சேரிகளிலே சம்பிரதாய சபாஷ் போடுவதைப் போல ரேடியோ கேட்கிறவர்களுக்குக் கேட்காமல், எனக்கு மாத்திரம் தெரியும்படியாக, நடுநடுவிலே, கொஞ்சம் சபாஷ் போட்டால் நல்லது'' என்று அவரை வேண்டிக் கொண்டேன்.

''அப்படியே ஆகக்கடவதாக!'' என்று வரம் கொடுக்கிற மாதிரி சொல்லிவிட்டு, அவர் போய் விட்டார்.

அன்றையிலிருந்து, எனக்குச் சங்கடந்தான். ரேடியோ என்று நான் மனசிலே நினைக்கிறபொழுது, யாராவது பக்கத்திலே தும்மிவிட்டாலோ, போதும்; எனக்குப் பயம் தான். என்ன அபசகுனம் என்று என் மார்பு 'திக் திக்' என்று அடித்துக் கொள்ளும்.

இந்தச் சங்கடத்தையெல்லாம் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த என் சம்சாரம், ''என்னைக் கூப்பிட்டிருந்தால், ஜோராய்ப் போய்ப் பேசி'பிட்டிருப்பேன்னு வெண்கலக் குரலில் கணீர் என்று கன்னத்திலே அறைஞ்ச மாதிரி சொன்னாள்.

என் சிரமம் அவளுக்கு என்னமாய்த் தெரியும்? நான் தலைப் பிரசவக்காரி நிலைமையில் இருந்தேன். ஒரு சமயம் அடங்காத உற்சாகம்; இன்னொரு சமயம் அர்த்தமில்லாத பயம். ஒரு சமயம், நாக்கு சுத்தமாய்ப் பேசமாட்டேன் என்று விட்டது.

பரீட்சை கொடுக்கிற இருபதாம் தேதி வந்தது. ''கொஞ்சம் சீக்கிரமாகவே ரேடியோ காரியாலயத்துக்குப் போகணும்'' என்று சம்சாரத்தினிடம் சொன்னேன்.

''நாட்டுப்புறத்தார்கள் 'போட் மெயில்' வண்டிக்குப் புறப்படுகிற மாதிரியா?'' என்று சிரித்தாள். அவள் என்ன பண்ணுவாள்! நண்டுக்குச் சீவன் போறாது; நரிக்குக் கொண்டாட்டம்!

இருந்தாலும், சீக்கிரமாகப் புறப்பட்டேன். எல்லாம் அவசரம்தான். புறப்பட்டு, இரண்டு அடி எடுத்து வைக்கவில்லை - ''இந்தாருங்கோ'' என்று சம்சாரம் கூப்பிட்டாள். ''புறப்பட்டுப் போறப்போ சகுனத் தடையா கூப்பிடறயே?'' என்று கோபித்துக் கொண்டேன்.

''கண்ணாடியை வச்சிட்டு மறந்து போயிட்டீங்களே! அங்கே போய் எப்படிப் படிப்பிங்க?'' என்று பரிதாபத்தோடு சொன்னாள்.

கண்ணாடியை வாங்கிக் கொண்டு, மாடியிலிருந்து கீழே, இறங்கி, புறப்



**நுழைவு வாயில் - அலங்கார வளைவு:**

தற்போது நுழைவு வாயிலில் அலங்கார வளைவு, மதில் சுவர் கட்டிட ரூ.15 இலட்சத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. நுழைவு வாயில் 20 அடி உயரத்திற்கும், 20 அடி அகலத்திற்கும் கட்டப்படும். நுழைவு வாயிலில் 6 அடி உயரத்திற்கு மதிற்சுவரும், இரண்டு அடி உயரத்திற்கு இரும்புக் கம்பியும் போடப்படும். அலங்கார வளைவு மிகவும் வனப்புடையதாகவும், கலை அம்சம் பொருந்தியதாகவும் அமைக்கப்படும்.

**தோட்டக்கலை தாவரவியல் படிவம் சேமிப்பு நிலையம்:**

நீலகிரி மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு தாவரத்தின் செடிகளைச் சேகரித்து மக்களின் பார்வைக்கு வைக்க தாவரவியல் படிவம் சேகரிப்பு நிலையம் நிறுவப்பட உள்ளது. இதன் மதிப்பீடு ரூ.15 இலட்சம் ஆகும். ஆராய்ச்சி மாணவர்களுக்கும், தாவரவியல் பயிலும் மாணவர்களுக்கும் இது பயன்படத்தக்க வகையில் அமைக்கப்படும். தகவல் மற்றும் விற்பனை நிலையம் ரூ.7.5 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்படும்.

பூங்காவைக் காண வரும் மக்களுக்கு வசதியாக 6 அறைகள் கொண்ட 2 இணை நவீன கழிப்பிடங்கள் ரூ.2 இலட்சம் செலவில் கட்டப்படும்.

**ரோஜா மலர்த் தோட்டம்:**

இப்பூங்காவில் பலவேறு வகையான மலர்கள் காணப்படினும், ரோஜா மலர்களுக்குத் தனித்தோட்டம் அமைக்கப்படும். 1,500 வகையான ரோஜாச் செடிகள் இத்தோட்டத்தில் பயிர் செய்யப்படும். 10,000 ரோஜாச் செடிகள் வைக்கப்படும். ரோஜா மலர்களுக்கெனத் தனித்தோட்டம் அமைப்பது இப்பூங்காவிற்குத் தனிச்சிறப்பு ஏற்படுத்துவதாகும்.

மேலும், இப்பூங்காவைக் காண வரும் பார்வையாளர்களுக்கு இப்பூங்காவைப் பற்றி எடுத்துக்கூற ஆறு தாவரவியல் பட்டதாரிகள் நியமிக்கப்படுவார்கள்.

மே மாதத்தில் நடைபெறும் மலர்க் கண்காட்சிக்கு இப்பொழுதே பூங்காவை அழகுப்படுத்தும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இவ்வாண்டு நடைபெறும் மலர்க் கண்காட்சியில் பல்வேறு வகையான மலர்கள் இடம் பெறுகின்றன. இவ்வாண்டு நடைபெறும் மலர்க்காட்சியின்போது பூங்காவின் வளர்ச்சிப் பணிகள் நிறைவேறி காண்போர் உள்ளங்களைக் கவரும் என்பது திண்ணம்.

மு.நா.கிருஷ்ணசாமி
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
நீலகிரி மாவட்டம்

## மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனம்
## செங்கை-அண்ணா மாவட்டம்

### 1.4.90 முதல் 30.11.90 வரையிலான சாதனை
### ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

| | | | |
|---|---|---|---|
| 1. | 1990-91-ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு (ரூ.இலட்சத்தில்) | : | 352.90 |
| 2. | 30.11.90 வரை மொத்த செலவினம் | : | 247.18 |
| 3. | 1990-91-ஆம் ஆண்டில் பயனடைய வேண்டிய நபர்களின் எண்ணிக்கை (புதியவை) | : | 11,217 |
| 4. | 30.11.90 வரை பயனடைந்த மொத்த நபர்களின் எண்ணிக்கை (புதியவை) | : | 8,489 |
| 5. | பயனடைந்த தாழ்த்தப்பட்டோர் எண்ணிக்கை (புதியவை) | : | 4,154 |
| 6. | பயனடைந்த மகளிர் எண்ணிக்கை | : | 2,141 |

### ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம்

| | | | |
|---|---|---|---|
| 1. | 1990-91-ஆம் ஆண்டின் நிதி இலக்கு (ரூ.இலட்சத்தில்) | : | 1553.990 |
| 2. | 30.11.90 வரை பெறப்பட்ட நிதி (ரூ.இலட்சத்தில்) | : | 1179.769 |
| 3. | பயன்படுத்தப்பட்ட நிதி (ரூ.இலட்சத்தில்) | : | 915.996 |
| 4. | 1990-91-ஆம் ஆண்டின் மனித சக்தி நாட்கள் இலக்கு (இலட்சத்தில்) | : | 48.497 |
| 5. | மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட்டது (இலட்சத்தில்) | : | 39.328 |
| 6. | எடுக்கப்பட்ட மொத்த வேலைகள் (எண்ணிக்கை) | : | 7,496 |
| 7. | ஆதிதிராவிடர்களுக்குக் கட்டி முடிக்கப்பட்ட தொகுப்பு வீடுகளின் எண்ணிக்கை | : | 403 |
| 8. | முடிக்கப்பட்ட பிற வேலைகள் | : | 1,732 |

**கிருஷ்ணசுவாமி ராஜீவன், இ.ஆ.ப.**
திட்ட அலுவலர்

**சமீர் வியாஸ், இ.ஆ.ப.,**
மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பெருந்தலைவர்



# விவசாயிகளுக்கு விற்பனை உதவி



விவசாயிகள் தங்களது விளை பொருட்களை மிகக் குறைந்த விலைக்கு விற்பதைத் தவிர்க்கவும், அவைகளுக்கு நல்ல விலையினைப் பெற்றுத் தரவும் வன்முறைபடுத்தப் பட்ட சந்தை, நெல், நிலக்கடலை, சூரியகாந்திப் பூ போன்ற விளை பொருட்களின் பேரில் குறைந்த காலக் கடனுதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் சந்தைக் கிடங்கில் வைக்கப்பட்டுள்ள சரக்குகளின் மதிப்பில் 50 சதவிகிதத் தொகை (ரூ.10,000-க்கு மேற்படாமல்) கடனாக வழங்கப்படும். இந்த விளை பொருட்கள் அதிகபட்சம் ஆறுமாதம் வரை கிடங்கில் வைக்கப் படும். இவைகளைப் பாதுகாக்கத் தனியாக எந்தக் கட்டணமும் விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப்பட வில்லை.

கடன் வழங்கப்பட்ட முதல் மாதத்திற்கு, வட்டி வசூலிக்கப் படுவதில்லை. எனினும், இரண்டாவது மாதத்திலிருந்து ஆறாவது மாதம் வரை 10 சதவிகித வட்டி வசூலிக்கப்படும்.

1990-91ஆம் ஆண்டில் சுமார் 1,500 விவசாயிகள் இக்கடன் வசதிகளைப் பயன்படுத்திக் கொள் வார்கள் என எதிர்பார்க்கப்படு கிறது. 1991 ஜனவரித் திங்கள் வரை, சுமார் 820 விவசாயிகள் இத் திட்டத்தின் மூலம் பயனடைந் தார்கள்.

**ஒருங்கிணைந்த புன்செய் வேளாண்மைத் திட்டம்**

நன்செய் பயிர்களின் உற்பத்தி யைப் பெருக்கவும், நன்செய் நில விவசாயிகளின் பொருளாதார நிலையை மேம்படுத்தவும் மாநில அரசின் நிதியில் ரூ.1.5 கோடியில் 1990-91-இல் அமல்படுத்தப்படு கிறது. கோடை உழுதல், சத்துள்ள உரங்களைப் பயன்படுத்துதல், இரட்டை விளைச்சல், எரு உற்பத்தி, ஒருங்கிணைந்த பூச்சிக்கொல்லி முறைகள் ஆகியவற்றைச் செயல் படுத்திக் காண்பிக்க ஒரு பகுதியில் 100 ஏக்கர் வீதம் 300 பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இந்த 100 ஏக்கர் நிலம் இதன் பக்கத்திலுள்ள பகுதிகளுக்குச் செயல் முறை விளக்கக் கூடமாக விளங்கி புதிய தொழில் நுணுக்கங்களைப் பரப்புகிறது. இத்திட்டம் அனைத்து மாவட்ட விவசாயிகளும் விரும்பும் வகையில் மிகவும் பயனுள்ளதாக உள்ளது. கோடை உழவு, மற்றும் சத்தான உரம் போன்ற வற்றில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 30,000 ஏக்கர் 31.12.90 அன்று எட்டப்பட்டு விட்டது. மற்ற வகையிலும் நல்ல முன்னேற்றம் ஏற் பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 34,653 விவசாயிகள் பயனடைந் துள்ளனர். இத்திட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட ரூ.1.5 கோடியில் ஜனவரி 1991 முடிய ரூ.1.24 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**'சாதி இரண்டொழிய**
**வேறில்லை என்றே**
**தமிழ்மகள் சொல்லியசொல்**
**அமிழ்தமென்போம்!**
**நீதிநெறியினின்று பிறர்க்குதவும்**
**நேர்மையர் மேலவர்**
**கீழவர் மற்றோர்!'**

**—பாரதியார்**

# நூல் நயம்

### விற்பன்னர் வேதநாயகர் ஓர் ஆய்வு

**ஆசிரியர்: கவிஞர் மதுரம் நம்பி**

**வெளியீடு:**

கீதாஞ்சலி நிலைய வெளியீடு
விருகாவூர்-606 203
(தெ.ஆ.மாவட்டம்)

விலை:ரூ.25 பக்கம்:268

தமிழில் முதல் நாவல் எழுதிய பெருமை, மாயூரம் வேதநாயகம் பிள்ளை அவர்களையே சாரும்.

பிரதாப முதலியார் சரித்திரம், சுகுணசுந்தரி முதலான அவரது நூல்கள், அக்காலக் கட்ட நிகழ்ச்சிகளைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. அவர்தம் நூல்கள் வாயிலாகக் கூறும் அறிவுரையும், அறவுரையும் எக்காலத்துக்கும் பொருந்துவனவாகும்.

வேதநாயகரின் வாழ்க்கைச் சுருக்கத்தோடு, அவரது நூல்களைப் பற்றியும் அலசி ஆராய்கிறார் நூலாசிரியர். வேதநாயகர் வாழ்ந்த காலத்தில் நிலவிய சமய நிலை தெளிவாக்கப்பட்டுள்ளது. அவரது சமரச நோக்கும் அவரது மொழி நடை, புலமை எல்லாம் ஆய்வுக் கண்ணோட்டத்துடன் கூறும் ஆசிரியரின் புலமை தெற்றென விளங்குகிறது.

ஆராய்ச்சி மாணவர் மட்டுமல்ல, அனைவரும் படித்து அறிந்து கொள்ள வேண்டிய பயனுள்ள நூல்.

### தமிழின் மறுமலர்ச்சி

**ஆசிரியர்:**
**பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளை**

**வெளியீடு:**

பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளை நினைவு மன்றம்,
'வையகம்' 2, 4-வது குறுக்குச் சாலை,
இராஜா அண்ணாமலை புரம்,
சென்னை-600 028.

விலை:ரூ.42 பக்கம்:443

"தமிழாய்வுலகில் ஒரு புது யுகத்தைத் தோற்றுவித்தவர் பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளை. அறிவியல் வழி ஆய்வு முறையில் இவர் முன்னோடியாக விளங்கியவர். விஞ்ஞான அடிப் படையிலான அணுகுமுறையை மேற்கொண்டு பரந்து கிடக்கும் நம் தமிழ் இலக்கியங்களைத் திறனாய்வு செய்து வந்தவர்" என்று இந்நூலின் முன்னுரையில் கூறியதற்கிணங்க, இந்நூலில் இடம் பெற்றுள்ள அத்தனைக் கட்டுரைகளுமே ஆய்வு நோக்கில் எழுதப்பட்டுள்ளன.

வையாபுரிப்பிள்ளை நூற்களஞ்சியத்தின் இரண்டாம் தொகுதியாக வெளிவரும் இந்நூலில், மொழி வரலாறு தொடர்பான கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. தமிழின் மறுமலர்ச்சி, சொற்கலை விருந்து, சொற்களின் சரிதம், நிகண்டுகள், அகராதி என ஐந்து பகுதிகளாக வகுக்கப்பட்டுத் தொகுக்கப் பட்டுள்ளன.

இந்நூலில் இடம் பெற்றுள்ள ஒவ்வொரு கட்டுரையும், ஆசிரியர்தம் ஆழ்ந்த புலமையை வெளிப்படுத்துகின்றது. தமிழின் சிறப்பும், அதன் அதியற்புத இயல்பும் வரிக்கு வரி வழங்கியிருக்கும் பாங்கு மகிழ்தற்குரியது. ஆராய்ச்சி ஆர்வலர் மட்டுமல்ல, தமிழ் அன்பர் யாவரும் படித்துப் பயன் பெற வேண்டிய சொற்களஞ்சியம் இது.

—பி.வி.கிரி.

### காந்திய பொருளாதாரம்

**ஆசிரியர்: டாக்டர் திரு.ஜே.ஸி.குமரப்பா**
**மொழி பெயர்ப்பாளர்: திரு.மீ.விநாயகம்**

**வெளியீடு:**

காந்திய இலக்கியச் சங்கம்,
காந்தி மியூசியம்,
மதுரை-625 020.

விலை:ரூ.10 பக்கம்:123

காந்தியச் சிந்தனையைக் கற்றுத் தெளிய, உறுதுணையாக விளங்கும் ஒரு அரிய மொழிபெயர்ப்பு நூலாகும்.

### சர்வோதய சமுதாயம்

**ஆசிரியர்: திரு.வீ.செல்வராஜ்**

**வெளியீடு:**

காந்திய இலக்கியச் சங்கம்,
காந்தி மியூசியம்,
மதுரை-625 020

விலை:ரூ.2 பக்கம்:24

அண்ணல் காந்தியடிகள் தந்த சர்வோதயம் என்ற சொல்லை அனைவரும் நிறைந்து போற்றி, சமுதாயம் மேன்மையுற வழிவகை காண உதவிடும் இனிய கையேடு இது.

### இந்து மதம்

ஆசிரியர்: ஸ்ரீகிருஷ்ணதத்த பட்

வெளியீடு:

காந்திய இலக்கியச் சங்கம்,
காந்தி மியூசியம்,
மதுரை-625 020

விலை:ரூ.20 பக்கம்:228

இந்நூல் இந்தியின் தமிழாக்கம். இந்து மதம் பற்றி வேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள் என்ற மூன்று பகுதிகளிலிருந்தும் மிக அற்புதமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

### அகில உலக அமைதித் தமிழ் அன்னையின் புன்னகை

**ஆசிரியர்:**
**கவிஞர் பாட்டாளி ஆ. பழனியப்பன்**

**வெளியீடு:**

கவிஞர் பாட்டாளி ஆ. பழனியப்பன்,
1162, 75-வது தெரு. 12-வது பிரிவு,
கலைஞர் கருணாநிதி நகர்,
சென்னை-600 078.

விலை: ரூ.20 பக்கம்: 144

பல்வேறு தலைப்புக்களில் பைந்தமிழ்க் காவியமாக, கவிதை மணம் குன்றா செந்தமிழ் விளக்கமாக, கவிதை மனம் கொண்டோர் பார்த்து மகிழ, சிந்திக்க, எழில்மாடமாகத் திகழும் அரிய படைப்பாகும்.

—பொன். சுப்பையா

### பாரதிதாசனின் பொங்கற் பாட்டுக்கள்

**ஆசிரியர்: டாக்டர் எஸ்.குலசேகரன்**

**வெளியீடு:**

அமிழ்தம் பதிப்பகம்
15, முத்துப்பிள்ளை தெரு,
வ.உ.சி. நகர், வேலூர்-632 001.

விலை:ரூ.7 பக்கம்:68

இந்நூலில் புரட்சிக் கவிஞர் பா்வேந்தர் பாரதிதாசனைப் பற்றி, இளைஞர்கள் புரிந்து கொள்ளக்கூடிய எளிய நடையில் நல்ல தமிழில் எழுதப்பட்டுள்ளது.

பொங்கல் திருநாளில் நாம் எப்படி இருக்க வேண்டும் என்று கவிஞர் விரும்புகிறார் என்பதையும், கவிஞரின் உள்ளக் கருத்துக்களையும் தெளிவுபட விளக்குகின்றார் ஆசிரியர். குழந்தைகள், எளிதாகப் படித்தறிந்து கொள்ளக்கூடிய வகையில் நூல் எழுதப்பட்டுள்ளது.

—தே.மணி



# வால்நட்சத்திரங்கள்



இரவு நேரம்.

வானத்தைப் பார்க்கிறோம்.

அங்கே உள்ள நட்சத்திர மண்டலங்களை அடையாளமாகக் கொண்டு, தாரகைகளைத் தனித்தனியாக அறிந்து கொள்ளலாம்.

முதன் முதலில் இடைக்காலத்தில்தான் மக்கள் வானத்தை உற்று நோக்கி நட்சத்திரக் கூட்டங்களின் உருவ அமைப்பினை அடையாளம் கண்டு அவற்றினைப் பிரித்துள்ளார்கள். நட்சத்திரங்கள் மிகத் தொலைவில் உள்ளதால் நட்சத்திரக் கூட்டங்களின் உருவ அமைப்பில் ஏற்படும் மாறுதல்கள் வெகுகாலத்திற்குப் பிறகுதான் தென்படும். எனவே, பல்லாயிரம் ஆண்டுகள் கழிந்த பின்னரும், நட்சத்திரக் கூட்டங்களின் உருவ அமைப்புக்கள் ஒன்றாகவே காணப்படுகின்றன.

இந்த நட்சத்திரக் கூட்டத்தின் உண்மைக் கதை என்ன?

இந்த ஏழு நட்சத்திரங்கள் நமக்கு அறிமுகமானவையே! இந்த நட்சத்திரக் கூட்டம் "சப்தரிஷி மண்டலம்" எனப்படும். இவற்றுடன் சில நட்சத்திரங்கள் சேர்ந்த கூட்டமைப்பினைப் 'பெருங்கரடி மண்டலம்' என்று அழைக்கிறோம். நட்சத்திர மண்டலத்தில் 'த்ருது' அதாவது Merek, புல்லகர் அதாவது Dhube ஆகிய முதல் இரண்டு நட்சத்திரங்கள் எப்போதும் துருவ நட்சத்திரத்தை நோக்கியே இருக்கும். பெருங்கரடி மண்டலத்தின் வால் பகுதியில் உள்ள கடைசி நட்சத்திரத்திற்கு முன்னுள்ள நட்சத்திரம் 'வசிட்டர்' அதாவது Mizar. 'அருந்ததி' அதாவது Alcor என்பது ஓர் நட்சத்திரம். ஒருவரின் கண்பார்வையைச் சோதிப்பதற்கு இது ஒரு சிறந்த முறை.

கிட்டத்தட்ட 460 கோடி ஆண்டுகளுக்கு முன்பு தூசு மற்றும் வாயு அடங்கிய மேகக் கூட்டத்திலிருந்து சூரியக் குடும்பம் தோன்றியது. சூரியக் குடும்பத்தின் 99 சதவீதத்திற்கும் மேலான பொருட்கள் நம் சூரியனில் அடங்கியுள்ளன. ஒன்பது கோள்களும் அவற்றின் துணைக்கோள்களுடன் சூரியனைச் சுற்றி வருகின்றன. மேலும், கோள்திரள்களும் அதாவது Asteroids மற்றும் வால்நட்சத்திரங்களும் அதாவது Comets சூரியனைச் சுற்றி வருகின்றன. இவை மட்டுமன்றி எரிகற்களும், எரிநட்சத்திரங்களும் அதாவது Meteoroids சூரியக் குடும்பத்தைச் சாரும்.

இரவு வானத்தில், நட்சத்திரங்கள், கோள்கள், சந்திரன் ஆகியவை காணப்படும். சில சமயங்களில் மற்றைய வான் பொருள்களும் இப்பகுதிகளில் காணப்படும். இவ்வான் பொருட்கள் நீண்ட வாலுடனும், அழகிய தோற்றத்துடனும் நட்சத்திரங்களுக்கு இடையே தோன்றிச் சூரியனைச் சுற்றி வரும். இவற்றினைத்தான் நாம் வால் நட்சத்திரங்கள் என்கிறோம். வால் நட்சத்திரத்தை ஆங்கிலத்தில் Comet என்று அழைக்கிறோம். அவ்வப்போது தோன்றி இரவு வானத்தில் அணிகலன்களாக விளங்குவது இவ்வான் பொருட்களாகும்.

வால்நட்சத்திரங்கள் பார்ப்பதற்கு அழகாகத் தோன்றினாலும், முற்காலத்தில் மக்கள் அவற்றினை அச்சத்தோடுதான் பார்த்தனர். அக்கால வால்நட்சத்திரங்கள் தோன்றிய போதெல்லாம் அவற்றினைப் போர், வறுமை, நோய், துன்பம் முதலியன வரும் என்பதற்கான முன் அறிகுறியாக மக்கள் கருதினர். குறிப்பாக, முற்காலத்திய ஆப்பிரிக்க மக்கள் வால் நட்சத்திரம் தோன்றுவது அழிவுகள் ஏற்படுவதற்கான அறிகுறியாகும் என்று நம்பினர். எனவே, இந்நட்சத்திரம் தோன்றும் போதெல்லாம் மக்களிடையே அச்சமும் கவலையும் உண்டாயின. இந்த தீய விளைவுகளிலிருந்து மக்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக வழிபாடுகளும், வழிபாட்டுச் சடங்குகளும் நடத்தினர்.

ரோமன் சக்கரவர்த்தி, 'நீரோ' என்பவர் வால்நட்சத்திரம் தோன்றும் போதெல்லாம், அவற்றின் தோற்றம் தன் பகைவர்களின் அழிவிற்கு முன் அறிவிப்பு என நினைத்து, அவர்களை வெட்டும்படி ஆணையிடுவார். இடைக்கால முனிவர்கள் வால்நட்சத்திரங்கள் பேயின் கந்தக வாசனையை வெளி ஏற்றுவதாகக் கருதினர். வால்நட்சத்திரங்களின் தோற்றம் வரக்கூடிய இயற்கைச் சீற்றத்தின் முன்னறிவிப்பே என்று வில்லியம் ஷேக்ஸ்பியரும் அவருடைய நாடகம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். ஜூலியஸ் சீசரில் (களம்II-இல்) கல்பூர்ணியா கூறுவதாவது:

"பிச்சை எடுப்பவர் இறக்கும்போது வால் நட்சத்திரங்கள் தோன்றுவதில்லை; ஆனால், இளவரசர்கள் மரணத்தின் போது விண்ணுலகமே கிளர் ஒளி வீசுகின்றது".

பண்டையகாலம் முடிந்து, புதிய யுகம் தொடர்ந்தபோது மக்களிடையே ஒரு பெரும் மாற்றம் ஏற்பட்டது. நவீன காலத்திய மக்கள் வால் நட்சத்திரங்களைப் பற்றிய விவரங்களை ஆழ்ந்து ஆராயத் தொடங்கினர். டைகோ பிராஹே (Tycho Brahe) என்பவர் பலவகையான வெவ்வேறு வால் நட்சத்திரங்களை ஆராய்ந்தார். அவற்றில் ஒளி மிகுந்த ஒன்றான 1577-ஆம் ஆண்டில் தோன்றிய வால் நட்சத்திரத்தினை ஆராய்ந்த பின்னர், வால் நட்சத்திரங்கள் பூமியின் வாயு மண்டலத்தில் உருவானவையல்ல என்றும், அவை வெகு தொலைவிலிருந்து வந்த வான் பொருட்கள் என்றும் உறுதியாகக் கூறியுள்ளார். எல்லாக் காலத்திலும் பல்வேறு தீ நிகழ்வுகள் ஏற்படுவது இயல்பே எனப் பொதுவாக மக்கள் அறிவர். எனிலும் மூட நம்பிக்கையுள்ள மக்கள் வால் நட்சத்திரங்கள் தோன்றினால், இவற்றின் தோற்றத்திற்கும் அச்சமயத்தில் ஏற்பட்ட அல்லது அதற்குப் பிறகு உடனே ஏற்பட்ட தீ நிகழ்வுகளுடன் அவற்றைத் தொடர்புப் படுத்தி, வால் நட்சத்திரங்களின் தோற்றங்கள்தான் மக்களிடையே தீ நிகழ்வுகளை ஏற்படுத்துகின்றன என்று கூறினார்.

பொதுவான வான் பொருட்களாகிய நட்சத்திரங்கள், கோள்கள், சந்திரன் முதலியவற்றின் ஆராய்ச்சியினை அடுத்து இக்காலத்தில் வந்த வான்பொருளை வல்லுநர்களும், பொழுதுபோக்காக வானியல் தேர்வோரும், மிக ஆர்வத் தோடு ஆராய்ந்து வருகிறார்கள். அது வால் நட்சத்திர ங்கள் பற்றித்தான். அலங்காரத் தோற்றத்துடன், வால் நட்சத்திரம் நகருவதன் காட்சியினைக் காணும்போது, நாம் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

வால்நட்சத்திரங்களின் எண்ணிக்கை, கடலில் உள்ள மீன்களின் எண்ணிக் கைக்குச் சமமாக உள்ளது என்று விஞ்ஞான நிபுணர் கெப்ளர் கூறியுள்ளார். அது உண்மையாக இருக்கலாம். எனினும் எங் கிருந்து இவ்வால்நட்சத்திரங்கள் வரு கின்றன? வால்நட்சத்திரக் குடும்பத் திற்கும் அப்பாற்பட்ட மற்றைய நட்சத்திரக் கூட்டங்களிடையிலிருந்து வருவதாக முற்காலத்தில் நம்பப்பட்டது. தம் பாதையை விட்டுத் தவறிய வால்நட்சத் திரங்களில் சில சூரியனை நோக்கி வரும்போது, வியாழன், சனி போன்ற பெரிய கிரகங்களின் ஈர்ப்புச் சக்தியால் இழுக்கப்பட்டு சூரிய குடும்பத்தின் வான் பொருளாக அடங்கிச் சூரியனைப் பொது வாக நீள்வட்டப் பாதையில் சுற்றிவரத் தொடங்குகின்றன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரெஞ்சு வானஇயல் அறிஞரான லாக்ரெஞ்ச் (Lagrange) மற்றொரு கோட்பாட்டினை வெளியிட்டார்.

இக்கோட்பாட்டின்படி, வால்நட்சத் திரங்கள் பெரிய கோள்களிலிருந்து வெளியே தள்ளப்படுகின்றன. வியாழன் கோளில் பெரிய எரிமலையாகக் கருதப் பட்ட இடத்திலிருந்துதான் வால்நட்சத் திரங்கள் வெளியேற்றப் படுகின்றன என்று சில வல்லுநர்கள் நம்பினர். பின்னர்தான் இவ்விடம் ஜூபிடர் அதாவது வியாழன் கோளின் சிவப்புக் கறை அதாவது Red Spot என்னும் பெரும்புயலின் பகுதி எனத் தெரிய வந்தது. எனவே, மேற்குறிப்பிட்ட இரண்டு கோட்பாடுகளுக்கும் வானவியல் வல்லு நர்கள் ஆதரவு தருவதில்லை.

இப்போதுள்ள கோட்பாடு டச்சு (Dutch) வானியல் அறிஞரான ஜான் எச்.ஓர்ட் (Jan.H.Oort) என்பவரால் உருவாக்கப்பட்டது. அவர் இருபதுக்கும் மேற்பட்ட நீண்டகாலச் சுற்றுப்பாதை அளவுகொண்ட வால்நட்சத்திரங்களை நன்கு ஆராய்ந்து அவற்றின் சுற்றுப்பாதை களை நிர்ணயித்துள்ளார். பெரும்பான் மையான வால்நட்சத்திரங்கள் வான் வெளிப்பகுதியில் சூரியனிலிருந்து ஒரு இலட்சம் வான இயல் அலகு தொலை வில் இருப்பதாகவும் உறுதியாக முடிவு செய்துள்ளனர்.

ஒரு வான இயல் அலகு என்பது சூரியனுக்கும் பூமிக்கும் இடையே உள்ள சராசரி தூரமாகும், இது ஏறக்குறைய 15 கோடி கிலோமீட்டர். ஓர்ட் எனப்படும் பெருமேகம் கோடிக்கணக்கான வால் நட்சத்திரங்களைக் கொண்டுள்ளது. மேலும் இவ்வால்நட்சத்திரங்கள் அவற்றின் கலப்படமில்லாக் கலவையாக அப்பகுதி யில் உள்ளன. எனவே, வால்நட்சத் திரங்களின் ஆராய்ச்சி வான இயலில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந் துள்ளது. நமது சூரிய குடும்பத்தின் பரிணாம வளர்ச்சியைப் பற்றி அறிந்து கொள்ள வால் நட்சத்திரங்களின் ஆராய்ச்சி மிகவும் முக்கியம் என்று கூறலாம்.

சூரியன், கோள்கள் மற்றும் அதன் துணைக்கோள்கள் உருவானபோது



விஞ்ஞானம் நம் நாட்டில் - பாலை வனத்தில் வீசிய பனிக்கட்டி போலவும், குருடனிடம் காட்டிய முத்துமாலை போலவும், செவிடனிடம் இசைக்கப் பட்ட சங்கீதம் போலவும் மதிப் பற்றிருக்கிறது; இந்நிலை மாற வேண்டும்.

— அறிஞர் அண்ணா

எஞ்சிய பொருள்கள் சேர்ந்து ஓர்ட் மேகம் உருவாயிற்று. இம்மேகமானது வால்நட்சத்திரத்தின் களஞ்சியமாக உள்ளது. ஆனால், சூரியனின் ஈர்ப்புச் சக்தியை மீறி எந்தக் காரணத்தினால் வால்நட்சத்திரங்கள் ஓர்ட் மேகத்திலிருந்து வெளியேறுகின்றன? ஆகாய கங்கையின் மையத்தினை சூரியன் சுற்றிவரும்போது சில சமயங்களில் மற்ற நட்சத்திரங்களுக்கு அருகே வர நேரிடுகிறது. ஆனால் ஈர்ப்புச் சக்தியின் விளைவு வேறுபட்டு ஓர்ட் மேகத்திலிருந்து வால் நட்சத்திரங்கள் பல்வேறு திசைகளில் சிதறுகின்றன. இச் சிதறுகள் அவற்றின் பாதைகளை மாற்றி அமைக்கின்றன. சூரியனுக்கு அருகில் உள்ள மூலக்கூறுகளின் ஈர்ப்பு விசையினால் வால்நட்சத்திரங்கள் சூரிய குடும்பத்தின் உட்பகுதிக்கு நுழைகின்றன. நட்சத்திரங்கள் இடைவெளியில் உள்ள மூலக்கூறுகளின் கூட்டங்களுக்கிடையே

சூரியன் செல்லும்போதெல்லாம் இத் தகைய நிகழ்ச்சி நடக்கிறது. ஓர்ட் மேகம் சூரியனிலிருந்து ஒரு இலட்சம் வான இயல் அலகு தூரத்திலிருந்து தொடர்ந்து ஏறக்குறைய குபேரன்போல் சுற்றுப் பாதை வரை பரவியுள்ளதாகக் கருதப் படுகிறது. இது உண்மையெனில் ஓர்ட் மேகமானது அளவில்லா வால்நட்சத் திரங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

வால் நட்சத்திரத்தின் அமைப்பு எவ்வாறு உள்ளது?

தலைப்பகுதி, மையக்கரு, இரண்டு வால்கள் என மூன்று முக்கிய பாகங் களை நட்சத்திரம் கொண்டுள்ளது. அண்மைக்கால ஆய்வுகளிலிருந்து வால் நட்சத்திரங்கள் நீர்வாயு மேகங்களைக் கொண்டுள்ளது என அறியப்படுகிறது.

நட்சத்திரங்களின் மையக்கரு பொது வாக சில கிலோமீட்டர் குறுக்களவு உடையது. நீண்ட தூரத்தில் சூரியக் குடும்பத்தைத் தொடர்ந்து இருக்கும் மிகக் குளிர்ச்சியான நட்சத்திரத்தின் கருவைச் சக்தி வாய்ந்த தொலைநோக்கியால் பார்த் தாலும் காண முடியாத மறைபொருளாக உள்ளது. எனினும் நட்சத்திரத்தின் மையக்கரு சூரியனை நெருங்கும் சமயம் சூரிய கதிர்களால் அவை வெப்பத்தைப் பெறுகின்றன. அதன் விளைவாக நட்சத் திரத்தின் தலைப்பகுதி மற்றும் வால்கள் உருவாகின்றன. தலைப்பகுதி 10 இலட்சம் கிலோமீட்டர் குறுக்களவு உடையது. மேலும் மைய உட்கருவும் வெளிக்கருவும் இணைந்து நட்சத்திரத்தின் தலைப்பகுதி உருவாகிறது. சூரியனுக்கு மிக அருகில் நட்சத்திரம் வரும்போது அதன் வால் பகுதியின் நீளம் அதிகரிக்கும்.

வால்நட்சத்திரம் சூரியனை நெருங்கும் போதும் அதனை விட்டு விலகிச் செல்லும் போதும் அதன் வால் பகுதியானது சூரியனுக்கு நேர் எதிராகக் காணப்படு கிறது. 837-ஆம் ஆண்டு தோன்றிய ஹாலி நட்சத்திரத்தினை ஆராய்ந்த சீன வானியல் நிபுணர்கள் இப்பண்பினை முதன்முறையாகக் கண்டறிந்தனர். ஒரு நட்சத்திரம் மிக அருகில் வருவதைப் பொறுத்து அது ஒன்று, இரண்டு வால் களுடனோ அல்லது வால்கள் இல்லா மலோ இருக்கலாம். இந்நட்சத்திரங்களின் வால்கள் தூசு மற்றும் அயனிகள் என இரு வகையாகப் பிரிக்கப்படுகின்றன. இவ்வால்கள் விண்வெளியில் வியக்கத் தக்க வகையில் துடைப்பான்களைப்போல் தோன்றுகின்றன.

1843-ஆம் ஆண்டு தோன்றிய பெரிய நட்சத்திரத்தின் வால் பகுதியின் நீம் 33 கோடி கிலோ மீட்டர் எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது. வால் நட்சத் திரத்தின் தலைப்பகுதியைச் சுற்றி ஹைட்ரஜன் மேகம் " அல்லது ஹாலோ சுமார் 10 இலட்சம் கிலோ மீட்டர் வரை சூழ்ந்து காணப்படுகிறது. பூமியைப் போன்று 100 மடங்கிற்கும் அதிக



அளவில் இப்பரப்பு தென்படுகிறது. சூரிய ஒளி இந்த மேகத்தை ஒளிரச் செய்கிறது. இத்தன்மையானது விண் வெளிக் கப்பல்கள் உதவியால் நிறமாலை யில் உள்ள புற- ஊதாக் கதிர்களை ஆராய்வதன் மூலம் கண்டு பிடிக்கப் படுகிறது. பென்னட் மற்றும் வெண்ட் வால்நட்சத்திரங்களைப் பெருமளவில் ஹைட்ரஜன் மேகங்கள் சூழ்ந்துள்ளன. பென்னட் வால்நட்சத்திரத்தைச் சுற்றிலும் சுமார் 100 இலட்சம் கிலோமீட்டர் வரை ஹைட்ரஜன் மேகம் சூழ்ந்து காணப் படுகிறது.

வால்நட்சத்திரம் எக் கலவைகளால் ஆனது?

பூமியிலிருந்து மேற்கொண்ட நிற மாலை ஆராய்ச்சி மூலம் இக்கலவை களைப் பற்றிய விவரங்கள் நமக்குத் தெளிவாக உள்ளன. 1985/86-ஆம் ஆண்டுகளில் ஹாலி வால்நட்சத்திரம் தோன்றியபோது சில விண்வெளிக் கப்பல்கள் அனுப்பப்பட்டு வால்நட்சத் திரத்தின் பகுதிகள் மிக அருகிலிருந்து ஆராயப்பட்டன. இவற்றுள் ஜப்பானி யரின் சூசேய் சாகிகாகேயும், ருஷ்யாவின் வேகா-1இ வேகா-2 மற்றும் ஐரோப்பிய விண்வெளிக் கூட்டமைப்பின் கியேட்டோ வும் அடங்கும். அமெரிக்க விண்வெளிக் கப்பல் எக்ஸ்புலோரர் ஹாலி வால் நட்சத்திரத்தைத் தொலைவிலிருந்து ஆராய்ந்தது. விப்பல் என்ற அமெரிக்க வானியல் நிபுணர் 'Dirty Ice Balls' என வால்நட்சத்திரங்களை வர்ணித்துள்ளார். வால்நட்சத்திரங்கள் சிறிய கற்கள், உறைநிலை மீதேன், அம்மோனியா, கரியமில வாயு, நீர் முதலியவற்றை உள்ளடக்கி உள்ளது என அவர் குறிப் பிடுகின்றார்.

ஹாலி வால்நட்சத்திரத்தின் உட் கருவின் நெருங்கிய தோற்றத்தை சுமார் 1,703 கிலோமீட்டர் தொலைவில் இருந்து பல நிறப் புகைப்படக் கருவி படம் பிடித்துள்ளது. இதன் உட்கருவின் குறுக்களவு சுமார் 10 கிலோமீட்டர். மற்றும் அதன் நிறை சுமார் 8,000 கோடி டன் என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உட்கருவானது மிகவும் இருண்டு காணப் படுகிறது. இதன் ஒளி பிரதிபலிப்புத் திறன் 2 முதல் 4 சதவீதம். 84 சதவீதம் உறைந்த நிலையில் உள்ள நீர், பால் மல்டிஹைட் கரியமில வாயு, சிறிதளவு ஹைட்ரஜன் மற்றும் கார்பன் மோனாக் சைடால் இது ஆக்கப்பட்டுள்ளது.

மிக ஒளி பொருந்திய நன்கு அறிமுக மான வான்பொருட்களுள் ஹாலி வால்நட்சத்திரமும் ஒன்று. கி.மு.240-ஆம் ஆண்டிலிருந்தே இதன் இயக்கங்கள் கவனிக்கப்பட்டுப் பதிவு செய்யப்பட்டுள்ளன. எட்மண்ட ஹாலி என்ற ஆங்கில வானியல் அறிஞர் வால்நட்சத்திரப் பாதைகளைப் பற்றி விரிவான ஆய்வு களை மேற்கொண்டார். 1531, 1607



• கல்வி வேறு, படிப்பு வேறு. கல்வியானது புத்தி, ஆத்மா சிறப்புப் பெறச் சீர்பட்டு நிற்பது. வெறும் எழுதப் படிக்கத் தெரிந்திருப்பது மட்டுமே அதைத் தந்துவிடாது; தண்ணீர் மட்டும் ஆகார மாகிவிடாது! ஆனாலும் அவசியமானதுதான். ஆயினும் அதைவிடவும் உணவு முக்கியமானது. அதைப்போலவே எழுதப் படிக்கத் தெரிவது மட்டும் கல்வியைப் பெற்றதாகாது.

—மூதறிஞர் ராஜாஜி

மற்றும் அவர் கவனித்த 1682-ஆம் ஆண்டுகளில் காணப்பட்ட வால் நட்சத்திரங்கள் அனைத்தும் ஒன்றே எனக் கண்டுபிடித்தார். 1705-ஆம் ஆண்டு இக்கருத்தினை அவர் வெளியிட்டார். மீண்டும் 1758-ஆம் ஆண்டு இந்த வால்நட்சத்திரம் தோன்றும் என்றும் அது மீண்டும் வருவதற்கு முன்னரே குறிப் பிட்டிருந்தார். அவர் மறைந்து 16 ஆண்டுகள் சென்ற பின்பு அவர் குறிப் பிட்டபடியே 1758-ஆம் ஆண்டு அந்த வால்நட்சத்திரம் மறுபடியும் தோன்றியது. எனவே, அவரது நினைவாக அந்த வால்நட்சத்திரத்திற்கு ஹாலி எனப் பெயர் சூட்டப்பட்டது. சூரியனைச் சுற்றி வர இது எடுத்துக் கொள்ளும் சராசரி கால அளவு 76 ஆண்டுகள், குறுகிய கால அளவு 74.4 ஆண்டுகள், நீண்ட கால அளவு 79.2 ஆண்டுகள் எனப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

1910-ஆம் ஆண்டு தோன்றிய ஹாவி வால்நட்சத்திரம் மிகுந்த ஒளியுடனும் நீண்ட வாலுடனும் காணப்பட்டது. அப்போது பூமியானது இந்த வால் நட்சத்திரத்தின் வால் பகுதியைக் கடந்து சென்றது. மீண்டும் 1986-ஆம் ஆண்டு இவ் வால்நட்சத்திரம் தோன்றியது. ஆனால் இம்முறை 1910-ஆம் ஆண்டைப் போன்று ஒளியுடன் காட்சியளிக்க வில்லை. ஏனெனில், சூரியனுக்கு வெகு அண்மையில் செல்லும்போது ஹாலி, வால்நட்சத்திரமும், பூமியும் சூரியனுக்கு இருபுறங்களில் இருந்தன. 2061-ஆம் ஆண்டு ஹாலி வால்நட்சத்திரம் தோன்றும், அப்போது அது மிக ஒளியுடன் காணப் படும்.

ஹாலி வால்நட்சத்திரத்தைப் போன்று சில நூறு ஆண்டு சுற்றுப்பாதைக்காலங்கள் உள்ளவைகள் குறுகியகால வரையுடைய வால்நட்சத்திரங்கள் எனப்படும். நமக்கு அறிமுகமான என்கே என்ற வால் நட்சத்திரம் குறைந்த கால வரையுடையது. இதுவரை அது 50 முறைக்கும் அதிகமாக சூரியனைச் சுற்றி வந்துள்ளதை நிபுணர்கள் கவனித்துக் குறிப்பிட்டுள்ளனர். ஒவ் வொரு முறையும் சூரியனைச் சுற்றிவரும் போது வால்நட்சத்திரம் அதன் பொருட் களில் பெரும் பகுதியை இழந்துவிடுகிறது. வால்நட்சத்திரங்கள் சூரியனுக்கு மிக அருகில் வரும் நேரத்தில் அதன் உட்கரு

தொடர்ந்து அரிக்கப்பட்டுக் கொண்டு வரும்.

200 ஆண்டுக்கும் மேற்பட்ட சுற்றுப் பாதைக் காலங்கள் கொண்டவை நீண்ட கால வால்நட்சத்திரங்கள் எனப்படும். குறித்த காலத்தில் தோன்றும் வால் நட்சத்திரங்களின் சுற்றுப்பாதை பொது வாக நீள்வட்டமாக அதாவது Ellipse வடிவமாக இருக்கும். சூரியனுக்கு அருகில் வானத்தில் அழகாக ஒரே ஒரு முறை மட்டும் தோன்றி மறையும் வால்நட்சத் திரங்களின் பாதையானது திறந்த பர வளையமாகவோ, அதிபரவளையமாகவோ இருக்கும். அவை மீண்டும் சூரியன் அருகில் வருவதே இல்லை.

பல்வேறு வகை வால்நட்சத்திரங்கள் சூரிய குடும்பத்தினுள் நுழைகின்றன. ஹோவார்ட்-கூமன்-மிஷால் என்னும் வால்நட்சத்திரம் 1979-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் சூரியன் 0 மீது மோதியது. 1770-இல் லெக்ஸெல் என்ற வால்நட்சத்திரம் பூமிக்கு 12 இலட்சம் கிலோமீட்டர் அருகில் நெருங்கி வந்தது. 1846-இல் பைலா என்ற வால் நட்சத்திரம் மீண்டும் தோன்றிச் சூரியனை நெருங்கும்போது இரண்டாகப் பிளவு பட்டது.

வால்நட்சத்திரங்களைப் பற்றிய பல உண்மைகள் தற்போது நமக்குத் தெரிய வந்துள்ளன. புதிய வால்நட்சத்திரத்தைக் கண்டுபிடிப்பவர்கள் உலக அரங்கில் புகழ்பெறுகின்றனர். எனவே, வானிய லில் ஆர்வமுடையவர்கள் புதியன வற்றைக் காண வானத்தை ஊடுருவி ஆராய்ந்து வருகின்றனர். புதிய வால் நட்சத்திரத்தைக் கண்டுபிடிக்கத் தொலை நோக்கிகள் மூலம் சில நூறு அல்லது ஆயிரம் மணி நேரங்கள் வானத்தை அதிக கவனத்துடன் ஆராய வேண்டிய தாக இருக்கும். சில வேளைகளில் புதிய வால்நட்சத்திரத்தைக் காணாமலும் போக நேரிடலாம். வானத்தை ஆய்ந்து அறியும் இப்பயிற்சியானது இரவு வானத்தைப் பற்றிய ஆழ்ந்த அறிவை நமக்கு அளித்து நுட்பமான கவனிப்பாளராக நம்மை மாற்றுகிறது.

இந்த ஆய்வின் நோக்கம் நட்சத்திரப் பட்டியலில் இல்லாத ஒரு புதிய வால்

பொருளைக் கண்டறிவதே. இத்தகைய ஆய்வின்போது குறித்த காலத்தில் தோன்றும் வால்நட்சத்திரங்களைக் கவனத்தில் கொண்டு அவற்றை நீக்கிவிட வேண்டும். வழக்கமாக வால்நட்சத்திரங்கள் சூரியனுக்கு வெகு தொலைவில் தோன்றும்போதுதான் கண்டுபிடிக்கப்படுகின்றன. புதிய வால்நட்சத்திரத்தின் தோற்றத்தை இரவு வானத்தில் சில குறிப்பிட்ட பகுதிகளில் கால வரையுடன் எடுக்கப்பட்ட புகைப்படங்களிலிருந்து தெரிந்து கொள்ள வாய்ப்பு உண்டு.

புதிய ஒரு வால்நட்சத்திரம் தோன்றும் போது, அதைப் பலரும் கண்டு அறிவித்திருக்கலாம். ஆனால், அப்படி அறிவிப்பவர்களில் முதல் மூவரின் பெயரால்லேயே மட்டும் அது அழைக்கப்படும். உதாரணமாக, பாப்பு-பாக்-நியுகிர்க் (Bappu-Bok-Newkirke) என்ற வால்நட்சத்திரம் அதனைக் கண்டுபிடித்தவர்களின் பெயராலேயே அழைக்கப்படுகிறது. இம் மூவரில் பாப்பு என்று குறிப்பிடப்பட்டவர் நம் நாட்டைச் சார்ந்த விஞ்ஞானி டாக்டர் எம்.கே. வைனுபாப்பு (Dr. M.K. Vainu Bappu) ஆவார். மேலும் விண் வெளிக்கலம் சம்பந்தப்பட்ட பெயராலும் வால்நட்சத்திரங்கள் அழைக்கப்படுகின்றன. இதற்கு ஓர் உதாரணம் ஈராஸ்-அராக்கி-அல்காக் (IRAS-Araki-Alcock) என்ற வால் நட்சத்திரமாகும். இதில் IRAS என்றால் INFRARED ASTRONOMICAL SATELLITE என்பதாகும்.

ஒரு குறிப்பிட்ட ஆண்டில் கண்டு பிடிக்கப்படும் வால்நட்சத்திரம் உதாரணமாக 1990-ஆம் ஆண்டில் கண்டு பிடிக்கப்பட்ட வால்நட்சத்திரம் 1990 என்று குறிப்பிடப்படும். அடையாள எழுத்து, அவ்வால்நட்சத்திரத்திரம் குறிப்பிட்ட காலங்களில் தோன்றும் என்பதை உணர்த்தும். உதாரணமாக, பி. ஹாலி மற்றும் பி.என்கே (P/HALLEY'S and P/ENKE) என்பவை குறித்த காலங்களில் தோன்றும் வால்நட்சத்திரங்கள். வால நட்சத்திரங்கள் பூமியில் உயிரினங்கள் தோன்றுவதற்கு எந்த வகையிலாவது தொடர்புடையனவா? என்ற வினாவிற்கு பூமி வளர்ச்சியின் தொடக்க நிலைகளில் கோடிக்கணக்கான வால்நட்சத்திரங்கள் பூமியுடன் மோதி, கடல்கள் உருவாவதற்குக் காரணமாக இருந்தன என்று விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இப்போதும்கூட, பூமியில் நீர் இருப்பு உயருவதற்கு வால்நட்சத்திரங்கள் தான் காரணம் என்று ஐயோவா (IOWA) பல்கலைக்கழகத்தைச் சார்ந்த விஞ்ஞானி டாக்டர் லூயிஸ் ஃபிராங்க் (Dr. Louis Frank) ஆராய்ந்து கூறியுள்ளார். பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட நீர்கொண்ட வால்நட்சத்திரங்கள் பூமியின் வளிமண்டலத்தை ஒவ்வோர் ஆண்டும் மோதுவதால் நம் வளிமண்டலத்தில் நீர்க்கலவை முதலில் ஏற்பட்டு பிறகு தட்பவெப்ப நிலைக்குத் தக்கவாறு கடல் நீருடன் சேருகின்றது.

ஒவ்வோர் ஆண்டும் 10.14 அதாவது கோடி கோடி கிராம் நீர் வால்நட்சத்திரங்களினால் பூமிக்குக் கிடைக்கிறது. இதனால் ஓர் ஆண்டுக் காலத்தில், பூமியின் மேற்பரப்பில் சராசரியாக 2.5 செ.மீ. அளவு நீர் மட்டம் உயரக்கூடும் என்றும் அவர் கூறியுள்ளார். இவ்வாறு 400 கோடி ஆண்டுகளுக்கு முன்னாலிருந்து வால்நட்சத்திரங்களில்தான் பூமிக்குக் கிடைத்த நீரைக் கணக்கிடுகையில் வால நட்சத்திரங்கள்தான் பெரும்பாலும் பூமியில் கடல் தோன்றுவதற்குக் காரணமாக இருந்திருக்கக்கூடும் என நம்பப்படுகிறது. இந்தக் கோட்பாடு வானியல் நிபுணர்களின் இப்போதைய கண்டுபிடிப்புகளுக்கு ஆதரவாக உள்ளது. பூமியில் உயிரினம் வளர்ச்சியடைய உதவியாக உள்ள மூலக்கூறுகளை வால் நட்சத்திரங்கள் விதைத்திருக்கலாம்.

வால்நட்சத்திரங்களும் பிற கோள்களைப் போலவே சூரிய ஒளியைப் பிரதிபலிக்கும் தன்மை உடையது. எனவே, சூரியனுக்கு எவ்வளவு அருகில் வால்நட்சத்திரம் உள்ளதோ அதற்கு ஏற்றவாறு அதிகமாக ஒளியைப் பிரதி பலிக்கும். மேலும் வால்நட்சத்திரங்களில் உள்ள மூலக்கூறுகள் ஒளியை உமிழும் தன்மையுடையவை. அதாவது வால் நட்சத்திரத்தில் உள்ள வாயு மூலக்கூறுகள் ஒரு குறிப்பிட்ட அலை நீளத்தில் சூரிய ஒளியைக் கிரகித்துக் கொண்டு வேறு அலை நீளத்தில் வெளிப்படுத்துகின்றன.

வால்நட்சத்திரம் உமிழ்ந்த ஒளிநிற மாலையை ஆராய்ந்தபோது, குறிப்பிட்ட வாயுக்களான மீதேன், கார்பன் மோனாக்ஸைடு, சயனோஜின் மூலக்கூறுகளினால் ஒளி வெளியேற்றப்படுகின்றது எனத் தெரிய வருகிறது. 1910-ஆம் ஆண்டு ஹாலி வால்நட்சத்திரம் தோன்றிய காலத்தில் பூமியானது அதன் வால் பகுதியைக் கடந்து சென்றது. இவ்வால் பகுதியில் உள்ள விஷத்தால் கேடு நேரிடுமோ என்ற திகில் மக்களுக்கு ஏற்பட்டது. இருப்பினும் வால் பகுதியில் உள்ள விஷ வாயுவின் பருமளவு மிகவும் குறைவாக இருந்ததால் தீங்கு ஏதும் நிகழவில்லை.

ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக ஆறு புதிய வால்நட்சத்திரங்கள் கண்டு பிடிக்கப்படுகின்றன. ஒகாசகி-லெவி-ருடன்கோ, ஆஸ்டின் மற்றும் லெவி என அழைக்கப்படும் வால்நட்சத்திரங்கள் சமீப காலத்தில் தொடர்ச்சியாகத் தோன்றின. நடுத்தர அளவு தொலைநோக்கிகள் உதவியால் முன்னர் குறிப்பிட்ட மூன்று வால்நட்சத்திரங்களைக் காண முடிந்ததால், பொதுவாக வால்நட்சத்திரங்களைப் பற்றி ஆராய்வதில் புதியதோர் ஆர்வம் அதிக அளவில் தற்போது ஏற்பட்டுள்ளது. பண்டைக் காலத்தில், பின்னால் நேரிடப் போகின்ற தீய நிகழ்ச்சிகளைக் குறிக்கும் முன்னெச்சரிக்கையாக வால்நட்சத்திரங்கள் கருதப்பட்டு வந்தன. ஆனால், இந்நாட்களிலோ வான் பொருட்களான வால்நட்சத்திரங்கள் தேடி ஆராயப்படுகின்றன. 1618-ஆம் ஆண்டு தான் முதன் முதலாக வால்நட்சத்திரம் தொலைநோக்கியின் உதவியால் கவனிக்கப்பட்டது. 1910-ஆம் ஆண்டு ஹாலி வால்நட்சத்திரத்தின் புகைப்படங்கள் பலமுறை எடுக்கப்பட்டன.

1986-ஆம் ஆண்டு இவ்வால் நட்சத்திரம் தோன்றியபோது இதனைப் பற்றி விண்வெளி ஆய்வுகள் மிகப் பெருமளவில் மேற்கொள்ளப்பட்டன.

வால்நட்சத்திரங்களின் முக்கியத் தன்மைகளைப் பற்றி அறிந்து கொண்ட நாம், சூரியக் குடும்பத்தைச் சார்ந்த மற்ற சில உறுப்புகளான, கோள்திரள்கள், விண்கற்கள், எரி நட்சத்திரங்கள் முதலியவற்றின் சிறப்பு நிலைகளைப் பற்றித் தெரிந்து கொள்வோமா?

செவ்வாய், வியாழன் கோள்களின் சுற்றுப்பாதைகளுக்கு இடையே கோள்திரள்கள் காணப்படுகின்றன. இவை சூரியனைச் சுற்றி வருகின்றன. இக்கோள் திரள்கள் சில சென்டிமீட்டரிலிருந்து சில நூறு கிலோமீட்டர்கள் அளவுடையவை. 50,000-க்கும் அதிகமாக எண்ணிக்கையுடைய கோள் திரள்களில் சுமார் 3,000 கோள்திரள்களின் சுற்றுப்பாதை இயக்கங்கள் கணக்கிடப்பட்டுள்ளன. கோள்திரள்களில் மிகவும் பெரியது சிரஸ். இதன் விட்டம் சுமார் 1,000 கிலோமீட்டர்.

இக்கோள்திரள் 1801-ஆம் ஆண்டு கண்டறியப்பட்டது. சிரஸ் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு சில ஆண்டுகளுக்குள்

### குடகனாறு நீர்த்தேக்கத் திட்டம்

குடகனாறு நீர்த்தேக்கத் திட்டத்தில் 10 அரை வட்டக் கதவுகள் மற்றும் அக்கதவுகளை இயக்குவதற்கான இயந்திரங்கள் தயாரித்துப் பொருத்தும் பணியைத் துங்கபத்ரா ஸ்டீல் தயாரிப்பு நிறுவனத்திடம் ரூபாய் 2,39,87,000 மொத்த மதிப்பீட்டிற்கு (இதர வரிகள் நீங்கலாக) ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் மைய அரசு மற்றும் ஆந்திர-கர்னாடக அரசுகளின் கூட்டு நிறுவனமாகும். இப்பணியை 1991-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களுக்குள் முடிக்கப்பட வேண்டுமென இந்நிறுவனம் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.



# எரிநட்சத்திரங்கள் எப்படிப்பட்டவை?



பல்லாஸ் (Pallas) ஜூனோ (Juno) மற்றும் வெஸ்டா எனும் கோள்திரள்கள் கண்டு பிடிக்கப்பட்டன. கோள்திரள்கள் சிறு கோள்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. செவ்வாய் மற்றும் வியாழன் கோள்களுக்கு இடைப்பட்ட சுற்றுப் பாதையில் இதைப்போன்று ஆயிரக்கணக்கான சிறு பொருட்கள் சிதறிக் கிடப்பதற்கான சான்றுகள் காலம் செல்லச் செல்லக் கிடைத்தன.

விண்வெளியிலிருந்து வரும் கற்களுள் பூமியின் வளிமண்டலத்தை அடைந்தவுடன் எரிந்து விழுகின்ற பொருட்களையே நாம் எரி நட்சத்திரங்கள் என்கிறோம். விண்ணிலிருந்து வரும் பொருட்களுள் அவற்றின் மேற்பரப்பு மட்டும் எரிந்து, எஞ்சிய பகுதி எரியாமல், பூமியில் வந்து விழுபவற்றை விண்கற்கள் என்கிறோம்.

எரிநட்சத்திரங்கள் பூமியின் மேற்பரப்பினை வந்து அடைவதில்லை. இவை வளி மண்டலத்தினுள் நுழையும்போது மட்டுமே பார்வையில் தென்படும். இவை அதிகபட்சமாக மணிக்கு 72 கிலோ மீட்டர் வேகத்தில் வளிமண்டலத்தின் மீது மோதுவதால் ஏற்படும் உராய்வின் காரணமாகப் பூமியை அடைவதற்கு முன்பாகவே, முழுமையாக எரிந்து விடுகின்றன. இவ்வாறு எரிவதால், இரவு வானத்தில் திடீரென ஒளிக்கற்றையை நாம் காண்கிறோம்.

எரிநட்சத்திரங்கள் குறிப்பிட்ட காலத்திலோ அல்லது எப்பொழுது வேண்டுமானாலுமோ தோன்றலாம். எந்தத் திசையிலிருந்தும் எந்நேரத்திலும் தோன்றுவது ஸ்போராடிக் (Sporadic) எரிநட்சத்திரங்கள் எனப்படும். ஒரு குறிப்பிட்ட காலத்தில் வளி மண்டலத்தினுள் நுழையும் எரி நட்சத்திரத் தொகுப்புகள் நட்சத்திரங்கள். விட்டுச் சென்ற எஞ்சிய பகுதிகளாகும்.

ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதத்தில் வீழ்கின்ற ஓரியானிட்ஸ் எரி நட்சத்திரக் கூட்டம், ஹாலி நட்சத்திரத்தின் எஞ்சிய பகுதியுடன் தொடர்புடையது. டெம்பிள்டட்டில் என்ற நட்சத்திரத்தின் எஞ்சிய பகுதியே, நவம்பரில் தோன்றும் புகழ்பெற்ற லியோனிட்

# கோளரங்கத்தில் புதிய நிகழ்ச்சி

**செ**ன்னை மாநகரில், பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் அமைந்துள்ள பி.எம். பிர்லா கோளரங்கத்தில் 28.2.1991 அன்று ஆறாவது(வால் நட்சத்திரங்கள் சூரிய குடும்பத்தின் மற்ற சிறு பொருட்களான கோள்திரள்கள், எரி நட்சத்திரங்கள், விண்கற்கள் பற்றிய) நிகழ்ச்சியின் தொடக்க விழா நடைபெற்றது. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்பக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் திரு பி.. பெரியசாமி வரவேற்றார். அறிவியல் தொழில நுட்பத் துறையின் சிறப்புப் பணி அலுவலர் திரு ஆர்.சங்கர நாராயணன் பங்கேற்றார்.

இந்த நிகழ்ச்சிகள் ஆங்கிலம் மற்றும் தமிழில் நாற்பது நிமிட நேரம் காண்பிக்கப்பட்டன. இப்பொழுது வால் நட்சத்திரங்கள் எனும் நிகழ்ச்சி புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளது.

இந்த பிர்லா கோளரங்கத்தில், வார நாட்களில் 4 நிகழ்ச்சிகளும் (தமிழில் இரண்டு ; ஆங்கிலத்தில் இரண்டு) விடுமுறை நாட்களில் ஆறு நிகழ்ச்சிகளும் (தமிழில் மூன்று; ஆங்கிலத்தில் மூன்று) நடைபெறுகின்றன. இங்கு வருகை தருபவர்களில் 60 சதவீதத்தினர் மாணவர்கள் ஆவார்கள். வானியல் பற்றிய நற்சான்றிதழ் வழங்கும் வகுப்புகள் நடைபெறுகின்றன. இவ்வகுப்பில் சுமார் 25 மாணவர்கள் பயிற்சி பெறுகின்றனர். மூன்று மாதப் பயிற்சி ஆறு மாதப் பயிற்சி என இருவகைப் பயிற்சிகள் இங்கு நடத்தப்படுகின்றன. இதுதவிர புகைப்படக் கண்காட்சிகளும், புத்தகக் கண்காட்சிகளும் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு சனிக்கிழமையன்றும் வானவியல் சங்கத்தின் சார்பில் இரவு வான் கவனிப்பு முகாம் 7 மணி முதல் 8 மணி வரை நடைபெறுகிறது. இந்தப் பெரியார் அறிவியல் தொழில் நுட்ப மையம் தொலைக்காட்சியில் இதுவரை எட்டு நிகழ்ச்சிகளை வழங்கியுள்ளது.

இது தவிர, நான்கு அறிவியல் அரங்குகள் குழந்தைகள்- பெரியவர்களின் அறிவியல் அறிவைத் தூண்டும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. குழந்தைகள் அங்குள்ள பொருள்களைத் தொட்டு இயக்கித் தங்கள் அறிவியல் அறிவைப் பெருக்கிக் கொள்ளலாம். ரஷியப் பெண் வானவெளி வீரர் வேலண்டினா இந்தக் கோளரங்கில் ஒருநாள் தங்கி அனைவரது கேள்விகளுக்கும் பதிலளித்தது இந்தக் கோளரங்கின் பொன்னாளாகக் கருதப்படுகிறது.

இவை தவிர சிறிய கோளரங்கம் தற்பொழுது சுற்றுலாப் பொருட்காட்சியில் அமைக்கப்பட்டு மிகப் பெரிய அளவில் மக்களைக் கவர்ந்து வருகிறது. இதுபோன்ற ஐந்து சிறிய கோளரங்குகளைத் திரு பி.எம். பிர்லா, இந்தக் கோளரங்கிற்கு நன்கொடையாக வழங்குகிறார். விரைவில், திருச்சிராப்பள்ளியில் இதுபோன்ற சிறிய கோளரங்கத்தை நிறுவும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது.

இங்கு நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளும் அரங்கு நிறைந்த காட்சிகளாகவே நடந்து வருகின்றன. அறிவியல் அறிவை- குறிப்பாக வானவியல் அறிவை வளர்க்க மூன்றாவது தலைமுறை கம்ப்யூட்டர் முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இக்கோளரங்கம், அனைத்து மக்களையும் ஈர்த்து இன்றைய தினம் தமிழகத் தலைநகரின் மிகச் சிறந்த சுற்றுலாத் தலமாகவும் விளங்குகிறது. குழந்தைகளுக்கும் பிளஸ்-2 வரை படிக்கும் மாணவர்களுக்கும் ரூ.2-ம், பெரியவர்களுக்கு ரூ.5-ம் நுழைவுக் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

வாரத்தில் திங்களன்று மட்டும், சென்னை- கோட்டூர்புரத்திலுள்ள இக்கோளரங்கத்திற்கு விடுமுறை நாளாகும்.

—என்.இளங்கோ

எரிநட்சத்திரக் கூட்டம் என்று நம்பப்படுகிறது. ஒவ்வொரு எரிநட்சத்திரக் கூட்டமும் வான வெளியில் ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து தொடங்கி, பூமியில் வந்து சேர்வது போலத் தோன்றுகிறது. ஓரியானிட், மற்றும் லியோனிட் எரி நட்சத்திரக் கூட்டங்கள் ஓரையான் மற்றும் லியோ நட்சத்திர மண்டலங்களில் இருந்து வருவது போலத் தோன்றுகின்றன. ஒவ்வொரு நாளும் பூமியின் வளிமண்டத்தை வந்தடையும் எரிநட்சத்திரங்களின் எண்ணிக்கை சுமார் 7.5 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

பூமியின் தரைமட்டத்தை வந்தடையும் விண்கற்கள் எரிநட்சத்திரங்களைப் போலச் சிறியதாக இல்லாமல், அளவில் பெரியனவாக இருக்கும். இவற்றின் மேற்பகுதி மட்டுமே எரிந்து, எஞ்சிய பகுதி முழுமையாக எரியாமல் பூமியை வந்து சேர்கின்றன. விண்கற்கள் கிட்டத்தட்ட, கோள்திரள்களை ஒத்துக் காணப்படுகின்றன. அரிசோனா என்ற இடத்தில் விண்கல்லின் மோதலால் உருவான புகழ்பெற்ற பள்ளத்தாக்கின் விட்டம் 1265 மீட்டர் மற்றும் அதன் ஆழம் 175 மீட்டர் ஆகும். கற்கள், இரும்பு மற்றும் கல்-இரும்பு என்று மூன்றாக விண்கற்களை வகைப்படுத்தலாம். 10 டன் எடைக்கும், அதிகமாக உள்ள பெரும்பாலான விண்கற்கள் இரும்பு வகையைச் சார்ந்தவை. தென்மேற்கு ஆப்பிரிக்காவில் ஹோபா வெஸ்ட் என்ற இடத்தில் விழுந்த, விண்கல்லின் எடை 60 டன். இதுவே நமக்குத் தெரிந்தவரை அதிக எடை உடைய விண்கல்லாகும்.

அதிகாலை வானத்தில் சிரியஸ், பிராசியான், பெட்டல்ஜுஸ் ஆகிய மூன்று நட்சத்திரங்களால் ஆன குளிர் கால முக்கோணம் கீழ்த்திரையிலிருந்து மேலெழும்பி வந்துள்ளது. இம்மூன்று விண்மீன்களும் ஒன்றுக்கொன்று மாறுபட்டிருப்பதால், இத்தகைய குளிர்கால முக்கோணம் முக்கியத்துவம் பெற்றுள்ளது. சிரியஸ் வெண்மை நிறத்தோடு ஒளிர்கிறது. பிராதியான் மஞ்சள் நிறத்தோடு காணப்படுகிறது. மற்றும் பெட்டல்ஜுஸ் சிகப்பு நிறத்தைப் பெற்று விளங்குகிறது. குளிர்கால ஓரையன் நட்சத்திர மண்டலம் எம்-42 என்ற நெபுலாவை உள்ளடக்கியுள்ளது. இந்த நெபுலாவிற்குள் புது நட்சத்திரங்கள் பிறக்கின்றன.

இந்த அதிகாலை நேரத்தில் சூரிய உதயத்திற்கு முன்னதாக, செவ்வானம் கீழ்த்திசையில் தோன்றுகிறது. சூரியன் அடிவானத்திற்கு 18 டிகிரிக்கு உள்ளாக இருக்கிறது. இந்தச் சமயத்தில் வான் பொருட்கள் அனைத்தும் மறையத் தொடங்குகின்றன. முதலில் மறைவது நட்சத்திரங்கள். அவற்றை அடுத்து கோள்களே.



# நல்லதங்காள் கதை

**கா**மராசர் மாவட்டத் தலை நகரிலிருந்து 42 கி.மீ. தூரத்தில் உள்ளது, வத்திராயிருப்பு என்ற கிராமம். மேற்குத்தொடர்ச்சிமலையின் எழிலும், சுற்றிலும் தென்னை மரத்தோப்புகளும் நிறைந்த எழில் மிகு கிராமமாகக் காண்போரைக் கவரும் வண்ணம் அமைந்துள்ளது இது. அர்ச்சனாபுரத்திற்கு வடக்கேயும், கான்சாபுரத்திற்குக் கிழக்கேயும், வத்திராயிருப்புக்கு மேற்கிலும் அமைந்துள்ளதுதான் நாம் இங்கே குறிப்பிடும் நல்லதங்காள்கோயில்.

இதுபற்றிக் கர்ணபரம்பரைக் கதை ஒன்று உண்டு.

முன்னொரு காலத்தில், சந்திர குலத்தில் பிறந்த இராமலிங்க மகா ராஜா என்பவர் மதுரையை ஆண்டு வந்தார். இவரது மனைவி பெயர் இந்திராணி, இவர்களுக்கு இரண்டு குழந்தைகள் பிறந்தன. மூத்தமகன் நல்லதம்பி, இளைய மகள் நல்லதங்காள். உரிய காலத்தில் காசிராஜனுக்கும் நல்லதங்காளுக்கும் திருமணம் நடைபெற்றது. இனிதே இல்லறம் துவங்கி, சிலகாலம் மகிழ்ச்சியுடன் இருந்த இவர்களுக்கு 7 குழந்தைகள் பிறக்கின்றன. செல்வச் செழிப்புடன், இருந்த இவர்கள் மழை பெய்யாத காரணத்தால், கடும் பஞ்சத்திற்கு ஆளாகிறார்கள். ஆகவே, தங்களிடம் இருந்த பொருட்கள் யாவற்றையும் விற்றுச் சாப்பிட்டு, வேறு வழியில்லாமல் உடன் பிறந்த அண்ணன் வீட்டிற்குத் தன் 7 குழந்தைகளுடன் தன்னந்தனியே செல்கிறாள் நல்லதங்காள். இவளுடைய அண்ணி மூளி அலங்காரி ஒரு கொடுமைக்காரி. சரிவர கவனிக்காததால் மனமொடிந்து சாவதற்குத் துணிந்து தன் குழந்தைகளை அழைத்துச் சென்று பாழும் கிணற்றில் வீசி, தானும் உயிர் விட்டாள் என்பது தான் நல்லதங்காளின் கதை.

இந்தக் கதையையொட்டிய பாடல் ஒன்று இந்த வட்டாரத்தில் வழங்கப்படுகிறது.



நல்லதங்காள் கிணறு

நல்லதங்காள் மனம் நொந்து காடு மலைகளைக் கடந்து மாடு மேய்க்கும் சிறுவர்களிடம் பாழுங் கிணறு எங்குள்ளது என்று கேட்கிறாள் என்று தொடங்குகிறது அந்தப் பாடல். இதோ, அது:

'மாடு மேய்க்கும் பிள்ளைகளா
மாட்டாஞ்சிறு தம்பியரே
ஆடுமேய்க்கும் பிள்ளைகளா
அறியாத பாலகரே
பாழுங் கிணறொன்று
காண்கிலையே யெந்தனுக்கு?'

—அதற்குச் சிறுவர்கள், கீழ்க்கண்டவாறு பதில் கூறுகிறார்கள்:

'அருகுபடர்ந்திருக்கும் ஆழமுள்ள
பாழ்கிணறு
கோவை படர்ந்திருக்கும்
கொடிதான பாழ்கிணறு
எதிரேயிருக்கு தம்மா ஏற்றமுள்ள
பாழ்கிணறு

நல்லதங்காளும் அவளுடைய ஏழு குழந்தைகளும் அக்கிணற்றில் விழுகிறார்களாம். அது குறித்து பாடல் வருமாறு:



நல்ல தங்காள் கோயில

சிறப்புக் கட்டுரை

# காணும் பொருளெல்லாம் கலை வண்ணம்



சென்னை அண்ணாசாலையில் உள்ள 'பூம்புகார்' விற்பனைக் கூடத்திற்குச் செல்கிறோம்.

கலை உலகமே அங்குக் காட்சியளிக்கின்றது.

காணக் கண் கோடி வேண்டும் என்பதுபோல, எதை விடுப்பது? எதை எடுப்பது?

காணும் பொருளெல்லாம் கலை வண்ணம்!

திரும்பும் திசையெல்லாம், திறமையின் பிரதிபலிப்புகள்!

பூம்புகார் - தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் கைவினைப் பொருட்களின் சங்கமம்.

ஒவ்வொன்றாகப் பார்த்துக் கொண்டே வருகிறோம்.

கல், மரம், மண், காகிதம், உலோகம், பஞ்சலோகம் ஆகியவற்றாலான சிற்பங்கள் - சிலைகள் - கலைப் பொருட்கள் கண்ணையும் கருத்தையும் கவர்கின்றன.

**கலைக்கூடங்கள் - விற்பனை நிலையங்கள்**

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், 1973-இல் தொடங்கப்பட்டது.

★ கைவினைத் தொழில்களை எல்லா வகையிலும் வளர்த்தல், ஊக்குவித்தல்.

★ கைவினைஞர்களுக்கு எல்லா வகையான உதவிகள் அளித்தல்.

★ கைவினைஞர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களைச் சந்தையில் விற்பனை செய்தல்.

- இவை இக்கழகத்தின் குறிக்கோள்கள்.

பூம்புகாரின் கிளைக் கலைக்கூடங்கள் - விற்பனை நிலையங்கள் தமிழ்நாடு முழுவதும் உள்ளன. பிற மாநிலங்களான புதுடெல்லி, கல்கத்தா, பெங்களூர், திருப்பதி ஆகிய இடங்களில் உள்ளன.

உலோகம், சந்தன மரம், காகிதக் கூழ், பிரம்பு ஆகிய பொருட்களின் மூலம் தயாரிக்கும் 10 உற்பத்தி நிலையங்கள் தமிழகம் முழுவதும் உள்ளன.

**சாதனைக்குச் சான்று!**

பூம்புகாரின் சாதனைக்கு ஒரு சான்று - 1989-90-இல், இந்நிறுவனம் நான்கு கோடியே 66 இலட்சத்து 48 ஆயிரம் ரூபாய்க்கான கைவினைப் பொருட்களை விற்பனை செய்துள்ளது. இந்தவிற்பனையில், 15 இலட்சத்து 84 ஆயிரம் ரூபாய்க்கான பொருட்களை மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

அதுமட்டுமன்று, கடந்த ஆண்டு ஒரு கோடியே 12 இலட்சத்து 97 ஆயிரம் ரூபாய் அளவிற்குக் கைவினைப் பொருட்களை உற்பத்தி நிலையங்கள் மூலம் இந்நிறுவனம் உற்பத்தி செய்துள்ளது.

பொதுமக்களைக் கவரத்தக்க வகையில், அவ்வப்போது கண்காட்சிகளும் நடத்தப்படுகின்றன. இக்கண்காட்சிகளில் பிற மாநிலத்தவரும் பங்கு கொள்கின்றனர். ஒரே இடத்தில், பல்வேறு மாநிலங்களின் கலைப்பொருள்களைக் கண்டு களிக்கவும், விரும்பி வாங்கிச் செல்லவும் வாய்ப்பளிக்கப்படுகிறது. இதுவரை 75 கண்காட்சிகளை பூம்புகார் நடத்தியிருக்கின்றது. இதன்மூலம், ஒரு கோடியே 24 இலட்சத்து 43 ஆயிரம் ரூபாய் மதிப்பிற்குக் கைவினைப் பொருட்களை விற்பனை செய்துள்ளது. இன்னொரு மகிழ்ச்சியான செய்தி, கடந்த நிதி ஆண்டில், இக்கழகம், ரூ.13.50 இலட்சத்திற்கு நிகர இலாபம் ஈட்டிச் சாதனை புரிந்துள்ளது.

இந்த நிதியாண்டில் ஜனவரி மாதம் முடிய ரூ.28.48 இலட்சம் இலாபம் எட்டியுள்ளது. இந்த ஆண்டு முடிவில் இந்நிறுவனம் ரூ.525 இலட்சங்களுக்கு விற்பனையையும், ஒன்றேகால் கோடி ரூபாய்க்குக் கைவினைப் பொருட்கள் உற்பத்தியையும் எய்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கழகம், கூடுமானவரையில் கொள்முதல் குழுக்களின் மூலம் கைவினைஞர்களிடமிருந்து கைவினைப் பொருட்களை நேரடியாகச் சரியான விலைக்கு வாங்குவதால், இடைத் தரகர்களின் ஈடுபாடும், கைவினைஞர்களிடம் குறைந்த விலைக்கு வாங்கி அதிக இலாபம் அடையும் நோக்குடன் அதிகமான

**கலை நுணுக்கம் மிகுந்த கைவினைப் பொருட்களின் சங்கமமாகத் திகழ்வது பூம்புகார்! கைத்திறத்தைக் கடை பரப்பும் அந்தக் கவின்மிகு அமைப்பின் தோற்றம்-வளர்ச்சி-நோக்கம் ஆகியவை இந்தப் பக்கத்தில் தொடங்குகின்றன...**



பாரெங்கும் புகழப்படும் பெருமையும் கலைநுணுக்கமும் மிகுந்தவை பைந்தமிழ் நாட்டுக் கலைப்படைப்புகள். அவை பாரம்பரியமிக்க பண்பாட்டுப் பெருமைகளோடு செய் நேர்த்தியிலும் சிறந்து விளங்குபவை அந்தக் கலைச் செல்வங்கள் குத்து விளக்கானாலும், தஞ்சாவூர்த் தட்டானாலும் சிலையோ, சிற்பமோ எதுவானாலும் எல்லாராலும் கொண்டாடப்படுகின்றன.





நல்லதங்காள் கதை கூறும் கல்வெட்டு.

'அப்போது நல்லதங்காள்
எரிவையிளங் கொடியும்
மாளுகிறேனென்று சொல்லி
மலையேறித் தெண்டனிட்டாள்
சத்திவலம் வந்து
சூரியனைத் தெண்டனிட்டாள்
தெண்டனிட்ட பிற்பாடு
தெரிவையிளங் கொடியும்
ஒவ்வொரு மக்களையும்
கங்கையிலே தள்ளிவிட்டாள்
பார்ப்பா ருடையுடுத்தி
பத்தினியாள் நல்லதங்காள்
தானுஞ் சலியாமல் தண்ணீரில்
போய் விழுந்தாள்!'

—இவ்வாறு செல்லுகிறது அந்தப் பாடல்.

நல்லதங்காளும் அவள் குழந்தைகளும் இறந்த கிணறு காமராசர் மாவட்டம் வத்திராயிருப்பு அருகே உள்ள அர்ச்சனாபுரத்தில்தான் உள்ளது என்று கூறப்படுகிறது. இப்பொழுது பாழடைந்து தூர்ந்து போய்க் காணப்படுகிறது. இந்தக் கிணற்றைப்பற்றி மேலப்பாளையம் திரு. கந்தன் அவர்களைக் கேட்ட போது "வேப்பிலை அய்யருக்குச் சொந்தமான நிலம் 1.5 ஏக்கர் கொண்டது; இவருடைய நிலத்தில் தான் இந்த கிணறு உள்ளது. இது ஒரு வித்தியாசமான கிணறு. இதில் கட்டப்பட்டுள்ள செங்கல், அளவில் பெரியது. இது போல வேறு எங்கும் கிடையாது" என்று கூறினார்.

அர்ச்சனாபுரத்தின் கோயிலை நிர்வகிக்கும் திரு.சுந்தரம் என்பவரை அதுபற்றிக் கேட்டபோது, "நல்லதங்காளுக்கு ஒரு கோயிலும், குழந்தைகளுக்கு என்று ஒரு கோயிலும் அப்பகுதியில் கட்டப்பட்டுள்ளன. இது பழமையான கோயில். வாரத்தில் செவ்வாய், வெள்ளி ஆகிய இரண்டு நாட்களுக்கு அக்கோயிலில் பூஜை நடைபெறுகிறது. ஆடி மாதம் இவ்வூரில் உள்ளவர்கள் திருவிழா நடத்துகிறார்கள். மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை சவுராஷ்டிரத்தைச் சேர்ந்த பல ஆயிரக்கணக்கான பக்தர்கள் பந்தலிட்டுப் பொங்கல் வைத்து இங்குவந்து வணங்கி செல்கிறார்கள்" என்று தெரிவித்தார்.

இம்மாவட்டத்திலுள்ள கீழ் அர்ச்சனாபுரத்தில், நல்லதம்பி கோயில் ஒன்று உள்ளது. இங்கு விசேஷ நாட்களில் பூஜை நடைபெறுகிறது. மூலி அலங்காரியின் சிலை காண்சாபுரத்தில் வயல் வெளியில் இருக்கிறது. அவ்வூர் மக்கள் இந்தச் சிலையை ஏறெடுத்தும் பார்ப்பதில்லையாம்!

எஸ்.கே.மூர்த்தி
உதவி மக்கள் தொடர்பு
அலுவலர்(செய்தி)
காமராசர் மாவட்டம்

## பருவமழை தவறிய பகுதிகளில் குடிநீர்ப் பணிகள்

பருவமழை தவறிய பகுதிகளில் குடிநீர்ப் பணிகளை நிறைவேற்ற ஏற்கெனவே அறிவித்ததற்கிணங்க, அரசு ரூ.10 கோடி அனுமதித்துள்ளது.

வறட்சியால் பாதிக்கப்பட்ட தருமபுரி, சேலம், திண்டுக்கல்-காயிதேமில்லத், பெரியார், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, கோயம்புத்தூர், திருவண்ணாமலை-சம்புவராயர், வடார்க்காடு அம்பேத்கர், இராமநாதபுரம், தென்னார்க்காடு ஆகிய மாவட்டங்களில் குடிநீர்த் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

இத்தொகையில், 1,500 ஆழ்துளைக் கிணறுகள் ரூ.5 கோடி செலவில் அமைக்கப்படும். லாரிகள் மூலம் குடிநீர் வழங்க ரூ.1 கோடி செலவிடப்படும். மீதமுள்ள ரூ.4 கோடி, புதிய திறந்த வெளிக் கிணறுகள் வெட்டுதல், கிணறுகளை



ஆழப்படுத்துதல், ஏற்கெனவே உள்ள ஆழ்துளைக் கிணறுகளைச் சுத்தப்படுத்துதல், தனி மின்வழித்தடம் அமைத்தல், பழுதான பம்புசெட்டுகளை மாற்றுதல் ஆகிய பணிகளுக்குச் செலவிடப்படும்.



## தொழிலாளர் மலிவு வீட்டுவசதித் திட்டம்

தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள், அவர்களுடைய பணியிடங்களுக்கருகில் பாங்கான இடங்களில் குறைந்த வாடகையில் வசிக்க இயலும் வகையில், தொழிலாளர்கள், பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் ஆகியோருக்கான தொழிலாளர் மலிவு வீட்டுவசதித் திட்டம் செயல்படுத்தப்பட்டது. பொதுத்துறை நிறுவனங்களான தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சிறுதொழில் வளர்ச்சிக்கழகம் ஆகியவற்றின் மூலம், அரசு இந்த வீடுகளைக் கட்டியிருக்கிறது.

இத்திட்டத்தின்கீழ் வீடுகளைப் பெறுவதற்குத் தொழிலாளர் சட்டத்தின்கீழ் வருகிற தொழிற்சாலைகள், தொழிலாளர் சட்டத்தின்கீழ் வராத தொழிற்சாலைகள் ஆகியவற்றில் பணிபுரியும் தொழிலாளர்கள், சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் பணிபுரிபவர்கள் ஆகியோர் தகுதி உடையவர் ஆகிறார்கள் என அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர்-மேலாண்மை இயக்குநர், இவ்வீடுகளில் குடியிருக்கும் தொழிலாளர்களுக்கு உரிமை மாற்றம் செய்வது குறித்து எழுப்பிய சில ஐயப்பாடுகளைத் தெளிவுபடுத்தி, அண்மையில் அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. அதன்படி, விற்பனை மூலம் வீடுகளைப் பெறுவதற்குத் தகுதியுடைய, சட்டப்படியான வாரிசுதாரர்கள், சட்டத்தின்கீழ் வருகிற மற்றும் சட்டத்தின்கீழ் வராத தொழிற்சாலையில் பணிபுரிவோர், சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் பணிபுரியும் தொழிலாளர்கள் ஆகியோரைத் தெரிந்தெடுக்கும் பணியை மேற்கொள்வதற்குத் தொழிலாளர் ஆணையாளர் அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வீடுகளின் அடிமனை மற்றும் கட்டடத்தின் விலை ஆகியவற்றை நிர்ணயம் செய்வது குறித்து அரசு உத்தரவுகள் பிறப்பித்துள்ளது. தொழிலாளர் துறை ஆணையாளர், தகுதிபெறும் தொழிலாளர்களைக் கண்டறிந்து அவர்களைத் தெரிந்தெடுத்தபின்னர், சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் பராமரிக்கின்ற குடியிருப்புகளைப் பொறுத்தவரையில் சிறுதொழில் வளர்ச்சிக் கழகமும், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் பராமரிக்கின்ற குடியிருப்புகளைப் பொறுத்தவரையில் வீட்டுவசதி வாரியமும் பயனடைவோருக்கு அந்த மனையையும், குடியிருப்புகளையும் ஒதுக்கீடு செய்யலாம்.

தொழிலாளர் நலத்துறை ஆணையர் அல்லது அவரால் அதிகாரம் பெற்ற தொழிலாளர் நலத்துறையைச் சேர்ந்த அலுவலர் இவ்வீடுகளுக்கான விற்பனைப் பத்திரங்களை வழங்குவார்.


**பேரறிஞர் அண்ணா பட்டுக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம் லிட்., என்.டி.ஆர்.(எச்)27, நீ.5-ஏ, நடனகோபாலர் தெரு, கும்பகோணம்-612 001.**

எங்களிடம் உயர்ரக சப்புரிப் பட்டு, அசல் வெள்ளி சரிகையிலான நவீன ரகப் பட்டாடைகள் கிடைக்கும்.

விற்பனை நிலையங்கள்

1. சன்னதித் தெரு-திருபுவனம்
2. 2வது அக்ரஹாரம்-சேலம்
3. 'சுமங்கலி' சில்க்காம்ப்ளக்ஸ்-திருச்சி
4. கீழவெளி வீதி-மதுரை
5. எஸ்.கே.சில்.பில்டிங்-திண்டுக்கல்
6. பூம்புகார் சில்க் ஹவுஸ்-பட்டுக்கோட்டை
7. கீழராஜ வீதி-புதுக்கோட்டை
8. 14, பெரியகடைத் தெரு, அறந்தாங்கி
9. லாரன்ஸ் ரோடு-கடலூர்
10. 240, எம்.ஜி.ரோடு-விழுப்புரம்
11. காந்தியடிகள் சாலை-கும்பகோணம்
12. சங்கம் சில்க் ஹவுஸ்-மயிலாடுதுறை

இரா.வேம்பு,
உதவி இயக்குநர் - செயலாளர்

திரு. ஏ.ராசாராமன்
தலைவர்

சொ.கு.கிருஷ்ணமூர்த்தி
துணைத்தலைவர்

இயக்குநர்கள்

எஸ்.மகாலிங்கம்
எம்.ஆர்.ஸ்ரீதர்
என்.பி.ராமகிருஷ்ணன்
கே.என்.இராஜாஜி
திருமதி.ஏ.கமலா
ஜீ.வி.ஜெகந்நாதன்
திருமதி.எல்.ஜெயம்

விலைக்கு விற்பதும் தடுக்கப்பட்டு வருகிறது.

### பூம்புகாரின் புகழ்

பூம்புகாரின் கைத்திறம், பல இடங்களில் விளங்கி வருவதைப் பார்க்கிறோம்.

திருப்பதி கோயிலுள்ள கருட மண்டபத்திற்குத் தங்கத் தகடு வேயும் வேலை.

பாண்டிச்சேரியில் உள்ள மணக்குல விநாயகர் கோவிலுக்கு வெள்ளி ரதம்.

கர்நாடக மாநில, பெல்லாரி பொதுப்பணித் துறைக்கு வெண்கலத்தினாலான அண்ணல் காந்தியடிகள் திருவுருவச் சிலை.

திருச்சி திருவெள்ளாறையிலுள்ள புண்டரீகாட்சப் பெருமாள் திருக்கோயிலுக்கான மரத் தேர்.

பல்வேறு இடங்களில் உள்ள ஆலயங்களுக்கான கொடி மரங்கள், பித்தளை உண்டியல்கள், மரக் கதவுகள்.

இராமேஸ்வரம் கோவிலுக்கு, இரண்டாம் பிரகாரக் கட்டுமானப் பணி, அம்பாள் மண்டபக் கட்டுமானப் பணி.

ஆந்திராவிலுள்ள அன்னாவரக் கோவிலுக்குப் பித்தளையாலான வளைவுக் கம்பி வேலை.

ஸ்ரீகாளாஸ்திரி கோவிலுக்குப் பித்தளையாலான கம்பி வேலைகள்.

உத்தரப்பிரதேச மாநிலம் லக்னோவில் உள்ள ஒரு கோவிலுக்கு கல் சம்பந்தப்பட்ட வேலைகள்.

- ஆகியன்வ நடைபெற்று வருகின்றன.

தங்கத் தேர் மூன்று, வெள்ளித் தேர் இரண்டு பூம்புகார் உருவாக்கி வருகிறது. இவையன்றி, தங்க, வெள்ளி வேலைப்பாடுகளும் நடந்து வருகின்றன.

தமிழ்நாட்டுக் கலைஞர்களின் கைத்திறமைகள் கடல் கடந்தும் பரவி வருகின்றன.

மலேசியா, சிங்கப்பூர், இங்கிலாந்து, ஜெர்மனி,



சுவிட்சர்லாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு பூம்புகார்க் கலைப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அங்கெல்லாம் தமிழகத்தின் பெருமை பட்டொளி வீசிப் பறக்கின்றது.

பூம்புகார் விற்பனை நிலையங்களில் விற்பனைக்கு இருக்கும் கைவினைப் பொருட்களின் குறைந்த விலை ஐந்து ரூபாய்; அதிகவிலை ஒரு இலட்சம் ரூபாய்!

### புதிய புதிய திட்டங்கள்

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திரு இரா. கற்பூரசுந்தரபாண்டியன், அவர்கள், இக்கழகத்தின் புதிய திட்டங்கள் குறித்து விளக்கினார் -

''கைத்திறன் வேலைப்பாடுகள் மிகுந்த பித்தளைக் கலைப் பொருள், மரத்தினாலான கலைப் பொருள், வளக்குகள் முதலிய கைவினைப் பொருட்களை, வெளிநாட்டுச் சந்தையில் விற்பதற்கு நல்ல வாய்ப்பு உள்ளது. இதனை நன்கு பயன்படுத்தி, பொருளாதார வளர்ச்சியினைத் தோற்றுவிக்க இக்கழகம் முயற்சி செய்து வருகிறது.

''பழனி, கொடைக்கானல், இராமேஸ்வரம், தூத்துக்குடி போன்ற இடங்களில் 1990-91-ஆம் ஆண்டிற்குள் விற்பனை நிலையங்களை ஏற்படுத்துவதோடு அல்லாமல், அண்டை மாநிலத்தில் உள்ள செகந்தராபாத் நகரத்தில் ரூ.12 இலட்சம் செலவில் இந்திய அரசு கைவினைப் பொருட்களின் வளர்ச்சி ஆணையரின் உதவியுடன் ஒரு நவீன விற்பனை நிலையம் ஏற்படுத்தவும் இக்கழகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

''ஐந்தாண்டுக்குச் சேர்ந்தாற்போல பலவாறான கைவினைத் தொழில்கட்குரிய பயிற்சியினை அளிக்கும்பொருட்டு, தமிழ்நாடு அரசிற்கு ரூ.75 இலட்சம் செலவில் ஒரு திட்டம் அனுப்பப்பட்டுள்ளது. இதன்மூலம் குறைந்தது 1,100 கைவினைஞர்கட்குப் பயிற்சி அளித்து ஊக்குவிக்க முடியும்.''

### இந்தியாவின் கைவினை - 1991

1991 ஜனவரித் திங்களில் இக்கழகம், 'இந்தியாவின் கைவினை - 1991' என்னும் பெயரில் ஒரு பெரிய சிறப்புக் கண்காட்சியினை நடத்தியது. கைவினைப் பொருட்கள் தேவையுள்ள மக்களுக்கு நடுத்தரகர்களின் ஈடுபாடு இல்லாமல் நேரடியாக, சரியான விலையில் சென்றடைய வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும்.



இந்தியாவில் உள்ள பத்து மாநிலங்களைச் சேர்ந்த 50-க்கும் மேற்பட்ட கைவினைஞர்கள் இதில் பங்கேற்று தங்களது கைவினைப் பொருட்களை விற்று அதற்கான தொகையினை உடனடியாகப் பெற்றுச் சென்றது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இதன்மூலம், இந்திய அரசு கைவினைப் பொருள்களின் வளர்ச்சி ஆணையர் அவர்களின் பொருளாதார உதவி இல்லாமல், ஒரு சிறிய இலாபத்துடன் இக்கழகம் ரூ.7.17 இலட்சத்திற்கான கைவினைப் பொருட்களை விற்று கைவினைஞர்கட்கு உதவி செய்துள்ளது.

மேலும், இவ்வாண்டு பிப்ரவரித் திங்களில், விற்பனைச் சந்தைக்கூடம் கட்டுவதற்கும் இக்கழகம் ஏற்பாடு செய்து வருகிறது. இதற்கு இந்திய அரசின் கைவினைப் பொருட்களின் வளர்ச்சி ஆணையரிடமிருந்து நிதி

**அட்டையில்...**

**சிற்பக் கலைஞரும், கவிஞரும் ஒருவகையில் ஒன்றுதான். கவிஞன் தன் சிந்தனையைப் பிழிந்து கவிதையை உருவாக்குகிறான். சிற்பக் கலைஞன் தன் சிந்தனையைச் சிலையாக வடிக்கிறான். அவ்வாறு உருவானதுதான் முகப்பை அலங்கரிக்கும் யாழ் நங்கை, உலோகத்தால் ஆனது. ஈரோடு சிற்பக் கலைஞர் திரு.எல்.இராதாகிருஷ்ணன் அவர்கள் உருவாக்கியது: பூம்புகார் கலைக்கூடங்களில் பல்வேறு சிற்பக் கலைஞர்களின் கைவண்ணங்களோடு, இவரது கைவண்ணத்தையும் கண்டு மகிழலாம்.**



உதவி கிடைக்க உள்ளது. இதனால் இந்தியாவில் உள்ள அனைத்துக் கைவினைஞர்களும் தங்களது பொருட்களை நல்ல விலையில் விற்க வாய்ப்பு ஏற்படும்.

### விளக்குகள் - ஒரு விளக்கம்

விளக்குகளில்தான் எத்தனை வகை! குத்துவிளக்கு, காமாட்சியம்மன் விளக்கு, மகர விளக்கு, தோரண விளக்கு, தூண்டாமணி விளக்கு, இப்படி எத்தனையோ உள்ளன. அவற்றையெல்லாம் ஒருசேரக் காணலாம் பூம்புகார் விற்பனைக் கூடத்திலே!

விளக்குகள் நாச்சியார்கோவில், வாகைக்குளம், மதுரை ஆகிய இடங்களில் உருவாக்கப்படுகின்றன. சுமார் 8 [illegible] வரை விளக்குகள் தயாரிக்கலாம். வீசி[illegible] சித்திர வேலைப்பாடு[illegible] விளக்குகளும் உண்டு.

### அதே வேலை நுணுக்கத்துடன் - அற்புதக் கலைஞர்கள்

சோழர் காலத்தில் புகழ்பெற்ற உலோக விக்கிரகங்கள் போன்று இன்றும் தஞ்சாவூர் சுற்றியுள்ள சில சிற்பக் கலைஞர்கள், 'அதே வேலை நுணுக்கத்துடனும் ஆர்வத்துடனும் சிற்பங்களை உருவாக்கி வருகிறார்கள். உலோகத்தாலான தஞ்சாவூர் விளக்குகள் நல்ல அழகிய வேலைப்பாடுகளுடன் செய்யப்பட்டு - ரூ.35-லிருந்து விற்பனை செய்யப்படுகிறது.

மதுரை, சேலம், கன்னியாகுமரி, திருச்சி மாவட்டங்களில் இம்மாநிலத்தின் பாரம்பரியத் தொழிலான மரக் கைவினைப் பொருட்கள் அதிக அளவில் தயாரிக்கப்படுகின்றன.

கைவினைப் பொருட்களில் புகழ்பெற்ற தஞ்சாவூர்த் தட்டு, மூங்கில் நாற்காலிகள், அலங்கார உடைகள், கோயில் அணிகலன்கள் ஆகியவை பூம்புகாரில் விற்பனை செய்யப்படும் பொருள்களில் குறிப்பிடத் தக்கவையாகும்.

தமிழ்நாட்டில் பாரம்பரியமான கைவினைப் பொருட்கள்' அழியா வண்ணம் அவற்றைக் காப்பாற்றுவதுடன், சிற்பக்கலை, உலோகம், மர கைவினைப் பொருட்கள் தயாரிப்பதிலும் பூம்புகார் நிறுவனம் முதலிடம் வகிப்பது - பாராட்டுதற்குரியதாகும்.

### தமிழகத்தின் பெருமை தரணியெங்கும் பரவிட

திறமை வாய்ந்த கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கும், சிற்பக் கலைஞர்களுக்கும் வேலை வாய்ப்பினை உருவாக்கி, அதேசமயத்தில் அவர்கள் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திட பூம்புகார் செவ்வனே செயலாற்றி வருகின்றது.

தமிழகத்தின் பெருமையை, கலைச் சிறப்பைத்தரணியெங்கும் பறை சாற்றுவதுடன், கைவினைஞர்களுக்கு ஒரு கணிசமான தொகை ஊதியமாகக் கிடைக்கவும், அவர்களின் பொருட்களுக்கு ஓர் உறுதியான நிரந்தர விற்பனைக்கு வழிகோலவும் பூம்புகார் பெரும் பணியாற்றி, பேரும் புகழும் பெற்று வருகிறது என்பதை மகிழ்ச்சியோடு குறிப்பிட வேண்டும்.

**பி.வி. கிரி**

# படமும்...





சென்னை மணலியில் கட்டப்பட்ட மேம்பாலத்தை மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண்சிங் அவர்கள் திறந்து வைத்தார். ஆளுநரின் ஆலோசகர் திரு. வி.இராமச்சந்திரன், அவர்களும் விழாவில் கலந்து கொண்டார் (8.3.91).



மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பிலான இரும்பு மற்றும் எஃகு அங்காடி வளாகத்தைச் சென்னையை அடுத்த சாத்தங்காட்டில் திறந்து வைத்தார். மேதகு ஆளுநரின் ஆலோசகர் திரு. வி.இராமச்சந்திரன் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார் (8.3.91).



மேதகு ஆளுநரின் ஆலோசகர் திரு.வி.கார்த்திகேயன் அவர்கள் தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு தரைப் படை, கடற்படை மற்றும் வான்படை வீரர்களின் கூட்டத்தில் கலந்துகொண்டார் (11.3.91).



சென்னை மாநகராட்சிப் பள்ளி சாரண சாரணியர் தேசிய மாணவர் படையினர் ஆகியோரை ஈடுபடுத்தி, சென்னை மாநகராட்சிப் பள்ளிகளையும் அவற்றின் சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைத்திருக்கப் பள்ளித் துப்புரவு இயக்கத்தைத் தமிழ்நாடு அரசுத் தலைமைச் செயலர் திரு. டி.வி.அந்தோணி அவர்கள் நுங்கம்பாக்கத்திலுள்ள மாநகராட்சிப் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் தொடங்கி வைத்தார் (9.3.91).



மேதகு ஆளுநரின் ஆலோசகர் திரு.வி.இராமச்சந்திரன் அவர்கள் அகில இந்தியக் கீழ்த்திசை ஆராய்ச்சிப் போட்டிகளைச் சென்னை எத்திராஜ் மகளிர் கல்லூரியில் தொடங்கி வைத்தார் (9.3.91).

# ...செய்தியும்

அரசுத் துறைகளுக்கான பொருள் வழங்கல்

# தமிழகத்தின் பங்கு அதிகரிக்கும்

அரசுத் துறைகளுக்குக் கொள் முதல் செய்வதற்கு இந்திய அரசின் அமைப்பான பொருள் வழங்கல் - விற்பனைத் தலைமை இயக்குநரகம் பொறுப்புடையது. **அவ்வமைப்பு ஓராண்டில் ரூ.3,200 கோடிக்குக் கொள்முதல் செய்து வருகிறது.**

தென் **மாநிலங்களில்,** குறிப்பாக தமிழ்நாட்டில் **செய்யப்படும் கொள் முதலின் அளவு தொடர்ந்து மிகவும்** குறைவாக **இருந்து வருகிறது. இக்** குறைவான பங்கு குறித்து தொடர்ந்து கவலை கொண்ட மாநில அரசு, இந்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்றது. மாநில அரசின் முறையீடுகளின் விளைவாகப் பொருள் வழங்கல்-விற்பனை தலைமை இயக்குநரின் மண்டல அலுவலகம் சென்னையில் தற்போது திறக்கப்பட்டுள்ளது. அவ்வலுவலகம் பதிவு செய்தல், ஒப்பந்தப்புள்ளிகள் வெளியிடுதல் ஆகிய அதிகாரங்கள் கொண்டதாகச் செயல்பட்டுவருகிறது.

இது சம்பந்தமான நடவடிக்கை களை மேலும் விரைவுப்படுத்த 26.2.1991-ஆம் ஆண்டு தொழில் துறைச் செயலாளர் அவர்களால் ஒரு கூட்டம் நடத்தப்பட்டது. அதில் இயக்குநர், பொருள் வழங்கல்-விற்பனைத் தலைமை இயக்ககம், தலைவர்-நிர்வாக இயக்குநர், சிறு தொழில் வளர்ச்சிக் கழகம், ஆணையர்- இயக்குநர், தொழில்-வணிகத்துறை-சிறு தொழில் சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். மேலே குறிப்பிட்ட கொள்முதலில் தமிழ்நாட்டில் குறைவான பங்கிற்கான காரணங்கள் நுணுக்கமாக விவாதிக்கப்பட்டன. விவாதத்திற்குப் பின் பின்வரும் முக்கியமான முடிவுகள் எடுக்கப் பட்டுள்ளன:

★ பொருள் வழங்கல்-விற்பனை தலைமை இயக்ககத்தின் அமைப்பு மற்றும் வழிமுறைகளைச் சரிவர தொழில் முனைவோர்கள் அறியாமலிருப்பது ஒரு முக்கியக் காரணமாகக் கருதப்பட்டது. எனவே, தொழில் அதிபர்களிடையே இது பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அனைத்து மாவட்டத் தலைமையிடங்களில் கருத்தரங்குகள் தொடர்ந்து நடத்துவது என்று முடிவுசெய்யப்பட்டது. **இக் கருத்தரங்குகளை நடத்துவதில் தமிழ் நாடு சிறு தொழில் சங்கங்களின் இணையம் முக்கிய இடம் வகிக்க இசைவு தெரிவித்துள்ளது. இதற்குத் தேவையான பாடத் திட்டங்களும், கருத்தரங்கு நடத்த வழி முறைகளும் வகுக்கப்படும். சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் இக்கருத்தரங்குகளை நடத்த இணைந்து செயல் படும். இனிவரும் மூன்று மாதங்களில் எல்லா மாவட்டங்களும்** இக்கருத்தரங்குகளில் பங்கேற்க வாய்ப்பளிக்கப்படும்.

★ பொருள் வழங்கல்-விற்பனை தலைமை இயக்குநரின் ஒப்பந்தப் புள்ளிகளில் சிறு தொழில் பிரிவுகளுக்காகச் சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் பங்கு பெற்றால் கொள்முதல் செய்யப்படும் தொழிற் பிரிவுகளை ஆய்வு நடத்துவது தவிர்க்கப்படுகின்றது.

> **கல்வியும், சுயமரியாதை எண்ணமும், பகுத்தறிவுத் தன்மையுமே தாழ்ந்து கிடக்கும் மக்களை உயர்த்தும்.**
>
> **— தந்தை பெரியார்**

★ வெளியிடப்படும் பல்வேறு ஒப்பந்தப் புள்ளிகளில் குறிப்பிடப் படும் வரைவு படங்களும் அளவுக் குறிப்புகளும் கிடைக்கப் பெறாமை தொழிலதிபர்களுக்குள்ள மற்றொரு பிரச்னையாகும். பொருள் வழங்கல்-விற்பனை தலைமை இயக்குநரின் மண்டல அலுவலர் மேலே குறிப்பிட்ட வரைபடங்கள் கிடைக்க ஏற்பாடு செய்வதாகக் குறிப்பிட்டுள்ளார். **மேலும் சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் இத்தகைய வரைபடங்களையும், அளவுக் குறிப்புகளையும் பெற்று தேவைப்படுவோருக்குக் கிடைக்க வழிவகை செய்ய இசைவு தந்துள்ளது.**

★ பொருள் வழங்கல்-விற்பனைத் தலைமை இயக்ககம்- பாதுகாப்புத் துறை ஆகியவை வெளியிடும் ஒப்பந்தப் புள்ளிகளின் விவரங்களைப் பெற்று தெரிவிப்பதில் டெல்லியில் உள்ள தனது அலுவலகத்தை முடுக்கிவிட்டு செயல்படுத்துவதற்குச் சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் ஒப்புக் கொண்டுள்ளது.

★ பொருள் வழங்கல்-விற்பனை தலைமை இயக்ககம் தற்போது கொள்முதல் செய்யும் பொருள்கள் **குறித்து விரிவாக ஆய்வு நடத்துவது, பொருள்களை விற்பனை செய்யும் திறனுள்ள தொழில் அலகுகளையும் கண்டறிவது என்று முடிவு செய்யப் பட்டது. அத்தகைய தொழில் அலகு களை, பொருள் வழங்கல்-விற்பனைத் தலைமை இயக்ககத்தில் பதிவு** செய்து கொள்ள ஊக்குவிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

★ ஐ.எஸ்.ஐ. தரச் சான்றிதழைப் பெறுவதற்குத் தொழில் அதிபர்களை ஊக்குவிப்பதற்கும், அச் சான்றிதழ் பெறுவதற்கான செலவில் ஒரு பகுதியை வழங்கவும் தொழில் ஆணையர்- தொழில் வணிக இயக்குநர் ஒப்புக் கொண்டுள்ளார்.

★ பொருள் வழங்கல்-விற்பனைத் தலைமை இயக்குநரின் மண்டல அலுவலகம் ஒப்பந்தப் புள்ளிகளின் விவரங்களைச் சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் தமிழ்நாடு சிறு தொழில் சங்கங்கள், பதிவு செய்துள்ள தொழிலதிபர்களுக்குத் தொடர்ந்து வழங்கி வரும்.

★ தொழில் பிரிவுகளுக்கும், பொருள் வழங்கல் விற்பனைத் தலைமை இயக்ககத்திற்கும் இடையே அனைத்து நிலைகளிலும் ஏற்படும் பிரச்னைகளை விரைவில் தீர்த்து வைக்கும் முகவராகச் சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் செயல்பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது.

இத்தகைய நடவடிக்கைகளால் பொருள் வழங்கல்-விற்பனைத் **தலைமை இயக்ககத்தின் கொள் முதலில் தமிழ்நாட்டின் பங்கு நாளடைவில் மேலும் அதிகரிக்கும் என்று நம்பப்படுகிறது.**

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்ப
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568936, 568937

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

★ பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
★ பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
★ பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
★ லுங்கிகள், துவாலைகள் வேட்டிகள்.
★ படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.






தமிழரசு
பதிவு எண் M 8676
Licence No. TN/MS(C)/PP-23



காவிரியாற்றின் குறுக்கே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்
கரிகாற்சோழன் அமைத்த கல்லணை!





தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2022
பங்குனித் திங்கள் - 18
மலர்:21 1-4-1991 இதழ்:19



*கல்லணையில் நடுவர் மன்றக் குழுவினரை ஆளுநரின் ஆலோசகா திரு. வி.இராமச்சந்திரன் தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. விவேக் ஹரிநாராயண் வரவேற்றனர்.*



விதிக்க வேண்டும்; ஆறுகளைத் தேசிய மயமாக்க வேண்டும்''.

முன்னாள் அமைச்சர் அன்பில் தர்மலிங்கம், பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள், விவசாயிகள் சங்கத் தலைவர்கள் பலரும் கோரிக்கை மனுக்களைப் பார்வையிட வந்திருந்த குழுவினரிடம் அளித்தனர்.

இந்தக் கூட்டத்தில் லால்குடியைச் சேர்ந்த விவசாயத் தொழிலாளி ஒருவர் தண்ணீர் வராமல் பிழைப்புத் தேடி கருநாடகத்திற்குச் செல்ல வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகி இருப்பதை உணர்ச்சி பொங்க எடுத்துரைத்தார். அவருடைய பேச்சு அந்தப் பகுதி விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை அப்படியே படம் பிடித்துக் காட்டியது மட்டுமல்ல; கேட்டவர்களின் வழிகளிலே கண்ணீர்க் கசிவை ஏற்படுத்தியது.

வழிநெடுகிலும் எங்கு நோக்கினும் நடுவர் மன்றத்தினர் உணர்ந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடு-

GIVE CAUVERY WATER
SAVE TAMIL NADU
CAUVERY OUR LIFE LINE
WE REQUEST JUSTICE
GIVE WATER — SAVE FARMERS

— என்று எழுதப்பட்ட பதாகைகள் காணப்பட்டன. வழியில் கூடியிருந்த தாய்மார்கள் காலிப் பானைகளை ஏந்தி, கவலைமிகு தோற்றத்தோடு காவிரியில் நீரில்லை என்பதை உணர்த்தியிருந்தனர். பல இடங்களில் சாலையின் இருமருங்கிலும் காலிக் குடங்களும் மண்பானைகளும் கவிழ்த்து வைக்கப்பட்டிருந்தன.

மறுநாள். மார்ச்சு 25.

நடுவர் குழுவினர் திருச்சிராப் பள்ளியிலிருந்து வழக்கம் போலக் காலையில் புறப்பட்டனர்.

திருச்சி மாவட்ட எல்லை முடிவதற்கு முன்பே மனிதச் சங்கிலி தொடங்கிவிட்டது. வழியெல்லாம், ஆண்களும், பெண்களும், சிறார்களும், பெரியோரும், முகத்திரையிட்டுக் கொள்ளும் முஸ்லிம் பெண்களும், விவசாயத் தொழிலாளர்களும், மாணவரும், மாணவியரும், பல்வேறு பணிகளை மேற்கொண்டிருப்போரும் என்று எல்லோரும் எப்பக்கம் நோக்கினும் மனிதச் சங்கிலிதான்!

கல்லணைக்குச் சென்ற நடுவர் குழுவை ஆளுநரின் ஆலோசகர் திரு. வி.இராமச்சந்திரன் அவர்களும் தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. விவேக் ஹரிநாராயண் அவர்களும் வரவேற்றனர்.

கல்லணைப் பகுதிக்கு நடுவர் குழு வந்தது, காவிரியிலிருந்து 'உள்ளாறு' என்று ஓர் ஆறு பிரியும். அதன் தலைக்கட்டில்தான் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கரிகாற் பெருவளத்தான் கல்லணையைக் கட்டினான். உள்ளாறு கொள்ளிடத்தில் சேரும் ஆறு ஆகும்.

கல்லணை, திருச்சி நகரத்திலிருந்து 16 கி.மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

*தஞ்சை மாவட்டத்தில் காவிரியும் வெண்ணாறும் 36 பிரிவுகளாக பிரிந்து செல்வதை விளக்கும் வரைப்படத்தை நடுவர் குழுவினர் பார்வையிட்டனர்.*





# காவிரி இல்லையேல் தஞ்சை இல்லை; தஞ்சை இல்லையேல் தமிழகம் இல்லை!

இந்த அணைக்கட்டில் 1804, 1830, 1840, 1886 ஆகிய ஆண்டுகளில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 1889-இல் மதகுகள் அமைக்கப்பட்டன.

1925-34 ஆண்டுகளில் மேட்டூர் அணை கட்டப்பட்டபொழுதும், கல்லணைக் கால்வாய் அமைக்கப் பட்டபொழுதும் தனியாக 'ரெகுலேட்டர்கள்' அமைக்கப்பட்டன. அவற்றையெல்லாம் பார்த்துவிட்டு, அங்கிருந்து, நடுவர் குழுவினர் புறப்பட்டனர்; கண்ணுக்கெட்டிய தூரம்வரை வழிநெடுகிலும் இருபுறமும் மனிதச் சங்கிலிகள்தான்! சாலை நெடுகிலும் திரண்டிருந்த மக்கள் முகத்தில் தங்களுக்கு நீதி கிடைக்கும் என்ற தன்னம்பிக்கை ஒளி வீசியது.

''நீர் வேண்டும்! நீதி வேண்டும்''...
''காவிரி இல்லையேல்
தஞ்சை இல்லை!
தஞ்சை இல்லையேல்
தமிழகம் இல்லை''...
"No Cauvery
No Delta"

- என்று எழுதப்பட்ட தட்டிகளைக் கைகளில் தாங்கிய வண்ணம் இளம் பிள்ளைகள் எல்லாம்கூட நின்றிருந்தனர்!

திருக்காட்டுப் பள்ளியில் விவசாயிகள் நடுவர் குழுவினரைச் சந்தித்தனர்; திருக்காட்டுப்பள்ளி ஊர் முழுவதுமே மக்கள் கூட்டத்தில் நிரம்பி வழிந்தது!

காவிரியாற்றிலும், பிரிவான வெண்ணாற்றிலும் பிரியும் ஆறுகளைச் சேர்த்து - மொத்தம் 36 ஆறுகள் தஞ்சை மாவட்டத்தில் ஓடுகின்றன. இந்த ஆறுகளில் பெரும்பாலானவை பல நூறு ஆண்டுகளாகப் பாசனத்துக்குப் பயன் பட்டவைகளாகும்.

இந்த ஆறுகள் என்று தோன்றின என்று எவராலும் உறுதியாகக் கூற முடியாது. பல ஆயிரமாண்டுகளாகப் பாசனத்துக்குப் பயன் பட்டவை வறண்டு கிடப்பதால், தங்களுக்கு ஏற்பட்ட இருண்ட வாழ்வை எண்ணிக் கண்ணீர் வடிக்கும் விவசாயப் பெருங்குடி மக்கள் - தங்களுக்கு நீதி வேண்டும் - காவிரியில் நீர்வர வேண்டும் என்பதைத் திருக்காட்டுப்பள்ளியில் உருக்கமாகவும் விளக்கமாகவும் எடுத்துரைத்தனர்.

விவசாயிகள் சந்திப்பின்போதெல்லாம் அந்த நிகழ்ச்சிகளுக்குத் தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு விவேக் ஹரிநாராயண் தலைமை வகித்தார்.

ஒவ்வொரு நிகழ்ச்சியிலும், திரு. விவேக் ஹரிநாராயண் அவர்களின் பேச்சு உள்ளத்தைத் தொடுவதாக அமைந்திருந்தது. விவசாய மக்களுக்குப் புரிய வேண்டும் என்பதற்காகத் தமிழிலும் - நடுவர்



*புனல் பொங்கி ஒடிவந்த பொன்னி மணற் காடாய்க் கிடக்கும் கொடுமை!*



# புகழ் மணக்கும் பொன்னி

'தண்ணீருங் காவிரியே!
தார்வேந்தன் சோழனே!
மண்ணாவதும் சோழ மண்டலமே!''

- என்று நம் முன்னோர்கள் பாடினார்கள்.

காவிரி நீரால் ஈரமாவதால் சோழ வளநாடு வளமிகுந்து இருப்பதைச் 'சோழ வளநாடு சோறுடைத்து' என்று புகழ்ந்துரைத்தார்கள்.

ஆனால் இன்றைய சூழ்நிலை என்ன?

காவிரி ஆற்றில் போதிய நீர் வரத்து இல்லாததால் அந்த ஆறு பாய்ந்து பாசனவசதி தந்த திருச்சி, தஞ்சாவூர் மாவட்டங்களின் வளமும் வாழ்வும் ஒரு கேள்விக்குறியாகி விட்டன.

தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமாகத் திகழ்கின்ற திருச்சி, தஞ்சாவூர் மாவட்டங்களுக்குத் தொன்றுதொட்டுப் பயன்பட்டு வருகிற வழக்கப்படியான பாசன நலன்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள நிலையைக் காண்கிறோம்.

இந்த நிலைமை மாறவேண்டும். மாறுவதற்காகக் காவிரி நதிநீர்ப் பங்கீட்டு நடுவர் மன்றத்தின் தீர்ப்பினை எதிர்நோக்கியிருக்கிறோம்.



**க. கணேசன்** இ.ஆ.ப.,
இயக்குநர்
செய்தி-மக்கள் தொடர்புத் துறை

**காவிரியின் கீழ் பாசனப் பாங்கு:**

தமிழ்நாட்டில் கயவாய்ப் பகுதி தான் (டெல்டா பகுதி) காவிரி பாசனப் பயனைப் பெரிதும் பெறுகிறது. பயிர் விளைவுக்குக் கயவாய்ப் பகுதி வாய்ப்பாக அமைந்துள்ளதால், பல நூற்றாண்டுகளில் இப்பாசன அமைப்பு முறை வளர்ச்சி பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் கயவாய்ப் பகுதி மேடு பள்ளமின்றிச் சமநிலையாக உள்ளது; பாசனம் பெறக்கூடிய நிலப்பரப்பும் அதிகமாக உள்ளது; இயற்கையாய் அமைந்த கிளைக் கால்வாய்கள் பல இருக்கின்றன. சரிவு அதிகமாக இராததால், இக்கால்வாய்களின் மூலம் பயனடையும் பரப்பளவு மிகுதி. ஆற்றோட்டத்தில் வழிந்துவரும் வண்டலெல்லாம் கயவாய்ப் பகுதியிலேயே படிகிறது. உலகிலே ஆற்றுப் பாசன அமைப்பு எதிலும் இயல்பாக உள்ள நிலையே இது. நைல் நதியானாலும், மிஸிஸிபியானாலும், கோதாவரியானாலும், சிந்து நதியானாலும், கங்கையானாலும் நிலைமை இதுதான். ஆற்றின் தொடக்கப் பகுதிகளில் அல்லாமல், கயவாய்ப் பகுதிகளில் பாசன வசதி பெருகும் இயல்புக்கு இதுவே காரணம். இம்மாநிலத்திலே சோழர்களின் மகோன்னத காலத்தில் தமிழர்கள் மேற்கொண்ட ஆர்வம் மிக்க முயற்சி, அவர்களின் மேதகு மேதைமை, கடும் வெயிலிலும் அயராது உழைக்கும் ஆற்றல் ஆகியவை இம்மாநிலத்தின் பாசன ஏற்பாட்டினை வளர்ப்பதற்குப் பெரிதும் காரணமென்றாலும், இவ்வாறே மைசூர் மாநிலத்தில் பெரிய அளவில் பாசனப் பரப்பளவைப் பெருக்குவதற்கு அம்மாநில இயற்கை அமைப்பும் இயல்பாய் அமைந்துள்ள இடர்ப்பாடுகளும் முட்டுக்கட்டையாக விளங்கி வந்துள்ளதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

காவிரி தரும் வளம் அதன் துணை ஆற்றுகளின் உதவியினாலும் பெருகின. அதன் விவரம் வருமாறு:

கருநாடகத்தில் காவிரியுடன் வந்து சேரும் முக்கியத் துணை ஆறுகள் 1. கபினி, 2. ஏமாவதி, 3. இலட்சுமண தீர்த்தா 4. லோக பவானி, 5. சிம்சா, 6. அரக்காவதி முதலியனவாகும்.

தமிழகத்தில் கீழ்க்கண்ட முக்கியத் துணை ஆறுகள் காவிரியுடன் வந்து கலக்கின்றன; அவை- 1. பாலாறு, 2. சந்நத் குமாரநதி, 3. பவானி, 4 அமராவதி, 5. நொய்யல் ஆகியவைகளாகும்.

ஆக, 11 முக்கியத் துணை ஆறுகள் காவிரியுடன் வந்து சேருகின்றன. தஞ்சை மாவட்டத்தில் வந்ததும் காவிரி பிரிந்து, 36 கிளை ஆறுகளாக மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்குச் செல்லுவதால், வளங்கொழிக்கும் நஞ்சைக்குப் பஞ்சமில்லாததாகத் தஞ்சைத் தரணி விளங்குகிறது.

**காவிரியில் பிரியும் கிளை நதிகள்:**

1. அரசலாறு, 2. குடமுருட்டி, 3. நாட்டாறு, 4. கீர்த்தி மன்னியாறு, 5. நூலாறு, 6. வஞ்சியாறு, 7. நந்தலாறு, 8. வீரசோழன், 9. மஞ்சலாறு, 10. மகிழவையாறு, 11. மன்னியாறு, 12. புதுமன்னியாறு, 13. பழவாறு, 14. பெத்தரசனாறு, 15. முடிகொண்டானாறு, 16. புத்தாறு, 17. வளம்பாறு, 18. திருமலைராசன், 19. குமுக்கி மன்னியாறு.

**வெண்ணாற்றின் கிளைகள்:**

1. வெண்ணாறு, 2. வெட்டாறு, 3. கோரையாறு, 4. வடவாறு, 5. பாமணியாறு, 6. முல்லையாறு, 7. அடப்பாறு, 8. அய்யனாறு, 9. அரிச்சந்திர நதி, 10. வெள்ளையாறு, 11. பாண்டவயாறு, 12. சுள்ளானாறு, 13. ஓடம்போக்கியாறு, 14. காட்டாறு, 15. கடுவையாறு.

இதில் காவிரியின் கிளைகள் மூலம் 4,93,837 ஏக்கர் நிலமும், வெண்ணாற்றின் கிளைகள் மூலம் 4,65,307 ஏக்கர் நிலமும் பாசன மடைகின்றன.

காவிரி ஆற்றின் முன் கட்டப்பட்டவை இரண்டு நீர்த்தேக்கங்கள் ஆகும். முதலாவது நீர்த்தேக்கமான கிருஷ்ணராஜ சாகர் அணை கர்நாடக மாநிலத்தில் உள்ளது. அதன் நீர் கொள்ளளவு 43,934 மில்லியன் கன அடி. அதிகபட்ச நீர்மட்டம் 124 அடி. அதிகபட்ச நீர் தேங்கக் கூடிய பரப்பளவு 49.90 சதுர மைல். அதிக அளவு தண்ணீர் இருக்கும் போது நீர்ப்பகுதியின் நீளம் மட்டும் 25 மைல்!

இரண்டாவது, மேட்டூர் அணை. 1925-1934-இல் கட்டப்பட்டது. நீர் கொள்ளளவு 9,347 கோடி கன அடி. பரப்பளவு 59.25 சதுர மைல். அதிக அளவு தண்ணீர் தேங்கியிருக்கும்பொழுது நீர்ப் பகுதியின் நீளம் 33 மைல்.

மேலே கூறப்பட்ட இரண்டு அணைகள் தவிர, காவிரி ஆற்றில் 5 அணைக்கட்டுகளும் உள்ளன. அணையில் அல்லது நீர்த்தேக்கத்தில் தண்ணீர் தேக்கி வைக்கப்படுகிறது. இந்த அணைக்கட்டுகள் வரும் தண்ணீரை நிறுத்திப் பல்வேறு பகுதிகளுக்குக் கால்வாய் மூலமாக நீரைப் பிரித்து வழங்கிடப் பயன்படுத்தப் படுவனவாகும். அந்த 5 அணைக் கட்டுகளின் விவரம் பின்வருமாறு:

1. சேடர்பாளையம் அணைக்கட்டு
2. கட்டளை அணைக்கட்டு
3. மேல் அணை
4. கல்லணை
5. கீழ் அணைக்கட்டு



கரிகாலன் கட்டிய கல்லணை இதில் வரலாற்றுப் புகழ் வாய்ந்தது. இரண்டாம் நூற்றாண்டில் சோழப் பேரரசனாக விளங்கிய கரிகாலனால் கட்டப்பட்டது இந்த அணை. இலங்கையிலிருந்து கொண்டு வரப்பட்ட கைதிகள் மூலம் - கரிகாலனால் இவ்வணை கட்டப்பட்டதாக வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். கல், களிமண் இரண்டும் சேர்த்துக் கட்டப்பட்டதால்தான் 'கல்லணை' என்று பெயர் பெற்றது. பிற்காலத்தில் இந்த அணையின் மீது பாலமும் புதிய வகை மதகுகளும் ஆங்கில அரசு இருந்தபோது அமைக்கப்பட்டன.

1800-இல் இந்த அணையைத் தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்களிடமிருந்து ஆங்கில ஆட்சியினர் பெற்றனர். 1804-இல் அணையின்மீது தண்ணீரை ஏற்றிப் பாசன வசதி கொடுப்பதற்காகக் குத்துக் கற்கலைப் பாவினார்கள். 1804-இல் இப்போது காணப்படுகிற பாலம் அமைக்கப்பட்டது.

1886-இல், தானே வெள்ளக் காலத்தில் கீழே விழும் இரும்புப் பலகைகள் பொருத்தப்பட்டன.

1899-இல், 5 அடி உயரமுள்ள திருகுப் பலகைகள் அதில் பொருத்தப் பட்டன.

1910-இல் மணற் போக்கிகள் கட்டப்பட்டுக் கல்லணைக்கு மேலே வரும் மணலைக் கொள்ளிடத்தில் தள்ள ஏற்பாடு செய்யப்பட்டது.

1924-இல் அதிக தண்ணீர் வரத்தைக் கட்டுப்படுத்தி கல்லணைக்குச் சேதம் வராமலிருக்கக் கல்லணைக்கு மேலே - இடது கரையில் சுமார் ஒரு மைல் நீளமுள்ள படுக்கை அணை ஒன்றும் கட்டப்பட்டது.

1925-34-இல் கல்லணைக் கால்வாய் வெட்டப்பட்டது.

பாசன வசதிக்காக ஏறத்தாழ 30,000 கால்வாய்கள் உள்ளன. கால்வாய்களின் நீளம் மட்டும் ஏறத்தாழ 25,000 மைல்கள். இந்தக் கால்வாய்களின் மொத்த தூரம் உலகத்தை ஒரு சுற்று சுற்றி வருவதற்குச் சமமாகும்!

இந்தச் செய்திகளை எல்லாம் குறிப்பிடுவது - வளமான வாழ்வுக்கு அடித்தளமாக விளங்கிடும் பொன்னி, நம் வாழ்வில் புகழ்மணக்கப் பெருதவியாக இருந்தநாள் உண்டு என்பதைத் தெளிவுபடுத்தவே

அந்த நாளை மீண்டும் எதிர் பார்ப்போம்.

N70TA N91-21-13-39-



*சென்ற இடம் எங்கும் காவிரியைப் பற்றிய விவரங்களையும் தஞ்சை டெல்டா பற்றிய விவரங்களையும் கூர்ந்து கவனித்தனர் நடுவர் குழுவினர்.*

மன்றத்தினருக்குப் புரிய வேண்டும் என்பதற்காக ஆங்கிலத்திலும் அவர் தஞ்சைத் தரணியின் நிலையை மிகத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டினார்.

திருக்காட்டுப்பள்ளியில், ஊரே மனிதச் சுவர் எழுப்பியதுபோல வீதிகள் காட்சி தந்தன. தொடர்ந்து திருவையாறு கண்டியூர் என்று சுந்தர பெருமாள் கோவில் புறச் சாலை வழியாக நடுவர் குழுவினர் செல்லும் பாதை எங்குமே மனிதச் சங்கிலி. இந்தச் சங்கிலித் தொடர் தொடர்ந்து நீண்டு கொண்டே இருந்தது!

சுந்தரபெருமாள் கோவிலில் விவசாயிகள் சந்திப்பு. இந்தக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் சொன்னார்:

''தஞ்சாவூர் மாவட்டத்தின் மக்கள்தொகை 45 இலட்சம் ஆகும். அதில் பத்து இலட்சம் பேர் ஆதி திராவிடர்கள், விவசாயக் கூலியாக இருப்பவர்கள். நிலமில்லாத அந்தத் தொழிலாளர்கள் காவிரியில் தண்ணீர் இல்லாததினால் வேலையில்லாமல் படும்வேதனைகளைச் சொல்லி முடியாது.!''

இக்கூட்டத்தில் திரு ஜி.ரங்கசாமி மூப்பனார் நடுவர்மன்றத்தில் ஒரு கோரிக்கை மனுவைக்கொடுத்தார். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.சிங்கார வேலுவும் காவிரி நீர் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி பேசினார்.

அங்கிருந்து நடுவர் குழு சென்ற வழி எல்லாம் மனிதச் சங்கிலித் தொடர்-தொடர்ந்தது.

வழிநெடுகிலும் கொளுத்தும் வெயில்.காலணி அணியாத சிறார்கள் பெரியோர்கள் கால் சுடுவதால் தரையில் தழைகளைப் போட்டு அதன் மீது நின்றனர். அதுவும் சுட்டதால் அந்தத் தழைகளின் மீது நீரை

(தொடர்ச்சி 41-ஆம் பக்கம்)

*சென்னைக்கு 23.3.91 அன்று வந்த நடுவர் குழுவினரை ஆளுநரின் ஆலோசகர் திரு. வி.இராமச்சந்திரன் தலைமைச் செயலாளர் திரு. டி.வி.அந்தோணி,' பொதுப்பணித்துறைச் செயலாளர் திரு. முருகராஜ் ஆகியோர் வரவேற்றனர்.*





## காவிரி நதிநீர்ப் பங்கீடு: அனைத்துக் கட்சிகள் கூட்டம்

காவிரி நதிநீர்ப் பங்கீடு நடுவர் மன்றம் தமிழ் நாட்டிற்கு வருகை தருவதையொட்டி, மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் அனைத்துக் கட்சிக் கூட்டமொன்றை, 22.3.91 அன்று தலைமைச் செயலகத்தில் கூட்டினார்.

அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் வருமாறு:

மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங்
ஆளுநர் அவர்களின் ஆலோசகர்கள்
திரு. வி. கார்த்திகேயன்
திரு. வி. இராமச்சந்திரன்
தலைமைச் செயலாளர்
திரு. டி.வி. அந்தோணி, இ.ஆ.ப.,
பொதுப்பணித்துறைச் செயலர்
திரு. டி. முருகராஜ், இ.ஆ.ப.,
தொழில் நுட்பக் குழுத் தலைவர்
திரு. ஏ. மோகனக்கிருஷ்ணன்

கூட்டத்தில் கலந்து கொண்ட தேசிய கட்சிகள்:

திரு. விஜயராகவலு
(பாரதிய ஜனதா)
திரு. பி. மாணிக்கம்
(இந்தியக் கம்யூனிஸ்ட்)
திரு. என். சங்கரய்யா
(மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்)
திரு. வாழப்பாடி கே. இராமமூர்த்தி
(இந்திய தேசிய காங்கிரஸ்)
திரு. தஞ்சை ஏ. ராமமூர்த்தி
(ஜனதா தளம்)
திரு. ஏ. வரதராஜன்
திரு. இ. வேலுசாமி
(ஜனதா கட்சி)
திரு. பி.சி. பழனியாண்டி
(லோக்தளம்)
திரு. பி. சாரதி
காங்கிரஸ் ( எஸ் )

கூட்டத்தில் கலந்து கொண்ட மாநிலக் கட்சிகள்:

திரு. இரா. நெடுஞ்செழியன்
(அ.இ.அ.தி.மு.க.)
திரு. துரைமுருகன்
(தி.மு.க.)
திரு. ஏ. தீரன்
(பாட்டாளி மக்கள் கட்சி)

# நீர் வேண்டும்! நீதி வேண்டும்!

என்று

# திரண்டெழுந்தது தஞ்சைத் தரணி

மாமல்லன்

**மா**ர்ச்சுத் திங்கள் 24-ஆம் நாள் காவிரி நீர்ப் பங்கீடு நடுவர் மன்றத்தைச் சேர்ந்த நீதிபதிகள் சேலம் மேட்டூர் அணையையும் வறண்டு கிடக்கும் காவிரியையும் பார்வையிட்டனர்.

இந்த நடுவர் குழுவின் தலைவரான நீதிபதி சிட்டோஷ் முகர்ஜி, நீதிபதி எஸ்.டி.அகர்வால், நீதிபதி என்.எஸ்.ராவ் ஆகியோரும் மதிப்பீட்டாளராகத் திரு ஜே.ஆர். மல்ஹோத்ராவும், திரு குல்ஷான் ராய், திரு கோவிந்த்சிங் ஆகியோரும் நடுவர் மன்றச் சார்பில் பார்வையிட வந்திருந்தனர்.

கருநாடக மாநிலத்தின் சார்பில் பொறியாளர்கள், தொழில் நுட்ப வல்லுநர்கள், அதிகாரிகள் பத்திரிகையாளர்கள் உட்படப் பத்தொன்பது பேர்களும் கேரள மாநிலத்தைச் சேர்ந்த எட்டுப்பேரும் புதுவை மாநிலச் சார்பில் ஒருவரும் தமிழ்நாடு அரசு சார்பில் காவிரி நீர்ப் பங்கீட்டுக்கான நடுவர் மன்றத்தில் வழக்காடும் வழக்கறிஞர்கள் திரு எம்.எஸ்.கணேஷ், திரு வி.கிருஷ்ண மூர்த்தி ஆகியோரும் தமிழ்நாட்டின் சார்பில், பொதுப்பணித்துறைச் செயலாளர் காவிரி நீர்ப்பங்கீடு நடுவர் மன்றத் தனிக்குழுவினர், தொழில்நுட்ப வல்லுநர்கள், பொதுப் பணித்துறை அலுவலர்கள், செய்தியாளர்கள் ஆகியவர்களும் இச் சுற்றுப்பயணத்தில் கலந்து கொண்டனர்.

கடந்த பிப்ரவரித் 'திங்கள் 18-ஆம் தேதி முதல் 25-ஆம் தேதி வரை நடுவர் மன்றத்தைச் சேர்ந்த நீதிபதிகள், கருநாடக மாநிலத்தில் காவிரியால் பாசனம் பெறும் பகுதிகளைப் பார்வையிட்டனர்.

இப்பொழுது தமிழ்நாட்டில் காவிரியாறும் அதன் பாசனப் பகுதிகளையும்- தமிழ்நாட்டுக்குக் காவிரியாற்றிலிருந்த உரிமை எப்படித் தடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் இந்தப் பயணத்தின் மூலம் நடுவர் மன்றம் அறிந்து கொள்ளும் நல்ல வாய்ப்பு ஏற்பட்டிருந்தது.

தமிழ்நாட்டுக்கும் மைசூர் அரசுக்கும் 1924-ஆம் ஆண்டு காவிரி ஆற்றுநீர் தொடர்பான ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு, கட்டத் தொடங்கி 1936-இல் உருவான மேட்டூர் அணையிலிருந்து இந்தப் பயணம் தொடங்கியது.

**காவிரி நதிநீர்ப் பங்கீடு நடுவர் மன்றத்தைச் சேர்ந்தவர்கள், தமிழ்நாட்டில் காவிரியாற்றால் பாசனம் பெறும் பகுதிகளை மார்ச்சு 24-ஆம் நாள் முதல் 28-ஆம் நாள் வரை சுற்றிப் பார்த்தனர். வற்றிக் கிடக்கும் மேட்டூர் அணையிலிருந்து மேல் அணைக்கட்டு, கல்லணைப் பகுதி, திருக்காட்டுப் பள்ளி சுந்தர பெருமாள் கோவில், ஆடுதுறை, சீர்காழி, நாகப்பட்டினம், திருவாரூர், திருத்துறைப்பூண்டி, பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் ஆகிய ஊர்களில் விவசாயிகளைச் சந்தித்து அவர்களின் கோரிக்கைகளைக் கேட்டறிந்தனர். அணைக்கரை, சீர்காழி, பூம்புகார், காரைக்கால் பகுதிகளையும் பார்வையிட்டனர் இந்தக் குழுவினர். தஞ்சை மக்கள், நடுவர் மன்றக் குழுவினர் சென்ற வழி நெடுகிலும்- ஏறத்தாழ 520 கிலோ மீட்டர் தொலைவுக்கு தங்கள் கோரிக்கையை வலியுறுத்த- மனிதச் சங்கிலியாக அல்ல; மனிதச் சுவராக அமைத்து- இளஞ்சிறார்கள்- பெண்கள், ஆடவர், முதியோர் என்று அரசியல் கடந்து, சமயம் கடந்து இலட்சோபலட்சம் பேர் பங்கேற்று காவிரியில் நீர் வேண்டும் என்ற மனிதாபிமான பிரச்சினையை வலியுறுத்திய காட்சிகள், நெஞ்சை நெக்குருக வைத்த நிகழ்ச்சிகளாகும் அந்த விவரங்களை விளக்குகிறது- இச் கட்டுரை.**



வற்றிய நிலையில், சிறிதளவு நீர் தேங்கிக் காணப்படும் மேட்டூர் அணையின் பகுதிகள் பாறை பாறையாக இருந்தன!

1936-லிருந்து பாசன வசதிகளில் அமைந்திருந்த முறை அணைத்தும் இன்று சீர்குலைந்து போய் இருந்தன.

1974-ஆம் ஆண்டுக்குப் பிறகு ஓராண்டில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் மட்டும் அந்த ஆண்டில் மின்விசை உற்பத்தி பெருகியது. மேட்டூர் புனல்மின் நிலையத்தின் உற்பத்தியும் பெருமளவு குறைந்தது என்பதும், நடுவர்மன்றத்திற்கு எடுத்துக் காட்டப்பட்டது.

கருநாடக மாநிலத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் குறுக்கிட்டுப் பல கேள்விகள் எழுப்பினர். ''தாங்கள் இந்த அளவு மின்சார உற்பத்தி செய்யவில்லை'' என்றும் தங்கள் இயலாமையைச் சொன்னார்களே தவிர, தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் தர வேண்டும் என்ற உண்மையில் உள்ள நியாயத்தின் பக்கம் கேளாக் காதினராய் இருந்தனர். பல இடங்களில் அவர்கள் எழுப்பிய ஐயப்பாடுகள், வெறுப்பின் வெளிப்பாடாகவே இருந்தன.

மேட்டூரில் விவசாயிகள் நடுவர் குழு சந்திப்பு நடைபெற்றது. மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சுர்ஜித் சவுத்திரி, விவசாயிகள் சங்கத் தலைவர்கள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் காவிரியில் 1974 முதல் தண்ணீர் வராததினால் பாசன வசதி பெறாமல் சாகுபடி நடைபெறவில்லை என்பதை விளக்கினார்கள்.

மேட்டூர் அணை, புனல் மின் நிலையம் ஆகியவற்றைப் பார்த்த பின்னர் பள்ளிப்பாளையம் வழியாக மேல் அணைக்கட்டுப் பகுதிக்கு நடுவர் குழு சென்றது.

வழிநெடுகிலும் வெறும் மணல் வெளியாக வறண்டு கிடக்கும் காவிரியைக் கண்டனர்!

காவிரி டெல்டா தொடங்குமிடம் என்று சொல்லப்படும் மேல் அணைக்கட்டுப் பகுதிக்கு நடுவர் குழு சென்றது. இந்தப் பகுதி, காவிரிக்கு மேற்கே 16 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. காவிரியிலிருந்து இங்கே வடக்கே பிரியும் கிளை ஆறு 'கொள்ளிடம்' ஆகும்.

மேல் அணைக்கட்டு 1834-ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. கொள்ளிடம் பிரியுமிடத்தில் இந்த அணைக்கட்டு அமைக்கப்பட்டது.

காவிரியாற்றில் வெள்ளம் மிகுதல் காரணமாகக் கரைகளில் உடைப்பு ஏற்படுவதைத் தடுக்கக் காவிரி மீது 1845-ஆம் ஆண்டில் அணை கட்டப்பட்டது. 1902-ஆம் ஆண்டில் மேலேதூக்கி இறக்கும் மதகுகள் (Lift Shutters) அமைக்கப் பட்டன.

மேட்டூர் அணைக்கு வரும் தண்ணீர், கருநாடக அரசால் தடுக்கப்பட்டு முறையான தண்ணீர் வரத்து மேட்டூரில் இல்லாததினால் இப்பகுதிக்கும் முழுமையான தண்ணீர் வரத்து இல்லை என்ற நிலை ஏற்பட்டது.

காவிரிப் படுகைப் பகுதி காய்ந்த பூமியாக மாறியதால், முறையான விவசாயமில்லை. முழுமையான வாழ்வுமில்லை என்ற மனக்குமுறல் இங்கு நடைபெற்ற விவசாயிகள் கூட்டத்தில் வெளிப்பட்டது- எடுத்துரைக்கப்பட்டது.

மேட்டூர் அணையில் நடைபெற்ற விவசாயிகள் சந்திப்பின் போது- ''1974-ஆம் ஆண்டுக்குப் பிறகு தண்ணீருமில்லை, சாகுபடியுமில்லை'' என்று விவசாயிகள் சார்பில் வலியுறுத்தப்பட்டது போல இங்கும் விவசாயிகள் எடுத்துரைத்தனர். தங்கள் கோரிக்கைகளை விண்ணப்பங்களாக நடுவர் மன்றத்திடம் அளித்தனர்.

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. விஜயகுமார் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

முக்கொம்பில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் குறிப்பிட்டார்:

''காவிரி பிறப்பது குடகு நாடு, கன்னட நாடு வழியாக, காவிரி புகுந்த வீடு தமிழ்நாடு. கன்னட நாட்டினர் தங்களுக்குத் தான் காவிரி சொந்தம் என்று சொல்வது முறையற்றது. இடையில் கன்னட நாட்டினர் காவிரியை வழிமறித்து அடிமைப்படுத்தித் தண்ணீரை தடுப்பது எவ்வகையில் நியாயம்?

''சோழ மன்னர்கள் தங்கள் குலதெய்வமாக காவிரியைக் கொண்டாடினார்கள். பொன்னி வளவன் என்று பெயர் சூட்டிக் கொண்டார்கள். காவிரிக் காவலர் என்று அழைக்கப் பட்டனர்.

''ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னரே காவிரி ஆற்றின் குறுக்கே கரிகாற் பெருவளத்தான் கல்லணையைக் கட்டியிருக்கிறான். மைசூரில் இருந்து காவிரிப்பூம்பட்டினம் வரையில் 492 மைல் தூரத்துக்குக் காவிரியின் இருமருங்கும் கரைகட்டியவன் சோழன்; எனவே எங்களுக்கு முழு உரிமை உண்டு. மத்திய அரசு அனுமதியின்றிக் கர்நாடக அரசு கட்டிய நான்கு அணைகளுக்கும் தடை





## காவிரியின் பண்டைய பாசனம்

உலகின் பெரும்பான்மையான நதிகளில் போன்று, காவிரியிலும் டெல்டாப் பகுதியிலேயே முதன்முதல் பாசனம் ஆரம்பித்தது. எனவே, காவிரி டெல்டாப் பாசனம் தொன்மை வாய்ந்ததாகும். இது சிந்து நதிப்பள்ளத்தாக்குப் பாசனத்தைப் போன்றே அவ்வளவு பழமையானதெனக் கூறப்படுகிறது. கிருஷ்ணா, கோதாவரி, போன்று கிழக்கு நோக்கிப்பாயும் ஆறுகளில் பாசனம் வெகு காலத்திற்குப் பின்னர் தோன்றியவையே. வண்டல் தன்மை வாய்ந்த மண், சமமட்ட நிலப்பரப்பு, ஜூன் மாதத்திலிருந்து ஜனவரி மாதம் வரை போதிய நீர் கொண்டுவரும் ஆறும் அதன்கிளைகளும் ஆகிய அனைத்தும் காவிரி டெல்டாப் பகுதியில் பாசன வளர்ச்சிக்கும், நெல்சாகுபடிக்கும் உகந்த வகையில் அமைந்துள்ளன. கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே பின்னிப்பரவும் ஆற்றுக் கிளைகளும் வெட்டியமைக்கப்பட்ட கால்வாய்களும் வெள்ள நீரைப் பாசனத்திற்காக நிலங்களுக்கு அளித்து வந்தன என்று தெரிய வருகிறது. ஆற்றில் வரும் வண்டல் மண் படியப்படிய ஆற்றுப் போக்கு அடைபட்டும் பக்கத்தில் அரிப்புகள் ஏற்பட்டும் வந்ததால் ஆற்றுப்படுகையிலும் வண்டல் சேருகிறது. இதன் விளைவாக கி.பி. இரண்டாவது நூற்றாண்டில், காவிரியின் இடது கரையில் உடைப்பு ஏற்பட்டு, காவிரியின்நீர் இப்போது உள்ளாறு எனப்படும் ஓடைவழியே கொள்ளிடத்தில் சேர்ந்ததாகவும், இதனால் டெல்டாவில் பாசனப்பரப்பு வறட்சியால் பாதிக்கப்பட்டதாகவும் தெரிகிறது. இந்த உடைப்பை மூடுவதற்காகத்தான் அப்போது அங்கு ஆட்சிபுரிந்த கரிகாற்சோழன் உடைப்பின் குறுக்கே ஓர் அணை கட்டி காவிரி பகுதிக்கு காவிரி நீர் மீண்டும் பாயு வழி செய்தான். இந்த அணையே தற்போது ''கல்லணை'' என்று அழைக்கப்படுகிறது. இவ்வணை மணல் மிகுந்த ஆற்றில் அமைக்கப்பட்டு இன்னும் உபயோகத்தில் இருந்துவரும் அணைகளில் உலகிலேயே மிகப்பழமையான அணையாகக் கருதப்படுகிறது. இக்கல்லணை இன்றளவும் செம்மையாக இயங்கிவருவதுடன், காவிரி டெல்டா பகுதியில் விவசாயத்திற்கு ஆதாரமாக இருந்து வருகிறது. இவ்வணையில் நாளடைவில் கதவுகள் பொருத்தப்பட்டும், பாலம் அமைக்கப்பட்டும் பல மேம்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆங்கிலேயர் காலத்தில், கடந்த நூற்றாண்டின் இடைப்பகுதியில் சர் ஆர்தர் காட்டன் என்பவரால் கல்லணையில் வெண்ணாறு கிளைக்கும், காவிரி கிளைக்கும் தலை மதகுகள் அமைக்கப்பட்டதுடன் காவிரியிலிருந்து கொள்ளிடம் பிரியும் இடத்தில் கொள்ளிடத்திற்குக் குறுக்கே மேல் அணை என்றழைக்கப்படும் அணையும் காவிரி ஆற்றுக்குறுக்கே ஒரு படுகை அணையும் கட்டப்பட்டு மேலும் சில மேம்பாட்டுப்பணிகளும் நிறைவேற்றப்பட்டன. இப்பணிகளின் வாயிலாக, கொள்ளிடத்தில் செல்லும் நீரளவைக் கட்டுப்படுத்தி, டெல்டாப்பாசனத்திற்கு தேவையான நீரைத் திருப்பிவிடவும் காவிரியில் அதிக வெள்ளம் நுழைவதைக் கட்டுப்படுத்தவும் முடிந்தது 1836-ஆம் ஆண்டு வாக்கில் கொள்ளிடத்தின் குறுக்கே இப்போது கீழணை என்றழைக்கப்படும் இடத்தில் ஒரு அணைகட்டப்பட்டு டெல்டாவின் வடபுறத்தில் கொள்ளிடப் பாசனம் பாதுகாக்கப்பட வழிசெய்யப்பட்டது. அண்மையில் மேல் அணையில் காவிரி பிரிவில் அமைந்துள்ள படுகை அணைக்குக் கீழ்பகுதியில் கதவுகள் பொருத்தப்பட்ட நீரொழுங்கி (Barrage) ஒன்று கட்டப்பட்டுள்ளது. தற்போது, மேல் அணைப்பகுதியில் காவிரி, கொள்ளிடம் நீரொழுங்கி (Barrages)களிலும் கல்லணையிலும், அதிலிருந்து பிரியும் காவிரி, வெண்ணாறு கிளைகளில் தலைமதகுகளிலும் கீழ கொள்ளிடத்தின் குறுக்கே கீழணையிலும் கதவுகள் பொருத்தப்பட்டிருப்பதால் மேல் அணையில் அகண்ட காவிரியிலிருந்தும் கல்லணையில் காவிரியிலிருந்தும் சாதாரண காலங்களிலும் மற்றும் வெள்ள காலங்களிலும் கொள்ளிடத்தில் நுழையும் நீரைக் கட்டுப்படுத்திப் பாசனத்திற்குப் பேரளவு பயன்படுத்தவும் எப்போதாவது பெரும் வெள்ளம் ஏற்படும் போது மட்டும், வெள்ள நீரைக் கீழ் அணை மூலம் கடலுக்குச் செலுத்தவும் தேவையான அமைப்புத்திறன் பெற்றுள்ளோம்.

### காவிரி ஆறு என்று ஏன் சொன்னார்கள்?

பூவிரிந்து வானெங்குந் தேன்வி ரிந்து
பொன்விரிந்தாற் போலுநறும் பொடிவிரிந்த
காவிரிதல் போலெங்கும் விரித லாலே
காவிரி ஆ றென்றார்கள் . . .

—புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்
(கண்ணகி புரட்சிக் காப்பியம்)

டெல்டாப்பகுதிப் பாசனம் வளர்ச்சி பெற்றுவந்த நிலையில், காவிரி கரையோரங்களிலும் நெடுக பாசனம் தோன்றியது. இதற்கான பாசன நீர், ஆற்றின் குறுக்கே தற்காலிகமாக ''கொரம்புகள்'' அமைக்கப்பட்டுத் திருப்பப்பட்டது. நாளடைவில் இந்தக் கொரம்புகளுக்குப்பதில் சில இடங்களில் அணைக்கட்டுகள் கட்டப்பட்டன. இவ்வாறு காவிரியிலிருந்தும் அதன் உபநதிகளிலிருந்தும் தொன்மையில் தோன்றிய ஆற்றுக் கால்வாய் பாசனம் கர்நாடக மாநிலத்திலும், தமிழ்நாடு மாநிலத்திலும் இன்றும் தொடர்வதை நாம் காணலாம்.

காவிரிப் படுகையில் நிலவிய பழைய பாசனப் பரப்புகள் அனைத்தும் ஆற்று நீரோட்டத்தின் மூலமே பாசனம் பெற்று வந்தன என்பதை 1990-ஆம் ஆண்டினைச் சேர்ந்த ஆவணங்கள் எடுத்துரைக்கின்றன நிலவியல் அமைப்பு மற்றும் மண்ணின் தன்மை காரணமாக அப்பகுதிமக்கள் நன்செய் சாகுபடிக்கு நீண்ட காலமாக இந்நீரைப் பயன்படுத்தி வந்துள்ளனர். அவர்கள் நூற்றாண்டுகள் காலமாகப் பயன்படுத்தி வந்துள்ளதால் அத்தகைய நீருக்கு உபயோக உரிமை (Prescriptive Rights) பெற்றுள்ளனர். ஆற்று வடிநிலத்தின் வேறு பகுதிகளில் புதிய பாசன வசதிகள் அமைப்பதென்றால், இந்த பழைய பாசனத்திற்குப் பாதுகாப்பு கோர உரிமையுண்டு.

## 1892-ஆம் ஆண்டு ஒப்பந்தம்

1890-ஆம் ஆண்டுவாக்கில் மைசூர் அரசு காவிரியிலும், மற்றும் தங்கள் எல்லைக்குள் உள்ள ஏனைய படுகைகளிலும் புதிய பாசனம் பேரளவில் விரிவாக்க முனைந்தது. அவ்வாறு மைசூர் அரசு தன்னிச்சையாகவும் கட்டுப்பாடு ஏதுமின்றியும் தங்கள் எல்லைக்குள் பாசன வசதியைப் பெருக்குவது சென்னை மாகாணத்தில் ஏற்கனவே வளர்ச்சி பெற்றுள்ள பாசனத்தைப் பாதிக்கும் என்ற அச்சம் எழுந்தது. இதுகுறித்த அப்போதைய சென்னை அரசு மைசூர் தர்பாருடன் தொடர்பு கொண்டது.

1890 முதல் 1892 ஆண்டு வரை இதுகுறித்து இரு மாநிலங்களுக்கிடையே ஏற்பட்ட கடிதப் போக்குவரத்து மற்றும் பேச்சுவார்த்தைகள் விளைவாக, ''மைசூர் மாநிலம் சென்னை அரசின் முன்னனுமதியின்றி எந்தெந்த நதிகளில் எந்த எல்லை வரை புதிய பாசன அல்லது பாசன விரிவாக்கப்பணிகள்



திருச்சி மாவட்டத்திலுள்ள முக்கொம்பு



மேற்கொள்ளக்கூடாது என்பது பற்றிய விதிகள்'' தீட்டப்பட்டு இவ்விதிகள் இரு அரசுகளாலும் 1892-இல் ஒப்புக் கொள்ளப்பட்டன. இவ்விதிகளின் தொகுப்பே 1892-ஆம் ஆண்டு ஒப்பந்தம் எனப்படுகிறது. இவ்விதிகள், காவிரிக்கு மட்டுமன்றி மைசூர் மாநிலத்தில் தோன்றி அல்லது மைசூர் மாநிலம் வழியாக சென்னை மாகாணத்திற்குள் பாயும் ஏனைய ஆறுகளுக்கும் பொருந்தும். இவ்வாறு சென்னை மாகாணத்தின் முன்னனுமதி விதிக்குட்படுத்தப்பட்ட நதிகளின் பட்டியல் ஒன்றும் தயாரிக்கப்பட்டுள்ளது.

1892-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின்படி, மைசூர் அரசு காவிரியிலோ ஐந்து துணை நதிகளிலோ, அதாவது, ஹேமவதி, இலட்சுமணதீர்த்தம், கபினி, சுவர்ணவதி, யகாச்சி (பேலூர் பாலம் வரை) (யகாச்சி ஹேமவதியின் துணையாறு ஆகும்) ஆகியவற்றிலோ புதிய பாசன நீர்த்தேக்கம் கட்ட விரும்பினாலோ, அல்லது சுவர்ணவதி, யகாச்சி (பேலூர் பாலம் வரை), காவிரியில் இராமசாமி அணைக்கட்டுக்குக் கீழோ, அல்லது கபினியில் ராம்பூர் அணைக்கட்டுக்குக் கீழோ அணைக்கட்டு ஏதேனும் கட்ட விரும்பினால் பணி தொடங்கப்படும் முன்னரே உத்தேசப்பணி தொடர்பான முழு விபரங்களும் சென்னை மாகாண அரசுக்கு அனுப்பி அவர்களுடைய முன்னிசைவு பெற வேண்டும்.

சென்னை அரசு, ஏற்கெனவே பெறப்பட்டு அனுபவத்தில் இருந்துவரும் உரிமைகளின் பாதுகாப்புக்காக அன்றி, வேறு எந்த காரணத்தை முன்னிட்டும் கருநாடகத்திற்கு இசைவு தர மறுக்கக்கூடாது. இந்த உரிமையின் தன்மையும், அதைப்பயன்படுத்தும் முறையும், நீர்உபயோக உரிமைகள் பற்றிய சட்டங்களுக்கு இணங்கவும், எந்தச் சூழ்நிலையிலும் எது நியாயமும், நடுநிலை வாய்ந்ததாகவும் அமையும் என்பதற்கிணங்கவும் தீர்மானிக்கப்பட வேண்டும். இவ்வாறு முன்னிசைவு தருவது பற்றி இரு அரசுகளிடையேயும் கருத்து வேறுபாடு ஏற்பட்டால், அப்பிரச்சினையில் இரு அரசுகளாலும் நியமிக்கப்படும் நடுவர்கள் அல்லது மத்திய அரசின் தீர்வுக்கு உட்பட வேண்டும்.

## 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தம் உருவான விவரம்

20-ஆம் நூற்றாண்டுத் தொடக்கம் வரையில், காவிரியாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் ஏதும் அமைக்கப்படவில்லை. சென்னை அரசு, தென் மேற்குப் பருவமழை காலத்தில் கிடைக்கும் உபரி நீரைத் தேக்கி வைத்து, அதனைப் பாசனக் காலம் முழுவதும் சமஅளவில் வழங்கச் செய்யும் வகையில் காவிரியில் ஒரு நீர்த் தேக்கம் அமைப்பதற்கான திட்டம் பற்றி கவனம் செலுத்தி வந்தது. அதே நேரத்தில் மைசூர் அரசு, காவிரியின் குறுக்கே கண்ணம்பாடியில் நீர்த்தேக்கம் கட்டுவதற்கான திட்டம் ஒன்றைத் தயாரித்து அத்திட்டத்திற்கு 1892-ஆம் ஆண்டு ஒப்பந்த விதிமுறைகளின்படி சென்னை அரசின் முன்னிசைவைக் கோரியது. இதைச் சென்னை அரசு ஆய்வு செய்ததில் மைசூர் அரசின் திட்டம், சென்னை அரசின் நலனைப் பாதிக்கும் என்ற முடிவுக்கு வந்தது. எனவே, சென்னை அரசு அத்திட்டத்திற்கு இசைவளிக்க மறுத்தது. கோலார் தங்கச் சுரங்கப் பணிகளுக்கு மின்சக்தி வழங்குவதற்கு அமைக்கப்பட்ட சிவசமுத்திரத்திற்குத் தடையின்றி நீர்வழங்க வேண்டிய நிர்பந்தத்தில் மைசூர் அரசு இருந்ததால், முதலில் 11 டி.எம்.சி. கொள்ளளவுக்கான உயரமும் பிற்காலத்தில் அனுமதி கிடைக்கும்போது 41 டி.எம்.சி. நீரைத் தேக்குவதற்கான உயரத்திற்கேற்ற அகலமான அடித்தளமும் கொண்ட அணை கட்டிக் கொள்ள அனுமதி கோரியது. இவ்வாறு அகலம் அதிகமான அடித்தளம் அமைப்பது பிற்காலத்தில் பெரிய நீர்த்தேக்கக் கோரிக்கைக்குக் காரணமாக வலியுறுத்தப்படாது என்றும், அணையில் நீர்த்தேக்குவதற்கான விதிமுறைகள், சென்னை அரசின் கருத்துக்களை ஒட்டி முடிவு செய்யப்படும் என்றும் மைசூர் அரசு உறுதி அளித்ததின் பேரில், மைசூர் அரசு சிறிய நீர்த்தேக்கம் கட்டிக் கொள்வதற்குச் சென்னை அரசு இசைவு அளித்தது. மைசூர் அரசு 1911- செப்டம்பரில் பணியைத் தொடங்கியது; ஆனால், கொடுத்த உறுதிமொழிகைக் காப்பாற்றத் தவறியது.

# காவிரி ஆறும் கன்னித்தமிழ்நாடும்

தமிழ்நாட்டு மக்கள் போற்றிப் புகழ்ந்து தெய்வம் என வணங்கும் காவிரி ஆறு கருநாடக மாநிலத்தின், குடகு மாவட்டத்திலுள்ள, மேற்குத் தொடர்ச்சி மலைத்தொடரைச் சேர்ந்த பிரம்மகிரி மலையில் 'தலைக்காவிரி' என்னும் இடத்தில் தோன்றுகிறது. மலைப்பகுதிகளையும், கருநாடக மாநிலத்தின் தக்காணப்பீடபூமி பகுதியையும், கடந்து மேட்டூர் நீர்த்தேக்கத்திற்கு மேல் தமிழ்நாட்டின் எல்லைக்குள் நுழைகிறது. மேற்குத் தொடர்ச்சி மலைகளில் உற்பத்தியாகும் ஹேமாவதி, ஹேரங்கி, லக்ஷ்மணதீர்த்தம், கபினி, சுவர்ணவதி போன்ற முக்கியமான சில துணை நதிகள் கருநாடகத்தில் காவிரியில் கலக்கின்றன. பீடபூமியின் உட்பரப்பில் தோன்றும் சிம்ஷா, அர்க்காவதி ஆகிய ஏனைய துணை நதிகள் காவிரியாற்றின் இடப்பக்கத்தில் சேருகின்றன.

கிழக்குத் தொடர்ச்சி மலைப்பகுதியைக் கடக்கும்போது இந்த ஆறு மேட்டூருக்குக்கீழே தெற்கு நோக்கித் திரும்புகிறது. பவானி, நொய்யல், அமராவதி போன்ற துணை நதிகள் ஆற்றின் வலப்புறமாகக் கலக்கின்றன. அமராவதி ஆறு காவிரியுடன் சேர்ந்த பின்னர் காவிரி கிழக்கு நோக்கிப் பாய்ந்து வங்கக் கடலில் கலக்கிறது. கருநாடக மாநிலத்தின் குடகு மாவட்டத்தில் மலைச்சரிவுகளையும், பீடபூமியின் செங்குத்தான சரிவுகளையும் கடந்த பின்னர், கிழக்குத் தொடர்ச்சி மலைப்பகுதியை ஆழ்ந்து குறுகி ஒடுங்கிப் பாய்ந்து கடக்கிறது. பவானி காவிரியுடன் சேர்ந்த பின்னர் காவிரியின் அடிமட்ட வாட்டமும் ஆழமும் வரவரக் குறைந்து ஆறு விரிவடையத் தொடங்குகிறது. திருச்சி மாவட்டத்தில் மேல் அணைக்கு மேல்புறத்தில் அது 2 கி.மீ. அளவிற்கும் அகன்று காணப்படுவதால் அது "அகண்ட காவிரி" என அழைக்கப்படுகிறது. ஆற்றின் வேகம் குறைகின்ற காரணத்தால் வெள்ளத்தில் கலந்துவரும் வண்டல்மண் படிய ஆரம்பிக்கிறது. ஆற்றுப்படுகை மணல் மேடிட்டு, வண்டல் படிந்து ஆறு பிரிவுபட ஆரம்பிக்கிறது. மேல் அணையில் இருபெரும்பிரிவுகளாகப் பிரிந்து வட பிரிவு கொள்ளிடம் என அழைக்கப்படுகிறது. கல்லணைப் பகுதியில் காவிரியாறு மீண்டும் காவிரி, வெண்ணாறு என இரண்டாகப் பிரிகிறது. கல்லணையைக் கடந்து செல்லும் காவிரி, வெண்ணாறு ஒவ்வொன்றும் மேலும் பல கிளைகளாகவும், அக்கிளைகள் மேலும் பல சிறு கிளைகளாகவும் உட்கிளைகளாகவும் பிரிவதால் இவை 36 கிளை நதிகளாக காவிரி டெல்டா பகுதியில் பரவிப் பாய்ந்து சுமார் 125 கி.மீ. விரிவுக்குள் கடலில் கலக்கின்றன. காவிரி யாறு இறுதியில் ஒரு குறுகிய ஓடையாக பூம்புகாருக்கு அருகில் வங்கக் கடலில் கலக்கிறது.

காவிரியின் மொத்த நீளம் 800 கி.மீ. ஆகும். இதில் 320 கி.மீ. கருநாடக மாநிலத்திலும், 64 கி.மீ. கருநாடக, தமிழ்நாடு மாநிலங்களிடை எல்லையாகவும் 416 கி.மீ. தமிழ்நாட்டிலும் அமைந்துள்ளது.

## பருவமழைகள் - மழையளவு - காவிரியில் கிடைக்கும் மொத்த நீரளவு

ஜூன் மாதம் முதல் வாரத்தில் நாட்டின் மேற்குப் பகுதியை அடையும் தென் மேற்குப் பருவக்காற்று ஜூன் மாதம் இரண்டாம் வாரத்திற்குள் கருநாடகத்திலுள்ள காவிரிப்படுகைப் பகுதி முழுவதும் பரவுகின்றது. தமிழ் நாட்டில் காவிரிப்படுகைப் பகுதியின் பெரும்பகுதி மழைமறைவுப் பகுதியில் அமைந்துள்ளதால், இப்பகுதி தென்மேற்குப் பருவக்காற்றினால் சொற்ப மழையே பெறுகின்றது. பொதுவாக இப்பருவக்காற்று செப்டம்பர் மாதம் வரையில் தொடர்கிறது.

அக்டோபர் மாத நடுப்பகுதியில் இப்பருவமழையின் பின்னடைவு வடகிழக்கு பருவமழையாக தமிழ்நாட்டில் உருவெடுக்கிறது. இது டிசம்பர் மாத இறுதி வரையில் நீடிக்கிறது. இப்பருவமழை பெரும்பாலும் காவிரிப்படுகைப் பகுதியின் கடலோரப்பகுதிகளுக்கு மட்டுமே பயனளிக்கிறது. கருநாடக மாநிலத்திலுள்ள காவிரிப்படுகையின் மேற்பகுதி இதன்மூலம் அடையும் பயன் மிகவும் சொற்பமே.

காவிரிப்படுகை தனித்தன்மை வாய்ந்தது. இதன் மேற்பகுதி ஒரு மாநிலத்தில் அமைந்துள்ளது. அப்பகுதி தென்மேற்குப் பருவமழையினால் பயன் பெறுகிறது. கீழ்ப்பகுதி மற்றொரு மாநிலத்தில் அமைந்துள்ளது. இப்பகுதி வடகிழக்குப் பருவமழையினால் பயன்பெறுகிறது. துரதிருஷ்டவசமாக வடகிழக்குப் பருவக்காற்றின் தன்மைகள் தென்மேற்கு பருவக்காற்றின் தன்மைகளுக்கு வேறுபட்டதாகும். தென்மேற்குப் பருவக்காற்று நம்பத்தக்கது; தவறாது வருவதுடன் கனத்த மழை மூலம் வெள்ளம் பெருகும் வாய்ப்பளிக்கக் கூடியதாகும். ஆனால், வடகிழக்குப் பருவமழை வங்கக் கடலில் உண்டாகும் காற்றழுத்த மண்டலம் மற்றும் புயல்களால் உருவாகி அடைமழை பெய்விக்கும்; ஒரு மழைக்கும் அடுத்த மழைக்கும் இடையே நீண்ட நாட்கள் மழையே வராது; இப்பருவமழை நிச்சயமற்றது; அடிக்கடி பொய்க்கக்கூடியது.

காவிரி ஆற்றுப்படுகைப் பகுதியில், அதன் உற்பத்தி நிலையிலிருந்து டெல்டாப்பகுதி வரையில் வழிநெடுகிலும் பெய்யும் ஆண்டு மழையளவு விவரங்கள் இந்நதியின் பலபகுதிகளில் கிடைக்கும் நீரளவு பற்றி அறிய உதவக்கூடும்.

| | |
|---|---|
| தலைக்காவிரி | 6000 முதல் 8000 மி.மீ. |
| பாக மண்டலா (9 கி.மீ. கீழே) | 6000 மி.மீ. |
| மெர்க்காரா | 3265 மி.மீ. |
| குடகு (மாவட்ட சராசரி அளவு) | 2725 மி.மீ. |
| கிருஷ்ணராஜசாகரம் (மைசூர்) | 810 மி.மீ. |
| மேட்டூர் நீர்த்தேக்கம் | 762 மி.மீ. |
| மேலணை | 969 மி.மீ. |
| கல்லணை | 859 மி.மீ. |
| தஞ்சாவூர் | 970 மி.மீ. |
| காவிரி டெல்டா (தெரிந்தெடுத்த ஒன்பது இடங்களின் சராசரி மழையளவு) | 1,122 மி.மீ. |
| நாகப்பட்டினம் (கடற்கரை நகரம்) | 1,367 மி.மீ. |

படுகையின் இருவேறு மாநிலங்களில் அமைந்துள்ள இரு வடிநிலப் பகுதியில் பெய்யும் மழை அளவுகளின் வேறுபாடு ஒவ்வொரு மாநிலத்திலும் ஆண்டொன்றுக்கு எத்தனை நாட்களுக்கு மழை பெய்கின்றது என்ற விவரத்திலிருந்தும் தெரிந்து கொள்ளலாம். இது கருநாடகத்திலுள்ள காவிரிப்படுகைப் பகுதியில் 76 நாட்களும், தமிழ்நாடு படுகைப் பகுதியில் 55 நாட்களும் மட்டுமேயாகும். மேலும், கருநாடகத்திலுள்ள நில அமைப்பு தென்மேற்குப் பருவமழையினால் கிடைக்கும் பெருமழையின் நீரைச் சேமித்து வைக்கத்தக்க நீர்த்தேக்கங்கள் அமைக்கத்தக்கதாக உள்ளது. ஆனால், தமிழ்நாட்டின் கடலோரப் பகுதியில் மிகுதியாகப் பெய்யும் புயல் மழை அந்தப்பகுதிகளில் விளைவிக்கப்படும் பயிரின் அந்த நேரத்தேவைக்கு மட்டுமே பயனளிக்கக் கூடியதாக உள்ளது; எஞ்சிய நீர் பயன்படுத்த வாய்ப்பின்றி கடலில் கலந்து விடுகிறது. சமமட்ட நிலப் பரப்பைக் கொண்ட டெல்டாப்பகுதியில் நீர்த் தேக்கங்கள் அமைப்பது சாத்தியமில்லை. இது புயல்மழை ஏற்படக்கூடிய டெல்டா அனைத்துக்குமே பொருந்தும்.

காவிரிப்படுகையின் மொத்த நீர்ப்பிடிப்புப் பரப்பு 81,155 சதுர கிலோ மீட்டர் ஆகும். இதில் 34,273 சதுர கிலோ மீட்டர் கருநாடக மாநிலத்திலும், 44,016 சதுர கிலோ மீட்டர் தமிழ்நாட்டிலும் அமைந்துள்ளது. மேலும், கபினி, பவானி, அமராவதி ஆகிய மூன்று பெரும் துணை நதிகளின் தலைப் பகுதிகளும் கேரள மாநிலத்தில் அமைந்துள்ளன. இவற்றின் மொத்த் பரப்பு 2866 சதுர கிலோ மீட்டர் ஆகும். மழை மிகுந்த மேற்குத் தொடர்ச்சி மலைகளில் காவிரியும், அதன் பெரும்பாலான கிளை ஆறுகளும் உற்பத்தியாவதால், கேரள மற்றும் கருநாடக மாநிலங்களில் அமைந்துள்ள பகுதிகள் பெருமளவில் பயன்பெறுகின்றன. கருநாடகத்திலும், கேரளத்திலும் ஒரு சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் கிடைக்கும் நீரளவு தமிழ்நாட்டில் ஒரு சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் கிடைக்கும் நீரளவைவிட மிக அதிகமாகும்.

**தமிழ்நாட்டிலும், மைசூரிலும் காவிரியின் பாசன ஏற்பாடுகள் [illegible] விவரங்கள் மைசூருக்கும் தமிழ்நாட்டிற்கும் இடையே 1892, 192[illegible] செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள். அந்த ஒப்பந்தங்கள் [illegible] கோலிய நிலைமைகள், மைசூரில் காவிரியின் துணை ஆறுகளில் [illegible] கலந்தாலோசித்து அனுமதி பெறாமல் தன் போக்கிலேயே பாசனத் திட்டப் பணிகள் சிலவற்றை நிறைவேற்றியதால் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் இப்பாசனப் பணிகளால் காவிரியின் கீழ்ப் பகுதியிலுள்ள தமிழ்நாட்டின் முக்கியப் பாசன நலன்களுக்கு ஏற்பட்டுள்ள பேராபத்தினால் தமிழ்நாட்டின் நெற்களஞ்சியங்களாகத் திகழ்கிற திருச்சி, தஞ்சாவூர் மாவட்டங்களுக்குத் தொன்றுதொட்டுப் பயன்பட்டு வருகிற, வழக்கப்படியான பாசன நலன்கள் மிகுதியாகப் பாதிக்கப்பட்டுள்ளது போன்ற விவரங்கள் தொகுக்கப்பட்டு விரிவாக இக்கட்டுரையில் விளக்கப்படுகின்றது.**

# காவிரி நீர்ப்பங்கீடு: சிக்கலின் பின்னணி என்ன?

## காவிரி பற்றிக் கன்னடக் கவிதை!

காவிரியின் சீற்றத்தையும், குழைவையும், நெளிவையும் அழகாக வர்ணிக்கிறார் கன்னடக் கவிஞர் திரு.டி.வி.குண்டப்பா. அந்தக் கவிதை இதோ:

மலைச்சாரலில் வனத்திடையே ஓடையாகச்
சுழித்து வரும்:
அடியில் உள்ள கற்களை இடித்துச் செதுக்கி,
கரையின் நிலத்தை அரைத்து முறிக்கும்;
தெள்ளிய நீரின் பரந்த ஊற்று
அமுத அலையாய்த் தோன்றிக் கவரும்;
சோர்ந்தவனுக்கு நட்புக்காற்றைப் பரப்பித்
தேற்றி
மென்மை ஒலியுடன் முன்னே சென்று
அங்கு சுழித்துச் சுற்றி
இங்கு மெதுவாய் ஒற்றி
அங்கு நடுங்கி
இங்கு சுற்றி
அங்கு வளைந்து இங்கு வந்து
நுரைகளின் குப்பலை வீசி எறிந்து
திரையெனும் விசிறியை ஆர வீசி
சிறுமியைப் போல் தெளிந்து ஆடி
காளியைப் போல் கனலாய்க் கத்தி.....,

—'நடந்தாய் வாழி காவேரி' என்னும் நூலிலிருந்து.

கிருஷ்ணராஜசாகரில் கிடைக்கும் நீர் வரத்தில், மேல் அணையின் காவிரிப்படுகை அணை அளவையில் குறிப்பிட்ட உயரத்திற்கு நீர்கிடைப்பதற்குத் தேவையான அளவிற்குத் திறந்துவிட்டு, எஞ்சிய நீரையே மைசூர் அரசு தேக்கி வைத்துப் பயன்படுத்தலாம். அதாவது காவிரியின் கீழ்ப்பகுதிகளில் அமைந்துள்ள பழைய பாசனத்தின் தேவைகளுக்கு கிருஷ்ண ராஜசாகரில் இருந்து விடவேண்டியதை விட அதிகமான நீர் கிருஷ்ணராஜசாகரில் கிடைக்கும் பொழுதுதான் அந்த அணையிலிருந்து கீழே விட்டதுபோக எஞ்சிய நீரைத் தேக்கலாம். மேலணையில் ஒப்பந்தப்படி அளிக்கப்படவேண்டிய நீரளவு "வரம்பு நீரளவு" (Limit flows) எனப் பெயர் பெறுகிறது.

இதற்காக வகுக்கப்பட்டு உபயோகத்திலுள்ள சூத்திரத்தின் படி கிருஷ்ணராஜசாகரில் ஒரு குறிப்பிடப்பட்ட அளவுவரை வரும் நீர் வரத்து முழுவதுமே கீழே விடப்படவேண்டும். வேறொரு குறிப்பிட்ட அளவுக்குமேல் நீர்வரத்து இருந்தால், நீர் வரத்து முழுவதுமே கிருஷ்ணராஜசாகரில் தேக்கப்படலாம். இந்த இரு அளவுகளுக்கு இடையே-வரும் நீர்வரத்தின் ஒரு பகுதி கீழே விடப்பட்டு மற்ற பகுதி தேக்கிக் கொள்ளப்படலாம். இணைப்பு 'B'-இல் உள்ள வரைபடத்தில் ஜூலை மற்றும் நவம்பர் மாதங்களுக்கான இந்த அளவுகள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

இவ்வொப்பந்தம் மைசூர் மற்றும் சென்னை அரசுகளின் பிரதிநிதிகளால் கையெழுத்திடப்பட்டுள்ளது. காவிரிப்படுகையின் அப்போதைய இதர மாநிலங்களான குடகு, திருவிதாங்கூர் ஆகியவை ஒப்பந்தத்தில் இடம்பெறவில்லை. ஏனெனில், அப்போது அம்மாநிலங்களிடம் காவிரி நீரைப்பயன்படுத்தும் திட்டங்கள் ஏதும் இல்லாததால் காவிரி நீர்ப்பங்கீடு குறித்து இம்மாநிலங்களுடன் பிரச்சினை ஏதும் எழவில்லை. புதுவை அரசும் ஒப்பந்தத்தில் சம்பந்தப்படவில்லை. ஆயினும், பிரெஞ்சு எல்லைக்குள் அமைந்துள்ள ஆயக்கட்டு காவிரி டெல்டாவின் கடைமுனைப் பகுதியில் அடங்கிய ஒரு பகுதியாக இருப்பதால் அந்த ஆயக்கட்டின் தேவைகள் கவனிக்கப்படும் என்று அப்போதைய ஆங்கில அரசு உறுதியளித்துள்ளது.

## படுகைப்பகுதியில் 1956 வரையில் பாசன மேம்பாடு:

### மைசூர் மாநிலம்

1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் திட்டமிட்டபடி கண்ணம்பாடி அணைகட்டப்பட்டு 44,827 மி.க.அடி கொள்ளளவு கொண்ட திருஷ்ணராஜசாகர் நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டது. சிறு அணையாக முதலில் தொடங்கப்பட்ட இத்திட்டம், 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வரம்புகளுக்கு இணங்க கட்டப்பட்டு 1929-ஆம் ஆண்டில் செயல்படத் தொடங்கியது. அதன்பின்னர், மைசூர் அரசு, கன்வா, பைரமங்களா, மார்க்கோனஹள்ளி, ஷிம்ஸா கால்வாய் போன்ற மேலும் சில திட்டங்களையும் செயல்படுத்தியது. சிறுபாசனத்தின் கீழும் பாசனப்பரப்பை அதிகரித்தது.

எனினும் 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் அனுமதிக்கப்பட்டிருந்த 45 டி.எம்.சி. கொள்ளளவுக்கு நீர்த்தேக்கங்கள் கட்டவோ ஆயக்கட்டுப்பகுதியை மேலும் 1.1 இலட்சம் ஏக்கருக்கு விரிவுபடுத்தவோ மைசூர் மாநிலம் பணிகள் எதனையும் மேற்கொள்ளவில்லை.

### சென்னை மாநிலம்

1924-ஆம் ஆண்டு ஒப்பந்த விதிகளுக்கிணங்க, மேட்டூர் நீர்த்தேக்கம் அமைக்கும் பணி சென்னை அரசால் 1934-ஆம் ஆண்டு முடிக்கப்பட்டது. இந்த நீர்த்தேக்கமானது அதுவரை அடிக்கடி வெள்ளத்தினாலும், அத்தியாவசியமாக நீர்த்தேவைப்படும் காலங்களில் நீர்ப்பற்றாக்குறையினாலும், பாதிக்கப்பட்டு வந்த காவிரி ஆற்று கால்வாய்கள் மற்றும் டெல்டா பகுதியின் பாசனத்திற்குத் தேவைக்கேற்ப நீர்வழங்க உதவியது. இதன் பயனாக மேட்டூர் நீர்த்தேக்கத்தின் கீழ்ப்பகுதியில் உள்ள ஆற்று வாய்க்கால்கள் மற்றும் காவிரி டெல்டா பகுதி ஆகியவற்றின் ஆயக்கட்டுப் பகுதிகள் நிலையான பாசனம் பெற்றன. மேலும், பயிர் சாகுபடிப் பரப்பும் அதிகரிக்கப்பட்டது. அதேபோன்று கொள்ளிடம் ஆற்றின் கீழ் அமைந்துள்ள கீழ்க் கொள்ளிட அணைக்கட்டு ஆயக்கட்டுப் பகுதியும் நிலையான பாசன வசதி பெற்று சாகுபடிப் பரப்பு அதிகரித்தது.

1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின்படி, காவிரி மேட்டூர் திட்டத்தின்கீழ் புதிதாக 3.01 இலட்சம் ஏக்கர் வரை பாசனம் அளிப்பதற்கு சென்னை அரசுக்கு உரிமை கிடைத்தது. இத்திட்டத்தின் அணை மற்றும் கால்வாய் அமைப்புகள் 1934-ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டன. இதன் ஆயக்கட்டு பாசனத்திற்கு கொண்டு வரப்பட சிறிதுகாலம் பிடித்தது. பின்னர் இக்கால்வாய் அமைப்பின் மூலம் பாசனம் பெறக்கூடிய புதிய பாசனப்பரப்பு 2.56 இலட்சம் ஏக்கர்கள் மட்டுமே என்று தெரியவந்தது. எனவே சேலம் மற்றும் பெரியார் மாவட்டங்களில் 45,000 ஏக்கர்களுக்கு பாசன வசதி அளிக்கும் வகையில் மற்றொரு கால்வாய் மேட்டூர் அணையிலிருந்து வெட்டப்பட்டது. 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் வரையறுக்கப்பட்டுள்ளபடி இவ்விரு கால்வாய்களும் சேர்ந்து 3.01 இலட்சம் ஏக்கர் பரப்புள்ள புதிய ஆயக்கட்டுப்பகுதிக்கு பாசனம் அளிக்கும் வகையில் வெட்டப்பட்டன.

சென்னை அரசு, காவிரியின் கிளை நதியான பவானியின் குறுக்கே கீழ்பவானி நீர்த்தேக்கத்தையும் கட்டியது. 2.07 இலட்சம் ஏக்கர் பரப்பிற்கு பகுதி நஞ்சை சாகுபடிக்கும் பகுதி புஞ்சை தானிய சாகுபடிக்கும் பாசனம் அளிக்கும் பவானிசாகர் நீர்த்தேக்கம் 1953-ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டது. 1901 முதல் 1956 வரையிலான கால அளவில் தமிழ்நாடு, மைசூர், கேரளம் ஆகிய மாநிலங்களில் ஏற்பட்டுள்ள பாசன விரிவாக்கம் குறித்த விவரங்கள் கீழே இணைக்கப்பட்ட விவர அட்டவணை 'அ' வில் கொடுக்கப்பட்டுள்ளன. படுகையில் பாசனம் பெறும் மொத்தப் பரப்பு 18.376 இலட்சம் ஏக்கரிலிருந்து 27.721 இலட்சம் ஏக்கராக அதிகரித்தது என தெரிய வருகிறது. இந்த அதிகரிப்பில் பெரும் பகுதி 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின்படி கிருஷ்ணராஜசாகர் மேட்டூர் ஆகிய நீர்த்தேக்கத் திட்டங்களை செயற்படுத்தியதால் ஏற்பட்டதாகும்.

## 1956-ஆம் ஆண்டிற்குப் பின்னர் படுகையில் பாசன மேம்பாடு

1956-இல் மாநிலங்கள் திருத்தி அமைக்கப்பட்டதின் காரணமாக, கேரளம் காவிரி படுகை மாநிலங்களுள் ஒன்றாக உருவெடுத்தது. முன்னாள் திருவிதாங்கூர் மாநிலம், கேரளத்தின் ஒரு பகுதியாகவும், முன்னாள் குடகு மாநிலம் கருநாடக மாநிலத்தின் ஒருபகுதியாகவும் அமைந்தன. முன்னாள் சென்னை மாநிலத்தில் கொள்ளேகால் பகுதியும், மலபார் பகுதியும் முறையே கருநாடகம், கேரளம் மாநிலங்களின் ஒருபகுதியாக சேர்க்கப்பட்டன. 1892 மற்றும் 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தங்கள் படுகையின் ஒவ்வொரு பகுதியிலும் பின்னர் ஏற்பட்ட அரசுகளைக் கட்டுப்படுத்தும் என்பதே சட்டரீதியான கருத்தாகும்.

மாநிலங்கள் திருத்தி அமைக்கபட்ட பின்னர் கருநாடகம் காவிரிப்பகுதியில் புதிய திட்டப் பணிகளை மேற்கொள்ள விரும்பியது. தமிழ்நாட்டின் பவானி நீர்த்தேக்கத்திற்கு ஈடாக கபினி நீர்த்தேக்கத்தையும், 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள 1.10 இலட்சம் ஏக்கர் பரப்புள்ள புதிய ஆயக்கட்டு பகுதிக்கு பாசனம் அளிப்பதற்கான 45 டி.எம்.சி. கொள்ளளவுள்ள நீர்த்தேக்கங்கள் கட்டிக் கொள்ள கருநாடகத்திற்கு இருக்கும் உரிமைக்கிணங்க ஹேமவதி நீர்த்தேக்கத்தையும் கட்ட விரும்பியது. மேலும், தமிழ்நாட்டின் அமராவதி நீர்த்தேக்கத்திற்கு ஈடாக சுவர்ணவதி நீர்த்தேக்கத்தையும் கட்ட விரும்பியது. ஹேரங்கி நதி 1892-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் விவர அட்டவணை 'அ'வில் குறிப்பிடப்படாத நதி, என்ற வாதத்தின் அடிப்படையிலும், 1892-ஆம் ஆண்டு ஒப்பந்த விதிமுறைகளுக்கிணங்க தமிழ்நாட்டைக் கலந்தாலோசிக்காமல் விவர அட்டவணை 'A'-இல் குறிப்பிடப்படாத ஆற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் கட்டுவதற்கு கருநாடகத்திற்கு உரிமை உண்டு என்ற வாதத்தின் அடிப்படையிலும் ஹேரங்கி நீர்த்தேக்கப்பணியும் மேற்கொள்ளப்பட்டது.

## காவிரி நீர்த்தகராறு - அதனைத் தீர்ப்பதற்கான முயற்சிகள்

கருநாடக அரசு இத்திட்டங்கள் சம்பந்தமாக, 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் நிபந்தனைகளைப் பின்பற்றத் தவறியது. இத்திட்டங்கள் குறித்த முழுவிவரங்களும் தமிழ்நாட்டிற்கு அளிக்கப்படவில்லை. 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளவாறு தமிழ்நாட்டிற்கு விடப்படும் நீரின் அளவு குறைக்கப்படமாட்டாது என்பதை உறுதி செய்யும் வகையில் இப்புதிய நீர்த்தேக்கங்களில் நீர்த்தேக்குவதற்கான விதிமுறைகள் வகுக்கப்பட்டு ஒப்புக் கொள்ளப்படவில்லை. எனவேதான் இத்திட்டங்களுக்குத் தமிழ்நாடு உடன்படவில்லை. இந்திய அரசும் இத்திட்டங்களுக்கு இசைவு அளிக்கவில்லை. ஆனால் தமிழ்நாடு பலமுறை எதிர்ப்புகளைத் தெரிவித்தபோதிலும், கருநாடக அரசு இத்திட்டங்களின் கட்டுமானப்பணிகளைத் தொடர்ந்தது. இந்திய அரசின் அனுமதி இல்லாததால் இத்திட்டங்களுக்கான செலவு மாநில நிதியிலிருந்து செலவிடப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கருநாடக அரசு தன்னிச்சையாகக் காவிரிப்படுகையில் நீர்த்தேக்கங்களையும், கால்வாய்களையும் அமைத்து அவற்றின் கீழ் பாசனப்பரப்பை வரம்புக்கு மிகவும் மீறி அதிகரிக்க முனைந்ததால் ஏற்பட்ட தகராறைத் தீர்க்க 1968-ஆம் ஆண்டிலிருந்து மத்திய நீர்ப்பாசனத்துறை அமைச்சரின் தலைமையின்கீழ் காவிரிப்படுகை மாநில முதலமைச்சர்கள் மட்டத்தில் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டன. ஆனால், பேச்சுவார்த்தைகளால் தீர்வு காண இயலவில்லை. 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தைப் பின்பற்ற கருநாடக அரசு உறுதிமொழி எதனையும் அளிக்க மறுத்துவிட்டதுடன் புதிய திட்டங்களுக்கான கட்டுமானப்பணிகளையும் தொடர்ந்து வந்தது. காவிரி நீர்த்தகராறை நடுவர்

## அகண்ட காவிரி:

காவிரி திருச்சி மாவட்டத்தில் புகுந்தவுடன் அமராவதி என்ற ஆறு கரூருக்கு அருகில் காவிரியுடன் கூடுகிறது. இங்ஙனம் பற்பல ஆறுகளும் கலக்கப் பெற்றமையால் காவிரி மிகப்பெரிய உருவமுடையதாய் விளங்குகிறது.

திருச்சிக்கு, மேற்கே ஒன்பது மைல் தொலைவில் இவமனூர் என்னுமிடத்தில் காவிரியிலிருந்து முதன்முதலாகக் கொள்ளிடம் என்னும் கிளையாறு பிரிகிறது. அது காவிரியினும் பெரிய உருவமுடையதாய் ஓடித் தென்னார்க்காடு மாவட்டத்தை வளப்படுத்தித் தேவிகோட்டை என்னுமிடத்தில் கடலில் கலக்கிறது. கொள்ளிடம் பிரிவதற்கு முன்னுள்ள காவிரிக்கு அகண்ட காவிரி என்று பெயர் வழங்குகிறது. கண்டம்-பிரிவு; அகண்டம்-பிரிவு இல்லாதது. காவிரி இதனை அடுத்துப் பிரிகின்றமையால் இப்பகுதிக்குச் சிறப்பாக அப்பெயர் வழங்குகிறது.

இங்குக் காவிரி அகண்ட காவிரியாய் மட்டுமன்றி, அகன்ற காவிரியாயும், ஏறக்குறைய ஒரு மைல் அகலமுடையதாயும், கண்ணுக்கெட்டிய தூரம் வரை ஒரே நீர்ப்பரப்பாய்க் காட்சியளிக்கிறது. காவிரி தன் போக்கில் முழு உருப்பெற்று விளங்கும் இடம் இதுவேயாகும். இங்குக் கொள்ளிடத்தின் குறுக்கே மேலணை என்ற சிறந்த அணை கட்டப்பட்டுள்ளது.

—தமிழ்க் கலைக் களஞ்சியம்

மன்றத்திற்கு விடும்படி தமிழ்நாடு அரசு 17.2.70-ஆம் நாளிட்ட தனது கடிதத்தில் இந்திய அரசைக் கேட்டுக் கொண்டது. இப்பிரச்சினைக்குப் பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்வு காண்பதற்குரிய வாய்ப்பு குறித்து பரிசீலிக்க, இந்திய அரசு, காவிரிப் படுகை மாநில முதலமைச்சர்களின் கூட்டங்களைக் கூட்டியது. இந்தக் கூட்டங்களிலும் ஒப்பந்தம் ஏதும் ஏற்பட வழி ஏற்படாததாலும் இந்திய அரசு நடுவர்மன்றத்தை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் அறிகுறி எதுவும் தென்படாததாலும் காவிரி நீர்ப் பிரச்சினைக்குக் தீர்வு காண நடுவர்மன்றம் விரைவில் அமைக்குமாறு இந்திய அரசுக்கு உத்தரவிடும்படி கோரி, தமிழ்நாடு அரசு 1971-ஆம் ஆண்டு உச்ச நீதி மன்றத்தில் வழக்கு ஒன்றை தாக்கல் செய்தது.

உச்ச நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கையில், பாரதப் பிரதமர் முயற்சியில் மத்திய நீர்ப் பாசன அமைச்சர் தலைமையில் மூன்று முதலமைச்சர்களது கூட்டம் கூட்டப் பெற்றது. 29.05.72 முதல் 31.05.72 வரை நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் போது காவிரி உண்மைநிலை அறியும் குழு ஒன்றை அமைக்க முதலமைச்சர்கள் ஒப்புக் கொண்டனர். இக்குழு, காவிரிப் படுகையில் கிடைக்கும் நீரின் அளவு, நீர் உபயோகம் குறித்த அனைத்து விவரங்களையும் சேகரிக்கும் எனவும் இதற்கிடையே காவிரி நீர்த்தகராறு குறித்த பிரச்சினைக்கு இறுதித்தீர்வு காணும் வரையில், எந்தவொரு மாநிலமும் 31.05.72-ஆம் நாள் அன்று இருந்த நிலைக்கு அதிகமாக காவிரி நீரைத் தேக்கி வைத்தல் அல்லது பயன் படுத்துதல் போன்ற பிரச்சினையைச் சிக்கலாக்கும் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்வதில்லை எனவும் மாநில முதலமைச்சர்கள் ஒப்புக் கொண்டனர். பிரதமரின் அறிவுரைக்கிணங்க தமிழ்நாடு, உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கைத் திரும்பப் பெற்றது.

## காவிரி உண்மைநிலை அறியும் குழு

இந்திய அரசினால் நியமிக்கப்பட்ட காவிரி உண்மைநிலை அறியும் குழு நீர்ப்பாசன அமைச்சகத்தைச் சேர்ந்த ஓய்வுபெற்ற இணைச் செயலாளர் ஒருவர், பஞ்சாபைச் சேர்ந்த ஓய்வு பெற்ற தலைமைப் பொறியாளர் ஒருவர், உணவு - வேளாண்மை அமைச்சகத்தைச் சேர்ந்த ஓய்வு பெற்ற வேளாண்மைத்துறை ஆணையாளர் ஒருவர், ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவர் ஆகியோரைக் கொண்டதாகும். இக்குழு தன்னுடைய அறிக்கையை 15.12.1972-ஆம் நாளன்றும் கூடுதல் அறிக்கையை 14.08.1973-ஆம் நாளன்றும் அளித்தது.

காவிரி உண்மை நிலை அறியும் குழுவின் அறிக்கையின் முக்கியமான விவரங்கள் வருமாறு

### அ) பாசனப் பரப்பு மற்றும் நீர் உபயோகம்

| | தமிழ்நாடு | கர்நாடகம் | கேரளம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1972-ஆம் ஆண்டில் இருந்தபடி பாசனப் பரப்பு. (ஏக்கர்-இலட்சத்தில்) | 28.208* | 6.825 | 0.534 | 35.567 |
| எக்டேர் இலட்சத்தில் | 11.424 | 2.674 | 0.216 | 14.404 |
| நீர் உபயோகம் (டி.எம்.சி) | 566.60 | 176.82 | 5.00 | 748.42 |

* பாண்டிச்சேரி மாநிலத்தில் 0.43 இலட்சம் ஏக்கரும் (0.174 இலட்சம் எக்டேர்) இதில் அடங்கும்.

### ஆ) நீர்வளம் (டி.எம்.சி.)

| காவிரியின் நீர்வளம் | 50% நம்பக அடிப்படையில் | 75% நம்பக அடிப்படையில் | 90% நம்பக அடிப்படையில் |
|---|---|---|---|
| கிருஷ்ணராஜசாகரம் | 219.4 | 187.8 | 167.6 |
| மேட்டூர் அணை | 507.4 | 451.4 | 414.2 |
| கீழ்கொள்ளிடம் அணைக்கட்டு | 740.0 | 670.0 | 623.0 |

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணை 'ஆ'வில் தமிழ்நாட்டின் காவிரிப் படுகை பகுதியிலுள்ள திட்டவாரியான பாசனப்பரப்புகள் பற்றிய விவரங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

## பேச்சுவார்த்தைகளும் அவற்றின் தோல்வியும்

காவிரி உண்மை அறியும் குழுவால் தொகுக்கப்பட்டு, அளிக்கப்பட்ட புள்ளி விவரங்கள் 29.04.1973 மற்றும் 9.10.73-ஆம் நாளன்று நடைபெற்ற கூட்டங்களில் முதலமைச்சர்கள் ஏற்றுக் கொண்டனர். மேற்சொன்ன புள்ளி விவரங்களிலிருந்து 1971/72-ஆம் ஆண்டில் காவிரி பாயும் மாநிலங்கள் அனைத்தும் பயன்படுத்திய மொத்த நீரின் அளவு மொத்த நீர்வளத்தைக் காட்டிலும் அதிகமாக இருந்தது என்பது தெரியவரும். எனவே, பங்கிட்டுக் கொள்வதற்கு உபரிநீர் எதுவும் இல்லை.

இருப்பினும், தற்போதைய நீர் உபயோகத்தைச் சிக்கனப் படுத்துவதின் மூலம், மேலும் பாசனப் பரப்பை அதிகரிக்க இயலும் என்ற கருத்தை இந்திய அரசு தெரிவித்தது. இதன் அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தன. இந்திய அரசு, காவிரிப்படுகை மாநில முதலமைச்சர்களின் பரிசீலனைக்காக, 1974-ஆம் ஆண்டில் ஒன்றும், 1976-ஆம் ஆண்டில் மற்றொன்றுமாக இரண்டு வரைவு ஒப்பந்தங்களை உருவாக்கியது. இவ்விரு வரைவு ஒப்பந்தங்களிலும் 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் முக்கிய சாராம்சமாகிய பழைய பாசனப் பகுதிகளுக்குப் பாதுகாப்பு அளிப்பது என்ற கோட்பாட்டிற்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. எனவே, இந்த வரைவு ஒப்பந்தங்கள் தமிழ்நாடு அரசால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

இதற்கிடையில் 1974-ஆம் ஆண்டிலிருந்து கர்நாடகம், தன்னிச்சையாக, 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தைக் கடைப் பிடிப்பதைக் கைவிட்டு இம்மாநிலத்திற்குச் சட்டப்படி கிடைக்க வேண்டிய காவிரி நீரை ஆண்டு தோறும் தடுத்து அந்நீரை தங்களுடைய நீர்த்தேக்கங்களில் தேக்கிக் கொண்டு உபரிநீரை மட்டுமே கீழே விட்டு வந்தது. மேலும் ஆட்சேபிக்கப்பட்ட திட்டங்களின் பணிகளைக் தங்குதடையின்றி தொடர்ந்து நிறைவேற்றி வந்தது. இத்திட்டங்களின் கீழ் பாசனம் பெறும் பகுதிகள் தொடர்ந்து விரிவாக்கப்பட்டன. கருநாடக அரசு, அதன் வரவு செலவு திட்டத்தில் அதிக நிதி ஒதுக்கி, இந்தத் திடடப்பணிகளை விரைந்து முடிப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது.

காவிரி நீர்ப்பிரச்சினையை நடுவர்மன்றத்தின் தீர்வுக்கு விடவேண்டும் என்ற கோரிக்கையை 29.05.75-ஆம் நாளிட்ட கடிதத்தில் தமிழக அரசு மீண்டும் வலியுறுத்திய போதிலும், காவிரி நீர்ப்பிரச்சினை தொடர்பாக இணக்கமான முறையில் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு மத்திய அரசு மேற்கொண்ட





பவானி கூடல்துறை

முயற்சிகள் அனைத்திற்கும், தமிழ்நாடு அரசு தன்னுடைய முழு ஒத்துழைப்பையும் தொடர்ந்து அளித்து வந்தது. மத்திய அமைச்சரின் முன்னிலையில் நடைபெற்ற காவிரிப்படுகை மாநில முதலமைச்சர்களின் எண்ணற்ற கூட்டங்களும், கருநாடகம், தமிழ்நாடு முதலமைச்சர்களுக்கிடையே நடைபெற்ற இருதரப்புப் பேச்சு வார்த்தைகளும், இப்பிரச்சினைக்கு எந்தவிதமான தீர்வையும் ஏற்படுத்தவில்லை. காவிரி நீர்ப்பிரச்சினை குறித்து தொடர்ந்து பேச்சு வார்த்தைகள் நடத்துவது பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை தாமதப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் தமிழ்நாட்டிற்கு பாதகத்தையும் ஏற்படுத்தி வருவதை அறிந்த அப்போதைய தமிழக முதல்வர் 16.06.86 அன்று பெங்களூரில் மத்திய அமைச்சர் கூட்டிய கூட்டத்தில், பேச்சுவார்த்தை தோல்வி அடைந்ததாக அறிவித்து காவிரி நீர்ப்பிரச்சினையை உடனடியாக நடுவர்மன்றத் தீர்ப்பிற்கு விடுமாறு கேட்டுக் கொண்டார். 1956-ஆம் ஆண்டு பன்மாநில நீர்த்தாவா சட்டத்தின்படி காவிரி நீர்ப்பிரச்சினையை நடுவர்மன்றத்திற்கு விடுமாறு கோரும் விண்ணப்பம் 06.07.86 அன்று மத்திய அரசிற்கு அனுப்பப்பெற்றது.

## காவிரிநீர்ப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக நடுவர் மன்றம்

காவிரி நீர்ப்பிரச்சினையை நடுவர்மன்றத் தீர்ப்பிற்கு விட மத்திய அரசிற்கு உத்திரவுகள் பிறப்பிக்குமாறு கோரி, 1983-இல் தமிழ்நாடு காவிரி நீர்ப்பாசன விளைபொருள் விவசாயிகள் நல உரிமைப்பாதுகாப்புச் சங்கம் உச்சநீதிமன்றத்தில் தொடுத்த 'ரிட்' மனுவில் விடுத்த வேண்டுகோளுக்கு தமிழக அரசு ஆதரவு அளித்தது. காவிரி நீர்ப்பிரச்சினையை நடுவர் மன்றத்தின் தீர்ப்புக்கு உடனடியாக விடவும், காவிரியில் தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய அளவுநீர் பெறவும், காவிரிப் படுகை மாநில அரசுகள், மற்றும் மத்திய அரசின் இசைவில்லாமல் கருநாடக அரசு மேற்கொண்ட திட்டப்பணிகளை தடுத்து நிறுத்தவும், நேரடியாகத் தலையிடுமாறு கோரித் தமிழ்நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அப்போதைய பாரதப் பிரதமருக்கு 4.12.86 அன்று மனு ஒன்றை அளித்தனர்.

நடுவர்மன்றம் அமைக்குமாறு கோரும் தமிழ்நாட்டின் வேண்டுகோளை நீண்டகாலமாக நிலுவையில் வைத்து வந்த மத்திய அரசு, பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கான சாத்தியக்கூறுகள் கண்டறியப்பட்டு வருவதாக உச்ச நீதிமன்றத்திடம் அவ்வப்போது தெரிவித்து வந்தது. உச்ச நீதிமன்றத்தின் உத்திரவுகளைத் தொடர்ந்து 1988 செப்டம்பரில் குடியரசுத் தலைவர் ஆட்சியில், தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், கருநாடக முதலமைச்சருடன் பேச்சு வார்த்தை நடத்தினார். ஆனால், காவிரி நீர்ப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கோ அல்லது கருத்து வேறுபாட்டினை குறைப்பதற்கோ அந்த பேச்சுவார்த்தைகள் பயனளிக்கவில்லை.

மத்திய நீர்வளத்துறை அமைச்சர், புது டெல்லியில் 5.4.90 அன்று, காவிரிப்படுகை மாநில முதலமைச்சர்கள் கூட்டம் ஒன்றை கூட்டினார். இதனைத் தொடர்ந்து இருதரப்புப் பேச்சு வார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டால் காவிரிப்படுகை மாநில முதலமைச்சர்களின் மற்றொரு கூட்டத்தை நடத்துகின்ற நோக்குடன், சென்னையில் 19.04.90 அன்று தமிழ்நாடு-கர்நாடக முதலமைச்சர்களிடையே இருதரப்புப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றது. எனினும், இக்கூட்டத்திலும் உடன்பாடு ஏதும் ஏற்படவில்லை. 'ரிட்' மனு உச்ச நீதிமன்றத்தில் 24.04.90 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபொழுது காவிரி நீர்ப்பிரச்சினையில் எந்தவித உடன்பாடும் ஏற்படாதது குறித்து உச்ச நீதி மன்றத்திடம் தெரிவிக்கப்பட்டது. மத்திய அரசு இது பற்றி என்ன முடிவு எடுப்பது என்பதை உச்ச நீதிமன்றத்தின் தீர்மானத்திற்கு விட்டது. மத்திய அரசு அதனுடைய சட்டப் படியான கடமைகளை நிறைவேற்றும் வகையில் காவிரி நீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காண நடுவர் மன்றம் அமைப்பது பற்றி அறிவிப்பை ஒருமாத காலத்திற்குள் அரசிதழில் வெளியிட வேண்டும் என உச்சநீதிமன்றம் 4.5.90 அன்று உத்தரவிட்டது.

மத்திய அரசு 2.6.90-ஆம் நாளிட்ட தன்னுடைய அறிக்கை எண் 21-1- 90-இல் காவிரி நீர்ப்பிரச்சினைக்கு நடுவர் மன்றம் அமைத்து அதற்கு புதுடெல்லியை தலைமையிடமாக அறிவித்தது. இந்த நடுவர் மன்றத்திற்குக் கீழ்க்கண்ட நீதிபதிகளை உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி நியமித்தார்.

1) பம்பாய் உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி திரு. சித்ததோஷ் முகர்ஜி ... தலைவர்
2) அலகாபாத் உயர்நீதிமன்றத்தின் நீதிபதி திரு. எஸ்.டி. அகர்வால் ... உறுப்பினர்
3) பாட்னா உயர்நீதிமன்றத்தின் நீதிபதி திரு. என்.எஸ். ராவ் ... உறுப்பினர்

அன்றே மத்திய அரசு காவிரி ஆறு மற்றும் அதன் படுகை தொடர்பாகத் தமிழ்நாடு அரசு தனது 6.7.86 நாளிட்ட எண் 17527/கே.2/82.110 கடிதத்தின் வாயிலாக எழும் நீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணும்படி நடுவர் மன்றத்திற்குக் கடிதம் அனுப்பிற்று.

பேச்சுவார்த்தைமூலம் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண விரும்பும் சாக்கிலேயே கருநாடக மாநிலம் நடுவர் மன்றம் அமைப்பதை 20 ஆண்டுகாலமாக தடுத்து வந்தது. தமிழ்நாடு தொடர்ந்து வேண்டுகோள் விடுத்தபோதிலும், கருநாடக மாநிலத்தின் அனுமதியின்றி புதிய கட்டுமானங்களைத் தடுத்து நிறுத்த எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளாத மத்திய அரசு, காவிரி நீர்ப்பிரச்சிகைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண இயலாது என்கிற கருத்து அவர்களுக்கு உடன்பாடில்லை, என்று கூறி நடுவர்மன்றம் அமைக்கத் தவறியது. உச்ச நீதிமன்றம், மத்திய அரசுக்கு உத்தரவு இட்டபின்னர்தான், இறுதியாக நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது.

## தமிழ்நாட்டுப் பாசனத்திற்கு ஏற்பட்ட பாதிப்பு

இடைப்பட்ட ஆண்டுகளில், யகாச்சித் திட்டம், வருணா கால்வாய்த் திட்டம் மற்றும் சிறு திட்டங்கள் எனப் பல்வேறு திட்டங்களைக் கருநாடக அரசு நிறைவேற்றத் தொடங்கியுள்ளது. 1971-72-இல் 6.83 இலட்சம் ஏக்கராகவும், 177 டி.எம்.சி. யாகவும், இருந்த பாசனப் பரப்பும் நீர் உபயோகமும், 1990-91-இல் 13.78 இலட்சம் ஏக்கராகவும், சுமார் 300 டி.எம்.சி.-யாகவும் உயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கருநாடகம் பாசனப் பரப்பையும் நீர் உபயோகத்தையும் மேலும் அதிக அளவில் அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய நீர்வரத்தினை அதிகாரமற்ற முறையில் கருநாடக அரசு தடுத்து நிறுத்திவருவதால், மேட்டூருக்கு வர வேண்டிய நீர்வரத்தின் அளவு மிகவும் குறைந்து வருகிறது. தமிழ்நாட்டிலுள்ள பாசனப் பரப்புக்கு நீர்வரத்து ஆண்டுக்காண்டு குறைந்து வருவதோடு மட்டுமல்லாமல், காலதாமதமாகவும், உறுதியற்ற நிலையிலும் இருந்து வருகிறது. இதன் காரணமாக, காவிரி டெல்டா பகுதியில் பாரம்பரியமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இருபோக சாகுபடி நிலங்களில், ஒருபோகப் பயிர் ஒன்றையே காலதாமதமாகவும் சிரமத்துடனும் நஷ்டத்திற்கும் துணிந்து பயிரிடுகின்ற நிலை உருவாகியுள்ளது. திறனுயர்த்தப்பட்ட விதைகள், இரசாயன உரம் இடுதல், பூச்சிக் கொல்லிகளைப் பயன்படுத்துதல், சிறந்த வேளாண்மை முறைகளைப் பின்பற்றுதல் ஆகியவற்றால் உற்பத்தித்திறன் அதிகரிக்கும் போக்கு நிலவிய போதிலும், மகசூல் அளவு குறைந்துள்ளது. போதிய அளவு தண்ணீர் வழங்கப்படாததால் பெருமளவு நிலப்பகுதி தரிசாக உள்ளது. டெல்டா பகுதியில் மொத்த உணவு உற்பத்தி மிகவும் குறைந்துள்ளது. மேட்டூர் அணையில் நீர் வரத்து மிகக்குறைவாக இருந்து வந்துள்ளதாலும், அணையில் தாமதமாக நீர்வருவதாலும், டெல்டாப்பகுதியில் பயிரிடப்படும் வகைகளில் அதிக அளவு மகசூல் தரக்கூடிய குறுவைப் பயிரை பல ஆண்டுகளாகப் பயிரிட இயலவில்லை. இது, குறிப்பாகச் சிறு உழவர்களுக்கும் நிலமற்ற இலட்சக்கணக்கான வேளாண் தொழிலாளர்களுக்கும் பெரும் இழப்பை ஏற்படுத்தியுள்ளது.



உழவர்களும், வேளாண் தொழிலாளர்களும் பல ஆண்டுகளாக அனுபவித்துவரும் இன்னல்களும், பாசனத்திற்கு நீர் கிடைக்குமா, கிடைக்காதா என்று முன்னரே அறிந்து கொள்ள இயலாத சூழ்நிலையில் அவர்கள் பயிரிட வேண்டியுள்ள சூழ்நிலையும் கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆண்டுக்காண்டு குறைந்துவரும் மேட்டூர் நீர்வரத்து பற்றிய புள்ளி விவரங்களிலிருந்து தெளிவாகத் தெரியவரும்.

(டி.எம்.சி)

| | ஜூன் முதல் செப்டம்பர் வரை | அக்டோபர் முதல் டிசம்பர் வரை | ஜனவரி முதல் மே வரை | ஓர் ஆண்டில் மொத்தம் |
|---|---|---|---|---|
| காவிரி உண்மைநிலை அறியும் குழு (CFFC) தொகுத்தபடி 1934-35 முதல் 1971-72 வரையிலான 38 ஆண்டுகளுக்கான சராசரி | 253.50 | 93.90 | 29.70 | 377.10 |
| 1974-75 முதல் 1983-84 வரையிலான 10 ஆண்டுகளின் சராசரி | 201.10 | 75.10 | 29.10 | 305.30 |
| 1984-85 | 182.20 | 81.05 | 21.11 | 284.36 |
| 1985-86 | 92.47 | 45.00 | 20.61 | 158.28 |
| 1986-87 | 96.84 | 63.25 | 27.27 | 187.36 |
| 1987-88 | 25.87 | 57.43 | 20.60 | 103.90 |
| 1988-89 | 119.62 | 33.44 | 28.31 | 181.37 |
| 1989-90 | 93.19 | 54.96 | 27.50 | 175.65 |
| 1990-91 | 82.54 | 40.29 | | |

டெல்டாப் பகுதியில் வாழும் மக்களின் துயரைத்துடைப்பதற்கும் அப்பகுதியில் வேளாண் பொருளாதாரத்தை சீரமைப்பதற்கும் 1924-ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் விதிமுறைகளுக்கு இணங்க காவிரியாற்றில் நீர் தொடர்ந்து கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வது இன்றியமையாதது என்பது நமது கோரிக்கையின் முக்கிய அம்சமாகும்.

## காவிரி நீர்த்தாவா நடுவர் மன்றத்தின் நடவடிக்கைகள்

காவிரி நீர்த்தாவா நடுவர் மன்றம் முதன்முதலாக 28.07.90 அன்று கூடியது. அன்றே தமிழ்நாடு அரசு இடைக்கால ஆணை ஒன்றைப் பிறப்பிக்குமாறு கோரி மனு ஒன்றை தாக்கல் செய்தது. அதில், படுகை மாநிலங்களின் முதல் அமைச்சர்களும், மத்திய அரசின் பாசனம்-மின்சக்தி அமைச்சரும் ஒப்புக் கொண்டபடி, 31.05.1972 அன்று நீர் உபயோகம் எந்நிலையில் இருந்ததோ அதற்குமேல் காவிரி நீரைத் தேக்கவோ அல்லது உபயோகிக்கவோ கூடாது எனக் கருநாடக அரசிற்கு கட்டளையிடுமாறு கோரியதுடன், தமிழ்நாடு அரசின் இசைவுடனோ அல்லது நடுவர் மன்றத்தின் கட்டளையின் பேரிலோயன்றி மற்றபடி காவிரியாற்றுப்படுகையில் அல்லது அதன் கிளைநதிகளில் ஏதேனும் புதிய திட்டங்களை மேற்கொள்ளுதல், அணைகள் நீர்த்தேக்கங்கள், கால்வாய்கள், முதலியவற்றை அமைத்தல் அல்லது திட்டங்களை நிறைவேற்றுதல் போன்ற நடவடிக்கைகள் ஏதும் எடுக்காவண்ணம் கருநாடக மாநிலத்திற்கு தடைவிதித்து ஆணை பிறப்பிக்குமாறும் தமிழகம் கோரியது. இவ்வாண்டு சம்பாப்பயிர்களுக்கு நீர் திறந்துவிட கருநாடகம் மறுத்த காரணத்தால் (முதற்போக பயிர் சாகுபடி ஏற்கெனவே கைவிடப்பட்ட நிலையில்) தமிழ்நாட்டில் பயிரிடப்பட்டுள்ள பயிர்களைப் பாதுகாப்பதற்காகக் கருநாடக மாநில நீர்த்தேக்கங்களிலிருந்து 20 டி.எம்.சி. நீரை திறந்துவிடுமாறு கருநாடக அரசிற்கு உத்தரவிடுமாறு நடுவர் மன்றத்திடம் 17.11.90 அன்று தமிழ்நாடு அரசு அவசர மனு ஒன்றையும் தாக்கல் செய்தது.

இடைக்கால ஆணைகளுக்கான மனுவும், நீர் திறந்து விடுவதற்கான அவசர மனுவும் நடுவர் மன்றத்திடம் விசாரணைக்கு வந்தபோது, இடைக்கால ஆணைகள் பிறப்பிப்பதற்கு நடுவர் மன்றத்திற்கு அதிகாரம் ஏதுமில்லை என்று கருநாடகமும், கேரளமும் வாதிட்டன. நடுவர் மன்றம் அதன் தீர்ப்பை ஒத்தி வைத்ததுடன், தமிழ்நாட்டில் பயிரிடப்பட்டுள்ள பயிர்களைப் பாதுகாப்பதற்கு நீர் விடுவது குறித்து தமிழகம் மற்றும் கருநாடக மாநிலங்களுக்கிடையே ஏதேனும் ஒப்பந்தம் ஏற்பட்டால் அது குறித்து நடுவர் மன்றத்திடம் தெரிவிக்கப்படலாம் என்று ஆணையிட்டது. மனிதாபிமானத்தின் பேரில் கூட தமிழ்நாட்டிற்கு நீர் திறந்துவிட இயலாது என்று 15.12.90 அன்று நடைபெற்ற கருநாடக அரசின் அமைச்சரவை முடிவு செய்தது.

இடைக்கால ஆணைகள் கோரும் மனுக்கள் மீது நடுவர் மன்றம் 05.01.91-ஆம் நாள் அன்று வழங்கிய தீர்ப்பில் 1956-ஆம் ஆண்டு பன்மாநில நீர்த்தாவா சட்டத்தில் 4-ஆம் பிரிவின்கீழ் இடைக்கால நிவாரணம் அளிப்பது பற்றி குறிப்பாக, தாக்கீது ஒன்றை மத்திய அரசு நடுவர் மன்றத்திற்கு அனுப்பினாலன்றி இடைக்கால நிவாரணம் அளிப்பதற்கு நடுவர் மன்றத்திற்கு அதிகாரம் இல்லை எனவும், இடைக்கால ஆணை/தடை ஆணை பிறப்பிப்பதற்காக தமிழ்நாடு தாக்கீது செய்த மனுக்கள் சட்டப்படி ஏற்றுக் கொள்ளத்தக்கவையல்ல என்றும் கூறியது.

நடுவர் மன்றத்தின் ஆணைகளுக்கு எதிராகத் தமிழ்நாடு அரசு 10.01.91-ஆம் நாளன்று இந்திய உச்ச நீதிமன்றத்தில் சிறப்பு அனுமதி மனு (Special Leave Petition) ஒன்றைத் தாக்கல் செய்தது. சிறப்பு அனுமதி மனு அனுமதிக்கப்பட்டு, 19.03.91-ஆம் நாளன்று 3 நீதிபதிகள் கொண்ட ஆயத்தின் விசாரணைக்கு வரும் வகையில் ஒத்திவைக்கப்பட்டது. கருநாடக மாநில நீர்த்தேக்கங்களிலிருந்து உடனடியாக நீர் திறந்துவிடுவதைக் கோரும் இடைக்கால விண்ணப்பத்தின் மீதும், கருநாடகம் திட்டங்கள் மேற்கொள்வதைத் தடை செய்வது குறித்தும், ஆணைகள் எவையும் பிறப்பிக்கப்படமாட்டா என்றும் அறிவித்தது.

## புனிதமாகிய காவிரி!

திருமால் தேவரிஷிகளைப் பார்த்து, கங்கை என் கால்களை மட்டும் கழுவிப் பவித்திரம் பெற்றாள். காவிரி என் அங்கம் முழுவதையும் தழுவிக் கங்கையைக் காட்டிலும் உத்தமமான நதியானாள்'' என்று தெரிவித்தார்; அதற்குப்பின் கங்கையைப் பார்த்து, ''ஏ, கங்கா! நீ காவிரியிடம் பொறாமை கொள்ளாதே'' என்றும் போதித்தார்.

—ஆதாரம்: ஸ்காந்த புராணம்
—துலாக்காவிரி மகாத்மியம்

மாநிலங்கள், காவிரி நீர்ப்பிரச்சினை பற்றி தமது நிலையை விளக்கும் மனுக்களை 18.09.90 அன்று நடுவர் மன்றத்தில் தாக்கல் செய்தன. தமிழ்நாடு அரசு தனது மனுவில் 1892 மற்றும் 1924 ஆண்டு ஒப்பந்தங்களின் முக்கியத்துவத்தையும் விதிமுறைகள் குறித்தும் கருநாடக அரசு இந்த விதிமுறைகளை எவ்வாறு மீறி உள்ளது என்பது பற்றியும், மிக விரிவாக விளக்கி, இந்த ஒப்பந்தங்களின் அடிப்படையில்தான் தற்போதைய நீர்த்தாவா தீர்க்கப்பட வேண்டுமென்று கோரியுள்ளது. இவ்வொப்பந்தங்களின் விதிமுறைகளுக்கேற்ப கர்நாடக அரசு செயல்பட வேண்டுமென உத்தரவுகள் பிறப்பிக்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மாநிலங்களுக்கிடையேயான ஒப்பந்தங்களை 1974-ஆம் ஆண்டில் கருநாடக அரசு புறக்கணித்துச் செயல்பட்டதினால், அதன்பிறகு ஆண்டுதோறும் தமிழ்நாட்டிற்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்தும் தமிழ்நாடு அரசு அதன் வழக்கில் விரிவாக எடுத்துரைத்துள்ளது.

மன்னர் ஆட்சியின் கீழிருந்த மைசூரும், சென்னை மாநிலமும் செய்து கொண்ட ஒப்பந்தங்கள், ஒப்பந்தங்களே இல்லை என்றும், அவை கருநாடகத்தை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தா என்றும் கருநாடக அரசு அதன் மனுவில் கூறியுள்ளது. தற்போதுள்ள கருநாடகத்தில் முன்னாள் மைசூர் ஒரு பகுதிதான் எனவும், இப்போதைய நிலையில் அம்மாநிலத்தின் உரிமைகளும் கடமைகளும் சட்ட ரீதியாகத் தற்போது கணிசமான அளவிற்கு விரிவடைந்துள்ளது என்றும், நியாயமான பங்கீட்டின் அடிப்படையில் தன்னுடைய பங்கினைப்பெற கருநாடகம் உரிமை பெற்றுள்ளது என்றும், தமிழகம் சம உரிமை அடிப்படையிலும், நியாயமான பங்கீட்டு அடிப்படையிலும் உரிமை கோரலாமே தவிர ஏனைய வகையில் எவ்வித உரிமையும் தமிழகத்துக்குக் கிடையாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'கேரளம், மாநிலங்கள் சீரமைப்பின் விளைவாகப் புதிதாக உருவாக்கப்பட்ட மாநிலம் என்றும், எனவே, 1892, 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தங்கள் இம்மாநிலத்தைக் கட்டுப்படுத்தாது என்றும் கேரள அரசு அதன் மனுவில் கூறியுள்ளது. கேரளம், காவிரிப்படுகையின் மொத்த நீர்வளத்தில் சுமார் 20 சதவீதம் அதன் பகுதியிலிருந்து கிடைக்கப்பெற்ற போதிலும், முன்னாள் மலபார் பகுதி முற்றிலுமாகப் புறக்கணிக்கப்பட்டு பின்னடைந்த பகுதியாக உள்ளதென்றும், தனக்கு அளிக்கப்படும் பங்கினை மின் உற்பத்திக்காக மற்ற படுகைக்கு நீரைத் திருப்பிவிடுவது உட்பட அதன் தேவைகளுக்கும், விருப்பத்திற்கும் ஏற்ப பயன்படுத்தவும் கேரளத்திற்கு குறைந்த அளவாக 99.8 டி.எம்.சி. நீர் தேவைப்படுகிறது என்றும் அதன் மனுவில் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு, கருநாடகம், கேரளம் ஆகிய மாநிலங்கள் தமது எதிர்மனுக்களை மார்ச் 5-ஆம் தேதி தாக்கல் செய்தன. புதுச்சேரி (பாண்டிச்சேரி) மாநிலம் எதிர் மனு தாக்கல் செய்ய கால அவகாசம் கேட்டுள்ளது.

# கரிகாற் சோழன் கட்டிய கல்லணை

**கா**வேரி கடலில் கலப்பதற்கு முன் அதனுடைய நீரைப் பாசனத்திற்குப் பயன்படச் செய்யும் முயற்சியில் கல்லணை நிறுவப்பட்டது ஒரு அற்புதச் சாதனை, கிருஷ்ணராஜசாகரம், மேட்டூர்த் தேக்கம் போன்ற இன்றைய பொறியியல் சாதனைகள் ஏற்படுவதற்குப் பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு முன்பே கட்டப்பட்ட கல்லணை காலத்தை வென்று நிற்கிறது. ஆங்கிலத்தில் மிகவும் பொருத்தமாக Grand Anicut என்று கூறப்படும் கல்லணையின் அமைப்பைக் கண்டு பல மேல் நாட்டுப் பொறியியல் நிபுணர்கள் வியந்திருக்கிறார்கள். பதினேழாம் நூற்றாண்டில் ஈஜிப்ட் நாட்டிலிருந்து டில்லியில் மொகலாய சமஸ்தானத்திற்கு வந்திருந்த ஒரு தூதுக்குழு தென்னிந்தியாவில் கட்டப்பட்டிருந்த ஒரு பெரிய அணைக்கட்டைப் பார்க்க வேண்டும் என்று விரும்பியதாம். மொகலாய மன்னன் அந்த தூதுக் குழுவினரைக் கல்லணைக்கு அனுப்பியதாகவும் ஒரு கதை வழங்கி வருகிறது. ஆற்று நீரைக் கட்டுப்படுத்தி பாசனத்திற்கு உதவும் முயற்சிகளில் கல்லணை ஒரு சீரிய சான்றாக வரலாற்றில் இடம் பெற்றிருப்பது இது போன்ற பல நிகழ்ச்சிகளாலும் அறியப்படுகிறது.

கங்கைக் கால்வாய்த் திட்டத்தின் அலுவலரான Baird Smith என்பவர் 1853-ஆம் ஆண்டு கல்லணைக்குச் சென்று பார்த்துவிட்டு எழுதிய அறிக்கையில், நவீன பொறி இயல் சாதனங்கள் கிடைக்கப் பெறாத காலத்தில் இத்தகைய அரிய சாதனை புரியப்பட்டதைப் பாராட்டியிருக்கிறார். அந்தக் காலத்திய பாசன அமைப்புகளில் துணிச்சலான கட்டமைப்பும், நீர்ப்பாசனப் பொறியியல் பற்றிய ஆழ்ந்த அறிவும் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டிருக்கிறார். 1080

**இரண்டாம் அட்டை சொல்லும் செய்தி**

அடி நீளத்திற்கு அமைக்கப்பட்டிருக்கும் கல்லணையின் அகலம் 40 முதல் 60 அடி வரையிலானது. 15 முதல் 18 அடி ஆழத்திற்கு நிறுவப்பட்ட இந்த அமைப்பு ஒரு பாம்பு போல் நெளிந்து வளைந்து செல்கிறது. 1839-ஆம் ஆண்டில் இந்த அணையின் மீது ஒரு பாலம் கட்டப்பட்டபோது அந்தப் பாலத்தின் வடிவமும், அணையின் வடிவத்தையொட்டி வினோதமாகவே அமைந்தது. அந்த சமயத்தில் பிரிட்டிஷ் பொறியியல் நிபுணர்கள் கல்லணைக்குச் சீரமைப்பு முயற்சிகள் மேற்கொண்டபோது, பழமை மிகுந்த அந்த அணைக்கட்டில் குறுக்கே பன்னிரண்டு அடி ஆழம் வெட்ட நேரிட்டது. அணையின் கற்களுக்கிடையே பொருத்தமான சிமெண்ட் போன்ற பொருள் ஒன்றும் உபயோகிக்கப்படவில்லை. வெறும் களி மண்ணே பயன்படுத்தப்பட்டது என்ற உண்மை அப்பொழுது பெரும் வியப்பை அளித்தது. கல்லும், களிமண்ணும் மட்டுமே சேர்ந்த ஒரு அமைப்பு, 1600 ஆண்டுகளுக்கும் மேலாகக் காவேரியின் வெள்ளத்தைத் தடுத்து நின்றது என்ற அதிசயம், பின்னர் நவீன சாதனங்களுடன் மேற்கொள்ளப்பட்ட வெள்ளக்கட்டுப்பாடு, பாசன அலுவலல்கள் போன்ற முயற்சிகளுக்கு ஊக்கம் ஊட்டிற்று.



கல்லணை, சோழ மன்னன் கரிகாலனால் கட்டப்பட்டது என்று கொள்வதற்கு இலக்கியச் சான்றுகள் பல உள்ளன. கி.பி.முதல் நூற்றாண்டு இறுதியில் ஆண்ட கரிகாலன் இரு பெரும் போர்களில் பல எதிரிகளை முறியடித்து வெற்றி அடைந்ததையும், காவேரியின் போக்கைக் கட்டுப்படுத்தி, கழனிகளில் எல்லாம் தானியம் நிறைந்த கதிர் குலுங்கும் செழிப்பை உண்டாக்கியதையும் பட்டினப்பாலை, பொருநர் ஆற்றுப்படை போன்ற பாடல்களில் காணலாம்.

கல்லணையைக் கரிகாலன்தான் அமைத்தான் என்ற திட்டவட்டமான குறிப்பு இந்த இலக்கியச்சான்றுகளில் இல்லையென்றாலும், கரை புரண்டோடிய காவேரியை அவன் கட்டுப்படுத்தினான் என்று தெலுங்குச் சோழ கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ராஜேந்திர சோழனின் திருவாலங்காட்டுச் செப்பேடுகளில் கரிகாலன் காவேரிக்குக் கரையமைத்தான் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அகண்ட காவேரியாகப் பாய்ந்து ஸ்ரீரங்கத்தை நெருங்கும்பொழுது தன்னிடமிருந்து பிரிந்த கொள்ளிடத்துடன், ஸ்ரீரங்கத்தைத் தாண்டிய பின் காவேரி மீண்டும் சேருகிறாள். இந்த இடத்தில்தான் கல்லணை நிறுவப்பட்டிருக்கிறது. கொள்ளிடத்தின் படுகை மட்டம் தாழ்வாக இருப்பதால் காவேரியின் நீர் முழுவதும் உள்ளூர்க் கால்வாயின் வழியாகக் கொள்ளிடத்திற்குள் பாய்ந்து வீணாகி விடாமலிருப்பதற்காகத்தான் கல்லணை கட்டப்பட்டதென்று தெரிகிறது. கல்லணைக்கப்பால் காவேரி பல கிளைகளாகப் பிரிந்து, சுற்றியுள்ள நிலங்களுக்கெல்லாம் வளம் கொடுக்கிறாள்.

**- 'நடந்தாய் வாழி காவேரி' என்னும் நூலிலிருந்து.**



காவிரி ஆற்றின் பாசன வசதி:

## கவனத்தில் கொள்ள வேண்டிய கருத்துக்கள்

★ தமிழ்நாட்டிற்கு காவிரி ஒன்றே பெரிய ஆறாகும். கருநாடகத்தில் காவிரி மட்டு மன்றி கிருஷ்ணா ஆறும் (துங்கபத்திரா கிளை நதி உட்பட), கோதாவரியாற்றின் கிளை நதிகளும், மற்றும் மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகள் பலவும் உள்ளன. கேரளத்தில், மேற்கு நோக்கிப் பாயும் பல ஆறுகளின் உபரிநீர் அரபிக் கடலில் கலக்கின்றது.

★ தமிழ்நாட்டின் 34 சதவீத நிலப்பகுதி காவிரிப் படுகையில் அமைந்துள்ளது. கருநாடகத்தில் காவிரிப் படுகையின் பரப்பு அதன் நிலப்.பகுதியில் 17 சதவீதம் மட்டுமேயாகும். கேரளத்தில் இது 7.4 சதவீதம் மட்டுமேயாகும்.

★ தமிழ்நாட்டில் மேற்பரப்பு நீர்வளம் மிகக் குறைவே ஆகும். தமிழ்நாட்டின் நபர்வாரி நீர்வளம் 0.026 மி.க.அடி மட்டுமே. (இது 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்திற்கு இணங்க காவிரி நீர்வரத்து கிடைப்பதாகக் கொண்டு கணக்கிடப்பட்டுள்ளது). கருநாடகத்தில் நபர் வாரி நீர்வளம் 0.093 மி.க. அடியாகவும் கேரளத்தின் நபர்வாரி நீர்வளம் 0.10 மி.க.அடியாகவும், இந்தியாவின் நபர்வாரி சராசரி நீர்வளம் 0.09 மி.க. அடியாகவும் உள்ளது.

★ தமிழ்நாட்டில், கால்வாய்ப் பாசனத்தில் 85 சதவீதம் காவிரி ஆற்றையே நம்பியுள்ளது.

★ தமிழ்நாட்டில் மக்கட்தொகைச் செறிவு கருநாடகத்தில் உள்ளதைப்போல இருமடங்காகும்.

★ தமிழ்நாடு, தன் உணவு உற்பத்திக்குக் காவிரியையே பெரிதும் சார்ந்துள்ளது.

சென்னை அரசின் நீர் உபயோக உரிமைகளுக்குப் பாதுகாப்பளிப்பதற்கு காவிரியில் மேல் அணையில் தேவைப்படும் நீர் அளவு குறித்தும் அத்தகைய நீர்வரத்தை உறுதி செய்வதற்கான வழிமுறைகள் குறித்தும் இரு அரசுகளுக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இப்பிரச்சினை 1913-ஆம் ஆண்டில் அலகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதி திரு. ஹென்றி கிரிஃபின் அவர்களுடைய மத்தியஸ்தத்திற்கு (Arbitration) விடப்பட்டது. அப்போதைய பாசன இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. எம். நெதர்ஸோல் என்பவர் மதிப்பீட்டாளராக செயல்பட்டார். இந்த மத்தியஸ்தத்தில் 1914-ஆம் ஆண்டு தீர்ப்பளிக்கப்பட்டது. இத்தீர்ப்பை எதிர்த்து, சென்னை அரசு மத்திய அரசுக்கு முறையீடு செய்தது. ஆனால், மத்திய அரசு, 1916 ஏப்ரலில் இத்தீர்ப்பிற்கு ஏற்பளிப்பு வழங்கியது. அதனை அடுத்து சென்னை அரசு மத்திய அரசின் முடிவை எதிர்த்து இங்கிலாந்தில் இந்திய அரசுக்கான செயலருக்கு (Secretary of State) மேல் முறையீடு அனுப்பியது. சென்னை அரசின் மேல் முறையீட்டை அனுமதிக்க ஏற்ற காரணங்கள் உள்ளன என இந்திய அரசுக்கான செயலர் (Secretary of State) முடிவு செய்தார். மேலும், நடுவர் தீர்ப்புக்கு மத்திய அரசு அளித்த பின்னிசைவை ரத்து செய்வதை எதிர்த்து, மேல்முறையீடு செய்யவோ, அல்லது நீதிமன்ற உதவியின்றி சென்னை அரசுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி ஒருமித்த தீர்வு காணவோ அல்லது புதியதொரு மத்தியஸ்தம் கோரவோ மைசூர் அரசுக்கு உரிமை அளித்தார்.

சென்னை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி சுமுகமான முடிவுக்கு வர மைசூர் அரசு விரும்பியது. 1924 வரையில் நடந்த நீண்டகால பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர், இவ்விரு அரசுகளுக்குமிடையே 1924 பிப்ரவரி 18-ஆம் நாளன்று ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. இதுவே, 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தம் எனப்படுகிறது.

மைசூர் அரசு கிருஷ்ணராஜசாகர் அணையைக் கட்டுவதற்காக 1892-ஆம் ஆண்டு ஒப்பந்த விதிகளின்படி சென்னை அரசின் இசைவைக் கோரியதன் தொடர்பாகவே 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தம் ஏற்பட்டது. எனினும், அதேசமயத்தில் காவிரிப்படுகையில் மேற்கொண்டும் பாசன வளர்ச்சிக்கு நீர்ப் பங்கீடு செய்து கொள்வது பற்றி இரு அரசுகளிடையே ஏற்பட்ட உடன்பாடுகளும் இந்த ஒப்பந்தத்தில் இடம் பெற்றுள்ளன. மைசூர் அரசு அணையில் நீர்த்தேக்குவதில் ஒப்பந்தத்தின் இணைப்பு 1- இல் விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் கண்டிப்பாகப் பின்பற்றப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டே 44.827 டி.எம்.சி. கொள்ளளவுக்கு கிருஷ்ணராஜசாகரம் நீர்த்தேக்கம் கட்டப்படுவதற்கும் 1.25 இலட்சம் ஏக்கர் புதிய பாசனம் ஏற்படுத்தப்படுவதற்கும் சென்னை அரசு இசைவளித்தது. மேற்கொண்டு பாசன வளர்ச்சிக்கு நீர்ப்பங்கீடு பற்றி இவ்விரு அரசுகளும், கீழ்க்கண்டவாறு ஒப்புக் கொண்டன.

அ) சென்னை அரசு 93.50 டி.எம்.சி. கொள்ளளவிற்கு மேட்டூர் அணையை கட்டி புதிதாக 3,01 இலட்சம் ஏக்கர் நிலத்திற்கு பாசனம் அளிக்கலாம்.

ஆ) மைசூர் அரசு 1892-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் விவர அட்டவணை 'A'-இல் குறிப்பிடப்பட்டுள்ள காவிரி மற்றும் அதன் கிளை நதிகளிலும் மொத்தத்தில் 45 டி.எம்.சி. கொள்ளளவிற்கு பின்வரும் நிபந்தனைக்குட்பட்டு புதிய நீர்த்தேக்கங்களைக் கட்டி 1.10 இலட்சம் ஏக்கர் நிலங்களுக்கு பாசனம் அளிக்கலாம்.

(1) இந்நீர்த் தேக்கங்களில் நீர்த்தேக்குவது 1924 ஒப்பந்தத்துடன் இணைக்கப்பட்ட கிருஷ்ணராஜசாகரில் நீர்த் தேக்குவதற்கான விதிமுறைகள் படி சென்னைக்கு சேரவேண்டிய நீரின் அளவு குறைந்துவிடாதபடி அமையவேண்டும்.

(2) ஒப்பந்தத்தின் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் பின்பற்றப்படுவதை தமிழ்நாடு அரசு உறுதி செய்து கொள்வதற்கு ஏதுவாக அத்தகைய நீர்த்தேக்கத் திட்டங்கள், அவற்றில் தேக்கி வைக்கும் நீரின் அளவு, ஆகியவை குறித்த முழு விவரங்களையும் மைசூர் அரசு சென்னை அரசுக்கு அளிக்க வேண்டும்.

இ. சென்னை அரசு தனது மாநில எல்லைக்குள் காவிரியின் துணை நதிகளில் புதிய பாசன நீர்த்தேக்கங்கள் அமைத்துக் கொள்ளலாம். சென்னை அரசு பவானி, அமராவதி, நொய்யில் நதிகளில் நீர்த்தேக்கம் அமைத்தால் அதற்கு ஈடாக அதன் கொள்ளளவில் 60 சதவீதத்திற்கும் மேற்படாதவாறு ஒரு நீர்த்தேக்கம் தனது எல்லைக்குள் காவிரியின் துணைநதிகளில் ஒன்றில் அமைத்துக் கொள்ள மைசூர் அரசுக்கு உரிமை உண்டு; ஆனால், அத்தகைய புதிய நீர்த்தேக்கத்தில் நீர்த் தேக்குவது இந்த ஒப்பந்தத்தின்படி சென்னை அரசுக்கும், மைசூர் அரசுக்கும் கிடைக்க வேண்டிய அளவையோ அல்லது இந்த ஒப்பந்தம் செய்துகொண்ட 50 ஆண்டுகளுக்குப் பிறகு ஒப்பந்தத்தின் சில பகுதிகள் மறுபரிசீலனைக்கு வரும்பொழுது மேலும் பகிர்ந்து கொள்ள எதிர்பார்க்கப்படும் உபரிநீரின் பங்கீட்டையோ எந்த வகையிலும் குறைக்கவோ, அல்லது பாதிக்கவோ கூடாது.

1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகள் போக இதர ஏற்பாடுகள் தொடர்பாக 1892-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் விதிமுறைகளே தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் என்றும் இந்த ஒப்பந்தம் வலியுறுத்துகிறது.

1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் 10(xi) பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய நிபந்தனை ஒன்று என்னவென்றால் இந்த ஒப்பந்தம் கையெழுத்தாகி 50 ஆண்டுகள் முடிவடைந்த பின்னர் ஒப்பந்தத்தில் 10(iv) முதல் 10(vii) வரையான விதிகளில் கூறப்பட்டுள்ள வரம்புகளும், ஏற்பாடுகளும் அதுவரை கிடைக்கப்பெற்ற அனுபவ அடிப்படையிலும் அந்தந்த மாநில எல்லைக்குள் பாசன வசதியை மேலும விரிவுபடுத்துவதற்கான வாய்ப்புகளின் ஆய்வின் அடிப்படையிலும் மறுபரிசீலனைக்கும், மறுபரிசீலனையின்போது இருதரப்பாலும ஒப்புக் கொள்ளப்படும் சேர்க்கைகளுக்கும் மாறுதல்களுக்கும் உட்பட்டவையாகும். இந்த மறுபரிசீலனைக்கான பிரிவில் ஒப்பந்தத்தின் 10(i) முதல் 10(iii) வரையான விதிகள் சேர்க்கப்படவில்லை. இந்த விதிகள் கிருஷ்ணராஜசாகர் அணைக்கட்டுமானம் பற்றியும், அவ்வணையில் நீர்த்தேக்குவதில் ஒப்பந்தத்தின் இணைப்பு 1-இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும், என்பதையும் பற்றியவையாகும். எனவே, 1924 ஒப்பந்தத்தின் 10(i) முதல் (iii) வரையிலான விதிகள் நிரந்தரமானவையாகும். அவை எக்காலத்திலும் மறு ஆய்வுக்கோ மாறுதலுக்கோ உட்பட்டவையல்ல.

நீர்ப்பங்கீட்டுப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காண மைசூர் அரசு தெரிவித்த தெளிவான விருப்பத்தின் பேரில் பல ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட பரஸ்பர விவாதங்கள், பேச்சுவார்த்தைகளின் விளைவாகவே 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த பேச்சுவார்த்தைகள் இரு அரசுகளின் பொறியாளர்களுக்கிடையிலும், ஆட்சியாளர்களுக்கிடையிலும் மற்றும் மைசூர் மன்னர், சென்னை ஆளுநர் ஆகியோர் மட்டத்திலும் நடைபெற்றுள்ளன என்று தெரிகிறது. ஆற்றின் பல்வேறு இடங்களில் நீர்வரத்து அளவிகளையும் அவற்றிடையேயான தொடர்பையும் நிர்ணயிக்க இருமாநில அலுவலர்களும் இணைந்து நீரளவு மதிப்பீடுகளும் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், இருதரப்பினர்களுக்கிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின்போது இருதரப்பினாலும் எடுத்துரைக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள தத்துவமும் இந்த ஒப்பந்தம் உருவாவதற்கு அடிப்படையாய் அமைந்துள்ளதுமான தத்துவமும் என்னவென்றால்:

அ) இந்த ஆற்றுப்படுகையில் வேறு எந்த ஒரு பகுதியிலும் புதிய திட்டம் எதையும் மேற்கொள்வதற்கு முன்னர் இப்படுகையின் பலபகுதிகளிலும் உள்ள தற்போதைய பாசனத்தின் தேவை முழுமையாகக் கருத்தில் கொள்ளப் பட வேண்டும்.

ஆ) இந்தப்படுகையில் மேற்கொண்டு பாசன விரிவாக்கத்திற்குக் கிடைக்கக்கூடிய நீர் பாரபட்சமின்றி நியாயமான முறையில் பங்கீடு செய்து கொள்ளப்படும்.

தற்போது பாசன வசதி பெறுகின்ற நிலங்களில் பெரும்பகுதி, மேல் அணைக்குக் கீழே, காவிரி டெல்டா பகுதியில் அமைந்துள்ளது. இப்பாசனத்தின் பாதுகாப்புக்கு உறுதி செய்யும் வகையிலேயே கிருஷ்ணராஜசாகர் நீர்த்தேக்க விதிமுறைகள் தீட்டப்பட்டுள்ளன. கிருஷ்ணராஜசாகர் நீர்த்தேக்கத்திற்கு நாள்தோறும் வரும் நீரை இவ்விரு மாநிலங்கள் அன்றன்றைக்கு எவ்வாறு பகிர்ந்து கொள்ள வேண்டும், சென்னை மாநிலத்திற்கு எவ்வளவு நீர் விடப்பட வேண்டும், மைசூர் அரசு கிருஷ்ணராஜசாகர் நீர்த்தேக்கத்தில் எந்த அளவுக்கு நீரைத் தேக்கிக் கொள்ளலாம் என்பதற்கான முறைகள் இவ்விதிகளில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த நீர்ப்பங்கீடு ஒரு பொறியியல் சூத்திர வாயிலாகக் குறிப்பிடப்படுகிறது. இதனை பின்வருமாறு எளிய முறையிலும் விளக்கலாம்.

சென்னை மாநிலம், தனது வழக்கமான நீர்உபயோகத்திற்கென மேல் அணையில் ஒரு குறிப்பிட்ட அளவு நீரைப்பெற உரிமை உடையதாகும். ஆனால், இந்த நீரளவு, நிலங்களின் தேவைக்கேற்ப மாதத்திற்கு மாதம் வேறுபடும். மேல் அணையில் காவிரிப்படுகை அணையின் வடக்குப்பகுதியில் அமைந்துள்ள அளவை (Gauge) படி ஒவ்வொரு மாதமும் கிடைக்க வேண்டிய நீரளவு கீழ்க்கண்டவாறு:

| மாதம் | மேல் அணையில் | | கிருஷ்ணராஜசாகர் நீர்த்தேக்கத்தில் |
|---|---|---|---|
| | அளவையில் நீர் உயரம் (அடிகள்) | இதற்கொத்த நீரளவு (வினாடிக்கு | இதற்கொத்த நீர்வரத்து கனஅடி அளவு) |
| ஜூன் | 6½ | 29,800 | 18,625 |
| ஜூலை | 7½ | 40,100 | 25,063 |
| ஆகஸ்ட் | 7½ | 40,100 | 25,247 |
| செப்டம்பர் | 7½ | 35,000 | 21,875 |
| அக்டோபர் | 6½ | 29,800 | 8,940 |
| நவம்பர் | 6 | 25,033 | 8,894 |
| டிசம்பர் | 3½ | 8,913 | 2,674 |
| ஜனவரி | 3 | 6,170 | 1,851 |

## ரிக் வேதத்தில் காவிரி

**தொன்று தொட்டு, அழியாப் பெருமையுடன் விளங்குவது காவிரி. அதன் பெருமையை ரிக் வேதம் 1-179-1; 1-179-3; 1-179-4 ஆகிய ரிக்குகளில் விளக்குகிறது.**

**லோபர் முத்ரை உலக நன்மையின் பொருட்டு ஸஹ்ய மலையில் கவேரர் என்னும் ரிஷியின் மகளாகப் பிரம்மாவினால் கொடுக்கப்பட்டாள் என்றும், பின்னர் காவிரி என்னும் நதியாகப் பொங்கிப் புறப்பட்டாள் என்றும் ரிக் வேத ரிக்குகள் புலப்படுத்துகின்றன. அகத்திய முனிவர், லோபா முத்ரையை நோக்கிக் கீழ்க் கண்டவாறு கூறுகிறாள்:- ''ஏ தேவி! நீ எனது காரணம் கருதாத கருணையால் எந்த ஜீவர்களுக்கும் அறிந்தோ அறியாமலோ ஏற்பட்ட முற்பிறப்புக் குற்றங்களை எளிதில் நிவர்த்தி செய்வாயாக: மேலும் தாய், பசியினால் வருந்தும் குழந்தைக்குப் பால் கொடுத்து, அக்குழந்தையின் துன்பத்தைப் போக்கி உற்சாகப்படுத்துவது போல், நீ நதி வடிவில் தக்கண பாரத பூமியில் விளங்குவாயாக!''**

**மேலும் ஸ்காந்த, ஆக்னேய, பிரும்மகைவர்த்த புராணங்களிலும், இதிகாசங்களிலும் காவிரியின் பெருமை விளக்கப்பட்டுள்ளது. பாகவதம் 11-ஆம் ஸ்கந்தம் 5-ஆவது அத்தியாயத்தில் 'காவிரியின் நீரை எவர் எவர் குடிக்கிறார்களோ அவர்கள் தூய சித்தமுள்ளவராய் வாசுதேவனிடத்தில் பக்தியுள்ளவர்களாய் விடுகிறார்கள்' என்று கூறப்பட்டுள்ளது.**

ஆதாரம்:திரு.பி.மகாதேவன் அய்யர் எழுதிய
'ஸ்ரீ காவிரி ரஹஸ்யம்' என்னும் நூலிலிருந்து.

# காவிரிக்கு ஒரு கடிதம்...

காவேரி நீநலமா! கடிதத்தில் நாங்களெல்லாம்
நலம்என்று உன்னிடம் நவிலத்தான் ஆசையடி!

நீயில்லாத் தமிழகம் நிலவில்லா நீள்வானம்!
தாயில்லா வீடு! தமிழில்லா இசைப்பாடல்!

ஆகையினால் இந்தமடல் அவசரமாய் வருகிறது!
தாகம் எங்களுக்கும், தமிழுக்கும் கூடத்தான்!

என்ன காரணம் ஏன்வரநீ மறுக்கின்றாய்!
உன்னைக் காணாமல் உளமுருக எழுதுகிறோம்!

'வான்பொய்த்த போதும் தான்பொய்யாள்' என்றாரே
ஏன்பொய்த்தாய் காவேரி? இதுசரியா காவேரி?

பச்சைப் பயிர்கருக படீரென்று தரைபிளக்க
உச்சிக்கதிர் உயிரை உறிஞ்சுதடி காவேரி!

குடகுமலைக் கைகாரி கோபமென்ன? அருளையெல்லாம்
அடகுவைத்து விட்டாயா ஆருயிரே காவேரி!

பாலாறு தமிழ்நாட்டில் பாழாறாய்ப் போனதுபோல்
மேலுமொரு பாழாறாய் மெலிவாயோ காவேரி!

ஆறில்லா ஊருக்கு அழகுபாழ் என்றாரே,
நீரில்லா ஆற்றுக்கு என்னபெயர் காவேரி?

புனலோடும் தமிழகத்தில் புதிய வரலாறாய்
மணலோடச் செய்தாயே மாதரசி காவேரி!

புனலோட்டம நேற்றைக்கு, மணலோட்டம் இன்றைக்கு,
கனலோட்டம் நாளைஎன்ற கதைசரியா காவேரி!



தஞ்சையெலாம் புஞ்சை! தமிழ்நாடு பாலைவனம்!
பஞ்சையர்கள் நாங்கள்! இந்தப் பழி யுனக்கோ காவேரி!

தண்ணீரைப் பாராமல் தவிக்கின்ற தஞ்சைமகள்
கண்ணீரால் கடலுப்பு கூடுதடி காவேரி!

பிறந்தஇடம் போதுமென்னும் பெண்ணாநீ! மங்கையர்க்குச்
சிறந்தஇடம் புகுந்தஇடம்; தெரியாதா காவேரி!

தாய்வீட்டுக் கேபெண்கள் தனியுடைமை எனச்சொன்னால்
சேயுண்டோ; ஆண்களென்ன செய்வார்கள் காவேரி!

இமயமலை, 'என்தண்ணீர் எனக்குத்தான்' எனச்சொன்னா
சமவெளிகள் நிலைஎன்ன, சஹாராவா காவேரி!

நதிக்கு விலங்கிட்டு நடுவழியில் சிறைவைத்தால்
குதிக்கும் இயல்பு குறைந்திடுமா காவேரி?

ஓடினால் ஓடை! உட்கார்ந்தால் நீகுட்டை!
பாடிவர வேண்டாமா பறந்துவா காவேரி!

கண்ணகிக்குப் பாலூட்டிக் காவியத்தை வளர்த்தவளே
பெண்ணுரிமை நிலைநாட்டப் பெருகிவா காவேரி!

காற்றுக்குக் கைவிலங்கு போட்டவர்கள் கிடையாது
ஆற்றுக்கும் அப்படித்தான்! அடக்குமுறை பலிக்காது!

மண்ணின் தகிப்புக்கும், மக்கள்கொண்ட தவிப்புக்கும்
நீயே பதிலாய் நேரில்வர வேண்டுமடி!

இப்படிக்கு,

உன்னை என்றும் மறந்தறியா
முத்தமிழர்! உலகின் மூத்த குடிமக்கள்!

**இளந்தேவன்**
எழுதுகிறார்

# ஒகேனக்கல் அருவி

— ஏட்டிடை சொல்லும் செய்தி —

ஒகேனக்கல் அருவி, தருமபுரி மாவட்டம் பெண்ணாகரத்திற்கு 9 மைல் தொலைவில் உள்ளது. அந்த அருவியை நெருங்கும்போது, இரண்டு மைல்களுக்குமேல் மலைப்பாதையில் செல்லவேண்டும். நல்ல, கார் போகக்கூடிய பாதை, மலைகளின் இடுப்பைச் சுற்றிவளைத்த அணிகலன் போல் வளைந்து வளைந்து செல்கிறது. பச்சைப் பசேலென்ற மலைச்சரிவில் செம்மண் போன்ற விளிம்புகொண்ட தார்ப்பாதை. சுற்றிலும் கண்கொள்ளாக்காட்சி. ஓர் உல்லாசத் தலத்திற்குப் போகும் முன்னுணர்ச்சி பயத்திற்கு ஒரு பரபரப்பைக் கொடுக்கிறது.

தோப்பூர் மலைத்தொடரில் ஏற்பட்டிருக்கும் ஒரு பிளவு காவிரியைக் கடல் மட்டத்திற்கு 780 அடி உயரத்தில் சந்திக்கிறது. சிறிது தூரம் சமவெளி போன்ற படுகையில் பாயும் காவிரி இரண்டாகப் பிரிகிறது. ஆற்றின் முக்கியப் பகுதி மேற்குக் கரையின் வலப்பக்கம் பாய்கிறது. இந்த வாய்க்கால் போன்ற பாய்ச்சல் பின்னர் 86 அடி ஆழத்தில் ஒரு பள்ளத்தில் விழுகிறது.

ஒகேனக்கல் என்றால், புகையும் கல் என்று பொருள். 'பால்' 'ஹாலா'கவும், 'பழைய' 'ஹளய'வாகவும், பெயர் 'ஹெஸரு'வாகவும் கன்னடத்தில் மாறுவது போல, 'புகையும் கல்' 'ஒகேனக்கல்' என்று மாறியிருக்கிறது. நூறு அடி உயரத்திலிருந்து விழும் காவிரி ஒரே புகையாகத் திவலைகளை வீசி விசிறி அமர்க்களப்படும்.

ஆற்றின் இடது பகுதி இரண்டு கால்வாய்களாகப் பிரிந்து பாய்கிறது. ஒரு கால்வாய் மிகவும் நெருக்கமான பாறை மதில்களுக்கிடையே பாய்கிறது. ஆற்றுப் படுகையின் குறுகிய அளவையொட்டி இந்த இடத்தையும் 'மேகதாட்' என்று சொல்கிறார்கள் அசல் மேகதாட் 20 மைல் தொலைவில், காவிரி, தமிழ்நாட்டில் நுழையும் இடத்தில் இருக்கிறது. ஆற்றில் வெள்ளம் இல்லாத போது இரண்டு இடங்களில்தான் அருவியைக் காணலாம். பெரிய அருவிக்குப் பிரம்மகுண்டம் என்று பெயர். ஞானதீர்த்தம் என்னும் சிறிய அருவியைச் சுற்றி, நீராடுவோருக்கு வசதி செய்யப்பட்டுள்ளது. ஆடி பதினெட்டன்று திரளான கூட்டம் இங்கு கூடும்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சுற்றுலாப் பயணிகளின் தேவைக்கு ஏற்ப வசதிகளைச் செய்துள்ளது. உணவு விடுதியும் அமைக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு மேலாக 10-20 செ.மீ. மழை பெய்கிறது. மாதாமாதம் 200 செ.மீ.-க்கும் அதிகமாக மழை பெய்வது கீழ்த் தஞ்சையில் தான்.

மேற்சொன்னவை தவிர, மற்ற காவிரிப் பகுதிகளில் எங்கேயும் பயிர் வளர்ச்சிக்குப் பாசனமில்லாமல், குறைந்த தேவையெனக் கருதப்படும் அளவில்கூட தொடர்ந்து மூன்று மாதங்கள் கூட மழை பெய்வதில்லை. கர்நாடகத்தில் மேட்டுப் பகுதிகள் அனைத்திலும் மற்றும் தமிழ்நாட்டில் அமராவதி, நொய்யல், பவானி கீழ்ப்பகுதி முதலியவற்றிலும் இத்தகைய நிலை நிலவுகிறது. இங்கேதான் பாசனம் தேவைப்படுகிறது எனலாம்.

### பாசன வளர்ச்சி

பழங்காலந்தொட்டே காவிரிப் பள்ளத்தாக்கில், ஏரிகள் ஆற்றங்கரை வாய்க்கால்கள் மூலமாகவும், டெல்டாவிலும் பாசனம் பயிலப்பட்டு வருகிறது. 20-ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் பாசனப் பரப்பளவு ஏறக்குறைய 7 இலட்சம்எக்டேர். (17.50 இலட்சம் ஏக்கர்; 1 எக்டேர் 2.5 ஏக்கர்) இதில் 4,30,000 எக்டேர்கள் டெல்டாவில் மட்டும் இருந்தன. 1971-ஆம் ஆண்டில் காவிரிப் பாசனம் 8.4 இலட்சம் எக்டேர் வளர்ச்சியடைந்தது. 15-20-ஆம் நூற்றாண்டில் 1971 வரை புதிய திட்டங்கள் மூலம் ஒரு இலட்சம் எளகளுக்கும் குறைவாகவே புதிய நிலப்பகுதிகளுக்குக் கர்நாடகத்தில் பாசன வசதிகள் விரிவாக்கப்பட்டன. ஆனால் 2 இலட்சம் எக்டேர்களுக்கும் மிகுதியாகவே தமிழ்நாட்டில் பாசன விரிவு செய்யப்பட்டது. இதில் பழைய மைசூர் அரசு தடுத்துச் சொல்லியும் 35,000 எக்டேர்கள் 1950-லிருந்து 1960 பாசன பிரிவு செய்யப்பட்டது ஆக, 1971-ஆம் ஆண்டில் கர்நாடகத்தில் பள்ளத்தாக்கில் பயிர்செய் நிலப் பரப்பில் 18 சதமே பாசன வசதி பெற்றிருந்தது. ஆனால் தமிழ்நாட்டில் இதுவே 30 சதமாக்கப் பட்டிருந்தது. பள்ளத்தாக்கில் பாசனம் பெற்று விவசாயப் பரப்பளவு 15 இலட்சத்து 70 ஆயிரம் எக்டேர்களாகும். இதில் தமிழ்நாட்டில் மட்டும் 12 இலட்சத்து 60 ஆயிரம் எக்டேர்கள் இருந்தது.

நிலவியல்பு, கர்நாடகத்தில் காவிரிப் பாசன வளர்ச்சி கடினமாகவும் செலவு மிகையாகவும் இருக்கின்ற ஏதுக்களால் மட்டுமன்றி 1892-ஆம் ஆண்டிலிருந்தே சுதேச சமஸ்தானமான மைசூரின் மேல் விதித்திருந்த (ஒப்பந்தத்) தடைகளையும் கர்நாடகத்தில் பாசன வளர்ச்சிக் குன்றலுக்கு ஏதுக்களாகயிருந்தன. ஏன் இத்தகைய தடைகள் விதிக்கப்பட்டன என்பது வரலாற்றுப் பொறுத்தமாகும்.

—'காவிரி நீர்ப் பங்கீடு' என்னும் நூலிலிருந்து




## சிறுசேமிப்புத் துறை




எதிர்பாரா இன்னல்கள் ஏற்படுமுன் சேமியுங்கள். வரி செலுத்துவதைத் திட்டமிட்டு, இன்ஷூரன்ஸ் பாதுகாப்பும் பெறுங்கள். இன்றே கீழ்க்கண்ட சிறுசேமிப்புத் திட்டத்தில் ரூ.1,000/-ம் அதற்குமேலும் முதலீடு செய்து தனிநபர் விபத்து இன்ஷூரன்ஸ் பாலிசியைப் பெறுங்கள்.

**கீழ்க்கண்ட திட்டங்களின்கீழ் தனிநபர் விபத்து இன்ஷூரன்ஸ் பாதுகாப்பு கிடைக்கும்:**

- கிசான் விகாஸ் பத்திரம்
- தேசிய சேமிப்புத் திட்டம்
- அஞ்சலக மாதாந்திர வருமானத்திட்டம்
- அரசுப்பணியாளர்களுக்கான டெபாசிட் திட்டம் 1989
- தேசிய சேமிப்புப்பத்திரம் 8வது வெளியீடு
- 15 வருட பொது சேமநலநிதி
- அஞ்சலக குறித்தகால டெபாசிட்

**வருமான வரி விலக்குப் பெற தேசிய சேமிப்பில் முதலீடு செய்வீர்**

| வசதிகள் | தேசிய சேமிப்பு பத்திரம் 8-வது வெளியீடு | பொதுசேம நலநிதி | தேசிய சேமிப்பு திட்டம் |
|---|---|---|---|
| வட்டி | 12% | 12% | 11% |
| முதலீட்டுக்கு வருமான வரிவிலக்கு | ரூ.50,000 பிரிவு 88-ன்கீழ் | ரூ.50,000 பிரிவு 88-ன்கீழ் | ரூ.40,000 பிரிவு 80CCA-ன் கீழ் |
| வட்டிக்கு வருமான வரிவிலக்கு | வருமான வரிச் சட்டம் பிரிவு 88-ன்கீழ் | வருமான வரியில் இருந்து வட்டிக்கு முழுவிலக்கு | வட்டி தொகை சேரும்போது வருமான வரி விலக்கு |
| செல்வ வரி | ரூ.5,00,000 வரை விலக்கு | முழுவிலக்கு | முழுவிலக்கு |
| டெபாசிட்டுகளுக்கான வரம்பு | வரம்பு கிடையாது | ரூ.60,000 | ரூ.40,000 |

**தமிழக அரசின் சிறப்பு சலுகைகள்:**

- ஒவ்வொரு ரூ.500/- முதலீட்டிற்கும் ஒரு இலவச பரிசு கூப்பன் மூலம் 262 பரிசுகளில் ஒன்றைப் பெறும் வாய்ப்பு.
- தமிழ்நாட்டில் குறிப்பிட்ட சில திட்டத்தில் முதலீடு செய்யும் ஒவ்வொரு ரூ.1,000/- முதலீட்டிற்கும் 1% வரை ஊக்கத்தொகை.
- 1.1.91 முதல் 31.3.91 வரை தமிழ்நாட்டில் குறிப்பிட்ட திட்டங்களில் முதலீடு செய்யும் ஒவ்வொரு ரூ. 1000/- முதலீட்டிற்கும் தனிநபர் விபத்து இன்ஷூரன்ஸ் வசதி. பிரீமியத்தை தமிழக அரசே செலுத்துகிறது.

DIPR/1.89/MS/91/ARIES

**இலவச தனிநபர் விபத்து காப்புறுதி திட்டம் — அதிகபட்ச நஷ்ட ஈடு ரூ. 50,000/-**

கூடுதல் சலுகைகள்:

- இந்திய அரசின் முழுப்பாதுகாப்பு
- சொத்து வரிவிலக்கு
- உங்கள் குழந்தைகள் பெயரில் முதலீடு செய்து வருமான வரிவிலக்கு பெறுங்கள்.

யுனைடெட் இந்தியா இன்ஷூரன்ஸ் நிறுவனம், சென்னை.
தனிநபர் விபத்து இன்ஷூரன்ஸ் பாலிசி கிடைக்குமிடம்:
அனைத்து மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் மற்றும்

இயக்குநர்
சிறுசேமிப்புத்துறை
143, அண்ணாசாலை, சென்னை-600 002.
தொலைபேசி: 840223/846209.

# காவிரிக் கரையினிலே...

கர்நாடகத்திலே உற்பத்தியாகி, தமிழ்நாட்டைத் தழுவி ஓடும் வற்றாத காவிரி, மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்ட பள்ளத்தாக்குகளைக் கொண்டதாகும். கர்நாடகத்தில் காவிரிப் பள்ளத்தாக்கில் 71 இலட்சம் மக்கள் வாழ்கிறார்கள். பழங்காலந்தொட்டே, காவிரிப் பள்ளத்தாக்கில், பாசனம் பயிலப் பட்டு வருகின்றது. அதனை விளக்குகிறது இக்கட்டுரை.

மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து வங்கக் கடல் வரை பரவிக் கிடக்கும் காவிரிப்பள்ளத்தாக்கு மூன்று பெரும் பிரிவுகளையுடையது. அவை மலைப்பிரதேசம், நீலகிரியிலிருந்து மேட்டூர் வரையுள்ள இயற்கைக் கோட்டின் வடபுறமுள்ள (கர்நாடகம்) பீடபூமி அந்தக் கோட்டுக்குத் தெற்கேயுள்ள (தமிழ்நாடு) மேட்டு நிலங்களும் கிழக்கே கடற்கரை வரை விரிந்து கிடக்கும் சமவெளியுமாகும்.

பள்ளத்தாக்கின் பரப்பளவு 81,155 சதுரகிலோ மீட்டர்கள் (31,334 சதுரமைல்) இதில் கர்நாடகத்தில் 42,2 சதமும், கேரளத்தில் 3.5 சதமும், தமிழ்நாட்டில் 54.3 சதமும் இருக்கின்றன.

மைசூர், மாண்டியா மாவட்டங்கள் முழுவதும் மைசூர், ஹாசன் மாவட்டங்களில் முக்கால் பங்கும், பெங்களூர் குடகு மாவட்டங்களில் மூன்றில் இரண்டு பங்கும் தும்கூர், சிக்மகளூர் மாவட்டங்களில் சில பகுதிகளும் கர்நாடகத்தில் காவிரிப் பள்ளத்தாக்கினுள் அடங்கியிருக்கின்றன. கேரளத்தில் கண்ணனூர், கள்ளிக் கோட்டை, இடிக்கி, பாலக்காடு மாவட்டங்களின் சில பகுதிகள் காவிரிப்பள்ளத்தாக்கில் உள்ளன. தமிழ்நாட்டில் உதகை, கோயம்புத்தூர், தஞ்சாவூர் மாவட்டங்களின் முக்கால் பங்கும், திருச்சி, சேலம் மாவட்டங்களில் மூன்றில் இரண்டு பங்கும், தர்மபுரி, மதுரை, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் சில பகுதிகளும், பள்ளத்தாக்கில் அடங்கியுள்ளன.

கர்நாடகத்தில் குடகு மாவட்டத்தில் காவிரி உற்பத்தியாகிறது. மாநிலத்தில் 400 கிலோ மீட்டர்கள் ஓடியபின், கர்நாடக-தமிழ்நாடு மாநிலங்களின் எல்லையில் 60 கிலோ மீட்டர்கள் ஓடி தமிழ்நாட்டிலுள்ள மேட்டூர் நீர்த்தேக்கத்தின் எதிர்வாயை அடைகிறது. அதன் பின்னர் ஆறு 230 கிலோ மீட்டர்கள் தமிழ்நாட்டில் பாய்ந்து டெல்டாவின் தலைப்பான கல்லணையை அடைகிறது. அதற்குக் கீழே அது பலப்பல பெரும் கிளைகளாகவும், சிறு கிளைகளாகவும் பிரிந்து விடுகிறது.

காவிரிக்கு 21 உபநதிகள் உள்ளன. அவற்றுள் 9 உபநதிகள் பெரும்பாலுமாகவோ முழுவதுமாகவோ கர்நாடகத்தில் இருக்கின்றன. தமிழ்நாட்டில் 12 உப நதிகள் இருக்கின்றன. ஹேமாவதி தான் மிக நீளமான உபநதி. 245 கிலோ மீட்டர் நீளமுள்ளது. முழுவதும் கர்நாடகத்திலேயே பாய்கிறது. நீர்வடி பரப்பளவை எடுத்துக் கொண்டால் கர்நாடகத்திலேயே முழுவதும் ஓடும் ஷிம்சாவும் கேரளத்தில் உற்பத்தியாகி பெரும்பாலும் தமிழ்நாட்டிலேயே பாயும் அமராவதி, கேரளத்திலும் தமிழ்நாட்டிலும் உற்பத்தியாகி பெரும்பாலும் கர்நாடகத்திலேயே ஓடும் கபினியும் மிகப் பெரியவையாகும். கேரளத்திலும் கர்நாடகத்திலும் உற்பத்தியாகி, பெரும்பாலும் தமிழ்நாட்டிலேயே ஓடுகிறது பவானியாறு.

கர்நாடகத்தில் காவிரிப் பள்ளத்தாக்கில் 71 இலட்சம் மக்கள் வாழ்கிறார்கள். மாநிலப் பள்ளத்தாக்குகளில் மக்கள் தொகையில் இது இரண்டாவது இடத்தை வகிக்கிறது. மாநிலத்தின் மொத்த நிலப் பரப்பளவில் காவிரிப் பள்ளத்தாக்கு 18 சதம் ஆகும். குடகு மாவட்டமும் கொள்ளேகால் வட்டமும் நீங்கலாக முன்னாள் மைசூர் என்றிருந்த மாநிலத்தில் 1956 வரை, கர்நாடகத்திலுள்ள காவிரியும் அதன் உபநதிகளும் இருந்தன. தவிரவும், கபினி, பவானி நீர்வடி பரப்பில் கேரளத்தில் இப்பொழுது இருக்கும் சில பகுதிகள், 1956 வரை தமிழ்நாட்டில் இருந்தன.

**மேக தாது (Goat's Leap) என்ற இடத்துக்கு அருகில் தமிழகத்திற்குள் காவிரி அடியெடுத்து வைக்கிறது. ஒகேனக்கல் அருவியின் அருகில் மேட்டூர் நீர்த்தேக்கம் வரை கர்நாடகம்-தமிழ்நாடு ஆகிய இரு மாநிலங்களின் எல்லைக் கோடுகளை உருவாக்கியவாறு காவிரி பாய்கிறது.**



### வெப்பதட்ப நிலையும் மழையளவும்

பள்ளத்தாக்கில் பகுதிக்குப் பகுதி வெப்பதட்ப நிலைகள் மிகவும் வேறுபடுகின்றன. மலைப் பகுதிகளைக் கணக்கில் எடுக்காமல் பார்த்தால் மிகக் குறைவான சாதாரணமான குறைந்த அளவு வெப்பம் 14 டிகிரி சென்டிகிரேட்டுக்குக் குறைவதில்லை. சராசரி வெப்பம் 20 டிகிரியிலிருந்து 32 டிகிரி வரை மாறுபடுகிறது. வெப்ப மாறுபாடுகளில் இத்தகைய ஏற்றத்தாழ்வுகள், வடஇந்தியாவைப் போலல்லாது, பலவகைப் பயிர்களைப் பயிரிட உகந்தவையாக இருக்கின்றன எனச் சொல்லலாம்.

ஆற்றின் நீர் வளத்துக்கும் நிலத்தடி நீர்வளத்துக்கும் முதற்காரணமே மழைதான். காவிரிப் பள்ளத்தாக்கின் பெரும் பகுதிகளில், மழையே கணிசமான அளவில் பயிர்களுக்கு நேரிடையாகப் பயனளிக்கிறது. ஆகவே, ஏறக்குறைய 200 மழை அளவு நிலையங்களிலிருந்து 1901-இல் இருந்து 1950 வரையுள்ள மழைக் கணக்குள் ஆழ்ந்து ஆராயப்பட்டிருக்கின்றன.

மழையைப்பற்றிக் குறிப்படும் பொழுது, ஒரு முக்கியமான அம்சம் என்னவெனில், பள்ளத்தாக்கு முழுவதிலும் இல்லையெனினும் மிகப் பெரும் பகுதிகளில் மழை ஏப்ரல் மாதம் முதல் நவம்பர் வரை நீடிக்கிறது என்பது தான், கிழக்குப் பகுதிகளில் அது டிசம்பர், சனவரி வரை கூட நீடிக்கிறது. ஆக, பள்ளத்தாக்கு முழுவதும் தென்மேற்கு (ஜூன் முதல் செப்டம்பர் வரை) வடகிழக்கு (அக்டோபரிலிருந்து டிசம்பர் வரை) வடகிழக்கு (அக்டோபரிலிருந்து டிசம்பர், சனவரி வரை) பருவக் காற்றுகள் இரண்டினாலும் பயனடைகின்றது. தவிரவும் ஏப்ரல், மே மாதங்களில் இடியுடன் கூடிய மழையினாலும் பயனடைகிறது.

நீலகிரியும் அதையொட்டிய பகுதிகள் உள்பட மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளில், ஏப்ரல், மே மாதங்களில் தொடங்கி ஆறுக்கும் மேற்பட்ட மாதங்களில் தொடர்ச்சியாக மழை பெய்கிறது. இந்த மழை தான் பள்ளத்தாக்கிலுள்ள காவிரி , ஹேமாவதி, கபினி பவானியை எனும் ஆறுகளில் நீர்வரத்தாக மாறுகிறது.

மேற்சொன்ன மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகள் அல்லது, பள்ளத்தாக்கின் மிகப் பெரிய அளவில் மழைபெய்வது கிழக்குத் தஞ்சையில் தான், அங்கே சாதாரணமாக சராசரி 100-லிருந்து 140 சென்டி மீட்டர் வரை மழை பெய்கிறது. கல்லணைக்கருகில் சராசரி 90 செ.மீ. பள்ளத்தாக்கின் நடுப்பகுதிகளில் 80 அல்லது 35 செ.மீ. மழை தான். அதுவும் ஷிம்சா, கபினி, சுவர்ணவதி, அர்ச்சாவதி, அமராவதி, நொய்யலெனும் கிளையாறுகளில் சில பகுதிகளில் மழை 75 செ.மீ.க்கும் குறைவாகவே பெய்கிறது.

மலைகளில் பெய்யும் மழையின் நம்பிக்கைத்தரம் மேன்மையாகவுள்ளது. அங்கே சராசரி அளவிலிருந்து 25 சதவிகித அளவுக்கு மேலாக மழை குன்றுவது 10 ஆண்டுகளுக்கு ஒரு முறையோ அல்லது அதற்கும் மேலான இடைவெளியிலேயே தானிருக்கும். பள்ளத்தாக்கின் மற்றப் பகுதிகளில் இத்தகைய 25 சதவிகித மழைகுறைவது 4 அல்லது 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஏற்பட்டுவிடுகிறது.

மலைப்பகுதிகளைக் கணக்கிலெடுக்காமல், பவானி அமராவதியின் சில பகுதிகளைத் தவிர தமிழ்நாட்டில் பள்ளத்தாக்கின் பெரும் பகுதிகளிலும், கர்நாடகத்தில் ஷிம்சா அர்க்காவதியின் வடகிழக்குப் பகுதிகளில் ஒரு சிறு பகுதியிலும் ஆண்டுக்கு மாதாமாதம்




சிலம்பில் காவிரி பற்றிய குறிப்பே மிகுதியாக அமைவது. இருபத்தோரு இடங்களில் காவிரி பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. பன்னிரு காதைகளில் இக்குறிப்புகள் அமைகின்றன.

'காவிரி' என்ற சொல்லே எல்லா இடங்களி லும் அடிகளால் பயன்படுத்தப்படுகின்றது. இசைப் பாடலாகிய கானல்வரியில் மட்டுமே இசைக்காக வேண்டி 'காவேரி' என நீட்சி பெறுகின்றது. பொன்னி என ஓரிடத்துக் குறிக்கப்படுகிறது காவிரி.

புகாரில் கடலொடு கலக்கின்ற காவிரியின் ஒடுக்கமும், திருவரங்கத்தில் இரண்டாகப் பிளவு படும் காவிரியும் அடிகளால் நினைவுகூரப்படு கிறது. புகார், திருவரங்கம் ஆகிய இரு இடங்களில் அமையும் காவிரிக் காட்சி மட்டுமே அடிகளால் வண்ணிக்கப்படுகின்றது.

வண்ணனை நிலையில் காவிரியின் பெருகிய நீர்வளம், துறைக்காட்சி, பொழில் காட்சி, கரைக் காட்சியாகிய தோற்றப் பொலிவே அடிகளால் பெரிதும் பேசப்படுகின்றது.

தங்கா விளையுளால் சோழ நாட்டை மகவாக வளர்த்து, மன்னுயிர் காக்கும் காவிரியின் பயன் பாடும், கடுகிய வரவினையுடைய காவிரிப் புது நீரின் வேகமும், புதுநீரின் கடுகிய வரவால் எழுகின்ற ஓசையும், அதனால் எழுந்த உழவர் தம் ஓதை, மதகோதை, உடைநீரின் ஓதையாகிய ஒலிக்காட்சியும், தண்மையும் சிறு அளவில் அடிகளால் நினைக்கப்படுகின்றன.

**காவிரியும்-நீர்வளமும்**

கடற்கரை மெலிக்குங் காவிரி, காவிரிப் புதுநீர்க்கடுவரல், பேர்யாற்று அடைகரை நீர், பரப்பு நீர்க் காவிரி, விரிதிரைக் காவிரி, காவிரிப் புனலினும், கொழும் புனல் காவிரி, முது நீர்க் காவிரி என வருகின்ற அடைமொழிகள் காவிரி யின் பெருகிய நீர்வளன் குறிப்பனவாக அமை கின்றன.

**காவிரியும் துறையும்**

புகாரை ஒட்டி ஓடிய காவிரியில் நீர்த்துறை யிருந்த செய்தி பேசப்படுகின்றது. "தவ்வருங் காவிரி தாது மலி பெருந்துறை", "முதுநீர்க் காவிரி முன்துறை" என இத்துறை குறிக்கப் படுகிறது. இத்துறையை அடுத்துப் பொழில் இருந்தமை, "காரணி பூம்பொழில் காவிரிப் பேர்யாற்று நீரணி மாடத்து நெடுந்துறை" என வரும் குறிப்பால் அறியப்படுகின்றது. இத்துறைநீர் தெய்வீகத் தன்மையுடையது என்பது, "புண்ணிய நல்நீர்", எனக் குறிக்கப்படுதலானும், இந்திரனை, இந்திர விழாத் தொடக்க நாளன்று இத்துறை நீரால் நீராட்டுதலானும், பத்தினிக் கல்லை நீர்ப்படை செய்ய இத்துறை நீர் தகுதியுடைய தெனச் செங்குட்டுவன் மொழிதலானும் போதரும். "தெய்வக் காவிரி தீதுதீர் சிறப்பு" எனப் புகார்க் காண்ட இறுதிக் கட்டுரை சிறப்பித்தலானும் காவிரியின் தெய்வீகத் தன்மை பெறப்படுகிறது.

புகார்த் துறையை அடுத்துக் காவிரிக் கரையின் இருமருங்கும் பூக்கள் நிறைந்த மலர்ப் பொழில் இருந்தமையைத் 'தாழ்பொழில் உடுத்த தண்பதப் பெருவழிக் காவிரி, கொழும் புனல் காவிரி வடபெருங் கோட்டு மலர்ப்பொழில் காரணி பூம்பொழில் காவிரி' என வரும் குறிப்புகளால் அறியலாம்.

**காவிரியும் - கரைக் காட்சியும்**

காவிரிக்கரை காட்சியை ஒலிக் காட்சியாகவே அடிகள் அமைத்துக் காட்டுகின்றார். செந்நெல்லும்





கரும்பும் செழித்து வளர் செறுவின்கண் வளர்ந்த தாமரைக் காட்டில் கம்புட் கோழி முதலான பல்வேறு நீர்ப் பறவையினங்கள் எழுப்புகின்ற ஒலியும், கருங்கை வினைஞரும் களமருங் கூடி ஒருங்கு நின்றார்க்கும் ஒலியும், நடுவை உழத்தியர் நின்ற உழவர் தம் ஏர்மங்கலப் பாட்டொலியும், களத்துப் பொருநரின் முழவொலியும் ஆகிய பல்வேறு ஒலிகள் நிறைந்ததாக அமைகிறது. காவிரிப் பேரியாற்றின் அடைகரை இவ்வொலி களனைத்தும் காவிரி பாயும் நாட்டின் வளத்தைக் காட்டுவனவாக அமைகின்றன.

**காவிரியும் - நாடும்**

காவிரி புரக்கும் நாடு கிழவோற்கு, தங்கா விளையும் காவிரி நாடு எனக் காவிரி ஈடத்து நாட்டிற்கு அடையாக அமைகின்றது. இங்குக் காவிரியின் பயன் நினைக்கப்படுகிறது. காவிரி நாடான் என்பதில் காவிரி சோழ மன்னனுக்கு அடையாக அமைகிறது. "கடலொடு காவிரி சென்றலைக்கும் முன்றில், மடலவிழ் நெய்தலங் கானல்", "காவிரிப் படப்பைப் பட்டினம் தன்னுள்", என்பதில் "காவிரி", "நெய்தலங் கானல்" இருக்கும் இடம் குறிக்கவும்' பட்டினப் பாக்கத்திற்கு அடையாகவும் அமைகின்றது. இங்குக் காவிரியின் ஒடுக்கம் நினைவுகூரப்படுகிறது.

**காவிரியும் - கற்பு மகளிரும்**

புகாரில் வாழ்ந்து சிறந்த எழு கற்புடை மகளிரின் கற்புத்திறன் சிறக்கக் காவிரி துணைக் கருவியாக ஈரிடத்தே அமைகின்றது. மணற் பாவையைக் கனவனெனக் காத்து நின்றவள். ஆதிமந்தி ஆகிய இருவரின் கற்பு காவிரியால் துலக்கம் பெறுகின்றது. உழவர்களின் தாயாகவும் காவிரி கருதப்படுகின்றது. இதனை, காவிரியின் பயன் நோக்கி அமைந்த உருவகக் காட்சி எனலாம்

**காவிரியும் - தெய்வத் தொடர்பும்**

'விரி திரைக் காவிரி வியன்பெருந்துருத்தித் திரு அமர் மார்பன் கிடந்த வண்ணம்') காண வந்ததாகக் கூறும் மாங்காட்டு மறையவன் கூற்று, காவிரியின் ஆற்றிடைக் குறையில் (ஆற்றுவீ அரங்கம் - திருவரங்கம்) திருமால் கோயில் இருந்த செய்தியைத் தருகிறது. காவிரியின் தென்கரையிலும் திருமால் கோயில் இருந்தமையை தீதுதீர் நியமத் தென்கரை என்னும் தொடரால் அறியலாம். "நியமம்" சொல் திருமால்கோயிலைக் குறிப்பதே என்பது, 'உவணச் சேவல் உயர்த் தோன் நியமமும்' எனவரும் குறிப்பால் விளங்கும். காவிரிக்கரையில் பிற கோயில்கள் இருந்ததற்கான சான்றுகள் சிலம்பில் இல்லை.

இங்ஙனம் வண்ணனை நிலையில் அமைகின்ற காவிரி, கானல் வரியில் காப்பிய வண்ணனை யாக உயர்ந்து காப்பியப் பண்பை- கதை மாந்தர் தம் பண்பை விளக்குகின்றது.

**கோவலன் - ஆற்றுவரி**

கோவலன் பாடும் மூன்று ஆற்றுவரிப் பாடலில் காவிரியைப் போற்றி அமைகின்றான். முதலிரு



## பழமொழியில் காவிரி

★ உப்பளத்து மண்ணும் உழ மண்ணும் காவிரி மண்ணும் கலந்து வழங்குகிறது.

★ எங்கேறிப் பாய்ந்தாலும் காவிரி
கொங்கேறிப் பாய மாட்டாள்.

★ கண்ணோடு பிறந்த காவிரியானாலும்
நம் எண்ணம் சரியாகுமா?

★ கண்ணோடு பிறந்த காவிரியானாலும்
உதட்டைச் சுட்டு உறவாடுவானேன்.

★ காவிரி ஆற்றை மறிப்பாய்;
கார்த்திகை மாதத்து சந்திரனையும் மறிப்பாயா?

★ காவிரி ஆறு கஞ்சியாய்ப் போனாலும்
நாய் நக்கித்தான் குடிக்க வேண்டும்.

★ காவிரிக் கரைப் பசு போல் அலைகிறான்.

★ புல்லும் பூமியும் உள்ளமட்டும்
கல்லும் காவிரியும் உள்ளமட்டும் வாழ்க!

பாவில் காவிரியைக் கற்பு நங்கையாகவும் அடுத்த பாடலில் வளநங்கையாகவும் காணுகின்றான். இங்குப் பருப்பொருள் நிலையில் காவிரி சோழன் மனையாளாயும், நுண் பொருள் நிலையில் (உள்ளுறை நிலையில்) கண்ணகியாகவும் அமை கின்றது. கோவலனின் முதலிரு வரிப் பாடல் மூலம் இருவர்தம் பண்பு நலம் வெளிப்படுகின்றது.

திங்கள் மாலை வெண்குடையான்
    சென்னி செங்கோல் அதுவோச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
    புலவாய் வாழி காவிரி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
    புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மங்கை மாதர் பெருங்கற்பென்று
    அறிந்தேன் வாழி காவிரி.

மன்னும் மாலை வெண்குடையான்
    வளையாச் செங்கோல் அதுவோச்சிக்
கன்னி தன்னைப் புணர்ந்தாலும்
    புலவாய் வாழி காவிரி
கன்னி தன்னைப் புணர்ந்தாலும்
    புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மன்னும் மாதர் பெருங்கற்பென்று
    அறிந்தேன் வாழி காவிரி.

- என்ற கோவலன் பாடலில், கணவன் பிறிது மகளிர் புணர்ச்சி வேட்டுச் செலினும் கற்பு நங்கை புலத்தலாகாது எனக் கருதுகின்ற கோவலனின் கற்பு நிலைப் பண்பும்,கோவலன் அறிந்த புலவாக் கற்புடைப் பெருங்கற்பினாள் கண்ணகியின் பண்பும் அறியப்படுகின்றன.

கோவலனின் மூன்றாவது ஆற்றுவரி, உழவரோதை, மதகோதை, உடைநீர் ஓதை, விழவ ரோதை சிறந்தார்ப்பக் காவிரி நடப்பதற்கேது, மழவ ரோதை வளவன் தன் வளனே என

கட்டளைப்படி உலோபா முத்திரை என்ற பெயருடன் அகத்தியரை மணந்தாள். அகத்தியர் அவளுடைய தெய்வத்தன்மையை உணர்ந்து திருமாலின் கட்டளைப்படி அவளைத் தீர்த்த உருவில் தம் கமண்டலத்திற் புகச் செய்து, கமண்டலத்துடன் சைய மலையை அடைந்தார். அப்போது அங்குப் பிரமன் தவம் புரிந்து கொண்டிருந்தான். அதனால் அம்மலை 'பிரமகிரி' என்றும் பெயர் பெற்றது. பிரமன் தவத்திற்கிரங்கித் திருமால் ஒரு பெரிய ஆமலக (நெல்லி) மர உருவில் தோன்றினார். பிரமன் தன் கமண்டலத்திலிருந்து விரஜா நதியின் நீரைச் சங்கால் முகந்து ஆமலக மூர்த்தியின் அடிகளை நீராட்டினான். அப்போது பிரமன் அருளால் பெரிய சுழற்காற்று வீச, அகத்தியரின் கமண்டலம் கவிழ்ந்தது. கமண்டலத்திலிருந்த காவேரி அங்சங்க தீர்த்தத்துடன் கலந்து, ஆறாகப் பெருகி ஓடலாயிற்று. அதனால் அந்நதிக்கு 'சையாமலக தீர்த்தம்', 'சங்க தீர்த்தம்' என்ற பெயர்கள் வழங்குகின்றன. இங்ஙனம் ஆக்கினேய புராணம் காவேரி நதியின் தோற்றத்தைப் பற்றிக் கூறுகின்றது.

'ஒரு சமயம் சோழ நாடு நீரில்லாமல் பெரும் பஞ்சத்தால் வாடியது. அப்போது அந்நாட்டை ஆண்ட காந்தமன் என்ற சோழ மன்னன் அகத்தியரை வேண்ட, அவர் தம் கமண்டலத்திலிருந்த காவிரி நதியைப் பூமியில் பெருகச் செய்து சோழ நாட்டை வளப்படுத்தினார்' என்று மணிமேகலை கூறுகின்றது. காவிரி நதிக்குப் 'பொன்னி' என்றும் ஒரு பெயர் வழங்குகிறது. காவிரி யின் நீரில் பொன் அணுக்கள் கலந்துள்ளமையால் அப்பெயர் பெற்றது என்று கூறுகின்றனர்; காவிரி பாய்ந்து வளம் செய்யும் நாடுகளில் எல்லாம் பொன் (செல்வம்) கொழிக்கச் செய்தலின் அப்பெயர் பெற்றது என்றும் கூறலாம்.

**ஆதாரம்:**
**'தமிழ்க் கலைக்களஞ்சியம்.**



**தேவி வடிவத்தில் காவிரி**

"திருச்சியில் உள்ள ரங்கநாதர் ஆலயம் பாண்டியர் காலச் சிற்ப பாணியில், முன்வாயிலில் உயர்ந்த கோபுரத்துடன் அமைந்திருக்கிறது. கௌதம ரிஷி ரங்கநாதரை இங்கு வழிபட்டார்' என்பது ஒரு பழைய செய்தியாகும். காவிரியின் வடகரையில் வடமேற்குப் பகுதியில் உள்ள ஒரு இடத்திற்கு இன்றும் கௌதம க்ஷேத்திரம் என்று பெயர். மூல 'விக்ரகமான ரங்கநாதர் ஆதிசேஷனின் மீது பள்ளி கொண்டு கம்பீரமாகக் காட்சி அளிக்கிறார். காவிரி தேவதையின் வேண்டுகோளுக்கிணங்கி ரங்கநாதர் அங்கு பள்ளி கொண்டதாக தல புராணம் கூறுகிறது. காவிரியே தேவி வடிவத்தில் ரங்கநாதர் காலடியில் வீற்றிருக்கிறாள். கௌதமரின் ரூபமும் அங்கே காணப்படுகிறது. பிரகாரத்தைச் சுற்றி வைஷ்ணவ ஆழ்வார்களின் விக்ரகங்கள் இருக்கின்றன. கர்ப்ப கிருகத்தில் நுழையும் வழியில் இரண்டு தூண்களில் விஷ்ணுவின் 24 மூர்த்திகளும் செதுக்கப்பட்டிருக்கின்றன. கோயிலில் உள்ள வெள்ளிப் பாத்திரங்களில் காணப்படும் எழுத்துக்களிலிருந்து அந்தப் பாத்திரங்கள் திப்புசுல்தானின் நன்கொடைகள் என்பது விளங்குகிறது. கோயிலில் உள்ள பல்வேறு கல்வெட்டுக்களில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது, கி.பி.1210-ஆம் ஆண்டு பொறிக்கப்பட்ட தமிழ்க் கல்வெட்டு ஆகும்.

"ரங்கநாதர் ஆலயம் கி.பி.12-ஆம் நூற்றாண்டில் காடுகள் நிறைந்த அந்தத் தீவில் கங்க ராஜாக்கள் காலத்தில் தனிப்பட்ட ஒருவரால் கட்டப்பட்டதாகத் தெரிகிறது. 1117-ஆம் ஆண்டில் ராமானுஜர் சோழநாட்டை விட்டு வெளியேறி மைசூர் மாநிலத்திற்கு வந்தபோது அங்கு ஆட்சி புரிந்து வந்த ஹோய்சால மன்னன் பிட்டிதேவனை ஜைன மதத்திலிருந்து வைஷ்ணவத்திற்கு மாற்றினார். அதற்குப்பின் விஷ்ணு வர்த்தனன் என்ற பெயரைக் கொண்ட பிட்டிதேவன் ராமானுஜருக்கும் அவருடைய சீடர்களுக்கும் ஸ்ரீரங்கப்பட்டணத்திற்கு அருகே காவிரியின் இரு கரையிலும் சில பகுதிகளை மானியமாகக் கொடுத்தான். அஷ்டகிராமம் என்ற எட்டு ஊர்கள் அடங்கியது இந்தப் பகுதி. ஸ்ரீரங்கப்பட்டணம் 1120-ஆம் ஆண்டில் விஷ்ணு வர்த்தனின் சகோதரன் உதயாதித்யனால் நிறுவப்பட்டதென்பதும் வரலாறு மூலம் அறியப்படும்."

**('நடந்தாய் வாழி காவிரி' என்னும் நூலிலிருந்து)**

## காவேரிப் புராணம்!

'காவேரிப் புராணம்' என்பது ஒரு பழைய நூல். இந்நூல் வட மொழி நூலான 'பிரமகைவர்த்தம்' என்ற நூலினை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டது. திருச் சிற்றம்பல முனிவர் என்பவரால் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

'காவேரிப் புராணத்தை' நூலாக்கி விளக்கவுரை எழுதியவர். நாகை அருகிலுள்ள வடக்குப் பொய்கை நல்லூர் சுப்பைய தேசிகர்.

காவேரி ஆற்றினைப் பற்றிய புராணச் செய்திகளை இந்நூலி லிருந்து தெரிந்து கொள்ளலாம்.



# இந்தியச் சட்ட அமைப்பில் பன்மாநில ஆற்றுச் சிக்கல்கள் தீர

# சட்டம் என்ன? வழி என்ன?

சே.பா. நமசிவாயம்

இந்தியச் சட்ட அமைப்பில் "தண்ணீர்-அதாவது நீர் வழங்குதல் பாசனம், கால்வாய்கள், வடிகால்கள், கரைகள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர் மின் உற்பத்தி" தொடர்பாகச் சட்டங்கள் செய்யும் பொறுப்பு மாநிலச் சட்டமன்றங்கட்கு உரியது. ஆனால், பன்மாநில ஆற்றுப்பகுதி களில் 'Inter State River Valleys' வளர்ச்சித் திட்டங்களுக்காக்வும், நீர்ப் பங்கீடு தொடர்பாகவும் சட்டங்கள் செய்யும் உரிமை நாடாளுமன்றத் திற்கு இருக்கிறது. சட்டங்கள் செய் வது மாநிலச் சட்டமன்றங்கள் ஆனா லும் சரி, நாடாளுமன்றம் ஆனாலும் சரி, செய்த சட்டங்களைச் செயற் படுத்த வேண்டியது மாநில அரசுகள் தாம்.

தவிரவும், பன்மாநில ஆறுகளைப் பயன்படுத்துவதில் தொடர்புடைய மாநிலங்களுக்கிடையே கருத்து வேற் றுமை ஏற்பட்டால், சிக்கலைப் பேச்சு களின் மூலம் தீர்த்துக் கொள்ள வேண்டும். பேச்சு வார்த்தைகளைத் தொடர்வதனால் சிக்கலைத் தீர்ப் பதில் முன்னேற்றம் இருக்க வழி யில்லை என்ற முடிவுக்கு மத்திய அரசு வருமானால் இதற்கென நடு வர்கள் குழு ஒன்றினை அமைக்கும் ஆய்விற்குப் பின்னர், இந்தக்குழு அளிக்கும் தீர்ப்பு முடிவானது.

சட்டத்தில் இவ்வாறெல்லாம் இருப்பினும், ஒவ்வொரு கட்டத்துக் கும் இவ்வளவுதான் காலவரையறை என்று இல்லை. நடுவர்கள் குழு அமைக்கும் பொறுப்பை நிறை வேற்றுவதில் மத்திய அரசு தாமதம் செய்தாலும், நடுவர்கள் குழுவின் தீர்ப்பைச் செயல்படுத்துவதில் மாநில அரசுகள் தாமதம் செய்தாலும் மாற்று இருப்பதாகத் தெரியவில்லை.

எனவே, பன்மாநில ஆற்று நீர்ப் பங்கீடுகளில் உள்ள சிக்கல்களைத் தீர்ப்பதைப் பொறுத்த இந்தியச் சட்ட ஏற்பாடுகளில் சந்து பொந்துகள் இருக்கத்தான் செய்கின்றன.

இனி பன்மாநில ஆறுகளைப் பயன்படுத்தும் உரிமைகளைப் பற்றிச் சட்டங்கள் என்ன சொல்கின்றன?

இந்திய அரசமைப்புச் சட்ட அமைப்பில் இதைப்பற்றி ஒன்றும் வரையறுத்துக் கூறப்படவில்லை. பாதைகளும் வகுக்கப்படவில்லை; இது தான் பாதையென்று வழிகாட்ட வும் முடியாது.

ஆனால், உலகமுழுவதிலும், கால தேச சூழ்நிலைகளைப் பொறுத்து "தண்ணீர் உரிமைகளைப் பற்றிய

"இப்பொழுது காவிரிப் பங்கீட்டுக்காக நடுவர் மன்றம் அமைக்கப்பட்டுள்ளது. காவிரி நீர்ப்பங்கீடு போன்ற பன்மாநில ஆற்றுச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு இந்தியச் சங்கங்களில் இருக்கும் ஏற்பாடுகள் என்ன என்பதைக் 'காவிரி நீர்ப்பங்கீடு' என்னும் நூலில் தமிழ்நாடு அரசின் ஓய்வுப் பெற்ற தலைமைப் பொறியாளர் திரு. சே.பா.நமசிவாயம் அவர்கள் விளக்கியுள்ளார். அதனைக் கட்டுரை வடிவில் இங்கு தருகின்றோம்.

அமையும். இது உள்ளுறை நிலையில் மாதவியின் வள வாழ்வு நிலையைக் காவிரி வண்ணனையில் வழங்குவதோடு அவ்வள வாழ்விற்குத் தன் செல்வ நிலையே காரணம் எனக் கோவலன் அறிவுறுத்து வதாகவும் அமைகின்றது. இம்மூன்று பாடல் களிலும், புலவாக் காவிரி கண்ணகியின் துன் பியல் வாழ்வையும், ஓசை பல சிறந்தார்ப்ப நடந்த வளத்தகு காவிரி மாதவியின் இன்பியல் வாழ்வை யும் நினைவுகூரச் செய்கின்றன.

**மாதவியின் எதிர்வரி**

கோவலன் வரிப் பாடற்கு எதிர்வரி பாடிய மாதவியின் ஆற்றுவரிப் பாடல் மூன்றினும் காவிரி வண்ணனை இடம் பெறுகின்றது. கோவலன் ஆற்றுவரிப் பாடலில் இரு குறிப்புக்களைக் காணுகின்றாள் மாதவி. ஒன்று பெருங்கற்பை மகளிர்க்கு மட்டுமே உரிமை யாக்குவது: மற்றது தன்னைக் கோவலன் இகழ்கின்ற குறிப்பு: அஃதா வது தன்னின் வளமான வாழ்விற்குக் காரணம் கோவலனின் பொருள் வளமே என அவன் சுட்டிக் காட்டுவது. தன்னை இகழுங் குறிப்பு கோவலன் பாடலில் இருந்தமையாலே தான் 'மன்னுமோர் குறிப்புண்டிவன் தன்னிலை மயங்கி னான்' என நினைக்கின்றாள்.

எனவே கற்பு ஆடவர்க்கும் வேண்டுமென அறிவுறுத்தவும், தன்னின் வள வாழ்விற்கவன் செல்வநிலை காரணமன்று எனத் தெளிக்கவும், அவன் பாடிய அதே ஆற்றையே தானும் பாடித் தெளிவிக்க முற்படுகின்றாள்.

மருங்கு வண்டு சிறந்தார்ப்ப
  மணிப்பூ வாடை யதுபோர்த்துக்
கருங்கயற் கண் விழித்தொல்கி
  நடந்தாய் வாழி காவிரி
கருங்க யற்கண் விழித்தொல்கி
  நடந்த தெல்லாம் நின்கணவன்
திருந்து செங்கோல் வளையாமை
  அறிந்தேன் வாழி காவிரி!

பூவார் சோலை மயிலாலப்
  புரிந்து குயில்கள் இசைபாடக்
காமர் மாலை அருகசைய
  நடந்தாய் வாழி காவிரி
காமர் மாலை அருகசைய
  நடந்த வெல்லாம் நின்கணவன்
நாம வேலின் திறங்கண்டே
  அறிந்தேன் வாழி காவிரி!

- என்ற மாதவியின் முதலிரு ஆற்றுவரிப் பாடல்களில் அமையும் 'கருங்கயற்கண்' 'காமர் மாலை' முதலான அடைகள் காவிரியை இன்பச் சுவையூட்டும் ஒரு காதற்கிழத்தியாகக் காட்சிப் படுத்துகின்றன. இங்கு, மாதவி தன்னையே காவிரியாக உருவகப் படுத்துதலின், தன் வாழ் வின் இன்பச் சுவைக்கேற்பக் காவிரியையும் இன்பச் சுவையூட்டும் பெண்ணாகக் காணுகின்றாள்.

இப்பாடற்கண், காவிரியின் வளவாழ்விற்குக் காரணம் அவள் கணவன் சோழனின் திருந்து செங்கோன்மையும், நாம வேலின் திறமும் என்பது வலியுறுத்தப்படுகின்றன. இது கோவல ஆற்று வரியில் அமைகின்ற, 'ஆற்றின் செழிப்பிற்கு ஆள்வான் வளமே' காரணம் என்பதன் தவறுண்மை சுட்டும் முகனாக அமைகின்றது மட்டுமன்றித் தன்னுடைய (மாதவியின்) வளவாழ்விற்குத் தன்னின் (கோவலனின்) வளமே என்ற கோவலற்கு அற்றன்று; 'நின்னின் செம்மை நெறியும், ஆளுமைப் பண்பு மன்றி வளனல்ல' வென நிறுவுவதாகவும் அமைகின்றது. அன்றியும் மனஞ்சிதறா ஆளுமைத் தன்மை வேண்டுமென்பதைக் கோவலற்கு வலி யுறுத்தா நிற்கின்றன. இப்பாடல்கள் இவ்வாளு மைத் தன்மை ஆடவர்க்கின்றேல், பெருங்கற்பு மகளின் வளவாழ்வு சாலாதென்பதையும் மாதவி இவ்வாற்று வரியில் வலியுறுத்துகின்றாள்.

அடுத்த பாடலில் தன்னொத்த தாயாகக் காவிரியைக் காணுகின்றாள் மாதவி.

  'வாழி யவன்றன் வளநாடு
மகவாய் வளர்க்குந் தாயாகி
  ஊழி யுய்க்கும் பேருதவி
ஒழியாய் வாழி காவிரி
  ஒழியா தொழுகல் உயிரோம்பும்
ஆழி யாள்வான் பகல்வெய்யோன்
  அருளே வாழி காவிரி!

- சோழன் மகவாய நாட்டை யவனருளால் வளர்க்கும் காவிரி யன்னக் கோவலன் மகள் மணிமேகலையை அவனருளால் மாதவி வளர்க் கின்றாள் என்பது பாடல்தரும் உள்ளுறை.

**(திரு இரா. காசிராசன் எழுதிய 'சிலம்பில் ஆறு' என்னும் கட்டுரையிலிருந்து.)**

## தலைக்காவிரி

காவிரியாறு மேற்குத் தொடர்ச்சி மலையில் குடகு நாட்டுச் சையமலையில் உற்பத்தியாகிறது. குடகு நாட்டு மக்கள் காவிரி உற்பத்தியாகும் அவ்விடத்தில் 30 அடி சதுரமான ஒரு குளம் அமைத்துள்ளனர். அக்குளத்தில் எப்பொழுதும் இரண்டரை அடி ஆழமே நீர் நிரம்பியிருக்கும். எஞ்சிய நீரெல்லாம் மடைகளின் வழியாக வழிந்து விடும். அக்குளக்கரையில் காவிரித் தாயின் கோயிலும் அமைந்துள்ளது. இந்த இடத் திற்குத் தலைக்காவிரி என்று பெயர் வழங்குகிறது.

தலைக்காவிரியில் நீரூற்று என்றும் வற்றாமல் சுரந்துகொண்டே இருக்கின்றது. அது புண்ணிய தீர்த்தமாகக் கருதப்படுகிறது. தலைக்காவிரி யிலிருந்து பெருகும் நீர் முழுதும் பற்பல காடு களைக் கடந்து, மலைகளின் வழியாகப் 'பாக மண்டலம்' என்ற இடத்தினை அடைகிறது. காவிரி அங்கிருந்துதான் ஆறு என்ற உருவத் தினைப் பெறுகின்றது.

—தமிழ்க்கலைக் களஞ்சியம்





# புராணங்களில் காவிரி

தென்னிந்தியாவில் ஓடும் ஆறுகளில் காவிரி தலைசிறந்ததாகும். அது தன் இடையறாத நீர்ப் பெருக்கால் 'ஜீவநதி' எனப் போற்றப்படுகின்றது. காவிரி குடகு நாட்டில் மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி, மைசூர், சேலம், கோயம்புத்தூர், திருச்சி, தஞ்சாவூர் மாவட்டங்களின் வழியாக ஏறக்குறைய 480 கல் தொலைவு ஓடி வங்காளக் குடாக் கடலில் கலக்கின்றது. இதனுடைய வடிகால் நிலப்பரப்பு 28,000 ச.மைல். இந்த ஆறு வற்றாது வளம் தருவதால் தமிழ் மக்கள் இதனைத் தாயாகப் போற்றுகின்றனர்; புண்ணியத் தீர்த்தமாகக் கருதி நீராடி மகிழ்கின்றனர். காவிரி 'தென்னாட்டுக் கங்கை' எனப் போற்றப்படுகின்றது. 'கங்கையிற் புனிதமாய காவிரி' என்று புலவர்கள் பாராட்டியுள்ளனர்.

**பெயர்க் காரணம்:**

காவிரியைப் பற்றிய பல புராண வரலாறுகள் வழங்குகின்றன சூரபதுமனின் கொடுமைக்கு அஞ்சி இந்திரன் சீகாழியில் மறைந்து வாழ்ந்து வந்தான். அவன் இறைவனை வழிபடுவதற்காக வளர்த்த நந்தவனம் நீரில்லாமல் வாடியது. அவன் விநாயகரை வேண்ட, விநாயகர் காக்கை உருவம் கொண்டு, மேற்குத் தொடர்ச்சி மலையில் ஒரு பகுதியாகிய சைய மலையில் தவம் செய்து கொண்டிருந்த அகத்திய முனிவரின் கமண்டலத்தைக் கவிழ்த்தார். அக்கமண்டலத்தில் இருந்த தெய்வத் திருநதி பெருகி, இந்திரன் நந்தவனத்தைச் செழிக்கச் செய்தது. காகத்தால் கவிழ்க்கப்பட்டு விரிந்து பெருகிய ஆறு ஆதலால் 'காகவிரி' என வழங்கிய பெயரே பின்னர்க் 'காவிரி' என மருவியது என்றும், இந்திரனது நந்தவனம் (கா) செழிக்க விரிந்தமையால் 'காவிரி' எனப் பெயர் பெற்றது என்றும் கூறுவர். இது கந்தபுராணம் கூறும் வரலாறாகும்.

இது 'காவேரி' என்றும் வழங்கப்படுகிறது. 'நடந்தாய் வாழி காவேரி' என்பது சிலப்பதிகாரம். கவேரன் என்ற மன்னன் வீடு பேறடைய விரும்பிக் கடுந்தவம் புரிந்தான். நான்முகக் கடவுள் தன் மகள் விஷ்ணு மாயையை அம்மன்னனுக்கு மகளாக வழங்கினார். அவளுடைய தெய்வத் தன்மையால் அவனுக்கு வீடுபேறு கிடைத்தது. கவேரன் மகளாக வாழ்ந்தமையால் அவள் 'காவேரி' என்று பெயர் பெற்றாள். அவள் திருமாலை நோக்கித் தவம் புரிய, அவர்

### மணிமேகலையில் காவிரி!

**காவிரி பற்றிய குறிப்புக்கள் மணிமேகலையில், ஏழு இடங்களில் அமைகின்றன. 'காவிரி' என்ற சொல் வழக்கே காணப்படுகிறது. இரு இடங்களில் காவிரி புராணச் சாயல் பெற்றுக் கவேர முனிவன் புதல்வியாகப் பேசப்படுகிறது. மாருதி என்ற பெண்ணும் சுதமதி யின் தந்தையும், காவிரி ஆடிவரு கின்ற போது கடுந்துன்பத்திற்குள் ளாகின்றனர். இங்குக் காவிரியில் அருச்சுனன், அரிச்சந்திரன், சுசீலை, ஒரு பன்றி, மண்டுகம், முதலை ஆகியோர் நீராடி நற்கதி பெற்றனர் என்ற இந்து சமயப் புராணக் கருத்து மறுக்கப்படுகிறது.**

**—'தமிழ் இலக்கியத்தில் ஆறு' என்னும் நூலிலிருந்து**




## பூம்புகாரில் காவிரி

பேராறாய்ப் பெருகிவந்த காவிரி-பிறகு, இருபது கஜ அகலமே உள்ள வாய்க்கால்போல் காட்சியளிக்கின்றது. இங்குக் காவிரியைக் கடக்க மூங்கிலாலேயே பாலம் அமைத்துள்ளனர். பின்னர்க் காவிரியாறு தரங்கம்பாடிக்குப் பத்து மைல் வடக்கே வங்கக் கடலுடன் கலக்கிறது. இச்சங்க முகத்துறை மிகப் புனிதம் வாய்ந்த தீர்த்தமாகக் கருதப்படுகிறது. 'தண்ணறுங் காவிரித் தாதுமலி பெருந்துறைப் புண்ணிய நன்னீர்' என்று இளங்கோவடிகள் இச்சங்க முகத்துறையைப் புகழ்ந்துள்ளார். காவிரி கடலோடு கலக்கும் இவ்விடத்தில் சோழ நாட்டின் பழம் பெருந் தலைநகரமாகிய காவிரிப் பூம்பட்டினம் பண்டு சிறப்புடன் விளங்கியது.

—தமிழ்க் கலைக் களஞ்சியம்

சட்டவடிவக் கொள்கைகள் பல எழுந்துள்ளன. அவற்றை நான்கு தலைப்புகளாகப் பிரிக்கலாம்.

1. ''நிலத்தை அடுத்த நீர் நிலத்துக்கே சொந்தம்'' Riparian Right இந்தக் கொள்கைப்படி, ஆற்றோரமாயுள்ள நிலங்களுக்கே ஆற்றிலோடும் தண்ணீரும் சொந்தம். ஆகவே, தண்ணீர் வருவது அளவிலோ தூய்மையிலோ குறையக் கூடாது. இதன்படிப் பார்த்தால் ஆற்றிலிருந்து தண்ணீரைத் தடுத்து புதியதாக மேட்டு நிலங்களுக்குத் திருப்பிக் கொண்டுபோக முடியாது. வான்வளமிக்க பகுதிகள் அல்லது சிற்றோடைகளை அடுத்த பகுதிகளில் மட்டுமே இந்தக் கொள்கை பொருந்தும். பற்றாக் குறையுள்ள காவிரி போன்ற பெரிய ஆறுகளுக்குப் பொருந்தாது. இந்தக் கொள்கை காலப்போக்கில் மறைந்தும் விட்டது.

2. ''நாட்டு முழு நுகருரிமைக் கொள்கை: இதன்படி ஒரு நாட்டிலுள்ள நீர்வளம் முழுவதையும் அந்நாடே பயன்படுத்திக் கொள்ளலாம். அண்டை நாடுகளில் ஏற்கெனவேயுள்ள பாசனங்கள் முதலியவை பற்றிய அக்கறை எதுவும் வேண்டியதில்லை''. தொடர்புடைய நாடுகள் ஒவ்வொன்றிலும் அதனதன் தேவைக்கும் அதிகமாகவே நீர்வளம் இருக்கிறது என்ற நிலையில்தான் இந்தக் கொள்கை ஓரளவு பொருந்தும். மற்றபடி அனைத்து நாட்டு ஒருமைப்பாட்டுக் கருத்துக்கு ஒவ்வாது. எனவேதான் தன்னுரிமை நாடுகளுக்கிடையே கூட, இந்தக் கொள்கை பின்பற்றப்படுவதில்லை. மேலும் இதன் நியாயத்தைப் ப்ற்றி அனைத்து நாட்டுச் சட்ட வல்லுநர்களிடையே வலுவான ஐயம் பரவலாக இருக்கிறது. தன்னுரிமை நாடுகளிடையே இந்தக் கொள்கை மடிந்துவிட்டதெனில், ஒரே நாட்டில் இணைந்துள்ள மாநிலங்களுக்கிடையேயுள்ள சிக்கல்களைத் தீர்ப்பதற்கு இதை எப்படி அடிப்படையாகக் கொள்ள முடியும்?- அதுவும், காவிரிச் சிக்கலைப் பொறுத்த வரையில் தமிழ்நாட்டில் தொன்றுதொட்டு நிகழ்ந்துவரும் பாசனம், கருநாடக, கேரள மாநிலங்களிலிருந்து வரும் நீரைக் கொண்டுதான் தொடர முடியும் என்ற நிலை இருக்கும் பொழுது? (கருநாடகமும், கேரளமும் மடிந்துபோன இதே கொள்கையின் அடியொட்டித்தான் அதாவது தங்கள் மாநிலத்தில் தோன்றும் நீரைத் தாங்களே பயன்படுத்திக் கொள்வது; ஏற்கெனவே மற்ற மாநிலங்களிலுள்ள பாசனம் பற்றி அக்கறை கொள்ள வேண்டியதில்லை என்ற அடிப்படையில்தான்-தத்தம் எதிர்காலத் திட்டங்களை வகுத்திருந்தார்கள். இது முன்னரே விளக்கப்பட்டுள்ளது.)

3. ''நுகருரிமைக் கொள்கை- நீரை நற்பயனுக்குப் பயன்படுத்துவோர் அவ்வாறு பயன்படுத்தும் அளவைத் தங்களுக்கே உரிமையாக்கிக் கொள்ளலாம்; அதாவது தொடர்ந்து பயன்படுத்தலாம். இடையிற் சில காலம் உரிமையைப் பயன்படுத்தாமல் இருந்தாலும் உரிமை பறிபோய் விடாது; ஆனால், ஏற்கெனவேயுள்ள பயன்களுக்கு ஊறின்றி இருக்க வேண்டும். காலப்போக்கில், முதலில் பயன்படுத்தியவர்க்குப் போகத்தான் மற்றவர்க்கு.'' இந்தக் கொள்கை பழங்காலந்தொட்டே கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. உரோமன் சட்டம், ஸ்பெயின் நாட்டுச் சட்டம், மெக்சிகோ நாட்டுச் சட்டம் இவற்றிலெல்லாம் இதன் வித்துக்கள் இருக்கின்றன. இப்பொழுதும், அமெரிக்க நாட்டில் வறட்சிமிக்க மாநிலங்கள் வறட்சி காணும் மாநிலங்கள் யாவற்றிலும் இந்தக் கொள்கைதான் பின்பற்றப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. நீர்ப் பற்றாக் குறையுள்ள நிலப்பகுதிகளுக்கு இந்தக் கொள்கைதான் பொருத்தமானது. நாமும் ஏற்கெனவே பற்றாக் குறை ஏற்பட்டுள்ள காவிரி ஆற்று நீரை இந்தக் கொள்கையின் அடிப்படைக்குப் பொருந்தப் பயன்படுத்த வேண்டும் என நம் அறிக்கைகளிலும் பேச்சுகளிலும் வலியுறுத்தியுள்ளோம்.

4. ''நிகரமைப் பங்கீட்டுக் கொள்கை: இந்தக் கொள்கையின்படி, குறிப்பிட்ட ஆற்றினால் பயன்பெறக் கூடிய பகுதிகள் யாவற்றுக்கும் அவற்றின் தேவைகளுக்குத் தக்கவாறு ஆற்றுநீரைப் பகிர்ந்து கொடுக்க வேண்டும்.'' அமெரிக்க

### திருவையாறு

சோழ நாட்டில் காவிரி சமவெளியில் பாய்வதால் அதன் போக்கில் மாறுதல் ஏற்படவில்லை. உருவம் மட்டும் மாறி வருகிறது. சோழ நாட்டில் காவிரியின் கரையில் அமைந்த நகரங்களில் திருவையாறு குறிப்பிடத்தக்கதாகும். வெண்ணாறு, வெட்டாறு, குடமுருட்டி, காவிரி, கொள்ளிடம் ஆகிய ஐந்து ஆறுகள் பாய்வதனால் அப்பதி ஐயாறு எனப் பெயர் பெற்றது.

அதற்கு அடுத்து முருகப்பெருமான் எழுந்தருளியுள்ள சுவாமிமலை என்னும் ஊர் வழியாகக் காவிரி கும்பகோணத்தை அடைகிறது. காவிரி இங்குப் புண்ணிய தீர்த்தமாகக் கருதப்படுகிறது. மகாமகப் புண்ணிய தினத்தில் மகாமகக் குளத்தில் நீராடியபின் காவிரியிலும் நீராடவேண்டும் என்பது மரபாக உள்ளது.

காவிரி மாயூரத்தை அடையும் போது அதன் உருவம் மிகவும் சுருங்கி விடுகிறது. ஐப்பசி மாதம் துலா முழுக்கின் கடைநாளன்று மாயூரத்தில் காவிரியில் நீராடுவது பெரும் புண்ணியமாகக் கருதப்படுகிறது. அது 'கடை முழுக்கு' என வழங்கப்படுகிறது.

—தமிழ்க் கலைக் களஞ்சியம்




காவிரி மைசூர் நாட்டில் பாயும் போது திப்பூர் என்னுமிடத்தில் 'ஹேமாவதி' என்ற சிற்றாறும், பைரபூர் என்னுமிடத்தில் 'இலட்சுமண தீர்த்தம்' என்ற சிற்றாறும் காவிரியுடன் கலக்கின்றன. இங்ஙனம் மும்மடங்காகப்பெருகுகிற காவிரி வெள்ளத்தைத் தடுத்துக் 'கிருஷ்ணராஜ சாகரம்' என்ற பெயருடன் பெரிய நீர்த்தேக்கத்தை அமைத்துள்ளனர். இங்குக் 'கண்ணம்பாடி' என்னுமிடத்தில் அணை கட்டப்பட்டுள்ளது.

மைசூர் நாட்டில் மட்டும் காவிரியின் குறுக்கே பன்னிரண்டு அணைகள் கட்டப்பட்டுள்ளன. அவற்றில் பெரியது கண்ணம்பாடி அணையேயாகும். இவ்வணை காலம் சென்ற மைசூர் அரசர் 'கிருஷ்ண ராசேந்திர உடையார் ஆதரவால் தொடங்கப் பெற்றுப் பதினாறு ஆண்டுகளில் கட்டி முடிக்கப் பெற்றது. அதனாலே அணையால் உண்டாக்கிய இந்நீர்த்தேக்கம், கிருஷ்ணராஜசாகரம் எனப் பெயர் பெற்றுள்ளது.

இயற்கை வசதி வாய்ந்த அவ்விடத்தில் அணை கட்டவேண்டுமென்ற முயற்சி திப்பு சுல்தான் காலத்திலேயே இருந்ததாக, அங்கிருந்து தோண்டி ' எடுக்கப்பெற்ற கல்வெட்டொன்றால் தெரிகிறது. கண்ணம்பாடி அணை 8,600 அடி நீளமும், 130 அடி உயரமும் உடையது. நீர்த்தேக்கத்தின் அளவு 50 சதுர மைல். அத்தேக்கத்தில் 48,335 மில்லியன் கன அடி நீர் தேங்க வசதி உள்ளது. இவ்வணையின் உதவியினால் 1,25,000 ஏக்கர் நிலம் விளைவுக்குப் பயன்படுகின்றது.

இவ்வணையிலிருந்து அமைக்கப்பட்ட 'இர்வின் கால்வாய்' பயிர்த்தொழிலுக்குப் பேருதவி புரிகின்றது. இவ்வணைக்கு முன்புறத்தில் 'பிருந்தாவனம்' என்ற புகழ்பெற்ற நந்தவனம் உள்ளது.

—தமிழ்க் கலைக்களஞ்சியம்.

உயர்நீதி மன்றம், அமெரிக்க மாநிலங்களுக்கிடையே ஏற்படும் நீர் வழக்குகளைத் தீர்ப்பதற்கு இந்தக் கொள்கையின் அடிப்படையையும் ஏற்றுக் கொண்டிருக்கிறது. இந்தக் கொள்கையைப் பின்பற்றும்பொழுது, தொடர்புடைய மாநிலங்களின் தேவைகளை ஆராய்ந்து மொத்த நீர்வளத்திற்கேற்ப முரண்பாடுகளை 'அகற்றி ஒழுங்குபடுத்த வேண்டும்; ஏற்கெனவேயுள்ள பாசனத் தேவைகளை ஒரேயடியாக மறந்துவிட வேண்டும் என இந்தக் கொள்கை குறிப்பாற்கூட ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக, அவற்றுக்கே முதலிடம் என்பதே கொள்கையின் அடிப்படையாகும். ஆயினும் தொன்றுதொட்டு இருந்து வரும் பாசனத் தேவைகளை மட்டுப்படுத்துவதால் தீமையினும் நன்மையே மிகுந்திருக்கும் என்ற நிலை, இருந்தால், ஓரளவுக்கு அப்படி மட்டுப்படுத்துவதைக் கொள்கை ஆதரிக்கிறது. பொது நலனுக்காகச் சிறிது தியாகம்! (ஆனால் இதில் சிறு குழப்பம். நன்மையாயினும், தீமையாயினும், அதை விளையுமுன்பே எப்படிக் கணக்காக அளப்பது? இதனாலேயே மதிப்பீடுகள் பல, பங்கீட்டுக் கொள்கை நியாயமானதுதான். ஆனால், நடைமுறையில் மாற்றே இல்லாத் தீய விளைவுகள் ஏற்படுவதற்கு வாய்ப்பு நிறைய இருக்கிறது. இது நேரா வண்ணம் முதலில் உறுதி செய்து கொள்ள வேண்டும். அதற்கு, முதற்கட்டமாக, மேலே குறிப்பிட்ட நுகருரிமைக் கொள்கையின் அடிப்படையில் பங்கீடு செய்து கொள்ள வேண்டும். அப்படிச் செய்யும் பொழுதே, ஏற்கெனவேயுள்ள பாசனத் தேவைகளுக்குப்போக உள்ள மிகை நீரை மாநிலங்களின் புதுத் தேவைகளுக்கேற்ப பங்கிட்டுக் கொடுக்கலாம்; மிகை நீரைப் பங்கிடும் பொழுது, மாநிலங்களில் தொடர்புடைய பகுதிகளின் பயிர்வளங்களை ஒப்பிட்டு, பயிர்வளக் குறைவுகளை நிறைவு செய்யும் முறையில் பங்கிடலாம்.

இதன் பின்னர், பாசன நீரைப் பயன்படுத்தும் முறைகளில் இந்நாள் அறிவியல் ஆராய்ச்சி முடிவுகளைச் சிறிது சிறிதாகப் புகுத்தி, இயற்கை வழியே சென்று தீமைகள் நேரா வண்ணம், பாசன நீர்த்தேவையைச் சிறுகச் சிறுகக் குறைக்க முயலலாம். இதில் மீதமாகும் நீரை, முன்னர் சொன்ன முறையில் மறு பங்கீடு செய்யலாம். அளவைக் குறைத்து மறுபங்கீடு செய்யும் ஒவ்வொரு வேளையிலும், இது தீமையேதும் விளைவிக்கவில்லை என்று உறுதி செய்து கொள்ள வேண்டும்.



# படமும் செய்தியும்



மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் காரைக்குடியில் மருது பாண்டியர் போக்குவரத்துக் கழக நிர்வாக அலுவலகக் கட்டடம், சிவகங்கைப் பால் குளிரூட்டும் நிலையம் மற்றும் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் ஆகியவற்றைத் திறந்து வைத்தார். மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி குச்சியா காந்தி, இ.ஆ.ப. உடன் உள்ளார் (12.3.91).



மேதகு ஆளுநரின் ஆலோசகர் திரு.வி.கார்த்திகேயன் அவர்கள் தர்மபுரி செங்குந்தர் திருமண மண்டபத்தில் மூதறிஞர் இராஜாஜி அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்துவைத்து, நலிந்தோர்க்கு நலத் திட்ட உதவிகளை வழங்கினார். செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. க. கணேசன், இ.ஆ.ப., தர்மபுரி மாவட்ட ஆட்சியாளர் திரு. கா. அலாவுதீன், இ.ஆ.ப. ஆகியோர் உடன் உள்ளனர் (14.3.91).

மேதகு ஆளுநரின் ஆலோசகர் திரு. வி. இராமசந்திரன் அவர்கள் சென்னையில் காதி - குடிசைத் தொழில் கண்காட்சியைப் பார்வையிட்டார் (15.3.91).





தலைமைச் செயலர் திரு. டி.வி. அந்தோணி, இ.ஆ.ப. அவர்கள், தேசிய மாணவர் படை, சாரணர் படை ஆகியோர் சென்னைப் புரசைவாக்கம் வெள்ளாளத் தெருவிலுள்ள மாநகராட்சி நடுநிலைப் பள்ளியினைத் தூய்மை செய்து வண்ணம் அடித்த நிகழ்ச்சியில் பங்கேற்றார் (16.3.91)

மாநிலப் போக்குவரத்து நிறுவனங்களின் செயல்பாடுகளைக் கவனிப்பதற்காக அமைக்கப்பட்ட நிபுணர் குழுத் தலைவர் திரு. ஆர். தில்லைநாயகம் குழுவின் அறிக்கையை, மேதகு ஆளுநரின் ஆலோசகர் திரு. வி. இராமச்சந்திரன் அவர்களிடம் அளித்தார் (18.3.91).



# சாலை நெடுகிலும் மனிதச் சங்கிலியா?

# இல்லை, இல்லை மனிதச்சுவர்!

(8-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஊற்றிக் கொண்டு நின்றிருந்தனர். அந்தத் தண்ணீருக்கும் வழியின்றிச் சிலர் தவித்தார்கள் !

ஆடுதுறை விவசாயிகள் சந்திப்பின் போது இந்த நிகழ்ச்சிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. விவேக் ஹரி நாராயணன் கேட்போர் நெஞ்சுருகும் வகையில் எடுத்துரைத்தார்.

முன்னாள் வேளாண்மைத்துறை அமைச்சர் திரு கோ.சி. மணி, "நடுவர் மன்றம் தஞ்சைமாவட்டப் பகுதிகளைப்பார்வையிடப் போகிறது என்ற செய்தி வந்ததிலிருந்து தஞ்சை மாவட்டத்திலுள்ள விவசாயிகள் மிகுந்த நம்பிக்கை அடைந்திருக்கிறார்கள்; காவிரி நீர் கிடைக்கும் என நம்பிக்கை பிறந்திருக்கிறது" என்றார்.

திரு . மணிசங்கரய்யர் பேசும் பொழுது, "காவிரி நீரில் தண்ணீர் வராமல் போனால் சோழவளநாடு என்ற பெயர் மாறி இந்த மாவட்டமே பாலைவனப் பூமியாகிவிடும். தஞ்சை மாவட்டத்தில் நிலத்தடி நீர் இருக்கிறது என்று யாரால் சொல்ல முடியும்? எங்கே நிலத்தடி நீர் இருக்கிறது?" என்று வினவினார்.



சென்ற வழியெல்லாம் கண்ட மனிதச் சங்கிலி.







பட்டுக்கோட்டையில் நடைபெற்ற விவசாயிகள் சந்திப்பு பிரமாண்ட மான பொதுக்கூட்டமாக அமைந்தது.

இந்தக் கூட்டத்தில் பேசிய விவசாயிகள், முக்கியப் பிரமுகர்கள் அனைவரும் காவிரி நீர் வராவிடில் தஞ்சைத் தரணி பஞ்பை' பூமியாகி விடும் என்பதைத் தகுந்த ஆதராத் துடன் விளக்கினார்கள்.

ஆடுதுறையிலிருந்து அணைக் கரைக்குத் திருப்பனந்தாள் வழியாக நடுவர்குழு சென்றது; வழிநெடு கிலும் மனிதச்சங்கிலி - துறவுபூண்ட சாமியார்கள் பலரும் இந்த மனிதச் சங்கிலியில் கலந்து கொண்டார்கள்!

கொள்ளிடத்தின் மீது அணைக் கரையில் கட்டப்பட்டிருக்கும் அணைக் கட்டு 1836-ல் கட்டப்பட்டது. இங்கு பிரியும் கால்வாய்கள் யாவும் வேளாண்மைக்குப் பயன்படுகின்றன. வீர நாராயண ஏரிக்கு இங்கிருந்து தான் நீர் கிடைக்கின்றது. சேத்தியாத் தோப்புப்பகுதிகள் இதன்மூலமே விவசாயம் பெறுகின்றன.

காவிரியில் வெள்ளம் மிகுந்தால் அது கொள்ளும் இடமாகக் கொள் இடம் இருந்தது. காவிரியே வறண்டு கிடக்கும்போது கொள்ளிடத்தில் வெள்ளமா வரும்?

பலநூறு ஆண்டுகளாகப் பாசன வசதி பெற்ற இடங்கள் 'பாழாகி வறண்டு கிடக்கும் கொடுமைதான் எங்கும் காணப்பட்டது. எங்களுக்கு உரிமையான காவிரி நீர் வர வேண்டும்! நியாயமான தீர்ப்பை வழங்குங்கள் என்று சொல்லும் தஞ்சைத்தரணி மக்கள் தங்கள் உணர்வைக் காட்டும் மனிதச்சங்கிலி யைத் தொடர்ந்தனர்.

அணைக்கரையிலிருந்து பந்த நல்லூர், வைத்தீஸ்வரன் கோவில் வழியாக சீர்காழிக்குச் சென்றது நடுவர்குழு. வழிநெடுகிலும் இரு புறமும் மனிதச்சங்கிலி, இல்லை இல்லை; ஒருபுறம் காலிப்பானைகள் வைக்கப்பட்டிருந்தன. காலிக்குடங்கள் தோரணங்களாகக்கட்டப்பட்டிருந்தன.

சீர்காழியில் நடைப்பெற்ற விவசாயிகள் சந்திப்பில் பேசிய வர்கள் அனைவரும் கடைகோடிப் பகுதியாக இப்பகுதிக்கு நீர் வராத தினால் வேலையிழந்த குடும்பங் களின் வேதனைகளை எடுத்துரைத் தனர்.

சீர்காழிக்குப் பிறகு பூம்புகார் நோக்கி நடுவர் குழு சென்றது. வழியெங்கும் மனிதச் சங்கிலியும் தொடர்ந்து வழியில் மேலையூரில் காவிரியின் மீது கடைசியாக அமைந் துள்ள மதகுகளைப் பார்வையிட்டனர்.

குடகு நாட்டில் தோன்றிய காவிரி மலையிலிருந்து வீழ்ந்தும், விரிந்தும், சுருங்கியும் அகன்றும், முப்பத்தைந்து கிளை ஆறுகள் பிரிந்திட வழிவகுத்து சோழ நாடு முழுவதும் வளம் கொஞ்சும் பூமி யாக மாறிட உதவியபின் மிகச்சிறிய ஆறாக உருமாறி குணதிசையில் காவிரி கடலோடு கலந்த இடத்தில் அமைந்த ஊர் பூம்புகார்.

வறண்டு மேடிட்ட காவிரி பூம்புகாரில் கலக்குமிடம் மண் மேடிட்ட இடம் இன்று. காவிரியில் நீர் இருந்தால் அல்லவா அது கடலில் விழும்? வரும் வழியெல்லாம் வறண்டு கிடக்கும்பொழுது அது எப்படிச்சங்கமமாகும்?

பூம்புகார் வந்த நடுவர் குழு பின்னர் புதுவை மாநிலத்தின் ஓர் அங்கமாக தஞ்சை மாவட் டத்திற்குள் உள்ள காரைக்கால் பகுதிக்குச் சென்றது. தஞ்சை மாவட் டத்தின் எல்லை முழுவதும் தொடர்ந் தது மனிதச் சங்கிலி.

காரைக்கால் பகுதியில் காவிரி யில் நீர்வராததால் அதன் கிளை நதிகள் வறண்டு விட்டதால் பயிர்ச்







சாகுபடி அனைத்தும் கெட்டுவிட் டதை நடுவர் குழு கண்டது.

மறுநாள், மார்ச்சு-26 காரைக் கால் பகுதியில் பாசனமின்றி பாதிக் கப்பட்ட பகுதிகளைப் பார்த்த பிறகு, தஞ்சை மாவட்டத்தின் வெண் ணாற்றுப் பாசனப் பகுதியைப்பார் வையிட நடுவர் குழு சென்றது.

தஞ்சாவூர் மாவட்ட எல்லை யான வாஞ்சூரில் தொடர்ந்த மனிதச் சங்கிலி அன்று இரவு எட்டரை மணிவரை செல்லும் பாதை எங்கும் தொடர்ந்தது.

நாகூர், நாகைப் பகுதியில் வாழும் இருபதாயிரம் மீனவர்கள் அன்று மீன் பிடிக்கச் செல்லவில்லை. காவிரிநீர் தர வேண்டி மனிதச் சங்கிலியில் கலந்து கொண்டனர். வணிகர்கள் கடைகளை மூடிவிட்டு மனிதச் சங்கிலியில் கலந்து கொண் டனர்.

நாகூர் முழுவதும் மக்கள் கூட்டத் தால் நிரம்பி வழிந்தது! 'இயற்கை பொய்க்கலாம், ஆனால் நடுவர் மன்றம் பொய்க்காது' என்ற நம் பிக்கை உணர்வுடன் நடுவர் குழுவை வரவேற்று நீதி கேட்கும் மனிதச் சங்கிலியில் இணைத்துக் கொள்ள ப் பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவியர்கள், செவிலியர், மருத்து வர்கள், மீனவர்கள, விவசாயத் தொழிலாளர்கள், வணிகர்கள், வழக்கறிஞர்கள் என்று சமுதாயத் தின் எல்லாத் தரப்பினரும் பங் கேற்றனர்.

நாகப்பட்டினத்தில் விவசாயிகள் சந்திப்பு உணர்ச்சிமிக்க நிகழ்ச்சியாக அமைந்திருந்தது. விவசாயத் தொழி லாளியான ஒரு பெண்- ''ஆற்றிலே நீரில்லே. மழை பெய்தால்தான் எங்களுக்கு வாழ்வு. தண்ணீர் இல் லாததினால் ஒருவேளை உணவுக்குப் வழியில்லை. எங்களுக்கு சாவுதான் முடிவா?''- என்று வினவினார்.

நாகையில் நடுவர் மன்றத்தினரி டம் ஏராளமான கோரிக்கை மனுக்கள் குவிந்தன.

## தஞ்சை மாவட்டத்தில் நிலத்தடி நீர் உண்டா?

நாகையில் விவசாயிகள் சந்திப் புக்குப் பின், தஞ்சாவூர் மாவட்டத் திற்குத் தேவையான நீரை நிலத்தடி யிலிருந்து எடுத்துக் கொள்ளலாம் என்று வாதிடுவோரின் கூற்றுகள், ஆதாரமற்றவை. அடிப்படையிலேயே தவறானவை என்று நடுவர் மன்றத் தினரிடம் நமது தொழில்நுட்ப வல்லு நர்கள் எடுத்துரைத்தனர்.

எவரும மறுக்கவொண்ணா சான்றுகளை எடுத்துரைத்தனர்.

ஐ.நா. வளர்ச்சித் திட்டத்தைச் சேர்ந்த நிலத்தடி நீர் வல்லுநர்கள் தஞ்சாவூர் மாவட்டத்தில் 1960-ஆம் ஆண்டு முதல் 1972- ஆம் ஆண்டுகள் வ்ரை நிலத்தடி தண்ணீரைப் பற்றி ஆய்வு செய்தார்கள்.

1969 முதல் 1972 வரை அவர்கள் ஆய்வு செய்த காலம் முறையாகத் தண்ணீர் வந்த கால மாகும். அவர்கள் ஆய்வே காவிரி யில் ஜூன் திங்களில் தண்ணீர் வருவதற்கு முன்பே காவிரி டெல்டா விவசாயிகள் நிலத்தடி நீரைக் கொண்டு விதை விதைத்துப் புதிய நாத்துக்களை வளர்க்கலாமா என் பதை முடிவு செய்யத்தான் அவர் களின் ஆய்வு அதற்குக் கூட வழி யில்லை தஞ்சாவூர் மாவட்டத்தில் நிலத்தடி நீரின் நிலை என்பதைத் துல்லியமாக எடுத்துக் காட்டியது.

காவிரி ஆறும் 'அதன்கிளை ஆறுகளும் பாயும் பகுதியில் 22 சதவிகிதம் உப்புத் தண்ணீரும், வெண்ணாறும் அதன் கிளைப் பகுதிகளும் பாயும் பகுதிகளில் 82 சதவிகிதம் நிலத்தடிநீர் உப்புத் தண்ணீராகவும் உள்ளன. கீழ்த் தஞ்சை மாவட்டத்தின் நிலப்பகுதி களிமண் மிகுந்ததாகும். மழைத்



தண்ணீர் முழுமையாக நிலத்துக்குள் இறங்குவதில்லை.

தஞ்சை மாவட்டத்தின் நிலத்தடி நீரின் இந்த நிலையை, மத்திய அரசின் நிலத்தடி நீர் அமைப்பும் ஏற்றுக் கொண்டுள்ளது.



## வடகிழக்குப் பருவமழையால் பாசனம் பெறுமா தஞ்சை மாவட்டம்?

இன்னொரு கருத்தும் சொல்லப் படுகிறது வடகிழக்குப் பருவமழை பெய்யும்பொழுது வரும் நீரைக் கொண்டு தஞ்சாவூர் மாவட்டத்தில் பாசனம் செய்ய முடியுமா? முடியவே முடியாது என்பதையும் விளக்கமாக எடுத்துரைத்தார் நிலத்தடி நீர் வல்லுந ரான நமது பிரதிநிதி திரு. லோகநாதன்

பருவமழை பெய்யும்பொழுது வரும் தண்ணீரின் ஒரு பகுதிதான் நிலத்தில் ஈர்க்கப்படுகிறது. மீதி யெல்லாம் வடிகாலில் சென்றடை கிறது. தேவையில்லாத கூடுதல் மழை கடைமடைப் பகுதிகளின் வேளாண்மையைப் பாதிக்கிறது.

இதை விளக்க இப்படி ஓர் உதாரணத்தைச் சொல்லலாம்.

ஒருவனுக்கு ஐந்து இட்லிதான் காலை உணவாகத் தேவைப்படும். அவனிடம் 60 இட்லியை கொடுத் தால், ஐந்து இட்லியைச் சாப்பிட்டு மீதியை மற்றவர்களிடம் கொடுத்து விடுவான், அல்லது ஒதுக்கி வைத்து விடுவான். மறுநாள் காலையில் அவனுக்கு இட்லி தேவைப்படும். 60 இட்லியை 12 நாட்களுக்கு வைத்துக் கொள் என்று சொல்லு வது போலதான் மழைத் தண்ணீ ரைப் பயன்படுத்து என்பது அந்தநீரை எப்படிச் சேமிப்பது? கிழக்குத் தஞ்சையில் நாகை, பெரு மழையால் அடிக்கடி பாதிக்கப்படும் ஊராகும். ஆனால் அந்த மழைநீரை சேமித்து வைக்கும் பூமியாகக் கீழத் தஞ்சைப் பகுதி ஏன் தஞ்சாவூர் மாவட்டம் முழுவதும் இல்லையே. நிலத் தன்மை அப்படி.

இதனால்தான் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாகக் காவிரி ஆற்றின் பாசனத்தை இந்த மாவட்டம் பயன்படுத்தி வந்தது.

இந்த விவரங்களை நமது தொழில் நுட்ப அறிஞர்கள் மிகத் தெளிவாக நடுவர்குழுவிடம் எடுத்துரைத்தனர்.

நாகையிலிருந்து வேளாங்கண்ணி சென்று அங்கிருந்து திரும்பி மஞ்சக் கொல்லை, சிக்கல், கீவளூர் வழியாக நடுவர்குழு திருவாரூர் சென்றது. செல்லும் வழியெங்கும் மனிதச் சங்கிலிதான். கோஷா அணிந்த இஸ்லாமியப் பெண்கள் முதல் தள்ளா வயதில் தடியூன்றி நின்று கொண்டிருந்தோர்வரை சாலையின் இருமங்கிலும் இந்தச் சங்கிலித் தொடர்தான். புறவழிச் சாலையில் மேலும் கீழுமாக மனிதச் சுவர் எழுப்பியது போல மக்கள் கூட்டம்.

திருவாரூரில் விவசாயிகள் சந்திப் பின்போது முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பங் கேற்றனர். திரு. வீரையன் பேசும் பொழுது, தண்ணீர் வராததினால் விவசாயத் தொழிலாளர்கள் படும் துயரங்களை எடுத்துரைத்தார். விவ சாயத் தொழிலாளியான ஒரு பெண் தங்களது மனக்குமுறலை வெளி யிட்டார்.

திருவாரூரிலிருந்து திருத்துறைப் பூண்டிக்கு நடுவர்குழு செல்லும் வழியெல்லாம் எங்கும் மனிதச் சுவர்தான்.

இருமருங்கிலும் இந்த மனிதச் சுவர் இருந்தது. ஒரு பக்கம் மனிதர்கள் என்றால் இன்னொருபுறம் காலிப் பானைகள் என்றும் சில இடங் களில் மனிதச் சங்கிலி தொடர்ந்தது.

திருத்துறைப் பூண்டியில் விவசாயிகள் சந்திப்பின்போது யாராவது ஒருவர் பேசுங்கள் என்று அழைத்தபோது கூட்டத்திலிருந்து எழுந்துவந்த ஒரு விவசாயத் தொழிலாளி உள்ளம் உருகப்பேசினார்.





''கடந்த 17 ஆண்டுகளாகத் தண்ணீர் சரியாக வருவதில்லை. குறுவை சாகுபடியுமில்லை. மொத்த மாக விதையைத் தெளித்து விவசாயம் பண்ணும்நிலை. பெண்களுக்கு மட்டும் புல்லைப் பிடுங்கிட சில நாட்கள் வேலை. ஆண்களுக்கு வேலையில்லை. பிள்ளைகளைப் பார்த்துக்கொள்ளும் வேலை தான். நாள்தோறும் கணவன் மனைவிச் சண்டை. ஒருநாள் ஒருவேளை உணவுக்கே திண்டாட்டம்'' என்ற நடைமுறை வாழ்க்கையை அவர் விளக்கினார்.

திருத்துறைப் பூண்டியில் இருந்து முத்துப்பேட்டை வழியாக நடுவர் குழு பட்டுக்கோட்டை சென்றது. வழிநெடுகிலும் காவிரி நீர் வேண்டும் என்ற உரிமைக் குரலை நடுவர் குழுவுக்கு உணர்த்த எடுக்கப்பட்ட மனிதச் சுவர் இருக்கிறதே அது கல் நெஞ்சுடையோரையும் கரையச்செய்யும்.

சின்னஞ்சிறிய சிறுமிகள் முதல் மூதாட்டிகள் வரை- வயது வேற்றுமை இல்லாமல் இளையோர்- மூத்தோர், ஆடவர், பெண்டிர் என்று சுவர் வைத்தது போல நின்றனர்.

**இந்தக் காட்சிகளைக் கண்ட நடுவர் குழுவினரே மனம்விட்டுச் சொன்னார்கள் 'எங்கள் வாழ் நாளில் இப்படியொரு காட்சியைக் கண்டதில்லை' என்று.**

அந்த அளவுக்கு உணர்ச்சி ஊட் டியது மனிதச் சங்கிலி. பட்டுக் கோட்டையில் கொளுத்தும் வெயி லிலும் எங்கும் மக்கள் திரள்! திரள்!

விவசாயிகள் சந்திப்பின்போது முன்னாள் அமைச்சர்கள் திரு. வீராச்சாமி, திரு.கோவேந்தன், முன்னாள் நாடாளுமன்ற, உறுப்பினர் திரு. சுந்தரராஜன் விவசாயச் சங்கத் தலைவர்கள் உரை நிகழ்த்தினர். விவசாயத் தொழிலாளியான மகளிர் சங்கத் தலைவியான ஒரு பெண், தாங்கள் படும் வேதனையை மனம் உருகச் சொன்னார்:- ''காவிரியில் தண்ணீர் வந்தால் இராமநாதபுரத் தில் இருந்து பிழைக்க வருவார்கள். எங்கள் ஊரில் பிழைக்க முடியாத தால் நாங்கள் பிழைப்புத் தேடி, வேறு மாநிலங்களுக்குச் செல்ல வேண்டிய நிலை வந்திடுச்சு! தண்ணீர் தாருங்கள் இல்லேல ஈராக்கிலேகுண்டு போடுற மாதிரி குண்டுபோட்டு எங்களையும் சாகடிச்சிடுங்க!''.



இந்தக் கூட்டத்தில்தான் கடந்த இரண்டு நாட்களாகத் தஞ்சாவூர் மாவட்டத்தில் 520 கிலோ மீட்ட ருக்கு அதிகமாக மனிதச் சங்கிலி- இல்லை இல்லை, மனிதச் சுவர் அமைக்கப்பட்டு தங்கள் கோரிக்கை களை விவசாயிகள் வலியுறுத்தி வருவதைப் பாராட்டி நன்றி தெரிவித்தார் மாவட்ட ஆட்சித் தலைவர் விவேக் ஹரிநாராயணன்.

''காவிரி ஆற்றில் தமிழ்நாட்டுக்கு உரிய தண்ணீரை வழங்குவது சமூக, பொருளாதார, அரசியல் பிரச் சினை அல்ல. மனிதநேயப் பிரச்சினை. தஞ்சாவூர் மாவட்டத்தில் மட்டும் பதினைந்து இலட்சம் குடும்பங்கள் ஒருவேளை உணவுக்கும் வழியின்றி அல்லலுறுவதை அழகாக எடுத்து ரைத்தார் மாவட்ட ஆட்சித் தலைவர்.

பின்னர் பட்டுக்கோட்டையிலிருந்து ஓரத்தநாடு வழியாகத்தஞ்சாவூருக்கு நடுவர் குழு சென்றது. இருட்டி விட்ட நேரத்திலும் விளக்குகளுடன் மனிதச் சங்கிலி தொடர்ந்தது. தஞ்சை வரை மனிதச் சங்கிலிதான். ஏறத் தாழ 550 கிலோமீட்டர் தொலை வுக்கு மக்கள் மனிதச் சங்கிலியால் இணைக்கப்பட்டிருந்தனர்.

மறுநாள் 27.3.91 காலையில் தஞ்சாவூரிலிருந்து நடுவர்குழுவினரு டன் ஆளுநரின் ஆலோசகர்கள் திரு. கார்த்திகேயன், திரு. இராமச் சந்திரன், பொதுப்பணித்துறைச் செயலாளர் மற்றும் அதிகாரிகள் செல்ல அனைவரும் ஹெலிகாப்ட ரின் மூலம் காவிரி டெல்டா பகுதி முழுமையும் கொள்ளிடம் கடலில் கலக்குமிடம் முதல் தஞ்சையின் கிழக்குக் கடற்கரை முடிய எல்லாப் பகுதிகளையும் பார்வையிட்டனர்.

மாலையில் தஞ்சையில் விவசாயி களின் பேரணி.

காவிரிப்பாசனம் எங்கள் பரம் பரை உரிமை. பறிக்கப்பட்ட அந்த உரிமையால் பாதிக்கப்பட்டது எங்கள் வாழ்வு மட்டுமல்ல ; நம் நாட்டின் உணவு உற்பத்தி! பதி னைந்து இலட்சம் பேருக்கு வேலை யும் இல்லை. ஒருவேளை உணவுக் கும் வழியில்லை. அவர்களின் மனித உரிமைகளும் பறிக்கப்பட்ட கொடுமையைக் கேளீர்! என்று சொல்வது போல் அமைந்திருந்தது அக்கூட்டம்.

ஒவ்வொரு கூட்டத்திலும் தஞ்சை மாவட்ட விவசாயிகளின் கோரிக் கையை எடுத்து வைத்த மாவட்ட ஆட்சித்தலைவர் விவேக் ஹரிநாராயண் அவர்களின் உரை, தஞ்சை விவசாயி களின் மனக்குமுறலை எடுத்துக் காட்டியது.

இந்தக் கூட்டத்தில் திரு.எஸ்.ரங்க



அடுத்த இதழ்

**தமிழரசு**

**(16.4.91 இதழ்)**

**அண்ணல் அம்பேத்கர்**
**நூற்றாண்டு நிறைவுச் சிறப்பிதழ்**

நாதன், திரு.ஆதிமூலம், திரு.தஞ்சை மன்னர் மன்னன், திரு. மன்னை நாராயணசாமி, திரு. அழகு திருநாவுக்கரசு, திரு. வீரையன், திரு.துளசி ஐயா வாண்டையார் உட்படப்பலரும் பேசினார்கள்.



தஞ்சை மாவட்டத்தின் இருநாள் சுற்றுப்பயணத்திலும் கலந்துகொண்ட ஆளுநரின் ஆலோசகர் திரு. வி. இராமச்சந்திரன், தஞ்சை நிகழ்ச்சியில் பங்கேற்ற ஆளுநரின் ஆலோசகர் திரு. வி.கார்த்திகேயன் ஆகியோரும் தஞ்சையில் கலந்து கொண்டனர்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் நடுவர் மன்றம் மற்ற பிரதிநிதிகள் சுண்ட அத்தனை நிகழ்ச்சிகளும் பதினேழு ஆண்டுகளாகப் பாதிக்கப்பட்ட பரிதாப நிலையைப்படம் பிடித்துக் காட்டின.

மக்கள் தங்கள் உரிமையை எழுச்சியை உணர்ச்சியை எடுத்துக் காட்டிட உதவியவர் தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. விவேக் ஹரி நாராயண்; கடந்த பதினேழு ஆண்டுகளாகத் தஞ்சை விவசாயி படும் தொல்லைகளை அனுபவித்தவர் போல் செயல்பட்டார். அவருடைய பணிக்கு உதவிய அலுவலர்கள் அனைவரும் தஞ்சை மாவட்ட மக்களின் பாராட்டுதலுக்கும் நன்றிக்கும் உரியவர்கள் என்பதை மாவட்ட நிகழ்ச்சிகள் படம் பிடித்துக் காட்டின.

தஞ்சை மாவட்டத்து மக்களின் பிரச்சினையை நன்குணர்ந்தவர்கள். இப்பொழுது உள்ள ஆளுநரின் ஆலோசகர்கள், திரு.வி.கார்த்திகேயன் அவர்கள் தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தவர்.

இன்னொரு ஆலோசகரான திரு. வி.இராமச்சந்திரன் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர். மத்திய நீர்ப் பாசனத்துறை அமைச்சராக கே.எல்.ராவ் இருந்தபோது 1974-ஆம் ஆண்டில் காவிரி நீர்ப்பங்கீடு பேச்சு வார்த்தை ஒரு நல்ல, முடிவுக்கு வரும் என்ற சூழல் தோன்றிய போது உடனிருந்து பணியாற்றியவர்.

தலைமைச் செயலாளராக இருக்கும் திரு.டி.வி.அந்தோணி அவர்கள் தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தவர்.



பொதுப்பணித்துறைச் செயலாளராக இருக்கும் திரு.டி.முருகராஜ் அவர்கள் தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தவர். எனவே, எல்லாரும் தஞ்சை மாவட்டத்தின் உண்மை நிலையை நன்கு உணர்ந்தவர்கள். உரிமைக் குரலை எடுத்துரைப்பதில் எந்தவிதத் தயக்கமும் இல்லை.

மறுநாள் 28.3.91 காலையில் திருச்சி மாவட்டத்திலுள்ள மாயனூரில் உள்ள கட்டளைக் கால்வாய் பகுதியைப் பார்வையிட்டார்கள். அகண்ட காவிரியின் உருவத்தை தெற்குக் கரைப்பக்கம் இருந்து நடுவர் குழு கண்டது. மாயனூர் விவசாயிகள் சந்திப்பும் காவிரி நீர் வராததினால் படும் துன்பத்தை தெளிவாக்கியது.

எப்பொழுதாவது பெருக்கெடுத்து ஓடிவரும் காட்டாற்று வெள்ளத்தையும் கட்டுப்படுத்தி குடகனாற்றில் விட வழி செய்யும் திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம் வேடசந்தூர் அருகிலுள்ள அழகாபுரியில் கட்டப்பட்டும் குடகனாறு அணை கட்டுமானப்பணியையும் நடுவர்கள் பார்வையிட்டனர்.

குடகனாறு அமராவதியில் சேரும் துணை ஆறு அமராவதி பின்னர் காவிரியுடன் சேருகிறது. இதனை நடுவர்குழு நன்கு தெரிந்து கொள்ள அந்தப் பகுதிக்கும் அழைத்துச் செல்லப்பட்டது.

மொத்தத்தில் இந்தப் பயணம் தமிழ்நாடு அரசின் நியாயமான கோரிக்கைகளை நடுவர்குழு எடுத்துரைக்கும் நல்வாய்ப்பை உருவாக்கித் தந்தது. நமது அரசு சார்பில் நமது உரிமையை ஆதாரப்பூர்வமாக வலியுறுத்தினோம்.



இந்தப் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு திறம்படப் பணியாற்றிய பொதுப்பணித்துறைச் செயலாளர் டி.முருகராஜ், காவிரி நீர்ப் பங்கீடு தமிழகக் குழுவின் தலைவர் திரு. ஏ.மோகன கிருஷ்ணன், தொழில்நுட்ப வல்லுநர் திரு. பி.கே.பாலகிருஷ்ணன், நிலத்தடி நீர் வல்லுநர் திரு.லோகநாதன் ஆங்காங்கே விளக்கம் தந்த நீர்பாசனத் துறை பொறியாளர்கள், தமிழகக் குழுவில் இடம் பெற்றிருந்த பொதுப் பணித்துறை பொறியாளர்கள், வல்லுநர்கள் அனைவரும் சிறப்புடன் தங்கள் கடமையை நிறைவேற்றினார்கள் என்று மட்டும் சொல்லி விட முடியாது.

ஏற்ற பொறுப்பைத் திறப்படச் செய்த அவர்களைப் பாராட்டவும் அவர்களுக்கு நன்றி செலுத்தவும் தமிழ்மக்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

இந்தச் சுற்றுப்பயண நிகழ்ச்சி உணர்த்திய உண்மை இது!

நமது நியாயமான கோரிக்கை வெற்றியை ஈட்டித் தரும் என்ற நம்பிக்கையையும் இந்தச் சுற்றுப்பயணம் ஏற்படுத்தியது.

ஏனெனில்,

**வாய்மையே வெல்லும்!** ●

## கல்வெட்டு கண்ட காவிரி!

**ப**ல கால நிலைகளிலும் ஏற்பட்ட பல்வேறு படையெடுப்புகள் காவிரியின் நீர்ப்பெருக்கைக் குறைக்கவோ தடுக்கவோ இல்லை. காவிரி வெள்ளம் ஆண்டாண்டு தோறும் வற்றாமலே இருந்திருக்கிறது என்பதற்குச் சான்றுகள் உள்ளன. மகேந்திரவர்ம பல்லவர் காலத்தில் திருச்சிராப்பள்ளி மலைக்கோவிலில் வெட்டப்பெற்ற கல்வெட்டு

''யாற்றை விரும்பும் இறைவன்... தோட்டங்களையும் விரும்பத்தக்க குளங்களையுமுடைய காவிரியாற்றைக் கண்டு அவள்மீது காதல் கொள்வான் என்று மலையரையன் மகள் ஐயமுற்றுத் தான் பிறந்தகத்தை விட்டு இம்மலை மீது நின்று கொண்டு 'இவ்யாறு பல்லவனது' என்று சொல்லிக் கொண்டே இருக்கிறாள்''

என்று கூறுகின்றது.

சாளுக்கிய அரசன் இரண்டாம் புலிகேசியின் பட்டயமொன்று,

''துள்ளிவிழும் கயல்மீன்களைக் கண்களாகக் கொண்ட காவிரி, சாளுக்கியனது யானைகளின் மதநீர் விழுந்ததால் ஓட்டம் தடைப்பட்டுக் கடலில் கலக்க இயலாததாயிற்று. புலிகேசியும் பல்லவப் பனியைப் போக்கும் கடுங்கதிரவனாய்ச் சேர சோழ பாண்டியரைக் களிப்புறச் செய்தான்''

என்று கூறுகின்றது. இத்தகைய பெருக்குடைய காவிரியின் நீர்ப் பயன்பாடு பற்றி கி.பி. பத்தாம் நூற்றாண்டிலிருந்து கல்வெட்டுக்களின் வழியே பல செய்திகள் அறியப்படுகின்றன.

கி.பி.10-ஆம் நூற்றாண்டு அளவிலேயே காவிரி யாற்றின் கடைமடைப் பகுதியில்; அதாவது இன்றைய தஞ்சாவூர் மாவட்டத்தில் காவிரி ஆறும் அதனுடைய பல கிளை ஆறுகளும் பெருமளவுக்குப் பாசனத்திற்காகப் பயன்படுத்தப்பட்டன என்பதைக் கல்வெட்டுகள் தெளிவாகக் காட்டுகின்றன. ஏராளமான சிறு சிறு கிளைக் கால்கள் இவ்வாறுகளிலிருந்து பிரிக்கப்பட்டு, பெரும்பாலான ஊர்களுக்குப் பாசனம் கொடுக்கப்பட்டது. எந்த ஊர் கல்வெட்டை எடுத்துக் கொண்டாலும் அந்த ஊரில் ஒன்றுக்கு மேற்பட்ட கிளை வாய்க்கால்கள் இருந்தன என்ற செய்தி கிடைக்கும். இக்கிளை வாய்க்கால்கள் நீரோடுகால் பாலாறு, கண்ணாறு என்று பலவாறு வழங்கப்பட்டன. வயல்களிலிருந்து நீரை வடிப்பதற்காகவும் தனிக்கால்கள் இருந்தன என்று தெரிகிறது. இந்த வடிகால்கள் வதி என்று அழைக்கப்பட்டன.

—'காவிரி தமிழகத்தின் உயிரோட்டம்' என்ற நூலிலிருந்து.



# தமிழரசு

16-4-1991 ரூ.1



### திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டத்தில்



# இடைபடு காடுகள் வளர்ச்சித் திட்டம்

**வ**னக் காடுகளுக்கு அருகில் வாழும் மக்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பயன் படும் வனப்பகுதி, இடைபடு காடுகள் என்றழைக்கப்படுகின்றது.

இப்பகுதியில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், அன்றாட வாழ்க்கைக்குத் தேவை யானவற்றைக் கிடைக்கச் செய்யவும், காடுகளையே நம்பி வாழும் நிலையை அகற்றிடவும் இத்திட்டத்தில் வழி வகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் இத்திட்டம் செங்கை-அண்ணா, சேலம், திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டத்தில் செயல்பட்டு வருகிறது.

திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டம், அய்யலூர் வனப் பகுதி யில், காப்புக்காடு, காப்புக்காடு அல்லாத 4231.64 எக்டேர் பரப் பில் 1988-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களிலிருந்து இத்திட்டம் செயல் படுகிறது.

அய்யலூர் மலைப்பகுதியில் ஏழு காப்புக்காடுகளில் 7,723.13 எக்டேர் பரப்பில் காடுகள் தரம் குறைந்துள்ளதாகக் கண்டு அறியப் பட்டுள்ளது. இக்காப்புக் காட்டுக் கருகில் 8 கிராமங்களும் 70 ஊர் களும் அடங்கியுள்ளன.

மலையை நம்பி வாழும் இப் பகுதி மக்களுக்கு மாற்றுப் பணி கொடுக்கும் திட்டத்தின்கீழ், குடும் பத்தில் ஒருவருக்கு ஆண்டு முழு வதும் வேலைவாய்ப்பளிப்பது, தீவனப்பயிர், பழ மரங்கள், விறகு மரங்கள், சிறு தடி மரங்கள் போன்ற வற்றைக் கிராமப் புறம்போக்கு நிலங்களில் வளர்த்து கிராமத் தேவைகளை நிறைவேற்றுவது ஆகிய வற்றுக்கான நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருகிறது. தனியார் நிலங்களில் பயிரிட, பழமர விதைகள் இலவசமாக வழங்கப்பட்டு வரு கின்றன.

வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டத் தின்கீழ், இதுவரை 6 இலட்சத்து 75 ஆயிரத்து 438 மனித சக்தி நாட்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது. 43 ஆயிரத்து 446 மரக்கன்று வழங்கப் பட்டுள்ளது. 448 தடுப்பு அணைகள் கட்டப்பட்டு, 344.70 கி.மீ. தூரம் சமதள நீர்த்தேக்கக் குழிகள் வெட்டப் பட்டுள்ளன. 4 கசிவு நீர்க் குட்டைகள் கட்டப்பட்டுள்ளன.

நிலமில்லா விவசாயத் தொழி லாளி, குறு, சிறு விவசாயிகள் இத் திட்டத்தினால் இதுவரை 4 ஆயிரத்து 217 குடும்பங்கள் பயன்பெற்றுள் ளன. 40 டன் தீவனப் புல் மற்றும் ரூ.38 ஆயிரத்து 745 மதிப்புள்ள சிறு வன மக்சூல் பொருட்களும் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. 350 மகளிருக்குச் சுயவேலைவாய்ப் புக்கான பயிற்சியும், குடும்பநலத் திட்டப் பயிற்சியும் அளிக்கப்பட்டுள் ளன. 6 குழந்தைகள் காப்பகங் களும், 5 கிராமங்களுக்கு ஆழ் குழாய்க் குழாயும் அமைத்துக் கொடுக் கப்பட்டுள்ளன. 4 திறந்த வெளிக் கிணறுகள் அமைத்துக் கொடுக்கப் பட்டுள்ளன. 4 தீவன வங்கிகளும், முதியோர் இரவுப் பள்ளிகளும் அமைக்கப்பட்டுள்ளன. 60 மீட்டர் நீளத்திற்குச் சிரமதானத்தின் மூலம் தடுப்புச் சுவர் கட்டப்பட்டுள்ளது. 5 கிராமத்தில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்தப் பட்டுள்ளது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் 203 குடும்பங்களுக்குக் கறவை மாடுகள் வழங்கப்பட்டுள்ளன.

பரவலாக்கப்பட்ட நாற்றங்கால் எழுப்பும் திட்டத்தின்கீழ், 120 மகளிர்களுக்கு ரூ.1 இலட்சத்து 43 ஆயிரத்து 691 வழங்கப்பட்டுள்ளது. அய்யலூர் அரசினர் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் ஒரு இலட்சம் மரக்கன்றுகள் எழுப்பியதன் மூலம், இப்பள்ளிக்கு 3 குதிரை சக்தியுள்ள மின்சாரப் பம்பு செட்டும், ஒரு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி யும் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத் திற்காக ரூ.145 இலட்சம் செல விடப்பட்டுள்ளது.

—கே.பி.நல்லதம்பி,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம்



**மிக நுண்ணிய செய்திகளை மனத்தில் திணித்து மனனம் செய்து அனைவருக்கும் எடுத்துரைப்பது மட்டுமே கல்வியல்ல; அது, பார்வை அற்றவர்களுக்குக் கண்களைக் கொடுப்பதற்குப் பதிலாகக் கண் போன்ற எதையோ அவர்களுக்கு ஒட்ட வைப்பது போலவாகிவிடும்.**

**— டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன்**

**நான்காவது அட்டையில்:**
**காவிரியால் வளம் பெற்று வந்த திருச்சி மாவட்டத்தின் ஒரு பகுதி.**

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

## எளிமையானவை! நேர்த்தியானவை!
## மேன்மை மிகுந்தவை!
## தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.



மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் 'சென்னை மாநிலக் கல்லூரியின் 150-வது ஆண்டு விழாவினைத் தொடங்கி வைத்து, விழா நினைவுக் கட்டடத்திற்கான அடிக்கல்லை நாட்டினார். இந்த விழாவில் மேதகு ஆளுநரின் ஆலோசகர்கள் திரு. வே.கார்த்திகேயன், திரு. வி.இராமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர் (5.4.1991).



மேதகு ஆளுநர் திரு.பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் சென்னையில் பாரதிய வித்யா பவனில் நடைபெற்ற அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டார் (4.4.1991).

# ஆன்றோர் போற்றிய சான்றோர் அம்பேத்கர்



**மாபெரும் பகுத்தறிவுவாதி!**

அநேக அரிய காரியங்களைச் செய்த ஒரு மாபெரும் பகுத்தறிவுவாதியும், ஆராய்ச்சி நிபுணரும், சீர்திருத்தப் புரட்சி வீரருமாவார் டாக்டர் அம்பேத்கர்.



**அரசியலமைப்புச் சட்டத்தின் தந்தை**

"இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியதில் டாக்டர் அம்பேத்கர் மிக முக்கியமான பங்கினை வகித்துள்ளார். அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்குவதில் அவரைவிட அதிக சிரத்தையும், அக்கறையும் எடுத்தவர் வேறு யாரும் கிடையாது"



**அந்தப் பெயரைச் சொல்லி...**

அம்பேத்கர் இருந்த இடமும் தூரமும் மிக அதிகம். எனினும் இங்கு பற்பல இடங்களில் 'அம்பேத்கர் மன்றம்', 'அம்பேத்கர் படிப்பகம்', 'அம்பேத்கர் படத்திறப்பு' என்று அவரது அந்தப் பெயரைச் சொல்லி உவகை கொள்வதுண்டு நாம்.

## இந்த இதழில்...


| | |
|---|---|
| அம்பேத்கர் வாழ்விலே! ... | 2 |
| அண்ணல் அம்பேத்கரும் தென்னிந்தியத் தலைவர்களும் ... | 4 |
| தொழிலாளர் தலைவர் டாக்டர் அம்பேத்கர் ... | 9 |
| கருப்பு வைரம் ... | 13 |
| தந்தை பெரியாரும் அண்ணல் அம்பேத்கரும் ... | 14 |
| புரட்சி வீரர் அம்பேத்கர் ... | 15 |
| அரசியல் அமைப்பின் தந்தை அம்பேத்கர் ... | 16 |
| ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப்பணி ... | 17 |
| குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்க விரைவான பணிகள் ... | 19 |
| தோட்டக்கலையில் தமிழகம் ... | 21 |
| சமுத்துவத்தின் விடிவெள்ளி ... | 24 |
| பெரியார் மாவட்ட வளர்ச்சிப் பணிகள் ... | 28 |
| இலக்கியத்தில் காவிரி ... | 34 |
| புயல்போல் புகுந்த புலவர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் ... | 41 |
| மாநிலக் கல்லூரியின் வயது—150 ... | 48 |


## இனிய வாழ்த்து

சித்திரைத் திருநாள், நல்ல
சிறந்த புத்தாண்டு நன்னாள்
எத்திசைத் தமிழ ருக்கும்
எல்லோர்க்கும் இனிய வாழ்த்து!

—தமிழரசு

## அண்ணல் அம்பேத்கர் சிறப்பிதழ்


தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2022

சித்திரைத் திங்கள் - 3

மலர்: 21 இதழ்: 20

16-4-1991

# அண்ணல் அம்பேத்கரும் தென்னிந்தியத் தலைவர்களும்

ந. அ. கருணாகரன்

இலண்டனில் 1930, 31, 32-இல் நடந்தேறிய மூன்று வட்ட மேஜை மாநாடுகளில் சென்னை மாநிலத்தின் சார்பாக ராவ் பகதூர் ஆர். சீனிவாசன் அவர்களும், பம்பாய் மாநிலத்தின் சார்பாக டாக்டர் அம்பேத்கரும், செட்யூல்டு சமுதாயத்தின் பிரதிநிதிகளாக வட்ட மேஜை மாநாட்டில் கலந்துகொண்டனர்.

முதல் வட்ட மேஜை மாநாட்டில் காந்தியார் கலந்து கொள்ளவில்லை. அந்த முதல் வட்ட மேஜை மாநாட்டின்போது 1930 டிசம்பர்-31-இல் சிறுபான்மையினர் மூன்றாவது (Insub-Committee) துணைக்கூட்டத்தில் செட்யூல்டு சமுதாயத்தின் கோரிக்கைகளை முன்வைத்து ராவ் பகதூர் ஆர். சீனிவாசன், டாக்டர் அம்பேத்கர் ஆகியவர்களால் தயாரிக்கப்பட்ட ஓர் கூட்டறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அதன் தொடர்புடைய அவ்விரு பெருந்தலைவர்களால் தயாரிக்கப்பட்ட 1931 நவம்பர் 4-ஆம் தேதியிட்ட மற்றொரு அறிக்கையும் இரண்டாவது வட்ட மேஜை மாநாட்டில் சமர்ப்பிக்கப் பட்டது.

வட்டமேஜை மாநாட்டில் கலந்து கொண்ட உறுப்பினர்களை மேன்மை தாங்கிய ஐந்தாம் ஜார்ஜ் மன்னரும், ராணியும் வின்சர்காஸ்டல் என்னும் ராஜ மாளிகைக்கு மூன்றுமுறை வரச்செய்து, கை குலுக்கி விருந்தளித்தனர். மன்னரிடம் பின்னுமோர்முறை இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் சந்தித்துப்பேச நேர்ந்தது. அவ்வமயம் மன்னர் 'தீண்டாமை என்றால் என்ன?' என்று திரு. இரட்டைமலை சீனிவாசன் அவர்களைக் கண்டு வினவினார். அதற்கு அவர், 'மேல் ஜாதியான் என்போன் கீழ் ஜாதியான் என் போனைத் தீண்டமாட்டான்' என்று பதிலளித்தார். உடனே மன்னர் "ஒரு கீழ் ஜாதியான் தெருவில் வீழ்ந்து விட்டால் மேல் ஜாதியான் தூக்கி விடமாட்டானா?' என்று மேலும் வினவினார். அதற்கு இரட்டை மலை சீனிவாசன் 'தூக்கி விட மாட்டான்' என்று பதிலளித்தார். அதை மன்னர் கேட்டுத் திடுக்கிட்டு நின்று 'அவ்விதம் நடக்க என் அரசாட்சியில் விடமாட்டேன்' என்றார். மன்னரின் உறுதிமொழியின்பேரில் செட்யூல்டு சமுதாய மக்களின் குறைபாடுகளை அறிந்து அரசுக்கு அறிவிக்க லார்டு லோத்தின் பிரபுவின் தலைமையில் ஒரு குழு (Commission) நியமிக்கப்பட்டது.

காந்தியடிகள் எரவாடா சிறையில் இருந்தபோது 1932 ஆகஸ்ட் 17-இல் பிரிட்டிஷ் பிரதம மந்திரி ராம்சே மக்டொனால்டு செட்யூல்டு வகுப்பாரின் தனித்தொகுதிக்குச் சாதகமாக அரசு முடிவு செய்ததாக ஓர் அறிக்கையை வெளியிட்டார். அடுத்த நாளே ஆகஸ்டு 18-இல் ராம்சே மக்டொனால்டுக்கு காந்தியார், 'என் உயிரைக் கொடுத்து உங்கள் முடிவை எதிர்க்கிறவனாக இருக்கிறேன். அதைச் செய்யச் சாகும் வரை நிரந்தரமாய் உண்ணா விரதம் இருப்பதுதான் எனக்குள்ள ஒரே வழி. உப்பும் சோடாவும் கலந்தோ கலக்காமலோ அருந்தும் தண்ணீரைத் தவிர வேறு எந்தவித உணவையும் உண்ணமாட்டேன்'. என்று எழுதினார். காந்தியார், கூறியபடியே 1932 செப்டம்பர் 20-இல் தன் உண்ணாவிரதத்தை மேற்கொண்டார்.

தனித் தொகுதிக்குப் பதிலாக, பிரைமரி தேர்தல் முறையை தேஜ் பகதூர்சப்ரு தயாரித்து டாக்டர் அம்பேத்கரைச் சந்தித்து அதை அவர் சம்மதிக்கும்படி செய்தார். திரு. ஆர். சீனிவாசன் அவர்களின் ஒப்புதலும் அவசியம் தேவை என்று எண்ணிய டாக்டர் அம்பேத்கர் தந்தி கொடுத்து அவரைப் பம்பாய்க்கு வரும்படிச் செய்தார்.

செட்யூல்டு வகுப்பாருக்கு வழங்கப் பட்ட தனித்தொகுதியை விட்டுக் கொடுத்து, அதற்குப் பதிலாகப் பிரைமரி தேர்தலை ஆதரிக்கும் ஒப்பந்தத்தில் எரவாடா சிறையில் 1932 செப்டம்பர் 24-இல் டாக்டர் அம்பேத்கர், ராவ்பகதூர் ஆர். சீனிவாசன், ராவ்சாகிப் என். சிவராஜ் மற்றும் பல செட்யூல்டு சமுதாயத் தலைவர்கள் கையொப்பமிட்டனர். அதற்கடுத்து டாக்டர் அம்பேத்கரும், ராவ்பகதூர் ஆர். சீனிவாசனும் செட்யூல்டு வகுப்பாரின் தனித்தொகுதி முறையை விட்டுக் கொடுக்கத் தாங்கள் சம்மதிப்பதாகத் தந்தியின் மூலம் பிரிட்டிஷ் அரசுக்கு அறிவித்தனர். இதுவே எரவாடா உடன்படிக்கை அல்லது பூனா ஒப்பந்தம் எனப்படும். இந்த ஒப்பந்தத்தினால் வட்ட மேஜை மாநாட்டிற்கே வரலாற்று முக்கியத்துவம் இல்லாமற் போயிற்று.

திருமதி மீனாம்பாள் சிவராஜ், டாக்டர் அம்பேத்கர், ராவ் சாகிப் என். சிவராஜ் ஆகியோர்.







இலண்டனில் நடைபெற்ற முதலாவது வட்டமேஜை மாநாட்டு மண்டபம்.

முதலாவது வட்ட மேஜை மாநாடு இலண்டனில் நடைபெற்றபோது அதில் பங்கேற்ற இரட்டைமலை சீனிவாசன், டாக்டர் அம்பேத்கர், ஏ.டி.பன்னீர் செல்வம் ஆகியவர்கள்.





# அண்ணல் அம்பேத்கர் வாழ்விலே.

அண்ணல் அம்பேத்கர் வாழ்வில் நிகழ்ந்த முக்கியச் சம்பவங்கள் இங்கே தொகுத்தளிக்கப்படுகின்றன.

| | |
|---|---|
| 1891: | ராம்ஜி சக்பால் - பீமாபாய் தம்பதிகளுக்குப் பதினான்காவது ஆண்மகனாக மராட்டிய மாநிலத்தில் உள்ள அம்பாவர்டேஎன்ற கிராமத்தில் ஏப்ரல் 14-ஆம் நாள் பீமாராவ் (அம்பேத்கர்) பிறப்பு. |
| 1891 | தந்தையார் ஓய்வு பெறுதல். |
| 1896 | தாயார் பீமாபாய் மறைவு. |
| 1904 | அவருடைய குடும்பம் பம்பாய்க்குக் குடி பெயர்தல். |
| 1907 | மெட்ரிகுலேஷன் தேர்வில் தேர்ச்சி அடைதல். |
| 1913 | பி.ஏ. தேர்வில் வெற்றி பெறுதல்; தந்தையார் மறைவு. |
| 1913 | (ஜூலை) அமெரிக்க நாட்டுக்குப் பயணம். |
| 1915 | எம்.ஏ. பட்டம் பெறுதல். |
| 1916 | இலண்டனிலுள்ளபொருளாதாரம் மற்றும் அரசியல் கலைக் கல்லூரியில் சேர்தல். |
| 1918 | சைதாம்ஸ் கல்லூரியில் தற்காலிகப் பேராசிரியராகப் பணியேற்றல். |
| 1920 | 'ஊமைகளின் தலைவன்' (Mook Nayak) என்ற பத்திரிகை தொடங்குதல். |
| 1923 | டாக்டர் அம்பேத்கரின் பொருளாதாரக் கட்டுரைகள் 'பி.எஸ்.கிங் அண்ட் கம்பெனியாரால்' புத்தகமாக முதன்முதல் வெளியிடப்படுதல். |
| 1923 | பம்பாய் நீதிமன்றத்தில் வழக்கறிஞர் தொழிலைத் தொடங்குதல். |
| 1925 | நிப்பானில் ஒடுக்கப்பட்டோர் மாநாடு கூட்டுதல். |
| 1927 | கார்கான் வார் மெமோரியலில் தாழ்த்தப்பட்டோர் மாநாடு கூட்டுதல். |
| 1927 | மனுஸ்மிருதிக்கு, மாபெரும் பொதுக் கூட்டத்தில் தீ வைத்தல். |
| 1927 | 'மகாடு' என்னும் ஊரில் உள்ள குளத்தில் அரிசனங்கள் தண்ணீர் எடுப்பது பற்றி அறிவிப்பு வெளியிடுதல். |
| 1927 | பகிஷ்கரித் ஹிட்டாகரினி சபா மூலம் 'பகிஷ்கரித் பாரத்' என்னும் பத்திரிகை தொடங்குதல். |
| 1928 | எல்லோருக்கும் பணிக்காலத்தில் வழங்கப்படும் உரிமைகள் மகார் பிரிவு மக்களுக்கும் தரப்பட வேண்டும் என்றோர் தீர்மானத்தை மேல்சபையில் கொண்டு வருதல். |
| 1928 | அரிசன மாணவர் விடுதி மற்றும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் கல்விச் சங்கம் தொடங்குதல். |
| 1931 | இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்ளுதல். |
| 1932 | மூன்றாவது வட்டமேசை மாநாட்டில் பங்கேற்றல். பூனா ஒப்பந்தம் |
| 1933 | டில்லி மத்திய சபையில், தீண்டாமையை ஒழிக்கத் தீர்மானம் கொண்டு வருதல். |
| 1934 | அரசு சட்டக் கல்லூரியில் பேராசிரியர் வேலையில் அமர்தல். |
| 1935 | மே 27, மனைவி ரமாபாய் மறைவு. |
| 1935 | அக்டோபர் 3 இயோலாவில் நடந்த மாநாட்டில், "நான் இந்துவாகப் பிறந்திருந்தாலும், இந்துவாக இறக்க மாட்டேன்" என்று அறிவித்தல். |
| 1936 | 'தொழிலாளர் சுதந்திரக் கட்சி' அம்பேத்கரால் ஆரம்பிக்கப்படுதல். |
| 1942 | வைஸ்ராய் கவுன்சிலில், தொழில் துறை உறுப்பினராக அண்ணல் அம்பேத்கர் சேர்த்துக் கொள்ளப்படுதல். |





பம்பாயில் நடைபெற்ற அனைத்திந்திய தாழ்த்தப்பட்டோர் சம்மேளன மாநாட்டில் - நீதிக்கட்சி இளைஞரணித் தலைவரும் அனைத்திந்திய தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத் தலைவருமான ராவ்சாகிப் என். சிவராஜ் அவர்களுடன் அண்ணல் அம்பேத்கர்.

—படம் உதவி: என்.ஏ. கருணாகரன்

| | |
|---|---|
| 1945 | 'அகில இந்தியத் தாழ்த்தப்பட்டோர் இயக்கம்' அம்பேத்கரால் துவக்கப்பட்டது. |
| 1946 | வைஸ்ராய் கவுன்சில் உறுப்பினர் பதவியிலிருந்து விலகுதல். |
| 1947 | டாக்டர் அம்பேத்கர், இந்திய அரசின் சட்ட அமைச்சராக நியமிக்கப்படுதல். |
| 1948 | டாக்டர் சபீதாவை 2-ஆம் தாரமாக மணத்தல். |
| 1950 | பாராளுமன்ற உறுப்பினர் தேர்தலில் போட்டியிடுவோருக்கு என்னென்ன தகுதிகள் இருக்க வேண்டும் என்றோர் சட்டப் பிரிவு அம்பேத்கரால் உருவாக்கப்படுதல். |
| 1950 | ஏப்ரல் 14 - 60-வது பிறந்த நாள் விழா. |
| 1951 | அரசு, தாழ்த்தப்பட்டோரை மதிக்கவில்லை என்று கூறி, தமது அமைச்சர் பதவியை அம்பேத்கர் ராஜினாமா செய்தல். |
| 1951 | 'பாரதீய புத்த ஜனசங்கம்' என்ற அமைப்பு அவரால் உருவாக்கப்படுதல். |
| 1956 | நாகபுரியில் மிகப் பெரிய அளவில் நடைபெற்ற பௌத்தர்கள் மாநாட்டில், இந்து மதத்தைத் துறந்து புத்த மதத்தில் சேருதல். |
| 1956 | டிசம்பர் 6-ஆம் தேதி, உறக்கத்திலேயே அண்ணல் அம்பேத்கரின் உயிர் பிரிதல். |
| 1974 | அம்பேத்கர் பெயரால், வட சென்னையில் அரசினர் கலைக் கல்லூரி நிறுவப்பட்டது. |
| 1980 | ஆகஸ்டில் அம்பேத்கர் திருவுருவப் படம் தமிழ்நாடு சட்டப் பேரவையில் திறந்து வைக்கப்பட்டது. |
| 1989 | செப்டம்பர் 30-இல், தமிழகத்தில் டாக்டர் அம்பேத்கர் மாவட்டம் உருவாக்கப்படுதல் |
| 1990 | ஏப்ரல் 12-இல், நாடாளுமன்றத்தில் அம்பேத்கர் திருவுருவப்படம் திறந்து வைக்கப்பட்டது. |
| 1990 | ஏப்ரல் 14-இல் அம்பேத்கர் பிறந்த நாள் அரசு விடுமுறை நாளாக மத்திய அரசால் அறிவிக்கப்பட்டது. |
| 1990 | மத்திய அரசு, அம்பேத்கரை நினைவு கூரும் வகையில், அவரது திருவுருவம் பொறித்த அஞ்சல் தலைகளை இரண்டு முறை வெளியிட்டது. |
| 1990 | சென்னைச் சட்டக் கல்லூரிக்கு 'டாக்டர் அம்பேத்கர் சட்டக் கல்லூரி' என்று பெயர் சூட்டப்பட்டது. |

தமிழ்நாட்டில் பல இடங்களில் அம்பேத்கர் திருவுருவச் சிலைகள் அமைக்கப்பட்டன.

எல்லப்பன், திருச்சி சிவப்பிச்சை ஆகியோர் ஆதரித்தார்கள்.

திட்டமிட்டபடி 'All India Scheduled Castes Federation' 1942-ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. அதை அம்பேத்கர் கட்சி என்று அழைக்கப் பட்டாலும் அதன் தலைமையை டாக்டர் அம்பேத்கர் ஏற்க மறுத்த தோடல்லாமல் திரு. என். சிவராஜ் அவர்களையே அதன் தலைவராக ஆக்கினார். அந்த பெடரேஷனின் கொடியில் ஏழு நட்சத்திரங்கள் இடம்பெற்றன.

1944 ஆகஸ்ட் 27-இல் பெரியார் ஈ.வெ.ரா. திராவிடர் கழகத்தை சேலத்தில் நடந்த மாநாட்டில் தோற்று வித்தார். இதனை முன்னிட்டு 1944 செப்டம்பர் 17-இல் டி. சுந்தர் ராவின் திரையரங்கமான 'சன் தியேட்டரில்' தென் இந்திய நல உரிமைச் சங்கத்தின் செயற்குழுவின் ஆலோசனைக் கூட்டம் கூடியது. அச்செயற்குழு திரு. இராமச்சந்திர ரெட்டி அவர்களை ஒரு மனதாகத் தென் இந்திய நல உரிமைச் சங்கத் தின் தலைவராகத் தேர்ந்தெடுத்தது.

டாக்டர் அம்பேத்கரின் ஆலோசனை பெற திரு. பி. பாலசுப்ரமணியம் முதலியார் தென் இந்திய நல உரிமைச் சங்கத்தின் ஆலோசனைக் கூட்டத்தை 1944 செப்டம்பர் 22 பிற்பகலில் சென்னை ஓட்டல் கன்னிமராவில் கூட்டினார். உணவுக்குப் பின் நடந்த அக்கூட்டத்தில் டாக்டர் அம்பேத்கர் ஆற்றிய சிறப்புரையில் அவர் 'கட்சி என்றால் கட்சிக்கு ஒரு நல்ல தலைவரும் நல்ல திட்டங்களைக் கொண்ட அமைப்பும் வேண்டும். கட்சிக்குப் பொது மேடைகள் வேண்டும். தலைவரைக் குறை கூறுவது நல்ல காரியம் அல்ல; அது கூடாது'' என்று அறிவுரை கூறினார். செப்டம்பர் 24-இல்

'The Madras Provincial Scheduled Caste Federation' -னின் தலைவரும் அங்கத்தினர்களும் டாக்டர் அம்பேத்கர் அவர்களைப் பாராட்டி வாழ்த்து மடல் வழங்கினார்கள்.

அகில இந்திய செட்யூல்டு பெடரேஷனின் சார்பாக 1945 டிசம்பர் 25 செவ்வாய்க் கிழமை மாலை 5 மணி அளவில் மாநிலத் தேர்தலை முன்னிட்டுச் சிறப்புக் கூட்டம் ஒன்று சென்னை பெரம்பூர் பேரக்ஸ் கான்ஸ்மித் நகரில் நடந்தேறியது. நகரத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் செட்யூல்டு பெடரேஷன் சின்னங்களைத் தாங்கி 'டாக்டர் அம்பேத்கர் வாழ்க', 'தீண்டாமை ஒழிக' போன்ற பலவித கோஷங்களுடன் அங்கு 4-30 மணிக்கு சுமார் 30,000 மக்களுக்குக் குறையாமல் கூடினர். அங்கு தாய்மார்களும் நீதிக் கட்சியின் பொதுச் செயலாளர் கே.சி. சுப்ரமணியம் செட்டியாரும், எஸ். முத்தையா முதலியார், டி.ஏ.எஸ். சாமி, டாக்டர் எ. கிருஷ்ணசாமி, எ.கே. பிள்ளை, ஜி.எ. அப்துல்காதர், எம்.சி.முகம்மது இப்ராஹிம் முதலிய பலரும் அக்கூட்டத்திற்கு வந்திருந்தனர். மேன்மை தாங்கிய டாக்டர் அம்பேத்கர் அவர்கள் ராவ்பகதூர் என். சிவராஜ் அவர்களால் வரவேற்கப்பட்டார். அக்கூட்டத்தில் அகில இந்திய செட்யூல்டு வகுப்பு பெடரேஷன் பொதுக்காரியதரிசி எம். ராஜ்போஜ் அவர்களும் வந்திருந்தார்.

ராவ் சாகிப் என். சிவராஜ் டாக்டர் அம்பேத்கர் அவர்களைச் சிறப்புரையாற்றும்படி கேட்டுக் கொண்டார். டாக்டர் அம்பேத்கர் தனது சிறப்புரையில் ''ஜஸ்டிஸ் கட்சியாரும் தங்கள் நபர்களை வரப்போகும் தேர்தலில் நிறுத்தப் போவதாகக் கேள்விப்பட்டேன். அவர்கள் அவ்வாறு நினைப்பது மகிழ்ச்சிகரமான விஷயமே; அவர்கள் அவ்வாறு முடிவு செய்திருப்பதைப் பற்றி நான் மகிழ்ச்சியடைகிறேன்.'' என்று பேசினார். டாக்டர் அம்பேத்கர் ஆற்றிய ஆங்கிலச் சொற்பொழிவை என். சிவராஜ் தமிழில் மிக விளக்கமாக மொழிபெயர்த்தார்.

## புரட்சி வீரர்:

டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்குச் சமமாக இந்தியாவில் யாரையும் சொல்ல முடியாது. இன்று மட்டுமல்ல, முப்பது ஆண்டுகளுக்கு முன்பாகவே இதை நான் கூறியிருக்கிறேன். 1930 முதலே எனக்கு அவரைத் தெரியும்.

நமது 'குடியரசு' ஏட்டில் என்னென்ன கருத்துகள் வருமோ, அவைகளை எல்லாம் அவர் பேசி இருக்கின்றார். நமக்கு ஏற்ற நண்பர் என்பதை எண்ணி அவரை நான் பாராட்டி வந்தேன்.

நமது குடியரசில் அவரைப் பற்றிப் பாராட்டி எழுதியதைப் பார்த்துத்தான் தாழ்த்தப்பட்டவர்களே அவரை உணர்ந்தார்கள்.

அம்பேத்கர் சிறப்பாக- தாழ்த்தப்பட்ட சமுதாயத்துக்குத் தலைவர் என்று சொல்லப்பட்டாலும், பகுத்தறிவுக்கு எடுத்துக்காட்டாக உள்ள ஒரு பேரறிஞராக விளங்கினார். எப்படிப்பட்டவரும் எடுத்துச்சொல்லப் பயப்படும்படியான- புரட்சிகரமான விஷயங்களை எல்லாம் வெகு சாதாரணத் தன்மையில் எடுத்துச் சொல்லும்படியான வீரராகவும் விளங்கினார்.

— தந்தை பெரியார்



''நம்மை நாமே உயர்த்திக் கொள்ள வேண்டும். நாம் சுயமாக வாழ்வது எப்படி என்று கற்றுக் கொள்ள வேண்டும். தன்மானம் உடையவர்களாய் வாழ வேண்டும். நாமாக முயற்சி செய்து நமது அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும்.. இவற்றைச் செய்தால், நாம் உயர்வது உறுதி.''



# தொழிலாளர் தலைவர்

# டாக்டர் அம்பேத்கர்

''டாக்டர் அம்பேத்கர் அவர்கள் ஒரு போர் வீரனைப் போல் தம் வாழ்க்கையை அமைத்துக் கொண்டிருந்தார். மிகமிக ஒடுக்கியாளப்பட்டு வந்த மக்கள், தாங்கள் ஏன் அப்படி ஒடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதை எண்ணிப் பார்க்கவும் அச்சப்பட்ட காலத்தில், தாங்கள் ஒடுக்கப்படுவதற்கு யார் காரணம் என்பதைத் தட்டிக் கேட்கத் திராணியில்லாமல் இருந்த காலத்தில்... குனிந்து குனிந்து வாழ்ந்தவர்களை நிமிரச்செய்து... பேசாதவர்களைப் பேசவைத்துப் போராடச் செய்து வந்தார்.''

-- டாக்டர் அம்பேத்கரைப் பற்றிப் பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டது இந்தச் சொல்லோவியம்.

அப்படியெல்லாம் அல்லும் பகலும் பாடுபட்டு வரும் தனக்கு, இந்து மதத்தார் உரிய மரியாதை தரவில்லை என்ற துயரமே அம்பேத்கர் உள்ளத்தைச் சல்லடையாக்கியது. அதனால் தான், சொந்த மதமாம் இந்து மதத்தை விட்டு, வேறு எந்த மதத்திலாவது போய்ச் சேரும் முடிவுக்கு அவர் வந்தார்.

அந்த முடிவைக் கண்டித்தும், மறுபரிசீலனை செய்யும்படியும் பலரும் கருத்தறிவித்தார்கள்.

அதேபோல, அந்த முடிவுக்கு ஆதரவு தெரிவித்துச் செய்தியனுப்பியவர்களும் இந்தியாவில் இருந்தார்கள். அப்படிப்பட்டவர்களில் ஒருவர் நம் தமிழ்நாட்டைச் சேர்ந்த பெரியார் ஈ.வெ. ராமசாமி அவர்கள் ஆவார்.

பிறவி இழிவைத் துடைத்துக் கொள்ளக் கருதி, மதம் மாறப் போவதாக அண்ணல் அம்பேத்கர் அறிவித்ததும், பெரியார் கீழ்க்கண்டவாறு அவருக்கோர் தந்தியனுப்பினார்:

''தாங்கள் புத்திசாலித்தனமான முடிவுக்கு வந்தது பற்றி வாழ்த்துகிறேன். எக்காரணம் கொண்டும் அந்த முடிவிலிருந்து மாற வேண்டாம்; அவசரப்பட வேண்டாம். குறைந்தது பத்து இலட்சம் பேரையாவது முதலில் மாற்ற வேண்டும். பிறகு தான் தாங்கள் மதம்மாற வேண்டும். அதுதான் உருப்படியான காரியமாக இருக்கும். மலையாளம் உட்படத் தென்னிந்தியாவே தங்களுடைய முடிவுக்குப் பலத்த ஆதரவு அளிக்கும்.''

பெரியார் ஈ.வெ. இராமசாமி அவர்கள் அனுப்பிய இந்தத் தந்தி, அம்பேத்கருக்கு எத்தகைய பாதிப்பை உண்டாக்கியதோ நமக்குத் தெரியாது. ஆனால் தன்னுடைய முடிவில் அவர் அழுத்தமாகவே இருந்தார்.

1936-ஆம் ஆண்டு ஆகஸ்டில் டாக்டர் அம்பேத்கர் ஒரு கட்சி ஆரம்பித்தார். மேத்தா என்பவரோடு இணைந்து துவங்கிய அக்கட்சிக்குத் 'தொழிலாளர் சுதந்திரக் கட்சி' (Indipendent Labour Party) என்று பெயர். தாழ்த்தப்பட்ட மக்களின்



பூனா ஒப்பந்தத்தின் மூலம் தனித்தொகுதிமுறை கைவிடப்பட்ட போதிலும் எப்படியாவது செட்யூல்டு வகுப்பாரின் உரிமைகளைக் காப்பதற்கு வழிவகைச் செய்ய வேண்டுமென்று எண்ணிய சுந்தர் ராவ் 1933-இல் தாழ்த்தப்பட்டோர் ஊழியர் படை (The Depressed Classes Service Army) என்ற ஓர் அமைப்பை உருவாக்கி அதன் தலைவராகப் பொறுப்பேற்றார். செட்யூல்டு வகுப்பாருக்குத் தனித்தொகுதி முறையை (Seperate Electorate) கிடைக்கச் செய்வதே இவ்வமைப்பின் நோக்கமாகத் திகழ்ந்தது.

திரு. ஜே. சிவசண்முகபிள்ளை எம்.ஏ., ஒருவர் மட்டுமே பூனா ஒப்பந்தத்தில் கையொப்பமிடவில்லை. தாழ்த்தப்பட்டோர் ஊழியர் படையின் செயலாளர்களாக திரு. ஜே. சிவசண்முகபிள்ளையும், திரு. எஸ்.பி.ஐ. பாலகுருசிவமும், அவ்வமைப்பின் துணைச் செயலாளர்களாக திரு. பி. செல்வநாதன், திரு. கே.ஜே. நல்லையாவும் விளங்கினார்கள். அவ்வமைப்பின் துணைத் தலைவர்களாக ராவ் சாகிப் எம்.ஜி. மதுரைப்பிள்ளை, ரெவரண்ட் ஜான் ரத்தினம், சுவாமி சகஜானந்தா, ராவ் சாகிப் எல்.சி. குருசாமி, ராவ் சாகிப் வி.ஐ. முனுசாமிபிள்ளை, ஏ.டபுள்யு. அட்டன் இன்னும் பலர் விளங்கினார்கள்.

முதல் மந்திரி மாண்புமிகு பொப்லி அரசரும், செட்டிநாட்டு குமாரராஜா முத்தையா செட்டியாரும் அதன் காப்பாளர்களாகப் பொறுப்பேற்றனர். சென்னை நகரிலும் சுற்றுவட்டாரத்திலும் மொத்தம் 7,000 உறுப்பினர்கள் இதில் அங்கம் பெற்றனர். இது சம்பந்தமாக 1934-இல் சென்னையில் வரதராஜபுரத்தில் நீதிபதி கிருஷ்ணசாமி நாயுடுவின் பங்களாவில் பாபாசாகிப் டாக்டர் அம்பேத்கர் அவர்களை வரவழைத்து அவரது மேலான யோசனையைத் தாழ்த்தப்பட்ட ஊழியர் படையின் தலைவரான திரு. டி. சுந்தர்ராவும் மற்றும் நீதிக்கட்சித் தலைவர்களும் கேட்டறிந்தார்கள்.

டாக்டர் அம்பேத்கரின் மனைவியாரான ரமாபாய் அம்மையார் 1935 மே 27-அன்று காலமானார். கடவுள் பற்றுள்ள அந்த அம்மையார் பண்டரிபுரத்திலுள்ள பாண்டுரங்கக் கடவுளை ஒரு முறையாவது காண வேண்டும் என ஆவல் கொண்டிருக்க, அம்மையாரின் விருப்பத்தை டாக்டர் அம்பேத்கர் அவர்களால் நிறைவேற்ற முடியாமல் போயிற்று. அதற்குக் காரணம் தாழ்த்தப்பட்டவர்கள் இந்துக் கோயிலுக்குள் அனுமதிக்கப்படாமையேயாகும்.

அம்மையாரின் விருப்பத்தை அவரால் நிறைவேற்ற முடியாமல் போயிற்றே என்ற காரணத்தினாலும், பூனா ஒப்பந்தத்தினால் செட்யூல்டு சமுதாயத்திற்கு ஏற்பட்ட பாதிப்பையும் எண்ணி, எண்ணி டாக்டர் அம்பேத்கர் மனம் உடைந்து போனார். பின்னர் அவர் "இந்து மதத்தில் நான் தாழ்த்தப்பட்டவனாகப் பிறந்தது என் துரதிருஷ்டம்.... நிச்சயமாக நான் ஒரு இந்துவாக இறக்க மாட்டேன்" என்று தாழ்த்தப்பட்ட மக்களின் மாநாட்டில் முழங்கினார். தம் மக்களை மதம் மாறும்படியும் கோட்டுக் கொண்டார்.

திரு. ஆர் சீனிவாசன் "ஆதிதிராவிடர்கள் இந்துக்களே அல்ல; இந்துவாகப் பிறந்தால்தானே இந்துவாக இறப்பதற்கு. மதம் மாற்றம் என்ற கேள்விக்கே இடமில்லை;" என்று தந்தியின் மூலம் டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்கு அறிவித்தார்.

டாக்டர் அம்பேத்கர் எடுத்த முடிவிற்குப் பதிலளிக்கும் வகையில் "Depressed Classes are not in the Hindu Fold" என்ற தலைப்பில் ராவ்பகதூர் ஆர்.சீனிவாசன் எழுதிய கடிதம் 1935 அக்டோபர் 20, ஞாயிறு அன்று வெளிவந்த 'Madras Mail' இதழிலும் 1935 அக்டோபர் 21-திங்களில் வெளிவந்த 'Justice' இதழிலும் வெளியாகி உள்ளன.



டாக்டர் அம்பேத்கர் 1934-இல் சென்னைக்கு வருகை புரிந்தபோது நீதிபதி டபுள்யு எஸ். கிருஷ்ணசாமி அவர்கள் வீட்டில் எடுக்கப்பட்ட படம். திரு.டி.சுந்தர்ராவ், ஏ.டபுள்யு ஹட்டன், எஸ்.முத்தையா, திரு.எல்.சி.குருசாமி, திரு.டி.வரதராஜுலு. திரு.ஜி.ஏ.கவாய், திரு.வி.தர்மலிங்கம் பிள்ளை, திரு.ஏ.கிருஷ்ணசாமி ஆகியோரும் படத்தில் உள்ளனர்.

திரு இரட்டைமலை சீனிவாசன் 1926 ஜனவரி 1-இல் ராவ்சாகிப் என்ற பட்டம் பெற்றார். இவர் 1928-இல் 'The Madras Provincial Depressed Classes Federation' என்ற ஓர் அமைப்பைத் தோற்றுவித்தார். அவ்வமைப்பின் பொதுச் செயலாளராக திரு. என். சிவராஜ் பி.ஏ., பி.எல்., எம்.எல்.சி., விளங்கினார். 1930 ஜூன்-3-இல், ஆர்.சீனிவாசன் அவர்களுக்கு ராவ் பகதூர் என்ற பட்டமும் அதற்கடுத்து 1936 ஜனவரி 1-இல் திவான்பகதூர் என்ற பட்டமும் வழங்கப்பட்டன. அவர் 1936-இல் 'The Madras Provincial Depressed Classes Federation'-ஐ 'The Madras Provincial Scheduled Castes Party' என்ற பெயரில் ஒரு கட்சியாக மாற்றினார். அக்கட்சியின் துணைத் தலைவராக ராவ் சாகிப் என். சிவராஜ் விளங்கினார்.





டாக்டர் அம்பேத்கரும், அவரது துணைவியாரும்.

திவான்பகதூர் ஆர். சீனிவாசன் 'The Madras Provincial Scheduled Castes Party' -ஐ 1938-இல், 'The Madras Provincial Scheduled Castes Federation'-ஆக மாற்றினார். அதில் ராவ்சாகிப் திரு. என். சிவராஜ் அங்கம் வகிக்கவில்லை. அதற்குக் காரணம் அதைப் போன்ற பெடரேஷனை அனைத்திந்திய மட்டத்தில் துவக்கி அதன் தலைவராக டாக்டர் அம்பேத்கர் அவர்களை ஆக்க வேண்டுமென்பதாகும்.

செட்யூல்டு வகுப்பில் பெரும்பாலோர் பாமர மக்களாகவும், டாக்டர் அம்பேத்கர் அவர்களை அறியாதவர்களாகவும் விளங்கிய படியால் டாக்டர் அம்பேத்கர் அவர்களை அம்மக்கள் அறியச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் திருமதி மீனாம்பாள் சிவராஜ் அவர்கள் உடனடியாகத் தென் இந்திய ஆதிதிராவிடர்களின் மாநாடு கூட்டம் ஒன்றைக் கூட்ட வேண்டும் என்று திட்டமிட்டார். டாக்டர் அம்பேத்கருக்குப் பதிலாக எம்.சி. ராஜா அவர்களின் தலைமையில் பெடரேஷனைத் துவக்கும்படி உறவினர்கள் அம்மையார் அவர்களை வற்புறுத்தினார்கள். அதை அம்மையார் பொருட்படுத்தவில்லை. டாக்டர் அம்பேத்கர் அவர்களே அகில இந்திய செட்யூல்டு வகுப்பாரின் தலைவராக விளங்கத் தகுதியுடையவரென்று கருதினார். இதன் காரணமாக அம்மையார் டி.சுந்தர் ராவ் அவர்களின் உதவியை நாடினார்.



புத்தமதத்தில் சேர்ந்தபின் டாக்டர் அம்பேத்கர்.

நீதிக்கட்சியின் 14-வது மாநில மாநாடு சென்னையில் ஜலண்டு மைதானத்தில் 1938 டிசம்பர் 29,30,31 ஆகிய நாட்களில் நடந்தது. இந்த மாநாட்டில்தான் சிறையில் இருந்தபடியே பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் நீதிக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அக்கட்சியின் தலைவரானார். அம்மாநாட்டின் செயலாளராக டி. சுந்தர்ராவ் விளங்கி மாநாட்டைச் சிறந்த முறையில் நடத்தி வைத்தார். மாநாடு 31-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை முற்பகலுடன் முடிவடைவதால் பிற்பகலில் தென்இந்திய ஆதிதிராவிடர்கள் மாநாடு நடத்துவதற்கு மீனாம்பாள் சிவராஜ் அம்மையார் அவர்கள் டி. சுந்தர் ராவ் அவர்களைக் கேட்டதும் அவர் அம்மாநாட்டுப் பந்தலை இலவசமாகக் கொடுத்து உதவினார். மேலும் அவர் காவல் துறையினரது அனுமதியும் பெற்றுத்தந்தார்.

தென் இந்திய ஆதிதிராவிடர் மாநாடு மீனாம்பாள் சிவராஜ் அம்மையார் தலைமையில் 1938 டிசம்பர் 31 ஞாயிற்றுக்கிழமை மாலை 6-30 மணி அளவில் துவங்கியது. அம்மாநாட்டில் எடுத்த தீர்மானங்களில் ஒன்று "கூடிய விரைவில் சென்னை மாகாண ஆதிதிராவிட மாநாடு ஒன்று டாக்டர் அம்பேத்கர் தலைமையில் நடத்த வேண்டுமென்று இம்மாநாடு விரும்புகிறது" என்பதாகும். இத்தீர்மானத்தை ஆர். ராஜகோபால் கொண்டு வந்தார். தோழர்கள் சிந்தாதிரிப் பேட்டை சுவாமிநாதன் வேலூர் சுப்ரமணியம், குடந்தை



"இந்திய மக்களாகிய நாம், இன்று அரசியலில் மகத்துவம் உடையவர்களாகவும், சமூக பொருளாதார வாழ்வில் சமத்துவம் அற்றவர்களாகவும் இருக்கிறோம். நமது அரசு இந்த முரண்பாட்டை விரைவில் போக்கியாக வேண்டும். இல்லையென்றால், யார் இந்தச் சமத்துவமின்மையால் துன்பப்படுகிறார்களோ, அவர்களால் தியாகம் பல புரிந்து உருவாக்கப்பட்ட இந்த ஜனநாயக அமைப்பு தகர்த்தெறியப்பட்டு விடும்."

முன்னேற்றமே அக்கட்சியின் குறிக்கோள்.

இதற்கு அடுத்த ஆண்டே, மாகாண சுயாட்சி முறையில் இந்தியாவில் தேர்தல் அறிவிக்கப்பட்டது.

இதற்கிடையில், உடல் நலக் குறைவு ஏற்படவே அம்பேத்கர் ஜெனீவாவுக்குச் சென்று ஓய்வெடுத்துக் கொண்டார். நவம்பர் மாதத்தில் புறப்பட்டுச் சென்ற அவர், வியன்னாவுக்கெல்லாம் போய்விட்டு, ஜனவரி மாதத்தில் இந்தியாவுக்குத் திரும்பினார்.

தன்னுடைய தொழிலாளர் சுதந்திரக் கட்சியும் தேர்தலில் நிற்கும் என்றும் அறிவித்தார் அம்பேத்கர். மனிதாபிமானம் மிக்க வேறு சில கட்சியின் உறுப்பினர்களையும் தம் கட்சி மூலம் ஆதரிப்பது என்றும் முடிவு செய்தார்.

காங்கிரஸ் கட்சி சார்பிலேயே அந்தத் தேர்தலில் அதிக அளவு வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டார்கள்.

டாக்டர் அம்பேத்கர், பம்பாய் தொகுதியிலிருந்து போட்டியிட்டார்.

இந்தியாவெங்கும் இப்போது பரவலாகக் கிரிக்கெட் மோகம் இருக்கிறதல்லவா? இதே நிலை அப்போதும் இந்தியாவில் இருந்தது. ஆகவே, அம்பேத்கரை எதிர்த்து, பம்பாய் தொகுதியில் பால்வென்கர் என்ற கிரிக்கெட் வீரர் காங்கிரஸ் கட்சி சார்பில் நிறுத்தப்பட்டார்.

தேர்தல் பிரச்சாரம் மிகத் தீவிரமாக நடத்தப்பட்டது. அரிசன மக்களே அண்ணல் அம்பேத்கருக்கு எதிராகத் தூண்டி விடப்பட்டார்கள். ஆனால், இப்படிப்பட்ட சூழ்ச்சிகள் எல்லாம் அம்பேத்கரின் திறமைக்கும் பெருமைக்கும் ஈடுகொடுக்க முடியவில்லை.

தேர்தல், எல்லாத் தரப்பினரின் பலத்த எதிர்பார்ப்போடும் நடந்து முடிந்தது. பிப்ரவரி மாதம் 17-ஆம் தேதியன்று தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டன.

பெருவாரியான ஓட்டுகள் வித்தியாசத்தில் அம்பேத்கர் மகத்தான வெற்றி பெற்றார்.

அது மட்டுமல்ல; அந்தத் தேர்தலில், அவரால் துவக்கப்பட்ட 'தொழிலாளர் சுதந்திரக் க்ட்சி'யின் சார்பில் 17 வேட்பாளர்கள் போட்டியிட்டார்கள். அவர்களில் 15 பேர் வெற்றி பெற்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஏறத்தாழ இந்த வெற்றிச் செய்தி அறிவிக்கப்பட்ட அதே நேரத்தில்தான்—மகாடு நகரில் இருந்த சௌடா குளத்தில், எல்லோரும் தண்ணீர் எடுத்துக் கொள்ளலாம் என்று நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியது.

தேர்தல் வெற்றியோடு அந்த வெற்றியும் சேர்த்து நாடெங்கும் கொண்டாடப்பட்டது.

அந்தத் தேர்தலில் மொத்தத்தில் காங்கிரஸ் கட்சி வேட்பாளர்கள் அதிக அளவில் வெற்றி பெற்றிருந்தார்கள். ஆனால், வெள்ளை ஆதிக்கத்தின் மேலிருந்த வெறுப்புணர்ச்சி காரணமாக அரசு அமைக்க அவர்கள் தயாராக இல்லை. ஆகவே, பம்பாய் கவர்னரே இடைக்கால அரசு அமைத்தார்.

காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் கூடிப் பேசினார்கள். 'ஏன் நாமே அரசு அமைக்கக் கூடாது' என்று விவாதித்தார்கள். அதன்பின் எடுக்கப்பட்ட முடிவுப்படி ஜூலை 18-ஆம் தேதியன்று அவர்கள் பதவியேற்றுக் கொண்டார்கள். பி.ஜி. கேர் என்பவர் பம்பாய் பிரதமராகப் பதவியேற்றுக் கொண்டார்.

டாக்டர் அம்பேத்கருக்கு, எதிர்க்கட்சி வரிசையில் இடம் ஒதுக்கப்பட்டது.

சட்டமன்றம் கூடியது. அமைச்சர்களுக்கெல்லாம், தலைக்கு ஐநூறு ரூபாய் சம்பளம் என்று அறிவித்தார் பிரதமர் பி.ஜி. கேர். இது பற்றி சபையில் விவாதம் நடைபெற்றது.

"தாய் நாட்டுக்காகப் பலன் கருதாமல் உழைக்கிறேன் என்று சொல்லிக் கொள்பவர்களுக்கு, மக்கள் வரிப்பணத்திலிருந்து ரூ.500 சம்பளம் என்று எடுத்துக் கொடுப்பது அநியாயம். ரூ.75 ச்ம்பளம் கொடுத்தால் போதாதா?" என்று வாதாடினார் அம்பேத்கர். முடிவில், பி.ஜி. கேர் கொண்டு வந்த தீர்மானம் வாபஸாகி விட்டது.

டாக்டர் அம்பேத்கர், 1937-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17-ஆம் நாளன்று சட்டமன்றத்தில் முதன் முதலாக ஒரு முக்கியத் தீர்மானம் கொண்டு வந்தார். நிலச் சீர்திருத்தம் (Khoti System) பற்றியதே அது. அந்த முதலாவது தீர்மானமே வெற்றிகரமாக சபையில் நிறைவேறியது.

'ஊராட்சி மற்றும் நகராட்சி மன்றங்களில் அரிஜன் என்று போடப்படுவதை நீக்க வேண்டும். அரிஜன் என்றால் கடவுளின் குழந்தைகள் என்று பொருள்படும்என்று பேசப்படுகிறது அப்படியானால் மற்றவர்கள் யாருடைய குழந்தைகள்....?'என்றெல்லாம் அம்பேத்கரின் ஆதரவாளர்களில் ஒருவரான கெய்க்வாட் என்பவர் அத் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் பேசுகையில் கேட்டார்.

அவ்வாறு அவர் கொண்டு வந்த தீர்மானம், ஓட்டெடுப்புக்கு விடப்பட்டபோது தோற்றுப் போயிற்று.

அதற்குக் கண்டனம் தெரிவிக்கும் விதத்தில், டாக்டர் அம்பேத்கரும் அவரது ஆதரவாளர்களும் சபையிலிருந்து அன்றைய தினம் வெளிநடப்புச் செய்தார்கள்.

"குஜராத் ஞானியான நர்ஸி மேத்தா பாடல் ஒன்றிலிருந்து அரிஜன் என்ற அந்த வார்த்தை எடுத்தாளப்படுகிறது. அதை ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று பி.ஜி. கேர் எவ்வளவோ சொல்லியும் யாரும் அதை ஏற்பதாக இல்லை.

இன்னொருமுறை, தொழிலாளர் தகராறுகள் குறித்த சட்டத்தை எதிர்த்து அம்பேத்கர் கொண்டு வந்த மற்றொரு தீர்மானமும் திட்டமிட்டே ஓட்டெடுப்பின் மூலம் தோற்கடிக்கப்பட்டது.

அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதத்தில் டாக்டர் அம்பேத்கருடைய தொழிலாளர் சுதந்திரக் கட்சியும், மாநிலத் தொழிற் சங்கக் காங்கிரசும் சேர்ந்து ஒரு நாள் வேலை நிறுத்த அறிவிப்புச் செய்தன. எஸ்.ஏ.டாங்கே, இந்துலால் யாக்னிக், டாக்டர் அம்பேத்கர் ஆகியோர், முதல் நாள் நடந்த கூட்டத்தில் 'வேலை நிறுத்தம் ஏன்?' என்பது பற்றி விளக்கிப் பேசினார்கள்.

அதற்கு அடுத்த நாள் வேலை நிறுத்தம் நடந்தது. அதில் 80 ஆயிரத்துக்கும் அதிகமான தொழிலாளர்கள் கலந்து கொண்டார்கள். இந்தியாவில் அப்படியொரு மாபெரும் வேலை நிறுத்தம் அதுவரை நடந்ததேயில்லை.

அப்போது உள்ளாட்சித்துறை அமைச்சராக இருந்தவர் கே.எம்.முன்ஷி அவர் நேரடியாகவே அந்த வேலை நிறுத்தத்தைப் பார்வையிட்டு வியந்தார்.

வேலை நிறுத்த நேரத்தில், ஒரு லாரியில் ஏறிக்கொண்டு, வேலை நிறுத்தத்தால் எந்தவித அசம்பாவிதமும் நடந்துவிடாதபடி நகரெங்கும் சுற்றிவந்து கண்காணிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார் டாக்டர் அம்பேத்கர்.

அன்று மாலையில், வேலை நிறுத்த வெற்றி விழாப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் பேசிய அனைவரும், அண்ணல் அம்பேத்கரே இந்த வேலை நிறுத்தத்தின் வெற்றிக்கு முழு காரணம் என்று பாராட்டிப் பேசினார்கள்..

"அரிசனப் பெருமக்களின் தலைவர் மட்டுமல்ல; டாக்டர் அம்பேத்கர், தலைசிறந்த தொழிலாளர் தலைவரும் ஆவார்" என்றே அவருக்கு அந்தக் கூட்டத்தில் புகழ் மாலை சூட்டப்பட்டது.



டாக்டர் அம்பேத்கருடன் தந்தை பெரியார்

தமக்கு அளிக்கப்பட்ட பாராட்டு உரைகளுக்கு நன்றி தெரிவித்து விழா இறுதியில் அம்பேத்கர் ஆற்றிய உரை, அனைவரின் உள்ளத்தையும் தொடும் விதத்தில் அமைந்திருந்தது.

சாதாரணமாகவே அம்பேத்கரின் பேச்சு, எல்லோரையும் கவர்ந்திழுக்கும் தன்மை உடையதாக இருக்கும்.

"அறிவு பெறப் படியுங்கள்; அமைப்பு ரீதியில் ஒன்று படுங்கள்; உரிமைக்குப் போராட ஒருபோதும் அஞ்சாதீர்கள். (Educate...Organise... and Agitate...)

"நான் எப்போதும் உங்களோடிருக்கிறேன்; அதேபோலவே நீங்கள் எப்போதும் என்னோடிருப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு (I shall always be with you; as I know, you will be with me) ..."

—இப்படிப்பட்ட சொற்றொடர்கள், அண்ணல் அம்பேத்கரின் சொற்பொழிவுகளில் அடிக்கடி இடம் பெறுபவைகளாக இருந்தன.

**பி.எல். ராஜேந்திரன்**



*சாதி ஒழித்திடல் ஒன்று- நல்ல*
*தமிழ் வளர்த்தல் மற் றொன்று*
*பாதியை நாடு மறந்தால்- மற்ற*
*பாதி துலங்குவ தில்லை!*
*சாதி களைந்திட்ட ஏரி- நல்ல*
*தண்டமிழ் நீரினை ஏற்கும்*
*சாதிப் பிணிப்பற்ற தோளே- நல்ல*
*தண்டமிழ் வாளினைத் தூக்கும்!*

## தென்னார்க்காடு மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், வழுதரெட்டி அஞ்சல், விழுப்புரம்-605 602.

தொலைபேசி எண்: 2186

ஒன்றியம் பதிவு செய்யப்பட்ட நாள் : 31.03.1982.

ஒன்றியம் ஆரம்பிக்கப்பட்ட நாள் : 01.09.1982.

தென்னார்க்காடு மாவட்டத்தில் வாழும் பால் உற்பத்தியாளர்களுக்கும், நுகர்வோர்களுக்கும் சேவை செய்வதே ஒன்றியத்தின் நோக்கம்.

1. தென்னார்க்காடு மாவட்டத்தில் பால் உற்பத்தியைப் பெருக்குதல்
2. உற்பத்தியாளர்கள் வழங்கும் பாலுக்கு அதன் கொழுப்புச் சத்தின் அடிப்படையில் நல்ல விலையை நிர்ணயித்தல்.
3. தடங்கலின்றி வாராவாரம் பால் உற்பத்தியாளர்களுக்குப்பால் பணம் பட்டுவாடா செய்தல்.
4. மிகவும் குறைந்த கட்டணத்தில் கால்நடைகளுக்கு அவசரச் சிகிச்சை மற்றும் இலவச மருத்துவ வசதிகள் செய்தல்.
5. கால்நடைப் பராமரிப்பு பயிற்சி நிலையங்களை அமைத்து அதன்மூலம் உறுப்பினர்களுக்கு நல்ல பயிற்சி அளித்தல்.
6. கன்று வளர்ப்புத் திட்டத்தின்கீழ் மானிய விலையில் தீவனம் வழங்குதல்.
7. பால் நுகர்வோர் சங்கங்கள் மூலம் பொதுமக்களுக்குக் காலத்தில் தரமான பாலைத் தேவையான அளவு தகுந்த விலையில் தருதல்.
8. நுகர்வோர்களுக்குத் தேவையான ஆவின் பால் உபபொருட்களாகிய பால்பவுடர், நெய், வெண்ணெய், பால்கோவா, ஐஸ்கிரீம் மற்றும் சுவையூட்டிய பாலினை ஒன்றியத்தின் மூலமாக நேரடியாகவும், பால் நுகர்வோர்கள் சங்கங்கள் மூலமாகவும், மற்றும் முகவர்கள் மூலமாகவும் விற்பனை செய்தல்.

டாக்டர்.கு.அம்பலவாணன்,பி.வி.எஸ்ஸி.,
நிர்வாக இயக்குநர்,

அ.இளங்கோவன்,இ.ஆ.ப.,
ஒன்றியப் பெருந்தலைவர்





# கறுப்பு வைரமே!

ஞா.மாணிக்கவாசகம்

பாடுக பாட்டே பாடுக பாட்டே
இந்த நூற்றாண்டின் இணையற்ற தலைவர்
பீம்ராவ் ராம்ஜி அம்பேத்கர் என்றே
பாடுக பாட்டே பாடுக பாட்டே!

வாழ்வின் வசந்தம் ஏழைகள் வீட்டு
வாசல் கதவைத் தானே திறக்கும்
காலமும் வருமா என்றுகாத் திருந்த
இந்திய நாட்டில் எழுச்சி விதையை

தூவி விட்ட தொண்டின் சிகரம்!
சாதிக் கொடுமை என்னும் சமுத்திர
நீருக்குள் உப்பாய்க் கிடந்த மக்களை
கறுப்பு வைரம் ஆக்கிய தலைவர்!

கறுப்பு வைரம்! இந்திய நாட்டின்
மக்கள் தொகையில் பத்திலொரு பங்கை
நாயினும் கீழாய் நடத்தும் கொடுமை
போக இங்கொரு புதுவழி கண்டவர்.

தொட்டால் தீட்டு பார்த்தால் பாவம்
என்பதே இங்கொரு எழுதாச் சட்டமாய்
இருந்த நிலையை மாற்றி அமைத்த
சட்ட அமைப்பின் சாகித்ய கர்த்தா.

பன்றியும் நாயும் படுத்துப் புரளும்
தெருவில் நடக்கக் குளத்தில் இறங்க
இருந்த தடையை எதிர்த்து உடைத்த
இந்தநூற் றாண்டின் எழுச்சியின் சின்னம்.

இல்லாமை ஒருபெரிய துன்பம் இல்லை
கல்லாமை மிகப்பெரிய குற்றம் ஆகும்!
கற்க எல்லோரும் இயன்றவரை பிறர்க்குக்
கல்வி கற்பிக்க முயல்க என்றார்.

வாழ்ந்து கழித்த நாட்களின் தொகுப்பு
அல்ல மனித வாழ்க்கை என்பது,
எப்படி வாழ்வது என்பதற் கெழுதிய
இலக்கணம் மனித வாழ்க்கை என்பது.

எடுத்துக் காட்டாய் இதற்கு இங்கே
வாழ்ந்து காட்டிய வரலாற்று ஞானி.
தாழ்ந்து இழிந்து கிடந்த மக்களை
தலைநிமி ரச்செய்த தத்துவ மேதை!

இலக்கியம் இவரின் எழுத்தும் பேச்சும்
இலக்கியம் இவரின் வாழ்வும் பணியும்!
தாழ்த்தப் பட்ட மக்களின் தலைவர்
டாக்டர் அம்பேத்கர் என்பதே சத்யம்!

# தந்தை பெரியாரும் அண்ணல் அம்பேத்கரும்

தந்தை பெரியார் அவர்களுக்கும் அண்ணல் அம்பேத்கர் அவர்களுக்கும் மிகுந்த பொருத்தம் இருந்தது.

தந்தை பெரியார் இந்து சமயத்தில் தோன்றியவர்தான் என்றபோதிலும், அந்தச் சமயத்தில் நிலவி வந்த மூட நம்பிக்கைகளைச் சாடி வந்தார்; பகுத்தறிவுத் தத்துவத்தைப் பரப்பிவந்தார். சீர்திருத்தக் கொள்கைகளை முழங்கி வந்தார்.

இந்தியத் திருநாட்டின் வடபகுதியைச் சேர்ந்த மராட்டிய மாநிலத்தில் தோன்றிய அண்ணல் அம்பேத்கார், இந்து சமயத்தில் தோன்றியவர்தான் என்றாலும், தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர் என்பதால், சாதி இந்துக்களால் புறக்கணிக்கப்பட்டவர். அவர்களால் பல்வேறு துன்பங்களுக்கு ஆட்பட்டவர், உரிமைகள் மறுக்கப்பட்டவர்.

பல்வேறு துறைகளில் உயர்கல்வி பெற்றும்கூட அவர் சனாதன இந்துக்களால் மிகவும் துன்புறுத்தப்பட்டார். அதனால் இயல்பாகவே இந்து சமயத்தின் மீது அவருக்கு வெறுப்பு ஏற்பட்டது.

தீண்டாமைப் பேயை நாட்டைவிட்டு விரட்ட வேண்டும் என்று அரும்பாடு பட்டார். தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைக்காகப் போராடினார். நாட்டு மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் உண்மை விளங்க வேண்டும் என்பதற்காக மேடைகளில் முழங்கினார்; நூல்கள் பல படைத்தார்.

அம்பேத்க்ர் - தந்தை பெரியார் இருவரின் கொள்கைகளிலும் போராட்டங்களிலும் ஒப்பியல்பு அமைந்திருந்தது போன்றே, ஒருவரை ஒருவர் உணர்ந்து போற்றிக் கொண்ட செயலிலும் ஓர் ஒப்புமை இருந்தது.

தந்தை பெரியார் - வைக்கத்திலே தீண்டாமை ஒழிப்புப் போரை 1924-ஆம் ஆண்டில் தொடங்கினார். தாழ்த்தப்பட்ட சமூகத்தில் தந்தை பெரியார் பிறக்கவில்லை என்றாலும், தாழ்த்தப்பட்டோரின் பிரதிநிதியாக நின்று போராட்டத்தில் ஈடுபட்டார். பெரியார் நடத்திய வைக்கம் போராட்டம் அண்ணல் அம்பேத்கரைக் கவர்ந்தது.

"1924-இல் பெரியார் வைக்கத்தில் நடத்திய தீண்டாமை ஒழிப்புப் போராட்டம் என்னுள் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது" என்று 1927-ஆம் ஆண்டில் அண்ணல் அம்பேத்கர் வெளிப்படையாகத் தெரிவித்திருக்கிறார்.

அம்பேத்காரின் அரும்பணி குறித்துத் தந்தை பெரியார் 1952-இல் போற்றி எழுதியிருக்கிறார். அது வருமாறு:

"1925-ஆம் வருஷத்திலே இந்த நாட்டில் சுய மரியாதை இயக்கம் தோன்றியது. இந்த நாட்டிலே மதத்தை எதிர்த்து, மற்ற பேதங்களை எதிர்த்துக் காரியம் செய்வதென்றால், அவ்வளவு கஷ்டமல்ல, மக்களுக்குள் நீண்ட நாளாகவே அந்த உணர்ச்சி இருந்து வந்திருக்கிறது என்பதால் ; ஆனால் வட நாட்டில் அப்படி அல்ல. அங்கு இந்த உணர்ச்சியைக் கிளப்புவதென்றால் கடினமான காரியம். ஆனால் அங்கேயே 1927, 1928-லேயே அம்பேத்கர் சுய மரியாதைக் கொள்கைகளைப் பேசியிருக்கிறார்."

1940-இல், தமது கோரிக்கைகளுக்கு ஆதரவு திரட்டுவதற்காகத் தந்தை பெரியார் அவர்கள் பம்பாய்க்குச் சென்று அண்ணல் அம்பேத்கார் அவர்களையும், ஜனாப் ஜின்னா அவர்களையும் சந்தித்தார். அப்போது அவரை ஆதரித்துக் கருத்துகளைப் பரிமாறி, தந்தை பெரியாருக்கும் அவரது குழுவினருக்கும் விருந்து தந்து மகிழ்ந்தார் அம்பேத்கர்.

பர்மாவில் 1954-இல் நடைபெற்ற புத்தமத 3-வது மாநாட்டில் அம்பேத்காருடன் தந்தை பெரியார் அவர்களும் கலந்து கொண்டு உரையாற்றியிருக்கிறார்.

சாதிக் கொடுமைகளை தீர்ப்பதற்காக, தாமும் தமது சமூக மக்களும் மதம் மாறிவிடப் போவதாக 1930-ஆம் ஆண்டிலேயே அம்பேத்கர் அறிவித்தார். தந்தை பெரியார் அம்பேத்கரைப் பாராட்டினார்; அவரது கருத்தை ஆதரித்தார். அவருக்கு ஊக்கமளித்தார்.

"நீங்கள் வேறு மதத்திற்குத் தனியாகப் போகக் கூடாது. குறைந்தது ஒரு இலட்சம் மக்களுடன் மதம் மாற வேண்டும். அப்போதுதான் நீங்கள் போகிற மதத்தவனும் மதிப்பான். தனியாக அங்கு போனால் அவனும் நம்மைக் கவனிக்க மாட்டான். ஆகையால் ஒரு இலட்சம் பேரோடு தாங்கள் மதம் மாறும் போது நானும் ஒரு 10, 20 ஆயிரம் பேர்கள் தருகிறேன்" என்று தந்தி அடித்தார்.

பகுத்தறிவுக்கு ஏற்புடைய-மானிடப் பண்புக்கு உகந்ததான-சமதர்மக் கோட்பாட்டுக்கு உரியதான பௌத்த சமயத்திற்கு மாறப் போவதாக அண்ணல் அம்பேத்கர் 1952-இல் அறிவித்தபோது அவரை வாழ்த்தினார் தந்தை பெரியார்.

"டாக்டர் அம்பேத்கர் அவர்கள் இப்போது கொஞ்ச நாட்களாக பௌத்தக் கொள்கையில் சேரப் போவதாகச் சொல்லி வருகிறார். உண்மையில் பௌத்தம் ஓர் உயர்ந்த மதமாகும்" - தந்தை பெரியார் தெரிவித்த கருத்து இது.

தந்தை பெரியார் - அண்ணல் அம்பேத்கர் இந்த இரு தலைவர்களும் - தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினரின் நலன் காப்பதற்கு இயற்கை அளித்த கொடை என்று கூறினால் அது மிகையாகாது.

**டாக்டர் சா. பெருமான்**



# புரட்சி வீரர் அம்பேத்கர்

—கலைமாமணி பட்டுக்கோட்டை குமாரவேல்

டாக்டர் அம்பேத்கர் பரந்த படிப்பும், ஆழ்ந்த அறிவும் வியக்கத்தக்க நெஞ்சுரமும் கொண்ட புரட்சி வீரர்.

இந்திய அரசியல் சட்டத்தின் அடிப்படை மூளையாக விளங்கியவர்.

தீண்டப்படாத ஏழைக் குடும்பத்தில் பிறந்து பள்ளிப் படிப்புக்காக அவர் பட்ட துன்பங்கள்- இந்து சமூகம் அவர் கல்வி வளர்ச்சிக்குத் தந்த தொல்லைகள் ஆகியவை அவர் மனதைப் பாதித்து விட்டன.

பல பள்ளிகள் அவர் படிக்கவே இடம்தர மறுத்துவிட்டன. சக மாணவர்களோடு இணையாக உட்கார்ந்து கல்வி கற்கவும் சமுதாயம் அவருக்கு இடம் தரவில்லை.

அவருடைய உழைப்பில்வரும் வருமானத்தில் பெரும்பகுதியில் எல்லா வகையான நூல்களையும் வாங்கிப் படித்துத் தன் அறிவை வளர்த்துக் கொண்டார்.

இந்திய மக்கள் ஜாதி, மதம் இவைகளால் ஏற்பட்ட ஏற்றத் தாழ்வுகள் அவரைச் சிறந்த மத ஆராய்ச்சியாளராக்கியது. தீவிர வாதியாக்கியது.

அவருடைய அறிவையும் ஆற்றலையும் துணிவையும் கண்ட இந்திய நாட்டின் முதல் பிரதமரான ஜவஹர்லால் நேரு அவர்கள் அவரை முதல் இந்திய அரசின் சட்ட அமைச்சராக்கி, இந்திய அரசின் அரசியல் சட்டத்தையே எழுதச் சொன்னார். அவர் தலைமையில் உருவாக்கப்பட்ட சட்ட அமைப்புத் தான் இப்பொழுது நம்மை ஆட்சி செய்து கொண்டிருக்கிறது.

"தீண்டாமை வழக்கத்தைத் தண்டனைக்குரிய குற்றம்" என்பதாக ஒரு விதியையும், மத்திய அரசின் சட்டத்தில் நுழைத்தார்.

ஒரு நாட்டு மக்கள் எல்லோரும் எல்லா நலன்களும்பெற்று வாழ வேண்டுமானால் மக்கள் ஒருமைப் பாட்டுணர்வோடு வாழவேண்டும். அந்த ஒருமைப்பாட்டுணர்வு மக்கள் வாழ்வில் மலர்ந்திட முதலில் சமுதாயச் சீர்திருத்தம் செய்திட வேண்டும்.

இவைகளையெல்லாம் சிந்தித்த டாக்டர் அம்பேத்கர் தெளிவாகப் பேசியிருக்கிறார். முடிவாகச் சொல்லியிருக்கிறார்-

"ஒவ்வொரு மனிதனும் அவரவர் ஜாதியை விட்டு வேறு ஜாதியில் தான் அவர்கள் பெண்களுக்கு- அவர்கள் பிள்ளைகளுக்குத் திருமணம் செய்யவேண்டும் என்று மையஅரசு சட்டம் கொண்டுவர வேண்டு"மென்று சொன்னார். அமைச்சரவையிலேயே அதைச் சொன்னதோடல்லாமல் 'ஜாதியை ஒழிக்க வழி' என்ற நூலையும் எழுதியிருக்கிறார்.

வடக்கே டாக்டர் அம்பேத்கரும் தெற்கே தந்தை பெரியாரும் இல்லையெனில் இந்திய நாட்டு வைதீகமும் கண்மூடித்தனமான மூடநம்பிக்கையும் இந்திய மக்களை நிரந்தர அடிமைகளாக்கியிருக்கும்.



முடுக்கிவிடப்பட்டதன் மூலம், உரிய காலத்தில் வழங்கி சாதனை அளவாக 97 விழுக்காட்டினை எட்டியுள்ளது.

பொதுப்பள்ளிகளில் 9 மற்றும் 10-ஆம் வகுப்புகளில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ மாணவியர்களுக்கு ரூ.14 இலட்சத்திற்குப் பாடநூல்கள் வழங்க இலக்கிட்டு 1 இலட்சம் மாணவர்களுக்கு ரூ.14.8 இலட்சம் செலவிட்டு குறியீட்டினை விஞ்சிய அளவில் சாதனை 105 விழுக்காடு பெற்றுள்ளது.

**பொதுப்பள்ளியில் பயிலும் மாணவ மாணவியர்களுக்குக் குறிப்பேடுகள் வழங்குதல்:**

பொதுப்பள்ளிகளில் 4-ஆம் வகுப்பு முதல் 10-ஆம் வகுப்புவரை கல்வி பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ மாணவ மாணவியர்களுக்குக் குறிப்பேடுகள் வழங்க ரூ.4 இலட்சம் இலக்கிட்டு, 37,642 மாணவ மாணவியர்களுக்கு ரூ.3.97 இலட்சம் செலவு செய்து சாதனை 99 விழுக்காடு அடைந்துள்ளது.

**விடுதிகள் (பழையவை, புதியவை) பராமரிப்பு:**

இம்மாவட்டத்தில், அரசு தொழிற்பயிற்சி மாணவர் விடுதியையும் உள்ளடக்கிய 64 மாணவ மாணவியர் பழைய விடுதியும், 21 மாணவ மாணவியர் புதிய விடுதிகளையும் சேர்த்து 85 விடுதிகள் இயங்கி வருகின்றன. இவ்விடுதிகளில் 6,139 மாணவர்களும், 1941 மாணவியர்களும் தங்கிக் கல்வி பயிலுகின்றனர். இவ்விடுதிகளின் பராமரிப்புச் செலவிற்காக ரூ.1.07 கோடி ஒதுக்கப்பட்டு, ரூ.92.8 இலட்சம் செலவு செய்து அடைந்துள்ள சாதனை 91 விழுக்காடு ஆகும்.

**விவசாயிகளுக்கு உழவு மாடு மானியம்:**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களின் முக்கியத் தொழில் விவசாயம். எனவே, அவர்களின் தொழில் வளர்ச்சிக்காக உழவு மாடுகள் ஒரு ஜதை (இரண்டு எருதுகள்) வாங்குவதற்காக மானியத்தொகை ரூ.800 வழங்கப்பட்டு வந்ததை உயர்த்தி, தற்சமயம் தமிழக அரசு ஒரு ஜதை உழவு மாடுகள் வாங்குவதற்கு ரூ.3,000 வழங்கி வருகிறது. இத்தொகையில் ரூ.1,500 நலத்துறை மூலம் மானியமாகவும், ரூ.1,500 வங்கிகள் மூலம் குறைந்த வட்டி வீதத்தில் கடனாகவும் அளிக்கிறது. இத்திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.1.91 இலட்சமாகும். 100 நபர்களுக்குப் பயனடைவு செய்து, ரூ.1.30 இலட்சம் செலவிட்டு சாதனைக் குறியீடாக 69 விழுக்காடு எட்டியுள்ளது.

**நில எடுப்பு (வீட்டுமனைப்பட்டா, இடுகாடு, பாதைவசதி)**

மனிதனின் வாழ்க்கைக்கு மிகவும் அவசியமான அடிப்படை வசதிகளான குடியிருப்பு மனை, இடுகாடு, பாதை வசதி போன்றவையாகும். இந்த நியாயமான வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக கையகப்படுத்தப்பட்ட நிலங்களின் மதிப்பீடு ரூ.20.2 இலட்சமாகும். இதன்மூலம் பயனடைய வேண்டிய பயனாளிகள் 4,500. இதன்கீழ் பயனடைந்த பயனாளிகள் 2,664 பேர்கள் ஆகும். சாதனை 77 விழுக்காடு ஆகும்.

**குடிதண்ணீர் வசதி:**

பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்கும் நோக்கில் ஆழ்குழாய்க் கிணறுகள் மற்றும் குடிநீர்க் குழாய்கள் நீட்டிப்புப் பணிகள் செய்ய ரூ.1.73 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதுவரை 30 பணிகள் முடிக்கப்பட்டு ரூ.1.75 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. சாதனை 101 விழுக்காடு ஆகும்.

**ஊராட்சி ஒன்றிய மானியம்:**

அத்தியாவசியமான குடிதண்ணீர் வசதி, சாலை வசதி போன்ற வசதிகள் செய்து தருவதற்காக நலத்துறை நிதியிலிருந்து 15 விழுக்காடு மானியமாக ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்க ரூ.50,000 ஒதுக்கீடு செய்யப்பட்டதில் இதுவரை ரூ.2,70,000 செலவு செய்து சாதனை 54 விழுக்காடு எட்டியுள்ளது.

**தீண்டாமை, தூய்மை, கலப்புத் திருமணம் - பரிசு வழங்கல்:**

தீண்டாமை ஒழிப்பில் சாதனை புரிந்து ஒற்றுமையாய் வாழ்ந்து காட்டும் கிராமத்திற்கு வானொலிப்பெட்டி ஒன்றினைப் பரிசாக அளித்து வருகிறது.

தூய்மையாகத் தெருக்களையும், கிராமத்தின் சுற்றுப்புறத்தையும் வைத்திருக்கும் ஆதிதிராவிடர் குடியிருப்புக்கு வானொலிப்பெட்டி ஒன்றினைப் பரிசாக அளித்து வருகிறது.

கலப்புத் திருமணம் செய்து கொள்ளும் தம்பதிகளுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் உதவித்தொகை அளிக்கிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த மக்கள் தங்களின் வாழ்க்கை மேம்பாட்டு நலனுக்காகத் தமிழக அரசு அளித்து வரும் பலவேறு நலத்திட்டங்களையும் தக்கமுறையில் பயன்படுத்திக் கொண்டு வாழ்வில் உயர்வடைய வேண்டும்.



# குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்க விரைவான பணிகள்

தமிழகத்தில் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் பல மாவட்டங்களில் போதிய அளவு பருவமழை பெய்திருந்தாலும், 20 மாவட்டங்களில் தற்சமயம் குடிநீர்த் தட்டுப்பாடு நிலவுகிறது என்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தலைவரும் நிர்வாக இயக்குநருமான திரு. லட்சுமிரதன் கூறினார்.

இந்தியாவில் குடிநீர்த் தட்டுப்பாட்டில் ராஜஸ்தான் மாநிலம் முதலிடம் வகிக்கிறது. அதற்கு அடுத்த படியாகத் தமிழகம் உள்ளது.

தமிழ்நாட்டில் மொத்தம் 64 ஆயிரத்து 83 குடியிருப்புகள் உள்ளன. இவைகளில் 77 குடியிருப்புகள் நீங்கலாக அனைத்துக் குடியிருப்புகளிலும் குறைந்தது ஒரு கைப்பம்பாவது போடப்பட்டுள்ளது.

கடந்த 20 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் கிராமப்புறக் குடிநீர்த் திட்டம் நன்கு செயல்பட்டு வருகிறது. 1976-லிருந்து எல்லாக் குடியிருப்புகளும் 6 வகையாகப் பிரிக்கப்பட்டுத்திட்டம் தீட்டிச் செயல்படுத்தப்படுகிறது.

தமிழகத்தில் தற்சமயம் நிலவும் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க மாநிலத்தில் 4,100 ஆழ்துளைக் கிணறுகள் மார்ச் மாதம் முதல் மே மாதம் இறுதிக்குள் தோண்டப்படும் என்றும், இந்த 4,100 ஆழ்துளைக் குழாய்க் கிணறுகளில் 2,500 கிணறுகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தாலும், மீதி பல்வேறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமும் செயல்படுத்தப்படும் என்றும் நிர்வாக இயக்குநர் அவர்கள் கூறினார்.

குடிநீர் ஆதாரமே இல்லாத குடியிருப்புகளுக்கு முன்னுரிமை கொடுத்து இந்த ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் தோண்டப்படும்.

1989-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட, 'ஒவ்வொரு குடியிருப்புக்கும் குறைந்தது ஒரு குடிநீர் ஆதாரமாவது அளிக்கப்பட வேண்டுமென்ற, அரசுத் திட்டத்தின்கீழ், 10,246 ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் சென்ற ஆண்டு மே மாத இறுதிக்குள் செயல்படுத்தப்பட்டது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மேற்கொண்ட ஒரு ஆய்வின்போது, மாநிலத்தில் 5,885 குடியிருப்புகள் குடிநீர் ஆதாரமே இல்லாமல் இருப்பது கண்டறியப்பட்டது. இவற்றில் 1,800 குடியிருப்புகளுக்கு ஏற்கெனவே ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் போடப்பட்டு விட்டன. மீதி 2,500 குடியிருப்புகளுக்கு மேமாத இறுதிக்குள்ளும் மற்றவை இந்த ஆண்டிற்குள்ளும் போடப்படும். சேலம், தருமபுரி ஆகிய இரு மாவட்டங்களும் வறட்சியால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது.

**ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் அமைக்கும் பணியின் முன்னேற்றம்**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் அமைக்கும் பணியில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. 1981-82-இல் 15.2 சதவிகிதமாக இருந்த ஆழ்துளைக் குழாய்க் கிணறுகளின் குலைவு விதிதம் (Failure Rate) நடப்பு ஆண்டில் 3.3 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

குடிநீர் வடிகால் வாரியத்தின்

**லட்சுமி ரதன்**
**நிர்வாக இயக்குநர்**
**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்**



அரசியல் அமைப்பின் தந்தை

# அம்பேத்கர்

மன்னை ப. கீரன்



குடியரசாம் அரசியலின் அமைப்பை இங்கே
  கொழுந்துவிட்டு வேரூன்றிக் கனியச் செய்தார்!
வடிவமைத்த பிரம்மாக்கள் குழுவின் ஏறு!
  வலிதாக்க முதல்குடியாம் அன்னை நாட்டை
அடிமைகளாய் மந்தைகளாய் நலிந்த சேற்றில்
  ஆற்றல்செந் தாமரையில் எழுந்தார், அண்ணல்!
கொடிமலராய்த் தரையிருந்தோர் கலசம் ஆக்கிக்
  குழிகிடந்தோர் சிகரம்போல் ஏற்றி விட்டார்!

''கிணற்றினிலே நீரெடுத்தால் தீட்டு! தீட்டு!
  கேட்காமல் தண்டனைகள் போட்டுத் தீட்டு!
இணக்கமுற இழுத்தேகும் மாட்டு வண்டி
  ஏறிடிலோ தீட்டகலக் கழுவு வண்டி!''
பிணக்குகளாம் சுழல்களிலே எதிர்த்து நீச்சல்
  போட்டவரே அம்பேத்கர்; தீரர் வீரர்!
கணக்கில்லாச் சுறாமீன்பால் நங்கூ ரம்போல்
  கணக்காகச் சமுதாயம் சமைத்தார், சான்றோர்!

கொட்டுற்றால் மோதிரக்கைக் கொட்டே வேண்டும்!
  குட்டதுவும் கைகொடுத்துத் தூக்கும் அன்றோ?
முட்டுபகை முட்டாள் கீழ்! கெட்டிக் காரன்
  மோதுவதே முனைமுகத்தும் வேண்டும்! என்பர்.
பட்டாலும் அம்பேத்கர் மேலை நாட்டோர்
  பயன்தொடர்பால் விழிப்புற்றார்! மேன்மை யுற்றார்?
கெட்டலைக்கும் சழக்குகளில் சிக்கா தோங்கிக்
  கிடந்தோரை இழுத்தெல்லாம் கரைமேல் சேர்த்தார்!

பட்டிதொட்டி கடையனுக்கும் கடையன் எல்லாம்
  பகர்ந்திட்டால் 'அம்பேத்கர்' பேரை எங்கும்
பட்டாளச் சிப்பாய்போல் நிமிர்வார்! ஆங்கே
  படைக்காத முதுகெலும்பில் புழுவும் நிற்கும்!
கொட்டிவைத்த விண்மீன்போல் விளங்கி, சிற்றூர்
  குவிந்தகன்ற பாரதத்தில் அவன்பேர்ச் சக்தி
கட்டவிழ்த்துக் கதியளித்துத் தூக்கம் போய்த்தன்
  கால்நிற்கத் தலைநிமிர்த்தும்! உண்மை, உண்மை!

அம்பேத்கர் அரும்புதல்வர் அப்பன் பேரை
  ஆக்கமுறு நற்பேராய் விளங்கச் செய்வார்!
அம்பெறிந்தாற் போல்விரைந்தே இலக்கை நாளும்
  அலுவல்கள் செய்களன்ன அன்னார் சொன்னார்!
கும்பினியோர் அடிமைகளாய்த் துயின்ற நாடு
  குடியரசில் எல்லோரும் உழைத்தே வாழ்த்தத்
தம்பிகளே! எலாம் எழுமின்! விழிமின் செய்மின்!
  தாயகத்தைத் தரணிமுடி மணியாய்ச் செய்மின்!



தென் ஆர்க்காடு மாவட்டத்தில்

# ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப்பணி

நஞ்சையும் புஞ்சையும் கொஞ்சி விளையாடும் தென் ஆர்க்காடு மாவட்டம், தமிழகத்திலேயே ஆதிதிராவிடர்கள் அதிகமாக வாழ்கின்ற மாவட்டமாகும். இம்மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப்பணிகளை முடுக்கிவிடும் வகையில் அரசு பல்வேறு நலப்பணிகளைப் பாங்குடன் செய்து வருகிறது.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்ற கொள்கையில் பட்டிதொட்டிகளில் வாழ்கின்ற ஆதிதிராவிடர்களுக்கும், மலைப்பகுதியில் வாழ்கின்ற பழங்குடியினர்களுக்கும் அவர்களது வாழ்க்கை மேம்பாட்டை வலுப்படுத்தும்வகையில் தமிழக அரசு பல்வேறு நலப்பணிகளைச் செய்து வருகிறது.

ஏழை எளிய ஆதிதிராவிட மக்களுக்கு உண்ண உணவு, உடுக்க உடை, தங்க மாணவ மாணவியர் விடுதிகள், கல்வி உதவித் தொகை, காலணிகள் வீட்டுமனைப் பட்டாக்கள், இலவசத் தொழிற் கருவிகள், விவசாயத்திற்கு உழவு மாடுகள், கறவை மாடுகள், தொழிற்கடன் ஆகியவற்றை வழங்கி ஆதிதிராவிடர்களுடைய நலனைக் காத்து வருகிறது.

**கல்வி உதவித்தொகை:**

ஆதிதிராவிடர்களின் பல்வேறு மேம்பாட்டு நலத் திட்டத்திற்காக, அரசு அளித்துள்ள தொகை. ரூபாய் ஏழு கோடியாகும். கல்வி வளர்ச்சியே கீழ்நிலை மக்களை மேலுக்குக் கொண்டுவரும் மேன்மையான திட்டமென்று, பாதிக்கும் மேலான தொகையினை நலத்துறையின்கீழ் பள்ளிகள், விடுதிகள், தொழிற்பயிற்சிக்கூடம், ஆசிரியர் பயிற்சி, சிறுதொழிற், பயிற்சி போன்றவைகளை ஏற்படுத்தி, அதில் பயிலும் மாணவர்களுக்கு உணவு, உடை, பாடநூல், பாடப்புத்தகம், காலணி போன்றவைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

இலவசக் கல்வி உதவித்தொகை, கடன் மூலம் கல்வி உதவித்தொகை, சிறப்புக் கல்வி உதவித்தொகை (Merit Scholarship) காந்தி நினைவு கல்வி உதவித்தொகை போன்றவைகளின் மூலம் சுமார் 44,430 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ மாணவியர்களுக்கு ரூ.57,35,000 செலவு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இதில் ரூ.41,06,093 செலவு செய்து சாதனை 72 விழுக்காடு எட்டப்பட்டுள்ளது.

**இலவசப் பாடப்புத்தகங்கள் உரிய காலத்தில் வழங்குதல்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின்கீழ் இயங்கிவரும் பள்ளிகளில் கல்வி பயிலும் 39,249 மாணவ மாணவிகளுக்கு ரூபாய் 9 இல்ட்சம் அளவில் பாடப்புத்தகங்கள் வழங்க இலக்கு நிர்ணயித்தது. இதில், 39,176 மாணவர்களுக்கு ரூ.8.8 இலட்சம் அளவில் பாடப்புத்தகங்களை இத்துறையின்கீழ் பணிபுரியும் தனிவட்டாட்சியர், உதவிக் கல்வி அலுவலர் மற்றும் பள்ளித்துணை ஆய்வர் ஆகியோரின் செயல்திறன்கள்

—சிவ. சூரியன்
மாவட்ட வருவாய் அலுவலர்
தெ.ஆ.மாவட்டம், கடலூர்.





நிலநீர்ப் பிரிவு (Hydro-Geological Wing) கடந்த 10 ஆண்டுகளாக விஞ்ஞான முறைப்படி இல்லாமல் ஆழ்துளைக் கிணறுகளைத் தோண்டியதால், அவ்வாறு தோண்டப்பட்ட ஆழ்துளைக் குழாய்க் கிணறுகளில் சில நாளடைவில் செயலற்றுப் போயின. தற்போது இந்தப் பிரிவு யுனிசெப் (UNICEF), டானிடா உதவியுடன் பெற்ற கம்ப்யூட்டர் மற்றும் நவீன விஞ்ஞானச் சாதனங்கள் உதவியுடன் மாவட்டந்தோறும் நீர்வளம் உள்ள பகுதிகளைப் பற்றிய தகவல்களைச் சேகரிக்கும் வகையில் முடுக்கிவிடப்பட்டுள்ளது. இத்தகைய விஞ்ஞான முறையில் தோண்டப்படும் ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் பெரும்பாலும் நல்ல நிலையில் செயல்படுகின்றன.

தமிழ்நாடு, ஒரு சிக்கலான நில பௌதிகப் பாறைப் படிமங்களில் அமைந்துள்ளதால், குடிநீர் வழங்குவதில் சிக்கல்கள் ஏற்படுகிறது. நில நீர் ஆதாரம் கண்டுபிடித்தல், சில நில பௌதிகப் பாறைகள் நீர் ஆதாரத்திற்கு ஏதுவாக இல்லாமல் இருக்கும் நிலை, நீர் ஆதாரம் கிடைக்கப் பெற்றாலும் அதன் கொள்ளளவைச் சரியான முறையில் கண்காணிக்க முடியாத நிலை போன்ற பிரச்சினைகள் உள்ளன. தற்போது 'டானிடா' அன்பளிப்பாக வழங்கிய கம்ப்யூட்டர் மற்றும் நவீன விஞ்ஞானச் சாதனங்கள் உதவியோடு நீர் ஆதாரங்களைக் கண்டுபிடிப்பதில் உள்ள குறைபாடுகள் அதிக அளவில் குறைக்கப்பட்டுள்ளன.

நடப்பு ஆண்டில், வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் செங்கை-அண்ணா, தென்னார்க்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, பசும்பொன் தேவர் திருமகனார் மாவட்டங்களில் அமைக்கப்பட்டு வரும் ஆழ்துளைக் குழாய்க் கிணறுகளின் குலைவு விகிதம் (Failure Rate) அறவே இல்லை. சேலம், தருமபுரி, திண்டுக்கல்-காயிதே மில்லத், வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டங்களில் அமைந்துள்ள பாறைப் படிவங்கள் நிலநீர் ஆதாரத்துக்கு ஏதுவாக இல்லாது போயினும், இந்த மாவட்டங்களில் ஆழ்துளைக் குழாய்க் கிணறுகளின் குலைவு விகிதம் சராசரி 5 சதவிகிதமே ஆகும். இதுவும் இந்தப் பகுதிகளில் பாறைகளின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதாலும், கடந்த 10 ஆண்டுகளில் இந்த மாவட்டங்களில் பெய்த சராசரி மழையின் அளவு குறைந்து காணப்பட்டதலுமே ஆகும்.

கடலோரப் பகுதிகளில் உள்ள கிராமங்களுக்குக் குறைந்த ஆழம் உள்ள குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு, 'யுனிசெப்' நிறுவனத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட "தாரா" கைப்பம்புகள் மூலம் குடிநீர் வசதி செய்யப்பட்டு வருகிறது.

**நில புவியியல் வரைபடங்கள்**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், செயற்கைக் கோள் (Satellite) மற்றும் வானவெளிப் புகைப்படங்கள் உதவியுடன் வட்டார அளவிலான நிலபுவியியல் வரைபடங்கள் தயாரிக்கும் பணியில் தற்சமயம் ஈடுபட்டிருக்கிறது. மொத்தமுள்ள 163 வட்டாரங்களில் 130 வட்டாரங்களுக்கான வரை படங்கள் தயாரிக்கப்பட்டு, அந்தந்தப் பகுதி உதவி நிலநீர் வல்லுநர்களின் ஆய்வுக்கு உதவும் பொருட்டு அனுப்பப்பட்டுள்ளது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் தற்போது 71 துரப்பணக் கருவிகள் (Rigs) உள்ளன. இதில் 18 துரப்பணக் கருவிகள் படிவப் பாறைகளில் ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் அமைக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

பொதுமக்கள் ஒத்துழைப்பு இருந்தால்தான், குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்ற முடியும். தனியார் இடங்களில் நீர் ஆதாரம் இருந்தால், அதைக் குடிநீர்த் திட்டத்திற்காகத் தானமாகக் கொடுத்து உதவ வேண்டும்.





# தோட்டக்கலையில் தமிழகம்

தமிழ்நாட்டில் வேளாண்மைத் துறையைப் போலவே தோட்டக் கலைத் துறையும் பல்வேறு வகைகளில் முன்னேற்றம் அடைந்துள்ளது. தோட்டக்கலைத்துறை, வேளாண்மைத் துறையிலிருந்து 1979-ஆம் ஆண்டு தனியாகப் பிரிக்கப்பட்டு, தனித் துறையாகச் செயல்பட்டு வருகிறது. 1979-இல் 5 கோடி ரூபாயாக இருந்த இந்தத் துறையின் நிதி ஒதுக்கீடு 1991-இல் ரூ.10 கோடியாக இரட்டிப்பாக உயர்ந்துள்ளது.

தோட்டக்கலைத் துறையின் தற்போதைய வளர்ச்சி குறித்து, இந்தத் துறையின் சென்னை மாவட்டத் துணை இயக்குநர் திரு.ஏ.நத்தர் பாவா அவர்களைச் சந்தித்தபோது கூறினார்—

"ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் 1990-91-ஆம் ஆண்டில் 6,600 எக்டேர் நிலப்பரப்பில் நிரந்தரப் பயிர்கள், காய்கறிகள் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 6,600 எக்டேர் நிலப்பரப்புக்கும் பழவகை செடிகள், சான்று பெற்ற காய்கறி விதைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாண்டு மார்ச் மாதம் முடிவதற்கு முன்பே இந்த இலக்கு நிறைவேற்றப்பட்டுச் சாதனை அடையப்பட்டுள்ளது. சிறு, குறு விவசாயிகளுக்கு இந்த விதைகள் 50 சதவிகிதம் மானியம் விலையில் வழங்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தினால் அனைத்து மாவட்டங்களும் பயன்பெறும்.

"இவைதவிர, குறிப்பிட்ட மாவட்டங்களுக்கு மட்டும் பயன்பெறும் வகையில் அந்த மாவட்டத்தின் சூழலுக்கேற்ப சிறப்புத் திட்டங்கள் வகுக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இந்தத் திட்டத்தின்கீழ், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம். மேற்குத்தொடர்ச்சிமலை வளர்ச்சித் திட்டம், ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம், வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம், முந்திரி வளர்ச்சித் திட்டம், தேசிய நீர்ப் பிடிப்புத் திட்டம், மகளிர் மேம்பாட்டுத் திட்டம் போன்ற பல திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்கான திட்ட மதிப்பீடு ரூ.5 கோடியாகும்.

"தமிழ்நாட்டில் மொத்தம், 53 அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் உள்ளன. இவற்றிலிருந்து சுமார் 17.5 மில்லியன் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு, விநியோகம் செய்யப்படுகிறது."

**சென்னையில் தோட்டக்கலைக் கண்காட்சி**

தோட்டக்கலையில் பொதுமக்களிடம் பெரும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவும், தோட்டம் அமைப்பதை மக்களிடம் ஊக்குவிக்கவும் சென்னை தீவுத்திடலில் ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் சுற்றுலாப் பொருட்காட்சியின்போது தோட்டக் கலைக் கண்காட்சியும் நடத்தப்படுவது வழக்கம். இந்த வரிசையில் 17-வது தோட்டக்கலைக் கண்காட்சியை, பிப்ரவரி மாதம் 23, 24 தேதிகளில் தோட்டக்கலைத்துறை, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

ஆகியவை இணைந்து நடத்தின. இந்த இரண்டு நாள் கண்காட்சியில் தோட்டக்கலைப் பொருட்கள், பழங்கள், காய்கறிகள், அலங்காரச் செடிகள் போன்றவை போட்டிக்காக வைக்கப்பட்டன. இவை தவிர, நன்கு பராமரிக்கப்பட்ட அலங்காரத் தோட்டம், வீட்டுத் தோட்டம், மாடித் தோட்டங்களுக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டது. இந்தப் பரிசுகளை மேதகு ஆளுநர் அவர்களின் ஆலோசகர் திரு. வே.கார்த்திகேயன் அவர்கள் 24.2.'91 அன்று வழங்கினார்.

தோட்டங்களுக்கான போட்டிகளுக்குச் சென்னை நகர மக்களிடமிருந்து நல்ல வரவேற்பு இருப்பதைக் காண முடிந்தது. தனியார் வீட்டுத் தோட்டப் பிரிவின் கீழ், தோட்டங்களுக்கான போட்டியில் இவ்வாண்டு 45 பேர்களுக்கு மேல் பங்கு கொண்டனர். 10 புதிய நிறுவனங்களும் இவ்வாண்டுப் போட்டியில் கலந்து கொண்டன.

தோட்டக்கலைக் கண்காட்சியில் இவ்வாண்டு 415 பேர் போட்டியில் கலந்து கொண்டனர். இது கடந்த ஆண்டைக் காட்டிலும் எண்ணிக்கையில் கூடுதலாகும்





இவ்வாண்டு தோட்டக்கலைக் கண்காட்சியின் சிறப்பு அம்சம், மிருதுவான விதை கொண்ட மாதுளம் பழவகைச் செடிகள், ரோஜாச் செடிகள் அதிக அளவில் கண்காட்சியில் இடம் பெற்றிருந்ததே, ஆகும்.

மராட்டிய மாநிலத்திலுள்ள ''கணேஷ்'' வகை மாதுளம் பழங்களை, தமிழ்நாட்டில் அதிக அளவில் பயிரிட விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் தோட்டக்கலைத் துறை தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. இவ்வகை மாதுளம் பழங்கள் சுமார் 400 முதல் 700 கிராம் எடை கொண்டவை.

வீட்டைச் சுற்றிலும் தோட்டம் அமைப்பதை ஊக்குவிக்கும் வகையில், தோட்டக்கலைத்துறை ஒரு திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ், 1990-91-ஆம் ஆண்டில் 17 ஆயிரம் பழங்கள்-பிற பொருளாதார வகைச் செடிகளும், 3 இலட்சம் காய்கறி நாற்றுகளும் விநியோகிக்கப்பட்டுள்ளன.



# நூல் நயம்

## இதய நோய் — மருத்துவம் தவிர்க்கும் முறை, பொது அறிவுரை

**ஆசிரியர்கள்:** டாக்டர் எம். ஜெயராஜா
பி.எல். ராஜேந்திரன்

**வெளியிட்டோர்:**
பூங்கொடி பதிப்பகம்,
14, சித்திரைக்குளம் மேற்குத் தெரு,
மயிலாப்பூர்
சென்னை-600 004.

விலை:ரூ.20 பக்கம்:116

இதுதான் நம் இதயம், இதயத்தில் தான் எத்தனை நோய்கள், எதையும் தாங்கும் இதயம், இதயத்தில் துவாரம் விழுதல், இதயத்தைப் பரிசோதிக்கும் கருவிகள், இதயத்திற்கு ஏற்ற உணவுப் பழக்க வழக்கங்கள், இதயமும் - குடி மற்றும் புகைப் பழக்கங்களும், இதய நோயும் இளமை உறவும், உயரமும் - எடையும் - இதயமும், மாரடைப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புகள், இதயநோய்க்கு அறுவைச் சிகிச்சை, தாயும் சேயும், இதயநோய்ச் சிகிச்சைக்கு அரசின் உதவிகள், சில பொதுவான அறிவுரைகள் ஆகிய அரிய மருத்துவக் கட்டுரைகளின் தொகுப்பே இந்த நூல்.

இதயநோய்க்கு ஆளானவர்கள் மட்டுமல்ல; மற்றவர்களும்கூட இதயத்தைப் பற்றி அவசியம் தெரிந்து கொள்ளத்தக்க அற்புதமான செய்திகள் - கவர்ச்சிகரமான அட்டையோடு உருவாக்கப்பட்டுள்ள இந்நூலில் எளிய தமிழில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இதயம் பற்றிய இருவண்ண, மூவண்ணப் படங்களும் இதனுள் அடங்கும். மருத்துவம் பற்றித் தமிழில் ஏராளமான நூல்கள் வெளிவர வேண்டும்; அதற்கு இந்த நூல் ஒரு மிகச்சிறந்த எடுத்துக்காட்டு.

— 'இந்திரன்'

## வைகறைப் பொழுதின் வசந்தங்கள்

**ஆசிரியர்:** வசந்தநாயகன்

**வெளியீடு:**
இந்துமதி பப்ளிகேஷன்ஸ்,
5, கொசத் தெரு,
ஆலங்காயம்-635701
வடஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டம்.

விலை:ரூ.16 பக்கம்:127

பிச்சை எடுத்தல், கள்ளக் கடத்தல் போன்றவற்றின் கேடுகளையும், சிறு சேமிப்பு, மரம் வளர்த்தல், உழைப்பின் பெருமை, பெற்றோர் கடமை, தொழிலின் அருமை ஆகியவற்றின் சிறப்புகளையும் இந்நூலில் உள்ள சிறுவர்கள் கதைகள் விளக்குகின்றன. கதையின் ஊடே பொன்மொழிகள் சேர்க்கப்பட்டிருப்பது சிறப்பு. குழந்தைகள் மனத்தைப் பண்படுத்த உதவும் தொகுப்பு.

—என்.குமாரசாமி

## தொடர்கின்ற பயணம்

**ஆசிரியர்:** தி.தயானந்தன் பிரான்சிஸ்

**வெளியீடு:**
கிறிஸ்தவ இலக்கிய சங்கம்,
அஞ்சல் பெட்டி எண்.501
பூங்கா நகர், சென்னை-600 003.

விலை:ரூ.40 பக்கம்:190

கிறிஸ்தவத் தமிழ்க் காவலர் அருட்டிரு டாக்டர் தி.தயானந்தன் பிரான்சிஸ் அவர்கள் எழுதிய இந்த நூல், அன்னாரது நாற்பதாண்டுக் கால இலக்கிய வாழ்வினைப் படம்பிடித்துக் காட்டுகின்றது.

தம் பிறப்பிலிருந்து தொடரும் இந்தக் கட்டுரை, பள்ளி-கல்லூரி வாழ்க்கை, இறையியல் பணி, இலக்கியப் பணி என்னும் இலட்சியப் பயணத்தைக் கோடிட்டுக் காட்டுகின்றது.

ஒருவருடைய வாழ்க்கை முன்னேற்றம், அவரது பெற்றோரைப் பொறுத்தே அமைகிறது எனலாம். ''என்னுடைய வாழ்க்கையில் என்னைப் பெரிதும் கவர்ந்த ஒருவர் என்றும், எனக்குச் சிறந்த முன்மாதிரியானவர் என்றும் நான் சொல்லத் தகுந்தவர். என்னுடைய தகப்பனார்தான்'' என்று பெருமிதத்தோடு கூறும் இவர், ''என்னுடைய முதல் இறையியல் ஆசிரியர், என்னுடைய தாயார்தான்'' என்றும் குறிப்பிட்டு பெற்றோரை நினைவுகூர்கிறார்.

''உள்ளம் பிரியப்படுகிற வேளைகளில்தான் உண்மைப் பொருள் வாய்ந்த சொற்களின் துணை கவிஞர்களுக்குக் கிடைக்கின்றது''.

''எழுதப்படும் குழுவில் ஒரு குறிப்பிட்ட வாசகர் கூட்டத்திற்காக மட்டுமல்லாமல் எவருக்கும் பயன்படும் வகையில் கட்டுரைகள் வடித்துத் தரப்பட வேண்டும்''.

''ஒரு நூலை எழுதிவிடுவதோடு பணி முடிவடையாது. அதை வெளியிட்டு விற்பனை செய்தானதும் பணி முடிந்துவிடுவதாகவும் கருதமுடியாது. எப்போது அந்த நூலின் பிரதிகள் வாசிக்கப்படுகின்றனவோ அப்போது மட்டுமே அது முழுமை பெற்ற நூலாக முடியும்''.

—இவ்வாறு தம் அனுபவங்களை ஆங்காங்கே பிழிந்து தருகிறார் ஆசிரியர்.

இளைய தலைமுறை முன்னேற ஒரு தூண்டுகோலாகவும், பெரியவர்கள் படித்து ஒரு படைப்பாளியின் பண்பட்ட அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளவும் இந்நூல், இலக்கியத் தூதுவனாக விளங்குகிறது என்று சொன்னால், அது மிகையல்ல!

## பாரதியார் எழுத்துக்கள் சில புதிய கண்டுபிடிப்புகள்

**ஆசிரியர்:** பெ.சு.மணி

**வெளியீடு:**
பூங்கொடி பதிப்பகம்,
14, சித்திரைக் குளம்
மேற்கு வீதி,
சென்னை-600 004.

விலை:ரூ.11 பக்கம்:119

பாட்டுக்கொரு புலவன் பாரதியின் படைப்புகளைப் படித்து வரும் நமக்கு, அவர் எழுதி இதுவரை வெளிவராத படைப்புகள் சில இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. 'சக்ரவர்த்தினி'யில் வெளிவராத பாரதியாரின் எழுத்துக்கள் இந்நூலில் முதன் முறையாக இடம் பெற்றுள்ளன.

'துளஸீபாய்' சிறுகதையின் முதல் அத்தியாயம் இந்நூலில் முதன் முறையாகச் சேர்க்கப்பட்டுள்ளது. 'பால பாரதா' இதழில் எழுதிய பாரதியின் கட்டுரைகள் சிலவும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன, முதல் தடவையாக.

மகாகவி பாரதியின் தமிழ்ச் செல்வங்களைத் தேடிப் பிடித்துக் கொண்டு வந்து. சேர்க்கும் புனிதப் பணியில் ஈடுபட்டிருக்கும் திரு.பெ.சு.மணி பாராட்டுக்குரியவர்.

## இனிக்கும் விஞ்ஞான அமுதம்

**ஆசிரியர்:** புலவர் க. அண்ணாமலை

**வெளியீடு:**
பம்மி பதிப்பகம்
32, வெங்கட்டரங்கம்
பிள்ளைத் தெரு,
சென்னை-600 005.

விலை:ரூ.30 பக்கம்:240

விஞ்ஞான அமுதங்களாக, விஞ்ஞானிகளின் வாழ்க்கைக் குறிப்புகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

டார்வின் முதல் ஹிப்போ கிரட்டிஸ் வரை பன்னிரண்டு அறிவியல் அறிஞர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை உரையாடல் வடிவில் சுவைபட எழுதியுள்ளார் ஆசிரியர்.

அத்துடன், பழங்களின் பயன்கள் குறித்தும் கட்டுரைகள் உள்ளன. படித்துப் பயன்பெறத்தக்க நூல்.

—பி.வி.ஜி.

# சமத்துவத்தின் விடிவெள்ளி



**இளங்கோ:** கோடானுகோடி மக்களின் இதயத்திலே கொலுவிருந்தவர்; தாழ்த்தப்பட்ட மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கியவர் அண்ணல் அம்பேத்கர்.

**மாதவி:** அண்ணல் அம்பேத்கர், மகாராஷ்டிர மாநிலம் ரத்னகிரி மாவட்டத்தில் உள்ள அம்பா-வாடே என்னும் கிராமத்தில் 14.4.1891-இல் பிறந்தார்.

**இளமையில் ஏற்பட்ட இன்னல்கள் - அவமானங்கள் அந்த இளைஞரை உறுத்திக் கொண்டே இருந்தன. அதுவே, பிற் காலத்தில் அவர் எழுச்சி பெறவும், எண்ணற்ற மக்கள் மனத்திலே இடம் பெறவும் வழி வகுத்தது. 'விழி நீரைத் துடைத்து வீறு கொண்டெழுங்கள்! என்று வீரமுழக்கமிட்ட வேழம்தான் அண்ணல் அம்பேத்கர். அவரது வீரவரலாற்றைச் சித்திரிக்கிறது, இந்தச் சித்திரம்- உரையாடல்...**

**இளங்கோ:** தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த அவர், பள்ளி வாழ்க்கையிலும், பொது வாழ்க்கையிலும் அவர் பல இன்னல்களை அனுபவித்தார். பல கொடுமைகளுக்கு உள்ளானார்.

**மாதவி:** ஆம். அவர் இளைஞராய் இருந்தபோது, ஒரு துயர நிகழ்ச்சி நடந்தது. கடும் வெய்யில். தாக மேலீட்டால், தெருக்குழாயில் போய்த் தண்ணீர் குடித்தார். அதைக் கண்ட மற்றவர்கள் ஓடி வந்து அவரை இழுத்து அடித்தார்கள்.

**இளங்கோ:** "தீண்டத்தகாதவன் தானே நீ, எப்படி யாரையும் கேக்காம தெருக் குழாயிலே தண்ணியைக் குடிக்கலாம்?" என்று திட்டினார்கள். ஒரு சமயம் அம்பேத்கர், மாட்டு வண்டியில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். பிறகுதான் தெரிந்தது வண்டிக்கார னுக்கு, அவர் தீண்டத்தகாதவர் என்று...

**மாதவி:** அப்புறம்?

**இளங்கோ:** அப்புறமென்ன? அம்பேத்கரை ஏற்றியதால், வண்டி தீட்டுப்பட்டு விட்டதாக எண்ணி, மாட்டை அவிழ்த்து விட்டான். வண்டியைத் தலைகீழாகக் கவிழ்த் தான். பாவம் அம்பேத்கர்! சாலை ஓரத்தில் போய் விழுந்தார்.

**மாதவி:** காட்டுமிராண்டித்தனமா இருக்கே. இப்படியும் ஒரு கொடுமையா?

**இளங்கோ:** இன்னும் கேள். ஒருநாள், முடிவெட்டிக் கொள்வதற்காக அம்பேத்கர் சென்றிருந்தார். அவர் தாழ்த்தப்பட்டவர் என்பதை அறிந்த முடிதிருத்துபவர், அவருக்கு முடிவெட்ட மறுத்து விட்டார்.

**மாதவி:** கேட்கவே சகிக்கவில்லை. பிறப்பால் அனை வரும் ஒன்றுதான். இதில் உயர்வுதாழ்வு என்ன வேண்டிக் கிடக்கிறது.

**இளங்கோ:** பள்ளிக்கூடத்தில்கூட அவரைச் சக மாணவர்கள் தள்ளியே வைத்தார்கள். அவர்கள் யாரும் அவரிடம் பேச மறுத்தார்கள். இந்த விஷயத்தில் மட்டும் அந்த மாணவர்கள் ஒற்றுமையாக இருந்தார்கள்.

**மாதவி:** பிஞ்சு மனத்தில் நஞ்சா? கொடுமையாக இருக் கிறதே...

**இளங்கோ:** ஆம். அந்தக் காலச் சூழ்நிலை அப்படி. தாகம் எடுத்தால்கூட, சிறுவனான அம்பேத்கர், தானாகப் போய், தண்ணீர் எடுத்துக் குடிக்க முடியாது. உயர் சாதிப் பிள்ளைகள்தான், அவரை வாயைத் திறக்கச் சொல்லி ஊற்றுவார்கள்...

**மாதவி:** பாவம்! அம்பேத்கர், சின்னஞ்சிறு வயதிலேயே எத்தனைக் கொடுமைகளை அவர் அனுபவித்திருக்கிறார்...

**பி.வி.கிரி**



**இளங்கோ:** இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் இறுதி வரை அவர் நெஞ்சம் மறக்கவில்லை. பிற்காலத்தில் தாழ்த்தப் பட்டவர்களை- தீண்டத்தகாதவர்கள் என்று சமுதாயத் தால் ஒதுக்கப்பட்டவர்களை- 'தாழ்ந்த சாதி' என்று உயர் சாதிக்காரர்களால் திருநாமம் சூட்டப்பட்டவர்களைக் கை தூக்கி விடுவதற்கு, இளமைக்கால அந்த நிகழ்ச்சிகள் உரமாக விளங்கின.

**மாதவி:** அம்பேத்கரின் இயற்பெயர் பீமாராவ் இராம்ஜி என்று படித்திருக்கிறேன். அப்படியானால், அம்பேத்கர் என்ற பெயர் எப்படி வந்தது?

**இளங்கோ:** அப்படிக் கேள் மாதவி. அம்பேத்கர் பள்ளி யில் படித்துக் கொண்டிருந்தபோது, அம்பேத்கர் என்னும் பெயருடைய ஆசிரியர் ஒருவர் அந்தப் பள்ளியில் இருந்தார். உயர் சாதியைச் சேர்ந்த அம்பேத்கர் என்ற அந்த ஆசிரியர், அம்பேத்கரிடம் அன்பும் பாசமும் வைத்திருந்தார். பள்ளியில் எல்லாரும் ஒதுக்கித் தள்ளிய நிலையிலும், அவர் ஒருவர் மட்டும் அவரிடம் உண்மை யான அன்பு செலுத்தி ஆதரவு தந்தார்.

**மாதவி:** சிறுவன் அம்பேத்கருக்கு, அந்த ஆசிரியர் தெய்வமாகவே தென்பட்டிருப்பார் இல்லையா?

**இளங்கோ:** ஆம். எழுத்தறிவித்தவன் இறைவனல்லவா? சிறிய வயதில் ஆசிரியர் அம்பேத்கரிடம் காட்டிய பரி வுக்கும் பாசத்துக்கும் நன்றிக் கடனாக, அவரது பெய ரையே வைத்துக் கொண்டார்-பீமாராவ் இராம்ஜி. அந்தப் பெயரே பின்னால் விலகி அம்பேத்கர் என்றாகியது.

**மாதவி:** அம்பேத்கரின் குருபக்தியை எவ்வளவு பாராட்டி னாலும் தகும்.

**இளங்கோ:** அம்பேத்கர் பம்பாயிலும், பிறகு அமெரிக்கா விலும் உயர்கல்வி பயின்றார். பொருளியலில் டாக்டர் பட்டமும் பெற்றார். 1916-இல் தாயகம் திரும்பிய அவர், பிறகு இங்கிலாந்து சென்று பாரிஸ்டர் பட்டம் பெற்றார். பம்பாய் உயர்நீதி மன்றத்தில், வழக்கறிஞராகவும் பணி புரிந்தார்.

**மாதவி:** அம்பேத்கர், 'இளமைக் காலத்தில் தமக்கு ஏற் பட்ட அவமானங்களைத் தாங்கிக் கொண்டார். இன்னல் களை இன்முகத்துடன் ஏற்றுக் கொண்டார். எல்லா வற்றுக்கும் மேலாக, மனம் தளராமல் உழைத்தார். அதனால் அவர் மேலும் மேலும் உயர்ந்தார்.

**இளங்கோ:** 1924-ஆம் ஆண்டு அம்பேத்கர் வழக்கறிஞ ராக இருந்தபோதே, அரசியலிலும் ஈடுபட்டார். சமூகத் தொண்டிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். தீண்டாமைக் கொடுமையெனும் மனிதாபிமானமற்ற செயலை வன்மை யாகக் கண்டித்தார்.

**மாதவி:** ஆமாம். 1925-லிருந்து 1930 வரை பம்பாயில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக நான்கு விடுதிகளை அமைத் தவர். தீண்டாமைக் கொடுமைக்கு அடிப்படையாக இருந்த, பழமை வாதத்தை எதிர்த்து மூலை முடுக்கு களிலெல்லாம் பிரச்சாரம் செய்தார். பத்திரிகைகளில் எழுதினார்.



**இளங்கோ:** பத்திரிகைகளில் எழுதியது மட்டுமல்ல, 'ஜனதா' என்னும் பெயரில், தாமே ஒரு பத்திரிகையை யும் நடத்தினார்.

**மாதவி:** 1930-இல் நாசிக்கில், தீண்டப்படாதவர்களின் ஆலய நுழைவுப் போராட்டத்தையும் முன்னின்று நடத் தினார். இல்லையா?

**இளங்கோ:** ஆமாம். இந்தச் சமுதாயப் பணிகளுக்கெல் லாம் பக்கபலமாக இருந்தது யார் தெரியுமா? அம்பேத்கரின் துணைவியார்தான். அம்பேத்கர் படிப்புக்கும், சமுதாயத் தொண்டுக்கும் எந்த வகையிலும் இடையூறாக இல்லாமல் அவர் பார்த்துக் கொண்டார்.

**மாதவி:** 1905-ஆம் ஆண்டில் அம்பேத்கருக்குத் திருமணம் நடந்தது. மனைவி பெயர் ரமாபாய். அப்போது அம்பேத்கருக்கு வயது பதினான்கு!

**இளங்கோ:** அம்பேத்கர் பரோடா சமஸ்தானத்தில் பொறுப்புமிக்க பதவியில் அமர்த்தப்பட்டார்.

**மாதவி:** அப்படியா?

**இளங்கோ:** ஆமாம். பரோடா மன்னர் அம்பேத்கரின் அறிவிலும் ஆற்றலிலும் நம்பிக்கை வைத்திருந்தார். தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த ஒருவருக்கு உயர் பதவி வழங்க வேண்டும் என்பது அவரது ஆசை. அந்த ஆசையை அம்பேத்கரை நியமிப்பதன் மூலம் மன்னர் நிறைவேற்றிக் கொண்டார். ஆம். அம்பேத்கர் இராணு வச் செயலாளராகப் பதவியில் அமர்த்தப்பட்டார்.

**மாதவி:** அங்கேயும் அவருக்குத் தொல்லைகள் ஏற்பட்டி ருக்குமே!

**இளங்கோ:** ஆமாம். பரோடா சமஸ்தானத்திலும் தீண் டாமைத் தொல்லைகள் மிகுந்திருந்தன. அவற்றைக் களைய அவர் அரும்பாடுபட வேண்டியதாயிற்று.

**மாதவி:** பிறகு பரோடாவை விட்டு பம்பாய் வந்தார் அம்பேத்கர். வாழ்க்கைச் சூழலில் சிக்கித் தவித்தார். நிலையான வேலை, போதுமான வருவாய் இல்லாமல் கஷ்டப்பட்டார். கடைசியாக, ஒரு கல்லூரியில் பேராசிரியர் வேலை கிடைத்தது. அதை மனமுவந்து ஏற்றுக் கொண்டார்.

**இளங்கோ:** கோல்காபூர் என்பது ஒரு சமஸ்தானம். அதன் மன்னர் ஒரு சீர்திருத்தவாதி. தாழ்த்தப்பட்டவர்மீது அனுதாபம் உள்ளவர். தமது சமஸ்தானத்தில் அவர் களுக்கு உயர் பதவிகளையும் கொடுத்து வந்தவர்.

**மாதவி:** அதுமட்டுமல்ல, தீண்டாமை ஒழிப்பு மாநாடு களையும் அவர் நடத்தி வந்தார். அம்பேத்கருக்கு அந்த மன்னரின் நட்பு கிடைத்தது. மன்னரின் உதவியுடன் அவர் ஒரு பத்திரிகையையும் தொடங்கினார். அதுதான், 'ஊமைகளின் தலைவன்' என்பதாகும்.

**இளங்கோ:** மன்னர் நடத்திய தீண்டாமை ஒழிப்பு மாநாடு களில் அம்பேத்கர் கலந்து கொண்டார். தீண்டாமை ஒழிப்பின் அவசியத்தையும் அவசரத்தையும் வலியுறுத்தி னார். அவர் பேச்சைக் கேட்டு, கோல்காபூர் மன்னர், அம்பேத்கரை வானளாவப் புகழ்ந்தார்.

**மாதவி:** அதுமுதல் "அம்பேத்கர் தாழ்த்தப்பட்ட மக்க ளின் விடுதலை வீரர்" என எல்லோராலும் அழைக்கப் பட்டார்.

"எல்லாச் சமூகங்களும் சில பயனற்ற விஷமத்தனமான பழக்க மூட்டைகளைச் சுமந்து கொண்டுதான் இருக்கின்றன. ஆனால், அறிவு விளக்கம் பெற்ற சமூகங்கள் தமது பழக்க வழக்கங்களை ஆராய்ந்து, நல்லவைகளை ஒப்புக் கொண்டு, தீயவைகளை நிராகரித்து, முன்னேற முயல்கின்றன."

—டாக்டர் அம்பேத்கர்

**இளங்கோ:** விடுதலைப் போராட்டம் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்த நேரம், ஆனால், அம்பேத்கரின் கவனமோ, தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலை ஒன்றிலேயே இருந்தது. அவர்களுக்கென்றே ஒரு சபாவைத் தொடங்கினார். அங்கு மாணவர்களுக்காக ஒரு விடுதியையும் அமைத்தார். அந்த ஏழை-எளிய-தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு உணவும் உடையும் இலவசமாகவே வழங்கப்பட்டன. புத்தகங்கள் வாங்குவதற்குக்கூட உதவி செய்யப்பட்டது.

**மாதவி:** இந்தச் சபாவில், ஓர் அறிவு வளர்ச்சி மன்றமும் கூடத் தொடங்கப்பட்டது. அறிவை வளர்க்க, தொண்டு மனப்பான்மையை உருவாக்க இது பெரிதும் உதவியது.

**இளங்கோ:** அம்பேத்கர், கிராமங்கள்தோறும் சென்றார். பட்டி தொட்டிகளிலெல்லாம் அவர் பாதங்கள் பட்டன. அங்குள்ள தாழ்த்தப்பட்ட மக்களைச் சந்தித்துப் பேசினார். அடிமை வாழ்வு அகல அறிவுரைகள் கூறினார். "பொறுத்தது போதும்,! பொங்கியெழு!" என்று முழங்கினார். அதைக் கேட்ட மக்கள் தன்மான உணர்வு கொண்டு எழுந்தனர்.

**மாதவி:** 'தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்களை இராணுவத்தில் சேர்க்கக் கூடாது' என்று வெள்ளையர்கள் அறிக்கை ஒன்றை வெளியிட்டார்கள். அதனால் ஆயிரக்கணக்கான தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. அதைக்கண்டு வெகுண்டெழுந்தார் அம்பேத்கர். வெள்ளையரின் அறிக்கைக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யும்படிக் கூறினார்.

**இளங்கோ:** காலம் ஓடியது... சொல்வன்மையும், செயல்திறனும் கொண்ட அம்பேத்கருக்குச் சிறப்புச் செய்யத் தீர்மானித்தது பம்பாய் அரசு. அதன்படி அம்பேத்கர் பம்பாய் சட்டமன்ற மேலவை உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

**மாதவி:** இந்தச் செய்தி, தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தேனாக இனித்தது. அவருக்குப் பாராட்டுக் கூட்டத்தை ஏற்பாடு செய்தார்கள். அந்தக் கூட்டத்தில் அவருக்குப் பண முடிப்பும் வழங்கினார்கள்.

**இளங்கோ:** பாராட்டுக்கு நன்றி தெரிவித்துப் பேசிய அம்பேத்கர், தமக்கு அளிக்கப்பட்ட பணமுடிப்பை, தாம் தொடங்கிய சபாவுக்கே நன்கொடையாக வழங்கி விட்டாராம்.

பம்பாய் மாநிலத்தில் மாகாத் என்று ஒரு நகரசபை இருந்தது. அந்த நகர சபை ஓர் அறிவிப்பை வெளியிட்டிருந்தது. அதன்படி, அவ்வூரில் இருந்த குளம் எல்லாருக்கும் பொதுவானது என்று குறிப்பிட்டிருந்தது. ஆனால் அந்தக் குளத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் தண்ணீர் எடுக்க உயர் சாதிக்காரர்கள் அனுமதிக்கவில்லை.

இதைக்கண்ட அம்பேத்கர் மனம் கொதித்தார். 1927-ஆம் ஆண்டில், மாகாத்தில் 'தாழ்த்தப்பட்டோர் மாநாடு' ஒன்று நடந்தது. அது 'மாகாத் மாநாடு' என்று அழைக்கப்பட்டது.

**மாதவி:** ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்த அந்த மாபெரும் மாநாட்டில் அம்பேத்கர் வீர முழக்கம் செய்தார். தன்மானம் பெறுவோம் என்றும், கல்வி, வேலை வாய்ப்புப் பெற உழைப்போம் என்றும் அறிவுரை கூறினார். தூங்கிக்கிடந்த அந்த மக்களைத் தட்டி எழுப்பினார்.

**இளங்கோ:** ஊர்ப் பொதுக் குளத்தில், தாழ்த்தப்பட்டவர்க்கும் தண்ணீர் எடுக்க உரிமை உண்டு என்று முழங்கி, மாபெரும் பேரணிக்கும் ஏற்பாடு செய்தார்.

**மாதவி:** ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட அந்தப் பேரணி, மாநாடு நடந்த மாகாத்திலிருந்து புறப்பட்டது. தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமை முழக்கங்கள் வானைப் பிளந்தன. உயர் சாதிக்காரர்கள் வீட்டுக்குள்ளே ஒளிந்துகொண்டு வேடிக்கைப்பார்த்தனர்.

**இளங்கோ:** பேரணி, முக்கிய வீதிகளின் வழியாகச் சென்று, இறுதியில் அந்த ஊர்ப் பொதுக் குளத்தை அடைந்தது. மக்கள் வெள்ளமோ குளக்கரையில் நின்று கொண்டிருந்தது. அம்பேத்கர் வீறுநடை போட்டுக் குளத்தில் இறங்கினார். தண்ணீரை இரு கைகளாலும் அள்ளி அள்ளிக் குடித்தார். கூடியிருந்த மக்கள் கரவொலி எழுப்பி, தம் மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள். அது மட்டுமல்ல, வந்திருந்த மக்களும் குளத்தில் இறங்கி தண்ணீர் எடுத்துக் குடித்தார்கள்.

**மாதவி:** ஆண்டவன் சந்நிதி முன் அனைவரும் சமம் என்பது உலகக் கோட்பாடு. ஆனால், தாழ்த்தப்பட்டவர்களை ஆலயத்திற்குள்ளும் அனுமதிக்கவில்லை அக்கால 'மகா புருஷர்கள்'

**இளங்கோ:** ஆம். அந்த அவல நிலை அகலவும் அரும்பாடுபட்டார் அம்பேத்கர்.

**மாதவி:** தாழ்த்தப்பட்ட மக்களின் நிலையை உயர்த்தவும், அந்த மக்களின் உரிமைகளை நிறைவேற்றவும் ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ளும் காலமும் வந்தது. அதுதான் 'சைமன் குழு' இந்தியாவுக்கு வந்த நேரம். இங்கிலாந்து பாராளுமன்றத்தால் அமைக்கப்பட்ட அந்தக் குழுவின் தலைவர்தான் சர். ஜான் சைமன் என்ற ஆங்கிலேயர்.

**இளங்கோ:** அந்தக் குழுவிற்கு உதவி செய்ய பிரிட்டிஷ் அரசு இந்தியக் குழு ஒன்றை அமைத்தது. அதில் அம்பேத்கரும் இடம் பெற்றார். ஆனால் மக்கள் அதை விரும்பவில்லை. அவருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர். வெள்ளையருக்குத் துணை போவதா என்று கண்டித்தனர்.

**மாதவி:** அம்பேத்கர் எதற்கும் அஞ்சவில்லை, அவரது எண்ணமெல்லாம் அடித்தளத்தில் இருந்த மக்களை மேலே கொண்டு வருவதிலேயே இருந்தது. அந்த ஒரே நோக்கத்திற்காகத்தான் அவர் அந்தக் குழுவில் இருக்கச் சம்மதம் தெரிவித்தார். இதை மற்றவர்கள் தவறாகப் புரிந்து கொண்டார்கள்.

**இளங்கோ:** தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பில் அவர்களது நிலையை எடுத்துக் கூறினார் அம்பேத்கர். வாக்குரிமை, கல்வி, வேலைவாய்ப்பு, அரசப் பணி ஏன் அமைச்சர் பதவியும் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தினார். இப்படி, கிடைக்கிற வாய்ப்புகளை அவர்தம் இன மக்களுக்காகப் பயன்படுத்திக் கொண்டார்.

**மாதவி:** 1928-ஆம் ஆண்டு அம்பேத்கர், தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கான இரண்டு இல்லங்களைத் தொடங்கினார். தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கான கல்விச் சங்கம் ஒன்றையும் அமைத்தார். பிறகு ஐந்து மாணவர் இல்லங்கள் திறக்கவும் ஏற்பாடுகள் செய்தார். இதற்கு அரசும் உதவி செய்தது.



அம்பேத்கர் ...



★ ஆயிரமாயிரம் ஆண்டு அடிமைகளாகத் தன்மானத்தை இழந்திருப்பதைக் காட்டிலும், அரை நிமிடம் வாழ்வாங்கு வாழ்ந்து அமரராவது சாலச் சிறந்ததாகும்!

**இளங்கோ:** இந்திய விடுதலைப் போராட்டம் வலுவடைந்த நேரம். அதுகண்டு வெள்ளையர் ஆட்சி வெகுண்டது. இதற்கு ஏதாவது பரிகாரம் செய்ய வேண்டும் என்று கருதியது. அதன் விளைவாக நடந்ததே வட்ட மேசை மாநாடு. இலண்டனில் நடந்த இம்மாநாட்டில் அம்பேத்கரும் கலந்து கொண்டார். அவரது பேச்சைப் பல அறிஞர்களும் பாராட்டினார்கள்.

**மாதவி:** வட்டமேசை மாநாட்டில் கலந்து கொண்டு விட்டுத் தாயகம் திரும்பினார் அம்பேத்கர். அப்போதுதான் அண்ணல் காந்தியடிகளை அவர் சந்தித்தார்.

**இளங்கோ:** அம்பேத்கர் ஓயாமல் உழைத்து வந்ததால், உடலில் தளர்ச்சி ஏற்பட்டது. ஆனால், உள்ளத்திலோ தளர்ச்சி என்பது சிறிதும் இல்லை. இந்த நிலையில், அதாவது 1935-இல், அவரது அருமைத் துணைவியார் ராமாபாய் காலமானார். மனைவியை இழந்த துயரம் அவரைப் பெரிதும் வாட்டியது.

**மாதவி:** மனைவி மறைவுக்குப் பிறகு அம்பேத்கர் ஒரு துறவியைப் போலவே காட்சியளித்தார். தலையை மழித்துக் கொண்டு, மஞ்சள் நிற அங்கியை அணிந்து கொண்டார்.

**இளங்கோ:** 1942-ஆம் ஆண்டில், வைசிராய் தமது நிர்வாகச் சபையின் உறுப்பினராக அம்பேத்கரை நியமித்தார். அந்தச் சபையில், சர். சி.பி. ராமசாமி ஐயர், சர். முகம்மது உஸ்மான், சர். சேம சுந்தரசிங் போன்றவர்கள் உறுப்பினர்களாக இருந்தார்கள். தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவருக்கு இந்த உயர் பதவி அளிக்கப்பட்டது பெருமைப்படத்தக்க விஷயமாகும்.

**மாதவி:** அம்பேத்கர் நாக்பூரில் இருந்தபோது, அவருக்கு ஒரு இனிப்பான செய்தி ஒன்று வந்தது. அதுதான், அவர் தொழில் அமைச்சராக நியமிக்கப்பட்ட செய்தி.

**இளங்கோ:** 1945-இல், அரசியல் நிர்ணய சபை அமைக்கப்பட்டது. அதில் பல துறை அறிஞர்களும் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அவர்களில் டாக்டர் அம்பேத்கரும் ஒருவர்.

**மாதவி:** 1946-இல், இடைக்கால அரசு அமைக்கப்பட்டது. பண்டித நேரு, வல்லபாய் பட்டேல், மூதறிஞர் ராஜாஜி, அபுல்கலாம் ஆசாத், பாபு ஜெகஜீவன்ராம் முதலானோர் அமைச்சர்களானார்கள். அரசியல் நிர்ணய சபையின் தலைவராக டாக்டர் ராஜேந்திர பிரசாத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**இளங்கோ:** பிறகு நடந்த அரசியல் நிர்ணய சபைக் கூட்டத்தில் பண்டித நேரு இந்திய விடுதலை குறித்துப் பேசினார். அதே கூட்டத்தில் டாக்டர் அம்பேத்கரும் உரையாற்றினார். அவரது உரை அறிஞர் பெருமக்களால் பாராட்டப்பட்டது.

**மாதவி:** 1947 ஏப்ரல் மாதம் நடந்த அரசியல் நிர்ணய சபைக் கூட்டத்தில், 'தீண்டாமை ஒரு குற்றம்' என்று தீர்மானிக்கப்பட்டது. அதுவே டாக்டர் அம்பேத்கருக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகக் கருதப்பட்டது.

**இளங்கோ:** 1947-ஆம் ஆண்டு, ஆகஸ்டு பதினைந்தாம் நாள் இந்தியா சுதந்திரம் பெற்றது. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதம மந்திரியானார் பண்டித ஜவகர்லால் நேரு. டாக்டர் அம்பேத்கர் சட்டத்துறை அமைச்சரானார்.

**மாதவி:** 1947-ஆம் ஆண்டு, 29-ஆம் நாள் அரசியல் நிர்ணய சபை கூடியது. அந்தக் கூட்டத்தில்தான், வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு முடிவு மேற்கொள்ளப்பட்டது. அதன்படி அரசியல் சட்டத்தை இயற்ற 'வரைவுக் குழு' ஒன்று அமைக்கப்பட்டது.

**இளங்கோ:** டாக்டர் அம்பேத்கர் அந்தக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார். அரசியல் சட்டத்தை வரைய அல்லும் பகலும் உழைத்தார். அவர் யாருடைய உதவியும் இன்றி, ஒருவராகவே இருந்து, ஆறுமாதக் காலத்தில் அரசியல் சட்டத்தை வரைந்து கொடுத்தார். அவரை நாடே போற்றியது, புகழ்ந்தது, பாராட்டியது.

**மாதவி:** டாக்டர் அம்பேத்கரின் சிந்தனை, செயல்-பேச்சு, மூச்சு எல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களைப் பற்றியதாகவே இருந்தது. அதற்காக அவர் நேரம் காலம் பாராது உழைத்தார். கடுமையாக உழைத்தார். அதன் விளைவு-உடல் சோர்ந்தார்.

**இளங்கோ:** ஆம். தாழ்த்தப்பட்ட மக்களின் இருண்ட வாழ்வில் ஒளியேற்றி வைத்த டாக்டர் அம்பேத்கர் 1956-ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் ஆறாந் தேதி மறைந்தார். இந்த நாடே கண்ணீர் விட்டு அழுதது; மனம் கலங்கியது. மாபெரும் தலைவரை இழந்து துக்கக் கடலில் ஆழ்ந்தது.

**மாதவி:** டாக்டர் அம்பேத்கர் மிகச் சிறந்த மனிதாபிமானியாக- மனித நேயம் மிக்கவராக விளங்கினார். அவர் வழக்கறிஞராக இருந்தபோது, ஏழை மக்களுக்காக வாதாடினார். இலவசச் சட்ட உதவி வழங்கினார்.

**இளங்கோ:** சாதிக் கொடுமைகள் களைந்திட, தீண்டாமைத் தீமை அழித்திட; வேலை வாய்ப்புகள் பெற்றிட டாக்டர் அம்பேத்கர் மிகவும் உழைத்தார். அவ்வப்போது அரசுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தினார்.

**மாதவி:** டாக்டர் அம்பேத்கர், 'மக்கள் கல்விக் கழகம்' அமைத்தார். கிராமப் புறங்களில் 'சித்தார்த்தா கல்லூரிகள்' நிறுவினார்.

**மாதவி:** அவரது இடைவிடாத உழைப்பின்மூலம், 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற வள்ளுவர் குறளை நினைவு படுத்தினார்.

**இளங்கோ:** 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்னும் திருமூலரின் திரு மந்திரத்தையும் நினைவில் கொள்ள வைத்தார்.

**மாதவி:** டாக்டர் அம்பேத்கர் ஒரு மாபெரும் மனிதர். நமது அரசியல் சட்டத்தை இயற்றிய சிற்பி. சமத்துவத்தின் விடிவெள்ளி.

**இளங்கோ:** ஆம். அவர் கொள்கை வழி நடப்போம். அதுவே, நாம் அவருக்குச் செய்யும் நன்றிக் கடனாகும்.






வட ஆர்க்காடு
அம்பேத்கர் மாவட்டம்

# பணப்பயிர் ஊடுபயிர் பயிரிடுவீர்

வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் சோயா பீன்ஸ் பயிரைத் தனிப் பயிராகவும், கரும்பு, தென்னை, வாழை, மஞ்சள் ஆகியவற்றுடன் ஊடு பயிராகவும் பயிர் செய்கிறார்கள். சோயா பயிருக்கு விவசாயிகளிடம் நல்ல வரவேற்பு உள்ளது. சோயா பீன்ஸ் புரதச்சத்துமிக்க ஒரு உணவுப் பொருளாகும். தனிப்பயிராகவும் பயிரிடலாம், அதிகச் செலவு இல்லாமல் ரூ.5,000 முதல் ரூ.6,000 வரை கிடைக்கும். ஊடுபயிராக விதைத்தால் 90 நாட்களில் ரூ.2,000 முதல் ரூ.3,000 வரை வருவாய் கிடைக்க வழி உண்டு. ஊடுபயிராக விதைத்தால் முக்கியப் பயிருக்கு எந்த விதப் பாதிப்பும் இல்லை. மேலும், அதனால் நன்மைதான் ஏற்படுகிறது.

### கரும்பில் சோயா பீன்ஸ்

கரும்பில் ஊடுபயிர் செய்யும் பழக்கம் தொன்று தொட்டு நம்மிடையே இருந்து வருகிறது. சோயா பீன்ஸ் பயிரைக் கரும்பில் ஊடு பயிராகச் சாகுபடி செய்வதால் கரும்பு மகசூல் பாதிக்கப்படுவதில்லை; மாறாக நன்மைகள் கிடைக்கின்றன. 90 நாட்களில் உபரி வருமானமாக ஏக்கருக்கு ரூ.3,000 வரை லாபம் கிடைக்கிறது. கரும்பு அறுவடையாக ஓராண்டுக் காலம் காத்திருக்க வேண்டியுள்ளது. எனவே, சாகுபடிச் செலவுக்கு இத்தொகை உதவும். சோயா பீன்ஸ் செடிகள் வளர்ந்து இடத்தை அடைத்துக் கொள்வதால் களைகள் கட்டப்படுவதுடன் உர உபயோகத்திறன் அதிகரிக்கிறது. நீர் பாய்ச்சவும் செலவு குறைகிறது. மகசூலும் கூடுகிறது. இலையோ மக்கி உரமாகிறது. அறுவடையின் போது, வேர்முடிச்சுகள் மூலமாகத் தலைச்சத்து நிலத்தில் சேர்த்து வைக்கப் படுகிறது. சோயா பீன்ஸ் 34 ரகங்கள் இருந்தாலும் கோ.1. தான் நமது நிலத்திற்கு ஏற்றதாக உள்ளது.

கரும்பு சாகுபடியைப் போலவே, தென்னை, வாழை, மஞ்சள் சாகுபடியிலும் ஊடுபயிராகச் சோயா பீன்ஸ் விதை நடலாம் தனிப்பயிராக நடவு செய்தால் இரட்டிப்பு மகசூல் தரும்.

### சாகுபடி முறை

சக்தி சோயா நிறுவனம் ரூ.6-க்கு ஒரு கிலோ விலைக்கு வாங்கி விவசாயிக்கு ரூ.4-க்குக் கொடுக்கிறது. 6 கிலோ முதல் 10 கிலோ வரை ஒரு ஏக்கருக்குத் தேவை. விதைகளை ஒரு பாக்கெட் நுண்ணுயிருடன் கலந்து விதைக்க வேண்டும். கரும்பு, மஞ்சள், வாழை நட்டவுடன் இடைப்பட்ட இடத்தில் மூன்று அல்லது நான்கு வரிசை சோயா பீன்ஸ் விதைக் கலாம். குழிக்கு இரண்டு விதைகளை ஒரு அங்குலத்திற்குள் விதைக்க வேண்டும். விதைத்த 40, 50, 60-வது நாட்களில் இலைவழி ஊட்டமாக டி.ஏ.பி. 2 கிலோ பொட்டாஷ், ஒரு கிலோ யூரியா, அரை கிலோவை 230 லிட்டர் நீரில் கலந்து தெளிக் கலாம். உரங்களை முதல் நாளே நீரில் ஊற வைத்து மறு நாள் காலையில் தெளிக்க வேண்டும்.

### சர்க்கரை ஆலை

வேலூர் அம்பேத்கர் மாவட்டத்தில் மூன்று சர்க்கரை ஆலைகள் இயங்கி வருவதாலும், கரும்பு பயிரிடும் விவசாயிகள் அதிகமாக உள்ளதாலும் சோயா பயிரை ஊடுபயிராகப் பயிரிட நல்ல வாய்ப்பும் வசதியும் உள்ளது. உற்பத்தி செய்த விதைகளைச் சக்தி சோயா நிறுவனம் கிராம அளவிலேயே கிலோவுக்கு ரூ.6 வீதம் கொள்முதல் செய்து கொள்கிறது. மேலும் விதை எடுத்து வர வண்டிச் சத்தம், - போக்குவரத்துச் செலவு, சாக்குக் கிரயம் போன்றவற்றிற்கு டன் ஒன்றிற்கு ரூ.150 வழங்கப் படுகிறது. சோயா பீன்ஸ் விதைத் தேவை மற்றும் சாகுபடி முறைகளை வேலூரில் உள்ள சக்தி சோயா நிறுவனத்தின் மண்டல மேலாளர் வரதராஜன், வேலூர் களப்பணியாளர் செல்வவிநாயகம் அவர்களை அணுகி, பெற்றுக் கொள்ளலாம்.

### பொள்ளாச்சியில் தொழிற்சாலை

பொள்ளாச்சியில் ரூ.26 கோடி செலவில் தொழிற்சாலை தமிழ்நாடு அரசு கூட்டு நிறுவனமாக நிறுவப் பட்டு, நாள் ஒன்றுக்கு 300 டன் சோயா பீன்ஸ் அரைக்கலாம். கொள் முதல் விலை குவின்ண்டாலுக்கு ரூ.600 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. கொள்முதல் விதைகளைப் பொள்ளாச்சி ஆலைக்கு அனுப்பிவைத்து ஏ.பி.டி லாரி விலைப்பட்டியலை வேலூர் அலுவலகத்தில் கொடுத்தால் மண்டல மேலாளரிடமிருந்து உடனடியாகத் தொகையைப் பெற்றுக் கொள்ள லாம். குறுகிய காலத்தில் வேறெந்தப் பயிரிலிருந்தும் இந்த அளவிற்குக் கூடுதல் வருமானம் ஈட்ட இயலாது என்பது திடமான உண்மையாகும். சோயா பீன்ஸ் பயிரிடுவதால் நிலத் திற்கு வளம்-கால் நடைக்குத் தீவனம் ஆகியவற்றுடன் மனிதனுக்கும் உண வாகிறது.

- வேற்றுப் பயிர் செய்து விளைச்சல்
மிக இல்லை என்றால்
மாற்றுப் பயிர் செய்திடலாம்;

எனவே, மாற்றுப்பயிராக சோயா பீன்ஸ் விதைத்திடுவீர்!



# பெரியார் மாவட்ட
# வளர்ச்சிப் பணிகள்

பெரியார் மாவட்டத்தில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை தொடர்பான பல்வேறு பணிகள் துரித கதியில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அவற்றுள், குறிப்பிடத்தக்க சில முக்கியப் பணிகள் பற்றி விவரிப்பதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

1990-91-ஆம் ஆண்டில், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 8,309 குடும்பங்களுக்கு ரூ.261.406 இலட்சம் மானியம் மற்றும் கடனுதவி வழங்கத் திட்டமிடப்பட்டதில் இதுவரை 5,760 குடும்பங்களுக்கு ரூ.169.42 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், 2,823 பணிகள் ரூ.787.681 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டதில், இதுவரை 2,550 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

ஆதிதிராவிடர்களுக்கு 1,900 இலவசத் தொகுப்பு வீடுகள் ரூ.269.800 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன. இதில் பேரூராட்சிப் பகுதிகளில் 285 தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. மொத்தத்தில் இதுவரை 1,853 தொகுப்பு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

சொந்தக் கட்டடம் இல்லாத ஊராட்சி மற்றும் பேரூராட்சி மன்றங்களுக்கு ரூ.65.85 இலட்சம் மதிப்பீட்டில், 80 கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இதில் இதுவரை 75 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

பள்ளிக் கட்டடமே இல்லாத 21 இடங்களில் புதிய பள்ளிக் கட்டடங்கள் ரூ.27.815 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன. இதில் இதுவரை 18 பள்ளிக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

ஊராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில், பல்வேறு வகையான வளர்ச்சிப் பணிகளைச் செய்யும் பொருட்டு 571 பணிகள் ரூ.112.915 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்து, செய்யப்பட்டு வருகின்றன. இதில் 425 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

600 எக்டேர் நிலப்பரப்பில் சமூகக் காடுகள் திட்டத்தின் கீழ் செடிகள் நடவு செய்யவும், நாற்றங்கால் ஏற்படுத்தவும் ரூ.27.196 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவரை இத்திட்டத்தில் ரூ.619.726 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 25.290 இலட்சம் மனிதசக்தி நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

1989-90-ஆம் ஆண்டில் சிறுசேமிப்புத் திட்டத்தினைச் சிறப்பாகச் செயல்படுத்தியமைக்காகச் சிறுசேமிப்பு ஊக்குவிப்புத் தொகையாக இம்மாவட்டத்திற்கு ரூ.69.40 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. 75 சதவீதத் தொகை ரூ.52:05 இலட்சம் வளர்ச்சிப்பணிகளைச் செயலாக்கிடத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் ரூ.5.00 இலட்சம் சென்னை மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவன வளர்ச்சிக்காகவும், மீதமுள்ள தொகை ரூ.47.05 இலட்சம், கிராமப்பகுதிகளில் அடிப்படைத் தேவைகளுக்கான சிறப்புத் திட்டப் பணிகளைச் செயலாக்கவும் ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

1990-91-ஆம் ஆண்டு ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டக் கூடுதல் ஒதுக்கீடாக ரூ.54.82 இலட்சம் இம்மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்விரண்டு ஒதுக்கீடுகளையும் சேர்த்து, மொத்தத் தொகை ரூ..101.87 இலட்சமாகும்.

வளர்ச்சிப்பணிகளை அங்கீகரிக்கும் பொருட்டு, முதற்கட்டமாக ரூ.98.106 இலட்சத்திற்குப் பேரூராட்சிப் பகுதிகளில் 65 பணிகள் ரூ.26.128 இலட்சம் ஒதுக்கீட்டிலும், ஊராட்சிப் பகுதிகளில் 147 பணிகள் ரூ.71.978 இலட்சம் மதிப்பீட்டிலும் செயலாக்கப்படும்.

பெரியார் மாவட்டத்தில் கசிவு நீர்க்குட்டைகள் 12 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 35 பணிகளும், சிறுபாசனத் திட்டம் ரூ.20 இலட்சத்தில் 26 பணிகள் எடுத்துச் செய்ய அரசு அனுமதி வழங்கி உள்ளது.



சாண எரிவாயுத் திட்டத்தில் 1990-91-ஆம் ஆண்டிற்கு 1075 கலன்கள் நியமனக் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இது வரையில் 543 கலன்கள் நிறுவப்பட்டுள்ளன. 381 கலன்கள் நிறுவப்பட்டு வருகின்றன.

நடப்பாண்டில், கண்ணொளி வழங்கும் திட்டத்தின் கீழ் 1,538 நபர்களுக்குக் கண் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

சிறுசேமிப்புத் திட்டத்தைப் பொறுத்த மட்டில், இம்மாவட்டத்தின் இலக்கான ரூ.200 இலட்சத்தில் 150 இலட்சம் நிகர வசூல் செய்யப்பட்டுள்ளது.

கிராமக் குடிநீர்த் திட்டத்தில், நடப்பாண்டில் 150 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கும் பணி மேற்கொண்டதில், இதுவரை 80 குழாய்க் கிணறுகள் முடிக்கப்பட்டுள்ளன. குடிநீர்த் தட்டுப்பாடு, இம்மாவட்டத்தில் ஒரு சில வட்டாரங்களில் - குறிப்பாக ஊத்துக்குளி, பெருந்துறையின் ஒரு பகுதி, அந்தியூர், அம்மாபேட்டையில் ஒரு பகுதி, பவானிசாகர், வெள்ளக்கோவில் ஆகிய இடங்களில் துவக்கப்பட்டுள்ளது. அனைத்துக் குழாய்க் கிணறுகளையும் பழுதின்றி இயக்கப் போர்க்கால நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. உதிரி பாகங்கள் வாங்க அரசு ரூ.8 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

கரும்பு சாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் 68.90 கி.மீ. நீளமுள்ள சாலை ரூ.70.20 இலட்சத்தில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.





**ஜனநாயகம் என்பது ஓர் அரசாங்க அமைப்பு மட்டுமல்ல; அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டு ஒன்றுபட்டு வாழும் வழி அது; முக்கியமாகச் சக மனிதர்களிடம் மதிப்புடனும் மரியாதையுடனும் நடந்து கொள்ளுகின்ற மனப்பாங்கே அது.**

சத்துணவு மையங்கள் பழுதுபார்க்கும் பணிக்கென அரசு மானியம் ரூ.0.75 இலட்சம் ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றுப் பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

வேளாண்மைக்குத் தேவைப்படும் குறுகிய கால மற்றும் மத்தியக் காலக் கடன் வசதிகளைப் பெரியார் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியும் அதனுடன் இணைக்கப்பட்ட 230 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளும் வழங்கி வருகின்றன. கடந்த ஜனவரித் திங்கள் முடிய, குறுகிய காலக் கடன் ரூ.312.68 இலட்சமும், மத்திய காலக் கடன் ரூ.87.45 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளன. இதில் குறுகிய காலக் கடன் நலிவுற்ற பிரிவினருக்கு ரூ.163.86 இலட்சமும், மத்திய காலக் கடன் நலிவுற்ற பிரிவினருக்கு ரூ.87.45 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளன.

வேளாண்மை முன்னேற்றத்திற்குத் தேவையான நீண்டகாலக் கடன் வசதிகளை அளிக்கப் பெரியார் மாவட்டத்தில் 12 கூட்டுறவு நிலவள வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. 1990-91-ஆம் நிதியாண்டுக்குக் கடந்த ஜனவரித் திங்கள் முடிய ரூ.144.50 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

பெரியார் மாவட்டத்தில் 6 கூட்டுறவு நகர வங்கிகள் மற்றும் பெரியார் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் 27 கிளைகள், 230 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் ஆகியவைகளின் மூலம் ஜனவரி 1991 திங்கள் முடிய 1990- 91-ஆம் நிதியாண்டுக்கு ரூ.3116.21 இலட்சம் நகைக் கடன் வழங்கியுள்ளது.

பெரியார் மாவட்டத்தில் செயல்படும் 6 கூட்டுறவு நகர வங்கிகள் 1990.91-ஆம் நிதியாண்டுக்கு ஜனவரி முடிய ரூ.113.55 இலட்சமும் பெரியார் மத்தியக் கூட்டுறவு வங்கி ரூ.22.30 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.135.85 இலட்சம் சிறு தொழில் கடன் வழங்கப்பட்டுள்ளது.

வேளாண்மையைப் பொறுத்த மட்டில், நடப்பாண்டில் சுமார் 50 ஆயிரம் எக்டேரில் சம்பாவில் சாகுபடி செய்யப்பட்டிருந்த நெற்பயிர் தற்போது அறுவடையாகி வருகிறது. இதுவரை நடந்து முடிந்த 32 அறுவடைப் பரிசோதனைகளில் கிடைத்த முடிவுகளின்படி, சராசரியாக எக்டேருக்கு 4,319 கிலோ அரிசி உற்பத்தியாகியுள்ளது. சென்ற ஆண்டில் சராசரியாக எக்டேருக்கு 3,390 கிலோ அரிசி உற்பத்தியாகியிருப்பதை ஒப்பிடும் பட்சத்தில், நடப்பு சம்பா மகசூல் அமோகமானதாகும். நடப்பாண்டு குறுவையில் கிடைத்த சாதனையை விட, சம்பா சாதனை பாராட்டுக்குரிய அளவில் உள்ளது. நடப்பாண்டு குறுவையில் சுமார் 6,940 எக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டதில் எக்டேருக்குச் சராசரியாக 4,849 கிலோ அரிசி மகசூல் பெறப்பட்டுள்ளது. இது சென்ற ஆண்டு சாதனையான 4,300 கிலோவை விட கணிசமானதாகும்.

நடப்பாண்டில் குறுவையில் 6,940 எக்டேரும், சாம்பாவில் சுமார் 50 ஆயிரம் எக்டேரும், நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நவரையில் சுமார் 3,700 எக்டேரில் நெல் சாகுபடி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆக மொத்தம் நடப்பாண்டில் சுமார் 60,640 எக்டேரில் மட்டுமே நெல் சாகுபடி செய்யப்படுகிறது. ஆனால் சென்ற ஆண்டில் 71,520 எக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. அதாவது நடப்பாண்டில் சுமார் 10,880 எக்டேர் பரப்பு குறைந்திருக்கிறது. ஆனால் சென்ற ஆண்டைவிட நடப்பாண்டில் மாவட்ட அளவிலான அரிசி உற்பத்தி கணிசமான அளவு அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் 2.50 இலட்சம் டன் அரிசி உற்பத்தியாகியிருக்கிறது. இந்த ஆண்டில் இது 2.63 இலட்சம் டன் என்ற அளவுக்கு உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

சம்பா மற்றும் குறுவை அறுவடைகளில் கிடைத்த அமோக மகசூல் காரணமாக எக்டேருக்குச் சராசரியாக 4,340 கிலோ அரிசி மகசூல் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சென்ற ஆண்டில் கிடைத்த சராசரி எக்டேர் மகசூல் 3,426 கிலோ ஆகும்.

பெரியார் மாவட்டத்திலுள்ள 20 முக்கிய வேளாண் விரிவாக்க மையங்கள் மற்றும் 25 துணை மையங்கள் மூலம் விவசாயிகளுக்குத் தேவையான தரமான விதைகள் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதுவரை 622 டன் நெல் விதைகளும், 56 டன் சிறுதானிய விதைகளும், 72 டன் பயறுவகை விதைகளும்

விற்பனையாகி உள்ளது. மார்ச் மாத இறுதிக்குள் மாசிப் பட்டம் மற்றும் சித்திரைப்பட்ட விற்பனையாக சுமார் 20 டன் சிறுதானியங்களும் (இதில் கம்பு மட்டும் சுமார் 15 டன்) சுமார் 45 டன் பயறுவகை விதைகளும் விநியோகமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பெரியார் மாவட்டத்தில் 100 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு மரக்கன்றுகளை வளர்க்கும் முறை பற்றிய ஒருநாள் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தாராபுரம், பவானி சாகர் மற்றும் ஈரோடு ஆகிய 3 இடங்களில் நடைபெற்ற இப்பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளின் போக்குவரத்துச் செலவுக்காகத் தலா ரூ.30/- வழங்கப்பட்டது. பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகள் "கிஸான் நாற்றங்கால்" விவசாயிகளாகக் கருதப்பட்டு, அவர்களிடம் 1991-92-ஆம் ஆண்டிற்கு இம்மாவட்டத்திற்குத் தேவையான மரக்கன்றுகளை வளர்க்கும் பணி ஒப்படைக்கப்படுகிறது. மரக்கன்றுகளை வளர்க்கத் தேவையான கண்ணாடிப் பைகள் சுமார் 3.72 இலட்சம் எண்ணிக்கைகளை ரூ.78,100/- செலவில் வேளாண்மைத் துறை இவ்விவசாயிகளுக்கு வழங்குகிறது.

தற்போதைய நிலையில் இவ்விவசாயிகள் உற்பத்தி செய்து தரும் மரக்கன்றுகளுக்குத் தலா 56 பைசா வீதம் வழங்கப்படும். புளியன், வேம்பு, கருவேல், வெவ்வேல், புங்கம், மான்காது வேலமரம், மலைநெல்லி போன்ற மரக்கன்றுகளை அந்தந்தப் பகுதியிலிருக்கும் விவசாயிகளின் நிலங்களிலேயே இத்திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்பட்டு, அடுத்த ஆண்டில் பருவமழைக் காலத்தில் விநியோகம் செய்யப்படும்:

நெற்பயிரினைத் தாக்கும் குலைநோய், இலைமடக்குப்புழு, புகையான், பச்சை தத்துப்பூச்சி மற்றும் எலிகள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்த 50 சத மானிய விலையில் விவசாயிகளுக்குப் பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், இதுவரை 1,856 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். ரூ.1.1 இலட்சம் மானிய செலவில் இம்மருந்துகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இப்பணி இன்னும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இன்னும் சுமார் ரூ.3.6 இலட்சம் மதிப்புள்ள மருந்துகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. சோளம் பயிரைத் தாக்கும் குருத்து ஈக்களை கட்டுப்படுத்தவும் இத்தொகையிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



ஆதிதிராவிட விவசாயிகளின் நலனை முன்னிட்டு 50 சதவிகித மானிய விலையில் - நெல், பயறுவகை மற்றும் பசுந்தாளுர விதைகளும், நுண்ணூட்டங்களும், பயிர்ப் பாதுகாப்புக் கருவிகளும் வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ.2.84 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டதில் ரூ.1 இலட்சம் மதிப்புள்ள விதைகளும், ரூ.32 ஆயிரம் மதிப்புள்ள நுண்ணூட்டங்களும், ரூ.9 ஆயிரம் மதிப்புள்ள கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ், இதுவரை 1,680 ஆதிதிராவிட விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர். இப்பணி இன்னும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.




படித்து வேலையற்ற இளைஞர்களுக்கு இந்தியப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1989-90-ஆம் ஆண்டிற்கான குறியீடான 300 நபர்களுக்கு எதிராக, சென்ற ஜனவரி முடிய மொத்தம் 308 நபர்களுக்கு ரூ.53.77 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 1990-91-ஆம் ஆண்டிற்கு 400 நபர்களுக்குக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டு, ஜனவரி மாதம் முடிய மொத்தம் 599 பேர்களுக்கு ரூ.127.67 இலட்சம் கடனுதவி வழங்கப் பல்வேறு வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதில் 106 நபர்களுக்கு ரூ.22.08 இலட்சம் கடன் அனுமதியும், 72 நபர்களுக்கு ரூ.14.93 இலட்சம் கடனும் வங்கிகளின் மூலம் பட்டுவாடாவும் செய்யப்பட்டுள்ளது.



பெரியார் மாவட்டத்தில் தக்காளிப் பழங்களிலிருந்து தக்காளிப் பவுடர் தயாரிக்கும் மற்றும் நெல்லிக்கனியிலிருந்து வைட்டமின் "சி" உணவுச் சத்து தயாரிப்பதற்கும் நல்ல வாய்ப்புகள் உள்ளன. இதற்கான தொழில் அறிக்கைகள் தொழில் வணிகத்துறையினரால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

ஆர்வமுள்ள தொழில் அதிபர்கள் இத்தொழில்களைத் தொடங்கி மேலும் விபரங்களுக்கு மாவட்டத் தொழில் மையம், பொது மேலாளரை அணுகலாம் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆதிதிராவிடர்களுக்கு 1990-91-ஆம் ஆண்டு ரூ.87.500 ஒதுக்கீடு செய்யப்பட்டதில், ஜனவரி முடிய ரூ.1,03,341 செலவிடப்பட்டு, 16 குடிநீர்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.

1990-91-ஆம் ஆண்டு, சுடுகாட்டிற்குப் பாதை அமைப்பதற்காக ரூ.1,05,928 செலவிடப்பட்டுள்ளது. இதன்மூலம் இதுவரை 24 பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த நிதியாண்டில் சென்ற ஜனவரி முடிய 216 நிறுவனங்களுக்குப் பல்வேறு திட்டங்களின் கீழ் ரூ.279.35 கடன் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியாண்டில் 218 நிறுவனங்களுக்குப் பல்வேறு திட்டங்களின் கீழ் ரூ.305.59 இலட்சம் கடன் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.



கடந்த ஜனவரித் திங்கள் முடிய ரூ.296.96 இலட்சம் கடன் வசூல் செய்யப்பட்டுள்ளது. ஜனவரியில் மட்டும் ரூ.40.45 இலட்சம் கடன் வசூல் ஆகியுள்ளது.

மாநில அளவில் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்களைச் செயல்படுத்த அரசு மொத்தம் ரூ.1,352.15 இலட்சம் அனுமதி வழங்கியுள்ளது. இதில் பெரியார் மாவட்டத்தில், குன்னத்தூர் பேரூராட்சிக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு ரூ.89.95 இலட்சமும், வீரப்பன்சத்திரம் பேரூராட்சிக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு ரூ.268.20 இலட்சமும், சக்தி நகராட்சி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு ரூ.51 இலட்சமும் ஆக இம்மாவட்டத்திற்கு ரூ.409.15 இலட்சம் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது வீரப்பன் சத்திரம் பேரூராட்சிக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான பணிகள் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.வி.கே. சுப்புராஜ், அவர்களால் கால்கோள் செய்யப்பட்டுள்ளது.

''நரையும் நரந்தமும் அகிலுமாரமும்
துறைதுறைதோறும் பொறையுயிர்த் தொழுகி
நுரைத்தலைக் குறைப்புனல் வரைப்பகம்புகு தொறும்
புனலாடு மகளிற்கதுமெனக் குடையக்
கூனிக்குயத்தின் வாய்நெல்லரிந்து
சூடு கோடாக பிறக்கி நாடொறுங்
குன்றெனக்குவைஇய குன்றா குப்பை
கடுந்தெற்று மூடையினிடங் கெடக்கிடக்குஞ்
சாலிநெல்லின் சிறை கொள்வேலி
யாயிரம் விளையுட்டாகக்
காவேரிபுரக்கு நாடுகிழவோனே!''

சிலப்பதிகாரம் நாடுகாண் காதையில்: கடல் வனனெதிர்க் ''கரியவன புகையினும் புகைக்கொடி தோன்றினும் கயவாய் நெரிக்கும்'', எனக் கூறி புனலொடு எப்பொழுதுமிருந்து நின்நாட்டைப் புனல் நாடெனப் பெயர் எடுக்கச்செய். நின்னாட்டில் ''தாம்பியும், கிழாரும் வீங்கிசையேத்தமும்'' ஒலிக்கவேண்டாம் என்று காவிரியைப் பற்றிக் கூறப்படுகிறது.

''சிலப்பதிகார ஆசிரியர், காவிரியாறு வாழுங்காலம் வரை சோழநாட்டிற்குத் தன் வற்றாத வளஞ்சுரக்கும் ஈகையினை அழகுற எடுத்து மொழிந்துள்ளார்''.

''வாழி அவன்தன் வளநாடு மகவாய் வளர்க்கும்
தாயாகி ஊழி உய்க்கும் பேருதவி ஒழியாய் வாழிகாவேரி''

இளங்கோவடிகள் காவிரி தரும் வளத்தை விளக்கிக் காட்டுகிறார்.

''உழவர் ஓதை மதகு ஓதை; உடைநீர் ஓதை;
தண்பதங்கொள்'
விழவர் ஓதை சிறந்தார்ப்ப நடந்தாய் வாழி காவேரி.''

''மருங்குவண்டு சிறந்தார்ப்ப மணிப்பூவாடை அதுபோர்த்து
கருங்கயற்கண் விழித்தொல்கி நடந்தாய் வாழிகாவேரி.''

''பூவார்சோலை மயிலாலப்புரிந்து குயில்களிசைபாடக்
காமர்மாலை அருகசைய நடந்தாய்வாழி காவேரி.''







மணிமேகலையில்-

துறக்க வேந்தன் துய்ப்பிலன் கொல்லோ
அறக் கொல்வேந்தன் அருளிலன் கொல்லோ
சுரந்துகாவேரி புரந்து நீர்பரக்கவும்
நலத்தகையின்றி நல்லுயிர்க் கெல்லாம்
அலத்தற் காலையாகியது ஆயிழை-

- என்று சீத்தலைச் சாத்தனார், ''பாத்திரங்கொண்டு பிச்சைபுக்க காதை'' என்ற பகுதியில், காவிரியில் எப்படிப்பட்ட காலத்தும் நீர்வளம் குறைவதில்லை என்பதை எடுத்துரைத்து அதன் சிறப்பை விளக்குகிறார்.

கம்பராமாயணத்தில் 'காவிரி நாடன்ன கழனிநாடு' எனக் கம்பர் கூறுகிறார். கோசல நாட்டின் சிறப்பைக்கூற வந்த கம்பர் நதியின் பெருமையால் விளக்குகிறார். காவிரி நதி பாய்கின்ற சோழ நாட்டைப் போன்ற 'கோசலநாடு' என்று நதியின் மூலமாய் நாட்டின் பெருமை விளக்கப்படுகிறது. நாட்டின் பெருமையை விளக்குவதற்கு எடுத்துக்காட்டாக நிற்பது காவிரியே. நதி என்றாலே காவிரி நதியைத் தான் குறிக்கும். அது அத்தகைய சிறப்பு வாய்ந்தது என்பதைக் கம்பராமாயணம் விளக்குகிறது.

அகத்தியப்படலத்தில்-

''கன்னியிள வாழைகனி யீவகதிர்வாலின்
செந்நெலுள தேனொழுகு போதுமுளதெய்வம்
பொன்னியென லாயபுனலாறு முளபோதா
அன்னமுள பொன்னிவளொடன்
பின்விளையாட.''

என்று கூறுமிடத்து, தாய்நாட்டுப் பற்றுடைய கம்பர் புண்ணியத்தன்மை பொருந்திய காவிரி நதியைத் 'தெய்வப் பொன்னி' எனக் குறித்துள்ளமையால் காவிரியின் ஏற்றம் புலனாகும்.

கம்பர் அகத்தியப் படலத்தில் அகத்திய முனிவனது சிறப்புகளைப் பற்றிக் கூறுமிடத்து,

''எண்டிசையும் ஏழுலகும் எவ்வுயிர்க்கும் உய்யக்
குண்டிகையினில் பொருஇல் காவிரி கொணர்ந்தான்.''

என்று புகழ்கின்றார். இதன்மூலம் காவிரியானது எட்டுத் திக்குகளும், ஏழுலகங்களும், அவற்றிலுள்ள எல்லா உயிர்களும் நற்கதி அடையும்படி ஒப்புயர்வற்றுத் தவழ்ந்து செல்கின்றது என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

பெரிய புராணத்தில், காவிரி நதியைப் பூமகளின் மார்பில் திகழும் முத்துமாலையாகச் சேக்கிழார் வர்ணிக்கிறார்.

''ஆதி மாதவமுனி யகத்தியன்தரு
பூதநீர்க்கமண்டலம் பொழிந்த காவிரி
மாதர் மண்மடந்தை பொன்
மார்பிற் றாழ்ந்ததோர்
ஓதநீர் நித்திலத்தாம மொக்குமால்.''

திங்கள் சூடியமுடிச் சிகரத்துச்சியிற்
பொங்கு வெண்டலை நுரைபொருது போதலால்
எங்கணாயகன் முடிமிசை நின்றேயிழி
கங்கையாம் பொன்னியாங் கன்னிநீத்தமே.

மாவிரைத் தெழுந்தார்ப்ப வரைதரு
பூவிருத்த புதுமதுப் பொங்கிட
வாவியிற் பொலிநாடு வளந்தரக்
காவிரிப்புனல் கால்புரந் தோங்குமால்.

இப்படி, சேக்கிழார் புகழ்வதுபோல் போட்டி போட்டுக் கொண்டு, சமய நூல்கள் பலவும் காவிரியின் புகழ்பாடுகின்றன.

''காவிரி வந்தடி வருடநல் செந்நெலார் வளவயல்
தென்குடித்திட்டை''
''பூசநீர் பொழியும் புனற் பொன்னி''

''கங்கைக்கு ஏயும் பொன்னி''
''கடல் போல் காவிரி''

- என்பன தேவார அடிகளாகும். மேலும் தேவாரத்தில்,

காவிரி என்றும் நீர் வற்றாது. அழகு மிக்கது. நீண்டது; ஒலிக்கும் வெள்ளம் உடையது; கரைகளில் மலர்ப் பொழில் நிறைந்தது. இது 'பழங்காவிரி என்றும் சொல்லப்படுகிறது.

'வரைநின் றிழிவார்தரு பொன்னி'
'பொழில் மல்கு பொன்னி'
'பாய சீர்ப்பழங் காவிரி
'ஆரியாவரு காவிரி மாறாநீர்...காவிரி'

என்பன போன்ற அடிகள் காணப்படுகின்றன.

காவிரி வெள்ளத்தில் அடித்துக்கொண்டு வரும் பொருள்களையும், காவிரி வர்ணணையையும், அதன் வடகரையிலுள்ள 'திருமாந்துறை' என்னும் தலத்துக்கு உரிய பதிகத்தில் திருஞானசம்பந்தர் பாடல்தோறும் சொல்லியுள்ளார். அவை வருமாறு:

அகில், சந்தனம், பெருமரம், பூகக்குலை, இலவம், ஈஞ்சு, மருதம், கழை, வேங்கை, இலவங்கம், கோங்கு, திமில், தேக்கு, ஞாழல், சண்பகம், குருத்து, செருந்தி, பாதிரி, குரா, மல்லிகை, முல்லை, மௌவல் மாதவி, சுரபுன்னை, முதலிய மலர்கள், இஞ்சி, இலை, ஈஞ்சு, ஏலம், மிளகு, மஞ்சள், காட்டுப் பொருள்கள், மலைப் பொருள்கள், பொன், வயிரத்திரள்கள், மாணிக்கம், முத்து, நீலமணி, மூங்கில் மணி முதலிய மணிகள்; சாதிப்பழம், மாம்பழம், வாழைப்பழம் முதலிய பழ



வகைகள். விளைவின் தேன் முதலிய தேன் வகைகள், மயிற்பீலி, யானை மருப்பு முதலியவை.

இவ்வாறு, பண்டைய இலக்கியங்களிலிருந்து இன்றைய நூற்கள்வரை காவிரியைப் பற்றிய ஏராளமான செய்திகளை நாம் அறிந்து கொள்கிறோம். அந்த விவரங்களைத் தொகுத்து எழுதின் ஒரு பெரும் நூலாகவே அமையும்.

தமிழ்மக்களின் வாழ்வோடு ஒன்றியதாக உயர்ந்து விளங்கிய ஆறு - வான் பொய்ப்பினும் தான் பொய்யாது என்று போற்றிச் சிறப்பிக்கப்பட்ட ஆறு இன்று வறண்டு கிடக்கும் மாறான நிலை-

''அந்நாள் சிறப்பு எந்நாள் வருமோ?'' என்ற ஏக்கத்தை உருவாக்குகிறது. தொன்றுதொட்டு இருந்து வந்த ஆறு மாறியநிலை இடையில் வந்த தீய கனவாக மாறட்டும்! இலக்கியப் பெருமை என்றும் நிலைக்கட்டும்!

# இலக்கியத்தில் காவிரி



**கா**விரி ஆற்றுக்கும் தமிழ்நாட்டுக்கும் உள்ள உறவும் தொடர்பும் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உருவானவை. இன்று நேற்றுத் தோன்றியதல்ல. நமது சங்க இலக்கியங்கள் இதனை மிகத் தெளிவாக எடுத்துரைக்கின்றன. காவிரியைப் பற்றிய செய்திகளை நமக்குச் சொல்லும் நூல்கள்:

சிலப்பதிகாரம்
மணிமேகலை
பட்டினப்பாலை
புறநானூறு
பத்துப்பாட்டு
திவாகரம்
பாரதம்
கம்பராமாயணம்
பெரியபுராணம்
தேவாரம்
திருவாய்மொழி

என்று நூல்களின் பட்டியலை விவரித்துக் கொண்டே போகலாம்.

ஔவையார், ஒட்டக்கூத்தர், புகழேந்தி, சொக்கநாதப் புலவர், காளமேகம் என்று புலவர்களின் பட்டியலை நீட்டித்துக் கொண்டே செல்லலாம். இந்த நூற்றாண்டைச் சேர்ந்த கவிஞர் பெருமக்களில் பொன்னியைப் பாடாத புலவர்கள் யாருமில்லை -

'வசையில் புகழ்வயங்கு வெண்மீன்
திசைதிரிந்து தெற்கேகினும்
தற்பாடிய தளியுணவின்
புட்டேம்பப் புயன்மாறி
வான் பொய்ப்பினும் தான்பொய்யா
மலைத்தலைஇய கடற் காவிரி'

- என்று பட்டினப்பாலையில் கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடினார்.

வெள்ளி எனப்படும் விண்மீன் தான் செல்லுதற்குரிய திசையாகிய வடக்கே செல்லாது தெற்கு நோக்கிச் சென்றாலும்-

மழைத் துளியை உணவாகக் கொள்ளும் வானம்பாடிப் பறவைக்கு மழைத் துளி கிடைக்காது மேகம் பொய்த்தாலும்—

குடகுமலை பிறந்து கடலில் விழும் காவிரி பொய்ப்பதில்லை என்பது அந்தப் புலவர் பெருமகனின் வாக்கு.

''கோள்நிலை திரிந்து
கோடை நீடினும்
தான்நிலை திரியாத்
தண்டமிழ்ப் பாவை'' - என்று

சீத்தலைச் சாத்தனார் மணிமேகலையில் பாடியுள்ளார்.

பத்துப்பாட்டில் ஒன்றான பொருநராற்றுப் படையில் காவிரி ஆற்றினால் சோழநாடு நெற்களஞ்சியமாகத் திகழ்வது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அது வருமாறு:

மாமேலன்







மேதகு ஆளுநர் திரு.பீஷ்ம நாராயண்சிங் அவர்கள் சென்னை-இலண்டன் இடையில் நிற்காமல் செல்லும் நேரடி விமான சேவையைச் சென்னை அண்ணா பன்னாட்டு விமான நிலையத்தில் தொடங்கி வைத்தார் (2.4.91).

# படமும் செய்தியும்

மேதகு ஆளுநர் திரு.பீஷ்ம நாராயண்சிங் அவர்கள் நாமக்கல்லில் கால்நடை மருத்துவக் கல்லூரியின் புதிய கட்டடத்தைத்திறந்து வைத்தார் (25.3.91).







மேதகு ஆளுநர் திரு.பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் சேலம் எஃகுத் தொழிற்சாலையில்இரண்டாவது குளிர் உருட்டாலைப் பிரிவைத் தொடங்கி வைத்தார். மாண்புமிகு மத்திய எஃகு மற்றும் சுரங்கத் துறை அமைச்சர் திரு.அசோக் சென் உடன் உள்ளார் (26.3.91).



மேதகு ஆளுநரின் ஆலோசகர் திரு.வி.இராமச்சந்திரன் அவர்கள் சென்னையில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் புதிய விரைவுப் பேருந்து நிலையத்தைத் திறந்து வைத்தார் (3.4.91).

சென்னை வாசவி நகர் குடிசை வாழ் மக்களுக்கான குடும்ப நலம், பொதுச் சுகாதாரம், மரம் வளர்ப்பு பற்றி நடைபெற்ற கருத்தரங்கில் தலைமைச் செயலர் திரு.டி.வி.அந்தோணி இ.ஆ.ப., அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார் (25.3.91).



கம்பீரம் என்பதற்கு ஆழம் என்று பொருள். கவிதைகளின் பொருள் ஆழம் அவனது அக ஆழத்தைப் புலப்படுத்தி அவனையும் மிடுக்கு மிக்கவனாக ஆக்குகிறது.

"எங்கும் விவசாயச்
சங்கம் அமைத்ததில்
அங்கம் வகித்திடுவோம் - இந்தத்
தங்க முயற்சிக்குப் பங்கம் விளைத்திடும்
தன்மையை வெட்டி மிதித்திடுவோம்!"

"இந்தியா கிராமங்களில் வாழ்கிறது" என்று காந்தியடிகள் வெகு காலத்துக்கு முன்பே கூறினார். இன்றும் அது இந்தியாவின் ஏழரை இலட்சம் கிராமத்துக் குடிசைகளில் தான் வாழ்கிறது!

பட்டுக்கோட்டைக் கவிஞன் கல்யாணசுந்தரம் கிராமத்திலிருந்து வந்தவன். இன்னும் சொல்லப் போனால், ஒரு பட்டிக்காட்டிலிருந்து கவிதை உலகுக்கு வந்து கொடிகட்டிப் பறந்தவன்.

காயமும் வலியும் மிக்க வாழ்க்கை.

பட்டறிவிலிருந்து அவன் புரிந்து கொண்ட ஓர் உண்மை பாட்டாக ஒலிக்கிறது.

"வசதி படைத்தவன் தரமாட்டான் - அவனை வயிறு பசித்தவன் விடமாட்டான்!"

நடைமுறை வழி ப்பட்ட உண்மை.காலம் செல்லும் திசை வழியைக் கண்டு கொண்ட துடிப்பு, கவிதைக் கான ஆடை அலங்காரங்களுடன் எத்தனை எளிமை யாக வந்து நம் நெஞ்சில் கொலுவிருக்கிறது!

பட்டுக்கோட்டைக் கவிஞனின் மற்றொரு சிறப்பு, கிராமத்துக் கவிதைகளையும் பாடல்களையும் செழுமை செய்து உயர்மட்டத்துக்குத் தூக்கி நிறுத்திய தாகும். அவற்றை அந்தக் கவிஞன் வலுமிக்க தாக்கினான். அதை இன்று சிலர் கொச்சைப்படுத்தி அசிங்கமாக்கிவிட்டார்கள்.

இவன் காதலைப் பாடுவதே தனி அழகு. கற்பனை வளமும் சந்தக் கட்டும் இவனுக்கு எங்கிருந்துதான் வந்ததோ தெரியவில்லை. இதைத் தான் வரப்பிரசாதம் என்று சொல்லுகிறார்கள்.

"ஆடைகட்டி வந்த நிலவோ - நெஞ்சில்
கூடுகட்டி வாழ்ந்த குயிலோ!"

பாட்டிலே நிலவு ஆடைகட்டி ஆடுகிறது. இவன் நெஞ்சிலே குயில் கூடுகட்டி வாழ்கிறது!

ஒரு கவிஞன் தான் வாழ்ந்த காலத்தில் சமுதாயத்தைப் பற்றி எத்தகைய பார்வை கொண்டிருந்தான். அவன் வாழ்ந்த காலம் எத் தகையது, அவன் தன் மக்களை எங்கு இட்டுச் செல்ல முயன்றான், கவிநயம், கற்பனை ஆற்றல் எத்தகையது என்பதெல்லாமே அவனது சிறப்புக் கூறுகளாகக் கணக்கில் எடுத்துக் கொள்ளப் படுவனவாகும்.

திமிரி எழுந்து கொண்டிருந்த பாட்டாளி வர்க்கத்தின் வழித்தோன்றலாக வந்த

டாக்டர் அம்பேத்கர் அரசு
ஆதிதிராவிடர் நல
மேல்நிலைப்பள்ளி

டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டை முன்னிட்டு, திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் நல்லம்மாள் புரத்தில் ஆதிதிராவிடர் நலத் துறை கட்டுப்பாட்டின் கீழ் இயங்கிவரும் ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளிக்கு, "டாக்டர் அம்பேத்கர் அரசு ஆதிதிராவிடர் நல மேல் நிலைப்பள்ளி" என பெயர் மாற்றி அமைக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

கவிஞனாகையால் அளவற்ற துணிச்சலும், அசைக்க முடியாத நம்பிக்கையும் கவிதை களாக வெளிப்பட்டன.

"முன்பட்ட பாக்கி
முதலுக்கும் வட்டிக்கும்
முற்றும் சுரண்டிக் கொண்டு-அங்கு

தென்பட்ட ஏழைகள்
புண்பட்ட நெஞ்சினில்
தீ மூட்டும் கொள்கைகளை

கண் கெட்டுப் போனதோ
இன்னும் சகிப்பதேன்
துன்புற்ற தோழர்களே!"

பஞ்சம், நோய்க்கு அஞ்சாமல் பட்டினிக்கும் அஞ்சாமல், மின்வெட்டுப் போலத் துள்ளி வருமாறு அழைக்கிறான்!



மனத்தில் மாசு, மதவெறி, சாதி ஆணவம், சுயநலம் இவற்றை மக்கள் விட்டொழிக்க வேண்டும்; அப்போது தான் நம்நாடு முன்னேறும்.

— அறிஞர் அண்ணா

உழவர் குலத்துப் பாட்டாளி மக்களின் துன்பத் துயரம் இன்று நேற்றுத் தோன்றியதல்ல; ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக அது நீடித்து வருகிறது!

தமிழ் மறை தந்த வள்ளுவன் உழவுக்கென்று ஓர் அதிகாரத்தையே ஒதுக்கிவிட்டான்.

பட்டுக்கோட்டைப் பாவலனும் அந்த வழியே வந்தவன்தான்.

காலமும் கருத்தும்தான் மாற்றமடைந்துள்ளன, பிரச்சினை ஒன்றுதான். தீர்வுதான் வித்தியாசப் படுகிறது.

பட்டுக்கோட்டைப் பாவலன் நவீன யுகத்தின் உதய காலத்தில் வாழ்ந்தவன்.

கவிஞனாகவே திரையுலகுக்குள் நுழைந்தவன்.

வாய்ப்பாக-வசமாக அவன் கையில் சினிமா மாட்டிக் கொண்டது.

பேராற்றல் வாய்ந்த வெகுஜனத் தொடர்புச் சாதனம் அன்றாடம் இலட்சோப இலட்சம் மக் களுடன் பேசுகிற சக்தி அதற்கு உண்டு.

பட்டுக்கோட்டையின் பாடல்கள் குண்டும் குழியுமான பழைய தடத்தில் 'லொங்கு லொங்கு' என்று போகாமல் புதியதொரு நெடுஞ்சாலையில் திடுதிடுவென ஆரவாரத்துடன் புறப்பட்டன. உணர்ச்சி மயமான எளிய அழகுமிக்க அந்தப் பாடல்களை மக்களின் செவிகுளிர மண் மனம் நெகிழத் தந்தது சினிமா. ஆனால், சினிமா தயாரிப்பாளர்கள் அனைவருமே கவிஞனின் கருத்துக்கு இசைவானவர்களாக இருந்தார்கள் என்று கருதுவது அடியோடு தப்பு. பட்டுக்கோட்டை யின் பாடல்களுக்குக் கிடைத்த அமோக வரவேற்பு



- சமுதாய அடக்குமுறையோடு ஒப்பிடுகையில், அரசியல் அடக்குமுறை என்பது ஒன்றுமில்லை; எனவே, சமுதாயத்தை எதிர்த்துப் போராடும் சீர்திருத்தவாதி, அரசியல்வாதியைக் காட்டிலும் துணிச்சல் மிக்கவன் ஆவான்.
- உளப்பூர்வமாகவும், அறிவுபூர்வமாகவும் இல்லாமல் மக்கள் செயல்படுகின்ற அமைப்பில் எந்தவிதமான திறமை இருக்க முடியும்?

"தீண்டாமை, மதத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டதல்ல; பொரு ளாதாரத்தையும் அடிப்படையாகக் கொண்டது. இது அடிமைத்தனத்தைக் காட்டிலும் மிகவும் மோசமானது."

டாக்டர் அம்பேத்கர்

பட அதிபர்களை அசரவைத்து, அவருக்குத் தாம் பூலம் ஏந்தி அழைக்கச் செய்துவிட்டது!

பட்டுக்கோட்டை இந்த அரிய வாய்ப்பை அருமையாகப் பயன்படுத்திக் கொண்டான். தன் மனதின் அடியாழத்தில் கனன்று கொண்டிருக்கும் ஆவேசத்தை அஞ்சாமல் அசராமல் பாடல்களாக்கி, திரை உலகை ஒரு கலக்குக் கலக்கி விட்டான். சினிமாவில் காதல் பாட்டுகளை இயற்றும் போதும் அவன் தமது கொள்கையை இடமறிந்து நயம் கலந்து புகுத்தினான்.

"காடு வெளஞ்சென்ன மச்சான் - நமக்கு
கையும் காலுந்தானே மிச்சம்"

-என்று கேட்கும் பெண்ணுக்கு

"காடு விளையட்டும் பொண்ணே - நமக்கு
கால மிருக்குது பின்னே!"

என்று கதாநாயகன் மூலம் பொருளாழத்துடன் அவனால் பதில் சொல்ல முடிந்தது.

விவசாய இயக்கத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த கவிஞன், 1956-இல் திண்டுக் கல்லில் நடைபெற்ற விவசாய மாநாட்டிலும் கலந்து கொண்டான்.

பட அதிபர் ஸ்ரீராமுலு நாயுடு தலைமையில் கோவையில் பட்டுக்கோட்டை, கண்ணப்பா, டி.கே. பாலச்சந்தர் ஆகியோருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில் கவிஞன் அழகாக, சுருக்கமாக உரை யாற்றினான். பிறகு கவிஞன் கோவைக்கு வர வில்லை. அதுவே கடைசி!

திரையுலகில் பாட்டாளி மக்களின் ஆசைகளை யும் ஆவேசத்தையும் அந்தரங்க சுத்தியுடன் பாடல் களாக இசைத்த கவிஞன் கல்யாண சுந்தரம். கால்வலிக்கத் தேடிய பணம் தன் காலடி யில் வந்து விழுந்த காலத்திலும் தன் னுடைய கொள்கையை நழுவவிடவில்லை.

புயலைப் போல சீறிக் கொண்டு வெள்ளித் திரையில் பாய்ந்தான்!

புயலைப் போலவே சீக்கிரத்தில் அடங்கியும் போனான்!

ஆனாலும் அவனது பாடல்கள் என்றைக்கும் அவன் பெருமையைச் சொல்லிக் கொண்டே இருக்கும். இதை யாராலும் மறுக்க முடியாது.

## சிறுசேமிப்புத் துறை




எதிர்பாரா இன்னல்கள் ஏற்படும்முன் சேமியுங்கள். வரி செலுத்துவதைத் தட்டமிட்டு, இன்ஷூரன்ஸ் பாதுகாப்பும் பெறுங்கள். இன்றே கீழ்க்கண்ட சிறுசேமிப்புத் திட்டத்தில் ரூ.1,000/-ம் அதற்குமேலும் முதலீடு செய்து தனிநபர் விபத்து இன்ஷூரன்ஸ் பாலிசியைப் பெறுங்கள்.

**கீழ்க்கண்ட திட்டங்களின்கீழ் தனிநபர் விபத்து இன்ஷூரன்ஸ் பாதுகாப்பு கிடைக்கும்:**

- கிசான் விகாஸ் பத்திரம்
- தேசிய சேமிப்புத் திட்டம்
- அஞ்சலக மாதாந்திர வருமானத்திட்டம்
- அரசுப்பணியாளர்களுக்கான டெபாசிட் திட்டம் 1989
- தேசிய சேமிப்புப்பத்திரம் 8வது வெளியீடு
- 15 வருட பொது சேமநலநிதி
- அஞ்சலக குறித்தகால டெபாசிட்

**வருமான வரி விலக்குப் பெற தேசிய சேமிப்பில் முதலீடு செய்வீர்**

| வசதிகள் | தேசிய சேமிப்பு பத்திரம் 8-வது வெளியீடு | பொதுசேம நலநிதி | தேசிய சேமிப்பு திட்டம் |
|---|---|---|---|
| வட்டி | 12% | 12% | 11% |
| முதலீட்டுக்கு வருமான வரிவிலக்கு | ரூ.50,000 பிரிவு 88-ன்கீழ் | ரூ.50,000 பிரிவு 88-ன்கீழ் | ரூ.40,000 பிரிவு 80 CCA-ன் கீழ் |
| வட்டிக்கு வருமான வரிவிலக்கு | வருமான வரிச் சட்டம் பிரிவு 88-ன்கீழ் | வருமான வரியில் இருந்து வட்டிக்கு முழுவிலக்கு | வட்டி தொகை சேரும்போது வருமான வரி விலக்கு |
| செல்வ வரி | ரூ.5,00,000 வரை விலக்கு | முழுவிலக்கு | முழுவிலக்கு |
| டெபாசிட்டுகளுக்கான வரம்பு | வரம்பு கிடையாது | ரூ.60,000 | ரூ.40,000 |

**அரசின் ... சலுகைகள்:**

- ஒவ்வொரு ரூ.500/- முதலீட்டிற்கும் ஒரு இலவச பரிசு கூப்பன் மூலம் 262 பரிசுகளில் ஒன்றைப் பெறும் வாய்ப்பு.
- தமிழ்நாட்டில் குறிப்பிட்ட சில திட்டத்தில் முதலீடு செய்யும் ஒவ்வொரு ரூ.1,000/- முதலீட்டிற்கும் 1% வரை ஊக்கத்தொகை.
- 1.1.91 முதல் 31.3.91 வரை தமிழ்நாட்டில் குறிப்பிட்ட திட்டங்களில் முதலீடு செய்யும் ஒவ்வொரு ரூ. 1000/- முதலீட்டிற்கும் தனிநபர் விபத்து இன்ஷூரன்ஸ் வசதி. பிரீமியத்தை தமிழக அரசே செலுத்துகிறது.

DIPR/189 AAS/91/ARIES

**இலவச தனிநபர் விபத்து காப்புறுதி திட்டம் — அதிகபட்ச நஷ்ட ஈடு ரூ. 50,000/-**




கூடுதல் சலுகைகள்:

- இந்திய அரசின் முழுப்பாதுகாப்பு
- சொத்து வரிவிலக்கு
- உங்கள் குழந்தைகள் பெயரில் முதலீடு செய்து வருமான வரிவிலக்கு பெறுங்கள்.

யுனைடெட் இந்தியா இன்ஷூரன்ஸ் நிறுவனம், சென்னை.
தனிநபர் விபத்து இன்ஷூரன்ஸ் பாலிசி கிடைக்குமிடம்:
அனைத்து மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் மற்றும்

இயக்குநர்
சிறுசேமிப்புத்துறை
143, அண்ணாசாலை, சென்னை-600 002.
தொலைபேசி: 840223/846209.






# புயல்போல் புகுந்த புலவன் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

- கே.சி.எஸ். அருணாசலம்.

கவிதை என்பது மனித உணர்ச்சிகளின் வெளிப்பாடு. கற்பனைவளம், சொல்வளம் தெளிவு, சந்தம், உணர்ச்சி, இலக்கு இப்படிப்பட்ட அலங்காரங்கள் அதற்கு உண்டு.

இலக்கிய உலகின் தலைசிறந்த அறிஞர்கள் இந்தக் கருத்தை ஆங்காங்கே வலியுறுத்தியிருக்கிறார்கள். கற்றவர்கள் இலக்கணப் பிழை இல்லாமல் செய்யுள் எழுதிவிடலாம். ஆனால் அவையெல்லாம் கவிதையாகிவிடாது. "கவிதை என்பது கவிஞனின் உணர்ச்சியுடன் தொடர்புடையது" என்று திரு கி.வா.ஜ. அவர்கள் சற்று அழுத்தமாகவே குறிப்பிடுவார்.

"Poetry is the expression of Human Feelings" என்று ஓர் ஆங்கில அறிஞனும் கூறுவான். எனவே, உணர்ச்சி வசப்பட்டு மக்களின் ஆத்திர ஆவேசங்களையோ, இன்ப துன்பங்களையோ கவிதையின் வாயிலாக வெளிப்படுத்த முயலும் கவிஞனிடம் "நீ இந்த மாதிரியான கவிதைதான் எழுதவேண்டும், இந்தப் பொருளைத்தான் பாடவேண்டும் என்று எந்தக் கொம்பனும் கட்டளையிட முடியாது, அந்தக்கட்டளை செல்லுபடி ஆகாது! "காதம் இருபத்து நான்கொழியக் காசினியை ஓதக் கடல்கொண் டொழித்ததோ?" என்ற வரிகளைச் சான்றாகக் காட்டலாம்.

கவிஞன் உணர்ச்சி வசப்பட்டவனாக மட்டும் இருந்தால் போதாது. அவன் காலத்தை எதிரொலிப்பவனாகவும் இருக்க வேண்டும். சில சமயங்களில் தன்து காலத்திலிருந்து பல ஆண்டுக்காலம் முன்னோக்கிப் பாய்ந்து விடுபவனாகவும் காட்சியளிக்கிறான்.

கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பிறந்த நாள் (13.4.1930) நினைவாக இந்தக் கட்டுரை வெளியிடப்படுகிறது.

எண்பது ஆண்டுகளுக்கு முன்னே இயற்கை எய்திய பாரதியாரும், அவரது அன்புக்குரிய பாவேந்தர் பாரதிதாசனும் இன்னும் ஒரு நூற்றாண்டுக்காலம் நமது நாடு பயணம் செய்ய வேண்டிய திசை வழிகள் குறித்தும் ஆற்ற வேண்டிய சமுதாய, பொருளாதார, பண்பாட்டுக் கடமைகள் குறித்தும் நெஞ்சில் நிலைத்த கவிதைகள் தந்து சென்றிருப்பது நமக்குத் தெரியும்.

அவர்களது காலடிச் சுவட்டில் உதயமானவன் தான் கவிஞன் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.

தஞ்சை மாவட்ட மண்ணில் பிறந்த கவிஞன். தமிழகத்தின் நெற்களஞ்சியமான தஞ்சை மாவட்ட மண்ணில் சோற்றுக்கும் துணிக்கும் அல்லாடி, அல்லோலப்பட்ட வாழ்க்கை, சாண் வயிறு கழுவ, அவன் பண்ணாத தொழில் இல்லை. அலையாத இடமில்லை.

உழவர் குடும்பம். இசையீடுபாடு மிக்க குடும்பம்.

பட்டுக்கோட்டைக் கவிஞன் வாழ்ந்த காலம் - தஞ்சை மாவட்டத்தில் விவசாய உழைப்பாளர்களின் பேரியக்கம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகச் செழித்து வளர்ந்த காலம்!

விவசாயச் சங்கம் அமைக்க மக்கள் பட்ட பாடு, கிடைத்த நன்மை, உதித்த வெளிச்சம் எல்லாமே கவிஞனது உள்ளத்தில் அலைபாய்ந்து அவனது சத்திய ஆவேசத்தைத் தூண்டிக் கிளர்த்தி விடுகின்றன.

அந்த ஆவேச உணர்ச்சி கம்பீரமான கவிதைகளாக - பாடல்களாக வெளிப்படுகின்றது.

# மாநிலக் கல்லூரியின் வயது-150

**1840**-ஆம் ஆண்டு துவங்கி, இன்று வானுயர வளர்ந்து கல்வித் துறையில் இமாலயச் சாதனைகள் பல புரிந்த சென்னை மாநிலக் கல்லூரி தனது 150-வது ஆண்டு விழாவினை மிகச் சிறப்பான முறையில் கொண்டாடியது. சென்னைப் பல்கலைக் கழகத்தின் தாயாக விளங்கும் சென்னை மாநிலக் கல்லூரியின் வரலாறு அனைவரையும் வியப்பில் ஆழ்த்தும்.

இந்தியாவின் பழமையான கல்வி நிறுவனங்களில் ஒன்றாக விளங்கும் இக்கல்லூரி, 1840-ஆம் ஆண்டு எல்பின்ஸ்டன் பிரபு என்பவரால் அக்டோபர்த் திங்கள் 15-ஆம் நாள் எழும்பூரில் உள்ள எடின்பார்க் இல்லம் என்ற இடத்தில் தொடக்கப் பள்ளியாக நிறுவப்பட்டது.

1841-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 4-ஆம் நாள் 'டி மாண்டேகு' இல்லம் (தற்போது எழும்பூர் பாந்தியன் சாலையில் உள்ள மாநில நீதி மன்றம்) என்ற இடத்தில் சென்னைப் பல்கலைக்கழகத்தின் உயர்நிலைப்பள்ளியாக வளர்ந்தது. 1855-ஆம் ஆண்டு புதிதாக உருவாக்கப்பட்ட பொதுக் கல்வித் துறையின்கீழ் மாற்றப்பட்டு தற்பொழுது வழங்கும் மாநிலக் கல்லூரி என்ற பெயரும் பெற்றது.

1867-இல் சென்னை மாநில ஆளுநர் நேப்பியர் பிரபு அக்டோபர் திங்களில் அடிக்கல் நாட்ட, 1870-இல் எடின்பரோ கோமகன் மார்ச் திங்கள் 25-ஆம் நாள் இக்கல்லூரியின் திறப்பு விழாவை நடத்தினார். 1911-இல் ஹானர்ஸ் வகுப்புகளும் எம்.ஏ. பட்ட வகுப்புகளும் ஆரம்பிக்கப்பட்டன. ஹானர்ஸ் மற்றும் எம்.ஏ. பட்டப் படிப்புகளைக் கலைப் பிரிவில் அனைத்துப் பாடங்களிலும் கற்பிக்க ஏற்றுக்கொண்ட முதல் கல்லூரி மாநிலக் கல்லூரியே.

இக்கல்லூரியின் நூற்றாண்டு விழா சென்னை ஆளுநர் எர்ஸ்கின் பிரபுவால் 3.2.1940 அன்று தொடங்கப்பட்டது. நூற்றாண்டு நினைவு மணிக்கூண்டு கட்டப்பட்டது. கல்வித் துறையில் தொன்மைச் சிறப்புக் கொண்ட இக்கல்லூரி 1987-88-ஆம் ஆண்டில் தன்னாட்சிக் கல்லூரியாக மலர்ந்தது.

இக்கல்லூரியில் பயின்ற முன்னாள் மாணவர்கள் பலர் வெவ்வேறு துறைகளில் புகழ்மிகப் பணைந்து இந்தியப் பெருநாட்டிற்கே பெருமை சேர்த்துள்ளார்கள். அவர்களுள் நோபல் பரிசு பெற்ற சர். சி.வி.ராமன், டாக்டர் எஸ்.சந்திரசேகர், இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணன், ஜெனரல் கரியப்பா, வி.கே.கிருஷ்ணமேனன், மகாமகோபாத்தியாயா டாக்டர் உ.வே. சாமிநாத அய்யர், சி.சுப்பிரமணியம், நெ.து.சுந்தரவடிவேலு, எம்.பக்தவத்சலம், ஜெரோம் டி.டிசோஸா, அண்ணா ஜார்ஜ், ப.சிதம்பரம், என்.ராம் ஆகியோர் குறிப்பிடத்தக்க சிலர்.

இத்தகைய புகழ் வாய்ந்த மாநிலக் கல்லூரியின் 150-ஆம் ஆண்டு தொடக்க விழா 5.4.91 அன்று மாநிலக் கல்லூரி வளாகத்தில் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. மேதகு ஆளுநர் திரு.பீஷ்ம நாராயண் சிங் அவர்கள், 150-ஆம் ஆண்டு நினைவுக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டினார். மாநிலக் கல்லூரியின் நிர்வாகக் குழுவின் தலைவர் டாக்டர் பி.திருஞான சம்பந்தம் வரவேற்புரையாற்றினார். முன்னாள் கல்லூரி முதல்வர்கள் சிறப்பிக்கப் பட்டார்கள். ஆளுநரின் ஆலோசகர்கள் திரு. வி.கார்த்திகேயன், திரு. வி.ராமச்சந்திரன் ஆகியோர் உரையாற்றினர்.

—நமது செய்தியாளர்



தமிழரசு

1-5-1991 இதழ்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

நூற்றாண்டு விழா நினைவுச் சிறப்பிதழாக வெளிவருகிறது!

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்ப
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள் வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

## இராமநாதபுரம் மாவட்டத்தில்



# வளர்ச்சிப் பணிகள்

இராமநாதபுரம் மாவட்டம் வறட்சி மிகுந்த மாவட்டம். இந்த மாவட்டத்தின் பெரும் பரப்பளவு கடற்கரையோரப் பகுதியாக உள்ளது. இந்த மாவட்டத்தில் அரசு பல்வேறு வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றி வருகிறது.

**ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் பணிகள்**

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1990-91-ஆம் ஆண்டுக்கு ரூ.699.96 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் ஆயிரம் தொகுப்பு வீடுகள், 70 ஊராட்சி மன்றக் கட்டடங்கள், 39 பள்ளிக் கட்டடங்கள், 108 சாலை வேலைகள், 502 ஊராட்சி வேலைகள் எடுக்கப்பட்டு, அனைத்துப் பணிகளும் முடியும் தருவாயில் உள்ளன. மேலும் தொகுப்பு வீடுகள் கட்டும் பணியில் கூடுதலாக 1991 ஜனவரியில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 300 வீடுகளும் ஆரம்பிக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், இராமநாதபுரம் மாவட்டத்தில் சிறுபாசனக் கண்மாய்கள் மேம்படுத்தும் பொருட்டு ரூ.175 இலட்சம் அரசு ஒதுக்கியுள்ளது. இந்தப் பணியில் பொதுப்பணித்துறை மூலம் 197 வேலைகள் ரூ.175 இலட்சம் மதிப்பீட்டிலும், ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் 325 வேலைகள் ரூபாய் 100 இலட்சம் மதிப்பீட்டிலும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. சிறுசேமிப்பின் சாதனை மூலம் பெறப்பட்ட ஊக்கத் தொகை ரூ.6.75 இலட்சம் நிதியில் பள்ளிக் கட்டடம் பழுதுபார்த்தல், கைப்பம்புகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ரூ.143.773 இலட்சம் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள 4,570 பேர் பயன்பெறும் வகையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை 4,158 பயனாளிகளுக்குக் கடன் வழங்கப்பட்டு ரூ.100.84 இலட்சம் மானியமும் வழங்கப்பட்டுள்ளது.

வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தில் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ரூ.105.81 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 240 எக்டேர் புதிய மணற்பரப்பில் சாகுபடி செய்ய மா, கொய்யா, சப்போட்டா, எலுமிச்சை, முந்திரி, மல்லிகை போன்ற செடிகள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மேலும் 215 எக்டேர் பரப்பில் சமூக நலக்காடுகள் அமைக்கப்பட்டுள்ளது.

**வேளாண்மை வளர்ச்சிப் பணிகள்**

இந்த மாவட்டத்தில் வடகிழக்குப் பருவமழை நடப்பாண்டில் காலத்தே, சீராகப் போதிய அளவு பெய்ததால் வேளாண்மைப் பணிகள் நல்ல முறையில் மேற்கொள்ளப்பட்டது.

இந்த மாவட்டத்தில் இயல்பான மழை அளவு 819.1 மில்லி மீட்டர் ஆகும். ஆனால் சென்ற ஆண்டில் 880.1 மில்லி மீட்டர் மழை பெய்தது. இதனால் நடப்பாண்டில் நெல் சாகுபடி மிக அதிக அளவில் 20,404 எக்டேர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டது. இதுவரை நெல் அறுவடை 1,28,178 எக்டேரில் முடிவடைந்தது. இந்த மாவட்டத்தின் இயல்பான அரிசி உற்பத்தி திறன் 1,047 கிலோ ஆகும். நடப்பாண்டில் வேளாண்மை விரிவாக்கப் பணியினைத் திறம்பட மேற்கொண்டதாலும் வடகிழக்குப் பருவமழை நன்கு பெய்ததாலும், இதுவரை அறுவடையான பரப்பில் சராசரியாக 1,670 கிலோ அரிசி உற்பத்தி எக்டேர் ஒன்றுக்குக் கிடைத்துள்ளது. இது இயல்பான உற்பத்தித் திறனைவிட எக்டேருக்கு 623 கிலோ அதிகமாகும். இது ஒரு சாதனை அளவாகும். இம்மாவட்டத்தின் அரிசி உற்பத்தி இலக்கு 80 ஆயிரம் எக்டேர் மெட்ரிக் டன் ஆகும். நடப்பாண்டில் சாதனை அளவாக 2 இலட்சத்து 52 ஆயிரத்து 500 மெட்ரிக் டன் அரிசி உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**மினிக்கிட் திட்டம்**

நடப்பாண்டில், விவசாயிகளுக்கு ரூ.1,12,500 செலவில் 4 கிலோ நெல் மினிக்கிட்டுகள் 4,683 எண்கள் வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகள் தங்கள் நிலங்களில் உயர் விளைச்சல் தரவல்ல புதுப்புது நெல் ரகங்களான ஆடுதுறை 36, ஆடுதுறை 39 போன்றவற்றைப் பயிரிட்டுப் பயனடைந்துள்ளனர். சிறு தானிய மினிக்கிட்டுகள் 3,120 விவசாயிகளுக்கு ரூ.14,900 செலவில் வழங்கப்பட்டுள்ளது. சோளம் கே.8 கம்பு டபிள்யுசிசி 75, பிஆர் 202 போன்ற உயர் விளைச்சல் ரகங்களை விவசாயிகள் பயிரிட்டுப் பயனடைந்துள்ளனர்.



**மாணவர் பக்கம்:**



# விளையும் பயிர்

செல்வி. ஏ.பி. இளவரசி, எத்திராஜ் மகளிர் கல்லூரியில் எம்.ஏ., பொருளாதாரம் படித்து வருகிறார்.

பல்கலைக்கழகத் தேர்வில் பொருளாதாரத்தில், இரண்டு தங்கப் பதக்கங்களும், ஒரு வெள்ளிப் பதக்கமும் பெற்றுள்ளார். இவர், சிறுவயது முதலே படிப்பில் தொடர்ந்து பல பரிசுகளைப் பெற்று வந்துள்ளார்.

விளையும் பயிர் முளையிலே தெரியும் என்பது போல, இவரது முன்னேற்றம் வீட்டுக்கும் நாட்டுக்கும் துணை நிற்கும். ஏனென்றால், இவர் தமிழ்நாட்டையே முன்னேற்றிய பேரறிஞர் அண்ணா அவர்களின் பேத்தியாவார்.

# அறிவுச் சுடர்

**1. இந்தியாவில் அதிகமான தெருக்களைக் கொண்ட மாநிலம் எது?**

உத்திரப்பிரதேசம். இது 1,53,078 கிலோ மீட்டர் நீளமுள்ளது.

**2. இந்தியாவில் குறைந்த தெருக்களைக் கொண்ட மாநிலம் எது?**

சிக்கிம் 1,31 கிலோ மீட்டர்கள்.

**3. இந்தியா செயற்கைக் கோள் செலுத்திய ஆண்டு எது.**

1975-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19-ஆம் தேதி இந்தியா முதல் முதலாகச் செயற்கைக் கோளை விண்ணில் செலுத்தியது. (ஆரிய பட்டா)

**4. இந்தியாவில் அதிகமான நிலப் பரப்பைக் கொண்ட மாநிலம் எது?**

மத்தியப் பிரதேசம். 4,43,446 சதுர மீட்டர்.

**5. இந்தியாவில் 3-டி படம் எந்த மொழியில் வெளிவந்தது?**

'மைடியர் குட்டிச் சாத்தான்' என்ற மலையாளப் படம்.

**6. இந்தியாவில் முதல் முறையாக டெக்னோவிஷன் முறை கையாளப் பட்ட படம் எது?**

பெரோஸ்கானால் தயாரிக்கப் பட்ட 'குர்பானி' என்ற படம் - 1980-ஆம் ஆண்டு.

**7. உலகின் மிகப்பெரிய துறைமுகம் எது? எங்குள்ளது?**

'போர்ட் ஆப் நியூயார்க்' என்ற துறைமுகம். அமெரிக்காவில் உள்ளது. இங்கு ஒரே நேரத்தில் 400 கப்பல்கள் தங்கும்.

**8. உலகில் மிகப்பெரிய பூங்கா எங்கு அமைந்துள்ளது?**

கனடா நாட்டில் அல்பர்டாவில் அமைந்திருக்கும் தேசியப்பூங்கா இது 4,548 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டது.

**9. வேகமாகப் பறக்கும் பறவை எது?**

'ஸ்விப்ட்' எனப்படும் ஆசியப் பறவை. இது மணிக்கு 171 கிலோ மீட்டா வேகம் பறக்கும்.

—ஏ.எஸ்.குலோத்துங்கன்

Licence No. TN/MS(C)/PP-23


# பூம்புகார்

**கைவினைப் பொருட்களின் களஞ்சியம்**

அ) உலோக வார்ப்பமைப்புகள்
ஆ) ஐம்பொன் சிலைகள்
இ) கற்சிலைகள்
ஈ) மர சிற்பங்கள்/மர பதிப்பமைப்பு வேலைகள்

பூம்புகார் கைவினைப் பொருட்கள் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான், பிரான்ஸ் மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

**தமிழ்நாடு கைவினைப் பொருட்கள் வளர்ச்சிக் கழகம்,**
(தமிழ்நாடு அரசு நிறுவனம்),
24, மொபிரேஸ் முதலாவது குறுக்குத் தெரு,
ஸ்ரீராம் நகர், ஆழ்வார்ப்பேட்டை,
சென்னை –600 018.
தொலைபேசி : 458116/458263/458418

**பூம்புகார் விற்பனை நிலையம்,**
818, அண்ணா சாலை,
சென்னை –600 002.
தொலைபேசி : 832724.







பூம்புகார்


# தமிழரசு

1-5-1991 ரூ.1



புரட்சிக்கவிஞர் நூற்றாண்டு
நிறைவுவிழாச் சிறப்பிதழ்







# இந்த இதழில்...


| | | |
|---|---|---|
| பாவேந்தரின் மனிதநேயம் | ... | 2 |
| பாரதிதாசன் நினைவு அருங்காட்சியகம் | ... | 4 |
| கலைத்துறையில் பாவேந்தர் | ... | 6 |
| பாவேந்தர் வாழ்விலே | ... | 9 |
| பாவேந்தர் போற்றிய பாரதம் | ... | 12 |
| புரட்சிக் கவிஞரும் வ.ரா.வும் | ... | 13 |
| உலக மகாகவி பாரதி | ... | 15 |
| மரக்காலும் மண்ணாங்கட்டியும் | ... | 17 |
| இவர்தான் பாரதிதாசன் | ... | 22 |
| சந்தனக்கல் | ... | 24 |
| பெண்ணுக்குக் கல்வியே பெருமை தரும் | ... | 25 |
| பாவேந்தர் ஒரு படப்பிடிப்பு | ... | 27 |
| பாவேந்தர் ஒரு நல்லாசிரியர் | ... | 33 |
| பயற்றொடு கும்மாயம் | ... | 36 |
| புரட்சித் தோட்டத்தில் பூத்த மலர்கள் | ... | 40 |
| கோவை-பெரியார்-நீலகிரி மாவட்டங்களில் காவிரி நதிநீர்ப் பங்கீடு - நடுவர் குழு | ... | 41 |
| டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு நிறைவு விழா | ... | 45 |
| இந்தியச் சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சி - நிறைவு விழா | ... | 47 |
| பாவேந்தரும் குழந்தைகளும் | ... | 48 |



## தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2022

சித்திரைத் திங்கள் - 18

மலர்: 21 இதழ்: 21

1-5-1991


### தொழிலாளர் தடக்கை

நீர்கனல் நல்ல நிலம் வெளி காற்றென
நின்ற இயற்கைகளே! உம்மைச்
சாரும் புவிப்பொருள் தந்ததெவை? தொழி
லாளர் தடக்கைகளே! —புரட்சிக் கவிஞர்





# பாரதிதாசன் நினைவு அருங்காட்சியகம்!



க.இராஜாராம்
பொறுப்பதிகாரி
பாரதிதாசன் ஆய்வுமையம்
புதுச்சேரி.

பாவேந்தரி[illegible] தரின் [illegible] நினைவிடமாக [illegible] பயன்படுத்திய [illegible] இதழ்கள் - கையெழுத்து[illegible] லானவை இந்தக் [illegible] அவை காண்போரின் [illegible] றன.

**நூ**ற்றாண்டு விழாக் கண்ட பாவேந்தரின் புதுவை இல்லத்தில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நினைவு நூலகம் - காட்சிக் கூடம் பாரதிதாசனின் 80-ஆம் ஆண்டு பிறந்த நாளில் (29.4.1971) புதுவை மாநில முதல்வராக இருந்த மாண்புமிகு எம்.ஓ.எச். பாரூக் அவர்கள் தலைமையில் அப்போதைய துணை நிலை ஆளுநர் மேதகு பி.டி. ஜத்தி அவர்களால் துவக்கிவைக்கப்பட்டது.

அச்சமயத்தில் கவிஞரின் நினைவுக் குறிப்புகள், இதழ்கள், நூல்கள், கவிஞரின் வாழ்க்கையோடு தொடர்புடைய பல்வேறு நிகழ்ச்சிகளைக் குறிக்கும் புகைப்படப் பிரதிகள் மற்றும் கவிஞரின் சில சொந்த உடைமைகள் போன்றவைகளைத் திரட்டும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு அவைகள் இக் காட்சிக் கூடத்தில் வைக்கப்பட்டன. அப்போது இந்த நினைவு நூலகம் - காட்சிக் கூடத்தில் துணை நூலகர் ஒருவரும், காவலர் (Watchman) ஒருவரும் பணியில் இருந்தனர்.

1977-ஆம் ஆண்டு ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆய்வினை மேற்கொள்ளும் வகையில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நினைவு நூலகம்-காட்சிக் கூடத்தினை ஆராய்ச்சி மையமாக மாற்றுவதற்கான திட்டம் உருவாக்கப்பட்டது.

1978-ஆம் ஆண்டில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நினைவு நூலகம்-காட்சிக் கூடத்தை ஆய்வு மையமாக மாற்றுவதற்கும், தேர்ந்தெடுக்கப்பட்ட ஆய்வு மாணவர்களுக்கு ஆராய்ச்சி உதவித் தொகை வழங்குவதற்கும் இந்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டது.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பிறகும் இக்காட்சிக் கூடம் 1984-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ஆம் தேதி வரை, தொடர்ந்து நினைவு நூலகம்-காட்சிக் கூடமாகவே செயல்படுத்தப் பட்டது. 1984-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதி முதற்கொண்டு இந்நினைவு நூலகம்-காட்சிக் கூடத்தினை ஆய்வு மையமாக மாற்றி அமைப்பதற்காகப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. தற்பொழுது இவ்வாய்வு மையத்தில் - ஆய்வுத் துணைவர், துணை நூலகர், இளநிலை எழுத்தர், பணியாள், காவலர், துப்புரவாளர் என ஆறு பேர் பணிபுரிகின்றனர்.

**நூலகம்**

நூலகம், ஆய்வாளர்களின் ஆய்விற்கு உதவியாகப் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் தொடர்பான அனைத்துச் செய்திகளையும் சேகரித்து வழங்குவதோடு, நூலகப் பணியையும் ஆற்றுகின்றது.

தமிழ் இலக்கியம்/இலக்கணம் தொடர்பான தமிழ் மற்றும் ஆங்கில நூல்களும் சிறப்புப் பிரிவாகப் பாரதிதாசனின் படைப்புகள் அப்படைப்புகள் மீதான திறனாய்வு நூல்கள் ஆய்வேடுகள். காலமுறை இதழ்கள், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் கையெழுத்துப் பிரதிகள் போன்றன இந்நூலகத்தில் இடம்பெற்றுள்ளன. தமிழ் நூல்களும் குறைந்த அளவில் ஆங்கில நூல்களுமாக நூலகத்தில் 10.000 நூல்கள் இக்குறுகிய காலத்திலேயே இடம்பெற்றுள்ளன.



புரட்சிக்கவிஞர் நினைவகம்.



கிடைத்தற்கரிய இதழ்கள், பாரதிதாசன் தொடர்பான அரிய புகைப்படங்கள், கையெழுத்துப் பிரதிகள், பாரதிதாசனின் திரையிசைப் பாடல்கள், பாரதிதாசன் திரைக்கதை வசனம் எழுதிய திரைப் படங்களின் படச்சுருள்கள் (பொன்முடி, ஆயிரம் தலைவாங்கிய அபூர்வ சிந்தாமணி) போன்றன இம்மையத்திலே தொகுத்து வைக்கப்பட்டுள்ளன, தொடர்ந்து தொகுக்கப்பட்டும் வருகின்றன.

**பாரதிதாசன் நினைவுகள்**

பாரதிதாசன் தொடர்பான நினைவுகள் அடங்கிய 100 ஒலிப்பதிவு நாடாக்கள் இங்கே பாதுகாக்கப்படுகின்றன.

இந்நினைவுகள் அவர்கால அறிஞர்கள் - எழுத்தாளர்கள் - கலைஞர்கள்/அரசியல்வாதிகள் உறவினர்கள்/ஆர்வலர்களிடமிருந்து ஒலிப்பதிவு செய்யப்பட்டவைகள் ஆகும்.



பாவேந்தர் பயன்படுத்திய சாய்வு நாற்காலி.

பாரதிதாசனின் வாழ்க்கைக் குறிப்புகள், கவிதை, நாடகம், சிறுகதை, உரைநடை, பத்திரிகை, அரசியல் திரைப்படம் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் இந்நினைவுகளில் ஒலிப்பதிவு செய்யப் பட்டுள்ளன.

ஒவ்வோர் ஆண்டும் புதுவை எழுத்தாளர்களின் சிறந்த படைப்பாகத் தேர்ந்தெடுக்கப்படும் படைப்புக்கு ரூ.5,000 பரிசுத் தொகை வழங்கப் படுகின்றது.

**புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களை நினைவு கூரும் வகையில் அவர் எழுதுகோல், அவர் பயன்படுத்திய சாய்வு நாற்காலி, சட்டை, மூக்குக் கண்ணாடி போன்ற பல்வேறு பொருட்கள் இந்தக் காட்சிக் கூடத்தில் இடம் பெற்றுள்ளன.**

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் புகைப்படங்கள் இக்கூடத்தில் இடம் பெற்றுள்ளன.

பாரதிதாசனின் கையெழுத்துப் பிரதிகள், நூல்கள், அவர் நடத்திய இதழ்கள், அவர் பயன்படுத்திய பொருட்கள், போன்றனவும் இக்கூடத்தில் காட்சிப் பெட்டியில் வைக்கப்பட்டுள்ளன.

பாவேந்தரின் எழுத்தோவியங்கள் சிலவற்றிற்குத் தீட்டப்பட்ட வண்ண ஓவியங்களும் இக்கூடத்தில் இடம் பெற்றுள்ளன.

**ஆய்வுத் திட்டங்கள்**

பின்வரும் ஆய்வுத் திட்டங்கள் இம்மையத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

1. பாரதிதாசன் வாழ்க்கை வரலாறு - ஆய்வுப் பதிப்பு
2. பாரதிதாசன் கவிதைகள் தொகுப்பு - கால வரிசைப்படி திருத்தப் பதிப்பு
3. பாரதிதாசன் சொல்லடைவு
4. பாரதிதாசன் குயில் களஞ்சியம்
5. பாரதிதாசன் நூல் களஞ்சியம்
6. பாரதிதாசன் கட்டுரைக் களஞ்சியம்
7. பாரதிதாசன் கவிதைகள் மலிவுப் பதிப்பு

பாவேந்தரை நினைவுகூரும் வகையில் அமைந்துள்ள இம்மையம், புதுவைக்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளுக்குச் சிறந்த காட்சிக் கூடமாகவும், ஆய்வாளர்களுக்கும், தமிழறிஞர்களுக்கும் பயன் தரும் ஆய்வுக் கூடமாகவும் ஒருசேரத் தம் பணியை ஆற்றிவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். ●

## வெற்றி ஓங்குக!



*புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் போர் முகாம் அமைத்து விட்டார்; போர் வீரர்களைக் கூட்டிவிட்டார். படைக்கலன்களும் தயார். முரசும் கொட்டிவிட்டுக் கூப்பிடுகிறார்.*

*''கொலை வாளினை எடடா மிகு*
*கொடியோர் செயல் அறவே''*

*என்று அந்தக் குரல், காற்றில் மிதந்து வரும் கீதமாக மட்டும் இன்றி. கிண்கிணிச் சத்தத்தோடு இழைந்து வரும் கீதமொழியாக மட்டுமின்றி, கேட்போரின் வளைந்த முதுகை நிமிர்த்திவிடும் வீரக் குரலாகிவிட்டது. எனவே தான், நமக்கொரு வால்டேர் கிடைத்து விட்டார். நமக்கோர் ஷெல்லி கிடைத்து விட்டார். நமக்கு ஒரு கவிஞர் கிடைத்து விட்டார், அவர் நம்மோடு இருக்கிறார். நமக்காக இருக்கிறார். நம் வேலையைச் செய்கிறார். நாம் வாழ வழி அமைக்கிறார். அவர் வாழ்க, அவர் திறன் ஓங்குக! அவர் வெல்க! அவர் வெற்றியினால் நமக்கு வெற்றி ஓங்குக! என்று மனமார நாம் கூறுகிறோம். நாம் மட்டுமா, நாடே கூறுகிறது.*

— பேரறிஞர் அண்ணா



# கலைத்துறையில் பாவேந்தர்





புலவர் தமிழ்ப்பித்தன்

**பு**திய இலக்கியங்கள் பலவற்றை உருவாக்கித் தமிழன்னையின் பொன் அடிகளில் அர்ப்பணித்த பாவேந்தர் பாரதிதாசன், கலைத்துறையிலும் ஈடுபட்டு அரிய கருவூலங்களைப் படைத்தளித்திருக்கிறார்.

நாடகங்கள், இசைப் பாடல்கள், திரைப்படப்பாடல், திரைப்பட உரையாடல்கள் ஆகியவற்றை உருவாக்கிப் பெரும்புகழ் தேடிக் கொண்டுள்ளார். அவரது கைவண்ணம் கலைத்துறைக்குத் தனிச்சிறப்பை அளித்துள்ளது.

பாவேந்தர் முதன்முதலில் 1937-இல் டி.கே.எஸ்.சகோதரர்கள் நடித்த 'பாலாமணி அல்லது பக்கராத் திருடன்' என்னும் படத்திற்குக் கதை, உரையாடல், பாடல் எழுதினார். அந்நாளில் அப்படத்திற்குச் செய்யப்பட்ட விளம்பரம் வருமாறு:

''கவிஉலகில் கீர்த்தி பெற்ற ஸ்ரீமான் புதுவை பாரதிதாசன் அவர்கள் பாடல் எழுதிய படம்''

அக்காலத்தில் தமிழாசிரியர் ஒருவர் திரைப்படத் துறையில் அடி எடுத்து வைப்பது திரையுலகுக்குக் கிடைத்த பெருமையாகக் கருதப் பட்டது. இன்று நிலைமை மாறி விட்டது. ஒருவர் திரையுலகில் பெறுகின்ற வெற்றியைக் கொண்டுதான் அவரது திறமை-பெருமை அளவிடப் படுகிறது.

தொடர்ந்து 1939-இல் காளமேகம் என்னும் படத்திற்கு உரையாடல், பாடல் எழுதினார். புகழ் பெற்ற நாதஸ்வரக் கலைஞர் திருவாவடுதுறை ராஜரத்தினம், கவி காளமேகமாக நடித்தார்.

சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் நிறுவனம் 1945-இல் தயாரித்த சுபத்ரா, 1946-இல் தயாரித்த சுலோசனா, 1947-இல் தயாரித்த ஆயிரம் தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணி ஆகிய படங்களின் உரையாடல்களைப் பாவேந்தர் மிகச் சிறப்பாக உருவாக்கியிருந்தார் என்றாலும் அக்காலத்தில் விளம்பரங்களிலோ, திரைப்படப் பெயர்ப் பட்டியல் அட்டையிலோ பாவேந்தரின் பெயர் குறிப்பிடப்படவில்லை.

ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான 'வளையாபதி'யை 1952-இல் திரைப்படமாக்க முனைந்த மாடர்ன் தியேட்டர்ஸ், உரையாடல்கள் அமைக்கும் பொறுப்பையும் பாடல் எழுதும் பொறுப்பையும் பாவேந்தரிடம் ஒப்படைத்தது. பாவேந்தர் தமது பணியைத் திறம்படச் செய்தார்.

மாடர்ன் தியேட்டர்ஸ் நிறுவனத் தயாரிப்புகளில் ஐந்து படங்களின் உருவாக்கத்திற்குப் பாவேந்தர் பெரும் தொண்டாற்றியிருக்கிறார் என்பதிலிருந்து, பாவேந்தரின் எழுத்தில் அந்தப் பட அதிபருக்கிருந்த ஈடுபாடு தெளிவாக விளங்குகிறது.

1956-இல் ஏ.எல்.எஸ்.புரடக்ஷன் தயாரித்த அம்பிகாபதி என்னும் திரைப்படத்தின் உரையாடல் எழுதும் பொறுப்பு, பாவேந்தரிடம் ஒப்படைக்கப்பட்டது. பட இயக்குநருக்கும், பாவேந்தருக்கும், படப்பிடிப்பின்போது ஒரு காட்சி அமைப்புக் குறித்து ஏற்பட்ட கருத்து வேற்றுமையின் காரணமாக, பாவேந்தர் உரையாடல் எழுதுவதிலிருந்து விலகிக் கொண்டார். அரியதோர் காவியத்திற்கு அற்புதமான உரையாடல் அமையும் வாய்ப்பைத் தமிழ்த் திரையுலகம் இழந்துவிட்டது என்றே கூறலாம்.

சுலோசனா என்னும் படத்தில் கதாநாயகன் இந்திரஜித்தாக மாடர்ன் தியேட்டர்ஸ் நிறுவன அதிபர் டி.ஆர்.சுந்தரமே நடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. பாவேந்தரின் எழுத்தில் அவருக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு.

'மனைவியோ கால் கட்டு, மக்களோ... கட்டு... என ஏறக்குறைய 16 கட்டுகளை உரையாடலில் எழுதியிருந்த பாவேந்தரைப் போற்றிப் புகழ்ந்திருக்கிறார் டி..ஆர். சுந்தரம்' என்னும் செய்தியை மாடர்ன் தியேட்டர்ஸ் நிறுவனத் தொழில் நுணுக்கக் கலைஞர்கள் பலர் தெரிவிக்கக் கேட்டிருக்கிறேன்.

ஆயிரம் தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணி என்னும் படத்தில் பாவேந்தர் தீட்டிய செறிவான உரையாடல்கள் இன்னும் நினைவில் சுழன்று கொண்டே இருக்கின்றன.



அவற்றில் ஒரு சிலவற்றை இங்கே நினைவுகூர்வோம்.

படத்தின் கதாநாயகனான சாமியார், மன்னன் ஒருவனைச் சந்திக்கிறார். அவர்கள் இருவருக்கும் நடைபெறும் உரையாடல் வருமாறு.

**மன்னன்:** ஸ்வாமி! நான் இந் நாட்டை ஆளும் மன்னன்.

**சாமியார்:** நீயா ஆளுபவன் ? ஆளுபவன் ஒருவன் இருக்கின்றான். அவன் ஊரும்பேரும் உருவமும் இல்லாதவன் என்று கூறுகிறது வேதம். தெளிவில்லாத நெஞ்சம்! தெளியும்! உன்னை நொந்து என்ன பயன்? உன்னைச் சூழ்ந்திருக்கும் அந்தகாரத்தின் கூத்து தம்பீ!

மற்றொரு கட்டம்; அபூர்வ சிந்தாமணிக்கும் அவளது தோழிக்கும் பாடம் நடத்தி வருகிறார் சாமியார். இந்தக் கட்டத்தில் நகைச்சுவை உணர்வையும் உரையாடலில் வழங்கிக் சுவைஞர்களை மகிழ்விக்கிறார். உரையாடல் வருமாறு.

**சாமியார்:** செங்கமலம்! ஒரு பெண்ணுக்கு வேண்டுவது எது? வேண்டாதது எது?

**செங்கமலம்:** வேண்டுவது புருஷன்; வேண்டாதது மாமியார். (இந்த பதிலைக் கேட்டு அரங்கமே சிரிப்பலையை உதிர்க்கும்)

**சாமியார்:** சிந்தாமணி! நீ சொல்!

**சிந்தாமணி:** வேண்டுவது பொறுமை; வேண்டாதது பொறாமை.

**சாமியார்:** ஆகா! சிந்தாமணி! உன்னைக் கலாமணி என்றே கூற வேண்டும்.

மற்றொரு கட்டம்: செம்படவர்கள் கூட்டத்தைச் சேர்ந்த இளம் பெண்ணான மஞ்சளழகி என்பவளை ஒரு காமுகன் கண்டு, ஆசைப்பட்டு, அவளை அடைய வழி தேடுகிறான். சாமியார் உருவில் சென்று அவளிடம் பிச்சை கேட்கிறான். இந்தக் கட்டத்திற்குப் பாவேந்தர் எழுதிய உரையாடல் கவிதையாகவே வடிவெடுத்துள்ளது. அது வருமாறு.

**சாமியார்:** பருவதா பிச்சை அம்மணி.

**மஞ்சளழகி:** என்ன வேண்டும்?

**சாமியார்:** பசிக்கு ஒரு பிடி சாதம்! புசி என்று போட்டால் போதும்!

(அவள் வீட்டிற்குள் சென்று உணவு எடுத்துக் கொண்டு வந்து சாமியாரின் திருவோட்டில் போடுகிறாள்)

**சாமியார்:** தெளிவில்லாத நெஞ்சம்! தெளியும்! சாதாரண வயிற்றுப் பசியைத் தீர்ப்பதற்கல்லவோ இந்த உணவு! என் மெய்ப் பசியைத் தீர்ப்பதற்கு இது மட்டும் போதாதே பருவலட்சுமி!

**மஞ்சளழகி:** வேறென்ன வேண்டும்?

**சாமியார்:** சுடலை ஆடிய பரமனுக்குப் பார்வதி தந்த செங்கனிவாய் முத்தம்...!

**மஞ்சளழகி:** பாவி!

**சாமியார்:** பாவியல்ல பெண்ணே, பரமனின் வடிவம். (அவளைத் தொட முயற்சித்தல்)

**மஞ்சளழகி:** ஆ! (அலறுகிறாள்).

**சாமியார்:** ஆவிக்கு அமுதம் நீ, வா!

படத்தயாரிப்பின் நீளத்துக்குக் (Footage) கட்டுப்பாடு இருந்த காலத்திலேயே விதி விலக்குப் பெற்று 20 ஆயிரம் அடிகளில் தயாரிக்கப்பட்ட அபூர்வ சிந்தாமணியின் அமோக வெற்றியில் பாவேந்தரின் பேனாவுக்குப் பெரும்பங்குண்டு.

'பாண்டியன் பரிசு' என்னும் தமது காவியத்தைத் திரைப்படமாக்க வேண்டும் என்ற குறிக்கோள் கொண்டிருந்த பாவேந்தர், பாரதிதாசன் பிக்சர்ஸ் என்னும் நிறுவனத்தைத் தொடங்கினார். உரையாடல்கள், பாடல்கள் யாவையும் எழுதி முடித்தார்.

விடியும்வரை விடியட்டுமே
வெண்ணிலாவே-பொழுது
விடியும் வரைக்கும் கும்மாளமே
வெண்ணிலாவே

என்ற பாடலும் பதிவு செய்யப்பட்டு விட்டது. ஆனால் எதிர்பாராத காரணத்தால் திரைப்படத் தேர் நகரவில்லை. நின்றுவிட்டது.

அடுத்து பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றைத் திரை ஓவியமாக உருவாக்கத் திட்டமிட்டார். அந்த ஆசையும் நிறைவேறாததாகி விட்டது.

1963 வாக்கில் பாரதப் பாசறை என்னும் நாடகத்தை உருவாக்கினார். அது, சீனா இந்திய நாட்டின் மீது படையெடுத்த நேரம். அதனால் சீனருக்கு அறிவுரை கூறுவது போல் அமைந்த பாடல் ஒன்றை அந் நாடகத்திற்காக எழுதியிருந்தார் பாவேந்தர். பாடல் வருமாறு:

சென்றதடா அமைதி நோக்கி
உலகம்-அட
சீனாக்காரா ஏன்டா இந்தக்
கலகம்?
நன்றாய்நீ திருந்த
வேண்டும்-இந்த
ஞாலம் உன்னை மதிக்க
வேண்டும்.
ஒன்றாய்ச் சேர்ந்து வாழ
வேண்டும்.
ஒழுக்கங் கெட்டால் என்ன
வேண்டும்?

## தமிழ்நாட்டின் பொக்கிஷம்



பாரதிதாசன் ஆவேசக்கவி; அவர் (அழகு) அலங்காரக் கவியல்ல; வெறும் ஜோடிப்பு வேலை செய்பவரல்ல; அகராதியைக் கொண்டு ''கவி கட்டும்'' மேஸ்திரியல்ல; புன்மைக் கவிதையைக் கண்டு மனம் பொங்கும் 'புலவர்' அல்ல; ஆவேசத்தையும், உணர்ச்சியையும் வெள்ளமாகக் கொட்டும் உயிர்க்கவி பாரதிதாசன் என்பது எனது தாழ்மையான எண்ணம். அவர் கையாளும் சொற்களின் எழிலையும் பசையையும், விசித்திரத் தன்மையையும் கண்டு அனுபவிப்பவர்கள், நான் சொல்லுவதை ஆதரிப்பார்கள் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும்.

பாரதிதாசன் தமிழ்நாட்டின் பொக்கிஷம். அந்தப் பொக்கிஷத்தைத் தமிழர்கள் அனைவரும் போற்றுவார்களாக!

- வ.ரா.

# பாரதிதாசன் நினைவு அருங்காட்சியகம்!



க.இராஜாராம்
பொறுப்பதிகாரி
பாரதிதாசன் ஆய்வுமையம்
புதுச்சேரி.



**நூ**ற்றாண்டு விழாக் கண்ட பாவேந்தரின் புதுவை இல்லத்தில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நினைவு நூலகம் - காட்சிக் கூடம் பாரதிதாசனின் 80-ஆம் ஆண்டு பிறந்த நாளில் (29.4.1971) புதுவை மாநில முதல்வராக இருந்த மாண்புமிகு எம்.ஓ.எச். பாருக் அவர்கள் தலைமையில் அப்போதைய துணை நிலை ஆளுநர் மேதகு பி.டி. ஜத்தி அவர்களால் துவக்கிவைக்கப்பட்டது.

அச்சமயத்தில் கவிஞரின் நினைவுக் குறிப்புகள், இதழ்கள், நூல்கள், கவிஞரின் வாழ்க்கையோடு தொடர்புடைய பல்வேறு நிகழ்ச்சிகளைக் குறிக்கும் புகைப்படப் பிரதிகள் மற்றும் கவிஞரின் சில சொந்த உடைமைகள் போன்றவைகளைத் திரட்டும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு அவைகள் இக்காட்சிக் கூடத்தில் வைக்கப்பட்டன. அப்போது இந்த நினைவு நூலகம் - காட்சிக் கூடத்தில் துணை நூலகர் ஒருவரும், காவலர் (Watchman) ஒருவரும் பணியில் இருந்தனர்.

1977-ஆம் ஆண்டு ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆய்வினை மேற்கொள்ளும் வகையில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நினைவு நூலகம்-காட்சிக் கூடத்தினை ஆராய்ச்சி மையமாக மாற்றுவதற்கான திட்டம் உருவாக்கப்பட்டது.

1978-ஆம் ஆண்டில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நினைவு நூலகம்-காட்சிக் கூடத்தை ஆய்வு மையமாக மாற்றுவதற்கும், தேர்ந்தெடுக்கப்பட்ட ஆய்வு மாணவர்களுக்கு ஆராய்ச்சி உதவித் தொகை வழங்குவதற்கும் இந்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டது.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பிறகும் இக்காட்சிக் கூடம் 1984-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ஆம் தேதி வரை, தொடர்ந்து நினைவு நூலகம்-காட்சிக் கூடமாகவே செயல்படுத்தப் பட்டது. 1984-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதி முதற்கொண்டு இந்நினைவு நூலகம்-காட்சிக் கூடத்தினை ஆய்வு மையமாக மாற்றி அமைப்பதற்காகப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. தற்பொழுது இவ்வாய்வு மையத்தில் - ஆய்வுத் துணைவர், துணை நூலகர், இளநிலை எழுத்தர், பணியாள், காவலர், துப்புரவாளர் என ஆறு பேர் பணிபுரிகின்றனர்.

**நூலகம்**

நூலகம், ஆய்வாளர்களின் ஆய்விற்கு உதவியாகப் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் தொடர்பான அனைத்துச் செய்திகளையும் சேகரித்து வழங்குவதோடு, நூலகப் பணியையும் ஆற்றுகின்றது.

தமிழ் இலக்கியம்/இலக்கணம் தொடர்பான தமிழ் மற்றும் ஆங்கில நூல்களும் சிறப்புப் பிரிவாகப் பாரதிதாசனின் படைப்புகள் அப்படைப்புகள் மீதான திறனாய்வு நூல்கள் ஆய்வேடுகள். காலமுறை இதழ்கள், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் கையெழுத்துப் பிரதிகள் போன்றன இந்நூலகத்தில் இடம்பெற்றுள்ளன. தமிழ் நூல்களும் குறைந்த அளவில் ஆங்கில நூல்களுமாக நூலகத்தில் 10.000 நூல்கள் இக்குறுகிய காலத்திலேயே இடம்பெற்றுள்ளன.



புரட்சிக்கவிஞர் நினைவகம்.

கிடைத்தற்கரிய இதழ்கள், பாரதிதாசன் தொடர்பான அரிய புகைப்படங்கள், கையெழுத்துப் பிரதிகள், பாரதிதாசனின் திரையிசைப் பாடல்கள், பாரதிதாசன் திரைக்கதை வசனம் எழுதிய திரைப் படங்களின் படச்சுருள்கள் (பொன்முடி, ஆயிரம் தலைவாங்கிய அபூர்வ சிந்தாமணி) போன்றன இம்மையத்திலே தொகுத்து வைக்கப்பட்டுள்ளன, தொடர்ந்து தொகுக்கப்பட்டும் வருகின்றன.

**பாரதிதாசன் நினைவுகள்**

பாரதிதாசன் தொடர்பான நினைவுகள் அடங்கிய 100 ஒலிப்பதிவு நாடாக்கள் இங்கே பாதுகாக்கப்படுகின்றன.

இந்நினைவுகள் அவர்கால அறிஞர்கள் - எழுத்தாளர்கள் - கலைஞர்கள்/அரசியல்வாதிகள் உறவினர்கள்/ஆர்வலர்களிடமிருந்து ஒலிப்பதிவு செய்யப்பட்டவைகள் ஆகும்.



பாவேந்தர் பயன்படுத்திய சாய்வு நாற்காலி.

பாரதிதாசனின் வாழ்க்கைக் குறிப்புகள், கவிதை, நாடகம், சிறுகதை, உரைநடை, பத்திரிகை, அரசியல் திரைப்படம் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் இந்நினைவுகளில் ஒலிப்பதிவு செய்யப் பட்டுள்ளன.

ஒவ்வோர் ஆண்டும் புதுவை எழுத்தாளர்களின் சிறந்த படைப்பாகத் தேர்ந்தெடுக்கப்படும் படைப்புக்கு ரூ.5,000 பரிசுத் தொகை வழங்கப் படுகின்றது.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களை நினைவு கூரும் வகையில் அவர் எழுதுகோல், அவர் பயன்படுத்திய சாய்வு நாற்காலி, சட்டை, மூக்குக் கண்ணாடி போன்ற பல்வேறு பொருட்கள் இந்தக் காட்சிக் கூடத்தில் இடம் பெற்றுள்ளன.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் புகைப்படங்கள் இக்கூடத்தில் இடம் பெற்றுள்ளன.

பாரதிதாசனின் கையெழுத்துப் பிரதிகள், நூல்கள், அவர் நடத்திய இதழ்கள், அவர் பயன்படுத்திய பொருட்கள், போன்றனவும் இக்கூடத்தில் காட்சிப் பெட்டியில் வைக்கப்பட்டுள்ளன.

பாவேந்தரின் எழுத்தோவியங்கள் சிலவற்றிற்குத் தீட்டப்பட்ட வண்ண ஓவியங்களும் இக்கூடத்தில் இடம் பெற்றுள்ளன.

**ஆய்வுத் திட்டங்கள்**

பின்வரும் ஆய்வுத் திட்டங்கள் இம்மையத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

1. பாரதிதாசன் வாழ்க்கை வரலாறு - ஆய்வுப் பதிப்பு
2. பாரதிதாசன் கவிதைகள் தொகுப்பு - கால வரிசைப்படி திருத்தப் பதிப்பு
3. பாரதிதாசன் சொல்லடைவு
4. பாரதிதாசன் குயில் களஞ்சியம்
5. பாரதிதாசன் நூல் களஞ்சியம்
6. பாரதிதாசன் கட்டுரைக் களஞ்சியம்
7. பாரதிதாசன் கவிதைகள் மலிவுப் பதிப்பு

பாவேந்தரை நினைவுகூரும் வகையில் அமைந்துள்ள இம்மையம், புதுவைக்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளுக்குச் சிறந்த காட்சிக் கூடமாகவும், ஆய்வாளர்களுக்கும், தமிழறிஞர்களுக்கும் பயன் தரும் ஆய்வுக் கூடமாகவும் ஒருசேரத் தம் பணியை ஆற்றிவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.



## வெற்றி ஓங்குக!

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் போர் முகாம் அமைத்து விட்டார்; போர் வீரர்களைக் கூட்டிவிட்டார். படைக்கலன்களும் தயார். முரசும் கொட்டிவிட்டுக் கூப்பிடுகிறார்.

"கொலை வாளினை எடடா மிகு
கொடியோர் செயல் அறவே"

என்று அந்தக் குரல், காற்றில் மிதந்து வரும் கீதமாக மட்டும் இன்றி. கிண்கிணிச் சத்தத்தோடு இழைந்து வரும் கீதமொழியாக மட்டுமின்றி, கேட்போரின் வளைந்த முதுகை நிமிர்த்திவிடும் வீரக் குரலாகிவிட்டது. எனவே தான், நமக்கொரு வால்டேர் கிடைத்து விட்டார். நமக்கோர் ஷெல்லி கிடைத்து விட்டார். நமக்கு ஒரு கவிஞர் கிடைத்து விட்டார், அவர் நம்மோடு இருக்கிறார். நமக்காக இருக்கிறார். நம் வேலையைச் செய்கிறார். நாம் வாழ வழி அமைக்கிறார். அவர் வாழ்க, அவர் திறன் ஓங்குக! அவர் வெல்க! அவர் வெற்றியினால் நமக்கு வெற்றி ஓங்குக! என்று மனமார நாம் கூறுகிறோம். நாம் மட்டுமா, நாடே கூறுகிறது.

— பேரறிஞர் அண்ணா



# பாவேந்தர் போற்றிய பாரதம்

பாரதியார் 13.2.1906 சுதேசமித்திரன் இதழில் ஒரு விண்ணப்பம் விடுக்கிறார். ''எமது தாய்நாடாகிய பாரதாம்பிகையின் பெருமையை வருணித்து ஆங்கிலத்திலும், தமிழிலும் பல்வேறு காலத்துப் பல்வேறு புலவர்களால் பாடப்பெற்ற செய்யுள் மணிகளை ஓர் மாலையாகப் புனைந்து பதிப்பிக்கக் கருதியிருக்கிறேனாதலின் பண்டைத் தமிழ் நூல்களில் பாரதநாடு முழுதினையும் ஒருங்கே புகழ்ந்து கூறப்பட்டிருக்கும் பாடல்களை அறிஞர் தெரிந்தனுப்பு வார்களாயின் அவர்மாட்டு மிக்க கடப்பாடுடையவனாவேன். தமிழ்ப் புராணங்களிலும் இதிகாசங்களிலும் நாட்டுப் படலங்களில் நிடதம் கோசலம் முதலிய பகுதிகளைப் பற்றி எழுதப்பட்டிருக்கும் வருணனைகள் பயன்படமாட்டா. தற்காலத்தே தமிழ்ப் புலமையிற் சான்று விளங்கும் பெருமக்கள் புதியனவாக 'தேசபக்தி'ப் பாக்கள் புனைந்துனுப்புவராயின் அவையும் நன்றியுடன் ஏற்றுக் கொள்ளப்படும்.'' இவ்விண்ணப்பம் பாரதமணித்திருநாட்டைப் போற்றும் ஆங்கிலம், தமிழ் மொழிப் பாடல்கள் பலவற்றையும் தொகுத்துப் பதிப்பிப்பதிலும், புதிய தேசபக்திப் பாடல்கள் தமிழில் புனையப்பட வேண்டுமென்பதிலும் பாரதிக்கிருந்த மிகுந்த ஈடுபாட்டைப் புலப்படுத்துகின்றது. இதற்குப் பின்னரே 1907-இல் பாரதியின் 'வந்தே மாதரமென்போம்' 'எந்தையும் தாயும்', 'மன்னுமிமய மலை' என்னும் மூன்று தேசியப் பாடல்களடங்கிய முதல் வெளியீடு திரு. வி. கிருஷ்ணசாமி ஐயரால் இலவசமாக வெளியிடப் படுகின்றது. பின்னர் ''ஸ்வதேச கீதங்கள்' (1908) 'ஜன்மபூமி' (1909) தொகுப்புகள் வெளியாகின்றன. தொடக்கத்தில் தேசபக்திப் பாடல்கள் வேண்டுமென மற்றவர்களை நோக்கி விண்ணப்பம் விடுத்த பாரதியாரே மற்றவர்கள் எவரினும் பாரத நாட்டை 'வந்தனை கூறி மனத்தில் இருத்தி வாயுற வாழ்த்திப்' பாடுபவராக மலர்ச்சி பெறுகிறார். அவரை அடியொற்றிப் பாரதிதாசனும் பாரத நாட்டைப் பல பாடல்களில் பலவாறு போற்றுகிறார்.

'தெய்வீகத் தாய்நாடு' (தே.சே 7.11.1922) எனும் பாடல் பாரத நாட்டைத் தாயாக உருவகப்படுத்தி 'யோகத்தின் தாய் கொள்கை வேகத்தின் தாய் செய்யும் யாகத்தின் தாய்'', 'ஆறு சமயத்தின் தாய்', 'நாலு வேதத்தின் தாய்', 'நாலு சாதிக்குத் தாய்', 'சீதை, அசோதை, புத்தர், சித்தர், நாரதன், பகீரதன், சோழன், சேரன், கம்பன், விசயன்'' முதலிய பலருக்கும் தாய் எனப் பலபடப் பாராட்டுகிறது. ஓரிடத்தில் ''சீனச் சிங்கர்க்குத் தாய்'' எனக் குறிப்படுவது ஆராய்தற்குரியது.

'கொள்கைத் திருநாடு' (தே.சே. 20.2.1923) எனும் பாடல் 'நீத மன்னர், பல ஞானியர் இன்னுடல் நீத்த மண் இது', 'அந்த நாளில் கண்ணன், அருச்சுனன், வில்விதுரன், அறங்காத்தனர். விண்ணின் மதியொத்த பண்டைய வாழ்வை நினைத்தால் வீரம் உண்டாகு தென்தோளில்' எனப் பாரதியை அடியொற்றிச் சென்று,

கம்பன் அருள்கவி காளியின் நற்கன
வார்ந்ததும் இந்தத் தேசமே-எனில்
இம்பரிற் கோள்நிலை எண்குறி
யாவும்அப்
பாற்கர னாருப தேசமே''

எனப் பாரத நாட்டின் பெருமைகளைப் பேசுகிறது.

'நெஞ்சில் ஏறும் கனல் நிகர்த்த பாரதத் தேவி தனது ஆசையைப் பெருக வைக்கும் பாடல்களை அன்றாடம் பாடு' எனப் பாரதிதாசனை வேண்டுகிறாளாம். அவரும் பாரதத்தாரை நோக்கித் துன்பங்களைக் கண்டு மலைக்க வேண்டாம்'.

வாழ்விற் கலந்திருந்த இன்பம்-உங்கள்
வாய்க்குத் தவறிவிட்ட தென்றே-இந்தப்
போழ்தில் உரைக்குவரும் பேச்சில்-
உள்ள
போக்கில் மலைத்துவிட வேண்டா
ஆழ்ந்து மிதந்துவரும் மீன்கள்-கடல்
ஆழந்தனை மலைப்ப துண்டோ...

என வினவி,

வெள்ளம் மடைதிறந்த வாறே-உங்கள்
வீரர் நிலத்தில்வைத்த மோகம்-அதற்
குள்ள மனவுறுதி யோடே-அச்சம்
ஓட்டிப் பணிபுரிந்து வாழ்வீர்'

என வாழும் வகையை விளக்குகிறார் (தே.சே.29.5.23)

குறிப்பு: தே.சே. தேச சேவகன்

* முனைவர் இரா. இளவரசு அவர்களின் 'இந்திய விடுதலை இயக்கத்தில் பாரதிதாசன்' என்னும் ஆய்வு நூலிலிருந்து



### பாரதிதாசன் பாட்டும் இனிக்கும்!

எனக்குக்குயிலின் பாடலும், மயிலின் ஆடலும், வண்டின் யாழும், அருவியின் முழவும் இனிக்கும்; பாரதிதாசன் பாட்டும் இனிக்கும்.

- தமிழ்த் தென்றல் திரு: வி. க.



தன்னுடைய கொள்கைக்கு மாறான கருத்தாயினும், கவிநயத்தில் மயங்கிப் போய், பாவேந்தரின் பாடலைப் பாராட்டினார் ''வ.ரா.'' என்பதைத் தெரிவிக்கும் கட்டுரை இது:

'அக்கிரகாரத்து அதிசய மனிதர்' என்று அறிஞர் அண்ணாவால் போற்றப்பட்ட வ.ராமசாமி அய்யங்காருக்கும், பாவேந்தருக்கும் இடையே 1935-ஆம் ஆண்டு வாக்கில் நடந்த ஓர் நிகழ்ச்சி பற்றிக் குறிப்பிடுகிறார் புதுவை சிவம்.

# புரட்சிக் கவிஞரும் வ.ரா.வும்



## புதுவை சிவம்

பிரபல எழுத்தாளரான வ.ரா. அவர்கள், சங்கு சுப்பிரமணியன் என்பவரால் நடத்தப்பெற்ற 'மணிக்கொடி', 'சுதந்திரச் சங்கு' ஆகிய பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதி வந்தார். அப்போது கர்ப்பத்தடை பற்றி நாட்டில் கருத்துக்கள் உலவி வந்த நேரம். வ.ரா. அவர்கள் கர்ப்பத்தடை நம் நாட்டிற்குத் தேவையில்லை என்றும், அது மகா பாவமான செயலென்றும் கடுமையாக எதிர்த்துக் கட்டுரைகள் எழுதிவந்தார். தந்தை பெரியார் அவர்கள் அப்போதுதான் மேலைநாட்டுச் சுற்றுப் பயணம் முடித்துத் திரும்பியிருந்தார். வந்தவுடன் கருத்தடையின் அவசியம் பற்றித் தீவிரமாகப் பிரச்சாரம் நடத்தி வந்தார். அந்தக் கருத்தை ஆதரித்து 'பகுத்தறிவு' பத்திரிகையில் 'கர்ப்ப ஆட்சி' என்ற மிக நீண்ட கட்டுரை வெளிவந்தது. பின்னர் அது புத்தகமாகவும் குடியரசுப் பதிப்பகத்தால் வெளியிடப்பட்டது.

வ.ரா. அவர்கள் 'மணிக்கொடிக்குப்' பாடல் எழுதி அனுப்புமாறு அவ்வப்போது பாரதிதாசனுக்குக் கடிதம் எழுதுவார். கடிதத்தைப் படித்தவுடன் பாரதிதாசன் என்னிடம் கொடுத்து 'எதையாவது அனுப்பி வை' என்பார். நானும் மணிக்கொடிக்கென்று சில பாடல்களைத் தெரிவு செய்து அனுப்பி வைப்பேன். எந்தெந்தக் கருத்துடைய பாடலை எந்தெந்தப் பத்திரிகைகட்கு அனுப்புவது என்பது என் விருப்பம். பாரதிதாசன் எழுதிப் போட்டுவிடுவார். மற்றபடி இதிலெல்லாம் தலையிடமாட்டார். அடிக்கடி அவரைக் கவிதை எழுதித்தரும்படி தூண்டிக் கொண்டேயிருப்பேன். அதன்படி அவர் எழுதிப் போடுவதை பிரதி எடுத்துத் திருத்தமிருந்தால் அவரிடம் காட்டித் திருத்திக்கொண்டு பத்திரிகைகளுக்கு அனுப்பி வைப்பேன்.

ஒருமுறை வ.ரா.விடமிருந்து கடிதம் வந்ததும் அவர் அப்போது கர்ப்பத்தடையை எதிர்த்து வந்ததால், கர்ப்பத்தடையை ஆதரிப்பதான ஒரு கவிதையை அவருக்கு அனுப்ப வேண்டும் என்று நினைத்தேன். தேசியவாதிகளும், மதவாதிகளும் அப்போது கர்ப்பத்தடையை எதிர்த்து வந்தனர். சுயமரியாதை இயக்கம் கர்ப்பத்தடையை ஆதரித்து எழுதியதால் நாட்டில் இந்த விவாதம் சூடு பிடிக்கத் தொடங்கியது. எனவே, பாரதிதாசனிடம் கர்ப்பத்தடையை ஆதரித்து ஒரு கவிதை எழுது

## பாவேந்தர் பாடலையே பாடு!

### மலையாங்குளத்தான்

சாதிப் பிரிவினையைச் சாட, சுரண்டலிலா
நீதித் தடம் தேட, நெறிகூட-ஆதிக்கக்
கோலோய்ந்து வாடக் குடியரசைப் பார்நாட
பாவேந்தர் பாடலையே பாடு.

வையம் குடும்ப விளக்கொளி கொள்ளவும்நாம்
உய்ய இசையமுதம் ஊட்டியும்-செய்யதமிழ்த்
தாயீன்ற சான்றோர்நூல் சால்பெல்லாம்
போற்றிவரும்
பாவேந்தர் பாடலையே பாடு.

# யுகக் கவிஞன் பாவேந்தன்

கவியரசர் இளந்தேவன்



காற்றுக்குக் கவிபாட ஆசை வந்தால்
கனகசுப்பு ரத்தினத்தின் வாசல் வந்தே
ஏற்றுக்கொள் மாணவனாய் என்று கெஞ்சும்;
இளந்தென்றல் தனைப்பரிசாய்க் கொடுக்கும்;

ஊற்றுக்குத் தமிழ்பேச ஆசை வந்தால்
பொங்கும்
உச்சரிக்கும் பாவேந்தன் பேரை; திராட்சைச்
சாற்றுக்குள் சுவையோடும்; இவன்தே கத்தில்
சந்தமும் தமிழோடும் குருதி யாக!

உள்ளத்தில் அணுசக்தி உலையைக் கொண்ட
யுகப்புரட்சிக் கவிஞனிவன் கவிதை, கால
வெள்ளத்தைக் குடித்துத்தன் வேட்கை தீரும்!
விரல்பட்டால் மின்சார விருந்து வைக்கும்!
அள்ளத்தான் குறைந்திடுமா ஆழி வெள்ளம்?
ஆண்டுகளால் இவன் வயதை அளக்க லாமா?
உள்ளத்தால், உதடுகளால் தீண்ட ஒண்ணா
ஊழித்தீ அளக்கப்புல் அளவு கோலா?

பாவேந்தர் திரைப்படங்களுக்கு நேரடியாகப் பாடல் எழுதியிருக்கிறார். அவரது கவிதைத் தொகுதிகளிலிருந்து தங்கள் படங்களுக்கேற்ற முறையில் உள்ள பாடல்களைத் தேர்ந்தெடுத்துப் பல பட அதிபர்கள் பயன்படுத்தியுமிருக்கிறார்கள். அந்தப் பாடல்கள் மக்கள் மன்றத்தில் மாபெரும் வெற்றியைப் பெற்றிருக்கின்றன.

பஞ்சவர்ணக் கிளியில் ஒலித்த 'தமிழுக்கும் அமுதென்று பேர்' என்னும் பாடலை முழங்காத நா உண்டா?

'சித்திரச் சோலைகளே' என்ற பாடல் வெள்ளித் திரையில் ஒலித்த பின்னர், நாட்டு மக்கள் அனைவரின் நாவிலும் ஒலிக்கத் தொடங்கியதல்லவா?

'துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ இன்பம் சேர்க்க மாட்டாயா' என்னும் பாடல்-ஓர் இரவின் மூலமாக கடந்த 38 ஆண்டுகளாகத் தமிழகம் முழுதும் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

'சங்கே முழங்கு'' என்ற பாடலைச் சிறுவர்களும் முழங்கி வருவதை நாம் பார்க்கிறோம்.

கலைத்துறையில் பாவேந்தரின் பங்கு கணிசமான அளவில் இருந்திருக்கிறது. பள்ளி ஆசிரியர், பத்திரிகை ஆசிரியர், நூலாசிரியர், நாடகாசிரியர், மேடைப் பேச்சாளர் எனப் பல்வேறு பொறுப்புகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டதால் கலைத்துறையின் முழுநேர ஊழியராகும் வாய்ப்பு பாவேந்தருக்குக் கிட்டவில்லை என்றாலும் கலைத்துறையில் அவர் ஆற்றிய பணி தனி முத்திரை பதித்துள்ளது! தமிழுக்குப் பெருஞ்சிறப்பை அளித்துள்ளது! தமிழரின் பெருமையை உயர்த்தி உள்ளது!



# பாவேந்தர் வாழ்விலே

★ *1891* ஏப்ரல் 29-ஆம் நாள் புதன்கிழமை, புதுச்சேரி கனகசபை - இலக்குமி அம்மையாருக்கு மூன்றாவது மகனாகப் பிறந்தார். பெற்றோர் அவருக்கு இட்ட பெயர் சுப்புரத்தினம்.

★ *1895*-இல் ஆசிரியர் திருப்புளிசாமி ஐயாவிடம் ஆரம்பக் கல்வி பயின்றார்.

★ *1906*-இல் வித்துவான் தேர்வில் வெற்றி பெற்றார்; இளமையிலேயே கவி புனையும் திறமை பெற்றார்.

★ *1907*-இல் புதுச்சேரி மகாவித்துவான் ஆ. பெரியசாமி ஐயாவிடமும், பங்காரு பத்தரிடமும் இலக்கண- இலக்கியங்களையும், வேதாந்த சித்தாந்த பாடங்களையும் கற்றுத் தேர்ந்தார்.

*1908*-இல் புதுச்சேரி வேணு நாயக்கர் இல்லத்தில் பாரதியாரைக் காணும் வாய்ப்பைப் பெற்றார். பாரதியாரின் புலமையும் எளிமையும் கவிஞரைப் பெரிதும் கவர்ந்தன. பாரதியார் பாடச் சொல்லி, கவிஞர் பாடிய முதல் பாட்டு ''எங்கெங்குக் காணினும் சக்தியடா'' என்னும் பாட்டு.

★ *1909*-இல் அதாவது பதினெட்டாம் வயதில், காரைக்காலைச் சேர்ந்த நிரவி என்னும் ஊரில் அரசுப் பள்ளியில் ஆசிரியராக நியமனம் ஆனார்.

★ *1910*-இல் புதுச்சேரியில் தங்கி இந்தியப் புரட்சியில் ஈடுபட்ட அரவிந்தர், வ.வெ.சு. ஐயர், டாக்டர் வரதராஜுலு நாயுடு ஆகியோருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றார். பாரதியார் நடத்திய 'இந்தியா' என்னும் பத்திரிகையைப் பதிப்பிக்க மறைமுகமாக ஒத்துழைத்தார். பாரதியாரிடம் தாம் கொண்ட மதிப்பின் காரணமாக 'கனக சுப்புரத்தினம்' என்னும் பெயரை, பாரதிதாசன் என மாற்றிக் கொண்டார். அந்தப் பெயர் பிரபலமாயிற்று, மற்றும் புதுவை கே.எஸ்.ஆர்., கண்டெழுதுவோன், கிறுக்கன், கிண்டல்காரன், கே.எஸ். பாரதிதாசன் ஆகிய பெயர்களில் பாடல்கள், கட்டுரைகள், தேசியப் பாடல்கள் எழுதி வரலானார்.

★ *1919*-இல் புதுவையைச் சேர்ந்த திருபுவனை என்னும் ஊர்ப்பள்ளியில் ஆசிரியராக இருக்கையில், பிரெஞ்சு அரசுக்கு எதிராகச் செயல் புரிந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு ஒன்றரை ஆண்டு சிறைத் தண்டனை பெற்றார். மத்தியில் விடுதலை அடைந்தார்.

★ *1921*-இல் புவனகிரிக்கு அடுத்த பெருமாத்தூர் பரதேசி முதலியார் மகள் பழநி அம்மாளைப் பாரதிதாசனுக்குத் திருமணம் செய்து வைத்தனர். தேசிய இயக்கம் தீவிரமாக இருந்த காலம். கதர்த் துணிகளைத் தோளில் சுமந்து தெருத்தெருவாக விற்பனை செய்தார்.

★ *1921*-இல் கவிஞருக்கு முதல் பெண் குழந்தை பிறந்தது. அதுவே சரசுவதி. தேச சேவகன், புதுவை கலைமகள், தேசோபகாரி, தேச பக்தன், ஆனந்த போதினி, சுதேசமித்திரன், துய்ப்ளேக் ஆகிய இதழ்களில் கவிதை, கட்டுரை, கதைகளை, கே.எஸ். பாரதிதாசன் என்ற பெயரில் எழுதினார்.

★ *1926*-இல் 'ஸ்ரீமயிலம் சுப்பிரமணியர் துதியமுது' என்ற சிறு நூலைக்கவிஞர் இயற்றினார். அதைப் புதுவையிலிருந்த காசி ஈ. லட்சுமண பிரசாத் வெளியிட்டார்.

★ *1928*-இல் கவிஞருக்கு இரண்டாவதாக ஆண் குழந்தை பிறந்தது. இட்ட பெயர் கோபதி. பின்னர் 'மன்னர் மன்னன்' என மாற்றிக் கொண்டார்.

★ *1929*-ஆம் ஆண்டு பெரியார் ஈ.வெ.ரா. அவர்களுடன் தொடர்பு ஏற்பட்டது. பெரியார்



நடத்திய 'குடியரசு', 'பகுத்தறிவு' இதழ்களில் கதை, கட்டுரை, கவிதை எழுதத் தொடங்கினார். இந்தியாவிலேயே முதன் முதலில் 'குடும்பக் கட்டுப்பாடு' பற்றிப் பாடல் எழுதிய ஒரே கவிஞர் பாரதிதாசன் என்ற பாராட்டைப் பெற்றார்.

★ *1931*-இல் கவிஞருக்கு மூன்றாவதாகப் பெண் குழந்தை பிறந்தது. இட்ட பெயர் வசந்தா. பின்னர் வேனில் என மாற்றப் பெற்றது.

★ *1934*-இல் 'இரணியன் அல்லது இணையற்ற வீரன்' என்னும் நாடகத்தை எழுதினார். பெரியார் தலைமையில் நாடகம் அரங்கேற்றப்பட்டது.

★ *1935*-இல் ஸ்ரீசுப்பிரமணியபாரதி கவிதா மண்டலம் கவிதை இதழ் தொடங்கப் பெற்றது. அதன் ஆசிரியர் பாரதிதாசன். இதழ் முழுதும் கவிதைகளாகவே திகழ்ந்தது.

★ *1946*-இல் 'முல்லை' மாத இதழை முல்லை முத்தையா தொடங்கினார். அதன் ஆசிரியரும் உரிமையாளரும் அவரே. கவிஞர் அதன் ஆதர வாளர். கவிஞரின் கவிதையும், கவிஞரைப் பற்றிய சுவையான கருத்துகளும், அறிஞர் பலருடைய கட்டுரைகளும் தாங்கிச் சிறப்பாக வெளிவந்தது. வாசகர்களிடையே 'முல்லைக்கு' நல்ல வரவேற்பு காணப்பட்டது. 'முல்லையின் முயற்சியில் தமிழ்த் தாய் அரியாசனம் ஏறுவாள்'' எனத் தமிழ்ப் பெரியார் திரு. வி.க. பாராட்டுத் தெரிவித்தார்.

★ *1946*-இல் கவிஞரைப் பற்றி முதன் முதலாக அறிஞர்கள், புலவர்கள், கவிஞர்கள், மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் ஆகியோரிடமிருந்து முல்லை முத்தையா பெருமுயற்சி எடுத்து, கட்டுரைகள், கவிதைகள், வாழ்த்துரைகள் சேகரித்துப் 'புரட்சிக் கவிஞர்' என்ற தொகுப்பு நூலை வெளியிட்டார்.



துணைவியார் பழனியம்மையாருடன் பாவேந்தர்

★ *1944*-இல் கவிஞரின் மூத்த மகள் சரசுவதிக் கும், கட்டிபாளையம் கண்ணப்பருக்கும் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

அந்நூலுக்கு நான்கு பதிப்புகள் வெளிவந்துள்ளன. முல்லைப் பதிப்பகத்தில் கவிஞருக்கு நிதி திரட்டி அளிப்பதற்காகக் கவிஞரிடம் அபிமானம் கொண்ட பலர் சேர்ந்து குழு அமைத்தனர். அறிஞர் அண்ணா பொருளாளராகவும், டி.என். ராமன், முல்லை முத்தையா செயலாளராகவும் இருந்தனர்.

*1946* ஜூன் மாதம். 29-இல், சென்னை பச்சையப்பன் விளையாட்டுத் திடலில், நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைமையில், கவிஞருக்கு இருபத்தையாயிரம் ரூபாய் நிதி அளித்துப் பொன் ஆடை போர்த்திக் கௌரவிக்கப் பெற்றது. அதை அறிஞர் அண்ணா அவர்கள் சிறப்பாகச் செய்தார்.

*1946*-இல் நவம்பர் மாதம் புதுவை அரசுப் பள்ளியில் முப்பத்தேழு ஆண்டுகள் ஆசிரியராகப் பணி புரிந்து கவிஞர் ஓய்வு பெற்றார்.

## புதுமை பூக்கும்

பூவேந்தும் தேன்பாடல்! புயலாய்ச் சீறிப்
புதுவேகம் தரும்பாடல்! புரட்சிப் பாடல்!
பாவேந்தன் தமிழ்ப்பாடல் எழுச்சிப் பாடல்!
பழமைக்கு வெடிவைக்கும் வேட்டுப் பாடல்!
நாவேந்திப் பாமரரும் பாடு வாரேல்
நரம்பெல்லாம் இரும்பாகும்! இரத்த நாளம்
தீயேந்திச் சூடாகும்! சமூக மாற்றம்
திசையெட்டில் உருவாகும்! புதுமை பூக்கும்!

- கவிஞர் பல்லவன்



## தமிழ்நாட்டுப் புரட்சிக் கவி



பாரதியாரின் பாடல்கள் தமிழ்மக்களின் உள்ளத்தில் சுதந்திர உணர்ச்சியை உண்டு பண்ணியது போல, பாரதிதாசனுடைய பாடல்கள் சமூகச் சீர்திருத்த உணர்ச்சியை மக்களுக்கு ஊட்டி வருகின்றன என்றால் அது மிகையாகாது. இனிய எளிய நடையிலுள்ள இவரது பாக்கள் படிப் போருக்கு இன்பம் பயக்கும் என்பதில் யாதும் ஐயமில்லை. மதங்களிலும், பழைய ஆசாரங் களிலும் ஊறிக் கிடந்த மக்களிடையே இவருடைய பாடல்கள் ஒரு பெரிய மாற்றத்தை உண்டு பண்ணியிருக்கின்றன. ஆதலால் இவர் ஒரு புரட்சிக்கவி. அமெரிக்கப் புரட்சிக்கவி வால்ட் விட்மன். தமிழ்நாட்டுப் புரட்சிக்கவி பாரதிதாசன்.

-கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.

★ *1950*-இல் யதார்த்தம் பொன்னுசாமி பிள்ளை ஏற்பாட்டில், திருச்சியில் கவிஞருக்கு மணிவிழாக் கொண்டாடி, பொன்னாடை போர்த்தி, ஆயிரம் ரூபாய் நிதியும் அளிக்கப் பெற்றது.

★ *1951*-இல் கவிஞரின் இரண்டாவது மகள் வசந்தாவுக்கும், தண்டபாணிக்கும் திருமணம் நடைபெற்றது.

★ *1954*-இல் கவிஞரின் மூன்றாவது மகள் ரமணிக்கும், சிவசுப்பிரமணியத்துக்கும் திருமணம் நடைபெற்றது.

★ *1954*-இல் புதுவைச் சட்டமன்றத் தேர்தலில் கவிஞர் வெற்றி பெற்று, சட்டமன்றத்துக்குத் தலைமை வகித்தார்.

★ *1954*-இல் ஜூன் மாதம், கவிஞர் மகன் மன்னர் மன்னனுக்கும், சாவித்திரிக்கும், தேசபக்தர் கோவை அ. அய்யாமுத்து தலைமை யில் புதுவையில் திருமணம் சிறப்பாக நடை பெற்றது.

★ *1962*-இல் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சார்பில், சென்னையில் மூதறிஞர் ராஜாஜி அவர்களால் கவிஞருக்குப் பொன்னாடை அணி வித்துக் கேடயம் வழங்கப்பட்டது.

★ *1963*-இல் மகாகவி பாரதியார் வரலாற்றைத் திரைப்படமாகத் தயாரிக்கக் கவிஞர் முயன்றார். பாரதியாராகக் கவிஞரே நடிப்பதாக இருந்தார். முயற்சி வெற்றி பெறவில்லை.

★ *1964*- ஏப்ரல் மாதம், கவிஞருக்குத் திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டது. உடனே சென்னை பொது மருத்துவனையில் சேர்க்கப்பட்டார். *1964* ஏப்ரல் *21*-ஆம் நாள், கவிஞர் இயற்கை எய்தி னார். பாடிப் பறந்த குயில் மறைந்தது. தமிழுக்குப் பெரிய இழப்பு; மறுநாள் கவிஞரின் உடல் புதுவைக்குக் கொண்டு செல்லப்பட்டு, புதுவைக் கடற்கரையில் அடக்கம் செய்யப் பெற்றது.

★ *1965*-இல் புதுவை நகராட்சி, கவிஞர் நினைவு மண்டபத்தை எழுப்பியது.

★ *1968*-இல் ஜனவரி மாதம், சென்னையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில், தமிழக முதல் அமைச்சராக இருந்த அறிஞர் அண்ணா அவர்களின் முயற்சியால் சென்னைக் கடற்கரை யில் கவிஞரின் முழு உருவச்சிலை நிறுவப் பெற்றது.

★ *1969*-இல் கவிஞர் இயற்றிய 'பிசிராந்தையார்' என்ற நாடகத்துக்கு மத்திய அரசின் சாகித்திய அகாடமியினால் ஐயாயிரம் ரூபாய் பரிசு வழங்கப் பட்டது.

★ *1971* ஏப்ரல் மாதம் 29-ஆம் நாள் புதுவை அரசு கவிஞரின் பிறந்த நாளை, அரசு விழாவாகச் சிறப்பாகக் கொண்டாடியது. புதுவை, பெருமாள் கோவில் தெருவில் இருக்கும் கவிஞரின் இல்லத் தைப் புதுவை அரசு விலைக்கு வாங்கி, கவிஞரின் குடும்பத்தாருக்கு உதவி புரிந்து, அந்த இல்லத்தைக் கவிஞரின் நினைவு நூலகமாகவும், காட்சிக் கூடமாகவும் ஆக்கியது.

★ *1975*-இல் தமிழக அரசு சென்னை ராஜாஜி மண்டபத்தில் கவிஞரின் முழு உருவ வண்ணப் படத்தைத் திறந்து வைத்தது.

★ *1978*-இல் பாரதிதாசன் பிறந்தநாள் விழா தமிழக அரசின் சார்பில் கொண்டாடப்பட்டது. 'பாவேந்தர் விருது' அறிமுகம் செய்யப்பட்டது. முதன் முதலாக அந்த விருது உவமைக் கவிஞர் சுரதா அவர்களுக்கு வழங்கப்பட்டது. *1978* முதல் ஆண்டுதோறும் பாவேந்தர் விழாவைத் தமிழக அரசு கொண்டாடி வருவதுடன், பாவேந்தர் விருதையும் தொடர்ந்து வழங்கி வருகிறது.

★ *1982* ஏப்ரல் மாதம் 30-இல் திருச்சியில் பாரதிதாசன் பல்கலைக் கழகம் தோற்றுவிக்கப் பட்டது.

★ *1990* டிசம்பர் மாதம் 15 அன்று பாவேந் தரின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டன.

— 'பாவேந்தர் பெருமை' என்ற நூலிலிருந்து.

தகரென்று கொட்டு முரசே-இந்த
நீணிலம் வாழ்பவ ரெல்லாம்;
தகரென்று கொட்டு முரசே-பொய்மைச்
சாதி வகுப்பினை யெல்லாம்!

—பாரதியார்.



பாவேந்தரின் குடும்ப நண்பர் குயில் சிவா.

மாறு கேட்டுக்கொண்டேன். அவரும் 'ஆகட்டும்' என்றார். இரண்டு மூன்று நாட்கள் சென்றபின் திடீரென்று உட்கார்ந்து எழுத ஆரம்பித்தார். மளமளவென அற்புதமான கவிதையொன்றைத் தீட்டி விட்டார். கர்ப்பத்தடைக்கு முரண்படுவோர் கூட அதைப் படித்தால் நிச்சயம் வேறுபடுவர். எனவே அதைப் படியெடுத்து வ.ரா. அவர்களுக்கு அனுப்பி வைத்தேன்.

மணிக்கொடியில் போட்டால் போடட்டும் இல்லாவிட்டால் வேறு பத்திரிகைக்கு அனுப்பு வோம் என்று நினைத்திருந்தேன். அடுத்த வாரம் 'மணிக்கொடி' வந்தது. வ.ரா.விடமிருந்து ஒரு கடிதமும் வந்தது. கடிதத்தைப் பாரதிதாசனிடம் கொடுத்துவிட்டு மணிக்கொடியைப் பிரித்துப் பார்த்தேன். அதில் அக்கவிதை முக்கிய இடம் கொடுத்து வெளியிடப்பட்டிருந்தது. அவசரமாக அதைப் பாரதிதாசனிடம் 'இதோ பாருங்கள் என்று காட்டினேன். அவர் 'இதிலியா வந் திருக்கு?' என்று கேட்டபடியே 'இதைப் பார்' என்று வ.ரா.வின் கடிதத்தைக் கொடுத்தார். வ.ரா. கருத்தடையைப் பற்றித் தான் ஏற்றுக்கொண்ட கருத்து மாற்றம் அதில் புரிந்தது. மேலும் அவர் அக்கடிதத்தில்,

''காதலுக்கு வழிவைத்துக் கருப்பாதை சாத்தக்
கதவொன்று கண்டறிவோம் இதிலென்ன குற்றம்''

என்ற அடியைச் சுட்டிக் காட்டி, ''இதுவரை யான் கொண்டிருந்த எண்ணத்தை இவ்வரிகள் மாற்றி விட்டன. இனி நான் கருத்தடைக்கு விரோதி அல்ல'' என்றும், கவிதையை மிகவும் புகழ்ந்தும் எழுதியிருந்தார்.

பாரதிதாசன் மிகுந்த மகிழ்ச்சியுடன் 'எப் படிப்பா உனக்கு இவனுக்கு அனுப்பனும்னு தோணுச்சு' என்று மிகவும் பாராட்டினார். ●

## 'பாரதிதாசன்' என்ற புனைபெயர் ஏன்?

'கனகசுப்புரத்தினம்' எப்படிப் பாரதிதாசன் ஆனார் என்பது குறித்துப் பிற்காலத்தில் பலரும் பலவிதமாக விளக்கம் தரக்கூடும் என்று கருதியோ என்னவோ, புரட்சிக் கவிஞரே அதற்கான காரணத்தை எழுதிவிட்டுச் சென்றிருக்கிறார்.

புதுவையில் உள்ள 'பாரதிதாசன் நினைவக'த்தில் உள்ள ஆளுயர வெள்ளைப்பலகையில், காணப்படும் நீல எழுத்துகள் அதை நமக்கு அறிவிக்கின்றன; இதோ அது:

“நான் பாரதிதாசன் என்ற புனைபெயர் வைத்துக் கொண்டுள்ளேன்.

அதற்குக் காரணம்:

அப்போது அவர் என் னுள்ளத்தில் முதலிடம் பெற்றிருந்ததுதான். சாதிக் கொள்கையை நன்றாக உண்மையாக எதிர்த்தவர் பாரதியார்தாம்! அவருக்கு முன், பன்னூற்றாண்டுகளுக்கு முன் அவ்வாறு சாதிக் கொள்கையை எதிர்த்தவரை நான் கண்டதில்லை.

பாரதி எதிர்த்துப் பணி புரியத் தொடங்கிய பன்னாட்களுக்குப் பின்னரே பெரியார் இயக்கம் தோன்றியது. பாரதியாரை நான் ஆதரித்ததும், பாரதிதாசன் என்று நான் புனைபெயர் வைத்துக் கொண்டதும், ஏதாவதொரு கூட்டத்தாரிடம் நன்மையை எண்ணியன்று.

சாதி ஒழிப்பு விளம்பரம் ஆதல் வேண்டும் என்பதற்காகவும், பாரதியாரைப் போல எளிய நடையில் மக்களுக்கு இன்றைக்கு வேண்டிய கருத்தை வைத்துப் பாடல் இயற்ற வேண்டும் என்பதைப் புலவர்க்கு நினைவூட்ட வேண்டும் என்பதற்காகவுமே!”

—பாரதிதாசன்







# உலக மகாகவி பாரதி



### பாவேந்தர் பாரதிதாசன்

பாரதியார் 1906-இல் தான் புதுச்சேரிக்கு வந்தார். இன்னும் வ.வெ.சு.ஐயர், திருவல்லிக்கேணி சீனுவாச ஆச்சாரியார், அரவிந்த கோஷ் முதலியோரும் வந்தனர். இவர்களுக்கெல்லாம் சுதேசிகள் என்று பாண்டியில் பெயர்.

அரவிந்தர் - வ.ரா. முதலியோர் ஒரு குழு.

வ.வெ.சு. ஐயர் முதலியோர் ஒரு குழு.

பாரதி, நான் முதலியோர் ஒரு குழு.

சீனுவாசாச்சாரியார் எதிலும் இருப்பார்.

மூன்று குழுக்களும் வெவ்வேறாக இருந்தன.

அரவிந்தர் முதலியோர் தமிழென்று ஒரு மொழி இருப்பதையோ, அதைப் பற்றி நினைப்பதையோ அறியாதார்.

வ.வெ.சு. ஐயர் வர்ணாஸ்ரமம் உண்டு என்றால் தமிழைப் போற்றத் தயார்.

பாரதியார் தமிழிலேயே வாழ்ந்தார். அன்றைய நிலை அப்படி. பாரதியார் பார்ப்பனராக இருந்தாலும் தமிழைப் போற்றினார், காரணம், அவர் தமிழ்ப் புலவரின் மகன் என்பது தான். பாரதியார் முதலில் பாடி ஆரம்பித்தது காவடிச் சிந்து தான். புரியும்படி காவடிச் சிந்து அமைவதே காரணம்.

அரவிந்தர் ஆங்கிலத்தில் - 'Asia' பத்திரிகை ஆரம்பித்தார். ஆனால், பாரதியாரோ தமிழில் ''இந்தியா'' பத்திரிகை ஆரம்பித்தார். தமிழை பாரதி இப்படிப் போற்றினார்.

இங்கே எனக்கு முன் பேசிய விவேகானந்தா கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் மா. ராசமாணிக்கம் அவர்கள் என்னைப் பாரதியாரைப் பற்றி ''நான் கண்ட பாரதி'' என்ற தலைப்பில் ஒரு புத்தகம் எழுதும்படி கேட்டார். இதேபோல் முன்பே தினசரி ஆசிரியர் டி.எஸ். சொக்கலிங்கம் கேட்டார். நான் எழுதிக் கொண்டுதான் இருக்கிறேன். அது ஆயிரம் பக்கங்கள் வரும்.

பாரதியார் தமிழ்ப்பற்றுடையவர், தமிழுக்கு உயிர் உண்டாக்கினார். எல்லோருக்கும் புரியும்படி எழுதினார். பாடினார். அதற்குப்பிறகுதான், அரவிந்தகோசுக்குத் தமிழ் என்று ஒன்று இருப்பதாகப் புரிந்தது. வ.ரா. முதலானோர் தமிழ்ப் புத்தகங்களைத் தேடிப் படித்தனர்.

பாரதியாருடைய முக்கிய கொள்கை ஜாதி ஒழிப்பு. அதுதான் அவரிடம் இருந்த சிறந்த கொள்கை, குறிப்பிட்டுப்பேச வேண்டிய கொள்கை.

பாரதியார் பார்ப்பனர். தெரிந்தும் சொன்னார் 'ஜாதிகள் இல்லையடி பாப்பா' என்று. தமிழில் நல்ல எளிய தமிழில் எல்லோருக்கும் புரியும்படி இதைச் சொன்னார். எனக்கு மிகவும் பிடித்திருந்தது. சந்தோஷம் கூட.

நான் அப்போழுது பாண்டிச்சேரியில் வாத்தியார் வேலையில் இருந்தேன். அப்போதே சில பத்திரிகைகளில் கட்டுரைகளும், பாட்டுகளும் எழுதி அனுப்புவது வழக்கம். அப்போது நான் உத்தியோகத்தில் இருந்து கொண்டு இக்காரியம் செய்வது உத்தியோகத்திற்குத் தொல்லை தரும். யாராவது செய்வார்கள் என்று கருதி நான் ஓர் புனை பெயர் வைத்துக் கொள்ள விரும்பினேன். அப்போது என் கண் முன்னே 'சூத்திரனுக்கு ஒரு நீதி, தண்டச் சோற்றுப் பார்ப்புக்கு ஒரு நீதி' என்று கேட்ட பாரதியார், பார்ப்பனராய் இருந்தும் பயப்படாது தீமை வருமென்று தெரிந்திருந்தும் திகைக்காது, தமிழில் புரியும்படி சொல்லிய பாரதியார் தான் நின்றார். உடனே பாரதிதாசன் என்று புனை பெயர் வைத்துக் கொண்டேன். நான் அவருக்கு, அந்தப் புண்ணியவானுக்கு - தன் குலத்தார் எதிர்ப்பையும் பொருட்படுத்தாத புண்ணியவான் பாரதிக்குத் தாசனாக இருப்பதில் ஒன்றும் தவறில்லை என்று கருதுகிறேன்.

அவர் ஈசுவரன் கோயில் தெருவில் குடியிருந்தார். அப்போது அவர் மகளுக்குக் காய்ச்சல் வந்தது; டாக்டர் அம்பு வந்தார். விஷக் காய்ச்சல் என்று கூறினார். அவர்கள் வீட்டில் ஒரு கேணி இருந்தது. அதைப் பார்த்தார். அதில் சூரிய ஒளி படவில்லை என்றார். வேறு வீடு வேண்டும். என்ன செய்வது? என்ன நடந்தது என நினைக்கிறீர்கள்? சுமார் ஒன்றரை மணி நேரத்திற்குள்

**'உலக மகாகவி' என்று மாக்கவி பாரதியைப் போற்றினார். புரட்சிக் கவி. அவரது அழுத்தமான கொள்கைகளை - ஆணித் தரமான வாதங்களை அழகாக வடித்துக் காட்டுகிறார் பாவேந்தர்.**




**புதுவையில், புரட்சிக் கவிஞர் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்ட போது அச்சிடப்பட்ட சுவரொட்டி (1954).**

ளாகவே அவர் வீட்டுக்கு எதிர் வீட்டில் குடியிருந்தவர்கள் காலி செய்யப்பட்டு, பாரதியார் குடியேறினார், எப்படி முடிந்தது? யார் வீடு அது -தெரியுமா?

பெத்தாச்சி செட்டியார் வீடு அது. அவருக்குப் பாரதியார் அளித்த பெயர் விளக்கெண்ணெய்ச் செட்டியார் என்பது. அதில் குடியிருந்தவர் ஒரு சி.ஐ.டி.

அப்படிப்பட்ட செட்டியாரிடம், (செட்டியார் பண விஷயத்தில் மகா கண்டிப்புக்காரர்) முன் பணம் கட்டி, அங்கிருந்த சி.ஐ.டி. அவர்களைக் காலி செய்து குடியேற்றினோம். யார்? நானும் என் போன்ற தோழர்களும்.

எப்படி? எங்களுக்கு இருந்த எண்ணமெல்லாம், பாரதி வருத்தப்படக் கூடாது. அவர் மகளுக்குக் காய்ச்சல்; கேணி நல்லதல்ல, வீடு மாற்ற வேண்டும்; உடனே சென்றோம். காலி செய்யச் சொன்னோம். பயந்தே காலி செய்தனர்.

அவர் சுதேசமித்திரன் பத்திரிகையில் வேலை பார்த்தபோது, 'வெளிநாட்டு விஷயங்களை மிக நன்றாக மொழிபெயர்த்தார். சைனாவுக்குப் பக்கத்திலே ஒரு தீவு பற்றிய செய்தி வெளிவந்தால்

அது எங்குள்ளது என்பது பற்றிய குறிப்பு பிராக்கட்டுக்குள்—'அடைப்புக் குறிக்குள்' அடங்கியிருக்கும். இது தற்காலத்து உதவி ஆசிரியர்கள் அறிய வேண்டிய செய்தி.

தமிழில் புதுமுறையில் மக்களுக்குப் புரியும்படி நூல் எழுதியவர் பாரதியார் தான். அதற்கு முன் புலவர்கள் ஒரே பொருள் பற்றிப் பலநூல்கள், ஒரே முறையில் எழுதுவார்கள்.

கலம்பகம் என்றால், திருவருணைக் கலம்பகம், புதுவைக் கலம்பகம் என்று போகும். அடுத்தாற் போல் அந்தாதி என்று பல நூல்கள், மற்றும் அம்மானைகள் இப்படித்தான். புதுமுறையோ, புதுப்பொருள் பற்றிய நூல்களோ கிடையாது. தைரியமில்லை. இந்த வழியில் புதுமுறைக்கு எடுத்துக்காட்டு சிந்து: இதில் அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச்சிந்து பாரதியாரை மிகவும் கவர்ந்தது. **(சென்னை பச்சையப்பன் கல்லூரியில் 6.9.1949-இல் நடைபெற்ற விழாவில், தலைமையேற்று ஆற்றிய உரையிலிருந்து, இந்தப் பகுதியானது அறிஞர் அண்ணாவை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த 'மாலைமணி' நாளேட்டில் 8.9.1949-இல் வெளியிடப்பட்டது.)**

வளரும்

இளம்

ஓவியர்





**'வளரும் பயிர் முளையிலே தெரியும்' என்பார்கள்; அந்த வகையிலே குறிப்பிடத்தக்கவன்தான் வளரும் இளம் ஓவியன் எச்.விஷ்ணு தாஸ். 12 வயது நிரம்பிய இவன் புதுவை பெத்தி செமினரி மேனிலைப் பள்ளியில் 8-ஆம் வகுப்பு பயில்கிறான். 5 வயதிலிருந்தே ஓவியம் வரைய ஆரம்பித்த இவன், மாநில அளவிலான பல போட்டிகளில் பல முறை முதல் பரிசினைப் பெற்றுள்ளான்.**

**களிமண் உருவங்கள் செய்வதில் திறமைமிக்க இம்மாணவனது பேட்டி, சென்னைத் தொலைக்காட்சி, 'கண்மணிப் பூங்கா' நிகழ்ச்சியில் ஒளிபரப்பாகியுள்ளது.**

**இம்மாணவன் திறமைக்கு ஓர் எடுத்துக்காட்டு:**

**நீங்கள் இங்கே காணும் பாரதிதாசன் உருவமாகும். புதுவையில் கடற்கரையில் இருக்கும் சிலையைப் பார்த்து, இம்மாணவன் களிமண்ணில் செய்த சிறிய உருவமே இது.**



**கற்பனை என்னும் முரட்டுக் கம்பளியில் புகுந்து கொண்டு தன் உடலுக்கு மட்டும் சூடேற்றி, வீசுகின்ற வாடைக் காற்றிலிருந்து தப்பித்துக் கொள்ள முயன்றவரல்லர் பாவேந்தர். தாம் கண்ணுற்றதைத் தம் நெஞ்சின் வழி உன்னிப் பார்த்துச் சமுதாயக் கேடுகளை நீக்கும் சம்மட்டியாய் மாறியவர் பாவேந்தர்.**



# மரக்காலும் மண்ணாங்கட்டியும்!

**-கலைமாமணி டாக்டர் மன்னர் மன்னன்.**

மரக்கால்-மண்ணாங்கட்டி- பாவேந்தர் தமது நாடகங்க்ளில் உலவ விட்ட இரண்டு நாடக மாந்தர்களின் பெயர்கள் இவை.

பிள்ளை பிறந்து பிறந்து இறந்து போனபின், பிறக்கும் குழந்தைக்குக் குப்பன், குப்பாயி என்றும், மண்ணாங்கட்டி எனவும் பெயர் சூட்டி, அதனைத் தக்க வைத்துக் கொள்ள முயல்வது புதுவைப் பகுதியில் நிலவும் நம்பிக்கை.

குழந்தையே பிறக்காமல் இருந்து நீண்டகாலம் காத்திருந்து, ஏதோ தெய்வ வழிபாட்டின் பயனாய்ப் பிறந்தது என்ற கருத்தில் பிச்சை, பிச்சாண்டி என்ற பெயரிடுவதும் சில மாவட்டங்களில் வழக்கம்.

இவ்வாறு எந்தப்பழக்க வழக்கத்திற்கும் நம்பிக்கைக்கும் உட்படாத மரக்கால் எனும் பெயரையும், மண்ணாங்கட்டியையும் தம் நாடக மாந்தர்களாக்கித் தம் ஆழ்ந்த கருத்தினைப் பாவேந்தர் புலப்படுத்தி இருக்கிறார் என்றெண்ணத் தோன்றுகிறது.

புதைந்திருக்கிறது. பெயர் வைப்பதில் எந்த விதமான கூரிய நோக்கும் இருக்கவில்லை என்பது ஒன்று. நாய், ஒருவரைப் பின்பற்றி வளைய வரும் பழக்கம் உடைய விலங்கு. ''படித்த பெண்கள்'' நாடகத்தில் கதைத் தலைவன் பொன்னனோடு அடிக்கடி வெளியூர் செல்லும் பாத்திரம். ஒன்றைச் சுட்டிக் காட்டுவதோடு, தானும் அந்தப் பொன்னனுடன் செல்வதையும் உணர்த்துமாறு உள்ளது. நன்றிக்குக் குறியீடாக நாய் விளங்குவதே போல் இந்த மரக்காலும் விளங்குகிறான்!

மிக அதிகமாகக் குறுக்கிட்டுப் பேசும் பழக்கம் உடைய மரக்கால்,

''என்னடா நீ ஒரு பக்கம் குளறிக் கொட்டுகிறாய்'' என்று பொன்னன் கேட்கையில்,

''அதுவா கொட்டிக்கிச்சிங்க'' என்று விடையளிக்கிறான்.

முகத்தல் அளவையில் மாகாணி, படி, மரக்கால் என்பன பண்டைக்காலந்தொட்டு தமிழகத்தில் புழங்கி வருகின்றன.

''படித்த பெண்கள்'' நாடகத்தில் வருகிறான் மரக்கால். மகிழ் உந்து ஓட்டுவது இவன் வேலை. இகழ் ஒன்று, தான் பணிபுரியும் குடும்பத்திற்கு வருவதாயின் அதனைத் தடுத்துப் புகழ் சேர்க்கும் இனிய நெஞ்சம் இவனுக்கு. யாரையும் ''எடுத்தேன் கவிழ்த்தேன்'' என்று பேசுவான். ஆனால் நகைச்சுவை ததும்பும் அவன் பேச்சில் !

தனக்கு ஏன் இப்படிப் பெயரிடப்பட்டது என்று அவனே விளக்குகிறான்: ''ஒரு காரணமா வச்ச பேருங்க இது. ஆராவது எங்கியாவது போனா கூடப் போவுது பாருங்க அது என்னாங்க, நாயி; அந்த நாயை எங்கப்பா மரக்காலால் அடிச்சாருங்க, அப்பத் தானுங்க நான் பொறந்தேன். அதோட்டு எம் பேரு மரக்கான்னு வச்சிட்டாராம் எங்கப்பா.'' விளக்கமா இது! விலா நோகச் சிரிக்க வைக்கும் குறிப்பு! ஆயினும் இதில் சீரிய கருத்தொன்று

இரண்டு படி மரக்கால், நான்கு படி மரக்கால் என்றெல்லாம் உண்டு.

''என்ன உன் பாட்டுக்கு படியாலும் மரக்காலாலும் அளக்கிறாய்?'' என்று கேட்டால், பொய் அளவின்றிச் சொல்லப்படுவதாகப் பொருள்படும் அன்றோ?

இப்படிப் பொய்க்குக் குறியீடாகிவிட்ட ஒரு பெயரை எதற்குச் சூட்டினார் பாவேந்தர்,

அளவின்றி அடிக்கடி பேசுகிறான். இடக்கு மடக்காக எதையாவது பொடி வைத்துப் பேசுகிறான்.

சில நேரங்களில், உண்மையில்லாததையும் சொல்லுகிறான். ஆனால் இவன் சொல்லும் ஒரு துளிப் பொய் கூட, தீமை எதையும் ஏற்படுத்த

வில்லை என்பது நாடகத்தைப் படித்து முடித்த வுடன் நமக்குத் தெரிய வருகிறது.

'பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்'

— என்ற குறட்பாவுக்கு இலக்கணமாய்ப் பொலி கிறான், மரக்கால்,

பொன்னனின் பெண்ணாசை ஒரு நாள் பொங்கிப் புயலாகிக் கரைகடக்கிறது. கட்டை உடைத்துப் புறப்பட்டான், மரக்காலின் மனைவி யிடமே தன் கைவரிசையைக் காட்டுகிறான். தடுத்துக் கொள்கிறாள் பொன்னனின் மனைவி. அவளும் மரக்காலும் பின் ஒருகால் தக்க சமயத் தில் பொன்னனைத் திருத்தி நல்வழி சேர்க்கின்றனர்.

பொன்னாசை கொண்ட பொன்னன், தன் தம்பியைக் கொன்று விட்டு அவனின் சொத்தைக் கவரத்திட்டமிடும் போது, அவனுக்கு உடன்பட்ட வன் போல் நடித்துத் தம்பியைக் காத்து அண்ண னின் மனம் திருந்தச் செய்கிறான். பொன்னனின் மனைவிக்கும் அவளின் உடன் பிறந்தாளுக்கும் உற்ற காவலனாகவும் மரக்கால் தொண்டு செய்து தலைசிறந்த சமுதாய சீர்திருத்தவாதியாய்த் துலங்கு கிறான்.

இப்படிப்பட்ட தூய நெஞ்சம் கொண்ட வனுக்கு மரக்கால் என்று பெயர் வந்த காரணம் என்ன என்று முதலில் நமக்கு விளக்கிய பாவேந்தர், நன்றியில் நாயாக மட்டுமின்றி நற்குண நாயக னாகவும்சித்திரித்துக காட்டுகிறார்.

'அதிகம் பேசும்' மரக்கால் இவ்வாறு எனில், பேச்சு அறவேயில்லாத செயல் வீரன் 'மண்ணாங் கட்டி' அமைதி நாடகத்தில் இடம் பெற்றுப் பொன்னாங்கட்டியாகப் போற்றப்படுகிறான்.

மண்ணாங்கட்டி - எதற்கும் பயன் படாத எள்ளலுக்குரிய பொருள்.

ஆனால், பாவேந்தரின் மண்ணாங்கட்டியோ தனக்கு மட்டும் பயனற்றவன். பிறரின் நலனுக் காகத் தன்னைக்கரைத்துக் கொண்டவன்.

அவனின் ஒவ்வோர் அசைவிலும் ஊர் நலம், உயர் நோக்கம்! சூழ்ந்து வினையாற்றும் இவன், பேசுவதேயில்லை. சொந்தச் சுகத்தை எண்ணு வதே இல்லை.

இவ்விரு மாந்தர்களையும் படிக்கும் போதெல் லாம் என் கண்முன் 'குயில்' சிவாவின் உருவம் வந்து நிற்கும்.

நகைச்சுவை இழையோடும் பேச்சும், நல்ல நோக்கத்தில் வீச்சும் உடைய சிவா என்ற சிவப் பிரகாசர், எங்கள் குடும்ப நலனில் அளப்பரிய அக்கறை உடையவர். எவரையும் எள்ளி நகை யாடுவார், எதிரியைப் பந்தாடுவார் தம் வினை யாற்றும் திறனால்!

பாரதியாரால் 'குயில்' என்ற செல்லப் பெயர் சூட்டப்பெற்றவர்.



## பாவேந்தர் குடும்பத்தவர்

இவரே மரக்காலோ என்று எண்ணுவதற்கு எண்ணற்ற நிகழ்ச்சிகள் உண்டு.

'படித்த பெண்கள்' நாடகத்தில், மரக்கால் சூழ்ந்து வினையாற்றும் பகுதிகள், சிவாவும் பாவேந் தரும் தம் வாழ்க்கையில் ஆற்றியவையே என்று கூறச் சான்றுகள் உண்டு.

மண்ணாங்கட்டி - ?

பாவேந்தர் நெட்டப்பாக்கம் சிற்றூர் மக்களின் நலம் காக்கத் தம் ஈடுபாட்டை எவ்விதம் காட்டி னாரோ - எந்த மனத்துணிவுடன் செயல்புரிந் தாரோ அவற்றை ஒத்திருக்கின்றன.

கற்பனை என்னும் முரட்டுக் கம்பளியில் புகுந்து கொண்டு தன் உடலுக்கு மட்டும் சூடேற்றி, வீசுகின்ற வாடைக்காற்றினின்று தப்பித்துக் கொள்ள முயன்றவரல்லர் பாவேந்தர்.

தாம் கண்ணுற்றதைத் தம் நெஞ்சின் வழி உன்னிப் பார்த்துச் சமுதாயக் கேடுகளை நீக்கும் சம்மட்டியாய் மாறியவர் பாவேந்தர்.

அவரின் படைப்புகளின் வீச்சு, தன்னலம் அற்ற சமுதாயத்தைப் படைத்திட வழி கோலட்டும். அவரின் படைப்புகள் என்றென்றும் மன மாசும் தூசும் துடைத்து மக்களின் மேம்பாட்டுக்கு வழி காட்டட்டும்! ●



# கவிஞரின் கடமையுணர்வும் காலந்தவறாமையும்

புதுவை ஆர்.எஸ்.டி. மூர்த்தி

**பாவேந்தர் அவர்களின் காலந்தவறாமை, கட்டுப்பாட்டுணர்ச்சி, அவர் மக்கள் பால் வைத்திருந்த பெருமதிப்பு ஆகிய வற்றை விளக்கும் நிகழ்ச்சி.**

குடந்தை திரு. ஆர்.பி. சுந்தரம் அவர்கள் தந்தை பெரியார் அவர் களின் நம்பிக்கைக்குரிய பிரமுகரா வார். ஒருமுறை அவரை நேரில் காணக்குடந்தை சென்றேன். எனக் கும், பாவேந்தர் பாரதிதாசனுக்கும் உள்ள தொடர்பும், நெருக்கமும் அவருக்கு நன்றாகத் தெரியும்.

எனவே, குடந்தை அரசினர் கல்லூரியில் நிகழ இருக்கும் ஒரு இலக்கிய நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ''திருக்குறள்'' பற்றிச் சிறப்புரை ஆற்றுவதற்காக எப்படியும் கவிஞரை அழைத்துக் கொண்டு வரவேண்டு மென்று அன்புடன் கேட்டுக் கொண் டார். நானும் அடுத்த புகைவண்டி யிலேயே புறப்பட்டுப் புதுவைக்கு வந்து சேர்ந்தேன். கவிஞரைநேரில் கண்டு நிகழ்ந்த செய்தியைச் சொன் னேன். அவர்களும் அப்படியா! சரி- புறப்படுவோம் என்று மகிழ்வுடன் கூறினார்கள். அன்றிரவே நாங்க ளிருவரும் குடந்தை சென்றடைந் தோம்.

குடந்தை ஆர்.பி. சுந்தரம் அவர் களின் வீட்டுக்கருகிலேயே, தஞ்சை பரிசுத்த நாடார் அவர்களின் பூந் தோட்டம் ஒன்றிருந்தது. அதன் மையப் பகுதியில் அழகான வீடு ஒன்று, அதில் தான் தி.க. பிரமுகரும், பாவேந்தர் பால் மிகுந்த பற்றும் ஈடுபாடும் கொண்ட திரு எஸ்.கே. சாமி அவர்கள், குடும்பத்துடன் தங்கியிருந்து பூந்தோட்டத்தையும் பராமரித்து வந்தார்கள். கவிஞர் அவர்கள் குடந்தை செல்லும் போதெல்லாம் அப்பூந்தோட்ட வீட்டில் தான் தங்கியிருப்பார்கள். அதிலே அவருக்கு அவ்வளவு மகிழ்ச்சி. அந்த வீட்டில்தான் இம்முறையும் நாங்கள் போய்த் தங்கினோம்.

பகலுணவை முடித்துக் கொண்டு ஓய்வெடுத்துக் கொண்டிருந்தபொழுது கல்லூரி மாணவர்கள் சிலர் திர ளாக வந்து, மாலை 6 மணிக்கு நிகழ்ச்சி நடக்க இருப்பதாகவும், அதில் கவிஞர் அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றி நிகழ்ச்சி யைச் சிறப்பித்து நிறைவு செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொண் டார்கள். கவிஞர் அவர்களும் அம் மாணவர்களிடம் சிறிது நேரம் மனங் கலந்து அளவளாவிவிட்டு, ''சரி யாக 5,30 மணிக்கு நான் கல்லூரிக்கு வந்து விடுகிறேன். துல்லியமாக 6



ஆர்.எஸ்.டி. மூர்த்தி

மணிக்கு நிகழ்ச்சியைத் தொடங்கி விட வேண்டும். இந்நிகழ்ச்சியை முடித்துக்-கொண்டு உடனே திருச்சி செல்ல வேண்டும். மறுநாள் திருச்சி யில் சில நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வேண்டியிருப்பதால், எந்தவிதமான காரணங்கொண்டும் சிறிதுகூட எதிலும் காலதாமதம் ஏற் பட்டுவிடக் கூடாது'' என்று கண்டிப் பாகச் சொல்லி அனுப்பினார்கள். மாணவர்களும் 'சரி ஐயா', என ஒத்துக் கொண்டு விடை பெற் றார்கள்.

சொன்னவாறே சரியாக 5.30 மணிக்கு கவிஞர் அவர்களும் நானும் கல்லூரிக்குச் சென்றோம். மாணவர் களும் மற்றவர்களும் அன்பாக எங்களை உபசரித்து ஒரு கூடத்தில் அமரச் செய்தார்கள். அங்கு பல பிரமுகர்களுடன் பலவகையான செய்திகளைப் பேசிக் கொண்டு இருந்தோம். மணி 6 ஆயிற்று; 6-30-ம் ஆயிற்று, பேச்சு மேடைக்கு வரும்படி எங்களை யாருமே வந்து அழைக்கவில்லை. கவிஞருக்கு மன நிலை மாறிவிட்டது. உடனே கவிஞர் என்னைப் பார்த்து ''என்ன இது? நாழியாகிறதே! என்னவென்று பாருங்கள்'' என்றார்கள். நான் மேடைப் பகுதிக்குச் சென்று பார்த் தேன். அங்கு இரசிகமணி டி.கே. சிதம்பரநாதனார் அவர்களின் சொற் பொழிவு நடந்து கொண்டிருந்தது. அவர் பேசும் தோரணையைப் பார்த்தால் அவ்வளவு விரைவாக முடிப்பவராகத் தெரியவில்லை. இந்த நிலைமையை வந்து கவிஞரிடம் சொன்னேன்.

கவிஞர், உடனே சினங்கொண்டு, புறப்பட்டுவிட்டார்கள். இந்நிலைமை யைப் புரிந்து கொண்ட சில மாண வர்கள் வந்து கவிஞர் அவர்களைத் தடுத்து நிறுத்தி ''ஐயா, மற்றொரு பகுதியில் திறந்த வெளிநாடக மேடை அமைந்திருக்கின்றது. நாடக மேடை யில் மக்கள் நிறையக் கூடியிருக் கிறார்கள். அங்கே வந்து இரண்டொரு கருத்துக்களைச் சொல்லுங்கள்'' என்று கேட்டுக் கொண்டார்கள்.

'அப்படியா, இதோ வரேன் '' என்று சொல்லி நாடக மேடைக்குப் போனார். அங்கே மக்கள் நிறையப் பேர் திரண்டிருந்தார்கள். அம் மக்களைப் பார்த்து, கவிஞர் ''உங்கள் மனத்தை நிறைவு செய்ய முடியாத நிலையை இங்கு நிகழ்ச்சி நடத்து பவர்கள் உண்டாக்கி விட்டாங்க. 6 மணிக்கு திருக்குறள் பற்றிப் பேச வேண்டும் என்று- என்னைக் கூப் பிட்டு விட்டு மாலை 6.45 ஆகிறது. அந்நிகழ்ச்சியை இதுவரையில் துவக் காமல் காலம் கடத்துவதற்காக

பாரதிதாசனின் 96-வது ஆண்டு பிறந்த நாள் விழாவைப் புதுவை அரசு 1986-இல் கொண்டாடிய போது, அக்காலத்தில் தன்னுடன் பணியாற்றிய புரட்சிக் கவிஞர் பாரதிதாசனைப் பற்றி, எம்.பி. ரொலான் (முன்னாள் பொதுக்கல்வி இயக்குநர்) அவர்கள் எழுதியிருந்த பிரஞ்சு மொழிக் கட்டுரையொன்றின் தமிழாக்கம் வருமாறு:



# இவர்தான் பாரதிதாசன்

**எம்.பி. ரொலான்**

**(தமிழாக்கம் - புதுவை சந்திரஹரி)**

டூப்ளே சிலை போலப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுக்கும் கடற்கரைப் பகுதியில் சிலை உண்டு. சமூக-பொருளாதார அடிப்படை மாற்றங்களைக் கொணர்வது இவர் இலட்சியம். அவர் தனது பல எண்ணங்களைச் செயல்படுத்த விரும்பினார். வாழ்வு முழுமையும் அவர் கடைப்பிடித்த எண்ணங்கள் அவை. அவருடைய ஆத்மார்த்தக் கலையுணர்வு, புலமை ஆகியவை எப்போதும் அவருடைய முகத்தில் பிரதிபலித்தன. அவர் முகம் ஆழ்ந்த சிந்தனையில் தோய்ந்திருக்கும், வயதால் அமைதி பெற்றிருக்கும். சமுதாயத்தை அழுத்திக் கொண்டிருந்த ஏற்றத் தாழ்வுகள் இவரைச் சீற்றங் கொண்டு பொங்கியெழச் செய்தன.

இவரை 'வாத்தியார் கனககசுப்புரத்தினம்' என்று தான் அழைப்பார்கள். கனககசுப்புரத்தினம் என்பது அவர் இயற்பெயர். அரசுத் தமிழ் மொழியாசிரியராக இருந்தார். தமிழ் மொழியாசிரியரை விட, பிரெஞ்சு மொழியாசிரியர் தகுதி மிக்கவராக வைக்கப்பட்டிருந்த காலம் அது.

கனககசுப்புரத்தினம் ஓரளவு உயரமான தோற்றமுடையவர். பலமான உடலமைப்பு உடையவர். அமெரிக்கன் மாடல் என்றழைக்கப்பட்ட விதத்தில் தலைமுடியைச் சீவி விட்டிருப்பார். கைகள் திரண்டுருண்ட நல்லமைப்புக் கொண்டவை. நன்கமைந்த சதுர மீசை. சாதாரண மூக்குக் கண்ணாடி தான் அணிந்திருப்பார். அதற்குள் அசாதாரணக் கண்கள். தெறித்துநின்ற புருவங்கள். வெற்றிலையால் சிவந்த வாய். ஜிப்பா அணிந்திருப்பார். விரைந்து நடக்கும் இயல்புடையவர். நிமிர்ந்து நடப்பார். வேட்டியின் ஒரு முனையைக் கையில் பிடித்தபடி நடப்பார். இத்தகைய குறிப்பிடத்தக்க தோற்றத்தால் அவர் மற்ற தமிழாசிரியர்களிலிருந்து மாறுபட்டிருப்பார். அவர்களும் பணிவும் எளிமையும் மரியாதையும் உள்ளவர்கள்தான்.

1926-இல் மயிலம் முருகன் மீது கவிதை இயற்றினார் பாரதிதாசன். பாரதியும் பாராட்டும்படி அப்போதே தமிழ்த்தாய்க்கு ஓர் அழகிய கோட்டை கட்டும் பணியைத் தொடங்கி விட்டார் அவர் எனலாம்.

பாரதி பாதையில் சென்று 1930-இல் 'சஞ்சீவிபர்வதத்தின் சாரல்' என்று ஓர் காவியம் செய்யுளில் இயற்றினார். அதில் பல மூடப் பழக்கவழக்கங்களைச் சாடினார்.

அவர் சக்திமிக்க சுதந்திர எண்ணம் கொண்டவர். ஓர் சிறந்த போர் வீரர் போலத் திகழ்ந்தார். நிர்வாகம், சமயம் போன்றவற்றில் தாம் கண்ட முரண்பாடுகளை எதிர்த்தார். அது அவருக்கு [illegible]யாக இருந்தது; வாழும் முறைமையாக மிளிர்ந்தது.

அவர் எளிதில் கோபம் கொள்ளும் இயல்புடையவர்; விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல் வரம்பு மீறிய சொற்களால் சாடுவார்.

ஒரு சமயம், ஒரு சொற்பொழிவிற்கெனத் தமிழ்நாட்டிலிருந்து வந்தார் ஒரு கல்வியாளர். அவர் தமிழ், சமஸ்கிருதம் நன்கு கற்றவ்ர். அவ்விழாவிற்குப் பாரதிதாசன் சென்றிருந்தார். சொற்பொழிவாளர் பேச்சின் இடையே இளைய தலைமுறைப் புலவர்களைப் பற்றி பேசினார். இத்தகைய புலவர்களின் செய்யுட்களில் பெரிய சுவையேதுமில்லை. இலக்கிய மதிப்பும் இல்லை என்று கூறி-பாரதியார், கனககசுப்புரத்தினம் போன்றோர்களின் நூல்களை எடுத்துக்காட்டாகக் குறிப்பிட்டார்!

அவர் அக்காலத்தில் நிலவியிருந்த ஒரு கருத்தையே அப்படிக் குறிப்பிட்டார். அப்பொழுது திடீரென எழுந்தார் அவையிலிருந்த கனககசுப்புரத்தினம். பேச்சாளரை இடைமறித்து நிறுத்தினார். பின்பு பொரிந்து தள்ள ஆரம்பித்தார் - "புதிய கவிதைகளைப் பற்றி உனக்கென்ன தெரியும்? அவற்றைப் புரிந்து கொண்டு நுட்பம் அறிய உனக்கு என்ன தகுதியிருக்கிறது? உனக்குக் கால்கள் ஊனம். இரு கைத்தடிகளைக் கொண்டு நடக்கின்றாய். வழக்கமான விதிமுறைகளின்படி முறையாக ஆசிரியர் ஒருவரிடம் நன்கு பயிலவும், பல இலக்கியங்களைக் கற்கவும் உனக்குத் தடைபோடப்பட்டுள்ளது. எப்படி உன்னுடைய முறையற்ற வாயாடித்தனமான பேச்சினைக் கேட்டுக் கொண்டிருப்பது?" என்றார்.



அதிர்ந்துபோன பேச்சாளர், நண்பர்களுடன் அங்கிருந்து வெளியேறினார். இது ஒரு கடுமையான செயல். கொடூரமானதும் கூட அல்லவா?

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பலமான தமிழ்ப்பற்று உடையவர். தனக்கு நியாயம் என்று படுவதற்கு மட்டுமே இசைவார். எப்போதும் பலவீனர்கள் பக்கம் சாய்ந்திருப்பார். பலமுடையவர்களைத் துணிந்து எதிர்த்து நிற்பார். ஆட்டு மந்தைகளுள் ஓர் ஆடாக அவர் இருக்க விரும்பியதில்லை. அவரது கணீரென்ற குரல், அவரது பேச்சுக்குத் தனி அழகைத் தந்தது. எளிமையாக விளக்கி மக்களுக்குப் புரிய வைத்துச் சிரிக்க வைப்பார். அவரும் சேர்ந்து சிரிப்பார். அவர் தம் பண்பறிந்த சிலர் அவரிடம் தொடர்ந்து பழக அஞ்சியதில்லை.

அந்நாளில், பள்ளியாண்டு இறுதியில், கோடை விடுமுறைக்கு முன் பள்ளித் தலைமையாசிரியருக்கு விருந்தளித்துப் பரிசளிப்பது என்பது வழக்கம். அதற்கு அனைத்து ஆசிரியர்களும் ஒப்புதல் அளிப்பார்கள், தலைமையாசிரியருக்கு வருத்தம் ஏற்படக் கூடாது என்பதற்காக. ஆனால் அதைக் கனககசுப்புரத்தினம் ஒரு சில ஆசிரியர்களோடு சேர்ந்து எதிர்த்தார். விழாநாள் அன்று 3-ஆம் வகுப்பு மாணவர்கள் கையில் மாலை பூச்செண்டு மற்றும் எலுமிச்சம், பழங்களைக் கொடுத்து அவர்களைத் தலைமையாசிரியரின் அறைக்குள் அழைத்துச் சென்றார். வேறுவழியின்றித்தலைமையாசிரியரும் கோபத்தை அடக்கிக் கொண்டு மாணவர்களை வாழ்த்தும் நிலைக்குத் தள்ளப்பட்டார். இப்படி அந்த வழக்கத்தை மாற்றினார்.

37 ஆண்டுக்காலம் ஆசிரியராகப் பணிபுரிந்த கனககசுப்புரத்தினம், மற்றவர்களிலிருந்து எப்போதும் மாறுப்பட்டேயிருந்தார்.

3 அல்லது 4-ஆம் வகுப்புக்குப் பாடம் நடத்தியபோதும், அதனை அவர் இழிவாய் நினைத்ததில்லை. முழு அர்ப்பணிப்போடு தன் கடமையைச் செய்தார். பணியில் மிகுந்த மகிழ்ச்சி கொண்டிருந்தார். அவர் குரல் கேட்டு மாணவர்கள் நடுங்கிய போதும், மகிழ்வுடன் அவர் வகுப்பு நடத்துவதை ஆர்வத்துடன் அவர்கள் செவிமடுத்தனர். கரும்பலகையில் படங்கள் கோடுகள் போட்டுப் புதுவிதமாக அவர் போதிக்கும் விதம் மாணவர்களை மிகவும் கவர்ந்தது. அக்காலத்தில் தினமும் ஒரு நன்மொழியைக் [illegible] எழுதி [illegible] தருதல் வேண்டும். பாரதிதாசனும் அவ்வாறு நன்மொழிகள் எழுதி வந்தார். அவையே பின்னர் 'பாரதிதாசன் ஆத்திசூடி' என்று புத்தகமாக வெளியிடப்பட்டது.!

அந்நாளில், கருத்து முரண்பட்ட இரண்டு ஆசிரியர்கள் மாணவர்களைப் பங்கிட்டுக் கொள்வது வழக்கம். பாரதிதாசனுக்கு எதிராக நின்றவர்ஆசிரியர் துரைசாமி முதலியார். இவர் இலக்கண நூல் வல்லார். கவிஞரும்கூட. இவர்கள் இருவருமே கல்விக் களஞ்சியமாக விளங்கிய பங்காரு பத்தர், பெரியசாமிப் பிள்ளை ஆகியோரிடம் முறையாகக் கல்வி பயின்றவர்கள்.

துரைசாமி முதலியார் பழைய இலக்கண இலக்கியங்களுக்காக வாதிடுவார்; கனககசுப்புரத்தினம் புதிய இலக்கண இலக்கியங்களுக்குத் துணை நிற்பார்.

மாணவர்களின் சந்தேகங்களை விளக்கும்போது ஆசிரியர்களின் கௌரவம் அதில் குடி கொள்ளும். ஒருவர் ஒரு விதமாகச் செய்யுளை விளக்குவார். மற்றவர் அதையே வேறு விதமாக விளக்கி, அதுவே உண்மையுரை என்று சாதிப்பார். இம்முறையில் இவ்விருவருக்கும் இடைத் தரகர் மூலமாகச் சொற்போர் நிகழும். சுப்புரத்தினம் பாரதியின் சீடர் என்ற நிலையில் [illegible]யாமல் மிடுக்காக நின்றார். துரைசாமி முதலியார் ஒரு பண்டிதர்க்குரிய அமைதியோடு திகழ்ந்தார். இவ்விரு புலவர்களின் போராட்டத்தையும் பலர் ரசித்தனர்.

கனககசுப்புரத்தினம் பல பத்திரிகைகளை வெளியிட்டார். கிணற்றுத் தவளையாக இருந்த சில புலவர்களை இலக்கியங்களில் ஈடுகொள்ளச் செய்தார். தமிழில் வல்லவர் என்பதற்காக அவர் பிரெஞ்சு மொழி இலக்கியங்கள் மீது வெறுப்பைக் கொண்டிருக்கவில்லை. பிரெஞ்சு இலக்கியங்களிலும் மற்றவர்களுக்கு ஆர்வத்தை ஊட்டினார்.

நடுநிலை நின்றாய்ந்த எவரும் அவரிடம் பொதிந்து கிடந்த எண்ணக் குமுறல்களை, எதிர்ப்பார்ப்புகளை மண்டிக் கிடந்த புரட்சி நிலைகளை உணராமல் இருந்திருக்க முடியாது.

கனககசுப்புரத்தினத்திற்குள் ஊடுருவிய பாரதிதாசன் சிறந்த புரட்சி எழுத்தாளர், அசாதாரணத் துணிவு உள்ளவர், எதிர்காலத்தில் புகழேணியின் உச்சிக்குச் சென்றிட வல்லவர் என்பதை அப்போதைய நிலையில் அவரை நன்கு அறிந்தவன் என்பதால் என்னால் முன்கூட்டியே உணர முடிந்தது. இது எனக்குப் பெருமை தானே!

Regd. No 18 / PY 17 Prix : 2 Rs.

**LE TRAIT-D'UNION**

**Organe de l'amitié franco-indienne** JUILLET 1986

Directeur de la Publication : N. PARAMANANDA MARIADASSOU Tél: 4147 Vol. XLII No. IX

Rédaction, Administration : 214, rue Barathi PONDICHERRY 605001 (India) TAL-BCBS

## Baradidâssan perce sous Canaga Souppourattiname

A l'occasion du 96e anniversaire de naissance de Baradidassan que le Gouvernement de Pondichéry a célébré le 9 mai dernier, notre collaborateur M. P. Rollin a bien voulu évoquer ici quelques souvenirs personnels qu'il a gardés de ce poète, son ancien collègue.

M. A. L. A.

Face à la mer(1) qu'il a souvent chantée et devant un autre révolutionnaire pacifique, Baradidassan se dresse immobile, un rouleau de parchemins à la main, comme celui de la statue de Dupleix dont on lui avait donné la place, sous la poussée des raz-de-marée de l'histoire qui apportent des changements radicaux, parfois éphémères.

Son regard passant par-dessus les flots bleus du golfe du Bengale fixe l'horizon pour voir poindre le jour où se réalisera l'idéal multiple qu'il a poursuivi pendant toute la vie et son âme d'artiste, non seulement de poète, qui a cherché le sourire de la beauté, mais aussi d'amoureux des formes et des couleurs, se reflète sur son visage glabre et pensif, calmé par l'âge, débarrassé des indignations violentes provoquées par les iniquités pesant sur la société.

Si ceux qui l'ont connu dans la force de l'âge laissent leur imagination remonter le cours du temps et raniment les images couvant sous la cendre des souvenirs, ils se rappelleront cet homme original et dynamique appelé dans son quartier Vâttiar Canaga Souppourattiname, instituteur public de langue indienne, appartenant à un cadre inférieur à celui d'instituteur de langue française, ce qui était normal à cette époque où le drapeau français flottait sur le Territoire de Pondichéry, à cette époque où les élèves ânonnaient dans les manuels d'Histoire «notre pays s'appelait autrefois la Gaule».

C. Souppourattiname était un homme d'assez grande taille, d'une forte carrure, aux mains souples et fines, aux cheveux peignés à la mode dite alors américaine, de devant en arrière, sans raie médiane comme c'était l'habitude, à la moustache bien fournie, taillée en brosse, aux yeux malicieux derrière des verres ordinaires, sous des sourcils broussailleux, à la bouche souvent rougie par les chiques de bétel.

Il portait une chemise-veste et marchait d'une allure rapide, la tête haute, tenant l'extrémité du sômane à la main, débordant d'énergie. Sous cet aspect extérieur, il différait beaucoup des autres maîtres de tamoul, ses collègues doux et modestes, effacés et polis.

Sa vaste culture tamoule, ses travaux dans son atelier de poésie étaient pour lui une source de juste fierté.

N'avait-il pas déjà en 1926 composé des vers, appréciés des connaisseurs, sur Mourougane, le dieu du temple de Mayilam, qui chaque année se rend à Pondichéry, en palanquin, pour la fête de Mâcymagam ? N'avait-il pas fait ainsi ses preuves devant ses émules, appartenant à l'École des Anciens très attachés aux formes stéréotypées de la poésie, léguées par les siècles et amoureux de vers sybillins, lourds de mots chargés de vétusté, mais vides de pensées nouvelles et originales? N'avait-il pas été félicité par Baradi lui-même quand sur son invitation il composa une poésie [illegible] du poète visionnaire dont il [illegible] pour toute la vie ? N'était-il pas [illegible] d'une chapelle où l'on [illegible] du temps, le chef d'une écurie où l'on entraînait les jeunes gens aux examens tamouls de la colonie?

Délaissant les sentiers battus, n'avait-il pas en 1930 publié, en marchant sur les traces de Baradiar, un roman en vers, Sandjivi Parvadattine Sâral où se révélaient le poète satirique et le virulent contempteur des religions et des superstitions des années à venir? D'esprit fort indépendant, batailleur en diable, il était souvent en lutte contre les autorités administratives, religieuses, contre les bonzes des chapelles littéraires; le combat, c'était un plaisir pour lui, une raison de vivre; l'écrivain engagé qu'il deviendra plus tard y apprenait le maniement des armes et y imaginait des bottes originales.

Très susceptible quand on l'attaquait sur ses vers, il laissait alors libre cours à sa colère, il se défendait, dents et griffes dehors, sans se soucier

1) Sa statue est maintenant dans le parc Baradi.

(இந்தப் பக்கத்திலுள்ள கட்டுரை வெளியிடப்பட்ட பிரெஞ்சு ஏடான 'இணைப்புக்கோடு' ஜூலை 1986-ன் நகல் இது. இதழின் முதல் பக்கத்திலேயே இக்கட்டுரை வெளியாகியிருப்பது குறிப்பிடத்தக்கது.)

# சந்தனக்கல்!



திருமதி சரசுவதி கண்ணப்பன்

**தனது தந்தையாரின் தந்தையார் எப்போதும் சந்தனப் பொட்டுடனேயே காட்சி தருபவர் என்பதைச் சொல்லி, சந்தனம் இழைக்கப் பாவேந்தர் பட்டபாட்டை நகைச் சுவையோடு எடுத்துச் சொல்லுகிறார் அவரது தலைமகள்:**

பாவேந்தரைப் பற்றி எழுத வேண்டுமென்றால் நீண்டதோர் கட்டுரை எழுத நேரம் தேவைப்படும். அவர் வாழ்க்கையில் எல்லாமே சுவையான நிகழ்ச்சிகள்தாம் !

ஒரு சமயம் பாவேந்தருக்கு 12 வயதில் நிகழ்ந்த சம்பவம் ஒன்று இதோ! பாவேந்தரின் அப்பா கனகசபை முதலியார் காலையில், மாலையில், நெற்றியில் சந்தனப்பொட்டு வைத்துக் கொள்வது வழக்கம். கடையில் வாங்கிய சந்தனம் வைத்துக் கொள்வதில்லை. சந்தனக்கல்லில் சந்தனக் கட்டையை நீர் விட்டு இழைத்துத்தான் உபயோகப் படுத்தி வந்தார்.

இவ்வாறு சந்தனச் சாந்தைத் தயாரித்துக் கொடுப்பதுதான் பாவேந்தரின் அன்றாட வழக்கம். இழைத்து, இழைத்து சந்தனக்கல்லே தேய்ந்து மிகவும் இளைத்து விட்டது. இதுபற்றி அப்பாவிடம் பாவேந்தர் கூறினார். அப்பாவோ இரண்டு மூன்று மாதம் கடந்தும் காதில் போட்டுக் கொள்ளவில்லை. ஒரு வெள்ளிக்கிழமை பாவேந்தர் அப்பாவிடம் சொன்னார். "ஏம்பா நீங்கள் சந்தனக்கல் வாங்கித் தரவில்லையென்றால் சந்தனம் இழைக்க முடியாத நிலைதான் அப்பா!" என்று சொன்னார்.

எப்பொழுதும் தந்தையாரிடம் வெகுவாக மரியாதை வைத்திருப்பதால் கடிந்து சொல்லவும் முடியாத பாவேந்தர் சனிக்கிழமை காலை ஏழு மணிக்கு, பெரிய வீடு ஆகையால் வீட்டின் முன்புறம் சந்தனம் அறைக்க ஆரம்பித்தர். கல் இலேசாக இருந்த காரணத்தால் நகர்ந்து, நகர்ந்து வந்தது. பாவேந்தரும் அதனுடன் நகர்ந்து, நகர்ந்து



சரசுவதி-கண்ணப்பன்

கடைசியில் நடுரோட்டிலேயே அப்படி இழைத்துக் கொண்டிருக்கும்போது, தெருவில் போனவர்கள் "ஏம்பா சுப்பு இங்கே வந்து சந்தனம் இழைக்கிறாய்?" என்று கேட்டனர்!

பாவேந்தர் சொன்னார்- "நான் வந்து ரோட்டில் சந்தனம் இழைக்கவில்லை, இந்தச் சந்தனக்கல் தான் இங்கு நகர்ந்து என்னை இழுத்துகிட்டு வந்துட்டுது" என்றார்.

இதற்குள் கனகசபை முதலியார் வந்து சம்பவத்தைப் பார்த்தார். "நான் சந்தனக்கல் வாங்கி வரவில்லை என்பதால் இந்தப் பயல் இப்படி எல்லோரும் கேட்கும்படி நடுத்தெருவில் வந்து சந்தனம் இழைக்கிறான்" என்று சொல்லி வருத்தப் பட்டிருக்கிறார்.

அடுத்த நாளே- சந்தனக்கல் ஒன்றை வாங்கி வந்து கொடுத்துவிட்டார், அவர் தந்தையார். இதை என்னுடைய தந்தையார் அடிக்கடி எங்களிடம் சொல்லி மகிழுவதுண்டு! ●

## பாவேந்தரின் குடும்பப் பெயர்கள்

தேசியகவி பாரதியோடிருந்த நாளில் தேசியமும் தெய்வபக்தியும் புரட்சிக்கவிஞரை ஆட்கொண்டிருந்தன; ஆகவேதான் அவர் தம்முடைய மக்கட் செல்வங்களுக்கெல்லாம்- சரஸ்வதி, கோபதி(மன்னர் மன்னன்), வசந்தா (வேனில்), ரமணி(அழகி) எனும் பெயர்களைச் சூட்டினார்.

பிற்காலத்தில், தமிழுணர்வால் பண்பட்ட பாவேந்தர் தமது பெயரன்-



பெயர்த்திகளுக்கு இட்ட பெயர்கள் யாவும்- அமுதவல்லி, தென்னவன், பாரதி, செல்வம், மணிமேகலை, தமிழ்ச்செல்வம், பாண்டியன், பாரி, சேரன், புகழேந்தி, மல்லிகை, இளமுருகு, முல்லைக்கொடி என்பனபோலத் தனித் தமிழ்ப் பெயர்களாகவே அமைந்தன!



# பெண்ணுக்குக் கல்வியே பெருமை தரும்

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்



**மகள்**

அம்மாஎன் காதுக்கொரு தோடு - நீ
அவசியம் வாங்கிவந்து போடு!
சும்மா இருக்கமுடி யாது - நான்
சொல்லிவிட்டேன் உனக்கிப் போது!



**தாய்**

காதுக்குக் கம்மல்அழ கன்று - நான்
கழறுவதைக் கவனி நன்று!
நீதர் மொழியைவெகு பணிவாய் - நிதம்
நீகேட்டு வந்துகாதில் அணிவாய்!

**மகள்**

கைக்கிரண்டு வளையல் வீதம் - நீ
கடன்பட்டுப் போட்டிடினும் போதும்!
'பக்கி'என் றெனைஎல் லோரும் - என்
பாடசாலை யிற்சொல்ல நேரும்!

**தாய்**

வாரா விருந்துவந்த களையில் - அவர்
மகிழ உபசரித்தல் வளையல்!
ஆரா வமுதேமதி துலங்கு - கண்ணே
அவர்சொல்வ துன்கைகட்கு விலங்கு!

**மகள்**

ஆப ரணங்கள்இல்லை யானால் - என்னை
ஆர்மதிப்பார் தெருவில் போனால்?
கோபமாஅம்மா இதைச் சொன்னால் - என்
குறைதவிர்க்க முடியும் உன்னால்!





**தாய்**

கற்பது பெண்களுக்கா பரணம் - கெம்புக்
கல்வைத்த நகைதீரா இரணம்!
கற்றபெண்களை இந்த நாடு - தன்
கண்ணில்ஒற்றிக் கொள்ளும்அன் போடு!

(1931-இல், தானே எழுதி நடத்திய 'சிந்தாமணி' நாடகத்திற்காக எழுதிய பாடல்)

**நடனம்:**
**செல்வி. ஆனந்தலட்சுமி**

17024

இப்போது நாடக மேடையில் வந்து என் கருத்தைச் சொல்லச் சொன்னால், நான் என்ன சொல்ல முடியும்? இப்போதுள்ள நிலையில் இதுதான் என் கருத்து. நிகழ்ச்சி நடத்துபவர்கள் இதையெல்லாம் புரிந்து கொண்டு செயல்பட வேண்டும். எங்களுக்குப் பல இடங்களில் பல நிகழ்ச்சிகள் இருக்கலாமல்லவா? அதில் காலத்தோடு சென்று கலந்து கொள்ள வேண்டாமா? கலந்து கொள்ளவில்லையென்றால், எதிர் பார்த்துக் காத்திருக்கும் மக்கள் என்னை நினைப்பார்கள்? மக்களை ஏமாற்றலாமா? மாணவர்கள் இனியாவது இதையெல்லாம் நன்கு சிந்தித்துச் செயல்பட வேண்டும். இதோ இப்பொழுதே நான் திருச்சிக்குப் போயாக வேண்டும்'' என்று புறப்பட்டு விட்டார்கள்.

நகரத்திற்கும் கல்லூரிக்கும் இடையே ஓடிக் கொண்டிருக்கும் ஆற்றின் மேலமைந்த சிறு ஒற்றையடிப் பாலத்தின் மேல் நடந்து போய்க் கொண்டிருந்தார். அப்போது சில மாணவர்கள் ஓடிவந்து வழியை மறித்து 'ஐயா, ஐயா, டி.கே.சி. நிகழ்ச்சி முடிந்து விட்டது. தாங்கள் வந்து நிகழ்ச்சியை நடத்திக் கொடுங்கள்'' என்று கேட்டுக் கொண்டார்கள். கவிஞர் அவர்கள் மேலும் கோபமாகக் குறுக்கே நின்ற மாணவர்களிடம் 'இன்னொரு சமயம் பார்த்துக் கொள்ளலாம் வழியை விடுங்கள்' என்று கையைப் பிடித்து இழுத்து விட்டுவிட்டு என்னைக் கூடக் கவனிக்காமல், ஒரு ஒற்றை மாட்டு வண்டியில் ஏறி நேரே திரு. ஆர்.பி. சுந்தரம் அவர்கள் இல்லத்திற்குச் சென்று விட்டார்கள். மாணவர்கள் என்னிடம் வந்து எப்படியாவது கவிஞரைச் சமாதானப்படுத்தி நிகழ்ச்சியை நடத்திக் கொடுக்கும்படி செய்யுங்கள் என்று கேட்டார்கள். நானும் முயற்சிக்கின்றேன்! எனக் கூறி ஒரு வழியாக சுந்தரம் அவர்கள் இல்லம் சென்று அவர்களிடம் நடந்த விவரத்தைச் சொன்னேன். அவர் மாணவர்களின் செயலுக்கு மிகவும் வருந்தி, என் மூலமாகக் கவிஞரை வரவழைத்து அவரை நல்லபடியாய் நடத்தித் திருப்தி செய்ய முடியாத நிலைக்கு மிகவும் வருத்தம் தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்தச் சமயத்தில் கல்லூரி மாணவர்களும், மற்றும் சில தோழர்களும் அங்குவந்து சேர்ந்தார்கள்.





தந்தை பெரியாருடன் ஒரே மேடையில் புரட்சிக்கவிஞர்.

நான் அவர்களிடம் கவிஞரைச் சென்று பாருங்கள் என்றேன். அவர்களும் கவிஞர் அருகே சென்று ''அய்யா, கோபித்துக் கொள்ளல் கூடாது. எப்படியும் நீங்கள் எங்களுக்கு ஒரு நிகழ்ச்சியை நடத்திக் கொடுக்க வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக் கொண்டார்கள்.

கவிஞரவர்கள் ''சரி, இப்பொழுது நான் திருச்சி செல்கின்றேன். அங்கு இரண்டொரு நிகழ்ச்சிகளை முடித்து விட்டு நாளை மறுநாள் புதுவைக்குத் திரும்புவேன். முடியுமானால் நாளை மறுநாள் குடந்தை டவுன்ஹாலில் நிகழ்ச்சி ஏற்பாடு செய்து கொண்டு திருச்சி அசோகா லாட்ஜீக்குத் தகவல் தெரியப்படுத்துங்கள்,'' என்று சொல்லி மாணவர்களை அனுப்பி வைத்து விட்டார்கள். அன்றிரவு திருச்சிக்குச் சென்று அசோக லாட்ஜில் (ஜங்ஷனுக்கருகில்) தங்கிக் கொண்டோம்.

மறுநாள் காலை கவிஞர் திருச்சி வந்துள்ளதை அறிந்த திருலோக சீத்தாராம் அவர்கள் விடுதிக்கு வந்து கவிஞரைச் சந்தித்துப் பேசிவிட்டுச் சென்றார். இவர் மூலமாகப் பல அன்பர்களுக்கும் செய்தி சொல்லி அனுப்பியதும் அனைவரும் வந்து கவிஞரிடம் பேசிக் கொண்டிருந்தனர். அன்று கவிஞருக்கு இரண்டு நிகழ்ச்சிகள் ஒன்று திருச்சி வானொலியில் ''ஊழ்'' என்பதைப் பற்றிப் பேசுவது. இரண்டு: நாடகத்தந்தை என்று சொல்லப்படும் யதார்த்தம் பொன்னுசாமிப்பிள்ளை அவர்களுக்கு எஸ்.எஸ். இராஜேந்திரன் அவர்கள் மூன்று நிதியுதவி நாடகங்களை நடத்திக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அதில் முதல் நாள் நாடகம் பேரறிஞர் அண்ணா தலைமையிலும், இரண்டாம் நாடகம் முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் தலைமையிலும் நடந்தது. மூன்றாம் நாள் நாடகம் நம் கவிஞர் பாவேந்தர் தலைமையில் நடக்க இருந்தது.

எனவே, இன்று இந்த இரண்டு நிகழ்ச்சிகளையும் நிறைவு செய்ய வேண்டியிருந்தது. காலை 10 மணியளவில் வானொலி நிகழ்ச்சிக்கான உரையைத் தனியறையில் உட்கார்ந்து கவிஞரவர்கள் எழுதிக் கொண்டிருந்தார். அப்போது யதார்த்தம் பொன்னுசாமி அவர்கள் அங்கு வந்து கவிஞரைப் பார்க்க வேண்டும் என்று என்னைக் கேட்டார். சிறிது நேரம் இருங்கள். கவிஞர் உள்ளே வேலையாக இருக்கின்றார் என்று சொன்னேன்.

கொஞ்சநேரம் பொறுத்துக் கவிஞர் என்னை அழைத்தார். உள்ளே சென்றதும் யதார்த்தம் உங்களைப் பார்க்க வந்திருக்கிறார் என்று சொன்னேன். ''இருக்கட்டும், முதலில் இதைப் பாருங்கள்'' என்று சொல்லி ''ஊழ்'' என்பதைப் பற்றி வானொலியில் பேசுவதற்காக எழுதியதை என்னிடம் படித்துக் காட்டினார்கள்.

பிறகு யதார்த்தத்தைக் கூப்பிடுங்கள் என்றார். கூப்பிட்டேன். அவர் மிகவும் பணிவாகவும், அடக்கமாகவும், பவ்யமாகவும் உள்ளே வந்து வணக்கம் தெரிவித்தார். பின்னர் 'அய்யா இன்று இரவு நாடகத்துக்குத் தலைமை தாங்க வேண்டும்' என்று கேட்டார். அதற்குத்தானே வந்திருக்கிறேன் என்று கவிஞர் சொன்னதும், ''பகலுணவு கொண்டு வந்திருக்கிறேன். அறைக்கு அதை எடுத்து வந்து விடுகிறேன்'' என்று சொல்லி, சிறிது நேரத்தில் உணவு வகைகளை எங்களிடம் ஒப்படைத்துவிட்டு, 'வருகிறேன் அய்யா', என்றதும் ''9 மணிக்கு நாடகத்துக்கு வந்து விடுகிறேன்'' என்று சொல்லி அனுப்பி விட்டார்.

பகல் உணவை முடித்ததும் ஓய்வெடுத்துக் கொண்டபின் சுமார் 5.30 மணியளவில் கவிஞரும், நானும், திருலோக சீத்தாராம்மற்றும் சில நண்பர்களுடன் வானொலி நிலையம் சென்றோம். 6 மணியளவில் நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு நிலையத்தார் தந்த காசோலையைப் பெற்றுக் கொண்டு அருகிலிருந்த ''காதல்'' ஆசிரியர் அரு. இராமநாதன் அலுவலகத்திற்குச் சென்றோம். இராமநாதன் அவர்கள் காசோலையைக் காசாக்கிக் கொடுத்தார்.

பின்னர் நேரே, பாரதியாரின் மனைவியார் குடியிருந்த வீட்டிற்குச் சென்று, அந்த அம்மையாரிடம் பேசியிருந்துவிட்டு, மற்றும் பல நண்பர்களைப் பார்த்து விட்டு இறுதியில் நாடகம் நடக்கின்ற தேவர் ஹாலுக்குச் சென்றோம். இரவு நாடகத் தலைமையை முடித்துவிட்டு ஓட்டல் - அசோகாவுக்குத் திரும்பினோம்.

மறுநாள் காலை குடந்தையிலிருந்து கல்லூரி மாணவர்கள் குடந்தை டவுன் ஹாலில் 6 மணியளவில் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருப்பதாகவும், அதில் கவிஞர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுமாறும் தந்தி கொடுத்திருந்தார்கள்.

கவிஞர் அவர்கள் தந்தி மூலம் ஒப்புதல் தெரிவித்தபின் மாலை குடந்தை புறப்படுவதற்கு ஆயத்தம் ஆனோம். பகலுணவு ஓய்வுக்குப் பிறகு சாமான்களை வண்டியிலேற்றி, குடந்தைக்கு டிக்கெட்டும் வாங்கச் சொல்லி ஆள் அனுப்பி இருந்தோம். புறப்படும் வேளையில் நண்பர்கள் வந்து பேசிப் பேசி காலம் கடந்து கொண்டபோனது. குறிப்பிட்ட நேரம் வந்ததும் கவிஞருக்கு நினைவுபடுத்தினேன். அவசர அவசரமாகப் புறப்பட்டு ரயிலடிக்குப் போகும் போது இரயில் விசிலடித்து புறப்படும் நிலையில் இருந்தது. இதைக் கண்ட கவிஞர் இரயிலைத் தவற விட்டுவிடுவோமோ என்ற அச்சத்தில் வேக வேகமாக குறுக்கு வழியாகச் சென்று ஒரு தண்டவாளத்தைக் கடந்து மறு தண்டவாளத்தில் உள்ள இரயில் பெட்டியில் ஏற முயற்சி செய்தார். இதைக் கண்ட இஞ்சின் டிரைவர் கவிஞர் வண்டியில் ஏறும் வரை தாமதித்து பிறகு வண்டியை நகர்த்தினார். குடந்தையில் வண்டியை விட்டு இறங்கியதும் கவிஞர் நேரே டவுன்ஹாலுக்குப் போய்விட்டார்கள். நான் பெட்டி படுக்கையை ஒரு வண்டியில் ஏற்றிக் கொண்டு ஆர்.பி. சுந்தரம் வீட்டிற்குச் சென்றேன். எங்கள் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்த சுந்தரம் அவர்கள் என்னைக் கண்டதும், 'கவிஞர் எங்கே? வரவில்லையா?' என்று மிகவும் ஆவலோடு கேட்டார்கள். 'எனக்கு முன்னால் தானே வந்தார்கள்' என்று சொல்லி, பின் நானும் அவரும் நேரே டவுன் ஹாலுக்குச் சென்றோம்.

போனால், அங்கு கவிஞர் மேடையில் பேசிக் கொண்டிருந்தார்கள். கூட்டம் நிரம்பி வழிந்தது. பேச்சின் சுவாரசியத்தில் ஈர்க்கப்பட்ட ரசிகர்கள் தங்கள் அன்பையும், ஆதரவையும் அடிக்கடி கையொலி மூலம் ஆரவாரஞ் செய்து தெரிவித்துக் கொண்டிருந்தார்கள். இப்படியாக இனிய நிகழ்ச்சி இரவு 10 மணியளவில் முடிந்தது.

திருச்சியில் ஓயாது உடனிருந்த நான், திருச்சியில் இரயிலடியில் பிரிந்த அவரைக் குடந்தைக் கூட்டம் முடிந்து தான் சந்திக்க முடிந்தது. கவிஞர் அவர்களது காலந்தவறாமையையும் அவரின் கட்டுப்பாட்டுணர்ச்சியையும், மக்கள்பால் அவர் வைத்திருந்த பெருமதிப்பையும் எண்ணி எண்ணிப் பேசிப் பேசி மகிழ்ந்தோம்.

இன்றைய தலைவர்களும், இளைஞர்களும் இந்தக் காலந் தவறாத ஒழுக்க நெறியைக் கடைப்பிடித்தால் வருங்கால மக்களுக்கு வழிகாட்டுதலாகாதா?

## என் கவியாசான்

நீரைப்போல் அண்ணாவும், திண்மை கொண்ட
நிலத்தைப்போல் பெரியாரும், கரிகாற் சோழன்
தேரைப்போல் அழகிரியும் இருந்த நாளில்
தீயைப்போல் பாவேந்தர் இருந்து வந்தார்;
நேருக்கு நேராகப் பகைவர் தம்மை
நின்றெதிர்க்கும் பெருங்கவிஞர் தம்வாழ் நாளில்
ஆருக்கும் அஞ்சாமல் வாழ்ந்து வந்தார்
அவரேஎன் கவியாசான்; அதங்கோட் டாசான்!

—உவமைக் கவிஞர் சுரதா

170216

## சிறுசேமிப்புத் துறை




எதிர்பாரா இன்னல்கள் ஏற்படுமுன் சேமியுங்கள். வரி செலுத்துவதைத் திட்டமிட்டு, இன்ஷூரன்ஸ் பாதுகாப்பும் பெறுங்கள். இன்றே கீழ்க்கண்ட சிறுசேமிப்புத் திட்டத்தில் ரூ.1,000/-ம் அதற்குமேலும் முதலீடு செய்து தனிநபர் விபத்து இன்ஷூரன்ஸ் பாலிசியைப் பெறுங்கள்.

**கீழ்க்கண்ட திட்டங்களின்கீழ் தனிநபர் விபத்து இன்ஷூரன்ஸ் பாதுகாப்பு கிடைக்கும்:**

- கிசான் விகாஸ் பத்திரம்
- தேசிய சேமிப்புத் திட்டம்
- அஞ்சலக மாதாந்திர வருமானத்திட்டம்
- அரசுப்பணியாளர்களுக்கான டெபாசிட் திட்டம் 1989
- தேசிய சேமிப்புப்பத்திரம் 8வது வெளியீடு
- 15 வருட பொது சேம நலநிதி
- அஞ்சலக குறித்தகால டெபாசிட்

**வருமான வரி விலக்குப் பெற தேசிய சேமிப்பில் முதலீடு செய்வீர்**

| வசதிகள் | தேசிய சேமிப்பு பத்திரம் 8-வது வெளியீடு | பொதுசேம நலநிதி | தேசிய சேமிப்பு திட்டம் |
|---|---|---|---|
| வட்டி | 12% | 12% | 11% |
| முதலீட்டுக்கு வருமான வரிவிலக்கு | ரூ.50,000 பிரிவு 88-ன்கீழ் | ரூ.50,000 பிரிவு 88-ன்கீழ் | ரூ.40,000 பிரிவு 80CCA-ன் கீழ் |
| வட்டிக்கு வருமான வரிவிலக்கு | வருமான வரிச் சட்டம் பிரிவு 88-ன்கீழ் | வருமான வரியில் இருந்து வட்டிக்கு முழுவிலக்கு | வட்டி தொகை சேரும்போது வருமான வரி விலக்கு |
| செல்வ வரி | ரூ.5,00,000 வரை விலக்கு | முழுவிலக்கு | முழுவிலக்கு |
| டெபாசிட்டுகளுக்கான வரம்பு | வரம்பு கிடையாது | ரூ.60,000 | ரூ.40,000 |

**தமிழக அரசின் சிறப்பு சலுகைகள்:**

- ஒவ்வொரு ரூ.500/- முதலீட்டிற்கும் ஒரு இலவச பரிசு கூப்பன் மூலம் 262 பரிசுகளில் ஒன்றைப் பெறும் வாய்ப்பு.
- தமிழ்நாட்டில் குறிப்பிட்ட சில திட்டத்தில் முதலீடு செய்யும் ஒவ்வொரு ரூ.1,000/- முதலீட்டிற்கும் 1% வரை ஊக்கத்தொகை.
- 1.1.91 முதல் 31.3.91 வரை தமிழ்நாட்டில் குறிப்பிட்ட திட்டங்களில் முதலீடு செய்யும் ஒவ்வொரு ரூ. 1000/- முதலீட்டிற்கும் தனிநபர் விபத்து இன்ஷூரன்ஸ் வசதி. பிரீமியத்தை தமிழக அரசே செலுத்துகிறது.

DIPR/1.89 NSS/91/ARES

**இலவச தனிநபர் விபத்து காப்புறுதி திட்டம் — அதிகபட்ச நஷ்ட ஈடு ரூ. 50,000/-**

ரூ.50,000/- வரை தனிநபர் விபத்து இன்ஷூரன்ஸ் வசதி பெறுங்கள்.

கூடுதல் சலுகைகள்:
- இந்திய அரசின் முழுப்பாதுகாப்பு
- சொத்து வரிவிலக்கு
- உங்கள் குழந்தைகள் பெயரில் முதலீடு செய்து வருமான வரிவிலக்கு பெறுங்கள்.

யுனைடெட் இந்தியா இன்ஷூரன்ஸ் நிறுவனம், சென்னை.
தனிநபர் விபத்து இன்ஷூரன்ஸ் பாலிசி கிடைக்குமிடம்:
அனைத்து மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் மற்றும்

இயக்குநர்
**சிறுசேமிப்புத்துறை**
143, அண்ணாசாலை, சென்னை-600 002.
தொலைபேசி: 840223/846209.




# பாவேந்தர் ஒரு படப்பிடிப்பு

**புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களைப்பற்றி, அவரோடு, புதுவையில் அந்தக் காலம் முதல் மிக நெருங்கிப் பழகிய சிலரை நேரில் சந்தித்து விசாரித்துக் கேட்டறிந்தவற்றை இங்கே தொகுத்தளிக்கிறார், நமது சிறப்பு நிருபர் -இல. இராசேந்திரன்.**

### கேசவ செட்டியார்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள், தன்னுடைய இளமைக் காலத்தில், புதுச்சேரியின் பல்வேறு தெருக்களில் வாடகை வீடுகளில் குடியிருந்தார். சேலம் மாடர்ன் தியேட்டர்சாரிடம் பணியாற்றச் சென்று வந்த பிறகுதான் பெருமாள் கோயில் தெரு 95-ஆம் எண்ணில் உள்ள இல்லம் இவரால் வாங்கப் பட்டது. அதற்கு முன்பு முத்தியால் பேட்டை தம்புநாய்க்கன் தெருவி லெல்லாம் அவர் குடியிருந்தார். 1930-இல் அவர் ஆசிரியராகப் பணியாற்றியபோது புதுவை, தம்பு நாய்க்கன் தெருவில் 18-ஆம் எண் வீடுதான் பாவேந்தரின் வீடு. அவர் வீட்டையடுத்த மூன்றாவது வீட்டுக் காரர் திரு. கேசவ செட்டியார் என்பவராவார்.

முதியவரான அவரிடம் - "பாரதி தாசன் இந்த வீதியில் குடியிருந்த அந்தக் காலத்தில் எப்படியிருந்தார்"? என்று நாம் கேட்ட கேள்விக்கு அவர் சொன்ன பதில் இது:

"அப்பல்லாம் அவர் வ.உ.சி. ஹைஸ்கூல்ல வாத்தியாரா இருந்தாரு. ஆஜானுபாகுவான தோற்றம்; அதுக்கேத்த முரட்டுக் குணம் இருந்தது. 'சத்ஃபிகாங்கிற' ஏழாங்கிளாஸ் வரைக்கும் தான் அந்த ஸ்கூல்ல; அவர் அதுல மூணாங் கிளாஸ் வாத்தியாரா இருந்தப்ப நான் அதே ஸ்கூல்ல - ஆனா அவருகிட்ட இல்ல- படிக்கிறேன். பசங்க மட்டுமில்ல; மத்த வாத்தியாருங்களும் அவர்கிட்ட பயப்படுவாங்க..." என்று நிறுத்திச் சிரித்துக் கொண்டு மேலே தொடர்கிறார்:

"பாரதிதாசன் பெரிய கவிஞர்னு தானே இப்பல்லாம் கொண்டாடறாங்க?... அவர் அப்ப ஒரு நல்ல ஆர்ட்டிஸ்ட்டா இருந்தாரு. இதே தெருவுலதான் அவுரு வீடு. மக சரஸ்வதி... மகன் கோபதி (மன்னர் மன்னன்), இன்னொரு மக வசந்தால் லாம் இங்கே இருந்தாங்க. அவங்க ஒவ்வொருத்தரை நிக்க வெச்சி அவர் எழுதின அற்புதமான ஓவியங்களையெல்லாம் நான் பார்த்திருக்கிறேன். ஓவியம்னா... சும்மா அப்பிடி இப்பிடி கிறுக்கறது இல்லே - பெயிண்டிங்! வாட்டர் கலர்... ஆயில் பெயிண்டிங் எல்லாம்! வண்ண ஓவியமே அழகா எழுதுவார் அவர்! இங்க மிஷன் ஸ்ட்ரீட்ல இருக்கிற வ.உ.சி. ஸ்கூல் சுவர்ல அவர் அப்ப எழுதின ஏர் உழவன்... ஏத்தம் இறைக்கிறவன்... நடவு நடறவ படமெல்லாம் இன்னமும் அழியாமெ இருக்கு; போனா பார்க்கலாம். அப்பல்லாம் அவருக்கு மேடைங்கள்ல அழகாப் பேசத் தெரியாது..." என்று சொல்லிக் கொண்டே சென்ற அவரிடம் குறுக்கிட்டோம்-

"அவர் முப்பது ஆண்டுகளுக்கு மேல், ஆசிரியராக நல்லபடி வேலை பார்த்தாலும்கூட, அடிக்கடி ஒவ்வொரு ஊருக்கா அவரை மாத்தி பிரஞ்சு அரசாங்கம் தொல்லை கொடுத்ததாகச் சொல்கிறார்களே?"

"அதெல்லாம் தப்புங்க. அவருக்குத் தொல்லை தரணும்கிறதுக்காக இல்லை; யாரா இருந்தாலும் சரி; இவ்வளவு காலம்தான் ஒரு ஊர்ல வேலை பார்க்கலாம்கிறது பிரஞ்சு அரசாங்கச் சட்டம். அப்பல்லாம், யாரைப் பிடிச்சு சிபாரிசுக்குப் போனாலும் சரி; குறிப்பிட்ட காலத்துக்கு மேல ஒருத்தர் ஒரே இடத்துல வேலை பார்க்க முடியாது. அப்படியொரு கட்டுப்பாடு இருந்ததே தவிர, பாரதிதாசனை மட்டும் ஊர் ஊரா

மாத்தி உபத்திரவம் குடுத்தாங்கிறதெல்லாம் அப்பட்டமான பொய்ங்க" என்றார் திரு. கேசவ செட்டியார்.

## திரு. வ. சுப்பையா

புரட்சிக் கவிஞர் அவர்கள் புதுவை-காசுக்கடைத் தொகுதியில் தேர்தலில் நின்று வெற்றி பெற்றுச் சட்டமன்ற உறுப்பினரானார். அவர் அங்கம் வகித்த மக்கள் முன்னணியே சட்டமன்ற எதிர்க்கட்சியாயிற்று. அப்போது எதிர்க்கட்சித் தலைவராகத் திரு. வ. சுப்பையா அவர்களும், எதிர்க்கட்சியின் துணைத் தலைவராகப் பாவேந்தர் பாரதிதாசனும் இருந்தார்கள். பிற்காலத்தில் திரு. வ. சுப்பையா அவர்கள் புதுவை மாநில அமைச்சராகப் பதவி வகித்ததும் உண்டு.

"நீங்கள் எதிர்கட்சித் தலைவராகவும், பாவேந்தர் புதுவைச் சட்டமன்றத்தில துணைத் தலைவராகவும் இருந்ததால் அவரைப் பற்றி நன்றாக அறிந்திருப்பீர்களே? புரட்சிக் கவிஞரைப் பற்றிய உங்கள் கணிப்பு என்ன?" என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் புதுவை மாநில முக்கியத் தலைவரான திரு வ. சுப்பையா அவர்களை நாம் கேட்டோம். மூத்து முதிர்ந்த அவர், சக்கர நாற்காலியில் இருக்கிற அளவிற்கு உடல் நலம் கெட்டிருந்தபோதும், நலிவோடும்-அதேநேரத்தில், பழைய நினைவுகளால் உண்டான மகிழ்வோடும் நம்மிடம் பேசினார்:

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் 1922-களிலெல்லாம் காங்கிரஸ் பேரியக்கத்தில் இருந்தவராவார். ஒத்துழையாமை இயக்கம், கதர் இயக்கத்தையெல்லாம் அவர்கள் நடத்தியபோது, அவற்றில் இவர் பங்கு மகத்தானதாக இருந்தது. ராஜகோபாலாச்சாரியார் கதர் இயக்கத்தைத் தலைமை தாங்கி நடத்திய போது - இங்குள்ள மகாத்மா காந்தி வீதி, நேரு வீதி போன்றவற்றில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களும், ஜெகனாத கிராமணி, கதர் நடேசன் போன்றவர்களும் தலையில் கதர் மூட்டையைச் சுமந்து கொண்டு வீதி வீதியாகப் போய் விற்றதை நானே பார்த்திருக்கிறேன்; பாரதிதாசனே கூட, அப்போதெல்லாம் கதர்வேட்டி கதர்ச்சட்டைதான் அணிவார்; முரட்டுக் கதர்த்துணியில் ஒரு கோட்டுப் போட்டிருப்பார்!" என்று


வ.சுப்பையா

கூறிச் சற்றே பேச்சை நிறுத்திச் சிரித்துக் கொண்டார், திரு வ. சுப்பையா.

மேலும் அவர் பேசுகையில் தெரிவித்ததாவது:

"தேசியகவி பாரதியாருடன் இருந்ததால் அவரும் தேசியவாதியாகி இருந்தார் என்றுகூடச் சொல்லலாம். அப்போதெல்லாம் அவருடைய பேச்சிலும், எழுத்திலும் தேசிய கருத்துகளின் வலியுறுத்தலே மிகுந்திருந்தது; பக்தி மணம் கமழ்ந்தது; வலியவர்கள் எளியவர்களை அடிமை கொள்ளக்கூடாது; நாடு விடுதலை பெறவேண்டும்; எங்கும் சமத்துவம் நிலவவேண்டும் என்பன போன்ற கொள்கைகளே அப்போது அவரால் வலியுறுத்தப்பட்டன. 1925 திருவண்ணாமலை மாநாட்டுக்குப் பிறகு, பெரியார் ஈ.வே.இராமசாமி அவர்கள் காங்கிரசை விட்டு விலகி, ஈரோட்டைத் தலைமையிடமாகக் கொண்டு 'சுயமரியாதை இயக்கம்' கண்ட பிறகுதான் பாரதிதாசனின் கருத்துகளில் புரட்சிவேகம் முழுமையாக ஏற்பட்டது என்று சொல்லலாம். குறிப்பாகச் சொல்லுவதானால் புதுவை முத்தியால் பேட்டையில் 1927-இல் நடந்த பெரியாரின் பொதுக்கூட்டத்தில் சிலரால் நடத்தப்பட்ட அராஜகங்களே, அவரை அந்த இயக்கத்தில் தீவிரமாக ஈடுபடச் செய்வதாக இருந்தது"... என்று கூறிவிட்டு, திரு. வ. சுப்பையா அவர்கள் நலக் குறைவாக இருந்ததால், ஏதோ மாத்திரையைப் போட்டுக் கொண்டு சிறிது தண்ணீர் குடித்தார். சில நிமிட ஓய்வுக்குப் பிறகு அவர் பேச்சுத் தொடர்ந்தது-

"ஜீவானந்தம் அதே நேரத்திலேதான் சுயமரியாதை இயக்கத்தில் பங்கு கொண்டார் இங்கிருந்து குத்தூசி குருசாமி ஆசிரியராக இருந்த 'புதுவை முரசு' வெளிவரலாயிற்று. பாரதிதாசன் தொடர்ந்து பத்திரிகைகளில் சுயமரியாதைக் கருத்துகளோடு கவிதை கட்டுரையெல்லாம் எழுதலானார்"...

'அவருடைய அரசியல் ஈடுபாடு எப்படி இருந்தது?' என்றோம் நாம்.

"என்னைக் கேட்டால்... அவரால் முழுநேர அரசியல்வாதியாக இருக்க முடியவில்லை என்றுதான் சொல்லுவேன். 1956-இல் புதுவையில் நடைபெற்ற முதலாவது சட்டமன்றத் தேர்தலில், என் தூண்டுதலின் பேரில்தான் அவரும் இங்குள்ள காசுக்கடைத் தொகுதியில் 'மக்கள் முன்னணி இயக்கம்' சார்பில் யானைச் சின்னத்தில், நின்று போட்டியிட்டு வென்றார். அப்போது 39 பேர் உடையதாக இருந்த புதுவைச் சட்டமன்றத்தில் எங்கள் மக்கள் முன்னணி இரண்டாவது பெரும்பான்மை பெற்று எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்தது. நான் எதிர்க்கட்சித் தலைவர்; பாரதிதாசன்தான் துணைத் தலைவர்..."

"சட்டமன்றத்தைப் பொறுத்தவரை நீங்களிருவரும் ஆற்றிய முக்கியப் பணி எதையாவது குறிப்பிட்டுச் சொல்ல முடியுமா?"

"நிறையச் செய்திருக்கோம்; சொல்றேன்... முக்கியமாகப் பாரதியார் பெயரால் இங்கே புதுவையில் அரசு ஓர் பல்கலைக் கழகம் அமைக்க வேண்டும் என்று அப்போது நாங்கள்தான் முதன்முதல் சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றினோம். அதை நான்தான் எழுதினேன்; பாரதிதாசன் முன்மொழிந்து அதன்மீது வலியுறுத்திப் பேசினார். அப்படியிருந்த நாங்கள், இரண்டே ஆண்டுகளில், புதுவையில் சிலருடைய அரசியல் சூழ்ச்சிகளால் எதிரும் புதிருமாகி விலக நேர்ந்தது. பிறகு 1960-இல் நடந்த பொதுத் தேர்தலில் அதே காசுக்கடைத் தொகுதியில் என்னுடைய மனைவி சரசுவதி நின்று பெரும் வெற்றி பெற்றார். பாரதிதாசன் டெபாசிட் இழந்தார்-" என்று கூறிவிட்டுச் சிறிது வருத்தத்துடன் அமைதியானார், அவர்.



"பாரதிதாசன் நூற்றாண்டு தொடர்பாக ஏதாவது சொல்லுங்களேன்?"

"அவர் நூல்களை நாட்டுடைமையாக்கி தமிழ்நாடு அரசு, அவருடைய குடும்பத்தாருக்கு எட்டு இலட்சம் ரூபாய் கொடுத்துப் பெருமைப்படுத்தியது உள்ளபடியே எல்லோரும் பாராட்டத்தகுந்த உதவிகரமான விஷயமாகும். காலத்தில் செய்த உதவி இது. தமிழ்நாடு அரசும், புதுவை அரசும் அவர் குடும்பத்திற்கு இன்னும் நிறையச் செய்யலாம். பாரதிதாசன் இறந்தபிறகு அவருடைய வீட்டைப் புதுவை அரசாங்கமே வாங்கி நினைவகம் ஆக்குவதற்கும், அவர் மகன் மன்னர் மன்னனுக்குப் புதுவை வானொலியில் வேலை கிடைப்பதற்கும் அவர்களின் மகள் வசந்தாவிற்குப் பாரதிதாசன் நினைவகத்தில் நூலகர் வேலை கிடைக்கச் செய்யவும் - அப்போது கூட்டுறவு மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சராக இருந்த நான்தான் மிகவும் பாடுபட்டு உதவி செய்தேன். அதை என் கடமையாகக் கருதினேன். இப்படிப்பட்ட வகையில், பாரதிதாசன் குடும்பத்தாருக்கு அரசாங்கம் மேலும் பல உதவிகள் செய்யலாம் என்பது எனது அபிப்பிராயம்!"

## கவிஞர் தமிழ்க்கோவன்

புதுவை நேரு வீதியில் இருந்த சிற்றுண்டிச் சாலைகளில் புகழ் மிக்கதாக விளங்கிய 'மாத்ரு கபே' உரிமையாளர், பாரதிதாசனுக்கு மிகவும் வேண்டியவராவார். இரண்டு பேரும் ஏகவசனத்தில் பேசிக் கொள்ளுமளவுக்கு நெருக்கமுள்ளவர்களாக இருந்தார்கள். புரட்சிக் கவிஞருடன் நெருங்கிய நட்பினராக இருந்த பிராமணர்கள் சிலரில் குறிப்பிடத்தக்கவரான அவர் இன்றில்லை.

அவருடைய மகன் கவிஞர் தமிழ்க்கோவன், புரட்சிக் கவிஞரின் எழுத்தோவியங்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டவராவார். இலக்கண இலக்கியத் தேர்ச்சிமிக்கவரான அவரிடம் பாவேந்தரைப் பற்றிக் கேட்டபோது இப்படி நம்மிடம் தெரிவித்தார்:

"எங்க மாத்ரு கபேல என்ன பலகாரம் புதுசா போட்டாலும் சரி; எங்கப்பா முதல்ல பாவேந்தர்கிட்ட கொண்டுபோய்க் குடுத்து வாடாம் பார். ஓட்டலுக்கு, அவர், எங்கப்பாவைப் பார்க்க வருவார்; "சுப்புரத்தினம், குளோப்ஜாம் இப்ப போட்டது... சாப்பிட்டுப் பாரு" என்று என் தந்தையார் அதைக் கையிலெடுத்துப் புரட்சிக் கவிஞருக்கு ஊட்டி விட்டதையெல்லாம் நான் பார்த்து ரசிச்சவன். ஒருசமயம் புரட்சிக் கவிஞர் சேலத்துக்குப் புறப்பட்டார். சொல்லிக்கிட்டுப்போக வந்த அவர் மேல... விலையுயர்ந்த 'சென்ட் பாட்டில்' ஒன்றைத் திறந்து அபிசேகமே செய்துட்டார் என் தகப்பனார்..." என்று கூறி நிறுத்தி மனக் கண்ணால் அந்தக் காட்சியை மீண்டும் பார்த்துக் கொண்டவர்போல் சிரித்தார் திரு. தமிழ்க்கோவன் "பாவேந்தருக்கு நல்ல மணமுள்ள சென்ட்... பவுடர் போட்டுக்கிறதெல்லாம் ரொம்பப் பிடிக்கும்!"

சில நேரங்களில் பாவேந்தருடன் இவர் சுற்றுப் பயணங்களும் சென்றதுண்டு. அப்படிச் சென்னைக்கு ஒருமுறை சென்றிருந்தபோது, திருவல்லிக்கேணியில் உள்ள ஒரு புகைப்பட நிலையத்திற்கு அழைத்துப்போய்ப் பாவேந்தரைச் சில புகைப்படங்கள் பிடிக்க உதவியிருக்கிறார் திரு. தமிழ்க்கோவன். தன் வீட்டில் மாட்டியுள்ள சில புகைப்படங்களைக் காட்டி, அவர் இதை நமக்குத் தெரிவித்தார். அவற்றில் பல, இன்று நாம் காணும் புகைப்படங்களாகவே இருந்தன. "அன்னிக்கு, அங்கே பிரபல தமிழ் எழுத்தாளர் ஒருத்தரும் எதிர்பாராம வந்து சேர்ந்தார். ஆசையோட கேட்டு, பாவேந்தர்கிட்ட நின்னு ஒரு படம் பிடிச்சுகிட்டார். சமீபத்துல... அந்தப் படத்தைப் போட்டு, ஒரு



"நாக்குப் பூச்சிகளை ஒழிக்க எல்லா வழிகளையும் பார்த்துட்டேன். கடைசியிலே எங்க கால்நடை மருத்துவர் கொடுத்த பன்மின்த்* தான் பலிச்சுது...பால் நஷ்டம் தராமலே!"




தன்னிகரற்ற
பன்மின்த்*
(மொரண்ட்டெல் டார்ட்ரேட்)

நாக்குப் பூச்சிகளை அழிக்கிறது, பாலைக் காப்பாற்றுகிறது.

''பாழும் நாக்குப் பூச்சிகளால்—அம்மம்ம, நான் பட்டபாடு: பலவீனம் பசியிராது, கறந்த பாலும் குறைவு. பிறகு, எங்க கால்நடை மருத்துவர் தந்த பன்மின்த் தான் பலிச்சுது—அதுவும் ஒரே ஒரு டோஸ்லே!''

பால் இழப்பே இல்லை.

''அருமையான சேதி—எங்க மாதிரி எல்லாக் கறவைகளுக்கும், சினைப் பிராணிகளுக்கும் கூட பத்திரமான மருந்து பன்மின்த். மற்ற மருந்துகளைப் போல் இல்லாமல், பன்மின்த் உபயோகித்த பிராணிகளின் பால், மனிதருக்குக் கெடுதலே இல்லை—நூற்றுக்கு 100 பத்திரமானது.''

சினைக் காலத்தில் எந்த சமயத்திலும் தீங்கற்றது.

''என் தங்கச்சி—பிள்ளைத் தாய்ச்சி—அவளுக்கு ஒத்துக்குமான்னு கவலைப்பட்டேன். ஆனால் பன்மின்த் சினைக் காலம் முழுக்க எந்தக் கெடுதலும் செய்யலை, ஏன், பலவீனக் காலங்களிலே கூட பாதிக்கலை. பக்க விளைவுகளே கிடையாது. குணமானதும் ஆறுதலான சுகம்!''

வசதி மிக்கதும் கூட.

''சாப்பிட வெகு இலகு பன்மின்த். கண்டிவிடுங்க ஒரு குளிகை (எங்க மாதிரி பெரிய பசு எருமைகளுக்கு இரண்டு), உடம்பு சுகமாயிடும்! ஆடு, கன்று மாதிரி சின்னப் பிராணிகளுக்கு மாத்திரையா வருது. சாப்பிடத் தயாரான கரைசலாகவும் கிடைக்குது. வேறென்ன வேணும் நம்மவர்களுக்கு!''

பால் இழப்பே இராது — பன்மின்த்

கால்நடை மருத்துவரிடம் பெறுவீர் சிறந்த மருந்து.

பன்மின்த்*
புழுக்களைக் கொல்லும்! ஆரோக்கியத்தை வெல்லும்!

LINTAS BMT 2 2217 TM

*யூ.எஸ்.ஏ. ஃபைசர் இன்க்.நிறுவன டிரேடு மார்க்.

pfizer

மேலும் விவரமறிய, எழுதவீர் இம் முகவரிக்கு:
ஃபைசர் லிட்., பி.ஓ. பாக்ஸ் நம்பர் 11602, பம்பாய் 400 021.



# பாவேந்தர் ஒரு நல்லாசிரியர்

பாவலர்மணி ''சித்தன்''

பள்ளி ஆசிரியராக ... சிறந்து ...

புதுவையில் பூத்து உலகெலாம் தமிழ்மணம் பரப்பும் தண்டாமரையாக விளங்கியவர் பாவேந்தர் பாரதிதாசனார்.

அவர் தமிழாசிரியராக - நூலாசிரியராக - உரையாசிரியராக - இதழாசிரியராக - நாடகாசிரியராக - இப்படிப் பல்வேறு தகுதிகளைப் பெற்றவர்.

**ஆசிரியர்**

பிஞ்சு உள்ளங்களுக்கு எப்படிக் கல்வி பயிற்றுவிக்க வேண்டும் என்பதை நன்குணர்ந்தவர் அவர். தொடக்கப் பள்ளியில் அவரிடம் பயிலும் வாய்ப்புப் பெற்றவன் யான்.

வகுப்புத் தொடங்கியதும் ''நன்மொழி'' என்று ஒரு தொடரைக் கரும்பலகையில் எழுதிவிட்டுச் சிறு நீதிக்கதைகளைச் சொல்லி அதை அருமையாக விளக்குவார்.

கரும்பலகையிலும், சுவரிலும் வண்ணச் சுண்ணாம்புக் கட்டிகளால் சேவல், பூனை முதலியவை


''சித்தன்''

களை உயிரோவியங்களாக வரைந்து மாணவர்களை மகிழ்விப்பார்.

பல வண்ணத் தாள்களில் அழகிய பல்வேறு வகையிலான பூக்களைக் கத்தரித்துக் காட்டுவார்.

தமது மெல்லிய குரலால் எளிய பாடல்களைப் பாடிக்காட்டி எங்களையும் பாடச் சொல்வார்; பாடல்கள் எளிதில் புரியும்படி அமைந்தவை, இனியவை, பயனுடையவை.

''பிளவு பட்ட குளம்புடையது மாடு
பிளவு படாக் குளம்புடையது குதிரை
முளைக்கும் இரு கொம்புடையது மாடு
முழுவதுமே கொம்பில்லாதது குதிரை.''

இப்படிப் பல.

சிறுவர்களை நிமிர்ந்து நடக்கச் சொல்வார்; எளிய உடற்பயிற்சிகளை அவரே செய்து காட்டி, எங்களைச் செய்யச் சொல்வார்.

பள்ளிக்கூடத் தோட்டத்தில் பாத்தி கட்டி, நீர் பாய்ச்சி பூச்செடிகளை வளர்க்க மாணவர்களை ஊக்குவிப்பார்.

பாத்திகளை மிதிப்பவன்; வகுப்பில் பேசுபவன்; மனப்பாடம் செய்யாதவன் - இவர்களைத் தண்டிக்கத் தவறமாட்டார்; கடமையில் கண்ணாயிருப்பவன் பிழைப்பான்.

நான்காம் வகுப்புக்குத் தமிழ்ப் பாடம் நடத்த வந்தார்; அவர் ஒரு பாடலை நடத்தி முடிக்கும்போது,

பத்திரிகைல அந்த எழுத்தாளர் பாரதிதாசன் தன்னை விரும்பி அழச்சிப் படம் பிடிச்சுகிட்டதாகவும், கூட்டத்துக்கெல்லாம்கூட கூப்பிட்ருக் கிறார்ன்னும் பொய்யா எழுதியிருந்த தைப் பார்த்து வேதனைப்பட்டேன்''...

- என்ற திரு. தமிழ்க்கோவன் ''பாரதிதாசன் நூற்றாண்டு வந்தா லும் வந்தது; அவரைப் பத்தி - அவர் யாரு, எப்படின்னு தெரியாதவங் கள்லாம் எல்லாம் தெரிஞ்சாப்ல கட்டுரையும் புத்தகங்களும் எழுதித் தள்ற வேடிக்கை நடந்துகிட்டிருக்கு!'' என்றார் சிரித்தபடி.

பாவேந்தர் எழுதிய நூல்கள் மட்டுமல்ல; அவரைப் பற்றி மற்ற வர்கள் எழுதிய அத்தனை நூல் களையும் ஒன்றுவிடாமல் வாங்கிச் சேர்த்து வைத்திருக்கிறார் கவிஞர் தமிழ்க்கோவன். இந்தவகையில் தன் மனைவியும் தனக்குத் துணையிருப்ப தாகச் சொன்னார், மகிழ்வோடு.

## திரு மா. தண்டபாணி

புதுவையைத் தலைமையிடமாகக் கொண்டு புரட்சிக் கவிஞர் அவர்கள் கடைசியாக நடத்திவந்த 'குயில்' வார ஏடு அலுவலகமான 'குயிலகத்' தின் நிர்வாகியாக இருந்தவர் திரு. மா. தண்டபாணி அவர்கள். பாவேந்தர் மகள் திருமதி வசந்தா அவர்களை மணந்து, ''மாப்ளே... மாப்ளே!'' என்று இராகத்தோடு, புரட்சிக் கவிஞரால் அன்பொழுக அடிக்கடி அழைக்கப்பட்டார்.

திரு மா. தண்டபாணி அவர் களைச் சந்தித்துப் பாவேந்தர் பற்றி யும் இந்த நூற்றாண்டைப் பற்றியும் பேசிக் கொண்டிருந்த நாம் - ''புரட்சிக் கவிஞர் மிகுந்த கோபக் காரர் என்று சொல்லுகிறார்களே அது மெய்தானா?'' என்று கேட் டோம்.

''அதெல்லாம் இல்லை!'' என்று கூறிவிட்டு, அந்தக் கேள்விக்குச் சற்று விரிவாகவே இவ்வாறு விளக்க மளித்தார் அவர்.

''புதுவை மகாத்மா காந்தி வீதி யில், 85-ஆம் எண்ணுள்ள இடத் தில்தான் பழனியம்மாள் அச்சகம் அமைக்கப்பட்டது; அதுதான் 'குயி லகம்'. 1955-இல் அதை என் பொறுப்பில் ஒப்படைத்தார் பாவேந்தர். நான்தான் அதன் நிர்வாகி அவர்


மா. தண்டபாணி

பாஷையில் சொல்லுவதானால 'அமைச்சர்' ஆம்; அந்தப் பெறுப் புக்கு அவர் வைத்த பெயர் அது!'' என்று கூறி, தனக்குத்தானே ரசித் துச் சிரித்துக் கொண்டார் திரு. மா. தண்டபாணி. சில நிமிட இடை வெள்ளிக்குப் பிறகு அவர் பேச்சு தொடர்ந்தது;

''பழனியம்மாள் அச்சகம் வெச்ச புதுசுல, வில்லியனூர் முனிசிபாலிடில எதுனா வேலை வாங்கிச் செய்து செலவை ஈடுகட்ட எண்ணினேன் நான். கவிஞரும் முடிஞ்சா செய் யுங்க மாப்ளே!'' என்றார். நான் முயற்சி பண்ணினேன். வேலை குடுத்தாங்க. தாள் எல்லாம் சொந் தப் பெறுப்புலயே கடன் வாங்கி நான் அச்சடிக்கத் தொடங்கினேன். தொடர்ந்து வேலை குடுத்தாங்க. எப்பனா, புதுவைக்கு வர்ற வில்லிய னூர் முனிசிபல் செகரட்டரி, வேலை எந்த அளவுல இருக்குன்னு விசாரிக் கறதுக்காகவே எங்க. பிரஸ்சுக்கு வருவார். அவருக்கு... வேலை தர்றா ரேங்கிறதால எதுனா டிஃபன் அஞ்சு ருபாய்க்குள்ள வாங்கித் தருவோம். அவர் எங்ககிட்ட லஞ்சம் கிஞ்சம் கேட்டதில்லை; ரொம்பவும் நல்ல மனுஷன். அவருக்கு பண்ணின செலவை கணக்குலநான் வேறு மாதிரியா எழுதுவேன். ஒருநாள் என் மகன் பாண்டியனை அழைச் சிட்டுக் 'குயிலகத்'துக்கு வந்த கவிஞர், எப்போதும் போலக் கணக்கைப் பார்த்தார். அந்த அஞ்சுரூபா செலவுக் கணக்கை இன்னதுன்னு புரியாமே கோபத்தோட ஒரேயடியா சப்தம் போட்டுட்டு, என் மகனையும் அழச்சி கிட்டு கைரிக்ஷாவுல வீட்டுக்குப் போயிட்டார்...''

- என்று சொல்லித் தனக்குத் தானே சிரித்துக் கொண்டார் திரு. மா. தண்டபாணி. நாம் அவர் முகத்தையே பார்த்தோம்.

''வீட்ல போயி என் மனைவி (பாவேந்தர் மகள்) வசந்தாகிட்டயும் சப்தம் போட்டிருக்கார். நான் வீட்டுக்குச் சாப்பாட்டுக்குப் போனா அப்பவும் அந்தக் கோபம் தீரலே. கவிஞர்கிட்ட ஒரு பழக்கம் என்னன்னா அவருக்கு மேல நாம குரலை ஒசத் திப் பேசினா அடங்கிப் போயிடு வார். அப்படி நான் பேசினேன். பிறகுதான் ''பின்னே என்ன மாப் பிளே ஒண்ணும் விளங்காத கணக்கு அது?'' என்றார் கொஞ்சம் அமைதி யாக. அந்த முனிசிபல் செகரட்டரிக் குக் காபி வாங்கிக் கொடுத்தது தான் அந்தக் கணக்கு என்று நான் சொன் னதும்- ''அதை ஏன் அப்படி ஒளிவு மறைவா எழுதணும்? நேரா விவரமா எழுதிட வேண்டியதுதானே?'' என் றார் கவிஞர்.

''அதெப்படி விவரமா எழுதறது?... நான் அப்படி எழுதி, கணக்கு ஆடிட்டுக்குப் போறப்ப அந்த ஆபீசர் லஞ்சம் வாங்கிருக்கார்னு மேலிடத்துல நடவடிக்கை எடுத்தா... நமக்கு வேலை கொடுத்த புண்ணியத்துக்காக அவரு வேலை காலியாயிடாதா?'' என்று நான் சற்று உரத்த குரலில் கேட்ட துமே கவிஞரின் கோபம் அடியோடு அடங்கிவிட்டது!'' 'ஓ...கோ!'. நீங்க சொல்றதும் சரிதான் மாப்ளே'' என்றார். அமைதியோடும் வியப் போடும். பாவேந்தருக்கு வரும் கோப மெல்லாம் இப்படித்தான் சாதாரண மாக இருக்குமே தவிர, ஆபத்தான தாக ஒருபோதும் இருந்ததில்லை!

## 'கதர்' நடேசன்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரை மட்டுமல்ல; அவரால் பெரிதும் மதித்துப் போற்றப்பட்ட தேசியகவி பாரதியாரையும் நன்கறிந்த பெரி யார் திரு. கதர் நடேசன் அவர்கள். இவரும் பாவேந்தரும் அரசியலில் மாறுபட்ட கொள்கைகளைக் கொண்ட வர்களாக இருந்தாலும் அன்பு கெழு மிய நட்பினர்களாக இருந்து வந்த வர்கள். ஆகவே, கதர்மயமாகக் காட்சி தந்த அவரைச் சந்தித்துப்



புரட்சிக் கவிஞரைப் பற்றிய கருத் தைக் கேட்டோம்.

''நான் ஆயிரத்துத் தொள்ளா யிரத்து நாலுல பொறந்தவன்; என் பத்தேழு வயசு நடக்குது...'' என்று உரத்த குரலில் தெரிவித்த அவர், ஒரு கையால காதை அணைகோலிப் பேசியதிலிருந்தே சரியாகக் காது கேட்கவில்லை என்பதைப் புரிந்து கொண்ட நாம் அவருக்குச் சரியான குரலிலேயே வினாத் தொடுத்தோம்.

''புரட்சிக் கவிஞரிடம் தாங்கள் கண்டு வியந்த சிறப்பம்சம் என்ன ஐயா?

''கவிஞன்கிறதெல்லாம் பெரும் பாலும் எழுதத் தெரிஞ்சவனா மட்டும் தான் இருப்பான்; பாரதிதாசன் அப்படியில்லே; எழுதறதை இசை யோட பாடியும் காட்டுவார்; நல்ல சங்கீத ஞானம் அவருகிட்ட இருந் தது. பாரதிதாசனோட அந்தத் திறமைக் காக... சென்னை ஜெமினி ஸ்டுடி யோவுல ஒரு தடவை கொத்தமங் கலம் சுப்புவே இவர் காலைத் தொட்டுக் கும்பிட்டதை நான் பார்த் திருக்கேன். அப்படியொரு பிரமாத மானசக்தி. சண்முகப் பிரியா, காம்போதி, தோடி ராகத்துலவேல் லாம்... நாதசுரம் வாசிக்கிறதுல... அந்த நாள்ல திருவாடுதுறை ராஜ ரத்தினத்தைத் தட்டிக்கேட்க ஆளில் லைம்பாங்க. அவருக்கும் பாரதி தாசனுக்குமே ஒரு சமயம் ராகதாளம் பத்தின சர்ச்சையே நடந்தது. எப்ப தெரியுமில்ல? 'கவி காளமேகம்' படத்துல ராஜரத்தினம் நடிச்சுகிட் டிருந்தபோதுதான் அது! முடிவா நம்ம பாரதிதாசன்தான் ஜெயிச் சார். தவில் மீனாட்சி சுந்தரம் பிள்ளையே... பாரதிதாசன் இவ் வளவு விஷயாதியான்னு அசந்து போயிட்டார்னா பார்த்துக்குங்க ளேன்!''- உணர்ச்சி வசப்பட்டுப் பேசிக் கொண்டே சென்ற அவர் பேச்சில் நாம் குறுக்கிட்டோம்.

''பாரதிதாசன் யாருகிட்டயாவது முறைப்படி சங்கீதம் படிச்சுகிட்டாரா என்ன?''

''ஆமா! அப்பிடியில்லாம முடி யுமா?... மகாகவி பாரதியார் இங்கே புதுச்சேரி ஈஸ்வரன் கோயில் தெரு வுல வாழ்ந்தப்ப... சுப்பிரமணிய ஐயர்னு ஒருத்தர் இருந்தார்; அவர் பிரஞ்சுக் கல்லூரியில பேராசிரியரா இருந்தார்னாலும்கூட மிகப் பெரிய


கதர் நடேசன்

சங்கீத வித்வான் அவர். அவர், பாரதியார் மேலே ரொம்பவும் பாசமா இருந்தார்... அதே மாதிரி பாரதிதாசன் மேலயும் ரொம்ப அன்பாயிருந்தார். அந்த ரெண்டு பேருக்குமே அந்த சுப்பிரமணிய ஐயர்தான் சங்கீதம் சொல்லிக் கொடுப்பார். ராகதாளம்பத்தி நாள் பூரா அவர்கிட்டநாம கேட்டுகிட்டே யிருக்கலாம்...''

''பாரதிதாசன் மட்டுமில்லாமெ, பாரதியையும் நீங்க பார்த்ததுண்டுன்னு சொல்லுங்க?'' என்று வியப்போடு நாம் கேட்டோம்.

''நல்லா கேட்டிங்களே! பாரதியை யும் எனக்கு நல்லாத் தெரியும். அப்ப இங்கே முருகேசம் பிள்ளைன்னு ஒருத்தர் இருந்தார். வசதியான மனு ஷன். அவர்தான் பாரதியை காப் பாத்தி வந்தார்னு நான் சொல்லு வேன். இதைப்பத்தி எழுத்தாளர் வ.ரா.வே எழுதியிருக்கிறதா எனக்கு ஞாபகம்! முருகேசம் பிள்ளை என்ன செய்வாரு... எப்பனா பாரதிக்கு ஒரு ரூபா பணம் குடுப்பாரு... பாரதி அதை அவருக்குத் தெரியாமே என் கிட்ட குடுத்து... ''போயி லாலா கடைல சீனிமிட்டாய் வாங்கியாடாம் பாரு! ஓட்டமா ஓடிப்போய் கை நிறைய வாங்கிட்டு வருவேன். அது எனக்கு ரெண்டு... பாரதிதாசனுக்கு ரெண்டு குடுப்பாரு பாரதியார். சீனிமிட்டாய்னா எப்படி இருக்கும் கிறீங்க... வாய்ல போட்டா ஐஸ் மாதிரி கரைஞ்சிப் போய்டும்!'' ஆமா, பாரதிதாசன்கிட்ட வியக் கும்படியா என்ன இருந்ததுன்னு கேட்டிங்களே - பாரதிகிட்ட அப்படி என்ன இருந்ததுன்னு கேட்கலியே?'' என்று கேட்டுச் சிரித்தார், அவர்.

''சொல்லுங்கையா, கேட்டுக் கிறோம்!'' என்கிறோம் நாம்.

''பாரதி... ஒரு நாளாவது ஒழுங்கா முறையா வயிறாரச் சாப்பிட்டு நான் பார்த்ததே இல்லீங்க... சீனி மிட் டாய் மாதிரி கண்டதும் சாப்பிடு வாரே தவிர... இப்பிடிச் சாப்பிட்டு கிட்ட மனுஷன் எப்பிடி உயிரோட இருக்கார்னு எனக்கு ஆச்சர்யமா இருக்கும்!''...

பெருமூச்சோடு சிறிது இடை வெளி விட்டுக்கொண்டு மேலும் திரு கதர் நடேசன் சொன்னார்.

''பாரதிதாசன் அப்படியில்லீங்க... ''நல்லா சாப்பிடுவார்; வாத்தியார் வேலை பார்த்தப்ப அவருக்குச் சம் பளம் எவ்வளவு தெரியுங்களா?... இருவத்தியேழு ரூபாய் தான்! அந் தச் சம்பளத்துல... அப்பவே சிக ரெட்டா ஊதித் தள்ளுவார் மனுஷன். அப்பல்லாம்... அக்பர் ஷா, ரூலர் அப்பிடின்னு ரெண்டு வகை ஒஸ்தி சிகரெட்டுங்க வந்தது; பாரதிதாசன் அதான் பிடிப்பார். ஒஸ்தி சிகரெட் டுன்னா விலை எவ்வளவு தெரியும் களா? பத்து சிகரெட் அரையணா! வத்திப் பொட்டி காலணா! பார்க் கிறது வாத்தியார் வேலைன்னாலும் மனுஷன் கம்பீரமா இருப்பார். எதுல யும் முரட்டுத்தனம்தான். வகுப்புல... பெரும்பாலும்.. தமாஷ்தான் கலாட்டா தான்... அதுலயே புள்ளைங்களுக் குத் தமிழ் வந்துடும்!''.

''முரட்டுத்தனம்கிறீங்களே, அத னால... அதாவது பாரதிதாசனால பாதிக்கப்பட்டவங்க உண்டா?''

''அவர் முரட்டுத்தனம் அவ ருக்கே தான் ஆபத்தா இருந்தது. ஆயிரத்து தொள்ளாயிரத்து பத் தொன்பதுல இங்கே தேர்தல் நடந் தப்ப- பாரதிதாசன், குட்டியா சபா பதிங்கிறவருக்குத் தீவிரமா வேலை பார்த்தார். அதுக்காகவே அவரைத் தீர்த்துக் கட்டவெல்லாம் முயற்சி பண்ணினாங்க: நல்லவேளை... மனுஷன் தப்பிப் பொழச்சார்! ●

**மக்களுக்கு நல்ல புத்தியும், எதிலும் சரியான தீர்வு காணக்கூடிய சிறந்த ஆலோசனையும் கொடுப்பதே படித்த பட்டதாரிகளின் அன்றாடக் கடமை யாக இருக்க வேண்டும்.**

**— டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன்**



**பண்பாடு பெறாதவர்களுக்கு மிருந்த சிரமமாக இருப்பதெல்லாம் பண்பட்டவர்களுக்குச் சிரமமாக இராது; சுகமாகவே இருக்கும். இதுவே பண்பாட்டின் இரகசியம்!**

—மூதறிஞர் ராஜாஜி

அப்பாடல் எங்களுக்கு மனப்பாட மாகிவிடும். அத்தகைய தனித்திறமை அவருக்குண்டு.

அவர் விளக்கும் பொருள் நம் கண்முன் நிற்கும். "ஊருக்குக் கிழக்கே உள்ள பெருங்கடல் ஓரமெல்லாம் கீரியின் உடல் வண்ணம்போல் மணல் மெத்தை; அம்மெத்தைமேல் நேரிடும் அலையோ கல்வி நிலையத்தின் இளைஞர் போலப் பூரிப்பாய் ஏறும்; வீழும், புரண்டிடும் - பாராய் தம்பி!"

இப்பாட்டைப் போலவே அவர் பேச்சும் விளங்கும்.

செய்யுள் வகுப்பில் பாடலுக்குக் குறிப்பிடப்பட்டுள்ள பழைய உரையை வகுத்துப் புத்துரை வழங்குவார். அவ்வுரை இக்காலத்துக் கேற்றபடி அமையும்.

திருக்குறளுக்கு அவர் எழுதிய புத்துரையை உலகம் அறியுமே!

பெருந்தேவனார் பாரத வெண் பாவைப் பாடஞ்சொன்னபோது அவர் வீர அபிமன்யுவாகவே மாறி விட்டார்; நடிப்போடு கூடிய வீர வுரை - இன்றும் நெஞ்சில் பசுமை யாக உள்ளது.

**படி**

பாவேந்தர் மாணவர்கட்கு வழங் கிய அறிவுரை 'படி' என்பதே. நல்ல பாடல்களை மனப்பாடம் செய்யச் சொல்வார். இலக்கணப் பிழை களை ஏற்க மாட்டார். படிக்காத வன் பாட்டெழுதுவதை மன்னிக்க மாட்டார்.

**மாணவரிடம் அக்கறை**

ஆசிரியர் தேர்வுக்குப் பாவேந்த ரிடம் பயின்றோர் பலர். அந்நாளில் தேர்வுக் குழுவில் இருந்த சில புல வர்கள் பாவேந்தரிடம் பகைமை யுடையோர்; அவர்கள் தம் சினத்தைப் பாவேந்தரின் மாணவர்களிடம் காட்டு வர். வாய்மொழித் தேர்வில் அவர் களைத் தேறவிடாமற் செய்துவிடு வர். இப்படிக் கெட்டோர் பலர்.

ஒருமுறை பாவேந்தர் தேர்வுக் குழு உறுப்பினராக வந்தார். இதற்கு முன் தேறாமற்போன பலர் தேர்வுக்கு வந்திருந்தனர்.

தேர்வு நடந்தது. தேர்வுத்தாள் களைப் பாவேந்தர் திருத்தினார். தம் மாணவர்கள் அனைவருக்கும் நல்ல மதிப்பெண்கள் கொடுத்துவிட்டார்.

இதையறிந்த மற்ற தேர்வுக் குழு உறுப்பினர்கள் மேலதிகாரியிடம் "சுப்பு - தம் மாணவர்களின் கேள் வித் தாள்களிலிருந்த பிழைகளைத் தம் பேனாவால் திருத்தி, சரி செய்து அதிக மதிப்பெண் கொடுத்து விட்டார்" என்று குறை கூறினர்.

மேலதிகாரி, பாவேந்தரிடம் வந்து, "நீர் உம் பேனாவால் திருத்தி - அதிக மதிப்பெண் கொடுத்து விட்டீர்" என்பது உண்மையா? என்றார்.

உடனே பாவேந்தர் தம் பேனாவை மேலதிகாரியிடம் கொடுத்தார்; அவர் அதைத் திறந்து எழுதிய போது அது எழுதவில்லை; அதில் மை இல்லை.

மேலதிகாரியும், புலவர்களும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண் டனர்.

பாவேந்தர் சொன்னார்: "நான் சிகப்பு மைதானே உபயோகப்படுத் தினேன்" என்று.

மேலதிகாரி சென்றார். தேர்வில் மாணவர்கள் வென்றனர்.

செய்தி என்ன தெரியுமா?


பாண்டியன் பரிசு.
இயல் 6.
கதிர்நாட்டை நோக்கி வேழநாட்டுப் படை!

சீர்மிகுந்த கதிர்நாட்டின் மேலே, அந்தத்
திறல்மிகுந்த வேழநாட்டுப் படைகள்,
போர்தொடங்கப் பாய்ந்தனவாம் கடலைப் போலே!
பொன்னொளியைப் பாய்ச்சுகின்ற தேர்ப்படைகள்,
கார்மிகுந்தாற் போலும் யானைப் படைகள்,
[illegible] ஆயிரம் [illegible] படைகள்,
நேர்மிகுந்த வில், வேல், வாள் தாங்கி வந்த
[illegible] காலாட்படைகள் - இவைகள் யாவும்,

மண்ணதிர விரைந்தனவாம்! முரசு, "வெற்றி
வெய்யோனே" முழங்கினவாம்! சங்கம், மற்றும்
பண்ணதிரும் கருவி பலப் பலவும் கூடிப்
பாரதிரச் செய்தனவாம்! கொடியின் கூட்டம்
விண்ணதிரப் பறந்தனவாம்! ஆயுதங்கள்
[illegible] மின்னினவாம்! படைத்தலைவர்,

புரட்சிக் கவிஞரின் கையெழுத்து இது: 'பாண்டியன் பரிசு' அச்சிலிருந்து எடுக்கப்பட்ட தாள்.





மாணவர்களின் தாள்களைத் திருத்தி அதிக மதிப்பெண் போட்ட உடன், தோட்டத்திற்குச் சென்று, பேனாவிலிருந்த மையைக் கொட்டி விட்டு, பேனாவை நன்கு கழுவித் துடைத்து வைத்துக் கொண்டார், பகைவர்களிடம் அவர் ஏமாறுவாரா? அதனால், மேலதிகாரியின் சோதனை யில் பாவேந்தர் சிக்கவில்லை.

எனினும், அதற்குப் பிறகு பாவேந்தரைத் தேர்வுக் குழு உறுப் பினராகச் சில ஆண்டுகள் போடா மல் விட்டனர்.

அந்நாளில் அரை மதிப்பெண், ஒரு மதிப்பெண் குறைந்தாலும் மாணவனைத் தேற விடமாட்டார்கள். பாவேந்தர் மாணவரின் சில தவறு களைப் பொருட்படுத்த மாட்டார்; அதற்காக அவர்களை ஓராண்டு வகுப்பில் மடக்கிப் போட விரும் பார்.

பாவேந்தரிடம் தமிழாசிரியர் தேர்வுக்குப் பயின்றோர் பலர். அவர்களில் நானும் ஒருவன்.

பாவேந்தரிடம் படித்தவர்களில் பெரும்பாலோர் புலவர்கள், கவி ஞர்கள், ஆசிரியர்கள், நாடகாசிரி யர், இதழாசிரியர்களாக விளங் கினர். அன்றே பாவேந்தர் பரம் பரை தொடங்கிவிட்டது!

படைப்பிலக்கிய ஆசிரியராக அவர் விளங்கினார். அவர் எழுதத் தொடங்கிவிட்டால் உலகை மறப் பார். பற்றவைத்த சுருட்டு வாய்க்குப் போகாது; விரலிடுக்கிலேயே சாம்ப லாகும். குடிக்கக் கேட்ட தண்ணீர் வைத்த இடத்திலேயே இருக்கும்.

## பாரதியும் பாரதிதாசனும்

### கவியரசு கண்ணதாசன்

**இருள்சூழ்ந் திருந்த இவ்வைய முழுதும்**
**எழுங்கதி ரான இளைஞன் பாரதி;**
**எழுந்த கதிர்முன் மானிடச் சாதிக்கு**
**இரத்தம் ஊட்டினார் பாரதி தாசன்!**

**ஆதி பத்திய வேரறுக் குந்திறன்**
**ஆக்கித் தந்த வல்லவன் பாரதி;**
**அந்த வேரை அறுத்தபின் மறுவேர்**
**அண்டாது காத்தவர் பாரதி தாசன்!**

**'எங்கள் நாடு எங்கள் மொழி'யென**
**இயம்புந் திறனைத் தந்தவன் பாரதி;**
**இயம்ப மறுத்து ஏளனம் செய்தோர்**
**எலும்பை முறித்தவர் பாரதி தாசன்!**

**முன்னவர் சொன்ன பண்பா டனைத்தும்**
**முறையாய்த் தந்த மூத்தவன் பாரதி;**
**முறையாய்த் தந்ததை வகைவகை யாக்கி**
**முளைக்க விட்டவர் பாரதி தாசன்!**

**செந்தமிழ் மலரின் தேனுண்ண வாசலைத்**
**திறந்து விட்ட தலைவன் பாரதி;**
**திறந்த வாசலின் வழிப்புறம் மாடுகள்**
**செல்லாது காத்தவர் பாரதி தாசன்!**

**வகுத்தவன் முன்னோன் காத்தவன் பின்னோன்;**
**வாழுந் தமிழின் காவலர் இவர்கள்!**

பாவேந்தரின் துணைவியார் "ஏங்க, சாப்பிட வாங்க" என்பார். அதற்குப் பதில் "நான் இன்னமும் சாப்பிடவில்லையா?" என்பது.

அருச்சுனன் குறிவைத்தபோது அவனுக்குப் பறவையின் தலை மட்டுமே தெரிந்தது. மரமோ - கிளையோ - பறவையின் உடலோ தெரியவில்லையாம். அவனைப் போலப் பாவேந்தர் எழுதத் தொடங்கி விட்டால் அனைத்தையும் மறப்பார்.

நாடக ஆசிரியராகப் பல நாடகங் களை அளித்தவர் பாவேந்தர். பள்ளி மாணவர் நடித்தனர். மாணவிகள் பாட - நடிக்கக் - கும்மி, கோலாட்டப் பாடல்கள் எழுதித் தந்தார், அனைத் தும் சீர்திருத்தப் பாடல்கள்; அவர் மேற்பார்வையிலேயே அனைத்தும் தயாராகும்.

அவர் நாடக உரையாடல்கள் அடுக்கும், மிடுக்கும், வலிவும், பொலிவும் பெற்று விளங்குவன.

அவர் சிறந்த பாடலாசிரியர், சில மணித்துளிகளில் ஒரு பாட்டை எழுதுவார்; எனினும் எதுகை இட றாது; மோனை முறியாது. நயம் விஞ்சும், பகை அஞ்சும்; சுவை கொஞ்சும்.

இதழாசிரியராக - அவர், ஏறாத ஆழத்தில் சேறாய்க் கிடந்தோரை வெளிஉலகுக்குக் கொண்டுவந்தார்.

கவிதா மண்டலம், குயில் முதலிய கவிதை இதழ்கள் வற்றாத தீந்தமிழ் ஓடைகள்; அவை காலத்தை வென் றவை.

பாவேந்தரின் மாணவனாகத் - தொண்டனாக - மருத்துவனாகப் பல ஆண்டுகள் பழகியவன் யான்.

தொடக்கப்பள்ளியில் அவரிடம் படித்த என்னைப் புலவனாக்கினார். பாட்டரங்கமொன்றில்,

"வித்துவான் புதுவைச் சித்தர் -
இராதா இந்நேரமிங்கே
நத்துவார்க் கெலாம் இனிக்க நறுங்
குறிஞ்சித் தேன்பெய்தார்.
அத்தவக் கவிஞர் நன்னூல் ஆய்ந்தவர்;
தமிழ்க் காப்பாளர்;
முத்தமிழ்ச் செல்வர் வாழி!
மொழிகின்றோம் அவர்க்கு நன்றி!"

என்று பாராட்டினார்!

ஆசிரியர் பலர்; அவர்களுள் நல்லாசிரியர் ஆயிரத்தில் ஒருவர்; பாவேந்தர் நூறாயிரத்தில் ஒருவர்! ◖



சென்னைக் கடற்கரையில் உள்ள புரட்சிக் கவிஞர் திருவுருவச்சிலை.

**புரட்சிக் கவிஞர் அவர்கள் செய்யத் தூண்டிய ஒரு புதுவகைப் பலகாரத்தைப் பற்றிய செய்முறைக் குறிப்பும்-அதைச் செய்ய நேர்ந்த சந்தர்ப்பமும், பாவேந்தரின் மகள் மூலம் இங்கே விளக்கப்படுகின்றன.**

# பயற்றொடு கும்மாயம்!

★★★★★★★★★★★★★★★★★★★★

த. வசந்தா தண்டபாணி

★★★★★★★★★★★★★★★★★★★★



திருமதி. வசந்தா (வேனில்)

**பிற்பகல் மணி 3.30!**

அம்மா பகற்பொழுதில் உறங்கி ஓய்வெடுப்பதில்லை, சுற்றிச் சுற்றி வந்து ஏதாவது பணிகளைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

நாங்கள்-நானும், ரமணியும் அன்று வந்த வார ஏடுகள், நாளிதழ்களைப் பார்த்துக் கொண்டும், படித்துக் கொண்டும், அவை பற்றிய விளக்கங்கள் போன்ற பணிகள் அளித்தலும் ஆகிய பணிகள் எங்களுக்கு'

"பழனியம்மா" திடீரென்று தந்தையின் குரல்.

"ஏன்" அன்னையின் ஒற்றைக் குரல்.

"இது இருக்கா?"

"எது?"

"வெல்லம்?"

"இருக்குது."

"தேங்கா(ய்)?"

"ஊம்!"

"பச்சைப்பயிறு?"

"இருக்குது. இதெல்லாம் எதுக்கு?"

"முதல்ல பச்சைப்பயத்தை வறு; பொன்நிறமா ஆன உடன் இறக்கு; பிறகு உடைச்சி பருப் பாக்கு!"

- இந்நாளில் கிடைப்பது போல உடைத்த பாசிப்பயறு அந்நாளில் கிடைக்காது. எனவே தந்தையின் ஆணை பிறந்தவுடன் படுத்துக் கொண்டோ, நாளிதழ் படித்துக் கொண்டோ இருக்க முடியாது! எனவே, பறந்து சென்று அம்மாவுக்கு உதவிகள் செய்ய ஆரம்பித்தோம். ஆனால் இந்நாளில் என் பேத்தி அல்லது மகள், மருமகள் கேட்பது போல் 'இதெல்லாம் என்ன செய்வதற்கு' என்று நாங்கள் யாரும் கேட்கவில்லை! கேட்கும் வழக்கம் எங்களிடம் இருந்ததில்லை! அப்பா சொல்லியதைச் செய்கின்றோம். அவ்வளவே! ஆனாலும் நானும் தங்கையும் கண்களால்- பேசிக் கொண்டோம், 'என்ன செய்யப் போறாங்க?' பச்சைப்பயறு என்ற பாசிப்பயற்றை உடைத்தாயிற்று, நெஞ்சை அள்ளும் மணத்துடன் "கம கம" வென்று.

'பாப்பா, நீ தேங்காயை ஒடைச்சி திருகு!"

"சோமு வாங்கிட்டு வரப்போயிக்காம்பா!"

"உடனே வரச் சொன்னியா?"

"சொல்லிட்டேம்பா!"

"சின்னப்பாப்பா நீ வெல்லத்தைச் சீவு, முந்திரிப்பருப்பைச் சுத்தம் செய்து தோலை எல்லாம் எடு. ஏலக்காய் இருக்கா?"

"இருக்குது"

"அம்மியில் நல்லா நசுக்கி எடுத்துக்கிட்டு வா!"

- இப்போது என்ன நடக்கின்றது என்றால், பாத்திரத்தில் தண்ணீரைக் கொதிக்க வைத்து வறுத்து உடைத்துப் புடைத்த பச்சைப்பயற்றை அதில் கொட்டிக் கிளறிக் கொண்டிருந்தார் அம்மா, பொங்கி வழிந்து விடாமல்!

"தண்ணி திட்டமா ஆயிட்டுதானு பாத்து வெல்லத்தை அதில் போட்டு நல்லா கிளறு பழனிம்மா. வெல்லமிட்டு, தேங்காய் துருவலைக் கொட்டி நெய்யில் வறுத்த முந்திரிப்பருப்பைப் போட்டு ஏலக்காய் பொடியைச் சேர்த்து அல்வா பதத்தில் மணமிகு 'பயற்றொடு கும்மாயம்'அனைவர்க்கும் தந்தையின் கரங்களால் தட்டில் இட்டு அளிக்கப்பட்டது.

வீட்டில் இருந்த கோழி, புறாக்கள், முத்துப் பூனை உள்ளிட்ட அனைவரும் சுவைத்து மகிழ்ந்தோம். தந்தையின் அடுக்களை விரட்டல்களுக்கிடையில் நானும், தங்கையும் விரைந்து வந்து சாய்வு நாற்காலி மீது இடப்பட்டிருக்கும் எழுது பலகையில் திறந்து வைத்திருந்த நிலையில் காணப்பட்ட நூலை வாசித்ததில், எங்கட்குத் தகவல் ஒன்று புலனாயிற்று!

தமிழறிஞர் உ.வே.சா. அவர்களின் வாழ்க்கைக் குறிப்பாகிய 'என் சரித்திரத்தில் உ.வே.சா. குறிப்பிட்டிருந்த குடந்தை சாரங்கபாணி ஆலயத்துக்குத் தாம் சென்றபோது தொன்னையில் வைத்து அளிக்கப்பட்ட நிவேதனப் பண்டமான 'பயற்றொடு கும்மாயத்தை'ப் பற்றியும் அதன் செய்முறைக்குறிப்புக்களையும் தந்திருந்தார்.

அந்த நிவேதனப் பண்டமே அன்றிலிருந்து இன்று வரை எங்கள் வீட்டுச் சுவை மிகுந்த உணவாகக் கருதி வந்தோம். தந்தைக்குப் பிடித்த அந்த இனிய சுவைமிகு உணவை அன்னாரின் நினைவு நாளில் செய்து வருகின்றோம்! ●



## பகுத்தறிவுக் கவிஞன்

***பாரதிதாசன் அவர்கள் புரட்சிகரமான கருத்துக்களை வெளிப்படுத்திய முதல் கவியும் கடைசிக் கவிஞரும் ஆவார். அவருக்கு அடுத்து அவருக்கு ஈடாக வேறு எந்தக் கவிஞரும் தோன்றவே இல்லை. தோன்றியவர்களும் பழமைக் கருத்துக்களைக் கொண்டவர்கள்தான்.***

***இன்றைக்கு நம் நாட்டில் இவரோடு குறிப்பிடத்தக்க வேறு புலவர்கள் இருந்தார்கள் என்றோ, இருக்கின்றார்கள் என்றோ சொல்வதற்கு இல்லை.***

***அவர் புதுமைக் கருத்துக்களையும் புரட்சிக் கருத்துக்களையும் மக்கள் சமுதாயத்திற்குத் தேவையான சமதர்மக் கருத்துக்களையும் துணிந்து வெளியிட்டுள்ளார்.***

***சுருங்கச் சொன்னால் அவர் போல் தீவிரமான கருத்துக்களை அவருக்கு முன்பும், பின்பும் எடுத்துச் சொன்னவர்கள் இன்னார் என்று எடுத்துக்காட்ட ஆளே இல்லையே!***

**— தந்தை பெரியார்.**

**வந்தனன்**
**பாரதிதாசன்!**

**ஆனை நடையும் அரிமாப் பெருமிதமும்**
[illegible]

[illegible]

**- [illegible] தேவநேயப் பாவாணர்**



# புரட்சித் தோட்டத்தில் பூத்த மலர்கள்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் எழுதிய நூல்கள், வெளிவந்த ஆண்டு - பெயர் விவரங்கள் இங்கே தொகுத்தளிக்கப்படுகின்றன.

| வரிசை எண். | ஆண்டு | நூற் பெயர் |
|---|---|---|
| 1. | 1926 | மயிலம் சுப்பிரமணியர் துதியமுது-கனககசுப்புரத்தின முதலியார். |
| 2. | 1930 | கதர் இராட்டினப் பாட்டு |
| 3. | 1930 | சிறுவர் சிறுமியர் தேசிய கீதம் |
| 4. | 1930 | தொண்டர் படைப்பாட்டு |
| 5. | 1930 | தாழ்த்தப்பட்டார் |
| - | | சமத்துவப்பாட்டு |
| 6. | 1930 | சஞ்சீவிபர்வதத்தின் சாரல் |
| 7. | 1931 | சுயமரியாதைச்சுடர் |
| 8. | 1937 | புரட்சிக்கவி |
| 9. | 1938 | இந்தி எதிர்ப்புப்பாடல்கள் (பாரதிதாசன் உட்பட பலர் பாடிய பாடல்களின் தொகுப்பு) |
| 10. | 1938 | பாரதிதாசன் கவிதைகள்-1 |
| 11. | 1939 | இரணியன் அல்லது இணையற்ற வீரன் |
| 12. | 1939 | இசையமுது-1 |
| 13. | 1941 | எதிர்பாராத முத்தம் |
| 14. | 1942 | குடும்பவிளக்கு-ஒருநாள் நிகழ்ச்சி |
| 15. | 1943 | பாண்டியன் பரிசு |
| 16. | 1944 | இருண்ட வீடு |
| 17. | 1944 | அழகின் சிரிப்பு |
| 18. | 1944 | நல்ல தீர்ப்பு |
| 19. | 1944 | காதல் நினைவுகள் |
| 20. | 1944 | குடும்பவிளக்கு-விருந்தோம்பல் |
| 21. | 1944 | கற்கண்டு (நாடகம்) |
| 22. | 1945 | எது இசை? |
| 23. | 1945 | தமிழியக்கம் |
| 24. | 1946 | அமைதி |
| 25. | 1946 | தன்மானத்தாலாட்டு (மாவண்ணா தேவராசன்-பாரதிதாசன்) |
| 26. | 1947 | கவிஞர் பேசுகிறார் |
| 27. | 1948 | முல்லைக்காடு |
| 28. | 1948 | மகாகவி பாரதியார் |
| 29. | 1948 | காதலா? கடமையா? |
| 30. | 1948 | கடல்மேற்குமிழிகள் |
| 31. | 1948 | குடும்பவிளக்கு-திருமணம் |
| 32. | 1948 | இந்தி எதிர்ப்புப்பாட்டு |
| 33. | 1948 | அகத்தியன்விட்ட புதுக்கரடி நல்லமுத்துக்கதை |
| 34. | 1948 | திராவிடர் திருப்பாடல் |
| 35. | 1949 | படித்த பெண்கள் |
| 36. | 1949 | சேரதாண்டவம் |
| 37. | 1949 | தமிழச்சியின் கத்தி |
| 38. | 1949 | திராவிடர் புரட்சித் திருமணத்திட்டம் |
| 39. | 1949 | பாரதிதாசன் ஆத்திசூடி |
| 40. | 1949 | ஏற்றப்பாட்டு |
| 41. | 1949 | பாரதிதாசன் கவிதைகள்-2 |
| 42. | 1950 | குடும்ப விளக்கு-மக்கட்பேறு |
| 43. | 1950 | குடும்ப விளக்கு-முதியோர் காதல் |
| 44. | 1950 | இன்பக்கடல், சத்திமுத்தப்புலவர் |
| 45. | 1950 | சௌமியன் |
| 46. | 1951 | அமிழ்து எது? |
| 47. | 1951 | கழைக்கூத்தியின் காதல் |
| 48. | 1952 | இசையமுது-2 |
| 49. | 1952 | தமிழ் இன்பம் |
| 50. | 1954 | பொங்கல் வாழ்த்துக் குயில் |
| 51. | 1955 | பாரதிதாசன் கதைகள் |
| 52. | 1955 | பாரதிதாசன் கவிதைகள்-3 |
| 53. | 1956 | தேனருவி |
| 54. | 1958 | தாயின்மேல் ஆணை |
| 55. | 1958 | இளைஞர் இலக்கியம் |
| 56. | 1959 | பாரதிதாசன் நாடகங்கள் |
| 57. | 1959 | குறிஞ்சித்திட்டு |
| 58. | 1962 | கண்ணகி புரட்சிக்காப்பியம் |
| 59. | 1962 | மணிமேகலை வெண்பா |
| 60. | 1964 | பாரதிதாசன் பன்மணித்திரள் |
| 61. | 1967 | பிசிராந்தையார் |
| 62. | 1977 | பாரதிதாசன் கவிதைகள்-4 |

### த.கோவேந்தன் தொகுத்தவை

| | | |
|---|---|---|
| 63. | 1977 | காதற்பாடல்கள் |
| 64. | 1977 | குயில் பாடல்கள் |
| 65. | 1978 | தேனருவி (புதுப்பாடல்கள்) |
| 66. | 1978 | தமிழுக்கு அமுதென்று பேர் |
| 67. | 1978 | ஒரு தாயின் உள்ளம் மகிழ்கிறது |
| 68. | 1978 | நாள் மலர்கள் |
| 69. | 1978 | புகழ் மலர்கள் |

### டாக்டர் ச.சு.இளங்கோ தொகுத்தவை

| | | |
|---|---|---|
| 70. | 1978 | தலைமலைகண்ட தேவர் |
| 71. | 1980 | ஆத்திசூடி & பொங்கல் வாழ்த்துக் குவியல் |
| 72. | 1980 | வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா? |
| 73. | 1980 | கோயில் இரு கோணங்கள் |
| 74. | 1980 | ஏழைகள் சிரிக்கிறார்கள் |
| 75. | 1980 | பாட்டுக்கு இலக்கணம் |
| 76. | 1980 | பாரதிதாசன் பேசுகிறார் |
| 77. | 1981 | சிரிக்கும் சிந்தனைகள் |
| 78. | 1981 | கேட்டலும், கிளத்தலும் |
| 79. | 1983 | மானுடம் போற்று (பாரதிதாசன் கட்டுரைகள்) |
| 80. | அச்சில் | உலகுக்கோர் ஐந்தொழுக்கம் (தலையங்கக் கட்டுரைகள்) |

—'பாரதிதாசன் நாடகங்கள் ஓர் ஆய்வு' என்ற (டாக்டர் ச.சு.இளங்கோ) நூலிலிருந்து.

**இருளைக் கண்டு அஞ்சுகிற குழந்தையைவிட, வெளிச்சத்தைக் கண்டு அஞ்சும் மனிதனே மோச மானவன்!**

**—எமர்சன்**



# கோவை-பெரியார்-நீலகிரி மாவட்டங்களில்

# காவிரி நதி நீர்ப்பங்கீடு நடுவர் குழு:

# தமிழகத்தில் இரண்டாம்கட்ட ஆய்வுப் பயணம்!

**கா**விரித்தாயின் கருணையால் சோலைவனமாகக் காட்சிதந்த தஞ்சாவூர் - திருச்சிராப்பள்ளி மாவட்டங்கள் பாலைவனமாகிவிடுமோ என்கிற அச்சத்திற்கு ஆட்பட்டிருக்கிறோம் நாம். 'சோறுடைத்து' என்று போற்றப்பட்ட சோழவளநாடு இப்போது விவசாய மந்தத்தால் 'சோர்வுடைத்து' ஆகிவிட்டது.!

காவிரித்தாயின் கருணைக்குக் கர்நாடக அரசால் தடைபோடப்பட்டுவிட்டது தான் இந்த நிலைமைக்குக் காரணம்.

''வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரி'', வெறும் மணல் வீதியாகக் காணப்படக் காரணம் கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாகப் போதுமான நீர் வரத்து இல்லாமல் போனதுதான்.

காவிரி நதிநீர்ப் பிரச்சினையில் நமக்குச் சாதகமான - வரலாறு அடிப்படையிலான ஆதாரங்கள் ஏராளமாக உள்ளன; என்ன இருந்து என்ன? 1974-க்குப் பிறகு, ஆண்டுக்கு ஆண்டு காவிரி நீர் வரத்து அடியோடு குறைந்து விட்டதே!

1974-75-இல், அதாவது 20.7.1974-இல் மேட்டூர் அணை திறந்து விடப்பட்டபோது காவிரியில் 279.9 டி.எம்.சி. அளவு தண்ணீர் வந்தது; 20.8.1989-இல் மேட்டூர் அணை திறந்து விடப்பட்டபோதோ காவிரி நீர் வரத்தின் அளவு 175.6 டி.எம்.சி. ஆகக் குறைந்திருந்தது; 22.8.1990-இல் திறந்து விடப்பட்டபோது வந்த தண்ணீரின் அளவைச் சொன்னால் வெட்கக்கேடு!

தமிழ்நாட்டின் மொத்த நீர்ப்பாசனப்பகுதியில் 85 சதவிகிதப் பாரப்பானது காவிரியாற்றங்கரைப் பகுதியாகும்; தமிழகத்தின் மொத்த நிலப்பரப்பில் 34 சதவிகிதம் காவிரி பாசனப் பகுதியில் அமைந்திருக்கிறது. இதுமட்டுமல்ல; நமது தமிழகத்தின் மொத்த மக்கள் தொகையில்33 சதவிகிதம் பேர் காவிரி பாசனப் பகுதியிலே வாழ்பவர்களாவர்.

## நடுவர் மன்றம் அமைப்பு

இவ்வளவையும் தெரிவித்து, தமிழகம் காவிரி நீர் பெறுவதற்கான நியாயங்களையும் முறைப்படி தெரிவித்தும் - கர்நாடக அரசு செவிசாய்க்க மறுத்தே வந்தது; அந்த நிலையிலேதான் மத்திய அரசால், காவிரி நீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையிலே சென்ற ஆண்டில் (1990) காவிரி நதிநீர்ப் பங்கீடு நடுவர் மன்றம் (Cauvery Water Dispute Tribunal) அமைக்கப்பட்டது.

இந்த நீதிபதிகள் குழுவினர் - காவிரி தொடர்புடைய மாநிலங்களிலே சுற்றுப்பயணம் மேற்கொண்டு நிலைமைகளை நேரில் கண்டறிவர் என்பது ஏற்பாடு. அதன் படி அவர்கள் சென்ற மார்ச்சு மாதம் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், சேலம் ஆகிய மாவட்டங்களில் பயணம் மேற்கொண்டனர்.

அதன் பிறகு அவர்களுடைய இரண்டாம் கட்டச் சுற்றுப் பயணம் 12.4.91 முதல் 18.4.91 வரை தமிழகத்திலும் - கேரள மாநிலத்திலும் தொடர்ந்தது.

அமராவதி அணைக்கட்டில் நடுவர் குழுவினர்





# பாடம் நடத்திய பாவேந்தர்

'செம்பியன்'

**ஒரு பள்ளி ஆசிரியர் எப்படி இருக்க வேண்டும்? என்பதற்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் பாவேந்தர் அவர்கள். தம்மைப்போலவே மற்றவர்களும் - மற்ற ஆசிரியர்களும் விளங்க வேண்டும் என்றும் விரும்பினார் அவர். அவை என்ன என்பதைக் கோடிட்டுக் காட்டுகிறது இக் கட்டுரை.**

**1946**-ஆம் ஆண்டு, புதுவை வ.உ.சி. பள்ளியில் முதன்முதலாக ஆசிரியர் பணியை ஏற்ற எனக்கு அப்போது அங்கே ஆசிரியராக விளங்கிய புரட்சிப் பாவேந்தரைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது - அந்நாள் எனக்கொரு பொன்னாளாகும்.

முதன்முதலில் பணி ஏற்கும் ஒவ்வோர் ஆசிரியரும், அங்குள்ள அனுபவ மிக்க ஆசிரியர் வகுப்பில் நடத்தும் பாடங்களைத் தினமும் இரண்டு பாட வேளைகள் போய்க் கவனிக்க வேண்டும் என்பது தலைமையாசிரியர் உத்தரவு; அதன்படி, தலைமையாசிரியர் என்னைப் பாவேந்தர் வகுப்புக்கு அழைத்துச் சென்று அவரிடம் அறிமுகப்படுத்தி வைத்தார்-

அன்று முதல் குறிப்பிட்ட பாட நேரங்களைக் கவனிக்க புரட்சிப் பாவலரிடம் செல்ல ஆரம்பித்தேன் - பாவேந்தர் கோபக்காரர், முரடர் என்றெல்லாம் பலரும் கூறியதைக் கேள்விப்பட்டிருந்த யான், அவரைப் பார்த்ததும் அவரிடம் நெருங்கிப் பழகவே அச்சமாக இருந்தது - அவரிடம் மெதுவாக நெருங்கிச் சென்று "வணக்கம் ஐயா" என்றேன்- தலை அசைத்த அவர், போய் அமரச் சொன்னார் - பாடம் போதித்துக் கொண்டிருந்த அவர், பாடம் முடிந்ததும், "தம்பி இங்கே வா" என்று கூப்பிட்டு என்னைப் பற்றிக் கேட்டறிந்து கொண்டு, ஆசிரியர் பணியைப் பற்றிய அறிவுரை கூறத் தொடங்கினார்.

"உற்சாகத்தோடு இப்பணியை ஏற்று வந்துள்ளாய் - மகிழ்ச்சி - மிகச் சிறப்பான பணி ஆசிரியர் பணி - உனக்குச் சில அறிவுரைகள் கூறுவேன் கேள்" என்றார், தொடர்ந்து-

"நம்மிடம் வந்துள்ள மாணவர்களை அறிவுள்ளவராக உருவாக்குவதே நமது கடமை. ஆசிரியரின் திறமையைப் பொருத்துத்தான் மாணவர்கள் திறம்



பெறுவர். முதலாவதாக, இப்பணிக்கு வந்துள்ள நீ பாடத் தயாரிப்புக் குறிப்புச் சுவடி இல்லாமல் வகுப்பில் நுழையக் கூடாது. முறையாகப் பாடம் போதிக்கக் குறிப்புச் சுவடி இன்றியமையாதது. நாம் நடத்தும் பாடம் ஒவ்வொன்றைப் பற்றியும் முன்னதாகவே தயார் செய்து கொண்டு வந்து தான் பாடம் நடத்த வேண்டும். மேலதிகாரிக்காகச் செய்வதில்லை இந்த வேலை. மனச்சாட்சிதான் முக்கியம்"- என்று கூறிவிட்டு, அவர் எழுதி வந்திருந்த குறிப்புச் சுவடியைக் காட்டினார்-

இரண்டாவதாக, எந்த வகுப்பு நடத்துகின்றாயோ அந்த வகுப்பு மாணவர்களின் பெயர்களை ஓரிரண்டு நாளில் அறிந்து கொள்ள வேண்டும். உற்சாகமும் சுறுசுறுப்பும் மலர்ந்த முகமும் உள்ள ஆசிரியராக மாணவர்முன் காட்சியளிக்க வேண்டும். வீட்டுக் கவலையோ, வேறு சிந்தனையோ கொண்டு சோர்வுடன் இருக்கக் கூடாது. மாணவர்கள் புரிந்து கொள்ளும் அளவிற்கு உன்னுடைய பாடபோதனை அமைய வேண்டும் - அப்போது தான் மாணவர்கள் விழிப்புணர்ச்சி பெறுவர்.

மூன்றாவதாக, மாணவர்கள் ஆசிரியரின் நடை உடை பாவனைகளைக் கவனிப்பார்கள் ஆனதால், அவர்கள் நம்மை விரும்பி மதிக்கும் அளவில் நடந்துகொள்வது முக்கியம் - சுருக்கமாகச் சொன்னால், இன்று காலையில் ஓர் ஆசிரியரின் காலில் காயம் பட்டதென்றால், மாலையில் அந்த ஆசிரியரைச் சந்திப்பவர்கள் "காலில் ஏதோ காயம் பட்டதாமே?" என்று விசாரிப்பார்கள். அந்த அளவிற்கு மாணவர் மூலம் உன் சேதி வெளியில் பரவும். ஆதலால், இத்தொழிலில் மிகவும் விழிப்பாயிருந்து நல்லாசிரியர் என்று பெயரெடுக்க வேண்டும். ஊதிய உயர்வையோ, பதவி உயர்வையோ எதிர்பாராமல், நம்மிடம் ஒப்படைத்துள்ள மாணவர்கள் கல்வி கற்று முன்னேற்றமடைய வேண்டும் என்ற ஆழ்ந்த எண்ணத்துடன் செய்யுந்தொழிலே தெய்வம் என்னும் பொன்மொழிக்கிலக்கணமாக நீ திகழவேண்டும். இதுதான் உனக்கு யான் கூறும் அறிவுரை - போய் உட்கார்ந்து நான் நடத்தும் பாடத்தைக் கவனி" என்றார். எனக்கு ஒரே ஆச்சரியம் - அன்று எனக்குப் போதனா முறைப் பாடமே நடத்தி விட்டார் பாவேந்தர்.

## போதனா முறையில் அவர் திறமை

அவர் நடத்தும் ஒவ்வொரு பாடமும் மாணவர் உள்ளத்தில் நன்கு பதியும் அளவிற்குத் தெளிவாகவும் சுருக்கமாகவும் இருக்கும். கரும்பலகையில் ஓவியந் தீட்டிக் காட்டி, அதன் மூலம் பாட போதனை நடக்கும்.

ஒருநாள், சிங்கமும், சுண்டெலியும் என்ற கதை வகுப்பு - கரும் பலகையில் சிங்கம், சுண்டெலி காட்சியளிக்கும் வகையில் ஓவியம் - சிங்கத்தின் கர்ஜனை- சுண்டெலியின் நடுக்கம் அனைத்தும் அங்கே நாடகமாகக் காட்சியளித்தது. வகுப்பில் ஒரே அமைதி - மாணவர்க்குக் கவனம் - உற்சாகம் - என்னென்பேன்! இன்றும் அக்காட்சி என்மனக் கண் முன்னே நிற்கிறது!

ஒவ்வொரு நாளும் பாட போதனை ஒவ்வொரு விதமாக அவரிடமிருக்கும்.

மாணவர்க்கேற்ற முறையில் ஒவ்வொரு பாட விளக்கமும் இருக்கும். ஒருநாள் விஞ்ஞான வகுப்பு - பாடம் கம்பளம் தயாரித்தல் - பாடத்தைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் விளக்கிவிட்டு, மாணவர் உள்ளத்தில் அப்பாடம் நன்கு பதிய இறுதியில் ஒரு பாடலும் கரும்பலகையில் எழுதிவிட்டு -

"ஆட்டின் மேலே அழகாக
அடர்ந்த மயிரைக் கத்தரித்து
நீட்டு நீட்டாய் இழையாக்கி
நெய்வார் அதுதான் கம்பளமாம்!"

என்று பாடியும் காட்டினார். மாணவர்கட்கு ஒரே உற்சாகம் - மகிழ்ச்சி - அவர் ஒரு ஆசிரியராக மட்டும் காட்சியளிக்காமல், சொற்பொழிவாளராக, இசைக் கலைஞராக, ஓவியராக, நடிகராக, நகைச்சுவைக் கலைஞராகப் பாட போதனையின்போது, மாணவர்முன் காட்சியளிப்பார்.

## தொழிலில் கடமையுணர்வு

பகுத்தறிவுக் கொள்கையுள்ளவர் - அரசியல் ஈடுபாடுள்ளவர் என்றெல்லாம் ஏதேதோ அவரைப் பற்றிக் கூறி, ஊதிய உயர்வளிக்காமல் ஊர் ஊராய் மாற்றிக் கொண்டிருந்தாலும் அதையெல்லாம் பொருட்படுத்தாமல், ஆசிரியர் பணியில் ஊக்கம் நிறைந்தவராக, நம்பி வந்த மாணவர்க்குப் பாடம் போதிப்பதில் அக்கறையுள்ளவராகக் கண்ணுங் கருத்துமாய்க் கடமை செய்பவராக, ஆசிரியர் பணிக்கோர் இலக்கணமாகப் பாவேந்தர் திகழக் கண்டேன் - நான் பாடம் போதிப்பதில் பிற்காலத்தில் சிறப்படைய அவரே முக்கியக் காரணமாக இருந்தார் என்பதை என்னால் என்றும் மறக்க முடியாது..

## மற்றவர்க்கு ஆர்வமூட்டும் பண்பு

புதுவையில் எனக்குற்ற நண்பராக இருந்த ஆசிரியர் பொன்னம்பலம் அவர்கள், பாவேந்தரின் அன்பிற்குரிய மாணவருள் ஒருவர் - அவருடன் பாவேந்தர் இல்லத்திற்கு யானும் சென்று பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. நாடகத்தில் ஊக்கமும், கவிதை எழுதும் திறமும் கொண்ட பொன்னம்பலம் அவர்கள் அவ்வப்போது தான் எழுதுவதைப் பாவேந்தரிடம் காட்டுவார். அவர் நாடகத்திலுள்ள நுணுக்கங்களையும் அமைக்க வேண்டிய முறையையும் தெளிவாகக் கூறித் திருத்துவார் - அந்த வகையில் ஒருநாள் யாப்பிலக்கணத்தைச் சுருக்கமாகப் பாவேந்தர் தெளிவுபடுத்தப் போதித்து என்னையும் கவிதை எழுதத் தூண்டினார். அன்று முதல் பாவேந்தர் மாணவரானேன் - யான் எழுதும் கவிதைகளைத் திருத்திக் காட்டி அமைய வேண்டிய முறைபற்றிக் கூறுவார். அப்போது அவர் கூறிய கருத்தொன்று யாதெனில், அகராதியை வைத்துக் கொண்டு எதுகை, மோனை தேடிக் கவிதை எழுதாதே சொந்த முயற்சியில் - எளிய நடையில் அனைவர்க்கும் புரியும் வகையில் எழுதப்பழகு என்பதேயாகும். கவிதை எழுதும்போதெல்லாம் அவர் கூறிய அந்த வார்த்தை என் நினைவிற்கு வரும். அவருடைய ஆசியால், என்னுடைய கவிதைகளும் செம்பியன் என்ற புனைபெயரில் 'குயில்', 'விடுதலை' போன்ற இதழ்களில் வெளிவரத் தொடங்கின.

பாவேந்தரிடம் உள்ள சிறப்பியல்பு என்னவென்றால், அவர் ஆழ்ந்த சிந்தனையிலிருந்தாலும், கவிதை எழுதிக் கொண்டிருந்தாலும் உடனே எழுதுவதை நிறுத்திவிட்டு நாம் எழுதிய பாடலை வாங்கிப் படித்துத் திருத்திக்காட்டி ஆர்வமூட்டுவார். அதில் சிறிதளவும் முகச்சுளிப்போ எரிச்சலோ காணமுடியாது. கவிதை எழுதுவதற்கார்வ மூட்டுவதில் அவருக்கு நிகர் அவரே!

## சமுதாய நோக்கு

தம்மைப்போல் கவிஞராகப் பலரும் வர வேண்டும் என்பதில் பெருவிருப்பம் கொண்டிருந்தார் பாரதிதாசன். ஆசிரியர் பொன்னம்பலம், புதுவைச் சிவம், ஆசிரியர் வாணிதாசன் போன்றவர்கள் கவிஞராக உருவாக அவருடைய தூண்டுதலே முக்கியக் காரணமாகும். என்னையும் ஓரளவு தயார் செய்து கவிஞர் வரிசையில் ஈடுபடுத்தினார்.

புதுவை மாநிலத்தில் மட்டுமல்லாமல், தமிழகமெங்கும் கவிஞராகப் பலர் தோன்ற அவரே மூல காரணமாக இருந்தார் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை!

---

# வெல்வோம்

**மாவேந்திக் காலமெல்லாம்
மடங்கலென வாழ்ந்தோன்
மறத்தமிழர் வாழ்வுயர்த்துஞ்
சிந்தனையில் ஆழ்ந்தோன்!
சாவேந்திப் போகாத
வரலாற்றைக் கொண்டோன்
செந்தமிழ்க்குப் பாவேந்தர்
மிகச்சிறந்த தொண்டோன்!
நாவேந்தி நாடெல்லாம்
பகுத்தறிவைச் சொல்வோம்
நற்றமிழர் அனைவரையும்
சுற்றமெனப் புல்வோம்!
பாவேந்தர் நூற்றாண்டில்
அவர்வழியைக் கொள்வோம்;
பகைமுடித்தே ஒற்றுமையாய்ப்
பாரதனை வெல்வோம்!**

**-புலவர் வெற்றியழகன்**

---



## உணர்ச்சியை ஊட்டும் உயிர்த்தன்மை!

**பாரதிதாசன் கவிதைகளில் உண்மை, இனிமை, அழகு இம்மூன்றும் அமைந்துள்ளன. அதனால் தான் அவரது கவிதைகள் படிப்போர் உள்ளத்திற்கு இன்பம் அளிக்கின்றன. இந்த மூன்று தன்மைகள் மட்டுந்தானா அவர் கவிதைகளில் மிளிர்கின்றன? இல்லை. மற்றும் இரண்டு சிறப்புகளும் பொருந்தியிருக்கின்றன. அச்சிறப்புகள் எவை? அவை: எல்லோருக்கும் விளங்கக் கூடிய எளிய நடை; படிப்பவர் உள்ளத்தைத் தட்டி எழுப்பி உணர்ச்சியை ஊட்டும் உயிர்த்தன்மை என்பன.**

**-மயிலை சீனி. வேங்கடசாமி**

---

**புதுவையில் உள்ள பாவேந்தர் திருவுருவச் சிலை.**



நடுவர் மன்றத்தின் தலைமை நீதிபதி திரு சிட்டா டோஷ் முகர்ஜி, நீதிபதி எஸ்.டி. அகர்வால், நீதிபதி என்.எஸ். ராவ், திரு. ஜே.ஆர். மல்ஹோத்ரா; திரு. குல்ஷான் ராஸ், திரு. கோவிந்த் சிங் ஆகியோரே இந்த நடுவர் மன்றத்தினர் ஆவர். இவர்களோடு - தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம், புதுச்சேரி மாநிலங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும் உடன் வந்தார்கள்.

தமிழகப் பிரதிநிதிகளின் பெயர்கள் விவரம் வருமாறு: பொதுப்பணித் துறைச் செயலாளர் திரு, டி. முருகராஜ், முன்னாள் தலைமைப் பொறியாளர்கள் திரு. ஏ. மோகனகிருஷ்ணன், திரு. பி.கே. பால கிருஷ்ணன் மற்றும் திருவாளர்கள் ஆர்.என். கிருஷ்ணன், சி.மாதாக்கண்ணு, எம்.எஸ். கணேஷ், அஜீத் சிங், கே.ஆர். சீனிவாசன், எஸ். பழனியப்பன், பி.மாணிக்க வாசகம், ஏ. ஜெகதீசன், ஏ. லோகநாதன், ஏ.வி. இராகவன், எம்.எஸ், இராமமூர்த்தி, எஸ். குளத்து, ஆர். முரளீதரன், எம். பாலசுப்பிரமணியன், கே.ஓ. பழனிச்சாமி, எஸ்.ஆர். இராகவன், எம்.ஏ. இராமநாதன், பி.பால சுப்பிரமணியன், டி. ஹரிகரன், கே.எஸ். ஜெகதீசன்.

கர்நாடக மாநிலப் பிரதிநிதிகளாகத் திரு. சிவப்பா, திரு. ஈஸ்வர்பட், திரு, மோகன் வி. கட்டார்க்கி உள்ளிட்ட 15 பேர்களும் - கேரள மாநிலப் பிரதிநிதிகளாகத் திரு. ஜெயந்த் பூஷன், திரு. குன்னிக் கண்ணன் முதலான ஒன்பது பேர்களும் - புதுவை மாநிலத்தின் சார்பில் திரு. லாரண்ட் செயிண்ட் ஆண்ட்ருவும் இந்தப் பயணத்தில் கலந்து கொண்டார்கள்.

## கோவை மாவட்டம்

12.4.91 அன்று நண்பகல் 1.55 -க்கு கோயம்புத்தூர் பீளமேடு விமான நிலையத்தில், விமானத்தில் வந்திறங்கினார், நடுவர்மன்ற நீதிபதிகளில் ஒருவரான நீதிபதி எஸ்.டி. அகர்வால். அன்று மாலை தலைமை நீதிபதி சிட்டாடோஷ் முகர்ஜி அதே விமான நிலையத்தில் வந்திறங்கினார். இருவரையும், கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எம் கலைவாணன் அன்புடன் வரவேற்றார்.

அன்று மாலையில் கடுமையான மழையின் காரணமாகக் கோவை மாநகர வீதிகளிலெல்லாம் வெள்ளப் பெருக்கு. 4 மணிக்குத் தரையிறங்க வேண்டிய விமானம் பலத்த மழை காரணமாக முக்கால் மணி நேரம் தாமதமாக வந்து சேர்ந்தது.

மாவட்ட ஆட்சித் தலைவர் அன்புடன் வழங்கிய பூச்செண்டைப் பெற்றுக் கொண்டு தலைமை நீதிபதி சிட்டாடோஷ் முகர்ஜி, சிரித்தபடி சொன்னார்: "தண்ணீரில்லாமல் கஷ்டப்படுகிறீர்களே என்று... வரும் போதே மழையையும் கொண்டுவந்திருக்கிறேன் பார்த்தீர்களா!..."

மேல்பவானி அணையில் நடுவர் குழுவினர்



அதை எல்லோரும் ரசிக்க - மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எம். கலைவாணன் இப்படி உடனடியாகச் சொன்னார் - "இதைப்போலவே தேவையான அளவு காவிரி நீரும் நியாயத்தின் அடிப்படையில் எங்களுக்குக் கிடைக்கச் செய்வீர்கள் நீங்கள் என்று நாங்கள் நம்புகிறோம்!"

காவிரி நதிநீர்ப் பங்கீடு நடுவர் மன்றத்தின் வருகை காரணமாகக் கோவை நகரெங்கும் -

"Cauvery is our life line"...
"Welcome to the Tribunal"...

- என்பன போன்ற வாசகங்கள் கொண்ட பதாகைகள் சுவரொட்டிகள், போர்டுகள் காணப்பட்டன.

## பெரியார் மாவட்டம்

13.4.91 அன்று காலை 9 மணியளவில், இந்தக் குழுவினர் காவிரி நதிநீர்ப் பாசனப் பகுதிகளைப் பார்வையிடுவதற்காகக் கணியூர், செங்கப்பள்ளி, பெருந்துறை, பெருமாநல்லூர் வழியாகப் பெரியார் மாவட்டத்திற்குப் பறப்பட்டார்கள்.

வழியில் - தெக்கலூர் ஊராட்சியில் மாரியம்மன் கோயிலுக்குப் பக்கத்தில் இருக்கும் மிகப் பெரிய கிணறை அவர்கள் பார்வையிட்டார்கள். ஏராளமான சுற்றுப்புறக் கிராமத்தினருக்கெல்லாம் பயன்பட்டு வந்த அந்தப் பெருங்கிணறு, நிலத்தடி நீரின்றி வறண்டு கிடந்தது. வரைபடம் மூலம், அதனால் உண்டான பாதிப்புகள் நடுவர் குழுவுக்கு விளக்கிச் சொல்லப்பட்டது. மக்கள் பலரும், நீராதாரம் கெட்டுவிட்டது பற்றிய மனுக்களை நடுவர்களிடம் கொடுத்தார்கள்.

அவினாசியில் - வீதியின் இருமருங்கிலும் ஆண்களும் பெண்களும் காலிக்குடங்களோடு அணிவகுத்து நின்று தண்ணீருக்குக் கண்ணீர்விடும்படி ஆகிவிட்ட நிலையை உணர்த்தினார்கள்.

பெரியார் மாவட்டம் செங்கப்பள்ளியில் - விஜயமங்கலத்தில் - பெருந்துறையில் வாய்க்கால் மேட்டில்... எங்கு பார்த்தாலும் காலிக் குடங்களின் வரிசை மக்கள் கூட்டம் - அவர்கள் கைகளில் -

'We want Cauvery Water'

'Protect existing irrigation'...

- என்றெல்லாம் எழுதப்பட்ட அட்டைகள் ...

"We want water" என்கிற கோஷங்கள்!

இன்னொரு சிறப்பு - சாலையின் இருபுறமும் நின்றிருந்த பல இளைஞர்களின் கரங்களில் அத்தனை அரசியல் கட்சிகளின் கொடிகளும் "வருக, நியாயம் தருக" என்பதுபோல் பறந்து கொண்டிருந்ததைக் காண முடிந்தது.

திண்டல் என்ற இடத்தில் பச்சைப் பாவாடை, ரவிக்கை, வெள்ளைத் தாவணியோடு இருமருங்கும் கரம் குவித்து நெடுந்தூரம் நின்றிருந்த மாணவிகள் "We want water" ... Save our soul!" என்று ஒரே மாதிரியாகக் குரலெழுப்பியது எல்லோரையும் மெய்சிலிர்க்கச் செய்வதாக - கண்கலங்கவைப்பதாக இருந்தது!

### பொதுக் கூட்டம்

ஈரோட்டில் உள்ள பெரியார் மாவட்ட நீதிமன்ற வளாகத்தில், நடுவர் மன்றத்தினருக்காக ஏற்பாடு செய்யப்



காவிரி நதிநீர்ப் பங்கீடு நடுவர் குழுவினருடன் தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம், புதுவை மாநில உறுப்பினர்கள்.

பட்டிருந்த மாபெரும் வரவேற்புப் பொதுக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. வி.கே. சுப்புராஜ் வரவேற்புரை ஆற்றினார்.

"கீழ்பவானி அணை மூலம் பாசன வசதி - பெறும் இந்த மாவட்டத்தில், காவிரி நீர்வரத்து இன்மையால், கடந்த ஐந்தாண்டுக் காலமாக விவசாயப் பெருமக்கள் பெரும் அவதிக்கு ஆளாகியுள்ளனர். சுமார் ஒரு இலட்சம் ஏக்கர் நிலம் இங்கே நீரின்றிக் காய்கிறது. காவிரி, மற்றும் கீழ்பவானி விவசாயிகளின் வாழ்வும் சாவும் மரியாதைக்குரிய நடுவர் குழுவினரின் கைகளிலேதான் இருக்கிறது" என்று அப்போது அவர் குறிப்பிட்டார்.

அவரைத் தொடர்ந்து, அக்கூட்டத்தில் - தமிழ்நாடு மஞ்சள் உற்பத்தியாளர் சங்கத் தலைவர் திரு. கே.ஆர். நல்லசிவம், தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாநிலத் தலைவர் திரு. கே. சின்னசாமிக் கவுண்டர், கீழ்பவானி வாய்க்கால் விவசாயிகள் சங்கத் தலைவர் திரு. எஸ். நல்லுசாமி, கீழ்பவானி பாசனப் பிரதேசத்தின் முறை நீர்ப் பாசன விவசாயிகள் கூட்டமைப்பின் கன்வீனர் திரு. கே. ப. முத்துசாமி, அரக்கன் கோட்டை விவசாயிகள் சங்கத் தலைவர் திரு, கே. தேவண்ணன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திருமதி குழந்தையம்மாள், மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்தின் முன்னாள் தலைவர் திரு. சாய்நாதன், முன்னாள் அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் ஆகியோர் பேசினர்.

"வெளி மாநிலங்களைவிடத் தமிழ்நாடுதான் மிகக் குறைந்த நீர்வரத்துள்ள மாநிலம் என்று மத்திய நீர்வளக் கமிஷனே கூறியிருக்கிறது; அதை மனதில் வைத்து நியாயம் வழங்கவேண்டும்!"

"தேசிய ஒருமைப்பாடு முக்கியம் என்பது உண்மையானால் நதிநீர்த் திட்டங்களைத் தேசியமயமாக்க வேண்டும்!"

"இந்தப் பிரச்சினையை மனிதாபிமானத்தோடு ஆராய்ந்து தமிழ்நாட்டு மக்களாகிய எங்களுக்கு நீதி கிடைக்கச் செய்ய வேண்டும்..."

- அவர்களுடைய பேச்செல்லாம் பெரிதும் இந்தக் கருத்துகளை வலியுறுத்துபவைகளாகவே இருந்தன.

அதன்பின், சிறிது நேர ஓய்விற்காக ஆச்சார்ய நரேந்திர தேவா நினைவு விடுதிக்குச் சென்ற நடுவர் குழுவினருக்குப் பெரியார் மாவட்ட நீர்ப்பாசனப் பகுதிகள், வரைபடம் மூலம் விளக்கிச் சொல்லப்பட்டது. பொதுமக்களால் எண்ணற்ற விண்ணப்பங்களும் அளிக்கப்பட்டன.

அதன்பின் நடுவர் குழுவினர் பவானிசாகர் அணையைப் பார்வையிடப் புறப்பட்டனர். பெரியசேமூர், வீரப்பன் சத்திரம், சித்தோடு, ஊத்துக்காடு, செம்பூத்தாம் பாளையம், கவுந்தப்பாடி, ஒத்தக்குதிரை, கோபி... எங்கு பார்த்தாலும் சாலையோரங்களில் சிறுவர், சிறுமியர் தாய்மார்கள், முதியோர் எனச் சாரிசாரியாக மக்கள் மனிதச் சங்கிலி கோத்து நின்றிருந்தனர். அவர்களில் சிலர் ஏந்தி நின்ற அட்டைகளில்...

'நதிகளை இணைப்போம் -
ஒருமைப்பாடு காப்போம்!'...

'We want Justice'...
'Save our Right'...

-என்பன போன்ற வாசகங்கள் காணப்பட்டன.

சத்தியமங்கலத்தில் அமைக்கப்பட்டிருந்த ஓர் அலங்கார வளைவில் - 'Nature may fail, Tribunal never fail' என்று எழுதப்பட்டிருந்தது.

சுமார் 3 மணியளவில் பவானிசாகர் அணைக்கு வந்தாயிற்று; 32 டி.எம்.சி. மொத்தக் கொள்ளளவு உள்ள அந்த அணை, இப்போது 2 டி.எம்.சி. தண்ணீர் மட்டுமே இருந்ததால் வறண்டு போய்க்கிடந்தது. நடுவர் குழுவினரிடம் வரைபடம் காட்டி - அணைக்கு நீர் வரத்தின்மையால் ஏற்பட்டுள்ள கொடிய பாதிப்புப் பற்றி வகையுற விளக்கப்பட்டது. அணையின் பெரும்பகுதியில் புல்மண்டிக் கிடந்ததைக் கண்ட அவர்கள் பார்வையில் இரக்கம் தெரிந்தது.

பிறகு, நடுவர் குழுவினர் நீலகிரி மாவட்டத்திற்குப் புறப்பட்டார்கள். ரங்கம்பாளையம், பெத்திக்குட்டை, கணேசபுரம், சிறுமுகை, ஆலாங்கொம்பு, மேட்டுப் பாளையம் வழியே பயணம் தொடர்ந்தது.

### நீலகிரி மாவட்டம்

தமிழ்ப் புத்தாண்டு நாளான 14.4.1991 அன்று காலை 9 மணியளவில், 'மலைகளின் ராணி' எனப்படும் நீலகிரியிலிருந்து, காவிரி நீர்ப் பங்கீடு நடுவர் குழுவினர் புறப்பட்டனர். வளைந்தும் நெளிந்தும் ஏறியும் சரிந்தும் சென்ற மலைவழிப்பாதையில் சென்று 11.15 மணி அளவில் அவர்கள் மேல்பவானி அணைக்கட்டுக்குச் சென்றனர். 3.5 டி.எம்.சி. கொள்ளளவுள்ள அந்த அணையில் - அதுவும் கடந்த வாரம் பெய்த மழை



★ குரான், பைபிள், அவஸ்தா, தொல்மத் அல்லது கீதை இவைகளில் எதன் மூலம் நோக்கினும் நமக்குக் கடவுள் ஒருவரே, அவர் உண்மை, அன்புமயம். இதை என் வாழ்நாளில் காட்டுவதைத் தவிர உயிர் வாழ்தலில் வேறு பற்றுதல் எனக்குக் கிடையாது.

# இராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிமிடெட்.
## மதுரை-1

71 ஆண்டுகளாக காமராசர், பசும்பொன் தேவர் திருமகன், இராமநாதபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களிலுமுள்ள அனைத்து வகைப் பிரிவினருக்கும்

## சிறப்புறச் சேவை செய்வதன் மூலம் வளரும் வங்கி

**வாடிக்கையாளர்களை வரவேற்பதில் பெரும் உவகை கொள்கிறது.**

### சிறப்பு அம்சங்கள்

1. எங்கள் வங்கி அனைத்து வகை இட்டு வைப்புகளுக்கும் ½% கூடுதல் வட்டி தருகிறது.
2. எங்கள் வங்கி வழங்கும் வட்டியில் ரூ.7,000 வரை (வருடத்திற்கு) வருமானவரி விலக்கு உண்டு.
3. ரூ.2,65,000/- வரையிலான இட்டு வைப்புக்களுக்குச் செல்வ வரி விலக்கு உண்டு.
4. நிரந்தர இட்டு வைப்புகளுக்கு வாடிக்கையாளர் விருப்பப்படி மாதாந்திர வட்டி அளிக்கப்படும்.
5. இட்டுவைப்புதாரர் விருப்பப்படி வாரிசுதாரர் (நாமினி) நியமித்துக் கொள்ளலாம்.

சிறந்த சேவையுடன் கூடிய 48 கிளைகளுடன் செயல்படுகிறது.

வங்கிக்கு வருகை தாருங்கள் — வங்கியில் சேமியுங்கள்

தங்கள் பேராதரவினை என்றும் விரும்பும்,

இராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிமிடெட், மதுரை-1.

கோ.ராமசாமி, பி.காம்.,எச்.டி.சி.,
செயலாளர்

கா.சாகுல் ஹமீது எம்.ஏ.,எம்.பி.ஏ.,எச்.டி.சி.,
தனிஅலுவலர்






# இந்தியச் சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி நிறைவு விழா

சென்னை தீவுத்திடலில் கடந்த ஜனவரி மாதம் 5-ஆம் நாள் முதல் நடைபெற்று வந்த 17-வது இந்தியச் சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியின் நிறைவு விழா, 12.4.'91 அன்று நடந்தது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் திரு.ப.துரை, இ.கா.ப., அவர்கள் தலைமையில் மேதகு தமிழக ஆளுநரின் ஆலோசகர் திரு.வே.கார்த்திகேயன், அவர்கள் விழாவில் கலந்து கொண்டு பரிசுகளை வழங்கினார்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் திரு.ப.செல்வம், இ.ஆ.ப., அவர்கள் விழாவிற்கு வந்திருந்தவர்களை வரவேற்றுப் பேசுகையில், "இந்தப் பொருட்காட்சியில்தான் முதன் முதலாகப் பழமையான ஊர்திகளின் அலங்கார அணிவகுப்பும், கோலப் போட்டியும் நடத்தப்பட்டது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 1990-91-ஆம் ஆண்டில் 9.2 கோடி ரூபாய் மொத்த வருமானம் ஈட்டியது. இது முந்திய ஆண்டைக் காட்டிலும் 20 சதவிகிதம் அதிகம்" என்றார்.

செய்தி மற்றும் சுற்றுலாத் துறையின் செயலர் திருமதி.ஜெயந்தி இ.ஆ.ப. அவர்கள் விழாவில் கலந்து கொண்டு பேசுகையில், 100 நாட்கள் நடைபெற்ற இந்த பொருட்காட்சியின் மூலம் 91 இலட்சம் ரூபாய் மொத்த வசூலானதாகவும் இதில் 28 இலட்ச ரூபாய் நிகர இலாபம் கிடைத்ததாகவும், சுற்றுலா வளர்ச்சிக்காகத் தமிழக அரசு இவ்வாண்டு 1.07 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாகவும் கூறினார்.

விழாவிற்குத்தலைமையேற்றுத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் திரு.ப.துரை அவர்கள் பேசுகையில், "ஜனவரி 5-ஆம் தேதி தொடங்கிய இந்த சுற்றுலா பொருட்காட்சியை இதுவரை சுமார் 16 இலட்சம் மக்கள் கண்டு களித்தனர். ரூ.28 இலட்சம் நிகர இலாபம் கிடைத்தது. தமிழ்நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரிக்கிறது. இந்த ஆண்டு தமிழ்நாட்டுக்கு 78 இலட்சம் உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளும் 3.5 இலட்சம் அயல் நாட்டுப் பயணிகளும் வருகை புரிந்தனர். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு இவ்வாண்டு ரூ.113 இலட்சம் லாபம் ஈட்டியிருக்கிறது" என்று கூறினார்.

விழாவில் ஆளுநரின் ஆலோசகர் திரு.வே.கார்த்திகேயன் அவர்கள் கலந்து கொண்டு, பொருட்காட்சியில் சிறந்த அரங்குகளுக்குப்பரிசுகள் வழங்கிப் பேசுகையில், "நமது நாட்டுக்குச் சுற்றுலா ஒரு முக்கியமான வருமானத்தை ஈட்டித் தரும் தொழில். தனியாரும், தனியார் நிறுவனங்களும் சுற்றுலாவை ஊக்குவிக்கும் வகையில் சுற்றுலாத் துறைக்கு ஒத்துழைப்பு தரவேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

பொருட்காட்சியில் கலந்து கொண்ட சிறந்த அரசுத்துறை அரங்குகளில் முதல் பரிசு இந்து அறநிலையத்துறைக்கும், சிறந்த மாநில அரசுத்துறை நிறுவனங்களில் முதல் பரிசு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்துக்கும் வழங்கப்பட்டது.

—நமது செய்தியாளர்.

ஏழை யென்றும் அடிமை யென்றும்
எவனு மில்லை ஜாதியில்;
இழிவு கொண்ட மனித ரென்ப
திந்தி யாவில் இல்லையே
வாழி கல்வி செல்வ மெய்தி
மனம கிழ்ந்து கூடியே
மனிதர் யாரும் ஒருநிகர்ச
மான மாக வாழ்வமே!

—பாரதியார்

# பாவேந்தரும் குழந்தைகளும்

பின்னலூர் மு. விவேகானந்தன்

"இன்றைய முளையே நாளைய மரம்; இன்றைய குழவியே நாளைய குடி" என்ற இந்த உண்மைகள் உலகில் தோன்றிய எல்லாக் கவிஞர்களுக்கும் தெரிந்த ஒன்றுதான் எனினும் இளங்குழந்தைகளுக்காகப் பாட்டு எழுதும் ஆர்வமும் ஆற்றலும் ஒரு சிலருக்குத்தான் உண்டு.

குழந்தைகளுக்குச் செவிப்புலன் கூர்மையாக இருப்பது போலவே, கண்ணும் கூர்மை உடையது. அதனால் தான் அழும் குழந்தைகளுக்கு அம்புலியைக் காட்டும் பழக்கம் நம்மிடையே இருந்து வருகிறது. எனவேதான் குழந்தைக் கவிஞர்கள் மலை, கடல், வயல், சூரியன், வானவில் போன்ற பல்வேறு பொருள்களைப்பற்றியும், சிட்டு, கிளி, மயில், கோழி, பசு, கன்று, குதிரை போன்ற பறவைகள், விலங்குகள் பற்றியும் பாடுவதில் ஆர்வம் காட்டியுள்ளனர்.

பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் தம் பாடல்களில் இவ்வியற்கையின் மூலம் தமிழ் உணர்வையும், சமுதாயச் சிந்தனையையும், மாணவர்களுக்கான ஒழுக்க நெறிகளையும் பொறுப்புடன் வலியுறுத்தியுள்ளார்.

உதாரணமாக, "நிலவைப்" பற்றிப் பலர் பலவிதமான பாடல்களைப் பாடியுள்ளனர். "முழுமை நிலா அழகு நிலா முளைத்தது விண் மேலே, அது பழமையிலே, புது நினைவு பாய்ந்தெழுந்தாற் போலே" என்று பாடிய பாவேந்தர் அதே நிலவைச் சிறுவர்களுக்கு அறிமுகப் படுத்தும் பாங்கே அலாதியானது. அப்பாடல்:

"சொக்க வெள்ளித்தட்டு . மிகத்
தூய வெண்ணெய்ப் பிட்டு
தெற்கத்தியார் சுட்டு - நல்ல
தேங்காய்ப் பாலும் விட்டு
வைக்கச் சொன்ன தோசை
வயிர வட்ட மேசை
பக்க மீன்கள் பலவே! - ஒரு
பட்டத் தரசு நிலவே?"

ஔவையைப் போன்று ஆத்தி சூடி அருளிய பாவேந்தர், "இளையார் ஆத்திசூடி, இளைஞர் இலக்கியம், இசையமுது போன்ற தொகுதிகளில் சிறார்களுக்கு அறிவுரையும், அறவுரையும் அள்ளி வழங்கியுள்ளார். கல்வியின் அவசியத்தை அதிலும் குறிப்பாகப் பெண்கல்வியின் அவசியத்தை அவர் மிகவும் வலியுறுத்தியுள்ளார்.

**நூலைப்படி**

ஒரு சமயம் பாவேந்தரின் கடைசி மகளான ரமணி பள்ளிக்கூடம் போகாமல் அடம்பிடிக்கவே, அதைச் சமாதானப்படுத்தி பள்ளிக்கு அனுப்ப வேண்டும் என்பதற்காகக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தி ஒரு பாட்டைப் பாடினார், பாவேந்தர் அந்தப் பாடல்.

"தலைவாரிப் பூச்சூடி உன்னை-பாட
சாலைக்குப்போவென்று சொன்னாள்
உன் அன்னை!
சிலைபோல ஏன் அங்கு நின்றாய்-நீ
சிந்தாத கண்ணீரை ஏன் சிந்து
கின்றாய்?
விலைபோட்டு வாங்கவா முடியும்?-
கல்வி
வேளைதொறும் கற்று வருவதால்
படியும்!
மலைவாழை யல்லவோ கல்வி!-நீ
வாயார உண்ணுவாய் போயென்
புதல்வி!

இதுவரை கல்வியைப் பாடிய பாவேந்தர் அடுத்தது பெண்கல்வியின் அவசியத்தையும் அப்படியே பாடிச் சொல்கிறார்.

படியாத பெண்ணாய் இருந்தால் -
கேலி
பண்ணுவார் என்னை இவ்வூரார்
தெரிந்தால்!
கூடியாரம் ஓடும்முன் ஓடு!-என்
கண்ணல்ல! அண்டை வீட்டுப்
பெண்களோடு!
கூடிதாய் இருக்கும் இப்போது! கல்வி!
கற்றிடக் கற்றிடத் தெரியும் அப்போது!
கடல் சூழ்ந்த இத்தமிழ்நாடு - பெண்
கல்வி பெண்கல்வி என்கிறது
அன்போடு!

இத்தகைய கல்வியைப்பெற குழந்தைகள் என்ன செய்ய வேண்டும் தெரியுமா? அவர்கள் எந்நேரமும் படிக்க வேண்டும். படிப்பதைக்கூட எப்படிப் படிக்க வேண்டும் எத்தகைய நூல்களைப் படிக்க வேண்டும் என்பதைப் பட்டியல் போட்டுக் காட்டுகின்றார் பாவேந்தர்.

நூலைப்படி - சங்கத் தமிழ்
நூலைப்படி - முறைப்படி
நூலைப்படி!
காலையில்படி, கடும்பகலில் படி
மாலை இரவு பொருள்படும்படி
நூலைப்படி!

கற்பவை கற்கும்படி
வள்ளுவர் சொன்னபடி
கற்கத்தான் வேண்டும் அப்படிக்
கல்லாதவர் வாழ்வது எப்படி?
நூலைப்படி!

அறம்படி பொருளைப்படி
அப்படியே இன்பம்படி
மறைந்த தமிழ் நான்மறை
பிறந்த தென்று சொல்லும்படி
நூலை படி!

அகப்பொருள்படி அதன்படி
புறப்பொருள்படி நல்லபடி
புகப்புகப் படிப்படியாய்
புலமை வருமென் சொற்படி
நூலைப்படி.

சாதி என்னும் தாழ்ந்தபடி
நமக்கெல்லாம் தள்ளுபடி
சேதி அப்படித் தெரிந்துபடி
தீமை வந்திடுமோ மறுபடி
நூலைப்படி

பொய்யிலே முக்காற்படி
புரட்டிலே காற்படி
வையகம் ஏமாறும்படி
வைத்துள்ள நூல்களை ஒப்புவ தெப்படி!
நூலைப்படி!

தொடங்குகையில் வருந்தும்படி
இருப்பினும் ஊன்றிப்படி!
அடங்கா இன்பம் மறுபடி
ஆகுமென்ற ஆன்றோர் சொற்படி
நூலைப்படி!

இவ்வளவு பெரிய பாடல் என்றாலும் இதை எளிதில் மனப்பாடம் செய்துவிடலாம். இப்பாடல் முழுமையும் மனத்தில் இருத்திக் குழந்தைகள் கற்றுவந்தால் எதிர்காலத்தில் அவர்களும், தமிழும், தமிழகமும் கல்வியிற் சிறந்ததொரு நிலையை, மேம்பாட்டை அடையலாம்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 566926. 566927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

பதிவு எண். M 8676
Licence No. TN/MS(C)/PP-23







காரணமாக அரை டி.எம்.சி. தண்ணீரே அப்போது சிறு குட்டை போலத் தேங்கிக் கிடந்தது!

அந்த அணைக்கு, நீரில்லாமல் ஏற்பட்டிருக்கும் அவல நிலை பற்றி நம்முடைய பொதுப்பணித்துறை அதிகாரிகள் நடுவர் குழுவினரிடம் எடுத்துரைத்தனர்.

**பின்னர் எல்லோருமாக, அதற்கும் மேலே - அதாவது கடல் மட்டத்திலிருந்து சுமார் 2,500 அடிக்கும் மேலே கட்டப்பட்டுப் பாதியில் நின்றுவிட்ட கீழ் வரதப்பள்ளம் அணைக்குப் போய்ச் சேர்ந்தனர். அந்த அணை பற்றிய விவாதத்தில் கேரள மாநில அதிகாரிகள் சற்றே உரத்த குரலில் விவாதித்ததைக் கேட்க முடிந்தது.**

அதன் பிறகு - கீழே உள்ள குந்தா அருகில், மஞ்சூர் விநாயகர் கோயிலையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வரவேற்பு விழாவில், நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் செல்வி லீனா நாயர், நடுவர் குழுவினருக்கு வரவேற்புச் சிற்றுண்டி அளித்து உபசரித்தார். அவர்களுக்குப் பூச் செண்டு வழங்கிய அந்த அம்மையார் - "தமிழ்நாட்டு மக்கள் முகமெல்லாம் உங்கள் தீர்ப்பால் இதேபோல் மலர வேண்டும்!" என்று தெரிவித்தார்.

சிறிது நேர ஓய்வுக்குப் பிறகு நமது பயணம் - அன்னமலை முருகன் கோயில் வழியாக 45 கொண்டை ஊசி மலைப்பாதை வளைவுகளைத் தாண்டி கோவையில் வந்து முடிவுற்றது.

அதற்கு மறுநாள் (15.4.91) கோவை மாவட்டத்தில் உள்ள அமராவதி அணைக்கட்டு நடுவர் குழுவினரால் பார்வையிடப்பட்டது.

4,047 மில்லியன் கன அடி கொள்ளளவுள்ள அமராவதி அணையில், அன்றைய தினம் 137.56 மில்லியன் கன அடி தண்ணீர்தான் கிடந்தது.

**மொத்தத்தில் ஏறத்தாழ 6,000 ஏக்கர் நிலம் பயன் பெறத்தக்க அளவில் உருவாக்கப்பட்ட இந்த அணைக் கட்டில் வைக்கப்பட்டிருந்த வரைபடமே பிற மாநிலப் பிரதிநிதிகளின் விவாதத்திற்கு உள்ளாகியது.**

**"இங்குள்ள வரைபடம் தமிழ்நாட்டை மட்டுமே காட்டுகிறதே தவிர, இந்த அணையோடு தொடர்புள்ள மற்ற மாநிலங்கள் குறிக்கப்படாமல் அரைகுறையாக இருக்கிறது!" என்றார், கர்நாடகப் பிரதிநிதிகளில் ஒருவர்.**

**"தேவையானவைதான் இதில் குறிப்பிடப்பட்டிருக் கின்றன; இதே நடுவர் குழு உங்கள் மாநிலத்திற்கு வரும்போது தமிழ்நாட்டு வரை படத்தை காட்டப் போகிறீர்களா?" என்றார் நம்முடைய பிரதிநிதியொருவர். அதைத் தொடர்ந்து அங்கெழுந்த சிரிப்பில் நடுவர் குழுவினரும் கலந்து கொண்டார்கள்.**

கருத்துப் பரிமாற்றமெல்லாம் முடிந்த பிறகு, கேரள மாநிலத்திற்குப் பயணமான காவிரி நீர்ப் பங்கீட்டு நடுவர் குழுவினரை. "மிகுந்த நம்பிக்கையோடு இருக்கிறோம்!" என்று கூறி, கரங்கூப்பி வழியனுப்பி வைத்தார் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எம்.. கலைவாணன்.

கேரள மாநிலத்தில் 16,17 தேதிகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டபின், 18.4.91 அன்று டில்லிக்குத் திரும்பிய காவிரி நீர்ப் பங்கீட்டு நடுவர் குழுவினர், இதற்கு முன்பாகக் கர்நாடக மாநிலத்தில் காவிரி நீர்ப் பாசனப் பகுதியைக் காணும் தமது சுற்றுப் பயணத்தை முடித்து விட்டிருந்தனர்.

**நிகழ்ச்சித் தொகுப்பு:**
**பி.எல். ஆர்.**





# பாவேந்தர் காலச் சூழ்நிலை!

**புலவர் சா.மருதவாணன்**

பாவேந்தரின் பகுத்தறிவு உள்ளத்தைக் காண்பதற்கு முன்னர், அவர் வாழ்ந்த காலச் சூழ்நிலையை எண்ணிப் பார்க்க வேண்டும். மக்கள் கல்விக்கண் பெறமுடியாமல் திண்டாடிய காலம். மக்கள் அறியாமைக் கடலில் வீழ்ந்து தத்தளித்த காலம். பொய்யும் புனை சுருட்டும் கோலோச்சிய காலம். கல்லாதவர்களைக் கற்ற வர்கள் ஏமாற்றிய காலம்.

பாவேந்தர் தாம் வாழ்கின்ற வகை கெட்ட காலத்தைப் பார்க்கிறார். ஏடெடுத்துப் படித்தவர் களும் பகுத்தறிவிற்குக் கிஞ்சிற்றும் இடம் கொடுக் காமல், பாமரர்களாய்ப் பரிதவிப்பதைக் காணு கின்றார். இதோ, பாவேந்தரின் பகுத்தறிவுச் சிந்தனையில் விளைந்த நன்முத்துக்கள்!

"பழையநூல்கள் இப்படிப் பகர்ந்தன
என்பதால் எதையும் நம்பிவிடாதே!
உண்மை என்றுநீ ஒப்பிவிடாதே!
பெருநாளாகப் பின்பற்றப் படுவது
வழக்கமாக இருந்து வருவது
என்பதால் எதையும்நீ நம்பிவிடாதே!

இருப்பவர் பலரும் ஏற்றுக் கொண்டனர்
என்பதால் எதையும்நீ நம்பிவிடாதே!
பிழையோர் சென்ற பீடற்ற நெறியைப்
பின்புற்றுவதால் நன்மையே இல்லை!
ஆண்டில் முதியர் அழகியர் கற்றவர்
இனிய பேச்சாளர் என்பதற்காக
எதையும் நம்பிடேல்! எதையும் ஒப்பேல்!

ஒருவர் சொன்னதை ஆய்ந்துபார்
அதனை அறிவால் சீர்தூக்கிப் பார்
அறிவினை அறிவினால் ஆய்க; சரி எனில்
அதனால் உனக்கும் அனைவருக்கும்
நன்மை உண்டெனில் நம்ப வேண்டும்.
அதையே பின்பற்றி ஒழுகு!
இவ்வுண் மைகளை ஏற்றுநீ நடந்தால்
மூடப்பழக்க வழக்கம் முழுமையாய் ஒழியும்
சமயப் பொய்ம்மைகள் அறிவினால் சாமே!"

**இரண்டாம் அட்டை சொல்லும் செய்தி:**



# டாக்டர் அம்பேத்கர்

## நூற்றாண்டு நிறைவு விழா

டாக்டர் அம்பேத்கர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா வள்ளுவர் கோட்டத்தில் 14.4.'91 அன்று சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. அன்று காலை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைச் செயலர் திரு. செ. செல்லப்பன், இ.ஆ.ப. அவர்கள், டாக்டர் அம்பேத்கர் அவர்களின் வாழ்க்கை வரலாறு பற்றிய புகைப் படக் கண்காட்சியைத் திறந்து வைத்தார்.

பிறகு, கவிஞர் ஈரோடு தமிழன்பன் அவர்கள் தலைமையில் கவியரங்கம் நடைபெற்றது. அன்று மாலை திரு.சிலம்பொலி செல்லப்பன் அவர்கள் தலைமையில் டாக்டர், அம்பேத்கர் அவர்களைப் பற்றிய கருத்தரங்கம் நடந்தது. டாக்டர் அம்பேத்கர் ஒரு புரட்சியாளராக வும், சிறந்ததொரு சனநாயகவாதி யாகவும், சீரிய பகுத்தறிவாளராக வும், மனித நேயப் பண்பாளராக வும், சட்ட மேதையாகவும், கல்விக் கடலாகவும், சீர்திருத்தச் செம்மலாக வும் சித்திரிக்கப்பட்டார்.

செய்தி சுற்றுலாத்துறைச் செயலர் திருமதி.ஜெயந்தி, இ.ஆ.ப. அவர்கள் அனைவரையும் வரவேற்றார். மேதகு ஆளுநரின் ஆலோசகர் திரு. வி. கார்த்திகேயன் அவர்கள் விழாவிற்குத் தலைமையேற்று, அம்பேத்கர் பற்றிய கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்குப் பரிசுகள் வழங்கினார்.

மேதகு தமிழக ஆளுநர் திரு. பீஷ்மநாராயண்சிங் அவர்கள், டாக்டர்அம்பேத்கர் நினைவு அஞ்சல் தலையை வெளியிட அதை நிலச் சீர்திருத்த சிறப்பு ஆணையர் திரு. சி.தங்கராஜ், இ.ஆ.ப. அவர்கள் பெற்றுக் கொண்டார். அம்பேத்கர் உருவம் பொறித்த ஒரு ரூபாய் நாணயத்தை மேதகு ஆளுநர் அவர்கள் வெளியிட, அதை ஆளுநரின் ஆலோசகர் திரு.வி.கார்த்திகேயன் பெற்றுக்கொண்டார். பின், தொழில் முனைவோர்க்குக் கடன் மற்றும் நலிந்தோர்க்கு நலத்திட்ட உதவிகள் ஆகியவற்றை மேதகு ஆளுநர் அவர்கள் வழங்கி விழாச்சிறப்புரை யாற்றினார். அப்போது அவர் குறிப் பிட்டார்:

"டாக்டர் அம்பேத்கர் சர்வகலா வல்லவர். ஒரு நுண்ணிய அறிஞர்- பயமே அறியாத அரிய வீரர். அவர் ஒரு நல்ல படிப்பாளி, தலைசிறந்த கல்வியாளர், அற்புதமான பேச் சாளர், அரசியல் சட்ட நிபுணர், திறமையான நிர்வாகி, அஞ்சா நெஞ்சம் கொண்ட ஏழைகளின் பாதுகாவலர். அரசியல் நிர்ணய சட்டத்தை இயற்றியதிலும், தீண்டா மையை ஒழிப்பதிலும் அவர் ஆற்றிய பணி பன்னெடுங்காலம் நம் நினை வில் பசுமையாக இருக்கும். ஜாதிகள் இருக்கும் வரை தீண்டாமையும் இருக்கும் என முழங்கியவர் டாக்டர் அம்பேத்கர்.

ஏழைகளின் வாழ்க்கைத்தரம் உயர சீரிய திட்டங்கள் தீட்டுவதில் தமிழகம் முன்னணியில் உள்ளது. ஒரு மாவட்டத்திற்கு டாக்டர் அம்பேத் கரின் பெயரை வைத்த மாநிலம் இந்தியாவிலேயே தமிழ்நாடு தான். சுயவேலைவாய்ப்பு மற்றும் தொழிற் சாலைகள் தொடங்க 100 தாழ்த் தப்பட்ட மக்களுக்குக் கடன் மற்றும் உதவித்தொகை வழங்க அரசு தீர் மானித்துள்ளது. நிதி நிறுவனங் களும் சேவை சங்கங்களும் தத்து எடுத்து பராமரிக்க இரண்டு கிரா மங்களை அரசு வழங்குகிறது.

தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்க 15 சமூக நிலையங்களைக் கட்டு வதற்கு அரசு அனுமதி வழங்கி யுள்ளது. நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சென்னை சட்டக் கல்லூரி டாக்டர் அம்பேத்கர் சட்டக்கல்லூரி எனப் பெயரிடப் பட்டது. வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் வளாகத்தில் அம்பேத்கர் திருவுருவச்சிலை திறந்து வைக்கப் பட்டது. இந்திய அரசாங்கம் அன் னாரது நினைவாக ஒரு ரூபாய் நாணயமும், அஞ்சல் தலையும் வெளியிடத் தீர்மானித்துள்ளது. இவைகளை வெளியிடுவதில் நான் பெருமைப் படுகிறேன்.

டாக்டர் அம்பேத்கரின் ஏழு நூல்களைத் தமிழில் மொழி பெயர்க்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. தாழ்த் தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற் காக மத்திய அரசு ரூ.50 இலட்சம் ஒதுக்கியுள்ளது. டாக்டர் அம்பேத்கர் போன்றவர்கள் அடிக்கடி பிறப்ப தில்லை. அவர்களுடைய செய்தியை எடுத்துச் சொல்வதின் மூலம் சமு தாயத்தில் ஒரு மறுமலர்ச்சியை நாம் ஏற்படுத்தலாம்".

ஒரிஸ்ஸா மாநில மேதகு ஆளுநர் திரு.யக்ஞதத் சர்மா அவர்கள் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்து விழாப் பேருரையாற்றினார். திருவாளர்கள் சி.டி.தண்டபாணி, ஏ.எஸ்.பொன்னம்மாள், அண்ணா நம்பி, வை.பாலசுந்தரம், சி.கே. தமிழரசன், நிலச்சீர்திருத்தத் துறை சிறப்பு ஆணையர் திரு.சி.தங்கராஜ், இ.ஆ.ப., ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைச் செயலர் திரு.செ.செல்லப்பன், இ.ஆ.ப., ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு.க.கணேசன், இ.ஆ.ப., அவர்கள் நன்றி நவின் றார். பின்பு கண்கவர் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன





# இந்த இதழில்...


சுற்றுப்புறத் தூய்மையும் பொருளாதார வளர்ச்சியும் முரண்பட்டவையல்ல —மேதகு ஆளுநர் உரை ... 2

தேர்தல் - முக்கியச் செய்திகள் ... 3

மகளிர் மேம்பாடு ... 5

பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு நிறைவு விழா ... 9

எழுச்சிக் கவிஞர் பாரதிதாசன் —மேதகு ஆளுநர் உரை ... 11

பத்திரிகையாளர் பாவேந்தர் ... 14

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் சீரிய பணிகள் ... 17

இந்தியாவின் மக்கள் தொகை 84 கோடி ... 19

தமிழ்நாட்டில் வனவிலங்குச் சரணாலயங்கள் ... 23

பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ... 27

மதுரை மாவட்ட வளர்ச்சிப் பணிகள் ... 29

முனையிலே முகத்து நில் ... 33

மீன் வளர்ச்சி - மீனவர் மேம்பாடு ... 35

பாவேந்தரின் 'பாண்டியன் பரிசு' —ஒரு புதிய பார்வை ... 37

கலப்படமும் நுகர்வோர் விழிப்புணர்வும் ... 39

எலும்புப் புற்றுநோய் — இதோ ஒரு புதுச் சிகிச்சை ... 41



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2022

வைகாசித் திங்கள் - 2

மலர்:21 இதழ்:22

16-5-1991

நடைபெறவிருக்கும் 537 மக்களவைத் தொகுதிகளில் 9,107 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள். தமிழ்நாடு, அரியானா, உத்திரப் பிரதேசம், மேற்கு வங்கம், கேரளம், பஞ்சாப், அசாம் ஆகிய 7 மாநிலங்களிலும் புதுவை யூனியன் பிரதேசத்திலும் உள்ள 1,464 சட்டப்பேரவைத் தொகுதிகளில் மொத்தம் 17,500 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள்!

★ புதுவை யூனியன் பிரதேசத்தில் உள்ள ஒரே ஒரு மக்களவைத் தொகுதிக்கு 13 பேர் போட்டியிடுகிறார்கள்; அங்குள்ள 30 சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கு 208 பேர் போட்டியிடுகிறார்கள்!

★ இந்தப் பொதுத் தேர்தலைப் பொறுத்தவரை தமிழ்நாட்டில், பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளாகத் தேசியக் கட்சிகள் 9ம், மாநிலக் கட்சிகள் 3ம் அங்கீகரிக்கப்படாத, பதிவு செய்யப்பட்ட கட்சிகள் 42ம் போட்டியிடுகின்றன!

★ செங்கை-அண்ணா மாவட்டத்தைச் சேர்ந்த வி.டி.ஆர். வீரப்ப கவுண்டர் என்பவர், சில அரசியல் கட்சிகளின் முக்கியத் தலைவர்களை எதிர்த்துப் போட்டியிட 8 இடங்களில் வேட்பு மனுத் தாக்கல் செய்திருக்கிறார்.

★ தமிழ்நாடு சட்டப் பேரவைத் தேர்தல் பார்வையாளர்களாக 78 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் தமிழக அரசின் தேர்தல்துறை மூலம் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த அதிகாரிகள் ஒவ்வொருவரும் தலா மூன்று தொகுதிகளைக் கவனித்துக் கொள்ளுவார்கள்!

★ இந்தத் தேர்தலில், இந்தியா முழுமையிலுமாக-24 முன்னாள் முதலமைச்சர்கள், 3 மாநில முதல்வர்கள் மக்களவை-சட்டமன்றம்-யூனியன் பிரதேசத் தேர்தல்களில் போட்டியிடுகிறார்கள்!

★ இந்தியாவிலேயே மிகப்பெரிய மாநிலமான உத்திரப்பிரதேசத்தில் உள்ள 85 பாராளுமன்றத் தொகுதிகளில் 1,650 வேட்பாளர்களும், 425 சட்டமன்றத் தொகுதிகளுக்கு 10,000 வேட்பாளர்களும் போட்டியிடுகிறார்கள்!

★ தமிழகத்திலுள்ள சட்டமன்றத் தொகுதிகளில் போட்டியிடும் மொத்த வேட்பாளர்கள் எண்ணிக்கை, மாவட்ட வாரியாக வருமாறு: சென்னை 214, செங்கை-அண்ணா 422, சிதம்பரனார் 81, கோயம்புத்தூர் 214, தருமபுரி 74, திண்டுக்கல்-காயிதேமில்லத் 60, காமராசர் 118, கன்னியாகுமரி 67, மதுரை 187, நீலகிரி 28, வட ஆர்க்காடு அம்பேத்கர் 87, பசும்பொன் தேவர் திருமகன் 34, பெரியார் 132, புதுக்கோட்டை 44, இராமநாதபுரம் 36, சேலம் 188, தென்னார்க்காடு 150, தஞ்சாவூர் 123, திருச்சிராப்பள்ளி 396, நெல்லை கட்டபொம்மன் 120, திருவண்ணாமலை சம்புவராயர் 59. ஆக மொத்தம் 2,834 வேட்பாளர்கள்.

★ இந்தத் தேர்தலில் சுயேச்சை வேட்பாளர்களுக்கெனக் கூடுதலாக 310 சின்னங்கள் தேர்தல் கமிஷனால் ஒதுக்கீடு செய்யப்பட்டது.



★ இந்த மககளவைத் தேர்தலில் மொத்தம் 51 கோடியே 41 இலட்சத்து 26 ஆயிரத்து 380 வாக்காளர்கள் வாக்களிக்கவிருக்கின்றனர். இதில்- 24 கோடியே 38 இலட்சத்து 70 ஆயிரத்து 209 பேர் பெண் வாக்காளர்கள். ஏறத்தாழ பாதிக்குப் பாதியளவில் பெண் வாக்காளர்கள் இருந்தபோதிலும் போட்டியிடும் வேட்பாளர்களில் 2 சதவிகிதம் பேர்களே பெண்கள்!

★ பாராளுமன்றத் தேர்தலில் 1989-இல் போட்டியிட்டவர்கள் 6,000 வேட்பாளர்களே; இந்தமுறை அதைவிட 4,000 வேட்பாளர்கள் அதிகமாகப் போட்டியிடுகிறார்கள்.

★ 19.4.91 முதல் 8 நாட்களில் சுமார் 30,000 வேட்பாளர்களால் தமிழகத்தில் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அவைகளில் 500 மனுக்கள் 27.4.91-இல் நிராகரிக்கப்பட்டன.

★ 1989-ஆம் ஆண்டு ஜனவரியில் நடைபெற்ற 234 தொகுதிகளில் மொத்தம் 6,049 வேட்பாளர்கள் வேட்புமனுத் தாக்கல் செய்திருந்தனர்; இந்தத் தேர்தலில் 4,617 வேட்பாளர்களே வேட்பு மனுத்தாக்கல் செய்தனர். இது, கடந்த தேர்தலைவிட 1,432 குறைவு ஆகும். 1989 நவம்பரில் நடைபெற்ற 543 தொகுதிகளுக்கான மக்களவைத் தேர்தலில் 771 பேர் வேட்பு மனுத்தாக்கல் செய்திருந்தனர்; இப்போதோ 671 பேரே மனுத் தாக்கல் செய்துள்ளனர். இதுவும் கடந்த முறையைவிட 100 குறைவு ஆகும்.

★ சிதம்பரனார் மாவட்டம் கோவில்பட்டி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடத் திருமதி காளியம்மாள் என்ற 102 வயதுப் பெண்மணி வேட்பு மனுத்தாக்கல் செய்தார்.

★ தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில், தமிழகத்திலேயே மிகக் குறைந்த வேட்பாளர்கள் மோதும் தொகுதி சேலம் மாவட்டத்தில் உள்ள சேந்தமங்கலம் ஆகும். அங்கு 4 வேட்பாளர்களே களத்தில் உள்ளனர்.

தொகுப்பு:
இல.இராசேந்திரன்



# மகளிர் மேம்பாடு



"விவசாய வளர்ச்சிக்கான பன்னாட்டு நிதி" எனும் அமைப்பின் நிதியுதவியுடன் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் ரூ.4,592 இலட்சம் செலவில் தருமபுரி, சேலம், தென்னார்க்காடு, மதுரை, பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டங்களைச் சார்ந்த சுமார் 55,000 மகளிர் 7 ஆண்டுகளில் பயன் பெறும்பொருட்டு "தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம்" எனும் புதியதோர் பெருந்திட்டத்தை வகுத்து 1989-90 ஆண்டிலிருந்து தருமபுரி மாவட்டத்தில் செயல்படுத்தத் துவங்கியுள்ளது.

பொருளாதார மற்றும் சமூக நிலையைக் குறிக்கும் புள்ளி விவரங்களின் அடிப்படையில் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள இம்மூன்று மாவட்டங்களும் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

மகளிருடைய பொருளாதார சமூக நிலையையும், அவர்தம் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தும் பொருட்டு அவர்களைச் சிறு குழுக்களாக இணைத்து அக்குழுவினரது வருவாய் ஈட்டும் திறனை அதிகரிக்கச் செய்வதும், மாறிவரும் சமூக சூழ்நிலையைக் குறித்த விழிப்புணர்ச்சியை அவர்களுக்கு ஏற்படுத்தி அதற்கேற்பத் தங்களைத் தயார்படுத்திக் கொள்ள அவர்களது தன்னம்பிக்கையை வளரச் செய்தலும் இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்களாகும். திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூ.4,592 இலட்சங்களாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

ஆண்டுவருமானம் ரூ.6,400 க்குக் குறைவாக உள்ள குடும்பத்தைச் சார்ந்த 18 முதல் 55 வயதிற்குட்பட்ட மகளிர் குழுக்களாக அமைக்கப்பட்டு ஒவ்வொரு குழுவிலும் சுமார் 15 மகளிர் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு ஒரு குறிப்பிட்ட தொழில் நடத்துவது தொடர்பாகக் கடனுதவி அளிக்கப்படுகிறது. உறுப்பினர்கள் குழு சேமிப்பு நிதிக்





## சுற்றுப்புறத் தூய்மையும்

## பொருளாதார வளர்ச்சியும்

## முரண்பட்டவையல்ல!

**மேதகு ஆளுநர்**
**திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள்**

"சுற்றுப்புறச் சூழ்நிலைகள் கெட்டுப்போவது ஊட்டியில் மட்டும் நடப்பது அல்ல. அது உலக அளவில், விஞ்ஞானிகளுக்கு அதிக கவலையைக் கடந்த 20 ஆண்டுகளாகத் தந்து கொண்டிருப்பது ஆகும். இதனால் பூமி மேலும் சூடாவது பற்றியும், பூமியின் மேல் பரப்புகளுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்து பற்றியும், பாலைவனங்கள் பரவி விளைநிலங்கள் அழிந்து போகும் அபாயங்கள் பற்றியும், பலமுறை விஞ்ஞானிகள் எச்சரித்து வருகின்றனர். வளர்ந்து விட்ட நாடுகளை மட்டுமே பாதித்து வந்த மாசுபட்ட சுற்றுச் சூழ்நிலை, இப்பொழுது ஏறத்தாழ அனைத்து நாடுகளையும் பாதிக்கிறது. வளர்ச்சித் திட்டங்கள் அனைத்தையும் இந்தக் கோணத்தில் நாம் காண வேண்டி உள்ளது.

சுற்றுப்புறச் சூழலைப் பாதிக்காதவாறு பொருளாதார மேம்பாட்டை அடைவது என்பது கடினமான செயலாக விளங்குகிறது. சுற்றுச்சூழல் அமைப்பில் முன்னேற்றம் குறித்தும் இயற்கையை எவ்வாறு பயன்படுத்திக் கொள்வது என்பது குறித்தும், திட்டமிடுபவர்களும், பொருளாதார நிபுணர்களும், சுற்றுச் சூழல் நிபுணர்களும் சரியாகத் தீர்மானிக்க இயலாதவர்களாகவே உள்ளனர். இதற்குக் காரணம் பொருளாதார வளர்ச்சியும், சுற்றுப்புறத் தூய்மையும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவையென்றும், பொருளாதார வளர்ச்சியாலோ, தொழிற்சாலைகள் அதிகரிப்பதாலோ, சுற்றுச்சூழல் பாதிக்கப்படுகிறது என்று கருதப்படுவதேயாகும். இதில் ஒன்றிருந்தால் மற்றொன்று இருக்கமுடியாது என்றே கருதப்படுகிறது.

எனவே, சுற்றுப்புறச் சூழல் நிபுணர்கள் வளர்ச்சித் திட்டங்களைத் தடுக்கின்றனர். பொருளாதார நிபுணர்கள் சுற்றுப்புறச் சூழலைப் பற்றிச் சற்றும் கவலை கொள்ளாது பொருளாதார முன்னேற்ற நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். இருவரது வாதங்களும் சரியே என்றாலும் இரண்டும் நேர்மாறான கருத்துக்கள். அவை பொருளாதார முன்னேற்றத்திற்கோ, சுற்றுச் சூழலுக்கோ உதவாது".

"சமீப காலத்தில் ஊட்டி ஒரு சிறந்த சுற்றுலாத் தலமாக முக்கியத்துவம் பெற்றுக் கொண்டிருப்பதால், ஊட்டியின் அழகைப் பராமரிப்பது மிகவும் அவசியமாகிறது. ஊட்டியின் பெருமைக்குரிய ஏரி, அழகை, இழந்து வருகிறது. இதன் அசுத்தத்தை நீக்க, கழிவு நீர் அகற்றும் திட்டம் இப்பொழுது நிறைவேற்றப் படுகிறது. 1990-91-ஆம் ஆண்டில் இதற்காக ரூ.1.68 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் திட்டக்குழு இதற்காக 1991-92-ஆம் ஆண்டிற்கு ரூ.1 கோடியை ஒதுக்கியுள்ளது. இத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டபின் ஊட்டி இழந்துவிட்ட தன் பொலிவை மீண்டும் பெறும் என நம்புகிறேன். இந்த இடத்திற்கே உரித்தான கலைப்பொருட்களைப் பற்றி நன்கு விளம்பரப் படுத்தி ஊட்டியின் சுற்றுலா வளர்ச்சிக்கு மக்கள் உதவ வேண்டும்".

(4.5.91 அன்று உதகையில் நடைபெற்ற கோடை விழாத் தொடக்க நாளன்று மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து).



JL

# தேர்தல்: சில முக்கியச் செய்திகள்

10.5.91 வரையில் சேகரிக்கப்பட்ட செய்தித் துளிகள்!

★ தமிழ்நாட்டில் மொத்தம் 39 மக்களவைத் தொகுதிகள் இருக்கின்றன. எல்லாத் தொகுதிகளிலும் பலமுனைப் போட்டிகள் இருந்தபோதிலும் திண்டிவனம் தொகுதி ஒன்றில் மட்டுமே மும்முனைப் போட்டி உள்ளது. அதேபோல, அதிகபட்ச வேட்பாளர்கள் தென்சென்னைத் தொகுதியிலே போட்டியிடுகிறார்கள்; தென் சென்னைத் தொகுதியில் போட்டியிடுவோர் எண்ணிக்கை 28. தமிழ்நாட்டின் மொத்த மக்களவைத் தொகுதிகளிலும் 461 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள்!

★ தமிழ்நாட்டில் உள்ள 234 சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் மொத்தம் 2834 வேட்பாளர்கள் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்திருக்கிறார்கள். இவற்றில்- பெரணமல்லூர், சேந்தமங்கலம், நன்னிலம் ஆகிய மூன்று தொகுதிகளில் மட்டுமே மிகக் குறைந்த வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள்; இத்தொகுதிகளில் தலா மூன்று வேட்பாளர்களே போட்டியிடுகின்றனர்! மாவட்டவாரியாகப் பார்க்கும்போது- செங்கை அண்ணா மாவட்டத்தில்தான் அதிக அளவில், அதாவது 422 பேர் போட்டியிடுகிறார்கள். மிகக்குறைந்த அளவில் வேட்பாளர்கள் போட்டியிடும் மாவட்டம் நீலகிரியாகும்; அங்கே மொத்தத்தில் 28 பேர்களே இத்தேர்தலில் போட்டியிடுகிறார்கள்!

★ பஞ்சாப், அசாம் மாநிலங்களில் ஜூன் மாதத்திலும் - மற்ற சட்டமன்றங்களுக்கு மக்களவைத் தேர்தலுடன் இம்மாதம் 20,23,26 ஆகிய தேதிகளிலும் வாக்குப்பதிவு நடக்கிறது.

★ செங்கை அண்ணா மாவட்டம் பள்ளிப்பட்டு சட்டமன்றத் தொகுதியில் 264 பேரும், திருச்சிராப்பள்ளி மாவட்டம் அரவக்குறிச்சி சட்டமன்றத் தொகுதியில் 249 பேரும் (1.5.91 நிலவரப்படி) போட்டியிடுகிறார்கள். இதனால் அவ்விருதொகுதிகளுக்குமாக 2.5 அடி உயரமும், 2 அடி அகலமும், 2 அடி நீளமும் கொண்ட மிகப்பெரிய வாக்குப் பெட்டிகள் தயாரிக்கப்படுகின்றன; இந்தியாவிலேயே இப்படிப்பட்ட வாக்குப் பெட்டி வைப்பது இதுதான் முதல் தடவையாகும்! இத்தொகுதிகளுக்கான ஒவ்வொரு வாக்குச்சீட்டும் 61 செ.மீ. நீளம், 86 செ.மீ அகலம் இருக்கும்.



★ காமராசர் மாவட்டத்தைச் சேர்ந்த சாத்தூர் சட்டப்பேரவைத் தொகுதியில் மொத்தம் 43 பேர் போட்டியிடுகிறார்கள். இவர்களில் 7 வேட்பாளர்களின் பெயர்கள் 'இராமச்சந்திரன்' என்பதாகும். இரு வேட்பாளர்கள் 'பாலசுப்பிரமணியம்' என்றும், மற்றும் இரு வேட்பாளர்கள் 'புகழேந்தி' என்றும் பெயருடையோராவர்! ஆலம்பட்டி வேலாயுதம் என்ற சிறைக்கைதியும் இங்கே ஒரு தொகுதியில் சுயேச்சையாகப் போட்டியிடுகிறார்!

★ மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு.சந்திரசேகர் உத்திரப் பிரதேசத்திலுள்ள பலியா தொகுதியில் போட்டியிடுகிறார்; அவரை எதிர்த்து 21 பேர் போட்டியிடுகிறார்கள். ஃபதேபூர் தொகுதியில் போட்டியிடும் முன்னாள் பிரதமர் திரு.வி.பி.சிங்கை எதிர்த்து 34 பேர் போட்டியிடுகிறார்கள். அமேதி தொகுதியில் போட்டியிடும் முன்னாள் பிரதமர் திரு.ராஜீவ் காந்தியை எதிர்த்து 41 பேர் போட்டியிடுகிறார்கள்.

★ கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள நாகர்கோவில் மக்களவைத்தொகுதி-கிள்ளியூர், விளவங்கோடு, திருவட்டார் சட்டப்பேரவைத் தொகுதி ஆகியவைகளில் மலையாள மொழி பேசுவோர் அதிகமிருப்பதால்- அத்தொகுதிகளுக்கான வாக்குச் சீட்டுகள் தமிழ், ஆங்கிலம், மலையாளம் ஆகிய மும்மொழிகளில் அச்சடிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

★ தமிழ்நாட்டில் நடைபெறும் மக்களவைத் தேர்தலை மேற்பார்வையிடத் தேர்தல் கமிஷன் மத்திய அரசின் உயர் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் 13 பேரைப் பார்வையாளர்களாக நியமித்திருக்கிறது. இவர்கள் ஒவ்வொருவரும் தலா மூன்று மக்களவைத் தொகுதிகளில் பணியாற்றுவார்கள்!

★ இந்தியாவெங்கும் பரவலாக நடக்க விருக்கும் மக்களவை மற்றும் சட்டப் பேரவைத் தேர்தல்களில் மொத்தம் 26,600 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள். தேர்தல்

# பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு நிறைவு விழா



**பா**வேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு நிறைவு விழா, ஏப்ரல் திங்கள் 28,29 இரு நாள்கள் சென்னை கலைவாணர் அரங்கில் மிகச் சிறப்பாக நடந்தது. 28.4.91 அன்று காலை பாவேந்தரின் ஒளிப்படக் காட்சி திறந்து வைக்கப்பட்டது.

பேராசிரியர் சாலமன் பாப்பையா தலைமையில் வழக்காடு மன்றம் நடந்தது. இதில் டாக்டர்பா.வளனரசு டாக்டர் சக்தி பெருமாள், டாக்டர் சொல்விளங்கும் பெருமாள், வழக்குரைஞர் த. இராமலிங்கம் ஆகியோர் பேசினர்.

பிற்பகல், தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில் பட்டிமன்றம் நடந்தது. திரு.கே.மலைச்சாமி இ.ஆ.ப., திரு. சு. ஸ்ரீபால் இ.கா.ப., திரு. எஸ். இராமநாதன் இ.கா.ப., திரு. கே. அலாவுதீன் இ.ஆ.ப., திரு. க. கணேசன் இ.ஆ.ப., திரு. டி. இராதாகிருஷ்ணன் இ.கா.ப., திரு. இரா. கிருஸ்துதாஸ் காந்தி இ.ஆ.ப., திரு. கே. சண்முகநாதன் த.கா.ப., ஆகியோர் பேசினர்.

மாலை சிறப்புக் கூட்டம் நடந்தது. செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. க. கணேசன் இ.ஆ.ப. அவர்கள் அனைவரையும் வரவேற்றார். தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத்துறைச் செயலர் டாக்டர் ஔவை நடராசன் அவர்கள் தலைமை வகித்தார்.

மேதகு ஆளுநர் அவர்களின் ஆலோசகர் திரு. வி. கார்த்திகேயன் அவர்கள் பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்குப் பரிசுகள் வழங்கினார். பாவேந்தர் பாரதிதாசன் மற்றும் தமிழ்ப் பல்கலைக்கழக நூல்களை வெளியிட்டார். ஆராய்ச்சியாளர்கள், நூலாசிரியர்கள், கவிதைப் போட்டி



பாரதிதாசன் பல்கலைக்கழகம் தயாரித்த சிறப்புமலர் வெளியீடு.



பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளை அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி, மேதகு ஆளுநர் திரு.பீஷ்ம நாராயண் சிங் அவர்கள், பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளை அவர்கள் எழுதிய ''காவிய காலம்'' என்ற நூலினை வெளியிட்டார். முதல் பிரதியை ஆளுநரின் ஆலோசகர் திரு.வே.கார்த்திகேயன் அவர்கள் பெற்றுக் கொண்டார் (22.4.91).

மதுரையில் சித்திரைப் பொருட்காட்சியை, செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. க.கணேசன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ராஜேஷ் கக்கர், இ.ஆ.ப. அவர்கள் திறந்து வைத்தார் (21.4.91).







யில் தேர்ந்தெடுக்கப்பட்ட நூறு கவிஞர்கள் ஆகியோரைப் பாராட்டிப் பரிசுகள் வழங்கினார்.

தமிழ்ப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் டாக்டர் சி. பாலசுப்பிரமணியம், சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சே. சாதிக் ஆகியோர் பேசினர். செய்தி மக்கள் தொடர்புத்துறை துணை இயக்குநர் திரு. இரா.நடேசன் நன்றி கூறினார்.

பிறகு, பாவேந்தரின் 'தேனருவி' மெல்லிசை - நடன நிகழ்ச்சி நடந்தது.

**இரண்டாம் நாள் நிகழ்ச்சி**

29.4.91 அன்று காலை உவமைக் கவிஞர் சுரதா தலைமையில் கவியரங்கம் நடந்தது. கவிஞர் மீ. இராசேந்திரன், கவிஞர் மரியதாசு, கவிஞர் இளந்தேவன், கவிஞர் ஆண்டாள் பிரியதரிசினி, டாக்டர் பெரு. மதியழகன், டாக்டர் இராசலட்சுமி இராதாகிருஷ்ணன், கவிஞர் ரவிபாரதி ஆகியோர் பங்கேற்றனர்.

பிற்பகல், கருத்தரங்கம் நடைபெற்றது. முத்தமிழ்க் காவலர் திரு. கி.ஆ.பெ. விசுவநாதம் தலைமை வகித்தார். டாக்டர் சிலம்பொலி செல்லப்பன், டாக்டர் இளவரசு, கவிஞர் மு. மேத்தா, டாக்டர் ஆறு. அழகப்பன், டாக்டர் தி. முருகுரத்தினம், டாக்டர் சோ. ந. கந்தசாமி, டாக்டர் அ. மணவாளன் ஆகியோர் பேசினர்.

அன்று மாலை சிறப்புக் கூட்டம் நடந்தது. விழாவிற்கு வந்திருந்தவர்களைச் செய்தி-சுற்றுலாத்துறைச் செயலர் திருமதி. ஜெயந்தி இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றுப் பேசுகையில், ''பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு விழா தமிழ்நாட்டில் ஓராண்டு விழாவாகக் கொண்டாடப்பட்டது. பாவேந்தர் விருது பெறும் 23 கவிஞர்களுக்கு ரூபாய் 2,30,000 மதிப்பிற்கான பொற்கிழி வழங்கப்படுகிறது. பாவேந்தர் நூல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டு, அவர் குடும்பத்தினருக்கு ரூ.8 இலட்சம் நிதி உதவி அளிக்கப்பட்டது. பாரதிதாசன் மற்றும் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகங்களின் நூல்கள் வெளியிடப்பட்டன. பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு விழாவையொட்டி 100 கவிஞர்களுக்கு ரூ.500 வீதம் பரிசும், சான்றிதழும் வழங்கப்பட்டது'' என்று கூறினார்.

பாவேந்தரின் புதல்வர் திரு. மன்னர் மன்னன் அவர்கள் இந்த விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையில், பாவேந்தரின் நூல்கள் மக்களைச் சென்றடைய வேண்டுமென்ற கோரிக்கை பூர்த்தி செய்யப்பட்டதாகவும், பாவேந்தரின் நூற்றாண்டு விழாவினையொட்டி பல நூற்றுக்கணக்கான கவிஞர்களைப் பாராட்டுவது மகிழ்ச்சிக்குரியது என்றும் கூறினார்.

விழாவில் கலந்து கொண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகத் துணை வேந்தர் டாக்டர் ச.முத்துக்குமரன் அவர்கள் பேசுகையில், ''பல்கலைக் கழகம் என்ற சொல் சென்ற நூற்றாண்டில் இல்லை. இந்தச் சொற்றொடரைத் தமிழில் தவழ விட்டவர் பாவேந்தர் பாரதிதாசன். இந்தச் சொற்றொடர் வழக்கத்திற்கு வந்து அரை நூற்றாண்டுதான் ஆகிறது. பாவேந்தர் ஒரு இயற்றமிழ்க் கவிஞர்; இசைத் தமிழ்க் கவிஞர்; நாடகக் கவிஞர். தமிழ் இசை மறுமலர்ச்சிக்குப் பாவேந்தர் செய்த தொண்டு பெரும் மதிப்பிற்குரியது. கட்டாயக் கல்வி வேண்டுமென்பதே கவிஞர் கொள்கை'' என்றார்.

விழாவிற்குத் தலைமையேற்று ஆளுநரின் ஆலோசகர் திரு. வி. கார்த்திகேயன் அவர்கள் பேசுகையில், ''பாவேந்தர் முற்போக்கான கருத்துக்களைப் பல ஆண்டுகளுக்கு முன்பே சொல்லியிருக்கிறார். பாவேந்தர் படைப்புகளிலிருந்து நாம் அற்புதமான சொற்களைக் கையாள முடிகிறது'' என்று கூறினார்.

பின்னர் மேதகு தமிழக ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் பாவேந்தர் உருவப்படத்தைத் திறந்து வைத்தார்.

முன்னதாக, பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு விழாவையொட்டி பாரதிதாசன் பல்கலைக் கழகம் தயாரித்த சிறப்பு மலரை மேதகு ஆளுநர் அவர்கள் வெளியிட, ஆளுநரின் ஆலோசகர் திரு. வி. ராமச்சந்திரன் அவர்கள் முதல் இதழைப் பெற்றுக் கொண்டார். பாவேந்தரோடு பழகி, அவர் வழி வந்த 5 தலைசிறந்த தமிழறிஞர்கள் பாராட்டப்பட்டு, ஆளுநர் அவர்களால் சிறப்புச் செய்யப்பட்டனர். ஓவியக்கலை வல்லுநர்கள் 6 பேருக்குக் 'கலைச்செம்மல்' விருதுகளும், ஓவிய இலக்கியத் திறனாய்வாளர் ஒருவருக்குக் ''கலைத் திறனாய்வாளர்'' விருதும், 23 கவிஞர்களுக்குப் பாவேந்தர் விருதும் ஆளுநர் அவர்களால் வழங்கப்பட்டன. (பாவேந்தர் விருது கவிஞர் ஒருவருக்கு ரூ.10,000 வீதம் 23 கவிஞர்களுக்கு ரூ.2,30,000 மதிப்பிற்கான பொற்கிழி வழங்கப்பட்டது).

விழாவில் பாவேந்தரின் மகன் திரு. மன்னர் மன்னன் மற்றும் பாவேந்தரின் இரு மகள்களுக்கு ஆளுநர் அவர்கள் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு.க.கணேசன் இ.ஆ.ப., அவர்கள் நன்றி நவின்றார்.

பிறகு பாவேந்தரின் 'புரட்சிக் கவி' காவியக் கூத்து நடந்தது.

**- நமது செய்தியாளர்.**



# எழுச்சிக் கவிஞர் பாரதிதாசன்

**மேதகு ஆளுநர்**
**திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள்**



மனிதனது நியாயமான போராட்டக் குணத்தின் உருவகமாகவும், சமுதாயத்தில் ஆதரவற்ற, அழுத்தப்பட்ட, அநீதியிழைக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை உயர்த்துவதற்காகவும் அயராது உழைத்த பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தில் என்னை ஈடுபடுத்திக் கொள்வதிலும், இந்தச் சிறப்பு நிகழ்ச்சியில் கலந்து கொள்வதிலும் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

'பேனா முனையே வாள் முனையை விட
வலிமை வாய்ந்தது'

என்பது பழமொழி. பல நூற்றாண்டுகளாகவே இந்த உண்மை உலக சரித்திரத்தில் நிரூபணமாகி இருக்கிறது.

சில கவிஞர்கள் தோன்றுவார்கள், மறைந்து போவார்கள். ஆனால் பாரதிதாசன் நமது சமூகத்தின் சீரழிவினை எதிர்க்கும் 'வீரராக' நமக்கு மத்தியில் உலவியவர். மூடநம்பிக்கை, பகுத்தறிவுக்கு ஒவ்வாத நம்பிக்கைகள் ஆகியவற்றை எதிர்த்துப் போர்க்குரல் எழுப்பிய எழுச்சிக் கவி அவர். மேலும் மதவாதம், சமூகத்தின் உதவாத மரபுகள் ஆகியவற்றின் மீது படிந்திருந்த அழுத்தமான தூசியைத் துடைத்தெறிய கவிக்குரல் எழுப்பியவர் அவர். உழைப்பின் வெற்றியை உலகுக்குக் காட்டுவதற்காக உரத்த குரலில் அதைக் கவிதையாக்கியவரும் அவரே.

'செய்யும் தொழிலே தெய்வம்;
தொழிலாளர்களே வணங்க வேண்டிய தெய்வங்கள்'

என்பது பாரதிதாசன் கருத்து. இயற்கை தமிழகத்திற்கு வழங்கிய கொடை பாவேந்தன் புரட்சிக் கவிஞன் பாரதிதாசன்.

1908-ஆம் ஆண்டு மகாகவி பாரதியாரைச் சந்திக்கும் மகத்தான வாய்ப்பு கனகசுப்புரத்தினமாம் பாரதிதாசனுக்குக் கிடைத்தது. மற்றவர்களைப் போலவே பாரதியின் அறிவாதிக்கம், ஆளுமை, மற்றும் தன்னடக்கத்தால் இலக்கிய மாணவன் பாரதிதாசனும் ஈர்க்கப்பட்டார். பாரதியாரின் விருப்பப்படி இளங்கவியான பாரதிதாசன் தனது முதல் கவிதையைப் பாடி மகிழ்ந்தார். பிறகு பாரதியின் ஆதரவோடும், அரவணைப்போடும் அவரது புகழ்பெற்ற வாழ்வு புலரத் தொடங்கியது.

அதற்கு நன்றிக் கடனாகவும், பாரதியின் மேல் உள்ள ஈர்ப்பினாலும் அதுவரை கனகசுப்புரத்தினமாக இருந்த அவர் பிற்காலத்தில் இறவாப் புகழையும், பெருமைகளையும் தனக்கு வாங்கித் தந்த 'பாரதிதாசன்' என்ற பெயரைச் சூட்டிக் கொண்டார்.

இந்தியத் திருநாட்டின் மீது தீராக் காதலும், நாட்டுப் பற்றும் கொண்ட பாரதிதாசன், இந்திய விடுதலைக்கான புரட்சி இயக்கத் தலைவர்களோடு தோழமை பூண்டு தன்னுடைய உணர்ச்சிமிகு பாடல்களுக்கு வேண்டிய உத்வேகத்தைப் பெற்றார்.

அடக்குமுறைக்காலத்தில் 'இந்தியா' பத்திரிகை நடத்துவதற்குப் பாரதியாருக்குரகசியமாக உதவியதோடு, நாட்டுப் பற்று மற்றும் உணர்ச்சி மேலிடும் கட்டுரைகள், கவிதைகள் பலவற்றை பாரதிதாசன் எழுதினார். மிகப் பெரிய சமுதாயச் சீர்திருத்தவாதி தந்தை பெரியாரை அவர் 1929-ஆம் ஆண்டு, சந்தித்த நிகழ்ச்சி அவரது வாழ்க்கையில் மகத்தான மாற்றத்தை உருவாக்கியது. பிறகு தந்தை பெரியாரின் 'குடியரசு' இதழுக்குக் கட்டுரைகள், கவிதைகள் படைக்கும் பணியினை வழக்கமாக்கிக் கொண்டார். அது மட்டுமல்ல, அவருடைய படைப்பிலே ஒரு மாற்றம்– அவருடைய எழுதுகோல் சமுதாயத்தின் ஏற்றத்தாழ்வுகளை எதிர்க்கிற போர் ஆயுதமாக மாறியது.

சமுதாயத்தில் அப்போது நடைமுறையில் ஏழை எளியவர்கள், ஏதுமறியாதவர்கள், வாழ்வில் நம்பிக்கையிழந்த நலிந்தோர் ஆகியோர்களுக்கு எதிராக இருந்த முதலாளித்துவ அமைப்பை



செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர் திரு.இரா.முத்துராமலிங்கம் என்றும் இயற்பெயர் கொண்ட கவியரசர் இளந்தேவன் அவர்களுக்குப் 'பாவேந்தர் விருது' 29.4.91 அன்று பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு நிறைவு விழாவில், மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்களால் வழங்கப்பட்டது.

கவியரசர் இளந்தேவன் அவர்கள் ஏற்கெனவே பல பரிசுகளைப் பெற்றவர். 'புகாரில் ஒரு நாள்' என்னும் இவரது கவிதை இரண்டாவது உலகத்தமிழ் மாநாட்டில் பரிசு பெற்றது. 'கனவு மலர்கள்' என்னும் கவிதை நூல் தமிழக அரசின் பரிசைப் பெற்றுள்ளது.

மரபில் புதுமையைப் படைக்கும் சிறப்பாலும், கவியரங்கங்களில் பெரும் வெற்றியை ஈட்டும் திறத்தாலும் நாடறிந்த கவிஞராய் விளங்குபவர் கவியரசர் இளந்தேவன்.

பத்து நூல்கள் எழுதியுள்ள இவர்,இலக்கியச் செல்வர், இலக்கிய வேந்தர், கவித்தென்றல், கவிமாமணி, கவியரசர், கவிஞர் திலகம் ஆகிய பட்டங்களைப் பெற்றுள்ளார். இவர் அறிந்த பிற மொழிகள் ஆங்கிலம், இந்தி, சமஸ்கிருதம்.

'தமிழரசு' இவரைப் பாராட்டி வாழ்த்துகிறது.

காகத்தங்களுடையபங்குத் தொகையை ஒழுங்காகச் சேமிப்பு செய்யும் பழக்கத்திற்குக் கொண்டு வரப்படுகிறார்கள். இந்நிதி இக்குழுவினராலேயே நிர்வகிக்கப்படுவதோடு வசூலிக்கப்பட வேண்டிய வட்டி விகிதம், திரும்பச் செலுத்த வேண்டிய கால வரம்பு ஆகிய நிபந்தனைகள் குறித்து குழுக்களே முடிவெடுக்கும்.

குழுவின் உறுப்பினர்கள் தாங்களே தேவைகளை உணர்ந்து முறையாகச் செயல்பட வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் முக்கிய அம்சங்களான குழு சேமிப்பு நிதி மற்றும் முன்னேற்ற நிதி ஆகியவை உறுப்பினர்களுக்கு குறுகிய காலக் கடனுதவி பெற ஒரு மாற்று ஏற்பாடாக அமைவதோடு, குறிக்கோள்களை நிறைவேற்ற சீரிய முறையில் செயலாற்றவும் உதவும். குடும்பத் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள மகளிர்க்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது.

இத்திட்டம் பெருமளவில் மகளிர்க்கு நில ரீதியான உற்பத்தியைப் பெருக்குவதற்கும் மற்றும் நிலமற்ற பெண்களின் பொருளாதாரச் செயல்பாடுகளை உயர்த்துவதற்கும் உறுதுணையாக உள்ளது. நில ரீதியில் பொறியியல் வேளாண்மை, விவசாயம், தோட்டக்கலை, பட்டுப் பூச்சி வளர்ப்பு, எண்ணெய் வித்துக்கள், நில ரீதியல்லாத கறவைமாடு வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, குடிசை மற்றும் கிராமத் தொழில்கள் போன்றவைகள் குறிப்பிடத்தக்கவைகளாகும்.

இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனீட்டாளருக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் அளிக்கும் நிதி உதவியைப் போன்று மானியத்துடன் கூடிய கடனுதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் வாயிலாக, இம்மகளிர் ஆண்டு நிகர வருமானமாக ரூ.3,600 முதல் ரூ.8,000 வரை பெற வாய்ப்பளிக்கிறது. ஆண்டு தோறும் பெரும்பான்மையான மகளிரின் சமூக மதிப்பை உயர்த்துவதில் அரசினரால் தேர்ந்தெடுக்கப்பட்ட மைராடா (Myrada) என்கின்ற புகழ்பெற்ற நிறுவனம் பெரும் பங்கை வகிக்கின்றது.

இத்திட்டத்தின்கீழ் 1989-90-ஆம் ஆண்டில் தருமபுரி மாவட்டத்தில் ரூ.27.56 இலட்சங்கள் செலவில் 540 மகளிர் பயனடைந்துள்ளார்கள். மேலும் 1990-91-ஆம் ஆண்டில் ரூ.134.93 இலட்சங்கள் செலவில் 2,633 மகளிர் பயனடைந்துள்ளார்கள். இத்திட்டம் 1991-92-ஆம் ஆண்டு சேலம், தென்னார்க்காடு, மாவட்டங்களுக்கு விரிவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 1991-92-ஆம் ஆண்டில் 7,500 மகளிர் ரூ.488.21 இலட்சங்கள் செலவில் பயனடைவார்கள். ●



நான்காம் அட்டை

பாவேந்தர் நூற்றாண்டு நிறைவு விழாவில் சிறப்பிக்கப்பட்ட பெரு மக்கள்.

# படமும் செய்தியும்



கோவை பாரதியார் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் மேதகு ஆளுநர் திரு.பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் கலந்து கொண்டு பட்டங்கள் வழங்கினார் (3.5.91).

மேதகு ஆளுநர் திரு.பீஷ்ம நாராயண் சிங் அவர்கள், நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில் நீலகிரி கோடை விழாவினைத் தொடங்கி வைத்து, கலை நிகழ்ச்சியினைப் பார்வையிட்டார். நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் செல்வி.லீனா நாயர், இ.ஆ.ப. மற்றும் செய்தி சுற்றுலாத்துறைச் செயலர் திருமதி.ஜெயந்தி, இ.ஆ.ப. ஆகியோர் உடன் உள்ளனர் (4.5.91).





# பத்திரிகையாளர் பாவேந்தர்

- பட்டுக்கோட்டை இராசேந்திரன்

**பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் மிகச் சிறந்த பத்திரிகையாளர். அவர் நடத்திய 'குயில்' வார ஏடே அதற்குத் தக்க சான்றாகும். 'குயில்' இதழில் இடம்பெற்றுள்ள பகுதிகள், அவை வெளிவந்த விதம் என்பன போன்ற சுவையான தகவல்களை இக்கட்டுரை விவரிக்கிறது.**

ஒரு பத்திரிகையானது பல்லாண்டுக் காலமாக நடத்தப் படுகின்ற பெருமை உடையதாக இருக்கக்கூடும்; ஆனால், ஒரே கொள்கைக் கோட்டில் இத்தனை ஆண்டுக் காலமும் நடந்தது, அல்லது நடந்து வருகிறது என்ற பெருமை பெற்ற தனியார் ஏடுகள் தமிழகத்தில் மிகச் சிலவே; அவற்றை விரல் விட்டு எண்ணி விடலாம்.

பத்திரிகை என்பது, மிகச் சரியான ஒரு பெண்ணுக்குரிய பத்தினித் தன்மையோடு நடந்து கொள்ள வேண்டும் என்ற அவாமிகக் கொண்டிருந்தார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்; அந்தக் காரணத்தாலேதான், பத்திரிகை பற்றி தனது எழுத்தோவியத்திலே அவர்-

''காரிருள் அகத்தில் நல்ல
கதிரொளி நீதான்...''

- என்றெல்லாம் மிகச் சிறப்பாகச் சொல்லிவிட்டு

''- பேரறிவாளர் நெஞ்சில்
பிறந்தபத் திரிகைப் பெண்ணே!''

- என்று பத்திரிகையைப் பெண் என்று நயம்படக் குறிப்பிட்டார்.

சர்க்கஸில் கம்பிமேல் நடப்பது போல, ஒரு கொள்கை வழியிலேயே ஒரு பத்திரிகையை நடத்துவது தனியார் எவருக்கும் பெரும் தொல்லையாக இருக்கக்கூடும்; தடைக் கற்கள் பலவற்றைத் தாண்டியாக வேண்டிய நிலைமையும் நேரிடக் கூடும்; எனினும், தடந்தோள் உண்டென்ற துணிவோடு, தலைதாழாது நடப்பதே ஒரு சிறந்த பத்திரிகையாளருக்குரிய அடையாளமாக அவரால் ஆணித்தரமாகக் கூறப்பட்டது; கருதப்பட்டது.

ஆம்; அவர் தன்னுடைய 'குயில்' ஏட்டை அப்படித்தான் நடத்தி வந்தார்!

தனக்கு எதுவெல்லாம் 'சரி' என்று படுகிறதோ, அதையெல்லாம் 'குயில்' ஏடு மூலம் வெளியிட அவர் ஒரு போதும் தயங்கியதே இல்லை.

குறிப்பிட்ட ஒரு காலகட்டத்தின் பின் சரியாகவோ, தவறாகவோ-தான் ஏற்ற கொள்கையிலிருந்து அவர் தவறியதில்லை.

1946-47-இல், புதுக்கோட்டையிலிருந்து 'குயில்' ஏடுகள் மூன்றே மூன்று தான் முழுச்சுவை மிக்கதாக வெளியிடப்பட்டன. பிறகு, புதுக்கோட்டையிலிருந்து 1948 வரை 11 'குயில்' ஏடுகள் பாகுநிகர் பாவேந்தரின் கவிச்சுவை தெறிப்பதாக வெளிவந்தன. அவையாவும் மாதம் ஒரு முறை என்ற அளவில் மலர்ந்தவை.

அதன் பிறகு- 1.6.1958-ஆம் ஆண்டிலிருந்துதான், 'குயில்' ஏடு கிழமை இதழாக, அதாவது வார ஏடாகப் புதுவையிலிருந்து வெளிவரத் தொடங்கியது. 7.2.1961 வரைதான் அந்தப் பயணமும் தடையில்லாதிருந்தது. பிறகு பல்வேறு காரணங்களினால் நிறுத்தப்பட்டு, 15.4.1962 முதல் மாதம் இருமுறை இதழாகச் சரியாக எட்டே இதழ்கள்



**முதல் இடம் - புத்தக சாலைக்கே!**

**வீட்டிற்கோர் புத்தக சாலை வேண்டும். வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடம், அலங்காரப் பொருள்களுக்கும் போக போக்கியப் பொருள்களுக்கும் தரப்படும் நிலை மாறி, புத்தக சாலைக்கு அந்த இடம் தரப்பட வேண்டும். உணவு, உடை அடிப்படைத் தேவை - அந்தத் தேவையைப் பூர்த்தி செய்தானதும் முதல் இடம் புத்தக சாலைக்குத் தரப்பட வேண்டும்.**

**—பேரறிஞர் அண்ணா**



வரை நடத்தி பிறகு நிறுத்தப்பட்டு விட்டது.

இப்படி, அந்த அருமையான 'குயில்' ஏடு, செத்துச் செத்துப் பிழைத்திடவும் பிறகு, அடியோடு பறக்கவே முடியாமல் அடங்கிவிடவும் காரணம் வேறெதுவும் இல்லை; கொண்ட கொள்கையிலிருந்து நழுவ.. தன் மனத்திற்குப்பட்ட... எதிரிகள் கோடி இட்டழைத்தாலும் தொடேன்.. தமிழெங்கள் உயிருக்கு நேர்.. என்ற புரட்சிக் கவிஞரின் அழுத்தமான கொள்கைகள்தான் - ஆணித்தரமான எழுத்துக்கள்தான் காரணம்.

- 'குயில் மீண்டும் வெளிவருகிறது. தமிழர்கள் ஆதரிக்க! குயில், பாட்டும் உரைநடையுமாக வெளிவரும், குயில், தமிழின் அருமை பெருமைகளைக் கூறும். தமிழ்மேல் பகைவர் வீசிய-வீசுகின்ற குப்பை கட்குப் புயலாகும். அதன் உண்மை அழகுக்கு விளக்காகும்.

- குயில், தமிழறம் தமிழொழுக்கம் முதலியவை இன்னவையென்றும் சாதி என்ற அழுக்கற்றவர் தமிழர் என்றும் பாடும்.

- குயில், எல்லாம் உடையவர் தமிழர் என்றும், அவர்பால் இன்று இல்லாதது ஒற்றுமை உணர்ச்சி ஒன்றே என்றும்.

- குயில், அரசியல் சோலையில் புகும். மக்களியல் மாந்தளிர் உண்ணும். பொருளியற் பண்பாடும்.

இவ்வாறெல்லாம் 1.6.1958 குயில்' ஏட்டில் அதனுடைய அல்லது தன்னுடைய கொள்கை இன்னதென்னப் பாவேந்தரால் விளக்கிச் சொல்லப்பட்டது.

'குயில்' வெளியீட்டகம் 'குயிலகம்' என்று குறிப்பிடப்பட்டது. அதன் நிர்வாகியான புரட்சிக் கவிஞரின் மாப்பிள்ளை 'அமைச்சர்' என்று குறிப்பிட்டார். ஏடுகளில் மலர் - இதழ் என்று போடுவார்கள் அல்லவா? குயிலைப் பொறுத்த வரை அந்த முறையானது 'குயில்:!' - 'இசை:!' என்ற வகையில் குறிப்பிடப்பட்டது.

12 பக்கமிருந்த குயிலில், அப்போது முன்பக்க அட்டையில் புரட்சிக் கவிஞரின் கவிதைதான் இடம் பெறும். அதுவும் அப்போதைய அரசியல் நிலவரம் பற்றியதாகவே இருக்கும். மற்றபடி பெரும்பாலான பக்கங்களிலும் அவரது கவிதையே அணி செய்யும். இடையிடையே உரைநடைக் கட்டுரைகளும், ஏன்-சிறுகதையும்கூட இடம் பெற்றன.

'குயில்' என்ற, ஏட்டின் முன் பக்கப் பெயரை ஒட்டி, 'கிழமை இதழ்- ஆசிரியர் பாரதிதாசன் - விலை 13 காசுகள், புதுச்சேரி, 8.9.59 செவ்வாய்' என்ற வகை அறிவிப்புகள் இருக்கும்.

பாவேந்தரை அவ்வப்போது வெளிஊரிலிருந்தெல்லாம் பலரும் பார்த்துப் பேசி மகிழ்வந்து போவதுண்டு. அப்படி வருகிறவர்களில் சிலர், அவருக்குப் பிடித்தாற்போலப் பேச வேண்டும் என்கிற வைராக்கியத்தோடு வருவார்கள். அவர்கள் முன், பாவேந்தர், எடுப்பார் கைப் பிள்ளையாகிவிடுவதைப் பல சந்தர்ப்பங்களில் நான் நேரில் பார்த்தவன். அதன் பிரதிபலிப்பு, அந்த வாரக் குயிலில் பாவேந்தரின் கைவண்ணமாகப் பளிச்சிடும்.

சில முரட்டுத்தனமான அரசியல் கட்டுரைகளால், அனல் பறக்கும் அவருடைய சில கவிதைகளால்தான் அப்போதைய 'குயில்' ஏடு விற்பனை வீழ்ச்சியடைந்தது. இது பாவேந்தருக்கே தெரியும்; ஆனாலும், அதற்காகத் தான் கொண்ட கொள்கையில் அவர் பின்வாங்க முன்வரவே இல்லை. அந்தக் கட்டுரையைப் பாதியில் நிறுத்தவும் இல்லை. இப்படிச் சில வகைகளில், உலகத்தோடு ஒட்ட ஒழுகல் என்பதில் அவர் விதிவிலக்கு!

நான் துணையாசிரியராகப் பணியாற்றி வந்த 'குயில்' ஏட்டில், பாவேந்தர் மட்டுமல்ல; மொழி ஞாயிறு தேவநேயப்பாவாணர், பாவலர் பாலசுந்தரம், புலவர் மு. இராமநாதன், கவிஞர்கள் மா.முத்து, தமிழ்க்கோவன், ஆ.அழகன், சித்தன், புலவர் பழனி வேலன், உ.வே.பாலு, கு.சிவமணி, கா.வேழவேந்தன், துரைமாணிக்கம், வை.மாணிக்கசாமி, தமிழவேள், தகட்டூர் மா. இராமலிங்கம், மாரி, நல்லியக்கோடன், சேலம் பூங்குன்றன், சி.எ.முகிலன், தஞ்சை தமிழ் மன்னன், கடலூர் வீ.கு.சிவா, முருகு சுந்தரம், தமிழன்பன், புதுவை வ. பொன்னம்பலம், நெற்குப்பை பனை சண்முகம், வ.சக்காராம், சென்னை சுந்தரவடிவேலு, சைதை ஓடையான், தமிழ்த் துளி, ஈரோடு குமணன், புலவர் தொல்காப்பியன், வே.தில்லைநாயகம் போன்றவர்களெல்லாம் அப்போது தொடர்ந்து எழுதி வந்தார்கள்.

பாவேந்தர், தாமெழுதும் கவிதைகளில் எல்லாம் தனது பெயரைப் போட்டுக் கொள்ளுவதில்லை. 'நினைவுறுத்துகிறோம்' என்ற தலைப்பில் 'இயற்பெயரோ, புனைபெயரோ இன்றி வெளியிடப்பெறும் அனைத்தும், ஆசிரியரால் எழுதப்படுபவையே' என்றோர் அறிவிப்பு அமைச்சர் பெயரால் வெளியிடப்படும்; அவ்வளவே!

'குயில்' ஏட்டில், நாட்டுப் பிரச்சினை பற்றித்தலையங்கம் பாவேந்த

யும், அதன் குறைபாடுகளையும், அநீதிகளையும் கடுமையாகச் சாடியவர் பாரதிதாசன். அறியாமையின் திரையைக் கிழித்து, உரிமைக்குக் குரல் கொடுப்பதற்காக மக்கள் ஆமையைப் போல் அடங்கிக் கிடப்பதை நீக்க, ஆணையும் பெண்ணையும் விழிப்படையச் செய்ய சிம்புட் பறவையே சிறகை விரித்தெழு! - என உயிர்த் தமிழில் உணர்ச்சி பூர்வமாகத் தம து பாடல் வரிகளால் உரிமைக்குரல் எழுப்பினார்.

போராட்டங்களிலேயே மகத்துவமிக்க சமுதாயப் புரட்சி தமிழகத்தில் ஏற்பட வேண்டும் என வேட்கை கொண்டவர் பாரதிதாசன். சமுதாய மாற்றத்தை உண்டாக்கக்கூடிய வலிமை சமூகப் புரட்சிக்கு உண்டு என்கிற தொலைநோக்குப் பார்வை அவருக்கு அன்றே இருந்தது. அப் போராட்டத்தின் விளைவாகக் கிடைக்கிற உயர்வுகளின் மூலம் இயல்பாகவே தொழில் மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்கு வழி வகையும், நெறியான சமத்துவச் சமுதாயம் அமைய வாய்ப்பும் உருவாகும், என்பது பாரதிதாசன் நம்பிக்கை. அப்படிப்பட்ட சமுதாயத்தில் தான் மொழி, இலக்கியம், பண்பாடு வளர வாய்ப்புகள் உண்டு என்ற கருத்துக்குச் சொந்தக்காரர் பாரதிதாசன்.

அவரது கவிதைகள் சமூக மேம்பாட்டுக்கான செய்திகளைத் தாங்கி நிற்பதையே தமது நோக்கமாகக் கொண்டவை. 'அழகின் சிரிப்பு' கவிதையில் அவர் இயற்கையைப் போற்றி வணங்கும் செயல் வெறும் கவிக் கற்பனையல்ல. நீல வானத்தின் வனப்புகளைப் பாடும் அதே நேரத்தில் உலக அமைப்பில் சாதி மற்றும் மத வேறுபாடுகளால் மதிப்பிழந்து போன மனிதர்களால் உருவாக்கப்பட்ட கீழ்மையைப் பற்றி அவர் வேதனைப்படுகிறார். தேசிய மறுமலர்ச்சி சார்ந்த விடுதலை வேட்கை கொண்டவரான அவர் நாட்டின் எல்லைகளைக் கடந்து இந்த உலகத்தையே ஒரே இனமாக, மானிட இனமாகக்கருதிய அற்புதக் கவிஞர்.

காந்தி அடிகளின் கொள்கைகளில் பற்றுள்ள பாரதிதாசன் அவர் தொடக்கிய அகிம்சை வழியான சுதந்திரப் போராட்டத்தின் தீவிர ஆதரவாளர். 'எங்கே சுதந்திரம் குடியிருக்கிறதோ, அதுவே எனது நாடு' என்ற பெஞ்சமின் பிராங்ளின் கருத்தினைப்போல, சுதந்திரம் பற்றிய இதே சிந்தனையுடன் இருந்தவர் பாவேந்தர்.

பெண்களின் விடுதலைக்காகப் போராடிய பெருமைமிக்க கவி அவர். அநாகரிகமான மனிதாபிமானமற்ற சமூகக் கொடுமைகளான குழந்தை மணம், கைம்மை மற்றும் வரதட்சிணைக் கொடுமையின் ஆதிக்கம் நிறைந்த காலம் அவர் வாழ்ந்த காலம். எதிர்ப்புகளுக்கு அஞ்சாது அவற்றைத் தீவிரத்தோடு சாடியவர் அவர். சமூகப் பார்வையுடன் கூடிய கூர்த்த அறிவாதிக்கம் மிக்க அவருக்குப் பெண்கள் புழுவினைப் போல நடத்தப்படுவது, பொறுக்க முடியவில்லை. எனவே சமூகத்தில் விதவைகளுக்கு மரியாதை பெறுவதற்கும் விதவை மறுமணம் வேண்டும் என்பதற்கும் போர்ப் பரணி பாடினர்ர். பாரதிதாசன் ஏற்றி வைத்த எரி சுடரை அணையாமல் பாதுகாப்பது நமது கடமையாகும். அதுதான் சமூகத்தில் புரையோடி இருக்கும் வரதட்சிணை என்ற நச்சினை அழிக்க முடியும். இந்தக் கொடுமைகளையெல்லாம் ஒழித்துக் கட்ட நாம் சட்டங்களை இயற்றியுள்ளோம். சட்டங்கள் மட்டுமே அந்தச் சாதனைகளைச் செய்துவிட முடியாது. இந்த மாற்றங்களைச் செய்கிற மனப் பக்குவம் மனிதர்களின் மனதிலிருந்து, உள்ளத்திலிருந்து உருவாக வேண்டும். ஆணுக்கு இணையாகப் பெண் மதிக்கப்படாவிட்டால், சமுதாயத்தில் நிலவும் சுதந்திரத்திற்கு அர்த்தம் இல்லை.

தமது படைப்பான 'பாண்டியன் பரிசு' மூலம் பாரதிதாசன் சமத்துவச் சமுதாயத்தை நாட்டில் அமைக்கக்கனவு கண்டார். அவரது கனவு நனவாகிற வகையில் நாட்டில் முன்னேற்றம் நடைபோட்டுக் கொண்டிருக்கிறது.

'காதலுக்கு வழி வைத்துக் கருப்பாதை சாத்தக்
கதவு ஒன்று கண்டறிவோம்'

என்று சொல்லியவர் பாரதிதாசன்.

மக்கள் தொகைப் பெருக்கத்தால் உலகு அடையப் போகும் துன்பத்தையும் அதன் விளைவாக ஏற்படப் போகும் பொருளாதாரச் சிக்கல் மற்றும் குழப்பங்களையும் அவர் தொலைநோக்குப் பார்வையோடு பார்த்தறிந்தார். ஆனால் எந்தக் கவிஞருடைய சிந்தனையிலும் இடம் பெறாத குடும்பக் கட்டுப்பாடு, குழந்தைகள் பிறப்புத்

## சென்னையில் குடிசைவாழ் மக்களுக்குக் குடியிருப்புகள்

சென்னை குடிசைவாழ் மக்களுக்கு ரூ.5.88 கோடி செலவில் 1472, மாடிக் குடியிருப்புக்களைக் கட்டித்தர அரசு அனுமதி அளித்துள்ளது.

இந்த மாடிக் குடியிருப்புக்கள் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் சார்பில் சென்னையில் பிஷப் லேண்ட், வடக்கு கிரியப்பா சாலை, ராஜீவ்காந்தி நகர், கோரி மேடு அரிய இடங்களில் கட்டப்படும்.

இந்தத் திட்டத்திற்கான மொத்த செலவில் ரூ.5 கோடி 'ஹட்கோ' நிறுவனத்திடமிருந்து கடனாகவும், மீதித்தொகை மாநில அரசின் மானியமாகவும் பெறப்படும்.



# பாரதிதாசனைப் போற்றுவோம்



— கவிஞர் மலையமான்

யார்இந்தப் பாரதி தாசன் என்றால்
ஆசான் மேல்கொண்ட மேன்மை பக்தியால்
பேரையே மாற்றிய கொள்கையின் குன்று;
தாய்மொழித் தமிழைத் தன்உயிர் என்ற
வாய்மை மொழியினன்; வள்ளல் நெஞ்சினன்;
ஓய்ந்து கிடந்த உணர்வைத் தூண்டி
மனவயல் பாய்ந்து வெள்ளமாய் ஓங்கினான்;
சாதி மதத்தின் சமூகத் தடைகளைப்
பாட்டுச் சம்மட்டியால் சமநிலைப் படுத்தப்
பாதி நூற்றாண்டு பெரும்பணி ஆற்றினான்;
வாடிக் கிடந்த நாடகத் துறைக்குச்
சிந்தனை ஊற்றின் செந்தமிழ் நீர்ஊற்றி
மேடையில் ஏற்றி மாலை சூட்டினான்;
நலிந்து மரணப் படுக்கையில் கிடந்த
தமிழிசை மங்கையின் நாடியைப் பிடித்து
வலிமைப் புத்தக ஊசியைப் போட்டான்;
உழைத்துச் சோர்ந்த உண்மை உடம்புகளை
உள்ள மஞ்சத்தில் படுக்க வைத்தே
வார்த்தை விசிறியால் களைப்பு மாற்றினான்;
பெண்மை பிழைக்க, வளரத், தழைக்க,
நன்மை வழிகள் பலப்பல சொன்னான்;
அழகின் சிரிப்பைத் தாளில் வடித்து
மொழித்தேன் குழைத்து ஊட்டிய மேலோன்;
கடுஞ்சொல் மருந்தைச் சமூகத்தின் வாயில்
நெடுநாள் ஊற்றினான் என்பதால், இவனைக்
கொடியவன் என்றார்; உடலில் பருத்துக்
கிடந்த கட்டியை அறுத்த கத்திஇவன்;
நூற்றாண்டு கண்டான், மானிடம் வாழ்த்த;
ஆற்றல் மறவனை அனைவரும் போற்றுவோம்!

*(பாட்னா பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற பாரதிதாசன் நூற்றாண்டு விழாக் கவிதையரங்கில் படிக்கப்பட்ட கவிதை)*

தடுப்பு போன்ற நவீன விஞ்ஞான கருத்துக்களை வலியுறுத்திய முதல் தமிழ்க் கவிஞரான பாரதிதாசன் சிந்தனைச் சிறப்பு அவரது ஆழமான அறிவின் முதிர்ச்சியேயாகும்.

எல்லாவற்றையும்விட தாய்மொழியான தமிழ் மீது அவர் கொண்டிருந்த தீவிரக் காதல் அளவிட முடியாதது. அனைத்து மொழி இலக்கியங்களையும் ஒப்பிடும்போது அவருக்குத் தமிழ் அமிழ்தமாகும். மற்ற மொழிகளிலிருந்து வேறுபட்டுச்சிறந்தோங்கும் தமிழையும் அதன் தனித்தன்மையையும் பாதுகாக்க அவர் அயராது உழைத்தார்.

இப்படிப்பட்ட பன்முக மாட்சி பெற்ற இலக்கிய வாதியும், சமூகச் சீர்திருத்தவாதியுமான பாவேந்தரின் நினைவைப் போற்றுகிற வகையில், அவரது பெயரில் ஒரு பல்கலைக் கழகம் திருச்சியில் நிறுவப்பட்டு நடைபெற்று வருகிறது. பாவேந்தர் பாரதிதாசன் விருதுகளை வழங்கி, அவரோடு பழகிய தமிழறிஞர்களை அரசு கௌரவித்து வருகிறது. இந்த நூற்றாண்டு விழா ஆண்டில் பாரதிதாசன் மரபு வழிவந்த 46 தமிழ்க் கவிஞர்களுக்கு இவ்விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த வகையில் ரூ.4.60 இலட்சம் பொற்கிழி வழங்குவதற்காகச் செலவிடப்பட்டுள்ளது.

பாரதிதாசனாரின் இலக்கியப் படைப்புகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிடவும், அவரது பாடல்களை ஒலி நாடாக்களில் இசையோடு பதிவு செய்து பரப்பவும் தமிழக அரசு முயற்சி மேற்கொண்டு வருகிறது.

நேற்றைய தினம் பாரதிதாசனின் படைப்புகளின் மீது ஆராய்ச்சி செய்த மற்றும் புத்தகங்கள் எழுதிய 28 தமிழறிஞர்கள் பெருமையோடு கௌரவிக்கப்பட்டிருக்கிறார்கள். மேலும் இது தொடர்பாகக் கவிதைப் போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்ற 100 கவிஞர்களுக்குப் பாராட்டும், சன்மானப் பரிசும் வழங்கப்பட்டு இருக்கிறது. இன்று கவிஞர் பாரதிதாசனோடு பழகிய அவர் வழிவந்த 5 தலைசிறந்த தமிழறிஞர்கள் பாராட்டப்படுகிறார்கள். பர்ரதிதாசனின் கருத்துக்களையும், அவரது கொள்கைகளையும் பின்பற்றி முழுமையான சமூக மறுமலர்ச்சிக்கு உதவுவதே நாம் அவருக்கு செய்யும் சிறந்த மரியாதை என நான் கருதுகிறேன்.

எனவே, இந்த நூற்றாண்டு நிறைவு நாளில், அவர் காட்டிவிட்டுப் போயிருக்கிற கடமைகளை விரைந்து நிறைவேற்றவும், அதன் மூலம் அவர் கனவு கண்ட சமத்துவம் மற்றும் அனைவர்க்கும் சமவாய்ப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட நல்ல சமூக அமைப்பை உருவாக்கவும் உறுதிமொழி ஏற்றுக் கொள்வோம்.

நன்றி - வணக்கம்.

*(பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு நிறைவு விழாவில் ஆற்றிய உரை (29.4.91)*

கொடுக்கப்படுகிறது. பெரும்பாலும் இந்நிறுவனம் சவுதி அரேபியாவின் தேவைகளுக்குத் தமிழக அரசின் மருத்துவத்துறையில் வேலைபார்க்கும் மருத்துவர்களையும் இதரப் பணியாளர்களையும் அரசின் அனுமதி பெற்று அனுப்பி வந்தது. இதனால் குறிப்பிட்ட ஆண்டுகள் பணியாற்றிய பின் மீண்டும் அவர்கள் அரசுப் பணியில் சேர வசதியாய் இருந்தது. ஆனால், தமிழக அரசின் சமீபத்திய ஆணையின்படி அரசுப் பணியாளர்கள் வெளிநாட்டில் வேலை செய்ய விரும்பினால் தங்களுடைய வேலையை ராஜினாமா செய்தோ அல்லது சுயவிருப்பத்தில் ஓய்வு பெற்றுத்தான் சேர வேண்டும் என்றிருக்கிறது. இதனால் இந்நிறுவனத்தின் மூலம் சவுதிக்குச் செல்லும் அரசு மருத்துவப் பணியாளர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்தது. ஆனால், அயல்நாட்டில் பணிபுரிய இத்தகைய அனுபவமிக்க நபர்களே தேவைப்படுகின்றனர். தற்போதுள்ள தமிழக அரசின் விதிமுறைகளைத் தளர்த்தினால் அரசுத்துறையில் அனுபவம் பெற்ற மருத்துவர்கள் வெளிநாடு சென்று பணிபுரிந்து தங்கள் வீட்டையும் தமிழ்நாட்டையும் மேம்படுத்த இயலும்.

அண்டை மாநிலமான கேரள அரசு வெளிநாடு சென்று வேலை செய்ய விரும்பும் அரசுப் பணியாளர்களுக்கு அவர்களுடைய மொத்த பணிக்காலத்தில் 10 ஆண்டுகள் வரை விடுமுறை எடுத்துக் கொண்டு வெளிநாட்டில் பணிசெய்து மீண்டும் அரசுப் பணிக்குத் திரும்பலாம் என்றிருந்த ஆணையைத் திருத்தி 15 ஆண்டுகள் வரை விடுமுறை பெறலாம் என்று 1987-ஆம் ஆண்டு ஆணையிட்டுள்ளது. இதனால் கேரள அரசுக்குப் பல கோடிக்கணக்கான ரூபாய் அன்னியச் செலாவணியாகக் கிடைக்கிறது.

தமிழ்நாட்டில் உள்ள வேலை வாய்ப்பகத்தில் கடந்த ஆண்டு இறுதிவரை சுமார் 4,000-க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் பதிவு செய்து அரசுப் பணிக்காகக் காத்திருக்கிறார்கள். தற்போது அரசில் பணிபுரியும் மருத்துவர்களை வெளிநாட்டுக்கு அனுப்புவதால் ஏற்படும் காலி இடங்களில் வேலைவாய்ப்பகத்தில் பதிவுசெய்து காத்திருக்கும் மருத்துவர்களை நிரப்புவதன் மூலம் உள்நாட்டு வேலையின்மை பிரச்சினையை ஓரளவு தீர்க்க இயலும். அன்னியச் செலாவணியும், அயல்நாட்டு அனுபவமிக்க மருத்துவர்களையும் எதிர்காலத்தில் தமிழகம் பெற இயலும். ●





## டாக்டர் அம்பேத்கர் எழுதிய முக்கிய நூல்கள்

1) இந்தியாவில் சாதிகள்
2) இந்திய சிறுபான்மையினரும், பரிகாரமும்.
3) பூனா ஒப்பந்தம்.
4) சாதியை ஒழிக்க வழி.
5) பெடரேஷனும், சுதந்திரமும்.
6) ரானடே, காந்தி, மற்றும் ஜின்னா
7) ஷெடியூல்டு மக்களுக்கு அடிமையிலிருந்து விடுதலை.
8) ஷெடியூல்டு மக்களுக்கு காங்கிரசும்-காந்தியும் செய்ததென்ன?
9) சமூகத் தடைகளும் அதனைப் போக்கும் வழிகளும்.
10) சூத்திரர்கள் என்பவர்கள் யார்?
11) மாநிலங்களும் சிறுபான்மையோரும்.
12) மண்ணின் மைந்தர்களின் மறைக்கப்பட்ட வரலாறு.
13) இந்திய தேசிய லாப பங்கு வீதம்.
14) ரூபாயின் பிரச்சினை
15) கௌதம புத்தரும் கார்ல் மார்க்சும்.
16) மொழிவாரி மாநிலங்களைப் பற்றிய சிந்தனைகள்.
17) இந்து மத தத்துவம்.
18) இந்தியாவில் நடந்த புரட்சிகளும்—எதிர்ப் புரட்சிகளும்.
19) இந்துமதப் புதிர்கள்.
20) தீண்டப்படாதோரும்—தீண்டப்படுவோரும்.
21) சாதியும் மதமாற்றமும்.
22) பாகிஸ்தான்(அ)இந்தியப் பிரிவினை.
23) ஜனநாயக வெற்றிப்பணிக்கான முன் நிபந்தனைகள்
24) விடுதலைக்கு வழி என்ன?
25) புத்தமத எழுச்சியும், வீழ்ச்சியும்
26) காந்தியும், காந்தியிசமும்.
27) இந்துப் பெண்டிரின் எழுச்சியும் வீழ்ச்சியும்.
28) புத்தரும் அவரின் தம்மமும்.



# இந்தியாவின் மக்கள் தொகை 84 கோடி

அண்மையில், நாடு முழுவதும் எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, இந்தியாவின் மக்கள் தொகை 84 கோடியே 30 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவில் ஒவ்வொரு பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. கடந்த 1901-ஆம் ஆண்டு முதல் இந்தக் கணக்கெடுப்பு பணி நடந்து வருகிறது.

கடந்த பிப்ரவரி மாதம் நாடு முழுவதும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடந்தது. இலட்சக்கணக்கானோர் இக்கணக்கெடுப்புப் பணியில் ஈடுபட்டனர். வீடு வீடாகச் சென்று ஒவ்வொருவரிடமும் சாதி, மதம், தொழில், படிப்பு போன்ற பல விவரங்களைச் சேகரித்தனர்.

அதன் அடிப்படையில், நாடு முழுவதும் உள்ள மக்கள் தொகை விவரம் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி இந்தியாவின் இப்போதைய மக்கள் தொகை 84 கோடியே 39 இலட்சத்து 30 ஆயிரத்து 861 (84,39,30,861) என மதிப்பிடப்பட்டுள்ளது.

**மக்கள்தொகை விவரம் வருமாறு:**

| | | |
|---|---|---|
| மொத்தம் | ... | 84,39,30,861 |
| ஆண்கள் | ... | 43,75,97,929 |
| பெண்கள் | ... | 40,63,32,932 |

**கடந்த 1981-1991-ஆம் ஆண்டில் உயர்ந்த, இந்திய மக்கள் தொகை:**

| | | |
|---|---|---|
| எண்ணிக்கை | ... | 16,06,01,764 |
| சதவீதம் | ... | 23.50 |
| மக்கள்தொகை நெருக்கம் | ... | ஒரு சதுர கி.மீட்டருக்கு 267 பேர். |

**பெண்கள்: 1000 ஆண்களுக்கு 929 பெண்கள்**

| | | |
|---|---|---|
| கல்வி அறிவு | ... | 52.11 சதவீதம் |
| ஆண்கள் | ... | 63.86 சதவீதம் |
| பெண்கள் | ... | 39.42 சதவீதம் |

முன்னணி மாநிலம்: கேரளா

| | | |
|---|---|---|
| சதவீதம் | ... | 90.59 சதவீதம் |
| 1981-இல் கல்வி அறிவு | ... | 43.56 சதவீதம் |
| உயர்வு | ... | 8.55 சதவீதம் |

கல்வி அறிவில் தமிழ்நாடு இரண்டாவது இடம் வகிக்கிறது. தமிழ்நாட்டில் 63.72 சதவீதத்தினர் கல்வி அறிவு பெற்றுள்ளனர்.

இந்த சென்சஸ் கணக்கை பார்க்கும்போது ஒவ்வொரு பத்து ஆண்டுகளிலும் இந்தியாவில் பெண்கள் எண்ணிக்கை குறைந்து வருகிறது. 1901-ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு 10 ஆண்டுகளிலும் 1,000 ஆண்களுக்குச் சமமாக இருந்த பெண்கள் எண்ணிக்கை வருமாறு:

| | | |
|---|---|---|
| 1901 | — | 972 |
| 1911 | — | 964 |
| 1921 | — | 955 |
| 1931 | — | 950 |
| 1941 | — | 945 |
| 1951 | — | 946 |
| 1961 | — | 941 |
| 1971 | — | 930 |
| 1981 | — | 934 |
| 1991 | — | 929 |

★ **இந்தியாவின் மக்கள் தொகை: 84,39,30,861**

★ **தமிழ்நாட்டின் மக்கள் தொகை: 5,56,38,318**

★ **கல்வி அறிவில் தமிழ்நாடு இரண்டாவது இடம் வகிக்கிறது.**

★ **தமிழ்நாட்டில் 63.72 சதவீதத்தினர் கல்வி அறிவு பெற்றுள்ளனர்.**

★ **சென்னை மாநகர மக்கள் தொகை. 37,95,028**



• **கல்வியறிவும், சுயமரியாதை எண்ணமும், பகுத்தறிவுத் தன்மையுமே தாழ்ந்து கிடக்கும் மக்களை உயர்த்தும்.**

**—தந்தை பெரியார்**

ராலேயே அவ்வப்போது எழுதப்படும். அதுமட்டுமல்ல; சிறுகதை, நாடகம், வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா?, அறிவியல் குறிப்புகள், ஆய்வுக் கட்டுரை, 'சொல்லாய்வு, செய்திகள், வள்ளுவர் உள்ளம் என்ற திருக்குறள் விளக்கம், பாட்டுக்கு இலக்கணம், கேட்டலும் கிளத்தலும் (கேள்வி-பதில்) போன்ற பல எழுத்தோவியங்கள் அவரால் தொடர்ந்து எழுதப்பட்டன.

அப்போது பாவேந்தரால் எழுதப்பட்ட 'படம் இயக்கியின் தங்கை' சிறு கதைபற்றி அந்நாளில் பலர் புகழ்ந்து எழுதியதுண்டு.

புதுவை அரசியல் நிலவரங்களும் பாவேந்தரால் விட்டுவைக்கப்பட வில்லை; ஒருமுறை புதுவை அரசு மகப்பேறு மருத்துவப்பிரிவைக் கண்டித்து எழுதிவிட்டு, அதற்கான விசாரணைக்காக மாப்பிள்ளையே போய் வர நேர்ந்தது.

'இலக்கியப் போட்டி' என்றொரு பகுதி. போட்டி என்றால் எப்படித் தெரியுமோ? இதோ உதாரணத்திற்கு ஒன்று-

'இட்ட அடி நோவ எடுத்தஅடி கொப்பளிக்க
வட்டில் சுமந்து மருங்கசைய...

- பாடலின் அடுத்த இரண்டு அடிகளைக் கம்பர் பாடியதாகச் சொல்லப்படுகிறது அல்லவா? அந்த இரண்டு அடிகளையும் அம்பிகாபதியே பாடினால் என்ன பாடியிருப்பான்? எழுதியனுப்புக!

இப்படித்தான் போட்டிகள் அமைந்திருக்கும். சுற்றுப்பயணம் ஏதுமின்றிப் புதுவையில் இருக்கும் காலத்தில், நாள் தவறாமல் குயிலகத்திற்கு வந்து விடுவார் பாவேந்தர். தானெழுதியவற்றின் புருப்களைத் தானே படித்துச் சரிபார்ப்பது அவர் வழக்கம்.

'குயில்' இதழின் கடைசிப் பக்கத்தின் அடியில் 'இம்பிரிண்ட்' இவ்வாறு அந்நாளில் போடப்பட்டது.

- ஆசிரியர், வெளியிடுவோர், பொறுப்பாளர் பாரதிதாசன், புதுச் சேரி. அச்சிடுவோர், மா. தண்டபாணி, பழநியம்மா மின்விசை அச்சகம், புதுச்சேரி.

குயிலகத்தில் இருந்த நாங்கள் மட்டுமல்ல; புதுவையைச் சேர்ந்த பலரும் பாவேந்தரைக் 'கவிஞர்' என்று மட்டுமே குறிப்பிடுவார்கள். மற்றும் சிலர், பள்ளியில் ஆசிரியராக அவர் பணிபுரிந்த காலத்தினர் என்பதாலோ என்னவோ - 'வாத்தியார்' என்றே குறிப்பிடுவார்கள்.

நூற்றாண்டு விழாக்காணும் அவர் புரட்சிக் கவிஞர் மட்டுமல்ல, திறம் மிக்க பத்திரிகையாசிரியரும் ஆவார் என்பதை நான் அருகிருந்து கண்டவன் என்பதை நினைவு கூர்வதில் மகிழ்கிறேன். ●

# பைந்தமிழ்ப் பாவேந்தன்

எடுப்பு

பைந்தமிழ்ப்பா வேந்தனென்று பாரதியின் தாசனவன்
பாட்டுலகில் ஞாயிறென நின்றானடி! - அவன்
பாவையர்கு டும்பவிளக் கென்றானடி!

(பைந்தமிழ்ப்பா...)

தொகுப்பு

செந்தமிழில் சொல்லெடுத்து செங்கரும்புக் காதலினை
தேனிசையில் பாடிவந்த குயிலாமடி! - இயற்கை
சிந்துமெழி லில் மகிழ்ந்த மயிலாமடி!

(பைந்தமிழ்ப்பா...)

முடிப்பு

முத்தமிழும் ஒங்குமுழு மூச்சுடனே செய்தசெயல்
முத்திரையாய் எப்பொழுதும் பொன்றாதடி! - அவன்
முத்தொழிற்பாட் டாளியுயர் வுக்குழைத்துப் பெற்றபுகழ்
முச்சுடர்போல் மண்ணுலகில் குன்றாதடி!

(பைந்தமிழ்ப்பா...)

பெண்ணுரிமை பேசியவன் பெண்ணடிமை போக்குதற்கு
பீடுடன்போர் தன்னெழுத்தில் தொடுத்தானடி! -அவன்
மண்ணுரிமை வேண்டும்பொது மைப்புரட்சி நாடகங்கள்
வண்ணமுடன் வார்த்தெடுத்துக் கொடுத்தானடி!

(பைந்தமிழ்ப்பா...)

தமிழம் செ. பன்னீர் செல்வம்



# அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் சீரிய பணிகள்

வெளிநாட்டில் வேலைவாய்ப்பு நாடுவோர் நம் நாட்டில் ஏராளம். அவர்களில் பெரும்பாலோர் இடைத்தரகர்களிடமும், தனியார் நிறுவனங்களிடமும் பல ஆயிரக்கணக்கில் பணத்தைக் கொடுத்து ஏமாறுகிறார்கள். இதுபோன்று ஏமாற்றத்தைத் தவிர்க்கவும், நம்பிக்கையான சேவை பெறவும் தமிழக அரசுக்குச் சொந்தமான அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம் (Overseas Manpower Corporation) கடந்த 11 ஆண்டுகளாக அரிய தொண்டு செய்து வருகிறது. இது தவிர, கடந்த இரண்டு ஆண்டுகளாக வெளிநாடு செல்ல பாஸ்போர்ட் எடுத்துத் தருவது மற்றும் பாஸ்போர்ட் சம்பந்தமான எல்லா வேலைகளையும் செய்து தருகிறது.

இந்நிறுவனம் தகுதி பெற்ற நபர்களைப் பதிவு செய்து சவுதி அரேபியா, அமெரிக்கா, குவைத், ஓமான், ஏமன், ஐக்கிய அரபு குடியரசு (துபாய்), ஜோர்டன், சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு அனுப்பி வைத்து நல்ல பெயரையும் நம்பிக்கையையும் பெற்றுள்ளது.

வளைகுடா நாடுகளில் இந்தியப் பணியாளர்களுக்கு நிறைய தேவை இருக்கிறதென்றும் வளைகுடா போரின் முடிவிற்குப் பின் இது மேலும் அதிகரிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் அமெரிக்க நாட்டில் செவிலியர் (நர்ஸ்) பதவிக்கு ஆயிரக்கணக்கில் தேவை இருக்கிறது.

விருப்பமுள்ளவர்கள் இலங்கைத் தலைநகர் கொழும்பு சென்று, நுழைவுத் தேர்வு எழுதி, அமெரிக்காவில் பணி செய்ய அனைத்து ஏற்பாடுகளையும் அமெரிக்க நிறுவனம் ஒன்றின் துணைகொண்டு இந்நிறுவனம் செய்கிறது. இத்தேர்வுகளின் மூலம் பல செவிலியர்கள் இதுவரை அனுப்பப்பட்டுள்ளனர்.

**பதிவு செய்யும் முறை**

எந்த ஒரு தொழிலிலாவது குறைந்தது இரண்டு ஆண்டுகள் அனுபவம் பெற்று, பாஸ்போர்ட் வைத்துள்ளவர்கள் இந்த நிறுவனத்தில் தங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ளலாம். தமிழக அரசின் இந்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தில் பெயரைப் பதிவு செய்து கொள்ள விரும்புவோர் ரூ.75 கொடுத்து அதற்கான பதிவு விண்ணப்பத்தைப் பெற்று, அதைப் பூர்த்தி செய்து அதனுடன் அனுபவச் சான்றிதழ்கள் இணைத்து அனுப்பிப் பதிவு செய்து கொள்ள வேண்டும், தபாலிலும் பதிவு செய்து கொள்ளலாம். இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை தங்களின் பெயர்ப் பதிவைப் புதுப்பித்துக் கொள்ள விரும்புவோர் ரூ.10 செலுத்தி புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.

**தேர்ந்தெடுக்கும் முறை**

குறிப்பிட்ட தொழிலுக்கு ஆட்கள் தேவை என வெளிநாட்டு நிறுவனத்திடம் இருந்து தகவல் வந்ததும், அவர்கள் கேட்டிருக்கும் தகுதிக்கேற்ப, பதிவு செய்தவர்களின் விண்ணப்பங்களை எடுத்து, அவர்களை நேர்முகத் தேர்வுக்கு இந்நிறுவனம் அழைக்கிறது. நேர்முகத் தேர்வில் வெளிநாட்டு நிறுவனத்தின் அதிகாரிகளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிடமிருந்து உரிய பணிக்கான தொகையைப் பெற்று விசா படிவம், விமான பயணச் சீட்டு முதலியன பெற்ற பின் சம்பந்தப்பட்ட நாட்டுக்கு அனுப்பிவைக்கப்படுகிறார்கள்.

**பாஸ்போர்ட் சேவை**

வேலைக்காக வெளிநாடு செல்வோரின் வசதிக்காகவும், பொதுமக்களின் வசதிக்காகவும், இந்நிறுவனம் பாஸ்போர்ட் எடுத்துத் தருவது, பாஸ்போர்ட் புதுப்பித்தல் மற்றும் பாஸ்போர்ட் சம்பந்தமான அனைத்து வேலைகளையும் செய்து தருகிறது. புதிதாகப் பாஸ்போர்ட் எடுக்க விரும்புவோர் தங்களுடைய பள்ளிச் சான்றிதழ், குடும்ப அட்டை (ரேஷன் கார்டு) மற்றும் 7 புகைப்படங்களுடன் உரிய கட்டணத்தைச் செலுத்தி விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

வெளிநாட்டில் வேலை தேடுபவர்கள் இடைத்தரகர்களிடம் பணத்தைக் கொடுத்து ஏமாறாமல் இருக்கவும், நம்பிக்கையான சேவை பெறவும் தமிழக அரசின் நிறுவனமான அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம், 18-ஏ, முதல் குறுக்குத் தெரு, சி.ஐ.டி. காலனி, மைலாப்பூர், சென்னை-4-இல் உள்ள அலுவலகத்தின் உதவியை நாடினால் நல்லது.

இதுவரை ஆயிரக்கணக்கில் தமிழக மக்கள் வெளிநாட்டில் வேலைவாய்ப்பு பெற இந்நிறுவனம் உதவி செய்துள்ளது. குறிப்பாக சவுதி அரேபியாவுக்கு ஆயிரக்கணக்கில் மருத்துவர்களையும், மருத்துவம் சார்ந்த பணியாளர்களையும் அனுப்பியிருக்கிறது. அங்கு அனுபவமிக்க நம் நாட்டு மருத்துவர்களுக்கு நல்ல மரியாதையும், வரவேற்பும் இருக்கிறது. அவர்களுக்கு அதிக ஊதியமும், நல்ல வசதியும் செய்து

**ஏ. சண்முகம் இ.ஆ.ப.,**
**நிர்வாக இயக்குநர்**
**அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்**

# தமிழ்நாட்டு மக்கள் தொகை - படிப்பறிவு

| மாவட்டம் | மொத்த மக்கள் தொகை | ஆண்கள் | பெண்கள் | படித்தவர்கள்● | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | மொத்தம் | ஆண்கள் | பெண்கள் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| தமிழ்நாடு | 55,638,318 | 28,217,947 | 27,420,371 | 30,383,416 | 18,066,226 | 12,317,190 |
| 1. சென்னை | 3,795,028 | 1,966,408 | 1,828,620 | 2,753,094 | 1,525,769 | 1,227,325 |
| 2. செங்கை-அண்ணா | 4,620,967 | 2,361,017 | 2,259,950 | 2,654,763 | 1,573,942 | 1,080,821 |
| 3. வட ஆர்க்காடு-அம்பேத்கர் | 3,000,208 | 1,510,157 | 1,490,051 | 1,572242 | 942,766 | 629,476 |
| 4. தருமபுரி | 2,395,606 | 1,232,292 | 1,163,314 | 954,156 | 596,509 | 357,647 |
| 5. திருவண்ணாமலை-சம்புவராயர் | 1,997,458 | 1,007,566 | 989,892 | 903,421 | 570,834 | 332,587 |
| 6. தென் ஆர்க்காடு | 4,870,871 | 2,475,544 | 2,395,327 | 2,228,722 | 1,408,126 | 820,596 |
| 7. சேலம் | 3,914,239 | 2,025,652 | 1,888,587 | 1,862,719 | 1,150,648 | 712,071 |
| 8. பெரியார் | 2,322,851 | 1,184,629 | 1,138,010 | 1,131,671 | 699,609 | 432,062 |
| 9. நீலகிரி | 704,827 | 354,732 | 350,095 | 449,508 | 257,352 | 192,156 |
| 10. கோயம்புத்தூர் | 3,531,078 | 1,848,629 | 1,682,449, | 2,146,864 | 1,265,603 | 881,261 |
| 11. திண்டுக்கல்-காயிதேமில்லத் | 1,768,679 | 896442 | 872,327 | 891,074 | 546,720 | 344,354 |
| 12. திருச்சிராப்பள்ளி | 4,114,323 | 2,074,415 | 2,039,908 | 2,211,211 | 1,337,304 | 873,907 |
| 13. தஞ்சாவூர் | 4,526,709 | 2,268,389 | 2,258,320 | 2,609,228 | 1,529,357 | 1,079,871 |
| 14. புதுக்கோட்டை | 1,322,494 | 659,241 | 663,253 | 661,604 | 410,133 | 251,471 |
| 15. பசும்பொன் தேவர் திருமகன் | 1,074,989 | 529,703 | 545,286 | 591,357 | 356,260 | 235,097 |
| 16. மதுரை | 3,447,595 | 1,748,126 | 1,699,469 | 1,836,012 | 1,107,881 | 728,131 |
| 17. காமராசர் | 1,554,350 | 779,086 | 775,264 | 852,680 | 512,427 | 340,253 |
| 18. இராமநாதபுரம் | 1,135,887 | 562,387 | 573,500 | 595,879 | 356,912 | 238,967 |
| 19. சிதம்பரனார் | 1,455,796 | 711,087 | 744,709 | 920,049 | 502,711 | 417,338 |
| 20. திருநெல்வேலி கட்டபொம்மன் | 2,493,189 | 1,224,319 | 1,268,870 | 1,409,304 | 814,274 | 595,030 |
| 21. கன்னியாகுமரி | 1,591,174 | 797,914 | 793,260 | 1,147,858 | 601,089 | 546,769 |

● 1991 மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் 0-6 வயதுள்ள குழந்தைகள் படிப்பறிவற்றவர்களாக் கருதப் படுகின்றனர்.

## பிறப்பு விகிதம் குறைந்திட...

மகளிர் மன்றங்கள் உள்ளிட்ட பல தொண்டு நிறுவனங்கள், மத்திய, மாநில அரசுகள் செயல் படுத்தி வந்த பல நல வாழ்வுத் திட்டங்களில் ஈடுபட்டு ஒத்துழைப்பு கொடுத்து வந்தன.

குறிப்பாக, பல தொண்டு நிறுவனங்கள் குடும்ப நலத் திட்டத் தில் மிக் ஆர்வம் காட்டி, குடும்ப நல நிலையங்களை நடத்தியும், நோய்த் தடுப்பு முனைப்பு இயக் கங்கள் நடத்தியும் குடிசைப் பகுதி களைத் தத்து எடுத்துக் கொண்டும், மக்களை நலவாழ்வுத் திட்டங்களில் ஈடுபாடு ஏற்படச் செய்யும் முயற்சி களில் அரசுடன் ஒத்துழைத்து வந்தன. மக்கள் தொகையையும், அத்துடன் பிறப்பு விகிதத்தையும் கட்டுப்படுத்து வதில் பேரார்வம் காட்டி வந்தன.

அதன் காரணமாக, பல ஆண்டு களாகத் தொடர்ந்து தமிழ்நாட்டில் பிறப்பு விகிதம் குறைந்து வந்திருந் தாலும், 1989 முதல் இது சற்று அதிகரித்து இருப்பதை அறிய அதிர்ச்சியாக உள்ளது.

ஆகையால், இதுவரை அரசுடன் ஒத்துழைத்து வந்த தொண்டு நிறு வனங்களில் பல ஒன்று கூடி ஒரு கூட்டமைப்பை டாக்டர் நஞ்சுண்ட ராவ் அவர்கள் தலைமையில் ஏற் படுத்தியுள்ளது.

இது, பிறப்பு விகிதத்தைக் குறைக்க அரசு, விளம்பரம் மற்றும் நலக் கல்விப் பணிகளை மேலும் அதிகமான அளவில் மேற்கொள்ள வற்புறுத்தும்.



# தமிழ்நாட்டில் வனவிலங்குச் சரணாலயங்கள்

கோ.வி. இராமசுவாமி

உலகின் நிலப்பரப்பளவில் இந்தியா ஏழாவது பெரிய (3.2 மில்லியன் ச.கி.மீட்டர்) நாடு ஆகும். இதில் தமிழகம் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் சதுர கிலோ மீட்டர் கொண்ட பகுதியாகும். இந்நிலப் பரப்பளவில் இருபதாயிரம் சதுர கிலோ மீட்டர் காடுகளாகும்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க தமிழகத்தில் பல்வேறு வகைப்பட்ட வனவிலங்குகள் காணப்படுகின்றன. தொழில் வளர்ச்சி யாலும் வேளாண் பரப்பு விரிவாக்கப் படுவதாலும் இயற்கைக் காடுகள் மனி தனால் கையகப்படுத்தப்படுவதால் பல வனவிலங்குகளின் வாழிடங்கள் அழிக்கப் படுவதைத் தடுக்க இந்திய அரசு 1972-ஆம் ஆண்டு திருத்தப்பட்ட வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டத்தை அறிவித்தது. இச் சட்டத்தின்படி பல காடுகள் 'பாது காக்கப்பட்டவை' (Protected Reserve Forests) என்று அறிவிக்கப்பட்டு வனத் துறையினரால் கண்காணிக்கப்படுகின்றன.

வனவிலங்குப் புகலரண்களும் பல ஏற்படுத்தப்பட்டு வனவிலங்குகள் பாது காக்கப்படுகின்றன.

தமிழகத்தில் பின் குறிப்பிடப்படும் 8 வனவிலங்குப் புகலரண்கள் உள்ளன. (ஏழு சரணாலயங்கள், ஒரு தேசியப் பூங்கா) 1. முதுமலை (நீலகிரி மாவட்டம்) 2. ஆனைமலை (கோவை மாவட்டம்), 3. முண்டந்துறை (திருநெல்வேலி), 4. களக்காடு (திருநெல்வேலி), 5. கோடிக் கரை (தஞ்சாவூர்), 6. வேடந்தாங்கல் (செங்கல்பட்டு), 7. வேட்டங்குடி (இராம நாதபுரம்), 8. கிண்டி மான்கள் தேசியப் பூங்கா (சென்னை).

### முதுமலை சரணாலயம்

மலைகளின் அரசியாம் நீலகிரி மலை யில் 321 சதுர கிலோ மீட்டர் பரப்பில் அமைந்துள்ள இப்புகலிடம் மேற்குத் தொடர்ச்சி மலையில் நீலகிரி-மைசூர் நெடுஞ்சாலையிலுள்ள முக்கியமான வன விலங்குப் புகலரண் ஆகும். 1940-ஆம் ஆண்டு முதல் இது புகலரணாக உள்ளது.

தமிழ்நாட்டிலேயே மிக அதிகப் பார் வையாளர்களைக் கவர்ந்திழுக்கும் யானை களின் புகலிடம் இதுவாகும். இங்கு மடிப்பு மலைத் தொடர்களும், குன்று களும் பெரும்பள்ளத்தாக்குகளும், மலைச் சரிவுகளும் காணப்படுகின்றன. இலை யுதிர் புதர்க் காடுகள், இலையுதிர்க் காடுகள் மற்றும் பசுமை மாறாக் காடு களின் தாவர வகைகள் இங்கே காணப் படுகின்றன.

உலகின் மிகப்பெரிய தாவர உண வினமான யானை, பைசன் எனப்படும் காட்டு எருதுகள் (Gaur) கூட்டம் கூட்ட மாக இப்புகலரணில் காணப்படும். இவை களைத்தவிர புள்ளிமான் (Spotted deer) சாம்பார் மான் (Sambur deer) நான்கு கொம்பு மான், குரைக்கும் மான் (Barking deer) மலபார் அணில், பறக்கும் அணில், அனுமான் குரங்கு, நீலகிரிக் குரங்கு, முள்ளம்பன்றி, கரடி, புலி, நரி, செந்நாய் (Red dog) ஆகிய பாலூட்டிகளும், மலைப்பாம்பு சாரைப் பாம்பு, அரசநாகம் (King Cobra) உடும்புகள், சதுப்பு முதலை ஆகிய ஊர்வனவும் காணப் படுகின்றன.

இப்புகலரணை ஒலிமயமாக்குபவை வண்ண வண்ணப் பறவைகளாகும். மயில்கள், பச்சைக் கிளிகள், கௌதாரிகள், குயில்கள், ஹார்ன்பில்கள் ஆகியன. இப்புகலிடத்தில் பார்வையாளர்கள் தங்குவதற்கு வனத்துறையின் ஓய்வு விடுதி களும், படுக்கையறைக் கூடங்களும் உள்ளன. இப்புகலரணைப் பார்வையிட ஏற்ற காலம் சனவரி முதல் மார்ச் வரை யாகும்.

### ஆனைமலை புகலரண்

தமிழகத்தின் மிகப்பெரிய புகலர ணாகிய இது கோயம்புத்தூர் மாவட்டத் தில் உள்ளது. கேரள மாநில எல்லை வரை விரிந்துள்ள இப்புகலரண் கொடு



பெண்கள் எண்ணிக்கை குறைந்து வரும் அதே நேரத்தில், படித்தவர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. 1951-ஆம் ஆண்டு முதல் ஆண்-பெண் கல்வி அறிவு பெற்றவர்கள் சதவீதம் வருமாறு:

| ஆண்டு | மொத்தம் | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|---|
| 1951 | 18.33 | 27.16 | 8.86 |
| 1961 | 28.31 | 40.40 | 15.34 |
| 1971 | 34.45 | 45.95 | 21.97 |
| 1981 | 43.56 | 56.37 | 29.75 |
| 1991 | 52.11 | 63.86 | 39.42 |

கடந்த 1971-1981-ஆம் ஆண்டில் மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் 24.66 சதவீதமாக இருந்தது. 1981-1991-ஆம் ஆண்டில் இதில் 1.16 சதவீதம் குறைந்து உள்ளது.

குளிர் காலமாதலால், இந்த மக்கள் தொகைக் கணக்கெடுப்பு காஷ்மீர் மாநிலத்தில் மட்டும் நடக்கவில்லை. வரும் ஆகஸ்ட் முதல் அக்டோபர் வரை அங்கு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்படும்.

**மாநிலம் வாரியாக மக்கள் தொகை விவரம் வருமாறு:**

| மாநிலங்கள் | மக்கள் | வளர்ச்சி விதம் 1981-1991 | மக்கள் தொகை நெருக்கம் 1991 |
|---|---|---|---|
| ஆந்திரா | 66,304,854 | +23.82 | 241 |
| அருணாசலப் பிரதேசம் | 858,392 | +35.86 | 10 |
| அசாம் | 22,294,562 | +23.58 | 284 |
| பீகார் | 86,338,853 | +23.49 | 497 |
| கோவா | 1,168,622 | +15.96 | 316 |
| குஜராத் | 41,174,060 | +20.80 | 210 |
| அரியானா | 16,317,715 | +26.28 | 369 |
| இமாசலப் பிரதேசம் | 5,111,079 | +19.39 | 92 |
| காஷ்மீர் | 7,718,700 | +28.92 | 76 |
| கர்நாடகா | 44,817,398 | +20.69 | 234 |
| கேரளா | 29,011,237 | +13.98 | 747 |
| மத்தியப் பிரதேசம் | 66,135,862 | +26.75 | 149 |
| மகாராஷ்டிரா | 78,706,719 | +25.36 | 256 |
| மணிப்பூர் | 1,826,714 | +28.56 | 82 |
| மேகாலயா | 1,760,626 | +31.80 | 78 |
| மிசோரம் | 686,217 | +38.98 | 33 |
| நாகலாந்து | 1,215,573 | +56.86 | 73 |
| ஒரிசா | 31,512,070 | +19.50 | 202 |
| பஞ்சாப் | 20,190,795 | +20.26 | 401 |
| ராஜஸ்தான் | 43,880,640 | +28.07 | 128 |
| சிக்கிம் | 403,612 | +27.57 | 57 |
| தமிழ்நாடு | 55,638,318 | +14.94 | 428 |
| திரிபுரா | 2,744,827 | +33.69 | 262 |
| உத்திரப் பிரதேசம் | 138,760,417 | +25.16 | 471 |
| மேற்கு வங்கம் | 67,982,732 | +24.55 | 766 |
| அந்தமான் | 277,989 | +47.29 | 34 |
| சண்டிகார் | 640,725 | +41.88 | 5,620 |
| தத்ராநகர் ஹவேலி | 138,542 | +33.63 | 282 |
| தாமன், டையூ | 101,439 | +28.43 | 906 |
| டில்லி | 9,370,475 | +50.64 | 6,319 |
| லட்சத்தீவு | 51,681 | +28.40 | 1,615 |
| பாண்டிச்சேரி | 789,416 | +30.60 | 1,605 |



உலக மக்கள் தொகையில் 16 சதவீதத்தினர் இந்தியாவில் உள்ளனர். இரண்டாவது அதிக மக்கள் தொகை கொண்ட நாடாக இந்தியா உள்ளது.



**காதலுக்கு வழிவைத்துக்**
**கருப்பாதை சாத்தக்**
**கதவொன்று கண்டறிவோம்**
**இதிலென்ன குற்றம்?**

**— பாவேந்தர் பாரதிதாசன்**

## தமிழ்நாட்டின் மக்கள் தொகை

இந்தியாவின் மிகப் பெரிய புள்ளி விவரக் கணக்கெடுப்பாக விளங்கும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு கடந்த நூறாண்டுக் காலமாக இடைவிடாது நடைபெற்று வருகிறது.

1991 மக்கள் தொகைக் கணக்கெடுப்பு பதின்மூன்றாவது கணக்கெடுப்பாகவும், இந்தியா விடுதலை பெற்ற பின் நடைபெறும் ஐந்தாவது கணக்கெடுப்பாகவும் விளங்குகிறது.

1.3.1991 அன்று இந்தியாவின் மக்கள்தொகை 84 கோடியே 39 இலட்சத்து 30 ஆயிரத்து 861. இதில் ஆண்களின் எண்ணிக்கை 43 கோடியே 75 இலட்சத்து 97 ஆயிரத்து 929. பெண்கள் 40 கோடியே 63 இலட்சத்து 32 ஆயிரத்து 932. அனைத்திந்திய அளவில் 1000 ஆண்களுக்கு 929 பெண்கள் உள்ளனர். ஒரு சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் 267 மக்கள் வசித்து வருகின்றனர். ஏழு வயதுக்கு மேற்பட்டவர்களில் படித்தவர்கள் 52.11%. படித்த ஆண்கள் 63.86. படித்த பெண்கள் 39.42.

இந்தியாவிலேயே அதிக மக்கள் தொகை உள்ள மாநிலம் உத்திரப்பிரதேசமாகும். இந்த மாநில மக்கள்தொகை 13 கோடியே 87 இலட்சத்து 60 ஆயிரத்து 417. இரண்டாவதாக வருவது பீகார் (8,63,38,853); 3-வது மாநிலம் மகாராஷ்டிரா (7,87,06,719); 4-வது மேற்கு வங்கம் (6,79,82,732); 5-வது ஆந்திரா (6,63,04,854); 6-வது மத்தியப் பிரதேசம் (6,61,35,862); 7-வது மாநிலமாக வருவது, தமிழ்நாடு (5,56,38,318).

தமிழ்நாட்டின் மக்கள்தொகையில் ஆண்கள் 2,82,17,947. பெண்கள் 2,74,20,371 ஆவர். தமிழ்நாட்டில் 1000 ஆண்களுக்கு 972 பெண்கள் உள்ளனர். 1 சதுர கி.மீட்டருக்கு வசிக்கும் மக்கள் தொகை 428. படித்தவர்கள் 63.72 சதவீதம். படித்த ஆண்கள் 74.88 சதவீதம். படித்த பெண்கள் 52.29 சதவீதம். 1981-91-இல் வளர்ந்துள்ள மக்கள்தொகை 14.94 சதவீதம். (1981-இல் மொத்த மக்கள்தொகை 4,84,08,077). 1981-இல் 1000 பேருக்கு 28 என்று இருந்த பிறப்பு விகிதம் 1989-இல் 23.1 ஆகக் குறைந்தது. 1981-இல் 11.8 ஆக இருந்த இறப்பு விகிதம் 1989-இல் 8.6 ஆக குறைந்துள்ளது.

இந்திய மக்கள்தொகையில் 6.59 சதவீதம் தமிழ்நாட்டில் வசிக்கின்றனர். தமிழ்நாட்டில் அதிக மக்கள்தொகை உள்ள மாவட்டம் தென் ஆர்க்காடு (48,70,871). அடுத்து வருவது செங்கை-அண்ணா (46,20,967), தஞ்சை (45,26,709), திருச்சி (41,14,323). குறைந்த மக்கள்தொகை உள்ள மாவட்டம் நீலகிரி (7,04,827). சென்னையின் மக்கள்தொகை (37,95,028), 1 சதுர கி.மீட்டருக்கு அதிக மக்கள் வசிக்கும் மாவட்டம் சென்னை (21,811). 1 சதுர கி.மீட்டருக்கு மிகவும் குறைந்த அளவில் மக்கள் வசிக்கும் மாவட்டம் தர்மபுரி (249).

1981-இல் ஆயிரம் ஆண்களுக்கு 977 பெண்களைக் கொண்ட தமிழ்நாட்டில் 1991-இல் ஆயிரம் ஆண்களுக்கு 972 பெண்கள் உள்ளனர். ஆயிரம் ஆண்களுக்கு ஆயிரத்திற்கும் அதிகமாக பெண்கள் உள்ள மாவட்டங்கள் சிதம்பரனார் (1,047), திருநெல்வேலி-கட்டபொம்மன் (1,036), பசும்பொன் தேவர் திருமகன் (1,029), இராமநாதபுரம் (1,020), புதுக்கோட்டை (1,006). பெண்கள் குறைவாக உள்ள மாவட்டம் கோவை (1000-க்கு 910), சென்னை (930), சேலம் (932).



**பிறப்பு விகிதம்: தமிழகத்தில் தான் அதிகம்**

**"பிறப்பு விகிதத்தில், தென் மாநிலங்களில் தமிழ்நாடுதான் அபாயத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. இந்தியா முழுமைக்கும் பிறப்புச் சதவிகிதம் 1988-இல் ஆயிரத்திற்கு 31.5-லிருந்து, 1989-இல் 30.5 ஆகக் குறைந்துள்ளது. இதே காலகட்டத்தில் தென்மாநிலங்களில் ஆந்திராவில் 1988-இல் 27.4. ஆக இருந்த விகிதம் 1989-இல் 25.6 ஆகக் குறைந்துள்ளது. ஆயிரத்திற்கு 1.5 வீதம் குறைந்துள்ளது. கர்நாடகத்தில் 1988-இல் 28.7 ஆக இருந்த பிறப்பு விகிதம் 27.9 ஆக 1989-இல் ஆயிரத்திற்கு 0.5 வீதம் குறைந்துள்ளது. கேரளத்தில் 1988-இல் 20.3 வீதமாக இருந்தது 1989-இல் 19.8 ஆகக் குறைந்துள்ளது ஆயிரத்திற்கு 0.5 வீதம் குறைந்துள்ளது.**

**"தமிழ்நாட்டில் மட்டும் சரிந்து கொண்டே வந்த பிறப்பு விகிதம், 1988-ஐ விட 1989-இல் அதிகரித்துள்ளது! 1988-இல் ஆயிரத்திற்கு 22.7 விகிதமாக இருந்த பிறப்பு, 1989-இல் ஆயிரத்திற்கு 23.1 விகிதமாக அதாவது 0.4 விகிதம் கூடியுள்ளது. இது பார்ப்பதற்குச் சிறிய தொகையாக இருந்தாலும், இது ஒரு அபாய அறிகுறி. இந்தப் போக்கை ஒட்டு மொத்த முயற்சியுடன் தடுத்து நிறுத்தாவிட்டால் ஆபத்து. இதற்கு உடனடியாக முற்றுப் புள்ளி வைக்க வேண்டும்".**

**- சென்னை மாநகராட்சி சார்பில் நடந்த நட்சத்திரக் கலை விழாவில் தலைமைச் செயலாளர் திரு. டி.வி. அந்தோணி இ.ஆ.ப. அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து (8.4.91)**







முடிகளைக் கொண்ட மலைப்பகுதியாகும். பொள்ளாச்சியிலிருந்து 50 கி.மீ. தூரத்திலுள்ளது.

இப்புகலரணில் பசுமை மாறாக் காடுகளும், இலையுதிர்க் காடுகளும் காணப்படுகின்றன. யானை, காட்டு எருமை, சாம்பார்மான், புள்ளிமான், குரைக்கும் மான், எலிமான், நீலகிரி ஆடு, புலி, சிறுத்தை, செந்நாய், காட்டுப் பன்றி, நீலகிரிக் குரங்கு, அனுமான் குரங்கு ஆகிய பல விலங்குகள் காணப்படுகின்றன.

### முண்டந்துறை புலிகள் சரணாலயம்.

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் அம்பாசமுத்திரத்திற்கு வெகு அருகாமையில் உள்ள இப்புகலரணில் பசுமை மாறாக் காடுகள் செழிப்புடன் காணப்படுகின்றன. இப்புகலரணில் தாமிரவருணி ஆறு செல்வதால் கரையோரங்களில் மிகச் செழிப்பான காடுகள் காணப்படுகின்றன.

இந்த இயற்கைக் காடுகளைத் தவிர வனத்துறையினர் சந்தனக் காடுகளையும், தேக்குமரக் காடுகளையும் ஏற்படுத்திப் பராமரித்துப் பாதுகாக்கின்றனர். இப்புகலரணில் சேர்வலாறு அணைக்கட்டுக் கட்டியதால் பரந்த பல பகுதிகள் நீரில் அமிழ்ந்து விட்டன. புலிகளும் சிறுத்தைகளும் இங்குக் காணப்படும் புலால் உணவினவாகும். நெடிதுயர்ந்த மரங்கள் இருப்பதால் குரங்கு வகைகளாகிய நீலகிரிக் குரங்கு, அனுமான் குரங்கு, சிங்கவால் குரங்கு, தேவாங்கு ஆகிய அனைத்தும் காணப்படுகின்றன.



இவைகளைத் தவிர செந்தாய், கரடி, புள்ளிமான், சாம்பார் மான், குரைக்கும் மான், எலிமான், காட்டுப் பன்றிகளும் பல்வகைப்பட்ட பறவைகளும் இப்புகலிடத்தில் காணப்படுகின்றன.

### களக்காடு புகலரண்

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் நாங்குநேரி தாலூக்காவில் உள்ள வனவிலங்குகள் புகலரணாகிய இதில் மடிப்பு மலைகளும், சிறு குன்றுகளும் காணப்படுகின்றன. இப்புகலரணை மணிமுத்தாறு, பச்சையாறு மற்றும் பல ஆறுகளின் கிளைகள் பாய்ந்து செழிப்பாக்குகின்றன.

பசுமைமாறாக் காடுகளின் தாவரங்களும், கோடைக்கால இலையுதிர்த் தாவரங்களும், முட்காடுகளின் தாவரங்களும் நிறைந்துள்ள இப்புகலிடத்தில்



உலகிலேயே மிக அரிதான சிங்கவால் குரங்கு (Lion-tailed macaque) மிக அதிக எண்ணிக்கையில் (200) காணப்படுகிறது.

### கோடிக்கரை புகலரண்

தஞ்சை மாவட்டத்தின் கிழக்குக் கடற்கரையோரத்தில் வேதாரண்யம் அருகே 25 ச.கி.மீ. பரப்பளவில் விரிந்துள்ளது இப்பறவைகள் புகலிடமாகும். உப்பங்கழிகளும். முட்புதர்களும் கொண்ட இப்புகலரணில் வெளிமான்கள் (Black buck) மிக அதிக எண்ணிக்கையில் (2,000) காணப்படுகின்றன. இப்புகலரணுக்கு 175 வகையான பறவையினங்கள் ஆண்டொன்றுக்கு வருவதாகக் கணக்கிட்டு உள்ளனர்.



அக்டோபர், நவம்பர் மாதங்களில் 10,000-இல் இருந்து 30,000 வரை கூட்டம் கூட்டமாக பூநாரைகளும் (Flamingo), செங்கால் நாரைகளும், கரண்டி மூக்கு நாரைகளும் (Spoon bills), வண்ண நாரைகளும் (Painted stork) இப்புகலிடத்தில் உப்பங்கழிகளில் நிறைந்திருப்பது கண்ணுக்கு விருந்தாகும்.



### வேடந்தாங்கல் பறவைகள் புகலரண்

தென்னிந்தியாவில் காணப்படும் மிக தொன்மையான பறவைகள் புகலரணாகிய இது செங்கல்பட்டு மாவட்டத்தில் 74 ஏக்கர் நிலப்பரப்பில் பரவியுள்ளது. இதில் 30 ஏக்கர் பரப்பளவில் வேடந்தாங்கல் ஏரியும் அதன் கரையும் உள்ளன. வடகிழக்குப் பருவ காலத்தில் நீர் நிறைந்து காணப்படும் இவ் ஏரியில் உள்ள கடப்ப மரங்களும், கரையோரத்தில் உள்ள கருவேல மரங்களும் பல் வகைப் பறவையினங்கள் கூட்டம் கூட்டமாகக் கூடுகட்ட இடமளிக்கின்றன. சாம்பல் நாரை (Grey heron), நீர்க்காகம் (Cormorants), பாம்புத் தாரா (Darter), வெள்ளை நாரை (White Ibis), கரண்டி மூக்கு நாரை, கூழைக்கடா (Pelicans), வண்ணநாரை போன்ற பல பறவைகள் கூடுகட்டி வாழ்வதைக் கண்டுகளிக்கலாம்.

1986-ஆம் ஆண்டில் சுமார் 50,000 பறவைகள் இங்கு இருந்ததாகக் கணக்கிடப்பட்டுள்ளன. சனவரி, பிப்ரவரி மாதங்களில் மிக அதிகமாகப் பறவைகளைக் கண்டு மகிழலாம்.

### வேட்டங்குடி புகலரண்

இராமநாதபுரத்தில் உள்ள திருப்பத்தூர்க்கோட்டத்தில் உள்ள வேட்டங்குடி ஏரி, நீர்ப் பறவைகளின் புகலிடமாகக் காட்சியளிக்கிறது. இங்குப் பல்வகைப்பட்ட நாரைகள் கூடுகட்டி வாழ்வதால் இவைகளின் கீச்சு, மூச்சு ஒலி எப்பொழுதும் நிறைந்திருக்கும், நீர்க்காகம், இரவு நாரை (Night Heron), கரண்டி மூக்கு நாரைகள் போன்ற பல்வேறு வகைப்பட்ட நீர்ப் பறவைகளின் புகலிடமாக உள்ள இதனைப் பார்வையிடச் சிறந்த காலம் ஆகஸ்ட் முதல் ஏப்ரல் வரை ஆகும்.

### கிண்டி தேசிய பூங்கா

சென்னையில் ஆளுநர் இல்லத்தின் பின்புறமுள்ள மூன்று ஏக்கரில் பரந்து கிடக்கும் இப்பூங்காவில் தற்பொழுது ஒரு உயிர்க் காட்சியகமும், பாம்புப் பண்ணையும், மான்கள் பூங்காவும் காணப்படுகின்றன. முட்காடுகளும், புதர்க்காடுகளும் நிறைந்த இப்பூங்காவில் புள்ளிமான்கள் அதிக எண்ணிக்கையில் காணப்படுகின்றன. இவைகளோடு வெளிமான்களும் (Black bucks) உள்ளன

தமிழகத்துப் புகலரண்களில் தமிழ் நாட்டில் காணப்படும் மிக அரிய விலங்குகள் பாதுகாப்போடு பல்கிப் பெருகுகின்றன. இப்புகலிடங்களுக்குக் குழந்தைகளுடன் சென்று பார்த்து இவ்விலங்குகளின் வளப்பையும், இயற்கைச் சூழலில் இவ்விலங்குகள் சுகமாக வாழ்வதையும் கண்டுகளித்து உளப்பூர்வமான மகிழ்ச்சியை நாம் அடையலாம்.

நன்றி: "கலைக்கதிர்"

## சிறுசேமிப்புத் துறை




எதிர்பாரா இன்னல்கள் ஏற்படுமுன் சேமியுங்கள். வரி செலுத்துவதைத் திட்டமிட்டு, இன்ஷுரன்ஸ் பாதுகாப்பும் பெறுங்கள். இன்றே கீழ்க்கண்ட சிறுசேமிப்புத் திட்டத்தில் ரூ.1,000/-ம் அதற்குமேலும் முதலீடு செய்து தனிநபர் விபத்து இன்ஷுரன்ஸ் பாலிசியைப் பெறுங்கள்.

**கீழ்க்கண்ட திட்டங்களின்கீழ் தனிநபர் விபத்து இன்ஷுரன்ஸ் பாதுகாப்பு கிடைக்கும்:**

- கிசான் விகாஸ் பத்திரம்
- தேசிய சேமிப்புத் திட்டம்
- அஞ்சலக மாதாந்திர வருமானத்திட்டம்
- அரசுப்பணியாளர்களுக்கான டெபாசிட் திட்டம் 1989
- தேசிய சேமிப்புப்பத்திரம் 8வது வெளியீடு
- 15 வருட பொது சேமநலநிதி
- அஞ்சலக குறித்தகால டெபாசிட்

**வருமான வரி விலக்குப் பெற தேசிய சேமிப்பில் முதலீடு செய்வீர்**

| வசதிகள் | தேசிய சேமிப்பு பத்திரம் 8-வது வெளியீடு | பொதுசேம நலநிதி | தேசிய சேமிப்பு திட்டம் |
|---|---|---|---|
| வட்டி | 12% | 12% | 11% |
| முதலீட்டுக்கு வருமான வரிவிலக்கு | ரூ.50,000 பிரிவு 88-ன்கீழ் | ரூ.50,000 பிரிவு 88-ன்கீழ் | ரூ.40,000 பிரிவு 80CCA-ன் கீழ் |
| வட்டிக்கு வருமான வரிவிலக்கு | வருமான வரிச் சட்டம் பிரிவு 88-ன்கீழ் | வருமான வரியில் இருந்து வட்டிக்கு முழுவிலக்கு | வட்டி தொகை சேரும்போது வருமான வரி விலக்கு |
| செல்வ வரி | ரூ.5,00,000 வரை விலக்கு | முழுவிலக்கு | முழுவிலக்கு |
| டெபாசிட்டுகளுக்கான வரம்பு | வரம்பு கிடையாது | ரூ.60,000 | ரூ.40,000 |

**தமிழக அரசின் சிறப்பு சலுகைகள்:**

- ஒவ்வொரு ரூ.500/- முதலீட்டிற்கும் ஒரு இலவச பரிசு கூப்பன் மூலம் 262 பரிசுகளில் ஒன்றைப் பெறும் வாய்ப்பு.
- தமிழ்நாட்டில் குறிப்பிட்ட சில திட்டத்தில் முதலீடு செய்யும் ஒவ்வொரு ரூ.1,000/- முதலீட்டிற்கும் 1% வரை ஊக்கத்தொகை.
- 1.1.91 முதல் 31.3.91 வரை தமிழ்நாட்டில் குறிப்பிட்ட திட்டங்களில் முதலீடு செய்யும் ஒவ்வொரு ரூ. 1000/- முதலீட்டிற்கும் தனிநபர் விபத்து இன்ஷுரன்ஸ் வசதி. பிரீமியத்தை தமிழக அரசே செலுத்துகிறது.

DIPR/189/NSS/91/ARES

**இலவச தனிநபர் விபத்து காப்புறுதி திட்டம் — அதிகபட்ச நஷ்ட ஈடு ரூ. 50,000/-**

ரூ.50,000/- வரை தனிநபர் விபத்து இன்ஷுரன்ஸ் வசதி பெறுங்கள்

கூடுதல் சலுகைகள்:

- இந்திய அரசின் முழுப்பாதுகாப்பு
- சொத்து வரிவிலக்கு
- உங்கள் குழந்தைகள் பெயரில் முதலீடு செய்து வருமான வரிவிலக்கு பெறுங்கள்.

யுனைடெட் இந்தியா இன்ஷுரன்ஸ் நிறுவனம், சென்னை.
தனிநபர் விபத்து இன்ஷுரன்ஸ் பாலிசி கிடைக்குமிடம்:
அனைத்து மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் மற்றும்
இயக்குநர்
சிறுசேமிப்புத்துறை
143, அண்ணாசாலை, சென்னை-600 002.
தொலைபேசி: 840223/846209.




# பாசனப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

வேளாண்மைக்கு நீர், நிலம் மற்றும் விதை, உரம், பூச்சிமருந்து ஆகியவை இன்றியமையாத தேவைகளாகும். இவற்றில் நீர் கிடைத்தற்கரிய பொருளாக ஆகிவிடுமோ என்கின்ற நிலை ஏற்பட்டு வருகின்றது. மக்கள் தொகைப் பெருக்கம், தொழில் வளம் ஆகியவற்றினால் தேவைக்கேற்ப, நீர் கிடைப்பது சிரமமாக உள்ளது. அதற்குக் காரணம் காலத்தில் மழை பெய்யாது வான் பொய்ப்பதும், பெய்யும் மழையும் குறைவாக இருப்பதனாலும் தான்.

ஆகவே, கிடைக்கும் நீர், சரிவரப்பயன்படுத்திக் கொள்ளப் படுதல் வேண்டும். ஆனால், கிடைக்கும் நீர் சரிவரப் பயன்படுத்திக் கொள்ளப்படுகிறதா எனில், 'இல்லை' என்று கூறிடும் நிலையே உள்ளது. ஏனெனில் பாசன நீர் பல வழிகளில் வீணாகிறது.

பெரும்பாலும் வயலுக்கு வயல் பாசனம் தான் நடைபெறுகிறது. அதனால் ஒரு வயல் முழுவதற்கும் நீர் பாய்ந்தவுடன்தான், அடுத்த வயலுக்கு நீர் பாய்ச்ச முடிகிறது. அதனால் வயலில் தேவைக்குமேல் நீர் நிற்க வழி ஏற்படுகிறது.

மேலும், பாசன நீர் செல்லும் வாய்க்கால்கள் மேடு பள்ளங்களாகவும், வளைவுகளாகவும் இருப்பதனாலும், பாசன நீர், வாய்க்கால்களில் விரைவாகச் செல்ல இயலாது போகிறது. வாய்க்கால்களின் கரைகள் சரிவர இல்லாதிருந்தாலும், கரை உடைப்பெடுத்து, பாசன நீர் வீணாகிறது. மண் வாய்க்கால்களாக இருப்பதனால், பாசன நீர் நிலத்தில் உறிஞ்சப்பட்டும் வீணாகிறது. வாய்க்கால்களில் புல், பூண்டுகள் வளர்வதனால், நீர் பாயும் வேகம் தடைப்படுவதோடு, ஓரளவு நீர் புல் பூண்டுகளால் கிரகிக்கப்பட்டு வீணாகிறது. வயல் வரப்புகளில் எலி வளைகள் இருப்பின் அவற்றில் செல்வதாலும் ஓரளவு நீர் வீணாகிறது. முன் மடைதாரர்களுக்குத் தேவைக்கு அதிகமான நீர் கிடைப்பதாலும், கடை மடைதாரர்களுக்கு மிகவும் குறைவாக அல்லது பாசன நீர் கிடைக்காமலே போவதாலும் நீர் வீணாவது மட்டுமின்றி மகசூலும் பாதிக்கப்படுகின்றது.


நா. துரைசாமி,
உதவி செயற் பொறியாளர்
வாரபந்தி, ஈரோடு.


இக்குறைகளைக் களைந்து, பாசனப் பகுதியைச் சேர்ந்த அனைத்து நிலங்களுக்கும், பாசன நீர் கிடைத்திட வழிவகைகள் செய்திடுவதே பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கமாகும்.

பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், மண் வாய்க்கால்கள் கரை வாய்க்கால்களாக அமைக்கப்படுகின்றன. தேவையான இடங்களில் ஆங்காங்கே பகிர்மானத் தொட்டிகள், வண்டிப் பாதைகள், நீர் அளவை கட்டுமானங்கள் ஆகியவை கட்டப்படுகின்றன.

தலைமடை, இடைமடை, கடைமடை ஆகிய பகுதிகளில் நிலம் எங்கிருப்பினும், அனைத்திற்கும். தேவையான பாசன நீர், தேவையான காலத்தில் கிடைக்கும்படி ஆவன செய்யப்படுகிறது.

விவசாயிகளின் தேவை அடிப்படையில், ஒவ்வொரு மதகிலும் செய்யப்பட உள்ள திட்டப்பணிகள் தீர்மானிக்கப்படுகின்றன. அதன் பின்னரே, வரைபடங்கள் மற்றும் மதிப்பீடுகள் தயாரிக்கப்படுகின்றன. பின்னர் திட்டப்பணி செயலாக்கப்படுகிறது. திட்டப்பணியின் செயலாக்கம், பெரும்பாலும் விவசாயிகள் சங்கங்களின் வாயிலாகச் செயல்படுத்தப்படுகிறது. விவசாயிகளைத் தனித்தனியாகவும், குழுக்களாகவும், சந்தித்து விவசாயிகள் சங்கம் அமைக்கும் பணி பாசனச் சமூக அமைப்பாளர்களால் செய்யப்படுகிறது. இவ்வாறு திட்டப்பணிகளின் செயலாக்கத்தில் விவசாயிகள் நேரிடையாகப் பங்கு பெறும் நிலையினால், விவசாயிகளுக்குமனநிறைவு ஏற்படுகிறது. இவ்வாறு அவர்கள் திட்டப் பணிகளில் ஈடுபாடு கொள்வதால், அவைகளை அவர்கள் சொந்த உடைமையாகக் கருதும் நிலை ஏற்படுகிறது. அதனால் அவை நன்முறையில் பராமரிக்கப்பட ஏதுவாகிறது.

பாசனப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் செய்யப்படும் திட்டப்பணிகளில், 5 முதல் 8 எக்டேர் வரை செய்யப்படும் பணிகளுக்கான செலவுத் தொகை முழுவதும் மானியமாகும். 5 முதல் 8 எக்டேருக்குக் குறைவாக உள்ள பரப்பில் செய்யப்படும் திட்டப் பணிகளின் செலவில் 50 சதவிகிதம் மைய அரசும், 50 சதவிகிதம் மாநில அரசும் ஏற்றுக் கொள்கின்றன. அந்தச் செலவில் மைய அரசு 25 சதவிகிதம் மாநில அரசு 25 சதவிகிதம் மானியமாக அளிக்கின்றன. எனவே, விவசாயிகள் 50 சதவிகிதம் அளவு தொகையினைச் செலுத்தினால் போதும். அந்தத் தொகையும் திட்டப் பணி செயலாக்கப்பட்ட இரண்டு ஆண்டுகள் கழிந்த பின்னர், மூன்றாம் ஆண்டிலிருந்து ஐந்து சம தவணைகளில் வசூல் செய்யப்படுகிறது.



1,250 லிட்டர் பால் இச்சங்கத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படுகிறது. இதன் மூலம் இப்பகுதி மக்கள் நல்ல பலன் பெறுகிறார்கள்.

மொட்டையாண்டி என்பவரைச் சந்தித்து, இது குறித்துக் கேட்டபோது கூறினார்—

''பால்மாடு மூலம் என் குடும்பம் நல்ல நிலையினை அடைந்துள்ளது. விவசாயக் கூலிகளான நாங்கள் காலை 5 மணிக்கு பால் கறந்து பின்னர் விவசாய வேலைக்குச் சென்று வேலை முடித்து 2 மணிக்குப் பின்னர் நானும் என் மனைவியும் அப்பகுதியிலே புல் அறுத்து மாட்டுக்குத் தீவனமாகக் கொண்டு வருவோம் பின்னர் மாலை 3 மணிக்குப்பால் கறப்போம். இவ்வாறு ஒரு நாளைக்கு ஏறக்குறைய 12 லிட்டர் பால் கறக்கிறோம். ஒரு லிட்டர் ரூ.3.70 வீதம் ரூ.44.40 வருமானம் கிடைக்கிறது. இதில் மாட்டுத் தீவனத்திற்கு ரூ.15 செலவாகிறது. மீதம் ரூ.29.40 கிடைக்கிறது. விவசாயம் எங்களுக்கு முக்கியத் தொழிலாக இருப்பதாலும் இது அதோடு தொடர்புடைய தொழிலாக அமைவதாலும், எங்களுக்குப் பால் மாடு வளர்ப்பது மிகவும் லாபமாக உள்ளது''

கோட்டூர், கிராமத்தில் ரூ.2,84,000 செலவில் ஆதிதிராவிடர்களுக்கு கட்டப்பட்டுள்ள 20 கான்கிரீட் வீடுகளையும், தர்மபுரி, வைகை புதூர், ஜெயமங்கலம் ஆகிய இடங்களில் கட்டி முடிக்கப்பட்ட ஆதிதிராவிடர் குழும குடியிருப்புகளையும் செய்தியாளர்கள் சென்று பார்வையிட்டார்கள். வெங்கடாசலபுரம், இலட்சுமிபுரம் ஆகிய இடங்களில் தலா ரூ.65,000 ஆயிரம் செலவில் கட்டப்பட்டு வரும் ஊராட்சி மன்றக் கட்டடங்களையும், சாண எரிவாயுத் திட்டத்தில் அமைக்கப்பட்ட சாண எரிவாயு அடுப்பையும் பார்வையிட்டு அதன் பலன்களையும், நன்மைகளையும் பயனாளிகளிடத்தில் கேட்டறிந்தார்கள். வெங்கடாசலபுரத்தில் வரதவெங்கடரமண மேல்நிலைப்பள்ளியில் சமூகக்காடு வளர்ப்புத் திட்டத்தில் 4 ஏக்கர் நிலத்தில் 16 ஆயிரம் சவுக்கு மரக்கன்றுகள் நட்டு நல்லமுறையில் வளர்க்கப்பட்டு வருவதையும், பார்த்தார்கள். அம்மாபுரம் முதல் சொக்கத்தேவன்பட்டி வரையில் தார்ச்சாலைகள் அமைக்கும் பணிகளையும் செய்தியாளர் குழு பார்வையிட்டது.





# உன்பெயர்தான் வரலாற்றில் நிலைக்கணும்



மாணவர் பக்கம்:

**கலைப்பொழிலன்**

தப்புகளைச் செய்யாமல் இருக்கணும் - தம்பி
தன்னலத்தை எந்நாளும் மறக்கணும்;
எப்பவுமே எளியோரை மதிக்கணும் - தம்பி
எந்நாளும் உறுதியோடு நடக்கணும்!

கல்வியினைக் கசடறவே கற்கணும் - தம்பி
கற்றபடி சிறப்பாக நடக்கணும்;
செல்வத்தைச் சேர்ப்பதற்கு உழைக்கணும் - தம்பி
சேர்த்தவற்றில் வறியவர்க்கு உதவணும்!

சாதிமத பேதங்களை மறுக்கணும் - உண்மை
சாத்திரங்கள் கூறும்நெறி சிறக்கணும்;
சாதனைகள் புரிந்திடவே துடிக்கணும் - உன்னைச்
சார்ந்தவர்கள் துயர்களைய நினைக்கணும்!

ஏழையென்று இகழாமல் இருக்கணும் - அவர்
இல்லாமை போக்கநீயும் துடிக்கணும்;
ஊழைவெல்ல எப்போதும் உழைக்கணும் - தம்பி!
உன்பெயர்தான் வரலாற்றில் நிலைக்கணும்!

## அறிவுச் சுடர்

● ''ஸ்பா ஆப் சௌத்'' (SPA OF SOUTH) என்று எது அழைக்கப்படுகிறது?

குற்றாலம்.

'ஸ்பா' என்பது பெல்ஜியத்தில் உள்ள ஒரு இடம். அங்கு பல்வேறு நீரூற்றுகள் உண்டு; அந்த நீரூற்றுகள் மருத்துவக் குணங்களைக் கொண்டதாக இருந்தன. அதனைத் தொடர்ந்து மருத்துவக் குணங்கள் அடங்கிய ஊற்று நீர் இடங்களெல்லாம் 'ஸ்பா' என்று அழைக்கப்பட்டன.

● இவ்வாண்டு என்ன ஆண்டாகக் கொண்டாடப்படுகிறது?

சுற்றுலாவின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் 'இந்தியாவுக்கு வாருங்கள்' (VISIT INDIA) ஆண்டாகக் கொண்டாடப்படுகிறது.

● களக்காடு வனவிலங்கு சரணாலயத்தின் முக்கியத்துவம் என்ன?

சிங்கவால் குரங்கின் (LION TAILED MACAQUE) புகலிடம். சுலபமாகப் பயப்படக்கூடிய மிருகம். தாழ்வான பகுதிகளில் அவைகளைப் பார்க்க முடியாது. அழிந்து வரும் இவ்வினத்தைக் காப்பதற்காக இந்தச் சரணாலயம் அமைக்கப்பட்டுள்ளது. மக்களைப் பார்த்தவுடன் மரங்களின் மேல் கிளைகளில் ஒளிந்து கொள்ளும் தன்மையுடையவை.

● தமிழ்நாட்டில் எங்கெங்கு வானொலி நிலையங்கள் உள்ளன?

1. சென்னை, 2. திருச்சிராப்பள்ளி, 3. கோயம்புத்தூர், 4. திருநெல்வேலி, 5. மதுரை, 6. நாகர்கோவில். நாகர்கோவில் வானொலி நிலையம் நாட்டிலேயே முதல் மாவட்ட வானொலி நிலையம் (FIRST DISTRICT RADIO STATION) என்ற பெருமையுடையது. திருச்சிராப்பள்ளி, சென்னை ஆகிய நிலையங்கள் பொன்விழா கொண்டாடியுள்ளன. நமது நாடு சுதந்தரம் அடைந்தபொழுது ஆறே நிலையங்கள் இருந்தன. அவற்றில் இரண்டு தமிழ்நாட்டில்.

**காலமென்ற மாபெருங்கடல் நடுவே அமைந்த கலங்கரை விளக்கங்கள் புத்தகங்களே.**

**—விப்பின்**

● ஒரு ரூபாய் நோட்டில் யாருடைய கையெழுத்து இருக்கும்?

இந்திய அரசின் நிதி அமைச்சகச் செயலர் கையெழுத்து ஒரு ரூபாய் நோட்டில் இருக்கும். இரண்டு ரூபாய்க்கு மேல் ரிசர்வ் வங்கியின் கவர்னர் கையெழுத்து இருக்கும்.

● காவிரி வடி நிலத்தில் பெட்ரோல் எங்கு அதிகமாகக் கிடைக்கிறது?

நரிமணம்.

● ஆர்.எல்.ஈ.ஜி.பி. (RLEGP) என்றால் என்ன?

ஊரக நிலமற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் Rural Landless Employment Gurantee Programme.

● ஸ்ரீ ஹரிகோட்டா எங்குள்ளது? அதன் முக்கியத்துவம் என்ன?

ஆந்திரப் பிரதேசம் நெல்லூர் மாவட்டத்தில் உள்ளது. இந்தியாவின் செயற்கைக்கோள் செலுத்தும் இடமாகும். (SATELLITE LAUNCHING CENTRE)

● ஆப்பிள் (APPLE) என்றால் என்ன? அது எந்த ஆண்டு எங்கிருந்து விண்ணில் செலுத்தப்பட்டது?

அரைன் பாஸஞ்சர் பேலோடு எக்ஸ்பிரிமெண்ட் (ARAINE PASSENGER PAYLOAD EXPERIMENT) 1981-இல் பிரெஞ்ச் நாட்டில் உள்ள டிராம்கோரா (TIROMDHORA) என்ற இடத்திலிருந்து விண்ணில் செலுத்தப்பட்டது.

● நமது நாட்டில் உயர்ந்த இராணுவ (GALLANTRY) விருது எது?

பரம் வீர் சக்கரா.

● யூனியன் பிரதேசமான அந்தமான் நிக்கோபார் பகுதிகளில் மொத்தம் எத்தனைத் தீவுகள் உள்ளன?

204 தீவுகள் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

**தொகுப்பு**
**டாக்டர் ஜி.எஸ். விஜயலட்சுமி**
**- நன்றி: 'திட்டம்'**

# நூல் நயம்

### கவிக்கொண்டல் கவிதைகள்

**ஆசிரியர்:** மா. செங்குட்டுவன்
**வெளியீடு:**

தாமரைச் செல்வி பதிப்பகம்
14/3, பீட்டர்ஸ் குடியிருப்பு
சென்னை-600 014.

விலை:ரூ.12 பக்கம்:127

**தித்திக்கும்** தேன் கவிதைகளின் தொகுப்பு இது.

தமிழ், தமிழர், தமிழ்நாடு குறித்த கவிதைகளும், வரலாறு, சமுதாயம், தலைவர்கள் குறித்த கவிதைகளும் நம் எண்ணத்தை ஈர்க்கின்றன.

மறைமலை யெனும்தமிழ் உறைமலையே
மதிநிறை உரைதரு பெருந்தருவே!
மணங்கமழ் தனித்தமிழ் உதிர்குலையே!
மறைத்தமிழ் ஒலியெழும் அதிர்கலமே!

— என்று மறைமலையடிகளாரின் மாண்பினைக் கூறும் பாங்கு மகிழ்தற்குரியது.

அறிவியல் வந்ததைக் குறிப்பிடும்போது,
'மந்திர தந்திரம் எல்லாமும்
மாயமாய் மறைந்தன அறிவியலால்!'
என்கிறார்.

எழுத்தாளன் நிலையைப் படம் பிடிக்கும் கவிஞர், 'தன்மான இலக்கியங்கள் படைப்பீர் இன்றே!' என்று வேண்டுகோள் விடுக்கிறார்.

நல்ல கவிதைத் தொகுப்பு.

### விளையும் பயிர்

**ஆசிரியர்:** ஸ்வீட்லின் பிரபாகரன்
**வெளியீடு:**

நவ்தின் பிரகாஷன் கேந்த்ரா
த.பெ.எண்: 1585
டெல்லி-110 006

விலை:ரூ.8.00 பக்கம்:23

**பணிக்குச்** செல்லும் சிறுவர்கள் பற்றிய அலுவலகங்கள், குறைந்த கூலி, கொத்தடிமைத் தனம், கொடுமைகள், ஆகியவற்றை விவரிக்கிறது இந்நூல். இவற்றுக்கெல்லாம் வழிவகை என்ன? அதை விளக்குவதே இந்நூல். அனைவரும் படிக்கலாம்.

—குமார்

### பாட்டு வரும்

**ஆசிரியர்:**
ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன்,
**வெளியீடு:**

சுதா பதிப்பகம்,
4, முத்து முதலித் தெரு,
புரசைவாக்கம்,
சென்னை-600 007.

விலை:ரூ.21 பக்கம்:112

**யார்** கவிஞர்?
''எல்லோரும் கவிஞர்தாம்; இன்ப துன்பம்
இதயத்தை மிகவதிகம் தாக்கும் நேரம்''
எப்போது பாட்டு வரும்?
''பாட நினைத்திடு பாட்டுவரும்
பாட்டுவரும் தினம் பாட்டுவரும்''
யார் அழிவதில்லை?
''அழிவிலாக் காவி யங்கள்
ஆக்கிடும் கவிஞ ரெல்லாம்
அழிந்ததே இல்லை யிங்கே
அவனியில் பிறந்த பின்னர்''

- இப்படிக் கவிதைக் கனிகளைச் சுவைத்துக் கொண்டே போகலாம். இந்தத் தொகுப்பில் 51 கவிதைகள் உள்ளன.

இறைவனைப் பாடும் கவிஞர், இனிய காதலையும் பாடுகிறார்; அதே சமயத்தில் இந்தச் சமுதாயத்தையும் படம் பிடிக்கிறார். கவிஞரின் சிந்தனைப் பிழிவுகள், நம்மைச் சிந்திக்க வைக்கின்றன.

### பறவைகள் பலவிதம் (இரண்டாம் பகுதி)

**ஆசிரியர்:** மலையமான்
**வெளியீடு:**

ஒளிப் பதிப்பகம்
68, ரங்காச்சாரி சாலை
சென்னை-600 018

விலை: ரூ.13 பக்கம்: 111

**பறவைகள்** பல விதம்; ஒவ்வொன்றும் ஒரு விதம். அவற்றை விளக்குகிறது இந்நூல்.

பறவைகள் பற்றிய முக்கியமான செய்திகள் மனத்தைக் கவர்கின்றன.

ஆந்தை, இசைக்குருவி, கருங்குருவி, கிவி, குருவி, நெருப்புக்கோழி, மரங்கொத்தி, இப்படிப் பல்வேறு பறவைகள் குறித்த சுவையான தகவல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. பறவைகள் பற்றிய பழமொழிகளும், உவமைகளும் இந்நூலில் உள்ளன.

### குறைந்த செலவில் வீடு கட்டுவது எப்படி?

**ஆசிரியர்:** ஏ.கே.சேஷய்யா
**வெளியீடு:**

தமிழ்மணி பதிப்பகம்
107 ஏ, பெரியார் பாதை (மேற்கு)
சூளைமேடு, சென்னை-600 094.

விலை:ரூ.12 பக்கம்:108

**வீடு** கட்ட சிறந்த மனைகளைத் தேர்ந்தெடுப்பது, வீட்டிற்குத் திட்டமிடுதல் முதற்கொண்டு அனைத்துத் தேவைகளையும் சிறந்த முறையில் அனுபவ ரீதியில் எழுதியுள்ளார் ஆசிரியர்.

சரியான மனைகள் வாங்குவது, தரமான பொருள்களை வாங்குவதன் அவசியம், கட்டடப் பொருட்களை கவனமாகப் பாதுகாத்தல், சிக்கனம், அரசிடம் விண்ணப்பித்தல், கட்டடத் தொழிலாளர்களைப் பயன்படுத்திக் கொள்ளும் விதம் முதலான யோசனைகளை ஆசிரியர் வழங்குகிறார்.

வீடு கட்ட முனைவோர் அனைவரும் அவசியம் படிக்க வேண்டிய நூல்.

—என். இளங்கோ.

### முதல் உலகத் தமிழர் மாநாட்டு மலர்-1990 (கோலாலம்பூர்)

**வெளியீடு:**

உலகத் தமிழர் மாமன்றம்
20, ஐந்தாம் தெரு, லேக் ஏரியா,
நுங்கம்பாக்கம், சென்னை-600 034.

விலை:ரூ. பக்கம்:274

**கோ**லாலம்பூரில், கடந்த ஆண்டு டிசம்பர் திங்கள் நடந்த முதல் உலகத் தமிழர் மாநாட்டையொட்டி வெளியிடப்பட்ட கண்கவர் சிறப்பு மலர் இது.

அறிவியலின் அசுர வேகத்தைச் சித்திரிக்கும் வண்ண முகப்பு அருமை.

மலர் முழுவதும் பல்சுவைக் கட்டுரைகள் மணம் வீசுகின்றன. தித்திக்கும் தேன் கவிதைகள் கருத்தைக் கவர்கின்றன. தமிழின் தொன்மையும் சிறப்பும் பல கட்டுரை, கவிதைகளில் மிளிர்கின்றன.

பாவேந்தர் பாட்டோவியங்கள் கண்ணையும் கருத்தையும் கவரும் காட்சிகளாகும்.

தமிழ் இலக்கியக் காட்சிகள், ஆய்வுக் கட்டுரைகள் எல்லாம் படிப்போர் சிந்தனைக்கு விருந்தூட்டுவனவாகும். செய்திகள் தொகுப்பு, அச்சு அமைப்பு அனைத்தும் அழகுற அமைந்துள்ளன. மலர்க் குழுவினரைப் பாராட்ட வேண்டும்.

மொத்தத்தில் இது ஒரு தமிழ்க் கலைக் களஞ்சியம்.

—பி.வி. கிரி





# மதுரை மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

**ம**துரை மாவட்டத்தில் அரசின் நலத்திட்ட உதவிகளும், வளர்ச்சிப் பணிகளும் விரைவாக நடைபெற்று வருகின்றன

ஆதிதிராவிடர்களுக்கு, ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் 2,300 கான்கிரீட் குழும வீடுகளைக் கட்டித்தர அரசு குறியீடு நிர்ணயித்ததில், இதுவரை 2,280 குழும வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு ஆதிதிராவிடர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 20 குழும வீடுகள் மார்ச் மாதத்திற்குள் கட்டி முடிக்கப்படும்.

தமிழ்நாட்டிற்கு மேலும் கூடுதலாக 8,000 குழும வீடுகள் ஒதுக்கீடு செய்ததில், மதுரை மாவட்டத்திற்கு மட்டும் 1,000 குழும வீடுகள் கட்ட அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த 1,000 குழும வீடுகள் கட்டும் பணி மிக விரைவாக நடைபெற்று வருகிறது. தலா ரூ.65 ஆயிரம் வீதம் மதுரை மாவட்டத்தில் 102 ஊராட்சி மன்றக் கட்டடங்கள் கட்டுவதற்கு அரசு ரூ.66 இலட்சத்து30 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்ததில் 102 ஊராட்சி மன்றக் கட்டடங்களும் கட்டி முடிக்கப்பட்டு விட்டன

இதேபோல் ஒவ்வொரு பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்கும் ரூ.1 இலட்சத்து 25 ஆயிரம் வீதம் 18 பள்ளிக் கட்டடங்கள் கட்ட ரூ.22 இலட்சத்து 50 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 17 பள்ளிக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன் மீதமுள்ள ஒரு பள்ளிக் கட்டடம் மேல்கூரை போடும் அளவிற்கு வேலைகள் முடிக்கப்பட்டுள்ளது. இக்கட்டடமும் மிக விரைவில் முடிக்கப்பட்டு விடும்.

இம்மாவட்டத்தில் 69 கி.மீ. தார்ச்சாலைகள் போடுவதற்காக அரசு குறியீடு நிர்ணயித்துள்ளது. 134 கி.மீ. தூரத்திற்குக் கல்சாலைகள் அமைக்க குறியீடு நிர்ணயித்ததில், 129 கி.மீ. தூரம் கல்சாலைகள் அமைக்கும் பணி முடிவடைந்து விட்டது. மேலும் இம்மாவட்டத்தில் உள்ள ஆதிதிராவிடர்கள் விவசாயம் செய்வதற்கு ஜீவன்தாரா திட்டத்தில் 100 கிணறுகள் வெட்டுவதற்கு ரூ.40 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன. சிறுபாசனத் திட்டத்திற்கு ரூ.140 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன் மேலும் 37.5 இலட்சம் செலவில் 35 கசிவு நீர்க்குட்டைகள் அமைக்கும் பணி நடைபெறுகிறது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 8,400 நபர்களுக்குக் கடன் வழங்கக் குறியீடு நிர்ணயித்ததில் 9,409 நபர்களுக்கு மானியத்துடன் கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 600 பேர்களுக்கு மானியத்துடன் கூடிய கடன் இந்த மாதம் இறுதிக்குள் கொடுக்கப்படும். சாண எரிவாயுத் திட்டத்தில் 450 பேர்களுக்குக் குறியீடு நிர்ணயித்ததில் 400 பேர்களுக்கு மானியத்துடன் சாண எரிவாயுக் கலன்கள் அமைக்கப்பட்டு விட்டன. சமூகக்காடு வளர்ப்புத் திட்டத்தில்ரூ.50இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மதுரை மாவட்டத்தில் மின்னல் வேகத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகளைப் பார்வையிடுவதற்காகப் பெரியகுளம் கோட்டத்திற்கு மதுரையிலிருந்து செய்தியாளர் குழு சென்றது. வீரபாண்டிக் கிராமத்தில் சிறப்பான முறையில் நடைபெற்று வரும் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் சங்கத்தில் முதற்கட்டமாக 19 ஆதிதிராவிடர்களுக்குத் தலா ரூ.3,200 வீதம் ரூ.60,800 கடன் கொடுக்கப்பட்டு, பால்மாடுகள் வாங்கப்பட்டுள்ளன. இதில் ரூ.30,400 மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இந்தச் சங்கத்தில் 196 உறுப்பினர்கள் உள்ளார்கள். நாள் ஒன்றுக்கு



பொன்னாடையும், பொற்கிழியும் வழங்கப்பட்ட மறுநாளில் எடுக்கப்பட்ட படம். பாவேந்தருடன், பேரறிஞர் அண்ணா, என்.வி. நடராசன், டி.வி. நாராயணசாமி மற்றும் பல நண்பர்கள் உள்ளனர்.

முதலிலே நில் என்னும் பொருளில் 'முனையிலே முகத்து நில்' என்று எழுதியுள்ளார்- என்பதாகக் கவிஞர் ஒரு கருத்து வெளியிட்டார். இந்தக் கருத்துஎனக்குப்பிடித்தமாக இல்லை.

அப்போது கவிஞர் வீட்டிற்கு நான்அடிக்கடி சென்று கொண்டிருந்தேன். ஒரு நாள் இந்தக் கருத்தைக் குறிப்பிட்டுக் கவிஞரிடம் பின் வருமாறு கூறினேன்:-

அந்தக் காலத்தில் தமிழ்நாட்டில் சிறுசிறு பகுதிகட்கெல்லாம் அரசர்கள் இருந்து தமக்குள் அடிக்கடி போர் செய்து கொண்டிருந்தனர். நாட்டில் நிகழ்ந்த பல்வேறு போர்க் கொடுமைகளைக் கண்டு வருந்திய அன்னை ஔவையார் உலகில் இப்போரே கூடாது எனப்பட்டறிவின் வாயிலாகத் தமது அறிவுரையை உலகத்தாருக்கு வழங்கினார். மேலும், ஔவையார் அதே ஆத்திசூடி நூலில் மற்றோரிடத்தில், உலகத்தில் போரே நடக்கக் கூடாது என்னும் பொருளில் 'போர்த்தொழில் புரியேல்' என்று கூறிவைத்துள்ளார். இதற்கும் ஏட்டிக்குப் போட்டியாகப் பாரதியார் தமது புதிய ஆத்திசூடி நூலில் 'போர்த் தொழில் பழகு' என்று எழுதிவைத்துள்ளார். ஆனால், பாரதியாரின் பாடலுக்கு ஒரு வகையான வழுவமைதி கூறலாம்.

ஆங்கிலேயர்கள் இந்தியாவை அடிமைப்படுத்தி ஆண்டு கொண்டிருந்த காலத்தில், இந்திய மக்களுட் பலர் அவர்களை எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்தனர். அவ் விடுதலை வீரர்களுள் பாரதியாரும் ஒருவர். எனவே, இந்திய மக்கட்கு வீர உணர்வை ஊட்டுவதற்காக, அவர், 'முனையிலே முகத்து நில், 'போர்த் தொழில் பழகு' என்னும் புரட்சிக் கருத்தை வீசியிருக்கலாம். இது காலச் சூழ்நிலைக்கு ஏற்பக் கூறப்பட்டிருக்கலாம்.

எனவே, ஔவையாருக்கும் நூற்றுக்கு நூறு மதிப்பெண் தர வேண்டும்; பாரதியாருக்கும் நூற்றுக்கு நூறு மதிப்பெண் தரவேண்டும். ஆனால், போர்த்தொழில் புரிவது இந்தக் காலத்திற்கு ஏலாதது; இந்தக் காலத்துக்கு ஔவையார் கூற்றே பொருந்தும் - என்று கவிஞரிடம் துணிந்து கூறினேன். ஈண்டு, கவிஞரின் படைப்பாகிய

புதியதோர் உலகம் செய்வோம்- கெட்ட
போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்'

(பாரதிதாசன் கவிதைகள்- முதல்தொகுதி) என்னும் பாடல் பகுதி ஒப்பு நோக்கத்தக்கது.

நான் கூறியதை அமைதியாகவும் வியப்புடனும் கேட்டுக் கொண்டிருந்த கவிஞர் பின்வருமாறு கூறி என்னை மடக்கி விட்டார்:

போர் கூடாதுதான். ஔவையார் கூறியிருப்பதும் ஒரு வகையில் சரிதான். ஆனால் ஔவையாரின் கூற்று இந்தக் காலத்திற்குப் பொருந்தாது. ஏனெனில், நாம் தமிழ் நாட்டில் வீழ்ந்து கிடக்கின்ற தமிழை மீட்க வேண்டும் - சாதி மதப் பூசல்களை வெல்ல வேண்டும் - அதற்காக நம் மக்கட்கு மற உணர்வு ஊட்டப்பட வேண்டும். அந்தப் பணிக்கு உறுதுணையாக நாம் பாரதியாரின் பாடல்களைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்-என்று கவிஞர் கூறினார். நான் ஏற்றுக் கொண்டவன் போல் வாய் பேசாது இருந்து விட்டேன்.

(— 'பாரதிதாசரொடு பல ஆண்டுகள்' என்ற நூலிலிருந்து.)

★ தீண்டாமை, மதத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டது அல்ல; பொருளாதாரத்தையும் அடிப்படையாகக் கொண்டது; இது அடிமைத்தனத்தைவிட மிக மோசமானது!

—டாக்டர் அம்பேத்கர்



திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில்



# மீன் வளர்ச்சி - மீனவர் மேம்பாடு

பொதுமக்களின் மீன் உணவு தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டும் உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்காகவும், வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் பொருளாதார நிலையை உயர்த்துவதற்காகவும் தீவிர நடவடிக்கை எடுக்கும் நோக்கத்துடன், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை 10.12.1980 முதல் திருநெல்வேலியில் தொடங்கப்பட்டது. இம்முகமையின் பணிகள் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் மற்றும் சிதம்பரனார் மாவட்டம் ஆகியவற்றில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மீன்வளர்ப்பிற்குத் தகுதியான நீர்நிலைகளைச் சீரமைப்புச் செய்து மீன் உற்பத்திக்கான அதிகப் பட்ச அளவு நீர்ப்பரப்பினைத் தயார் செய்தல்; மீன்வளர்ப்பில் நவீன தொழில் நுட்ப முறைகளைக் கடைப்பிடித்து உள்நாட்டு மீன் உற்பத்தியினை அதிகரித்து பொதுமக்களின் மீன் உணவுத் தேவையினைப் பூர்த்தி செய்தல்; செயல்முறைகளை தீவிரப் படுத்துவதன் மூலம் மேன்மேலும் அதிக அளவு நீர்ப்பரப்பினை மீன் வளர்ப்பிற்குக் கொண்டு வருதல்; மீன் வளர்ப்பதற்கு முன்வரும் நபர்களுக்கு நவீன தொழில் நுட்ப முறைகளில் பயிற்சி அளித்து, மீன் வளர்ப்பினால் ஏற்படும் வேலைவாய்ப்பினை அதிகப்படுத்தி, அதன்மூலம் புறநகர் வாழ் மக்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகளை ஏற்படுத்துதல் ஆகியவை இம்முகமையின் குறிக்கோள்களாகும்.

திருநெல்வேலி, சிதம்பரனார் மாவட்டங்களிலுள்ள நீர்நிலைகளில் மீன் வளர்ப்பிற்குத் தகுதி வாய்ந்தவை எவை என்பது பற்றி அளவாய்வு செய்யப்படுகிறது. தேர்வு செய்யப்பட்ட நீர்நிலைகள், சம்பந்தப்பட்ட உரிமையாளர்களிடமிருந்து (வருவாய்த்துறை, பஞ்சாயத்து, நகராட்சி, அறநிலையத்துறை மற்றும் தனியார்) நீண்டகால குத்தகைக்கு (10 ஆண்டுகள்) முகமையின் கீழ் முதல் கட்டமாக எடுக்கப்படுகிறது. மீன் வளர்ப்பினை மேற்கொள்ளுவதற்காக விண்ணப்பித்துள்ள நபர்களில் தகுதியானவர்கள் துணைக் குழுவின் மூலம் தேர்ந்து எடுக்கப்படுகின்றனர். ஒரு எக்டேர் நீர்ப் பரப்பளவுள்ள குளம் ஒரு நபருக்கு ஒதுக்கப்படுகிறது. அதற்கு மேல் உள்ள நீர்ப்பரப்பிற்கு ஏற்றவாறு மீன்வளர்ப்போர் எண்ணிக்கையும் உயர்த்தப்பட்டு நீர்நிலைகள் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட மீன்வளர்ப்போருக்கு மீன் குஞ்சுகளை இருப்பு செய்வதற்கு ஏற்றவாறு குளங்களைத் தயார் செய்தல், உரமிடுதல், மீன்குஞ்சுகளை இருப்பு செய்தல், உணவு இடுதல் மற்றும் இனம் சம்பந்தமாக முறைகள் பற்றிய பயிற்சி அளிக்கப்படுகிறது. குளங்கள் தயார் செய்யப்

**ஆர்.எஸ்.இராஜன்**
முதன்மை நிர்வாக அலுவலர்,
மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை,
திருநெல்வேலி.






170246



# முனையிலே முகத்து நில்

டாக்டர் சுந்தரசண்முகனார்

**1948** அல்லது 1949-ஆம் ஆண்டாயிருக்கலாம் என எண்ணுகிறேன். புதுவையில், முன்பு 'டுப்ளே தெரு' என்று பெயர் வழங்கப்பட்டதும் இப்போது 'நேருவீதி' என்று பெயர் வழங்கப்படுவதுமாகிய சிறப்புறு கடைவீதியின் மையத்தே 'கெப்ளே தியேட்டர்' என்னும் ஓர் அரங்கம் இருந்தது. அதில், மேடை நாடகம், திரையோவியம், சொற்பொழிவு முதலியவை இடம்பெற்று வந்தன.

ஒரு நாள் அந்த அரங்கத்தில் நடைபெற்ற இலக்கியக் கூட்டத்திற்குப் பாவேந்தர் தலைமை தாங்கிச் சொற்பொழிலாற்றினார். அவர் அங்கே கூறிய கருத்துகளுள் ஒன்றை மட்டும் இங்கே குறிப்பிடுகிறேன்:

ஔவையார் தம் 'ஆத்திசூடி' என்னும் நூலில், போர்க்களத்தில் சென்று நிற்காதே என்னும் பொருளில் 'முனை முகத்து நில்லேல்' என்று எழுதி வைத்துள்ளார். இது எவ்வாறு பொருந்தும்? புதுச்சேரியில் சண்டை நடந்தால் நான் திண்டிவனத்துக்கு ஓடி விடுவதா? ஔவையார் கூறியிருப்பது கோழைத் தனத்துக்கு இட்ட வித்தாகும். அதனால், சுப்பிரமணிய பாரதியார் தமது 'புதிய ஆத்திசூடி' என்னும் நூலில் போர்க்களத்திலே போய்

## முத்தமிழிலும் வல்லவர்

ஒரு சிலருக்கு எழுத்தாற்றல் இருக்கும்- ஒரு சிலருக்குச் சொல்லாற்றல் மாத்திரம் இருக்கும்- எழுதும் வன்மை, சொல்லும் வன்மை இரண்டும் அமையப் பெற்றவர் எங்களாசிரியர் பாரதிதாசனார். கவி எழுதுவதற்கும் பாவேந்தரிடமே நாங்கள் கற்றுக் கொண்டோம்; ஒரே முறையில் ''தமிழ் பிரவே'' தேர்வில் பெரும் பாலோர் வெற்றி பெற்றோம். பின்னர், ஆசிரியர் பயிற்சிக்கும், வகுப்பில் பாடங்கள் நடத்தும் முறைகளையும் நாளடைவில் எங்களுக்குக் கற்றுக் கொடுத்து வந்தார். பிரஞ்சு அரசு நடத்திய ஆசிரியர் பணித் தேர்வில் முதல் முறையிலேயே வெற்றி பெற்று நான் ஆசிரியர் பணியில் அமர்ந்தேன்; அவர் மறைவு வரையில் மாதத்தில் ஒரு முறையாவது அவரைப் போய்ப் பார்க்காமல் இருந்ததில்லை. அதன் பிறகும் கூட நான் அவர் குடும்பத்தவரைப் பார்க்காமலிருந்ததில்லை!

ரெட்டியார்பாளையம் எழேன் சரவானும், பாரதிதாசனாரும் சிறந்த நண்பர்கள். எழேன் சரவான் ''பாரத மாதா'' பத்திரிகை நடத்தி வந்தார். அதற்குப் பாரதிதாசனார் பாடல்கள் எழுதிக் கொடுத்தார். ஒருமுறை ஆயுதபூசையின்போது, ரெட்டியார்பாளையம், ''அன்னை நிலையம்'' பள்ளியில், ''கொய்யாக் கனி'' நாடகத்தை, பொன்னு தெலாபோன், பிரஞ்சு பேராசிரியர் லாம்பர் சரவான் தலைமையில் நடத்தினார். சந்தனசாமியும் அதில் நடித்தார். அந்நாடகத்திற்குப் பாவேந்தர் எழுதிய பாடல்களில் ஒன்று பின்வருமாறு தொடங்கியது:

''கண்டதும் காதல் கொண்டேனே-
இனியானே, பெருமானே,
கெண்டை தானோ விழிகள்!
கற்கண்டு தானோ சொற்கள்!
இனியானே , நான் சகியேனே,
பூமானே!''

பாரதிதாசனார் சிறந்த நாடக ஆசிரியராகவும் இருந்தார்- கல்வித் துறைத் தலைவர் போல் எழா செலேன் அவர்கள் தன் குடும்பத்துடன் அந்த நாடகத்தைக் காண வந்தார்.

புதுவை, கல்விக் கழகத் தலைவர், இரா.தேசிகப் பிள்ளை அவர்களுடனும் பாரதிதாசனார் நெருங்கிய நண்பராக இருந்தார். இவ்வாறு, பாவேந்தர், இயல், இசை, நாடகம், முத்தமிழிலும் வல்லவராகவும், நல்லாசிரியராகவும் சிறந்து விளங்கினார். திரைப்படத் துறையில், பி.ஜி.வேங்கடேசனுக்கும், மங்களத் திற்கும் பாடல்கள் எழுதக் கற்றுக் கொடுத்தார். பாரதிதாசனார் புகழ் வளர்க! வாழ்க!

—புலவர் பால.எல்லப்பிள்ளை

பட்ட பிறகு கலப்பு இன மீன் வளர்ப்பிற்காக கட்லா, ரோகு, மிர்கால் மற்றும் சாதாக்கெண்டை, வெள்ளிக்கெண்டை, புல்கெண்டை இன மீன்குஞ்சுகளை இருப்பு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. விரைவில் வளர்ச்சி அடையும் மேற்கண்ட இன மீன் குஞ்சுகள் முகமையின் மூலமாக வாங்கப்பட்டு ஒரு எக்டேருக்கு 5,000 மீன்குஞ்சுகள் வீதம் இருப்பு செய்யப்படுகிறது. பின்னர் மீன் குஞ்சுகள் போதுமான அளவு வளர்ச்சி அடைந்து விட்டனவா என்றும் உணவு மற்றும் உரம் இடும் முறையில் மாற்றம் ஏதாவது தேவையா என்பதை அறியவும் சோதனை மீன் பிடிப்பு பணி அவ்வப்போது மேற்கொள்ளப்படுகிறது.

ஒவ்வொரு மாதமும் இதன் வளர்ச்சி பற்றி அறியப்பட்டு விரிவாக்கப் பணி பார்க்கப்படுகிறது. 8 முதல் 10 மாதங்களானதும் மீன்களைப் பிடித்து விற்பனை செய்து மீன் வளர்ப்போருக்கும், பொது மக்களுக்கும் உணவுக்கு மீன் கிடைக்கவும் இம்முகமையின் மூலம் ஏற்பாடுகள் செய்யப்படுகிறது. இதன் மூலமாக மீன் வளர்ப்போருக்குச் சுயவேலைவாய்ப்பு அளிப்பதுடன் இலாபகரமான தொழிலுக்கு உதவுவதோடு, மீன் உற்பத்தியையும் ஒரு எக்டேருக்கு 1,000 கிலோ முதல் 1,500 கிலோ வரை பெருக்குவதற்கும் வழி வகுக்கப்படுகிறது. ஒரு எக்டேருக்கு 3,000 கிலோ மீன் உற்பத்தி என்ற உச்சநிலைக் குறியீட்டை அடைய குறிப்பிட்ட சில குளங்களைத் தேர்வு செய்து அதில் இம்முகமையின் நவீன திட்டங்களையும் தொழில் நுட்ப உதவிகளையும் செயல்படுத்தி ஏனைய மீன் வளர்ப்போருக்கு உதாரணமாகவும் ஆர்வத்தினைப் பெருக்குவதற்கும் முகமை செயலாற்றி வருகிறது. வங்கிகள் மூலமாக மீன்குஞ்சு கடன், மராமத்துக் கடன் முதலியவைகள் மீன் வளர்ப்போருக்கு கிடைக்க உதவி செய்வதன் மூலம் அவர்களின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தினையும் இம்முகமையின் மூலமாகச் செயல்பட்டு வருகிறது.

முகமையினால் தேர்வு செய்யப்பட்ட குளங்களுக்கு முகமையின் மூலம் விநியோகிக்கப்படும் உயர் தரப் பெருங்கெண்டை மீன்குஞ்சு



• நமக்குப் பிறர் என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறோமோ, அதையே நாமும் பிறருக்குச் செய்வோமாக!

—காந்தியடிகள்

களின் தொகையை ஒரு தேசிய வங்கி மூலம் உடனாக மீன் வளர்ப்போர் பெற இம்முகமை ஏற்பாடு செய்கிறது. இவ்வாறு மீன்குஞ்சுகள் வாங்குவதற்காகவும் உரம் மற்றும் உணவு வாங்குவதற்காகவும் மீன் வளர்ப்போர் பெறும் உள்ளீட்டு கடனில் முதல் ஆண்டிற்கு மட்டும் 25 சதவிகிதம் மானியம் முகமையினால் வழங்கப்படுகிறது. இது போன்று குளத்தை மேம்படுத்தவும் மராமத்து பணி பார்க்கவும் செலவிடப்படும் தொகைக்கு முதல் ஆண்டிற்கு மட்டும் 25 சதவிகிதம் மானியம் வழங்கப்படுகிறது.

கடந்த 1990-91-ஆம் ஆண்டில் இம்முகமையின் திட்டத்தின் கீழ் 234.05 எக்டேர் பரப்பளவுள்ள 92 குளங்களில் 14,45,100 உயர் தரக் கெண்டை மீன்குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டுள்ளன. மேற்படி ஆண்டில் 1,87,380.650 கிலோ மீன்கள் பிடிக்கப்பட்டு ரூ.10,52,659.55-க்கு மீன்வளர்ப்போர் அதனை விற்றுப் பயனடைந்துள்ளனர்.

இதுவரை இம்முகமையின் திட்டத்தினால் 306.38 எக்டேர் பரப்பளவுக்கு 131 குளங்கள் மீன் வளர்ப்பிற்காக மீன் வளர்ப்போருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 347 நபர்களுக்கு மீன்வளர்ப்பு பற்றிய குறுகிய காலப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

1980-81-ஆம் ஆண்டிலிருந்து 1990-91-ஆம் ஆண்டு வரை 94,55,775 உயர்தர மீன்குஞ்சுகள் குளங்களில் இருப்பு செய்யப்பட்டு வளர்த்து ரூ.55,45,982.40 மதிப்புடைய 12,60,905.800 கிலோ மீன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

இவ்வகையில் ரூ.75,853.00 உள்ளீட்டு மானியத் தொகையாக இம்முகமையினால் மீன் வளர்ப்போருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதுநாள்வரை 106.38 எக்டேர் பரப்பளவு உள்ள 43 குளங்களில் மராமத்து பணி பார்க்கப்பட்டு அதற்காக ரூ.21,473.00 மானியம் வழங்கப்பட்டுள்ளது.

மாவட்டத்திலுள்ள முகமைக் குளங்களுக்கு விரலளவு மீன்குஞ்சுகள் பொதுவாக பல்வேறு இடங்களிலிருந்து வாங்கப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகிறது. வளர்ந்துவரும் இம்முகமைத் திட்டத்திற்கு ஈடு செய்யவும், பிற நிலையங்களிலிருந்து வாங்கப்படும் தேவையை இயன்ற அளவு தவிர்க்கவும் இம்முகமையின் மூலமாக மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்து, வளர்த்து, தரமுள்ள விரல் அளவு மீன்குஞ்சுகளை மீன் வளர்ப்போருக்கு விநியோகிக்கும் வகையில் ரூ.5.01 இலட்சம் மீன் பண்ணை ஒன்று தேசிய புறநகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் அரசால் மானியத்துடன் அனுமதிக்கப்பட்டு இம்மாவட்டத்திலிருக்கும் மணிமுத்தாறில் கட்டப்பட்டுள்ளது. இதன்படி 16 நாற்றங்கால்கள், ஒரு பம்ப் அறை, ஒரு பண்டக அறை அம்பை ஊராட்சி மூலமாக கட்டப்பட்டு மீன்குஞ்சு வளர்ப்பு பணி 10.9.85 முதல் நடைபெற்று வருகிறது.

1990-91-ஆம் ஆண்டில் அரசின் குறியீடான 55 இலட்சம் நுண்மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு சாதனை புரியப்பட்டுள்ளது. இதன் மூலம் 6,05,000 விரலளவு மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு மீன் வளர்ப்போர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

**நுண்மீன்குஞ்சுகள் வளர்த்தல்**

இத்திட்டத்தின்படி மீன் வளர்ப்போர் மீன்குஞ்சு வளர்ப்பு பற்றி அறிந்து செயல்பட்டு மிதவைக் கூடுகள் மூலமாக அதனை வளர்த்து மீன்குஞ்சுகளை விற்று இலாபம் சம்பாதிக்கும் பொருட்டு இம்முகமை மீன்வளர்ப்போருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 5 மீன்வளர்ப்போர் பயனடைந்து உள்ளார்கள். ஒவ்வொருவருக்கும் மானிய விலையில் 5 மிதவைக் கூடுகள் வழங்கப்பட்டுள்ளன. ●





# பேராசிரியர் டாக்டர் மா. சேசையா

பாவேந்தர் பாரதிதாசன் பாரதியாரின் கவிதா மண்டலத்தைச் சார்ந்தவர். பாரதி அடிமைப்பட்ட நாட்டின் விடுதலைக்காகப் பாடினார் என்றால், பாரதிதாசன் நாட்டு மக்களின் பொருளாதார அரசியல் விடுதலைக்காகப் பாட்டிசைத்தார். பாரதி 'எளிய பதங்கள் எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய சந்தம் பொதுஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றையுடைய காவியம் ஒன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய் மொழிக்குப் புதிய உயிர் தருகின்றான்' என்று கூறி, பைந்தமிழ் நாட்டிற்குப் 'பாஞ்சாலி சபதம்' தந்தான். அதைப் பின்பற்றி பாரதிதாசனும் 'பாண்டியன் பரிசை'த் தந்தார். தன் குருநாதன் பாரதி கூறிய இலக்கணத்திற்கு ஓர் இலக்கியமாக இருக்குமாறு செய்துள்ளார். தமது 'பாண்டியன் பரிசை'. தம் கற்பனையில் முகிழ்த்து எழுந்த ஒரு கதைக் கருவை அடிப்படையாகக் கொண்டு தமிழ் மரபிற்கு ஒரு சிறிதும் முரணாகாவாறு இக்காவியத்தை ஏறக்குறைய நானூறு எண்சீர் விருத்தங்களால் ஆக்கியுள்ளார்.

'பாண்டியன் பரிசை'ப் படிக்கின்றபொழுது நாம் இன்றைய தமிழ் உலகை மறந்து பழந்தமிழ் உலகில் உலவித்திரியும் உணர்வு ஏற்படுகின்றது. அதோடு, தமிழ்க் காவியம் ஒன்றை இத்துணை எளிமையான சொற்களால் ஏற்றமுடன் நடத்திச் செல்கிறாரே பாவேந்தர் என்ற பெருமகிழ்வும் ஏற்படுகின்றது. பாவேந்தரே தன் முன்னுரையில் "தொடக்கப் படிப்பினரும் புரிந்து கொண்டார்கள் இச்செய்யுளின் பொருளை எனின் - அது தான் எனக்கு மகிழ்ச்சியூட்டுவது" என்று தமது எண்ணத்தை வெளிப்படுத்தியுள்ளார். அவ்வெண்ணம் முற்ற முடிய ஈடேறியது என்றால் அது மிகையல்ல.

ஆனால், அதேசமயத்தில் எளிய கவிதை என்று கூறி 'குழந்தைக் கவிதை' செய்துள்ளாரா என்றால் இல்லை, இல்லை, முக்காலும் இல்லை. பாவேந்தரின் சொற்களைப் பாலர்களும் புரிந்து கொள்வர். ஆனால், கூறவந்த பொருளை பூரணமாகக்கூறும் கூரிய சொற்கள் அவர்தம் சொற்கள். வெறும் உண்மையை மட்டும் அலப்பிக்கொட்டும் வெற்றுச் சொற்கள் அல்ல, மாறாக இதயத்தில் ஈட்டி போல் பாயும் ஏற்றமிகு எளிய சொற்கள். உணர்ச்சியைக்கொட்டி நம்மை காவியக் கோபுரத்தின் உச்சிக்குக் கொண்டு வைக்கும் ஒப்பற்ற சொற்கள். அறிஞர் ஜோவ்பர்ட் கூறுவது போல கவிதையில் வரும் ஒவ்வொரு சொல்லும் சுருதிகூட்டிய யாழின் நரம்பைச் சுண்டியவுடனே அதினின்றும் துள்ளியெழும் சுநாதம் போல் எழ வேண்டும். அப்படி எழும் பண்ணொலியில் பல்வேறு அதிர்வுகள் உதிரும். அதுபோல் கவிதைச் சொல் ஒவ்வொன்றிலும் பல்வேறு அதிர்வுகள் பாய்ந்து எழும்.

பாரதிதாசனிடம் மற்றொரு சிறப்பு, எதுகை, மோனை, இயைபு நயங்கள் உள்ள சொற்கள் அவரை அறியாமலேயே ஓடி வந்து அவர்தம் கவிதையில் உட்கார்ந்து கொள்ளுகின்றன. வேலன் பேழை தூக்கி வரும்போது அன்னம் இறந்த செய்தி கேட்டு அலறுகிறான் அப்போது,

பொய்யாத பாண்டியனார் பரிசை, உண்மை புலப்படுத்தும் பட்டயத்தைக் கொண்டு வந்து



வையாயோ என்றாயே வஞ்சி, தூக்கி வந்தேனே செந்தேனே எனக் கேன் பேழை" என்று அலறுகின்றான். அவ்வாறு அரற்றுகின்ற போது 'வந்தேனே', என்ற சொல்லுக் கருத்து எதுகை நயமும் இயைபும் கொண்டு, எளிய ஆனால் மிகப் பொருத்தமான மற்றொரு சொல் 'செந்தேனே' என்று வந்து விழுகிறது. 'வந்தேனே' என்பது வினைச் சொல். 'செந்தேனே' என்பது பெயர்ச் சொல். ஆனால் கவிதையில் இரண்டும் தம் 'வினை' 'பெயர்' நிலை ஒழித்து ஒரு தன்மைப்பட்டு ஒன்றிக் கலந்து இன்னொலி எழுப்பி நிற்கின்றன, கதைத் தலைவன், தலைவியரைப் போல.

அடுத்து கதைக்கு இன்றியமையாதது 'உணர்ச்சி'. உணர்ச்சிஅற்ற ஒன்றைக் கவிதை என்று கூறாது, வெறும் சொற்கூடு என்று சொல்ல முடியும். கவிதை உணர்ச்சிக் களஞ்சியம்; கவிதை உணர்ச்சியின் நிலைக்களம், வற்றாது ஓடி வளம் பெருக்கும் கங்கை போல் குன்றாது உணர்ச்சியைக் கொட்டி இதய நிலத்தை வளப்படுத்தும் இறவா ஆறு தான் கவிதை. நீரில்லா ஆற்றை நாம் மதியாதது போல், உணர்ச்சியற்ற கவிதையை மதிக்க இயலாது.

பாரதிதாசனின் 'பரிசில்' உணர்ச்சிக்குப் பஞ்சமேது. பக்கத்திற்குப் பக்கம் உணர்ச்சி கடலெனப் பொங்கிக்காட்டாறென ஓடி இதயத்தில் கரைகட்டிய நதியெனப் பாய்கிறது.

'ஒரு பானைச் சோற்றுக்கு ஒன்று பதம்' என்பது போல ஒன்று சுவைப்போம். வேலன் அரற்றுகிறான்-கேளுங்கள். "வெண்ணிலவை எட்டிவிட்டேன் என்றிருந்தேன், விண்ணின்று வீழ்ந்தேனே! தென்றல் காற்றின் பண்ணமைந்த தமிழ்ப் பொதிகை எனக்கே என்றேன். பாழ்ங்கிணற்றில் தூக்கி எறியப் பெற்றேனே, திண்ணெனவே இழந்தேனே! பசியைப் போக்கத் திரட்டியமுப் பழச்சாறே! என்னை விட்டு மண்ணடைந்தாய்! திருவிளக்கே இந்த வையகம் மடியவில்லை எனில் எனக்கிங் கென்ன வேலை" இவ்வாறு உணர்ச்சி குமுறி எழுந்து கொந்தளித்துப் பாயும் கொஞ்சு தமிழ்ச் செய்யுட்கள் மலிந்த காவியம்' இக்காவியம்.

அடுத்து, கவிதைக்கு அணி செய்வது அணியாகும். அணிகளுக் கெல்லாம் ஆதித்தாய் உவமை யாகும். இதனை, நம் புரட்சிக் கவி நயமுடன் பலவிடங்களில் கையாண் டுள்ளார். சில புதுமை வழியும் பொன்னான உவமைகளையும் கையாண்டுள்ளார்.

கிழவி 'ஆத்தாவும்' அவள் மகன் வீரப்பனும் வறுமையுற்ற போதும் இணைபிரியா திருந்தனர் என் பதைக்கூற வந்த நம் கவி வேந்தர் 'தேனடையும் ஈயும்போல் மகனும் தானும் வறுமையினும் செம்மை யினைக் காண்பா ராகி'' என்கிறார். தாய்க்கும் சேய்க்கும் தேனடையும் ஈயும் முறையே உவமையாகக் கூறப் படுகிறது. தேனடையும் ஈயும் என்பது பிரியாத நிலைக்குச் சிறந்த உவமை யாவதோடு, 'தேனடை' நமக்கு 'இனிப்பை' - இனிமையை நினை வூட்டுகின்றது. தாயும் மகனும் பிரியாது இணைந்திருந்த நிலையைக் கூற இதனினும் சிறந்த உவமை வேறுண்டோ?

இவ்வண்ணம், தம் குருநாதன் பாரதி எழுப்பிய குரலுக்குச் செவி சாய்த்து எழிற்காவியமாக இதனைப் படைத்து, தமிழறிந்த அனைவரும் படித்து மகிழும்படி செய்துள்ளார் கவிவேந்தர் பாரதிதாசன்.

''எளியநடை ஒன்றாலேயே'' தமிழின் மேன்மையை - தமிழின் பயனைத் தமிழர்க்கு ஆக்க முடியும் என்பது என் அசைக்க முடியாத நம்பிக்கை'' என்று முன்னுரையில் எக்காளமிடும் பாவேந்தர் அதில் அரிய வெற்றி கண்டுள்ளார் என் றால் அது மிகையாகாது. பழமை யைப் போற்றி, புதுமையைப் புகுத் திய புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எப்பொருளையும் ஏற்றமிகு எளிய சொல்வழி எடுத்துரைக்கும் ஏந்தல் பாரதிதாசன். பொங்கும் இன்பத் தமிழால் தமிழனின் பூட்டிய நெஞ்சக் கதவை உடைத்துத் திறந்த பொற் புடைக் கவிஞன் பாரதிதாசன். பைந் தமிழ் வழி பாங்கான கவிதை செய்து பாரெல்லாம் போற்ற வாழும் பாவேந்தர் பாரதிதாசன். பாண்டியன் பரிசை நமக்குத் தந்த பாவலர் தலைவன் பாரதிதாசன்.

வாழ்க! பாவேந்தர். ●



## கவிதை மலர்கள்



### புதுவைக் குயில்!

—கவிஞர் முருகுவண்ணன்

பாரதியார் கண்ட புதுவைக்குயில்!-நான்கு
பாவும் விரித்த பைந் தோகைமயில்!
பாரதி தாசன் நீ புரட்சிக் கனல்!-நாட்டில்
பாய்ந்த தன் மானக் கவிதைப் புனல்!

பாரதி தாசன்நின் கவிதை எலாம்-கமழ்
பைந்தமிழ்ப் பூம்பொழில்; தேனமுதம்!
பாரதி தாசன்நின் பாடல் எலாம்-தமிழ்ப்,
பண்பாட்டு வானின் 'இசையமுதம்!

### குடும்ப விளக்கை ஏற்றியவன்!

—கவிஞர் பூங்கோவன்

கொஞ்சும் தமிழைப் போற்றியவன் - நல்ல
குடும்ப விளக்கை ஏற்றியவன்!
அஞ்சும் தமிழரை மாற்றியவன்-பெண்
அடிமைத் தனத்தைத் தூற்றியவன்!

செந்தமிழ்த் தேனீயாய்க் கற்றியவன்-என்றும்
சீர்மிகுங் கொள்கையைப் பற்றியவன்!
சிந்தனை வளரத் தூண்டியவன்;-தமிழர்
சேர்ந்து வாழ்ந்திட வேண்டியவன்!

### தமிழின் சுவைக்கீடோ?

—புலவர் இரா.சுப்பிரமணியன்

குயில்பாட்டும், கோல மயில்பாட்டும், திங்கள்
வெயில்பாட்டும், விண்மீன்கள் பாட்டும்-
மயல்காட்டும்
கன்னித் தமிழ்வாய், கனிவாய், துணிவாயாம்
பன்மொழிவாய் பாவேந்தர் வாய்!

கனிச்சுவையும் முற்றல் கழைச்சுவையும் பாலின்
தனிச்சுவையும் தேனின் சுவையும்-இனிதெனினும்
எந்தம் தமிழின் சுவைக்கீடோ? பாவேந்தர்
தந்தபா வுக்கெப்பா நேர்.

# கலப்படமும் நுகர்வோர் விழிப்புணர்வும்

கே.மலைச்சாமி இ.ஆ.ப.
ஆணையாளர்,
உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை

நம்மில் பலரும், கலப்படத்தைப் பற்றிக் கவலையுடன் பேசிக் கொள்கிறோம். உணவுப் பொருட்களில் கலப்படம், கட்டடப் பொருட்களில் கலப்படம், பெட்ரோல், டீசலில் கலப்படம் என்று எந்தப் பொருளை எடுத்தாலும் கலப்படம் செய்து கொள்ளை லாபம் அடித்து குறுகிய காலத்தில் பெரும் பணம் சம்பாதிப்பதையே குறிக்கோளாய் பல வியாபாரிகள் கொண்டுள்ளனர். இப்படிப்பட்ட பொருட்களை வாங்கி உபயோகிப்போர், கலப்படமா? இல்லையா? என்று பார்த்த அளவில் கண்டுபிடிக்காத வரையில், மிகவும் திறமையாகக் கலப்படம் செய்கின்றனர்.

அரிசியில் அரிசி போன்ற கல்லையும், நெய்யில் இதரக் கொழுப்புகளையும், தேனில் வெல்லப் பாகினையும், சமையல் எண்ணைகளில் விலை குறைந்த வாசனையற்ற ரப்பர் எண்ணெய் போன்றவற்றையும், துவரம் பருப்பில் கேசரி பருப்பையும் கலந்து விடுகின்றனர்.

இப்படிப்பட்ட கலப்படப் பொருட்களை உண்பவர்கள், உடல் ஊனம், கண்பார்வை இழப்பு, உடல் வாதம், மாரடைப்பு, இரத்த அழுத்தம் போன்ற நோய்களால் விரைவில் தாக்கப்படுகிறார்கள்.

கட்டடப் பொருட்களான சிமெண்டில் சாம்பல் அல்லது வேறுமாதிரியான களிமண் பொடி ஆகியவற்றைக் கலந்து விற்கிறார்கள். இதனால் கட்டப்படும் கட்டடம் என்ன ஆகும்? பெட்ரோலில் விலை குறைந்த டீசலையும், டீசலுடன் மண்ணெண்ணையும் கலக்கிறார்கள். இவற்றை உபயோகிப்பதால் வண்டிகள் கூடிய சீக்கிரம் பழுதடைந்து பெரிய பொருட் செலவை ஏற்படுத்தி விடுகின்றன.

இப்படிப்பட்ட கலப்படக் கொடுமைகளுக்கு முடிவு? இதனை ஒரு விழிப்புள்ள நுகர்வோர் இயக்கத்தினாலேயே முறியடிக்க முடியும். பல்வேறு நோய்களுக்கு மூலகாரணமே உணவுப் பொருட்களில் கலப்படம்தான் என்பது மக்களுக்குத் தெளிவுபடுத்தப்பட வேண்டும். இக்கலப்படக் கொடுமைகளைத் தவிர்ப்பதில் நுகர்வோரின் பணிதான் முதலில் ஆரம்பிக்கிறது. எந்தப் பொருளை வாங்கினாலும் அதன் தரத்தினை அறிந்த பிறகே வாங்குவது என்பதனை உறுதியாகக் கொள்ள வேண்டும்.

படித்த, நகர்ப்புற மக்களுக்கு இது சாத்தியமாகலாம். படிப்பறிவில்லாத மற்றும் கிராமப்புற மக்களின் நிலை? இங்குதான் பலதரப்பினரின் பணிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டியுள்ளது.

நுகர்வோர் நலனுக்காகச் செயல்படும் சமூகசேவை நிறுவனங்கள், கிராமங்களில் படிப்பறிவு குறைந்த மக்களிடையே சென்று, கலப்படக் கொடுமைகளைப்பற்றி பிரசாரம் செய்யவேண்டும். எப்படியெல்லாம் கலப்படம் செய்யப்படுகிறது? சில எளிய முறைகளால் எப்படி கலப்படத்தை கண்டுகொள்ளலாம்? என்பன போன்றவற்றை அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். தரத்திற்கும் கலப்படமின்மைக்கும், சுத்தத்திற்கும் உத்தரவாதம் அளிக்கும் ''அக்மார்க்'' முத்திரையிட்ட உணவுப் பொருட்களையும், ஐ.எஸ்.ஐ. முத்திரை கொண்ட இதர வீட்டு உபயோகப் பொருட்களையும், நுகர்வோர் வாங்கி உபயோகிக்க ஆரம்பித்தால், கலப்படப் பொருட்கள் சந்தைக்கு வருவது நின்று விடும். மேலும் விலை குறைவாக உள்ளது என்று தரமற்ற பொருட்களை நாடுவது தீராத துன்பத்திற்கு வழிவகுக்கும். அக்மார்க், ஐ.எஸ்.ஐ. முத்திரையுடன் போலிப் பொருட்கள் வராதா என்ற சந்தேகம் ஏற்படலாம். இப்படிப்பட்டவற்றை விற்றால் தண்டனை மிகவும் கடுமையானதாயிருக்கும் என்பது வியாபாரிக்குத் தெரியுமாதலால் கலப்படத்தின் அளவு நிச்சயம் குறைந்துவிடும்.

ஒரு பொருளில் கலப்படம் செய்யப்பட்டுள்ளதா இல்லையா என்பதனை உறுதியிட்டுக் கூற ஒரு ஆய்வுக் கூடத்தாலேயே முடியும். இப்படிப்பட்ட அரசு ஆய்வுக்கூடங்கள், சென்னையில் கிங் நிலையம் (கிண்டி), பாளையங்கோட்டை, மதுரை, தஞ்சாவூர், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் செயல்படுகின்றன. இவை சுகாதாரத் துறையின் கீழ் இயங்குகின்றன.

கலப்படமாக இருக்கலாம் என்று சந்தேகப்படும் பொருட்களை மாதிரி எடுத்து, இந்த ஆய்வுக்கூடங்களுக்கு அனுப்ப நுகர்வோருக்கே தற்போது அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. 1954-ஆம் ஆண்டின் உணவுக் கலப்படத் தடைச் சட்டத்தின் பிரிவு 12-ன்படி மாதிரிகளை எடுத்து அனுப்பவும், கலப்படம் செய்யப்பட்டுள்ள தாய் உறுதியானால், இச்சட்டம் பிரிவு

20ன்படி வணிகரின் மீது குற்ற வழக்கு தொடரவும் நுகர்வோருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த அதிகாரம் உள்ளது என்பது இன்னமும், நுகர்வோர் பலருக்குத் தெரியாததே கலப்படப் பேர்வழிகள் இன்னமும் அழிந்து போகாமல் இருப்பதற்குக் காரணமாகும்.

கலப்படம் பற்றி நுகர்வோரிடையே ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது என்ற நிலை ஏற்பட்டால், கலப்படக்காரர்களும் தரமான பொருட்களை விற்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடும்.

தரமான பொருட்கள் நுகர்வோருக்குக் கிடைக்கும் நோக்கில் அரிசி, நெல், கோதுமை, சோளம், கம்பு உள்ளிட்ட பல தானியங்கள், பயறுவகைகள், பருப்பு, சமையல் எண்ணெய்கள், தேயிலை, காப்பி பொடிகள், பால், தேன், நெய் போன்ற 30 அத்தியாவசியப் பண்டங்களுக்கு அரசு தரம் நிர்ணயம் செய்துள்ளது.

நிர்ணயிக்கப்பட்ட தரத்திற்குக் குறைவான தரத்தில் விற்பனை செய்வது கூட, கடுமையான தண்டனைக்கு ஆளாக்கும். கலப்படப் பொருட்களைப் பற்றியும், தரமற்ற பொருட்களைப் பற்றியும் நுகர்வோர் தகவல் கிடைத்தால் சென்னை எழிலகத்தில் உள்ள உணவுப்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளருக்கோ, பொதுச் சுகாதாரம் மற்றும் காப்பு மருந்துகள் துறை இயக்குநருக்கோ அல்லது மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர்கள், சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் மாவட்டச் சுகாதார அலுவலர்களுக்குத் தகவல் தெரிவித்தால், உடன் தவறிழைப்போர் தண்டிக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கலப்படங்களைப் பற்றி அறிந்து கொள்வதாலும், தரமான அக்மார்க், ஐ.எஸ்.ஐ. போன்ற பொருட்களைக் கேட்டு வாங்கி உபயோகிப்பதாலேயுமே கலப்படத்தை முழுமையாக நீக்க முடியும். இதற்கு நுகர்வோரின் விழிப்புணர்வே முக்கியமாகும்●



## குடிநீர்த் திட்டப் பணிகள்

தமிழ்நாட்டிலுள்ள கிராமங்களில் சுமார் 81,728 ஆழ்துளைக் கிணறுகள், 35,247 வடிமுனைக் குழாய்கள் மற்றும் 21,626 மின்விசைப் பம்புகள் பாதுகாக்கப்பட்ட குடிநீரை மக்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கின்றன.

இவற்றில் எந்த ஒரு குடிநீர்க் குழாய் பழுதடைந்தாலும், அது 48 மணி நேரத்திற்குள்ளாகவே செப்பனிட்டுச் சீராக்கப்பட்டு வருகிறது. இப்பணி மாவட்ட அளவில் சிறப்பாக ஒருங்கிணைக்கப்படுகிறது.

குடிநீர்த் திட்டப் பணிகளுக்காக தமிழ்நாடு அரசு ரூ.6 கோடி இணை மானியம் அளித்துள்ளது. இத்தொகையைக் கொண்டு குழாய்க் கிணறுகள், திறந்த கிணறுகள் தோண்டப் படுவதுடன் தற்போதுள்ள கிணறுகளும் ஆழப் படுத்தப்படும். தவிர, மேல்நிலை நீர்தொட்டிகள், தரைமட்ட நீர்த்தொட்டிகளை அமைக்கவும், இவற்றிற்குப் புதிய நீர் ஆதாரங்களைக் கண்டு பிடிக்கவும், குடிநீர் வழங்கும் குழாய்களை விரிவாக்கவும் இந்த இணை மானியம் பயன்படுத்தப் படும்.

பழுதடைந்த கைப்பம்புகளை உடனுக்குடன் செப்பனிட்டுச் சீராக்கித் தடையின்றிக் குடிநீர் வழங்கத் தேவையான உதிரிபாகங்களை வாங்கித் தயார் நிலையில் வைத்துக் கொள்வதற்காக ரூ.150 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**தமிழரசு**
சந்தா விவரம்
தமிழ் ......... ஓராண்டு - ரூ.24
அரையாண்டு - ரூ.12
ஆங்கிலம் ... ஓராண்டு - ரூ. 12
(அரையாண்டு சந்தா கிடையாது)
விவரங்களுக்கு :
உதவி இயக்குநர் தமிழரசு,
(விற்பனை மற்றும் விநியோகம்)
அரசினர் தோட்டம், சென்னை-600 002.

# எலும்புப் புற்றுநோய்

## இதோ ஒரு புதுச்சிகிச்சை

நம் உடலில் ஏற்படும் நோய்கள் பல; அவற்றில், நமது எலும்புகளில் உண்டாகும் எலும்புப் புற்றுநோய் மிகவும் கொடியது ஆகும். அந்த நோய்க்குத் தக்க சிகிச்சையளித்து நிவாரணம் காண்பதில் கைதேர்ந்த முடநீக்கியல் நிபுணரான டாக்டர் மயில்வாகனன் நடராசன் M.B.D.Orth., M.S.Orth., M.Ch.Orth.(Eng.), Ph.D. அவர்களைச் சந்தித்து, **எலும்புப் புற்றுநோயும் அதற்கான அபூர்வ சிகிச்சை முறையும் பற்றிக் கேட்டறிந்து தொகுத்தளிக்கிறார் நமது சிறப்புச் செய்தியாளர் பி.எல்.ஆர்.**

**ப**த்து காலன் தண்ணீர், ஏழு பார் சோப்புகள் செய்யத் தேவைப் படும் கொழுப்பு, பல்லாயிரம் பென்சில்கள் செய்வதற்குத் தேவைப் படும் பாஸ்பரஸ், மூன்று அங்குல ஆணி செய்வதற்கான இரும்பு, சின்னதொரு கோழிக் கூட்டிற்கு வெள்ளையடிக்கப் போதுமான சுண்ணாம்பு ஆகியவற்றுடன்- சிறிது மக்னீசியமும் கந்தகமும் உடையதே நமது உடல். நம்முடைய உடலில் உள்ள மொத்த எலும்புகளின் எண்ணிக்கை 206 ஆகும்.

''எலும்புகளில்-முக்கியமானவை, முக்கியமற்றவை என்று நாம் எதையும் இனம் பிரித்துச் சொல்ல முடியாது. ஆனால் - நம்முடைய மூளை, இதயம், சிறுநீரகம் போன்ற உள் உறுப்புகள் எலும்புகளின் பாதுகாப்பிலேயே உள்ளன. அதனால், அப்படிப்பட்ட பகுதிகளில் உள்ள எலும்புகளே முக்கியமானவை என்று சொல்லி விடலாமா என்றால் அது தான் இல்லை!

''எலும்பே இல்லாத ஒரு மனித உருவத்தைக் கற்பனை செய்து பார்த்தோமானால், எலும்பினுடைய முக்கியத்துவம் தெரியும். வெறும் சதைக்கோளம் மட்டுமே, ஓர் அழகிய உருவமாகி விடுமா? அதனால் நிமிர்ந்து நிற்க முடியுமா? உட்கார முடியுமா? ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குப் போக - வரத் தான் முடியுமா?

''எலும்பு இல்லையானால் மனித இனத்திற்கு நடமாட்டமே இல்லாமல் ஆகிவிடும். அசைவே வாழ்க்கை;



புற்றுநோயால் பாதிக்கப்பட்ட தோள்பட்டை எலும்பும், செயற்கை உலோக எலும்பால் சீர் செய்யப்பட்ட தோள்பட்டை எலும்பும் (எக்ஸ்ரே-படம்).



முடநீக்கியல் நிபுணர் டாக்டர் மயில்வாகனன் நடராசன்.

வாழ்க்கையே அசைவு. மிருகங்களும் இதற்கு விதிவிலக்கு அல்ல!''

''ஒரு மனிதனை நடமாடச் செய்வதில், கால் எலும்பானது முக்கியப் பங்கு வகிக்கிறது; அவனுக்கு ஆக வேண்டிய காரியங்களைச் செய்வதில், கை எலும்பு முக்கியத்துவம் பெறுகிறது...''

# பார்த்தோம் படித்தோம்



## காவிரி நதிநீர்ப் பங்கீடு சிறப்பிதழ் குறித்து கருத்துரைகள்:

(1-4-'91)

'**கா**விரி ஆறும் கன்னித்தமிழ் நாடும் என்னும் கட்டுரை, காவிரி ஆற்றின் தோற்றம், அது எந்தெந்த மலைகளையும் பகுதிகளையும் கடந்து கடலில் கலக்கிறது என்ற விவரமும் தெளிவாக உள்ளன. மேலும் பருவ மழைகள், மழையளவு, காவிரியில் கிடைக்கும் மொத்த நீரளவு முதலியனவும் புள்ளி விவரங்களுடன் துல்லியமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

1892, **1924-ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட ஒப்பந்த விவரங்களைத் தெரிவித்து, 1956-ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஆற்றுப்படுகையில் ஏற்பட்ட பாசன மேம்பாட்டையும் தெரிவித்துள்ளது.**

—மா.க.சம்பந்தன்
சென்னை-600 001.



**க**ல்வெட்டு, வரலாறு, இலக்கியம், வேதம், புராணம், ஒப்பந்தம், இந்திய அரசமைப்பு முதலிய பல்வேறு பகுதிகளில் இருந்தும் செய்திகள் திரட்டித் தொகுத்துப் பகுத்துத் தரப்பட்டுள்ளன. 'காவிரிக்கு ஒரு கடிதம்' என்று கவியரசர் இளந்தேவன் எழுதியிருப்பது தமிழர்கள், உழவர்களின் இதய எண்ணத்தின் வெளிப்பாடாகும்.

—வ.வேம்பையன்,
கல்பாக்கம்-603 102.

'**இ**லக்கியத்தில் காவிரி' - என்னும் இனிய கட்டுரை, அரிய பல செய்திகள் கொண்டதாக இருந்தது.

—ஜி.மாணிக்கவாசகன்,
சென்னை-600 004.

**கா**விரி நதிநீர்ப்பங்கீடு சிறப்பிதழை மிகச்சிறப்பானதாக அமைத்து, அனைத்துத் தரப்பு மக்களும் காவிரியின் பெருமையை உணரும் வகையிலும், காவிரி நீர்ப் பங்கீட்டில் நாம் செலுத்த வேண்டிய நிலையையும் விளக்கி உள்ளீர்கள். நெஞ்சார்ந்த பாராட்டுகள்.

-எம்.சி.தேவேந்திரன்
மிட்டப்பன்னி
தருமபுரி மாவட்டம்.

**கா**விரி பற்றி கவிஇளந் தேவனவர்
பாவிரித்த ஒலை படித்துவந்தேன்;
—நாவிரித்துக்
காட்டு நதிபோல் கருத்துக் கரைபுரளக்
கூட்டுவித்தார்; வெல்கஅவர் கூற்று!

—இ.பதுருத்தின்,
சென்னை-600 081.

வருகிறது; நம் இந்தியாவில் இன்னும் அந்த நிலை வரவில்லை! ஆனால்- இங்கே மாற்றுச் சிறுநீரகம் பொருத்தப்படுகிறது, கண்தானம் - இரத்த தானமெல்லாம் செய்யப்படுகிறது. அதேபோல, ஒருவர் இறந்தபின் எலும்பு தானம் செய்வது என்ற நிலைமையும் வரவேண்டும். எலும்புப் புற்றுநோய் கண்ட ஒருவர், அந்தப் பகுதி எலும்பை நீக்கிவிட்டுச் செயற்கை உலோக எலும்பைப் பொருத்திக் கொள்ள ஆகும் பெரும் செலவை அதன்மூலம் தவிர்க்கலாம். அமெரிக்க நாட்டில் அப்படி இறந்தவர் எலும்பை வைத்துச் சிகிச்சை செய்ய அனுமதிக்கப்படுகிறது. ஒருவர் இறந்த ஆறுமணி நேரத்திற்குள்ளாக குறிப்பிட்ட பகுதி எலும்பை மட்டும் எடுத்தால், பாதிக்கப்பட்டவர் உடலில் பொருத்திவிட முடியும். இதுபற்றி அரசாங்கமே பரிசீலித்து அதற்கான ஒரு திட்டமேகூட அமல்படுத்தினால் ஏழைஎளிய மக்களும் இந்தச் சிகிச்சையால் பயன்பெற முடியும். இறந்தவனின் எலும்பு மண்ணுக்கோ நெருப்புக்கோ போய்ச் சேருவதைவிட, இன்னொருவனுக்கு உதவுமானால் நல்லதல்லவா!'' என்று மிக உருக்கத்தோடு அவர் சொன்னார்.

''அமெரிக்க நாட்டில் 'Hospice' என்றொரு அமைப்பு வைத்திருக்கிறார்கள். அங்கே என்ன செய்கிறார்கள் தெரியுமா? நோயாளி ஒருவருக்கு எந்தச் சிகிச்சையும் பலனளிக்காமல் விரைவிலேயே சாவு நிச்சயம் என்று மருத்துவர்களால் தீர்மானிக்கப்பட்ட பிறகு- அதில் கொண்டுபோய்ச் சேர்த்து விடுவார்கள். அங்கு அவர்களுக்கு மாத்திரை மருந்துகள் மட்டுமல்ல; அவர்கள் ஆசைப்பட்டுக் கேட்பதையெல்லாம் தட்டாமல் வாங்கித் தருவார்கள். ஏனென்றால், சாகிற போதாவது அந்த நபர் மன நிம்மதியோடு இறக்கட்டுமே என்பது தான்! இங்கே நம் நாட்டில் அப்படியெல்லாம் செய்யமுடியாது. எலும்புப் புற்றுநோய் கண்டு, கையையோ, காலையோ இழந்து இறந்து போகிற ஒருவர் - முடமாக அல்லவா கேவலமாக இறந்து போகிறோம்! என்று நிச்சயமாகக் கவலைப்படக் கூடும், அல்லது அப்படிப்பட்ட கவலையே அவரைக் கொன்று விடவும்கூடும். அதுபோலெல்லாம் அங்கத்தில் ஒரு குறைவும் வெளித் தோற்றத்தில் தெரியாதபடி, ஒருவரை மனநிம்மதியோடு கடைசிக் காலம் வரை முழுத் தோற்றத்தோடு வாழ வைக்க முடிகிறதே என்ற திருப்தி எனக்கு நிறைய இருக்கிறது!'' என்று பெருமிதத்தோடும் பெருமையோடும் நம்மிடம் தெரிவித்தார் டாக்டர் மயில்வாகனன்.



இலக்கிய விருந்து:

# தமிழகமும் ரோமாபுரியும்

தங்கவயல் லோகிதாசன்

''**ய**வனர் தம் கப்பல்களில்-
குளிர்ந்த, இனிய, மணம் கமழும் மதுவைக்
கொண்டு வந்தார்கள்.
அழகிய வடிவழகிகள்-
அந்த மதுவைத் தங்கக் கோப்பைகளில்
அரசர்களுக்குப் பகிர்ந்து கொடுத்தார்கள்!''
என்று '**புறநானூறு**' கூறுகிறது.

வெண்ணுரை கிளப்பிக் கொண்டு-
யவனரின் கப்பல்கள் தங்கத்தை இறக்கிவிட்டு,
கொடுங்கல்லூரிலிருந்து மிளகு மூட்டைகளை
ஏற்றிக் கொண்டு செல்வதாக '**அகநானூறு**'
உரைக்கிறது.

இதே செய்தியைத்தான்-
'**பெரும்பாணாற்றுப் படை**யும், '**நெடுநல்வாடை**'யும்
குறிப்பிடுகின்றன.

அழகான விளக்குகளை-
அரசர்களுக்கு யவனர் விற்றார்கள் என்ற குறிப்பு
'**நெடுநல்வாடை**'யில் காண்கிறது.
அரசரின் மெய்க்காப்பாளர் போன்ற பதவிகளில்
யவனர்களை நியமித்ததாக '**முல்லைப்பாட்டு**'
அறிவிக்கிறது.

கோட்டை வாயில் காவலராக-
யவனர் பணி செய்திருக்கிறார்கள் என்பதைச்
'**சிலப்பதிகாரம்**' செப்புகிறது.



யவனச் சிற்பிகளைப் பற்றிச் சில விவரங்களை
'**மணிமேகலை**' அளிக்கிறது.

'அகஸ்டஸ்' என்பவருடைய-
முடிசூட்டு விழாவிற்குப் பாண்டிய மன்னன்
ஒரு பிரதிநிதிக் குழுவை அனுப்பியிருந்ததாக
'ஸ்ட்ராபோ' என்பவர் குறித்திருக்கிறார்.

கி.மு.27-ஆம் ஆண்டிலேயே-
தமிழகமும், ரோம சாம்ராஜ்யமும் பரஸ்பர
வாணிபத்தில் ஈடுபட்டிருந்தன என்பது
இதனால் புலனாகிறது.

இதற்கு முன்பே ஃபினீஷியரும், கிரேக்கரும்-
அரேபியரும், சிரியாக்காரரும்,
நம்நாட்டு விளைபொருளைக் கொண்டு சென்று
வாணிபம் நடத்தி வந்தார்கள்.
இது கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் நடந்ததாக





எலும்புப் புற்றுநோய்க்கு இலக்கான இடதுகால் எலும்பை அகற்றிவிட்டு செயற்கை உலோக எலும்பு பொருத்தப்பட்ட பெண்மணி.

—இவ்வாறு மனித உடலில் உள்ள எலும்புக் கூட்டின் இன்றியமை யாமை பற்றிச் சொல்லிக் கொண்டே போனார் டாக்டர் மயில்வாகனன் நடராசன். அதைத் தொடர்ந்து அவருடைய பேச்சு, புற்றுநோயின் பக்கம் திரும்பியது.

''புற்றுநோய் ஒருவருக்கு இன்ன காரணத்தால்தான் வரும் என்று நாம் திட்டவட்டமாகச் சொல்லிவிட முடியாது; அதுபற்றிய ஆராய்ச்சி இன்னமும் உலகளவில் தொடர்ந்து நடந்து வருகிறது. ஆனால், அதற்குத் தகுந்த சிகிச்சைகள் கண்டுபிடிக்கப் பட்டு விட்டன. வாயில்... தொண்டை யில்... மார்பில்... வயிற்றில்... இரத்தத்தில் என்று, கிட்டத்தட்ட மனித உடலின் அங்கங்களிலெல்லாமே பெரும்பாலும் புற்றுநோய் வருவது உண்டு. எலும்பில்கூட அப்படிப் பட்ட புற்றுநோய் ஏற்பட்டு, உயிருக்கே மிகச் சீக்கிரத்தில் உலை வைத்து விடக் கூடும்!''

—இவ்வாறு பேசிக்கொண்டே சென்ற டாக்டரிடம் நாம் குறுக்கிட் டோம்.

''உடலின் எந்த இடத்திலுள்ள எலும்பில் பெரும்பாலும் புற்று நோய் வரக்கூடும்?''

''அப்படிக் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது; எல்லாவகை எலும்பிலும் வரலாம்!''

''எலும்பில் புற்றுநோய் கண் டிருப்பதற்கான முக்கிய அறிகுறி என்ன?''

''எலும்பில் முதலில் ஒரு சிறிய கட்டி இருப்பதுபோல நெருடலாக நமக்குத் தெரியும். அது சிறியதாக இருக்கும்போது வலியிருக்காது; அந்தக் கட்டியானது வளர வளர வலியெடுக்கும். ஆரம்பத்திலேயே அதைக் கவனிக்காமல் விட்டுவிட் டால், நுரையீரல் வரையில் அந்தப் புற்றுநோய் பரவி உயிராபத்தையே உண்டாக்கிவிடும்''.

''இத்தனை வயதுள்ளவர்களுக் குத்தான் எலும்புப் புற்றுநோய் வரும் என்று ஏதாவது கணக்கு உண்டா?''

''அப்படியொன்றும் இதற்கு வயது வரம்பெல்லாம் இல்லை; எந்த வயதிலும் வரக்கூடும். ஆனால் ஒன்று - எலும்புப் புற்றுநோய் என்பது யாருக்காவது மிக அபூர்வ மாகத்தான் ஏற்படும். இது ஒரு மோசமான வியாதி. காலில் புற்று நோய் வந்தால் காலை எடுத்து விட்டால் சரியாகி விடும்; கை எலும்பில் வந்தால் கையைத் துண்டித் தால் சரியாகிவிடும் என்றெல்லாம் கொடுமையான நிலைமை முன்பு இருந்தது. ஆனால், ஒருவரது அங் கத்தை வெட்டி எடுப்பது அவரது தோற்றத்தையே சிதைத்து விடும் அல்லவா? அதுபற்றிய சிந்தனை தான் என்னை இதுபற்றிய தனிப் படிப்பிற்கும் பயிற்சிக்குமே தூண்டி யது என்று கூறலாம்!'' என்று குறிப்பிட்டார் டாக்டர் மயில் வாகனன் நடராசன்.

''காலிலோ, கையிலோ புற்று நோய்க்கட்டி வந்துவிட்டால், அந்த உறுப்பை அடியோடு எடுத்துவிட வேண்டிய அவசியமே இல்லை'' - என்கிறார் அவர்.

''கால் எலும்பில் ஒருவருக்குப் புற்றுநோய்க்கட்டி வந்திருந்தால் அப்படிப் பாதிக்கப்பட்ட பகுதியில் உள்ள எலும்பை மட்டும் அறுவை செய்து எடுத்துவிட வேண்டும்; பிறகு அதே அமைப்பிலும் அளவிலு மான 'டைட்டானியம்' (Titanium) என்கிற ஒருவகை இலேசான உலோகத்தாலான செயற்கை எலும்பு அமைப்பைச் செய்து அங்கே பொருத்திச் சதையை பழையபடி மூடிவிட வேண்டும். இதனால் இரத்த ஓட்டமோ வேறு எதுவுமோ அப்பகுதியில் எந்தவகையிலும் பாதிக் காது!''

இப்படிச் செய்வதன்மூலம், சிகிச்சை பெற்ற இரண்டே வாரத் தில் தையல் பிரிக்கப்பட்டு ஒரு மனிதன் எந்தவித ஊனமும் இல்லா தவன் போலவே பழையபடி நடக்க முடியுமாம்!

''இதற்கான அறுவைச் சிகிச்சை நடத்த சுமார் நான்கிலிருந்து ஆறு மணிநேரம் வரை தேவைப்படும். எந்த வயதில் உள்ளவர் உடம்பிலும் இந்தச் சிகிச்சையை மேற்கொள்ள முடியும். எந்த ஒரு மனிதனும் கடைசி வரை முடவனாகவே வாழ்ந்து இறக்கச் சம்மதிக்க மாட்டான்; தவிரவும், எலும்புப் புற்றுநோய் கண்டபின், 'எந்த நேரத்தில் இறப் போமோ?' என்கிற அச்சத்தோடும் வாழ விரும்பமாட்டான்.

முன்பெல்லாம், யாருக்காவது கையிலோ காலிலோ எலும்புப் புற்றுநோய் கண்டு - அந்தப் பகுதியை வெட்டியெடுத்து விடலாம் என்று டாக்டர் சொன்னால்... வேண்டவே வேண்டாம்; இருக்கிறவரை ஊன மில்லாமல் இருந்துவிட்டுச் செத்துப் போகிறேன் என்பார்கள்; அல்லது அப்படி வெட்டியெடுத்த பிறகு நீண்ட ஆயுளுக்கு நீங்கள் உத்திர

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட மூட்டெலும்பும் செயற்கை உலோக எலும்புப் பொருத்தப்பட்ட மூட் டெலும்பும் (எக்ஸ்ரே-படம்).





வாதம் தருவீர்களா என்று டாக்ட ரிடம் கேட்பார்கள். நாம் அதற்கு ஐம்பது சதவிகிதம் உத்திரவாதம் தரலாம்; முழு உயிருக்கும் உத்திர வாதம் தர டாக்டரால் முடியு மென்றால், கடவுளுக்கும் டாக்டருக் கும் வித்தியாசமில்லாமல் போய் விடுமல்லவா! தரமாக வாழவேண்டும்; கண்ணியமாச் சாகவேண்டும் (Quality of life and dignity of death)என்ற எண்ணம் ஒவ்வொருவருக்கும் இருப் பதே அதற்கு முக்கியக் காரணம்'' என்று சிரித்துக் கொண்டே சொன்ன டாக்டர் மயில்வாகனன், ''என் சிகிச்சையே அதை உறுதிப்படுத்து வதுதான்'' என்றார். அவர் மேலும் நம்மிடம் தெரிவித்ததாவது:

''இப்போதெல்லாம் மக்களிடம் அப்படிப்பட்ட தயக்கம் இல்லை; புற்றுநோயுடன் போராடிச் சாவதை விட... நோய்கண்ட எலும்பை நீக்கிவிட்டுச் செயற்கை எலும்பைப் பொருத்திக் கொண்டு, வாழ்கிற காலம் வரை எந்தவித அங்கக் குறைவுமின்றி முழுத் தோற்றத்துடன் நிம்மதியாக இருக்கலாமே என்ற முடிவுக்கு மக்கள் முன்வரத் தொடங் கியிருக்கிறார்கள். ஒரு வீட்டில்... ஒரு சின்னஞ்சிறு குழந்தைக்கு எலும்புப் புற்றுநோய் என்று வைத்துக் கொள்ளுங்கள்; அதனால் அந்தக் குழந்தைக்கு மட்டுமா துன்பம்? அவ்வீட்டில் உள்ள எல்லோரை யுமல்லவா அந்தக் கவலைபிடித்துக் கொள்ளும்? அப்படிப்பட்ட துன் பத்தைத் துடைப்பதுதான் நான் செய்கிற சிகிச்சை!''

செயற்கை எலும்பாகிய அமைப் பைச் செய்யப் பயன்படும் மூலப் பொருளான 'டைட்டானியம்' என்ற ஒருவகை உலோகம் துருப்பிடித்தல் போன்ற எவ்வகைக் கோளாறும் அற்றதும் இலேசானதும் ஆகும். அந்த மூலப்பொருள் வெளிநாட்டி லிருந்துதான் இறக்குமதி செய்யப் படுகிறது. இதனாலேயே அதற்கு மட்டும் சற்றுக் கூடுதல் செலவு செய்ய நேரிடக் கூடும். சென்னை யில் 'TEAM' என்கிற ஒரு அமைப்பு (Titanium Equipment and Anode Manufacturing Company) மட்டுமே. இப்போது, தேவையின் பேரில் அதைப் பத்தே நாட்களில் செய்து தந்து விடுகிறது. திரு. கிருஷ்ண மூர்த்தி ராவ் என்பவர் அந்த அமைப்பின் தலைவராக இருந்து, நமது பணியில் முழு ஒத்துழைப்புத் தருகிறார்.

''கையிலோ காலிலோ எலும்புப் புற்றுநோய் காரணமாகப் பாதிக்கப் பட்ட பகுதியை 'Scan' செய்து computer-ல் கொடுத்தால், செயற்கை உலோக எலும்பின் அளவைக் கம்ப்யூட்டரே மிக்சரியாகக் கணக் கிட்டு தாமாக வடிவமைத்துக் கொடுத்து விடும் (Computer Assisted Designing). இதனால் அளவில் தவறுதல் ஏற் பட்டு அதனால் டாக்டரோ, நோயாளியோ தொல்லைப்பட வாய்ப்பில்லை. அப்படிப் பொருத் தப்பட்ட நபர், பல்லாண்டுகள் கவலையின்றி இயல்பாக வாழலாம். கவனக் குறைவாக எப்போதாவது கீழே விழ நேர்ந்தால், அந்தச் செயற்கை அமைப்பில் தெறிப்பு ஏற்படக் கூடும்; அப்படி ஆனாலும் மறுபடி அதை எளிதில் மாற்றிக் கொண்டு விடலாம். சிகிச்சை செய்த இடத்தில் சீழ் பிடித்தாலோ, உட லின் வேறு இடத்தில் அதேபோல் எலும்புப் புற்றுநோய் கண்டாலோ தான் நோயாளிக்குச் துன்பம்! இவ்வகை சிகிச்சைபெற்ற நோயாளி களில் பத்து சதவிகிதம் பேருக்கு, அதே இடத்தில் மறுபடியும் புற்று நோய் ஏற்படும் வாய்ப்பு இருப்பதை யும் நான் குறிப்பிடத்தான் வேண்டும்!'' என்றார், டாக்டர்.

இந்தியாவில்-பம்பாய்(டாடா மருத்துவமனை), குஜராத், சென்னை ஆகிய மூன்றே நகரங்களில் உள்ள புற்றுநோய் மருத்துவமனைகளில் தான் இந்தவிதச் சிகிச்சை செய்யப் படுகிறது. ஆனால், சென்னைதான் இந்தவகையில் முதலிடம் வகிக் கிறது. டில்லி, கல்கத்தா போன்ற பெரும் நகரங்களிலிருந்தும், வேறு பல மாநிலங்களிலிருந்துமெல்லாம் கூட, இவ்வகைச் சிகிச்சைக்காக இங்கே வருகிறார்கள்.

குறிப்பாக - சென்னை அடை யாறில் உள்ள புற்றுநோய்க் கழக மருத்துவமனையில்தான் இந்தச் சிகிச்சை, கடந்த மூன்றாண்டுக் காலமாகச் செய்யப்படுகிறது. டாக்டர் மயில்வாகனன் நடராசனே அங்கு இச்சிகிச்சையை வெற்றிகரமாகச் செய்து வருகிறார்.

''இந்த மூன்றாண்டுக் காலத்தில் அங்கே பதின்மூன்று ஆண்களுக் கும், பதினேழு பெண்களுக்குமாக - ஆக மொத்தம் முப்பது பேர்களுக்கு நான், புற்றுநோய் கண்ட எலும்பை நீக்கி விட்டுச் செயற்கை மூட்டு பொருத்தும் சிகிச்சையை (Limb Salvage by Custom Prosthisis) வெற்றி கரமாகச் செய்திருக்கிறேன்.



பாதிக்கப்பட்ட எலும்பை எடுத்துவிட்டுப் பொருத்தப் படும் 'டைடானியம்' உலோக எலும்பு அமைப்பு.

''தந்தை மகனுக்கு ஆற்றும் உதவி, அவையத்து முந்தி இருக்கச் செயல்'' என்பதற்கு ஏற்ப, என்னை இந்த எலும்புச் சிகிச்சைத் துறையில் ஈடுபடச் செய்து, முன்னணிப் பயிற்சி அளித்து, ஊனமில்லாமல் வாழ மக்களுக்குச் சேவை செய்யும் பணியில் எனக்கு முன்னோடியாய் இருந்து, என்னை உருவாக்கிய எனது தந்தையார் டாக்டர் ம.நடராஜன் அவர்களுக்கு நான் முதலில் நன்றி தெரிவித்துக்கொள்ள வேண்டும். அடுத்தபடியாக- இங்கிலாந்து நாட்டுக்குச் சென்று இவ்வகையில் பயிற்சி பெற்று வந்த என்னை, முதன்முதல் அப்படிப்பட்ட அறுவைச் சிகிச்சை செய்ய அனுமதித்த அடையாறு புற்றுநோய்க்கழக (Musculo Skeletal Tumour Service, Cancer Institute, Adyar) நிர்வாக டாக்டர்களான திரு. கிருஷ்ண மூர்த்தி, திருமதி சாந்தா இருவருக் கும் இந்த நேரத்தில் நான் நன்றி கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்'' என்றார் டாக்டர் மயில் வாகனன் நடராசன்.

''மாற்று இருதயம் பொருத்தும் சிகிச்சை மேனாடுகளில் பதினைந் தாண்டுக் காலமாகச் செய்யப்பட்டு

'ஹீரோடோட்டஸ்' என்பவர் எழுதியிருக்கிறார்.

எகிப்தைக் கைப்பற்றிய ரோம் நாட்டினர்-
அதன்பின் தமிழகத்தோடு வாணிபத்தில் முனைந்து
ஈடுபட்டார்கள்.
அகஸ்டஸ் முதலிய சக்கரவர்த்திகளின்
நாணயங்கள் தென் இந்தியாவில் பல இடங்களில்
கிடைப்பது இதற்குத் தக்க சான்றாகும்.





உலக வாணிபம் அந்த நாளில்-
முக்கியமாகக் கேரளத்து விளைபொருள்களைச்
சார்ந்தே நடந்து வந்தது.

எல்லோரும் விரும்பும்-
ஏலம், லவங்கப்பட்டை, சந்தனம், தந்தம்,
சுக்கு, தேக்கு இவை போன்ற பொருள்களைப்
பெரும்பாலும் குத்தகை எடுப்பார்கள்.



கி.பி.18-ஆம் நூற்றாண்டில்-
டச்சுக்காரர்களின் மிளகு வியாபாரம்
ஜாவாவுக்குப் பரவுகிற வரையில்-
உலகிலேயே கேரளத்தைத் தவிர வேறெங்கும்
மிளகு விளையவில்லை.



மிளகின் தேவையும்-
மிக அதிகமாகிக் கொண்டிருந்தது.
குளிர் காலத்தில் மாமிசத்தை உப்புப் போட்டுக்
காப்பாற்றுவதற்கு ஐரோப்பாவில் மிளகு பயன்பட்டது.
'மிளகுக்கு மருந்து குணம் உண்டு'-
என்று பொதுவாக ஐரோப்பியர் நம்பினார்கள்.

'இந்திய மருந்து'-
என்று கிரேக்க, ரோமன் நூல்களில்
மிளகைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்
உணவு அருந்தும் சமயத்தில்-
தேவைக்கு ஏற்றபடி எடுத்துக்கொள்ள
மிளகைப் பொடி செய்து கண்ணாடிச் சீசாக்களில்
போட்டு வைப்பது ஐரோப்பியரின் வழக்கம்.



ஐரோப்பிய தேவாலய வழிபாடுகளில்-
காணிக்கை செலுத்தி வந்ததும் முக்கியமாக மிளகுதான்.
ஆப்பிரிக்காவின் தென்கோடியைப்
'பார்த்தலம்யூஸ்' கண்டுபிடித்ததும், 'வாஸ்கோடகாமா'
அதன் வழியாகக் கேரளத்துக்கு வந்ததும்.
அமெரிக்காவைக் கொலம்பஸ் கண்டுபிடித்ததும்-
எல்லாம் மிளகுக்காகத்தான்!



'மார்க்கோபோலோ'வின்-
எழுத்துக்களிலிருந்து கிறிஸ்து சகாப்தத்தின்
ஆரம்பத்திலேயே சீனருக்கும் தமிழகத்திற்கும்
வாணிபத் தொடர்பு இருந்ததாகத் தெரிகிறது.

கி.பி. பதினாறாம் நூற்றாண்டு வரையில்-
கேரளத்தின் செல்வ வாழ்க்கையில் மிளகின் இடம்
ஒப்புயர்வற்றதாக இருந்தது.
இரண்டு ராத்தல் மிளகு விற்ற பணத்தைக் கொண்டு
ஒருவன் ஒருமாத காலம் நலமாய் வாழலாம்.
எனவே, மிளகு பயிர் செய்யும் தொழில்
கேரளத்தில் ஓங்கி வளர்ந்தது.

பரங்கிகளின் தொடர்பு இருந்த வரையில்-
இந்த நிலை நீடித்திருந்தது
அரேபியரும், சீனரும், போர்ச்சுகீசியர்களும்
கேரள அரசர்களின் உத்தரவுப்படி
அந்த நாட்டு மிளகை மொத்தமாக வாங்கிச்
சென்றார்கள்.

இதன் பயனாக அரசர்கள்-
அந்த வெள்ளைக்காரரின் செல்வாக்குக்கு
உட்பட்டதுடன் மிளகை மலிவாக அவர்களுக்கு
விற்கவும் செய்தார்கள்.
அன்பளிப்பாகப் பணமும் கொடுத்தார்கள்.

கி.பி. பதினாறாம் நூற்றாண்டு பிறந்தது.
'கேரளத்தின் கறுப்புப் பொன்' என்ற கீர்த்தி பெற்ற
மிளகின் விலை வீழ்ந்தது.
மிளகு விவசாயமும் அதோகதியாகிவிட்டது.
கேரளத்தின் செல்வநிலையும் குலைந்தது.

வியாபாரக் காற்றை 'ஹிப்பாலஸ்'-
என்பவர் கண்டுபிடித்ததைத் தொடர்ந்து
நாற்பது நாட்களில் ரோமாபுரியிலிருந்து
கொடுங்கலலூருக்கு வரும் வசதி ஏற்பட்டது!

ஐரோப்பாவுடன்-
தமிழகத்தின் மிளகு வியாபாரம் வலுத்தது.
ஒரு ராத்தல் மிளகின் விலை 15 தினார்.
சுமார் ஏழு ரூபாயாகக் குறைந்தது.
இதுமுந்தையவிலையில் பாதியாகும்.

விலை குறைந்த காரணத்தால்-
சாதாரண மக்களும் மிளகை உபபோகிக்கத்
தொடங்கினார்கள்.
இதன் காரணமாக ரோமிலிருந்து-
தமிழகத்திற்கு ஆண்டுதோறும் செண்ட்டும்
பணமுமாக ஐந்தரைக் கோடி வந்தது.

இந்த நிலை அகஸ்டஸ் காலம் முதல்-
நீரோ காலம் வரையில் இருந்து வந்தது என்று
தென்னிந்தியாவில் கிடைக்கும் புராதன
நாணயங்களைக் கொண்டு தீர்மானிக்கிறார்கள்.

கி.மு. முதல் நூற்றாண்டு முதல்-
கி.பி. முதல் நூற்றாண்டு முடிய புதுச்சேரிக்கு அருகே
உள்ள அரிக்கமேடு என்னும் ஊரை
ரோம்நாட்டு மக்கள் சிறந்த வாணிபத் தலமாக
உபயோகித்து வந்தார்கள்.

பிளினி முதலிய பயணிகள்-
இந்தச் செய்தியைக் குறித்து வைத்திருக்கிறார்கள்.
பிளினி தம் குறிப்பில் கடல் கொள்ளைக்காரரின்
இருப்பிடமான 'நித்யாலி' என்னும்
இடத்தைப் பற்றியும், மிளகு உள்ள இடமான
'கொட்டநாரா' வைப்பற்றியும் தமக்குத்
தெரியுமென்று எழுதியிருக்கிறார்.

ரோமானிய சாம்ராஜ்யமும்-
தமிழகமும் நடத்திய வாணிபத்தில் முக்கியமாய்ப்







பங்கு கொண்டவர்கள் அலெக்ஸாண்டிரியாவில்
வாழ்ந்த கிரேக்கரும், சிரியர்களும், யூதர்களுமே!
அவர்களில் பலர் வியாபாரத்திற்காக-
அந்தக் காலத்தில் சேரநாட்டிலும்,
பாண்டிய நாட்டிலும் வந்து வசித்தார்கள்.

கிரேக்கர் ஒருவர்-
கி.பி. எண்பதாவது ஆண்டில் எழுதி வெளியிட்ட
'பெரிப்ளூஸ்' என்று நூலில் தமிழகத்தைப் பற்றிக் கூறும்
போது 'நவ்ற', 'திண்டிஸ்' என்ற இரண்டு
துறைமுகங்களையும் குறிப்பிடுகிறார்.
இவை சங்க நூல்களில் புகழ்பெற்ற
'நறவு', 'தொண்டி' என்ற இரண்டு இடங்களுந்தான்!



கி.பி. 150-ஆம் ஆண்டில்-
டாலமி என்பவர் எழுதிய பூகோள நூலிலும்
இந்த இடங்களைப்பற்றிய குறிப்புகள் உண்டு.

ரோமானிய சாம்ராஜ்யம் வெகுகாலம் வரையில்
செல்வச் செழிப்புடன் இருந்து வந்தது.
காலப் போக்கில் அந்த நாட்டு மக்கள்
சுகபோகங்களில் ஈடுபட்டதால், அந்தச்
சாம்ராஜ்யம் அழியலாயிற்று.
பணத்தை மக்கள் வீண் செலவு செய்யவும்
தொடங்கினார்கள்.



ரோம் நாட்டு மக்களை-
மிளகானது கவர்ந்ததால், அதற்கு
'யவனப் ப்ரிய' என்று ஒரு பெயரும் ஏற்பட்டது.
நம் நாட்டு வாசனைப் பொருள்கள்-
பஞ்சவர்ணக்கிளி, மயில், குரங்கு இவையெல்லாம்
யவனப் பெண்மணிகளின் மனத்தை மிகவும்
கவர்ந்திருந்தன!



கிளிகளை-
வெள்ளிக் கூண்டில் வைத்துத்தான்
அந்தப் பெண்கள் வளர்ப்பார்கள்
முத்தும் பவளமும் ரோம்நாட்டுப் பெண்களை
வெகுவாக மயக்கி விட்டன.

ஜூலியஸ் சீசர் தம் நண்பனின் தாய்க்கு
நாற்பத் தெண்ணாயிரத்து ஐம்பத்தேழு பவுன்கள்
விலையுள்ள ஒரு முத்தைப்பரிசாகக்
கொடுத்தார் என்று கூறுவதுண்டு.



கிளியோபாத்ரா என்ற அழகராணி
தன் காதில் அணிந்திருந்த முத்து ஒரு இலட்சத்து
அறுபத் தோராயிரத்து 458 பவுன்கள் பெறும்
என்று மதிப்பிடுகிறார்கள்.

அடுத்தபடியாக ரோம் மக்கள்-
அதிகமாக விரும்பிய பொருள் யானைத் தந்தம்.
கொடுங்கல்லூர்த் துறைமுகத்திலிருந்து-
ஏற்றுமதியான பொருள்களில் தந்தமும்
முக்கியமான ஒன்று
மெல்லிய பட்டாடைகள், வைரம்-
வைடூரியம், சந்தனம், அகில் கட்டை,
தேக்கு முதலியவையும் ஏற்றுமதியாயின!

நாணயங்கள், பூவேலையுடைய சட்டைகள்-
மை, சிந்தூரம், கண்ணாடி, தகரம்,
ஈயம், தாமிரம், பித்தளை, மது முதலியவற்றைக்
கேரளத்தில் இறக்குமதி செய்து வந்தார்கள்.
அழகிய யவனப் பெண்களைத்தமிழ்நாட்டு
மன்னர்களுக்கு ரோம் வியாபாரிகள் விற்றார்கள்.
தென்னிந்தியாவில் பலவிடங்களில்-
ரோமன் நாணயங்கள் தோண்டி
எடுக்கப் பெற்றிருப்பது இந்தச் செய்தியைப்
புலப்படுத்தும்.

தமிழகத்திற்கும்-
ரோம் நாட்டிற்கும் வணிகத் தொடர்பு
கி.பி. முதலாம் நூற்றாண்டில் மும்முரமாகவும்,
இரண்டாம் நூற்றாண்டில் சாமானியமாகவும்
இருந்தது.

அலெக்ஸாண்டிரியாவிலும்-
ரோமிலும் இந்திய வியாபாரிகளும், மந்திரவாதிகளும்
அந்த நாளில் வாழ்ந்து வந்தார்கள்.
ரோமானியரும் அதிகமாகத் தமிழகத்தில்
வாழ்ந்து வந்தார்கள்.

கிழக்கு ரோமன் சாம்ராஜ்யம்-
நிறுவப்பட்ட கி.பி. 320-ஆம் ஆண்டுக்குப்பிறகு
கேரளத்துடன் ரோம் மக்களின் வியாபாரம்
வளர்ந்ததாகப் பல காரணங்களால் தீர்மானிக்கலாம்

ஆயினும்-
'பொன்னொடு வந்து கறியொடு பெயரும்' என்று
யவனரைப் பற்றிச் சங்க நூல்களில் கூறியிருப்பது
கி.பி. 5-ஆம் நூற்றாண்டிற்கே பொருந்தும்.
யவனர் என்று சங்க நூல்களில் கூறியிருப்பது
யாரை? ஆசியா மைனரில் அயோனிய என்ற
இடத்தில் வாழ்ந்திருந்ததால், 'யவனர்'
என்ற பெயர் அவர்களுக்கு ஏற்பட்டது!

பிற்காலத்தில் பெர்ஷியாக்காரர்-
சிரியாக்காரர், அரேபியர், யூதர் முதலிய
எல்லோரையுமே 'யவனர்' என்றும்
'யோனகர்' என்றும் கூறத் தொடங்கி விட்டார்கள்.
கூர்ஜரர், ஹூணர் போன்ற எல்லோரையுமே
கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் யவனராகக்
குறிப்பிட்டார்கள். நெடுஞ்சேரலாதன்
யவனருடன் போரிட்டதாகப் '**பதிற்றுப்பத்து**'க்
கூறுகிறது.

சங்க நூல்கள் குறிக்கும் யவனர்-
ரோமானியர்கள் என்றும், கி.பி. 2-ஆம்
நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்றும்-
தீர்மானிப்பதற்குத் தக்க சான்றுகள் இல்லை
என்று வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர்.
அதற்கு அவர்கள் கூறும் காரணம்,
கி.பி. நான்கு, ஐந்தாம் நூற்றாண்டுகளில்
நடந்த வாணிபத்தைப் பற்றித்தான் **புறநானூறு**,
அகநானூறு கூறியிருப்பதாக எடுத்துக் காட்டுகின்றனர்!



சென்னையில் 10-5-91 அன்று துவைக்கி வைக்கப்பெற்ற 37வது கைத்தறிக் கண்காட்சியில்...



தோற்றம்: 20.8.1944 மறைவு: 21.5.1991

# அறிவியல் செய்திகள்

## சைக்கிள் ஓட்டினால் இதயநோயைக் குறைக்கலாம்!

சைக்கிள் ஓட்டுவது மிகச்சிறந்த உடற்பயிற்சி என்கின்றனர் அமெரிக்க மருத்துவர்கள்.

மிகவும் கடினமான உடற்பயிற்சிகளால் கிடைக்கும் அத்தனை நன்மைகளையும், சீரான சைக்கிள் சவாரி மூலம் பெறமுடியும் என்று அவர்கள் குறிப்பிடுகின்றனர். முறையாகச் சைக்கிள் சவாரி செய்வதானது-

★ இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்துகிறது.

★ இதய நோய் ஏற்படும் அபாயத்தைக் குறைக்கிறது.

★ பதற்றத்தையும் மன இறுக்கத்தையும் தணிக்கிறது.

★ நல்ல தூக்கம் வர உதவுகிறது.

★ இரத்தத்தில் கொலஸ்ட்ராலைக் கட்டுப்படுத்துகிறது.

★ எடையைச் சீராக வைத்திருக்கத் துணை புரிகிறது.

★ தோலின் நிறத்தை மேம்படுத்துகிறது;

★ வைரஸ்களையும், பாக்டீரியாக்களையும் எதிர்த்துப் போராடுவதற்கு, உடலின் எதிர்ப்புச் சக்தியை ஊக்குவிக்கிறது.

ஆனால், இந்த நன்மைகளைப் பெற வேண்டுமானால், தினசரி ஒரு நாளைக்குக் குறைந்தபட்சம் 20 நிமிடங்களாவது, வாரத்திற்கு மூன்று முறையாவது சீரான சைக்கிள் சவாரி செய்ய வேண்டும்.

சைக்கிளை நிற்க வைத்துவிட்டுப் பெடலை மிதித்து, உடற்பயிற்சி செய்வதும் இதே நன்மைகளைக் கொடுக்கும். ஆனால், இத்தகைய உடற்பயிற்சிகளை மருத்துவர்களின் ஆலோசனையின் பேரில் மேற்கொள்வதே நல்லது. இவ்வாறு மருத்துவர்கள் கூறுகின்றனர்.

## அரிசியிலிருந்து புரதம்: ஜப்பானின் கண்டுபிடிப்பு

டோக்கியோ பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் நோய்க் கிருமிகளைக் கட்டுப்படுத்தும் புரதம் ஒன்றை அரிசியிலிருந்து தயாரித்துள்ளனர். இப்புரதத்தின் பெயர் "அர்ஸா சிஸ்டட்டின்" என்பதாகும். இது வெப்பத்தைத் தாங்கக் கூடியதும் மிகவும் தீவிரமாகச் செயல்படக் கூடியதும் ஆகும். காய்ச்சல் மற்றும் வயிற்றுப் போக்கு நோய்க் கிருமிகளைக் கட்டுப்படுத்துவதற்குச் சிறிதளவு புரதமே போதுமானது. இப்புரதத்தினால் எவ்விதப் பக்க விளைவுகளும் இல்லை என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.



பாலாடைக் கட்டியை உண்பதால் பற்சிதைவு தடுக்கப்படுகிறது. ஏற்கெனவே ஏற்பட்டுள்ள பற்சிதைவுகளையும் அது சரி செய்கிறது.

'சீஸ்' எனப்படும் பாலாடைக் கட்டியை உண்பதால், அதிலுள்ள கால்சியம் சத்தானது பற்சிதைவைத் தடுக்கிறது. அன்றியும் ஏற்கனவே சிதைந்து போயுள்ள பற்களில் புதிய தாதுக்களைச் சேர்ப்பதன் மூலம் அவற்றை வலுப்படுத்துகிறது.

பற்சிதைவைத் தடுக்கும் பாலாடைக் கட்டி!

பற்கள் ஆரோக்கியமாக இருக்கச் சூரிய வெளிச்சமும் உதவுகிறது. நல்ல சூரிய வெளிச்சம் உள்ள வகுப்பறைகளில் படிக்கிற குழந்தைகளுக்கு, மின்விளக்குகள் கொண்ட வகுப்பறைகளில் படிக்கின்ற குழந்தைகளைக் காட்டிலும், பல் தொந்தரவுகள் மிகவும் குறைவாக இருந்தனவாம்.



- அமெரிக்கத் தகவல் நிலையம்.

## பூமியை வெப்பமடையச் செய்யும் வாயுக்கள் அளவு அதிகரிப்பு

பூமியை வெப்பமடையச் செய்யக் கூடிய 5 முக்கிய வாயுக்கள், காற்று மண்டலத்தில் கடந்த 4 ஆண்டுகளில் அதிகமாகி உள்ளது. இத்தகவலை அமெரிக்கக் கடலியல் மற்றும் காற்று மண்டல ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது. கரியமில வாயு, மீதேன் வாயு, நைட்ரஸ் ஆக்ஸைடு, குளோரோப்ளோரோ-கார்பன், சி.எப்.சி.12 ஆகியவை அவை.

நிலக்கரி, மண்ணெண்ணெய், விறகு போன்றவற்றை எரிப்பதனால் உருவாகும் கார்பன்-டை-ஆக்ஸைடு, வாயுமண்டலத்தில் மண்டிப் பெருகிப் போய், பூமியின் வெப்பமானது வாயுமண்டலத்துக்குள் வெளியேறிச் சென்று விடாமல் தடுத்துவிடக் கூடும் என்றும், இதனால் பூமி மிகவும் வெப்பமடையக்கூடும் என்றும் விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். இதன் விளைவாக அடுத்த நூற்றாண்டின் மையப்பகுதிக்குள், கடல்மட்டம் உயரக்கூடும் என்றும், பருவ நிலையில் மாறுதல்கள் ஏற்படக்கூடும் என்றும் அவர்கள் அச்சம் தெரிவித்தார்கள்.

கடந்த 4 ஆண்டுகளில் கரியமில வாயு ஆண்டுதோறும் 0.5 சதவீதம் பெருகியுள்ளதாகக் கடலியல் மற்றும் காற்று மண்டல ஆய்வு நிறுவனத்தின் அறிக்கை தெரிவிக்கிறது. வாயு மண்டலத்தில் இது 10 இலட்சத்துக்கு 350 என்னும் அளவுக்கு வளர்ந்து இருப்பதாக அது குறிப்பிடுகிறது. ஆண்டுக்கு ஆண்டு இந்த வளர்ச்சி விகிதம் மாறுபட்டு வருவதாகவும் அது குறிப்பிடுகிறது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

★ பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
★ பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
★ பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
★ லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
★ படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.

©
GOVERNMENT OF TAMIL NADU
1991

[Registered No. M/
[Price 15 Paise

# TAMIL NADU GOVERNMENT GAZETTE EXTRAORDINARY

PUBLISHED BY AUTHORITY

No. 251] MADRAS, WEDNESDAY, MAY 22, 1991
VAIKASI 8, PIRAJORPATHI, THIRUVALLUVAR AANDU—2022

## PART II — SECTION 2

NOTIFICATIONS BY GOVERNMENT.

170216.

PUBLIC DEPARTMENT

(Special)

DEMISE OF Thiru RAJIV GANDHI FORMER PRIME MINISTER OF INDIA

[*G. O. Rt. No.* 2014, *Public* (*Special-B*), *22nd May* 1991.]

No. II (2)/PUSP/2872 (a)/91.

The following resolution of the Executive Committee of Tamil Nadu is published :—

RESOLUTION.

The Governor of Tamil Nadu and the Executive Committee record their deep sense of sorrow at the sudden demise of the beloved former Prime Minister of India Thiru RAJIV GANDHI and wish to convey their sincere and heartfelt condolences to Thirumathi Sonia Gandhi and family.

(By order of the Governor)

T. V. ANTONY,
*Chief Secretary.*



முன்னாள் பிரதமர்

# ராஜீவ் காந்தி

## வாழ்க்கைக் குறிப்பு

திருமதி இந்திராகாந்தி அவர்கள், 1984 அக்டோபர் 31-இல் படுகொலை செய்யப்பட்ட பின்-இந்தியாவின் ஆறாவது பிரதமராகப் பதவி யேற்றார் திரு. ராஜீவ் காந்தி அவர்கள். இந்த உயர்ந்த பதவியை இதுவரை வகித்தவர்களுள் இவரே மிகவும் இளையவர்.

திரு. ராஜீவ் காந்தி அவர்கள், 1981-ஆம் ஆண்டு தொடக்கத்தில் அரசியலில் நுழைந்ததி லிருந்தே, அவரது அன்னை திருமதி இந்திராகாந்தி அவர்களின் அரசியல் வாரிசாகவும் கருதப் பட்டார்.

20.8.1944 அன்று, பம்பாயில் இந்திரா காந்தி-பெரோஸ் காந்தி தம்பதிகளின் மூத்த மகனாகப் பிறந்தார். அவருக்கு ராஜீவ்ரதன் காந்தி என்று பெயரிடப்பட்டது. ராஜீவ் என்றால் தாமரை என்று பொருள்.

பேரக்குழந்தை ராஜீவ் பிறந்த போது, தாத்தா வான பண்டித நேரு சிறையில் இருந்தார். அவர்தான் ராஜீவ் என்ற பெயரைத் தேர்ந் தெடுத்தார்.

திரு. ராஜீவுக்கு 10 வயதான போது 'போர்டிங்' பள்ளிக்கு அனுப்பப்பட்டார். பிறகு - டூன் பள்ளியில் படிப்பை முடித்துக் கொண்டு 1960-ஆம் ஆண்டு தேர்ச்சி பெற்று வெளியே வந்தார். இவருக்கு 16 வயதானபோது, தந்தையார் பெரோஸ் காந்தி இறந்து போனார்.

1962-ஆம் ஆண்டு இங்கிலாந்து சென்ற அவர் 'டிரினிடி' கல்லூரியில் 'மெக்கானிகல் என்ஜினியரிங்' படிப்பில் சேர்ந்தார். இங்குதான் 1965-ஆம் ஆண்டு, தமது எதிர்கால மனைவி யான சோனியா மெய்னோ என்ற இத்தாலியப் பெண்ணை அவர் சந்தித்தார்.

திரு. ராஜீவ்-சோனியா திருமணம் 1968-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் நடந்தது.

படிக்கும்போதே தாத்தா அளித்த ஊக்கத்தின் பேரில், விமானம் ஓட்டும் பயிற்சியிலும் திரு. ராஜீவ் ஈடுபட்டு வந்தார். 1968 மே மாதம்



பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23





இந்தியன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தில் பயிற்சி விமானியாக அவர் சேர்ந்தார். 7 மாதத்துக்குப் பின், டகோடா விமானத்தில் பயணிகளை அவர் ஏற்றிச் சென்றார். ஓராண்டிற்குப் பின் 'போக்கர் பிரண்ட்ஷிப்' விமானத்தை அவர் ஓட்டத் தொடங்கினார். பின்னர் அவர் 'ஆவ்ரோ' விமானங்களை ஓட்டத் தகுதி பெற்றார். அரசியலில் நுழையும் வரை, இந்தியன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தில் 12 ஆண்டுக்காலம் விமானியாகப் பணிபுரிந்தார்.

1981-ஆம் ஆண்டு மே 10-ஆம் நாள், தன் வேலையை விட்டுவிலகி அரசியல் உலகில் அவர் அடியெடுத்து வைத்தார். அதே ஆண்டு ஜூன் மாதம் அமேதி தொகுதியில் போட்டியிட்டு, அனைவரும் எதிர்பார்த்ததற்கு மேலாக 2 இலட்சத்து 37 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று நாடாளுமன்ற உறுப்பினர் ஆனார்.



# முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி படுகொலை!

முன்னாள் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி வெடிகுண்டுத் தாக்குதலால் கொல்லப் பட்டார். 21.5.1991 அன்று இரவு 10.15 மணி அளவில் ஸ்ரீபெரும்புதூரில் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திற்கான இடத்தில் இக் கொடிய நிகழ்ச்சி நிகழ்ந்தது. மேடைக்குச் செல்லும் வழியில் மாலைகளை திரு. ராஜீவ் காந்தி பெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் குண்டு வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்தது. அந்த இடத்திலேயே திரு. ராஜீவ் காந்தி இறந்தார். இந்தக் கொடிய நிகழ்ச்சியால் இந்தியா மட்டுமல்லாமல், உலக நாடுகளும் சோகத்தில் மூழ்கின.

1981 — ஜூன் 25-ஆம் தேதி இளைஞர் காங்கிரஸ்(இ) தேசியச் செயற்குழு உறுப்பினரானார். 1983 பிப்ரவரி 2-ஆம் தேதி அகில இந்தியக் காங்கிரஸ் கட்சி(இ) பொதுச் செயலாளரானார்.

பின்னர், அவர் கட்சிப் பிரதிநிதியாகப் பல்வேறு நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் செய்துள்ளார். 1983 செப்டம்பரில், தமது அன்னையுடன் அவர் ஐ.நா. சபைக்குச் சென்றார். அங்கு ஐ.நா. 37-வது பொதுச் சபைக்கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

இந்தியாவின் பிரதமர் என்ற முறையில் 101 நாடுகள் அடங்கிய அணிசேரா நாடுகள் இயக்கத்துக்குத் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் தலைவர் ஆனார்.

இந்தியப் பிரதமராகப் பொறுப்பேற்ற திரு. ராஜீவ் காந்தி உலக ஒற்றுமைக்காகவும், அமைதிக்காகவும் பாடுபட்டு வந்தார். இதன் காரணமாக, நான்காண்டுகளுக்கு முன்பே இவர் பெயர் நோபல் பரிசுக்கு சிபாரிசு செய்யப்பட்டது.

1985-இல் பஞ்சாப்-அசாம் ஒப்பந்தங்கள் இவரால் கையெழுத்திடப்பட்டன.



இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்க இவர் மேற்கொண்ட முயற்சிகள் குறிப்பிடத்தக்கவை. திரு. ராஜீவால் அமைதி காப்புப் படையும் இந்தியாவிலிருந்து அனுப்பி வைக்கப் பட்டது. அவரால் 1987-இல் செய்து கொள்ளப் பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தமும் குறிப்பிடத் தக்கது.

1988-இல், மாலத்தீவில் அந்நாட்டு அதிபர் கயூமுக்கு எதிராக நடைபெற்ற புரட்சியை அடக்க இந்தியப் படைகள் திரு. ராஜீவால் அனுப்பி வைக்கப்பட்டன.

ஜவகர் ரோஜர் யோஜனா, பஞ்சாயத்து ராஜ் போன்ற மசோதாக்கள் இவரால் கொண்டு வரப்பட்டு அமல்படுத்தப்பட்டன.

1989-இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி தோல்வியடைந்தபின், திரு. ராஜீவ் காந்தி இந்தியப் பிரதமர் பதவியை இழந்தார்.

கடந்த பிப்ரவரியில், வளைகுடாப் போரை முடிவிற்குக் கொண்டுவரச் சமாதான நடவடிக்கையில் இவர் ஈடுபட்டார்; இதுவே இவர் மேற்கொண்ட கடைசிச் சமாதான முயற்சியாகும்.





பிரதமராக இருந்த சமயத்தில், கொலை பாதகர்களால் இரண்டு முறை அவர் உயிருக்குக் குறி வைக்கப்பட்டது.

அண்மையில், திரு. ராஜீவ் காந்தி அவர்கள் தமிழகத்தில் கொலை வெறியர்களால் கொடுமையான முறையில் கொல்லப்பட்டார்.

ஜவகர்லால் நேரு குடும்பத்தில் கடந்த பத்தாண்டுகளில் மூன்று கொடிய சாவுகள் நிகழ்ந்துள்ளன. 1980-இல் திரு. சஞ்சய் காந்தி விமான விபத்தில் சிக்கிக் கொடூரமாக உயிரிழந்தார். 1984-இல் இந்தியப் பிரதமராக இருந்த இந்திராகாந்தி தமது பாதுகாவலராலேயே பயங்கரமாகச் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். இப்போது 21.5.1991 அன்று தேர்தல பிரச்சாரத்திற்காகத் தமிழகத்திற்கு வந்த திரு.ராஜீவ் காந்தி அவர்கள், சென்னைக்கு அருகே உள்ள ஸ்ரீபெரும்புதூரில் இரவு 10.15 மணியளவில் பயங்கர வெடிகுண்டுத் தாக்குதலுக்கு ஆளாகிப் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்.

அவரது உடல் அரசு மரியாதைகளுடன், டில்லியில் யமுனை நதிக்கரையில், அன்னையார் இந்திராகாந்தி நினைவிடம் அருகே 24.5.1991 வெள்ளிக்கிழமையன்று மாலை 5.15 மணி அளவில் அவருடைய புதல்வர் ராகுல் காந்தியால் எரியூட்டப்பட்டது.

— பி.எல்.ஆர்.

## திரு. ராஜீவ் காந்தி மறைவு

# இரங்கல் செய்திகள்



### மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர்
### திரு. ஆர். வெங்கட்ராமன்

“திரு. ராஜீவ் காந்தியின் கொடூரமான கொலை எனக்கு ஆழ்ந்த துயரத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த வெறிச் செயலால் விளைந்துள்ள என்னுடைய துக்கத்தையும், கண்டனத்தையும், முழுவதுமாக வார்த்தைகள் மூலம் வெளிப்படுத்த இயலாது. துணிச்சல்மிக்க, கடமையுணர்வுமிக்க பாரதத்தாயின் திருமகன், ஒரு கோழையால் வீழ்த்தப்பட்டிருக்கின்றார்.

நமது பொது வாழ்வில் உள்ள வன்முறைக் கலாச்சாரத்தை எதிர்த்துப் போராட உறுதி மேற்கொள்ள இந்த வெறிச்செயல், நம்மைத் தூண்டி வழி நடத்த வேண்டும். இந்தத் துயரமான நேரத்தில் நாம் எல்லோரும் அமைதி காத்து நமது தாய் நாட்டில் அமைதி நிலவிடப் பிரார்த்திப்போம். இந்தச் சோதனையான காலகட்டத்தில், உணர்ச்சிகளுக்கு அடிபணியாமல், சட்டம் ஒழுங்கைப் பராமரிக்க முனையுமாறு என்னுடைய நாட்டினர் யாவரையும் வேண்டிக் கொள்கிறேன்.”

### மாண்புமிகு இந்தியப் பிரதமர்
### திரு. சந்திரசேகர்

நமது நாட்டின் வரலாற்றிலேயே மிகவும் துயரமான ஒரு சோகத்தை நாம் அடைந்துள்ளோம். நம்பிக்கையொளி மிக்க ஒரு பொதுவாழ்வு கொலையாளியின் கொடிய கரங்களால் இடையிலேயே முடிந்துவிட்டது. இம்மாதிரியான ஒரு சோக முடிவை நாம் சற்றும் எதிர்பார்க்கவில்லை. வன்முறைக் கலாச்சாரத்தை எதிர்க்க நாம் மேற்கொள்ளும் திடமான முடிவும், அதற்கேற்ற



துணிவுமே நம்மை இந்த இக்கட்டான சூழ்நிலையிலிருந்து மீட்க இயலும்.

இந்திய நாட்டின் மேன்மைக்காகவும், வளர்ச்சிக்காகவும் திரு. ராஜீவ் காந்தி பாடுபட்டார்; புதிய இந்தியா எப்படி இருக்க வேண்டுமென்று அவருக்கென்று ஒரு லட்சியக் கனவு இருந்தது. பொறுமையுடனும், சகிப்புத்தன்மையுடனும், துணிவுடனும் இருக்குமாறும், அமைதி காத்து நமது ஜனநாயக அமைப்பை நிலைநிறுத்துமாறும் பொது மக்களைக் கேட்டுக் கொள்கிறேன். உணர்ச்சிகளுக்கு நாம் அடிமையாகி விடக்கூடாது. இந்த நெருக்கடியை நமது நாடு மனத்திண்மையுடன் எதிர்கொண்டு, இதனின்று மிக விரைவில் விடுபடும் என்று நம்புகிறேன்.

ஜனநாயகத்தின் விரோதிகளாலும், நமது தொன்மையான பாரம்பரியத்துக்கும், கலாச்சாரப் பெருமைக்கும் எதிராய் இருப்பவர்களாலும் உருவாக்கப்பட்டுள்ள சவாலை எதிர்கொள்ள இந்தியத்திருநாடு முழுதுமே ஒன்றுபட்டு எழ வேண்டும்.

திரு. ராஜீவ் காந்தி அவர்களின் நினைவுக்குத் தலைவணங்குகிறேன்.



### மேதகு ஆளுநர்
### திரு. பீஷ்ம நாராயண்சிங்



காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டது எனக்குச் சொல்லொண்ணா அதிர்ச்சியை அளித்தது. இந்தக் கோழைத்தனமான செயலை ஆணித்தரமாகக் கண்டிக்க வேண்டும். கொலையாளியைக் கண்டுபிடிக்க அரசு அனைத்து முயற்சிகளையும் உறுதியாக எடுக்கும்.

திரு. ராஜீவ் காந்தி சிறந்த தேசியத் தலைவர். அவருடைய மறைவு எனக்கும் தேசத்திற்கும் பேரிழப்பாகும். இச்சோதனையான நேரத்தில் மக்களனைவரும் அமைதி காத்து, சட்டம் ஒழுங்கை நிலை நாட்டிட வேண்டும்.

திருமதி. சோனியா காந்திக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை இராஜாஜி மண்டபத்தில் பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக வைக்கப்பட்ட முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களின் அஸ்திக் கலசத்திற்கு, மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் அஞ்சலி செலுத்தினார் (28.5.1991).



# நம் காலத்தின் தலைசிறந்த ஒரு தலைவர் ராஜீவ்

**மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங்**

நமது பேரன்பிற்குரிய முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் இன்று நம்மிடையே இல்லை. தவறாக வழிநடத்தப்பட்ட சில சக்திகளின் சதிச் செயலுக்குப் பலியாகிவிட்டார். அவரது மறைவால் நாடு ஒரு மாபெரும் இளைய தலைவரை இழந்துவிட்டது.

திரு. ராஜீவ் காந்தி பொது வாழ்வில் சிறிது காலமே இருந்தார். அவர் 1981-இல் தான் பிறர் வலியுறுத்தி வேண்டிக் கொண்டதால் பொது வாழ்க்கைக்கு வந்தார். விரைவிலேயே நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். திருமதி இந்திராகாந்தியின் படுகொலைக்குப் பின் 1984-இல் நாட்டின் பிரதமரானார். தொடர்ந்து வந்த தேர்தலில் காங்கிரஸ் கட்சி மிகப் பெரிய வெற்றியைப் பெற்றது.

அவர் பிரதமர் பொறுப்பு வகித்த ஐந்து ஆண்டுக் காலமும் மகத்தானவை; நாட்டை எதிர்நோக்கியிருந்த சவால்களைச் சந்திக்கத் தேவையான சக்தியை அவர் நாட்டிற்கு வழங்கினார். பஞ்சாப் ஒப்பந்தம், அசாம் ஒப்பந்தம், மிசோரம் ஒப்பந்தம் ஆகியவை அவரது திறமைக்கும், முயற்சிக்கும் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். திரிபுரா பிரச்சினையையும் அவர் தீர்த்து வைத்தார். அசாம் ஒப்பந்தத்தைக் கொண்டு வருவதில் ராஜீவ் என்மீது வைத்திருந்த நம்பிக்கையையும் அவர் ஊட்டிய உற்சாகத்தால் எவ்வளவு விரைவாக அந்த ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டது என்பதையும் நான் நினைத்துப் பார்க்கிறேன்.

ராஜீவ் காந்தியின் எண்ணமெல்லாம் ஏழைகளின் நலனிலேயே இருந்தது. வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சிக்கான அமைப்பாகிய வடகிழக்குக் கவுன்சிலுக்கு நான் தலைவராக இருந்தபொழுது, திரு. ராஜீவ் காந்தி அவர்கள், திட்ட ஒதுக்கீட்டில் 80 சதவீதம் அதிகம் ஒதுக்கினார். வடகிழக்கு மாநிலங்களில் 60 சதவீத மக்கள் பழங்குடி மக்கள் ஆவர். அவர்களுடைய முன்னேற்றத்தில் ராஜீவ் சிறப்பான அக்கறை கொண்டிருந்தார். மேலும், அவருடைய ஆர்வத்தின் பலனாகவே யூனியன் பிரதேசங்கள் மாநிலங்களாக்கப்பட்டன.

அவருடைய துணிச்சல்மிக்க முயற்சிகள் நீண்ட நெடுங்காலத்திற்கு நினைவுகூரப்படும். அவருடைய நிதிநிலை அறிக்கைகள் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்குப் புத்துயிர் ஊட்டுவன என்று போற்றப்படுகின்றன. தனிமனிதனின் வரிச் சுமையைக் குறைத்து, தொழில் வளர்ச்சிக்குச் சலுகைகளை வழங்கி, விஞ்ஞான ஆராய்ச்சியை வளர்த்த ராஜீவின் பொருளாதாரத் திட்டங்கள் முதன்முதலாக ஒரு நீண்டகால நிதிக்கோட்பாட்டை உருவாக்கி நாட்டில் பொருளாதார முன்னேற்றத்திற்கு நிலைபேற்றையும், செல்லும் திசையையும் நிர்மாணித்தன.

பிரச்சினைகளைத் தீர்க்க ராஜீவ் காந்தி பயன்படுத்திய தெளிவான கண்ணோட்டம் தனித்தன்மையோடு சுடர்விட்டுப் பிரகாசித்தது. கங்கை நதியைச் சுத்தமாக்குவதற்காக வகுக்கப்பட்ட மத்திய கங்கை திட்டம், தேசிய தரிசு நிலங்கள் வளர்ச்சிக்குழு, புதிய கல்விக் கொள்கை என முக்கியமான அனைத்துத் திட்டங்களிலும், ராஜீவின் துணிவுமிக்க அணுகுமுறை நாட்டின் முன்னேற்றத்திற்கு மிகவும் உறுதுணையாக இருந்தது.

நவீன இந்தியாவை உருவாக்க ராஜீவ் காந்தி தன்னையே அர்ப்பணித்துக் கொண்டிருந்தார். நாட்டை அவர் தலைமையேற்று நடத்திச் சென்ற பாங்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பாராட்டைப் பெற்றது.

''மனிதத் தகுதிகளில் முதன்மையானது துணிவு தான். ஏனென்றால் அது மற்ற அனைத்துத் தகுதிகளையும் உறுதிப்படுத்துகிறது'' என சர்ச்சில் ஒரு முறை கூறினார்.

ராஜீவ் காந்தியின் துணிச்சலும், நம்பிக்கையும், நாட்டை எதிர்நோக்கி வந்த சவால்கள் பலவற்றையும் எளிதாகச் சந்திக்கவும், சோதனைகளிலிருந்து நாட்டைக் காக்கவும் உதவின. நம் காலத்தின் தலைசிறந்த ஒரு தலைவரை இழந்து தவிக்கும் இந்த நேரத்தில், வாழ்விலும், சாவிலும் ராஜீவ் காந்தியின் குறிப்பிடத்தக்க அம்சமாக விளங்கிய இந்தத் துணிச்சலை நாம் பெற்று நாட்டை எதிர்நோக்கியுள்ள சவால்களைச் சந்திக்க வேண்டியது நம் கடமையாகும்.

(22.5.1991 அன்று சென்னை வானொலியில் ஆற்றிய உரை)



எண்ணம் கவரும் வண்ணமிகு

# கைத்தறித் துணிகள்!

கைத்தறித் துணிகளின் பெரும் பகுதி விற்பனை தீபாவளி மற்றும் பொங்கல் ஆகிய இவ்விரண்டு விழாக் காலங்களில் நடைபெறுகிறது. பொங்கலுக்கு அடுத்து 9 முதல் 10 மாதங்களுக்குப் பிறகு தான் தீபாவளி வருகிறது. இடைப்பட்ட காலத்தில் கைத்தறித் துணிகளின் விற்பனை அதிக அளவில் நடப்பதில்லை. எனவே, கூட்டுறவுத் துறையில் செயல்படும் கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு தருவதற்காகப் பொங்கலுக்கும், தீபாவளிக்கும் இடைப்பட்ட காலத்தில் தயாராகும் கைத்தறித் துணிகளின் விற்பனைக்கு, ஒரு கைத்தறிக் கண்காட்சி ஏற்பாடு செய்வது மிக அவசியத்தேவை என்று உணரப்பட்டது.

இதனைக் கருத்தில் கொண்டு, ஒவ்வோராண்டும் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. அதன்படி, ஒவ்வோர் ஆண்டும் சென்னை மாநகரம், மாவட்டத் தலைநகர்கள் மற்றும் முக்கிய நகரங்களில் கைத்தறிக் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன. சென்னையில், பாந்தியன் சாலையில் அமைந்துள்ள கோ- ஆப்டெக்ஸ் கண்காட்சித் திடலிலும், தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட முக்கிய நகரங்களிலும் (10.5.91 முதல் 24.5.91 வரை) கைத்தறிக் கண்காட்சிகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன

1. காஞ்சிபுரம், 2. மதுரை, 3. திண்டுக்கல், 4. விருதுநகர், 5. திருநெல்வேலி, 6. நாகர்கோவில், 7. சேலம், 8. கோயம்புத்தூர், 9. ஈரோடு, 10. திருச்சி, 11. தஞ்சாவூர், 12. வேலூர், 13. கடலூர், 14. காரைக்குடி.

10.5.91 அன்று மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் 37-வது கைத்தறி விழாவினைத் துவக்கி வைத்தார். ஆளுநரின் ஆலோசகர் திரு. வி. இராமச்சந்திரன் அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கினார். தமிழக அரசின் கைத்தறித்துறைச் செயலர் திரு. மு. பரமசிவம், இ.ஆ.ப., கைத்தறி மற்றும் நெசவாலைத்துறை இயக்குநர் திரு. ம. இராமன், இ.ஆ.ப., ஆகியோர் விழாவில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள். முன்னதாக, கோ-ஆப்டெக்ஸ் மேலாண் இயக்குநர் திரு. என்.பி. குப்தா, இ.ஆ.ப., அனைவரையும் வரவேற்றார்.

தமிழ்நாட்டில் உள்ள பிரதமக் கூட்டுறவுச் சங்கங்கள், துகில் நிறுவனம் மற்றும் இதர மாநிலங்களாகிய ஆந்திரப் பிரதேசம், பாண்டிச்சேரி, அரியானா, உத்திரப்பிரதேசம் ஆகியவற்றின் கைத்தறி அமைப்புகளின் கைத்தறித் துணிகள் 50 கடைகள் மூலம், வாடிக்கையாளர்களின் பார்வைக்காகவும், விற்பனைக்காகவும் இந்தக் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன.

இந்தக் கண்காட்சியில் பல சிறப்பு இரகங்கள் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தன. அவை: பட்டுப் புடவைகள், பருத்திச் சேலைகள், பாலியஸ்டர் சேலைகள், போர்வைகள் மற்றும் திரைச் சீலைகள், சட்டைத் துணிகள், வேட்டிகள், லுங்கிகள், துண்டுகள், ஆயத்த ஆடைகள், அச்சிட்ட துணி இரகங்கள், ஆடைத் துணிவகைகள், மற்ற இதரக் கைத்தறித் துணி வகைகள். ஆகியவையாகும்.

கடந்த ஆண்டு (1990) சென்னையில் நடந்த கண்காட்சியின்போது, ரூ.173 இலட்சம் துணி வகைகள் விற்பனை செய்யப்பட்டன. இந்த ஆண்டு (1991) ரூ.250 இலட்சம் விற்பனையாகும் என எதிர்பார்க்கப் படுகிறது.

அறிமுகப்படுத்தப்பட்ட புது இரகங்கள் பல: கோவை, சேலம், திருச்சி, மதுரை மாநகரின் கைத்தறி நெசவாளர்களின் கைத்திறமையைக் கருத்தில் கொண்டு, அதற்கேற்ப அழகிய வேலைப்பாடுடன் நவீன வடிவங்களையும் மற்றும் பழங்கால வடிவங்களைப் புதுப்பிக்கும் எண்ணத்துடனும் புதிய இரகங்கள் விற்பனைக்கு வந்திருந்தன.

'குறவஞ்சி' என்ற பெயரில் அழகிய வடிவங்களைக் கொண்ட தொகுப்பு ஒன்றும் சேலம், திருச்சி மற்றும் கோவையைச் சேர்ந்த நேர்த்திமிகு கைத்தறி நெசவாளர்களால் நூலினால் நெய்த சேலைகளும் இந்தக் கண்காட்சியில் அனைவரையும் கவர்ந்தன

## இரண்டாம் அட்டை சொல்லும் செய்தி:

பட்டுத்துணி விற்பனையைப் பெருக்குவதற்காகக் கோ-ஆப்டெக்ஸ் தனிப்பட்ட பட்டு விற்பனை நிலையங்களில் குளிர் சாதன வசதி செய்யப்பட்டு, ஏராளமான புது வடிவமைப்புகளுடன் கூடிய சேலைகளை வைத்ததில், பட்டுத் துணிகளின் விற்பனை அதிகரித்துள்ளது.

1989-90-ஆம் ஆண்டில் ரூ.24.12 கோடியாக இருந்த விற்பனை, 1990-91- ஆம் ஆண்டு ரூ.28.49 கோடியாக உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.



சித்த மருத்துவத்தின் சிறப்பு:

# பிணி தீர்க்கும் பற்பாடகம்

டாக்டர் ஏ.ஆர்.என். துரைராஜ்

**ப**ற்பாடகம் என்றால் என்ன?

இது ஒரு பூண்டினத்தைச் சேர்ந்தது. பற்பாடகம் என்னும் இந்தப் பூண்டு சுமார் அரை முதல் ஒரு அடி உயரம் வரை வளரும். மெல்லிய கம்பி போன்று வளர்ந்து, ஊசி போன்ற இலைகளையும் சிறிய குண்டூசி போன்ற கதிர்களையும் உடையதாக இருக்கும். சுமார் கடுகளவுள்ள இதன் கதிர்களை வாயில் போட்டால் குழகுழப்பாக இருக்கும். இது பனி, மழைக்காலங்களில் மேடான சமவெளிகள், குன்றுகள், பாறைகளின் சரிவு, இரும்புச் சத்துள்ள மண் பூமிகள் ஆகிய இடங்களிலும் இருப்புப் பாதையோரங்களில் ஏராளமாக வளருவதைக் காணலாம்.

சீதள, வாத, கப, பித்த, நச்சுக் காய்ச்சல், சூதக ஜன்னி, கபம், சளி, இருமல், இளைப்புக்காசம், குளிர் காய்ச்சல், பேதி, டிங்கு காய்ச்சல், களைப்பு, நீர்த்தாகம், அழுக்கு, நாற்றம், உடல் வெப்பம் அனைத்துக்கும் இந்தப் பற்பாடகம் பயன்படும்.

**ஒருநாள்விட்டு ஒரு நாள் வரும் காய்ச்சலுக்கு:**

பற்பாடகம் 12 கிராம், பேய்ப்புடல் 12 கிராம், அதிமதுரம் 12 கிராம், சீந்திற்றண்டு 12 கிராம். சீந்திற்றண்டு வேர் 12 கிராம், கொடுப்பைவேர் 12 கிராம், முத்தக்காசு 12 கிராம், மல்லி 12 கிராம், சுக்கு 12 கிராம் ஆக அனைத்தையும் ஒன்று சேர்த்து இடிக்க வேண்டும்; பிறகு அதை ஓர் மண்பாண்டத்தில் போட்டு ஒரு படி தண்ணீர் விட்டு (⅛ படி) அரைக்கால்படியாய் வற்ற வைத்து எடுத்து அதில் தேன்விட்டு அருந்தினால் ஒருநாள்விட்டு ஒரு நாள் வரும் காய்ச்சல் நாளடைவில் தீரும். இதுபோல் 6 நாள் உபயோகப்படுத்தவும்.

**ஜன்னி மற்றும் சீதவாதக் காய்ச்சலுக்கு:**

பற்பாடகம் 9 கிராம், சுக்கு 9 கிராம், வெட்டிவேர் 9 கிராம், விலாமிச்சு 9 கிராம், சிறுதேக்கு 9 கிராம் இவை அனைத்தும் சுத்தம் பார்த்து அம்மியில் வைத்து இடித்து, இடித்ததை ஓர் மண்பாண்டத்தில் போட்டு, சுமார் ஐந்து டம்ளர் தண்ணீர் அதில் ஊற்ற வேண்டும். பிறகு அடுப்பில் வைத்து, இரண்டு டம்ளர் கஷாயமாகக் காய்ச்சி எடுத்து தினம் 3 முதல் 4 தடவை இரண்டு முடக்கு வீதம் அருந்த மேற்கண்ட ஜன்னி மற்றும் சீதவாதக் காய்ச்சல் அனைத்தும் நீங்கும்.

**கபம், சளி, இருமல், இளைப்பு, காசம் இவை நீங்க:**

பற்பாடகம் 12 கிராம், ஆடாதொடை 12 கிராம், தூதுவளை 12 கிராம், சுக்கு 12 கிராம், திப்பிலி 12 கிராம், மிளகு 12 கிராம் இவைகள் அனைத்தையும் அம்மியில் வைத்து இடித்து, இடித்த தூளை ஓர் மண்பாண்டத்தில் போட்டு ஒரு படி தண்ணீர் விட்டு நன்கு காய்ச்சிய கஷாயத்தை நாள்தோறும் 4 வேளை அருந்தி வந்தால், நாளடைவில் மேற்கண்ட துன்பங்கள் நீங்கும்.

**குளிர், பித்தக் காய்ச்சல் இவை நீங்க:**

பற்பாடகம் 6 கிராம், அதிமதுரம் 6 கிராம், வெட்டிவேர் 6 கிராம், மல்லி 6 கிராம், பரங்கிப் பட்டை 6 கிராம், நன்னாரி 6 கிராம், தூதுவளை 6 கிராம், ஆடாதொடை 6 கிராம், சுக்கு 6 கிராம், லவங்கம் 6 கிராம், கற்கண்டு 6 கிராம் ஆக அனைத்தையும் அம்மியில் வைத்து இடித்து, இடித்ததை ஓர் மண்பாண்டத்தில் போட்டு ஒரு படி தண்ணீர் ஊற்றி அடுப்பில் வைத்து சுண்டக் காய்ச்ச வேண்டும்; அதை வடிகட்டி, சிறுவர் முதல் பெரியோர் வரை ஒரு முடக்கு வீதம் அருந்திவர நாளடைவில் மேற்கண்ட பிணிகள் நீங்கும்.




**அடிக்கடி தோன்றும் காய்ச்சலுக்கு:**

பற்பாடகம் 6 கிராம், நெற்பொரி 6 கிராம், வறுத்த பாசிப் பயறு, வில்வவேர் 6 கிராம், அதிமதுரம் 6 கிராம் இவை அனைத்தையும் இடித்து இடித்ததை ஓர் மண்பாண்டத்தில் போட்டுத் தகுந்த தண்ணீர் விட்டுக் காய்ச்சி அருந்தி வந்தால் உடல்நலம் பெறும்; அடிக்கடி தோன்றும் காய்ச்சல் நீங்கும்.

**பழைய ஜுரம் காணப்பட்டால்:**

பற்பாடகம் 3 கிராம், சீந்தில் கொடி 3 கிராம், கோஷ்டம் 3 கிராம், சிறுதேக்கு 3 கிராம், திப்பிலி 3 கிராம், நிலவேம்பு 3 கிராம் சுக்கு 3 கிராம், ஆடாதொடை 3 கிராம் ஆக அனைத்தும் இடித்து, தகுந்த நீர் விட்டுக் காய்ச்சி கஷாயத்தை அருந்தி வரவேண்டும்.

**பேதியாகும் விஷக் காய்ச்சலுக்கு:**

பற்பாடகம் 6 கிராம், மாம் பட்டை 6 கிராம், கோரைக்கிழங்கு 6 கிராம், இலவம்பிசின் 6 கிராம், கஞ்சாங்கோரை 6 கிராம், வெட்டிவேர் 6 கிராம், சுக்கு 6 கிராம், மல்லி 6 கிராம் இவை அனைத்தையும் இடித்துப் போட்டுக் காய்ச்சி கஷாயத்தை ஒரு முடக்கு வீதம் அருந்தி வர அவை நீங்கும்.

**உடல் சூடு தணிய, பித்த நோய் நீங்க.**

தேவையான பற்பாடகத்தைப் பச்சையாக எடுத்து அம்மியில் வைத்துப் பசும்பால் விட்டு அரைத்துத் தினமும் தலைக்கு வைத்து உடம்பில் தேய்த்துக் குளித்துவந்தால் நாளடைவில் உடல்சூடு தணிந்து போகும், பித்த நோய்கள் போகும்.

கண்பார்வை குறைந்தவர்கள் பச்சையாகத்தினமும் சாப்பிட்டு வந்தால் நாளடைவில் கண்பார்வை நன்கு தெரியும்.

குறிப்பு- இவை அனைத்துச் சரக்குகள் யாவும் நாட்டு மருந்துக் கடைகளில் கிடைக்கும். இக்கஷாயங்களைத்தயார் செய்யும்போது, கவனிக்க வேண்டிய முக்கிய விதி என்னவென்றால், காய்ச்சும் பாண்டம் மண்பாண்டமாக இருத்தல் அவசியம்.

'டிங்கு' காய்ச்சல் என்று அழைக்கப்படும் உடல் வலியுடன் கூடிய ஒருவகை விஷக் காய்ச்சலுக்கு இந்தப் பற்பாடகம் கைகண்ட மருந்து.

இந்த நோய் கண்டவர்களுக்குக் கடுமையான காய்ச்சல் இருக்கும். மற்றும் முழங்கால் - முழங்கைகளில் நல்ல வலி காணும். பொதுவாக உடம்பு முழுவதும் முறித்துப் போட்டது போல வலிக்கும். இந்நோயைப் போக்க பற்பாடகத்துடன் சீரகம், நிலவேம்பு, அதிமதுரம், சுக்கு ஆகியவை சம எடை சேர்த்து ஒரு லிட்டர் தண்ணீரில் போட்டு நான்கில் ஒரு பங்கு அளவாகக் காய்ச்சி வேளைக்கு இரண்டு அவுன்ஸ் வீதம் ஒரு நாளைக்கு 4 அல்லது 5 வேளை அருந்த வேண்டும்.

காய்ச்சல் மிகக் கடுமையாகவும், உடல் வலி மிகுதியாகத்தூங்க இயலாத அளவுக்கும் இருந்தால் - மேலே சொன்ன கஷாயத்துடன் ஓமம், திப்பிலி, பேய்ப்புடல், வேப்பம்பட்டை, ஆதி நாராயணன் இலை ஆகிய சரக்குகளைச் சம எடை சேர்த்துக் காய்ச்சி அக்கஷாயத்தை அருந்தி வரும் பட்சம் உடனடியாகக் குணம் காணும்.

குறிப்பு: இக் கஷாயத்தை எல்லா விதமான காய்ச்சல்களுக்கும் தரலாம். குறிப்பாக முறைக் காய்ச்சலுக்கு மிகவும் நல்லது.

**வைசூரி தொடர்பான காய்ச்சல் ஏற்பட்டால்:**

பற்பாடகம் 20 கிராம், சந்தனத் தூள் 20 கிராம், கோரைக்கிழங்கு 20 கிராம், விலாமிச்சம்வேர் 20 கிராம், சீந்திற்கொடி 20 கிராம், ஏலம் 20 கிராம், எலுமிச்சம்வேரின் பட்டை 20 கிராம் இவைகள்

## கல்லீரல் புற்றுநோய்க்குக் காரணம் என்ன?

கல்லீரலில் புற்றுநோய் ஏற்படுவதற்கு மனித உடலில் உள்ள ஒரு குறிப்பிட்ட மரபுக்கூறின் குறிப்பிட்ட ஒரு பகுதி பாதிக்கப்படுவதுதான் காரணம் என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர். சீனாவிலும், தென் ஆப்பிரிக்காவிலும் நடத்தப்பட்ட ஆய்வுகள் மூலம் இது தெரியவந்துள்ளது. கல்லீரல் புற்றுநோயால் உலகில் ஆண்டுதோறும் 2,50,000 பேர் இறந்து போகிறார்கள்.

மனித உடலில் 'பி-53' என்னும் மரபுக்கூறுதான், உடலில் தேவையற்ற செல் வளர்ச்சி (புற்றுநோய்) ஏற்படாமல் தடுத்து நிறுத்துகின்றது. இந்த மரபுக்கூறு பாதிக்கப்பட்டால் புற்று நோய் ஏற்படுகிறது. மார்பகங்கள், மூளை, பெருங்குடல், சிறுநீர்ப்பை போன்று உடலின் பல பகுதிகளில் புற்றுநோய் ஏற்படுவதற்கு இந்தக் குறிப்பிட்ட மரபுக்கூறு பாதிக்கப்படுவதுதான் காரணம் என்று ஏற்கெனவே நடத்தப்பட்ட ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது.

இப்போது இந்த மரபுக்கூறில் 'கோடான்-249' என்று அழைக்கப்படும் குறிப்பிட்ட பகுதி பாதிக்கப்படுவதால்தான் கல்லீரலில் புற்றுநோய் ஏற்படுகிறது என்று கண்டறியப்பட்டுள்ளது.

'பி-53' என்னும் செலலின் குறிப்பிட்ட இந்தப் பகுதி பாதிக்கப்படுவதற்குக் காரணங்கள் என்னென்ன?

வெதுவெதுப்பான, ஆனால் ஈரம் உள்ள பகுதிகளில் சேமித்து வைக்கப்படுகின்ற உணவு தானியங்கள் மற்றும் இதர வகை உணவுப் பண்டங்களின் மீது ஒருவித பூஞ்சைக் காளான் படர்கிறது. இந்த உணவு வகைகளை உட்கொண்டால், இந்தக் காளானில் உள்ள 'அப்லோடாக்சின் பி-1' (Aflotoxin B1) என்னும் நச்சுப்பொருள் 'பி-53' மரபுக்கூறின் குறிப்பிட்ட பகுதியைத் தாக்கிக் கல்லீரல் புற்றுநோய்க்குக் காரணமாவதாகக் கருதப்படுகிறது. ஆப்பிரிக்காவில் சகாராவின் வெப்ப மண்டலப் பகுதிகளிலும், தூரக்கிழக்கு நாடுகளின் சில பகுதிகளிலும் இதுபோன்ற பாதிப்பு அதிகமாக உள்ளது.

—அமெரிக்கத் தகவல் நிலையம்

# மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, புதுக்கோட்டை
## வறுமை ஒழிப்புத் திட்டம் - சாதனை 1990-91

1. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்
   - அ. நிதி ஒதுக்கீடு : 169.914 இலட்சங்கள்
   - ஆ. செலவினம் : 189.935 ,,
   - இ. மொத்த பயனாளிகள் : 5,401 ,,
   - ஈ. பயனடைந்தோர் : 7,119 ,,
   - உ. தாழ்த்தப்பட்டோர் : 3,010
   - ஊ. பெண்கள் : 2,632 ,,
2. ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம்
   - அ. நிதி ஒதுக்கீடு : 726.45 இலட்சங்கள்
   - ஆ. செலவினம் : 668.334 ,,
   - இ. தொகுப்பு வீடுகள் : 1,150 ,,
   - ஈ. பள்ளிக் கட்டடங்கள்: 53
   - உ. ஊராட்சி அலுவலகங்கள் : 54
   - ஊ. தார் சாலை : 13
   - எ. மெட்டல் சாலை : 22
   - ஏ. ஊராட்சி வேலைகள் : 735
   - ஐ. பேரூராட்சி வேலைகள் : 22
3. வேளாண்மை பெருக்குத் திட்டம்
   - அ. நிதி இருப்பு : 33.601 இலட்சங்கள்
   - ஆ. செலவினம் : 16.393 ,,
   - இ. சிறுபாசன தலைப்பில் பயனடைந்தோார் : 460
   - ஈ. நிலச்சீர்திருத்தம் : 88
4. ஊரக இளைஞர் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புத் திட்டம்
   - அ. நிதி இலக்கு : 12.230 இலட்சங்கள்
   - ஆ. செலவினம் : 8.54 ,,
   - இ. மொத்த பயனாளிகள் : 455
   - ஈ. பயனடைந்தோர் : 453
   - உ. தாழ்த்தப்பட்டோர் : 178
   - ஊ. பெண்கள் : 203
5. சாண எரிவாயு
   - அ. மொத்த கலன்கள் : 200
   - ஆ. அமைக்கப்பட்ட கலன்கள் : 203
6. புகையில்லா அடுப்பு
   - அ. மொத்த அடுப்புகள் : 3,750
   - ஆ. அமைக்கப்பட்டவை : 3,750
7. சமூகக்காடுகள்
   - அ. நிதி ஒதுக்கீடு : 18.30 இலட்சங்கள்
   - ஆ. செலவினம் : 18.10 ,,
   - இ. சாதனை : 338
8. டோக்ராத் திட்டம்
   - அ. மொத்த குழுக்கள் : 90
   - ஆ. நிறுவப்பட்ட குழுக்கள் : 95
9. வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம் 1990-91
   - அ. மொத்த நிதி ஒதுக்கீடு : 64.024 இலட்சங்கள்
   - ஆ. 31.3.91 முடிய செலவினம் : 57.937 ,,
   - இ. செயல் இலக்கு : 1,608
   - ஈ. 31.3.91 முடிய செயல் இலக்கு சாதனை : 1,679

கு. சீனிவாசன்
திட்ட அலுவலர்/இணை இயக்குநர்
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, புதுக்கோட்டை.

ஷீலாராணி சுங்கத்
மாவட்ட ஆட்சியர்/பெருந்தலைவர்
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, புதுக்கோட்டை.






# நூலகத்தின் கதை

பல்வேறு நூல்களும், காலமுறை இதழ்களும் (Periodicals) முறைப்படி சேகரித்து ஓரிடத்தில் வைக்கப்பட்டிருக்கும் அறிவுக்களஞ்சியங்கள் நூல் நிலையங்கள் அல்லது நூலகங்கள் எனப்படும்.

'Library' என்ற சொல் இலத்தீன் மொழியில் இருந்து பிறந்தது ஆகும். 'லைபர்' என்பதற்குப் புத்தகம் என்பதே பொருள்.

பண்டைக் காலத்தில் இந்தியாவில் சமணர்களும், பௌத்தர்களும் கல்வியை வளர்த்து வந்தனர். அவர்கள் தங்கள் 'பள்ளிகள்' என்னும் மடங்களில் ஏட்டுச் சுவடிகள் பல சேர்த்து வைத்திருந்தனர். பின்னர் சைவ மடங்களிலும் ஏராளமான சுவடிகள் பாதுகாக்கப்பட்டன என்று தெரிகிறது.

அரசர்கள் அரண்மனைகளிலும் நூல்களைச் சேர்த்து வைத்து இருந்தனர் என்பதற்கு எடுத்துக்காட்டாகத் தஞ்சையில் உள்ள சரஸ்வதி மகால் நூலகம் விளங்குகிறது.

சுமார் கி.மு. 600 ஆண்டுகளுக்கு முன் செமப்பட்டோமியர் களிமண்ணாலான கூரான குச்சிகளால் எழுதும் முறையைக் கொண்டிருந்தனர். அக்களிமண் பலகைகள் தாம் நூல்கள் தோன்ற, புத்தகச்சாலைகள் தோன்றக் காரணமாக இருந்தன இதன் அடிப்படையில் கி.மு. 237-இல் எகிப்தில் ஹோரஸ் தேவாலய நூலகம் தோன்றியது.

பாபிலோனியாவில் உள்ள நிப்பூர் என்ற கிராமத்தில் 2,500 களிமண் பலகைகள் (Clay tablets) கண்டெடுக்கப்பட்டன. இவையே பாபிலோனிய நாகரிக மக்களின் நூல்கள் ஆகும் (இவற்றின் காலம் சுமார் கி.மு. 2000) அசிரிய மன்னர் ஆசூர் பானிபால் (Assurbani-bal கி.மு. 600) என்பவருடைய நூல் நிலையம் மிகப் பழமையானது.

இந்த நூல்களைக் கவனிப்பவர் எழுதிய பலகையர் (Men of written tablets) என்று அழைக்கப்பட்டார். இது நூலகர் (Librarian) என்று இப்போது வழங்கும் சொல்லை ஒத்ததாகும். இந்தப் பதவியை முதன் முதல் உலகத்தில் வகித்தவர் 'அமில் ஆனு' (Amil Anu) என்னும் பாபிலோனியராவார்

உரோமாபுரியில் நூல் நிலையம் முதன் முதலில் தோன்றியது கி.மு. 150 ஆகும். வெளிநாடுகளை வென்று அங்கிருந்து கொண்டு வந்த நூல்களைக் கொண்டே இந்த நூல் நிலையம் நிறுவப்பட்டது.

இங்கிலாந்தில் முதன்முதல் நூலகத்தை நிறுவியவர்களும் இத்துறவிகளே. இவர்கள் கி.மு. 596-இல் காண்டர்பரி என்ற ஊரில் நூலகத்தை அமைத்தனர். ஆக்ஸ்போர்டில் உள்ள புகழ் பெற்ற நூலகம் 'பிரான்ஸிஸ்கன்' துறவிகளால் தோற்றுவிக்கப்பட்டதாகும்.

பிரிட்டிஷ் பொருட்காட்சிச்சாலை நூலகம் உலகில் உயரியது. அது ஸ்லோன் என்பவருடைய அன்பளிப்பால் கி.பி. 1753-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. அப்போது 32,00,000 அச்சுப் பிரதிகளும், 56,000 கையெழுத்துப் பிரதிகளும் ஆயிரக்கணக்கான நாள், வார, திங்களிதழ்களும் கொண்டிருந்தது.

பிரான்ஸ் நாட்டு நூலகங்களில் மொத்தம் சுமார் 5 கோடி நூல்கள் உள்ளன என்று கணக்கிடப்பட்டுள்ளது. சிறந்த நூலகங்களுள் ஒன்றான பாரீஸ் பீப்ளியோத்தொக் நேஷனல் (Bibilotheque national) நூலகத்தில் 44,00,000-க்கு மேற்பட்ட அச்சுப்பிரதிகளும், 1,40,000 கையெழுத்துப் பிரதிகளும் உள்ளன என்று தெரிய வருகிறது.

ரஷ்யாவில் உள்ள உலகிலேயே மிகப் பெரிய லெனின் கிராடு நகர நூலகத்தில் 45,66,645 அச்சுப் பிரதிகளும் 2,40,000 கையெழுத்துப் பிரதிகளும் உள்ளன. மாஸ்கோவில் உள்ள லெனின் நினைவு நூலகம் இரண்டாவது பெரிய நூலகமாகும்.

இத்தாலியில் வாட்டிகன் நகரில் 1447-இல் உரோமன் கத்தோலிக்க போப்பாண்டவர் ஒரு நூலகத்தை நிறுவினார். இது அரிய நூல்களின் கருவூலமாக இயங்கி வருகிறது. சீனாவில் 1927-இல் 503 நூலகங்கள் இருந்தன. அவற்றுள் பீகிங் நகர நூலகமே பெரிது.

நூலக இயக்கத்தில் சப்பான் மிக முன்னேற்றம் பெற்றிருக்கிறது. டோக்கியோ நகர நூல் நிலையத்திலும், தியோடா பல்கலைக் கழக நூலகத்திலும் முறையே சுமார் 10 இலட்சம் நூல்கள் உள்ளன. சப்பானில் நகராட்சி நூலகங்கள் அதிகமாக உள்ளன.

அமெரிக்கா சிறந்த நூலக இயக்கத்தில் முன்னணி வகிக்கின்ற நாடு ஆகும். நியூயார்க் பொது நூலகத்தில் சுமார் 30 இலட்சம் நூல்கள் இருக்கின்றன.

கி.பி. 1800-ஆம் ஆண்டு நிறுவப்பட்டு 1897-ஆம் ஆண்டு தற்போதைய கட்டடத்திற்கு மாற்றப்பட்ட அமெரிக்க காங்கிரஸ் நூலகம், தேசிய நூலகமாகப் பணியாற்றுகிறது. நூலகக் கட்டடம் மிகுந்த பரப்புடையதாயும் அழகாகவும் பெரியதாகவும் உள்ளது. உலகில் சிறந்த மூன்றாவது நூலகமாக

எல்லாவற்றையும் நறுக்கிப் போட்டு அடுப்பில் வைத்து எட்டொன்றாய்க் கஷாயம் வைத்து மூன்று வேளை அருந்தி வரும் பட்சம் வைசூரியின் மேல் ஜுரம் ஏற்பட்டால் இவை நீங்கி உடல்நலம் பெறும்.

**வெட்டை, மேகம், எரிவு இவைக்கு:**

தேவையான பற்பாடகத்தை எடுத்து அரைத்துப் பாலில் அருந்தி வந்தால் நாளடைவில் எரிவு, காந்தல், மேகம் 3 வெட்டை அஸ்தி காங்கை யாவும் நீங்கி உடல் நலம் பெறும்.

**தாந்திரிக ஜன்னிக்கு:**

பற்பாடகம் 9 கிராம், கண்டங்கத்திரி 9 கிராம், கடுகு ரோகணி 9 கிராம், கச்சோலம் 9 கிராம், நிலவேம்பு 9 கிராம், கடுக்காய் 9 கிராம், நெல்லிப்பருப்பு 9 கிராம், சுக்கு 9 கிராம், திப்பிலி 9 கிராம் ஆகிய அனைத்தையும் அம்மியில் வைத்து இடித்து இடித்ததை ஓர் மண் பாண்டத்தில் போட்டு ஒரு படி தண்ணீர் ஊற்றி அடுப்பில் வைத்து சுண்டக்காய்ச்சி (¼ படி) அரைக் காற்படியாக வற்ற வைத்து அருந்த தாந்திரிக ஜன்னி நாளடைவில் நலமாகும்.

**வாதக் காய்ச்சலுக்குக் கஷாயம்:**

பற்பாடகம் 9 கிராம், சீந்தில் மலைதாங்கி 9 கிராம், கண்டங்கத்திரி 9 கிராம், செம்முள்ளி 9 கிராம், முன்னை 9 கிராம், இவைகளின் வேர் முத்தக்காசு 9 கிராம், சுக்கு 9 கிராம் ஆகிய அனைத்தும் அம்மியில் வைத்து இடித்து இடித்ததை ஓர் மண்பாண்டத்தில் போட்டு 400 மி.லி. தண்ணீர் ஊற்றி (¼ படியாய்) வற்ற வைத்து அருந்தக் கொடுக்கவும். இதன்படி 6 வேளை கொடுக்கவும். வாதக் காய்ச்சல் நீங்கும்.

**சீத, பித்தத்திற்கு:**

தேவையான அதிமதுரத்தை எடுத்து, பற்பாடகச்சாற்றில் கலந்து கஷாயம் செய்து அருந்தி வரவும். நாளடைவில் சீத பித்தமானது நீங்கும். அக்கஷாயத்தில் கொஞ்சம் தேன் கலக்கலாம்.

**குறிப்பு:** வறுத்த உப்பு, சுட்ட புளி சேர்க்கவும்.

வெள்ளை நோய் உள்ளவர்களுக்கு, தேவையான பற்பாடகத்தை எடுத்துச் சுத்தம் பார்த்து அம்மியில் வைத்து அரைத்து எலுமிச்சங்காயளவு செய்து ஆவின் பாலிற் கலந்து சர்க்கரை சேர்த்து 3 நாள் சாப்பிட நாளடைவில் வெள்ளை நோய் நிற்கும்.

**குறிப்பு:** கருவாடு, மீன், அகத்திக் கீரை நீக்கவும்.

மகப்பேற்றுக்கு எளிதாக:

தேவையான பற்பாடகமும், ஐந்தாறு நாக்குப் பூச்சிகளைக் கலந்து அம்மியில் வைத்து சேர்த்தரைத்து, அரைத்ததை எடுத்துப் புன்னைக் காயளவு வெற்றிலையில் வைத்துச் சுருட்டி உள்ளுக்கு தின்னக் கொடுக்கவும். பிரசவம் எளிதாகும்.

**தெளிவான பார்வை உண்டாக:**

தேவையான பற்பாடகத்தை எடுத்து அம்மியில் வைத்துச் சிறிது தண்ணீர் தெளித்து இடித்துச் சாறு பிழிந்து அதில் பசுவின் பால் சேர்த்துத் தலையில் ஊற்றி நன்கு அறக்கித் தேய்த்து முழுகிவர ஆறு-ஏழு முழுக்கில் கண் பார்வை நன்றாய் தெரியும்.

**குறிப்பு:** சாலேசுரம், கண் மத்திபம் கண் தெரியாதவர்கள் செய்முறையைச் செய்து பலன் அடையலாம்.

**சித்த பிரமை ஏற்பட்ட ஜன்னி நிவர்த்தியடைய:**

பற்பாடகம் 9 கிராம், கடுக்காய் 9 கிராம், கடுகுரோகனி 9 கிராம், நிலவேம்பு 9 கிராம், முந்திரிப்பழம் 9 கிராம், தேவதாரம் 9 கிராம், தண்ணீர் விட்டான் கிழங்கு 9 கிராம், முத்தக்காசு 9 கிராம், கொன்றைப்பட்டை 9 கிராம், பேய்ப்புடல் 9 கிராம், தேசாவரம் 9 கிராம் ஆகிய அனைத்தையும் ஒன்று சேர்த்து அம்மியில் வைத்து இடித்து இடித்த தூளை ஓர் மண்பாண்டத்தில் போட்டு அதில் ஒரு படி தண்ணீர் ஊற்றி நன்கு காய்ச்சி அரைக்காற்படியாய் வற்ற வைத்து அருந்தச் சொல்லவும். இவ்விதமாக 6-போது கொடுக்க சித்தப்பிரமையில் ஏற்பட்ட ஜன்னி நீங்கி உடல் நலம் பெறும்.

**குறிப்பு:** இந்தச் சரக்குகள் யாவும் நாட்டு மருந்துக் கடைகளில் கிடைக்கும்.

**விஷக் காய்ச்சலுக்கு:**

பற்பாடகம் 9 கிராம், சிறு புள்ளடி 9 கிராம், வேப்பீர்க்கு 9 கிராம், சித்திரமூலம் 9 கிராம், கோழியவரை வேர் 9 கிராம், சுக்கு 9 கிராம், செவ்வியம் 9 கிராம் ஆக அனைத்தும் ஒன்றுசேர்த்து இடித்து, மண்பாண்டத்தில் போட்டுத் தேவையான நீர் ஊற்றி அடுப்பில் வைத்துக் காய்ச்சி இறக்கி அக்கஷாயத்தை அருந்தினால் நாளடைவில் விஷஜுரம் நீங்கி நலம் காணலாம்.

**தளிர் ஜுரம் நடுக்கல் ஜுரம் கண்டால்:**

மிளகைக்கஷாயஞ்செய்து அருந்தினாலும் அல்லது பற்பாடகம் 35 கிராம், தேவதாரம் 35 கிராம், கடுக்காய் 35 கிராம், சுக்கு 35 கிராம், கண்டங்கத்திரி 35 கிராம், கோஷ்டம் 35 கிராம், குமிழ்வேர் 35 கிராம், சிறுதேக்கு 35 கிராம் ஆகிய அனைத்தையும் ஒன்றுசேர்த்து இடித்து இடித்தத்தூளை ஓர் மண் பாண்டத்தில் போட்டு 2 படி நீர் விட்டு நன்கு காய்ச்சி எட்டொன்றாய் வற்ற வைத்து இறக்கி விடவும். இதை அருந்தி வரும் பட்சத்தில் நடுக்கல் ஜுரம் நீங்கி உடல்நலம் பெறும்.

**பொதுப்பண்பு:**

கஷாய முறைகளில் சேர்க்கும் மருந்துகளில் பற்பாடகம் முக்கியத்தில் ஒன்று எனலாம்.

பற்பாடகம் இல்லாத கஷாய வகை பலன் தராது என்பது சித்தர்களின் கருத்தாகும். ●

> தமிழ்நாட்டிலுள்ள பெரியார் மாவட்டத்தில் ஊரகத் துப்புரவுத் திட்டம் 1988-89-ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. ''யூனிசெப்'' நிறுவனத்தின் உதவியுடன் ஊரக வளர்ச்சித் துறையால் இத்திட்டம் நிறைவேற்றப்படுகிறது.
>
> ரூ.1,600 செலவில் ஒவ்வொரு கழிப்பறையும் கட்டப்படுகின்றன. இச்செலவில் 20 சதவிகிதத் தொகையைப் பயனடைவோர் ஏற்றுக் கொள்ள வேண்டும்.
>
> 35,000 கழிப்பறைகள் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதில், இதுவரை 15,096 கழிப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.



# நில அளவைத் துறையின் சாதனைகள்

ச. மெய்கண்ட தேவன் இ.ஆ.ப.,
இயக்குநர்
நில அளவை - நில வரித் திட்டம்

**தமிழக நில அளவைத்துறை, இந்திய நாட்டில் உள்ள மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக உள்ளது என்பது வரலாற்று உண்மை.**

**இத்துறையின் இன்றியமையாப் பணிகளை விளக்குகிறது இக்கட்டுரை.**

இந்தியாவில் - குறிப்பாகத் தமிழகத்தில் நில அளவை எனும் அறிவியல் கி.பி. 989 முதல் கி.பி. 1011 வரை தஞ்சாவூரை ஆட்சி செய்த இராஜராஜ சோழன் காலத்தில் செயல்படத் துவங்கியது என்பது வரலாறு.

இந்தியா முழுவதற்கும் ''ஸ்டான்டர்டு மெர்டியன்'' என்பது சென்னையில்தான் அளந்து எடுக்கப்பட்டது. 10.4.1802-இல் கிரேட் ட்ரிக்னாமெட்ரிகல் ஸ்டேஷனுக்கு அடிப்படை அளவு (Base Line) செயிண்ட் தாமஸ் மலைச் சிகரத்திலிருந்து தற்போதைய இராஜாஜி மண்டபத்திற்கு எடுக்கப்பட்டது. இந்த இரண்டு அளவுகளின் புள்ளிகளை மற்ற நிலையங்களுடன் இணைப்பதற்கு 62 ஆண்டுகள் எடுத்துக் கொள்ளப்பட்டன என்பதை அறியும்போது வியப்பு மேலிடுகிறது.

நில அளவைப் பணி செய்ய 1859-ஆம் ஆண்டில் நில அளவை நடைமுறை நூல் முதன் முதலில் வெளியாயிற்று. அப்போது ஏற்பட்ட அனுபவங்களின் வாயிலாகத் திவான் பகதூர் திரு. எம். இராமசாமி அவர்களால் 1911-ஆம் ஆண்டில் முழு வடிவில் ''சர்வே மான்யுவல்'' புத்தகம் தொகுத்து வெளியிடப்பட்டது. இதன் பின் திரு. எப்.பி. வின்செண்ட் காம்பட்ஸ் (F.P. Vincent Computz) என்ற நில அளவை இயக்குநரால் 1923-ஆம் ஆண்டில் திருத்திய சர்வே மான்யுவல் புத்தகம் சட்டங்களுடன் வெளியிடப்பட்டது. இதை அடிப்படையாகக் கொண்டு தமிழ்நாடு நில அளவை மற்றும் எல்லைச் சட்டம் 1923 (சட்டம் 8/1923) நடைமுறைக்கு வந்தது. நில அளவைத் துறை வரையறை செய்யப்பட்டு, தனது நூற்றாண்டை 1968-இல் கொண்டாடி, தனது சாதனைகளையும் பெருமைகளையும் வெளிப்படுத்தி உள்ளது.

தமிழக நில அளவைத்துறை, இந்திய நாட்டில் உள்ள மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக உள்ளது என்பது வரலாற்று உண்மையாகும்.

நில அளவையின் தோற்றம் மிகவும் சுவையானதாகும்.



ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்திற்குச் சென்று கொண்டிருந்த ஒருவர் தனக்கு வழி தெரியாமல் அந்தக் கிராமத்தில் உள்ள ஒரு பெரியவரிடம் கேட்டார். அந்தப் பெரியவர் தன் கையில் வைத்திருந்த கைத்தடியால் தரையில் கோடு கிழித்து, அந்தக் கிராமத்திற்குச் செல்லும் வழியில் உள்ள பாதைகள், முக்கிய நதிகள், குன்றுகள் போன்ற விவரங்களைக் காட்டினார். இவ் வாறு தரையில் வரையப்பட்ட படம் பின்பு, தாளில் வரைபடமாகக் காட்டும் நிலை ஏற்பட்டது.

தமிழகத்தில் சில மாவட்டங் களில் 19-ஆம் நூற்றாண்டின் முன் பகுதியில் நிலத்தை ஒரு கோலால் நீளம் அகலம் ஆகியவைகளை அளந்து தோராயமாகப் பரப்பளவு கணக் கிட்டு பைமாஷ் எண்ணும் தரப் பட்டது. பின்னர் இதுவே சங்கிலி கொண்டு அளவை செய்யும் நிலைக்கு வளர்ச்சி அடைந்தது.

தற்போது இதையும் விஞ்சும் வகையில் 'ஏரியல் சர்வே' செய்து அதைக் கொண்டு படம் வரையும் முறை செயல்பட்டு வருவது நில அளவை வரலாற்றின் மிகப் பெரிய சாதனையாகும். ஏரியல் சர்வே செய்ததை தற்போது நவீனக் கருவிகள் மூலம் பார்க்கும்போது, ஒரு வீட்டில் உள்ள சிறிய மரங்கள் செடிகளைக் கூடப் பலவித வண்ணங்களில் துல்லியமாகக் காணமுடிகிறது. இதற் கான கருவி சுமார் ரூ.20 கோடி செலவில் சென்னையில் உள்ள அண்ணா பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

**நில அளவைத்துறையில் செய்யப்பட்ட சில குறிப்பிடத்தக்க பணிகள்.**

1853-ஆம் ஆண்டில் தென்னார்க் காடு மாவட்டத்தில் சோதனை யோட்டமாக ரெவின்யூ 'சர்வே' ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் 1856-இல் சென்னை மாநிலம் முழுவதும் நில அளவை செய்ய அரசு அங்கீகாரம் அளித்தது. இத் துறையில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் பல. அவற்றுள் சில-

வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவரின் வேண்டுகோளின்படி, 7 இனாம் கிராமங்களில் பாலாறு அணைத் திட்டத்தின் மூலம் பாசனம் பெறும் 19 சதுரமைல் நிலம் 1904-1905-ஆம் ஆண்டில் அளவை செய்யப்பட்டது.

மதுரை மாவட்டத்தில் பெரியார் அணைக்கட்டுத் திட்டம் பலனாக நன்செய்யாக மாற்ற வேண்டிய மேலூர், மதுரை மற்றும் நிலக் கோட்டை வட்டங்களில் 88 சதுர மைல் பரப்பளவிற்கு அளவை செய்யப்பட்டு படங்கள் தயார் செய்யப்பட்டன.

காவேரி மேட்டூர் திட்டங்களின் மூலம் பட்டுக்கோட்டை, தஞ்சாவூர், அறந்தாங்கி வட்டங்களில் பயன் பெறும் 61 கிராமங்களில் 1947 முதல் 1949 வரை அளவு செய்யப் பட்டுப் புலங்கள் அமைக்கப்பட்டன.

கிராம மற்றும் நில உடமை களின் எல்லைகளை வரையறுத்து ஆவணங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

நில உடைமைகளின் தொகுப் பின் எல்லைகளையும் மிக முக்கிய மான விளக்கங்களையும் காண்பிக் கும் கிராம நிலப்படம் தயாரித்தல், ஒவ்வொரு நில உடைமைகளின் எல்லைகளையும் அதனில் உள்ள விருத்திகளையும் அளவைகளையும் காட்டும் பெரிய அளவிலான புலப் படம் தயாரித்தல், ஒவ்வொரு நில உடைமையின் உரிமைதாரர், புலத் தின் எண், தன்மை, உரிமைக் காலம், பரப்பளவு, மதிப்பீடு போன்ற விவரங்களுடன் கூடிய நிலப்பதிவேடு தயாரித்தலும் இத் துறையின் பணிகளில் முக்கியமான வையாகும். மாவட்ட நிலப்படங்கள், வட்ட நிலப்படங்கள், கிராம நிலப்படங்கள் மற்றும் நகர அளவை செய்யப்பட்ட பகுதிகளுக்கு நகர பிளாக், வார்டு வாரியாகத் தனி நபர் சொத்துக்களுக்கான எல்லையுடன் கூடிய ஒரு நிலப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது.

பெருஞ்செலவில் தயாரிக்கப் பட்ட நில அளவை ஆவணங்கள் அவ்வப்போது, விற்பனை மாற்றம், உரிமை வழி மாற்றம், அன்பளிப்பு பதிவு மாற்றம், நீதி மன்ற உத்தரவு, பாகப் பிரிவினை முதலியவற்றின் காரணமாக அன்றாடம் ஏற்பட்டு வரும் மாற்றங்களைப் பிரதிபலிக்கும் வகையில் தொடர்ந்து பராமரித்து வரப்படுகிறது. இதற்கெனப் பரா மரிப்புப் பணி அமல்படுத்தப்பட்டு வட்டந்தோறும் செயல்பட்டு வரு கிறது. பராமரிப்புப் பணியின் மூலம், பொது மக்களின் நில உடைமை சம்பந்தமான புலங்களை அளந்து காண்பித்தல், உட்பிரிவு செய்தல், பட்டா மாறுதல் செய்தல் போன்ற பணிகள் உடனுக்குடன் கவனிக்கப்பட்டு வருகின்றன.



புலப்பட நகல்கள் கேட்கப்படும் போது, குறைந்த கட்டண வசூலுடன், உடனுக்குடன் அவைகள் பொது மக்களுக்கு வழங்கப்படுகின்றன.

கிராம நிலப்படம், தெரு நிலப் படம், முதலிய கிராம நகர்ப்புற நிலப்படங்கள் பொதுமக்களுக்கு மாவட்ட நில அளவை அலுவலகங்கள் மற்றும் மத்திய நில அளவை அலுவலகம் மூலமாகக் குறைந்த கட் டணத்தில் வழங்கப்படுகின்றன. மத்திய நில அளவை அலுவலகத்தில் உள்ள அச்சு இயந்திரங்கள் மூலம் ஆறு வண்ணங்களிலும் வரை படங்கள் அச்சிடப்பட்டு வழங்கப் படுகின்றன.



தஞ்சாவூர் மாவட்டத்தில், ஒரத்த நாட்டில் நில அளவைப் பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி நிறுவனத்தின் மூலம் பிற துறை சார்ந்த துறை அலுவலர் களுக்கு நில அளவை மற்றும் நிலவரித் திட்டப் பணிகள் தொடர் பான பயிற்சி அளிக்கப்படுகிறது.

சுமார் 40 முதல் 50 ஆண்டு களுக்கு முன் ரயத்துவாரி கிராமங் களுக்குத் தயாரிக்கப்பட்ட அடிப் படைக் கிராம ஆவணங்களை நில வரித்திட்ட 'அ' பதிவேடு, கிராமப் புலப்படம் போன்றவை வழக்கொழிந் ததால், ஆவணங்களைத் தற்கால நிலையைப் பிரதி பலிக்கும் வகை யில் தயார் செய்ய நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம் செயல் படுத்தப்பட்டது. இத்திட்டம், சென்னை, நீலகிரி, கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக ஏனைய மாவட்டங்களில் விரைவுத் திட்டமாகச் செயல்படுத் தப்பட்டு ஆவணங்கள் புதுப்பிக்கப் பட்டன. இப்புதிய ஆவணங்களின் அடிப்படையில் பட்டாதாரருக்கு உத்தேச வரைபடத்துடன் அவரது நில உடைமை காண்பிக்கும் புதிய பட்டா வழங்கப்பட்டது. இத்திட்டத் தின் கீழ் 98,146 ச.கி.மீ. பரப்பு அளக்கப்பட்டு, 1,06,00,000 பட் டாக்கள் வழங்கப்பட்டன. இதன் மூலம் 1,59,00,000 உழவர் பெருங்குடி மக்கள் பயன் பெற்றுள் ளனர்.

தற்சமயம் கீழ்க்கண்ட திட்டப் பணிகள் செயல்பட்டு வருகின்றன.

நத்தம் மற்றும் வேளாண்மைக் கல்லாத பிறவற்றிற்குப் பயன்படுத் தப்பட்டு வரும் வேளாண்மை நிலங் களை அளவை செய்தல்;

சென்னை பழைய நகரம் நீங்க லான அனைத்து நகராட்சிகள், நகரியங்கள், மற்றும் மாநகராட்சி களின் நகர அளவை மேற்கொள்ளல்;

மலைக் கிராம அளவை.

நத்தம் பகுதிகள் இதுவரை விரி வாக நில அளவை செய்யப்பட வில்லை. இதன் காரணமாக நத்தம் பகுதிகளிலும் விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படாமல், பிற பயன் பாடுகளுக்கு உபயோகப்படுத்தப் படும் விவசாய நில அளவை செய் யப்படுகிறது.

**ஹவாய்த் தீவில் அண்ணலின் சிலை**

**ஹவாய்த் தீவுகளின் தலைநகரான ஹானலூலூவில் அண்ணல் காந்தியடிகளின் திரு வுருவச் நிலை நிறுவப்பட்டுள்ளது. ஹானலூலூ நகரில் உள்ள ஒரு பூங் காவில் ஆலமரத்தின் கீழே, இந்த 8 அடி உயர வெண்கலச் சிலை அமைக்கப்பட்டுள்ளது. காந்தி சர்வ தேச நிறுவனம் இந்தச் சிலையை ஹவாய் மக்களுக்கு அன்பளிப்பாக வழங்கியது.**

இந்நில அளவையின்போது நத்தத்தில் உள்ள சாலை, தெரு, சந்துகள் ஆகியவற்றின் எல்லைகள் வரையறுக்கப்பட்டு, நில அளவை செய்யப்படுகிறது. இந் நில அளவை யின் மூலம் நத்தம் அல்லது கிராமக் குடியிருப்புக்களாக முன்னேற வகைப் படுத்தப்பட்ட தனியார் நில உடை மைகள் மற்றும் விவசாயத்திற்குப் பயன்படுத்தாமல் பிற உபயோகத் திற்குப் பயன்படுத்தப்படும் விவசாய நிலங்களுக்கும் மனைவரி சாத்திய மாகிறது. 31.1.1991 முடிய, நில அளவைப் பணி 10,594 கிராமங் களில் முடிக்கப்பட்டு 13,41,657 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

**நகர அளவை**

தமிழகத்தின் நகர அளவை 1901-1930 கால கட்டத்தில் செய் யப்பட்டது. முன்னரே அளவை செய்யப்பட்ட நகராட்சிகளில் நகர அளவை அப்பொழுது இருந்த நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதி களில் மட்டும் மேற்கொள்ளப்பட்டி ருந்தது. பிறகு அனைத்து நகராட்சி களுக்கும் விரிவுபடுத்தப்பட்ட பகுதி மொத்த பரப்பில் மூன்றில் ஒரு பகுதியாக உள்ளது.

கோவை, திருச்சி, சேலம், திரு நெல்வேலி போன்ற பெரு நகரங்கள் வேகமாக விரிவடைவதால், விவ சாய நிலங்கள் குடியிருப்பு மனை களாகவும், தொழிற்கூடங்களாகவும், உருமாறி வருகின்றன. இந்நிலையில் இந்நில உடைமைகள் எண், எல்லை களை வரையறை செய்ய விரிவான நகர அளவை மேற்கொள்வது அவ சியமாகிறது. அதன்படி தமிழ் நாட்டில் 106 நகராட்சிகளிலும் மற்றும் 3 மாநகராட்சிகளிலும் ஆவணங்கள் மேம்படுத்துதல் போன்ற பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது இப்பணி, சென்னை, செங்கை-அண்ணா, தென்னார்க் காடு, தஞ்சாவூர், தருமபுரி, புதுக் கோட்டை, திருச்சி, சேலம், கோவை, மதுரை மாவட்டங்களில் முன்னேற் றத்தில் உள்ளது. 31.1.1991 வரை இத்திட்டத்தின் கீழ் 10 நகரங்களில் பணி முடிக்கப்பட்டுள்ளது.

**மலைப்பகுதி அளவை**

1899-1910-ஆம் ஆண்டு மலைப் பகுதி அளவையின்படி தயார் செய் யப்பட்ட ஆவணங்கள் காலாவதி யாகி நடைமுறைக்கு ஏற்புடையதாக இல்லை. அரசு தரிசு நிலங்கள் நில அளவை செய்யப்பட்டு கிராம எல் லைக்கும் சேர்க்கப்படவில்லை. இத் தகைய தரிசு நிலங்கள் சுமார் 50 முதல் 80 ஆண்டுக் காலமாகப் பெரும்பாலும் ஆதிவாசிகளால் சிவாஜாமா முறையில் சாகுபடி செய்யப்படுவதாகக் கூறப்படுகிறது. இந்நிலங்கள் அளவை செய்யப் பட்டு, கிராம எல்லைக்குள் சேர்க் கப்படாததால் சிவாஜாமா முறை யில் அப்போது சாகுபடியை மேற் கொள்ளும் ஆதிவாசிகளால் அடை யாளம் காட்ட இயலவில்லை. எனவே, இந்நிலங்களை ஆதிவாசி மக்களுக்கு உரிமைப்படுத்த ஆணை பிறப்பிக்க இயலவில்லை. தவறான ஆக்கிரமங் களைத் தடுக்க கிராம எல்லை மற்றும் ஒதுக்கக் காடுகள் எல்லைகள் வரையறுப்பது இன்றியமையாத தாகும். எனவே, வட ஆர்க்காடு-அம்பேத்கர், திருவண்ணாமலை-சம்புவராயர், திருச்சி, சேலம், கோவை மாவட்டங்களில் உள்ள ஜவ்வாதுமலை, ஏலகிரி மலை, கொல்லிமலை, பச்சமலை, அரநூத்து மலை, ஆனைமலை, ஆகிய மலை களில் நில அளவைப் பணி செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1988-ஆம் ஆண்டு முதல் நத்தம் நில அளவை, நகர அளவை, மலை நில அளவை அகிய மூன்று திட்டப் பணிகளுக்கும் ஆண்டிற்குச் சுமார் 11 கோடி ரூபாய் அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

எதிர்காலத்தில் நில அளவை பல்வேறு நிருவாகத்துறைகளிலும் பங்கேற்று, நவீன நிருவாக அமைப்பை வளப்படுத்தத் துணை நிற்கும் என் பதில் எள்ளளவும் ஐயமில்லை. ●

2,672 வேலைகள் முடிக்கப் பட்டுள்ளன.

கப்பிச் சாலைகள் 155.8 கி.மீ. தொலைவு ரூ.99.89 இலட்சம் மதிப்பீட்டிலும், தார்ச்சாலைகள் 144.3 கி.மீ. தொலைவு ரூ.184.215 இலட்சம் மதிப்பீட்டிலும் போடப் பட்டு வருகின்றன. இதுவரை 204 சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள் ளன. ஊராட்சி/பேரூராட்சிப் பகுதி களில் பல்வேறு வகையாக வளர்ச்சிப் பணிகளைச் செயலாக்கும் பொருட்டு 571 பணிகள் ரூ.112.915 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துச் செய்யப்பட்டு வருகின்றன. இதில் 425 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதுவரை ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் ரூ.648.644 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 25.290 இலட்ச மனித சக்தி நாட்கள் உரு வாக்கப்பட்டுள்ளன.

சாண எரிவாயுத் திட்டத்தில் 1990-91-ஆம் ஆண்டிற்கு 1,075 கலன்கள் நியமனக் குறியீடு நிர் ணயம் செய்யப்பட்டுள்ளது. நாளது வரையில் 751 கலன்கள் நிறுவப் பட்டுள்ளன. 325 கலன்கள் நிறுவப் பட்டு வருகின்றன.

பெரியார் மாவட்டத்தில் செயல் படும் 6 கூட்டுறவு நகர வங்கிகள் 1990-91-ஆம் நிதியாண்டுக்கு பிப்ரவரி திங்கள் முடிய ரூ.123.83 இலட்சமும், பெரியார் மத்தியக் கூட்டுறவு வங்கி ரூ.29.27 இலட் சமும் ஆக மொத்தம் ரூ.153.10 இலட்சம் சிறுதொழில் கடன் வழங்கியுள்ளன.

ஆதிதிராவிட விவசாயிகளின் நலனுக்காக 50 சத மானிய விலை யில் 3,675 விவசாயிகளுக்கு நெல் மற்றும் பயறுவகை விதைகளும், பசுந் தாளுர விதைகள், நுண்ணுயிர் மற் றும் நுண்ணூட்டகங்களும், பயிர்ப் பாதுகாப்புக் கருவிகளும், ரூ.30.4 இலட்சம் மானிய உதவியுடன் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மூலம் 30 டன் பயறு வகை விதை களும், 13 டன் நெல் விதைகளும், 7 டன் பசுந்தாளுர விதைகளும், 95 பயிர்ப் பாதுகாப்புக் கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

பிற்பட்ட வகுப்பினருக்குக் கல்வி சலுகைத் திட்டத்தின் கீழ், ரூ.24,63,000 ஒதுக்கீடு செய்யப் பட்டு, ரூ.25,36,619 தொகை செலவு செய்யப்பட்டு, 7,864 மாணவ மாணவியர் பயனடைந்துள் ளார்கள். மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குக் கல்விச் சலுகைத் திட்டத்தின் கீழ் ரூ.12,00,000 ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.12,00,339 செலவிடப்பட்டு, 6,537 மாணவ மாணவியர் பயனடைந்துள்ளனர்.

பிற்படுத்தப்பட்டோர் - மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினருக்கு இலவசமாக வீட்டுமனைப் பட் டாக்கள் வழங்க, இம்மாவட்டத்தில் ரூ.12.54 இலட்சம் நில மதிப்புள்ள 729 பட்டாக்கள் வழங்க நிலம் கையகம் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேலும் மலையடிப்புதூர் கிரா மத்தில் 25 மிகவும் பிற்படுத்தப் பட்டோர் வகுப்பு இனத்தைச் சேர்ந்த நபர்களுக்குத் தச்சுத் தொழில் செய்ய வீடு மற்றும் தொழிற்கூடம் அமைக்கவும், ஊரகக் கைவினை ஞர்கள் வளாகம் அமைக்கவும் நட வடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பெரியார் மாவட்டத்தில் சம வெளிப் பகுதியில் 1939.30 ஏக் கரில் இறைவைச் சாகுபடியின் கீழ் மல்பரி பயிர் செய்து 2,339 பட்டு விவசாயிகள் பட்டு வளர்ப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

பட்டு வளர்ச்சிப் பயிற்சிக்கென நடப்பாண்டிற்கு 72 பட்டு விவசாயி களுக்குப் பயிற்சி அளிக்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நிதிக்குறியீடு ரூ.21,600 ஒதுக்கப் பட்டுள்ளது. நிர்ணயிக்கப்பட்ட குறி யீட்டில் 72 விவசாயிகளுக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. பயிற்சிக் கால உதவித் தொகையாக ரூ.21,634 வழங்கப்பட்டுள்ளது.

## கிராமப்புற மகளிர் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம்

கிராமப்புற மகளிர், குழந்தைகள் மேம் பாட்டுத் திட்டம் தமிழ்நாட்டிலுள்ள தர்மபுரி, பெரியார், திருச்சிராப்பள்ளி, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு-அம்பேத்கர், திருவண்ணாமலை-சம்புவராயர், புதுக்கோட்டை, சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி-கட்டபொம்மன் ஆகிய 10 மாவட்டங் களில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 2,737 மகளிர் குழுக்கள் அமைக்கப்பட்டு அவற்றின் மூலம் 48,603 மகளிர் பயனடைந்து வருகின்றனர்.

பெண்கள் தனிப்பட்ட முறையில் செயல்பட்டு, பொருளீட்டி, குடும்பங்களில் ஆண்களுக்கு நிக ரான நிலையை அடைய இத்திட்டம் பெரிதும் உதவுகிறது. இத்திட்டத்தில் பங்கேற்றுச் செய லாற்றும் பெண்களுடைய வாழ்க்கைத்தரம் உயர் வடைவதோடு, சமுதாயத்தில் அவர்களுக்கென்று ஒரு சிறப்பிடம் கிடைப்பது மட்டுமின்றி, சிறந்த தாய்மார்களாகவும் குடும்பங்களைக் கட்டிக் காக்கும் பெண்களாகவும் திகழ இத்திட்டம் வழி செய்கிறது.

15 முதல் 20 பெண்கள் கொண்ட குழுக்கள் அமைக்கப்பட்டு அவர்கள் அனைவரும் ஒருவருக் கொருவர் பயன்தரக்கூடிய பொதுவான தொழிலை மேற்கொள்கின்றனர். சுமார் 40 வகையான தொழில்கள் இத்திட்டத்தில் அடங்கும். பாய் முடைதல், செங்கல், காலணிகள், உடைகள், பைகள் போன்றவை தயாரித்தல், கோழி, மீன் பண்ணைகள், பட்டுப்பூச்சி வளர்த்தல் போன்ற வற்றைச் சான்றாகக் கூறலாம்.

ஊரக வளர்ச்சித்துறை மூலம் செயல்படுத்தப் படும் இத்திட்டத்தின்கீழ், ஒவ்வொரு குழுவிற்கும் அரசு ரூ.15,000 மானியமாக அளிக்கிறது. ஒரே ஒருமுறை அளிக்கப்படும் இத்தொகையை முதலீ டாக வைத்துக்கொண்டு, மூலப்பொருள்கள் மற்றும் தேவையான கருவிகளை வாங்கிக்கொண்டு உற்பத்தியைத் தொடங்கி, விற்பனை செய்து ஆதாயம் அடைய முடியும்.



தாளவாடி மலைப்பகுதியில் 4,000 ஏக்கர் பரப்பளவில் மானா வாரி மல்பரி சாகுபடி செய்யப் பட்டு, 1,600 விவசாயக் குடும் பங்கள் பட்டுப்புழு வளர்ப்பில் ஈடுபட்டு வருகின்றன.

தற்போது உலக வங்கி நிதியுதவி யுடன் தேசிய பட்டு வளர்ச்சித் திட்டம் பெரியார் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டம் 1989-90 முதல் 1993-94 முடிய ஐந்து ஆண்டுகளுக்கு செயல் படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தாழ்த்தப்பட்ட மற்றும் மலை வாழ் மக்களும் பெண்களும் ஈடு படுத்தப்பட்டு பல முன்னேற்றங் களை அடைந்து வருகின்றனர்.

பெரியார் மாவட்டத்தில் மீன் பிடிப்பின் மூலம் குண்டேரிப் பள் ளம், வரட்டுப் பள்ளம், வட்ட மலைக் கரை ஓடை மற்றும் ஓடத்துறைக் குளம் ஆகிய இடங்களிலிருந்து கடந்த பிப்ரவரி மாதம் வரை ஈட்டப்பட்ட மொத்த வருவாய் ரூ.1,37,585.80.

மாவட்டக் கதர் கிராமத் தொழில் வாரியம் மூலமாகச் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் தனி நபர்களுக்குத் தச்சுத் தொழில், கொல்லுத் தொழில், அப்பளம் தயாரித்தல், காலணித் தொழில், சுண்ணாம்புத் தொழில் போன்ற 18 வகையான சிறுதொழில்களுக்குப் பிப்ரவரி மாதம் முடிய 119 பேருக்கு ரூ.7,54,340 வழங்கப் பட்டது.

இம்மாவட்டத்தில் 16 கிராமிய நூற்பு நிலையங்கள் செயல்படுகின் றன. 5 கதர் உற்பத்திக் கிளைகள் உள்ளன. 5 கதர் அங்காடிகள் உள்ளன. கடந்த மாதம் முடிய ரூ.46.93 இலட்சத்திற்குக் கதர் விற் பனையாகி உள்ளது.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டத்தின் கீழ், தலா ரூ.5 ஆயிரம் வீதம் 1,040 மகளிர்க்கு ரூ.52 இலட்சம் நிதியுதவியாக வழங் கப்பட்டுள்ளது. அரசு இத்திட்டத் திற்கு வழங்கிய ஒதுக்கீடு முழுமை யாகச் செலவிடப்பட்டுள்ளது.

விதவை மகள் திருமண நிதி உதவித் திட்டத்தின் கீழ், 65 நபர் களுக்குத் தலா ரூ.2 ஆயிரம் வீதம் ரூ.1.30 இலட்சம் வழங்கப்பட்டு, அரசு வழங்கிய ஒதுக்கீடு முழுமை யாகச் செலவிடப்பட்டது.

டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவுத் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ், ரூ.5 ஆயிரத்திற் கான தேசிய சேமிப்புப் பத்திரம் நான்கு நபர்களுக்கு ரூ.20 ஆயிரத் திற்கு வழங்கப்பட்டு, அரசின் ஒதுக் கீடு முழுமையாகச் செலவிடப்பட்டது.

அஞ்சுகம் அம்மையார் நினைவுக் கலப்புத் திருமணத் திட்டத்தின் கீழ், 24 நபர்களுக்கு ரூ.1.20 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டு, அரசின் ஒதுக்கீடு முழுமையாகச் செலவிடப் பட்டது.

உடல் ஊனமுற்ற நபர் களுக்குக் கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், 551 நபர்களுக்கு ரூ.27,664 வழங்கப் பட்டு, அரசின் ஒதுக்கீடு முழுமை யாகச் செலவிடப்பட்டது.

## ஊரக வளர்ச்சிக்கான பயிற்சித் திட்டங்களுக்குப் பாராட்டு

ஊரக வளர்ச்சியில் பயிற்சி பெறுவோருக்குத் தேவையான பயிற்சிக் கையேடுகள், முதன் முதலாக இந்தியாவிலேயே தமிழ் நாட்டில் தான் தயாரிக்கப்பட்டு அவற்றின் அடிப்படையில் பயிற்சி யளிக்கப்பட்டு வருகிறது; இதை ஐதராபாத்திலுள்ள தேசிய ஊரகப் பயிற்சி நிலையத் தலைமை இயக்குநர் திரு. டி.எல்.சங்கர் அவர்கள் பெரிதும் பாராட்டியுள்ளார்.

தமிழகத்தில் உள்ள ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையங்களில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் களுக்கு அளிக்கப்படும் 10 நாள் பயிற்சியை அண்மையில் பவானி சாகரில் உள்ள ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையத்தில் தலைமை இயக்குநர் தொடங்கி வைத்தார்.

அப்போது உரையாற்றுகையில்-பயிற்சியில் அறிவு, திறமை, நோக்கு ஆகிய அம்சங்கள் இணைந்திருக்க வேண்டும் என்றும் அத்தகைய பயிற்சி தமிழகத்திலுள்ள ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையங்களில் அளிக்கப்பட்டு வருவதையும் குறிப் பாகப் பவானிசாகர் ஊரக விரி வாக்கப் பயிற்சி நிலையத்தின் பணிகள் அகில இந்திய அளவிலே பாராட்டக்கூடிய அளவில் உள்ளது என்றும் இதுபோன்ற ஏனைய பயிற்சி நிலையங்களும் இயங்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

8-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், பயிற்சி நிலையத்தினை வலுப்படுத்தவும் அவற்றின் நடை முறைகளை மேலும் செம்மையாக்கி நல்ல பயிற்சியளிக்க வேண்டுமென்ற குறிக்கோளுடனும் தமிழகத்தில் அமைக்கப்பட்ட புனர் அமைப்புக் குழுவின் அறிக்கையை திரு. டி.எல். சங்கர் பாராட்டிப் பேசினார்.

ஊரக வளர்ச்சித்துறை அலுவலர் களுக்கான பயிற்சி நிலையங்களுக் குக் கட்டமைப்பு வசதிகளை அதி கரிப்பது மிகவும் அவசியம் என்றும் அதற்காக நிதி ஒதுக்கீடு செய்வது தொடர்பாக நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும் என்றும் அப்போது அவர் கூறினார்.



பொருளாதாரத் தாவரவியற் கூடத்தில் 'தாவரமும் பொறியியலும்' காட்சிப் பெட்டி.

பொருட்களும் காட்சியில் வைக்கப் பட்டுள்ளன.

இக்காட்சிக் கூடத்தில் சிறப்புக் காட்சியாக அமைந்துள்ளது ''தாவரமும் பொறியியலும்'' எனும் கருத்தினை விளக்கும் காட்சிப் பெட்டியாகும். இது தாவர அமைப்புகள், மனிதனின் தொழில் நுட்பங்கள் பலவற்றிற்கு முன்னோடியாக அமைந்திருப்பதை எடுத்துக் காட்டுகிறது. இராட்சத அல்லி என அழைக்கப்படும் (Giant-Lilly) இலையின் அடிப்பகுதியின் நரம்பமைப்பை வைத்து இங்கிலாந்திலுள்ள புகழ் பெற்ற Crystal Palace எனும் கட்டடத்தை, தாவரவியல் வல்லுநரான ஜோசப் பாக்ஸ்டன் என்பவர் நிர்மாணித்துள்ளார். இது கட்டடக் கலையில் தாவர அமைப்பின் பயன்பாடு பற்றி எடுத்தியம்புகிறது. வாலற்ற சறுக்கு விமானத்தைக் (Tailless-Glider) கண்டுபிடித்த, எட்ரிச்-வெல்ஸ் (Etrich-Wels) சகோதரர்கள் இதற்கான வடிவமைப்பினை 'ஜனோனியா விதையின்' அமைப்பிலிருந்து கிடைக்கப் பெற்றனர் என்பது நிழற்படங்கள் வழி காட்டப் பட்டுள்ளது. இக்கண்டுபிடிப்பே பின்னாளில் ஆகாய விமானம் முன்னேறக் காரணமாகியது. கொக்கி போன்ற அமைப்புடைய பர்டாக் (Burdock Seed) தாவர விதைகளை அடிப்படையாகக் கொண்டு 'வல்குரோபாஸ்ட்னர்' (Vel c ro-Fastener) முறை கண்டுபிடிக்கப்பட்டது. இது மக்களாலும், தொழிற்சாலைகளாலும் வெகுவாகப் பயன்படுத்தப்படுகிறது. இதுபோன்றே இன்னபிற தொழில் நுட்பங்களுக்கும், தாவரங்கள் அடிப்படையாக அமைந்துள்ளன என்பதை இக்காட்சிப் பெட்டிகள் விளக்குகின்றன. இக்காட்சிக் கூடத்தின் மையத்தில் அமைந்துள்ள சந்தன மர வயிரம், இக்கூடத்தில் மற்றுமொரு சிறப்பு அம்சமாகும்.

தற்போது வகைபாட்டுத் தாவரவியற் கூடத்தை மாற்றியமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

சென்னை மற்றும் அதனைச் சுற்றி அமைந்துள்ள இடங்களின் பூக்கும் செடிகள் பற்றி திரு. பி.வி. மயூர்நாதன் எழுதியுள்ள நூலும், அதன் பிற்சேர்ப்பாக பேராசிரியர் திரு. ஈபார்னஸ் எழுதியுள்ள நூலும் இங்கு குறிப்பிடத்தக்கன.

காட்சிக் கூடத்தில் வைக்கப் படாத பொருட்கள் சேமிப்புச் சேகரிப்புகளாகச் (Reserve Collection) சேர்க்கப்பட்டு அதற்கான குறிப் பட்டைகள் தாவரவியற் பிரிவில் வைக்கப்பட்டுள்ளன. இவை ஆய்வாளருக்கும், தாவரத் துறையில் ஈடுபாடு கொண்டோருக்கும் பெரிதளவில் உதவுகின்றன. நெசவுப் பொருட் சேகரிப்பு (Textile Block) மற்றும் உலர் தாவரச் சேகரிப்புகள், தாவரவியற் பிரிவின் குறிப்பிடத்தக்க பண்புகளாகும்.

திருத்தியமைக்கப்பட்டு வரும் வகைபாட்டுத் தாவரவியற் கூடத்தில், ஒரு வகை பாட்டுக் காட்சிப் பெட்டியின் தற்போதைய தோற்றம்.





பொருளாதாரத் தாவரவியற் கூடத்தில் 'பல்விதப் பொருட்கள்' காட்சிப் பெட்டியின் முந்தைய தோற்றம்.

தாவரங்களைச் சேகரித்தல், பாதுகாத்தல், உலர் தாவரங்களைப் பேணுதல் பற்றிய விரிவான விளக்கங்கள் கல்வித் துறை சார்ந்தோர், தனி அருங்காட்சியகப் பராமரிப்பாளர்கள், ஆசிரியர்கள், மாணாக்கர்கள், பொதுமக்கள் ஆகியோருக்கும் அளிக்கப்படுகின்றன.

மனிதனின் அன்றாட வாழ்வில் பிரிக்க முடியா அத்தியாவசியத் தேவையாகத் தாவரங்கள் அமைந்துள்ளன. விலங்கினத்திற்கு உணவுக் கோவையாகவும், (Food Chain) மனிதன் சுவாசிக்கும் பிராண வாயுவின் அளவு நிலையாக இருக்கவும் இவை உதவுகின்றன. பல்வகையில் பயன்படும் இத்தாவரங்கள், சென்னை அரசு அருங்காட்சியகத்தில் நுழைவுக் கட்டடத்தின் மேல் தளத்தில் வகைபாட்டுத் தாவரவியற் கூடம் மற்றும் பொருளாதாரத் தாவரவியற் கூடம் என்ற இரு கூடங்களில் மக்களனைவரும் கண்டு மகிழும் வகையில் காட்சியில் வைக்கப்பட்டுள்ளன. சமணச் சிற்பக் கூடத்தின் அருகிலுள்ள படியாக மேலேறியோ அல்லது பவழக்கூட திலிருந்து படிகளின் வழியா கீழிறங்கியோ இக்கூடங்களை அடையலாம்.

500 ஆண்டுக் காலத் தேக்கு மரத்தின் குறுக்கு வெட்டுத் தோற்றம்.



JL
V211m N70 TA N91.2



# சென்னை அரசு அருங்காட்சியகத்தின் தாவரவியல் பிரிவு

**ம.ந. புஷ்பா**
உதவிக் காப்பாட்சியர்
தாவரவியல் பிரிவு
சென்னை அரசு அருங்காட்சியகம்

**1828**-ஆம் ஆண்டு சென்னை லிட்டரரி சொசைட்டி - இலண்டன் ஆசிய சொசைட்டியினர் இணைந்து, சென்னையில் பொருளாதாரப் புவியியல் அருங்காட்சியகத்தைத் துவக்கினர். 1851-ஆம் ஆண்டு சென்னை அருங்காட்சியகம் பொது மக்கள் பார்வைக்கெனத் திறந்து விடப்பட்டது. இவ்வருங்காட்சியகம் 1,100 புவியியல் சேகரிப்புகளுடன் துவக்கப்பட்டது.

இவ்வருங்காட்சியகத்திற்கென ஐரோப்பிய சமுதாயத்தைச் சார்ந்த உறுப்பினர்களிடமிருந்து சில பொருட்கள் நன்கொடையாகப் பெறப்பட்டன. கொச்சின், திருவனந்தபுர அரசர்களிடமிருந்தும், நவாப்புகளிடமிருந்தும், பல தென் இந்திய ஜமீந்தார்களிடமிருந்தும், கூடத்திற்கான பொருட்கள் நன்கொடையாகப் பெறப்பட்டன.

சென்னை மத்திய அருங்காட்சியகத்தின் முதல் சிறப்பு அலுவலராக சர்ஜன் எட்வர்ட் கிரீன் பால்ஃபர் நியமிக்கப்பட்டார். இவ்வருங்காட்சியகமே பின்னாளில் சென்னை அரசு அருங்காட்சியகமாக மாற்றப்பட்டது. சென்னை அருங்காட்சியகம் இந்தியாவின் தொன்மையான அருங்காட்சியகங்களுள் இரண்டாவது இடத்தை வகிக்கின்றது. 1951-ஆம் ஆண்டு இவ்வருங்காட்சியகம் தனது நூற்றாண்டு நிறைவு விழாவினைக் கொண்டாடியது. அப்போது வைக்கப்பட்ட சிறப்புக் கண்காட்சியில் இத்துறையின் பல்வேறு பிரிவுகளின் பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன. இதில் தாவரவியலின் முக்கியத்துவத்தைக் குறிக்கும் வகையில் மாதிரிகள் மற்றும் தாவரங்கள் சில வைக்கப்பட்டன.

துவக்க காலத்திலிருந்த தாவரவியற் கூடம் பற்றியும், தற்போது மாற்றியமைக்கப்பட்டுள்ள தாவரவியற் கூடம் பற்றியும் தெரிந்து கொள்வோமா?

1854 டிசம்பர் திங்களில், பாந்தியன் சாலை எனத் தற்போது அழைக்கப்படும் இடத்தில் சென்னை அருங்காட்சியகம் துவங்கப்பட்டது. திரு. பால்ஃபர் காலத்தில் புவியியல் சேகரிப்புகளுடன் துவங்கிய அருங்காட்சியகம் காப்டன் மிட்செல்லின் காலத்தில் விலங்கியல் பொருட்களின் சேகரிப்பினை அதிகரித்தது. டாக்டர் பிட்டியின் தலைமையில் மிகுதியான தாவரவியற் பொருட்கள் சேகரிக்கப்பட்டன. இதில் மருந்துச் செடிகள், பொருளாதார முக்கியத்துவம் பெற்ற செடிகள், அரிய மரங்கள் (உ-ம்.: சப்பானிய அரக்கு மரம்) போன்றவை குறிப்பிடத்தக்கன.

1873-74-ஆம் ஆண்டுகளில் அருங்காட்சியக உலர் தாவரங்களின் சேகரிப்பு கர்னல் பெட்டோம்ஸ் என்பவரின் தனிசேகரிப்பினால் அதிகரித்தது. இச்சேகரிப்பு 2,435 தாவரங்களைக் கொண்டிருந்தது. 1818-ஆம் ஆண்டு, வனத்துறை இயக்குநரிடமிருந்து பிரத்தியேகமாகச் சேகரிக்கப்பட்ட வனப் பொருட்கள் அருங்காட்சியகத்தின் தாவரவியற் பிரிவுக்கு அளிக்கப்பட்டன. இத்தகைய சேகரிப்புக்களினால் சென்னை அருங்காட்சியகத்தின் உலர் தாவர சேகரிப்பு பிரசித்தியடைந்து, இங்கிலாந்திலுள்ள கியூவிலும் (Kew) இடம் பெற்றது.

1919-ஆம் ஆண்டு திரு. எஸ்.என். சந்திரசேகர், தாவரவியற் பிரிவுக் காப்பாட்சியர், பொருளாதாரத் தாவரவியற் கூடக் காட்சிப் பொருட்கள் பற்றிய பட்டியல் தொகுப்பினை (Catalogue) வெளியிட்டார்.

துவக்கத்தில் தாவரவியல் மற்றும் புவியியல் பிரிவுகள், தாவரவியற் பிரிவுக் காப்பாட்சியர் மேற்பார்வையில் கவனிக்கப்பட்டன. பின்னர் அதிகரித்த சேகரிப்புகளின் தேவைக்கேற்ப தாவரவியல், புவியியல் என இரு பிரிவுகளாகப் பகுக்கப்பட்டன.





வல்குரோ-பாஸ்ட்னர் (ஒட்டும் கைக்கடிகாரப் பட்டை போன்ற) முறையினைக் கண்டுபிடிக்க அடிப்படையாக அமைந்த பர்டாக் விதையின் கொக்கிபோல் வளைந்த தோற்றம்.

அக்காலத்தில் தாவரவியற் பிரிவு (1) பொதுக்கூடம் (2) கையிருப்பு மிகுவளச் சேகரிப்பு (Reserve Collection) (3) சிறப்புக் கண்காட்சிகள் (4) ஆய்வு மற்றும் பருவ இதழ் வெளியீடு (5) செய்தியளிக்கும் பணி என ஐந்து பகுப்புகளாகச் செயல்பட்டன.

தாவரவியற் கூடங்கள் (1) வகைபாட்டுத் தாவரவியல் (2) பொருளாதாரத் தாவரவியல் (3) சுற்றுச் சூழல் தாவரவியல் (4) பல்வேறு வகைச் சேகரிப்புகள் என பகுக்கப்பட்டிருந்தன.

ஆரம்பக் காலங்களில் வகைபாட்டுத் தாவரவியற் கூடத்தில் காட்சிப் பொருட்கள், பரிணாம வளர்ச்சி முறைப்படி அமைக்கப்பட்டிருந்தன. இதில் குறிமறையினச் செடிகள் (Cryptogams) முதலிடத்தை வகித்தன. இவற்றில் பெரிய அளவு பிராக்கெட் காளான் (Bracket Fungus) மற்றும் மிகப் பெரிய காளான் வகையான டோட் ஸ்டூல் (Toad Stool) குறிப்பிடத்தக்கன.

தென்னிந்திய மாவகைகள் சுமார் முந்நூறு காட்சிக் கூடத்தில் பார்வையாளர்களுக்கென வைக்கப்பட்டன. இருநூறு மற்றும் ஐந்நூறு வயதடைந்த ஈட்டி மரம் மற்றும் தேக்கு மரங்களின் குறுக்கு வெட்டுத் தோற்றம் இக்காட்சிக் கூடத்தின் தனிச் சிறப்பாக அமைந்தது. இதில் ஈட்டி மரத்தின் சுற்றளவு 21' என்பதும் தேக்குமரத்தின் சுற்றளவு 23' 9' என்பதும் குறிப்பிடத்தக்கன. தேக்குமரத்தின் ஒவ்வொரு நூறு ஆண்டுகளின் முடிவும் வெள்ளை வண்ணத்தில் குறிக்கப்பட்டுள்ளது. இது இம்மரம் வாழ்ந்த காலத்தில் ஏற்பட்ட வரலாற்று நிகழ்ச்சிகளுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது.

உயிரின வாழ்க்கைச் சூழலைக் காண்பிக்கும் சில நிழற்படங்களும், தாவரங்களும் இக்கூடத்தில் வைக்கப்பட்டுள்ளன. சிறியதோர் கற்பாளத்திலமைந்த லிவர் - வோர்ட் (Liver-Wort) இலை அச்சிலமைந்த பாசிகளின் மாதிரிகள், மாங்குருவ் விதைகளின் விவிபேரஸ் (Viviparous) என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் 'தாவர சேய் முளைப்பு மரபு' போன்றவை ஆர்வத்தைத் தூண்டும் காட்சிப் பொருட்களாக அமைந்துள்ளன. சிறு பூச்சிக்களைப் பிடித்துண்ணும் பூச்சித் தின்னித் தாவரங்கள் இக்கூடத்தில் மற்றொரு சிறப்பம்சமாகத் திகழ்கிறது.

ஆரம்பத்தில் பொருளாதாரத் தாவரவியற் கூடத்தில் நார்கள், கரும்பு, தானிய வகைகள், மருந்துப் பொருட்கள், சாயப் பொருட்கள், பொம்மைகள், இரப்பர் மற்றும் பிசின்கள், தேயிலை, காப்பி இன்ன பிற பொருட்கள், சுவரையொட்டிய மற்றும் சாய்வுக் காட்சிப் பெட்டிகளில் வைக்கப்பட்டிருந்தன. 1961-ஆம் ஆண்டு மாற்றியமைக்கப்பட்ட பொருளாதாரத் தாவரவியற் கூடம், 1984-ஆம் ஆண்டு மீண்டும் திருத்தியமைக்கப்பட்டது. இக்கூடம் 1986-ஆம் ஆண்டு சூன் திங்கள் 7-ஆம் நாள் பொதுமக்கள் பார்வைக்குத் திறந்து விடப்பட்டது.

தற்போது முப்பத்தியொன்று காட்சிப் பெட்டிகளைக் கொண்ட இக்கூடத்தில் உயிரின வாழ்க்கைச் சூழலைக் காட்டும் நான்கு காட்சிப் பெட்டிகள் அமைந்துள்ளன. அவை முறையே கடற்கனைகள், காளான், தேயிலை மற்றும் இரப்பர் மரத்தில் பால் எடுப்பது ஆகியவையாகும். இதர 27 காட்சிப் பெட்டிகளில் நார்கள், கரும்பு, தானிய வகைகள், போதைப் பொருட்கள், மருந்துப் பொருட்கள், பதனிடும் மற்றும் சாயப் பொருட்கள், அழகு சாதனப் பொருட்கள், பிசின்கள், காப்பி மற்றும் தேயிலைப் பொருட்கள், பொம்மைகள், மூங்கில் கடற்கனைகள் மற்றும் இன்னபிற

எண்ணப்படும் இதில் சுமார் 40 இலட்சம் பிரதிகள் உள்ளன. இந்த நூலகத்தில்தான் உலகத்திலேயே அதிகமாக ஆகாய விமானத்தைப் பற்றிய நூல்கள் உள்ளன.

இந்தியாவில் உள்ள நூலகங்களில் கல்கத்தா, தேசிய நூலகம் முதன்மையானது ஆகும். அதில் சுமார் 10 இலட்சம் நூல்கள் உள்ளன. இந்நூலகத்தில்தான் இந்தியாவில் வெளியாகும் நூல்களைத் தொகுத்து (Indian National Bibliography) இந்திய தேசிய நூற்றொகை வெளியிடுகின்றனர். கி.பி. 1784- இல் நிறுவியுள்ள ஏசியாட்டிக் சொசைட்டி நூலகத்தில் 50,000 நூல்களும், 20,000 கையெழுத்துப் பிரதிகளும் உள்ளன. ஏசியாட்டிக் சொசைட்டியின் கிளை நூலகம் கி.பி. 1804-இல் பம்பாயில் நிறுவப்பட்டது. இந்த நூலகத்தில் சுமார் ஒரு இலட்சம் நூல்களும் 20,000 கையெழுத்துப் பிரதிகளும் உள்ளன.

முடியரசர்கள், நூலகங்களின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவினார்கள். சுல்தான் காலத்திலும், சக்கரவர்த்தி காலத்திலும், மேலும் தனிப்பட்ட மனிதன் முயற்சியினாலும் பல தனி நூல்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. கில்ஜி சுல்தான்கள் குறிப்பாக ஜலாலுதீன் கில்ஜி அரசாங்க நூலகம் ஒன்றை டெல்லியில் ஏற்படுத்தி அதற்கு 'அமீர் குஸ்ரு' என்பவரை நூலகராக நியமித்தார் என்று வரலாறு செப்புகிறது. மேலும் பாபர், இப்ராகீம் லோடி முதலியோர் அரசாங்க நூலகங்களை ஏற்படுத்தி நூலக வளர்ச்சிக்கு உதவினார்கள். ஹுமாயூன் நூலகங்கள் மீது தீராத பற்று வைத்திருந்து அவர் சக்ரவர்த்தியானதும் முதல் காரியமாக டெல்லியில் புரானா குவிலா என்னுமிடத்தில் அமைக்கப்பட்டிருந்த மகிழ்ச்சி இல்லத்தை நூலகமாக மாற்றி 'நிஜாம்'. என்பவரை நூலகராக நியமித்தார். இவர்கள் ஆற்றிய அரும்பணியே நூலக வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் அடித்தளமாக அமைந்தது.

இந்தியாவில் முதன் முதலில் நடமாடும் நூலகத்தைத் தோற்றுவித்த பெருமையுடையதாகவும் தமிழகம் திகழ்கின்றது.

கன்னிமாரா பொது நூலகத்தைப் போல இந்தியாவில், டெல்லி, கல்கத்தா, பம்பாய் போன்ற பெரிய நகரங்களிலும் நூலகம், இயங்கி வருகின்றது. ஒவ்வொரு மாநிலமும் தனது நிதி வரம்பிற்கு உட்பட்டு உள்ளூர் நூலக ஆணைக்குழுவின் (Local Library Authorities) கீழ்த் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களும் ஒரு தலைமை நூலகமும் மாவட்ட நூலகங்களின் வழியில் பணியாற்றும் கிளை நூலகங்களும் (Branch Libraries) கொண்டுள்ளன. மேலும் நகரவை நூலகங்களும், கிராமச் சங்க நூலகங்களும் இங்கு உள்ளன.

தஞ்சை சரஸ்வதி மகால் சென்னை ஓலைச்சுவடி நூலகங்களும் முதல் பிரிவில் சேர்கின்றன. குழுக்களின் முயற்சியினாலும், தனியாரது ஆர்வத்தினாலும் நடத்தப் பெறுகின்ற பல நூலகங்களில் சிறப்பானவை பிரிட்டிஷ் நூலகம் (British Council Library), அமெரிக்க நூலகம் (American Library), சென்னை இலக்கியக் கழக நூலகம், திருவில்லிபுத்தூரில் உள்ள பெனிஸ்டன் நூலகம், இன்னும் கிருத்துவ இளைஞரால் நடத்தப்படுகின்ற நூலகங்கள் சிறப்பாகப் பணிபுரிந்து வருகின்றன.

கல்வித்துறையில், அண்ணாமலைப் பல்கலைக் கழக நூலகம், சென்னைப் பல்கலைக் கழக நூலகம், மதுரைப் பல்கலைக் கழக நூலகம், பாரதிதாசன் பல்கலைக் கழக நூலகம், பாரதியார் பல்கலைக் கழக நூலகம், தமிழ்ப் பல்கலைக் கழக நூலகம் போன்ற நூலகங்கள் சிறப்பாக இயங்கி வருகின்றன.

—'நூலகமும் நூலக அறிவியலும்' என்னும் நூலில், திரு மருதூர் மு. இராமச்சந்திரன்.

## குழந்தைகளிடம் புத்தகம் படிக்கும் பழக்கத்தை வளர்ப்பது எப்படி?

தொலைக்காட்சி யுகம். வைத்த கண் வாங்காமல், தொலைக்காட்சியில் ஒன்றிவிடும் காலம். இத்தகைய தொரு கால கட்டத்திலே, குழந்தைகளிடம் புத்தகம் படிக்கும் பழக்கத்தை வளர்ப்பது எப்படி?

இதற்குப் பல புதுமையான வழிகளைக் கையாண்டு வெற்றி கண்டு வருகிறார் ஆன் ஹேடன் என்னும் அமெரிக்கப் பெண்மணி. இவர் ஒரு நூலகர். அமெரிக்காவில், மாஸச்சூஸட்ஸ் மாநிலத்தில் மார்ஷ்பீல்ட் என்னும் இடத்திலுள்ள 'வெண்ட்ரெஸ் மெமோரியல் லைப்ரரி' என்னும் குழந்தைகள் நூலகத்தில் இவர் நூலகராகப் பணியாற்றி வருகிறார்.

குறிப்பிட்ட சில புத்தகங்களை நூலகமே தேர்ந்தெடுத்துப் பல்வேறு பள்ளிகளின் குழந்தைகளுக்கு விநியோகிக்கிறது. பிறகு ஒரு குறிப்பிட்ட நாளில் "புத்தகப் போர்" நடத்தப்படுகிறது. வேறொன்றுமில்லை. 'வினாடி வினா' போட்டிதான் அது!

அந்தப் புத்தகங்களின் அடிப்படையில் சில கேள்விகள் தயாரிக்கப்பட்டு, இந்த நிகழ்ச்சியின்போது கேட்கப்படுகின்றது. அதிக மதிப்பெண்கள் பெறும் பள்ள அணிக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. இந்தத் திட்டம் அனைவரையும் கவர்ந்துள்ளது.

ஆரம்பப் பள்ளியில் படிக்கும் எல்லாக் குழந்தைகளுக்கும், நூலகங்களிலிருந்து புத்தகங்களை எடுத்துப் படிப்பதற்கு வசதியாக "லைப்ரரி கார்டு" வழங்குவது மற்றொரு திட்டமாகும். தனித்தனியான கார்டுகளைப் பெறும் குழந்தைகள் அவற்றை ஒரு பெருமையாகக் கருதி, நூலகங்களில் புத்தகங்களை எடுத்துப் படிக்கின்றனர்.

ஓட்டப்பந்தய வீரர்களுக்கு 'மாரத்தான்' ஓட்டப்பந்தயம் நடத்தப்படுவது போல, குழந்தைகளுக்குக் கதைகளைப் படித்துக் காட்டுவதற்கு 'ரீடத்தான்' என்னும் நிகழ்ச்சி நடத்தப்படுகிறது.





# பெரியார் மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

பெரியார் மாவட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்களில், 1991-92-ஆம் ஆண்டில் வறட்சி நிவாரணத் திட்டத்தில் 140 ஆழ் குழாய்க் கிணறுகளும், பேரூராட்சிப் பகுதிகளில் 50 ஆழ்குழாய்க் கிணறுகளும், நகராட்சிப் பகுதிகளில் 10 ஆழ்குழாய்க் கிணறுகளும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளன.

மேலும் பல்வேறு நிவாரணப் பணிகளுக்காக ரூ.59,92 இலட்சம் செலவிடவும் திட்டமிடப்பட்டுள்ளது. லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்காக ஊராட்சி ஒன்றியப் பகுதியில் ரூ.17.00 இலட்சத்திலும், பேரூராட்சிப் பகுதியில் ரூ.8.00 இலட்சத்திலும் ஆக மொத்தம் ரூ.25.00 இலட்சமும், புதிய திறந்த வெளிக் கிணறுகள் அமைக்கும் பணிக்காக ஊராட்சி ஒன்றியப் பகுதியில் ரூ.5 இலட்சமும், ஆழ் குழாய்க் கிணறுகள் தூர் எடுக்கும் பணிக்காக ஊராட்சி ஒன்றியப் பகுதியில் ரூ.2.50 இலட்சமும், பேரூராட்சிப் பகுதியில் ரூ.1.42 இலட்சமும் ஆக ரூ.3.92 இலட்சமும், பம்புசெட்டுகள் அமைத்தல் மற்றும் குழாய் நீட்டிப்புப் பணிக்காக ஊராட்சி ஒன்றியப் பகுதியில் ரூ.3 இலட்சமும், பேரூராட்சிப் பகுதியில் ரூ.5 இலட்சமும், ஆக ரூ.8 இலட்சத்திலும், தனி மின்பாதை அமைத்து குடிநீர் வசதி செய்யும் பணிக்காகப் பேரூராட்சிப் பகுதியில் ரூ.8 இலட்சத்திலும், காற்றழுத்த மோட்டார் அமைக்கும் பணிக்காக ஊராட்சி ஒன்றியப் பகுதியில் ரூ.4 இலட்சத்திலும், பேரூராட்சிப் பகுதியில் ரூ.1 இலட்சத்திலும் ஆக மொத்தம் ரூ.5 இலட்சமும், விசைப்பம்பு மோட்டார் மேம்பாடு செய்யும் பணிக்காக ஊராட்சிப் பகுதியில் ரூ.3 இலட்சமும், பேரூராட்சிப் பகுதியில் ரூ.2 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.5 இலட்சமும் ஒதுக்கப்பட்டு பல்வேறு நிவாரணப் பணிகள் ரூ.59.92 இலட்சத்தில் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 1990-91-ஆம் ஆண்டில் 8,309 குடும்பங்களுக்கு ரூ.261.406 இலட்சம் மானியம் மற்றும் கடனுதவி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை கடந்த பிப்ரவரி மாதம் முடிய 5,911 குடும்பங்களுக்கு ரூ.175.25 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

1990-91-ஆம் ஆண்டில் கிராமப்புற இளைஞர்களுக்கு 700 சுயவேலை வாய்ப்புத் திட்டத்தில் பல்வேறு தொழில்களில் பயிற்சியளிக்கத் திட்டமிடப்பட்டது. இதுவரை 735 நபர்கள் தேர்வு செய்யப்பட்டு, தொழில் பயிற்சியில் 371 நபர்கள் பயிற்சி முடித்துள்ளனர். 364 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர்.

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 2,823 பணிகள் ரூ.767.681 இலட்சம் மதிப்பீட்டில் திட்டமிடப்பட்டு கடந்த பிப்ரவரி மாதம் முடிய

# மலை வாழை!

கோ. தென்னவன் (பி.லிட்)
(பாவேந்தரின் பேரன்)

சீவிச் சிங்காரித்து மலர் சூட்டிக் கையில் புத்தகம் பையை எடுத்துக் கொடுக்கும் தாயின் எதிரிலே மகள் கண்ணீர் சிந்துகின்றாள்

படியாத பெண்ணாயிருந்தால் இந்தச் சமுதாயம் கேலி பண்ணுமே என்பது அன்னையின் ஏக்கம்.

ஆனால், மகளோ சிலையாக நிற்கிறாள். கடிகார முட்கள், காலம் கடிது ஓடுவதைக் காட்டுகின்றன.

ஆம், வாழைப்பழம் - விரும்பி உண்பாள் மகள். மகிழ்ச்சியோடு "மழைவாழை அல்லவோ கல்வி?" என்று இனிப்புச் சுவையை எதிர் வைத்துப் பேசுகிறான். பாவேந்தர் பார்த்து விட்டு - புகழ் பெற்ற அந்தப் பாடலை வழங்குகிறார்;

'தலை வாரிப் பூச்சூடி உன்னைப் - பாட
சாலைக்குப்போ என்று சொன்னாள் உன்
அன்னை...

மலைவாழை என்பது எளிதாய்த் தோலுரித்து விடக் கூடிய வகை என்பதாலோ என்னவோ, அதனைக் குறித்தார் பாவேந்தர்.

சிலையாக நின்ற அந்தப் பெண் குழந்தைதான் என் சின்ன அத்தை ரமணி!

என் பாட்டனார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் அவர்களின் குடும்பத்தின் கடைக்குட்டி. ரமணி அத்தை, மிகவும் பொறுமைசாலி என்று எல்லோரும் அவரைப்பாராட்டுவர்.

வெளியூருக்குப் புறப்படும் பாவேந்தர் அவர்கள், யார் யாருக்கு என்ன வேண்டும் என்று கேட்பாராம். அவரவர் ஒரு பட்டியலே எழுதிக் கொடுப்பார்களாம். ரமணி அத்தை, அப்படிக் கேட்பதில்லை எப்போதாவது "எனக்குப் பொட்டுக்கடலை" வேண்டும் என்று மட்டுமே சொல்வாராம்!

பேரறிஞர் அண்ணா அவர்கள் முன் நின்று என் பாட்டனாருக்கு ரூ.25 ஆயிரம் பொற்கிழி அளித்த போது, குடும்பத்தினருக்கு நகை செய்து தரவேண்டும் என்று குயில் சிவா தாத்தா முயன்று ஏற்பாடு செய்தார்.

அப்போதும் ரமணி அத்தை கோரிக்கை எதுவும் விடுக்கவில்லை. வற்புறுத்திக் கேட்டபோது, தன்



"புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் மூன்றாவது மகள், திருமதி ரமணி. (1933-1970).

சின்னஞ்சிறிய சுண்டுவிரலுக்கு ஒரு மோதிரம் மட்டுமே வாங்கிக் கொண்டாராம்!

அத்தை ரமணியையே மலைவாழை என்று கூறிவிடலாம் போலிருக்கிறது.

37 வயதிலேயே இவர் மறைந்தபோது கடிகார முட்கள் கடிது ஓடியது போன்ற அதிர்ச்சி தான் எங்கள் எல்லோருக்கும் ஏற்பட்டது!



### மனச்சுத்தம்

பரிசுத்தம் என்ற சொல் யாவற்றையும்விட, முதலில் மனச் சுத்தத்தையே குறிக்கும். மனத்தில் கிடப்பதே செயலாகவும், நடத்தையாகவும் வெளிப்படுகின்றது. வாயைச் சுத்தமாக வைத்துக் கொள்ள விரும்புகிற பையன் ஒருக்காலும் கெட்ட சொற்களைச் சொல்ல மாட்டான். இது தெளிவு. அதோடுகூட, மனம், அறிவு இரண்டையும் கெடுத்துவிடக் கூடிய பொருள்களையோ, அல்லது தம் நண்பர்களுக்குத் தீங்கு பயப்பனவாயுள்ள பொருள்களையோ தன் வாயில் திணித்துக்கொள்ள மாட்டான்.



# சுற்றுப்புற மாசு..

## மனிதனின் அலட்சியப்போக்கால் விளையும் ஆபத்து

என்.இளங்கோ

இயற்கையில் கிடைத்த காய்கனி கிழங்குகளை உண்டு வாழ்ந்து வந்த மனிதன் உணவைத் தானே செயற்கை முயற்சியில் உற்பத்தி செய்யத் தொடங்கினான். வனத்தை அழித்து வயலாக்கினான்; வாழும் வீடுகளாக்கினான். ஆலைகளை அமைத்தான். இயற்கையோடு போர் தொடுத்தான். இயற்கையை வென்றான். இப்போது இயற்கைச் செல்வம் அழிந்ததோடு, தன்னை அழிக்க முனைந்த மனிதனை அது அழிக்கத் தொடங்கியுள்ளது.

ஆலைகளிலிருந்து வரும் இரசாயனக் கழிவுகள், நீரையும், காற்றையும், நிலத்தையும் பாதிக்கின்றன. ஆகாயத்திலிருக்கும் உயிர்க்காற்றைக் (Oxygen) குறைத்து கரிக்காற்றை (Carbon-dioxide) அதிகரிக்கின்றன. இதனால் மனித உயிர்களும், மற்ற உயிர்களும் மாய்கின்றன. மரம், செடி, கொடிகளும் மாய்கின்றன.

இயற்கையோடு மனிதன் மோதினான். இயற்கைச் சூழலை அழித்தான். அது மனித இனத்துக்கே ஆபத்தாக மாறிவருகிறது. இயற்கை வளத்தின் அளவும் மனிதன் தனது தேவைகளையும் ஆசைகளையும் நிறைவேற்றுவதற்காக இயற்கைச் சூழலைப் பாதிக்கிற வகையில் உருவாக்கிவிட்டிருக்கிற சுற்றுப்புறச் சூழல் சிக்கல்களும் உலகின் கவனத்தை ஈர்த்தன. இது குறித்து ஆலோசனை செய்ய 1972-ஆம் ஆண்டில் ஸ்டாக்ஹோமில் மாநாடு ஒன்று நடைபெற்றது.

அனைத்து நாடுகளின் தொழில், வணிக, போக்குவரத்து, தொழில்நுட்ப வளர்ச்சிகளும் தொடர்புகளும், வளர்ந்துவிட்ட, வளர்ந்து வருகிற நாடுகளின் சுற்றுப்புறச் சூழல்களைப் பெரிதும் பாதித்துள்ளன என்பதை ஸ்டாக்ஹோம் மாநாடு சுட்டிக்காட்டி, மனிதனின் தேவைகளுக்கேற்ப இயற்கையின் வளத்தினை அளவாகவும் முறையாகவும் பயன்படுத்தத் தக்க வழிமுறைகளையும், வாய்ப்புக்களையும் வகுத்தும் தொகுத்தும் காட்டியது. அவை அனைத்தையும் முறையாகப் பின்பற்றியிருந்தால் வளமும் பெருகியிருக்கும். நலமும் காக்கப்பட்டிருக்கும். ஆனால், அவ் வழிமுறைகளில் பலவற்றை நாடுகள் பின்பற்றவில்லை. எனவே, தீய விளைவுகளைச் சந்திக்க நேர்ந்துள்ளது.

இயற்கை வளங்களை முறையாகத் திட்டமிட்டுப் பயன்படுத்தாமலும், சுற்றுப்புறச் சுகாதாரப் பாதிப்புகளிலிருந்து இயற்கைச் செல்வத்தைக் காத்துக் கொள்ளாமலும் இருந்து விடுவோமானால், இயற்கைச் செல்வத்தின் அளவும் குறையும்; தரமும் மறையும். அதனால் சமூக, பொருளாதாரச் சுற்றுப்புறக் கேடுகள் உருவாகும்.

பாதிக்கப்பட்ட தண்ணீரை மனிதன் குடித்து விட்டாலும், அல்லது பாதிக்கும் அசுத்தங்கள் உணவு வாயிலாகவோ வேறு வழிகளிலோ மனிதனின் உடலுக்குள் சென்று விட்டாலும் உடல் நலக் கேடுகள் உண்டாகும். பல்வேறு நோக்கங்களில் மனிதன் பயன்படுத்தும் இரசாயனப் பொருட்கள் மனிதனின் உடலுக்குள் நேரடியாகவோ மறைமுகமாகவோ சென்றுவிடுகின்றன.

வளரும் நாடுகள் இயற்கை வளங்களைத் தேவைக்கும் அதிகமாகவோ, வீணாகவோ பயன்படுத்தி விடுவதால் சுற்றுப்புறச் சூழல் மிகவும் பாதிக்கப்படுகிறது. காடுகள் அழிக்கப்படுவதால் கேடுகள் அதிகமாகின்றன.

**காடுகளின் அழிவு கேட்டினை விளைக்கும்:**

மரங்கள் நிழலும் கனியும் மாத்திரம் தருபவை அல்ல. ஒரு மரம் 50 ஆண்டுகள் வரை உயிரோடிருந்தால் அதனால் மனித சமுதாயத்திற்கு விளையும் நன்மைகள் என்னென்ன என்பது பற்றி கல்கத்தா வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணியுரியும் டாக்டர் டி.எம். தாஸ், நீண்ட நாட்களின் ஆராய்ச்சிகளுக்குப் பின், கண்டறிந்திருக்கிறார். அவருடைய கண்டுபிடிப்புகள் அனைவரையும் வியப்பில் ஆழ்த்துகின்றன. ஒரு மரம் சமுதாயத்திற்குச் செய்யும் சேவையின் மதிப்பு ரூ.15.90 இலட்சமாகும். பத்து குளிர்சாதனக் கருவிகள் தொடர்ந்து ஓடுவதால் ஏற்படும் குளிர்ச்சியை ஒரு மரம் தனி நிழல் மூலம் தந்துவிடுகிறது. பதினெட்டுப் பேருக்கு ஒரு ஆண்டுக்கு சுவாசிக்கத் தேவையான பிராண வாயுவை ஒரு ஏக்கரில் வளர்ந்த மரங்கள் தருகின்றன. அவை பின்வருமாறு கணக்கிடப் படுகின்றன.

| | |
|---|---|
| பிராணவாயு உற்பத்தியின் மதிப்பு | ரூ. 2.50 இலட்சம். |
| காற்றினைச் சுத்தமாக்குவது | ரூ. 5 இலட்சம். |
| பூமியின் மேல் உள்ள மண்சத்துக் குறையாமல் காப்பது | ரூ.2.50 இலட்சம். |
| காற்றில் இருக்கும் ஈரப்பசை குறையாமல் காப்பது | ரூ. 3 இலட்சம். |
| பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் நிழல் கொடுப்பது | ரூ. 2.50 இலட்சம். |
| உணவுச் சத்துக் கொடுப்பது | ரூ. 0.20 இலட்சம். |
| பூக்கள் மற்றவை வழங்குவது | ரூ. 0.20 இலட்சம். |
| மொத்த மதிப்பு | ரூ.15.90 இலட்சம். |



*1951*-இல் இந்தியாவின் மொத்த நிலப் பரப்பில் *23* சதவீத நிலம் காடுகளாக இருந்தன. இதை *33* சதவீதம் உயர்த்த வேண்டும் என்ற இலக்கை *1952*-இல் நிர்ணயித்தார்கள். ஆனால், முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு கணக்குப் பார்க்கும் பொழுது அது 10 சதவீதம் குறைந்து போயிருக்கிறது.

தமிழகத்தில் பருவமழை பொய்த்துப் போனதற்குக் காரணம் மக்கள் பிரார்த்தனை செய்யாதது அல்ல. மரங்கள் பிடுங்கப்பட்ட பூமிப்பரப்பை மழைமேகம் மறந்து போய் விடுகிறது. மேகங்களுக்கு முகவரி வானுயர்ந்த மரங்கள்தாம். ஊட்டி, கொடைக்கானல், குற்றாலம் முதலிய இடங்களை நினைக்கும் போதெல்லாம் குன்றுகளை மறைக்கும் பசுமைதான் நம் கண்முன் நிற்கும். இன்று மலைகள் மொட்டையடித்துக் கொண்டு நிற்கின்றன.

இயற்கை பலவித விநோதங்களை உள்ளடக்கியது. தனது நீர் வளங்கள், நில வளங்கள், வன வளங்கள் ஆகியவற்றைச் சமச்சீர் நிலையில் வைத்துள்ளது. சுவாசிக்கும் பிராணவாயு நிறைந்த காற்று கிடைக்கவும், மக்களின் வாழ்வுக்கு அடிப்படையான தண்ணீர் கிடைக்கவும், உணவுப் பொருள்களின் உற்பத்திக்கும் இயற்கையின் இந்தச் சமநிலையே ஆதார சுருதியாக அமைந்துள்ளது.

இயற்கைக்கும் தனக்கும் உள்ள தொடர்பைச் சமச்சீர் அற்ற முறையில் பயன்படுத்தத் தொடங்கியது மனிதகுலம். காடுகள் அழிக்கப்பட்டதால் தட்பவெட்ப நிலைகளில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. வறட்சியும் பஞ்சமும் தலைதூக்கத் துவங்கின. இதனைத்தான் ஏங்கெல்ஸ்

''பாலைகள் இயற்கையில் ஏற்பட்டவை அல்ல. அவை மனிதனால் உருவாக்கப்பட்டவை'' என்கிறார்.

செயற்கைக் கோள் திரட்டிய விவரப்படி ஆப்பிரிக்கக் கண்டத்தில் *54* சதவீதம் நிலப்பகுதியும் ஆசியக் கண்டத்தில் *34* சதவீதம் நிலப் பகுதியும் பாலைவனம் ஆகிக் கொண்டிருக்கிறது.

***பாலைவனம்***

உலகில் மிகப்பெரிய பாலைவனங்களில் ஒன்று சகாரா பாலைவனம். இது ஆப்பிரிக்கக் கண்டத்திலுள்ள பல நாடுகளையே விழுங்கி விட்டது. சமீபத்தில் ஒரு நாட்டையே காணவில்லை என்கிறார்கள். சாஹெல் என்பது அந்த நாட்டின் பெயர். இதன் பரப்பளவில் 150 சதுர கிலோமீட்டர் சகாரா பாலைவனத்தின் அங்கமாக மாறிவிட்டது. தார்ப் பாலைவனம் இந்தியாவின் பெருமணல் பரப்பை உள்ளடக்கியது. இது ஒரு காலத்தில் வளமான பகுதியாக இருந்ததாகும். ஏரிகள், குளங்கள் எல்லா இடங்களிலும் காணப்பட்டதாகவும், பசுமை நிறைந்த காடுகள் இருந்ததாகவும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள்.

இந்த மாபெரும் பாலைவனம் தனது சாம்ராஜ்யத்தை விரிவாக்கி வருகின்றது. ராஜஸ்தானை விழுங்கியபின் இதன் நாக்குகள் பிற மாநிலங்களைத் தீண்டத் துவங்கியுள்ளன. ஆரவல்லி மலைகளில் உள்ள காடுகள் முழுமையாக மொட்டையடிக்கப்பட்டது இந்தப் பாலைவனப் பரவலுக்குக் காரணமாகச் சொல்லப்படுகிறது.

இதைத்தவிர, ஐக்கிய நாடுகள் சபை பெரும் அதிர்ச்சி தரக்கூடிய வேறொரு புள்ளி விவரத்தை வெளியிட்டுள்ளது. இது சீனா, இந்தியா, தென் கிழக்கு ஆசிய நாடுகளைப் பற்றியது. கடுமையான வறட்சி, பஞ்சம் ஆகியவற்றால் இந்த நாடுகளில் 15 கோடி மக்கள் உழவுத் தொழிலையே விட்டொழித்துவிட்டார்கள்.

***நீர் வளமும் காடுகளும்***

மரங்களின் பணிகள் சாதாரணமானவை அல்ல. பெய்யும் மழையில் 26 சதவீதத்தை நிலத்தடி நீராகச் சேமிக்கின்றன. பூமியின் மேற்பரப்பிலிருந்து ஈரப்பசையை வேர்கள் மூலம் உறிஞ்சி இலை தாவரங்கள் வழியாக வெளியிடும் நீராவியின் அளவு 42 சதவீதம். இலைகளில் தங்கிவரும் மழைத்துளிகளின் அளவு 68 சதவீதமாகும். இது நேரடியாக ஆவியாகிறது.

பூமியின் பெரும்பகுதி கடலாலானது. ஆழமான பெருங்கடல்களுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால் இவ்வளவு நீரும் மனிதனுக்குப் பயன்படுகின்றதா என்றால் இல்லை. உப்பு நிறைந்த நீர் நம் தேவையைப் பூர்த்தி செய்யாது.

மழையால் கிடைக்கும் நீர் ஏரிகள், குளங்கள், கால்வாய்கள், நிலத்துக்கு அடியில் இருக்கும் பாறைகள் முதலியவைகளில் தேங்கியிருக்கின்றது. இதுதான் பாசனத்திற்கும் குடிநீருக்கும் மற்ற உபயோகங்களுக்கும் பயன்படுகிறது. உலகிலுள்ள மொத்த நீரின் அளவில் இது 3 சதவீதம் மட்டுமே என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இதுவும் குறைந்து கொண்டே வருகிறது. விஞ்ஞான வளர்ச்சி, பசுமைப் புரட்சி, மக்கள் தொகைப் பெருக்கம் - ஆகியவை இந்த மூன்று சதவீத தண்ணீரும் குறைந்து விடுவதற்குக் காரணம் என்பது உண்மை.

21-ஆம் நூற்றாண்டு ஒரு சொட்டுத் தண்ணீருக்காக ஏங்கும் நூற்றாண்டாக மாறிவிடுமோ என்ற அச்சத்தைப் பல அறிஞர்கள் வெளியிட்டுள்ளார்கள். ஆறுகளின் ஜீவன் காடுகளில்தான் இருக்கிறது. எப்பொழுதோ பெய்யும் மழையை தனது வேர்கள் மூலம் பூமியில் தேக்கி வைத்து நீர்க்கசிவின் மூலம் ஆண்டு முழுவதும் ஆறுகளுக்கு வழங்குவதும் இந்தக் காடுகளே.

''மொத்தத்தில் - காடுகள் இல்லாத இடங்களை விட, காடுகள் உள்ள இடங்களில் ஏழு மடங்கு அதிகம் தண்ணீர் பூமியில் உறிஞ்சிக் காக்கப்படும். காடுகள் உள்ள இடங்களில் - ஒரு சதுர கிலோமீட்டர் பரப்பளவுள்ள காடுகள் அதனடியில் 50 ஆயிரத்திலிருந்த 2 இலட்சம் கனமீட்டர் வரை நீரை நிலை நிறுத்திக் கொள்ளும். பக்ராநங்கல் போன்ற அணைகளில் தேக்கப் பட்டுள்ள அளவுக்குச் சமமான நீரை 10 ஆயிரம் சதுர கிலோமீட்டர் பரப்பளவுள்ள காடுகளை வளர்த்தாலே சேமிக்க முடியும்.

இந்த ஆய்வு நீர்வளத்தைப் பாதுகாக்க, காடுகளின் அவசியத்தைப் புரிந்து கொள்ளத் துணை நிற்கும்.

***சுவாசக் காற்றைச் சுத்திகரிப்பன காடுகள்***

தொழில் வளர்ச்சி, மக்கள் பெருக்கம் காரணமாக நம்மைச் சுற்றியுள்ள வாயுமண்டலத்தின் கார்பன்-டை-ஆக்ஸைடு கூடுதலாகிறது. தொழிற் புரட்சிக்கு முந்திய காலத்தில் காற்றில் கலந்திருந்த கார்பன்-டை-ஆக்ஸைடின் அளவு 0.028 சதவீதமாக இருந்தது. இப்பொழுது காற்றில் உள்ள இதே வாயுவின் அளவு 15 சதவீதம் என்று விஞ்ஞானிகள் கணக்கிட்டுள்ளனர்.

கார்பன்-டை-ஆக்ஸைடு கூடுதலாவதால் சுவாசிக்கும் ஆக்ஸிஜன் அசுத்தமடைகின்றது என்பது எவ்வளவு உண்மையோ அதைப்போலவே வாயு மண்டலத்தின் வெப்பமும் அதிகரிக்கின்றது என்பது உண்மையே. காடுகள்தான் காற்றில் உள்ள கார்பன்-டை-ஆக்ஸைடை ஆக்ஸிஜனாக மாற்றும் பணியைச் செய்து கொண்டிருக்கின்றன.

பூமியில் 25 ஏக்கரில் உள்ள மரங்கள் ஆண்டு ஒன்றுக்கு 37 டன் கார்பன்-டை-ஆக்ஸைடை உட்கொண்டு 2 டன் எடையுள்ள ஆக்ஸிஜனை வெளியிடுகின்றன. இதன் மூலம் ஒவ்வொரு ஆண்டும் ஒரு இலட்சத்து 80 ஆயிரம் கனமீட்டர் காற்று சுத்திகரிக்கப்படுகின்றன.

அடிப்படை தேவை மிகுந்த காடுகள் இல்லாவிட்டால் காற்று சுத்திகரிக்கப்படுவது தடைப்படும். இதனால் காற்று மண்டலம் வெப்பமடையும். கூடுதல் வெப்பமாகிப் போன இந்தப் பகுதியை நோக்கி மேகங்கள் வருவதில்லை. பல ஆண்டுகள் தொடர்ந்து மழை பெய்வதில்லை.

உலகின் இயற்கைச் சூழல் பாதுகாப்புக்காக மொத்த நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பங்கு



காடுகளாக இருக்க வேண்டும். இந்தியாவில் இருக்கின்ற காடுகள் 22 சதவீதம் என்று அரசாங்கம் கூறுகிறது. செயற்கைக் கோள் மூலம் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் இங்கு 14 சதவீதம்தான் காடுகள் இருக்கின்றன என்பதை உறுதி செய்கின்றன. தமிழ்நாட்டில் 17 சதவீதம் காடுகள் இருப்பதாக அரசாங்கத்தின் புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

சமூகநலக் காடுகளுக்கு அரசாங்கம் நிறைய உதவிகளைச் செய்கிறது. ஆனால் இத்திட்டங்களால் கூடுதலாக வளர்க்கப்படுவவை யூகலிப்டஸ் மரங்கள் தான். மொத்தம் நடப்பட்ட மரக்கன்றுகளில் 75 சதவீதம் இந்த இனத்தைச் சார்ந்தவை என்று கூறப்படுகின்றது. ரயான் தொழிற்சாலைகளுக்குத் தமிழ்நாடு அரசு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்துள்ளது என்பதை அரசாங்கத்தின் குறிப்பே தெளிவுபடுத்துகின்றது. '1985-86-ஆம் ஆண்டுகளில் மட்டும் தொழிற்சாலைகளுக்குத் தமிழக அரசு 8 கோடியே 73 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள மூலப் பொருட்களை வழங்கியுள்ளது. இதில் யூகலிப்டஸ் மூலம் கிடைத்த வருமானம் அதிகம் ஆகும்.''

தமிழ்நாடு அரசு அதிமுக்கியத்துவம் கொடுத்து வளர்க்கும் இந்த யூகலிப்டஸ் மரங்களைப் பற்றி விஞ்ஞானிகள் என்ன கருதுகிறார்கள்?

இந்தத் தாவரத்திற்கு விஞ்ஞானிகள் சூட்டியுள்ள பெயர் 'உயிர்ச் சூழல் பயங்கரவாதி' என்பதாகும். பொதுவாகத் தாவரங்கள் இயற்கைச் சூழலைச் சமநிலைப்படுத்தும் தன்மை கொண்டவை. இலைகளின் துளைகள் வழியாக நீராவி வெளியாகின்றது. ஆனால் 'யூகலிப்டஸின் பிளாஸ்டிக்' போன்ற இலைகள் நீராவியை வெளியிடுவதில்லை. இதன் வேர்கள் பூமியில் உள்ள ஈரப்பசையை முற்றாக உறிஞ்சிவிடும். இந்த மரங்களுக்குப் பக்கத்தில் புல் பூண்டுகள் கூட முளைப்பதில்லை. மேகங்களில் உள்ள ஈரப்பசையைக் கூட உறிஞ்சும் தன்மை கொண்டது. இதனால் நிலத்தடி நீரும் மழை பெய்ய வேண்டிய மேகங்களும் பெரும் சேதத்திற்கு உள்ளாகின்றன.

எனவே இது நடப்படுவதற்குத் தடை விதிக்க வேண்டும்.

### உயிர்கொன்றிடும் பூச்சிக் கொல்லிகள்

பூச்சிக் கொல்லி மற்றும் மருந்துக்கென உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் உலக நாடுகளில் வியாபாரப் பொருட்களாக ஆகிவிட்டதனால் 1980-ஆம் ஆண்டு முதல் அது ஓர் உலகப் பெரும் பிரச்னையாக உருவெடுத்துள்ளது. அண்மைக்காலம் வரை அமெரிக்காவும் வேறு சில தொழில் வளர்ச்சி பெற்ற நாடுகளும்தான் பூச்சிக் கொல்லி போன்ற மருந்து வகைகளால் ஏற்படுகிற சுற்றுப்புறச் சுகாதாரக் கேடுகளைப் பற்றிக் கவலைப்பட்டு வந்தன. வளர்ச்சி பெற்ற நாடுகளுக்கும் வளர்ந்து வருகிற நாடுகளுக்கும் இடையே பூச்சிக் கொல்லி மருந்து வியாபாரம் விரைவாக வளர்ந்தது. அதன் விளைவாக ஒரு சில நாடுகளின் வேதனையாக இருந்து வந்த இப்பிரச்னை உலகளாவிய சிக்கலாக உருவாகிவிட்டது.

உலக நாடுகளில் இரசாயனப் பொருட்களின் வியாபாரம் 1970 முதல் 1978 ஆண்டுகளுக்கிடையே 22 மில்லியன் டாலரிலிருந்து 96 மில்லியன் டாலர் அளவுக்கு வளர்ந்தது.

மேலை நாடுகள் வேளாண்மையில் வெற்றி பெற இயற்கைக்கு முரண்பட்ட பல்வேறு வழிமுறைகளைக் கடைப்பிடித்து வந்தன. கி.பி. 1960-ஆம் ஆண்டிலிருந்து 1970-ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலக்கட்டத்தில், இயற்கை வழி முறைகளைக் கொண்டு விவசாயத்தில் ஈடுபட்டு வந்த மூன்றாவது உலக நாடுகளை மேலை நாட்டு விவசாய முறைகள் ஆட்கொண்டன. பசுமைப் புரட்சி என்று பெயரிடப்பட்ட இந்த வழிமுறைகளில் பல்வேறு வகையான இரசாயன உரங்களால் வேளாண்மை விருத்தி செய்யப்பட்டது. இந்தப் பசுமைப் புரட்சி பல்வேறு வகையான இரசாயனப் பூச்சிக் கொல்லி மருந்துகளின் மீது ஒரு சார்பு நிலையை ஏற்படுத்தியது. ஆனால் இந்த மருந்துப் பொருட்கள் மண்ணில் இயற்கையாகப் படிந்திருந்த வளத்தை அழிக்கத் தொடங்கியதைப் பலர் உணரவில்லை. பல வெப்ப நாடுகள் டி.டி.டி. டையெல்டிரின் (Dieldrin), எண்டோஸ்ஃபன் (Endosuffen) போன்ற மருந்துகளைப் பூச்சிகளைக் கொல்லப் பயன்படுத்தின. இந்த இரண்டு நிலைகளும் மேலை நாடுகள் தங்கள் மருந்துப் பொருட்களை ஏற்றுமதி செய்ய உதவின.

அமெரிக்க நாடாளுமன்றப் பொதுக்கணக்கு அலுவலகம் (U.S. Congress General Accounting Office) 30 சதவீதம் பதிவு செய்யப்படாத மருந்துப் பொருட்கள் அதாவது 'கூட்டு சுற்றுச் சூழல் பாதுகாப்பு அமைப்பு (Federal Environmental Protection Agency) அங்கீகரித்திடாத மருந்துப் பொருட்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன என்று தெரிவிக்கிறது. இதில் ஏறத்தாழ 20 சதவீதம் மருந்துகள் ஆபத்தானவை என்ற காரணத்தால் தடை செய்யப்பட்ட மருந்துகளாகும்

பூச்சிக் கொல்லி மருந்துப் பொருட்களை ஏற்றுமதி செய்வதில் ஜெர்மனி (25 சதவீதம்), அமெரிக்கா (20 சதவீதம்), இங்கிலாந்து (15 சதவீதம்), சுவிட்சர்லாந்து (15 சதவீதம்), பிரான்ஸ் (13 சதவீதம்), ஜப்பான் (5 சதவீதம்), இத்தாலி (38 சதவீதம்) ஆகிய நாடுகள் முன்னணியிலுள்ளன. ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது உலகிலுள்ள வளர்ந்து வரும் நாடுகள் அனைத்தும் இந்த 7 நாடுகளிலிருந்துதான் தங்களுக்குத் தேவையான மருந்துப் பொருட்களை வாங்கிக் கொள்கின்றன.

உலக சுகாதார நிறுவனத்தின் கணக்குப்படி பூச்சிக் கொல்லி மருந்துகளால் ஒவ்வொர் ஆண்டும் 5,000 மக்கள் உயிரிழக்கிறார்கள். 5 மில்லியன் மக்கள் அவற்றின் நச்சுத் தன்மையால் பாதிக்கப்படுகிறார்கள். இந்த எண்ணிக்கையிலும் சரிபாதி சிறுவர்களும் இளைஞர்களும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. சரியாக முன்னேற்றமடையாத நாடுகளில் இரசாயனக் கலவைகளால் ஏற்படும் தீமைகளைத் தடுத்து நிறுத்தச் சிறிதளவுகூட பாதுகாப்பு வசதிகள் இல்லை. அதே நேரம் வளர்ந்து வரும் நாடுகளிலும் இவற்றின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த ஒழுங்கு படுத்தப்படாத இவற்றின் பயன்பாடு மனித உடலுக்குக் கேடு விளைவிப்பது மட்டுமன்றி சுற்றுச்சூழலை நாசப்படுத்தி விடுகிறது. இதன் காரணமாக உணவுப் பொருட்களும் நார்வகைகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

### ஒரு கிராமத்தையே பாதித்த பூச்சி மருந்துகள்

மேற்கு ஆப்பிரிக்காவில் கானா நாட்டில் 'ஆக்டிமேட் பேட்டர்' (Achedemate Bator) என்ற கிராமம் ஒன்றுள்ளது. வோல்டா (Volta Lake) ஏரிக்கரையில் அமைந்துள்ள இக்கிராமத்து மக்கள் அனைவருமே கல்வியறிவு பெறாதவர்கள். அந்தக் கிராமத்து மக்கள் பெரும்பான்மை மீனவர்கள். அவர்கள் வோல்டா நதியின் மீன்களைத்தான் உணவாக வளமான வாழ்வுக்கு வருமானம் தரும் சுரங்கமாகவும் கொண்டனர். நதியின் நீரையே தங்கள் தேவைகளுக்குப் பயன்படுத்தி வந்தனர்.

கானா நாட்டு வேளாண்மைத்துறை பேட்டர் கிராமங்களில் விவசாயத்தில் ஈடுபட்டோருக்கு காமோலின்-20 (Gammolin-20) என்ற மருந்தை விநியோகித்தது. ஆனால் இதைப்பற்றி எச்சரிக்கை கொடுக்க மறந்தது. காலம் காலமாக மீன்பிடிக்க

38 ஆம் பக்கம் பார்க்க





# நூல் நயம்

### வீரமா முனிவர் இயற்றிய தமிழ் மருத்துவ நூல்

பதிப்பாசிரியர்:
முல்லை பி.எல்.முத்தையா

வெளியிட்டோர்:
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி, சிட்கோ
இண்டஸ்டரியல் எஸ்டேட்,
சென்னை-600 098.

விலை:ரூ.8 பக்கம்:68

'நச காண்டம்-100' என்ற பெயரில் வீரமாமுனிவரால் இயற்றப்பட்டதாக, 1926-இல், மாணிக்கவேல் முதலியாரால் பதிப்பிக்கப்பட்ட நூலின் புதுப்பிக்கப்பட்ட முதல் பதிப்பு இது. வழக்கமான மருத்துவ நூல்களைப் போலல்லாமல்-நோய்களின் இயல்புகள் அட்டவணை, மருந்து முறைகளின் அட்டவணை, மருந்து செய்முறைகளும் குணமாகும் நோய்களும், நோய்களும் இயல்புகளும், மருந்துச் சரக்குகளைச் சுத்தி செய்யும் முறை ஆகிய பகுதிகளின் தொகுப்பாக இந்த நூல் விளங்குகிறது.

- 'முடிகொண்டான்'

### உலகக் கோப்பைக் கால்பந்துப் போட்டி - 1990

ஆசிரியர்: டாக்டர் மு. முத்துக்காளத்தி

வெளியீடு:
கண்ணம்மாள் பதிப்பக வெளியீடு,
பாரி நிலையம்,
184, பிராட்வே, சென்னை-600 108.

விலை:ரூ.35 பக்கம்: 322

1990-ஆம் ஆண்டு இத்தாலியில் நடைபெற்ற உலகக் கோப்பைக் கால்பந்துப் போட்டியின் ஒவ்வொரு நாள் ஆட்டம் பற்றி விரிவாக எடுத்துக்கூறுகிறது இந்நூல்.

கால்பந்தாட்டத்தின் தோற்றம், உலகக் கோப்பைக் கால்பந்து போட்டியின் வரலாறு ஆகியவற்றைக் கலை உணர்வோடு எடுத்துரைக்கிறார் ஆசிரியர். கால்பந்தாட்டத்தின்போது கடைப்பிடிக்க வேண்டிய புதிய ஐந்து கட்டளைகள், கால்பந்தாட்ட வீரர்கள் மற்றும் ரசிகர்களுக்கு உறுதுணையாக இருக்கும். கால்பந்தில் இந்தியாவின் நிலை என்ன என்பது பற்றியும், சர்வதேச அளவில் கால்பந்தாட்டத்தில் இந்தியா ஒரு குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற என்ன செய்ய வேண்டும் என்பது குறித்தும் விரிவாக எடுத்துரைக்கிறார் ஆசிரியர்.

கால்பந்தாட்ட ரசிகர்கள் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு இந்நூல் பயன்தரத்தக்க ஒன்றாகும்.

- ஜே. சந்திரன்.

### நிலத்திலக் குவியல் மும்மணிகள் நூற்றாண்டு விழா மலர்

ஆசிரியர்: புலவர் தனிகை உலகநாதன்

வெளியீடு:
மாணவர் மன்றம்,
சென்னை-1.

விலை:ரூ.15 பக்கம்:144

பாவேந்தர் பாரதிதாசன், டாக்டர் தருமாம்பாள், தமிழ் மூதாட்டியார் மலர் முகத்தம்மையார் ஆகியோர் நூற்றாண்டு விழா மலராக மலர்ந்துள்ளது நிலத்திலக் குவியல்.

புதுவை தந்த புரட்சிக்கவியின் தமிழ்த் தொண்டு குறித்த கட்டுரைகள், கவிதைகள் மலரை அணி செய்கின்றன. இதேபோல டாக்டர் தருமாம்பாள் அம்மையார் குறித்த கட்டுரை கவிதைகளும் அவரது சிறப்பியல்புகளைப் படம்பிடித்துக் காட்டுகின்றன.

தமிழ் மூதாட்டியார் மலர்முகத் தம்மையார், கட்டாய இந்தியை எதிர்த்துச் சிறை சென்றவர். அன்னாரது குண நலன்கள் கோடிட்டுக் காட்டப்படுகின்றன.

அரிய தொகுப்பு. அனைவரும் படிக்க வேண்டும்.

—பி.வி.கிரி

### 'ஒரு கவிஞன் முனிவனாகிறான்'

ஆசிரியர்: ஆனைவாரி ஆனந்தன்

வெளியீடு:
கவிக்குயில் பதிப்பகம்,
59, சேஷாசல முதலித் தெரு,
சைதாப்பேட்டை, சென்னை-15.

விலை:ரூ.20 பக்கம்254

"சந்திரனில் மண்ணெடுத்துத் திரும்பி வந்தும் சாதனைப் பட்டியலை எழுதிப் போட்டும் மண் தரையில் புழுவாக ஊர்ந்து செல்லும் மனிதவுயிர் வாழ்வதற்கோர் வழியைக் காணோம்..." என்று, மனம் வெதும்பும் கவிஞன்தான் கதாநாயகன். அவனைச் சுற்றிச் செல்லும் இந்தக்கதை, கொஞ்சமும் தங்குதடையின்றிச் செல்கிறது.

கதையின் இடையிடையே சொல்லப்பட்டுள்ள கவிதைகளும், இலக்கிய வரிகளும் கதைக்கு வலுவூட்டுகின்றன-மெருகூட்டுகின்றன.

—குமாரசாமி

### அருளிச் செய்த ஆழ்வார்கள்

ஆசிரியர்: அழகு பழனிச்சாமி

வெளியிட்டோர்:
ஸ்ரீலதா பதிப்பகம்,
36, தூடியம்மன் பேட்டைத் தெரு,
சைதாப்பேட்டை, சென்னை-15.

விலை:ரூ.10 பக்கம்:92

வைண பக்தி நெறி பரப்பிய ஆழ்வார்கள் பன்னிருவரில் - பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூவரும் முதல் ஆழ்வார்கள் எனப்பட்டனர். மற்றவர்கள் - திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார், மதுரகவியாழ்வார், ஸ்ரீஆண்டாள் ஆகியோர் மற்றவர்கள்.

அவர்களுடைய அருமை பெருமை பற்றித் திருமால்தாசர் என்பவர், மாணவச் செல்வங்களுக்கு விளக்குவது போல் உருவாக்கப்பட்டிருப்பதே இந்த நூல். நூலாசிரியர் எளிய தமிழில் இதனைச் சிறுவர் நூலாகச் சிறப்பாக உருவாக்கியிருக்கிறார்.

### இதுதான் ஹைகூ

ஆசிரியர்: டாக்டர் தி. லீலாவதி

வெளியிட்டோர்:
பூங்கொடி பதிப்பகம்,
14, சித்திரைக் குளம் மேற்கு வீதி,
மைலாப்பூர், சென்னை-4.

விலை:ரூ.15 பக்கம்:128

ஜப்பானியக் கவிதை வகைகளில் ஒன்றான 'ஹைகூ' என்ற மூன்றடிக் கவிதைகள் இந்நாளில் குறிப்பாகப் புதுமை விரும்பிகளால் போற்றிப் புகழப்படுகின்றன. அக்கவிதைகள் எப்படிப் பிறந்தன? எவ்வகையில் செல்வாக்குப் பெற்றன? எந்த வகையில் வளர்ந்தன என்பவை பற்றிய ஆய்வு நூலாக இந்த நூலைப் படைத்திருக்கிறார் ஆசிரியர். அந்த வகையில் உருவான முதல் நூல் என்றே நாம் இதனைக் குறிப்பிடலாம். 'ஹைகூ'வுக்கும் மரபுகள் உண்டென இந்நூலில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சீனக் கவிஞர்களின் எழுத்தோவியங்கள், ஜப்பானியர்களைப் பெருமளவில் ஆட்கொண்டிருப்பதையும் கன்ஃபூஷியஸின் கொள்கைக் கோட்பாட்டு ரேகைகள் ஹைகூ கவிதைகளில் பெரிதும் படிந்திருப்பதையும் நூலாசிரியர் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார்.

# சிறுசேமிப்புத் துறை




எதிர்பாரா இன்னல்கள் ஏற்படுமுன் சேமியுங்கள். வரி செலுத்துவதைத் திட்டமிட்டு, இன்ஷுரன்ஸ் பாதுகாப்பும் பெறுங்கள். இன்றே கீழ்க்கண்ட சிறுசேமிப்புத் திட்டத்தில் ரூ.1,000/-ம் அதற்குமேலும் முதலீடு செய்து தனிநபர் விபத்து இன்ஷுரன்ஸ் பாலிசியைப் பெறுங்கள்.

**கீழ்க்கண்ட திட்டங்களின்கீழ் தனிநபர் விபத்து இன்ஷுரன்ஸ் பாதுகாப்பு கிடைக்கும்:**

- கிசான் விகாஸ் பத்திரம்
- தேசிய சேமிப்புத் திட்டம்
- அஞ்சலக மாதாந்திர வருமானத்திட்டம்
- அரசுப்பணியாளர்களுக்கான டெபாசிட் திட்டம் 1989
- தேசிய சேமிப்புப்பத்திரம் 8வது வெளியீடு
- 15 வருட பொது சேமநலநிதி
- அஞ்சலக குறித்தகால டெபாசிட்

## வருமான வரி விலக்குப் பெற தேசிய சேமிப்பில் முதலீடு செய்வீர்

| வசதிகள் | தேசிய சேமிப்பு பத்திரம் 8-வது வெளியீடு | பொதுசேம நலநிதி | தேசிய சேமிப்பு திட்டம் |
|---|---|---|---|
| வட்டி | 12% | 12% | 11% |
| முதலீட்டுக்கு வருமான வரிவிலக்கு | ரூ.50,000 பிரிவு 88-ன்கீழ் | ரூ.50,000 பிரிவு 88-ன்கீழ் | ரூ.40,000 பிரிவு 80CCA-ன் கீழ் |
| வட்டிக்கு வருமான வரிவிலக்கு | வருமான வரிச் சட்டம் பிரிவு 88-ன்கீழ் | வருமான வரியில் இருந்து வட்டிக்கு முழுவிலக்கு | வட்டி தொகை சேரும்போது வருமான வரி விலக்கு |
| செல்வ வரி | ரூ.5,00,000 வரை விலக்கு | முழுவிலக்கு | முழுவிலக்கு |
| டெபாசிட்டுகளுக்கான வரம்பு | வரம்பு கிடையாது | ரூ.60,000 | ரூ.40,000 |

### தமிழக அரசின் சிறப்பு சலுகைகள்:

- ஒவ்வொரு ரூ.500/- முதலீட்டிற்கும் ஒரு இலவச பரிசு கூப்பன் மூலம் 262 பரிசுகளில் ஒன்றைப் பெறும் வாய்ப்பு.
- தமிழ்நாட்டில் குறிப்பிட்ட சில திட்டத்தில் முதலீடு செய்யும் ஒவ்வொரு ரூ.1,000/- முதலீட்டிற்கும் 1% வரை ஊக்கத்தொகை.
- 1.1.91 முதல் 31.3.91 வரை தமிழ்நாட்டில் குறிப்பிட்ட திட்டங்களில் முதலீடு செய்யும் ஒவ்வொரு ரூ. 1000/- முதலீட்டிற்கும் தனிநபர் விபத்து இன்ஷுரன்ஸ் வசதி. பிரீமியத்தை தமிழக அரசே செலுத்துகிறது.

DIPR/189 NS/91ARIES

## இலவச தனிநபர் விபத்து காப்புறுதி திட்டம் — அதிகபட்ச நஷ்ட ஈடு ரூ. 50,000/-




கூடுதல் சலுகைகள்:

* இந்திய அரசின் முழுப்பாதுகாப்பு
* சொத்து வரிவிலக்கு
* உங்கள் குழந்தைகள் பெயரில் முதலீடு செய்து வருமான வரிவிலக்கு பெறுங்கள்.

யுனைடெட் இந்தியா இன்ஷுரன்ஸ் நிறுவனம், சென்னை.
தனிநபர் விபத்து இன்ஷுரன்ஸ் பாலிசி கிடைக்குமிடம்:
அனைத்து மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் மற்றும்

இயக்குநர்
**சிறுசேமிப்புத்துறை**
143, அண்ணாசாலை, சென்னை-600 002.
தொலைபேசி: 840223/846209.




# சிகிச்சையின் மூலம் சீராக்கலாம்!


**டாக்டர் பா.இளங்கோவன்**
உதவிப்பேராசிரியர்,
ஒட்டு உறுப்பு அறுவைச்சிகிச்சைத் துறை,
சென்னை மருத்துவக் கல்லூரி,
பொது மருத்துவமனை, சென்னை.


வயிற்றில் வளரும் குழந்தையின் வரவுக்காகக் காத்திருக்கும் இளம் தாயின் எதிர்ப்பார்ப்புகளும், கனவுகளும், ஆயிரம், ஆயிரம். குழந்தைப் பேறு நல்லபடி ஆக வேண்டும், பிறக்கும் குழந்தை குறையேதுமின்றி அழகாக இருத்தல் வேண்டும் என எண்ணுவது யாவருக்கும் இயல்பு தானே?

அரிது, அரிது, மானிடராய்ப் பிறப்பதரிது. அதனினும் அரிது குறையின்றிப்பிறப்பது என்ற ஔவை மூதாட்டியின் சொல் ஒரு கோடி பெறும்.

காத்திருந்து, காத்திருந்து, பெற்ற பிள்ளை பிளவுபட்ட உதடு மற்றும் மேலண்ணம் என்ற பிறவிக் குறைபாட்டுடன் இருக்குமானால் பெற்றோரும், மற்றோரும் படும் துயர் அளவிட முடியாது.

இவ்வகைக் குறைபாடுகள் முற்றிலும் சரி செய்யக்கூடியவை. சரி செய்ய நல்லதோர் அறுவைச்சிகிச்சை முறை உண்டு இங்கு. சிகிச்சைக்குப் பிறகு இந்த குழந்தைகளும் மற்றவர் போல் உணவு உட்கொள்ள முடியும். காலத்தே மழலை மொழிபேசி, பெற்றோரையும், மற்றோரையும் மகிழ வைக்க முடியும். வளர்ந்து, உயர்ந்து, எதிர்காலத்தில் எவருக்கும் சளைத்தவர் அல்லர் என்று ஏறு நடை போட முடியும்.

இந்தக் குறைபாடு உடைய குழந்தைகளுக்கு என்னென்ன இயலாமை வரும்? அவற்றை எவ்வாறு சரி செய்யலாம்? எப்பொழுது செய்வது சரியானது? யார்? எங்கே? எப்படி? இந்த வினாக்களுக்கெல்லாம் விடை காண்போமா?

**பிளவுபட்ட உதடு மற்றும் மேல அண்ணம் பிறவிக் குறைபாடு எப்படி ஏற்படுகிறது?**

குழந்தையின் முகம் தாயின் கருவில் உருவாகும் போது பல சிறு



பகுதிகளாகக் தோன்றி, ஒன்றிணைந்து உருப்பெறுகிறது. அப்போது ஏற்படும் கோளாறினால் உதடுகள் பிளவுபட்டும், மேல் அண்ணம் பிளவுபட்டும், அல்லது இவற்றுடன் வேறு பல குறைகளுமாய் குழந்தை பிறக்கக்கூடும்.

இந்தக் குறைபாடுகள் என்ன காரணத்தினால் ஏற்படுகின்றன என்று சரியாக இன்னமும் கூற முடியவில்லை. பெற்றோர்களின் செய்யத் தகாத செய்கைகள் இக் குறை தோன்றக் காரணம் என்ற சிலரின் எண்ணம் தவறானது. சூரிய கிரகணம், சந்திர கிரகணம் போன்றவை குழந்தைகள் பிறப்பில் குறை ஏற்படுத்தும் என்பதும் ஆதாரமற்ற மூடநம்பிக்கை.

**இக்குறை பாட்டினை ஏற்படுத்தும் காரணிகளை இரண்டு வகையாக பிரிக்கலாம்:**

1. பெற்றோரின் உடலுக்கு வெளிப்புறமிருந்து நிகழும் காரணங்கள்: (Extrinsic Factors)
2. உடலின் உட்புறம் நிகழும் காரணங்கள்: (Intrinsic Factors)

**சிகிச்சைக்கு முன்னும் பின்னும் பேச்சுப் பதிவு செய்தல்.**



# திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

### ஆதி திராவிடர் நலத்துறை

ஆதி திராவிடர் நலத்துறையின் மூலமாக நடப்பு நிதியாண்டில் (1990-91) நிலம் மற்றும் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் 1,700 ஆதி திராவிடர்களுக்குச் சுமார் ரூ.5.10 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கிட குறியீடு நிர்ணயிக்கப் பட்டு, இதுவரையில் 1,751 ஆதி திராவிடர்களுக்குச் சுமார் ரூ.4.37 இலட்சம் மதிப்பீட்டில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

13 ஆதி திராவிடர்களுக்கு நடப்பு ஆண்டில் குடிநீர்க் கிணறுகள் அமைப்பதற்காக ரூ.97 ஆயிரம் செலவு செய்யப்பட்டுள்ளது. ஆதி திராவிடர் வாழும் பகுதியில் ரூ.1.50 இலட்சம் செலவில் மயானப் பாதை அமைத்துத் தரப் பட்டுள்ளது. ஆதி திராவிடர்களுக்கு உழவு மாடுகள் வாங்கிடுவதற்காக மானியமாக ரூ. 44 ஆயிரம் நிதி யுதவி 30 நபர்களுக்கு வழங்கப்பட்டு இலக்கு நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர்களுக்கான பள்ளி களில் பயிலும் 1,473 மாணவர் களுக்கு ரூ.1.04 இலட்சம் மதிப் பிலான இலவசப் புத்தகங்கள் வழங் கிட நடப்பு நிதியாண்டில் அனு மதிக்கப்பட்டு, இதுவரை 1,903 மாணவர்களுக்கு ரூ.1.05 இலட்சம் மதிப்பிலான இலவச பாடப் புத்த கங்கள் வழங்கப்பட்டுள்ளன. மாவட் டத்திலுள்ள ஏனைய பள்ளிகளில் பயின்றுவரும் ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடி வகுப்பினைச் சார்ந்த மாணவர்களுக்கு ரூ.13.07 இலட்ச மதிப்பிலான பாடப்புத்த கங்கள் இத்துறையின் மூலம் வழங் கப்பட்டுள்ளன. இத்துறையின் மூலமாக மாவட்டத்திலுள்ள ஆதி திராவிடர் வகுப்பைச் சார்ந்த 28,517 கல்வி பயிலும் மாணவ-மாணவியர்க்கு ரூ.68.86 இலட்சம் அளவிற்குக் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

### மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை

இத்துறையின் வாயிலாக இம் மாவட்டத்தில் கல்வி பயிலும் 24,101 மாணவ-மாணவியர்கட்கு ரூ.30.05 இலட்சம் அளவில் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

மாவட்டத்திலுள்ள 3,044 மாணவ-மாணவியர்கட்கு ரூ.19.50 மதிப்பிலான ஆடைகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. மேலும் கல்வி பயிலும் 912 மாணவ மாணவியர் கட்கு ரூ.19,103 மதிப்பிலான புத்தகங்கள் மற்றும் சிலேட்டுகள் வழங்கப்பட்டுள்ளன. இத்துறையின் மூலமாக ஐ.ஏ.எஸ். மற்றும் ஐ.பி.எஸ் தேர்வுக்குச் செல்லும் மாணவ-மாணவியர் பயன்பெறும் வகையில் 25 மாணவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி ரூ.60 ஆயிரம் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### வேளாண்மைப் பொறியியல் துறை

மண் வளப்பாதுகாப்புத் திட்டம்: நீர்பிடிப்புப் பகுதி வாரியாக நீர்-நில வளம் பாதுகாக்க சம உயர வரப்பு அமைத்தல், காடு வளர்ப்பு, பண் ணைக் குட்டைகள் அமைத்தல் போன்ற பணிகள் 2,000 எக்டேர் பரப்பில் ரூ.12 இலட்சத்தில் செயல் படுத்த மதிப்பீடு செய்யப்பட்டு அதில் ரூ.10 இலட்சம் செலவில் இதுவரை பணிகள் முடிக்கப்பட் டுள்ளன.

எரிபொருள் தாவர வளர்ச்சித் திட்டம்: பாழ்நிலங்களில் எரி பொருள் தாவரங்கள் பேணி வளர்ப்ப தற்காக 523 எக்டேர் நிலப்பரப்பில் ரூ.3.84 இலட்சம் செலவில் இத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம்: இத்திட்டத்தின் கீழ் வறட் சிக்கு இலக்காகும் பகுதிகளில் 1 கசிவு நீர்க்குட்டை, 5 கால்நடைக் குட்டை, 3 சிறிய தடுப்பணை, 2 பெரிய தடுப்பணை போன்ற 11 பணிகளை மேற்கொள்ள ரூ.3.05 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

### கதர் கிராமத் தொழில் வாரியம்

இவ்வாரியத்தின் மூலமாக 1990-91-ஆம் ஆண்டில் 37 வகை யான 'தொழில்களை மேற்கொள் வதற்காக ரூ.19.56 இலட்சத்திற் கான குறியீடு நிர்ணயிக்கப்பட்டு இதுவரை ரூ.16.30 இலட்சம் செலவில் அப்பளம், பாய் பின்னு தல், செருப்புத் தொழில், தச்சுத் தொழில், ரொட்டித் தொழில் போன்ற தொழில்கள் மேற்கொள் ளப்பட்டுள்ளன. இதன் மூலம் 170 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

இதில் பாய் பயிற்சி 40 பேர் களுக்கு ரூ.27 ஆயிரம் செலவிலும், மண்பாண்டத் தொழில் 50 நபர் களுக்கு ரூ.4.76 இலட்சம் செல விலும், செருப்புத் தொழில் 10 நபர்களுக்கு ரூ.25 ஆயிரம் செல விலும், பழம் பக்குவப்படுத்தும் தொழில் 30 நபர்களுக்கு ரூ.3 இலட்சம் செலவிலும் மேற்கொள் ளப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.



### நேருவின் பொன்மொழிகள்





★ இன்றைய குழந்தைகளே நாளைய இந்தியாவை அமைப்பவர்கள் என்பதை எப்பொழுதும் நான் உணர்கிறேன். குழந்தைகளை வளர்க்கும் முறை யைப் பொறுத்தே ஒரு நாட்டின் எதிர்காலம் உருவாகிறது.

### வீட்டு வசதித்துறை

கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம்: இம்மாவட்டத்திலுள்ள 25 நகர்ப் புறச் சங்கங்களும் நடப்பாண்டில் இதுவரை ரூ.120.24 இலட்சம் கடனாக வழங்கி 217 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

நகர்ப்புறத்திலுள்ள பொருளா தாரத்தில் நலிவுற்றோர் (வருமானம் ரூ.7,300-க்குக் குறைவாக உள் ளோர்) தமது சொந்த வீடுகளில் பழுது நீக்கல், கூரை மாற்றுதல், கழிப்பறை கட்டுதல், குடிநீர்க்குழாய் அமைத்தல் முதலிய மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள நேரு வேலை வாய்ப்புத் திட்டப்படி ரூ.3,000 கடனும், ரூ.1,000 மானி யமும் வழங்கப்படுகிறது. இத்திட்டத் தினை திருநெல்வேலி நகர்மன்றப் பகுதியில் மட்டும் செயல்படுத்த தேர்வு செய்யப்பட்டு இப்பகுதியி லுள்ள இரு சங்கங்கள் வாயிலாக 550 நபர்களுக்குக் கடனும் மானி யமும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

நகரங்களில் குடியிருப்புகள்: இத்திட்டத்தின் கீழ் விக்கிரமசிங்க புரம் மதுரா கோட்ஸ் தொழிலாளர் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் 763 வீடுகளையும், தென்காசி அரசிதழ் பதிவுறா அரசு அலுவலர் மற்றும் பொது ஊழியர் கூட்டுறவுக் கட்டடச் சங்கம் 112 வீடுகளையும், தென் காசி கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் 66 வீடுகளையும், பாளையங் கோட்டை புனித சவேரியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள் மற்றும் பணி யாளர்கள் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் 160 வீடுகளையும் ஆக மொத்தம் 1,101 வீட்டுமனைகள் கொண்ட குடியிருப்புகள் இச்சங்கங் களின் மூலமாக அமைக்கப்பட்டு வருகின்றன.

மேலும் சங்கரன்கோவில் அரசிதழ் பதிவுறா அரசு அலுவலர் மற்றும் பொது ஊழியர் கூட்டுறவுக் கட்டடச் சங்கம் மூலமாக 22.55 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டு வீட்டுமனைப் பிரிவுப் பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

சிறப்புக் கால்நடை பராமரிப்புத் திட்டத்தின் கீழ் 1990-91 ஆம் ஆண்டிற்கு 606 ஆடு அலகுகள் அமைக்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டு 480 ஆடு அலகுகள் ரூ.12.15 இலட்சம் செலவில் அமைக்கப் பட்டுள்ளன.




மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் சிவ கிரி வட்ட 'தலையணை' கிராமத் தைச் சேர்ந்த 10 மலைவாழ் மக் களுக்கு 10 ஆடு யூனிட்டுகள் வழங்கு வதற்கு ரூ.38,000 நிதி இசை வாணை அரசிடமிருந்து பெறப் பட்டுள்ளது.

வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தின் கீழ், குருவிகுளம் ஊராட்சி ஒன்றியத்தின் பசுந்தீவனம் வாங்க மானியம் வழங்க 350 யூனிட் குறியீடு நிர்ணயிக்கப்பட்டு 350 யூனிட் சாதனை எய்தப்பட்டுள் ளது. ரூ.52,350 செலவில் கோ-3 சோள விதைகள் 350 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

சிகிச்சைக்கு

முன் பின்





பொதுவாக இவை குழந்தையின் கருவானது உருப்பெரும் காலத்திலேயே (அதாவது இளங்கர்ப்பம் என்னும் முதல் மூன்று மாத காலத்தில்) நிகழ்ந்து விடுகிறது.

**உடலுக்கு வெளியிலிருந்து நிகழும் காரணங்கள்**

***நோய்த் தொற்று:*** கருத்தரித்த முதல் மூன்று மாதத்திற்குள் ஏற்படும் (Virus) வைரஸ் நோய்கள், விஷக்காய்ச்சல், தட்டம்மை, (German Measles) போன்றவை கருவைப் பாதிக்கின்றன.

***மாத்திரைகள்:*** பொதுவாகக் கர்ப்பகாலத்தில் எந்தவித மாத்திரைகளையும் உட்கொள்ளாதிருப்பது நல்லது. கார்டிசோன் போன்ற ஹார்மோன் மாத்திரைகள் மற்றும் கருக்கலைப்பு மாத்திரைகள் கருவில் குறை உண்டாக்குவது கண்டறியப்பட்டு உள்ளது.

***தாயின் ஊட்டச் சத்துக் குறைவு:*** கர்ப்ப காலத்தில் 'பி' காம்ப்ளக்ஸ் என்னும் ஊட்டச் சத்துக்குறைவுகளும் கருவின் குறைகளுக்குக் காரணமாகின்றன.

**உடலின் உட்புறம் நிகழும் காரணங்கள் (Intrinsic Factors)**

1. பாரம்பரிய வகை தொடர்பாக இக்குறை ஏற்படுவது கண்டறியப்பட்டுள்ளது.

2. அத்தை மகள், மாமன் மகள் என்ற இரத்த பந்தத்தில் மணமுடிப்போரின் குழந்தைகளுக்கு இந்த குறைபாடு தோன்ற வாய்ப்புகள் அதிகம்.

3. கருவிற்குத் தேவையான இரத்த ஓட்டம் இல்லை என்றாலும் இக்குறைபாடு தோன்றலாம்.

**பிளவுபட்ட உதடு மற்றும் மேல் அண்ணம் குறைபாட்டின் தன்மைகள்**

சில குழந்தைகள் மேல் உதடுகள் மாத்திரம் பிளந்த நிலையில் பிறக்கின்றன.

சில குழந்தைகள் மேல் உதடும், பல் முளைக்கும் ஈறுகளும் பிளந்த நிலையில் பிறக்கின்றன.

சில குழந்தைகள் மேல் உதடும், அதைச் சார்ந்த பல ஈறுகளும், வாயின் மேல் அண்ணமும் பிளந்த நிலையில் பிறக்கின்றன.

இக்குறைபாடுகளின் அளவு, தன்மை, குழந்தையின் உடல் நலம் இவை அனைத்தும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தது. சிகிச்சை செய்ய வேண்டிய காலம், மற்றும் முறை இவற்றைப் பொறுத்தே தீர்மானிக்கப்படுகிறது.

எந்த அளவிற்கு இந்த சிகிச்சையை விரைவாகச் செய்கிறோமோ அந்த அளவிற்குச் சிகிச்சையில் செம்மையும், நேர்த்தியும், நிறைவும் காண முடியும்.

சிகிச்சைக்கு

முன் பின்





பிளவுப்பட்ட உதடு, மற்றும் மேல் அண்ணம் என்னும் பிறவிக்குறைபாடு சுமாராக 700 குழந்தைகளில் ஒன்று என்ற விகிதாசாரத்தில் ஏற்படுகிறது. உலகெங்கும் இந்த நிலை காணப்படுகிறது. இரண்டு வயது ஆகும் முன்பே முக்கியமான அறுவை சிகிச்சைகள் முடிக்கப்பெற்று, இக்குழந்தைகள் உணவு உட்கொள்ளவும், பேசும் திறன் பெற்றும், மற்ற குழந்தைகள் போல் வளர்ந்து வர வேண்டும். சரியான வழிகாட்டிகள் இல்லாத காரணத்தாலும், போதுமான அளவு சிகிச்சை மையங்கள் இல்லாத காரணத்தினாலும், அறுவைச் சிகிச்சை என்றதும் ஏற்படும் தேவையற்ற பீதியாலும், இது



குழந்தைக்குப் பாலூட்டும் போது இருக்க வேண்டிய சரியான நிலை

ஆண்டவன் இட்ட கட்டளை, இது சரி செய்ய முடியாது, சரி செய்ய நினைப்பது பாவம் என்பன போன்ற மூட நம்பிக்கையினாலும் நமது நாட்டில் பல நூறு பேர்கள் சரி செய்யப்படாமல் இருக்கின்றார்கள். இவர்கள் மொழியறிந்தும் பேச முடியாமல், வழியறிந்தும் ரசித்து, சுவைத்து உண்ண முடியாமல் வாழ்நாள் முழுவதும் அவதிப்படுகின்றனர்.

சமுதாயச் சூழலில் எதிர் நீச்சல் போட முடியாமல் தாழ்ந்தவர் பலர். மாண்டவர் பலர்.

ஆண்டவனை நொந்து, பரம்பரையைப் பழித்து, வாழ்நாள் முழுவதும் வேதனையால் வாடும் இவர்களின் அறியாமையை அகற்றுவது கல்வி கற்றுத் தேர்ந்தோர் அனைவரது கடமை அல்லவா?

**பிளவுபட்ட உதடு மற்றும் மேல் அண்ணம் என்னும் பிறவிக் குறைபாடு உடைய குழந்தைகளுக்கு ஏற்படும் இயலாமைகள்**

- உதட்டிலும், மேல் தாடையிலும் உள்ள ஓட்டையினால் தாயிடமிருந்து பாலைச் சப்பி சாப்பிட முடியாமல் குழந்தை தவிக்கும்.
- பேச்சுத்திறன் பாதிக்கப்படும். வெளிவிடும் மூச்சுக் காற்றைச் சரியாக உபயோகிக்கும் திறன் இல்லாதவர்களாய் இருப்பார்கள்.
- முகம் விகாரமாய்த்தோன்றும்.
- பல் வரிசைகள் சரியாய் அமையாது.
- இந்த பிளவுபட்ட மேல் அண்ணம் காதில் சீழ் போன்ற குறைகள் தோன்றக் காரணமாகிறது. செவித்திறன் குறையும். செவித்திறனும், பேச்சுத்திறனும் பாதிக்கப்பட்டால் குழந்தையின் எதிர்கால வளர்ச்சி முற்றும் பாதிக்கப்படும். இந்தக் குழந்தைகளுக்கு என்று தனிப்பட்ட முறையில் வாயினுள் பொருத்தும் ஒரு பிளாஸ்டிக் சாதனம் (Obturator) பல்மருத்துவரின் உதவியுடன் தற்காலிகமாக பொருத்துப்பட்டுப்பாலூட்டப்படுகிறது. தமிழகத்தில் இந்தக் குறைபாடுகளை அறுவை சிகிச்சையினால் சரி செய்ய தமிழக அரசின் அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் 'பிளாஸ்டிக் சர்ஜரி' பிரிவு இயங்கி வருகிறது.

மருத்துவர் ந.சண்முகசுந்தரம், எம்.டி. சென்னை மருத்துவக் கல்லூரியின் முதல்வர் அவர்களின் பெரும் முயற்சியினாலும், ஆதரவாலும் பிளாஸ்டிக் சர்ஜரி பிரிவில் "Cleft Palate Clinic" என்னும் சிறப்புப் பகுதி இந்த விதமான குறைபாடுகளைச் சரி செய்ய இயங்கி வருகிறது.



பிளவுபட்ட உதடு மற்றும் மேலண்ணம் பிறவி குறைபாடு உள்ள குழந்தைகளுக்குப்பாலூட்ட உபயோகிக்கக்கூடிய நசுங்கும் தன்மை உள்ள பாலூட்டி.

இந்தியாவிலேயே முதன்மையான பிரிவு இது. உலகெங்கும் உள்ள 225 மையங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. இதில் பிளாஸ்டிக் சர்ஜன், பற்களைச் சீர் செய்யும் பல் மருத்துவர், காது, மூக்கு, தொண்டை சிகிச்சை வல்லுநர், சொற் பயிற்சியாளர், சமூக சேவகர் இவர்களின் உதவியுடனும், பெரும் முயற்சியுடனும் இந்த அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு, ஒருங்கிணைந்து கண்காணித்து, முழுமையான சிகிச்சை செய்யும் மையமாய் அமைந்திருக்கின்றது.

இந்தக் குழந்தைகள், பிறந்தது முதல் அவர்களின் வளர்ச்சிக் காலம் முடிய அதாவது 20 வயது வரை கண்காணித்து, தேவையான ஆலோசனைகள், சிகிச்சைகள், ஆதரவுகள் அளிக்கப்படுகின்றன.

**வருமுன் காப்பு நடவடிக்கைகள்**

கர்ப்பவதிகள் சுத்தமாகவும், சுகாதாரமான சுற்றுப்புறச் சூழலிலும் வாழ்ந்து வர வேண்டும்.

விஷக்காய்ச்சல்காரர்களுடன் நெருங்கிப் பழகக்கூடாது.

கர்ப்ப காலத்தில் ஏற்படும் சிறிய நோய்களுக்கும் உரிய மருத்துவரிடம் காலத்தே ஆலோசனை பெற்று, தேவை அறிந்து, மருந்து உட்கொள்ள வேண்டும்.

உணவுப் பழக்கத்தில் மிகக் கவனம் தேவை. சுத்தமானதும், சத்து நிறைந்ததுமான உணவுப் பொருட்களை உண்ண வேண்டும். கீரைகள், பருப்பு வகைகள், பால், பழம் போன்றவை.

நெருங்கிய இரத்தத் தொடர்பு கொண்ட திருமணங்களைத் தவிர்த்தல் நலம். அதிலும், இந்தக் குறைபாடு காணப்படும் குடும்பங்களில் திருமணத் தொடர்பு கூடாது. இந்த குறைபாட்டினைத் தவிர்க்க வழி உண்டு. சரி செய்யவும் வழி உண்டு.

சமுதாய விழிப்புணர்வும், அரசின் ஆதரவும், பொது மக்களின் ஒத்துழைப்பும் கொண்டு அளவுடன் பெறுவோம். அதைக் குறையின்றி, நலமுடன் பெறுவோம். ●

பேட்டி: பி.வி.ஜி.

**அடுத்தவர்கள் விடும் புகையைச் சுவாசிப்பதனால் ஆண்டுதோறும் 5 இலட்சம் பேர் சாவு!**



புகை உடலுக்குப் பகை என்பது இருக்கட்டும். புகை பிடிக்கும் பழக்கமே இல்லாதவர்கள்கூட, அடுத்தவர்கள் புகைத்து வெளிவிடும் புகையைச் சுவாசிப்பதனால் மோசமாகப் பாதிக்கப்படுகின்றனராம். ஆம், இவ்வாறு அடுத்தவர்கள் விடும் புகையைச் சுவாசிப்பதனால் பாதிக்கப்பட்டு, அமெரிக்காவில் ஆண்டுதோறும் 5 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் இறந்து போகிறார்கள். குறிப்பாக அலுவலகங்களில் பணிபுரிவோர், தங்களது சக ஊழியர்கள் புகை பிடிப்பதால் இவ்வாறு மோசமாகப் பாதிக்கப்படுகின்றனர்.

அடுத்தவர்கள் விடும் புகையைச் சுவாசிப்பதனால் இதயநோய் ஏற்பட்டு, அதன் காரணமாக மட்டும் ஆண்டுதோறும் 37 ஆயிரம் அமெரிக்கர்கள் இறந்து போகிறார்கள் என்று ஆய்வு தெரிவிக்கிறது.

— அமெரிக்கத் தகவல் நிலையம்

30-ஆம் பக்கத் தொடர்ச்சி

வலைகளை நம்பி வாழ்ந்து வந்த மக்களுக்கு ஒரு குறுக்கு வழி கிடைத்தது. அவர்கள் காமோலின்-'20' மருந்தை அப்படியே வாங்கி ஏரியில் கொட்ட ஆரம்பித்தனர். இதனால் மீன்கள் செத்து மிதந்தன. அவற்றை எடுத்து அப்படியே உணவாக வும், உப்பிட்டு உலரவைத்தும் வழக்கம்போல விற்பனையும் செய்தனர்.

காமோலின்-20 என்பது லின்டேன் (Lindane) என்பது மருந்தின் வர்த்தகப் பெயராகும். லின்டேன் அமெரிக்கா, மேற்கு ஜெர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய நான்கு நாடுகளில் மட்டுமே தயாரிக்கப்பட்ட ஆபத்தான பின்விளைவுகளைக் கொண்ட மருந்தாகும். இதனை உட்கொள்ளும் மனிதர்களுக்கு மயக்கம், தலைவலி, வாந்தி, கடுமையான வயிற்றுப்போக்கு, மூளைக்கோளாறுகள், சுய உணர்வு இழப்பு ஆகியவை ஏற்படும். தொடர்ந்து இதற்கு ஆட்பட்டிருப்பவர்களின் ஈரல் பகுதிகள் பாதிக்கப்படும்.

கானா மீனர்வகளோ தாங்கள் ஏரியில் கொட்டிக் கொண்டிருக்கும் மருந்து தங்கள் உடலுக்கு விளைவித்துக் கொண்டிருக்கும் கேடுகளை உணரத் தலைப்படவில்லை. அவர்களைப் பொறுத்தவரை லின்டேன் எளிதாகவும் செலவின்றியும் மீன்பிடிப்பதற்கு உதவும் தேவதையாகத் தெரிந்தது. நாளடைவில் பெரும்பாலோர் தங்கள் உடல் ஆரோக்கியம் கெடத் தொடங்கியிருப்பதை உணர்ந்தனர். ஆனாலும், அதனை லின்டேனோடு ஒப்பிட மறுத்தனர். தாங்கள் உண்ணும் மீன்களிலிருந்துதான் தங்களுக்குப் பல நோய்கள் ஏற்படுகின்றன என்பதை நன்கறிந்திருந்ததோடும் மீனின் தலைப்பகுதியில்தான் விஷமிருக்கிறது. அதை வெட்டியெறிந்துவிட்டால் போதும் என்று எண்ணினர். வீட்டுப் பெண்டிர் மீன்களிலிருந்து வரும் நாற்றத்தைக் கொண்டு நல்ல மீனுக்கும் விஷ மீனுக்கும் உள்ள வித்தியாசத்தை உணர்ந்தனர். இதனால் ஏரியிலிருந்த மீன்களின் அளவு 10 முதல் 20 சதவீதம் வரை குறைந்தது. இதனால் மற்ற நீர்வாழ் உயிரினங்களும் தாவரங்களும் கூட செத்து மடியத் தொடங்கின.

இறுதியில் மக்கள் நடைமுறை வாழக்கைச் சங்கம் (Association of People for Practical Life) என்ற கானா நாட்டு சமூகநல அமைப்பு மீனவ மக்களை இந்தக் கொடுமையிலிருந்து மீட்டெடுக்க உழைத்தது. மக்களுக்கு ஏற்படும் நோய்களுக்கும், ஏரியில் மீன்கள் குறைவுபட்டதற்கும் காரணம் இந்தக் கொடிய மருந்துகளை உபயோகிப்பதே என்றும் இந்தச் சங்கம் உணர்த்தியது. மக்கள் மீண்டும் வலைகளை நாடித் தங்கள் வாழ்வை வளப்படுத்தினார்கள்.

லெப்டோபாஸ் (Leptophos) என்ற பூச்சிக் கொல்லி மருந்து டெக்ஸாஸ் (Texas) நகரத்தில் செய்யப்பட்ட பூச்சிக் கொல்லி மருந்தாகும். 1971-லிருந்து 1976 வரை வளரும் நாடுகளாகிய கொலம்பியா, எகிப்து, இந்தோனேசியா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.



எகிப்து நாட்டில் பலரின் மரணத்துக்கு லெப்டோபாஸ் காரணமென்று குற்றம் சாட்டப்பட்டது. பல விவசாயக் குடும்பத்தினருக்கு வலிப்புகள் பேச்சுத் தடைகள் போன்றவை ஏற்பட்டன. 1000-க்கும் மேற்பட்ட நீர் எருமைகள் வாத நோய்க்கு ஆளாகி இறந்தன.

1976-ஆம் ஆண்டில் டெக்ஸாஸ் இரசாயனத் தொழிற்சாலையில் பணிபுரிந்து வந்த தொழிலாளர்களுக்கு நரம்பு நோய்கள், பக்கவாதம், பார்வை மங்குதல், மயக்கம் போன்றவை ஏற்பட்டன. அந்தத் தொழிலாளர்களைச் சோதித்தபோது அவர்களுக்கு மூளை வீக்கம் (Encephatis) என்னும் கொடிய நோய் வர ஆரம்பித்து விட்டிருந்தது தெரிந்தது, பலர் மனநோய்களால் (Psychiatric Disorders) பாதிக்கப்பட்டனர். இதன் பிறகு லெப்டபாஸ் உற்பத்தி அமெரிக்காவில் தடை செய்யப்பட்டது.

### காற்றினை மாகப்படுத்தும் ஆஸ்பெஸ்டாஸ்

ஆஸ்பெஸ்டாஸ் என்பது கட்டிட வேலைக்காகப் பயன்படுத்தப்படும் ஒருவகைத் தாதுப் பொருளாகும். நார்ப் பொருட்களிலிருந்து இது தயாரிக்கப்படுகிறது. இது ஒருவிதமான நுண்ணிய நார்த்துகள்களை வெளியிடுகிறது. காற்றில் கலந்திருக்கும் இந்தத் துகள்களை உட்கொள்பவர்களின் நூரையீரல் பாதிக்கப்படுகிறது. இந்நோய் ஆஸ்பெஸ்டாஸிஸ் என்று சொல்லப்படுகிறது. குணப்படுத்தவே இயலாத எய்ட்ஸ் போன்ற நோய். இந்நோய் நார்த்துகள்களைத் தொடர்ந்து சுவாசிப்பவர்களுக்கு வருகிறது. அதுவும் இந்த நோய் வந்து பல ஆண்டுக் காலம் கழித்து முற்றிய பிறகே இந்த நோயின் அறிகுறிகள் வெளிப்படுகின்றன.

இந்தியாவில் அகமதாபாத் நகரிலுள்ள திக்விஜய் (Digvijay) நிறுவனம் அமெரிக்க நாட்டு அஸ்பெஸ்டாஸ் நிறுவனத்தின் தொழில் நுட்பத் துணையுடன் ஆண்டொன்றுக்கு 50,000 டன் ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் குழாய் அட்டைகளை உற்பத்தி செய்கிறது. இந்த நிறுவனம் தங்களுடைய ஆலையில் பணிபுரிபவர்கள் நல்ல ஆரோக்கியத்தோடு இருப்பதாகக் கூறியது. ஆனால் 1982-ஆம் ஆண்டு "டைம்ஸ் ஆப் இந்தியா" பத்திரிகை,





இந்த நிறுவனத்தில் ஆஸ்பெஸ்டாஸிஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள் என்றும், பணியிலிருப்பவர்களில் 35 சதவீதம் பேர் ஆஸ்பெஸ்டாஸிஸ் நோயுடன் தொடர்புள்ள பிற நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர்களுக்குப் போதிய நிதி உதவி எதுவும் வழங்கப்படவில்லை" என்றும் ஆதார பூர்வமாகக் கூறியது.

### உலகையே மாசுபடுத்திய செர்னோபில் அழிவு

1986-ஏப்ரல் 26 நள்ளிரவு சோவியத் ரஷ்யாவின் யூக்ரேன் மாநிலத்தில் உள்ள செர்னோபில் அணுமின் நிலையத்தில் ஏற்பட்ட விபத்தில் பலர் மாண்டனர். இந்த விபத்தினால் ரஷ்யா மட்டுமல்ல உலகமே வேதனைக்கு உள்ளானது.

இரண்டாவது உலகப் போரில் ஜப்பானில் ஹிரோஷிமாவில் வீசப்பட்ட அணுகுண்டு வெடித்ததால் ஏற்பட்ட ஆபத்துக்குப் பின்னர் அணு வெடிப்பினால் ஏற்பட்ட விபத்து இதுதான். இதன் பின் விளைவுகள் இன்னும் மோசமாக இருக்கும். உணவுப் பொருள் - உணவு உற்பத்தி பாதிக்கப்படும். இயற்கைத் தாவரங்கள் பாதிக்கப்படும். ரஷ்யாவைச் சுற்றியுள்ள நாடுகள் பால்விநியோகம் போன்றவற்றைத் தடை செய்தன.

இந்த அணுமின் நிலையம் இருந்த வட்டாரத்துக்கு 5,000 டாக்டர்களைக் கொண்ட 230 மருத்துவக் குழுக்கள் விரைந்து சென்று பணியாற்றியிருக்கின்றன. மின் அணு அலைகளால் நேரடியாகப் பாதிக்கப்பட்டதனால் இன்னும் 70 ஆண்டுகள் வரை அங்கே புற்றுநோய் தலையெடுத்து 5,000 பேர் சாகலாம் என்றும் மேலும் 5,000 பேர் சாகாமல் அவதிப்படுவர் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

செர்னோபில் அணுமின் நிலைய விபத்து அணுகுண்டுகளை வெடித்துச் சோதனை என்ற பெயரில் அகிலம் முழுவதையும் மாசுபடுத்திக் கொண்டிருப்போருக்கும் அணு ஆயுதங்களைத் தலைமேல் வைத்துக் கூத்தாடிக் கொண்டிருப்போருக்கும் விடப்பட்டிருக்கும் எச்சரிக்கை. இந்தியாவைப் பொறுத்த அளவில் தாராப்பூர், ராஜஸ்தான், கல்பாக்கம், அணுமின்நிலையங்களுக்குச் சரியான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து கொள்ளுங்கள் என்னும் அறிவுரை.

### இரசாயனக் கழிவுகள்

பெட்ரோலியச் சுத்திகரிப்பு ஆலைகள், இரப்பர், பிளாஸ்டிக், துணி ஆலைகள், இரசாயன மற்றும் உலோக ஆலைகள் ஆகியவை ஆபத்தான இரசாயனக் கலவைகளை உருவாக்குகின்றன. மூன்றரை முதல் ஐந்து கோடி மெட்ரிக் டன் கழிவுப் பொருட்கள் அமெரிக்காவில் ஆண்டொன்றில் வெளித்தள்ளப்படுவதாக அமெரிக்க நாட்டுச் சுற்றுச் சூழல் பாதுகாப்பு அமைப்பு தெரிவித்துள்ளது. இந்தக் கழிவுகளில் பெரும்பகுதி மீண்டும் சுத்தப்படுத்திப் பயன்படுத்தக் கூடியவையே. ஆனால் பெரும்பாலும் இலாபம் கருதி இவற்றை வெளியேற்றுவதிலேயே ஆலை முதலாளிகள் குறியாக இருக்கிறார்கள்.

தவறான வழிமுறைகளில் கழிவுகளை வெளிக்காட்டுவது மனித உடலைப் பாதிப்பதுடன் சுற்றுச் சூழலையும் மாசுபடுத்துகிறது. இந்தக் கழிவுகள் நிலத்தடி நீரைப் பெரிதும் பாதிக்கின்றன. குடிப்பதற்கும் விவசாயத்திற்கும் நிலத்தடி நீரைப் பெரிதும் பயன்படுத்தும் அமெரிக்க நாட்டில் பல கிணறுகள் இந்தப் பாதிப்பின் காரணமாக மூடப்பட்டுவிட்டன. 1978-ஆம் ஆண்டிலிருந்து நச்சுத் தன்மை வாய்ந்த கழிவுகளை ஆபத்தில்லாமல் நாசம் செய்ய வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. வளர்ச்சியடைந்த நாடுகளில் ஜப்பான், ஜெர்மனி, கனடா ஆகிய நாடுகளில் மட்டுமே கழிவுப் பொருட்களை மீண்டும் பயன்படுத்தும் வழிவகைகள் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டுள்ளன.

### நடவடிக்கை அழைப்பு

அமெரிக்காவைப் போல மேற்கு ஐரோப்பிய நாடுகள் பலவும், ஜப்பானுமே இந்தியா போன்ற மூன்றாவது உலக நாடுகளுக்கு வீரியமிக்க இரசாயனப் பொருட்களை ஏற்றுமதி செய்கின்றன. ஆனால் இந்த நாடுகளில் இவற்றால் குவிந்து கொண்டிருக்கும் கழிவுகளை அழிக்க எந்நாடுமே முயற்சி எடுக்கவில்லை.

1977-ஆம் ஆண்டு மே மாதத்தில் ஐக்கிய நாட்டு சுற்றுச் சூழல் திட்டப் பாதுகாப்பு அமைப்பின் (United Nations Environment Programme) கூட்டம் நடைபெற்றது. கென்யா நாட்டு அமைச்சராக இருந்த டாக்டர் கியானோ "இனிமேலும் வளரும் நாடுகளைச் சோதனை செய்யப்படாத இரசாயனக் கலவைகளின் கொள்ளிடமாகவும், எங்கள் மக்களை இந்த இரசாயனப் பொருட்களுக்கான சோதனைப் பன்றிகளாக்கவும் அனுமதிக்க மாட்டோம்," என்றும் கூறினார்.

கலவைகள் நன்றாகச் சோதிக்கப்பட்டு அது உற்பத்தி செய்யும் நாட்டிலேயே நன்கு பயன்படுத்தப்படுகிறது என்கிற நிலை இருந்தாலொழிய அவை பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படக் கூடாது என்றும் டாக்டர் கியானோ தெரிவித்தார். இதற்கு உலக அளவில் நாடுகள் ஒன்றுபட்டுச் சில விதிமுறைகளை வகுத்திட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

# பாரதிதாசனும் வால்ட் விட்மனும்

**டாக்டர் மா. கோதண்டராமன்**
தமிழ்த்துறைத் தலைவர்
அஞ்சல்வழிக் கல்வி நிறுவனம்
சென்னைப் பல்கலைக் கழகம்

உலகமெல்லாம் இலக்கிய ஒப்பாய்வுப் பார்வை வளர்ந்து கொண்டு வருவதை நாமறிவோம். பல்வேறு மொழிகளில் படைக்கப்பட்ட இலக்கியங்களை ஒப்பியல் முறையில் ஆய்வு செய்வது ஒரு கலையாக வளர்க்கப்பட்டு வருகிறது. மொழிகளுக்கிடையே ஒப்புமைக் கூறுகளை ஆய்ந்து வெளியிடும் கலை வளர்ந்த பிறகு இலக்கியங்களுக்கிடையே காணப்படும் பொதுக் கூறுகளையும் சிறப்புக் கூறுகளையும் ஒப்பீட்டு முறையில் ஆய்வு செய்வது தேவையாகக் கருதப்பட்டது. பிரெஞ்சு மொழியினரும், ஜெர்மானிய மொழியினரும், அமெரிக்கரும் இக்கலையில் முன்னேற்றங் கண்டுள்ளனர். ஒப்பீட்டு முறையால் இலக்கியங்களை முழுமையாகச் சுவைப்பதோடு அவற்றிடையே ஊடுருவி நிற்கும் மானுட நேயத்தை அறிந்து கொள்ளவும் முடிகிறது.

இந்த அடிப்படையில் வால்ட் விட்மனையும், பாரதிதாசனையும் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டுள்ளோம். வால்ட் விட்மன் அமெரிக்க மக்களின் பிரதிநிதியாகக் காட்சியளிக்கிறார்; பாரதிதாசன் தமிழகத்தின் பிரதிநிதியாகத் திகழ்கிறார். அவர்தம் காலத்தே கண்ட உண்மைகளை ஒளிவு மறைவின்றி எடுத்துரைப்பதில் இருவரும் இணையானவர்களே. மக்களைப் புரட்சிப் பாதைக்கு இட்டுச் சென்றதால் இருவருமே அவரவர் நாட்டு மக்களால் புரட்சிக் கவிஞர் என்றே அழைக்கப் பெறுகின்றனர். விட்மன் காலம் (மே 31, 1819 - மார்ச் 26, 1892) பத்தொன்பதாம் நூற்றாண்டு. பாரதிதாசன்(ஏப்ரல் 29, 1891 - — ஏப்ரல் 21, 1964) இருபதாம் நூற்றாண்டு. வால்ட் விட்மன் பழுத்த பழமாகிப் பயணத்தை முடிக்கின்றபோது பாரதிதாசன் அரும்பாக அடியெடுத்து வைத்தார். எழுபத்து நான்காண்டுகள் அமெரிக்க மண்ணில் ஆடிப்பாடிக் களித்தவர் வால்ட் விட்மன். எழுபத்து மூன்றாண்டுகள் தமிழ் மண்ணில் நடைபோட்டவர் பாரதிதாசன்.



வால்ட் விட்மன் அரேபிய இரவுகள் என்னும் கதைகளிலும் வால்டர் ஸ்காட் கவிதைகளிலும் ஸ்காண்டிநேவிய நாட்டுப்புறப் பாடல்களிலும் நெஞ்சைப் பறிகொடுத்தவர். ஹோமரின் காவியங்களும் ஷேக்ஸ்பியரின் நாடகங்களும் அவருக்கு மிகவும் பிடித்த இலக்கிய விருந்துகள்; பாரதிதாசன் குமரகுருபரரின் கொஞ்சு தமிழிலும் வளஞ்சார் சங்கத் தமிழிலும் நெஞ்சைப் பறிகொடுத்தவர். மண்ணையும் மக்களையும் பாடுவதில் இவர்கள் இணையற்றவர்கள். மண்ணின் அணுவெல்லாம் சமம் எனப் பாடிக் களித்தவர்கள் வால்ட் விட்மனும், பாரதிதாசனும்.

வால்ட் விட்மன் குடும்பச் சூழலால் பள்ளிக் கல்வியை இடையிலேயே விட்டுவிட்டுப் பல்வேறு பணிகளில் ஈடுபட்டுப் பெறற்கரிய அனுபவங்களைப் பெற்று அமெரிக்காவின் வளமிக்க வாழ்வுக்கும் எழல்மிக்க வாழ்வுக்கும் பாட்டுத் திறத்தாலே வழிகாட்டினார். புதுவையில் பிறந்து மக்களோடு இரண்டறக் கலந்து பழகியவர் பாரதிதாசன். இருவரும் தாய்மொழிப்பற்றில் திளைத்தவர்கள். மானுட நேயத்தின் மாண்புறு தூதுவர்கள். ஏழை எளிய மக்களின் வாழ்வும் வளமும் மேன்மையுற வேண்டுமெனச் சபதமேற்றவர்கள். காலத்தாலும் இடத்தாலும் மொழியாலும் வேறுபட்டவர்கள் என்றாலும் எடுத்துக்கொண்ட பாடுபொருளில் ஒன்றுபட்டவர்கள்.



மேன்மக்கள் ஒன்றுபோலவே எண்ணுகிறார்கள் (Great men think alike) என்னும் பொருளுரை இந்த இருவர்க்கும்கூடப் பொருந்துவதேயாகும். இருவரும் புரட்சிக் கருத்துக்களை மக்களிடையே பரப்பியவர்கள். விட்மென் பாடு பொருளிலும், வடிவிலும் புரட்சி செய்தார். பாரதிதாசனோ பாடுபொருளில் புரட்சியை ஏற்றுக் கொண்டார்; வடிவில் மரபையே பின்பற்றினார். பழைய மொந்தையில் புதிய கள்ளை ஊற்றிக் கொடுத்தார் பாரதிதாசன். இருவருடைய எண்ண அலைகளை ஆய்வதன்றி வண்ண மாலைகளை வகைப்படுத்துவது நம் பணி அன்று. இருவரும் சத்தியத்தின் நிழலமர்ந்து சமத்துவத் தென்றலில் திளைத்துப் பொதுமைப் பண்பாடும் புதுக்குயில்களாகவும் புரட்சிக் குயில்களாகவும் காட்சியளித்தனர். வாடிக்கிடக்கும் கோடிக்கணக்கான மக்களுக்கு உரிமை கீதம் பாடிக் காட்டியவர்கள் இவர்கள். காலம் மாறினும் வாழ்வியல் சித்தாந்தம் மாறினும் கூனிக் கிடக்கும் மானுடத்தை நிமிர்த்த முயன்ற முரட்டுக் கவிஞர்கள் இவர்கள். மூடத்தனத்தின் முடைநாற்றம் வீசுகின்ற காடு மணக்கிற காட்டாற்றுப் பூந்தென்றல் கவித் தேரோட்டிகள்.

கவிதை உலகில் புதுப்புரட்சியைக் கற்பனைக் கெட்டாத மூர்க்கத்தோடும் வேகத்தோடும் கொண்டு செலுத்தியவர்கள். மரபுக் கவிதைத் தளையில் சிக்குண்டு திணறிக் கிடந்த இலக்கியத்தைச் சிறை மீட்டுத் தென்றல் வானில் விடுதலைப் பண்பாட வழிகாட்டியவர் வால்ட் விட்மன். வால்ட் விட்மன் அமெரிக்கக் கவிதை வானில் சிறகடித்துப் பறக்க முயன்றபோது மரபு மேகத் திரைகளின் வலிய கரங்களில் அகப்பட்டு மாண்டு மடிந்து போகாமல் பாதுகாத்து அரவணைத்தவர் எமர்சன். எமர்சனின் துணிச்சலான பாராட்டுரை விட்மனுக்குக் கிடைக்காமல் போயிருந்தால் விட்மன் பசும்புல் போர்த்திய கல்லறையில்தான் கண்வளர்ந்திருப்பார். எமர்சனின் பாராட்டுரையால் கவிதைத் தேனாற்றங் கரையில் மானுடத்தின் மகோன்னத வெற்றியை வீறாப்புடன் திசையெல்லாம் பரப்பியவர் விட்மன். புதுவைக் குயிலாய் உலா வந்த சுப்புரத்தினம் பாரதியின் அறிமுகத்தால் தமிழுலகின் வானம்பாடியாய்ப் பவனி வந்தார். வால்ட் விட்மனின் 'புல்லின் இதழ்கள்' (1855) (Leaves of Grass) புரட்சியின் புதுவடிவம்; புதுயுகத்தின் கவர்ச்சி மிக்க புதுவிடியல்.




பாரதியாரும் வால்ட் விட்மனின் புதுக்கவிதையில் நெஞ்சைப் பறிகொடுத்திருக்கின்றார். "குடியாட்சி, ஜனாதிகாரம் என்ற கொள்கைக்கு மந்திர ரிஷிகளில் ஒருவராக இந்த வால்ட் விட்மனை ஐரோப்பிய ஜாதியார் நினைக்கிறார்கள். எல்லா மனிதரும் ஆணும் பெண்ணும் குழந்தைகளும் எல்லாரும் சமானம் என்ற சத்தியத்தைப் பறையடித்த மகான்களில் இவர் தலைமையானவர். இந்த மகான் ஒரு நகரம் கற்பனை பண்ணுகிறார். அந்த நகரத்தில் ஆணும் பெண்ணும் சபதத்தில் துஞ்சார். அங்கே அடிமையில்லை; ஆண்டையுமில்லை. அங்கே பெண்கள் வீதிகளில் ஆண்களைப்போலவே கூட்டங்கூடி ஊர்வலம் வருகிறார்கள்." இங்கே பாரதியார் விட்மனை ரிஷி என்றும் மகான் என்றும் போற்றுகிறார் என்றால் விட்மனின் ஆற்றலை என்னென்று சொல்வது?

வால்ட் விட்மன் இல்லறம் ஏற்காமல் பெண்கள் அளித்த சிற்றின்பங்களில் திளைத்தவர். இல்லறம் ஏற்று நல்லறம் கண்டவர் பாரதிதாசன்.

### தன்னில் உலகம்

புல்லையும் பெருமைப்படுத்தியவிட்மன் மானுடத்தில் தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்ளும் பாங்கினை,

"நான் பரந்து பட்டவன்; எல்லாருள்ளும்
நானே இருக்கின்றேன்"

"I am large; I contain multitudes" என்றார்.

பாரதிதாசனும் மக்கட் சமுத்திரத்தில் ஒவ்வொருவரையும் சங்கமமாக்குமாறு கேட்டுக் கொள்கிறார்.

"என்குலம் என்றுடைத் தன்னிடம் ஒட்டிய
மக்கட் பெருங்கடல் பார்த்து மகிழ்ச்சிகொள்
அறிவை விரிவுசெய் அகண்டமாக்கு
விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை
அணைந்துகொள் உன்னைச் சங்கம மாக்கு
மானிட சமுத்திரம் நானென்று கூவு"

### குடியாட்சியும் சம உரிமையும்

வால்ட் விட்மன் காலத்தில் மக்களாட்சிக் கொள்கையும் சம உரிமைச் சிந்தனையும் மேலை நாடுகளில் உரம்பெற்றுப் பரவத் தொடங்கியது. இச்சிந்தனைகளில் உளந்தோய்ந்த விட்மன் தன் 'புல்லின் இதழ்கள்' என்னும் நூலில் இக்கருத்தை ஆங்காங்கே பாடிச் செல்கிறார்.

எழுதும் வாய்ப்பு, தனக்கு நேரு மேல், அவன் அதைத் தாய்மொழியாகிய தமிழில் எழுதப் புகுவனா அல்லது ஆங்கிலத்தில் எழுதப் புகுவனா என்று கேட்கிறேன். நீங்களே விடை இறுத்தல் வேண்டும்.

தமிழனுக்குத் தாய்மொழிப் பற்று போதிய அளவில்லை என்பது உலகறிந்ததொன்று. தமிழனுக்குத் தாய் மொழியினிடத்துத் தணியா வேட்கை என்று எழுகிறதோ அன்றே அவன் வாழ்வு மணம் பெறும்.

'கலைகளை எல்லாம் தமிழிலேயே போதிக்கத் தமிழில் போதிய கலைகளில்லையே; சிறப்பாக விஞ்ஞானக் கலைகளில்லையே' என்று கேள்வி பிறக்கிறது. இஃது அறிவு செறிந்த கேள்வியாகாது. இக்கேள்விக்கு அறிஞர் செவ்வனிறையும் அவ்வப்போது இறுத்திருக்கின்றனர். தமிழைக் குறைகூறும் ஆங்கிலம் பயின்றவரை நோக்கி, 'விஞ்ஞானக் கலைகள் எல்லாம் முதல் முதல் ஆங்கிலத்திலா முகிழ்த்தன? விஞ்ஞானக் கலைகளிலுள்ள குறியீடுகளெல்லாம் ஆங்கிலமா? என்று வினவுகிறேன். விஞ்ஞானத் துறையில் சில புதுமைகள் பிரஞ்சுக்காரரால் காணப்பட்டன; சில ஜெர்மனியரால் காணப்பட்டன; சில ஆங்கிலேயரால் காணப்பட்டன. அவரவர் தாம் கண்ட புதுமைகளை முதல் முதல் தம் தம் தாய்மொழியில் வரைந்துவிடுகிறார். அவை பின்னே பல மொழிகளில் பெயர்த்தெழுதப் படுகின்றன. இம்முறையில் மேல் நாட்டில் விஞ்ஞானம் வளர்ந்து வருகிறது. அம்மொழி பெயர்ப்பு முறையைத் தமிழர் கொண்டு ஏன் தாய் மொழியை வளர்த்தல் கூடாது?

குறியீடுகளுக்குப் பல மொழிகளினின்றுங் கடன் வாங்குவது தமிழுக்கு இழுக்காகாது. கலப்பில் வளர்ச்சியுண்டென்பது இயற்கை நுட்பம். இக்காரணம் பற்றியே கலப்பு மணம் முதலியன உலகுக்கு அறிவுறுத்தப் படுகின்றன. கலப்பென்று தமிழையே மறைக்க முயல்வது தமிழுக்கு ஆக்கந் தேடுவதாகாது. தமிழை வளர்க்கும் முறையிலும், அளவிலும் கலப்பைக் கொள்வது சிறப்பு. ஆகவே, 'தமிழ் மொழியில் அறிவுக்கலைகள் இல்லை' என்னும் பழம்பாட்டை நிறுத்தி, 'அக்கலைகளைத் தமிழில் பெயர்த்து எழுதித் தாய்மொழிக்கு ஆக்கந் தேடுவோம்' என்னும் புதுப்பாட்டைப் பாடுமாறு சகோதரரைக் கேட்டுக் கொள்கிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இத்துறையில் சிறிது நாட்டஞ் செலுத்தி வருவது உவகையூட்டுகிறது. கலைகள் யாவும் தாய்மொழி வழி மாணாக்கர்க்கு அறிவுறுத்தப் பெறுங் காலமே, தமிழ்த்தாய் மீண்டும் அரியாசனம் ஏறுங் காலமாகும். பல துறைக்கலைகள் தாய்மொழி வாயிலாகப் போதிக்கப்பட்டால் மாணாக்கர் பலர் விரைவில் எளிதில் அவ்வக் கலைகளில் வல்லவராவர். இப்பொழுது கலைகளைப் பயிலுதற்கு வேறுமொழிப் புலமையும் தேவையாயிருக்கிறது. அதனால் கலைகளின் அறிவு, தமிழ் மக்களிடைப் பரவாமற் போகிறது. மாணாக்கர் அறிவுக் கலைகளைப் பயில்வதில் பேருக்கஞ் செலுத்துவாராக. அவற்றால் வாழ்வுக்கும் நாட்டுக்கும் பல வழியிலும் நலன் உண்டு.



தமிழ் மொழியில் காவியக் கலைகள் நிரம்பி இருக்கின்றன. தமிழர் தம் பண்டைச் செல்வங்களைக் காவியங்களிற் காணலாம். வித்துவான் பரிட்சை முதலியன இப்பொழுது தோன்றியிருத்தலால், மாணாக்கர்க்குத் தமிழ்க் காவியங்களைப் பயிலும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. தமிழ்க் காவியப் பயிற்சியில் சில புது முறைகள் கொள்ளப் பெறுதல் நலம். கதைக்கும், பதவுரைக்கும், இலக்கணக் குறிப்புக்கும் மட்டும் காவியங்களைப் பயில்வதால் காவியங்களின் நோக்கம் நிறைவேறாது. ஆங்கிலமும் . தமிழும் பயின்ற சிலர் அடிமையுணர்வின்றிக் காவியங்களை ஆராய்ந்து பல நுட்பங்களை இப்பொழுது வெளியிட்டு வருவது ஆறுதலளிக்கிறது. இடைக் காலத்தில் வீழ்ந்துபட்ட தமிழ்க் காவிய உணர்வுக்கு இந்நாளில் புத்துயிரளித்தது ஆங்கில உணர்வு என்பதை மறத்தலாகாது.

காவியங்களிலுள்ள கதைகள் மீது கருத்திருந்த சிலர் காவியங்களைக் குறை கூறுகின்றனர். காவியங்கள் கதைக்காக மட்டும் எழுதப் பட்டன அல்ல என்பதை அச்சகோதரர்க்குத் தெரிவித்துக் கொள்கிறேன். கதை ஒரு திருடனைப் பற்றியதாகவுமிருக்கலாம். அவன் வரலாற்றைக் காவியமாக எழுதும் வாய்ப்பு ஒரு சிறந்த புலவருக்குக் கிடைக்கலாம். அவர் அக்கதையை ஒரு சார்பாகக் கொண்டு, அக்காலத்து நிலைமையும் வாழ்வும் பிறவும் பொதுள, இயற்கை இன்பஞ் செறியத் திறம்படப் பாடுவர். திருடன் செயலைப் புலவர் எவ்வாறு வருணித்துள்ளனர் என்பதை நோக்கி இன்புற வேண்டுவது நமது கடமை. காவியமெழுதிய புலவரைக் குறைகூறுவது அறியாமை. காவிய ஓவியம் எழுத வேண்டுவது அவர்தங் கடமை. புகைப்படங்களில் திருடன் படம் எடுப்பதில்லையோ? படக்காரனுக்குத் திருடனானால் என்ன? மற்றவனானால் என்ன? அவன் படம் நன்றாயிருக்கிறதா இல்லையா என்பதையே அறிஞர் நோக்குவர். திருடன் கதை எழுதுவோருந் திருடுமாறு எவர்க்கும் அறிவுறுத்த மாட்டார். திருட்டின் இழிவு திருடன் கதை வாயிலாக



வெளிவரும் முறையிலேயே கதை எழுதப்படும்.

ஒரு கல்லில் பொருள் பதிந்த ஓர் அழகிய ஓவியம் வரையப்பட்டிருக்கிறது. அறிஞர் பலர் அவ்வோவிய வனப்பையுஞ் சிறப்பையுங் கண்டு ஓவியமாகிறார். அவ்வேளையில் அவ்வழியே ஓவிய நுட்ப உணர்வில்லாத ஒருவன் போந்தான். ஓவியத்தை மகிழ்ச்சியுடன் நோக்கி, அதன் பெற்றியைப் பேசுவோரை அவன் கண்டு 'இக்கல்லை இவர்கள் இவ்வளவு போற்றிப் புகழ்கிறார்களே' என்று எள்ளிப் போனான். அவன் நிலையும், காவியங்களைக் கதைக்காக மட்டும் பார்ப்பவன் நிலையும் ஒன்றே.

மனத்துக்கு இயற்கை இன்பமூட்டி ஆறுதலும் அமைதியும் அளிக்க வல்ல முறையில் பழம்பெருந் தமிழ்க் காவியங்கள் அமைந்திருக்கின்றன. பரபரப்பு மிகுந்த இக்கால உலகில் அத்தகைக் காவியங்கள் அமைதல் அரிது. இளமைக் காவியப் பயிற்சி பின்னே வாழ்வில் பெருந்துணை செய்யும் என்பதில் ஐயமில்லை.

ஓவியத் துறையிலும் மாணாக்கர் பயிற்சி பெற முயல்வாராக. ஓவியத்துக்கும் காவியத்துக்கும் வேற்றுமை பெரிதும் இல்லை. இயற்கை நுட்பங்கள் ஓவியமாக வரையப்படுகின்றன. காவியங்களில் அவை எழுத்தால் எழுதப்படுகின்றன. இரண்டும் இயற்கைப் படங்களேயாகும். இவை நம்மையும் இயற்கையையும் ஒன்றுபடுத்தப் பாலம் போலத் துணை செய்யும்.

நீங்கள் ஏடுகளைப் பயில்வதுடன் நில்லாது, ஓய்ந்த நேரங்களில் இயற்கை நிலையங்களிற் புகுந்து, இயற்கைக் கழகத்தில் நின்று, இயற்கைக் கல்வி பயில்வீர்களானால், இயற்கையோடியைந்த வாழ்வு நடாத்த வல்லவர்களாவீர்கள்.

காடு செறிந்த ஒரு மலைமீதி வர்ந்து, ஒரு மரத்தடியில் நின்று, மண்ணையும் விண்ணையும் நோக்குங்கள்; ஆண்டவன் இயற்கை ஓவியத்தைக் கண்டு கண்டு மகிழுங்கள்; மண் வழங்கும் பரந்த பசுமையிலும், வெண்மையிலும், நீலத்திலும், விண் வழங்கும் நீலத்திலும் தோய்ந்து திளையுங்கள்; காலையில் இள ஞாயிறு, கடலிலும் வானிலும் செக்கர் உமிழ்ந்து எழுங் காட்சியை நெஞ்சில் எழுதுங்கள்; அருவி முழவும், குயில் குரலும், வண்டிசையும், மயில் ஆலலும், மலர் மணமும், தேனினிமையும், தென்றல்வீசலும் புலன்களுக்கும் விருந்தாக, இயற்கை அன்னையைப் பாருங்கள்; ஆங்கே சூழ்ந்துள்ள செடி கொடி மரங்களையும் பறவைகளையும் விலங்குகளையும் உற்று நோக்கி, 'சில செடிகள் பூமியிற் பரந்தும், சில செடிகள் எழுந்து நின்றும், சில கொடிகள் நீண்டு நீண்டு மடிந்தும், சில கொடிகள் சுருண்டு சுருண்டு படர்ந்தும் இருப்பதற்கும், சில மரங்கட்கு நீள் கிளையும், சில மரங்கட்கு வீழும், கிளிக்கு வளைந்த மூக்கும், யானைக்குத் துதிக்கையும், மானிற்குக் கொம்பும் அமைந்திருப்பதற்கும் என்ன காரணம்?' என்று உன்னுங்கள்; அந்தியில் ஞாயிறு அமருங் கோலத்தையும், பறவைகள் பறந்து செல்வதையும், கால்நடைகளின் மணியோசையையும் காணுங்கள்; கேளுங்கள்; நீல வானில் வெண் திங்கள் தோன்றித் தண்ணிலவு பொழிவதை நோக்குங்கள்; அந்நிலவு, பசுமைக் கானினும் பைங்கூழிலும் வெண்மணலிலும் நீலக்கடலிலும் படிந்து வழங்கும் அழகுக் காட்சியில் மூழ்குங்கள்; மூழ்கி இன்புற்று, மலையினின்று இழிந்து வென்றி அடல்விடை போல் நடந்து வீடு சேருங்கள்.

இவ்வாறு இயற்கைக் கழகத்தில் பயின்று பயின்று, சங்கப் புலவர், இளங்கோ, திருத்தக்கதேவர், திருஞானசம்பந்தர், ஆண்டாள், சேக்கிழார், கம்பர், பரஞ்சோதி முதலியோர் இயற்கைக் கோலத்தை எவ்வாறு எழுத்தோவியத்தில் இறக்கியிருக்கிறார் என்று ஆராயுங்கள். பழைய கோவில்களிலும் மன்றங்களிலும் நுழைந்து இயற்கைத் திருக் கோலத்தைச் சிற்பர் எவ்வாறு ஓவியங்களில் வடித்திருக்கிறாரென்பதையும் உணர ஓவியங்களை ஊன்றி நோக்குங்கள்; நந்தமிழ்க் காவியங்களும் ஓவியங்களும் இயற்கை அமிழ்தாய் உயிரையும் உடலையும் ஓம்புவதை உணர்வீர்கள். ●

பல ஐக்கிய நாட்டு நிறுவனங்கள் பெரும் முயற்சி செய்து இரசாயனக் கலவைகள் பற்றிய செய்திகளைத் தயாரித்து அளிப்பதற்கு முயன்றன. ஆனால் தொழிற்சாலை நிர்வாகங்கள் இதற்குச் சரியான ஒத்துழைப்பை நல்கவில்லை. எனவே இந்த முயற்சி தோல்வியடைந்தது.

1979-ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச்சபை (U.N. General Assembly) வீரியமிக்க ஆபத்தான இரசாயனங்கள் பற்றிய பிரச்சினைகளை முதன் முதலில் எழுப்பியது. இறுதியில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. அத்தீர்மானத்தின்படி நாடுகள் இரசாயன மருந்துகள் பற்றிய செய்திகளையும் குறிப்புகளையும் தமக்குள் பறிமாறிக் கொள்ள வேண்டும். தங்களால் தடை செய்யப்பட்டுள்ள தீய பின் விளைவுகள் பற்றிய குறிப்புக்களையும் கொடுத்து பிற நாடுகளும் அவற்றின் இறக்குமதிக்குத் தடை விதிக்கும்படி செய்ய வேண்டும்.

**மக்கள் சமுதாயத்தின் கடமைகள்**

இரசாயனப் பொருட்களின் தயாரிப்பாலும் விளைவுகளாலும் அவற்றின் கழிவுகளாலும் ஏற்படக்கூடிய விளைவுகளைத் தடுத்து நிறுத்தி ஆபத்துகளைக் குறைப்பதே பொறுப்புள்ள சமுதாயத்தின் மக்கள் ஆற்ற வேண்டிய கடமைகளாகும். அமெரிக்க நாட்டிலும் தொழில் வளர்ச்சி பெற்ற பிற நாடுகளிலும் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு அமைப்புகளும் நுகர்வோர் அமைப்புகளும் வெகுகாலமாக ஆபத்தான இரசாயனப் பொருட்களுக்கு எதிராகக் கடுமையான விதிமுறை ஏற்படுத்தக் கேட்டு அரசாங்கத்தை எதிர்த்துப் போராடி வருகின்றன.

மலேசிய நாட்டின் பினாங்குப் பகுதி நுகர்வோர் அமைப்பு உலகிலுள்ள அடிப்படை நுகர்வோர் அமைப்புகளில் மிகச்சிறந்த ஒன்றாகும். இந்த நிறுவனம் ஊட்டச்சத்து, மருந்துப் பாதுகாப்பு, பூச்சிக் கொல்லிகள் மற்றும் தொழிற்சாலையால் ஏற்படும் சுகாதாரக் கேடுகள் போன்ற பலவற்றில் தங்கள் கவனத்தைச் செலுத்திப் போராடி வெற்றி கண்டு புகழ் பெற்றுள்ளது.

ஆபத்தான மாசுப் பொருட்களை எதிர்த்துப் போராடுவது அதைப்பற்றிய செய்திகளை உலகறியச் செய்வது என்பவை அதன் முக்கியப் பணிகளாகும். இதற்காக மிகப்பெரிய நூலகம் ஒன்றை ஏற்படுத்தி அதன்மூலம் நுகர்வோருக்குப் பொருள்கள் பற்றிய அறிவுரைகளை வழங்குகிறது. அது மட்டும் அல்லாமல் உலகிலுள்ள பல நாடுகள் இவை குறித்து வெளியிடும் செய்திகளை மொழி பெயர்த்து வெளியிட ஒரு துறையை ஏற்படுத்தியுள்ளது. மேலும் வாரந்தோறும் வானொலி மூலம் ஒரு நிகழ்ச்சி நடத்துகிறது. மாதம் ஒருமுறை ஒரு பத்திரிகையை வெளியிடுகிறது. கருத்தரங்குகள், படக்காட்சிகள் போன்றவற்றின் மூலமும் மக்களுக்கு இதற்கான அறிவுரைகளை வழங்குகிறது. இதனால் மலேசிய மக்கள் பெரும் பயனடைந்துள்ளனர். இதைவிடவும் மிகப்பெரிய ஆலோசனை



வழங்கிட முடியாது. இதே முறைகளைப் பின்பற்றினால் நம்முடைய நாட்டு மக்களையும் சுற்றுப்புறச் சூழலை மாசு படுத்துவதினின்றும் மீட்கலாம். மனித சமுதாயத்தையும் காத்திடலாம்.

ஏழை எளிய மக்களையும் கானா நாட்டுக் கல்வியறிவற்ற மீனவர்களைப் போன்றவர்களையும் கொண்டது நம் இந்திய நாடு. நம் மக்களுக்குச் சுகாதாரத்தோடு வாழக் கற்றுக் கொடுக்க வேண்டும். குப்பைகளைக் கண்ட இடங்களில் வீசியெறிவதையும் இயற்கை உபாதைகளைத் தீர்க்க கண்ட இடங்களை பயன்படுத்துவதையும் தடுத்து நிறுத்த வேண்டும். 'சுத்தம் சோறு தரும்' என்ற பழமொழியை எடுத்துக் காட்டிட வேண்டும். இப்படிச் செய்தால் நாடும் வீடும் நலம் பெறமுடியும். நோய் நொடியின்றி இன்பமாக வாழலாம்.

மனிதனின் செயற்கை வாழ்வியல் முறைகள் இயற்கையை முழுக்க அழித்துவிடக் கூடாது. இயற்கையோடு மோதாமலும் அவனால் வாழ முடியாது. ஆனாலும் இயற்கையை முழுக்க அழித்து விடாமல், இயற்கையோடு அண்டியும் அனுசரித்தும் வாழவேண்டும். அப்போது இயற்கை அன்னையும் மனிதனை அரவணைத்துக் காப்பாள். ஆக்கப் பணிகளுக்குத் துணை நிற்பாள். அகிலம் வாழவகை செய்வாள்! ●

## 1991 பிளஸ் டூ தேர்வு முடிவுகள்

இந்த ஆண்டு 'பிளஸ்-டு' தேர்வு எழுதப் பதிவு செய்த மாணவ மாணவிகளின் எண்ணிக்கை 2,94,955 ஆகும். இவர்களில் 2,07,596 பேர் பள்ளிகள் மூலம் தேர்வு எழுதினர்.

இவர்களில் 1,14,391 பேர் (56.1 சதம்) மாணவர்கள் 93,205 (43.9 சதம்) மாணவியர் இத்தேர்வில் 38,123 பேர் தொழிற்பயிற்சிக் கல்வித் தேர்வு எழுதியவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது. கடந்த ஆண்டைவிட இவ்வாண்டு 8,650 பேர் கூடுதலாக 'பிளஸ்-டு' தேர்வு எழுதினர்.

இந்த ஆண்டு பிளஸ்-டு தேர்வில் 64 சதம் மாணவர்கள் தேர்வு பெற்றிருக்கின்றனர். இவர்களில் 59 சத மாணவர்களும் 70 சத மாணவிகளும் தேர்ச்சி அடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டில் மாணவ மாணவியரின் தேர்ச்சி விகிதம் 68.6 சதமாகும். மாணவர்களின் தேர்ச்சி விகிதம் 63.8 சதம். மாணவியரின் தேர்ச்சி விகிதம் 74.9 சதமாகும்.

இந்த ஆண்டு- கணக்கில் 239 மாணவர்கள் 200-க்கு 200 மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். ஆனால் இது கடந்த ஆண்டைவிடக் குறைவு. கடந்த ஆண்டு 495 மாணவர்கள் 200-க்கு 200 மதிப்பெண்கள் பெற்றுச் சாதனை படைத்தனர்.

இவ்வாண்டு இயற்பியலில் 11 மாணவர்களும், வேதியலில் 22 மாணவர்களும், உயிரியலில் 8 மாணவர்களும் கம்ப்யூட்டர் அறிவியலில் 141 மாணவர்களும் கணக்கியலில் 10 மாணவர்களும், வர்த்தகப் பாடத்தில் 46 மாணவர்களும், 200-க்கு 200 மதிப்பெண்கள் பெற்றுச் சாதனை படைத்திருக்கிறார்கள்.



# கல்வி

### தமிழ்த் தென்றல் திரு. வி. க.

இந்நாளில் பெரிதும் ஏட்டுக் கல்வியே கல்வி என்னும் ஒரு கொள்கை யாண்டும் நிலவி வருகிறது. ஏட்டுக் கல்வி மட்டும் கல்வியாகாது. தொழிற் கல்வி முதலியனவும் கல்வியின் பாற்பட்டனவே.

கல்வித் துறைகள் பலதிறத்தன. அவற்றுள் ஒவ்வொன்று ஒவ்வொருவர் இயல்புக்குப் பொருந்தியதாகத் தோன்றும். அப்பொருந்திய ஒன்றில் சிறப்பு அறிவு பெறவும், பிறவற்றில் பொது அறிவு பெறவும் அவரவர் முயலவது ஒழுங்காகும்.

இக்காலத்தில் கல்லூரியில் படிப்போர் தொகை, நாளுக்கு நாள் பெருகுதல் கண்கூடு. கல்விப் பெருக்கு போற்றற்குரியதே. ஆனால் பெரும்பான்மையோர் அக்கல்வியை எந்நோக்குடன் பயில்கிறார்? உத்தியோக நோக்குடன் என்று சொல்ல வேண்டுவதில்லை. அந்நோக்குடன் கல்வி பயின்றோர் நிலை எவ்வாறிருக்கிறது? அவர்தம் நிலை இரங்கத்தக்கதாயிருக்கிறது. வேலையின் பொருட்டு இளங்கொழுந்துகள் படுந் துன்பம் அளவிடற்பாலதன்று. இவ்வேளையில், உத்தியோக நோக்குடன் கல்வி பயிலுதல் வேண்டா என்றும், அறிவு விளக்கத்தின் பொருட்டுக் கல்வி பயிலுதல் வேண்டும் என்றும் இயற்கை அன்னை எச்சரிக்கை செய்தவண்ணமிருக்கிறாள். அவ்வெச்சரிக்கைக்கு மாணாக்கர் செவி சாய்த்து நடப்பாராக; செவிசாய்த்து அறிவு விளக்கத்துக்கெனக் கல்வி பயின்று, அவ்வறிவை நாட்டுத் தொழில்துறைகளைப் புதிய முறைகளில் வளர்க்கப் பயன் படுத்துவாராக.

நமது நாட்டில் பலதிற ஆராய்ச்சிகள் நிகழ்ந்த வண்ணமிருக்கின்றன. அவற்றுள் ஒன்று எம்மொழியிற் கல்வி பயிலவேண்டுமென்பது. சீர் குலைந்த ஒரு நாட்டில் - கட்டில்லா ஒரு நாட்டில் - கலையறிவிழந்த ஒரு நாட்டில் - தலைகீழாராய்ச்சிகள் பல, நாளுக்குநாள் பெருகுதல் இயல்பு போலும்!

தாய்மொழியில் கல்வி பெறுவது இயற்கை. தாய் மொழிப் புலமை நிரம்பப்பெற்ற பின்னை வேறு பல மொழிகளைப் பயிலலாம்; ஆராயலாம். முதன்முதல் தாய் மொழி வாயிலாகவே கல்வி பயிலுதல் வேண்டும். 'தாய்நாடு' என்னும் பெயர், தாய்மொழியைக் கொண்டே பிறப்பது. அத்தாயை வஞ்சிப்பது பாவம் அன்றோ?

மேல்நாட்டினர் ஒவ்வொருவரும் தாய்மொழிப் பற்றுடையராய் வாழ்தல் கண்கூடு. காலஞ்சென்ற அறிஞர் கிரிபத்தைப் பற்றி நீங்கள் கேள்வியுற்றிருக்கலாம். அவர் அயர்லாந்து தேசபக்தர்; அயிரிஷ் மொழியில் புலவர். அயிரிஷ் மொழியின் ஆக்கத்தால் அயர்லாந்துக்கு நலன் விளையும் என்று உறுதிகொண்டு, அதை வாழ்விடை நடாத்தி, அவர் வெற்றியும் பெற்றார். வடஇந்தியரும் தாய் மொழிப் பற்றுடையவராகவே வாழ்கிறார்.

கவிமன்னராகிய ரவீந்திரநாதர், கீதாஞ்சலி என்னும் உலகம் போற்றும் ஒரு நூலை முதல் முதலில் எம்மொழியில் யாத்தனர்? தந் தாய் மொழியாகிய வங்கத்திலன்றோ அச் சீரிய நூலை அவர் முதல்முதல் யாத்தனர்? பின்னரே அதனை ஆங்கிலத்தில் பெயர்த்தெழுதினர்.

கல்விக் கடல் என்று போற்றப் பெற்ற பாலகங்காதர திலகரை நீங்களறிவீர்கள். அவர் ஆங்கிலத்தில் புலமை வாய்ந்தவர்; அம்மொழியிலுள்ள பல கலைகளை ஆய்ந்தவர். அப்பெரியார் மூன்றாமுறை சிறை புகுந்தபோது, சிறைக்கோட்டத்தில் கீதா ரகசியம் என்னும் ஒரு சிறந்த நூலை இயற்றினர். அவர் அதை எம்மொழியில் எழுதினர்? தந் தாய் மொழியாக உள்ள மகாராஷ்டிரத்திலன்றோ அவர் அதை எழுதினர்?

காந்தியடிகளை நோக்குவோம். அவரும் ஆங்கிலத்தில் புலமை பெற்றவர். அவர் எழுதும் ஆங்கிலம் ஆங்கிலேயராலேயே போற்றப்படுகிறது. 'ஹிந்தி இந்திய நாட்டு மொழியாதல் வேண்டும்' என்று முயன்று வருவோருள் அவர் தலையாயரென்பதும் உங்கட்குத் தெரியும். இக் காந்தியடிகள் தமது வரலாற்றை எம் மொழியில் எழுதினார்? ஆங்கிலத்தில் எழுதினரா? அல்லது ஹிந்தியில் எழுதினரா? அவர் எற்றுக்குத் தமது வரலாற்றைத் தம் தாய்மொழியில் - கூர்ஜரத்தில் - எழுதிக் காட்டினர்?

இப்பெரியார்களின் வாழ்வுஞ் செயலும் பிறவும் உலகுக்கு எடுத்துக் காட்டாக நின்று துணை செய்வன. தாய்மொழிப் பற்றே தாய்நாட்டுப் பற்று என்பதை அவர்கள் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உணர்ந்தே தாய்மொழிக்கு ஆக்கந் தேடினார்கள். ஆங்கிலம் பயின்ற இக்காலத் தமிழன் ஒருவன், ஒரு துறையில் பெரியவனாய்த் தன் வரலாற்றைத் தான்

பாரதிதாசனும் மக்களாட்சியின் மாண்பினைப் பரக்கப் பேசுகிறார். அடிமைத் தளையில் அகப்பட்டு அல்லல் உற்ற இந்திய மக்கள் மனங்களில் மக்களாட்சியின் மாண்புகள் படிவது கடினமாக இருந்த காலத்தில் பாரதிதாசன் மக்களாட்சியின் மாண்பினைப் போற்றிப் பாடியுள்ளார்.

''செல்வமெலாம் உரிமைஎலாம் நாட்டா ருக்கே''

எனப் 'புரட்சிக்கவி'யில் முடியாட்சி குடியாட்சியாக மாறிய புதுமையை அழகுற விளக்குகிறார்.

''எல்லார்க்கும்தேசம்எல்லார்க்கும் உடைமையெலாம்
எல்லார்க்கும் எல்லா உரிமைகளும் ஆகுகவே.
வில்லார்க்கும் நல்ல நுதல் மாதர் எல்லார்க்கும்
விடுதலையாம் என்றே மணிமுரசம் ஆர்ப்பீரே''

என வீரத்தாயில் விளக்குகிறார்.

**கடலும் கவிஞனும்**

வால்ட் விட்மனும், பாரதிதாசனும் கடலோர நகரங்களில்தான் வாழ்ந்தார்கள். எல்லையற்ற பெருங்கடலைக் கண்டு கண்டு தொல்லை மறந்தவர்கள் அவர்கள். இயற்கையன்னையின் எழிலார்ந்த படைப்புகளில் மனந்தோய்ந்த கவிஞர்கள். கடலின் வனப்பையெல்லாம் அழகுறப் பாடி உள்ளனர். விட்மன் ஒருபடி மேலே போய்க் கடலே தன் தாய் என்பது போலப் பாடியுள்ளார்.

"The boundless blue on every side expanding
With whistling winds and music of the waves, the large
imperious waves''

பாரதிதாசனோ,

''ஊருக்குக் கிழக்கே உள்ள
பெருங்கடல் ஓர மெல்லாம்
கீரியின் உடல்வண் ணம்போல்
மணல்மெத்தை அம்மெத்தை மேல்
நேரிடும் அலையோ கல்வி
நிலையத்தின் இளைஞர் போலப்
பூரிப்பால் ஏறும்; வீழும்
புரண்டிடும் பாராய் தம்பி''

**தொழிலாளர் நிலை**

வால்ட் விட்மனும், பாரதிதாசனும் தொழிலாளர்கள் உழைப்பினைப் பாராட்டிப் போற்றி உள்ளனர். அவர்தம் உழைப்பினால்தான் நாட்டின்



'வழக்கம் என்பதில்
ஒழுக்கம் இல்லையேல்
கழுத்துப் போயினும்
கைக்கொள வேண்டாம்'

—பாவேந்தர்

முன்னேற்றம் அமைந்துள்ளது என்பதில் இருவர்க்கும் ஒப்புமை காணப்படுவது போற்றுவதற்குரியதாகும். 'அமெரிக்கப் பாடலை நான் கேட்கின்றேன்' என்னும் விட்மன் பாடலில் பல்வேறு தொழில் செய்யும் தொழிலாளர்கள் தத்தமக்கு விரும்பிய கூட்டமுதல் பாடலைப் பாடிக் களிக்கின்றனர் பாரதிதாசனார்,

''சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு
தேக்கியநல் வாய்க்காலும் வகைப்படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன்விளைக்கும்
நிறையுழைப்புத் தோள்களெல்லாம் எவரின் தோள்கள்
கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்
கருவியெலாம் செய்துதந்த கைதான் யார்கை?
பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்கு லத்தைப்
போயெடுக்க அடக்கிய மூச்செவரின் மூச்சு''

என்று பாடுகிறார்.

வால்ட் விட்மன் தன்னைப்பற்றிய பாடலில் உலக அனுபவங்களை மிக அதிகமாகவும் நுணுக்கமாகவும் பேசுகிறார். அமெரிக்க மக்களின் அரும்பசிக்கு அருமருந்தாக அவர் படைப்பு விளங்கியது. காப்பிய இலக்கணம் எதனையும் பெறாத 'புல்லின் இதழ்கள்' காப்பியம் என்று அமெரிக்க மக்களால் போற்றப்படுகிறது. புதுக்கவிதை, உரை நடையின் செறிவு வடிவம் என்று சிலர் கருதுகின்றனர். வால்ட் விட்மனின் கவிதை, கவிதையைவிட ஆழமானது; இசைவடிவம் கொண்டது. ஈப்ரு மொழியில் எழுதப்பெற்ற பைபிளைப் போன்ற ஒலிநயம் பொருந்திய படைப்பே 'புல்லின் இதழ்கள்'. ஹோமரின் கவிதையைப் போன்று நடைப்போக்கும், நாட்டுப்புறப் பாடலின் சாயலும் இருக்கும்; வோர்ட்ஸ்வொர்த்தின் எளிய சந்தமும் மிடைந்து வரும்; சிற்சில போது மில்டனின் பீடார்ந்த ஏறு நடையும் உலாவரும்; ஆனாலும் அவனுக்கு அவனே வழிகாட்டி. பாடுபொருளில் புதுமையைக் கொண்டு வர வேண்டுமென்பதால் வடிவத்திலும் புரட்சியைப் புகுத்தினார். வசன கவிதை என்பதால் எளிதில் பொருள் விளங்கிவிடும் என்று எதிர்பார்க்க முடியாது; படிமம், குறியீடு முதலிய அணிகளால் புனையப் பெற்றுள்ள கவிதைத் தொகுப்பே புல்லின் இதழ்கள். படிமம், குறியீடு ஆகிய இயக்கங்கள் ஐரோப்பாவில் உருப்பெறு முன்பே விட்மன் படிமங்களாலும் குறியீடுகளாலும் பாடல்களை அர்த்தபுஷ்டியுள்ளதாகப் படைத்துள்ளார்.

பாரதிதாசன் முறையாகத் தமிழ் பயின்றவர். இலக்கிய இலக்கணம் கற்றுத் தோய்ந்தவர். சங்கத் தமிழிலும் தெய்வத் தமிழிலும் நாட்டங்கொண்ட பாரதிதாசன் அடிநாட்களில் பக்திப் பாடல்களைப் பாடி மகிழ்ந்துள்ளார். பக்தி என்னும் பெயரால் சுயமைத்தனம் மண்டிக்கிடந்த காலத்தில் ஈரோட்டுப் பெரியார் மக்களின் மனங்களில் கவிந்திருந்த மாயத்திரையை விலக்கிவிட்டுப் பகுத்தறிவுப் பாதைக்கு வருமாறு வரவேற்பு நல்கிய காலகட்டத்தில் புலவரேறு புதுப்பொலிவோடும் புதுத்தெம்போடும் பாட்டுலகில் பட்டுச் சிறகடித்துப் பறக்கலானார். பழமைக்கும் மூடத்தனத்திற்கும் முற்றுப் புள்ளி வைத்தார். பகுத்தறிவுப் பாசறையின் தன்னேரில்லாக் கவிஞராக உலா வந்தார். கவிதை வடிவில் மரபினைப் போற்றிக் கொண்டு உள்ளடக்கத்தில் புரட்சியைப் புகுத்தினார். இவருடைய பாடல்கள் யாவும் எளிமையானவை. சாதாரண மக்களும் பாடக்கேட்டால் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் பாடல்களைப் படைத்தளித்தார். புதிய சந்தப் பாக்களால் படைப்பினை அணி செய்தார். சொல்லும் போக்கிலும் சொற்களிலும் கம்பீரத்தை ஏற்றிப் பாடினார். வீழ்ந்து கிடந்த மக்கள் நிமிர்ந்து நடக்க, பாடல்களையே தூதனுப்பினார். நெடும்பாடல்களையும் குறுங்காப்பியங்களையும் பாடியருளினார்.

விட்மன் - பாரதிதாசன் படைப்புகளை மேலும் மேலும் ஆய்வு செய்ய மிகுதியான வாய்ப்புகள் உள்ளன. இத்துறையில் அறிஞர்கள் முயல்வாராக.

**பால் உற்பத்தி**

1988-89இல் 5,425 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. 1989-90ல் 6,726 பால் கூட்டுறவு உற்பத்தியாளர்கள் சங்கங்களாக அதிகரித்துள்ளன. இதனால் 1990-ல் 17.4 இலட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளார்கள்.

1988-89-ல் நாளொன்றுககு 10.1 இலட்சம் லிட்டராக இருந்த பால் உற்பத்தி, 1989-90ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 12.8 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது. கடந்த ஆண்டில் அதிகமாக நாளொன்றுக்கு 2.7 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி பெருக்கப்பட்டுள்ளது.

1988-89-ல், பால் விற்பனை சென்னையில் நாளொன்றுக்கு 5.3 இலட்சம் லிட்டராக இருந்தது. இது தற்சமயம் நாளொன்றுக்கு 7.0 இலட்சம் லிட்டராக உச்சக்கட்ட விற்பனையை அடைந்துள்ளது.

## நேரு பொன்மொழிகள்

- வறுமையைப் புகழ்வது எனக்குப் பிடிக்கவில்லை; வறுமை கொடிய விரோதியாக என் கண்களில் படுகிறது. வறுமையை அழிக்கப் போராடுவது உன் கடமையாகும்.

- மனிதனைவிடச் சூழ்நிலைகளே வலிமை மிக்கவை.

- நிர்வாகி, இப்போதிருக்கும் உலகத்தைச் சீரமைக்கிறான். விஞ்ஞானியோ ஒரு புது உலகத்தையே உருவாக்குகிறான். இப்போது நமது தேவை, ஒரு புது உலகம் தான். ஆகவே விஞ்ஞானிகளைத்தான் முன்னிலையில் வைக்க வேண்டும்.



# வளரும் வேளாண்மை

## வைகாசி மாதத்திற்கான சாகுபடிக் குறிப்புகள்

### மானாவாரி நிலங்கள்

ஆங்காங்கே கோடை மழை பரவலாகப் பெய்து வருகிறது. மானாவாரி நிலங்களில் கோடையுழவு செய்து மழை நீரை மண்ணில் ஈர்த்து மற்றும் களைகளைக் கட்டுப்படுத்தி பயன்பெற இது தக்க தருணம். மண் அரிப்புள்ள இடங்களில் மேற்கொண்டு மண் அரிப்பைத் தடுக்க, சரிவுக்குக் குறுக்கே சிற்சிறு களிங்குகளை அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

170216

### நன்செய் மற்றும் இறவைப் பயிர்கள்

**நெல் :** முன்பருவ நெல் பயிரிடுமிடங்களில் குறிப்பாக குறுவை பயிரிடுமிடங்களில் இக்கோடை மழையைக் கொண்டு சணப்பை மற்றும் தக்கைப்பூண்டு விதைப்பதற்கு ஏற்ற தருணமாகும். பல நுண்ணூட்டங்களின் பற்றாக்குறையைப் போக்கவும், இட்ட உரங்களின் குறிப்பாக மணிச்சத்தின் பலனை அதிகரிக்கவும், தழைச்சத்தினை மண்ணில் கூடுதலாக்கவும், மண்ணின் அங்ககப் பொருட்களின் அளவு அதிகரிக்கவும், பசுந்தாள் பயிரிடுதல் அவசியமாகும். உவர், களர் நிலங்களுக்குத் தக்கைப்பூண்டு பயிரிடுவது சாலச்சிறந்தது.

ஆயக்கட்டு மற்றும் தோட்டக்கால் பகுதிகளுக்கு ஐஆர். 50 மற்றும் ஏடிடி. 36 ஆகியவை நெல் குறுவைப் பருவத்திற்கு ஏற்ற இரகங்கள். ஒரு எக்டருக்கு 75 கிலோ விதை போதுமானது 20சென்ட் நாற்றங்காலுக்கு 1000கிலோ தொழு உரம் மற்றும் 20 கிலோ டிஏபி ஆகியவற்றை அடியுரமாக இடவேண்டும். 25 முதல் 30 நாட்களுக்குள் நாற்றுக்களைப் பறித்து நடவு செய்ய வேண்டும். சதுரமீட்டருக்கு 77 குத்துக்கள் உள்ளவாறு நடவு செய்ய வேண்டும். நாற்று நட்ட 3-5 நாட்களுக்குள் 2.5 லிட்டர் பென்தயோகார்ப் 50 சதம் அல்லது புடாகுளோர் 50 சதம் களைக்கொல்லியினை 50 கிலோ மணலுடன் கலந்து வயல் முழுவதும் சீராகத் தூவவும். நடவு செய்த 25-ஆம் நாள் மற்றும் 45-ஆம் நாள் 25 கிலோ தழைச்சத்து அளிக்கக்கூடிய இரசாயன உரங்களை மேலுரமாக இடவேண்டும்.

**கரும்பு :** இறவை நிலங்களில் இளங் கரும்புப் பயிர் நீர் பற்றாக்குறையால் பாதிக்கும் [illegible] (ஒன் [illegible] குப் பரிந்துரை செய்யப்படுகிறது. மற்றும் யூரியாவையும், மூரியேட் ஆஃப் பொட்டாஷ் உரத்தையும் 100 லிட்டர் தண்ணீருக்கு ஒவ்வொன்றையும் 2½ கிலோ என்றளவில் கலந்து மாதம் ஒருமுறை தெளிக்க வேண்டும்.

சி.ஓ.சி. 671 இரகக் கரும்பிற்கு 30, 60, 90-வது நாட்களில் மேலுரம் இட வேண்டும். மண் பரிசோதனை செய்யப்பட்ட நிலங்களுக்கு மண் வேதிகப் பரிந்துரைப்படி மேல்உரம் இடவும். தழைச்சத்தினை இடும்போது 5 பங்கு யூரியாவிற்கு 1 பங்கு வேப்பம்புண்ணாக்கு கலந்து இட வேண்டும். சர்க்கரை ஆலைப்பயிருக்கு எக்டருக்கு 225 கிலோ தழைச்சத்தும், 112 கிலோ சாம்பல்சத்தும் மற்றும் வெல்லத்திற்கான பயிருக்கு எக்டருக்கு 175 கிலோ தழைச்சத்தும், 112 கிலோ சாம்பல் சத்தும் அளிக்கக்கூடிய இரசாயன உரங்களை இடவேண்டும்.

**தென்னை :** தென்னைக்குக் கோடையில் பாசனம் செய்வது குரும்பை உதிர்வதைத் தவிர்க்கவும், உற்பத்தியை அதிகரிக்கவும் உதவும். நீர்ப்பற்றாக்குறை உள்ள இடங்களில் தொடர் வட்டப்பாத்தி முறையில் பாசனம் செய்து நீரை மிச்சப்படுத்தலாம். அதிக வறட்சி மிக்க நீர்த் தட்டுப்பாடான நிலையில் பானை முறை நீர்ப் பாசனம் செய்ய வேண்டும். இம்முறை மரங்களைக் காப்பாற்ற உதவுகிறது.

**நிலக்கடலை :** வைகாசி - ஆனிப் பட்டங்களுக்கு சேலம், தருமபுரி, தென் ஆற்காடு, மற்றும் வட ஆற்காட்டில் சில பகுதிகளுக்குப் பயிரிட டி.எம்.வி. 2, டி.எம்.வி. 7, டி.எம்.வி. 10, வி.ஆர்.ஐ. 1 மற்றும் கோ. 1 ஆகிய இரகங்கள் பரிந்துரை செய்யப்படுகிறது. இந்த இரகங்களில் டி.எம்.வி. 10 என்ற இரகம் வித்துக்கு பயிரிட ஏற்றது. இதன் வயது 120 நாட்கள் மற்ற எல்லா இரகங்களுக்கும் வயது 105 நாட்கள்.

தற்சமயம் கிடைத்த கோடை மழையின் உதவியால் நிலத்தை நல்ல முறையில் கோடையுழவு செய்திருக்க வேண்டும். கடைசி உழவில் நன்றாக மக்கிய கம்போஸ்ட் அல்லது தொழுஉரம் எக்டருக்கு 12-15 டன்கள் இடலாம்.

— தகவல்:
தமிழ்நாடு ஜி.டி. நாயுடு வேளாண்மைப் பல்கலைக் கழகச் 'செய்தி மடல்'.


**தமிழரசு**

திருவள்ளுவர் ஆண்டு 2022

வைகாசித் திங்கள் - 18

மலர்:21 இதழ்:23

1-6-1991

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

தமிழரசு




# தமிழரசு

16-6-1991 ரூ.1




எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்

- ★ பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
- ★ பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
- ★ பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
- ★ லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
- ★ படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.



## இந்த இதழில்...


தமிழ்நாடு தொழிற் கண்காட்சி — 1991 ... 2
தரத்திற்கு ஓர் அமைப்பு ... 3
கரும்புச் சக்கையிலிருந்து காகித உற்பத்தி ... 6
சுற்றுப்புறத் தூய்மை ... 7
வாழவைக்கும் வாழை ... 9
தோல் பொருள் ஏற்றுமதிக்குத் தோள் கொடுப்போம்! ... 10
வீரபாண்டியனுக்கு ஒரு விழா ... 15
சோவியத் யூனியனில் தமிழ் ஆய்வு ... 17
நீலகிரியில் புதிய நுண்புனல் மின் திட்டம் ... 18
நெசவாளர் வாழ்வில் ஒளியேற்ற ... 20
சேரர், பல்லவர் காசுகள் கண்டுபிடிப்பு ... 23
மாட்டு வண்டிப் போட்டி ... 24
தமிழில் தந்தி ... 30
சித்த மருத்துவத்தின் சிறப்பு ... 31
வேளாண்மைப் பொறியியல் இயந்திரங்களும் அதன் பயன்களும் ... 33
சமையல் எரிபொருள் சிக்கனம் ... 35
நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ... 38
கைத்தறி நெசவாளர் குடும்பங்களுக்கு அரசின் நலத் திட்டங்கள் ... 41
சாலைப் பாதுகாப்புக் கல்வி ... 43
டீசல் சேமிப்பு ... 46





# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2022

ஆனித் திங்கள் - 2

மலர்:21 இதழ்:24

16-6-1991

4. அயல் நாட்டிலும், நிறுவனத்தைக் கண்காணித்தல், சோதனை செய்தல் போன்ற மற்றைய தேவைகளுடன் விஞ்ஞான வளர்ச்சியால் ஏற்படும் புதுப்புது உத்திகளை உடனுக்குடன் இந்திய சூழ்நிலைக்கேற்பக் கையாளுதல்.

5. தர முத்திரையைத் தவறாகப் பயன்படுத்தினால் அதிகபட்சத் தண்டனையை வழங்குதல்.

இவைகளைக் கருத்தில் கொண்டு 1987, ஏப்ரல் திங்கள் முதல் சட்ட ரீதியாகப் பாராளுமன்ற ஒப்புதலுடன் (இந்தியத் தர நிர்ணய அமைவன விதிகள் 1986-இன் கீழ்) 'இந்தியத் தர நிர்ணய அமைவனம்' என்று சீரமைக்கப்பட்டு, பழைய இந்தியத் தர நிர்ணய நிறுவனத்தின் அனைத்து உரிமைகளையும் ஏற்றுக் கொண்டு செயல்பட முடிந்தது.

**அமைவனத்தின் அமைப்பு**

தொழில்துறை, விஞ்ஞானம் மற்றும் ஆராய்ச்சித்துறைகளில் உள்ள வல்லுநர்களை உறுப்பினர்களாகவும், மத்திய அமைச்சரைத் தலைவராகவும் கொண்டு ஒரு செயற்குழுவின் உதவியோடு செயல்படுகிறது.

**ஆக்கப் பணிகள்**

1. இந்தியத் தர நியமங்களை உருவாக்குதல், பிரசுரித்தல் மற்றும் அமல்படுத்தல்;

2. தர நியமங்களின் அடிப்படையில் பொருள்களின் செயல்முறைகளைச் சோதனை செய்தல்;

3. சோதனைக் கூடங்களை உருவாக்குதல், பராமரித்தல் மற்றும் வெளியார் சோதனைக் கூடங்களை அங்கீகரித்தல்;

4. தர நியமங்களை நடைமுறைக்குக் கொண்டு வருவதன் மூலம் பொருள்களின் தரத்தை மேம்பாடு அடையச் செய்தல்;

5. நுகர்வோர்களுக்கோ, நுகர்வோர் நிறுவனங்களுக்கோ தேவையான விவரங்களையோ, குறிப்புக்களையோ வழங்குதல்.

6, தயாரிப்பு மற்றும் செயல் முறைகளில் தரத்திற்கே முதல் உத்தரவாதம் அளித்தல்.

7. அங்கீகரிக்கப்பட்ட தர நியமங்களுக்குக் குறிப்பேடுகள், வழிமுறைத் தர நியமங்கள் மற்றும் சிறப்பு வெளியீடுகள் தயாரித்தல்.

• ஒரு சொல் போதுமானால், இரு சொற்களைச் செலவிடாதே!

- சிங்-செள

புத்தகங்கள் எல்லாம் மனிதனைப் பிரபஞ்சத்தின் எஜமானனாக ஆக்குகின்றன.

-பால்லெலன்கோல்

**அமைவனத்தில் உள்ள முக்கிய துறைகள்**

1. தர நியமங்களைத் தயாரித்தல்;
2. தர முத்திரைக்கான உரிமம் (Licence) வழங்குதல் மற்றும் சோதனைக் கூடங்களில் பொருள்களின் தரத்தைச் சோதிப்பது.
3. உலகளவில் தொடர்பு (International Relations) மற்றும் ஒத்துழைப்புத்துறை

**தர நியமங்கள் தயாரிப்புப் பணி**

புதிய சட்டத்தின் கீழ் தேசியத் தேவைகள், திட்டங்கள் தொழில் துறை முன்னேற்றம், தொழில் நுணுக்கத் தேவைகள் அயல்நாட்டு வாணிபம் மற்றம் நுகர்வோர் நலம் பாதுகாப்பு ஆகியவைகளைக் கருத்தில் கொண்டே தர நியமங்கள் வடிவமைக்கப்படுகின்றன. இந்த அமைவனம் இது வரை 13,500-க்கும் மேற்பட்ட தர நியமங்களை உருவாக்கியுள்ளது.

**ISI தர முத்திரைச் சட்டம்**

இந்தியத் தர நியம விதிகளின் படி உற்பத்தி செய்வோருக்கு ISI தர முத்திரை வழங்கப்படுகிறது.

**ISI தரமுத்திரையைப் பெற என்ன செய்ய வேண்டும்?**

**இந்த அலுவலகத்தில் வந்து அதற்கான விண்ணப்பத்தைப் பெற்று பூர்த்தி செய்து குறிப்பிட்ட தொகையை அனுப்பினால் அமைவனத்து அலுவலர்கள் தயாரிப்பாளர்கள் இடத்துக்கே வருகை செய்து தர நியம விதிகளின்படி பொருள்கள் தயாரிக்கப்படுகின்றனவா, அதற்கான தேவையான உபகரணங்களும், பயிற்சி பெற்ற விற்பன்னர்களும் உள்ளார்களா என்று கண்டறிந்து கடுமையான சோதனைகளுக்குப் பின்னரே** ISI உரிமம் (Licence) வழங்கப்படுகின்றது. இவ்வாறு சோதனைக்குட்படுத்தப்பட்ட பொருள்கள் ISI முத்திரை தாங்கி கடைகளில் விற்பனைக்கு வந்த பின்னரும்கூட கடைகளுக்குப்போய் எமது நிறுவனத்தார் அந்தப் பொருள்களை வாங்கி வந்து மறுபடியும் பரிசோதனைக்குட்படுத்துகின்றனர். தயாரிப்பாளர்கள் தரத்தை எப்பாடுபட்டாவது காப்பாற்றியே ஆக வேண்டும். இந்த ஐ.எஸ்.ஐ. (ISI) முத்திரைத் திட்டத்தைத் தவறாகப் பயன்படுத்துவோர் அபராதத்துடன் கடுங்காவல் தண்டனையையும் அனுபவிக்க வேண்டிவரும்.

ISI தர முத்திரைத் திட்டம் நுகர்வோருக்கும், தயாரிப்பாளருக்கும் இடையே உறவுச் சங்கிலியாக செயல்படுகிறது.

நுகர்வோர் ISI முத்திரையுள்ள பொருள்கள் இந்தியத் தர நியமங்களுக்கு ஏற்ப இல்லையென்று கருதினால் அமைவனத்தின் எந்தக் கிளையிலும் புகார் செய்யலாம் புகார் நிரூபிக்கப்படின் மாற்றுப் பொருள் கிடைக்க அமைவனம் வழி செய்யும்.

**சில கட்டாய தர முத்திரை தாங்கிய பொருள்கள்**

1) உணவு - கலர் பௌடர், 2) வனஸ்பதி, 3) சிமெண்டு, 4) இரும்பு, 5) பம்ப் ஸ்டவ், 6) மின் இஸ்திரிப் பெட்டி, 7) இம்மெர்ஷன் வாட்டர் ஹீட்டர், 8) காஸ் ஸிலிண்டர்.

தவிர, கட்டாய ISI தர முத்திரைச் சட்டத்தின் கீழ் வராத ஆனால், தயாரிப்பாளர்கள் தாமகவே முன்வந்து ISI தர முத்திரையைப் பெற்ற சில பொருள்களின் விவரங்கள் பின்வருமாறு நுகர்வோருக்கு இந்தத் தகவல்கள் பெரிதும் பயன்படும் என்று நம்பியே இந்தப் பட்டியலைக் கொடுத்திருக்கிறோம்.

1. காப்பித்தூள்
2. பிஸ்கட்
3. சவரப் பிளேடு
4. அலுமினியப் பாத்திரங்கள்
5. பணியன்கள்
6. ஆழ்துளைக் கிணற்றுக் குழாய் (Bore well pump)
7. தலைக்கவசம் (Helmets)
8. சமையல் குக்கர் (Pressure Cooker)

சர்வதேசத் தரக்கட்டுப்பாட்டு நிறுவனம் (International Standards Organization) மற்றும் சர்வதேச மின்னணுக்கட்டுப்பாட்டு நிறுவனம் (International Electro Technical Commission) இவைகளில் அமைவனம் அங்கம் வகிக்கிறது.

**தகவல் மையம் - அதன் சேவைகள்**

ஐந்து இலட்சத்துக்கும் மேலான தர நியமங்கள், வழிகாட்டி, நூல்கள், தொழில் நுணுக்க வழிமுறைகள் Monographs இவைகளை உள்ளடக்கிய மிக நவீன நூலகம் டெல்லியில் செயல்படுகிறது. மற்றும் வட்டார அலுவலகங்களிலும் கிளைகள் உண்டு. இவை தவிர,

1) உலகளாவிய தர நியமங்கள் (Standards World over)
2) தர நியமங்களின் மாதாந்திரச் சேர்க்கைகள் (Standards - Monthly Additions)
3) இந்தியத் தர நியமங்கள் (Standards India) என்ற தலைப்புகளில் மூன்று மாத இதழ்கள் வெளியிடப்படுகின்றன.

மற்ற விவரங்களுக்கு அருகில் உள்ள அமைவனத்தின் வட்டாரக் கிளை அலுவலகங்களை அணுகவும்.

## குற்றாலம் சாரல் தொடக்கம்!



வானரங்கள் கனிகொடுத்து
மந்தியொடு கொஞ்சும்;
மந்திசிந்து கனிகளுக்கு
வான்கவிகள் கெஞ்சும்;

கானவர்கள் விழிஎறிந்து
வானவரை அழைப்பார்;
கவனசித்தர் வந்துவந்து
காயசித்தி விளைப்பார்;

தேனருவித் திரையெழும்பி
வானின்வழி ஒழுகும்;
செங்கதிரோன் பரிக்காலும்
தேர்க்காலும் வழுகும்;

கூனல்இளம் பிறைமுடித்த
வேணிஅலங் காரர்
குற்றாலத் திரிகூட
மலைஎங்கள் மலையே!

— 'குற்றாலக் குறவஞ்சி'

**காற்றாலை மூலம் மின்னுற்பத்தி:**

எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் காற்றாலைகள் மூலம் 100 மெகவாட் மின்சாரம் அரசுத்துறையிலும் 100 மெகாவாட் மின்சாரம் தனியார் துறையிலும் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. தமிழகத்தில் கயத்தாறு, பந்தல்குடி, தூத்துக்குடி ஆகிய இடங்களில் காற்றாலை மூலம் ஒன்றரை மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் திட்டம் செயல்பட்டு வருகிறது. காற்று சக்தி அதிகமாக உள்ள கயத்தாறு பகுதியில் மின்சாரம் செல்லும் கம்பிகளையொட்டி காற்றாலை மூலம் 500 கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய 5 இயந்திரங்கள் நிறுவப்படவுள்ளன

**எரிபொருள் சேமிப்பு:**

தேயிலைத் தொழிற்சாலைகளில் சூரிய ஒளிமூலம் தேயிலை பதப்படுத்தப்படுவதால் எரிபொருள் சேமிக்கப்படுகிறது. இத்தகைய முறை இந்தியாவில் முதன்முதலாக மதுரை மாவட்டம் மாஞ்சோலையிலுள்ள தேயிலைத் தொழிற்சாலையில் அமல்படுத்தப்பட்டுள்ளது.

# தமிழ்நாடு தொழிற் கண்காட்சி 1991

**தமிழ்நாட்டைத் தொழில் மயமாக்குவதில் அரசு முனைப்போடு செயல்பட்டு வருகிறது. தொழில்கள் வளம்பெற, நடைபெறவிருக்கும் கண்காட்சியொன்றைப் பற்றி விளக்கும் கட்டுரை இது.**

170216

தமிழ்நாட்டில் தொழில்கள் முனைப்போடு இயங்க உதவும் வகையில், அகில இந்திய உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தமிழ் மாநிலக் கிளை, தமிழ்நாடு சிறுதொழில்கள் சங்கம் ஆகியவற்றுடன் இணைந்து,



**திரு. ஜோர்சிங் சீய்ம் இ.ஆ.ப., ஆணையர் மற்றும் இயக்குநர், தொழில் வணிகத்துறை.**

தமிழ்நாடு அரசு தொழில் வணிக இயக்குநரகம் தொழிற் கண்காட்சியொன்றினை ஏற்பாடு செய்துள்ளது. வரும் ஜூன் 21-ஆம் நாளிலிருந்து 27-ஆம் நாள் வரை ஒரு வாரகாலம் கிண்டியிலுள்ள அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் இந்தத் 'தமிழ்நாடு தொழிற் கண்காட்சி-1991' சிறப்பாக நடைபெறவுள்ளது.

மாநிலத்தின் தொழில் வளம் பெருக வழிவகுக்கும் வகையில், இக்கண்காட்சியில் பொருட்காட்சி, கருத்தரங்கங்கள், பட்டியல் தொகுப்பு, காட்சியரங்கு, வாங்குவோர்- விற்பனையாளர் கூட்டம் மற்றும் தகவல் மையம் ஆகியவை இடம் பெறுகின்றன.

பொருட்காட்சியில், பெரும் தொழில்கள் மற்றும் நடுத்தர, சிறு தொழில்கள் குறித்த 200 காட்சியரங்குகள் அமைக்கப்படுகின்றன. ஊரகத் தொழில்கள், ஏற்றுமதி குறித்த தனியரங்கங்களும் அமைக்கப் படும்.

கண்காட்சி நடைபெறும் ஏழு நாட்களிலும் பல்வேறு பொருட்கள் குறித்த கருத்தரங்குகள் நடைபெறும். தொழில் முன்னேற்றம் அடைந்துள்ள அயல்நாடுகளில் கையாளப்படும் உற்பத்தி முறைகள், அண்மைக் காலத்திய தொழில்நுட்ப முன்னேற்றங்கள் ஆகியன பற்றிய திரைப்படக் காட்சிகளும் காட்டப்படவுள்ளன.

இந்திய, அயல்நாட்டு உற்பத்தியாளர்கள் பற்றிய பட்டியல் தொகுப்பும் (Catalogue) காட்சியில் இடம் பெறும். மேலும், தங்களுக்குத் தேவையான தொழில் ஆலோசகர்கள் பற்றிச் சிறுதொழிலகங்கள் அறிந்து கொள்ளும் வகையில் ஒரு தொழில் ஆலோசகர் கூட்டமும் நடத்தப் படுகிறது.

வாங்குவோர்- விற்பனையாளர் கூட்டத்தினால், உதிரிப் பொருட்கள் குறித்து தொழிலகங்கள் அறிந்து கொள்ள முடியும்.

இக்கண்காட்சியின் சிறப்பு அம்சமாக, 'தகவல் மையம்' எனும் அரங்கு அமைக்கப்படும். இது புதிதாகத் தொழில் தொடங்க விரும்பும் அனைத்துப் பொதுமக்களுக்கும் தேவையான தகவல்களை அளிக்கும். இம்மையத்தில், தொழில் முனைவோருக்கு வசதியாக ஏறத்தாழ 2,000 தொழில்கள் பற்றிய விவரக் குறிப்புகள் விற்பனைக்கு வைக்கப் படவுள்ளன.

இந்தத் தொழிற் கண்காட்சியினைக் காண இரண்டு இலட்சத்திற்கும் மேலான தொழிலதிபர்கள் வருகை தருவார்கள் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

இந்தக் கண்காட்சியை ஒட்டி SIACON 91 என அழைக்கப்படும் சிறுதொழில்கள் சங்கத்தின் ஆண்டுக் கூட்டம் இதே இடத்தில் 25.6.91 அன்று நடைபெறவுள்ளது.

## கடமை

**நாம் செய்ய வேண்டிய கடமைகள் பல உள்ளன. நாட்டின் குடிமகன் என்ற வகையிலும், பெற்றோர்களுக்குப் பிள்ளை என்ற வகையிலும், மனைவிக்குக் கணவன் என்ற வகையிலும், குழந்தைக்குத் தகப்பன் என்ற முறையிலும் பல கடமைகள் உண்டு. இக்கடமைகள் மீற முடியாதன; புனிதமானவை. இக்கடமைக்குப் புனிதத் தன்மையளிப்பதும், மீற முடியாத நிலைமையை உருவாக்குவதும் மனிதனாக இருந்து நாம் செய்யும் கடமைதான்.**

**—மாஜினி**

**கடமையில்லாமல் ஒரு கணம்கூட இல்லை.**

**—ஸிஸரோ**

**ஆராய்வதும், சிந்திப்பதும் மனிதனின் உரிமை மட்டுமல்ல, உயர்ந்த கடமையுமாகும்.**

**—இங்கர்சால்**

**கடமைகள் நம்முடையவை, நிகழ்ச்சிகள் கடவுளுடையவை.**

**—வெஸில்**

**கைக்கு அருகில் உள்ள முதற் கடமையைச் செய்தால், அடுத்த கடமை என்னவென்று தானே புலப் படும்.**

**—தாமஸ் கார்லைல்**



# தரத்திற்கு ஓர் அமைப்பு

**ஜி. கணேசன்**
**உதவி இயக்குநர் (மக்கள் தொடர்பு)**
**இந்தியத் தர நிர்ணய அமைவனம்**
**சென்னை-600 113.**

சுதந்திரத்திற்குப்பின் நாம் பல துறைகளில் வளர்ச்சி கண்டிருந்தாலும், வேலையில்லாத் திண்டாட்டம் தலைவிரித்தாட நாட்டின் பொருளாதாரம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை.

பெருகி வரும் மக்களின் இன்றியமையாத அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்கவும் தனி நபர்கள் சிறிய, நடுத்தர, பெரிய தொழிற்சாலைகளைத் தொடங்க தரம் குறைய ஆரம்பித்துவிட்டது.

தயாரிப்பாளர்கள் தரத்தைக் கருத்தில் கொள்ளாமல் இலாப நோக்கத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு பொருள்களைத் தயாரித்து கண்ணைக் கவரும் வண்ணம் அடுக்கி வைத்து பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி மூலமாக விளம்பரப்படுத்தித் தள்ளி விடுகின்றனர். தங்கள் பொருள்கள் தான் தரத்தில் சிறந்தவை என்று கவர்ச்சிகரமான இனாம் பொருள்களையும் சேர்த்துத் தள்ளி விடுகின்றனர். பரிசுப் பொருள்களுக்கு ஆசைப்பட்டு நுகர்வோரும் தரம் குறைந்த பொருள்களை ஏற்றுக் கொள்ள, விளைவு சில சமயங்களில் அச்சுறுத்தும் வகையில் அமைந்து விடுகின்றது.

பொருள்களைக் கடையில் வாங்கும்போதே தரமான பொருள்தானா என்று கண்டறிய அரசு ஏற்படுத்திய நிறுவனம்தான் "இந்தியத் தர நிர்ணய அமைவனம்" என்று அழைக்கப்படும் (Bureau of Indian Standards). இந்த நிறுவனத்தின் சின்னம்தான் ISI முத்திரை. இந்த ISI தரமுத்திரையைத் தாங்கிய பொருள்கள் உயிருக்கும், உடைமைக்கும் உத்தரவாதம் அளிக்கும் முத்திரை.

இந்த அமைவனம் 1947-இல் உருவாக்கப்பட்ட இந்தியத் தர நிர்ணய நிறுவனம் ஆகும். (Indian Standards Institution) பின் 1952-இல் ISI தர முத்திரைச் சட்டம் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது.

முதலில் தர வரம்புகளை உருவாக்குதல், சோதனைக் கூடங்களை நிறுவுதல் என்று தொடங்கப்பட்டு, படிப்படியாக கீழ்க்கண்ட தேவைகள் ஏற்படலாயின. அவையாவன:

1. நிறுவனத்துக்குச் சட்ட ரீதியான அங்கீகாரம் அளித்து அன்றாடப் பணிகளைத் திறமையாகச் செய்ய உதவுதல்;

2. தேசிய தேவைகளுக்கு முன்னுரிமை அளித்தல்;

3. மக்கள் நலன் கருதி ISI முத்திரையைக் கட்டாயமாக்குதல்;





## கரும்புச் சக்கையிலிருந்து காகித உற்பத்தி

கே.ஆர். சுப்பிரமணியன்,
செயலாளர்
தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனம்

கடந்த சில ஆண்டுகளாகவே தமிழக அரசின் மிக சிறந்த நிறுவனங்களில் ஒன்றாகிய தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனம் சீரான முன்னேற்றத்தை அடைந்திருப்பதோடு பல அரிய முன்னேற்ற இலக்குகளைக் கண்டுள்ளது.

ஆண்டொன்றுக்கு 50,000 மெட்ரிக் டன் செய்தித் தாளையும், 40,000 மெட்ரிக் டன் அச்சு எழுது காகிதத்தையும் உற்பத்தி செய்வதற்காக நிறுவப்பட்ட இந்நிறுவனம் கரும்புச் சக்கையை முக்கியமான மூலப்பொருளாகப் பயன்படுத்தி செய்தித் தாள் உற்பத்தி செய்வதற்காக ஒரு நவீனமான தொழில் முறையை வகைப்படுத்திக் கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இந்தப் புதுத்தொழில்முறை மூலம் அந்நியச் செலாவணி சேமிப்பதற்கும் காடுகள் மேலும் அழியாமல் தடுத்து நிறுத்துவதற்கும் ஏதுவாக உள்ளது.

தமிழ்நாடு செய்தித் தாள் காகித நிறுவனம் வணிக முறையில் உற்பத்தியை 1985-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் தொடங்கியது. தொடக்கத்திலிருந்தே 90 சதவிகித அளவிற்கு உற்பத்தி செய்துவந்த இந்நிறுவனம், கடந்த இரண்டு ஆண்டுகளாக 100 சதவிகிதத்துக்கு மேலாக உற்பத்தியைப் பெருக்கி உள்ளது. அதிக அளவில் உற்பத்தியைப் பெருக்கி இருந்தபோதிலும் இந்நிறுவனம் '31-3-1991 அன்று உள்ளபடி நிறுவனத்தில் உற்பத்தி செய்த மொத்த பொருட்களையும் விற்று கிடங்கில் "Zero Stock" நிலை கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து செய்து வருவது நிறுவனத்தின் விற்பனைப் பகுதியின் திறமையை எடுத்துக் காட்டுகிறது.

1985-86 ஆண்டில் ரூ.75.03 கோடியாக இருந்த விற்பனை 1990-91-ஆம் ஆண்டில் மேற்சொன்ன இலக்கை இரண்டு மடங்காகப் பெருக்கி ரூ.155.91 கோடி மொத்த விற்பனை செய்து இருக்கிறது. 31.3.1991 அன்று உள்ளபடி இந்நிறுவனத்தின் மொத்த ஆதாயம் ரூ.75.93 கோடி ஆகும். ரூ.17.66 கோடி வட்டியும், ரூ.21.83 கோடி தேய்மானமும் போக, நிறுவனத்தின் நிகர ஆதாயம் ரூ.36.44 கோடி ஆகும். மிக உயர்ந்த அளவில் லாபத்தை ஈட்டியுள்ள போதிலும், உற்பத்திச் செலவைவிட குறைந்த விலையில் செய்தித் தாளையும், அச்சு எழுது தாளையும் விற்க வேண்டியுள்ள கட்டாயத்தினால், தொடக்க ஆண்டுகளில் நட்டம் அடைந்துள்ளது.

31.3.1990 அன்று இருந்த ரூ.18.97 கோடி நட்டம் கடந்த ஆண்டில் அதாவது 31.3.1991 அன்று உள்ளபடி முழுமையாக (Wiped out) ஈடுசெய்யப்பட்டுள்ளது. ரூ.1.82 கோடி தொகையை ஜெனரல் ரிசர்வ்க்கு மாற்றம் செய்த பின், 1990-91 ஆண்டிற்கு முதன் முறையாக 15 சதவிகித டிவிடென்ட் (அதாவது மொத்தமாக ரூ.14.35 கோடி) கொடுப்பதற்கு நிறுவனத்தின் இயக்குநர்கள் குழு 1.6.1991 அன்று நடந்த கூட்டத்தில் பரிந்துரை செய்துள்ளது. மீதமுள்ள லாபத் தொகையாகிய ரூ.1.30 கோடி அடுத்த ஆண்டு கணக்கிற்குக் கொண்டு செல்லப்படும்.

தொடக்கத்திலிருந்து 31.3.1991 வரையில் இந்நிறுவனம் 3.28 இலட்சம் மெ.டன் செய்தித் தாள் உற்பத்தி செய்து உள்ளது; இதனால் ரூ.354 கோடி அளவில் அரிய அந்நியச் செலாவணியை நாட்டிற்கு மிச்சப்படுத்தியுள்ளது. மரத்திற்கு பதில் கரும்புச் சக்கையை 16.52 ல.டன் அளவில் தனது ஆலையின் மூலப் பொருளாக உபயோகப்படுத்தி, 9.86 ல.டன் அளவில் மரத்தை மீதப்படுத்தி 33,000 எக்டேர் பரப்பளவிற்குக் காடுகள் அழியாவண்ணம் காத்துள்ளது.

மேற்கூறிய விதத்தில் இத்துறையில் தனக்கென்று ஒரு இடத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ள இந்நிறுவனம், எதிர்காலத்திற்கான சில விரிவாக்கத் திட்டங்களை வகுத்துக் கொண்டுள்ளன. தற்சமயம் ஆண்டிற்கு 90,000 மெ.டன் அளவில் உள்ள தனது உற்பத்தித் திறனை இரு மடங்காக்க அதாவது ஆண்டிற்கு 1,80,000 மெ.டன் உயர்த்துவதற்கு ரூ.360 கோடி செலவில் திட்டமிட்டுள்ளது. இத்திட்டம் 36 மாதக் கால அளவில் முழுமை பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கரும்புச் சக்கைக் கூழில் இருந்து செய்தித் தாள் உற்பத்தி செய்யும் நவீன தொழில் முறையைக் கையாண்டு வெற்றி கண்டுள்ள முதல் நிறுவனம், தமிழ்நாடு செய்தித் தாள் காகித நிறுவனம் என்பது பெருமைக்குரியது.





## சுற்றுப்புறத் தூய்மை

ஒவ்வோர் ஆண்டும் ஜூன் மாதம் 5-ஆம் நாள் உலகச் சுற்றுப்புறச் சூழ்நிலைப் பாதுகாப்பு நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. சுற்றுப்புறச் சூழ்நிலையைத் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும் என்ற கருத்தை மக்களுக்கு எடுத்துரைக்க இந்த நாள் பயன்படுகிறது.

1974-இல் தூய்மைப் பாதுகாப்பு பற்றி ஒரு சட்டமே இயற்றிய இந்திய அரசு, 1980-இல் இதற்கெனத் தனியொரு துறையையே தோற்றுவித்தது.

உலகம் மிக வேகமாகச் சுழன்று கொண்டிருக்கிறது. நாம் பல வகையிலும் இயற்கையை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கிறோம். நம்முடைய ஒவ்வொரு செயலின் மூலமும் நமது சூழ்நிலை மாசுபடுகிறது. நிலம், நீர், காற்று முதலாக எல்லாவற்றையுமே நாம் அசுத்தப்படுத்துகிறோம். இந்த நிலையைத் தவிர்க்காவிட்டால் எதிர்காலத்தில் நாம் மிகவும் துன்புறும்படி இருக்கும்.

சுற்றுப்புறச் சூழ்நிலை பற்றிய கண்ணோட்டத்தின் மொத்த அடிப்படை என்னவென்றால் திட்டமிடும் பொழுது உடனடி நலன்களைப் பற்றி மட்டும் கருத்தில் கொள்ளாது தொலை நோக்கில் ஏற்படக்கூடிய தீமைகளையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

மத்திய அரசின் அனுமதி இல்லாமல் காடுகளின் அமைப்பையும் பயன்பாட்டையும் மாநில அரசுகள் மாற்றுவதை 1980-ஆம் ஆண்டு வனப் பராமரிப்புச் சட்டம் தடை செய்கிறது. அந்தச் சட்டத்தினால் சிறப்பான பலன் ஏற்பட்டுள்ளது. விஞ்ஞானத்திற்கு விரோதமான, திட்டமிடப்படாத குறுகிய நோக்குடைய காடு அழிப்புத் திட்டங்கள் அனைத்தும் நிறுத்தப்பட்டுவிட்டன. காடுகளுக்குள் எங்கு ஊடுருவல் இருந்தாலும் அது சட்ட விரோதமானதுதான்.

காடுகள் பராமரிப்பு, நிலம், நீர் மாசடைவதைத் தடுப்பது மட்டும் சுற்றுப்புறச் சூழல் பராமரிப்பு அல்ல; கலாச்சாரப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதும் இதில் அடங்கும்.

ஆதி காலத்தில் எங்கும் அமைதியான சூழ்நிலையும், ஆரவாரமற்ற வாழ்வும், அளவான மக்கள் தொகையும் இருந்தது. ஆகவே, மிகச் சுலபமான இன்ப வாழ்வை இயற்கையோடு இணைந்து மக்கள் அனுபவித்து வந்தனர். இயற்கையான முறையில் மரணம் கிடையாது என்ற அளவில்கூட ஒரு காலத்தில் வாழ்ந்து வந்தனர் நம் மூதாதையர்.

இப்போதோ மக்கள் தொகை பெருகப் பெருக, நம்மைச் சுற்றி உள்ள சூழ்நிலை கெட்டு வருவதைக் கண்கூடாகப் பார்க்க முடிகிறது. பலவகையான வழிகளில் இரசாயன, பௌதிக, உயிரியல் மாற்றங்கள் ஏற்பட்டு, செயற்கை மிகுந்த ஒரு வாழ்க்கையை நாமே மெல்ல மெல்ல ஏற்படுத்திக் கொண்டு வருவதை நம்மால் உணரமுடிகிறது. இது நிச்சயமாக அழிவுப் பாதை அல்ல என்று எவரும் மறுத்து விட முடியாது. மனிதனால் உண்டாக்கப்படும் இந்நிகழ்ச்சிகளின் விளைவைத் தடுக்கவும், குறைக்கவும் பற்பல புது முயற்சிகளில் ஈடுபட்டும், எதிர்பார்க்கும் வெற்றி கிடைக்காமல் தடுமாறுகின்றனர் விஞ்ஞானிகளும், சூழ்நிலையியலாளர்களும்.

சுற்றுப்புறத்தில் தூய்மையை அழிக்கும் பூதமாக உருவெடுத்து வரும் 'அழுக்காக்கல்' என்பது தொழிற்சாலைக் கழிவுப் பொருட்கள், சாக்கடை, ஒலி, உயிர்க்கொல்லிகள் முதலிய பல வழிகளில் பெருகி வருகிறது.

ஒவ்வொரு தொழிலகமும் ஏதாவது ஒரு உருவத்தில் தினந்தோறும் சுற்றுப்புறத்தைத் தூய்மையற்றதாக ஆக்கி வருகின்றன.

சோடியம் ஹைடிராக்சைடு, சிங்க் ஹைடிரோ சல்பைடு, சோடியம் ஹைபோ குளோரைடு போன்ற பல வகையான இரசாயனப் பொருட்களை அவை மிகுதியும் வெளித்தள்ளுகின்றன. இவை நீர் நிலைகளிலே கலந்து அவற்றின் ஹைடிரஜன் அயான் செறிவை PH ஆக மாற்றுகின்றன. குறிப்பிட்ட ஊடகத்தில், குறிப்பிட்ட விலங்குகள் செயல்பட ஹைடிரஜன் அயான் செறிவு காரணமாக இருப்பதால், அவற்றின் அளவும் நீரின் தன்மையும் மாறும் போது நேரடியாகவோ, மறைமுக

மாகவோ அவ்விலங்கினம் சோதனைக் குள்ளாக்கப்பட்டு முடிவில் சில இறந்தும் விடுகின்றன.

சிலவற்றின் உடலில் சில பல மாற்றங்கள் ஏற்பட்டு அவை தமது இயற்கையான குணத்தை இழந்து விடுவதற்கும் வாய்ப்புக்களாக இவை அமைந்து விடுகின்றன. இவற்றில் பாதரசம், காரீயம் முதலியவை மிகவும் நச்சுத்தன்மை கொண்ட பொருட்களாகும். உயிரினங்களில் பாதரசம், மெதில் பாதரசமாக நுண் கிருமிகளால் மாற்றப்பட்டு, மிகக் கடுமையான விளைவுகளை ஏற் படுத்துகிறது.

தூய்மையான உயிர்வாயு (Oxygen) கிடைக்காமல் நீரிலுள்ள மீன் முதலிய பல உயிரினங்கள் பாதிக்கப்பட்டு மெல்ல மெல்ல அழிகின்றன. மற்றும் தீங்கிழைக்கும் பாக்டீரியா, வைரஸ் முதலிய நுண்ணுயிரிகள் உண்டாகி, பல விரும்பத்தகாத இரசாயனப் பொருட்களை உண்டாக்கி சுற்றுப்புறத்தை நாசப்படுத்துகின்றன. மக்களின் தேவைக்குப் பயன்பட்டு வந்த நீர் நிலைகள் இத்தகைய நிகழ்ச்சிகளால் பெரிதும் பாதிக்கப் பட்டு அவர்கள் வெறுக்கும் அளவு துர்நாற்றத்தைச் சுமந்து விடுகிறது.

கரிம, கரியற்ற, நாச உயிர்க் கொல்லிகளால் ஆண்டுதோறும் பற்பல தீமை தரக்கூடிய விளைவுகள் ஏற்படுகின்றன. இவற்றைத் தெளிப் பதன் மூலம் நீரிலும், நிலத்திலும் வாழும் பல உயிரிகள் அடியோடு அழிகின்றன. இவற்றால் தாமே உணவு தயாரித்துக் கொண்டு உயிர் வாழும் தாவர மிதவை உயிரிகள் பெருத்த அளவில் சேதமடைகின்றன. இவற்றை நம்பி வாழும் விலங்கு மிதவை உயிரிகள்கூட உயிரிழக் கின்றன.

எனவே, இவைகளை உண்டு காலங்கழிக்கும் முதுகு எலும்பு அற்றவைகளுக்கும் (Ahordates) முது கெலும்பு உள்ளவைகளுக்கும் (Chordates) உணவு கிடைக்காமல் போகிறது.

ஆகவே, மனிதனுக்கு உண வாகப் பயன்படும் மீன், நண்டு, இறால் போன்ற உயிரினத்தின் தொகை குறைகிறது. இதனால் பொருளாதார வீக்கம் ஏற்படுகிறது என்பதை உணர வேண்டும்.

காளான்கொல்லிகளை உண் டாக்க பாதரசக்கூட்டுப் பொருட்கள் பயன்படுத்தப்படுவதால், இவை தடவப்பட்ட உணவுப் பொருட்களை உண்ணும் பூச்சி இனங்களும், பறவைகளும் மடிகின்றன. தீங் கிழைக்கும் உயிர்க் கொல்லிகளை அழிக்கவும், மலேரியா முதலிய நோய்களை உண்டாக்கும் கொசுக் களின் புழுப் பருவத்தை ஒழிக்கவும் டீ.டீ.டீ. (D.D.T.) முதலியவை தெளிக் கப்பட்டு, சுற்றுப்புறம் தூய்மை இழக்கிறது.

இவை தவிர, புகை, ஒலி போன்ற பல வழிகளிலும் சுற்றுப்புறம் பொலிவை இழந்து வருகிறது. பெரிய நகரங்களில் மக்கள் நெருக் கத்திற்கேற்ப எரிபொருள் வாகனங் களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அவற்றின் இயக்கத்தின் மூலம் சுற்றுப்புறம் பேரிரைச்சலை யும், புகையையும் காண்கிறது.

இவற்றால் ஆங்காங்கே மக்கள் இடையே பீதி, விபத்து போன்ற சமுதாயம் விரும்பாத சில நிகழ்ச்சிகள் நடப்பதை நாம் நம் தினசரி வாழ்விலேயே காண்கிறோம். மேலும், புறநகர்ப் பகுதிகளிலும் தொழிற் சாலைகளின் மூலம் சுற்றுப்புறம் அமைதியை இழந்து வருகிறது. சிமெண்ட் முதலிய தொழிற்சாலை களினால் அதைச் சுற்றியுள்ள தாவரங்களின் இலைகளில் அவை படிந்து இலைத் துவாரங்களை அடைத்துக் கொள்வதால், தாவரம் தன் பொலிவை இழப்பதோடு மட்டுமல்லாமல் ஆயுட்காலத்தையும் இழக்கிறது.

கடலில் அணுகுண்டுச் சோதனை முதலிய கதிர் வீச்சுக்களால் பாதிக் கப்பட்டு பல கிலோ மீட்டர் பரப் பில் உள்ள அனைத்து உயிரினங் களும் அழிகின்றன. மற்றும் விவ சாயத் துறையிலும், நீர்ப்பாசனத் துறையிலும் பயன்படுத்தப்படும் தாவரக் கொல்லிகளால் உயிரினங் களுக்குக் கேடு விளைகிறது.

பல்வேறு வகைகளில் ஏற்படும் எண்ணெய்க கசிவு அளவும் பாதிப் பும் பற்றி விளக்கும் வகையில் வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. பிரத்தியேகப் பொருளா தார மண்டலத்திலுள்ள ஆழ்கடல் கிணறுகளில் ஏற்படுகின்ற எண் ணெய்க் கசிவு, துறைமுகங்களிலிருந்து வெளியேற்றப்படும் எண்ணெய்க் கசிவு ஆகியவற்றின் மூலம் இந்தியக் கடற்கரைப் பகுதிகளிலே ஏற்படும் எண்ணெய்க் கசிவுகளை இந்த வரைபடங்கள் மூலம் நாம் சரியாக அறிய முடியும்.

கடல்மேல் மிதக்கும் தாரானது நாளடைவில் மூழ்கிவிடும். இதனால் கடல்வாழ் உயிரினங்கள் மட்டு மின்றி, அதை உண்ணுவோரும் அவதிப்படும் நிலை ஏற்பட்டுவிடக் கூடும். கனத்த கச்சா எண்ணெய்ப் பகுதிகள் புற்று நோயையே உண்டு பண்ணக்கூடியவை. 'பின்' என்ற வகை மீன்கள் மட்டுமே இப்படி ஏற்படும் எண்ணெய் அசுத்தத்தைத் தாங்கக் கூடியவை.

ஐக்கிய நாடுகள் சபையின் கட லோடிகள் அமைப்பு, இவ்வாறான எண்ணெய் அசுத்தத்தைத் தடுப்பதற் குப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

நம்மைச் சுற்றியுள்ள நில, நீர்ப் பிரதேசங்கள் இவ்வாறு பலவகைக் காரணங்களால் தூய்மையை இழக் கின்றன. இது அந்தந்த நாட்டு அரசும் உடனடியாக நடவடிக்கை எடுத்து விரைவில் தீர்வு காண வேண்டிய பிரச்சினையாக உரு வெடுத்துள்ளது. ஆகையால், சுற்றுப் புறத்தை எவ்வழியிலும் கேடாக்கா மல், தூய்மையாக வைத்துக் கொண்டு அரசின் முயற்சிகளுக்கு நாம் ஒவ் வொருவரும் ஒத்துழைக்க வேண்டும்.

**- பி.எல். ராஜேந்திரன்**





# வாழ வைக்கும் வாழை

கன்னியாகுமரி மாவட்டத்தில் அதிக அளவில் வாழை பயிரிடப்படுகிறது. வாழைக்குலை எடுக்கப்பட்ட பிறகு உபயோகமற்ற நிலையில் தள்ளப்பட்ட தண்டில் இருந்து நார் தயார் செய்யப்படுகிறது. இது வாழையின் தரத்தினைக் கணக்கில் கொண்டு ஒரு மரத்திலிருந்து 200 கிராம் முதல் 400 கிராம் வரை நல்ல நேர்த்தியான நார் கிடைக்கிறது. இந்த நார் கிலோவிற்கு ரூ.20 விலை போகிறது. இதை வீடுகளில் தயார் செய்து சங்கத்தில் வழங்குகிறார்கள். இதனால் தினமும் ஒரு பெண் உறுப்பினர் ரூ.20 முதல் 30 வரை சம்பாதிக்க வாய்ப்புள்ளது. கழிவிலிருந்து தயாரிக்கப்பட்ட கலைப் பொருட்கள் காசும் தருகிறது.

இச்சங்கம் உறுப்பினர்களிடம் கொள்முதல் செய்யும் நல்ல தரமான நாரினை வர்ணம் தீட்டிப் பற்பலவிதமான 'பை' வகைகள், டீ பிளேட்கள், மேசை விரிப்புகள் தோரணங்கள், வினோதப் பொருட்கள் ஆகியவற்றை அழகுறத் தயாரித்து விற்பனை செய்கிறது. இப்பகுதியில் படித்து வேலையில்லாத 18 வயதிற்கு மேற்பட்ட 150 பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் இச்சங்கம் தனது தயாரிப்புகளை டில்லி, கோவை, பஞ்சாப் கல்கத்தா முதலிய இடங்களிலும் கதர் அங்காடிகளிலும் விற்பனை செய்கிறது. சுற்றுலா இடங்களில் இப்பொருட்கள் பயணிகளை மிகவும் கவரக்கூடியதாக உள்ளது. இங்கு பணியாற்றும் பெண்களுக்குத் தினசரி 5 ரூபாய் முதல் 15 ரூபாய் வரை கூலி கிடைக்கிற வகையில் உறுப்பினர்களுக்கு இச்சங்கம் உதவுகிறது. தொடர்ந்து வெளிநாட்டிற்குப் பொருட்கள் அனுப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



நார் கூடுதலாகக் கிடைக்கும் ஏத்தன் வாழையின் பட்டைகளை உரித்து அப்பட்டையிலிருந்து நார் எடுத்து அதில் வர்ணம் சேர்த்து தங்களின் கை வண்ணத்தால் அழகான பைகளாகவும் டீ பிளேட்களாகவும் மாற்றுகின்றனர். இச்சங்கம் உறுப்பினர்களால் தயாரித்த பொருட்களைக் கடந்த ஆண்டில் ஏறத்தாழ மூன்றரை இலட்ச ரூபாய்க்கு விற்பனை செய்துள்ளது.

இப்பகுதியில் உள்ள ஏழைப் பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளித்துக் கூலியும் கொடுத்து, அவர்கள் வாழ்வில் ஒளியேற்றும் பணியில் சிறந்து விளங்கும் இந்தச் சங்கம் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் பாராட்டுக் கேடயத்தைக் கடந்த ஐந்து ஆண்டுகளாகத் தொடர்ந்து பெற்று வந்துள்ளது.

- நன்றி: 'கூட்டுறவு'

# தோல் பொருள் ஏற்றுமதிக்குத் தோள் கொடுப்போம்!



**சென்னை அடையாறில் உள்ள மத்திய தோல் ஆராய்ச்சி நிலையம் நம் நாட்டின் தோல் பொருள் ஏற்றுமதிக்குப் பேருதவியாகப் பல்வேறு பணிகளை ஆற்றி வருகிறது. சென்ற ஆண்டில் நமது தோல் பொருள் ஏற்றுமதி அளவு ரூ.2,030 கோடியை எட்டியிருக்கிறது என்றால், சிறுதொழில் துறையிலும், கிராமத் தொழில் துறையிலும் உள்ள தோல் தொழிலகங்களுக்கு இந்த ஆராய்ச்சி நிலையம் ஆற்றியுள்ள தொழில்நுட்ப உதவியே அதற்குக் காரணம். இந்த ஆராய்ச்சி நிலையத்தின் சாதனைகளைப் பற்றியும் எதிர்காலத் திட்டங்கள் பற்றியும் இக்கட்டுரை விளக்குகிறது.**

இந்தியாவில் இருந்து பெரும் அளவு தோல் பொருள்களை இறக்குமதி செய்து வரும் ஜெர்மனி, பெண்டாகுளோரோபினால் (பிசிபி) என்ற இரசாயனத்தைப் பயன்படுத்தி பதப்படுத்தப்பட்ட தோல் பொருள்களை இறக்குமதி செய்வதற்குச் சமீபத்தில் தடை விதித்திருக்கிறது. நம் நாட்டில் இந்த இரசாயனப் பொருளைப் பயன்படுத்தித் தான் தோல் பதனிடப்படுவதால், நமது தோல் பொருள் ஏற்றுமதி வாய்ப்புகள் கணிசமாகக் குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது. பிசிபி இரசாயனத்துக்கு மாற்றுப் பொருள் கண்டுபிடிக்கப்படாவிட்டால் உலகச் சந்தையில் இந்தியத் தோல் பொருள்களின் விற்பனை வாய்ப்பு முற்றிலுமாகச் சரிந்துவிடும். இந்தச் சவாலை எதிர்கொண்டு, மாற்று இரசாயனப் பொருளைக் கண்டறியும் முயற்சியில் சென்னை அடையாறில் உள்ள மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

**உலகில் பெரியது**

1953-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட இந்தத் தேசிய ஆய்வகம், தோல் ஆராய்ச்சி நிறுவனங்களில் உலகிலேயே மிகப் பெரியதாகும். நம் நாட்டில் தோல் பதனிடும் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் இன்னும் பழமையான உத்திகளையே பின்பற்றுகின்ற வேளையில் பல புதிய தொழில்நுட்பங்களை இந்த ஆய்வகத்தின் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துக் கூறி உதவி வருகின்றனர்.

இந்தியாவின் பாரம்பரியமான தொழில்துறைகளில் ஒன்றான தோல் தொழில்துறை சிறுதொழில், கிராமத் தொழில் துறையாகப் பரவியுள்ளது. பெருமளவில் ஏற்றுமதி செய்யும் இத்துறை 1989-90-ஆம் ஆண்டில் ரூ.2,030 கோடி மதிப்புள்ள பொருள்களை ஏற்றுமதி செய்தது.

**நவீன வசதிகள்**

விஞ்ஞான-தொழில் ஆராய்ச்சி சபையின் கீழ் செயல்படும் மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம், எல்லா வகையான அடிப்படை மற்றும் செயல்முறை ஆய்வுகளுக்குத் தேவையான அனைத்து நவீன வசதிகளும் கொண்டதாகத் திகழ்கிறது. தோல் தொழில் தொடர்பான உயிரின, பௌதிக, இரசாயன, பொறியியல் சம்பந்தப்பட்ட அறிவியல் துறைகளில் ஆய்வுகளை மேற்கொண்டு, ஏற்புடைய நுட்பங்களைக் கண்டறிந்து அவற்றைத் தோல்தொழில் துறையினருக்கு வழங்குவதே இதன் பிரதான நோக்கமாகும்.

மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனத்தின் முகப்புத் தோற்றம்.



கடந்த பல ஆண்டுகளில் பல நவீன நுட்பங்களை உருவாக்கி அவற்றை இந்த நிறுவனம் தோல் தொழில்துறைக்கு அளித்துள்ளது. தோல்தொழில், துறையில் ஈடுபடுவோருக்கும், ஏற்கெனவே, தொழிலில் உள்ளவர்களுக்கும் கல்விபோதனை, பயிற்சி போன்றவற்றையும் இந் நிறுவனம் வழங்குகிறது. தோல் தொழில் சம்பந்தப்பட்ட சந்தை ஆய்வுகள், தொழில்நுட்ப சர்வே போன்றவற்றை நடத்துவதுடன், ஆலோசனை சேவைகளையும் இது வழங்குகிறது. தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் தோல்தொழில் நுட்பங்கள் பற்றிய புள்ளி விவரங்களைத் தொகுத்தும் இது அளிக்கிறது.

**மண்டல மையங்கள்:**

மத்திய தோல் ஆராய்ச்சி நிலையத்தின் புதிய நுட்பங்களைத் தோல் தொழில்துறையினருக்கு வழங்க, பம்பாய், கல்கத்தா, ஜலந்தர், கான்பூர், ராஜ்காட் ஆகிய ஐந்து இடங்களில் மண்டல மையங்கள் உள்ளன. மேம்பாடு மற்றும் விரிவாக்கப் பணியில் ஈடுபட்டுள்ள இந்த மையங்கள், அவ்வப்பகுதிகளில் உள்ள தோல் பதனிடுவோரின் உடனடிப் பிரச்சினைகளைத் தீர்க்க உதவுகின்றன.

சென்னை ஆய்வகம் உருவாக்கும் பதனநுட்பங்களை இந்த மையங்கள் தோல் பதனிடுவோரின் தொழிலகங்களுக்கு எடுத்துச் சென்று செயல்முறை விளக்கம் அளிக்கின்றன. நம்நாட்டிலிருந்து விலைமதிப்புக் கூடிய தோல் பொருள்களை ஏற்றுமதி செய்யும் நோக்கில், புதிய நுட்பங்களை ஏற்றுக்கொண்டு அவற்றைப் பின்பற்றத் தூண்டும் முயற்சியிலும் இவை ஈடுபட்டுள்ளன. இந்த மையங்களில் உள்ள விஞ்ஞானிகள், மூலை முடுக்குகளுக்குச் சென்று, தோல் பதனிடுவோரை நேரிடையாகச் சந்தித்து அவர்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் வழங்குகிறார்கள்.



காலணி தயாரிக்கும் ஒரு நவீன இயந்திரம்.

**மாசுக் கட்டுப்பாடு:**

தோல்களைப் பதப்படுத்திச் செம்மையாக்கிப் பேணிக் காப்பதென்றால், அதில் பல இரசாயனப் பொருள்கள், கருவிகள், எந்திரங்கள் போன்றவை பயன்படுத்த வேண்டும். பதப்படுத்துவதற்குப் பயன்படும் இரசாயனங்களால் சுற்றுச்சூழல் மாசுபடுகிறது. சுற்றுச்சூழல் மாசடைவதைக் கட்டுப்படுத்த, உயிர்க்கொல்லிகள், உப்பற்ற சுத்திமுறைகள் போன்றவற்றைக் கண்டறியவும் மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் பல ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது. இந்த நிறுவனத்தில் 50-60 கிலோ திறன்கொண்ட முன்னோடி எந்திரம் ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது.

தோல் பதனிடும் தொழிலகங்களில் இருந்து வெளியாகும் கழிவு நீரைப் பரிசோதித்து அதில் உள்ள மாசுப்பொருளைக் கண்டறியும் பணியிலும் இது ஈடுபட்டுள்ளது. பதனிடுவோருக்குத் தனியாகவும், கூட்டாகவும் சுத்திகரிப்பு ஆலைகளை ஏற்படுத்தவும், சுத்திகரித்து அனுப்பும் கழிவுநீரை விவசாயப் பணிகளுக்குப் பயன்படுத்தவும், இது உதவுகிறது.

**நவீன கருவிகள்:**

தோல் பொருள்களின் தயாரிப்புக்காக, நவீன கருவிகள், நுட்பங்கள் போன்றவற்றையும் இந்நிறுவனம் உருவாக்கித் தருகிறது. தோல் தயாரிப்புக்கான இரசாயன இடுபொருள்கள், வடிவமைப்பு உத்திகள் போன்றவற்றிலும் கவனம் செலுத்தப்படுகிறது. உயர்வெளித்திறன் கொண்ட பலநோக்கு குரோமியம் அலுமினியம், அல்க்ரோட்டன் என்ற செயற்கைக் கலப்புப் பதனப் பொருள், அலுட்டான் என்ற அலுமினியம் சார்ந்த செயற்கைக் கலப்புப் பொருள் போன்றவற்றை இந்நிறுவனம் உருவாக்கியுள்ளது.

காலணிகளைத் தயாரிக்கவும், பழுது பார்க்கவும், எந்திரம் ஒன்றையும் இந்நிறுவனம் உருவாக்கியுள்ளது. வெளிநாட்டுச் சந்தைகளைக் கருத்தில்கொண்டு, தோலாடைகள், காலணிகள், தோல் பொருள்கள் போன்றவற்றுக்குப் புதிய வடிவமைப்புகளையும் இந்நிறுவனம் உருவாக்கியுள்ளது.

**தேசிய ஆய்வுகள்:**

தோல் பதன இரசாயனங்கள், தோல் பொருள்கள், தோல் தொழிலகங்களின் நவீனமயம், விரிவாக்கம் போன்றவற்றுக்கு ஆலோசனை

யுடன் நாம் செயல்படாவிட்டால் மத்தியப் பிரதேசம் போபாலில் ஏற் பட்ட மீத்தைல் ஐசோ சயனைடு என்ற விஷ வாயுக் கசிவால் பல்லாயிரக்கணக் கானோர் ஒரே நாளில் இறந்த அந்த கோரச் சம்பவத்தைப் போல், நாம் ஒவ்வொரு நாளும் செத்துக் கொண்டு இருப்பது நமக்கே தெரியவில்லை போலும்! இதுவும் ஒரு வகை 'அறியாமை' என்கிற விஷவாயுக் கசிவு என்றே சொல்லலாம்...

**நிலங்களின் வளமைக்கு வழி**

இந்த நிலவளத்தை மேம்படுத்த உடனே செயல்படாவிட்டால் நாட் டுக்கே ஒரு பெரிய ஈடுசெய்ய முடி யாத இழப்பு நேர வாய்ப்பு உள்ள தாக இந்த ஆய்வு கூறுகின்றது. நிலத்தின் முன்னேற்றத்திற்காக விவசாய அமைச்சகச் செயலாளராக இருந்த திரு. பி.பி. லோரா அவர்கள் 'நிலத்துக்கு ஒரு சாசனம்' (Lands of Record) என்ற ஆய்வறிக்கையைத் தயாரித்து, பெரும் பாராட்டைப் பெற்றார்.

ஆகவே, நிலப் பராமரிப்புக்கு அரசு முன்னைவிட அதிகப் பொறுப்பு ஏற்க முன்வரவேண்டும். இதற்காகத் தேசிய அளவில் ஓர் ஆணையத்தை அமைத்தால் (National Scheme) நன்றாக இருக்கும். இந்த நூற்றாண் டின் இறுதியில் நூறு கோடியாகப் பெருகக் கூடிய மக்கள் தொகையைக் காப்பாற்றவும், அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், நம் கைவசம் உள்ள நிலங்களின் முன்னேற்றத்தால் நல்ல விளைவு (Favourable Effect) கிடைக்குமா? என்பதுதான் நம் முன் உள்ள தனிப் பெரும் கேள்வி.

இந்த நெருக்கடியைச் சமாளிப்ப தற்கான நீண்ட காலத் திட்டங்களை (Long Period Estimates) நாம் வகுக்க முன் வரவேண்டும். ஒரு நேரத்தில் உத்தேசக் கமிஷனை அமைப்பது குறித்து 1973-இல் பிரதமர் அலு வலகத்தில் ஆணை பிறப்பிக்கப் பட்டது. அதை இப்பொழுது மேலும் வலிவும், பொலிவும் பெற நாம் அயராமல் பாடுபட வேண்டும்.

சூழ்நிலைப் பாதுகாப்புக்கு ஒரு தனித்துறையை ஏற்படுத்தினால் நல்லது. நில நிர்வாகத்தைச் சீர் திருத்த வேண்டும் என்று வலி யுறுத்தி நமது புது டெல்லி பிரதமர் அலுவலகத்திலிருந்து வெளியான ஆறாவது திட்ட அறிக்கை (Sixth Planning Report) பின்வருமாறு குறிப் பிட்டது:

நிலங்களின் வளமை குன்றி வருவதால் நாட்டுக்குப் பிரமாண்ட மான நஷ்டங்கள் ஏற்பட்டு வரு கின்றன.

நமது பொருளாதார வளர்ச் சிக்கு ஏற்பட்டுள்ள மிகப் பெரிய ஆபத்துக்களுள் ஒன்று இது. இதைத் தடுக்க உடனடியாக நடவடிக்கைகள் எடுத்தாலும் அவை பலன் தரு வதற்குப் பல ஆண்டுகள் ஆகும். ஆகவே, இவ்விவகாரத்தில் நாம் மெத்தனம் காட்டக் கூடாது.

**பூமித்தாய் பொலிவு பெற**

தற்போது விவசாய நிலங்களின் மண்ணரிப்பை விவசாயத் துறையும் (Agriculture Department) ஆயக்கட்டு வளர்ச்சி வெள்ளக் கட்டுப்பாடு, நீரடிப்பு ஆகியவற்றை நீர் வள அமைச்சகமும், காட்டு நிலங்களை வனத்துறையும் (Forest Department), சமுதாய மற்றும் ரெவின்யூ நிலங்கள், பிரதேசவாரியான வளர்ச்சி வேலைக் கிராமங்களை ஊரக வளர்ச்சி உள் ளாட்சித் துறையும் தனித்தனியே கவனித்து வருகின்றன.

ஆதலால், நிலப் பராமரிப்பை யும், நில வளத்தின் முன்னேற்றத்தை யும் ஊரக வளர்ச்சி அமைச்சகத் தினிடம் ஒப்படைத்தால் நலமாக இருக்கும் என்கிற கருத்து பரிசீலிக்கத் தக்கதாகும்.

காடு அழிப்பு, மண்ணரிப்பு, நீரடிப்புக் கால்வாய்ப் பாசன நிலங்களில் மிகக் குறைவான பலன் எடுப்பது ஆகிய பெரிய பிரச்சனை களை மட்டுமன்றி, அதிகமான இரசாயன உரங்களையும், பூச்சிக் கொல்லி மருந்துகளையும் நிலத்தில் பயன்படுத்துவதால், இரசாயன மாற்றத்தால் விளைவு (Chemical Reaction Effect) ஏற்பட்டுப் பூசாரம் குறைந்து வருகின்றது. மற்றும் விவசாய நிலங்களை அழித்து நகர விரிவாக்கத்திற்குப் (Town Extension) பயன்படுத்துதல் என்ற சில நிலை களைப் பற்றித்தெளிந்து, சிந்தித்து நல்ல முடிவோடு நம் பூமித்தாய்க்குப் பொலிவூட்டி வளம் படைக்க நாம் ஒவ்வொருவரும் சபதமெடுக்க வேண்டும்.





**வீரத்தின் விளை நிலத்தில்**

# வீரபாண்டியனுக்கு ஒரு விழா

"அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்பதில்லையே
உச்சிமீது வான் இடிந்து
வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை, அச்சமில்லை
அச்சமென்பதில்லையே"

என்று தமிழர்களின் வீர உணர்வை வெளிப்படுத்தினார் பாரதியார். இக்கவிஞர் உரைத்த வீரக்கவிதைக்கு முன்பாகவே விடுதலை உணர்வை முதலில் வித்திட்டு ஆங்கிலேயர் களின் ஆதிக்கத்தை எதிர்த்து முதல் குரல் கொடுக்கத் தன்னுயிர் நீத்த தன்னிகரில்லா வீர மறவர்தான் வீரபாண்டிய கட்டபொம்மன். அன்னாரின் நினைவாக அரசு இவ்வாண்டு மே திங்கள் 10, 11 ஆகிய இரு நாட்கள் விழா எடுத்து வீரத்தின் பெருமையை இந்த மண் ணுக்கும், வருங்காலச் சந்ததியினருக் கும் உணர்த்தியது.

ஒவ்வொரு குழந்தைக்கும் தாய், தாய்ப்பால் கொடுப்பாள். இது இயற்கையின் நியதி. ஆனால், வீரபாண்டிய கட்டபொம்மனின் தாயார் தாய்ப்பாலோடு வீரத்தையும் இளமையிலேயே ஊட்டினார். இது வரலாறு தெரிவிப்பதாகும். 3.1.1760-ஆம் ஆண்டு ஜகவீர கட்டபொம்முவின் முதல் மனைவி யினுடைய மூத்த புதல்வராய் வீர பாண்டிய கட்டபொம்மன் பிறந்தார். தனது 30 - வது வயதில் 47-வது குறுநில மன்னனாகப் பட்டமேற்றுத் திறம்பட ஆட்சி நடாத்தி வந்தார். 1798-இல் ஆலன்துரை என்பவர் கட்டபொம்மனிடம் 6 ஆண்டுகளாக வரி கேட்டு நேரடியாக வந்தார். அப்போதுதான் வீரபாண்டிய கட்டபொம்மன் வீரத்தின் விளை நிலம் ஆனான். புயலின் பூகம்பம் ஆனான். அனலின் ஆதிக்கம் ஆனான். அந்நாளில் அவன் பேசிய பேச்சு இன்னும் தமிழர் நெஞ்சங் களில் தவழ்ந்து கொண்டிருக்கிறது.

'வானம் பொழிகிறது, பூமி
விளைகிறது, இதில் மாற்றானுக்கு
ஏது வரி'

என்று சீறிப் பாய்ந்தது அந்தச் சிங்கம். இவ்வாறு விடுதலைக்கு வித்திட்ட அந்தச் சிங்கத்தைப் பகைவர்கள் நயவஞ்சகத்தில் 5.10.1799-இல் கும்பினிப் படை களின் இருப்பிடமான கயத்தாறுக்குக் கொண்டு வந்து 16.10.1799 காலை 10 மணிக்குப் பெயரளவில் விசாரணை நடத்திச் சதிகாரர்கள் வீரபாண்டிய கட்டபொம்மனைத் தூக்கிலிட்டார்கள்.

தமிழ்த்தாய் கண் கலங்கினாள். மண்ணுக்கு உயிர் கொடுத்துத் தமிழ் மானம்காத்துத் தமிழர்களின் பெரு மையை நிலை நாட்டிய தமிழ் வீரன் வீரபாண்டிய கட்டபொம்மன் தமிழ்த் தாய் மடியிலே வீழ்ந்தான். அவன் வீழ்ந்தாலும், அவனுடைய வீர வரலாறு இந்த மண்ணின் விடு தலைக்கு ஆணி வேராக அமைந்தும், இளைஞர்களின் வீர உணர்வுக்குப் பொருளாக இருந்தும், தொடர்ந்தும் நின்று நிலைத்துக் கொண்டிருக் கிறது.

அந்த வீர மைந்தனின் பெருமை யைப் போற்றும் வண்ணம் தமிழ் நாடு அரசின் சார்பில் மே 10, 11 ஆகிய இரு நாட்களில் வீரபாண்டிய கட்டபொம்மனுக்குப் பாஞ்சாலங் குறிச்சியில் விழா எடுக்கப்பட்டது.

இவ்விழா 10.5.1991 மாலை 5 மணிக்குச் செந்தில் எம்.கே.சி. கைலாசம் குழுவினரின் மங்கள இசையுடன் ஆரம்பமானது. அதன் பிறகு சிறப்பு விழா தொடங்கியது. இவ்விழாவிற்கு மாவட்டக் காவல் துறைக் கூடுதல் துணைக் கண்காணிப் பாளர் திரு. சேதுராமலிங்கம் அவர்கள் தலைமை வகித்து வீர பாண்டிய கட்டபொம்மனின் திரு வுருவப் படத்தைத் திறந்து வைத்து உரை நிகழ்த்தினார். வீமராஜா, சக்க தேவி ஆலயக் குழுப் பொரு ளாளர் திரு. கெட்டிபொம்மு ஆகி யோர் முன்னிலை வகித்தார்கள். தொடக்கத்தில் மாவட்டச் செய்தி, மக்கள் தொடர்பு அலுவலர் திரு என். தில்லை கோவிந்தன் வர வேற்றுப் பேசினார். கவிஞர் பார் வையில் கட்டபொம்மன் என்ற தலைப்பில் கவியரங்கம் கவிஞர் திரு. ஆ. முத்துராமலிங்கம் தலை மையில் நடைபெற்றது. இக்கவி யரங்கில் கவிஞர்கள் திரு. நா.புகழேந்தி, திரு. ச. கந்தசாமி, திரு. கருத்தப்பாண்டி ஆகியோர் கலந்துகொண்டனர்.

பின்னர் கருத்தரங்கம் கோவில் பட்டி கே.வே.நா. கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவர் டாக்டர் அ. சங்கரவள்ளி நாயகம் தலைமையில் நடைபெற்றது. கட்டபொம்மன் வாழ்கிறார் என்ற பொதுத் தலைப் பில் 'வீரத்தில்' என்ற பொருளில் பேராசிரியர் இராசமாணிக்கமும், 'ஈரத்தில்' என்ற பொருளில் திரு. கிருட்டிணசாமியும், 'அருளில்' என்ற பொருளில் திரு. முத்து மாலையும், 'வரலாற்றில்' என்ற பொருளில் திரு. அண்ணாதுரையும் பேசினர்.



★ இப்போது இருந்துவரும் சாதிப் பாகுபாட்டில் எனக்கு நம்பிக்கையில்லை என்பதை நான் அடிக்கடி சொல்லி வந்திருக்கிறேன். இது முன்னேற்றத்திற்குத் தடையாய் நிற்கிறது. மனிதர்களுக்கிடையில் நாம் எல்லோரும் சரிநிகர் சமம்.



காலணிகளை வடிவமைப்பதற்கு உதவும் கணிப்பொறி.

சேவைகளையும் இந்நிறுவனம் வழங்கி வருகிறது. தோல் பொருள்களுக்குச் சர்வதேசச் சந்தையில் உள்ள தேவை பற்றிய விவரங்களைத் தொகுத்தும் இந்நிறுவனம் வழங்குகிறது. நம்நாட்டில் கிடைக்கும் பதப்படுத்தப்படாத கச்சா தோல்கள் மற்றும் தோல் தொழிலுக்குத் தேவையான கச்சாப் பொருள்கள் கிடைப்பது பற்றிய ஓர் ஆய்வையும், நாட்டில் உள்ள தோல் தொழில் நிறுவனங்களின் உற்பத்தித் திறன் மற்றும் அவற்றை நவீனப்படுத்துவதற்கான வாய்ப்புகள் பற்றிய ஓர் ஆய்வையும் இந்நிறுவனம் சமீபத்தில் செய்து முடித்திருக்கின்றது.

**கணிப்பொறி உபயோகம்:**

தோல் தயாரிப்புகளின் வடிவமைப்பிற்காக நுண் மின்னணு, கணிப்பொறி போன்றவற்றை வருங்காலத்தில் பயன்படுத்துவதை ஊக்குவிக்கின்ற வகையில் புதிய ஆய்வுகளை இந்நிறுவனம் மேற்கொள்கிறது. உற்பத்திச் செலவைக் குறைக்கவும், தோல் பொருள் நுட்பத்தை மேம்படுத்தவும், கழிவுநீர் சுத்திகரிப்பை மேம்படுத்தவும் பல ஆய்வுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

**வெளிநாட்டினருக்குப் பயிற்சி:**

தோல் தொழில் நுட்பம் பற்றிய கல்வியறிவைப் போதிக்கவும், பயிற்சி அளிக்கவும் இந்நிறுவனம் முக்கியத்துவம் அளித்து வருகிறது. அண்ணா பல்கலைக் கழகம் மற்றும் தொழிற்சாலை அமைப்புகளுடன் இணைந்து இந்தப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இதுவரை 600-க்கும் அதிகமான மாணவர்கள் இந்நிறுவனத்தில் இருந்து தோல் தொழில் நுட்பத்தில் பட்டம் பெற்றுள்ளனர். இது தவிர ஜப்பான், தென்கொரியா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், நைஜீரியா, சூடான் ஆகிய நாடுகளில் இருந்து 150-க்கும் அதிகமான மாணவர்கள் இங்கே பயிற்சி பெற்றுள்ளனர்.

இந்த நிறுவனத்தின் ஆலோசனைப் பணிகள் நம்நாட்டுடன் நின்றுவிடவில்லை. உணவு-வேளாண்மை நிறுவனம், சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு, காமன் வெல்த் போன்ற பன்னாட்டு அமைப்புகளுக்கும் இது ஆலோசனைகளை வழங்கி வருகிறது. நைஜீரியா, சூடான், சோமாலியா, எத்தியோப்பியா, ஜோர்டான் போன்ற நாடுகளும் இந்த நிறுவனத்தில் இருந்து பயன் பெற்றுள்ளன.

சமீப காலத்தில் தோல் பொருள் ஏற்றுமதியில் நாம் வியத்தகு சாதனைகளைப் படைத்துள்ளோம். எனினும், உலகச் சந்தையில் இந்தியத் தோல் பொருள்களின் பங்கு மிகக் குறைவாகவே இருக்கிறது. எனவே, நமது ஏற்றுமதியை இன்னும் உயர்த்தத் தேவையான கட்டமைப்பு, தொழில் நுட்பம் போன்றவற்றை ஏற்படுத்தித் தரும் அரிய பணியில் தோள் கொடுக்கும் வகையில் மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் தொடர்ந்து உழைத்து வருகிறது.

— பத்திரிகைத் தகவல் அலுவலகம்.

★ இன்றைய குழந்தைகளே நாளைய இந்தியாவை அமைப்பவர்கள் என்பதை எப்பொழுதும் நான் உணருகிறேன். குழந்தைகளை வளர்க்கும் முறையைப் பொறுத்தே ஒரு நாட்டின் எதிர் காலம் உருவாகிறது.

— ஜவகர்லால் நேரு

● பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு அளவுக்கு மீறிய நாணயமும், கட்டுப்பாடும், உறுதியும், தியாக உணர்வும் வேண்டும்.

—தந்தை பெரியார்

ஒருபொழுதும் துன்பமாக மாறாத பொருள் ஒன்று உண்டு. நாம் செய்யும் நல்ல செயலே அது.

—மேட்டர் லிங்

எவன் பிறரது நற்செயல்களைக் கண்டு மகிழ்ச்சி அடைவதில்லையோ, அவனால் நற்செயல் எதுவும் செய்ய இயலாது.

—மார்க்ஸ் அந்தோணி



# நில வளத்தின் மேம்பாடு



எஸ்.ஜி. சுந்தவேலன்

''பூமித்தாய் பொலிவுற வேண்டுமானால் வளமான நிலப்பரப்பு மிகமிக முக்கியமானதாகும்!''

உயிரினங்கள் எல்லாம் வாழ்வதற்கு நிலம்தான் ஆதாரமாக இருக்கிறது. அதனால், நிலத்தின் சாரம் குறையாமலும், உற்பத்தித்திறன் அதிகரிக்கும்படியும், விழிப்புடன் கவனித்துக் கொள்வது மிகவும் முக்கியம்.

அதிலும், வேளாண்மையை முக்கியத் தொழிலாகக் கொண்டதும், வறுமையும், மக்கள் தொகையும் மிகுதியாக உள்ளதுமான நம்முடைய இந்தியத் திருநாட்டுக்கு இது - நாம் நாள்தோறும் உடுத்திக் கொள்ளும் ஆடை அணிகலன்களைப் போல் மிக அவசியம்.

இப்படி நிலப்பராமரிப்பு இவ்வளவு முக்கியமானதாக இருக்கும் போது அதில் நாம் ஏன் போதிய கவனம் செலுத்துவதில்லை?... அதில் ஏன் நம்மை இன்னும் ஈடுபடுத்திக் கொள்ள முன் வரவில்லை?...

மொத்த நிலப்பரப்பில் குறைந்த பட்சம் மூன்றில் இருபங்கு தாவர வளர்ச்சிக்கு ஆற்றல் இல்லாததாகவும், நமது அரசாங்கக் கணக்குப்படி பாதி நிலப்பரப்பு பொட்டலாகவும், சீரழிந்திருப்பதையும் எவ்வாறு பொறுத்துக் கொண்டு அனுமதித்து வருகிறோம்?

அடிக்கடி வெள்ளத்தாலும் வறட்சியாலும் சேதம் ஏற்படுத்துவதையும், நீர்த்தேக்கங்களில் சீக்கிரமே வண்டல் படிந்து மேட்டுப் பகுதியாக விஸ்வரூபம் எடுக்க, நிலத்தடி நீர்வளம் வற்றும்படியும் ஏன் அனுமதித்துக் கொண்டு இருக்கின்றோம்?

வளமான பாசன நிலப்பகுதிகளில் ஆயக்கட்டு மேம்பாட்டையும், நீரடிப்பையும் ஏன் இப்படி நாம் அலட்சியம் செய்கிறோம்?

சுருங்கக் கூறினால் 'சூழ்நிலை நாசம்' என்கின்ற எரிகின்ற கொல்லியில் நாம் ஏன் இன்னும் சோம்பேறித்தனம் என்கின்ற அந்த எண்ணெயை ஊற்ற வேண்டும்?... நம்முடைய திட்டத் தயாரிப்பாளர்கள் (Plan Constructots) மத்தியில் ஆதார வளம் நல்ல ஓர் அம்சமாகத் திகழ்ந்தால்தானே நாம் திருப்தி அடையலாம்.

**விஷவாயுவில் நாம்**

இந்த வகை ஆதார வளத்தையே நம் நாட்டின் நில நிர்வாகம் பற்றிய வரலாறு (Land Management History) கோடிட்டுக் காட்டுகின்றது. அவ்வப்போது தெரிவிக்கப்பட்ட பரிந்துரைகளும், உயர் நிலையில் செய்யப்பட்ட ஆய்வு முடிவுகளும் அமல் நடத்தப்பட சில முட்டுக்கற்கள் தோன்றியுள்ளன. இதை நீக்கி நிலச்சீரழிவுக்கு எதிராக உறுதி

## தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம்

ஒன்பது வகையான தொழில்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்து அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்று தமிழகத் தொழிலாளர் துறை ஆணையர் திரு. இரா. வரதராஜுலு 4.5.91 அன்று மதுரையில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

குறைந்தபட்ச ஊதிய நிர்ணய ஆலோசனைக் குழு மேற்குறிப்பிட்ட பரிந்துரைகளை அரசுக்கு அளித்துள்ளது என்றும், தீப்பெட்டி, பட்டாசுத் தொழில், திரையரங்குகள், உப்புத் தயாரிப்புத் தொழில் உள்ளிட்ட ஒன்பது தொழில்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.



பாஞ்சாலங்குறிச்சி கோட்டை

முடிவில் உதவி மக்கள் தொடர்பு அலுவலர் திரு. கு. தானப்பா நன்றி கூறினார். பின்னர் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக மெல்லிசை விருந்தும், இதன் பிறகு வீரபாண்டிய கட்டபொம்மன் நாடகப் பகுதி ஒன்றும் நடைபெற்றது. இவ்விழாவிற்குட் பல்வேறு ஊர்களில் இருந்து கட்டபொம்மன் ஜோதி கொண்டுவரப் பட்டது. முதல் நாள் விழாவில் பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

11.5.1991 காலை 6 மணிக்கு வீர விளையாட்டின் அடையாளமாக ரேக்ளா போட்டி நடைபெற்றது. மாலை 6 மணிக்கு இரண்டாவது நாள் நிகழ்ச்சி தொடங்கியது. இவ்விழாவிற்குத் திருநெல்வேலி சரகக் காவல்துறை துணைத்தலைவர் திரு. ஜி. கணேசன் அவர்கள் தலைமை வகித்து உரை நிகழ்த்தினார்.

சிதம்பரனார் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ். அன்சர் அலி அவர்கள் நலிந்தோர்க்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி விழா நிறைவுரை ஆற்றினார்.

இவ்விழாவிற்குத் திரு. இராஜ கோபாலசாமி, திரு. சுப்பிரமணியக் கட்டபொம்மன், தூத்துக்குடி காமராசர் கல்லூரி முதல்வர் திரு. எஸ். செல்வராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். மாவட்ட வருவாய் அலுவலர் திரு. ஆர் சவுந்தர ராஜன், கவிஞர் தமிழ்ப்பித்தன், கோவில்பட்டி கோட்ட வளர்ச்சி அலுவலர் திரு. பொ. ஜெயபால கிருஷ்ணன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். இறுதியாகக் கட்டபொம்மன் பண்பாட்டுக் கழகத் தலைவர் திரு. எம். பரதப்பாண்டியன் நன்றி கூறினார்.

பின்னர், தூத்துக்குடி துறைமுகம் சக்தி நடனக் குழுவினரின் இன்னிசை நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது. வீரபாண்டிய கட்டபொம்மன் நாடகப் பகுதி-2 நடைபெற்றது. இரண்டாவது நாள் விழாவிலும் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

வீரத்தின் விளைநிலமான பாஞ்சாலங்குறிச்சியில் வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு விழா எடுத்து அவர்தம் பெருமையை உலகுக்கு உணர்த்துகின்ற அரசைப் பொது மக்கள் பெரிதும் பாராட்டினர். பல்வேறு இடங்களில் இருந்து பல்வேறு தரப்பட்ட மக்கள் கலந்து கொண்டு, வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு நினைவுகூர்ந்ததை விழாவில் காண முடிந்தது.



**• உலகிலேயே பால் உற்பத்தியில் முதலிடம் வகிப்பது ரஷ்யா; இரண்டாவது இடம் வகிப்பது அமெரிக்கா; மூன்றாவது இடம் வகிப்பது நமது இந்தியா. ஆண்டொன்றிற்கு, இந்தியாவில் 50 மில்லியன் டன் பால் உற்பத்தியாகிறது!**

**• சேலம் மாவட்டத்தில் உள்ள மஞ்சினியில் இருக்கும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கமே தமிழகத்தில் முற்றிலும் பெண்களால் நடத்தப்படுவதாகும். இச்சங்கம் 1987-88-இல் ரூ.37,389/-ம், 1988-89-இல் ரூ.97,581/-ம் உறுப்பினர்களுக்குக் கொள்முதல் ஊக்கத்தொகை வழங்கியதோடு ஈவுத் தொகையும் வழங்கியது.**

### சோவியத் யூனியனில்

# தமிழ் ஆய்வு

**நா. முகம்மது செரீபு**

***தமிழ் மட்டுமே தெரிந்த ஒருவர், சோவியத் யூனியனுக்குச் சென்றால் எந்தச் சங்கடமும் இல்லாமல் உலா வர முடியும் என்கிறார் கட்டுரையாசிரியர்!***

**அ**ன்று தொட்டு இன்று வரை, இந்தியாவின் செல்வச் செழுமை அந்நிய நாட்டவருக்குக் கனவாய், கானலாய் அவ்வப்பொழுது ஆசை மூட்டி வந்ததென்னவோ உண்மை. அந்த வகையில் இன்றைக்கு ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு, 'அஃபனாசி நிகிதின்' என்ற ருஷ்ய வணிகர் ஒருவர் நெஞ்சில் ஆசைகளைச் சுமந்தவாறு இந்தியாவுக்கு வந்து போனார். "மூன்று கடல்களுக்கு அப்பால்" என்ற அவரது குறிப்பே இந்தியாவைப் பற்றி ருஷ்ய மொழியில் எழுதப்பட்ட முதலாவது படைப்பாகும்.

தற்போது கலினின் என்றழைக்கப்படும் நகரைச் சேர்ந்த அவர் காஸ்பியன் கடல்-கருங்கடல்-அரபிக் கடல் ஆகிய மூன்றையும் கடந்து துணிச்சலான பயணத்தை 1466-க்கும் 1472-க்கும் இடையே மேற்கொண்டார். அவரது கையெழுத்துப் பிரதி 18-ஆம் நூற்றண்டில் கண்டுபிடிக்கப்பட்டபோது, ஓர் அரிய கருவூலமாகவே கருதப்பட்டது.

அந்த வணிகர் இந்தியாவில் அலையாத இடமில்லை, பார்க்காத பொருளில்லை. கி.பி. 15-ஆம் நூற்றாண்டு வாக்கில் பீடார், விஜய நகர் போன்ற மண்டலங்களைச் சார்ந்த மக்களது வாழ்க்கை முறையை மனங்குளிரக் கண்டு குறிப்பு எழுதினார். அதுவே அம்மக்களுக்கு ஆர்வத்தைத் தூண்டுவதாக அமைந்தது.

தென்னிந்தியாவில் மக்களைப் பற்றி அறிந்து கொள்ளும் ஆர்வத்தால் உந்தப்பட்டு இந்தியாவுக்கும் இலங்கைக்கும் 1924 வாக்கில் அலெக்சாந்தர் மேவர்த் என்பவர் பயணம் வந்து போனார். அவர்தான் தமிழ் மொழியை சோவியத் மக்களுக்கு அறிமுகம் செய்த மூலவர். 'தமிழ் மொழி இலக்கணம்' என்ற நூலை 1926-இல் லெனின்கிராடு நகரிலே வெளியிட்டார். மேலும் 1928-இல் 'திராவிட மொழிகளில் ஒலிக் குறிப்புகளுக்கிடையேயான நிறுத்தங்களின் வரலாறு' என்ற இலக்கண நூலை எழுதினார். இதன் படிகள் இன்றளவும் மாஸ்கோ லெனின் நூலகத்தில் உள்ளன.

1950-இன் கடைசி வாக்கில் தென்னிந்திய மொழிகள் பற்றித் தீவிரமான ஆய்வினை சோவியத் யூனியன் மேற்கொண்டது. அதில் தமிழ்மொழி ஆய்வுகளே முதலிடம் பெற்றன. அடுத்து, லெனின்கிராடு அரசு பல்கலைக் கழகத்தில் இந்திய மொழிகளுக்கான பீடம் ஏற்படுத்தப் பட்டது. அங்கு பணியாற்றிய ரூதின் என்ற தமிழ் ஆய்வாளர் 38,000 சொற்கள் கொண்ட தமிழ்-ருஷ்ய அகராதியைத் தயாரித்தார். "தமிழ் மொழியின் சொல் வடிவமைப்பு" என்ற நூலையும் எழுதினார்.

பின்னர் மாஸ்கோவிலும் அத்தகைய ஆராய்ச்சி மையம் அமைக்கப்பட்டது. இந்த அக்கறை இடைவிடாது வளர்ந்து வந்திருக்கிறது. மொத்தத்தில் பிற இந்திய மொழிகளின்பால் ஏற்பட்டதைவிட தமிழ் மொழியின்பால் அவர்களுக்கு ஏற்பட்ட தாக்கம் அதிகமானது. நாம் அது குறித்த சில விவரங்களைக் காணலாம்.

அறுபதுகளுக்குப் பிறகு, தொல் தமிழ்ப் பேரிலக்கிய நூல்களும் நவீன படைப்புகளும் ருஷ்யனில் பெருமளவில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன. இவற்றில் திருக்குறள், சிலப்பதிகாரம், சங்ககாலப் பாடல்கள், பாரதி கவிதைகள், மற்றும் புதுமைப் பித்தன், கல்கி, அகிலன், ஜெயகாந்தன், ராஜம் கிருஷ்ணன் ஆகியோரது படைப்புகளும் அடங்கும். இவைதவிர தத்துவ, இறைவணக்கச் செய்யுட் கோவை, தமிழ்ப் புராணங்களின் அறிமுகம் ஆகியனவும் நடந்தன. இந்தப் பணி நிறைவேற உறுதுணையாக இருந்தது "சோவியத் என்ஸைக்ளோ பீடியா" பதிப்பகம் (மாஸ்கோ) 1965-இல் சுமார் 24,000 வார்த்தைகளுடன் வெளியிட்ட ருஷ்ய-தமிழ் அகராதியே ஆகும்.

உலகின் பழம்பெரும் பல்கலைக் கழகங்களில் ஒன்றான மாஸ்கோ பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை இருந்து வருகிறது. டாக்டர் துபியான்ஸ்கி, டாக்டர் பிச்சிகினா போன்ற இந்தியவியலாளர்கள் அங்கே பேராசிரியர்களாகப் பணி புரிந்து வருகின்றனர். அங்கே தேர்ச்சி பெறும் மாணவர்கள் மாஸ்கோவில் தமிழ் நூல்களை வெளியிட்டுவரும் பதிப்பகங்களிலும் மாஸ்கோ வானொலியின் தமிழ்ப் பிரிவிலும் டாஸ் செய்தி நிறுவனத்திலும் பணியாற்றுகின்றனர். தமிழ் மட்டுமே அறிந்த ஒருவர் அங்கு சென்றால் தமிழ்கற்ற ருஷ்யரின் உதவியுடன் உலாவரலாம் உவகையோடு.

தமிழகத்தையும் இலங்கையையும் சேர்ந்த தமிழ் எழுத்தாளர் படைப்புகள் இன்று ருஷ்யனில் மொழி பெயர்க்கப்பட்டு வருவது தமிழ் இலக்கியத்தில் ருஷ்யர்கள் காட்டும் அளவற்ற அக்கறையைக் காட்டுவதாக உள்ளது.



**• பெண்கள் விழிப்படைந்தால் குடும்பம் முன்னேறும்; கிராமங்கள் முன்னேறும்; தேசமே முன்னேறும்.**

**- காமராசர்**



நீலகிரியில்

# புதிய நுண்புனல் மின்திட்டம்

தமிழகத்தில் தயாராகும் மின் சாரத்தில் பெரும் பங்கு நீலகிரி மாவட்டத்தில்தான் உற்பத்தி செய்யப் படுகின்றது!

குந்தா, பைக்காரா, சிங்காரா, மாயார், அவலாஞ்சி போன்ற நிலையங்களிலிருந்து ஏற்கெனவே மின்சாரம் தயாரிக்கப்பட்டு வரு கிறது. தற்போது உதகமண்டலம் வட்டாரத்தைச் சார்ந்த மரவகண்டி என்னுமிடத்தில் மீண்டுமொரு நுண்புனல் மின்திட்டகட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**மரவகண்டி நுண் புனல் மின்திட்டம்:**

இம்மின்திட்டம் தற்போது மரவ கண்டி அணையின் மதகு வழியாகத் திறந்து விடப்படும் தண்ணீரைக் கொண்டு மின்சாரம் தயாரிக்கும் திட்டமாகும். இத்திட்டத்தின்படி மரவகண்டி அணையின் கீழ்ப்பகுதி யில் அமையவிருக்கும் மின்நிலையத் திலிருந்து மரவகண்டி அணையின் முழு அளவு நீர்த்தேக்க நிலையி லிருந்து 7.47 மீட்டர் உயரம் வரை தேங்கியிருக்கும் தண்ணீரைப் பயன் படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்நீர்த் தேக்கத்திலிருந்து வினாடிக்கு 13.02 க.மீ. அளவு (460 க.அடி) தண்ணீரை நீர் வழிக்குழாய் மூல மாக மின்உற்பத்தி செய்வதற்குக் கொண்டு செல்லப்படுகிறது.

**திட்ட இருப்பிடம்:**

இந்த மின்நிலையம் உதகமண்ட லத்திலிருந்து கல்லட்டி வழியாக 30 கி.மீ. தொலைவிலும், கூடலூர் வழியாக 71 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. உதகமண்டலம் தாலுக்காவில் மசினகுடியில் 11°30' லிருந்து 11°35' தீர்க்கரேகைக்கும் 76°35-லிருந்து 76°40' வரை அச்ச ரேகைகளுக்கும் இடையில் அமைந் துள்ளது.

**நிதி உதவி:**

இத்திட்டமானது இந்திய அரசால் நீலகிரி மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அங்கீகாரம் அளிக்கப் பட்டு நிதி உதவி வழங்கப்பட்டுள் ளது. தமிழ்நாடு அரசும் இதற்கான அரசாணை எண்.94, தேதி 27.5.84-இல் அனுமதி அளித் துள்ளது.

**நீர் வளம்:**

மரவகண்டி அணை, அவரி ஹல்லா நதியின் 20.72 சதுர கி.மீ தனிப்பட்ட நீர்ப்பிடிப்புப் பகுதியை யும் பைக்காரா, முக்குர்த்தி, சாண்டி நல்லா கிளை நதிகளில் உள்ள 174.94 ச.கி.மீ. நீர்ப்பிடிப்புப் பகுதியையும் கொண்டதாகும்.

இத்திட்டத்தின் நீர்வழிக்குழாய் நீளம் 32 மீட்டர் ஆகும். இது 1950 மில்லி மீட்டர் விட்டம் கொண்டதாகும். இம்மின்நிலையத் தின் இயந்திரத்திறன் 14,750 கிலோ வாட் ஆகும். ஆண்டுக்கு 26.60 இலட்சம் யூனிட்டுகள் மின் உற்பத்தி திறன் ஆகும்.

**கட்டுமானப் பணிகள்:**

இம்மின்நிலையக் கட்டுமானப் பணிகள் தற்போது துரிதமாக நடை பெற்று வருகின்றன. அவைகளுள் முக்கியமானவை.

1. தரைநிலை மின்நிலையம் கட்டுதல்
2. நீர்வழிக் குழாய் நிறுவுதல்
3. நீரகல் வாய்க்கால் அமைத்தல்
4. மின்மாற்றி நிலையம் அமைத்தல்

**திட்ட விபரங்கள்:**

இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ.143 இலட்சங்களாகும்.

இத்திட்டப் பணிகள் முடி வடைந்து மின்சாரம் உற்பத்தி துவங் கினால் தமிழ்நாட்டின் மின்சாரப் பற்றாக்குறையைப் போக்க இத்திட்டம் துணை புரியும். இத்திட்டத்தின் மூலம் மின்உற்பத்தி அநேகமாக 1992-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் துவங்கலாம் என எதிர் பார்க்கப்படுகிறது.

இத்திட்டம் நீலகிரி மாவட்டத் திற்கு மேலும் பெருமை தேடித்தரும் திட்டமாக அமையும் என்பதில் ஐய மில்லை. ●

• ஒவ்வொரு [illegible] துணிச்சல் [illegible] மட்டுமல்ல; [illegible] [illegible] வேண்டும்.

—பேரறிஞர் பிளாட்டோ

## புத்தகசாலை...



வீட்டிற்கோர் புத்தகசாலை அமைத்துக் கொண்டால், நாட்டுக்கு நல்ல நிலை ஏற்படும்.

—அறிஞர் அண்ணா



ஈவு அரசிற்குச் செலுத்த வேண்டும். 1990-91 முடிய 160 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ.52,67,600 அரசு பங்கு மூல தனம் பெற்று வழங்கப்பட்டுள்ளது.

நெசவாளர் கூட்டுறவுச் சங் கங்கள் தங்களது உறுப்பினர்களுக் குத் தடங்கலின்றித் தொடர்ந்து வேலைவாய்ப்பு நல்க வேண்டி சங் கத்தின் நிதி ஆதாரங்களைக் கொண்டு குறைந்த வட்டியில் நடைமுறை மூல தனம் தேசிய விவசாயம் மற்றும் கிராமக் கூட்டுறவு மேம்பாட்டு வங் கியில் (நபார்டு) பெரியார் மத்தியக் கூட்டுறவு வங்கி மூலம் பெற்று வழங்கப்படுகின்றது.

1990-91-ஆம் ஆண்டிற்கு நடை முறை மூலதனமாகிய ரூ.1,624 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. அனுமதிக்கப்படும் நடைமுறை மூல தனத்திற்கு விதிக்கப்படும் வட்டி 10.5 சதவிகிதத்தில் 7.5 சதவிகிதம் நெசவாளர் கூட்டுறவுச் சங்கமும் மீதி சதவிகிதத்தை மத்திய மாநில அரசும் சரிசமமாகப் பகிர்ந்து கொண்டு மானியமாகப் பெற்று வழங்கப்பட்டு வருகின்றது. இத் திட்டத்தின்கீழ் 1990-91-ஆம் ஆண்டில் ரூ.31,95,377 வட்டி மானியமாகப் பெரியார் கூட்டுறவு வங்கி, ஈரோடுக்குப் பெற்று வழங் கப்பட்டுள்ளது.

**பெண்கள் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்**

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் தறிகளில்லாத 100 பெண்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பும், நியாயமான கூலியும் பெற்று வழங்கி, அவர் களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த் திட வேண்டிய ரூ.10 இலட்சம் மானிய உதவியுடன் பெண்களுக் காக மட்டும் ஒரு தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அவல் பூந்துறையில் அமைக்கப்பட்டுத் தொழிற்கூடக் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் காட்சி மற்றும் விற்பனை அரங்கு கட்ட வேண்டி ஒரு இலட்சம் ரூபாய் வீதம், நசிய னூர் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், விஜயமங்கலம் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் மற்றும் கவுந்தப்பாடி நெச வாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகிய மூன்று சங்கங்களுக்கு ரூ.3 இலட் சமும் பெற்று வழங்கியுள்ளது. காட்சி மற்றும் விற்பனை அரங்கு கட்டுமானப் பணி முடிக்கப்பட்டு, காட்சிக் கூடங்கள் விரைவில் துவக் கப்படவுள்ளன.

இங்கு செயல்பட்டு வரும் தமிழ் நாடு கூட்டுறவுப் பதனிடும் ஆலை, சாயச்சாலை இல்லாத நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சாய நூல் தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தி செய்யும் பல ரகத் துணி களைச் சிறந்த முறையில் பதனிட்டும் 'பிரிண்ட்' செய்தும் வழங்கி வரு கின்றது.

ஒவ்வொரு நெசவாளர் உறுப் பினரும் தங்களின் வாழ்க்கைத் தரத் தினை உயர்த்திக்கொள்ள அரசு அனைத்து வழிகளிலும் உதவிக்கரம் நீட்டி அவர்களின் நிலையான வாழ்க் கைக்கு உத்தரவாதம் வழங்கி வரு கின்றது. ●





## பார்த்தோம் படித்தோம்

16.5.'91 இதழில் "அயல் நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத் தின் சீரிய பணிகள்" என்ற தலைப் பில் வெளியிடப்பட்ட தகவல்கள் மிகவும் பயனுள்ளதாக இருந்தது. அரசுத் துறையில் இம்மாதிரியான நிறுவனம் செயல்படுவது அதுவும் பாராட்டும் வகையில் செயல் படுவது, தரகர்களிடம் ஏமாறும் நபர்களுக்கு இது ஒரு நல்ல தக வலாகும்.

—கே.வீராசாமி
அம்மாப்பேட்டை,
(தெ.ஆ.மாவட்டம்)

இந்தியாவில் மக்கள் தொகை 84 கோடி; தேர்தல் முக்கியச் செய்திகள், அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்தின் சீரிய பணிகள் - ஆகியவை மிகவும் பயனுள்ளதாக இருந்தன.

—ஏ.கந்தசாமி
திருப்பூர், (கோவை மாவட்டம்)

'இலக்கிய விருந்து' பகுதியில் தங்கவயல் லோகிதாசன் எழுதிய 'தமிழகமும்-ரோமாபுரியும்' என்ற கட்டுரை அக்காலத் தமிழர்கள் ரோமாபுரியுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்ததைப் பல்வேறு இலக்கியங்கள் வழி கூறியிருப்பது பண்டைத் தமிழர்கள் திரைகடலோடி திரவியம் தேடியதை அறிய முடிந்தது.

—ந.சுந்தரபுத்தன்,
கண்கொடுத்த வனிதம்.
(தஞ்சை மாவட்டம்)

மகளிர் மேம்பாடு, படமும் செய்தியும் மற்றும் கவிஞர் பாரதி தாசன் பற்றியும், வனவிலங்குகள் பற்றியும் இந்த இதழில் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன.

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் சீரிய பணிகள், மக்கள் தொகை மதிப்பீடு, நூல் நயம், நுகர்வோர் விழிப்புணர்வு போன்றவையும் பயனுள்ள பகுதிகள்.

—ஏ.என்.சிதம்பரம்
விராச்சிலை.
(புதுக்கோட்டை மாவட்டம்)



**பழங்காலத்திய நாண யங்கள் கண்டெடுக்கப்பட்டுப் பாதுகாக்கப்படுவது பற்றி விளக்கும் கட்டுரை இது!**

# சேரர்-பல்லவர் காசுகள் கண்டுபிடிப்பு

திருச்சி மாவட்டம், கரூரில் சேரர் மற்றும் பல்லவர் காலக் காசுகளைத் தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத்துறையினர் கண்டு பிடித்துள்ளனர்.

சேரர் காசுகளுள் ஒன்று, ஏற் கெனவே இத்துறையால் கண்டறியப் பட்ட "கொல்லிப்புறை" காசு வகையைச் சார்ந்தது. இதைத் தவிர இரண்டு, பிற்காலச் சேரர் காசுகளும் கிடைத்துள்ளன. அனைத்தும் செப்புக் காசுகள் ஆகும். திரு. அளக்குடி ஆறுமுக சீத்தாராமன் அவர்களால் கண்டறியப் பெற்ற வகையும், இதே போன்றதாகும்.

தற்போது கிடைத்துள்ள காசில் 'கொல ஈ' என்ற பகுதி மட்டுமே நன்றாகத் தெரிகிறது. மீதமுள்ள எழுத்துக்கள் சிதைந்த நிலையில் உள்ளன. மன்னனின் உருவம் மிக நன்றாகவும் பின்புறமுள்ள சின்னங் களில் மலை, வில், ஆறு, மீன்கள் ஆகியவையும் தெளிவாகத் தெரி கின்றன. இக்காசின் காலம் கி.பி. முதலாம் நூற்றாண்டாகும். பிற் காலத்திய சேர மன்னர் காசுகளில் வில், அம்பு, ஒருபுறமும்; இடப்புறம் சக்கரமும், வலப்புறம் சங்கு அல்லது சுத்தியும் விளங்க, நடுவில் வீற்றி ருக்கும் சிம்மம் மறுபுறமுமாக விளங்கு கின்றன. சிம்மத்தில் தலைக்கு மேலே குடை இருக்கின்றது.

வெள்ளியால் ஆன பல்லவர் காசு ஒன்றும் இங்கே கிடைத் துள்ளது. ஒரு பக்கத்தில் 'வபு' என்ற எழுத்துக்கள் எழுதப்பட்டும், நிற்கும் நிலையில் உள்ள காளை இடப்புறம் திரும்பியும் இதில் காணப்படுகின் றன. மற்றொரு பக்கத்தில் சங்கு அல்லது படுத்திருக்கும் காளையும், குத்து விளக்கும் உள்ளன. இவ்வகைக் காசு ஒன்று திருக்கோயிலூரில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆனால் அது செம்பால் ஆனது. ஆதலால், இவ்வெள்ளிக் காசு குறிப்பிடத் தக்கதாகிறது. இது நந்தி வர்மப் பல்லவன் காலத்தில் வெளியிடப் பட்டிருக்கலாம் என்று கருதப்படு கிறது.

இக்காசுகளைக் கரூர் அருங்காட் சியகக் காப்பாட்சியர் திரு.அர்ச்சுனன், கரூரைச் சேர்ந்த திரு. கோபால், திரு. பாலுச்சாமி ஆகியோரிட மிருந்து சேகரித்துள்ளார்.

- நடன. காசிநாதன்
இயக்குநர்
தொல்பொருள் ஆய்வுத்துறை



• அன்னை தெரசா பல்கலைக் கழகத்தின் கையேட்டில்; பெண் கல்வி வளர்ச்சிபெற்று வருவதுபற்றி வெளியிடப்பட்டுள்ள ஒரு குறிப்பு பின்வருமாறு:

1931-இல் 2.93 சதவிகிதம்
1941-இல் 7.3 சதவிகிதம்
1951-இல் 7.9 சதவிகிதம்
1961-இல் 12.95 சதவிகிதம்
1971-இல் 18.69 சதவிகிதம்
1981-இல் 24.88 சதவிகிதம்
1991-இல் 39.42 சதவிகிதம்!

170210.

## பெரியார் மாவட்டம்



# நெசவாளர் வாழ்வில் ஒளியேற்ற...

பெரியார் மாவட்டத்தில் 158 முக்கிய நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும், 15 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும், 5 விசைத்தறி முக்கிய நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும், 2 விசைத் தறி தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் மற்றும் ஒரு கூட்டுறவு தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டமும் ஆக 181 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

இவை தவிர ஒரு கூட்டுறவு நூற்பாலையும், ஒரு கூட்டுறவுத் துணி நூல் பதனிடும் ஆலையும் இங்குள்ளன. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர் கூட்டமைப்பு ஒன்றும் இயங்கி வருகிறது. இம்மாவட்டத்தில் மொத்தம் 52,527 கைத்தறிகள் உள்ளன. இதில் 35,563 தறிகள், கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. இவைகளில் 34,083 தறிகள் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலும் 1,480 தறிகள் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலும் உள்ளன.

இச்சரகத்தில் உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் துண்டுகள், பெட்சீட், ஜமுக்காளம், காடா, திரைச்சீலைகள், பாலிஸ்டர், சர்ட்டிங்க்ஸ் சூட்டிங்ஸ் மற்றும் ஜனதா ரகங்களும் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. அனைத்து நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலும் மாதம் ஒன்றுக்குச் சராசரியாக ரூ.2.50 கோடி மதிப்புள்ள 21 இலட்சம் மீட்டர் கைத்தறித் துணிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஒரு மாதத்திற்குச் சராசரியாக ரூ.2.70 கோடி மதிப்புக்கு 20 இலட்சம் மீ கைத்தறித் துணிகள் விற்பனை செய்யப்படுகின்றன.

சென்ற ஆண்டு ஈரோடு கைத்தறிக் கண்காட்சியில் ரூ.1.4 கோடிக்குக் கைத்தறித் துணிகள் விற்பனை மேற்கொள்ளப்பட்டது. பெரியார் மாவட்டத்தில் உள்ள அனைத்து நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த விற்பனை, சென்ற கண்காட்சிக் காலத்தில் ரூ.3.8 கோடியாக இருந்தது. நடப்பாண்டுக் கண்காட்சியில் மட்டும் சுமார் ரூ.[illegible] கோடியும், இம்மாவட்டத்திலுள்ள அனைத்து நெசவாளர் கூட்டுறவு மொத்தக் கண்காட்சி விற்பனை சுமார் ரூ.4 கோடியும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வழக்கம் போல் இந்த ஆண்டும் அதிக விற்பனை செய்யும் மூன்று நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முதல், இரண்டாவது மற்றும் மூன்றாவது பரிசுகள் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் வழங்கப்படவுள்ளன.

**நெசவாளர் நலத் திட்டங்கள்**

கூட்டுறவுத் துறையிலுள்ள நெசவாளர் நலன் காத்திடக் கீழ்க்கண்ட திட்டங்களை மத்திய மாநில அரசுகள் இத்துறையின் மூலம் செயல்படுத்தி வருகின்றன.

இச்சரகத்தில் 166 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள 17,083 உறுப்பினர்கள் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்தில் பங்கு கொண்டுள்ள உறுப்பினர் எதிர்பாராமல் மரணம் எய்தினால், அவரின் வாரிசுதாரர்களுக்கு ரூ.10 ஆயிரம் குழுக்காப்பீட்டுத் தொகையாகவும், ரூ.2 ஆயிரம் தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் நெசவாளர் நலத்திட்டத் தொகையாகவும் வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தின்படி, இச்சரகத்தில் இதுவரை 386 வாரிசுதாரர்கள் பயன் பெற்றுள்ளனர்.

> **ஒவ்வொரு நெசவாளர் உறுப்பினரும் தங்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திக்கொள்ள அரசு அனைத்து வழிகளிலும் உதவிக்கரம் நீட்டி அவர்களின் நிலையான வாழ்க்கைக்கு உத்தரவாதம் வழங்கி வருகின்றது.**

**நெசவாளர் வீட்டுவசதித் திட்டம்**

இச்சரகத்தில் இதுவரை 6 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 641 வீடுகள் கட்டப்பட்டு, உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. 3 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் முறையே அவல்பூந்துறை நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் 40 வீடுகள் சுமார் 5.92 இலட்சம் மதிப்பிலும், கவுந்தப்பாடி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கத்தில் 106 வீடுகள் சுமார் ரூ.15.69 இலட்சம் மதிப்பிலும் கட்டி முடிக்கப்பட்டு, நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும் சூரம்பட்டி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கத்தின் 73 வீடுகள் சுமார் ரூ.43 இலட்சம் மதிப்பிலும், கட்டுமானப் பணிகள் முடிவுறும் தறுவாயில் உள்ளன. நடப்பாண்டில் வெள்ளிரவெளி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் 39 வீடுகளும், நசியனூர் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கத்தில் 118 வீடுகளும், ஈங்கூர் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கத்தில் 226 வீடுகளும், கட்ட அனுமதி வழங்கப்பட்டு, மத்திய மற்றும் மாநில அரசின் மானியத் தொகை ரூ.38.30 இலட்சம் பெற்று வழங்கப்பட்டுள்ளது.

மேலும், ஈரோடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கத்தின் 109 வீட்டின் உரிமைதாரர்கள், சென்னிமலை நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் 100 வீட்டின் உரிமைதாரர்கள், தாண்டாம்பாளையம் நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் 50 வீட்டின் உரிமைதாரர்கள் தறி குடோன் அமைப்பதற்காக ரூ.3 ஆயிரம் வீதம் ரூ.7.77 இலட்சம் மானியமாகப் பெற்று வழங்கப்பட்டு உள்ளது.

**தறிகள் நவீனப்படுத்தும் திட்டம்**

தறிகள் நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ், புதிய உத்திகளைக் கொண்டு நவீன டிசைன்களில் ஜவுளி உற்பத்தியினைப் பெருக்கி உபயோகிப்பாளர்களைக் கவரும் வண்ணத்தில் உற்பத்தி செய்யக் கடன் மற்றும் மானிய வசதிகள் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுமதிக்கப்பட்டு வருகின்றன. கடன் தொகையினைச் சங்கம் 8¾ சதவிகிதம் வட்டியுடன் 10 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ், தறிகளற்ற பெண் நெசவாளர்களுக்குத் தறிகள் வழங்கிட 13 நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தைச் சார்ந்த 189 பெண் நெசவாளர் உறுப்பினர்களுக்குக் கடன் மற்றும் மானியமாக ரூ.4.72 இலட்சம் பெற்று வழங்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை நெசவுப் பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது.

சிறப்பு நிதியுதவித் திட்டத்தின் கீழ், மூன்று தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ.2.20 இலட்சம் நிலுவைத் தொகை உள்ள கட்டுமானப் பணி மற்றும் தறிகள் நிறுவுவதற்காக 1989-90 ஆம் ஆண்டில் பெற்று வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

**தள்ளுபடி மானியத் திட்டம்**

விழா மற்றும் பண்டிகைக் காலங்களில் கைத்தறித் துணிகளின் விற்பனை மீது 20 சதவிகிதம் சிறப்புத் தள்ளுபடி அனுமதிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

அனுமதிக்கப்படும் சிறப்புத் தள்ளுபடியினை அரசு ஏற்று, சங்கத்திற்குத் திரும்பப் பெற்று வழங்கப்படுகின்றது. ஆண்டிற்கு 100 நாட்கள் அனுமதிக்கப்படும் சிறப்புத் தள்ளுபடி காரணமாகச் சங்கத்தின் இருப்பு பெருமளவு குறைக்கப்படுவதுடன், உபயோகிப்பாளர்கள் குறைந்த விலையில் தரமிக்க துணிகளை வாங்கி உபயோகிக்க முடிகிறது. இத்திட்டத்தின் கீழ் 1990-91-ஆம் ஆண்டில் ரூ.5,94,99,014 தள்ளுபடி மானியம் சங்கங்களுக்குப் பெற்று வழங்கப்பட்டுள்ளது. மேலும் ரூ.7,77,12,151 அரசிடமிருந்து பெற்று வழங்கப்பட உள்ளது.

**அரசின் பங்கு**

இத்திட்டத்தின் கீழ், ஒரு நெசவாளர் உறுப்பினருக்கு அதிகபட்சமாக ரூ.180 அரசு பங்குத்தொகைக் கடனாகச் சங்கத்தின் நிதி ஆதாரத்தினை அதிகரிக்க வேண்டி, பெற்று, வழங்கப்படுகின்றது. இதனை உறுப்பினர்களின் கூலியிலிருந்து பிடித்தம் செய்து 8¾ சதவிகிதம் வட்டியுடன் 4 ஆண்டுகளில் அரசிற்குச் சம தவணைகளில் திருப்பிச் செலுத்த வேண்டும். அவ்வப்போது சங்கங்களின் தேவைகளை அனுசரித்து நிதி உதவிகள் பெற்று வழங்கப்படுகின்றன.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் நிதி ஆதாரத்தினை அதிகரிக்க வேண்டி, சங்கத்தின் நிதி வசதிக்கேற்ப அரசு பங்கு மூலதனம் ஒரு சங்கத்திற்கு அதிகபட்சமாக ரூ.1 இலட்சம் வரை பெற்று வழங்கப்படுகின்றது. இதற்குச் சங்கம் தனது இலாபத்தில் 14 சதவிகிதம் பங்கு





# மாட்டு வண்டிப் போட்டி

டாக்டர் வெ. கிருட்டிணசாமி,
அருள் ஆனந்தர் கல்லூரி
கருமாத்தூர்

*'தமிழகத்தின் வீர விளையாட்டுகளில் மாட்டு வண்டிப் பந்தயமும் ஒன்று' என்று கூறி - அதன் வகை, விதி முறைகள் ஆகியவற்றையும் விளக்குகிறார் கட்டுரையாசிரியர்.*

**வீ**ரத்தின் விளைநிலம் தமிழ்நாடு, தமிழ் மறவர்கள் வீரச் செருக்கு மிக்கவர்கள் ''கைவேல் களிற்றொடு போக்கி வருபவன், மெய்வேல் பறியா நகும்'' (குறள் 774) என்று வள்ளுவரும் படைச் செருக்கு என்னும் அதிகாரத்தில் கூறியுள்ளார். ஏறு தழுவுதல் (ஜல்லிக்கட்டு, மஞ்சு விரட்டு) பற்றிச் சங்கப் பாடல்களில் காணமுடிகிறது. இன்றும் தை மாதத்தில் அலங்காநல்லூர், சிராவயல் போன்ற இடங்களில் ஜல்லிக்கட்டு நடைபெறுகிறது. மாடு பிடித்தல் என்னும் ஜல்லிக்கட்டுடன் தொடர்புடைய மாட்டு வண்டிப் போட்டியும் தமிழ் நாட்டின் சில பகுதிகளில் தை மாதத்தில் நடத்தப்படுவதைக் காண முடிகிறது.

சிறப்பாகத் தயாரித்த இரண்டு சக்கர வண்டியில் இரண்டு காளைகளைப் பூட்டி, வேகமாக ஓட்டி முதலில் வரச் செய்வதே மாட்டு வண்டிப் போட்டியாகும். இப்போட்டியை மாட்டு வண்டிப் போட்டி, மாட்டு வண்டிப் பந்தயம், மாட்டு வண்டி எல்கைப் பந்தயம், ரேக்லா ரேசு என்று பல பெயர்கள் இட்டு அழைக்கின்றனர். எல்கை என்பதற்குக் குறிப்பிட்ட தூரம் என்பது பொருளாகும். எனவே இதை மாட்டு வண்டி எல்கைப் பந்தயம் எனக் கூறுகின்றனர்.

**நோக்கங்கள்**

மாட்டு வண்டிப் போட்டி நாட்டுப்புற வீர விளையாட்டு வகையைச் சேர்ந்தது. மக்களுக்குப் பொழுது போக்குடன் மகிழ்ச்சியளித்தல், இளைஞர்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ள வழி காட்டல், சிற்றூர் மக்களிடையே ஒற்றுமையை வளர்த்தல், போட்டியில் வெற்றி பெற்றுப் பரிசும் புகழும் பெறல் போன்றவை இப்போட்டியின் நோக்கங்களாகும்.

பெரிய மாடு, நடுமாடு, சிறிய மாடு என்று மாட்டு வண்டிப் போட்டியை மூன்று வகைகளாகப் பிரிக்கின்றனர். மாட்டின் வேகம் அல்லது திறனை வைத்துப் பெரிய மாடு, நடுமாடு, சிறிய மாடு என மாட்டின் உரிமையாளரே வகைப் படுத்துகிறார். பெரிய மாடுகள் பத்துக்கல் தூரமும், நடு மாடு எட்டுக்கல் தூரமும், சிறிய மாடு ஆறுகல் தூரமும் ஓட வேண்டும்.

கம்பம் பகுதி மக்கள் இப்போட்டியில் மிகுதியான ஆர்வம் காட்டுகின்றனர். மேலூரைச் சுற்றியே மிகுதியான போட்டிகள் நடைபெறுகின்றன. மதுரை மாவட்டத்தில் வெள்ளலூர், உறங்கான்பட்டி, நாவினிப்பட்டி, அவனியாபுரம் போன்ற ஊர்களிலும், தேவர் திருமகன் மாவட்டத்தில் திருப்பத்தூர், கீழச் சேவல்பட்டி, மதகுபட்டி, கல்லல், பாகநேரி போன்ற இடங்களிலும், புதுக்கோட்டை மாவட்டத்தில் அறந்தாங்கியிலும், திருச்சி மாவட்டத்தில் அரியலூரிலும், சிதம்பரனார் மாவட்டத்தில் எப்போதும் வென்றான், விளாத்திகுளம் போன்ற ஊர்களிலும் இப்போட்டி நடைபெறுகின்றது.

மாட்டின் கால்கட்டு, உடம்பு, நெஞ்சு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு பந்தயத்திற்கு உரிய மாட்டைத் தேர்ந்தெடுப்பர். அவற்றை வண்டியில் கட்டி ஓட விடுவர். இரண்டு மாடுகளும் ஒரே மாதிரியாக ஓடக்கூடியவையாக இருக்க வேண்டும். இரண்டும் ஒத்து ஒரே வேகத்தில் சென்றால் தான் போட்டியில் வெற்றி பெற முடியும். எனவே மிகுந்த கருத்துடன் ஜோடி சேர்ப்பர். அவை நன்றாக ஓடினால் அவற்றிற்குப் பயிற்சி அளிப்பர். பணக்காரர்கள் சிலர் போட்டிகளில் வெற்றி பெற்ற மாடுகளை விலைக்கு வாங்கிப் போட்டிகளில் கலந்து கொள்வர். மாட்டின் வேகம், தன்மை போன்றவற்றைப் பொறுத்து ஒரு மாடு 35,000 ரூபாய் வரை விலை போகும். மேலமடையில் ஒருவர் ஒரு ஜோடி பந்தய மாடுகளை ஒரு இலட்சம் ரூபாய் விலை கொடுத்து வாங்கியுள்ளார்.

போட்டிக்கு என்று தனியாக இரண்டு சக்கரவண்டி செய்திருப்பர். வண்டி மரத்தால் செய்யப்பட்டிருக்கும். வண்டிப்பட்டை இரும்பினால் ஆனது. வண்டி இலேசாகவும், அதேநேரத்தில் உறுதியாகவும் வேகமாகச் செல்லக் கூடியதாகவும் இருக்கும்.

அதன் இருக்கை ஒருவர் அமர்ந்து ஓட்டும்படியும் இருக்கும். வண்டிக்குள் இருவர் உட்காரலாம்.

பந்தயத்திடலுக்கு வண்டி வந்தவுடன், மற்றவர்கள் அதைத் தொடாமல் பார்த்துக் கொள்வர். வண்டியின் ` உரிமையாளர், ஓட்டுநர் (சாரதி) ஆகியோர் மட்டுமே வண்டியைத் தொடலாம். வண்டியின் உரிமையாளர்களின் ஆட்கள் வண்டியை. மற்றவர்கள் தொடாமல் இருக்கக் கைகோத்து நிற்பர். மற்றவர்கள் வண்டியைத் தொட்டால்





அடிதடி நடக்கும். "பந்தய வண்டியை மற்றவர்கள் தொட்டால் 'திருட்டி' பட்டுவிடும். எதிரிகள் செய்வினை, பில்லி சூனியம் போன்றவற்றைச் செய்து போட்டியில் தோற்கும்படி செய்து விடுவர். சிலர் வண்டியில் மை தடவி அச்சு ஒடிந்து போகும்படி செய்து விடலாம்" என மக்கள் நம்புகின்றனர்.

### சாரதி

வண்டியோட்டி சாரதி என அழைக்கப்படுவர். ஒவ்வொரு வண்டியிலும் சாரதிகள் இருவர் இருப்பர். ஒருவர் வண்டியில் அமர்ந்து வண்டியை ஓட்டுவார். இன்னொருவர் தளரும் மாட்டைத் தார்க்கம்பு, கத்தி போன்றவற்றால் குத்தி வேகப்படுத்துவார். சிலர் விசில் அடித்தும், மாட்டின் வாலை முறுக்கியும் கழியினால் அடித்தும் விரட்டுவர். சிலர் மாட்டை அடிக்காமலும் ஓட்டுவர். சில சமயங்களில் இருவரும் இறங்கி மாடுகளை ஓட வைப்பர். போட்டியின் வெற்றி தோல்வி சாரதியைப் பொறுத்து அமையும். சாரதி மாடுகளின் வேகத்திற்கு ஏற்ப விரைவாக ஓடக் கூடியவராகவும், நன்கு பயிற்சி பெற்றவராகவும் இருக்க வேண்டும். மாட்டின் வேகம், சாரதியின் திறமை போன்றவற்றைப் பொறுத்து ஒரு வண்டி மற்றொரு வண்டியை முந்தும்.

பந்தயத்தில் கலந்து கொள்ளும் மாட்டிற்கு அதன் உரிமையாளர் மாதம் ஒன்றிற்கு இரண்டாயிரம் ரூபாய் வரை செலவழிப்பர். மாட்டிற்குக் கோழிச்சாறு, பால், பாசிப் பயிறு, வெங்காயம், இஞ்சி, ஆரஞ்சுப் பழம் ஆரஞ்சுப்பழச்சாறு குளுக்கோசு, நீராகாரம் போன்ற சத்துணவுகளைத் தருவர். இவற்றை மாடுகள் குடிக்காவிட்டால் டம்ளர் அல்லது கொட்டம் வைத்து ஊற்றுவர். மாடுகள் வலிமையும், வேகமும் பெறச் சிலர் மாட்டிற்கு நியுரோபின், இன்டர்கா்லின், வைட்டமின் போன்ற ஊசிகளைப் போடுவர். மாட்டின் உடலில் ஆட்டின் குருதியைத் தேய்த்து நீரில் நீந்தவிடுவர். மாட்டின் மீது மூலிகை அல்லது யூகலிப்டசு எண்ணெய் தடவி வெந்நீரால் கழுவுவர். சிலர் துண்டால் (டவல் பாத்) மாட்டைத் துடைப்பதும் உண்டு. மாட்டின் வலியைப் போக்க இவ்வாறு செய்கின்றனர்.



o உண்மையே என் கடவுள்; அகிம்சையே அதைக் காணும் வழி!

- காந்தியடிகள்

ஏழு அல்லது பத்து நாட்களுக்கு ஒரு முறை மாடுகளுக்குப் பயிற்சி அளிப்பர். நாள்தோறும் பயிற்சி கொடுத்தால் மாடு தன் சக்தியை இழந்து விடும். போட்டியில் பங்கேற்பதற்கு 24 மணி நேரத்திற்கு முன்னர் மாட்டிற்குத் தீனி, தண்ணீர் போன்றவற்றைக் கொடுக்கமாட்டார்கள். போட்டிக்கு முன்னர் எட்டு மணி நேரம் மாட்டைத் தூங்க விடமாட்டார்கள். தார்ச்சாலையில் ஒரே சீராக வேகமாக ஓடமுடியும். எனவே போட்டிகள் தார்ச்சாலைகளில் நடைபெறும். பொதுவாகப் பந்தய மாடுகளை வேறு தொழில்களுக்குப் பயன்படுத்துவதில்லை. சிலர் இம்மாடுகளை உழவுக்குப் பயன்படுத்துகின்றனர்.

### போட்டி நடைபெறும் நாட்கள்

சில இடங்களில் ஒரு நாள் மட்டுமே போட்டி நடைபெறும். சில இடங்களில் முதல் நாள் மாலையிலும், மறு நாள் காலையிலும் போட்டி நடைபெறும். போட்டி இரண்டு நாட்கள் நடைபெறும் ஊர்களில் இரவு நாடகம், இசைக் கச்சேரி, கரகாட்டம் போன்றவை நடைபெறும். மக்கள் அதைக் கண்டு களித்துப் பொழுதுபோக்குவர்.



பொதுவாகத் தை மாதம் அல்லது கோவில் திருவிழாக்களின்போது இப்போட்டி நடைபெறும்.

ஓர் ஊரில் நடைபெறும் போட்டிக்குத் தமிழ் நாட்டின் பல இடங்களிலிருந்தும் மாட்டு வண்டிகள் வரும். வண்டியை வேனிலும், மாடுகளை லாரியிலும் கொண்டு வருவர். இவர்களுக்குப் பக்கபலமாக இருக்க அடி ஆட்களும் வருவர். லாரி, வேனுடன் மோட்டார் சைக்கிளும் வரும். போட்டியில் கலந்து கொள்ளும் மாடுகள் மூன்று நாட்களுக்கு முன்னரே அவ்வூருக்கு வந்துவிடும். மாட்டிற்குத் தேவையான தீவனத்தை அவர்களே கொண்டு வருவர். அவர்கள் பொதுவாகப் பழக்கமானவர்கள் வீட்டில் தங்குவர். ஆனால் அவர்கள் அவ்வூரில் யார் வீட்டிலும் தங்கலாம். வீட்டுக்காரர் அவர்களுக்கு உணவு வசதி செய்து கொடுப்பர்.

போட்டியைத் தொடங்குவதற்கு முன்னர், போட்டியில் கலந்து கொள்வோர் விழாக்குழுவினரிடம் தங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். பின்னர், போட்டிக்குரிய கட்டணத்தைக் கட்ட வேண்டும். போட்டி நடத்துவதற்குரிய பெரிய சாலைகள் அல்லது பரந்த விளையாட்டுத்திடல் இன்மையால் குலுக்கல் சீட்டு மூலம் வண்டிகளை ஒன்றன்பின் ஒன்றாக வரிசையில் நிறுத்துவர். போட்டி தொடங்கும் இடத்தில் கோடு போட்டிருப்பர். சாலையின் இரு மருங்கிலும் வண்ணத்தாள்களால் தோரணம் கட்டித் தொங்க விட்டிருப்பர். 1, 2, 3 என்று சொல்லியோ, கொடியசைத்தோ, துப்பாக்கியால் ஒலி எழுப்பியோ, விசில் ஊதியோ பந்தயத்தைத் தொடங்குவர்.



### போட்டியின் விதிகள்

மாட்டுவண்டிப் போட்டியின் விதி முறைகள் வருமாறு

1. எல்கையில், வரிசையில் வண்டிகள் நிற்கும்போது பந்தயக் குழு 'ரெடி' சொல்லும் முன் விடும் வண்டிக்குப் பரிசு கொடுக்கப்படமாட்டாது.

2. பச்சைக் கொடி காட்டும் இடத்திலிருந்து வண்டிகள் மாறக் கூடாது. வரிசையில் வர வேண்டும். மாறிவரும் வண்டிக்குக் கொடி கொடுக்கப்படமாட்டாது.

3. பந்தயம் நடைபெறும்போது ஊராட்சி வாகனங்கள் தவிர வேறு வாகனங்கள் அனுமதிக்கப்படமாட்டாது.

4. நடுவர்களின் முடிவே இறுதியானது.

5. வண்டிகள் குறைந்தாலும் பரிசுத்தொகை குறைக்கவோ, கட்டணத்தொகை கூட்டப்படவோ மாட்டாது.

- இப்போட்டிக்கு மாநில அளவில் விதிகளும் சட்டங்களும் வகுத்துத் தந்தவர்கள் நாவினிப்பட்டி மக்கள் ஆவர்.

சான்றாகப் பத்துக்கல் தொலைவு ஓட்டப் பந்தயம் எனில், ஐந்தாவது கல்லில் மாடுகள் திரும்பி வர வேண்டும். மாடுகள் திரும்ப வேண்டிய இடத்தில் கோடு போட்டிருப்பர். சாலையின் நடுவில் பெரிய 'தார் டின்' வைத்திருப்பர். மாடுகள் அதைச் சுற்றி வரவேண்டும். அதைச் சுற்றி வராத மாடுகளுக்குப் பரிசு கிடையாது. அவ்விடத்தில் நடுவர் ஒருவர் இருப்பார். அவர் 'தார் டின்'னைச் சுற்றிவரும் சாரதியின் கழுத்தில் கொடி மாட்டுவா்ர். சில சமயங்களில் சாரதியே கொடியை வாங்கிக் கழுத்தில் மாட்டிக் கொள்வதும் உண்டு.

ரிப்பன் துணியை வெட்டி நூல் கயிறு அல்லது சணல் கயிறால் கொடி கட்டப்பட்டிருக்கும். கொடியை முதலில் கொண்டு வருபவர்கள் போட்டியில் வெற்றி பெற்றவர்களாக அறிவிக்கப்படுவர்.

நடுவர்கள் வெள்ளைக் கொடி கட்டிய காரில் வருவர். அவர்களுடன் பார்வையாளர்கள் சிலரும் வருவதுண்டு.



எந்தக் காரணத்தை முன்னிட்டும் கடன் கேட்கக்கூடாது. பெற்ற தாயார் இறந்து புதைக்கப் பணம் இல்லையென்றாலும் கடன் கேட்கக்கூடாது. முனிசிபாலிட்டியாரிடம் ஒப்படைக்கலாமே தவிர அதற்காகக் கடன் வாங்கிச் செலவு செய்யக்கூடாது. மற்றவனிடம் கடன் கேட்காமலிருப்பதே பிரபுத்வமாகும். வரவுக்குமேல் செலவிடக்கூடாது. வரவிற்குள் செலவிட்டு ஒரு சிறுதொகையையாவது சேமிக்க வேண்டும்.

நம்மால் கூடுமானவரை பிறருக்கு உதவி செய்ய வேண்டுமே தவிர, நாம் பிறருடைய உதவியை எதிர்பார்க்கக் கூடாது. இன்னொருவன் உதவியை எதிர்பாராமலிருப்பதே சுயமரியாதையாகும்.

—தந்தை பெரியார்.

போட்டியில் மாடுகள் வேகமாக ஓட வேண்டும். பின்னால் வரும் மாடுகளை முந்த விடக்கூடாது. அந்த அளவிற்குச் சாலையை அடைத்துக் கொண்டு செல்ல வேண்டும். வண்டிகள் ஒன்றை ஒன்று முந்திச் செல்வது பார்வையாளர்களின் கருத்தைக் கவரும். அதுவே இப்போட்டியின் சிறப்புக்கூறு ஆகும். வண்டிகள் ஒன்றை ஒன்று முந்திச் செல்லும்போது, ஒன்றை ஒன்று இடித்து விபத்துக்கள் ஏற்படுவதும் உண்டு.

### பரிசுகள்

ஒவ்வொரு வகையிலும் போட்டியில் வெற்றிபெறும் முதல் மூன்று வண்டிகளுக்குப் பரிசு உண்டு. வண்ணத் தொலைக்காட்சி, மோட்டார் சைக்கிள், பவுன் (தங்க நகை), ரூபாய் போன்றவை பரிசாக வழங்கப்படும். கொடியைக் கொண்டு வரும் சாரதிக்கும் பரிசு உண்டு. பொதுவாகச் சாரதிக்கு ஒரு பவுன் மோதிரம் அல்லது பணம் பரிசாகக் கொடுக்கப்படும். கொடியை இடையில் தவறவிட்டால் பரிசு கிடைக்காது. போட்டியில் பரிசுபெறுவது போட்டியாளர்களின் முதன்மைக் குறிக்கோளாகும். போட்டியில் பரிசு பெறுவோர் தமிழகம் முழுவதும் புகழ்பெறுவர்.

இவ்வீர விளையாட்டைப் பற்றிய குறிப்புகள் தமிழ் இலக்கியத்தில் இருக்கின்றனவா என்று தெரியவில்லை. ஜல்லிக்கட்டு தொடங்கிய காலத்திலேயே இவ்விளையாட்டுத் தொடங்கி விட்டதாகப் பெரியவர்கள் கூறுகின்றனர். இப்போட்டி நாட்டுப்புற மக்களின் சிறந்த பொழுது போக்குக் கூறாகவும், வெளிநாட்டுப் பயணிகளைக் கவரும் விளையாட்டாகவும் உள்ளது. ●






# நூல் நயம்

## புரட்சிக் கவிஞரும் பெண்மையும்

**ஆசிரியர்:** டாக்டர் சரளா ராஜகோபாலன்
**வெளியீடு:**
ஒளிப்பதிப்பகம்
63, அரங்காச்சாரி சாலை,
சென்னை-600 018.

விலை:ரூ.40 பக்கம்:408

பெண் இனத்தைப் போற்றிப் புகழ்ந்த பாரதியைப் போலவே சிறப்பித்துக் கூறும் அவர் வழிவந்த பாவேந்தர் பாரதிதாசனும் பெண்டிரின் முன்னேற்றத்தைப் பெரிதும் அவாவினார். பெண்ணுரிமையை நிலைநாட்டினார் என்பதை ஆய்வு ' முறையில் நிறுவியுள்ளார் நூலாசிரியர்.

பெண்ணுரிமை, பெண்டிர் மறுமணம், பெண் கல்வி, காதல் மணம் ஆகியவற்றை வரவேற்றுப் பாவேந்தர் எழுதிய கவிதைகள் எண்ணற்றவை என்பதையும், அவரது காவியங்களில் காணப்படும் பெண்களின் பாத்திரப் படைப்புகள் உயர்ந்தவையாக விளங்குகின்றன என்பதையும் ஆய்வு செய்து இந்நூலில் தெரிவித்திருக்கிறார் நூலாசிரியர்.

பழங்கால இலக்கியங்கள், இக்கால இலக்கியங்கள் ஆகியவற்றை அரண்களாக வைத்து இந்த நூல் மாளிகை உருவாக்கப்பட்டுள்ளது. பெண்டிரின் புற அழகு குறித்துப் பாவேந்தரின் வர்ணனைச் சொற்றொடர்கள் 'பெண்ணோவியம்' என்னும் பகுதியில் தொகுத்துத் தரப்பட்டுள்ளது பாராட்டுக்குரியது.

—தமிழ்ப்பித்தன்

## சுமக்க விரும்புகிறேன்

**ஆசிரியர்:** சிலுவை
**வெளியிட்டோர்:**
செந்தில் பதிப்பகம்,
7, அம்மையப்பன் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை-600 014.

விலை:ரூ.10 பக்கம்:80

புதுக்கவிதைப் பூங்காவாக விளங்குகிறது இந்த நூல்; எட்டுக் கவிதைகள் இதிலே அழகுபட அணிவகுத்துள்ளன.

சமுதாய ஏற்றத்தாழ்வுகள் ஆங்காங்கே சாடப்படுகின்றன; உழைக்கும் சிறுவர்களின் அவலங்கள் படம்பிடித்துக் காட்டப்பட்டிருக்கின்றன; வாலிபப் போக்கிரிகளின் வடிகால்களாக விளங்கும் பேதைகள், உரிமை கோரிச் சட்டம் பேசுகிறார்கள்; அன்னை தெரசாவின் அன்புள்ளம் உணர்த்தப்படுகிறது... இப்படிப்பட்ட கருத்துக்களின் கருவூலம் நூலிது. படிக்கலாம்.

கடைசிப் பக்கத்து ஏழு வரிகளைத் தான் பாருங்களேன்-

இன்றைய
நம் சிறப்புத் தள்ளுபடி
அளவுக்கு மீறிய
ஆசைகளாகட்டும்;
இயற்கையை
ஒட்டியலல;
ஒட்டி வாழ்வோம்!'

—'முடிகொண்டான்'

## மாணவர்க்கு மணிப்பாடல்கள்

**ஆசிரியர்:** வே.இரா.சிவஞான வள்ளல்
**வெளியீடு:**
இளவழகி பதிப்பகம்
295 இ, மாரியம்மன் கோயில் தெரு,
நியூடவுன், வாணியம்பாடி (வ.ஆ.)

விலை:ரூ.8 பக்கம்:64

' குழந்தைகள் படிப்பதற்கும், பாடுவதற்கும் ஏற்ற மணியான பாடல்களின் தொகுப்பு.

பெற்றோர், ஆசிரியர், இறைவன் குறித்த பாடல்கள் குழந்தைகள் மனத்தைப் பண்படுத்த உதவும்.

இயற்கைக் காட்சிகள், பறவை, விலங்குகள் பற்றிய பாடல்களும், தேசத் தலைவர்கள் குறித்த பாடல்களும் மனத்திற்கு மகிழ்ச்சியைத் தரத் தக்கனவாகும். பள்ளிக் குழந்தைகள் படித்து மகிழலாம்.

## மயக்குறு மக்கள்

**ஆசிரியர்:** ம.இலெ. தங்கப்பா
**வெளியீடு:**
கிறிஸ்தவ இலக்கிய சங்கம்,
பூங்கா நகர்,
சென்னை-600 003.

விலை:ரூ.12 பக்கம்:57

மக்கட் செல்வம் பற்றிய மணிமணியான பாடல்கள்.

மழலை பேசும் குழந்தையின் மகத்துவம் ஒவ்வொரு கவிதை வரியிலும் காணக் கிடக்கின்றது.

குழந்தையை முழுநிலா, வாழைக் குருத்து, தளிர்ப்பூ, அமிழ்து, இலக்கியம் என்றெல்லாம் வர்ணிக்கிறார்.

இத்தொகுப்பில் 35 பாடல்கள் உள்ளன. எல்லாம் தெவிட்டாத் தெள்ள முதுகள்.

## தென் ஆப்பிரிக்க விடுதலை வீரர் நெல்சன் மண்டேலா

**ஆசிரியர்:** மானோஸ்
**வெளியீடு:**
பூங்கொடி பதிப்பகம்
14, சித்திரைக் குளம்
மேற்கு வீதி,
சென்னை-600 004.

விலை:ரூ.7 பக்கம்:72

தென் ஆப்பிரிக்காவின் விடிவெள்ளி நெல்சன் மண்டேலாவைப் பற்றிய வாழ்க்கைக் குறிப்புகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

மண்டேலாவின் இளமைப் பருவம் முதல் அவர் அனுபவித்த சிறை வாழ்க்கை, உலகம் வழங்கிய சிறப்புகள் முதலானவை நன்கு தொகுக்கப்பட்டுள்ளன. அன்னாரது வீர வாழ்க்கையை அனைவரும் படிக்கலாம்.

—குமாரசாமி

## ஒரே ஒரு வீடு

**ஆசிரியர்:** ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன்
**வெளியீடு:**
சுதா பதிப்பகம்
4, முத்து முதலித் தெரு,
புரசைவாக்கம்,
சென்னை-600 007.

விலை: ரூ.15 பக்கம்: 166

ஒரு சமுதாயம் நிமிர்ந்து வாழ்ந்திட, வழிகோலும் சாதனங்களில் நாடகமும் ஒன்று. அந்த வகையில் இந்நூலில் இடம்பெற்றுள்ள நாடகங்கள் சமுதாயச் சீர்திருத்தத்துக்கு துணை என நம்பலாம்.

நூலின் தலைப்பாக விளங்கும் நாடகம், 'அடக்கம் என்பது பலவீனமல்ல' என்பதைச் சித்திரிக்கிறது. இப்படிப் பல நாடகங்கள் நீதி போதிக்கின்றன; நெஞ்சைத் தொடுகின்றன.

படிக்கவும், நடிக்கவும் ஏற்ற நாடகங்கள்.

— பி.வி. கிரி

ஒருவராகிய சித்தர் நாகார்ஜுனர் (தெலுங்கர்) அவர்கள் வடநாட்டிற்குச் சென்று இரசமும் கந்தகமும் கூட்டி கருப்பாக்கிக் காட்டி வடநாட்டிற்கு மட்டுமின்றி அரேபியா, எகிப்து, கீரீஸ் ஆகிய நாட்டினரையும் வியப்பிற்குள்ளாக்கினார். அதன் பிறகே அந்நாட்டினரும் இரசவாதத்தின் ஆராய்ச்சியில் ஈடுபட்டனர். அவ்வாறு ஈடுபட்டபோது செய்த ஆராய்ச்சியினைக் கிரேக்க நாட்டவர் 'கீம்' என்று பெயரிட்டனர். நாளடைவில் அந்த 'கீம்' என்ற பதமே இன்றைய விஞ்ஞானப் பெயரான கெமிஸ்ட்ரி' என்று மாறியுள்ளது. இக்கலையில் முதலாவதாக இருப்பவர் சித்தர் நாகார்ஜுனன் ஆயினும், இவருக்கு முன்பே எத்தனையோ சித்தர்கள் இருப்பினும் மேல் நாட்டவரும் அறிந்த சித்தர் நாகார்ஜுனன் ஒருவரே!

**மந்திரம்**

இதை மறைமொழி என்று சித்தர்கள் கூறியுள்ளனர். இதனைப் பற்றிய கருத்துக்கள் சாதாரணமாக எல்லோருக்கும் விளங்காது. ஆழ்ந்த நுண்ணறிவு உள்ளவர்களுக்கு மட்டுமே புலனாகும். ஐம்புலன்களையும் அடக்க மூச்சடக்கி மனதை யோர் நிலைக்குக் கொண்டு வந்து உடலை வளர்த்துச் சிவகதியடையும் பொருட்டுச் செய்யும் மந்திர முறையை கடைப்பிடிப்பவர்கள் வேதாந்திரச் சித்தர்கள் எனக்கூறுவர்.

மந்திரம் என்னும் சொல்லில் அடக்கமானவை (1) நன்னடத்தை (2) நற்செயல் (3) இருக்கை (நியமம்) (4) நற்பழக்கம் (பிரணாயாமம்) (5) புலனடக்கம் (பிரத்தியாகரம்) (6) மூச்சடக்கல் (தாரனை) (7) தன்னையடக்கல் (8) இரண்டறக் கலத்தல் இந்த எட்டு வகை யோகமுமே மந்திரம் எனப்படும்.



**அவிழ்தம்:-**

நோய்களை அவிழ்க்கும் தன்மையுடையது என்பதால்தான் அவிழ்தம் என்னும் சொல் வந்தது. சித்தர்கள் இவ்வாறு பொருள் எதனால் கூறினர் எனில் புல், பூண்டு போன்றவற்றை நாய், பூனை, கீரி முதலிய விலங்குகள் நோய் வந்தபோது உண்டு வாந்தியெடுத்து நோயினைப் போக்கிக் கொள்வதுபோல், மக்களும் அதனை உண்டு பிணி நீக்கிக் கொள்ளும் முறை அவிழ்தம் எனப்படும். முதல் இரண்டு முறையான மணி, மந்திரம் உள்ளுக்குக் கொடுக்காமலே நோயைப் போக்குவதாகவும் உள்ளுக்குக் கொடுக்கும் முறையை அவிழ்தல் முறையாகவும் கொண்டனர். மணி மந்திர முறை மக்கள் எளிதில் பெற முடியாதவை; அவிழ்தல் முறை - அதாவது மருந்து உள்ளுக்கு உட்கொள்ளும் முறை மக்கள் எளிதில் பெற முடியக்கூடியது. இதனை மருந்து அவிழ்தம் எனச் சிறப்பாகக் கூறினர். மூலிகை (வேர்), புல், பூண்டு, செடி, கொடி, மரங்களும், உயிர்ப் பொருள்களும் ஈயம், இரசம், உப்பு ஆகியன கொண்டு முறைப்படி மருந்து செய்து உண்ணுதல் அல்லது குடிநீர், சாறு, பொடி, இலேகியம் முதலியவைகளைச் செய்து உட்கொள்ளுவதும் எண்ணெய் வகைகள், செய்து உள்ளுக்கும் வெளிக்குமாக வழங்குவதும், உலோகப் பொருள்களான பற்பம், செந்தூரங்களை வழங்குவதும் அவிழ்தம் என்று பொருள். உடல் வளர்ச்சிக்கும் உள்ளத் தெளிவுக்கும் நல்ல மருத்துவ முறை யோகாசனம்; நோய்க்குறி அறிந்து சிறப்பான மருத்துவமும் செய்யும் திறன் கொண்டது சித்த மருத்துவம்.

யோகாசனம்:- உலகத்தில் உயர்வானது உயிர். விலை மதிப்பற்றது. ஆகவே உடல் நலம் அவசியத் தேவை. அவற்றிற்கும் மன அமைதிக்கும் தினமும் சிறிது நேர யோகாசனம் செய்தலால் உடல் நலம் சிறந்த முறையில் இருக்கும்.

நமது உடல் தூய்மையான பொருள்களைப் பெற்றது. வளி, வெளி, நீர், தீ, மண் ஆகிய ஐந்தும் கேட்டல், உணர்தல், காணுதல், சுவைத்தல், நுகர்தல் ஆகிய ஐந்தும் - காது, தோல், கண், நாக்கு, மூக்கு ஆகிய ஐந்தும் - புத்தி, மனம், அங்ககாரம் ஆகிய மூன்றும் ஆகிய பதினெட்டுகளால் ஆக்கப்பட்டதே நம்முடைய உடல் ஆகும் என்று திருமூலரின் திருமந்திரத்தில் உள்ளது. மக்கள் தங்கள் உடல் நிலையை நன்கறிந்து அதற்குத் தகுந்தாற்போல் உணவு உண்டால் இன்புற்று வாழ்வர்.

அளவில்லாமல் கண்ட நேரத்தில் கண்டதை உண்ணுவதே உடலுக்குப் பெரும் கேடு விளைவிக்கும். நமது சித்த மருத்துவத்தில் நிறைந்துள்ள சக்திவாய்ந்த பல்வேறு இயற்கை மருந்துகளைப் பற்றி இதுவரை சரியான முறையில் ஆராய்ச்சி செய்யாமலிருப்பது மிகவும் வேதனைக்குரியது. இனிமேலாவது சித்த மருத்துவத்தில் உள்ள பெருமருந்துகளையும், அதன் நுட்ப சூட்சுமங்களையும் நன்கு ஆராய்ந்து நகர, கிராம மக்கள் நலம் பெற ஆவன செய்ய அரசு உதவ வேண்டும்.

சித்த மருத்துவ முறையில் ஆண், பெண் மலட்டுத் தன்மைக்கும் மஞ்சட் காமாலைக்கும்கூட நல்ல பல மருத்துவ முறைகள் உண்டு. ●

## தண்டனை

○ பொருட்களை எடைபோடும் முறை மிகப் பழங்காலத்திலேயே இருந்திருக்கிறது. முகலாய மன்னன் அலாவுதீன் கில்ஜி காலத்தில் (கி.பி. 1290-1310) அம்முறைபற்றிப் போடப்பட்டிருந்த ஒரு சட்டம் பயங்கரமானதாகும். எடைபோடப் பட்ட பொருளைச் சரியாக எடைபோட வேண்டும்; இல்லையானால் குறைகிற எடை அளவுக்கு, எடை போட்டவரின் உடலிலிருந்து சதை வெட்டி எடுக்கப்படும் என்பதே அது!

- செய்தி: தே. மணி.

*(ஆதாரம்: டாக்டர் ஏ. சுவாமிநாதன் எழுதிய 'இந்திய வரலாறு 1206-1773)*

# வேளாண்மைப் பொறியியல் இயந்திரங்களும் அதன் பயன்களும்

**த. சங்கரவேலு,**
உதவி செயற் பொறியாளர் (வே.பொ.) விளம்பரம் மற்றும் கொள்கை பரப்புப் பிரிவு
தலைமைப் பொறியாளர் (வே.பொ.) அலுவலகம் சென்னை

பல இலட்சம் ஏக்கர்கள் பயிர் செய்யும்பொழுது "பருவத்தே பயிர் செய்வதென்பது" இயந்திரச் சாகுபடி முறையைக் கடைப்பிடித்தால்தான் முடியும். மேலும் பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப உணவு தானிய விளைச்சல்களைப் பெருக்குவதற்கும் சாகுபடி முறைகளில் இயந்திரங்களைப் பயன்படுத்தினால் மட்டுமே முடியும்.

நிலம் மற்றும் நீர் விவசாயத்திற்கு மிகவும் இன்றியமையாதது. விவசாயத்திற்கு இன்றியமையாத இயற்கைச் செல்வங்களான இந்த வளங்களை மேம்படுத்தவும், பெருக்கவும், வேளாண்மை இயந்திரங்களைப் பயன்படுத்துதல் வேண்டும். நவீன இயந்திரங்களைக் கொண்டு சாகுபடி செய்து தன்னிறைவு அடைவதுடன், நல்ல மகசூல் பெறுவது வீட்டிற்கும், நாட்டிற்கும் நல்லது.

தமிழ்நாட்டில் வேளாண்மைப் பொறியியல் துறை மாநிலத்தில் பசுமைப் புரட்சிக்கு வித்திட, உணவு உற்பத்தியைப் பெருக்கிட பல்வேறு இயந்திரங்களை எளிய முறையில் விவசாயத்திற்கெனக் குறைந்த வாடகையில் விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது. இத்துறையில் தற்பொழுது வாடகைக்கு உள்ள இயந்திரங்களின் எண்ணிக்கை பின்வருமாறு:-

1. புல்டோசர் 120, 2. டிராக்டர் 177, 3. மின்தடைக் கருவி (ரெசிஸ்டிவிடி மீட்டர்) 25, 4. கைத்துளைக் கருவி 408, 5. விசைத்துளைக் கருவி (ரோட்டரி துளைக்கருவி 65, பெர்குசன் துளைக் கருவி 47, ஹாமர் துளைக்கருவி 10) 6. மின் அளவீட்டுக் கருவி 2, 7. காற்றழுத்தக் கருவி 20, 8. நீள் துளைக்கருவி 46, 9. கிணற்றுக்குள் துளையிடும் கருவி 42, 10. பாறை தகர்க்கும் கருவி 98. இந்த இயந்திரங்கள், தமிழகத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும், உதவி செயற் பொறியாளர் (வே.பொ.) (ஆய்வு) (இயந்திரம்) (விரைவுத் திட்டம்) அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ளன.



நிலம் சமன் செய்ய புல்டோசர்கள் வாடகைக்கு விடப்படுகின்றன. இதன் மூலம் தரிசு நிலங்களும், வரப்புகளும், திடல்களும், சாகுபடிக்கு ஏற்ற நிலங்களாக மாற்றலாம். புயல் மற்றும் வெள்ளக் காலத்தில் சாகுபடி நிலத்தில் பரவக் கூடிய மணலை எளிதில் குறைந்த காலத்தில் அகற்றி விளை நிலங்களாக மாற்றலாம்.

டிராக்டர் மூலம் நிலத்தை ஆழமான முறையில் உழ வாய்ப்பு ஏற்படுகிறது. இதனால் மண் பரப்பில் அதிகக் காற்றோட்டமான அமைப்பு ஏற்பட உதவுகிறது. மிகக் குறைந்த நேரத்தில் மிக அதிகப் பரப்பைப் பயன்படுத்த டிராக்டர் உபயோகப்படுகிறது. பல்வேறு வேளாண் கருவிகளை டிராக்டருடன் இணைத்து- டிராக்டருடன் பலசால் கலப்பைகள் பொருத்தி நிலத்தை உழுதல், பண்படுத்தி சீர் செய்தல், எரு உரங்களைப் பரப்புதல், விதை விதைத்தல், பூச்சி மருந்து தெளித்தல் போன்ற பலவிதமான விவசாய வேலைகளை மேற்கொள்ளலாம்.

டிராக்டரின் பின்பக்கம் உள்ள பி.டி.ஓ. ஸாப்ட் (P.T.O. Shaft) மூலம் சுழற்சி விசை தேவைப்படும் இயந்திரங்களான நீர் இறைக்கும் பம்பு, சேடை உழவுக்குப் பயன்படும் ரோட்டவேட்டர், கதிரடிக்கும் கருவி இன்னும் பல கருவிகளை இயக்கும் வாய்ப்புண்டு.

தஞ்சைப் பகுதியில் ஆற்றில் உள்ள பாசன நீரை விளை நிலங்களுக்குப் பாய்ச்ச உபயோகப்படுத்தும் பம்புகளுக்குச் சக்தி கொடுக்கும் இயந்திரமாகவும், வெள்ளம் வரும்

# தமிழில் தந்தி

வாழ்த்துத் தந்திகளை அனுப்புவதற்காக இப்போது 40 வாழ்த்துச் செய்திகளுக்கான சொற்கள் நடைமுறையில் வந்துள்ளன. தமிழில் வாழ்த்துச் செய்தி வருவதால், அந்த 40 சொற்களையும் 6 தமிழ் அறிஞர்கள் உதவியுடன் அரசு தமிழாக்கம் செய்துள்ளது.

எண் வாரியாக அந்தச் சொற்களின் தமிழாக்கம் வருமாறு.

1. இதயங்கனிந்த இனிய தீபாவளி வாழ்த்து.
2. ஈது பெருநாள் இன்ப வாழ்த்து.
3. உளமார்ந்த பிஜோயா வாழ்த்து.
4. இனிய புத்தாண்டு நல் வாழ்த்து.
5. இன்றைய பிறந்தநாள் போல் என்றும் இன்புடன் வாழ்க.
6. புதிய வருகைக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள்
7. சிறப்பு விருது பெறும் உமக்குச் சிந்தை குளிரும் பாராட்டுக்கள்.
8. இல்லறச் சோலையில் பல்லாண்டு மகிழ்ச்சி மணக்க உள்ளார்ந்த திருமண வாழ்த்து.
9. ஏசுகிறிஸ்து பிறந்த நாளில் இன்பங்கள் பொங்குக.
10. தேர்வில் வெற்றி பெற்றமைக்குச் சிந்தை மகிழும் பாராட்டுக்கள்.
11. இனிய பயணம் இடரின்றி நிறைவேற இதயங்கனிந்த வாழ்த்து.
12. தேர்தல் வெற்றிக்குத் தேனான பாராட்டுக்கள்.
13. உமது அன்பார்ந்த வாழ்த்துக்கு என்/எமது நெஞ்சார்ந்த நன்றியுடன் பதில் வாழ்த்து.
14. இனிய பாராட்டுக்கள்.
15. அன்பு கலந்த வாழ்த்துக்கள்.
16. இளம் மணமக்கள் மகிழ இறைவன் திருவருள் பொழிக.
17. இன்ப இல்லறம் ஏற்கும் இணைகளே அன்புடன் அடைக அனைத்து வளங்களே.
18. தியாகத்தை நினைவூட்டும் விடுதலைத் திருநாளில் சிந்தை மகிழும் தேனான வாழ்த்து.
19. இந்தியக் குடியரசு என்றும் தழைக்க இந்நன்னாளில் என் இனிய வாழ்த்து.
20. உளங்கனிந்த ஹோலி திருநாள் வாழ்த்து.
21. விழா வெற்றி பெற உளமார்ந்த வாழ்த்து.
22. உங்கள் அன்பார்ந்த வாழ்த்துச் செய்திக்கு அளவில்லாத நன்றி உரியது.
23. தேர்வில் நீர் வெற்றிபெறத் தேனான வாழ்த்து.
24. தேர்தலில் நீங்கள் வெற்றிபெறச் சிறப்பான வாழ்த்து.
25. புதிய மணமக்களுக்கு நல்லாசிகள்.
26. பூரிக்கும் உள்ளத்தோடு பொங்கல் வாழ்த்து.
27. நெஞ்சம் பூரிக்கும் ஞர்பரப் வாழ்த்து.
28. பொது மன்னிப்பு நாளான பர்யூஷன் வாழ்த்து.
29. உளம் கனிந்த இனிய ஓணம் வாழ்த்து.
30 திருமண ஆண்டுத் திருநாள் வாழ்த்துக்கள்.
31. இனிமையான பணி ஒய்வு வாழ்க்கைக்கு நல்வாழ்த்துக்கள்.
32. விரைவில் உடல்நலம் பெற உளமார்ந்த வாழ்த்துக்கள்.
33. உளம் கனிந்த யுகாதி வாழ்த்துக்கள்.
34. தங்களுடைய வெற்றிக்குப் பாராட்டுக்கள்.
35. இனிய பிஹு நல்வாழ்த்துக்கள்.
36. இனிய ஈஸ்டர் நல்வாழ்த்துக்கள்.
37. உளங்கனிந்த புத்த ஜெயந்தி வாழ்த்துக்கள்.
38. உளங்கனிந்த புதுமனை புகுவிழாப் பாராட்டுக்கள்.
39. உளங்கனிந்த குரு ரவிதாஸ் பவுர்ணமி வாழ்த்துக்கள்.
40. உளங்கனிந்த ''நவ்ரோஸ்' வாழ்த்துக்கள்.
100. என் ஆழ்ந்த அனுதாபங்கள்.

—வாழ்த்துத் தெரிவிக்க விரும்புகிறவர்கள் மேலே சொன்ன வாசகங்களில் எந்த வாழ்த்தைத் தெரிவிக்க விரும்புகிறார்களோ, அதற்குரிய எண் எதுவோ அதை மட்டும் தந்தி பாரத்தில் எழுதி 'தமிழ்' என்று குறிப்பிட வேண்டும்.

உதாரணமாகத் திருமண வாழ்த்துத் தந்தி அனுப்ப வேண்டும் என்றால், திருமண வாழ்த்துச் செய்திக்கான எண்ணை (எட்டு) தந்தி அனுப்பும் பாரத்தில் எழுதி அந்த எண்ணுக்குப் பக்கத்தில் 'தமிழ்' என்று கண்டிப்பாகக் குறிப்பிட வேண்டும்.

இப்படித் 'தமிழ்' என்று குறிப்பிடும் தனி வார்த்தைக்குக் கட்டணம் கிடையாது.








# சித்த மருத்துவத்தின் சிறப்பு

டாக்டர் ஜமுனா சீனிவாசன்

நாம் நல்ல உடல் ஆரோக்கியத்துடனும் மன வலிமையுடனும் இருக்க நம் சித்த மருத்துவ முறையில் நம் முன்னோர்கள் சிறப்பு மிக்க அற்புத, அரிய வைத்திய முறைகளைப் பல ஆண்டுகளுக்கு முன்பே நமக்கு வழங்கியுள்ளனர். சித்த மருத்துவத்தின் சிறப்பைப் பாமர மக்கள் முதல் படித்த மக்கள் வரை அறிந்து கொள்ள முன்வர வேண்டும். தமிழ் நாட்டுச் சித்தர்களின் நூல்கள் பலவற்றில் சில செல்லரிப்பானுக்கு நாசமாயின; சில நெருப்புக்கும் நீருக்கும் இரையாயின, மேலும் சில நாட்டை விட்டு வெளியேறின! எஞ்சிய சிலவற்றில் ஒரு சில அச்சிடப்பட்டும், சில இன்னும் அச்சிடப் படாமலும் உள்ளன. நாலாயிரத்துக்கும் மேற்பட்ட ஆண்டுகளாக இம் மருத்துவம் கையாளப்பட்டு வருகிறது என்று மருத்துவத்துறை ஆராய்ச்சியாளர்கள் கண்டுள்ளனர். இந்த ஆராய்ச்சியில் வாக்படர், சரகர், போகர், மாசர், சுக்ருதர், சாரங்கதரர், ஜீவகர், அகஸ்தியர், தன்வந்திரர், போரக்கர் ஆகிய சித்தர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

இனி சித்த வைத்தியத்தின் சிறப்பு என்ன என்று பார்ப்போம்; சித்த மருத்துவத்தில் குறிப்பாக மூன்று முறைகள் உள்ளன. அவை ஒப்புறை, எதிருறை, கலப்புறை ஆகியவைகளாகும்.

**ஒப்புறை**

உதாரணமாகக் காய்ச்சல் வந்த உடல் உஷ்ணமாகும்போது லிங்கச் செந்தூரம் கொடுத்தால் காய்ச்சல் தணியும்; லிங்கச் செந்தூரத்தின் குணமானது வெப்ப வீரியம் ஆகும். சுரத்தின் உஷ்ணத்துக்கு லிங்கச் செந்தூரத்தின் வெப்ப வீரியம் ஒப்புவதால் ஒப்புறை எனப்படும்.

**எதிருறை**

காய்ச்சலினால் உடல் உஷ்ணமானதும் அதற்கு எதிராகக் குளிர்ச்சியாக உள்ளதைக் கொடுக்க வேண்டும். நத்தை பற்பம் உஷ்ணத்தைக் குறைத்து அதற்கு எதிராகக் குளிர்ச்சியை உண்டாக்குவதால் எதிருறை எனப்படுகிறது.

**கலப்புறை**

உஷ்ணம், குளிர்ச்சி இரண்டும் கலந்த மருந்தைக் கொடுத்து நோயினைக் குறைப்பது.

பொதுவாக ஹோமியோபதி மருத்துவத்தில் ஒப்புறை முறையும் ஆங்கில மருத்துவத்தில் எதிருறை முறையும் கையாளப்படுகிறது. சித்த மருத்துவத்தில் மட்டுமே மேலே குறிப்பிட்ட மூன்று முறைகளும் சேர்த்துச் சிகிச்சையளிக்கப்படுகின்றன.

**சித்த மருத்துவம் என்றால் என்ன? இதன் சிறப்பு யாது? என்பதை விளக்கி, இம் மருத்துவமுறை மேலை நாட்டினராலும் பாராட்டப்பட்டிருக்கிற செய்தியைக் கூறி, இம் மருத்துவத்தால் ஏற்படும் பயன்களைத் தெளிவுபடுத்துகிறார் இக்கட்டுரையாசிரியர்.**

சித்த மருத்துவத்தின் சிறப்பம்சங்களின் முக்கியக் குறிப்புகள்:

1. முப்பு, 2. காயகல்பம், 3. குதிரை மருத்துவம், 4. வர்மம், 5. தோக்கணம். யோகா என்பது காயகல்பத்தின் பிரிவில் வருவதாகும். ஒரு மனிதனுடைய வாழ்க்கை 100 ஆண்டுகளாகும். அதில் அதிக நாட்கள் உறக்கத்திலும், சில நாட்கள் படிப்பிலும், சில நாட்கள் திருமண, குடும்ப வாழ்க்கையிலும் அதன்பின் குழந்தைகள் வளர்ப்பு, படிப்பு என மீண்டும் தொடர்ந்து சுழற்சியாகப் பழைய வாழ்க்கை ஆரம்பமாகி முதுமை வந்து நம் காலம் முடிந்து விடும்.

**காய கல்பம்**

காயம் - உடல்

உடலைக் கல்போல் காக்கும் முறையே கல்பம் எனப்படும். இந்த காயகல்பத்தினை மூன்றாக வகுத்து மணி, மந்திரம், அவிழ்தம் எனக் கூறுவர், காயகல்பத்திலடங்கிய இந்த மூன்று முறைகளும் விரிவாக அறியத்தக்கவைகளாகும்.

**மணி**

மணி என்பது இரசத்தைக் கட்டி மணி போலாக்குவது; இரசமணி என்பது; இதனை இரசக் குளிகை, சூதகக் குளிகை, ககனக் குளிகை என வழங்குவர். இரசம் என்பது ஒரு பொருளில் அடங்கிய சத்தாகும். பழம், பட்டை, மட்டை, ஆலை இவற்றிலிருந்து எடுக்கும் சாற்றுக்கு இரசம் என்று பெயர். இதுவே பூமியில் உள்ள சத்துப் பொருளான மண்ணின் வெண்மையையும் நீர் வடிகாலையும் சேர்த்து அதிக எடையுடன் உள்ள சத்துப் பொருளே இரசமணி என்பது. இத்தகைய இரசமணியின் பெருமையை எல்லா நாட்டினரும் அறியும்படி செய்தவர்கள் நமது தென்னாட்டுச் சித்தர்களே. குறிப்பாகச் சித்தர்களுள்

காலங்களில் தாழ்ந்த பகுதிகளில் உள்ள நீரை வெளியேற்றப் பயன் படும் பம்புகளுக்குச் சக்தி கொடுக்கும் இயந்திரமாகவும் பயன்படுத்த வாய்ப்பு உள்ளது. இதுவன்றி, வேளாண் இடு பொருள்களையும் விளை பொருள்களையும், டிரெய்லர் எனப்படும் உபகரணத்தை டிராக் டருடன் இணைத்து ஒரு இடத்தி லிருந்து தேவையான இடத்திற்குக் கொண்டு செல்லும் வாய்ப்பு ஏற் படுகிறது.

விவசாயிகளின் நிலங்களில் வேளாண்மைக்குத் தேவையான நீரைப் பெற கிணறுகள் மற்றும் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கத் தகுந்த இடங்களை மின்தடைக் கருவிகள் (ரெசிஸ்டிவிடி மீட்டர்) உதவியால் தேர்வு செய்து கொடுக்கப் படுகிறது.




தேர்வு செய்யப்பட்ட இடத்தில் குறைந்த ஆழமுள்ள குழாய்க் கிணறுகள் அமைக்க வேண்டுமானால், மணல் படிவங்களான இடங்களாக இருந்தால் கைத்துளைக் கருவிகள் வாடகைக்குக் கொடுக்கப்படுகின்றன. அதிக ஆழமுள்ள குழாய்க் கிணறுகள் அமைக்க வேண்டுமானால், வண்டல் மண் படிவங்கள் உள்ள (Sedimentry Area) இடங்களுக்குச் சுழல் விசைத் துளைக் கருவியும், பாறையாக (Hard Rock Area) இருந்தால் ஹாமர் துளைக் கருவியும் வாடகைக்குக் கொடுக்கப்படுகிறது. மாதிரி குழாய்க் கிணறு (Pilot Bore) அமைத்தபின் நீர் வரத்து இடங்களை அறிந்து அந்த இடங்களுக்கு மட்டும் ஸ்லாட்டட் பைப்பும் மற்ற இடங்களுக்குச் சாதாரண பைப்பும் வருமாறு கட்ட மைக்க மின் அளவீட்டுக் கருவி (Electrical Logger) வாடகைக்கு விடப் படுகிறது.

கட்டமைக்கப்பட்ட குழாய்க் கிணறு களில் நீர் ஊற்றுகளை அபிவிருத்தி (Develop) செய்ய காற்று அழுத்தக் கருவிகள் வாடகைக்குக் கொடுக்கப் படுகின்றன. திறந்தவெளிப் பாறைக் கிணறுகளில் (Open Wells) நீர் ஊற்றைப் பெருக்கி நீர்வளம் அதிக மாக்கக் கிணறுகள் அகலப்படுத்தப் படுகிறது. இதற்குப் பாறைகளை வெடி வைத்து தகர்க்க பாறை தகர்க்கும் கருவியும், திறந்தவெளிக் கிணறுக் குள் துளையிட்டு நீர்வளம் பெருக்க கிணற்றுக்குள் துளையிடும் கருவி யும், பக்கவாட்டில் 40' முதல் 80'க்குள் நீர் ஊற்று இருப்பது அறிந்தால் 1½" முதல் 4" விட்ட பக்கவாட்டுத் துளைகள் போட்டு நீர்வளம் பெருக்க நீள் துளைக்கருவி யும், கிணற்றில் துளையிடும் ஹாமர் கருவியும் (Inwell Rig) வாடகைக்குக் கொடுக்கப்படுகிறது.

வேளாண்மைப் பணிகளுக் கெனக் குறைந்த வாடகையில் விவ சாயிகளுக்குக் கொடுக்கப்படுகிறது.

இயந்திரங்கள் தமிழகத்தில் உள்ள மாவட்டந்தோறும் உதவி செயற் பொறியாளர் (வே.பொ.) ஆய்வு/இயந்திரம், விரைவுத் திட்டம் ஆகிய அலுவலகங்களின் மூலம் வாடகைக்கு வழங்கப்படுகிறது. இவ்வலுவலகங்களில் மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள விரும்பு வோர் அதற்கான விண்ணப்பங் களைப்பெற்று பதிவு செய்து முன் னுரிமையின்படி ஒதுக்கீட்டினைப் பெறலாம். தோராயமாக எப் பொழுது இப்பணிகளை மேற் கொள்ள இயலும் என்பதை உடன் அறிந்து கொள்ளலாம். அனைத்து ஒதுக்கீடுகளும் முன்னுரிமைப்படி தான் வழங்கப்படும்.

வேளாண்மைப் பணிக்கென குறைந்த வாடகையிலும், இந்து ஆதி திராவிட விவசாயியாக இருந்தால் 50 சதவீதம் மானியம் போக மீத முள்ள 50 சதவீதம் வாடகையாக வசூலிக்கப்படுகிறது. சிறு மற்றும் குறுநில விவசாயிகளுக்கு உரிய சலுகையும் அளிக்கப்படுகிறது. இதனால் விவசாயத்திற்கு இயந்தி ரத்தை உபயோகப்படுத்த முடியாத அளவில் இருக்கும் சிறு விவசாயி களும், பொறியியல் நுணுக்கங் களைத் தங்களது பண்ணைப் பணி களில் ஈடுபடுத்த ஏதுவாகியுள்ளது.







# சமையல் எரிபொருள் சிக்கனம்

சில எளிய எரிபொருள் சிக்கன முறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் இல்லத் தலைவிகள் '25 சதவிகிதம் சமையல் காஸ் அல்லது கெரஸினை மிச்சப்படுத்த முடியும் என்று உங்களுக்குத் தெரியுமா? இவ்வாறு மிச்சப்படுத்தும் ஒவ் வொரு துளி கெரஸின் அல்லது சமையல் காஸ் நமது நாட்டின் எரி பொருள் நெருக்கடியைச் சமாளிப் பதில் வெகுவாக உதவி செய்யும் என்பதையும் தெரிந்து கொள் ளுங்கள்.

சீரிய சமையல் பழக்கங்களைக் கடைப்பிடிப்பதன் வாயிலாகச் சராசரி 30 சதவிகித எரிபொருளை நாம் மிச்சப்படுத்த இயலும். உண் மையில், சில சமையல் பழக்கங்கள் கணிசமான எரிபொருளை வீணாக் குகின்றன.

அப்படிப்பட்ட இழப்புக்களைக் குறைந்தபட்சமாக்குவது எப்படி?

இல்லத்தலைவி தனது சமையல் எரிபொருளிலிருந்து அதிகபட்சம் பயன்பெற உதவி செய்வது எப்படி? இதோ பதில்:

**சில நிமிடத் திட்டமிடல் பெருமளவு எரிபொருளை மிச்சப்படுத்தும்**

ஒவ்வொரு செட்டான குடும்பத் தலைவிக்கும் அடுப்பு வெறுமனே எரிவது வீண் என்று தெரியும். எப்படி? ஸ்டவ்வை மூட்டு முன்னர் எல்லாப் பொருள்களையும் தயார் நிலையில், கைக்கு எட்டும்படி வைத்துக் கொள்ளவேண்டும். ஒரு காஸ் ஸ்டவ்வின் பெரிய பர்னரின் தீயை அநாவசியமாக எரியவிட்டால் ஒரு மணிக்கு 135 கிராம் காஸ் வீணாகிறது அல்லது 55 காசு நட்டமாகிறது என்று சோதனைகள் புலப்படுத்தியிருக்கின்றன.

நினைவிருக்கட்டும் - சமையலுக்கு வேண்டிய பொருள்களை எல்லாம் தயாராக வைத்துக் கொண்டு உங்கள் ஸ்டவ்வை மூட்டவும். வெறுமனே எரியும் தீயை உடனே அணைக்கவும்.

**கொதிக்கத் துவங்கியவுடன் தீயைக் குறைக்கவும்**

ஏனத்தில் உள்ள பண்டங்கள் கொதிநிலையை அடைந்தவுடன், தாழ்ந்த தீயே அது கொதிப்பதற்குப் போதுமானது. கொதிக்கும் கட்டத் தில் கூடுதலான வெப்பம், திரவத் தின் உஷ்ணத்தை அதிகப்படுத் தாமல் அது ஆவியாகப் போகவே செய்யும். ஆகையால், நீரோ அல்லது வேறு திரவமோ கொதிக்கும்போது தீயைக் குறைத்தால், சமையல் நேரத்தை அதிகரிக்காமல் வீணா வதைக் குறைக்கலாம். காஸ் ஸ்டவ் ஒன்றில் குமிழிகளைச் 'சிம்மர்' நிலைக்குத் திருப்பியும் கெரஸின் ஸ்டவ் ஒன்றில் திரியை இறக்கியும் அவ்வாறு செய்வது சாத்தியம்.

நீங்களே முயன்று பாருங்கள்; சமைக்கும் நேரம் அதேதான் என் பதை அறிவீர்கள்.

நினைவிருக்கட்டும் - கொதிக்கத் துவங்கியதும் தீயைக் குறையுங்கள். இந்த எளிய நடவடிக்கையின் பல னாக 35 சதவிகித எரிபொருள் மிச்சமாகிறது என்று சோதனைகள் காட்டியிருக்கின்றன.

**சிறிய பர்னர் எப்போதும் எரிபொருளை மிச்சப்படுத்துகிறது.**

சமையல் காஸ் ரேஞ்ச் ஒன்றில் பெரிய பர்னர் ஒன்றும், சிறிய பர்னர் ஒன்றும் இருக்கின்றன. சிறிய பர்னர் எரிந்தால் பெரிய பர்னரை விட 6 முதல் 10 சதவிகிதம் வரை குறைவாக காஸ் செலவாகிறது என்று உங்களுக்குத் தெரியுமா? இது தெரியாமல் இன்று வரை எவ்வளவு எரிபொருளை அநாவசியமாகச் செலவழித்திருப்பீர்கள் என்றுதான் கற்பனை செய்து பாருங்களேன்!

சிறிய பர்னர், சமையலை முடிப் பதற்குச் சற்றுக் கூடுதலான நேரத்தை எடுத்துக் கொள்கிறது என்பது உண்மைதான். ஆனால் எரிபொருளை வீணாக்கும் அளவுக்கு உங்களுக்கு எப்போதுமே அவ்வளவு அவசர மிராது.

நினைவிருக்கட்டும் - காஸ் ஸ்டவ் ஒன்றில் பெரிய பர்னரை விட சிறிய பர்னர் குறைவாகவே எரிபொருளைச் செலவிடுகிறது. 250 கிராம் உருளைக் கிழங்கை வேகவிட்டுப் பார்த்ததில், சிறிய பர்னர் பெரிய பர்னரை விட 6.5

சதவிகிதம் குறைவான காஸைச் செலவிட்டது. ஆனால், பெரியதை விட 7 நிமிடங்கள் அதிக நேரம் பிடித்தது. சிறிய பர்னரையே அடிக்கடி உபயோகிக்கவும் - குறிப்பாக உங்களுக்கு நேரம் இருக்கும்போது.

**ஆழமில்லாத, அகலப் பாத்திரங்கள் எரிபொருளை மிச்சப்படுத்துகின்றன**

நாலாப்பக்கமும் படர்ந்து வெளியே கண்ணுக்குத் தெரியும்படியான தீ எரிபொருளை வீணாக்குகிறது. ஏனெனில் அதன் வெப்பம் சுற்றுப்புறத்தில் பரவுகிறது. ஆனால், தீயை அகலமான பாத்திரத்தைப் பயன்படுத்திக் கூடுமானவரை மறைத்தால் எரிபொருளை மிச்சப்படுத்தலாம். பல ஸ்டவ்களிலும் 25 செ.மீ. குறுக்களவு பாத்திரம் சமையலுக்கு மிகவும் ஏற்றது என்று எமது ஆய்வுக் கூடச் சோதனைகள் நிரூபித்திருக்



கின்றன. இந்தக் குறுக்களவுள்ள பாத்திரம் தீயை முற்றிலும் மறைக்கக் கூடும். குறுகலான பாத்திர உபயோகத்தைத் தவிர்க்க இயலாவிட்டால், தீயைக் குறைக்க முயன்று பாருங்கள். இதனால் பாத்திரத்தின் பக்கங்களைத் தீ நாக்குகள் தழுவாமல் இருக்கும்.

நினைவிருக்கட்டும் - குறுகலான பாத்திரங்களை உபயோகிக்காதீர்கள். தீ நாக்குகள் பக்கங்களைத் தழுவாமல் பார்த்துக் கொள்ளுங்கள். அடி அகன்ற பாத்திரத்தைக் கொண்டு தீயை மறையுங்கள்.

**நீர் அளவு குறைந்தபட்சமாக இருக்கட்டும்**

பல்வேறு உணவுத் தயாரிப்புகளுக்கு நீரின் அளவு வேறுபடுகிறது. ஒரே உணவுக்குக்கூட பல குடும்பத் தலைவிகள் வெவ்வேறு அளவு நீரை உபயோகிக்கிறார்கள். உபரி நீர் எதுவும் எரிபொருளை வீணாக்குகிறது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளவும். கூடுதல் நீரைப் பின்னர் வடியச் செய்ய வேண்டும் என்பதுடன் மதிப்புள்ள சத்துக்களையும் இழக்க நேரிடுகிறது. ஆகையால் குறைந்த பட்சம் தண்ணீரை உபயோகியுங்கள். இந்த வழியில் உணவு மேலான வகையில் ருசிக்கவும் செய்யும்.

நினைவிருக்கட்டும் - உபரி நீரினால் கூடுதலாக எரிபொருள் செலவாகிறது. இதை மிச்சப்படுத்தலாம். அரிசியை வேகவைத்து நடத்திய சோதனையில், தேவையான நீரில் இருமடங்கு, 65 சதவிகிதம் கூடுதல் எரிபொருள் செலவுக்கு வழிசெய்தது.

**சமைக்குமுன் ஊறவைக்கவும்**

பருப்பு, அரிசி போன்ற பொருள்களைச் சமைப்பதற்கு முன் வெவ்வேறு கால அளவுக்கு ஊறவைப்பதால் எரிபொருள் மிச்சமாவதைச் சோதனைகள் வெளிப்படுத்தின. உதாரணமாக 250 கிராம் வெள்ளைக் கொத்துக் கடலையை இரவில் ஊற வைத்துச் சமைத்ததில், ஊற வைக்காமல் சமைத்த அதே அளவு கடலைக்கு ஆனதைவிட 22 சதவிகிதம் குறைவாக எரிபொருள் செலவாயிற்று.

நினைவிருக்கட்டும் - தானியங்களைச் சமைப்பதற்கு முன் சிறிது நேரம் ஊறவைத்தால், எரிபொருளில் கணிசமான மிச்சம் ஏற்படும்.

**பிரஷர் குக்கர் எரிபொருளை மிச்சப்படுத்துகிறது**

பிரஷர் குக்கர் ஒன்றே மிக வேகமாக, மிகச் சிக்கனமாகச் சமைக்கும் வழியாகும். அரிசியில் 20 சதவிகிதம் ஊறவைத்த கடலைப் பருப்பில் 46 சதவிகிதம் மற்றும் மாமிசத்தில் 41.5 சதவிகிதம் சாதாரண சமையல் முறையை விட எரிபொருள் மிச்சமாவதைச் சோதனைகள் காட்டியிருக்கின்றன. சமையல் நேரமும் அதேபோல் உயர் அளவு மிச்சமாகிறது. பிரஷர் குக்கரில் மேலும் மிச்சங்களுக்குக் குக்கரின் டப்பாக்களை வெவ்வேறு பதார்த்தங்களுக்கு, உதாரணமாக அரிசி, காய்கறி, பருப்பு இவற்றுக்கு ஒரே சமயத்தில் உபயோகிக்க வேண்டும். நீங்கள் எவ்வளவு எரிபொருளை மிச்சப்படுத்துவீர்கள் என்று நினைத்துப் பாருங்கள். உங்கள் சாப்பாடு முழுவதும் அவ்வளவு விரைவாகவும் தயாராகிவிடும்.

> ● நான் ஒரு பாட்டாளி; என்றைக்கு நான் உழைக்கவில்லையோ, அன்றைக்கு எனக்கு உண்பதற்கு உரிமையில்லை.
>
> —பிரேம்சந்த்

நினைவிருக்கட்டும் - ஒரு பிரஷர் குக்கர் எரிபொருளையும் நேரத்தையும் மிச்சப்படுத்தும். பல்வேறு உணவுப் பதார்த்தங்களையும் ஒரே சமயத்தில் பிரஷர் குக்கரின் டப்பாக்களில் சமைத்தால் மேலும் மிச்சப்படுத்துவது சாத்தியம்.

**உங்கள் சாப்பாட்டு நேரத்தைத் திட்டமிடுங்கள்**

குடும்பத்தினர் அனைவரும் ஒன்றாகச் சாப்பிட்டால், உணவை மீண்டும் சுடவைப்பதைத் தவிர்க்கலாம். ஒன்றாக உட்கார்ந்து சாப்பிடுவது சாத்தியமில்லையானால், சமைத்த சூடான உணவை, இன்ஸ்லேட் செய்த பெட்டகங்களில் பாது காத்து வைத்துக் கூடப் பரிமாறலாம்.

**சுத்தமான பாத்திரங்கள் எரிபொருளை மிச்சப்படுத்தும்**

கெட்டில்களிலும், குக்கர்களிலும் உட்புறங்களில் கரையாத உப்புக்களின் சன்னமான படிவுகூட பாத்திரத்தின் பண்டங்களுக்கு வெப்பம் பாய்வதைக் குறைக்கும். இது எரிபொருள் உபயோகத்தை 10 சதவிகிதம் வரை அதிகரிக்கச் செய்யும். உங்கள் சமையல் பாத்திரங்களின் உட்புறங்களை எப்போதும் நன்கு தேய்த்துச் சுத்தப்படுத்துங்கள்.

**உறைந்த உணவுகளை அறையின் வெப்ப நிலைக்கு வர விடுங்கள்**

குளிர்ந்த பால், உறைந்த மாமிசம் அல்லது வேறு குளிர்ந்த உணவுப் பொருள்களை ரெஃப்ரிஜிரேட்டரி



லிருந்து நேராக எடுத்து அடுப்பிலுள்ள பாத்திரத்திற்கு மாற்றக் கூடாது. அதை ரெஃப்ரிஜிரேட்டருக்கு வெளியே சிறிது நேரம் வைத்துவிட்டு ஸ்டவ் மீது ஏற்ற வேண்டும். மிகவும் குளிர்ந்த உணவுகளுக்கு அதிக எரிபொருள் செலவாகும்.

**சூடு இழக்காமல் இருக்க மூடியைப் போடவும்**

சமையல் பாத்திரங்கள் மற்றும் வாணலிகளை மூடியால் மூடுவது நல்ல வழக்கம். வாய் திறந்திருப்பதால் இழக்கும் வெப்பம், எரிபொருள் இழப்பைக் கணிசமாக்குகிறது. 96 சதவிகிதம் சென்டிகிரேடு வெந்நீர் அடங்கிய 100 சதுர செ.மீ. திறப்புள்ள பாத்திரம் ஒரு மணிக்கு 7.2 கிராம் காஸை வீணாக்கும். அது 3 காசு பெறும். சமையலறை வழியே காற்று வீசிக் கொண்டிருந்தால் வெப்ப இழப்பு 2½ மடங்கு அதிகரிக்கும். பாத்திரத்தை ஒரு மூடியினால் மூடியிருந்தால் வெப்ப இழப்பு வெகுவாகக் குறைந்து மணிக்கு 1.45 கிராம் காஸ் நட்டமாகும். பாத்திரத்தை மூடுவதால் மணிக்கு 2 காசு மிச்சமாகும். உட்புறம் வெப்பமும் தங்கும்.

நினைவிருக்கட்டும் - திறந்த சமையல் பாத்திரம் அல்லது வாணலியின் மீது எப்போதும் மூடி ஒன்றைப் போட்டு மூடவும்.

**சுத்தமான பர்னரும் உதவுகிறது**

உங்கள் காஸ் அடுப்பின் பர்னரை வழக்கமாகச் சுத்தம் செய்வது முக்கியமாகும். கெரஸின் ஸ்டவ்வின் திரியைக் கத்தரித்துவிட வேண்டும். அல்லது மாற்ற வேண்டும். காஸ் பர்னரைப் புகைக்கரி அடைக்கும். கெரஸின் ஸ்டவ்வின் தீய்ந்த எரிபொருள் உபயோகத்தை அதிகரிக்கும்.

நினைவிருக்கட்டும். பிரகாசமான, ஒரே சீரான நீலத் தீ நன்கு எரிவதற்கு அடையாளம். நீங்கள் ஆரஞ்சு, மஞ்சள் அல்லது சீரற்ற தீயைக் கண்டால், பர்னர் அல்லது திரியைச் சுத்தம் செய்ய வேண்டிய நேரம் வந்து விட்டது என்று அர்த்தம்.

-'பெட்ரோலியம் கன்சர்வேஷன் ரிசர்ச் அசோசியேஷன்' அறிக்கையிலிருந்து.



> ● சுதந்திரம் என்றால் பயமில்லாது வாழ்வது தான்; பயமில்லாது வாழ, நியாயமாக நடந்து கொள்ள வேண்டும்.
>
> —காமராசர்

## தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம்

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தில், இதுவரை 2431,33 எக்டேர் நிலப்பரப்பில் தேயிலை பயிரிடப்பட்டுள்ளது. இத்துடன் வனத்துறையில் கொளப்பள்ளி தேயிலைக் கோட்டத்தில் 347 எக்டேர் நிலப்பரப்பில் பயிரிடப் பட்ட தேயிலைத் தோட்டமும் இக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு பராமரிக்கப்படுகிறது.

இந்த கழகத்தில் மொத்தம் 3,350 தொழிலாளர் குடியிருப்புகளில், 1991-ஆம் ஆண்டு மார்ச் வரை வீடுகள் கட்டப்பட்டுள்ளன. மீதமுள்ள வீடுகளைக் கட்டி முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1991-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் மட்டும் 18,93,941 கி.கி. தேயிலைக் கொழுந்து அறுவடை செய்யப்பட்டுள்ளது.

## நமது எழில்மிகு உலகம்



நீங்கள் என்னுடன் கூடியிருந்தால் நமது இந்த அழகான உலகத்தைப் பற்றி உங்களுடன் அளவளாவ விரும்புவேன். மலர்கள், மரங்கள், பறவைகள், விலங்குகள் பற்றி பேசுவேன். வானில் தோன்றும் நட்சத்திரங்கள், மலைகள், பனிக்கட்டியாறுகள் மற்றும் உலகில் நம்மை சுற்றியுள்ள பல அற்புதக் காட்சிகளைப் பற்றி பேசுவேன். நம்மைச் சுற்றிலும் அழகு ஜொலிக்கிறது. எனினும் வயது முதிர்ந்த எங்களைப் போன்றவர்கள் இந்த இயற்கை அழகை மறந்துவிட்டு அலுவலகங்களின் பணியிலேயே ஆழ்ந்திருக்கிறோம்.

நீங்கள் எங்களைவிட அதிகம் அறிவுள்ளவர்களாய் விளங்குவீர் என்று நம்புகிறேன். உலகில் காணும் இயற்கை எழில் இன்பவாழ்வினை கண்ணாலும் காதாலும் பருகி மகிழ்ச்சியுறுவீர்கள் என நம்புகிறேன். மலர்கள் பெயர்களைக் கொண்டு அவற்றை நீங்கள் அடையாளம் கண்டுகொள்வீர்களா? குரலோசை மூலம் பறவைகளை இனம் காண்பீர்களா? பரிவுடனும் பாசத்துடனும் அணுகினால் நீங்கள் இயற்கையின் படைப்புக்களுடன் நட்புறவு கொள்வது வெகு எளிது. நீங்கள் பழங்கால கதைகள் பலவற்றை படித்திருப்பீர்கள். தேவதை கதைகளை படித்திருப்பீர்கள். ஆனால் இந்த உலகமே மிகப்பெரியதோர் தேவதைக் கதைதான். ஒரு சாகசக்கதைதான். உலகின் எழிலை உயிரினங்களின் வாழ்வின் அழகை ரசித்து இன்புறுவதற்கான உள்ளம் வேண்டும். கண்களைக் கொண்டு பார்க்க வேண்டும், செவிமடுத்துக் கேட்க வேண்டும்.

**(1949 டிசம்பர் 3-ம் தேதி சங்கர்ஸ்வீக்லி, புதுதில்லி பத்திரிகையின் சிறுவர்கள் சிறப்பிதழுக்கு நேரு எழுதியது)**

# நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

தமிழ்நாட்டிலேயே திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டமானது மழைகுறைவாகக் கிடைக்கும் பகுதியாகும். மேலும் காலம் தவறிப் பெய்யும் மழையினாலும் அதிவேகமாக வீசுகின்ற காற்றினாலும் ஏற்படும் மண் அரிப்பினால் வேளாண்மை மிகவும் பாதிக்கப்படுகிறது. இந்தக் காரணங்களினால் ஆயிரக்கணக்கான ஏக்கரில் புஞ்சை நிலங்களில் வேளாண்மை செய்யப்படாமல் தரிசாகவே விடப்படுகிறது.

இம்மாதிரி புஞ்சை தரிசு நிலங்களை மேம்பாடு செய்திடவும் அதன் மூலம் வருவாய் பெற்றிடவும் வேண்டி தமிழ்நாடு அரசு வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் ஒரு திட்டம் தயாரித்து, மத்திய அரசின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது. இதற்காகும் செலவினங்களைச் செய்ய 'டென்மார்க்' நாடு உதவ முன் வந்துள்ளது.

அதன் அடிப்படையில் அரசின் ஆணைக்கேற்ப வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் 1.10.'90 முதல் 31.3.'91 முடிய திட்ட முன் பணிகள் நடைபெற்று முடிவடைந்துள்ளன.

இந்த விரிவான நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் 4 வகையான பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது.

### 1. நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாடு

சிற்றாற்றின் தென்பகுதியில் தென்காசி, திருநெல்வேலி, அம்பாசமுத்திரம் ஆகிய வட்டங்கள் சந்திக்கும் பகுதியில் 5,000 எக்டேர் பரப்பில் ஒரு துணை நீர்ப்பிடிப்புப் பகுதி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது இத்திட்டம் ரூ.56.46 இலட்சம் செலவில் செயலாக்கப்படும்.

நிலத்தின் தன்மைக்கு ஏற்றவாறும், பாசன நீர் கிடைக்கும் ஆதாரத்தின் அடிப்படையிலும் - மழைநீர் சேமிப்புப் பணிகள், மண் ஈரப்பதம் காக்கும் இத்திட்டத்தின் மூலம் பெத்தநாடார்பட்டி, பூலங்குளம், கீழப்பாவூர், கழுநர்குளம், மாயமான்குளம், ஆலங்குளம், சிவலார்குளம், மாறாந்தை ஆகிய கிராமங்கள் பயன்பெற உள்ளன.

இந்தப் பணிகளுக்கு ஆகும் செலவினத்தில் 70 சதவிகிதம் மானியமாகவும் மீதமுள்ள 30 சதவிகிதம் கடனாகவும் அளிக்கப்படும். இந்தக் கடன், திட்டம் நிறைவேறிய 2 ஆண்டுகளுக்குப் பின் 10 ஆண்டுகளில் சம தவணைகளில் திரும்பப் பெறப்படும்.

### 2. காற்று அரிப்புத் தடுப்புத் திட்டம்

இத்திட்டத்தை நிறைவேற்ற சிற்றாறு நீர்ப்பிடிப்பில் 3,000 எக்டேர் பரப்பளவு கொண்ட துணை நீர்ப்பிடிப்புப் பகுதி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ரூ.26.02 இலட்சம் செலவு செய்யப்படும். காற்றினால் ஏற்படும் மண் அரிப்பைத் தடுக்க மரங்களை, காற்றின் திசைக்குக் குறுக்கே வளர்க்கும் முறைக்குத் தாவர அரண் என்று பெயர். இம்மாதிரி தாவர அரண்கள் அமைத்து மண் அரிப்பிலிருந்து தரிசு நிலங்களை மீட்டுப் பயன்பெறுவதற்கு இத்திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது. வீராணம், கருவந்தா, குரிச்சான்பட்டி, நவநீதகிருஷ்ணபுரம், ஊத்துமலை, கீழக்கலங்கல், மேலமருதப்பபுரம், பலபத்திரராமபுரம், மருக்காலங்குளம் ஆகிய கிராமங்களில் இத்திட்டம் மேற்கொள்ளப்படும். இந்தப் பணிகளுக்காகும் மொத்த செலவினமும் மானியமாகக் கருதப்படும்.

### 3. தேரிநில மேம்பாட்டுத் திட்டம்:

இத்திட்டத்தின் மூலம் திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தின் ராதாபுரம் வட்டத்தில் மணல் மேடிட்ட தேரிநிலப்பகுதியான கரைச்சுத்துப் புதூர், கரைச்சுத்து உவரி, முதுமுத்தான்மொழி ஆகிய பகுதிகளில் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் தாவர அரண்கள் செம்மைப்படுத்தி பராமரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு ஆகும் மொத்தச் செலவும் மானியமாகக் கருதப்படும்.

### 4. தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்

ராதாபுரம் வட்டத்தில் பயிர் செய்யக்கூடிய ஆனால் தரிசாக விடப்பட்டதுமான 5,000 எக்டேர் பரப்பில் புதிதாகத் தாவர அரண் அமைத்தல், ஏற்கெனவே வேளாண்மைப் பொறியியல் துறையினரால் அமைக்கப்பட்ட தாவர அரண்களின் இடைப்பட்ட இடங்களில் மரங்கள் வளர்க்க கன்றுகள் வழங்குதல், மழைநீர் சேகரிப்புப் பணிகள் ஆகியன செயல்படுத்தப்பட உள்ளன.

இத்திட்டம் பரமேஸ்வரபுரம், உதயத்தூர், சவுந்திரபாண்டியபுரம், ராதாபுரம், தனக்கர்குளம், சண்முகரெங்கபுரம், கும்பிகுளம், வேப்பிளான்குளம் ஆகிய 8 கிராமங்களில் செயல்படவுள்ளது.

இத்திட்டங்களைச் செயல்படுத்தும்போது தரிசு நிலங்களில் மழையினாலும், காற்றினாலும் மண் அரிப்பு மேலும் ஏற்படாமல் தடுக்கப்படுவதுடன், பலவேறு தரங்களில் அமைந்த தரிசு நிலங்களின் தன்மைக்கேற்ப அந்த வகை நிலங்களிலிருந்தும் வருமானம் கிடைக்க வகை செய்யப்படும்.

விவசாயிகளுக்கு ஏற்புடையதும், பலனளிக்கக் கூடியதுமான புதிய விவசாய முறைகளைக் கடைப்பிடிக்கக் கூறுதல், நிலத்தின் தன்மைக்கேற்பவும், வருவாய் தரும் வகையிலும் புதிய தொழில் நுட்பங்கள் தெரிவித்து அதனால் ஏற்படும் கூடுதல் ஆதாயங்களைப் பற்றிய விழிப்புணர்வை விவசாயிகளின் மத்தியில் ஏற்படுத்துதல், மேலும் இத்திட்டத்தின் கீழ்வரும் தாவர அரண்களுக்கு இடைப்பட்ட நிலச் சொந்தக்காரர்களுக்கும், புஞ்சைப் பகுதி விவசாயிகளுக்கும் அவர்கள் தீவிர விவசாயம் செய்து வேளாண்மையில் மேம்பாடு அடைய உரிய இடு பொருட்கள் உறுதியாகக் கிடைக்க வழிகள் செய்தல், தற்போது தரிசுநிலம் சொந்தமாக வைத்திருந்து அதில் எந்தவித வேளாண்மை செய்யாமல் இருக்கும் நிலச் சொந்தக்காரர்களுக்கு நீண்டகால அடிப்படையில் வேலை கிடைக்கும் வாய்ப்பு ஏற்படுத்துதல், அத்துடன் நிலமற்ற கூலி வேலையாட்களுக்கும், குறு விவசாயிகளுக்கும் அன்றாடம் வேலை கிடைக்க வகை செய்தல் போன்ற குறிக்கோள்கள் நிறைவேற்றப்படும்.

### திட்டம் செயலாக்கப்படும் முறை:

'டென்மார்க்' அரசு 15 ஆண்டுக் கால இடைவெளியில் 3 கட்டங்களில் தரிசுகளின் நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்களை நிறைவேற்றிட உதவிகள் செய்ய முன் வந்துள்ளது. அதில் முதல் கட்டமாக 1.10.1990 முதல் 1.4.1991 வரை 3½ ஆண்டுகளில் முதல் 6 மாத காலம் துவக்கப் பணிகள் செய்யவும் மீதமுள்ள 3 ஆண்டுத் திட்டம் நிறைவேறும் காலமாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்குச் சிதம்பரனார் மாவட்டத்திலுள்ள சில கிராமங்களையும் உள்ளடக்கி மொத்தமுள்ள 17,500 எக்டேர் பரப்பில் 3½ ஆண்டுகளில் முதல் கட்டப் பணிகள் நிறைவேற்றிட ரூ.6.25 கோடி செலவினம் செய்ய ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொகையினை டென்மார்க் நாடு 'டானிடா' - டென்மார்க் சர்வதேச மேம்பாட்டு முகமை என்ற உதவித் திட்டத்தின் மூலம் வழங்குகிறது.

**அட்டைப்பட விளக்கம்:**

**முதல் அட்டை:**
கல்லட்டி அருவி
(நீலகிரி மாவட்டம்)

**இரண்டாம் அட்டை:**
தொலைநோக்கி மையம்
தொட்டபெட்டா,
(உதகமண்டலம்)

**நான்காம் அட்டை:**
வன விலங்குகள்

— புகைப் படங்கள் உதவி: சுற்றுலாத்துறை

ஒன்றுக்கும் உதவாது, பலன் அளிக்காது என்று கைவிடப்பட்டு காலமெல்லாம் தரிசாகவே இருந்து வரும் 17,500 எக்டேர் பரப்பு நிலங்களில் உரிய பயிர் வளர்த்து பலன் கிடைக்கச் செய்யும் இந்த 'விரிவான நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் 'செயலாக்கம் பெற 1.10.1990 முதல் அனைத்து ஆயத்தப் பணிகளும் தொடங்கப் பட்டுவிட்டன.

## செயல்

நல்ல செயல்கள் நம்மை உயர்த்துகின்றன. நாம் நம் செயல்களின் புதல்வர்களாக இருக்கிறோம்.

—செர்வாண்டிஸ்

நம்முடைய செயல்களே நம்முடைய தேவ தூதர்கள். அவ்வை நிழல் போல் நம்முடனே எப்பொழுதும் இருந்து கொண்டிருக்கின்றன.

—ஜான் பிளெச்சர்

உலகில் கூறப்படும் அழகான கருத்துக்கள் அனைத்தும் ஒரு நல்ல செயலுக்கு ஈடாகாது.

—ஜேம்ஸ் ரஸ்ஸல் லவல்

நம் கடன் செயலாற்றுவதுதான். பலன் கொடுப்பது கடவுளின் கடன்.

—விப்பிள்

செயல் எப்பொழுதும் இன்பம் தராமல் இருக்கலாம். ஆனால் செயலன்றி ஒரு நாளும் இன்பம் உண்டாவதில்லை.

—பெஞ்சமின் டிஸ்ரேலி

நன்றாகப் பேசுவது நல்லது தான்; ஆனால், நன்றாகச் செய்வது அதனினும் நல்லது.

—கிளார்க்

வாழ்க்கை நல்ல முறையில் வாழப் பெற்றதா என்பதை ஆண்டுகளைக் கொண்டு கணக்கிடாமல், செயல்களைக் கொண்டு கணக்கிட வேண்டும்.

—ஷெரிடன்

நாம் எவ்வளவு செய்யப் போகிறோம் என்பது முக்கியமல்ல. எவ்வாறு செய்யப் போகிறோம் என்பதே முக்கியம். அதிகமாகச் செய்வதைக் காட்டிலும், செய்வதைத் திருத்தமாகச் செய்வதே சிறப்பு.

—ரஸ்கின்

நாம் நம் செயல்களைத் தீர்மானிப்பது போல், நம் செயல்களும் நம்மைத் தீர்மானிக்கின்றன.

—ஜியார்ஜ் எலியட்

நிலத்திற்கு அழகு நெல்லும் கரும்பும். குளத்துக்கு அழகு தாமரை. பெண்ணுக்கு அழகு நாணம். ஒரு தனி மனிதனுக்கு அழகு அவன் செய்யும் நற்செயல்கள்.

—விளம்பி நாகனார்



ஆகியவைகளில் செயல்படுத்தப் பட்டு, உறுப்பினர்களுக்கு 90 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள் ளன. மேலும் 1990-91-ஆம் ஆண் டிற்கு இத்திட்டத்தின்கீழ் நரிக்கல் பட்டி திருவள்ளுவர் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் மற்றும், அஞ்சுகம் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், சின்னாளப் பட்டி ஆகியவற்றின் 100 உறுப் பினர்களுக்கு வீடுகள் கட்ட அரசு மானியமாக ரூ.10.70 இலட்சம் அனுமதித்துள்ளது.

**சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம்**

இத்திட்டத்தில் சேர்ந்துள்ள உறுப்பினர்கள் 55 வயதிற்குள் இறக்க நேரிடின், தமிழக அரசு காப்பீட்டுக் கழகம் மூலமாக முன்பு ரூ.3,000-ம் இனாமாக வழங்கி யதை அரசு ரூ.10,000-ம் ஆக உயர்த்தி வழங்கி வருகின்றது. தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் மூலமாக ரூ.2,000/- இனா மாகவும் வழங்குகிறது. இதனைத் தவிர, உறுப்பினர்கள் இத்திட்டத் தில் சேர்த்து செலுத்திய தொகை அனைத்தும் அரசு சந்தாவுடனும், வட்டியுடனும் அவர்களுடைய வாரிசு தாரர்களுக்கு வழங்கப்படுகிறது. இத் திட்டத்தின்கீழ் திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்திலுள்ள 33 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள உறுப்பினர்களில் இதுவரை 1,074 பேர் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு திண்டுக்கல்லில் நடைபெற்ற கைத்தறிக் கண்காட்சி யில் 70 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 84 ஸ்டால்கள் எடுத்து, சுமார் 50 இலட்சம் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இவ்வாண்டு சுமார் 100 இலட்சம் மதிப்புள்ள ஜவுளிகள் விற்பனையாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**தள்ளுபடி மான்யம்**

கைத்தறி ஜவுளிகளை நுகர் வோர் அதிகம் வாங்க வேண்டும் என்ற நோக்கத்துடன் விற்பனைத் தொகையில் அரசு 20 சதவிகிதம் தள்ளுபடி மான்யம் வழங்குகின்றது. திண்டுக்கல் சரகத்தில் உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங் களுக்கு அரசு வழங்க வேண்டிய தள்ளுபடிமான்யம் ரூ.28.60 இலட்சத்தில் ரூ.16.59 இலட்சம் கடந்த இரண்டு மாதங்களில் நெச வாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு வழங்கியுள்ளது. இதனால் நெசவாளர்களுக்குத் தொடர்ந்து நூல் வழங்கி உற்பத்தி தடையின்றி நடக்க பேருதவி புரிந்துள்ளது குறிப் பிடத்தக்கதாகும்.

இச்சரகத்தில் உள்ள 34 நெச வாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 1990 தீபாவளி தள்ளுபடி காலத்தில் ரூ.10/- இலட்சம் அளவிற்கும் 1991 பொங்கல் தள்ளுபடி காலத் தில் ரூ.6/- இலட்சம் அளவிற்கும் விற்பனை செய்தன.


**தமிழரசு**

**சந்தா விவரம்**

**தமிழ்:**
ஓராண்டு = ரூ.24
அரையாண்டு = ரூ.12

**ஆங்கிலம்:**
ஓராண்டு = ரூ.12
(அரையாண்டு சந்தா கிடையாது)

**விவரங்களுக்கு:**
உதவி இயக்குநர்
தமிழரசு
(விற்பனை மற்றும் விநியோகம்)
அரசினர் தோட்டம்
சென்னை-600 002.






# சாலைப் பாதுகாப்புக் கல்வி


**இல. பழனியப்பன்**
**தொழிலாளர் நலப்பிரிவு அலுவலர்**
**பல்லவன் போக்குவரத்துக் கழகம்**


நம் அன்றாட வாழ்வில் சாலைப் போக்குவரத்து மிக இன்றியமையாத ஒன்றாக அன்று முதல் இன்று வரை இருந்து வருகிறது. ஏன் என்றுமே இருந்து வரும். அதில் இரு வேறு கருத்துக்கே இடமில்லை. ஆம் உணவு, உடை, உறைவிடம் என்ற மனிதவாழ்வின் அடிப்படைத் தேவை களை நாம் அனைவரும் பெற, சாலைப் போக்குவரத்தே துணை நிற்கிறது.

சாலை வழிப் பயணமே, சாதாரண மக்கள் நாள்தோறும் பயன்படுத்தும் வண்ணம் பொருளாதார ரீதியில் சிக்கனமாகவும் எளிமையாகவும் விளங்குகிறது. மேலும் இன்றைய சமுதாய வளர்ச்சியில் ஒரு இடத் திலிருந்து மற்றொரு இடத்திற்குப் போய்வரும் தேவைகள் நாள் தோறும் அதிகரித்து வருகின்றன.

தொழில் வளர்ச்சியின் காரண மாகக் கிராமத்திலிருந்து நகரை நோக்கிச் செல்லும் மக்களின் நட மாட்டம் காரணமாக நகர வளர்ச்சி மிக வேகமாக ஏற்பட்டு வருகிறது. இதன் விளைவாகச் சாலையைப் பயன்படுத்தும் வாகனங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. இதன் காரண மாகச் சாலை விபத்துக்களும் நாள் தோறும் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. விபத்துக்களின் விளைவு களால் பல நேரங்களில் தனி மனித உயிருக்கும், உடமைக்கும் கூட ஆபத்து ஏற்பட்டு வருவதை நாம் அன்றாடம் காண்கிறோம். ஆகவே விபத்துக் களைப்பற்றிய விழிப்புணர்வை இளைய தலை முறையினருக்கு ஏற் படுத்திப் பாதுகாப்பான சாலைப் பயணத்திற்கு வழிவகை காண்பதே சாலைப் பாதுகாப்புக் கல்வியின் அடிப்படை நோக்கமாகும்.

## சாலை விபத்துக்களுக்கான காரணங்கள் ஓர் ஆய்வு

சாலை விபத்துக்கள் இன்று உலகம் முழுவதும் நாள்தோறும் அதிகரித்து வருகின்றன. விபத்துத் தவிர்ப்பு இயந்திரம் இன்று மிக வேகமாக முடுக்கிவிடப்பட்டு பல் வேறு தடுப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. பொதுவாக எல்லா விபத்துக்களும் தனி மனிதனுக்கும், சமுதாயத்திற் கும் ஒரு சேர இழப்பினை ஏற்படுத்து கின்றன. இவ்விழப்பு பல நேரங் களில் உயிர் இழப்பாகவும், உடல் உறுப்புக்கள் இழப்பாகவும் மாறி வரும் பரிதாப நிலையினை நாம் அன்றாடம் சந்தித்து வருகிறோம். அவ்வாறே விபத்தின் விளைவாகச் சமுதாயம் மிகுந்த பொருள் இழப் பிற்கும், செலவிற்கும் ஆளாவதால் நாட்டில் பொருளாதார வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்படுகிறது. ஆகவே, விபத்தினைத் தவிர்த்து மதிப்பு மிக்க மனித உயிர்களுக்குப் பாதுகாப்பும், சமுதாய நல்வாழ்விற்குப் பெருமை யும் தேடித் தருவது நம் அனைவரின் தலையாய கடமையாகும்.

பொதுவாக, சாலை விபத்துக் களுக்கான முக்கியக் காரணங்கள் என்ன?

சாலை விபத்துக்களை இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை:

1. மனித தவறுகளால் எற்படும் விபத்துக்கள்
2. இயந்திரக் கோளாறுகளால் ஏற்படும் விபத்துக்கள்.

இதுவரை உலகெங்கும் ஏற் பட்டுள்ள விபத்துக்களில் உலகெங் கும் மனித தவறுகளால் ஏற்படும் விபத்துக்களே மிக அதிகம் எனக் கண்டுபிடித்துள்ளனர். இயந்திரக் கோளாறுகளால் ஏற்படும் விபத் துக்கள் மிக மிகக் குறைவு. இயந் திரத்தை அடக்கி ஆளக் கற்றுக் கொண்ட மனிதன் தன்னைக் கட்டுப் படுத்திக் கொள்ள இன்னும் முழுமை யாகக் கற்றுக் கொள்ளவில்லை என் பதையே இது தெளிவுபடுத்துகிறது.

குறிப்பாகச் சொல்லப்போனால் பெரும்பாலான சாலை விபத்துக் களுக்குக் கீழ்க் கண்டவைகளே காரணமாக அமைகின்றன:

**சாலை விபத்துக்களைத் தவிர்ப்பது எப்படி – சாலையைப் பயன்படுத்தும் முறை – அதனால் வரும் நன்மை - விபத்துக் களிலிருந்து விடுபடும் வழிமுறைகள் முதலான கருத்துக்களைக் கோடிட்டுக் காட்டுகிறது இக்கட்டுரை.**

தெரிந்து கொள்ளுங்கள்:

# அழகிய நகரம் ஆரோவில்

**பா**ண்டிச்சேரி நகருக்குச் சுமார் பத்து மைல் வடக்கே ஜிப்மெர் உள்ள இடத்திற்குப் அப்பால் 'ஆரோவில்' என்ற நவீன சர்வதேச நகர் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இது பாண்டிச்சேரியைச் சேர்ந்த நிலப்பரப்பில் அமைக்கப்படவில்லை. பாண்டிச்சேரி எல்லைக்கு அப்பால் தமிழ்நாட்டில் தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது என்பது நினைவில் கொள்ளத் தக்கதாகும்.

அரவிந்தரின் சிஷ்யையான அன்னையின் விருப்பப்படி 1968-இல் இந்த சர்வதேச நகர் உருவாக்கப்பட்டது. இந்நகர அமைப்பில் பல உலக நாடுகள் ஒத்துழைப்பு அளித்துள்ளன. 'விடி நகரம்' (City of Dawn) என்று போற்றப்படும் இந்த நகர் இன்னும் முழுவதுமாக அமைக்கப்பட்டுவிடவில்லை. படிப்படியாக வளர்ந்து வருகிறது. இந்த நகரின் நடுமையமாக 'மாத்ரி மந்திர்' (Matri Mandir) என்ற பிரார்த்தனை மையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டடம் புதுமையான முறையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மாத்ரி மந்திரைச் சுற்றி 800 ஏக்கர் நிலப்பரப்பு உள்ளது. இதில் இங்கும் அங்குமாகப் பல வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

இந்த சர்வதேச நகரில் இப்போது சுமார் ஆயிரம் பேர் வசிக்கிறார்கள். இவர்கள் பல நாடுகளைச் சேர்ந்தவர்கள். இவர்கள் இப்போது 14 வெவ்வேறு கம்யூன்களில் (Commune) வசிக்கிறார்கள். 55 உலக மொழிகளைப் பேசுகிறார்கள். இவர்கள் ஆரோவில் நகரை மேலும் மேலும் சிறப்பாக உருவாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

தங்கள் தங்கள் நாடுகளின் கலாச்சாரங்களைப் பிரதிபலிக்கும் விதத்தில் இங்கு தங்கள் அரங்கங்களை (Pavilions) அமைக்க, பல உலக நாடுகள் முன்வந்துள்ளன. இந்திய அரசும் 'பாரத் நிவாஸ்' (Bharat Nivas) என்ற அரங்கம் ஒன்றை அமைத்துள்ளது. இந்தியாவின் பல்வேறு மாநிலங்களின் கலாச்சாரங்களைப் பிரதிபலிக்கும் விதத்தில் இது அமைக்கப்பட்டுள்ளது. இந்திய அரசு அமைத்துள்ள இந்த 'பாரத் நிவாஸ்' என்ற காம்ப்ளெக்ஸில் 'ஆடிட்டோரியம்' (Auditorium) ஒன்றும் உள்ளது. பல்வேறு இந்திய மொழிகளின் புத்தகங்கள் அடங்கிய நூலகம் ஒன்றும் இங்குள்ளது. பல்வேறு இந்திய மொழிகளைப் போதிக்கும் கல்வி நிலையம் ஒன்றும் உள்ளது.

**ஆதாரம்: திரு. அ. ராம்கோபால் எழுதிய 'பாண்டிச்சேரி மாநிலச் சுற்றுலாத் தலங்கள்' என்னும் நூல்.**

## அறிவே அணிகலன்





அறிவுக்கு வையகம் எப்போதும் தன் வணக்கத்தைச் செலுத்தும். திறமைக்கு ஆதரவு தரும். தூய உள்ளத்தை வரவேற்கும்.

—இங்கர்சால்

தெரிந்ததைத் தெரியுமென்றும், தெரியாததைத் தெரியாதென்றும் கூறுவது தான் அறிவு.

—கன்பூஷியஸ்

அறிவே இன்பம்; அறிவே அணிகலன்; அறிவே ஆற்றல்.

—பிரான்சிஸ் பேகன்

கல்லாமையைவிடப் பிறவாமலிருத்தல் மேலாகும். ஏனெனில் அறிவின்மைதான் எல்லாத் துயரங்களுக்கும் வேர்.

—பிளேட்டோ

## மரங்கள்

*பாதை ஓரத்து மரங்கள்-தினம்*
*பயணிகள் பாராட்டும் தலங்கள்*
*தோதாகத் தேன்தங்கும் கூடு-நல்ல*
*சங்கீதப் பறவையின் வீடு!*

வாசம் வீசிடும் பூமரம்-போவோர்
வருவோர்க்கு வீசிடும் சாமரம்!
பாசத்தோடு வளர்ப்போம் ஓர்மரம்-அது
பயன்தரும் நமக்கெல்லாம் ஓர் யுகம்!

நாட்டுக்குத் தேவை மரங்கள்-செழிக்கும்
நிலத்திற்கு அவைதான் உரங்கள்!
வீட்டுக்கு ஒருமரம் வளர்த்தால்-எங்கும்
விளங்கிடும் பசுமை வளத்தால்!

ஆயிரம் காலத்துப் பயிராம்-மரம்
பொருளா தாரத்தின் உயிராம்!
தூயநல் காற்றுக்குக் கருவாம்-அது
பூமியின் இயற்கைத் திருவாம்!

—எஸ். இ. லோகநாதன்



# திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டத்தில்



# கைத்தறி நெசவாளர் குடும்பங்களுக்கு அரசின் நலத் திட்டங்கள்

**த**மிழகத்தில் மட்டும் சுமார் 4.26 இலட்சம் கைத்தறிகள் இயங்கி வருகின்றன. அவற்றில் திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டத்தில் மட்டும் சுமார் 10,936 கைத்தறிகள் இயங்கி வருகின்றன. இக்கைத்தறிகளை நம்பி சுமார் 15,000 நெசவாளர்கள் வாழ்க்கை முறையினை நெறிப்படுத்த அரசு பல வகைகளிலும் திட்டமிட்டு, அவர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பளிக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டத்தில் 34 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இவைகளில் 9,207 நெசவாளர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**நெசவாளர் வீடுகட்டும் திட்டம்:**

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் தொடர்ந்து உற்பத்தி மேற்கொண்டு வரும் நெசவாளர்களுக்கு வீடுகட்டும் திட்டத்தின்கீழ் தறிக்கூடம் அமைப்புடன் கூடிய வீடுகளைத் தமிழக அரசு கட்டிக் கொடுக்கிறது. இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அரசுக் கடனைத் திருப்பிச் செலுத்த உறுப்பினருக்கு 20 ஆண்டுக் கால அவகாசம் அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தில் சேர்ந்துள்ள நெசவாளர் ஒருவருக்கு மத்திய அரசினால் ரூ.2,500-ம் மாநில அரசினால் ரூ.2,500-ம் மான்யமாக வழங்கப்படுகிறது.

வீட்டின். மதிப்பு ரூ.15,000-, மீதித் தொகை ரூ.10,000-மும் 'ஹட்கோ' நிறுவனத்தால் நீண்ட காலக் கடனாக வழங்கப்படுகிறது. 1989-90-ஆம் நிதியாண்டில் கலைமகள் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் மற்றும் காந்திஜி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகிய இரண்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்க அங்கத்தினர்களுக்கு முறையே 56 மற்றும் 52 வீடுகள், ஆக மொத்தம் 108 வீடுகள் கட்டுவதற்கு அனுமதி வழங்கி அரசு மான்யமாக இச்சங்கங்களுக்கு மொத்தம் ரூ.4.80 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது கடன்தொகை 'ஹட்கோ' நிறுவனத்தால் ரூ.15.12 இலட்சம் அனுமதிக்கப்பட்டு இச்சங்கங்கள் 108 வீடுகளையும் கட்ட பூர்வாங்க வேலைகளைச் செய்து முடித்துள்ளது. ஏற்கெனவே இந்தத் திட்டம் (1) லந்தக்கோட்டை மார்க்கண்டேயர் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் மற்றும் (2) ஒட்டன்சத்திரம் கற்பகத்தரு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்

---

**• நல்லதைப் பெறுபவன் அதை ஒருபோதும் மறக்கக் கூடாது; நல்லதைச் செய்பவனோ ஒருபோதும் அதை நினைவிலேயே வைத்திருக்கக் கூடாது!**

**- சார்ல்டன்**

---

அதிக வேகமாக வாகனங்களை ஓட்டுதல்; சாலைகளில் ஏற்படும் நெருக்கடியான சூழ்நிலை; சாலைச் சூழல்களைத் தீர்மானிப்பதில் ஏற் படும் மனிதத் தவறுகள்; வாகன ஓட்டுநரின் கவனக் குறைவு; வாகன ஓட்டுநரின் உடல் நிலை; வாகன ஓட்டுநரின் மன நிலை; மது அருந்திய நிலையில் வாகனம் ஓட்டுதல்.

தரமற்ற சாலையமைப்பு மற்றும் பராமரிப்பு; தட்பவெட்ப நிலை; சாலைகளின் விளக்கு வசதிக் குறைவு; வாகனங்களில் ஏற்படும் இயந்திரக் கோளாறுகள்; மோசமான வாகன உற்பத்தி உறுப்புகள்; தலைவலி, வயிற்றுவலி, காய்ச்சல், காக்காய் வலிப்பு போன்ற நோயால் பாதிக்கப்பட்டவர்கள் . வாகனம் ஓட்டுதல்; ஊனமுற்றவர்கள் வாகனம் ஓட்டுதல்; சாலை விதிகளை மீறுதல்; சாலையைப் பயன்படுத்துபவர்களிடையே தோழமை உணர்வுக் குறைவு.

### சாலைகளின் பாகுபாடு

பொதுவாகச் சாலைகளை-

(1) நெடுஞ்சாலைகள்
 (அ) தேசிய நெடுஞ்சாலைகள்
 (ஆ) மாநில நெடுஞ்சாலைகள்
(2) மலைச் சாலைகள்
(3) பெருநகர, நகர மற்றும் கிராமச் சாலைகள்

என மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். இவற்றின் முறையான அமைப்பும் மற்றும் பராமரிப்புமே சாலைப் பாதுகாப்பிற்கு முக்கிய அடிப்படையாகும்.

### சாலையைப் பயன்படுத்துபவர்கள்

சாலைப் பாதுகாப்பு என்பது ஓர் கூட்டுப் பொறுப்பு. சாலையை, வாகன ஓட்டுநர்கள், பொதுமக்கள், போன்றவர்கள்பயன்படுத்துகிறார்கள். இவர்கள் தங்கள் பங்கினை உரிய முறையில் உணர்ந்து செயல்படுவதன் வாயிலாகவே விபத்தினைத் தவிர்க்க முடியும்.

### சாலையில் பயன்படுத்தப்படும் வாகனங்கள்

பேருந்து, லாரி, கார், வேன், மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர், ஆட்டோ ரிக்ஷா, மாட்டு வண்டி, குதிரை வண்டி, கை வண்டி இவையன்றி ஆடு, மாடு, கோழி, நாய் போன்ற வீட்டு விலங்குகள் மற்றும் பறவைகளும் சாலைகளில் நடமாடுகின்றன.

வாகன ஓட்டுநர்களும், பாதசாரிகளும் வாகனத்தில் பயணம் செய்யும் பயணிகளும் சைக்கிள் ஓட்டுபவர்களும், ஸ்கூட்டர் மற்றும் மோட்டார் சைக்கிள் ஓட்டுபவர்களும், மாட்டு வண்டி ஓட்டுபவர்களும் ஒருங்கிணைந்து தோழமை உணர்வுடன் செயல்பட்டால் சாலை விபத்துக்களில் பெரும்பாலானவற்றைத் தவிர்க்கலாம்.

### சிறுவர் சிறுமியருக்கான சாலைப் பாதுகாப்பு வழி முறைகள்.

'விளையும் பயிர் முளையிலே' என்பார்கள். வளரும் குழந்தைகளின் கையும், காலும் துருதுருவென்று எதையாவது செய்து கொண்டேயிருக்கும். ஐந்திலே வளைந்தால் ஐம்பதிலும் மகிழ்வோடு வாழ முடியும். படைப்பிலே நமக்குப் பாதுகாப்பு உணர்வு இயற்கையிலேயே அமைந்துள்ளது.

பல்வேறு வாகனங்களின் ஒலிகளைச் சிறுவர்கள் தெரிந்து கொண்டால் அந்த வாகனங்கள் சாலையில் செல்லும்போது பாதுகாப்புடன் நடந்து கொள்ள உதவியாக இருக்கும்.

சிறுவர், சிறுமியர் பாதசாரிகளாக நடைபாதையில் நடக்கும் போது, சாலையைக் கடக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும், சாலைப் பாதுகாப்பினைப் போதிக்கும் வாய்ப்பாகப் பெற்றோர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

பள்ளிக்கு எப்படிச் சென்றாலும் ஒவ்வொரு சிறுவர், சிறுமியும் பாதசாரியாகச் செல்ல வேண்டிய தூரம் கட்டாயம் உண்டு. ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்லும்போது அனைவரும் சாலையைக் கடந்தே தீர வேண்டியுள்ளது. ஆகவே நடைபாதையைப் பற்றிய அறிவு முதலில் சின்னஞ்சிறு வயதிலிருந்தே அவசியமானதாகும்.

நடைபாதையின் அமைப்பு, அதன் சுற்றுச் சூழல்கள் பற்றி ஒவ்வொரு சிறுவனும் சிறுமியும் அறியச் செய்வதே பெற்றோர்களின் முழு முதற் கடமையாகும். அவ்வாறு அவர்கள் அறிந்து கொள்வதன் வாயிலாகவே விபத்திற்கு ஆளாகாமல் தப்பித்துக் கொள்ள முடியும்.

அழுகையின் மூலமாகத் தன் பசியினை வெளியுலகுக்குத் தெரிவிக்கும் குழந்தையின் செயல், பாதுகாப்பு நமக்கு இயல்பூக்கமாக (Instinct) அமைந்துள்ளது என்பதற்கு எடுத்துக்காட்டாகும். இந்த இயற்கைப் பாதுகாப்பு உணர்வினை வளர்த்து, சாலையில் செல்லும் போது செம்மையாகப் பயன்படுத்திக் கொள்ள, குழந்தைப் பருவத்திலிருந்தே விழிப்புணர்வை உருவாக்க வேண்டும். இந்த முறையில் பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்குமே முக்கியப் பொறுப்புள்ளது.

### நடைபாதையும் அதன் சுற்றுச் சூழலும்

சின்ன சின்ன அடியெடுத்துச் சிங்கார மொழி பேசும் குழந்தைப் பருவத்திலேயே நடைபாதை பற்றிய விழிப்புணர்வு மிகமிக அவசியமாகும்.

பாதுகாப்பான பயணத்திற்கு விழிப்பான பயணிகளே வழிவகை செய்ய முடியும். பயணிகள் இத்துறையில் சிந்தித்துச் செயல்பட்டால் என்றும் நமது பயணம் இனிதாக அமையும்.

இன்பப் பயணத்திற்குப் பேருந்துகளில் நின்று கொண்டு பயணம் செய்யும்போது கம்பிகளை உறுதியாகப் பற்றிக் கொண்டு பயணம் செய்தல்; பேருந்தைவிட்டு இறங்கியவுடன் பாதசாரிகளுக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் மட்டுமே சாலையைக் கடத்தல்; எப்பொழுதும் பேருந்தின் பின்பக்கமாக ஏறி முன்பக்கமாக இறங்குதல்; ஓடும் பேருந்தில் ஏறுவதையும், இறங்குவதையும் அறவே தவிர்த்தல்; படிக்கட்டுப் பயணத்தைக் கூண்டோடு ஒழித்தல்; கைகளை மற்றும் தலையை வெளியே நீட்டிக் கொண்டு பயணம் செய்வதை அறவே தவிர்த்தல் ஆகியவை உறுதுணையாக இருக்கும்.

ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் பத்திரமாகவும், பாதுகாப்பாகவும் உரிய நேரத்தில் போய்ச் சேருவதே இலட்சியப் பயணத்தின் இலக்கணமாகும். சாலையைப் பயன்படத்தும் அனைவரும் கூட்டுப் பொறுப்புடனும், தோழமை உணர்வுடனும் செயலாற்றினால் விபத்திலிருந்து விடுபடலாமே!

## சென்னையில் ஐ.நா. மைய தகவல் அலுவலகம்

மக்கள் வாழிடங்களுக்கான ஐக்கிய நாடுகள் மையம் சார்க் நாடுகளுக்குப் பயன்படும் வகையில் தனது தகவல் பரப்பு அலுவலகம் ஒன்றை சென்னையில் அமைக்கிறது. தெற்காசிய மண்டலத்தில் உள்ள நாடுகள், மாநில அரசாங்கங்கள், வீட்டு வசதி நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், கல்வி நிலையங்கள், தனியார் அமைப்புகள் போன்றவற்வற்றுக்கு வீட்டுவசதி பற்றிய தகவல்களைத் தரும் பணியில் இந்த அலுவலகம் ஈடுபடும். கி.பி. 2000ஆவது ஆண்டுக்குள் அனைவருக்கும் வீட்டுவசதி ஏற்படுத்தித் தருவதென்ற உலக நாடுகளின், லட்சியத்தை நிறைவேற்றத் தூண்டுகோலாயும் இந்த அலுவலகம் செயல்படும்.

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தின் (ஹட்கோ) சென்னையில் உள்ள தென்மண்டல அலுவலகத்தின் வளாகத்தில் ஐ.நா.மையத்தின் அலுவலகம் அமையும். சென்னையில் உள்ள ஹட்கோ அலுவலகம், கட்டுமான நுட்பக் கண்காட்சியையும், வீட்டுவசதி வழிகாட்டி மையத்தையும் நடத்தி வருகிறது. இவற்றின் பணிகளுக்கு மேலும் துணை சேர்ப்பதாய் ஐ.நா. மையத்தின் அலுவலகமும் செயல்படும்.

அடுத்த பத்தாண்டு காலத்திற்குள் அனைவருக்கும் வீட்டுவசதி ஏற்படுத்தித் தருவதென்ற உலகநாடுகளின் குறிக்கோளை எட்ட, தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் பெரும் நிகழ்ச்சித் திட்டங்களை ஐ.நா. மையம் தயாரித்திருக்கிறது. ஏழை மக்களின் குடியிருப்புச் சூழலை மேம்படுத்தும் நோக்கத்தில் இந்த நிகழ்ச்சித் திட்டம் அமைந்துள்ளது. ஐக்கிய நாடுகள் மன்றத்தைச் சேர்ந்த அமைப்பு மேற்கொண்டுள்ள வீடமைப்புத் திட்டங்கள் பற்றிய தகவல்களை, எல்லாத் தரப்பு மக்களும் அறியும் வண்ணம் எடுத்துரைக்கும் முயற்சியில் இந்த அலுவலகம் செயல்படும். தனது வெளியீடுகள் அனைத்தும் மக்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்வதுடன், வீடமைப்புப் பற்றி ஒலி-ஒளிக்காட்சிகள், கண்காட்சிகள் போன்றவற்றையும் இம்மையம் நடத்தும். உலகின் பிறபகுதிகளில் உள்ள நாடுகளுக்கு உதவும் வகையில் அம்மான், பாங்காக், புதாபெஸ்ட், ஜெனீவா, மெக்ஸிகோ, ஒட்டாவா ஆகிய இடங்களிலும் ஐ.நா. அமைப்பின் அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

1991 ஆம் ஆண்டு சார்க் நாடுகளின் வீட்டு வசதி ஆண்டாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பின்னணியில் சார்க் நாடுகளுக்கு உதவும் பொருட்டு சென்னையில் இந்த அலுவலகம் அமைவது குறிப்பிடத்தக்கதாகும்.

நன்றி : திட்டம்.

## அஜந்தா, எல்லோரா சுற்றுலா மேம்பாடு

அஜந்தா, எல்லோரா ஆகிய சுற்றுலாத் தலங்களின் மேம்பாட்டிற்கு அமெரிக்கா உதவியளிக்கிறது. இப்பணியில் மத்திய அரசின் சுற்றுலாத்துறை, மகாராஷ்டிர மாநில அரசின் சுற்றுலாத்துறை ஆகியவற்றுடன் அமெரிக்காவின் தேசியப் பூங்காத் துறை ஒத்துழைக்கும். மகாராஷ்டிரத்திலுள்ள தெளலதாபாத் கோட்டை சுற்றுலாத் தல மேம்பாட்டிற்கும் இத்துறை உதவும்.

இத்தலங்களின் மேம்பாட்டிற்காக விரிவான திட்டமொன்றை அமெரிக்கத் தேசியப் பூங்காத்துறை உருவாக்கியுள்ளது. நவீன வடிவமைப்பு உத்திகளைப் பயன்படுத்தி இப்பகுதிகளை அழகுபடுத்துதல், சுற்றுலாப் பயணிகளுக்கு உதவக்கூடிய தகவல் மையங்களை அமைத்தல், அருங்காட்சியகங்களை நிறுவுதல் முதலியவை இத்திட்டத்தின் கீழ் அடங்கும். இத்தலங்களின் வரலாற்றுத் தொன்மையையும், பண்பாட்டுச் செழிப்பையும் சுற்றுலாப் பயணிகள் நன்கு புரிந்து கொண்டு இவற்றை ரசிப்பதற்கு இவை உதவும்.

• நாட்டின் ஐக்கியத்தைப் பாதுகாப்பதிலும், ஒற்றுமையோடு பாடுபடுவதிலுந்தான் நமது முன்னேற்றம் இருக்கிறது.

- காமராசர்





# டீசல் சேமிப்பு

சிவ. இளநகை/தி. ரெங்கபிரசாத்
பெட்ரோலியம் சேமிப்பு
ஆராய்ச்சி நிறுவனம்,
சென்னை.

ஒரு நாட்டின் வளர்ச்சியில் பெரும்பங்கு வகிப்பது போக்குவரத்துத் துறையாகும்.

பொதுமக்களின் அன்றாட வாழ்க்கையில் இன்று இயந்திர வாகனங்கள் அத்தியாவசியத் தேவைகளாகிவிட்டன. பயணிகளும், பொருள்களும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செல்ல உதவும் போர்க்குவரத்திற்கு இரயில், பேருந்து, லாரிகள் எனப் பலவகை வாகனங்கள் உபயோகப்படுகின்றன.

பெட்ரோலிய உற்பத்தியில் 37 சதவிகிதம் டீசலாக உபயோகப்படுகிறது. டீசலின் பெரும்பகுதி போக்குவரத்திற்கு உதவும் வாகனங்களுக்கு எரிபொருளாகப் பயன்படுகிறது; மற்றும் மின்உற்பத்திப் பற்றாக்குறையின் காரணமாக டீசல் ஜெனரேட்டர்கள் பெருமளவில் உபயோகத்திற்கு வந்துள்ளன. பெருகிவரும் மக்கள் பெருக்கம், நாகரிக முன்னேற்றம் இவற்றின் காரணமாகவும் பயணிகள்/பொருள் போக்குவரத்துத் துறை விரிவடைந்து வருகிறது. இவற்றின் காரணமாக அஞ்சத்தக்க அளவு டீசல் செலவு இந்தியாவில் அதிகரித்து வருகிறது.

நம்முடைய எண்ணை சுத்திகரிப்பு ஆலைகளிலிருந்து கிடைக்கும் டீசல் தவிர, 4 மில்லியன் டன் டீசல் (ரூ.1,400 கோடி) இறக்குமதி செய்யும் சூழ்நிலை உருவாகி வருகிறது. இது நம்முடைய பொருளாதாரத்தைப் பெருமளவில் பாதிக்கும். இது. தவிர பேருந்து - லாரிகளில் இயந்திர மற்றும் டயர்களில் உராய்வைக் குறைக்கப் பயன்படுத்தும் உயவு எண்ணையும், அதை உற்பத்தி செய்ய உதவும் மூலப் பொருளாம் கச்சா எண்ணையும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது.

எனவே, போக்குவரத்துத் துறையில் பொறுப்புள்ள பதவிகளிலிருப்போரும் வாகன ஓட்டுநர்களும் போதிய கவனம் எடுத்துக் கொள்ளாவிடில் டீசல் இறக்குமதி மேன்மேலும் அதிகரித்து விடும். குறிப்பாகப் பேருந்துகள் - லாரிகளைப் பொறுத்த வரையில் 70 சதவிகிதம் தனியார் துறையில் உள்ளது.

பொதுத் துறையில் உள்ள போக்குவரத்து நிறுவனங்களில் டீசல்



சேமிப்புக் குறித்த விழிப்புணர்வு கடந்த 10 ஆண்டுகளாக நல்ல பலன்களைத் தந்துள்ளது. இதே போன்ற விழிப்புணர்வு தனியார் துறையிலும் ஏற்பட வேண்டும் என்ற நோக்கில்தான் 'டீசல் சேமிப்புக் கருத்தரங்கு' நாடெங்கும் நடைபெறுகிறது.

இந்தியாவிலேயே போக்குவரத்து நிறுவனங்களில் நல்ல எரிபொருள் திறன் (4.9 KMPL) வாய்ந்ததாக உள்ளவை குஜராத் மற்றும் நமது தென் மாநிலத்தைச் சேர்ந்த ஆந்திரப்பிரதேச மாநிலப் போக்குவரத்துக் கழகம் (GSRTC & APSRTC), நமது அண்டை மாநிலமான கர்நாடகப் போக்குவரத்துக் கழகம் (PCRA) நிறுவனத்தின் துணையுடன் நடத்திய ஓட்டுநர் பயிற்சி முகாம்களின் மூலமாகவும், நல்ல வாகனப் பராமரிப்புக் காரணத்தினாலும் ஆண்டுதோறும் 8 கோடி ரூபாய் பெறுமான எரிபொருள் சிக்கனத்தை எட்ட முடிந்தது.

நம் தமிழகத்திலும் சோழன், கட்டபொம்மன், ஜீவா போன்ற போக்குவரத்து நிறுவனங்கள் 4.3 KMPL-க்குக் கூடுதலாகப் பெற்று டீசலை மிச்சப்படுத்திப் பல இலட்சக் கணக்கான ரூபாய் சேமிக்க முடிந்தது. இந்த நிலை தனியார் நிறுவனங்களில் வருவதற்கு வேண்டிய வழி முறைகளைக் காண வேண்டியது அவசியம்.

அதிவேகமாக வாகனங்களை ஓட்டுவது தமிழ்நாட்டில் உள்ள தனியார், ஏன் - பொது நிறுவனங்களிலும் உள்ள வாகன ஓட்டுநர்களை அண்மைக் காலமாகப் பிடித்துள்ள பெரும் நோயாகும்; வேகம் மிகுதியாகச் செல்வது, விபத்துக்கு வழிவகுப்பதோடு டீசல் செலவையும் கூட்டுகிறது. போக்குவரத்து நிறுவனங்களுக்கிடையே உள்ள போட்டி, அதிக லாபம் ஈட்ட (EPKM) வேண்டுமென்ற ஆர்வம் இவற்றின் காரணமாக ஓட்டுநர்கள் 70 கி.மீ. வேகத்தையும் தாண்டி ஓட்டுகின்ற சூழ்நிலையைப் பார்க்கிறோம். இது தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று. தமிழ்நாட்டிலே உள்ள பொதுத் துறை நிறுவனங்கள் நல்ல பயிற்சி பெற்ற ஓட்டுநர்களையும் புதிய வாகனங்களையும் பெற்றிருந்தாலும் (KMPL) எரிபொருள் சிக்கனத்தில் சாதனை செய்ய முடியாததற்கும் அதிவேகம் ஒரு முக்கியக் காரணமாகும். தனியார் துறை வாகனங்களின் வேகத்திற்கு ஈடுகொடுக்க தாங்கள் இதைத் தவிர்க்க முடியவில்லை எனப் பொதுத்துறை ஓட்டுநர்களும் அதிவேகமாய் வாகனங்கள் ஓட்டுவதைத் தவிர்த்தால் தனியார் துறை-பொதுத்துறை இரண்டிலுமே டீசலை மிச்சப்படுத்த முடியும். மேலும் டயர்கள், ப்ரேக் லைனர்கள் மற்றும் இன்ஜின் தேய்மானமும் குறைந்து வாகனம் விபத்தில்லாமல் நீண்டகாலம் செம்மையாக ஓடும்.

காற்றுத்தடை (Air Resistance) = $K_a A V^2$

Where V - வாகனங்கள் வேகம் (Speed in Km/hr).

A - வாகனங்களின் முன்பரப்பு (Frontal projected area) in $m^2$.

Ka - காற்றுத் தடையின் குறியீட்டெ (Co-officient of air resistance)

Which is = $0.0046 \frac{Kg.\ F\ hr^2}{m^2\ Km^2}$ பேருந்துகள் மற்றும் லாரிகள்

மேலே உள்ள சூத்திரத்திலிருந்து வேகம் இரண்டு மடங்கு அதிகமானால் காற்றுத்தடை நான்கு மடங்கு அதிகமாகும் என்பது விளங்கும். அது மட்டுமன்றி உருளுவதற்கான தடை (Rolling resistance) கூட, வேகம் அதிகமானால் கூடுகிறது. எனவே சாலைகளில் வாகனங்களுக்கு ஏற்படும் தடை அதிக வேகத்தில் செல்வதால் கூடுதலாகி டீசலை வீணாக்க வழி செய்யும். 40 கி.மீ. செல்வதற்குப் பதில் 80 கி.மீ. வேகத்தில் சென்றால் எரிபொருள் 40 சதவிகிதம் கூடுதலாகச் செலவாகும். எனவே 40 - 60 கி.மீ. வேகத்தில் ஒரே சீராகச் செல்லுவது நல்லது. திடீர் வேகம் தேவைக்கு அதிகமாக டீசலைச் செலுத்துகிறது. எனவே படிப்படியாக வேகத்தை அதிகரிப்பது முறையானது.

### ஓட்டுநர் பயிற்சி

ஏறத்தாழ 17 மில்லியன் டன் டீசல் இந்தியாவில் உபயோகப்படுத்தப்படுகிறது. இதில் 90 சதவிகிதம் போக்குவரத்துத் துறையில் உபயோகமாகிறது.

கடந்த பத்து ஆண்டுகளில் ஓட்டுநர்களுக்கு அளித்த பயிற்சியின் வாயிலாக ஒவ்வொரு ஓட்டுநரும் பயிற்சி பெற்று முறையாக ஓட்டினால் 10 சதவிகிதத்திற்கு மேல் டீசலை மிச்சப்படுத்தலாம் என்று அறியப்பட்டுள்ளது.

இந்தக் கண்ணோட்டத்தில் பார்த்தால் சுமார் 2 மில்லியன் டன் டீசல் மிச்சமாக்க முடியும் என்பது கண்கூடு. கர்நாடக மாநிலத்தில் PCRA வின் பயிற்சியாளர் தொடர்ந்து ஏறத்தாழ பத்தாயிரம் ஓட்டுநர்களுக்கு 4 ஆண்டுகள் அளித்த பயிற்சியின் விளைவால் 1984-85-ஆம் ஆண்டு 3.89-லிருந்து 1988-89-ஆம் ஆண்டு 4.41 KMPLக்கு உயர்ந்துள்ளது. இதைப்போலவே ஜீவா போக்குவரத்துக் கழகமும் (ஈரோடு) PCRA ஓட்டுநர் பயிற்சி முறையைப் பின்பற்றித் தனது ஓட்டுநர்களுக்குப் பயிற்சி அளித்ததன் விளைவாக 1984-85-இல் 3.92 ஆக இருந்த திறன், 1986-87-இல் 4.31 ஆக உயர்ந்தது.

இந்த உதாரணங்கள் ஓட்டுநர் பயிற்சியின் தேவையை உங்களுக்கு

## டயர் பயன்பாடு— நேசமணிக்கு தேசிய விருது

பேருந்து டயர்களை சிறந்த முறையில் பயன்படுத்தியதற்கான தேசிய விருது நாகர்கோயில் நேசமணி போக்குவரத்துக் கழகத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் போக்குவரத்து சேவையில் ஈடுபட்டுள்ள அரசு போக்குவரத்துக் கழகங்களின் திறமைக்கு, மாநில சாலைப்போக்குவரத்து நிறுவனங்களின் கூட்டுச் சங்கம் ஆண்டுதோறும் விருது அளித்து வருகிறது.

எரிபொருள் சிக்கனத்துக்கான விருது, அகமதாபாத் மாநகர போக்குவரத்துக் கழக்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

அதிக அளவில் பேருந்துகளை உருவாக்கியதற்கான விருது திண்டுக்கல் இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்துக்கும், இதே பிரிவில் சிறப்பு விருது சென்னை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திற்கும் கொடுக்கப்பட்டுள்ளது.



உணர்த்தும். ஒரு கருத்தில்லாத டிரைவருக்கு 1,000 கிலோ மீட்டர் தொலைவைக் கடக்க 280 லிட்டர்கள் டீசலைச் செலவிடலாம். ஒரு திறமையான கருத்துடைய டிரைவருக்கு 250 லிட்டர்கள்தான் தேவைப்படும். ஒரு பயணத்தில் 30 லிட்டர் மிச்சம் ஆகும்.

(அ) அளவுக்கு மிஞ்சிய வேகம்
(ஆ) திடீரென்று வேகமெடுத்தல்.
(இ) நிறுத்தங்களை எதிர்பார்க்காதது.
(ஈ) சரியான கியரைப் போடாதிருத்தல்.
(உ) கிளட்சை அழுத்திய வண்ணம் ஓட்டுதல்

-போன்றவை நம் ஓட்டுநர்களிடம் காணப்படும் சில தவறான பழக்கங்கள்.

இவற்றை மாற்றிக் கொள்ள PCRA பயிற்சி முறை உதவுகிறது. மேலும் ஓட்டுநர்களுக்கு டீசலைச் சேமிக்கும் வண்ணம் ஊக்கத்தொகை அளிக்கலாம்.

**வாகனங்களின் பராமரிப்பு**

கரியபுகை கக்குதல், எஞ்சின் மோசமாக வேலை செய்வதற்கு அறிகுறி; இஞ்செக்டர்கள் (டீசல் செலுத்தும் அமைப்பு) துப்புரவாகவும் திறமையாகவும் இருந்தால் கரும்புகை வெளிவராது. டீசலும் வீணாவதில்லை. குறைபாடுள்ள இஞ்செக்டர்கள் அதிக டீசல் உபயோகத்திற்கு வழி வகை செய்கின்றன. அவற்றின் அழுத்தமும் தெளிப்பு முறையும் எப்போதும் சரியாக இருக்க வேண்டும்.

டீசல் கொள்கலனிலிருந்து (Diesel Tank) அதன் மூடி சரியாகப் பொருத்தப்படாமல் டீசல் சிந்தி வீணாவதைத் தடுக்க வேண்டும். டீசல் செலுத்தும் பம்பு அளவு குறிகளையும் பொருத்துதலையும் சரி பார்க்க வேண்டும். டயர் அழுத்தத்தை ஒவ்வொரு நாளும் சோதிக்க வேண்டும்.

இது டீசல் உபயோகத்தை மிச்சப்படுத்தி, டயரின் ஆயுள் காலத்தை நீடிக்கச் செய்கிறது. டயர் பராமரிப்பு ஒரு பேருந்து அல்லது லாரி சொந்தக்காரருக்கு இருவகைகளிலும் இன்றியமையாத ஒன்றாகும். புதிய ரேடியல் டயர்களும் டீசல் செலவினைக் குறைக்க உதவும்.

காற்றுத் துலக்கி (Air Cleaner) களைச் சுத்தம் செய்து புதிய எண்ணை நிரப்பி உபயோகிக்க வேண்டும். டீசல் வடிகட்டிகளைச் சுத்தம் செய்யக் கூடாது. அவற்றை மாற்றிப் புதிய வடிகட்டிகளைத்தான் பயன்படுத்த வேண்டும்.

**வாகன வடிவமைப்பில் மாற்றம்**

புது வகை W-தொடர் ஹீனோ (HINO) இன்ஞ்சின்கள் பழைய இஞ்சின்களை விட 1 KMPL (கி.மீ./லிட்டர்) கூடுதலாகத் தருகிறது. சேரன் போக்குவரத்துக் கழகத்தில் 90 புதிய ('ஹீனோ) இன்சின்களை உபயோகப்படுத்தி வாகனங்களின் எடையைக் குறைக்கிறார்கள். எங்களது ஆய்வுகளின்படி 60 கி.மீ. வேகத்தில் செல்லும் 12 டன் எடையுள்ள வாகனத்தில், 100 கிலோ எடை கூடுதலினால் 0.002 லிட்டர்/கி.மீ. டீசல் அதிகம் செலவாகிறது என அறியப்பட்டுள்ளது.

மேலும் வாகனங்களில் Aero Dhyamics இயல்படி முன் அமைப்பை மாற்றுவதன் மூலம் டீசலைச் சேமிக்க முடியும் என்பது நிரூபிக்கப் பட்டுள்ளது.

தனியார் துறையில் போக்குவரத்து நிறுவனங்களை நடத்தும் உரிமையாளர்கள் மேலே கூறப் பட்டுள்ள கருத்துகளை நினைவில் நிறுத்திச் செயல்பட்டால், தங்கள் நிறுவனத்தின் 'டீசல்' செலவையும் குறைக்கலாம், நாட்டுப் பொருளாதார மேம்பாட்டுக்கும் வழி வகுக்கலாம்.

## குறைந்த செலவில் 35,000 கழிப்பறைகள்

குறைந்த செலவில் 35,000 கழிப்பறைகள் கட்டுவதற்கு திட்டமிடப் பட்டதில் இதுவரை 15,096 கழிப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

ரூ. 1,600 செலவில் ஒவ்வொரு கழிப்பறையும் கட்டப்படுகின்றது. இச் செலவில் 20 சதவீதத் தொகையைப் பயனடைவோர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பெரியார் மாவட்டத்தில் ஊரக துப்புரவுத் திட்டத்தின் கீழ் 1988-89ஆம் ஆண்டு முதல் செயல்பட்டுவரும் இத்திட்டத்திற்கு ''யூனிசெப்'' உதவி கிடைக்கிறது.

ஊரக வளர்ச்சித் துறையால் இத்திட்டம் நிறைவேற்றப்படுகிறது.

1991-92ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டிலுள்ள இன்னொரு மாவட்டத்திலும் இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் உதவி செய்வதற்கு ''யூனிசெப்'' நிறுவனம் இசைந்துள்ளது.

170216

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்ட
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.